இந்திய விடுதலையும்
தமிழ் இலக்கியமும்.
(இந்திய விடுதலை வெள்ளிவிழா கருத்தரங்கு)

இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்

(இந்திய விடுதலை வெள்ளி விழாக் கருத்தரங்கு)

பொதுப்பதிப்பாசிரியர் :
பேராசிரியர் டாக்டர் **ந. சஞ்சீவி**,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., டிப். மானிடவியல்,
டிப். அரசியல்—ஆட்சியியல்.,
தமிழ்த் துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1974

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
வெளியீடு—31
முதற் பதிப்பு: ஜனவரி, 1974.

விலை ரூ. 20/-

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை - 600013.

INDIAN FREEDOM AND TAMIL LITERATURE

General Editor :
Dr. N. SANJEEVI,
M. A., M. Litt., Ph.D., Dip. in Anth., & Pol. and Public Admn.,
Professor & Head of the Department of Tamil,
University of Madras.

UNIVERSITY OF MADRAS
1974

Madras University Tamil Department
Publication —31

First Edition — 1974

PRINTED IN INDIA

AT AVVAI ACHUKKOODAM, P. V. KOIL STREET, MADRAS-600013

துணைவேந்தரின் அணிந்துரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றில் எழுபதுகள் (Seventies) புதிய எழுச்சிகளுக்கு இலக்காய் இருப்பது எவரும் அறிந்து இன்புறும் உண்மையாகும். அந்த வகையில் தமிழ்த்துறை முன்னிற்பது தனி மகிழ்ச்சிக்கு உரியது.

இந் நாளில் கருத்தரங்குகள் அறிவாராய்ச்சியின் பெருக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் துணை நிற்பன. அதிலும் பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும் அறிவார்வம் மிக்க பொதுமக்களையும் ஒன்றுபடுத்தும் வகையில் நடைபெறும் கருத்தரங்குகளே பெரும்பயன் தருவன. அந்த வகையில் தமிழ்த்துறையும் திங்கள்தோறும் தனிநிலைத் துறைக் கருத்தரங்குகள் நடத்துவதும் ஆண்டுதோறும் பத்துநாள் பொதுநிலைக் கருத்தரங்குகள் நடத்துவதும் போற்றத்தக்கன.

இந்திய விடுதலையின் வெள்ளிவிழாவை இந்திய நாட்டுப் பல்கலைக் கழகங்கள் கொண்டாடுவது முறையே ஆகும். தலையாய காரணம் விடுதலையின் பெரும்பயன்களைத் துய்க்கும் துய்ப்பிக்கும் அமைப்புகள் கல்வி நிலையங்களே. கல்வித் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களே நாட்டில் பல்வகை முன்னேற்றங்களுக்கும் அடிப்படை.

இந்த வகையில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, 'இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்' என்னும் பொருள்பற்றி மூன்றுநாள் கருத்தரங்கு நடத்தியது தனிச் சிறப்பு வாய்ந்தது. இச் சிறப்புக்குச் சிறப்புத் தருவதாக அமைந்தது, முதன்முதலாகச் சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றிலேயே இளங்கலை, முதுகலை வகுப்புகளில் சிறப்புத் தமிழ் பயிற்றும் கல்லூரிகளில் பேராசிரியர்களாக இருப்பவர்களைக் கொண்டு நடத்தப்பட்டது ஆகும். விடுதலையின் முன்பின் விளைவுகளாக உருவாகிய தமிழ் இலக்கியத்தைத் திறனாய்வு செய்யும் இந்நூல் தமிழ் நூல் வரலாற்றிலேயே தனிச் சிறப்புப் பெறுவது.

இந்நூல் உருவாவதில் ஒத்துழைத்த தமிழ்த்துறை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துகள்.

சென்னைப்
பல்கலைக் கழகம்
8-2-1974.

நெ. து. சுந்தரவடிவேலு

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்

வாழ்த்துச் செய்திகள்

SECRETARY
To THE VICE-PRESIDENT OF INDIA
NEW DELHI
October 22, 1973

Dear Sir,

The Vice-President is glad to know that you are celebrating the Silver Jubilee of Indian Freedom on the 27th October, 1973. He sends his best wishes for the success of the celebrations.

Yours faithfully,
(Sd.) V. PHADKE

MINISTER OF PLANNING
INDIA
NEW DELHI
27th October, 1973.

Dear Dr. Sanjeevi,

I am happy to note that the Department of Tamil, University of Madras is organising a Seminar to celebrate the Silver Jubilee of Indian Freedom commencing on October 27, 1973. I am also happy to know that on this auspicious occasion the book containing the Papers presented in the First All-India Seminar on Tirukkural Studies-1972 and a research book on Tirukkural will be released.

I send my good wishes for the success of the Seminar.

Yours Sincerely,
(Sd.) D. P. DHAR.

RAJ BHAVAN
MADRAS-22
22nd October 1973.

MESSAGE

I am happy to know that the Department of Tamil, University of Madras, is holding a Seminar on 27th October to celebrate the Silver Jubilee of our Freedom.

I welcome this Seminar for more than one reason. Those who belong to the older generation which had the benefit of wise and dynamic leadership of Mahatma Gandhi and who made supreme sacrifices during our struggle for Freedom, are anxious that this Yug Gatha should be taught to our youth, generation after generation. The youth should remember that the Freedom we enjoy today is the result of services and sacrifices of countless men and women. The history of our freedom movement should be a subject of serious study in our educational institutions. The war for economic freedom is still on and we need the same spirit of sacrifice and understanding of those who toiled for our Freedom, in building the India of our dreams.

I wish the Seminar success.

(Sd.) K. K. SHAH.
Governor of Tamil Nadu

THE ASSISTANT SECRETARY TO THE GOVERNOR OF GUJARAT

RAJ BHAVAN,
AHMEDABAD
October 24, 1973.

Sir,

I am directed to acknowledge receipt of your letter dated 18—10—73 addressed to the Governor of Gujarat and to convey his good wishes on the occasion.

Yours faithfully,
(Sd.)
Assistant Secretary.

LT. GOVERNOR,
MIZORAM

RAJ NIWAS
AIZAWL
October 24, 1973.

MESSAGE

I am glad to learn that the Department of Tamil, University of Madras, is organising a Seminar to celebrate the Silver Jubilee of Indian Freedom on 27th October, 1973, in which about 25 Professors of Tamil of various Colleges in Tamil Nadu are contributing their research papers on various aspects of Indian Freedom. There is no doubt that an occasion like this will give the intellectuals of Tamil Nadu a chance to exchange ideas on varied facts of our freedom and also to consider steps how best to preserve our freedom which has been earned as a result of numerous sacrifices made by a whole generation. I am sure the deliberations in the Seminar will be of immense benefit to all concerned.

I send my best wishes for the success of the Seminar,

(Sd.) S. P. MUKERJEE.

GOVERNOR, ORISSA

BHUBANESWAR
Dated 23—10—73.

MESSAGE

I am happy to know that a Seminar is being organised by the University of Madras to celebrate the Silver Jubilee of Indian freedom on October 27, 1973 and on this occasion the book containing the papers presented in the First All-India Seminar on Tirukkural Studies—1972 will be released.

During the years since independence our country has made rapid strides in several spheres of development which needs to be studied in depth and presented to the public in correct prospective for the benefit of the future generations. I commend the efforts of the University of Madras in this direction and wish the celebrations a grand success.

(Sd.) B. D. Jatti

Governor of Orissa.

CHHEDI LAL
Lieutenant-Governor

RAJ NIVAS
PONDICHERRY
November 1, 1973.

Dear Shri Sanjeevi,

I thank you for your letter dated 18—10—1973 asking me for a message in connection with the Silver Jubilee Seminar of Indian Freedom on 27th October, 1973, which reached my hands late.

I hope the function went off well.

Yours sincerely,
(Sd.) CHHEDI LAL.

தமிழ்நாடு அரசு
முதலமைச்சர்

25—10—73

உரிமைக்குரல் கொடுத்து வாணிபத்திற்காக வந்த அன்னியராம் ஆங்கிலேயர் நிறுவிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்திய மக்கள் எழுந்தகாலை 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று போர்ப் பரணி பாடித் தமிழ்ச் சீயங்கள் புயலெனச் சீறிப் பொங்கு கடலெனப் பாய்ந்து விடுதலை வேள்வித் தீயில் குளித்துத் "தமிழர் உரிமை உணர்வில் யாருக்கும் சளைத்தவரோ, இளைத்தவரோ அல்லர்" என்று பாரோர் போற்றிட விடுதலைப் போரில் ஈடுபட்டனர். அன்னியரால் "கட்டுண் டோம், காலம் வரும்; காத்திருப்போம்" என்று கருதாமல் விடுதலை முழக்கத்தை முதன் முதலில் எழுப்பியவன் தமிழனே என்று, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை இந்திய விடுதலை வெள்ளி விழா கொண் டாடும் இந்நாளில் நினைவுகூர்தல் சாலவும் பொருத்தமுடையதெனக் கருதுகிறேன்.

கருத்தரங்கில் தமிழ்ச் சான்றோர் பலர் பங்கு பெறல் கண்டு பூரிப்படைவதோடு, அவர்கள் தமிழன், இன உணர்வு மிக்கவனாய் இலங்கிடத் தக்க முறையில், ஆய்வு நடாத்தி, உணர்ச்சியூட்டிடத் துணை புரிவர் என்று நம்புகிறேன்.

இந்திய விடுதலை பற்றிய கட்டுரைகளும், திருக்குறள் கட்டுரைத் தொகுப்பும், திருக்குறள் ஆராய்ச்சி நூலும் வெளியிட முயலும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் செயலூக்கம் சிறந்திட, பெருகிட, விழா வெற்றி பெற உளமுவந்து பாராட்டுகின்றேன்.

(ஒம்) மு. கருணாநிதி

டாக்டர் ந. சஞ்சீவி,
தமிழ்த்துறைப் பேராசிரியர்—தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

கு. காமராஜ்

8, திருமலை பிள்ளை ரோடு,
தி. நகர், சென்னை-600017.
26—10—73

அன்புள்ள டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கு,

வணக்கம். நீங்கள் அனுப்பிய இலக்கியக் கருத்தரங்கின் அழைப்பிதழ் கிடைத்தது. நன்றி. பல்கலைக்கழகத்திற்கும் பொதுமக்களுக்கும் இதுவரையுள்ள இடைவெளியை இணைக்கும் இனிய பாலமாக, இம்மாதிரியான கருத்தரங்குகள் அமையும் என்று கருதுகிறேன்.

இவ்வாண்டு கருத்தரங்கில் தமிழ்நாட்டின் மிகச்சிறந்த நாவலாசிரியராகிய நண்பர் கு. ராஜவேலுவின் "1942" என்னும் நாவலை ஆராய்ச்சிக்குரிய பொருளாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இது ஒரு புதுமுயற்சி. பாராட்ட வேண்டிய ஆராய்ச்சித் திருப்பம். தேசபக்தியை வளர்ப்பதற்கும் நாட்டின் விடுதலைக்காக அந்நாளில் காங்கிரஸ் ஆற்றிய அரும்பெரும் தொண்டையும் தியாகத்தையும் இவ்வாராய்ச்சி மக்களுக்கு நினைவூட்டும்.

இந் நல்ல முயற்சி துணைவேந்தர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்களின் தலைமையில் நடைபெறுவது சிறப்புமிக்க இக் கருத்தரங்கை மேலும் அணி செய்யும். இதற்காக, துணைவேந்தரையும், தமிழ்த் துறைத் தலைவராகிய உங்களையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

பல தமிழ் அறிஞர்கள் பங்கு கொள்ளும் இவ்வாராய்ச்சிக் கருத்தரங்கு வெற்றி பெற என் நல்வாழ்த்துகள்.

அன்புள்ள,

(ஒ-ம்) **கு. காமராஜ்**

டாக்டர் ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப். மானிடவியல், டிப். அரசியல்—ஆட்சியியல்.
தமிழ்த்துறைப் பேராசிரியர்—தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

க. அன்பழகன்,
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,

தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

டாக்டர். ந. சஞ்சீவி,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

அன்புடையீர்,

வணக்கம். விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கு—தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் குறித்து நடைபெறுவது கண்டு மகிழ்ச்சி.

தமிழறிவு சான்ற தகைசால் பெருமக்கள் பலர், பல்வேறு துறைகளிலும் விடுதலைக்குப்பின் மலர்ந்த தமிழ் நூல்களை ஆய்ந்து உரை செய்ய இசைந்திருப்பது—தமிழ் வளர்ச்சிக்கும்—தமிழ் நெறியின் ஆக்கத்திற்கும் பெரும்பயன் விளைப்பதாகும். ஒவ்வொரு கோணத்திலிருந்தும் வெவ்வேறு கண்ணோட்டத்திலிருந்தும் நிகழ்த்தப்படும் உரைகள்—தமிழ் இலக்கியச் செல்வத்தை மாந்தும் விருப்புடையார்க்கு நல்வாய்ப்பாகும்.

விழாவும் கருத்தரங்குகளும் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

அன்பன்,

(ஒ-ம்) **க. அன்பழகன்**
23-10-73

Dr. RAJAH SIR. MUTHIAH CHETTIAR

OF CHETTINAD.

Chettinad House,
Rajah Annamalaipuram,
Madras-28,
20—10—73.

டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைப் பேராசிரியர், தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சேப்பாக்கம்,
சென்னை-5.

அன்புள்ள ஐயா,

தங்கள் அன்புள்ள 18-10-73உ கடிதம் கிடைத்தது. நன்றி. இம்மாதம் 27-ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை இந்திய விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அச்சமயம் 1972-ல் நடைபெற்ற முதலாவது அனைத்திந்தியத் திருக்குறள் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஒன்றும் திருவாளர் திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பெற்ற திருக்குறள் ஆராய்ச்சி நூலொன்றும் வெளியிடவிருப்பதும் சாலப்பொருத்தமாகும். பற்பல கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், தமிழ்த்துறை தலைவர்கள், மாணவர்கள் தமிழ் விரிவுரையாளர்கள் பங்கெடுத்துக்கொள்ளும் இந்திய விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கு 27-10-73 முதல் 29-10-73 வரை நடக்கவிருப்பது தெரிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்நாடு சட்டமேலவைத் துணைத்தலைவர் சிலம்புச் செல்வர் தாமரைத் திரு. ம. பொ. சிவஞானம், எம். எல். சி. அவர்கள் தொடங்கி வைக்க இருக்கும் இந்திய விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கு, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத் திரு. சுந்தரவடிவேலு அவர்களின் சிறந்த தலைமையில் சிறப்பாக நடைபெறப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒ-ம்) **அ. முத்தையா செட்டியார்**

Justice M. M. ISMAIL,

34, Justice Sundaram Iyar Road,
Nageswarapuram, Madras-4.
Dt: 26th October 1973.

அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு,

பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும் இந்திய விடுதலை வெள்ளி விழாக் கருத்தரங்குக்குத் தாங்கள் அனுப்பிய அழைப்பு கிடைக்கப் பெற்றேன். பல்கலைக் கழகத் தமிழ்த்துறை செய்யும் பணியை வெளியுலகுக்கு உணர்த்தவும் தமிழ் அறிஞர்களை ஊக்குவிக்கவும் பாராட்டவும் தாங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன். கருத்தரங்கு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

தங்கள்,

(ஒ-ம்) மு. மு. இஸ்மாயில்

HONORARY CONSULATE OF BRAZIL
7A, Nungambakkam High Road,
Madras—600034.
22nd October, 1973.

Dear Dr. Sanjeevi,

I have your letter undated.

I shall be very pleased to attend the function on the 27th instant at 4 p. m.

Assuring you of my highest consideration, I remain,

Yours sincerely,
(Sd.) J. T. THADHANI.
Hon. Consul for Brazil.

CONSULATE-GENERAL OF JAPAN

20, *Nungambakkam High Road,*
Madras-600034.

October 22, 1973.

Dear Dr. Sanjeevi,

Thank you very much for your letter inviting me to the inauguration of the 3 day Seminar in connection with the Silver Jubilee celebrations of Indian Freedom on the 27th evening. Much as I would like to be present at the celebrations on that day, I am expecting a Goodwill Mission from Japan and as I will be fully preoccupied with their visit I regret I will not be able to be present to receive the first copy of the unique publication you mention.

Thanking you for your kind invitation and with my regards,

Yours Sincerely,
YASUHIRO MATSUOKA
Consul-General of Japan in Madras.

CONSULAAT DER NEDERLANDEN

CONSULATE OF
THE NETHERLANDS

'CHORDIA MANSION',
150A-2, MOUNT ROAD,
MADRAS-600002.
October 24th, 1973.

Dear Doctor,

Thank you very much for your invitation to attend the inauguration of a Seminar celebrating the Silver Jubilee of Indian Freedom at 4.00 p.m. on Saturday the 27th October, 1973. I am sorry that it will not be possible to meet you that evening but take this opportunity to express my appreciation of your kind invitation and good wishes for the success of the Seminar.

With kind regards,

Yours Sincerely,
(Sd.) A. STEWART.
Consul

NORTH—EASTERN HILL UNIVERSITY

Chandran D. S. Devanesen
M.A. (*Cantab*), *Ph.D.* (*Harvard*)
Vice-Chancellor

Headquarters:
Shillong, Meghalaya
"Dulcie Lodge"
Jaiaw Lumsyntiew
Shillong 793002

Vc: Per: 313/73

October 25, 1973.

Dear Dr. Sanjeevi,

Your kind letter asking me to send a message for the Silver Jubilee Seminar reached me only yesterday so let me send you best wishes though they will be belated. It is kind of you to have remembered me.

With best wishes,

Yours Sincerely,

(Sd.) Chandran D. S. Devanesen.

மேலும் வாழ்த்துச்செய்தி அனுப்பியோர்

கல்லூரி முதல்வர்கள்

(அ) டாக்டர் சுப. சண்முகநாதன், பி.எசி., (ஆனர்ஸ்); எம்.எசி., பிஎச்.டி., எப்.ஐ. எச்.,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 30.

(ஆ) திருமதி இ. ராசம்மாள் பி. தேவதாசு, எம்.ஏ., எம்.எசி., பிஎச்.டி.,
கோவை அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரி.

(இ) திருமதி இந்திரா சோமசுந்தரம், எம்.ஏ., எம்.லிட்., பி.எசி., பி.டி.,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி.

(ஈ) பேராசிரியர் செ. சண்முகானந்தம், எம்.ஏ.,
கனகசபைப் பிள்ளை தமிழ்க் கல்லூரி, நாகப்பட்டினம்.

(உ) க. து. சீதாராமன், எம்.ஏ., பி.டி.,
பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி, தஞ்சை.

தமிழ்த்துறையினரும் பிறரும்

(அ) டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், கேரளப் பல்கலைக் கழகம்.

(ஆ) டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை.

(இ) திரு தி. சே. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், தேசியக் கல்லூரி, திருச்சி.

(ஈ) டாக்டர் திருமதி தே. தியாகராசன், எம்.ஏ. பிஎச்.டி.,
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை.

(உ) திரு மு. வேங்கடசாமி, ந. க. ம. கல்லூரி, பொள்ளாச்சி.

(ஊ) Dr. F. Gros and French Institute.

தமிழ்ப் பெருமக்கள்

(அ) தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

(ஆ) திரு. நா. மகாலிங்கம், பி.எசி., எம்.ஐ.இ.

(இ) திரு. சை. வை. சிட்டிபாபு,
பள்ளிக் கல்வி இயக்குநர்.

(ஈ) திரு. பத்திரிநாத், ஐ.ஏ.எசு.,
வரலாற்று ஆராய்ச்சி ஆணையாளர், தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

(உ) தமிழ்வாணன்.

அமைப்புகள் முதலியன

(அ) தமிழகப் புலவர் குழு.

(ஆ) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

(இ) கன்னிமரா பொது நூலகம்.

(ஈ) தஞ்சை மகாராசா சரபோசி சரசுவதி மகால் நூலகம்.

(உ) நாவலர் புத்தக நிலையம்.

இந்திய விடுதலை வெள்ளி விழாக் கருத்தரங்கில் தொடக்க உரை

சிலம்புச் செல்வர்
மாண்புமிகு ம.பொ. சிவஞானம்

இன்று நடைபெறுகின்ற சரித்திரச் சிறப்பு மிக்க - அடிமை இருள் நீக்கிச் சுதந்திர ஒளி தோன்றிய நாளை நினைப்பூட்டுகின்ற - கருத்தரங்கை மிகுந்த மகிழ்ச்சியோடு தொடங்கி வைக்கிறேன். அத்துடன், நூல் கண்காட்சி ஒன்றையும் திறந்து வைக்கிறேன். இந்த இரண்டு பணிகளையும் எனக்களித்த பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் தமிழ்த் துறைத் தலைவருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டில் இதுவரை ஐந்து கருத்தரங்குகள் இங்கு நடைபெற்றுள்ளன என்று துணைவேந்தரவர்கள் கூறினார்கள். என்னுடைய நல்வினைப் பயனாக ஐந்து கருத்தரங்குகளிலும் நான் கலந்து கொண்டிருக்கிறேன். தொடர்ந்து இன்னும் சில கருத்தரங்குகள் நடந்திருந்தால் எனக்கு அதிருஷ்டமாக இருந்திருக்கும். ஐந்தோடு நின்று விட்டதே என்று வருந்துகிறேன். இவ்வளவு பேரன்பை என்பால் செலுத்துகின்ற பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் தமிழ்த்துறைத் தலைவருக்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடிமை நாட்டில் பிறக்கும் துரதிர்ஷ்டத்தைப் பெற்று விட்டவர்கள், தங்கள் காலத்திலேயே விடுதலைவாழ்வு பெறுவது என்பது முற்பிறப்பில் செய்த புண்ணியம் என்று சொல்ல வேண்டும். அடிமைத்தனத்தின் கொடுமையை அனுபவிப்பது பாவத்தின் விளைவு ஆகுமானால், விடுதலை வாழ்வைப் பெறுவது அதற்கு நேர் எதிரான புண்ணியமாகும். நாம் இரண்டையுமே அனுபவித்தவர்கள். நாம் அடிமைத்தனத்தையும் அனுபவித்தவர்கள்; இன்று விடுதலை வாழ்வையும் அனுபவிப்பவர்கள். விடுதலை என்பதை ரூபா அணா பைசாவாகக் கணக்குப் போட்டு லாபநஷ்டக் கணக்குப் பார்த்து வருத்தப்படுபவர்களும் உண்டு. நான் அப்படி வருத்தப்படுபவன் அல்லன். விடுதலை என்பது விடுதலைக்காகத்தான் என்று எண்ணுபவன்; அடிமைத்தனம் நீங்குகின்ற ஒன்றே பெரிய விடுதலை வாழ்வு.

நம்முடைய துணைவேந்தரவர்கள், "காந்தியடிகளுடைய தலைமை கிடைத்தில்லையானால் நமக்கு விடுதலை இவ்வளவு சீக்கிரம் கிடைத்திருக்குமா?" என்று கேட்டார்கள். அது, ஆராயத்தக்க உண்மை. அதற்கே ஒரு கருத்தரங்கு நடத்தலாம் என்பது என்னுடைய விருப்பம். ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்வேன்; அரை நூற்றாண்டுக்

காலம் அரசியலில் ஈடுபட்ட - அதிலே, இருபத்தெட்டாண்டுக் காலம் விடுதலைப் போரில் இரண்டறக் கலந்துகொண்ட அனுபவத்தால், காந்தியத்தில் தோய்ந்த பற்றுக் கொண்ட காரணத்தால் உறுதியாகச் சொல்லுகிறேன்; காந்தியடிகள் இல்லாமலே சுதந்திரம் பெற்றிருக்க முடியும். உலகில் காந்தியடிகள் தலைமை தாங்காத பல நாடுகள் விடுதலை பெற்றிருக்கின்றன. ஆனால், காந்தியடிகள் தலைமை தாங்காத நாடுகளில் விடுதலைக்குப்பின் ஏற்பட்ட விளைவுகளையும், காந்தியடிகள் தலைமை தாங்கிய நம் நாட்டில் விடுதலைக்குப்பின் ஏற்பட்டுவரும் விளைவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்து ஆய்வு நடத்த வேண்டும். பாகிஸ்தானோ, இலங்கையோ, இந்தோனேஷியாவோ, பர்மாவோ, இந்தோ சீனாவோ காந்தியடிகளின் தலைமை கிடைக்காத நிலையிலே விடுதலை பெற்றன. ஆனால், விடுதலைக்குப்பின் விளைவுகள் என்னவென்று பார்த்தால், அந்த நாடுகளில் ஏற்பட்ட அராஜகங்கள் நம் நினைவுக்கு வருகின்றன. அந்தக் கொடுமைகள் நம் நாட்டில் நிகழவில்லை. விடுதலை பெற்ற பின்னுள்ள கால் நூற்றாண்டுக் காலத்தில் அமைதியாக நாடு போய்க்கொண்டிருக்கிறது. இந்தப் பெருமையை நம் நாடு அடைந்ததற்குக் காந்தியடிகளின் தலைமையில் நாம் விடுதலைப் போர் நடத்தியதுதான் காரணம். நம் நாட்டில் கால் நூற்றாண்டுக் காலமாக நிலவுகிற சமாதானம், காந்தியடிகள் தந்த சொத்தாகும். அவரது தலைமையில் நாம் விடுதலைப்போர் நடத்தியதில்லையானால்-போராட்டம் நடத்தாமலோ, வன்முறையில் போராடியோ நாம் சுதந்தரம் பெற்றிருப்போமானால், இதற்குள் நாடு அராஜகத்தைக் கண்டிருக்கும். அறிவும் ஆற்றலும் பெற்ற தலைவர்களைக் காந்தியடிகள் நமக்குத் தந்துவிட்டுப் போனார். நாம் படும் துன்பங்களுக்கெல்லாம் அன்பு வழியிலேதான் பரிகாரம் காணமுடியும். இது, நமக்குக் காந்தி கற்றுக் கொடுத்தது.

விடுதலைக்குப்பின் இந்தோனேஷியா உள்நாட்டுக் குழப்பத்தால் இன்னலுற்றதைப் பார்த்தோம். இராணுவ ஆட்சியின் கீழ் பர்மா அனுபவிக்கிறதைப் பார்க்கிறோம். பாகிஸ்தான் அனுபவிக்கிறதையும் பார்க்கிறோம். அந்த நாடுகள் அனுபவிக்கும் துன்பங்களிலே ஆயிரத்திலே ஒரு பங்கைக் கூடக் காணாமல் நம் நாடு முன்னேறுகிறது. இந்தியா, குறைகள் இல்லாத கொடுமைகளற்ற நாடு என்று பொருளல்ல; ஏற்றத்தாழ்வுகள் போய்விட்டதென்று பொருளல்ல. இங்கு குறைபாடுகளெல்லாம் இருக்கின்றன. ஆனால், அவ்வளவு குறைபாடுகளையும் அறவழியில் போக்கிக் கொள்ள முடியும் என்று நமக்குப் போதித்தார் காந்தியடிகள். நாமும் அந்த நம்பிக்கையில் ஊன்றி நிற்கிறோம்.

விடுதலை வெள்ளிவிழா நாளிலே என் சிந்தனை விடுதலைப்போராட்ட காலத்திற்குச் செல்கிறது. நாங்களெல்லாம் விடுதலைக்குப் போராடிய அந்த நாளிலே எங்கள் காலத்திலே விடுதலை வரும் என்ற நம்பிக்கையில்லாத 'அறிவாளிகளாகத்'தான் நாங்கள் இருந்தோம்! ஆனால், எப்படியோ எங்கள் காலத்திலேயே விடுதலை வந்துவிட்டது. வெள்ளி

விழாவையும் காணுகின்ற பேற்றினை நான் பெற்றுவிட்டேன். அந்த வெள்ளிவிழா நாளில் நள்ளிரவிலே-சட்டமன்றத்திலே அமர்ந்து பிரதிக்கினை எடுக்கின்ற பேற்றினையும் பெற்றேன். அந்த நேரத்திலே என் உடம்பெல்லாம் சிலிர்த்தது; உணர்வெல்லாம் ஒன்றுபட்டது. அப்படிப்பட்ட பேற்றினைத் தந்த இறைவனுக்கு அன்று நான் நன்றி செலுத்தினேன்.

சுதந்திரத்தின் பெருமையை உணர்த்த சில செய்திகளை உங்களுக்குச் சொல்லுகிறேன். சிதம்பரம் பிள்ளை, இரண்டு ஜென்ம தண்டனை பெற்றார், விடுதலைப்போரிலே கண்மூடுகின்ற நேரத்திலே அவர் சொன்னார், "சுதந்திரத்திற்காகப் பாடுபட்டான் சிதம்பரம்; அதைப் பார்க்கக் கொடுத்துவைக்காமல் சாகிறான்" என்று, அடிமை நாட்டில் சாக நேர்ந்ததற்காகக் கண்ணீர் விட்டுத்தான் கண்மூடினார். அவர் பார்க்காத சுதந்திரத்தை நாம் பார்க்கக் கொடுத்துவைத்தோமே, அதைவிட வேறு புண்ணியம் என்ன இருக்க முடியும்?

சத்தியமூர்த்தி ஐயர் ஒருநாள் அந்தி மாலை நேரத்திலே—யூனியன் ஜாக் கொடி மாலை 6-மணிக்குக் கோட்டைக் கொடி மரத்தில் இறக்கப்படுகிற நேரத்திலே—திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நின்று பேசுகிறார்; அவரது பார்வையிலே யூனியன் ஜாக் கொடி இறங்குவது பட்டுவிடுகிறது; உடனே சொன்னார், "அதோ இறங்குகிறதே அந்த யூனியன் ஜாக் கொடி! இறங்கிவிட்டதாகவே முடிந்து, அதே கோட்டைக் கொடி மரத்திலே என் தாயின் மணிக்கொடி ஆடிப் பறப்பதைப் பார்த்துக் கண்மூடிவிடுவேனானால், அதுவே எனக்கு ஆனந்தம்" என்று. அவர் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. நாம் பார்க்கக் கொடுத்து வைத்தோம்.

விடுதலை வெள்ளிவிழாவை யொட்டி இலக்கியக் கருத்தரங்கை நடத்துகிற துணைவேந்தருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவருடைய துரைத்தனத்திலே எத்தனையோ துறைகள் இங்கே நடக்கின்றன. அந்தத் துறைகளிலே இந்த விழாவைக் கொண்டாடும் பொறுப்பை வரலாற்றுத் துறைக்குத் தந்திருந்தால் நான் குறை சொல்லமாட்டேன். அப்படிச் செய்யாமல் தமிழ்த்துறைக்குத் தந்திருக்கிறார். அகத்தியர் வடிவத்திலிருக்கிற நம்முடைய டாக்டர் ந. சஞ்சீவி அவர்களால் நிர்வகிக்கப்பட்டுவரும் தமிழ்த் துறைக்கே கொடுத்ததைப் பார்க்க எனக்கொரு தனிப்பூரிப்பு! இந்தியாவில் வேறு எங்குமில்லாமல் இங்கேதான் விடுதலை வெள்ளி விழாவை யொட்டி இலக்கியக் கருத்தரங்கு நடக்கிறது. சுதந்திரத்தின் பொருளைச் சரியாக உணர்ந்திருக்கிறது இந்தப் பல்கலைக் கழகம். சுதந்திரத்தைச் சொந்த மொழியின் மூலம்தான் மக்கள் அனுபவிக்க முடியும். சுதந்திரத்தை சொந்த மொழியின் மூலம்தான் சுவைக்க முடியும். காந்தியடிகள் நமக்குக் கற்றுக் கொடுத்த மந்திரங்களிலே இது ஒன்று. இங்கே சுதந்திர மணம் வீசுகிறது. இந்தக் கருத்தரங்கு, சொந்த மொழியில் நடப்பதால் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கருத்தரங்கில் பேராசிரியர்கள் பலர் பங்குபெறவிருக்கிறார்கள். அவர்கள் பெயர்ப் பட்டியலைப் பார்த்தேன். இது நிறைகுடம் போன்ற ஒரு விழாவாக இருக்கிறது. இதில் என்னையும் ஒரு பாத்திரமாக வைத்து, கோவை பூ. சா. கோ. கலைக்கல்லூரிப் பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி அவர்கள் கட்டுரை படிக்க இருக்கிறார். நான் எழுதிய 'சிலப்பதிகாரத் திறனாய்வு' என்ற நூலை வைத்தே அவர் என்னைப் பற்றிப் பேசுகிறார். அந்த நூலை உருவாக்குவதற்கு அவர் எனக்குப் பெருந்துணையாக இருந்தார். நான் அரைகுடம் என்பது உங்களுக்குத் தெரியும். நான் இலக்கிய ஆராய்ச்சி எழுதினால், நிறைகுடத்தின் துணை தேவைப்படுகிறதல்லவா! அதற்காக இந்த நேரத்தில் அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கருத்தரங்கில் படிக்க விருக்கும் கட்டுரைகளை டாக்டர் ந. சஞ்சீவி எனக்கு அனுப்பினார். பல வேலைகளுக்கிடையே எல்லாக் கட்டுரைகளையும் படித்து முடித்தேன். துணைவேந்தரவர்கள் சொன்னார்கள்—"கருத்தரங்கிலே கருத்து வேற்றுமை வந்துவிடும்—கோபம் வந்துவிடும், நிகழ் காலத்தைப்பற்றிச் சொன்னால்" என்று. நான் படித்துப் பார்த்த கட்டுரைகளிலே அப்படி எதுவும் இல்லை. எதற்கும் கோபித்துக் கொள்ளுகிற புத்தியைப் படைத்த அரசியல் வாதியாகிய எனக்கே கோபம் வரவில்லையென்றால், பேராசிரியப் பண்பு படைத்தவர்களா கோபித்துக் கொள்ளப் போகிறார்கள்? ஒருநாளும் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்ற உறுதியோடு இந்தக் கருத்தரங்கை நான் தொடங்கி வைக்கிறேன்.

என்னுடைய அதிருஷ்டமோ, துரதிருஷ்டமோ—அதிருஷ்டமென்று தான் எண்ணுகிறேன். — விடுதலைப் போரில் ஆறு முறை சிறை சென்றேன். இன்னுங்கூட, நம் நாட்டில் பல்லாயிரவர் அரசியல் கைதிகளாகச் சிறைகளில் இருந்துகொண்டுதானிருக்கிறார்கள், பலப்பல காரணங்களால். ஆம்; வர்க்கப் புரட்சியின் பெயரால் நக்சல்பாரிகள் சிறையில் கிடக்கிறார்கள். அவர்கள் ஆயிரக் கணக்கானவர்களாக இருக்கலாம்; ஆண்டுக்கணக்கில் சிறை வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், நாட்டு மக்களுடைய மனோபாவத்தைப் பார்க்கிறபொழுது, விடுதலைப் போரில் சிறை சென்றவர்களுக்குத்தான் மதிப்புக் காட்டுகிறார்கள். வேறு எதற்காகவும் சிறைசென்றவர்களிடம் மக்கள் மதிப்புக் காட்டாத ஒரு தன்மையைப் பார்க்கிறோம். நான் சுதந்திரப் போரில் சிறை சென்றதற்காகத் தான் நாட்டவரால் மதிக்கப்படுகிறேன். எல்லைப் போரிலே சிறை சென்றதற்காக அல்ல. எனக்கே கூட, விடுதலைப் போரில் சிறை சென்றதை நினைக்கிறபொழுதுதான் உடல் சிலிர்க்கிறது. விடுதலைப் போரில் சிறைசெல்ல வயதிருந்தும் செல்லாமல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள், அந்தப் போரில் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதற்கு ஏதேனும் சமாதானம் சொல்லியாக வேண்டி இருக்கிறது. விடுதலைப் போர் வரலாற்றுக்கு அவ்வளவு பெருமை இருக்கிறது! சிறைக்குப் போகாதவர் கூடப் போனதாகப்

பொய் சொல்லியாக வேண்டிய ஒரு நிலை வந்திருக்கிறது. பொய் சொல்லாமல் இருப்பது நல்லது. ஆனால், இப்படிப்பட்டதற்குச் சொன்னால் அது மன்னிக்கக் கூடியபொய்யாக இருக்கிறது.

அப்படிப்பட்ட புனித சரித்திரத்தைப் படைத்துள்ள நம் நாடு ஒரு குறையையும் படைத்திருக்கிறது. அது, நாட்டில் விடுதலைப்போர் வரலாறு இன்னமும் எழுதப்படாததாகும். அதை எழுதி வெளியிட சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சந்தர்ப்பம் இருக்கிறதோ இல்லையோ? ஆனால் நான் ஆட்சியைத்தான் கேட்டுக் கொள்ளுவேன். இன்றைய தமிழக அரசு, தியாகிகளைப் போற்றுகிறது; மானியம் வழங்கி வாழ்வளிக்கிறது; சிலை வைத்துப் பெருமைப் படுத்துகின்றது. அதோடு சேர்த்து, இன்னும் ஒன்றையும் செய்யுமாறு வேண்டிக் கொள்வேன். சுதந்திரப் போராட்ட வரலாற்றை—தமிழ் மாநில அளவிலேனும்—உருவாக்க தமிழக அரசு முன்வரவேண்டும். அதற்கென ஒரு குழு அமைக்கலாம். இந்தத் தலைமுறையிலேயே எழுதி முடித்தால்தான் அது முழுமைபெறும். விடுதலைப் போரில் பங்கு கொண்ட பலர்—என்போன்றவர்கள்—வாழ்ந்து கொண்டிருக்கிறோமாதலால், விடுதலைப் போராட்டச் செய்திகளைக் கர்ணபரம்பரையைச் செய்தியாகக் கேட்டவர் எழுதுவதைவிட, கண்ணால் பார்த்தும் அதிலே பங்குகொண்டும் வாழ்பவர் எழுதுவது முழுமையாக இருக்கும். இந்தத் தலைமுறையிலேயே அது எழுதி முடிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த அவையிலிருந்து தமிழக அரசுக்கு விடுக்கிறேன்.

ஒருவேளை இந்தப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையே அதைச் செய்யலாம் என்றால், செய்யட்டும். எனக்கே இந்தக் கட்டத்தில் ஒரு இடம் கொடுத்தால், நான் செய்து முடிப்பேன். தியாகிகள் யார்யார் என்ற விவரந்தரும் பெயர்ப்பட்டியல் இப்போதுதான் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதுபோன்று படிப்போரை மெய் சிலிர்க்க வைக்கும் விடுதலைப் போர் வீரவரலாறும் நூல் வடிவில் வரவேண்டும்.

இங்கு, 'திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்' என்ற நூலை வெளியிட்டேன். பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் அதனைத் தயாரித்திருக்கிறார்கள். சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடந்ததனை நீங்கள் அறிவீர்கள். அதற்குத் திரட்டிய நிதியில் மிச்சப்பட்ட பணத்திலிருந்து ஒரு பல்கலைக் கழகத்துக்கு மூன்று லட்ச ரூபாய் வீதம் மூன்று பல்கலைக் கழகத்துக்கும் ஒன்பது லட்ச ரூபாய்களை அப்போது முதல்வராக இருந்த அண்ணா அவர்கள் வழங்கினார்கள். அவர்கள் விரும்பியிருந்தால் அந்தத் தொகையை வேறு வழிகளில் செலவழித்திருக்கலாம். அப்படிச்செய்யாமல் மூவேறு பல்கலைக் கழகங்களுக்கு ஒதுக்கினார்கள். அதையும் திருக்குறள் ஆராய்ச்சிக்கென்றே ஒதுக்கினார்கள். அதற்காக, அமரராகி விட்ட அண்ணா அவர்களுக்கும் அவரது தம்பியான இன்றைய முதல்வருக்கும் நாம் நன்றி செலுத்தவேண்டும்.

இந்தப் பல்கலைக் கழகம் தயாரித்த ஐந்தாவது நூலை இப்போது நான் வெளியிட்டிருக்கிறேன். இந்த நூலை நான் படித்துப் பார்த்தேன். பேராசிரியர் திருநாவுக்கரசு அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள். என்போன்றவர்களுக் கெல்லாம் பயன்படக் கூடிய நல்ல சொல்லாராய்ச்சி, பொருள் ஆராய்ச்சி நூல் இது. இதிலே சொல்லாராய்ச்சியாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டிவிட்டு, அந்தச் சொல்லைப் பற்றி என்னுடைய கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். அவர், "நாடகம்" என்பது, 'நடி' என்னும் வேர்ச்சொல் அடியாகப் பிறந்த தொழிற் பெயர்" என்று சொல்லுகிறார். அப்படியும் ஒரு இலக்கணம் இருக்க லாம். நான் எண்ணுகிறேன், நாடு முழுவதையும் தன்னகத்தே காட்டுவ தால் நாடகம் என்று பெயர் வந்தது என்று. ஆம்; நாடு + அகம் நாடகம். இதற்குச் சான்று சொல்லுகிறேன். ஐந்திணை நெறி வகுத் ததே தலைவியையும் தலைவனையும் ஐவகை நிலத்திலும் நடக்க வைத்து நாடு முழுவதையும் காட்டுவதற்காகத்தான்; சிலப்பதிகாரக் காப்பியம் அப்படித்தான் நடக்கிறது. இராமாயணக் காப்பியமும் அப்படித்தான். ஐந்திணையையும் நாடக அரங்கில் காட்டினாலே, நாடு முழுவதையும் காட்டியதாகிவிடும். முல்லை, பாலை, குறிஞ்சி, நெய்தல், மருதம் ஆகிய ஐவகை நிலங்களிலும் தலைவியையும் தலைவனையும் நடக்க வைத்து அந்த நிலங்களில் வாழ்வோர் பழக்க வழக்கங்களையும், அவர்கள் பயன் படுத்தும் பொருள்களையும், அந்த மக்கள் வழிபடும் தெய்வ வேறுபாடு களையும் காட்டினாலே நாடு முழுவதையும் காட்டியதாகிவிடும். அதற் காகத்தான் நிலத்தை ஐந்தாகப் பிரித்துக் காட்டினார் தொல்காப்பியர். நாடக வழக்கினைக் கூறுவதற்காகத்தான் 'களவியல்' கற்பித்தார் என்று இந்த ஏழையின் மனம் எண்ணுகிறது. எனது கருத்து சிந்திக் கத்தக்கதானால், நான் வெளியிட்ட நூலின் அடுத்த பதிப்பில் என் கருத்தை அடிக்குறிப்பாகவேனும் போட்டால் அடியேனுக்கு ஆறுதலாக இருக்கும். 'இன்னார் சொன்னார்' என்று கூடப் போடத்தேவையில்லை. 'இப்படியும் ஒரு கருத்து நிலவுகிறது' என்று போட்டாலே போதும். எழுபது நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறேன். யாரும் இதுவரை அடிக்குறிப்பாகக்கூட எனது கருத்துகளைப் பயன்படுத்த மாட்டேன் என்கிறார்கள். என் மனக்குறையை இந்த வெள்ளிவிழாக் கருத்தரங் கிலே வெளியிட்டுக் கருத்தரங்கைத் தொடங்கி வைக்கிறேன். பேராசிரி யர் க. த. திருநாவுக்கரசு எழுதிய நூலை வெளியிடுகிறேன்; புத்தகக் கண் காட்சியையும் திறந்து வைக்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பைத் தந்த பல்கலைக்கழகத்துக்கு நன்றி கூறுகிறேன். தொடர்ந்து மூன்று நாட்கள் இந்தக் கருத்தரங்கு வெற்றிகரமாக நடைபெற வேண்டு மென்று இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

ஆய்வுக் கட்டுரைகள்

1

25 ஆண்டுகளில் மாணவர் வளர்த்த தமிழ்

பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம்,

எம்.ஏ., எம்.லிட்.,

தமிழ்த்துறைத் தலைவர் — பேராசிரியர்

பச்சையப்பர் கல்லூரி, சென்னை-30

பரந்த பாரதநாடு பலவகையில் சிறப்புற்ற ஒரு பெருநாடு. இந் நாட்டின் இயற்கையும், தொன்றுதொட்டு இங்கே வாழ்ந்துவரும் மக்களின் இயற்கைப் பண்பும் இதன் ஏற்றத்தை உலகில் உயர்த்து கின்றன. அப்படியே இந் நாட்டு மொழிகளும் அவற்றில் எழுந்த இலக்கியங்களும் உலக மக்கள் உள்ளத்தைக் கவர்வனவாக உள்ளன. இந்திய நாட்டில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன என்றாலும் அவற்றுள் தெளிந்த எழுத்தும் இலக்கியமும் உடையவை மிகச் சிலவே. 'செப்பும் மொழி பதினெட்டுடையாள் — எனில், சிந்தனை ஒன்றுடையாள்' என்று அன்றைய பிரியாத பாரதத்தைப் பாட்டில் சித்திரித்தான் பாரதி. மொழிகள் பதினெட்டாக இருப்பினும் அவை இரு குடும்பங்களைச் சார்ந்தனவாகவே உள்ளமையை மொழிநூற் புலவர் அறிவர்; அறிந்து உணர்த்துவர். இந்தோ — ஐரோப்பிய மொழிக் குடும்பமாகிய ஆரிய மொழிக் குடும்பம் வட இந்தியாவில் வாழ, திராவிட மொழிக் குடும்பம் தென் இந்தியாவில் வாழும் நிலையில் உள்ளமை காண்கின்றோம். திராவிட மொழிகளில் பல ஆரிய மொழிக் கலப்பால் பெரிதும் மாறுபட்டதாகக் காணப்படினும், அவற்றின் அடிப் படைத் தன்மை மாறாதிருப்பதறிகிறோம். அத் திராவிட மொழிகளுள் தொன்மை வாய்ந்த தமிழ் மொழியோ அத்தகைய மொழிக் கலப்பும் அதனால் உண்டான மாற்றங்களும் பெறாமல், சிறக்க அன்றுதொட்டு இன்றுவரை வாழ்ந்து வருகின்றது. அத்தகைய மொழி, உரிமைபெற்ற பின், இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பெற்ற வளர்ச்சியைப் பலப் பல வகைகளில் பல்வேறு அறிஞர்கள் ஆய்ந்து வருகின்றனர். மாணவர்களுக்காக மாணவர்களிடையே வாழும் நான், இந்த உரிமை நாட்களில் மாணவர் வளர்த்த தமிழ் பற்றி ஆய்வது தகுதியும் பயனும் உடையதெனக் கருதியே இத் தலைப்பில் எழுதத் தொடங்குகிறேன்.

இந்திய நாடு விடுதலை பெற்ற பின், இந்நாட்டு மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் பிறவற்றையும் வளர்க்க அரசாங்கமும் தனியாரும் பல வகையில் முயன்று பாடுபட்டு வருகின்றனர். சில மொழிகள் வளர்ந்த அளவிற்குத் தமிழ் வளரவில்லை என்றாலும், இதன்

வளர்ச்சியும் ஓரளவு எண்ணத்தக்கதே. பலரும் பலவகையில் தம் தாய்மொழி வளரப் பாடுபடும் நிலையில் தமிழ் மக்களும் தமிழ்நாட்டு அரசாங்கமும் தமிழ் வளரப் பாடுபட்டுள்ளனர். கடந்த ஒரு சில ஆண்டுகளில் போதுமான அளவில் தமிழ் வளர்ச்சி அடையவில்லை, என்றாலும் விடுதலை பெற்ற பிறகு வளர்ச்சி இல்லை என்று சொல்ல முடியாது. உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் பயின்ற மாணவர் தம் எழுத்து நடையினையும் மொழி ஆற்றலையும் பொருட்பொதிவையும் கண்டு போற்றிய அறிஞர் பலர். அவர்கள் மேடைகளில் முழங்கிய தமிழ் முழக்கம், அரசியலாரையும் உலுக்கிய நிலையை நாம் அறிவோம். ஆனால் அதே மாணவர்கள் இன்று தமிழில் அத்தகைய ஊக்கங் காட்டாததோடு, அந்த நிலையில் தமிழில் எழுதவும் பேசவும் இயலா நிலையில் உள்ளமை அறிகிறோம். எனினும் தமிழ் அதற்குரிய தனி நடையில் ஓரளவு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது எனலாம்.

தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர் தம் மொழித் திறனை வளர்க்கப் பல பரிசுத் திட்டங்கள் புதியனவாக நிறுவப்பெற்றன. அவற்றில் பங்கு கொள்ளும் ஆர்வம் ஒரு சில ஆண்டுகளுக்கு முன் இருந்தமைபோன்று தற்போது மாணவரிடையே இல்லை என்பது கண்கூடு. எனினும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அவர்கள் வளர்த்த தமிழை ஓரளவு அறிய வாய்ப்பு உண்டு. பரிசுத் திட்டங்களின் போட்டிகளைத் தவிர்த்து, கல்லூரிகளே நடத்தும் இதழ்களில் உரிமை பெற்ற பின் தமிழ் அதிக இடத்தைப் பெற்றிருப்பதை அறியலாம். தமிழ் பயிலும் மாணவர் மட்டுமன்றித் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் மட்டுமன்றி, பலரும் அம்மலர்களில் பல்வேறு வகைப்பட்ட கட்டுரைகளை எழுதித் தமிழை வளர்த்துள்ளனர். உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாவது, ஏழாவது பயிலும் மாணவர்களும்கூட நல்ல தமிழில் உயரிய கருத்துக்களை எழுதி வெளியிட்டுள்ளனர். அவற்றையெல்லாம் எண்ணி, எழுதத் தொடங்கினால் அது ஒரு நூலாகவே முடியும். எனவே, நான் பணியாற்றும் பச்சையப்பர் கல்லூரியில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பயின்ற 'மாணவர் வளர்த்த தமிழ்' நலத்தினை, அக்கல்லூரி மலர்களில் அவர்கள் எழுதியுள்ள கவிதை, கட்டுரை, கதை ஆகியவற்றின் வழியே ஒருவாறு காணலாம் என எண்ணுகிறேன். கீழே காணப்போகும் எழுத்துக்களை எழுதிய அன்றைய மாணவர்கள் இன்று பரந்த பாரதத்திலும் தமிழகத்திலும் பல்வேறு சிறந்த பதவிகளை ஏற்றுச் சிறப்புறப் பணியாற்றுகின்றனர் என்பதை எண்ண மகிழ்ச்சி பிறக்கின்றது. அவர்தம் உணர்வும் எழுத்தும் ஆக்க நெறியும் அவர்களைப் பல பதவிகளில் உயர்த்தியுள்ளன என்பது மிகையாகாது. இனி அவர்கள் எழுத்துக்களை முறையாக எடுத்துக் காட்டி, அவர்கள் வளர்த்த வகையில் தமிழ் நாட்டு மூலை முடுக்குகளிலெல்லாம் வாழ்ந்த தமிழ் உள்ளம் படைத்த மாணவர் அனைவரும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அன்னைத் தமிழுக்கு ஆக்கப் பணி

செய்துள்ளனர் என்பதையும் நினைப்பூட்டி அமைகிறேன். கல்லூரியில் பயிலும் மாணவர் பலவகையினர். தமிழே முற்றும் பயின்றவர், தமிழைப் பிறவற்றோடு ஒரு பாடமாகப் பயில்வர்; தமிழே பயிலாது பிற பாடங்களைப் பயில்பவர், வணிக இயல், அறிவியல் போன்று தனித்துறையில் பயில்பவர் எனப் பல வகையினர் பல வகைகளில் கல்வி பெறுகின்றனர். ஆயினும் அனைவரும் தமிழில் உணர்வுடையவர்களாய், சிறந்த பொருள்கள் பற்றிய — தத்தம் பாடங்களில் காணும் உண்மைகளைத் தமிழில் வடித்துத் தந்து தமிழை வளப்படுத்திய நிலையினைக் காண முடிகின்றது. அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டே காட்டலாம் என எண்ணுகிறேன்.

தமிழர் நிலை பற்றி அக்கால இடைநிலை மாணவர் (Inter, 1947) எழுதிய கட்டுரையில் ஒரு சில வரிகளே கீழே வருவன. தலைப்பு 'அந்த நாளும் வந்திடாதோ'

'கடல் கடந்த தமிழர் என்று நீங்கள் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அடியும் கேட்டதுண்டு. "எங்கள் பண்டைய தமிழர் வீரம் நிரம்பியவர்; தீரம் படைத்தவர்; கல்வி மிகுந்தவர்; கருணையுடையவர்; 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற ஒப்பற்ற கொள்கையை உடையவர்; காதல் திருமணம் அன்னவர் வாழ்க்கை முறை; பெண்களைச் சரிநிகர் சமானமாகக் கருதியவர்' என்று பண்டையோர் பெருமையை வாயாரக் கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் வாழ்க்கையில் அத்தகைய கொள்கைகளைக் காணவில்லை. அதற்கு வேண்டிய முயற்சியையும் நீங்கள் காட்டுவதில்லை. பசித்தவன் தனது பழைய வளமான வாழ்க்கையை நினைத்துப் பசி தீர்ந்த கதைபோலன்றோ இருக்கிறது உங்கள் செய்கை. மருந்துக்கும் இல்லையே உங்களிடை அத்தகைய கொள்கைகள்' (சி. என். ஆனந்தகிருட்டினன், II U. C, IIA) என்று இன்றைய தமிழர் நிலையை நினைத்து, உரிமை பெற்ற அந்த ஆண்டில் அந்த ஆண்டிற்குரிய மலரில் காணமுடிகின்றது. மேலும் ஆங்கிலம் தொடர்ந்து நாட்டில் உலவ வேண்டும் என்ற கொள்கையைத் தமிழைச் சிறப்பாகக் கொண்டு பயிலும் மாணவர் வற்புறுத்துவதை எண்ணிப் பார்க்கவும் வேண்டுமன்றோ! இதோ அவர் எழுத்தில் சில வரிகள் :—

"ஆங்கிலம் அந்நியமொழி! நமது காலிலேயே நாம் நின்று பழகிக் கொள்ளவேண்டும். எனவே நமது மொழிகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன் துணையால் ஆட்சி செலுத்துவதே நலம். அங்ஙனம் பார்க்கும்போது இந்தியே ஏற்றமொழியாக இருக்கின்றது" என்பது அவர் கூறும் இரண்டாம் காரணம். "நவீன அறிவை அளித்து உலகில் தலை நிமிர்ந்து நம்மை நடைபோடச் செய்து — செய்வது ஆங்கிலமேயாகும். ஆங்கிலேயருக்குப் பதிலாக நம்மை நாமே ஆளும் பொறுப்பைத்தான் அடைந்துள்ளோமேயன்றி, பிறவற்றில் ஆங்கிலேயர் ஏற்படுத்திச் சென்ற முறையைத்தானே கையாண்டு வருகிறோம்.

கையாளவேண்டியுள்ளது.........அந்நிய நாடுகளத்தனையும் ஆங்கிலத்தைப் பொதுமொழியாகவும் தாய்மொழிக்கு அடுத்த இரண்டாம் மொழியாகவும் ஏற்றும் கற்றும் வருகின்றபோது நாம் மட்டும் ஆங்கிலத்தை அந்நியமொழி என்று சொல்லி ஒதுக்கித் தள்ளல் 'விண்ணில் இரவிதனை விற்று விட்டுப்போய் மின்மினி கொள்வதை' ஒக்கும்'' (தலைப்பு—பொதுமொழி: ம. காளியப்பன், III. Hons. 1957)

இவ்வாறு தாய்மொழியையும் தளரவிடாது உடன் ஆங்கிலத்தையும் பயில வேண்டிய இன்றியமையா நிலையை ஒரு தமிழ் பயிலாத, வணிக இயல் உயர்நிலையில் (M. Com.,) பயிலும் மாணவர் ஒருவர் தாய் மொழியிலேயே எல்லாக் கல்வியும் அமையவேண்டும் என்பதையும் காணல் நலம் பயப்பதாகும். அதிலும் அவ்வணிக இயல் மாணவர் அக்கருத்தைக் கவிதையாகவே வடித்துத் தந்துள்ளார்.

'தாய் மொழியில் சட்டதிட்டம் இயற்றி விட்டால்
தக்கபடி அறிந்திடுவர் கல்வி இல்லார்
தாய்மொழியின் வாயிலாக் கல்வி கற்றுல்
தழைத்தோங்கும் சிந்தனையும் கற்பவற்கே
ஆய்வதற்கும் அத்தகையோர் அமைவ தோடு
ஆக்கப்பணி யாற்றுதற்கும் முன்னே நிற்பர்
ஓய்வின்றி அனைவருமே கல்வி கற்பர்
உண்மையிலே நாட்டுநலம் உயர்ந்தே ஓங்கும்'

(தலைப்பு — தாய் மொழியால் நலம் தழைக்கும் —
கி. பன்னீர் செல்வம், M. Com., 1967)

மாணவர் ஒருவர் சங்ககாலப் புலவர் வாக்காக அன்றும் இன்றும் தமிழகத்தில் தமிழரும் தமிழ்ப் புலவர்களும் உள்ள நிலையினைத் தம் கவிதையால் சித்திரிக்கிறுர்.

'அன்று நன் தமிழ்ச் சங்கத்தில் அரும்பணி யாற்றும் போது
சென்றிடும் திசையெல்லாமே செந்தமிழ் முழங்கக் கண்டேன்
என்றுமே போற்றும் நல்ல இலக்கியம் பரவக் கண்டேன்
குன்றுமே வீழ்ந்தாலுந்தன் குலத்திலே வீழ்ந்தாரில்லை.

இன்று நான் காணுகின்றேன் இழிந்த என் தமிழன் வாழ்வை
மன்றுதான் இருந்திட்டாலும் மறத்தமிழ் காக்க மக்கள்
நன்றென வந்திட்டாலும் நடுங்கிடாத் தமிழர் தம்மை
குன்றிய நிலையிற் காணக் குமுறுதே என்றன் உள்ளம்'

(சங்கப் புலவர் கூற்று — மு. பி. பாலசுப்பிரமணியம்
தமிழ்முது கலை, 1960)

தமிழ் பயிலும் மாணவர் தமிழ் மொழியினைப் பற்றி எழுதும் கவிதையினைப் பயிலும்போது நாம் பெறுகின்ற இன்பத்திலும் தத்துவம் பயிலும் (தமிழை அதுபோது பயிலாத) மாணவர் அத்தமிழ்

மொழியைப் பற்றியும் தமிழரைப் பற்றியும் எழுதும்போது— அதிலும் கவிதையாக வடித்துக் காட்டும்போது பெறுகின்ற இன்பம் இரட்டிப்பாக வன்றோ இருக்கிறது! இதோ அவர் பாட்டு.

மண்ணுலகில் மொழிக் குலத்தில் முதலாய்த் தோன்றி
மாசற்ற இலக்கியங்கள் பலவும் ஈன்றே
எண்ணிற்கும் எழுத்திற்கும் இனிமை தந்த
எழில் தமிழைத் தாய் மொழியாய்ப் பெற்ற தோழா!
கண்ணனைய நம் மொழியை அழிக்க வென்றே
'காட்டு மொழி' இந்தியினைத் திணிக்கும் வேளை
எண்ணுகின்ற நீள்துயிலில் திளைத்தல் நன்றோ!
நற்றமிழா! கண்விழிப்பாய்! மானங்காப்பாய்'

(எழுக இன்றே — ப. கோவிந்தசாமி—தத்துவம்
முதுகலை 1967)

என்று மானங்காக்கத் தமிழரை எழச் சொல்லும் திறன் எண்ணத்தக்க தன்றோ! இவ்வாறு பல மாணவர்கள் தமிழ், தமிழ் மொழி, தமிழர் பற்றிப் பாட்டிலும் உரைநடையிலும் பற்பல கருத்துக்களை வழங்கியமை போன்றே, பல மாணவர்கள் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து, அவற்றை எல்லோரும் அறியும் வண்ணம் எளிமையாகவும் கதைப் போக்காகவும் காட்டித் தம் கண்ணனைய தமிழ்ச் செல்வத்தை ஓம்பியுள்ளனர். அவற்றுள் ஓரிரண்டு காணலும் ஏற்புடைத்தாகும் என எண்ணுகின்றேன்.

புறப்பாடல் ஒன்றினை விளக்குமுகத்தான் 'விரிந்த மனம்' என்ற தலைப்பில், எளிய கதைப் போக்கில், தமிழ் பயின்ற மாணவர் ஒருவர் எழுதியுள்ளதை ஈண்டு எண்ணிப் பார்க்கலாம். அவர் எழுதிய கட்டுரையில் எளிமையும் இனிமையும் பொருந்திய ஒரு சில வரிகள் இவைகள் :

"அப்புலவர் நெடுந்தூரம் நடந்தார். காடும் மலையும் கடந்து சென்றார். இறுதியில் முதிரமலை வள்ளல் குமணனைக் கண்டார். அவனை வாழ்த்தினார். தம் குடும்பம் வறுமையால் வாடுவதை எடுத்துக் கூறினார். 'கூர்வேற் குமண! இன்மை துரப்ப வந்தேன். வரிசையறியாது வெறுப்புடன் வேழ மளிக்கினும் கொள்வேனல்லேன். விருப்புடன் நீ தரும் பரிசில் அளவில் சிறிது குறைய இருப்பினும் கொள்வேன்' என்று தம் உள்ளக் கிடக்கையைக் கூறினார். வறுமையிலும் வாடாத புலமை வளத்தைக் கண்டான் குமணன். அவன் கண்கள் நீர் சொரிந்தன. புலவரை வாட்டிய வறுமை, மீண்டும் அவர் வாழ்நாளுள்ளளவும் தொடராதவாறு பெரும் பொருளளித்

துப் போக விடுத்தான். வள்ளலை வாழ்த்தி மகிழ்ச்சியுடன் திரும்பினர் புலவர்.''

(விரிந்தமனம் — டி. பி. சித்தலிங்கையா
தமிழ் III Hons. 1951).

இவ்வாறு தமிழ் பயின்ற மாணவர் மட்டுமன்றி, அறிவியல் பயிலும், சிறப்பாக முதுநிலையில் பயிலும் மாணவரும் தமிழ் இலக்கியத்தில் தம்மை மறக்கவைத்துக்கொள்ளும் நிலையினைக் காண்கின்றோம். நாலடியாரில் ஒரு பாட்டினை மையமாக வைத்து அவர் ஒரு கதை யினையே வடித்துத் தருகிறார். இதோ அவர் எழுத்துள் ஒரு பகுதி :

'அன்றொரு நாள் நிகழ்ச்சி அவன் மனத்தூடே மின்னிடு கிறது. அவள் ஒரு சோலையில் குளத்தருகே வந்து கொண் டிருக்கிறாள். மீன் கொத்திப் பறவை ஒன்று அங்கு வட்டமிடு கிறது. பாவம்! அன்று அதற்கு மீனே கிடைக்கவில்லை. திடீரென்று அதற்கு எல்லை இல்லா மகிழ்ச்சி மனத்திலே பார்வையிலே ஆவல். காரணம் அது கயல்கள் இரண்டைக் கண்டுவிட்டது. ஆவலுடன் உண்ண ஓடி வருகிறது. என்ன விந்தை! கயல்கள் அவளுக்கெதற்கு? தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பின் தொடருகிறது அப்பறவை.

அவள் ஓரிடத்தில் அமர்கிறாள்; பறவையும் அவளை நெருங்கிவிட்டது. இருந்தாற்போலிருந்து, அச்சம் கலக்கிறது அதன் பார்வையில். உயிர் பிழைக்கவேண்டி அருகில் இருந்த மரக்கிளையில் தாவி உட்காருகிறது. ஏன்? கயல்களைக் காக்க இரு விற்களும் அங்கே இருந்தமையை அது கண்டதுதான்.

(பிரிந்தவர் நினைவுகள் —
பா. தண்டபாணி I.M. Sc., 1960)

என்று இந்த அறிவியல் மாணவர் நாலடியின் சில வரிகளை வைத்து இன்றைய சிறுகதை — நாவல் ஆசிரியர்கள் போன்று நல்ல கதை இலக்கியம் எழுதியுள்ளமை எண்ணி இன்புறத்தக்கதாகும்.

இவ்வாறு தமிழ், தமிழர், தமிழ் இலக்கியம் பற்றி மட்டுமன்றி எண்ணற்ற மாணவர்கள் தாம்தாம் பயிலும் பாடங்களை ஒட்டியும் சமுதாய வாழ்வு முதலியவற்றைச் சித்திரித்தும் பலப்பல கட்டுரை களும், கவிதைகளும் எழுதியுள்ளனர். விரிப்பிற் பெருகுமாதலின் அவற்றுள், ஒரு சிலவற்றை மட்டும் இங்கே காட்டலாம் எனக் கருது கின்றேன். சமுதாயம் பற்றியும் அது செம்மையுற வேண்டுமாயின் செய்யவேண்டிய பணி பற்றியும் பல மாணவர் ஆண்டுதோறும் பலப்பல கட்டுரைகள் தீட்டுகின்றனர். அவற்றுள் ஒன்றின் சில வரிகளே ஈண்டு எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

"சுதந்திரம் பெற்றபின் நம்நாடு பொது நலப் பணியின் இன்றியமையாமையை நன்கு உணருகின்றது. அரசாங்கத்தை எதிர்பார்க்காது, அவ்வப் பகுதி மக்கள் தமக்கு வேண்டியவற்றை ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். கல்லூரி மாணவர்களும் இதில் பெரும்பங்கு கொண்டு சேரிகளைச் சுத்தம் செய்தல், கிராமங்களுக்குக் கல்வி அறிவு போதித்தல், வைத்திய வசதி. போக்குவரத்து வழிகள் அமைத்துக் கொடுத்தல் போன்றவற்றைச் செய்து உதவுகின்றனர். சாரண இயக்கத்தார், இராணுவத்தினர் ஆகியோரும் பேருதவிகள் செய்கின்றனர். இப்பணியில் பிறரும் கலந்து கொள்ளவேண்டும்'

(பொதுநலப்பணி—செ. பெ. செகதீசன்
II Class Inter - 1955)

என்று பொதுநலப் பணியின் இன்றியமையா நிலையினையும் அதில் பங்குகொள்ள வேண்டிய அனைவர்தம் கடமையையும் ஒரு மாணவர் வற்புறுத்துகிறார். உரிமை பெற்ற சில ஆண்டுகள் வரை இத்தகைய பணிகள் கிராமந்தோறும் - நாடு முழுவதும் நடைபெற்று வந்ததை நாட்டவர் அறிவர். எனினும், அத்தகைய முறை தற்போது அதிகமாகக் காணப்பெறவில்லை.

சமுதாய வாழ்வு - சிறப்பாகச் சமுதாயக் கீழ்ப்படியில் உள்ளவர் தம் வாழ்வு வளர, அரசியலார் பல வழித்துறைகளை வகுத்தனர். அவற்றுள், ஒன்று குடிசைத்தொழில். குடிசைத்தொழில் மக்கள் வாழ்வில் செல்வ வளம் செழிக்க உதவும் என்ற உண்மையினை, அச் செல்வ வளம் காட்ட வழிவகுக்கும் வணிக இயல் பயிலும் மாணவர் சுட்டிக்காட்டுகின்றார். இதோ சில வரிகள் :—

"வள்ளுவர் வகுத்த வழி முறைப்படி. ஒரு நாடானது நாடென விளங்கவேண்டுமாயின், நாட்டிலெல்லாம் சிறந்ததொரு நாடாக - உலகத்தின் உன்னத நாடாக - உச்சிமேல் வைத்து மெச்சிப் புகழ வேண்டுமாயினும், அந்த நாடு செழிப்பு மிகுந்த நாடாயிருக்கவேண்டும். குன்றா விளைவு - வற்றாத வளம் - வளமிக்க வாழ்வு - இவை ஒரு நாட்டின் வாணிகத்தை வளப்படுத்தி, பல நாடுகளுடன் தொடர்பேற்படுத்தி, ஏற்றம் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. வளமிக்க வணிகத்துக்கு அடிப்படையானவை குடிசைத்தொழில்களாகும். ஆலைத் தொழில்கள் அதிகம் வளர்ந்திருக்கிற இக் காலத்தில், குடிசைத்தொழில் கருத்தோடு பேணி வளர்க்கப் பெறவில்லை. அடிப்படையான குடிசைத்தொழில்கள் வளர்ச்சியடையச் செய்யும் வகைகளை நாம் நினைத்தல் இன்றியமையாததாகும்."

(குடிசைத்தொழில்கள் — பி. எல். விவேகானந்தம்,
B. Com (Hons), 1952)

என்று குடிசைத்தொழிலே வாழ்வின் அடிப்படை என்பதை வற்புறுத்துவதைக் காணலாம். இத்தொழில்களுள் ஒன்ருகவே கோழி வளர்ப்பும் அதன் வழி உணவுக்கான முட்டைகளைப்பெற வழியும் கொளப்பெறுகின்றன. இக் கோழிகளின் தன்மையினையும் ஆண், பெண் கோழிகளின் அமைப்பு அழகு முதலியவற்றையும் ஆய்ந்து பயின்ற அறிவியல் மாணவர் அக் கோழிகளின் தன்மைகளை ஒரு கட்டுரையின் வழி ஆராய்கின்ருர்: இதோ சில வரிகள் :

> ‘சேவலை நாம் எல்லோரும் பார்த்திருப்போம்; பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயுள்ளது! அதன் தலையில் அதற்கென்றே தனியாக அமைந்த கொண்டையின் செக்கச் செவேலென்ற நிறம் - நம் கண்களை மயக்கா நிற்கின்றது. அன்றியும் அதன் உடம்பில் காணப்படும் இறகுகளில் பலவித வண்ணங்கள் - சிறப்பாக அதன் வாலில் பல வண்ணக் கலவை - இறகுகள் - காண்போர் உள்ளத்தைக் கவரும் பெற்றி வாய்ந்தன. சேவல் கழுத்தை உயர்த்தித் தலையைத் தூக்கிக் கொக்கரக்கோ வென்று கூவுங்கால் அதன் செங்கொண்டை ஆடுதலைக் கண்டால் யார்தான் அதன் அழகில் மயங்கார்? அதே நேரத்தில் பெட்டைக் கோழியைப் பாருங்கள். கொண்டை கிடையாது; பல வண்ண இறகுகள் கிடையா. முட்டைக்கு வேண்டுமானல் பெட்டைக் கோழியை நாம் விரும்புவோமே யன்றி அதன் அழகுக்கு அடிமைப்பட்டு அன்று. தம் பெட்டையைக் கவருதற்காக இயற்கை தந்த செல்வம் அதன் கொண்டையும் பலவண்ண இறகுகளும்.’
>
> (ஆண் அழகு—என். விஸ்வநாதன்
> III B. Sc., 1953)

இவ்வாறு பல்வேறு பொருள்களைப் பற்றிப் பல மாணவர்கள் கருத்தோவியங்கள் தீட்டியுள்ளனர். தொட்டுக் காட்டியன சில; காணுதன கடல் போன்றன. இனி இம் மாணவர்தம் கவிதை நலத்துக்கு இரண்டு சான்று காட்டி அமையலாம்.

நாட்டு நடப்புகளில் மாணவர் கொண்ட பங்கும் உணர்வும் உலகறிந்தவை. நல்லவர் வாழ வாழ்த்துவதும் அவர்கள் மறையின் வாடுவதும் இயற்கை. அத்தகைய உள்ளத்தில் நல்லவர் ஒருவர் மறைய அக்கால மாணவர் ஒருவர் மதி அழிந்து புலம்பும் பாடல் எண்ணத் தக்கதாகும்.

காலஞ்சென்ற என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கலைவழி - திரைப்படங்கள்வழி எத்தனையோ வகையான சமுதாயச் திருத்தங்களை புகுத்த நினைத்துச் செயலாற்றியுள்ளார். சமூகம், சமயம், வாழ்க்கை, தமிழ்க் கொள்கை முதலியவற்றைப் பற்றியெல்லாம் அவருடைய பேச்சும் நடிப்பும் கண்டும் கேட்டும் நின்ருர் உள்ளத்தில் இன்னும்

மறையாது நிற்பதை அறிவோர் அன்னூர் மறைந்த காலத்தில் பச்சையப்பன் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் பாடிய இரங்கற்பா அடிகளுள் ஒரு சிலவற்றை இங்கே தருகிறேன்.

'என். எஸ். கே' என்றுலே பாமரரும் படித்தவரும் என்றெல்லோரும்
'மன்னுபுகழ்மா வேந்தன் மதிமிக்க நாவேந்தன்' என்றே கூறி
தன்மானத் தமிழ் மக்கள் தொழுதேத்தும் கெழுதகைமை சான்றகோவே!
வன்பாரில் இப்பெருமை யார் பெற்றூர் ஒருவருமே இல்லையந்தோ!

'நடிப்பிற் கோர் முடி மணியாய் நடிகருக்கோர் நாயகமாய் நளினக் கோவாய்
மடிவின்றி மதியூட்ட ஒருநூறு திரைப்படத்தில் மணியாய்த் தோன்றி
நடிப்பாலும் நகைப்பாலும் நலம் விரவு நினதுசீர் திருத்தத்தாலும்
துடிப்பாலும் தொல்லுலகைக் கலைக்கோயி லாக்கிய நற் கலைஞர் ஏறே!

'தளராநின் உழைப்பெங்கே! தகைசால் இன்மொழி எங்கே? தரணி மெச்சும்
கலையார்ந்த நடிப்பெங்கே? கனி வார்ந்த முகமெங்கே? கதிகெட் டோர்க்கு
வரையா வண் கொடையெங்கே? வளமார்ந்த உடலெங்கே? எனவே நாங்கள்
கரைகாணுக் கலம்போலக் கலங்கிடுவதும் முறையாமோ கழறுமையா'

(என். எஸ். கே. இரங்கற்பா—த. சா. நடராசன்
IV Hons, 1957)

என்று உள்ள உணர்வு தோன்ற அன்றைய மாணவர் பாட்டிசைத் திருக்கின்றூர். இத்தகைய உள்ள நெகிழ்ச்சிப் பாடல்கள் பலப்பல.

விண்ணில் தோன்றும் சந்திரனை எண்ணிப் பாடாத புலவன் இல்லை; ஏட்டில் எழுதாத கவிதை. ஆம்! அந்த மதி நம்மாணவர் மதியையும் பற்றியதில் வியப்பில்லையன்றோ! அம்மதியினைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் எண்ணுவர். குழந்தை பற்றி எண்ணுகிறது. தலைவி வருந்துகிறுள்; கூடிய தலைவி வரவேற்கிறுள். கள்வன் தன் வேலைக்கு இடையூருய் இதை எண்ணுகிறுன். கடல் பொங்குகிறது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கிறது அந்த இளம் மாணவர் உள்ளம். ஒவ்வொன்றும் தானே பாடுவது போன்ற உணர்வு பிறக்கின்றது. கதைகளில் பாத்திரங்கள் கதை சொல்வது போன்ற படைப்பினைக் கண்ட அந்த இளம் உள்ளத்தில் சந்திரனைப் பற்றிப் பலர் பலவிதமாக எண்ணும் உணர்வுகள் உருப் பெறுகின்றன. அவ்வுணர்வுகளை அவ்வப் பொருளாகவே நின்று கவிதை தீட்டுகிறது அந்த வணிக இயல் பயின்ற பிஞ்சு உள்ளம். இதோ ஒரு சில கருத்துக்கள் :—

குழந்தை :—

அன்றைக் கொருநாள் சோறூட்டும் அருமை அன்னை காட்டுங்கால்
'இன்றைக் கிருக்கும் நிலவைப் போல் இல்லை சிறிதாய் இருந்ததுவே'
சென்ற நாட்கள் பதினைந்தும் தெரிந்த வேறு நிலவுகளை
அன்றன் றைக்குத் தவழவிடும் அவன்தான் யாரோ அறியேனே'

கள்வன் :-

'என்றைக்கு வருவாயோ அன்றைக் கெல்லாம்
என்வீட்டில் அடுப்பெரிவதில்லை யாங்கே
கன்றன்ன சிறுகுழந்தை தாயை நோக்க,
கனிவோடவள் எனை நோக்க, நானோ இங்கே
நின்றெரிக்கும் உன்முகத்தை நோக்குகின்றேன்
நீ இல்லா நாளெல்லாம் தொழில் நடக்கும்
இன்றைக்கே நீ செல்வாய் நிலவுப் பெண்ணே
என்ன செலவானாலும் ஏற்றுக் கொள்வேன்'

கடல் :-

'கனிவொடு காலை எனைநாடி வந்து களியோங்க வைத்த நிலவே!
இனிதாகி யேகும் இரவோடு நீயும் எனைவிட்டுப் போன தழகோ!
கனிதந்து வாங்கி அதையுண்ணு போதில் கனியே மறைந்த கதை போல்
மனம் வாடி நிற்கும் எளியேனை நாடி வரவேணு மென்றனருகே'

(நிலவும் நினைப்பும்-சொ. சொ. மீ. சுந்தரம்-
M. Com, 1963)

என்று பல்வகைச் சந்தங்கள் இழைய உவமை முதலிய அணிகள் பொருந்த அழகாகப் பாடியுள்ளமையை எண்ணிப் போற்ற வேண்டியவர்களன்றோ நாம்!

கடைசியாக இத்தகைய கருத்துக்களையும் வாழ்க்கை நெறிகளையும் விளக்கிக் காட்டி, வாழ்ந்தும் காட்டும் உள்ளம் தூய உள்ளமாக - தொண்டாற்றும் உள்ளமாக - அனைவரையும் ஒத்து நோக்கும் உள்ளமாக - உயரிய உள்ளமாக - இமய உள்ளமாக இலங்கும் என்பதை அன்றைய மாணவருள் ஒருவர் கவிதையாகத் தந்துள்ளதை ஈண்டுக் காட்டி இக்கட்டுரையை முடிக்க நினைக்கிறேன். இமயம் மலைகளில் உயர்ந்தது - மனித உள்ளம் மற்றையவற்றிலெல்லாம் சிறந்தது. அந்த மனித உள்ளம் உயர்வுற்று - தெளிவுற்று - நலமுற்று - நன்கு சிறக்க வேண்டுமாயின் அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இதோ வரும் கவிதையில் அம்மாணவக் கவிஞர் காட்டுகின்றார்.

வேற்றுயிர்க்குத் தீங்கிழைக்க விலங்கால் கூடும்
வெம்மைதரும் சொற்பொறுக்கத் திண்மை வேண்டும்
நேற்றொருவர் செய்தீங்கை நினைத்தல் கூடும்
நேர்மையுடன் மன்னிக்கும் நெஞ்சம் வேண்டும்
தூற்றிஇழி தீங்கிழைக்கும் துன்போர் தாமும்
தொல்லைஇன்றி வாழ்வதற்குத் தொண்டு செய்யும்
நோற்புள்ளம் ஒண்றுண்டேல் அதுவே தெய்வ
ஏற்புள்ளம் எழிலுள்ளம் இமய உள்ளம்.

(இமய உள்ளம் - பொ. சௌரிராசன்,
Inter, 1955)

இவ்வாறு பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கடந்த கால் நூற்றுண்டில் செய்த தமிழ்த் தொண்டினை எண்ணிக் கொண்டே - எழுதிக் கொண்டே போகலாம். மேலும் அவர்கள் மேடைகளிலே ஆற்றிய சொற்பெருக்குகளை எண்ணின் இதயமெல்லாம் களிக்கும்.

பச்சையப்பன் கல்லூரியில் மட்டுமன்றி, தமிழகக் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் எல்லா மாணவர்களும் தமிழிடம் நீங்காத பற்றுக் கொண்டு அதைக் கண்ணெனக் காத்து ஓம்பினர். 'தாய் நாடு, தாய்மொழி' என்ற இரண்டையும் இரண்டு கண்களென அவர்கள் கண்டனர். அதனுலேயே நாட்டிற்கும் மொழிக்கும் எக் காலத்திலும் யாராலும் எத்தகைய தீங்கு நேர்ந்த போதிலும் அதை எதிர்த்து முறியக்கூடிய வகையில் படை திரண்டு வெற்றியும் பெற்றனர்.

எனினும் அண்மை நாட்களில் இத்தகைய நல் உணர்ச்சி அவ்வளவாக இல்லையென்பதை நாட்டு நிலையும் கல்லூரிகளின் நிலையும் நமக்குக் காட்டும். எத்தகைய சூழ்நிலைகளிலும் நாம் நம் தாய்மொழி யினையும், தாய்நாட்டினையும் கைவிடலாகாது என்ற உணர்வொடு செயலாற்றின் நாம் உயர்வோம் - நம் மொழி உயரும் - நாடு உயரும் - நலம் உயரும். வளரும் சமுதாயத்தில் இன்று நிற்கும் மாணவர்கள் இவற்றையெல்லாம் எண்ணி, 'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு' என்ற உணர்வில் ஒன்றிய சிந்தையராய், உறுதி கொண்ட நெஞ்சினராய், திண்ணிய தோளின ராய் செயலாற்றும் வீரராய்த் திகழவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

2

விடுதலையுற்ற இந்தியாவில் தமிழகம் பெற்ற புதுமை நூல்கள்

பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ., பி.எல்.,
முதல்வர்,
அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி,
நாமக்கல்.

பேராசிரியர்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இக் கருத்தரங்கிற் கலந்துகொள்ளுமாறு என்னைப் பணித்த அறிஞரெல்லார்க்கும் என் நன்றிகளைச் செலுத்துகின்றேன்.

"வானமளந்த தனைத்து மளந்திடும் வண்மொழி வாழிய", "சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்குச் சேர்ப்பீர்"—என்று இதயத் துடிப்போடு பாடினார் பாரதியார். அந்த இதய கீதம் பாடி 50 ஆண்டுகளும் அவற்றுக்கு மேலும் கடந்த காலங்கள் பல. இவ்வளவு நீண்டகால வளர்ச்சியில் தமிழகத்தில்—தமிழில், புத்தம் புதிய கலைகள், கலைச்செல்வங்கள் எவ்வளவு சேர்ந் திருக்கின்றன, வளர்ந்திருக்கின்றன? வருங்கால வளர்ச்சிக்கு யாது செய்தல் வேண்டும் என்பனவற்றைச் சிந்திக்கத் தூண்டுவது இவ் வுரையின் நோக்கம்.

இந்திய விடுதலை, விடுதலையுற்ற இந்தியாவில் தமிழகம் போன்ற ஒரு பழம்பெரும் பாரம்பரிய வளமுடைய சமுதாயம், நீண்ட 25 ஆண்டுகள் சென்ற காலம், வெள்ளிவிழா—இவ் வனைத்தையும் தொடர்புபடுத்திச் சிந்தனையில் நிறுத்த வேண்டுகிறேன்.

இந்தக் காலப் பகுதியில் தமிழில் தோன்றிய புதுமை நூல்கள் யாவை? அதாவது ஒரு நாடு விடுதலையடைந்தால்தான் இவ்வகை நூல்கள் தோன்றக்கூடும் என்று சொல்லத்தகும் நூல்கள் யாவை? அந்த விடுதலையைப் பெற்ற 25 ஆண்டுகளில் தோன்ற வேண்டிய அவ் வகை நூல்கள், அத்துணை நூல்கள் தோன்றியிருக்கின்றனவா? தோன்றிய நூல்களில் தமிழகத்தைப் புதியவுலகுடன் இணைத்து வருங்காலப் புத்துலக வாழ்வுடன் தமிழை—தமிழன் அறிவை வளர

வைக்க உதவுவன யாவை?—என்றெல்லாம் சிந்திப்பது இவ்வுரையைக் கேட்பதன் பயன்.

இந்த 25 ஆண்டுகளில் தோன்றிய புதுமை நூல்களில் என் ஆராய்ச்சி நெறிப்படிக் கலைக்களஞ்சியத் தொகுதிகளும், தமிழக அரசின் பாடநூல் வெளியீட்டுக் கழகத்தின் தோருயமான 500 புதுமை நூல்களும், இவைபோல அங்குமிங்கும் வெளியாகியுள்ள விரல் விட்டெண்ணக்கூடிய சிலபல நூல்களும்தான் புதுமை நூல்கள் என இந்திய விடுதலையோடு தொடர்புபடுத்திக் குறிப்பிட்டுக் கருதத் தக்கவை.

ஏனைய நூல்கள் இந்தியா விடுதலை பெற்றாலும் பெறாது போயினும் தோன்றியிருக்கக் கூடியவையே என்பது என் மதிப்பீடு.

கலைக்களஞ்சியம் :-

கலைக்களஞ்சியத்தின் முதற்றொகுதி முகவுரையில், பெருமகனார் அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் பின்வருமாறு எழுதுகின்றார் :—

"1947 ஆகஸ்டு 15 ஆம் தேதி இந்தியா பூரண சுதந்திரம் பெற்ற நாள்...ஒரு நூற்றாண்டின் முயற்சி, பல தலைமுறைகளின் கனவு நனவான நாளன்றோ அந்நாள்?...மக்கள் உள்ளத்தில் பொங்கியெழுந்த இந்த உற்சாக வெள்ளத்தைச் செயல் என்ற வாய்க்கால் வழியே கரைகோலிச் செலுத்தினால் நற்பயன் விளையும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று......கலைக் களஞ்சியம் ஒன்றை ஆக்கும் அரிய வேலையில் நாம் ஈடுபட வேண்டும் என்ற அறிக்கை ஒன்றைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சுதந்திர தினத்துக்கு முந்தின நாள் வெளியிட்டிருந்தேன்......" என எழுதுகின்றார்.

இந்தியாவின் விடுதலையுணர்ச்சியோடு பொங்கியெழுந்த இக் கலைக் களஞ்சியச் சிந்தனை செயலுருவாகிப் பத்துத் தொகுதிகளும் வெளியாகிவிட்டன. சுருங்கக் கூறின் சுதந்திர உதயத்தில் மலர்ந்த பத்துப் பதுமங்கள் இந்தத் தொகுதிகள்.

இந்தப் பத்துத் தொகுதிகளும் என்ன குறைகளிருப்பினும் உலகத்தின் சிறந்த கலைக் களஞ்சியங்களோடு ஒப்பிடத்தக்க சிறப்புடையன. இவற்றைத் தொகுத்தளித்த பெரியோர்க்கெல்லாம் என் வணக்கங்களைச் செலுத்துவதில் பெருமைப்படுகிறேன்.

இந்தத் தொகுதிகள் வெளியாகிவந்த காலத்தில் ஜப்பான் நீங்கலாகவுள்ள மேற்கு, தெற்கு, தென் கிழக்காசிய நாடுகள் எல்லாவற்றுள்ளும் தமிழகத்தில் மட்டும்தான் கலைக்களஞ்சியத் தொகுதிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவிலும் இந்தியாவிற்கு அப்பாலுமுள்ள பல்வேறு மொழியினர் இந்தத் தமிழ்க் கலைக்

களஞ்சியம் தொகுக்கப்படும் நெறிமுறைகளை நேரிற்கண்டறியத் தமிழகத்திற்கு வந்து சென்றார்கள். இந்தத் தொகுதிகளை அடியொற்றிப் பலமொழிகளிலும் பிறகு கலைக் களஞ்சியங்கள் வெளிவரத் தொடங்கின.

விடுதலையுற்ற ஒரு சுதந்திர நாட்டில், 10,000 ஆண்டுகள் தொடர்ந்த பாரம்பரியமும், பண்பாட்டு வளமும், நூற்பரப்பும், 5 கோடி மக்களுக்கு உரிமையும் உடைய தமிழைப் போன்ற ஒரு பழம்பெரும் மொழியில் இன்னும் பலப்பல துறைகளில் கலைக் களஞ்சியங்கள் தோன்ற வேண்டும்.

குழந்தையர் கலைக் களஞ்சியத்தின் ஆறு தொகுதிகள் முடிந்து ஏனையவும் விரைவில் நிறையக்கூடிய நிலையில் உள்ளன.

வேண்டிய எல்லாவகைக் கலைக் களஞ்சியங்களையும் தொகுத்து முடிக்க இன்னும் 50 ஆண்டுகளும் பிடிக்கலாம். அப்பால் அவற்றைத் துல்லியமாகத் திருத்தியும் புதுக்கியும் வெளியிட மேலும் பல்லாண்டுகளாகலாம். பெரிதும் முன்னேறிய நாடுகளில்கூடக் கலைக் களஞ்சிய அலுவலகங்கள் நிரந்தரமாக நிறுவப்பெற்றுப் பணியாற்றுகின்றன. அப்பணிகளின் விரிவைச் சுருக்கங் கருதி இங்கு விரிக்காமல் விடுகின்றேன். எனினும் நான் உணர்த்த விரும்பும் ஒரு குறிப்பு யாதெனில், தமிழகத்தில் நிரந்தரக் கலைக் களஞ்சிய அலுவலகம் ஒன்று நின்று பணியாற்ற வேண்டும் என்பதேயாகும். தமிழை — தமிழகத்தை, நிகழ்கால வருங்கால அறிவுக் களஞ்சியத்தோடு இணைக்க இந்த ஏற்பாடு இன்றியமையாதது.

கலைக்களஞ்சியத்தை அடுத்துக் குறிப்பிடத் தக்க புதுமை நூல்கள் தமிழக அரசின் தமிழ் நாட்டுப் பாடநூற்கழகம் அன்றும் இன்றும் வெளியிட்டு வருகின்ற நூல்களின் தொகுதி. கலைகள் பற்றியும் விஞ்ஞானம் பற்றியும் ஏறத்தாழ 500 நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். 50,000, 500000 நூல்கள் வெளியாக வேண்டிய முயற்சியில் 500 நூல்கள் மட்டும் வெளியாகியுள்ளன.

புதுமுயற்சியாதலின், வெளியீட்டு ஏற்பாடுகளிலும், மொழிபெயர்ப்பிலும், தமிழாக்கத்திலும், மொழி நடையிலும், கருத்து விளக்கத்திலும் குறைகள் காணப்படினும் இந்த மாபெரும் முயற்சியைப் போற்றி எல்லோரும் தோள்கொடுத்துத் தாங்கி வளர்க்க வேண்டும்.

இம்முயற்சி எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதுபற்றி ஒரு சொல் சொல்ல விழைகின்றேன். 10,000 ஆண்டுகளுக்கு மேலாக மனித சமுதாயம் உலகத்தின் பல்வேறு கண்டங்களிலும் சேர்த்துத் திரட்டிவைத்துள்ள அறிவுச் செல்வத்தை — ஞான பண்டாரத்தை — ஐந்துகோடித் தமிழ்மக்களுக்கு எடுத்து வழங்கச் செய்யும் முயற்சிதான் அது. குழந்தையர்க்கும், இளைஞர்களுக்கும், அறிஞர்களுக்கும்,

ஆராய்ச்சியாளர்க்கும், தத்துவச் சிந்தனையாளர்க்கும், அண்டவெளியிற் சென்று வானமளந்த தனைத்தையும் அளக்கும் வீரவிஞ்ஞானச் செம்மலோர்க்கும் வேண்டிய அறிவு நுணுக்கங்களைத் துறைதுறை தோறும் சிறியவும் பெரியவும் புதியவும் அரியவுமான நூல்களை வெளியிடும் முயற்சிதான் அது எனத் தொடர்புடைய எல்லோரும் உணர்தல் வேண்டும்; உணர்ந்து செயல்படல் அதனினும் வேண்டும் என்பேன்.

புதுமைநூல் வள்ர்ச்சி என்று நான் குறிப்பிடும்போது, முன்னேறிய நாட்டினர் திங்கள் மண்டிலம், செவ்வாய் மண்டிலம், வெள்ளி, வியாழ மண்டிலங்களைச் சென்று குடைந்து ஆராய்கின்ற வல்லாண்மையை — அவர்தம் வீறூர்ந்த விஞ்ஞானச் செல்வத்தை — நுண்மை நுணுகிய நுழைபுலத்தைத் தமிழ்க் குழந்தைகள், தமிழ் இளைஞர்கள், தமிழ்நாட்டு அறிஞர்கள், தமிழக மாந்தர் எல்லோரும் அணுகித் துய்த்தல் வேண்டி அதனைத் தமிழில் வழங்குதலையே குறிக்கின்றேன். அவர்கள் அதனை அணுகவும், தொடவும், துய்க்கவும், அதன்மீது தத்தித் தவழவும் வேண்டிய விதங்களில் புதுவது புனைதல் வேண்டும். இது சுதந்திரம் பெற்றதன் பயன். இவையெல்லாம் தமிழில் முடியுமா என ஐயப்படுவோரைத் தெளிவிக்கவும் முடியும். முடியாது என்போர் பற்றிக் கவலைகொள்ள வேண்டாம், உதறிவிடுங்கள். துல்லியமான நூல்கள் அடுக்கடுக்காய் வரப்பெற்றால், அவர்கள் வந்து சேர்ந்துகொள்வார்கள்; இது உறுதி.

இதனைச் சாதிப்பதற்குத் திண்ணிய தன்னம்பிக்கையும், தமிழோடு ஊறிய நிர்வாகப் பெருமக்களும், பலகோடி நிதியமும், ஆயிரக் கணக்கான அறிஞர்களும், மாபெரும் அச்சியந்திரக் கூடமும், இருபதாண்டுக் காலமும் வேண்டும். ஆங்கிலத்தைத் துணையாகவும் ஜப்பானியம், இரஷ்ய மொழியிரண்டையும் முன்மாதிரியாகவும் கொண்டு செயலாற்ற வேண்டும்.

அதாவது கடந்த 25 ஆண்டுகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கி, அதனை இக்கால நிலையோடு இணைத்து, அடுத்த 20 ஆண்டுகட்கு ஒரு குறிப்பும் சொன்னேன், அவ்வளவுதான். சுதந்திரம் வேண்டுமென்பது இவ்வகைச் செயல்களை ஆற்றிமுடிக்கத்தான். ஏனைவகை நூல்களை இயற்றச் சுதந்திரம் பெற்றேயாக வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை என்பது என் குறிப்பு.

இந்தத் தொடர்பில் என் ஒரு சிறு பணி குறித்தும் ஒன்று சொல்ல அனுமதி வேண்டுகின்றேன். இந்தியா விடுதலையுறவில்லையாயின், நான் ஒரு தமிழ்ப் பேராசிரியர், இரஷ்யாவிலும், ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலும் 3 ஆண்டுகள் சென்று வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றியிருக்க முடியாது. இரஷ்ய அறிஞர் ஒருவர்க்கு யான் தமிழ் இலக்கியம் கற்பித்து இருவருமாகத் திருக்குறளை இரஷ்யனில் ஓராண்டில் மொழி பெயர்த்தோம். இரஷ்ய அரசு அதனை வெளியிட்டுப் பத்தாண்டுகளா

கின்றன. வேறொரு இரஷ்ய அறிஞர் வழி பாரதியார் பாடல்களில் 1000 வரிகளுக்கு மேல் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்தேன். மற்றும் ஐரோப்பாவின் நால்வேறு திசையிலுமுள்ள பல்வேறு நாடுகளிலும் அலைந்து அங்குள்ள நூலகங்களில் கடந்த 300 ஆண்டுகளாகத் தமிழகத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட 2000 தமிழ்ச் சுவடிகளைக் கண்டு, அவற்றுக்குத் தனித்தனி விரிவான பாயிரக் குறிப்புக்கள் எழுதி அட்டவணைப்படுத்தித் தமிழக அரசுக்குத் தந்திருக்கிறேன். விடுதலையுற்ற நாடானதால்தான் நான் அங்கெல்லாம் செல்லவும் இவற்றை யாற்றவும் முடிந்தது.

நிற்க, மேற்குறித்த கலைக் களஞ்சியத்தையும் தமிழக அரசின் 500 புதுமை நூல்களையும் தவிர, ஒவ்வொரு பொருள்பற்றி ஆங்காங்கு இரண்டொரு நூல்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் புதுமை நூல்களாக வெளிவந்துள்ளன. இவை போல்வன இந்திய விடுதலை நிகழ்ந்தாலும் நிகழாது போயினும் ஆங்காங்குத் தோன்றக்கூடியனவே யாம். இருப்பினும் ஒன்றேயாயினும் சிலவேயாயினும் கொண்டாடுகின்றோம். அவற்றைப் போற்றிக் கொள்ள வேண்டியதுதான்.

ஆனால் ஒரு மாபெரும் நாட்டின் சுதந்திரத்தையும் அதன் 25 ஆண்டுக் காலத்தையும் உலகம் செல்லும் வேகத்தையும் கணக்கில் கொண்டால், இவை யாவும் அலைமோதுவதால் கரையில் தெறிக்கின்ற சில நீர்த்துளிகளுக்கே சமனாகும்.

அடுத்துத் தமிழில் புதுமை நூல்கள் எழுதுவது பற்றியும் அவற்றை வழங்குவது பற்றியும் சில குறிப்புக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் எல்லாச் செல்வமும் மக்களுக்குக் கிடைக்க வகை செய்வது போல் 10,000 ஆண்டுகளுக்கு மேலாக மனித சமுதாயம் சேர்த்துவைத்துள்ள — கடல் போல் விரிந்த—அறிவுச் செல்வம் தமிழக மக்கள் எல்லோர்க்கும் கிடைக்கும்படிச் செய்ய இத்திட்டங்களில் வகைசெய்ய வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கான திட்டமும், தமிழில் அறிவியல் நூல் வெளியீட்டிற்கான திட்டமும் ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் பெரும் பெரும் அளவில் இடம்பெற வேண்டும். கூடவே, இன்னொன்றும் சொல்லுவேன் : தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் தமிழ் நாட்டளவில் கடுமையான, பாதுகாப்பும் விறுவிறுப்புமுள்ள திட்டங்கள் இல்லையேல், தமிழகத்திற்கு அப்பால் வேறு யாரும் இதுபற்றிக் கவலைப்படமாட்டார்கள். இது என் கருத்து, சரித்திர உண்மை.

தமிழில் புதுமை நூல்களை — கலை, அறிவியல் நூல்களைக் கோடிக் கணக்கான நிதியம் செலவிட்டுச் செய்தல் என்பது, தமிழ் எனும் மொழிக்காக மட்டும் அன்று. தமிழைப்பற்றி வேண்டா விருப்போடும்

ஐயப்பாட்டோடும் பார்க்கின்ற சிலர் மொழிக்கு மட்டும் செய்யும் முயற்சியாகவே இதனை நினைக்கின்றனர். அதுமுற்றும் தவறு. அம் முயற்சி உலகத்தில் பெருகிவழியும் விஞ்ஞானம் என்னும் அருவி நீர் வீழ்ச்சியில் தமிழக இளைஞரும் சமுதாய மாந்தரும் படிந்து நீராடட்டும் என்பதற்காகவே என அவர்கள் உணர்தல் வேண்டும். சுருங்கக் கூறின் ஒரு சுதந்திரநாட்டின் மக்களைப் புதிய புதிய அறிவின் ஊற்றுக் களை நோக்கி அழைத்துச் செல்ல இந்தப் புதுமை நூல்கள் உதவும் என்பது குறிப்பு.

இன்னொரு குறிப்பு: ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்றின் அது இவ்வனைத்தையும் கொண்டு செலுத்தும். தமிழ்ப் பல்கலைக் கழகம் என்பது நான் சொல்லும் ஒரு புதிய கருத்துமன்று. 1927—க்கு முன்பே இதுபற்றிப் பெரும் முயற்சிகள் நடந்திருக்கின்றன. அண்ணா-மலைப் பல்கலைக் கழகம் தோன்றியதே இம்முயற்சியின் விளைவுதான். இவ்வுண்மையைச் சிலர் அறிந்தும் பலர் அறியாதுமிருக்கலாம். 22 ஆண்டுகட்கு முன்பு குடந்தையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நிகழ்ந்த ஒரு விரிவுரையில் "தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றிய சிந்தனையும் அதன் பணிகளும்" (The Idea and Functions of A Tamil University) என்பது பற்றி மிகவும் விரிவான ஓர் உரை நிகழ்த்தினேன். அந்த எண்ணம் எண்ணங்களாக வளர்ந்து இன்னும் இருக்கின்றன.

தமிழ் 5 கோடி மக்களால் இந்தியாவிலும் அப்பாற்பட்ட நாடுகளிலும் தாய்மொழியாக வழங்கப்படுவது; இந்தியாவிலும் அப்பாலும் வழங்கும் பழம்பெரும்மொழி அது. திராவிடக் குடும்பம் என்னும் 16 கோடி மக்கள் பேசும் பெரிய ஒரு மொழிக் குடும்பத்தின் தலைமொழி. 5000 ஆண்டுகட்கு மேற்பட்ட இலக்கண இலக்கியப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் உடையது.

ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் இவற்றையெல்லாம் ஆராயவும், நிகழ்கால உலக வாழ்வுடன் இவற்றை இணைக்கவும், உலகத்தில் பெருகிவரும் விஞ்ஞானப் பேராற்றில் இவற்றை மேலும் சங்கமப் படுத்திப் புத்தம்புதுத் தமிழகம் அறிவுத் துறைகளில் செழிக்கவும் உதவும். சுருங்கக் கூறின், ஒரு பல்கலைக் கழகம் இருந்து ஆராய வேண்டுமளவுக்குத் தமிழ்சார்ந்த பழைய புதிய வருங்காலச் செய்திகள் நிரம்ப இருக்கின்றன. சுதந்திர நாட்டில் தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகம் தோன்றுவதாக. இன்றில்லையாயினும் ஒரு நாள் அது கைகூடும் என உறுதியுடன் நம்புகின்றேன்.

"வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே"— எனப் பாடுவதைச் சிறிது நிறுத்தி, உரியோர் அனைவரும் ஒத்த முயற்சியுடன் தணியாத விறுவிறுப்போடு உரிய வினைகளில் முனைதல் கடன். அதுவே சுதந்திரம் பெற்றதன் பயன் என்க.

3

கலைக்கதிர் - பொங்கல் மலர்கள்

டாக்டர், தா. ஏ. ஞானமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி.,
யு. ஜி. சி. பேராசிரியர்
பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோயம்பத்தூர்

இக்கால வாழ்க்கையில் அறிவியலும் தொழில் நுட்பவியலும் சிறப்பிடம் பெறுகின்றன. ஒரு நாட்டின் அறிவியல் வளர்ச்சியையும், தொழில் நுட்ப வளர்ச்சியையும் பொறுத்தே அதன் பொருளாதாரமும் வாழ்க்கைத் தரமும் அமைகின்றன. பலவற்றில் பொருளாதாரம் சிறப்புற்று அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் உயர்ந்திருப்பதைக் காண்கிறோம். இதற்குக் காரணம் அந்நாடுகள் எய்தியுள்ள அறிவியல் முன்னேற்றமும் தொழிலியல் முன்னேற்றமுமே யாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகில் அறிவியலிலும், தொழிலியலிலும் வியத்தகு புதுமைகள் தோன்றியுள்ளன. நம் நாடு ஏறத்தாழ இரு நூற்றாண்டுகள் அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்ததால் அந்தத் துறையிலும் முன்னேற இயலாமற் போய்விட்டது. அது விடுதலை பெற்ற பின்பு நம் நாட்டு மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. பல்துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்குத் தோன்றியது. தொழிலியலிலும் நம் நாடு போதிய அறிவு பெற வேண்டும் என்ற உணர்வும் நம் அறிஞர்களிடையேயும், தலைவர்களிடையேயும் தோன்றலாயிற்று.

அறிவியல் நூல்களும், இதழ்களும் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. இதனால், ஆங்கிலம் அறிந்தவர்களே அறிவியல் அறிவு பெற முடியும் என்ற நிலை இருந்தது ; இன்னும் இந்த நிலை மாறவில்லை. நம் நாட்டில் அறிவியல் அறிவும், உயர்வும் பரவிப் பெருக வேண்டுமானால், அறிவியல் புதுமைகளும், கருத்துகளும், செய்திகளும் தாய்மொழியில் - எல்லோருக்கும் புரிகின்ற மொழியில் - விளக்கப் பெறுதல்வேண்டும். இப் பணியினைக் 'கலைக்கதிர்' தன் சிறப்பான நோக்கமாகக் கொண்டு 1943ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில், திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. அறிவியலோடு உளவியல், பொருளா

தாரம், வரலாறு, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் தொண்டு புரிவது கலைக்கதிரின் நோக்கமாகும்.

"தற்காலத்திற்கு வேண்டிய விஞ்ஞானம், பொறியியல், பொருளாதாரம், இலக்கியம், வரலாறு ஆகிய இவை பற்றிய அறிவினைத் தமிழ் நாட்டில் வளரச் செய்வதாகிய சிறந்த தொண்டினை மேற்கொண்டு 'கலைக்கதிர்' உதயமாகிறது"—இவ்வாறு கலைக்கதிர் முதல் இதழின் தலையங்கம் கூறுகிறது.

தமிழ் இலக்கிய வளம் செறிந்த மொழி. அதனை அறிவியல் வளம் செறிந்ததாக ஆக்கவேண்டியது தமிழர்களாகிய நம்முடைய கடமை. தமிழ் அறிவியல் வளத்தால் சிறப்புற்றாலன்றி இக் காலத்துச் சிறந்த உலக மொழிகளோடு ஒப்ப மதிக்கப்பெறாது. இவ் வுண்மையினை உணர்ந்து கலைக்கதிர் தனி அறிவியல் பணியினைப் பல இடுக்கண்களுக் கிடையே ஆற்றி வருகிறது.

கலைக்கதிர் முதல் இதழுக்குப் பல பேரறிஞர்கள் தம் கருத்துரைகளை அனுப்பி ஊக்கம் தந்தனர். இவ் விதழ் நாமக்கல் கவிஞரின் வாழ்த்துப் பாவுடன் தொடங்குகிறது. டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் நல்ல நூல்களின் இயல்பு பற்றியும், திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், 'விஞ்ஞான வளர்ச்சி' பற்றியும், டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் 'கலைக்கோயில்' என்ற தலைப்பிலும் பேராசிரியர் ஆ. முத்துசிவன் 'தமிழ்க் கவிதையின் எதிர்காலம்' என்ற பொருள் பற்றியும் கட்டுரை எழுதியுள்ளார்கள். இம் முதல் இதழில் விஞ் ஞானத்தைப் பற்றி ஐந்து கட்டுரைகளும், இலக்கியம் பற்றி ஆறு கட்டுரைகளும், பொருளாதாரம் பற்றி ஒரு கட்டுரையும், சிறுகதை ஒன்றும் உள்ளன.

இவ்வாறு முதல் சில ஆண்டுகள் பலதுறை பற்றிய கட்டுரை களுக்குப் இடமளித்து வந்தது. இதனால், மிக விரைந்து முன்னேறி வரும் இக் கால அறிவியல் பற்றிய கருத்துகளை நிரம்ப வெளியிடுவ தற்கு இயலவில்லை. ஆகவே, நாளடைவில் அறிவியல் பற்றிய கட்டுரைகளுக்கே சிறப்பாகக் கலைக்கதிர் இடமளித்து வரலாயிற்று. எப்போதேனும் அருகி, இலக்கியம் வரலாறு போன்றவைகளை வெளியிடுவதுண்டு.

கலைக்கதிர் சிறப்பாக உலகில் அண்மையில் கண்டுபிடிக்கப்படும் அறிவியல் புதுமைகளைப் படங்களுடன் அப்போதைக்கப்போதே வெளியிட்டு வருகிறது. "இன்னும் சில ஆண்டுகளில் மனிதன் ராக் கெட்டின் உதவி கொண்டு விண்வெளியில் பயணம் செய்து சந்திர மண்டலத்தில் இறங்குவான்" என்ற உண்மையைக் கலைக்கதிர் 1949 டிசம்பர் இதழில் வெளியிட்டது. சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பின் நடக்கப்போகும் செய்தியை முன்னரே கலைக்கதிர் தமிழில் வெளி யிட்டமை சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது. எதிர்கால அறிவியல்

சாதனைகளைத் தமிழில் வெளியிட அக்காலத்தில் கலைக்கதிரைத் தவிர வேறோர் இதழ் இல்லை.

தமிழ் நாட்டின் பெரும்பான்மையான இதழ்கள் ஆண்டுதோறும் தீபாவளியை முன்னிட்டுச் சிறப்பு மலர் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. தமிழர் திருநாளாகிய பொங்கல் விழாவினையொட்டி இக் காலத்தில் சிறப்பு மலர் வெளியிடுதல் மிகவும் அருமை எனலாம். கலைக்கதிர் தன் இரண்டாம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பொங்கல் மலரை வெளியிட்டு வருகிறது. கலைக்கதிர் திங்கள் இதழில் பெரும் பாலும் அறிவியல் கட்டுரைகளே வெளியிடப்படுவதால், பொங்கல் சிறப்பு மலரில் மக்கள் பலரையும் கவரத்தக்க பல்சுவைக் கட்டுரைகள் இடம்பெறுவது நல்லதெனக் கலைக்கதிர் இதழாசிரியர் குழு முடிவு செய்தது. இதற்கேற்பப் பொங்கல் மலரில் அறிவியல் கட்டுரைகளோடு வேறு பல்சுவை நிரம்பிய கட்டுரைகளும், பல்வண்ண ஓவியங்களும், தரமிக்க புகைப் படங்களும் இடம்பெறுகின்றன.

கலைக்கதிர் முதல் பொங்கல் மலர் 1950ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. இதில் நாற்பது கட்டுரைகள் உள்ளன. அவற்றில் விண்ணியல், உயிரியல், மனையியல், உளவியல், மருத்துவம் இன்னோரன்ன அறிவியல் கட்டுரைகள் பதினொன்கு.

"ஒரு மின்னலின் சக்தி அளப்பரியது. அது ஐந்து லட்சம் ஆம்பியர்களும், கோடிக்கணக்கான வோல்ட் அழுத்தமும் உடையது. அதாவது, நீலகிரி பைகாரா மின்நிலையம் உருவாக்கும் சக்தியைக் காட்டிலும் பல கோடி மடங்கு அளவுடையது. இயற்கையில் வீணாகும் அளவற்ற இச்சக்தியை நாம் பயன்படுத்திக்கொள்ளாமல் இருப்பது மனிதனின் ஆற்றலின்மையைக் குறிப்பதாகும்"—இவ் வுண்மையை மின்னலின் சக்தி என்ற கட்டுரையில் திரு. ஜி. ஆர். தாமோதரம் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

சத்துணவின் தன்மைகளை ஆராய்ந்து உணவு முறையில் நாம் பின்பற்றவேண்டிய கொள்கைகளை டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ் 'உணவும் வாழ்வும்' என்ற கட்டுரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் குழந்தைக்கு அமைந்த உருவத் தோற்றமும், தன்மைகளும் எங்ஙனம் பெரியதோர் அளவிற்குத் தாய் தந்தையர் வழியாக உள்ளன என்பதை 'தந்தை - தாய் தந்தது' என்று தலைப்புடைய கட்டுரையில் விவரித்துள்ளார். நனவுள்ளத்துக்கு ஆதாரமானதும், சக்தி வாய்ந்ததும் மனிதனின் பலவித நடத்தைக்குக் காரணமானதுமான ஆழ்ந்த உள்ளத்தின் தன்மையினை 'பிராய்டும் உளப்பாகுபாடும்' என்ற கட்டுரையில் டாக்டர் தா. ஏ. சண்முகம் ஆராய்ந்துள்ளார். ஏபரிப் பிரபு என்னும் பேரறிஞர் பூச்சியினத்தைச் சேர்ந்த உயிரினங்களின் வாழ்க்கையை அணுகி ஆராய்ந்த திறமையை 'சிறுமையில் விந்தை' என்ற கட்டுரையில் திரு பெ. நா. அப்புசாமி அவர்கள் ஆராய்ந்துள்ளார்.

இந்த முதல் பொங்கல் மலர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின்

" இன்னிசைக் கவிபாட—ஒருவரம்
எனக் கருள் செய்வா யம்மா "

என்று தொடங்கும் இசைப் பாடலுடன் தொடங்குகிறது. தன் கடமையை ஆற்றும் பொருட்டுக் காதலியைப் பிரிந்து சென்ற காதலன் தான் இழந்த இன்பத்திற்காக வருந்தாமல் காதலி படும் துயரத்தை நினைந்து வருந்துவதைச் சித்திரிக்கும் அகநானூற்றுப் பாடல் ஒன்றினைச் 'சுடர்த்துணையாக' என்ற கட்டுரையில் டாக்டர் மு. வ. அவர்கள் சுவைபட விளக்கியுள்ளார். இக்கட்டுரையில் "தாயின் அறிவுரை தமிழனுடைய இட்டலிபோல் மென்மையுடையது. தந்தையின் அறிவுரையோ வடநாட்டின் சப்பாத்திபோல ஈரமற்றதாக இருக்க முடியும்" என்பதுபோல அமைந்துள்ள உவமைகள் நகைச்சுவை நிரம்பி நயம் பயப்பனவாகும்.

சென்னை அரசியலார் தமிழ் மொழிக்கு அரசவைக் கவிஞரைத் தேர்ந்தெடுத்ததையொட்டி முற்கால அரசவைப் புலவர்களைப் பற்றிச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார். "பழங்காலப் புலவர்கள் அரசர்களால் ஆதரிக்கப்பட்டாலும் அவர்கள் நாட்டு மக்கள்பால் பேசுவதையே தம் கடமையாகக் கொண்டிருந்தனர். மக்களுக்குத் தீங்கிழைக்கும் மன்னனை மதிப்பது புலவர் இயல்பன்று" என்ற உண்மையினை நன்கு தெளிவுறுத்துகிறார்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்கள் 'மறைந்து போன ஒரு காவியம்' என்ற தலைப்பில் அமிர்தபதி என்ற காப்பியத்தின் இயல்புகளைத் தெளிவு படுத்தியுள்ளார். அமிர்தபதியாகிய அரசி குருடியும் நொண்டியுமாகிய யானைப் பாகனின் இசையிலே ஈடுபட்டு அவனைக் காதலித்து முடிவில் தன் கணவனையும் மாமியையும் கொல்வதாகக் காப்பியக் கதை கூறுகிறது. பாடுபவன் எவ்வளவு குரூபியாக இருந்தாலும் அவன் பாட்டுகளில் ஈடுபட்டு அவனை மோகிக்கும் தன்மை பெண்களுக்கு இயல்யாக உள்ளது என்பதை இக் கதை புலப்படுத்துவது போல் தோன்றுகிறது.

புலைப்பேடி என்ற தலைப்பில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் புலையர்களைப் பற்றிய செய்திகளை விளக்குகிறார். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் புலையர் என்னும் வகுப்பார் மேலின மக்களாகிய நம்பூதிரி நாயர் என்பாரின் கண்களில் படுவதுகூடக் குற்றமாக இருந்தது. அவர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட ஒதுக்குப் புறங்களில் தான் போக்குவரவு வைத்துக் கொள்ள வேண்டும். 'விலங்கு, புழு பூச்சிகளுக்குள்ள சுதந்திரம் கூட இல்லாது இவற்றிலும் தாழ்ந்த தனிப் பிறவிகளாய் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்" என்று கவிமணி கூறுகிறார். இப்புலையர்களைப் பற்றிக் கவிமணி அவர்கள் கூறுகிற

மற்றொரு செய்தி நம்மைத் திகைப்புறச் செய்கிறது. "கற்கடக மாத மாகிய ஆடி மாதத்தில் கதிரவன் மறைந்தபின் வெளிப்பட்டுலவும் பெண்களை விரும்பினால் புலையர்கள் உரிமையாக்கிக் கொள்ளலாம். அவர்கள் மீது ஒரு சிறு கல்லை எடுத்துத் தீண்டினால் போதும். அவன் பின்னால் அவள் சென்று விடவேண்டும். இங்ஙனம் பெண்களை உரிமைப்படுத்துவது பெண்களின் பிறப்புரிமை"—இவ்வுண்மையைக் கவிமணி அவர்கள் கல்வெட்டுச் சான்றுகளோடு நிறுவுகிறார். புலையர்களின் இப்பிறப்புரிமையைக் கொல்லம் 871-ல் திருவிதாங்கோட்டை ஆண்ட மன்னரான வீரகேரளவர்மர் ஆணை பிறப்பித்து நீக்கினார் என்றும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலநாள் பசியால் வாடும் ஓர் இளைஞன் சிறையிலாவது அரை வயிறு கஞ்சி கிடைக்கும் என்ற கருத்தோடு திருடியும் நீதிபதி அவனை மன்னித்துவிடும் காட்சியையும், இதனால் அவ்வேழை இளைஞன் படும் வேதனையையும் 'விடுதலை' என்ற சிறுகதையில் அகிலன் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

1951-ல் வெளியான இரண்டாவது பொங்கல் மலரில் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், சி. எஸ். சீனிவாசாச்சாரியார், நாவலர் சோம சுந்தர பாரதியார், ஈ. த. ராஜேசுவரி அம்மையார், சுவாமி சித்பவானந்தர் ஆகியோருடைய கட்டுரைகளும் பாரதிதாசனின் பாடலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

முடியரசர் கதைகளே காப்பியக் கதைகளாக எங்கும் அமைந்திருக்க இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இளங்கோ வடிகள் சிலப்பதிகாரக் கதையினைக் குடிமக்கள் கதையாக அமைத்த திறத்தினைத் தெ. பொ. மீ. பாராட்டிக் கூறுகிறார். தஞ்சை அரசு மறைந்த வரலாற்றினைப் பேராசிரியர் சி. எஸ். சீனிவாசாச்சாரியார் தம் கட்டுரையில் ஆராய்ந்துள்ளார். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு தொடர்நிலைச் செய்யுளும் ஒரு காலத்தில் இரு புலவர் இயற்றி ஒருவருக்கொருவர் படித்துக் கேட்ட பாட்டுக்கள் என்று பல புலவர்கள் கூறும் கூற்றினை நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் "போலிப் புலமையின் காலிக் கதைகள்" என்ற கட்டுரையில் தக்க சான்றுகளோடு மறுக்கிறார். உப்பின் வரலாற்றையும் அதனுடைய பல்வகைப் பயன்களையும் 'உப்போ உப்பு' என்ற தலைப்பில் திரு. ஈ. த. ராஜேசுவரி விளக்கியுள்ளார். தெய்வத்தின் முன்னிலையிலும் தங்களைப் பணிவான நிலையில் வைத்துக்கொள்பவரே உண்மையான பக்தர் ஆவார் என்ற உண்மையினை, ராமகிருஷ்ணர் வாழ்க்கை நிகழ்ச்சியிலிருந்து சான்று காட்டி சுவாமி சித்பவானந்தர் 'கோயில் மரியாதை' என்ற கட்டுரையில் அறிவுறுத்தியுள்ளார்.

"கடும்போரில் இடம் பெயராத் தமிழ மக்கள்
ஊனெல்லாம் உள்ளத்தின் உள்ளமெல்லாம்

ஒளியாக்கி உயர்ந்தானை வாழ்த்தி வாழ்த்தித்
தேனெல்லாம் வண்டுண்டு யாழ்மி ழற்றும்
செந்தாமரைக் குளத்தில் நீராடாமோ"

என்று பாரதிதாசன் அவர்கள் இம் மலரில், பொங்கல் வாழ்த்துப் பாடியுள்ளார். இன்னும் இம் மலரில், சுகி அவர்கள் எழுதிய "மனச் சுமை' என்ற சிறுகதையும், வேலன் அவர்களின் 'காதலில் விளையும் கவிதை' என்ற பாடலும், நாமக்கல் கவிஞரின் வாழ்த்துப் பாடலும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இதைப் போலவே ஒவ்வோராண்டும் கலைக்கதிர், பொங்கல் மலர் அறிவியல் கட்டுரைகளோடு கருத்துக்கு நல் விருந்தளிக்கும் பேரறிஞர் கட்டுரைகளைக் கொண்டும் வெளிவருகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட அறிஞர்களோடு திரு. நெ. து. சுந்தரவடிவேலு, திரு. அ. ச. ஞா. டாக்டர் தேவசேனாபதி, திரு அ. மு. பரமசிவானந்தம், திரு. கே. எஸ். மகாதேவன், டாக்டர் எம். ஏ. தங்கராஜ், டாக்டர் துரைஅரங்கனார், டாக்டர் கே. கே. பிள்ளை, டாக்டர் பா. நடராஜன். திரு. கி. வா. ஜகந்நாதன், ஜெகசிற்பியன், அழ. வள்ளியப்பா, கா. வேழவேந்தன், டாக்டர் அறம் ஆகியோரும் கலைக்கதிர் பொங்கல் மலருக்குத் தம் கருத்தோவியங்களை ஆண்டுதோறும் வழங்கி வருகின்றனர்.

கடந்த மூன்றாண்டுகளாக நம் மாநில முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தம்முடைய கருத்துச் செறிந்த கட்டுரை அல்லது கவிதை அனுப்பிக் கலைக்கதிருக்குப் பேரூக்கம் அளித்து வருகின்றார். இங்ஙனமே நடுவண் அரசு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் ஆண்டுதோறும் கட்டுரை வழங்கிச் சிறப்பிக்கிறார்.

இன்னும்,

"குன்று போல் உள்ள பணிகளை முடிக்க
ஒன்றாய்ச் சேர்வோம்—இங்கு
ஒப்புறவு கொள்வோம்.

ஏழ்மை வறுமை என்னும் கொடுமை
தோழமை கொள்ளச் சிறிதும் இடங்கொடோம்.

அன்புநெறி பண்புமனம்
நன்றுநிறை பெரும்பணிகள்
கல்லார்க்குக் கல்விநலம்
எல்லோர்க்கும் நல்வாழ்வு
சொல்லாலே செய்திடுவோம்—என
நன்னாளில் சூளுரைப்போம்—இது
பொன்னாளென நாமுரைப்போம்."

இவ்வாறு சென்ற பொங்கல் மலரில் கலைஞரவர்கள் தம் கவிதையைப் பாடியுள்ளார். சென்ற ஆண்டு பொங்கல் மலரை அணிசெய்த கட்டுரைகளை ஒரு சிறிது காண்போம்.

சுற்றுச் சூழலில் காணப்படும் நச்சுத் தன்மையை நீக்குதற்கு அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களையும் நடவடிக்கைகளையும் 'நகரங்களின் வளர்ச்சியும் சுகாதாரப் பிரச்னையும்' என்ற கட்டுரையில் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் விரிவாகக் கூறியுள்ளார்.

"முக்கனிச் சாறும், முதிர்ந்த தீங்கரும்பின் சாறும், சர்க்கரைப் பாலும் சேர்த்து அனைவரும் சரிசமமாகப் பருகும் நாளாய்ப் பொங்கல் திருநாள் மலரவேண்டும். அப்போதுதான் பொங்கலோ பொங்கல் என்று மங்கல முழக்கம் செய்திட முடியும்" என்று டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொங்கல் வாழ்த்துக் கூறியுள்ளார்.

அமைச்சர் மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கள் "ஜாதி சமய வேறுபாடுகள் சிறிதுகூடத் தலைகாட்டாமல் அனைத்துலகிலும் கொண்டாடப்பெறும் சமதர்ம விழாதான் பொங்கல் விழா ஆகும்" எனச் "சமதர்ம விழா" என்ற தம் கட்டுரையில் விளக்குகிறார்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சீன இராமாயணக் கதையை இப் பொங்கல் மலரில் கூறியுள்ளார். இராமன் பாத்திரத்தைப் போதி சத்துவராகவும் சீதையைப் போதிசத்துவரின் அரசியாகவும், இராவணனை நாகனாகவும், அனுமனை ஒரு பெரிய குரங்கரசனாகவும், சுக்ரீவனை அக் குரங்கின் சிற்றப்பனாகவும் இந்த இராமாயணம் கூறுகிறது. இதன் கதை நம் இராமாயணக் கதையோடு பெரும்பாலும் ஒத்துள்ளது.

'சோகன்மெண்டல்' என்ற அறிவியல் பேரறிஞர் தம் வாழ்நாளில் கண்டுபிடித்துப் பிறப்பியல் என்ற ஒரு புதிய விஞ்ஞான இயலுக்கு அடிக்கல் நாட்டினார். ஆனால், அவர் காலத்தில் அவருடைய ஆராய்ச்சியின் உண்மையையும் பெருமையையும் யாரும் உணர்ந்து போற்றவில்லை. அவர் மறைந்து ஐம்பது ஆண்டுகட்குப் பின்னால் கம்பியூட்டர்களும், தானியங்களும் பெருகிய பிறகு 1970ஆம் ஆண்டில் சோதனைக் குழாயில் விஞ்ஞானி உயிரைப் படைத்தான். அவன் செய்தது 100 ஆண்டுகளுக்கு முன் கனிதக்கண் கொண்டு சோகன் மெண்டல் கண்டுபிடித்த ஜீனே அன்றி, வேறில்லை. இச் செய்திகளை மிக உருக்கமாக டாக்டர் க. ரா. கிருட்டிணன் அவர்கள் "தியாகம் தோற்றதா! வென்றதா?" என்ற தலைப்பில் கூறியுள்ளார்.

இலக்கியத்தில் வரும் பல சொற்களுக்கு அகராதியில் பொருள் காண இயலாதென்றும், அச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்தை நோக்கிக் குறிப்பாக அவற்றின் பொருளை உணர வேண்டுமென்றும், டாக்டர். கா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் "அகராதிக்கப் பால்" என்ற கட்டுரை சில இலக்கியச் சான்றுகளுடன் நயம்படக் கூறுகின்றது.

அகவிலை ஏறுவதைத் தடுப்பதற்குரிய வழிகளை டாக்டர் பா. நடராசன் அவர்கள் 'அகவிலையேற்றம்' என்ற தமது கட்டுரையில் விளக்குகிறார்.

முன்னாள் அமைச்சர் கா. வேழவேந்தன் மின்னல் அருகில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்து உணர்ச்சி பொங்கக் கவிதையாக வடித்திருக்கிறார்.

தம்முடைய நீண்டகால அனுபவத்தில் கண்ட பொதுமக்கள் கலைச் சுவையினை அவ்வை தி. க. சண்முகம் அவர்கள் "பொதுமக்கள் சுவை" என்ற தம் கட்டுரையில் நன்கு புலப்படுத்தியுள்ளார். "பொது மக்களின் சுவையினை அறிந்து கலை வளர்ப்பதென்பது இயலாதது மட்டுமல்ல விரும்பக்கூடியதும் அல்ல..........நடிப்பதற்கென்று ஒரு நாடகத்தைத் தேர்ந்தெடுக்கும்போது அந்த நாடகம் பொது மக்களுக்குப் பிடிக்குமா? வசூலாகுமா? வரவேற்பிருக்குமா? என்றெல்லாம் நாங்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பதில்லை. நடிக்கும் அந்த நாடகத்தால் பொதுமக்களுக்குப் பயன் இருக்குமா? என்று சிந்தித்து முடிவு செய்வோம். வேடிக்கைக்காக மட்டுமே கலை நிகழ்ச்சிகளிருக்க வேண்டுமென்றால், கள்ளுண்டு சில மணி நேரம் களித்திருப்பதற்கும் கலைவெறியில் சில மணி நேரம் களித்திருப்பதற்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்........ஒரு தாய் எப்படித் தன் குழந்தைகளுக்கு நல்லவைகளைத் தெரிந்து ஊட்டுவாளோ அப்படியே கலைஞனும் நல்லவைகளையே மக்களுக்குப் புகட்டக் கடமைப் பட்டிருக்கிறான்". இவை போன்ற அரிய கருத்துக்களை இக் கட்டுரையில் அவர் கூறியுள்ளார்.

டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் 'சிலப்பதிகாரம் சிறப்பதிகாரம்' என்ற தலைப்பில் சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பாத்திரங்கள் எங்ஙனம் மாந்தரின் பொதுப் பண்புகளுக்கு விளக்காக அமைந்து சிறப்புறுகின்றன என்பதை மிகத் திறம்படக் கட்டுரைத்துள்ளார்.

அனுமன் பேசிய பேச்சை விட்டுவிட்டு அவன் பேசாத பேச்சுக்கு இராமன் சொல்லின் செல்வன் என்ற பட்டத்தை வழங்கினான் என்ற நுட்பத்தினை திரு. அ. ச. ஞா. "சொல்லின் செல்வன் யார்" என்ற தலைப்பில் நயம்படக் கூறுகின்றார்.

"காலமெல்லாம் ஓயாது கற்கும் கல்வியின் விளைவு அறிவு; தெளிவுடைய அறிவு உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும், உறுதிப்படுத்தும், மென்மைப்படுத்தும். அத்தகைய அறிவுடையோர் பிறர்படும் துன்பத்தைத் தான்படும். துன்பமாக எண்ணிக் கைகொடுப்பர்; உடுக்கை இழந்தவன் கைபோல மற்றவர் இடுக்கண் களைய முயல்வர்" இவ்வாறு "பொங்கற் படையல்" என்ற தம் கட்டுரையில் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் அறிவுச் செல்வத்தை வாரி வழங்குகிறார்.

பல கவர்ச்சிகள் மிகுந்த இக்கால வாழ்க்கையைக் கல்வி கற்பவனும், கடமைகளைச் செய்பவனும், அரசியலில் ஈடுபட்டவரும் அருச்சுனன் கடுந்தவம் செய்ததுபோல மன உறுதியோடிருந்து ஆசை அலைகளுக்குக் கட்டுப்படாமல் வெற்றி காணவேண்டும் என்ற கருத்தினை மிகவும் சுவையாக "அருச்சுனன் தவம்" என்ற கட்டுரையில் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் கூறுகிறார்.

உலக அனைத்திலக்கியம் (Universal literature), பன்னாட்டிலக்கியம் (International literature), உலக இலக்கியம் (World literature), பொது இலக்கியம் (General literature) என்ற இலக்கியங்களின் இயல்புகளை "நான்கு வகை இலக்கியங்கள்" என்ற தலைப்பில் டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் விளக்கியுள்ளார்.

இன்னும், சி. வேலாயுதம், திருமதி எஸ். இலக்குமி சுப்பிரமணியம், கொண்டல் சு. மகாதேவன், டாக்டர் ச. அகத்தியலிங்கம், அகிலன் ஆகியோருடைய கட்டுரைகளும், சுகி. சுப்பிரமணியம், ஜெகசிற்பியன், சுவைஞன், விந்தன் ஆகியோருடைய சிறுகதைகளும், கவிஞர் கருணானந்தம், கவியரசு முடியரசன், புலவர் தமிழ்ப்பித்தன், கவிஞர் பழனியப்பன் ஆகியோருடைய கவிதைகளும் இம் மலரை அணி செய்கின்றன.

கலைக்கதிர் பொங்கல் மலரிலும், மாத இதழிலும் வெளியிடப்படும் கட்டுரைகள் அனைத்தும்—சிறப்பாக அறிவியல் கட்டுரைகள் இனிய எளிய தமிழ் நடையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அறிவியல் கருத்துகள் பொதுமக்களுக்கு எளிதில் புரியவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இயன்ற வரையில் கட்டுரைகளை எளிய தமிழில் எழுதுவதென்பதைக் கலைக்கதிர் தன் கொள்கையாகக் கொண்டுள்ளது. சான்றாகச் சென்ற ஆண்டு பொங்கல் மலரில் வெளியான அறிவியல் பகுதியிலிருந்து கலைக்கதிரின் எளிய தமிழ் நடையை உணரலாம்.

"உடலின் பல்வேறு பாகங்களிலிருந்து மூளைக்குச் செய்தி செல்வதும் மூளையிலிருந்து உடலின் பல்வேறு பாகங்களுக்குக் கட்டளை செல்வதும், மின் துடிப்புகள் மூலம் நடைபெறுகின்றன. மூளையில் பாதிப்பு ஏற்பட்டாலும் இருதய அறுவைச் சிகிச்சை செய்தாலும், மூளையின் மின் வினை (Electrical activity), மாறுகிறது. இந்த மாற்றத்தின் தன்மையை அறிய லண்டனில் ஒரு புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கருவி சிக்கனமானது. நம்பத் தகுந்த செய்திகள் தருவது; எவரும் இயக்கக்கூடியது.

கலைக்கதிர் மாத இதழ்களின் அட்டைப் படங்கள் அறிவியல் தொடர்பானவை. அவை பற்றிய கட்டுரைகள் விரிவாக அந்தந்த இதழ்களில் அமைந்திருக்கும். ஆனால், பொங்கல் மலர்களின் அட்டைப் படங்கள் இலக்கியச் செய்திகளையும், காட்சிகளையும் சித்திரிப்

பவை. நம் பழந்தமிழ் இலக்கியக் காட்சிகள் மூவண்ணப் படங்களாகப் பொங்கல் மலர் அட்டையில் திகழ்ந்தன. 1964ஆம் ஆண்டு முதல் இக் கால இலக்கியத்தைச் சிறப்பிப்பதன் பொருட்டு ஒரு சிறு கதையின் விளக்கமாகப் பொங்கல் மலரின் அட்டைப் படம் அமைந்து வருகிறது. அட்டைப் படத்திற்கென்றே அச் சிறுகதை படைக்கப் படும். அது கலையைச் சிறப்பிப்பதாக இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது. சான்ருகச் சென்ற ஆண்டுப் பொங்கல் மலரின் அட்டைப் படம் நம் பரத நாட்டியக் கலையைச் சிறப்பிப்பதாக அமைந்துள்ளது.

கீதா என்பவளின் திறமை மிக்க நடனங்களில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து அவளைத் திருமணஞ்செய்து கொள்கிருன் வசந்தன். அவள் தனக்கு மனைவியான பிறகு அவளுடைய நடனங்களைப் பிறர் கண்டு இன்புறுவதை அவனுல் பொறுக்கமுடியவில்லை. தன் குடும்ப கவுரவமே போய்விடுகிறது என்று கருதுகிருன். எனவே, அவள் இனி நடனம் ஆடக்கூடாது என்று கட்டளையிடுகிருன். தன் உயிர்போலப் போற்றி வளர்த்த கலையைக் கீதாவுக்கு விட்டுவிட மனமில்லையாயினும் கணவன் சொல்லுக்குப் பணிந்து நடனம் ஆடுவதைக் கைவிடுகிருள். சில நாட்களில் வசந்தனுக்குத் தன் வாணிபத்தில் பேரிழப்பு நேரிடுகிறது. குறித்த காலத்தில் ரூ. 20,000 செலுத்தவில்லையாயின் அவன் வீடு பறிமுதல் செய்யப்படும் நிலை ஏற்படுகிறது. இறுதி நாள் வருகிறது. எங்கு முயன்றும் ரூ. 20,000—அவனுக்குக் கிடைக்கவில்லை. மனம் உடைந்திருக்கிருன். கீதா அவனிடம் ரூ. 20,000-ஐ நீட்டுகிருள். அவன் பெருவியப்புறுகிருன் "உங்கள் குடும்ப கவுரவத்தை நிலை நிறுத்த என் நடனக்கலை அளிக்கும் தொகை இது" என்கிருள். தங்கள் நிலையை உணர்ந்து தொடர்ந்து என் நடனம் நிகழ்த்த ஒப்பந்தம் பேசி முன்பணமாக இத் தொகையைப் பெற்று வந்தேன்" என்று கூறுகிருள். தன் மனைவியின் பெருமையை உணர்ந்து அவள் நடனமாட இசைகிருன்.

இதைப் போலவே இதற்குமுன் அட்டைப்படம் ஒவ்வொவ்வொன்றும் ஒவ்வொரு கலையைச் சிறப்பிப்பதாக அமைந்துள்ளது.

அறிவியல் புதுமைகளையும், சாதனைகளையும் பல புகைப்படங்கள் வாயிலாக ஒவ்வொரு கலைக்கதிர் பொங்கல் மலரும் தெளிவாக விளக்குகிறது.

நிலாவில் குடியிருப்பு அமைக்கப்பட்டால் அது எப்படியிருக்கக் கூடும் என்பதைச் சென்ற ஆண்டு பொங்கல் மலரில் பல புகைப்படங்களைக் கொண்டு விளக்கப்பட்டது. "நிலாத் தரையில் துளையிடுவது, அத் துளை வழியாக ஆழத்தில் வெடிவெடித்து அகலமான இடம் சேர்ப்பது. துளைவாயில் பிளாஸ்டிக் பலூன் கொண்டு மூடிவிடுவது. தரைக்கு அடியில் உள்ள இடத்தில் செயற்கையாக வாழ்க்கைக்கு ஏற்றபடி மாற்றிக்கொள்வது. இது குடியிருப்பு அமைப்பது பற்றிய

அடிப்படைத்திட்டம்.'' இதுபோலப் பல புகைப்படங்கள் குடியிருப்பு விவரங்களைத் தருகின்றன.

இங்ஙனமே ஒவ்வொரு பொங்கல் மலரிலும் பல புகைப்படங்கள் அறிவியல் நுட்பங்களை உணர்த்தக் காணலாம்.

இத்தகைய அறிவியல் படங்களோடு தமிழ்ப் பண்பாட்டினை உணர்த்தும் சிலைகள், கற்கோயில்கள், கோபுரங்கள், கடவுளர் திருவுருவங்கள் இன்னோரன்னவை ஒவ்வொரு பொங்கல் மலரையும் அணி செய்யும்.

இவற்றோடு கலை நுட்பங்கள் நிறைந்த புகைப்படக் காட்சிகளை இரட்டை இரட்டையாக வேற்றுமைப்பட இணைத்துப் பொருத்தமான தலைப்புகளுடன் படிப்பவர் கவனத்தை அப் படங்கள்பால் ஈர்க்கும் வண்ணம் மலரில் அமைந்திருக்கும்- ''அன்புக் கோபுரமும்—ஆட்சி நெறிக் கோபுரமும், மாடிமனைகளும்—மலை மனைகளும், காதலி முன் காதலனும்—கரு விழியின் காதல் தாயும், ஆடற்கலைக்கு அழகு தேடப் பிறந்தவள்—ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்''—இவை சில படங்களின் தலைப்புகள். இவ்வாறு வேற்றுமைப் பொருள் படப் புகைப் படங்களை இணைப்பது கலைக்கதிர் மலரின் சிறப்புகளில் ஒன்று எனலாம். இன்னும் பழந்தமிழ் இலக்கியக் காட்சிகளைக் கோவையாகப் பல படங்களில் விளக்கி வெளியிடுவது கலைக்கதிர் பொங்கல் மலரின் மற்றொரு சிறப்பு.

சீவகன் பாவையர் எண்மரைக் காதலித்து மணந்தது, வளையாபதிக் கதை, பெருங்கதை, மணிமேகலை, குறிஞ்சிப் பாட்டு முதலியவற்றின் காட்சிகளைப் பொங்கல் மலர்கள் வெளியிட்டுள்ளன.

மேலும், கலைக்கதிரின் மற்றொரு சிறப்பாவது ஒரு பொருளைப் பற்றி அதன்கண் பெரிதும் புலமை வாய்ந்த அறிஞர்களின் கருத்தைக் கட்டுரைகளாகத் திரட்டி அடிக்கடி சிறப்பிதழாக வெளியிடுவதாகும். இவ்வகையில், பயிற்சி மொழி மலர், நேரு மலர், அறிவியல் வளர்ச்சி மலர், அணு மலர், காந்தியடிகளின் நூற்றாண்டு மலர், வள்ளுவர் 2,000 ஆண்டுச் சிறப்பிதழ், பொருளாதாரச் சிறப்பிதழ், கல்வி மலர், நல்வாழ்வுச் சிறப்பிதழ், விடுதலை வெள்ளி விழாச் சிறப்பிதழ் இன்னோரன்னவை வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் வளர்ச்சிக்காகச் சிறப்பாக, அறிவியல் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுவரும் கலைக்கதிருக்கு இவ்வாண்டு டிசம்பர்த் திங்களோடு இருபத்தைந்தாண்டு நிறைவெய்துகிறது. இதையொட்டிக் கலைக்கதிர் வெள்ளி விழா மலர் 1974 சனவரித் திங்கள் பொங்கலன்று வெளியிடப்பெறும். கலைக்கதிரின் சிறப்பான நோக்கத்தையொட்டி அறிவியல் புதுமை ஒன்றின் அழகுமிக்க மூவண்ணப் படம் வெள்ளி

விழா மலரை அணிசெய்து விளங்கும். பல பேரறிஞர்களின் கருத்தோவியங்கள் அதில் இடம் பெறும்.

தமிழில் அறிவியல் அறிவைப் பரப்புவதற்குக் கடந்த கால் நூற்றுண்டாக அயராது பாடுபட்டுவரும் கலைக்கதிருக்குப் பொதுமக்கள் ஆதரவு போதிய அளவு இல்லை என்பது வருந்தத்தக்கது. எத்தகைய அறிவியல் கருத்தையும் எளிதில் விளக்குதற்கு ஏற்ற வகையில் தமிழ் வளர்ந்தால்தான் அதற்கு உலகில் பெருமையும் மதிப்பும் ஏற்படும் என்பதைத் தமிழ்நாடு நன்கு உணரவேண்டும். இப் பணியினை நிறைவேற்றுதற்குப் பல்லாண்டுகளாக மிகவும் உறுதியோடு பாடுபடும் கலைக்கதிருக்குப் பேருக்கம் அளிப்பது தமிழர் கடமையாகும்.

4

திரு. நெ. து. சு.-வின் இலக்கியப் பணிகள்

பேராசிரியை திருமதி. இந்திரா சோமசுந்தரம்,
எம். ஏ., எம். லிட்., பி. எஸ்சி., பி. டி.,
முதல்வர், பச்சையப்பர் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை.

நிர்வாகத் துறையாயினும்—இலக்கியத் துறையின் கிளைகளாகிய கட்டுரைத் துறையாயினும்—கவிதைத் துறையாயினும்—சிறுகதைத் துறையாயினும் — வரலாற்றுத் துறையாயினும் — சொற்பொழிவுத் துறையாயினும்—தாம் தொட்ட துறைதோறும் தமக்கே உரித்தான முத்திரைகளைப் பதித்து வான உடுக்களிடை வட்ட நிலாவேபோல் சுடர் விட்டு ஒளிர்கின்ற ஆற்றல் பெற்றவர் நம் துணைவேந்தர் பெருந்தகை. சிறப்பாகக் குழந்தை இலக்கியத் துறைக்கும், பயண இலக்கியத் துறைக்கும் அவர் ஆற்றியுள்ள பணிகள் அளவிடற்கரியன. தமிழ் உணர்வும், தமிழறிவும் சான்ற நந்தமிழ்த் துணைவேந்தரின் இலக்கியப் பணிகளை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கவிதைகள் : *கவிதை என்பது எல்லோராலும் எளிதில் எழுதி முடித்துவிடக்கூடிய ஒரு கலையன்று. முறையாக யாப்புப் பயின்று தமிழ்த்துறையில் பணியாற்றினாலும் எல்லோருமா கவிதை படைக்கிறார்கள்? "கவிதை கலைகளின் அரசி"[1] இதனைப் படைப்பதற்குக் கவியுள்ளம் வேண்டும். இது எல்லோராலும் இயலக்கூடியது அன்று. அதனால்தான், "கவிஞர்கள் பிறக்கிறார்கள்; உருவாக்கப்படுவதில்லை"[2] என்றியம்பினார் ஓரறிஞர். நம் துணைவேந்தர் அவர்கள் நல்ல கவியுள்ளம் படைத்த இயற்கைக் கவிஞராவார்கள். கவிதைத் துறைக்கு மிகுந்த அளவில் தொண்டாற்றுகின்ற வாய்ப்பு இயல்பாகவே அவருக்கு இல்லாமற்போனமைக்கு அவர் நிர்வாகத் துறையில் பெரிதும் அழுந்திக்கிடந்தமையும் அலுவல்களின் சுமைதாங்கியாய் அவர் மாற்றப்பட்டுவிட்டதால், ஓய்வின்மையுமே முக்கிய காரணங்களாக அமைகின்றன. இத்தகு சூழல்களில் சிறைப்பட்டுக் கிடந்தாலும், முகிலைக் கிழித்து ஒளியுமிழும் மதியம்போல அவருடைய கவியுள்ளம் வெளிப்பட்டுத் தேன்மழை பொழிந்திருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது. சான்றுக்குச் சில :*

"வா கண்ணா வா
இணைந்து
வா கண்ணா வா

சேர்ந்து கற்க
வா கண்ணு வா
கூடி உழைக்க
வா கண்ணு வா
நாட்டை உயர்த்த"[3]

இசையுடன் இழைகின்ற இப் பாடல் எளிய நடையில் விழுமிய உணர்வை—இணைந்து வாழவும் சேர்ந்து கற்கவும்—கூடி உழைக்கவும்—நாட்டை உயர்த்தவும் இளம் உள்ளங்களை ஒருமைப்படுத்துகின்ற விழுமிய உணர்வை ஊட்டுகின்றது.

"மணல் வீடு ஒருவனுல் முடியும்
சிறு வீடு சிலரால் முடியும்
மாடி வீடு பலரால் முடியும்
பெரிய கோயில் ஒருவரால் முடியுமா?

ஆயிரம் ஆயிரம் கைகள்
கோடிக் கோடி குருதி மணிகள்—
அத்தனையும் முத்து மணிகள்
பிசைந்து எழுப்பியது அன்றே
அந்தப் பெரிய கோயில்?"[4]

என்னும் கவிதையடிகள் பெரும்பெரும் சாதனைகள் புரிய அனைவருடைய ஒத்துழைப்பும் உறுதுணையும் எத்துணை இன்றியமையாதது என்பதனைக் குறிப்பாக இளங் குழந்தைகளின் உள்ளங்களில் மிக அழுத்தமாகப் பதியவைக்கின்ற ஆற்றல் பெற்று விளங்குகின்றன.

"பொங்கிவரும் பெருவெள்ளம்
ஒருவருக்கோ அடங்கி நிற்கும்
குன்றுயர்ந்த தடந்தோள்கள்
எண்ணற்ற நெடுங்கைகள்
அத்தனையும் ஒருசேர
வஞ்சனையே அறியாமல்
அனைவருமே வியர்வை பொழிய
எழுந்ததன்றே கல்லணையாம்?"[5]

இக் கவிதையடிகள் இன்றைக்குக் கவினுறக் காட்சியளிக்கும் கல்லணையின் எழுச்சிக்குப் பின்புலமாக விளங்கிய தடந்தோள்களையும், நெடுங்கைகளையும், வியர்வையையும் சுட்டுகின்றன. ஒற்றுமையும் உழைப்புமே ஒரு சாதனையின் பின்னணியாக விளங்கமுடியும் என்பதனை எவ்வளவு எளிமையாகப் படைத்துக் காட்டுகிறுர் நம் துணைவேந்தர் பெருந்தகை!

"பார் பார் பட்டணம் பார்" என்று குழந்தைகளுக்குப் பாட்டெழுதுவோர் பெருகிவரும் இந்நாளில் குழந்தைகளைப் பக்குவப்படுத்து

கின்ற போக்கிலும் புதிய கருத்துக்களைப் பதிய வைக்கும் நோக்கிலும் ஆர்வங்கொண்டு, நிர்வாகச் சுமையில் தாம் அழுந்திக் கிடக்கும் நிலையிலும் தமிழ்க் குழந்தைகளின் மன வளர்ச்சியில் அக்கறை கொண்டு கவிதை படைத்துவருகின்ற துணைவேந்தரின் தொண்டு பெரிதும் போற்றற்குரியது. எளிய - இனிய நடையில் அரிய கருத்துக்களைத் தொடர்ந்து வழங்கி இக் கவிதைத் துறைக்கு அளவாலும் பெருந் தொண்டாற்றினால் இன்னும் சிறப்பாயிருக்கும். ஏனெனில் "மனதை மகிழ்விக்கும் ஆற்றல் கவிதைக்கே உண்டு."[6]

உரைநடை :

நம் துணைவேந்தர் பெருந்தகையின் இலக்கியப் பணிகள் சிறுபான்மை கவிதையிலும் பெரும்பான்மை உரைநடையிலும் பூத்தவை. சொற்களின் வெற்று ஆரவாரங்கள் இல்லாமல் சிந்தையைத் தொடுகின்ற - சிந்தனையைத் தூண்டுகின்ற கருத்துச் செறிவு மிக்க எளிய உரைநடை அவருடைய தனிச் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. ஜே. ஸ்விப்டு[7] என்னும் அறிஞர் குறித்தவாறு தக்க இடங்களில் தக்க சொற்களைப் பெய்து தன் கருத்தைப் பொலிவிக்கின்ற பாங்கு குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கே அளவான உவமைகளின் வாயிலாக அழகான கருத்துக்களை மதலையரும் மனத்தே பசுமரத்தாணியெனப் பதித்துக் கொள்கின்ற வகையில் விளக்கிச் செல்வது மெத்தவும் மெச்சத்தக்கது.

துணைவேந்தர் பெருந்தகையின் சிந்தனைகள் - கட்டுரைகளில் - சொற்பொழிவுகளில் - சிறுகதைகளில் - எந்த வடிவங்களில் வெளிப்பட்டாலும் அவைகள் எல்லாம் கலைக்காக அல்லாமல் மக்களுக்காக - மக்களின் நல்வாழ்வுக்காக வெளிப்படுகின்றன என்பது நெற்றித் திலகம். தமிழ் - தமிழன் - தமிழ்வீடு - தமிழ்நாடு - பாரதம் - இம் மையங்களைச் சுற்றியே அவருடைய சிந்தனைகள் சுழல்கின்றன. அறியாமை யென்னும் கருக்கிருட்டில் கால் பதித்துக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயம் கல்வியறிவு பெற்று ஒளிபெறவேண்டும் என்னும் இலக்கியக் கனவின் இழைகளே அவருடைய சிந்தனை ஆடைகளை அணியுற நெய்துள்ளன எனலாம். சான்றுக்குச் சில சிந்தனை முத்துக்கள்.

நூல்கள் படிக்கும் பழக்கம் :

நூல்களைப் படிக்கும் பழக்கம் தமிழர்களிடையே மிகவும் அரிதாக உள்ளது. படிப்பவர்களின் ஆர்வத்தையும் வேட்கையையும் பொறுத்தே நூலின் விற்பனை வளர்ச்சியுள்ளது. நூலின் விற்பனையை ஒட்டியே எழுத்தாளரின் வளர்ச்சியும், எழுத்தாளரின் வளர்ச்சியை ஒட்டியே இலக்கிய வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் அமைந்துள்ளன. ஆதலின் படிக்கும் பழக்கம் வளர வளர - படிப்பவர்களின் எண்ணிக்கை உயர-உயர நல்ல நூல்களின் வெளியீடுகள் மிகும். ஐந்து விழுக்காடுகளே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள ஆப்பிரிக்காவில் "நான் பிறக்கமாட்டேன்" என்ற நூல் இரண்டே நாட்களில்

800 பிரதிகள் விற்பனையான செய்தியையும், இதுவரை நான்கு பதிப்புகள் வெளிவந்த கன்னட - ஆங்கில அகராதி வெளியீட்டு விழா கர்நாடக நாட்டில் கன்னட மக்களாலேயே நடத்தப்பெற்று எல்லாப் பிரதிகளையும் அவர்களே முயன்று விற்று மொழி வளர்க்கிற செய்தியையும் சுட்டி, "நம் நாட்டில் தமிழ் எப்போது வாழும்? தமிழர் எப்போது புத்துணர்ச்சி பெறுவர்?" என ஏக்கத்தில் வினாக்களைத் தொடுத்து, தமிழினத்தை விடைதேடத் தூண்டி அமைகின்றது துணைவேந்தரின் ஒரு கட்டுரை மணி.[8]

கற்புடைய நூல்கள்[9] - இது துணைவேந்தரது கட்டுரை ஒன்றின் மகுடம். கற்பு என்னும் விழுமிய நெறி பெண்களைச் சார்ந்தியே பெரிதும் பேசப்படுவது மரபு. ஆனால் நூல்களுக்குச் சார்த்திப் பேசுகின்ற ஒரு புதுப் புனைவை (new coin) இங்குக் காணலாம். இத்தகு புதுப் புனைவுகள் (new coins) துணைவேந்தரிடத்துப் பரக்கக் காணலாம்.

பெண் கற்பு மதிக்கத்தக்க - வழிபடத்தக்க கூறு.

ஆனால் நூல் கற்பு? கடியத்தக்கது - களையத்தக்கது. எவருடைய நெஞ்சினுள்ளும் புகாது தாம் புகுந்த அலமாரிகளையே தஞ்சமெனக் கொண்டு விளங்குகின்ற நூல்களே "கற்புடைய நூல்கள்" என்னும் புனைவைப் பெறுகின்றன. நூல்கள் இத்தன்மைத்தாக இருத்தலை அனுமதிக்கக் கூடாது. "நூலகத்திலிருந்து சிறந்த நூல்களை எடுத்துப் படிக்கும் பழக்கம் தேவையானது. பள்ளிப் பருவத்திலேயே இப் பழக்கம் வளரவிடவேண்டும். பின்னர்க் கல்லூரியில் தழைக்கும் சின்னஞ் சிறுசுகளும் நூல் எடுத்துப் படிக்கும் ஒளிநிலையை விரைந்து உருவாக்க வேண்டும்" என்கிறார்.

மனிதருள் மாணிக்கமாகிய நேருவிற்கு நம் காணிக்கையாகக் குறிக்கிறார் துணைவேந்தர் பெருந்தகை : "பிரதமரான பிறகும் அரை மணி நேரம் பொது நூலைப் படித்துத் தன்னுடைய அறிவை வளர்த்துக் கொண்டவர் நேரு. நேருவுக்கு நாம் செய்ய வேண்டிய காணிக்கை அவரைப் போலச் சிறந்த மாணவர்களாக இருப்பதுதான்."[10] இங்ஙனம் நூல்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக்கொண்டே இருப்பவர் நம் துணைவேந்தராவர்.

முதியோர் கல்வி :

இளமைக் காலங்களில் பயில்வதற்குரிய சூழலும் வாய்ப்புக்களும் வசதிகளுமின்றி இன்னும் இருளில் அழுந்திக் கிடக்கின்ற முதுமைச் சமுதாயத்தினரின் மூடிய கண்கள் திறக்கப்படவேண்டும்; அவர்களுடைய கூறிய விழிகள் நூல்களைத் துருவ வேண்டும் என்னும் நல்லுணர்வு கொண்டோர் மிக மிகக் குறைந்த பேர்களே ஆவர். அவர்களுள் தலையாயவர் தகைமை சான்ற துணைவேந்தர் பெருந்தகையாவர்.

மேனாட்டிலும் நம் நாட்டிலும் முதியோர் கல்விக்குள்ள வேறுபாடுகளைச் சுட்டி நம் முதியோர்கள் கல்விபெற வேண்டியதன் இன்றியமையாமையைப் பல் வேறு சூழல்களில் பெரிதும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள் துணை வேந்தரவர்கள்.

"முதியோர் கல்வி - பேசித் தீர்க்க வேண்டிய ஒன்றல்ல ; செய்து முடிக்க வேண்டிய செயல். மேனாடுகளில் முதியோர் கல்வி என்றது தொடர் கல்வியைக் குறிக்கும். இளமைப் பருவத்தில் ஓரளவு கல்வியறிவு பெற்றவர்கள் முதுமைப் பருவத்தில் அத்துறையிலோ புதிய துறையிலோ கல்விபெறுவதாகும். நம் நாட்டில் முதியோர் கல்வி என்பது அவ்வாறில்லை. அவர்களுடைய அறிவுக் கண்ணைத் திறந்துவிட வேண்டும். ஒவ்வொரு தொண்டரும் ஆண்டுக்கு ஐந்து முதியோர்க்காயினும் கற்றுக்கொடுக்க வேண்டும்"[11] என முழங்குகிறார்.

"அறிவினைப் பெறும் வழி கல்வியாகும் மக்களுள் உறங்கிக் கிடக்கும் அறிவுக் கூறுகளைப் பயிராக்கி நன்மக்களை விளைவிப்பது கல்வி,"[12] என்றும், "மாணவனை மனிதனுக்குவதுதான் கல்வியின் முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டும்,"[13] என்றும் கல்வியின் நோக்கைக் குறிப்பிடுகிறார். இங்கு விவேகானந்தரின் "Education is the manifestation of perfection already in man" என்னும் கல்விக் கொள்கை கருதத்தக்கது. வயது முதிர்ச்சியிலும், பண்பு முதிர்ச்சி - அறிவு முதிர்ச்சி ஆயிரண்டுமே வேண்டற்பாலது என்ற எண்ணத்தில் இளைஞர்களுக்கு அவர் பின்வருமாறு அழைப்பு விடுக்கிறார் : "படித்த அனைவரும் முதியோர் எழுத்தறிவு முயற்சியில் ஈடுபட்டுச் சமுதாயத் தன்மானப் பணியை மேற்கொண்டு புதியதோர் அறிவுலகைச் சமைப்போம்,"[14] என்கிறார். நம் துணைவேந்தரின் கோரிக்கை நியாயமானது. தமிழினத்தின் நல்வாழ்வு மீது ஆர்வமும் அக்கறையும் கொண்ட கற்றவர்கள் அத்துணைபேரும் துணைவேந்தரின் அழைப்பையேற்று ஓய்வு நேரங்களில் முதியோர்க்கு எழுத்தறிவிக்கும் புனிதப் பணியை மேற்கொண்டால் நாடு சிறக்கும்.

உழவர் பயன்முறை எழுத்தறிவு இயக்கம் :

பகலவனின் பயணம் துவங்குவதற்கு முன்னரே கழனி நோக்கித் தம் பயணத்தைத் தொடங்கிவிடுகின்ற உழவர்கள் பகலவன் தன் பயணத்தை முடித்துக் கொண்ட பின்னரும் தம் பணி முடித்து இல்லம் மீளாது நிலாமுகம் பார்த்துத் தம்மகம் நினைந்து மீள்கின்ற உழவர்கள் சிறப்பாக எழுத்தறிவு பெற வேண்டும் என்னும் கருத்தினராய் நம் துணைவேந்தர் பெருந்தகை திகழ்கிறார்கள். "சிறுவர்களுக்குப் பசுமைத் தன்மை மூலதனம். வயது வந்தவர்களுக்கோ வைராக்கியம் மூலதனம்; வாழ்க்கையனுபவம் பெரிய துணை ; இவ்வனுபவமும் வைராக்கியமும் எழுத்தறிவு முயற்சிக்கு அவர்களை வேகமாக உந்துகின்றன"[15]. "இளவயதில் கல்வி அறிவு பெறும் வாய்ப்பினை இழந்து முதியவர்களாகி உலகிற்கு உயிர் கொடுக்கும் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள

உழவர்களுக்கு எழுத்தறிவு ஊட்டவேண்டும். அதனுல் உழவுத் தொழிலே மேலும் திறமையாகச் செய்ய வழி ஏற்படும். இது வெறும் எழுத்தறிவல்ல - செயல்முறை எழுத்தறிவாகும்''[16]

இவ்வாறு வாழ்க்கையனுபவமும் வைராக்கியமும் துணையெனக் கொண்ட முதியோர்க்கும் உழவர்க்கும் எழுத்தறிவு வழங்க வேண்டும் என்னும் தம் விருப்பத்தைப் பலவிடங்களில் துணைவேந்தர் வெளியிட்டுள்ளார். அவர்கள் கல்வி பெறுவதால் விளைகின்ற நன்மைகளையும் அவர் குறிக்கத் தவறியதேயில்லை. அனைவரும் உழவர்க்கும் முதியோர்க்கும் எழுத்தறிவூட்ட முனைவது இன்றியமையாத ஒன்ருகும்.

கல்வியும் கருத்துக்களும் :

சமுதாய மேம்பாட்டிற்கு அச்சாணியாக விளங்குவது கல்வி என்பது வெள்ளிடைமலை இக் கல்வியின் இன்றைய நிலை எத்தன்மைத்தாக உள்ளது? எத்தன்மைத்தாக இருத்தல் வேண்டும்? என்றெல்லாம் சிந்தித்துக் கல்வியின் இன்றியமையாமையைப் பல கட்டுரைகளில் புலப்படுத்தியுள்ளார்கள் நம் துணைவேந்தர் பெருந்தகையவர்கள். அவையெல்லாம் நெஞ்சில் நனி கொள்ளத்தக்கவை.

"பட்டத்தையே கருத்திற்கொண்டு பரிட்சைகளுக்கு அஞ்சி, குறிப்புகளைக் கும்பிட்டு, விஞ - விடைகளைத் தியானிப்பது இன்றைய கல்வி நிலை,''[17] என வேதனையோடு குறிப்பிடுகிருர்கள். மதிப்பெண்களை எளிதாக - மிகுதியாகப் பெறுகிற "கலை" மாணவ சமுதாயத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகிறது - வளர்க்கப்பட்டுவருகிறது. புதிய இளைய தலைமுறையினரிடத்து "ஆழம்" இல்லாமைக்கு இதுவே அடிப்படையாகும். இன்றைய கல்வி நிலையின் ஊனத்தையும் பலவீனத்தையும் நம் துணைவேந்தர் பெருந்தகை நன்கு புரிந்து கொண்டுள்ளார். அவர் காலத்தில் நல்ல மாற்றங்கள் நேரும் என நம்பலாம்.

கல்வியின் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக விளங்குகின்ற சூழல்களை நன்கு ஆழ்ந்து சிந்தித்தவர் நம் துணைவேந்தர் பெருந்தகை. "கல்விக்குக் குறுக்கே பிறப்பிடமோ, சாதியோ, வறுமையோ, சமயமோ வரவிடக்கூடாது. கல்வி மனித வளர்ச்சிக்கு வாய்ப்பு வழி,''[18] மனித வளர்ச்சிக்கு மூலவேராக விளங்க வேண்டிய கல்வி, தளர்ச்சிக்கு அடிகோலுகின்ற பிறப்பு-சாதி - வறுமை - சமயச் சிக்கல்களில் அழுந்தி அழிந்து போய்விடுமோ என்கிற கவலையும், அழியாமல் காப்பதில் கண்ணும் கருத்தும் கொண்டுள்ளார். ஏனெனில், "கல்வி கேடில் விழுச்செல்வம். அது நீறுபூத்த நெருப்பு. அறிவினைக் கொழுந்து விட்டெரியச் செய்யும்; விரிவு படுத்தும்''[19] பிற, வீழ்ச்சிக்கே வித்தூன்றும்.

மாணவரும் அரசியலும் :

அரசியல் கவர்ச்சிக்கு ஆளாகி எதிர்காலத்தை இருள் மயமாக்கிக் கொள்கின்ற இளம் மாணவ சமுதாயத்திற்கு நம் துணைவேந்தரின்

நல்லுரை, நோய் நீக்கும் நன்மருந்தேயாகும். அரசியல் என்னும் மாரீசனின் மாயத் தோற்றத்தில் மயங்கி, அறிவாலயமாகிய இராமனைத் துறந்து துன்பமாகிய இராவணனது பிடியில் தத்தளிக்காமல் மாணவச் சீதைகளைத் தடுத்தாட் கொள்ளும் நோக்கில் துணைவேந்தர் "துலா முழுக்கு"[20] என்று ஒரு கட்டுரை படைத்துள்ளார். அதன் சாரம் வருமாறு :

மாயூரத்தில் — பூவிரித்துப் பொன் கொழிக்கும் காவிரியில் புனல் பெருக்கு! அன்று அங்குத் துலா முழுக்கு! பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்கள் விருப்பத்திற்குப் புரண்டோடும் காவிரியில் முழுகவிடாது கட்டுப்பாட்டுடன் தங்கள் கைகளைப் பற்றுமாறு சொல்லி மூழ்கச் செய்வதைப் பார்க்கிறார் துணைவேந்தர் பெருந்தகை. அவருடைய சிந்தைச் சிப்பியிலிருந்து ஒரு முத்து சிதறி விழுகிறது.

வலிமை பெறாத சிறுவனும் வளர்ச்சியுறாத இளைஞனும் பெரியவர்கள் கைப்பிடியில் நின்று குளிப்பதுபோல், இளைஞர்கள் பெற்றோர் தம் நேர்ப்பார்வையில்—பொறுப்பில் பொது இயக்கங்களைப் பற்றி அறிவதே முறை. நேர்ப்பார்வையிலும் அவற்றில் ஆழச் சென்று ஈடுபடுவது தவறு. தன் பிள்ளையை விட்டு ஆழம் பார்க்காதபோது நலம் என்ற பெயராலே ஊரார் வீட்டுப் பிள்ளைகளை ஆழந் தெரியாத வேகமான குழியும் சுழியும் நிறைந்த அரசியல் ஆறுகளிலோ சமுதாய மடுவுகளிலோ பொருள்நெறி அருவிகளிலோ தள்ளிடுவது பாவம். முதிராத மாணவ மாணவிகள் இதில் ஈடுபடுவது அவர்களுக்கும் பொது இயக்கங்களுக்கும் ஆபத்து.

துலாமுழுக்குக் காட்சியைப் பார்த்ததும் தற்குறிப்பேற்றமாக அமைத்துத் தன் கருத்துக்களைத் தெளிவாக்கும் துணைவேந்தரின் திறம் வியக்கத்தக்கது. மாணவர்கள் அரசியல் வலையில் விழுந்து அவதியுறுதல் கூடாது என்னும் கருத்தில் காந்தியடிகளையும் லெனினையும் சுட்டி ஒரு கட்டுரையில் தன் கருத்தைக் காணிக்கையாக்குகிறார்.

காந்தியடிகள் மாணவர்களைக் கேட்டது - "ஒன்று மாணவர்களாக இருங்கள் அல்லது அரசியல்வாதிகளாக இருங்கள்" — லெனினும் இதனையே கூறினார்.[21] இவ்வாறு அரசியல் பனி மூட்டத்தில் சிக்குண்ட மாணவ சமுதாயத்தை மீட்கக் கதிரவனாகவும் காய்ந்துள்ளார் நம் துணைவேந்தர் பெருந்தகை. சில சமயம் இதமான தென்றலாக இழைந்து இன்னுரை பகர்ந்துள்ளார். "மாணவப் பருவம் ஆயத்தப் பருவம். எதிர் காலச் சீரமைப்புக்கு ஏற்ற பருவம். கற்க எடுத்துக்கொண்ட துறையில் தலைசிறந்த புலமை பெறுங்கள்; படியுங்கள்."[22]

ஆசிரியருக்கு :

நம் துணைவேந்தர் பெருந்தகை ஆசிரிய சமுதாயத்திடம் கொண்டுள்ள பரிவும், வழி நடத்திச் செல்கின்ற நெறியும் உன்னதமானவை.

அதனுற்ருன் "புதியதோர் உலகம் செய்வோம்"[23] என அவரிடத்து நெருக்கமாக உறவு பூண்டுள்ள ஆசிரிய சமுதாயத்திற்கு அழைப்பு விடுக்கிருர்.

"எதிர்கால ஞானிகளை — வருங்கால வள்ளலார்களை — பிற்கால காந்திகளை — விளுேபாக்களை—சி. வி. இராமன்களை — கியூரி அம்மையார்களை உருவாக்கும் வாய்ப்பு ஆசிரியர்களுக்கே உண்டு. அறிவு, ஆண்மை, குறிக்கோள், தெளிவு, அன்பு, அருள், சமத்துவம் உடைய மாணவர்களை உருவாக்க வேண்டும். நல்லாசிரியர் இல்லையேல் நாடும் காடும் ஒன்றே."[24] "ஆசிரியர்களுக்குக் குறிப்பிட்ட பாடப் புலமை மட்டும் போதாது. மாணவர்களோடு கலந்து பழகும் நுட்பம், உலகியல் அறிவு, நடுவு நிலைமை ஆகியவற்றுடன் ஞானியாய்—தூண்டு கோலாய் — வழிகாட்டியாய் இயங்க வேண்டும். வகுப்புப் பாடம் முடிந்ததும் கையைக் கழுவி விடாமல் தோழர்களாய் இருந்து துணை புரிய வேண்டும்,"[24] என்கிருர்.

"இலட்சியமில்லாத வாழ்க்கை அங்கும் இங்கும் பறந்து விழும் காற்ருடி வாழ்க்கை. இலட்சியமற்ற—வெறும் அறிவை நிரப்பும் கல்வியும் அப்படியே! பல்லுயிர் ஓம்ப — பணி செய்ய — தொண்டில் ஈடுபட நல்ல இலட்சியக் கல்வியே தேவை. இத்தகு கல்வியே குறிப்பிட்ட இடம் நோக்கிப் பறக்கும் விமானம் போன்றது."[25] ஆசிரியர்கள் இந்த இலட்சியக் கல்வி வேருன்றப் பாடுபடவேண்டும். "விண்வெளிப் பயணிகள் உடல் நிலையையும் மன நிலையையும் பக்குவப் படுத்தி வைத்துக்கொண்டு வானத்தில் கிளம்புவதுபோல விமான ஓட்டிகளான ஆசிரியர்களின் உடலும் உள்ளமும் நன்னிலையில் இருத்தல் வேண்டும். "ஒளி படைத்த கண்ணினுய் வா வா வா" என்று பாரதியார் அழைத்தது ஆசிரியர்களைப் பார்த்தோ என்று எண்ணும்படி பொலிவோடு விளங்குதல் வேண்டும். பழத்தைப் பறிக்கவரும் கிளிகள் போல மாணவர்கள் ஆசிரியர்களை நாடவேண்டும். இதுவே சரியான கல்விச் சூழ்நிலை. இதை உருவாக்குவதும் காப்பதும் ஆசிரியரின் முதற் பணி."[26]

"ஆசிரியர் ஒப்புவிக்கும் பாடக்குறிப்பு, அச்சிட்ட விஞ-விடைக் குறிப்பு, கல்வி என்ற மரத்திற்கு வேர்ப்புழு. மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஊட்டிக் கொண்டிருந்தால் தன் முயற்சி குறையும்; அறிவு மழுங்கும்; சிந்தனை செயலற்றுப் போகும். மாணவர்களைக் குறிப்பெடுக்கச் செய்து கற்கத் தூண்ட வேண்டும். காட்டுவதற்கே ஆசிரியர்கள்; புகுத்த அல்ல."[27]

"அக்காலத்தில் பெற்ருேர் ஆசிரியருக்கு உரிமையைத் தந்தனர். ஆகவே மாணவர் ஆசிரியரை நோக்கினர். பிறரிடம் திரும்பவில்லை. அடங்கி நடந்தனர். ஒழுங்கும் கட்டுப்பாடும் இயல்பாக அமைந்தன. ஆனுல் இன்ருே பெரியவர்களும், மாணவர்களும் ஆசிரியரை மதிப்ப

தில்லை. பின் ஒழுக்கமும், கட்டுப்பாடும், அடக்கமும் எப்படி அமையும்"[28] என்ற கலை — பாவத்தைத் தங்கள் பக்கம் வைத்துக் கொண்டு பழியை ஆசிரிய சமுதாயத்தின் மீது போடுகின்ற பெரியோர்களைச் சிந்திக்க வைக்கும் தன்மைத்து.

ஆசிரியரைப் பொறுத்தே கல்வியும் மாணவரின் எதிர்காலமும் விளங்கும் என்பதையுணர்ந்த துணைவேந்தர் பெருந்தகை "பயிரைப் போற்றி வளர்ப்பது விளைச்சலைப் பெற - அதுபோலக் கல்வி விளைச்சலை நாம் விரும்புமளவுக்கு ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்க - அமைதியாக வாழ்ந்து பணிபுரியும் உரிமையைக் கொடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்,"[29] என்கிறார்.

ஆசிரிய சமுதாயம் துணைவேந்தர் பெருந்தகையின் மதிப்புரைக்கு உரியதாக விளங்குகிறது. "சேற்றிலே முளைத்து நிற்பது செந்தாமரை. சேற்றிலும் உயர்ந்து நிற்பது செந்தாமரை. சேறுபடியாதது செந்தாமரை. சேற்றையும் மறக்க வைப்பது செந்தாமரை. செந்தாமரையின் வண்ணமும் வடிவமும் அப்படி. வறுமைச் சேற்றிலே முளைத்தது ஆசிரியர் இனம் — வறுமையிலும் உயர்ந்து நிற்பது ஆசிரியர் இனம். வறுமைத் தீமை பற்றாதது ஆசிரியரினம். வறுமைச் சிறுமையையும் மறக்க வைப்பது ஆசிரியர் பண்பும் தொண்டும்."[30] இத்தகு சிறப்புக்குரிய ஆசிரிய சமுதாயத்திற்கு விடப்பட்டுள்ள அறை கூவலைச் சுட்டி அதனையேற்க அனைவரையும் அழைக்கிறார். அழைப்பு இதோ: "நாம் படிக்க வரி கொடுத்த அண்ணன், தம்பி, தந்தையர், தற் குறிகள். அவர்களை அறிவாளிகளாக்குவோம் என்ற அறைகூவலை ஏற்று வெற்றி காண ஆசிரியர்கள் கவனத்தோடு முயல வேண்டும்"[31]

"The friend, philosopher and guide"

என்பார்களே அப்படி ஆசிரிய சமுதாயத்தின் உற்ற துணைவராக — உயரிய ஞானியாக — உரிய வழிகாட்டியாக விளங்குகின்ற துணைவேந்தர் பெருந்தகையின் சிந்தனைகள் செழுமையானவை — செம்மையானவை.

மேனாட்டுப் பயணமும் எண்ணங்களும்:

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து மேனாடுகளுக்குச் செல்வோரில் பெரும்பாலோர் ஆண்டுள்ள ஆடம்பரச் சூழல்களைப் பார்த்து அயர்ந்து போகின்றனர். "Man was not born for himself alone, but for his country" என்னும் பிளேட்டோவின் மனித இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழும் நம் துணைவேந்தர் பெருந்தகையோ நம்நாடு பின் பற்றத் தகுந்த மேனாட்டுக் கூறுகளையே நுணுகி நோக்கித் தெரிவிக்கிறார்.

உருசியாவில் உள்ள உஸ்பெகிஸ்தானில் பாலர்முதல் பாட்டிகள் வரை அறிவு பெறும் ஆர்வத்தோடு கற்பதைக் காட்டி இத்தமிழ்

மண்ணில் அந்நிலை வராதா என்றேங்குகிறார். குடும்பத்தில் இருக்க முடியாத குழந்தைகளுக்கு "உறையுள் பள்ளியும் ஆண்டுள்ளது. கற்றுக் கொடுக்கும் ஒவ்வொரு மாணவனுடைய எழுத்துப் பணிகளையும் கவனித்து, வரிவரியாகத் திருத்துவதற்கு ஆசிரியர்கள் எண்ணிக்கை இருபது மாணவருக்கு ஓராசிரியர் என்னும் விகிதத்தில் அமைந்துள்ளது"[32] என்று அங்குள்ள நிலையை விளக்கி அதற்கான காரணத்தையும் உரைக்கிறார்: "மாணவர் வீதத்தை அதிகப்படுத்தி ஆசிரியரை மிச்சப்படுத்துவது தவறான பொருளாதாரம் என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தனர்."[33] துணைவேந்தர் பெருந்தகை சுட்டிக் காட்டுகின்ற இத் தவறான பொருளாதாரக் கொள்கையின் ஆதிக்கத்திலிருந்து தமிழகம் விடுதலை பெறுமேயானால் தமிழ்க் குழந்தைகள் உலகின் எந்த நாட்டுக் குழந்தைகளினும் தாழ்ந்தன அல்ல என்பது தெளிவாகிவிடும்.

டாஷ்கண்ட் நகரில் உள்ள இசை உறையுள் பள்ளியைக் குறிப்பிட்டு "இசைக்கென்று மற்றப் பாடங்களைப் போல் போதிய நேரம் ஒதுக்க முடிந்தால் தரமான இசைவாணர்களை உருவாக்கமுடியும்"[34] என்று கூறுகிறார்.

"ஆசிரியர்களுக்கென்று நல்ல பயிற்சி உருசியாவில் தரப்படுகிறது. ஏற்கெனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தகுதியை அதிகப்படுத்துவதற்காக அங்கு "மத்தியக் கழகம்" என்று ஒன்றுள்ளது. பாலர் பள்ளி ஆசிரியர்களும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் தனித் தனித் தேர்வெழுதித் தேறுகின்றனர். அதற்குரிய சான்றிதழும் பெறுகின்றனர். அன்றியும் பயிற்சி பெறும் ஆசிரியர் ஒவ்வொருவரும் இசைப் பயிற்சியும் பெறுகின்றனர்"[35] என்ற செய்திகளையெல்லாம் அறிகின்ற பொழுது நம்மனம் ஏங்கித் தவிக்கிறது. இங்கும் அத்தகு முறையான பயிற்சிகள் வழங்க வாய்ப்புக்களை உருவாக்கி நல்ல சீரிய முறையில் இளம் குழந்தைகளுக்குக் கல்வி வழங்கினால் அறிவுப் பயிர் செழித்து வளரும் என்பதில் ஐயமில்லை.

மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் பிரதிநிதியாய்க் கலந்துகொள்ள பாரிசுக்குப் பயணமாகிறார் துணைவேந்தர் பெருந்தகை. விமானப் பயணத்தில் ஓரினிய நிகழ்ச்சி! அருகிலமர்ந்திருந்த ஆஸ்திரேலியக் குடும்பத்தைச் சார்ந்த நான்கு வயது பையன் நிலப்படத்தில் அப்போது விமானம் பறந்து கொண்டிருந்த இஸ்தான்புல் நகரினைக் காட்டும்படி கேட்க, அவன் தந்தை படத்தை விரித்து முதலில் சிட்னியைக் காட்டிப் பின் வந்தவழியெல்லாம் காட்டி விளக்க, அவன் எளிதாகக் கற்றான்.

இதனைக் கண்ணுற்ற துணைவேந்தர் பெருந்தகைக்கு "பத்து வயதான பின்னே சிட்னியையும் சிங்கப்பூரையும் நிலநூல் பாடத்தில் படிக்கப்போகும் நம்மூர்ப் பையன் பின்தங்காமல் என்ன செய்வான்"[36] என்றெண்ணி வேதனை கொள்கிறார்.

பிராங்ஃபோர்டு விமான நிலையத்தில் பல நாட்டு மக்களையும் சந்திக்கும் வாய்ப்பு துணை வேந்தருக்கு ஏற்பட்டது. "சுறுசுறுப்பு மேனாட்டு மக்களின் மூச்சாகவே மாறிவிட்டது; ஆயிரம் 'ஆயிரம் ஒளிகொள்ள விழியில் இறக்கை கட்டிப் பறக்கின்றார்' என்ற பாவேந்தனின் பாடல் நினைவுக்கு ...."[37] எனக் குறிக்கிறார்.

மேனாடுகளில் கல்வி நிலை பற்றியும் சின்னஞ்சிறு பையனின் அறிவேற்கும் மனப் பக்குவத்தையும், மக்களின் சுறுசுறுப்பையும் செருமானியரின் கடும் உழைப்பையும் ஜெனிவாவில் உள்ள உலகப் பல்கலைக் கழகச் சேவை நிறுவனத்தின் சிறப்பையும் நாம் பின்பற்றத் தக்க மேனாட்டு நற்கூறுகளையும் பயண அனுபவங்களையும் பல நூல்களில் விளக்கியுள்ளார் துணைவேந்தர் பெருந்தகை.

பாரிஸ் உலகத் தமிழ் மாநாட்டில் "கல்வி பற்றி பாரதி" என்னும் தலைப்பில் அவர் படித்த ஆய்வுக் கட்டுரை அவருடைய சிந்தனைகளின் மணிமகுடமாக விளங்குகிறது. ஆய்வுக் கட்டுரைகள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கொரு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது எனில் மிகையாகாது. கட்டுக் கோப்பும் கருத்துச் செறிவும் கொண்ட அக்கட்டுரை பாரதியின் கல்விக் கொள்கையினை எதிரொலிக்கும் ஆடியாக அமைந்துள்ளது.

பாரிசு மாணவர் தமிழ் மன்றத் தொடக்கத்தினையும் விமானத்தில் உணவுப் பட்டியலில் ஆங்கில மலேசிய மொழிகளுடன் தமிழும் இடம் பெற்றிருந்த சிறப்பினையும் குறிப்பிட்டு நம் தமிழர்களின் உள்ளங்களில் பெருமித உணர்வை ஏற்படுத்துகிறார், துணைவேந்தர் பெருந்தகை.

இங்ஙனம் அவருடைய மேனாட்டுப் பயணங்கள் அரிய செய்திகளையும் — அறிய — பின்பற்ற வேண்டிய செய்திகளையும் வழங்குகின்றன.

வரலாற்று அறிவியல் செய்திகள் :

வள்ளுவன் வரிசையில் வந்த குழந்தை இலக்கியங்களிலும் — வானொலிச் சொற்பொழிவுகளிலும் — பிற விழாச் சொற்பொழிவுகளிலும்—கட்டுரைகளிலும் ஆங்காங்கே அறிவியலறிஞர்கள், அரசியல் அறிஞர்கள், பெருமக்கள் ஆகியோரின் வரலாற்றை விளக்கிச் சொல்வது துணைவேந்தர் பெருந்தகையிடம் தென்படும் சிறப்புக் கூறுகளுள் ஒன்றாகும். "நஞ்சுண்டவர்" என்னும் நூலில் சாக்ரட்டீசையும், "சிலுவையில் மாண்டவர்" என்னும் நூலில் இயேசு பெருமானையும், "குண்டுக்கு இரையானவர்" என்னும் நூலில் காந்தியடிகளையும். "தங்கத் தாத்தா" என்னும் நூலில் சுவிட்சரையும், "தோற்றும் வென்றவர்" என்னும் நூலில் கணிதமேதை இராமானுசத்தையும், "வானொலி வழங்கியவர்" என்னும் நூலில் மார்க்கோனியையும், "விளக்குப் பாவை" என்னும் நூலில் நைட்டிங்கேலையும், "செஞ்சிலுவை தந்தவர்"

என்னும் நூலில் மேரிகியூரியையும் "மனிதருள் மாணிக்கம்"[38] என்னும் கட்டுரையில் நேருவையும், "சிறியன சிந்தியோம்" என்னும் கட்டுரையில் சர். சி. வி. இராமனையும், "திரு. வி. க. வின் தமிழ் நடை"[39] என்னும் கட்டுரையில் திரு. வி. க. வினையும் "நான் கண்ட சோவியத் ஒன்றியம்" என்னும் நூலில் மாஸ்கோ பல்கலைக் கழகத்தை நிறுவிய மீனவர் மைக்கேல் லோமன்சன்னையும், "உழைப்பால் உயர்ந்த உத்தமர் பஞ்ச்" என்பதன் வாயிலாக நோபல் பரிசு பெற்ற முதல் நீக்ரோ நாவிதரான பஞ்ச்சையும் குழந்தைகளும் பெரியோர்களும் தெரிந்து கொள்கிற வகையில் தெளிவாகவும் அழகாகவும் விளக்கியுள்ளார்.

இவ்வாறு பயன்படுகின்ற வரலாற்று — அறிவியல் செய்திகள் தமிழ்ச் சமுதாயத்திற்குத் துணைவேந்தர் பெருந்தகையளித்த அருங் கொடைகளாகும்.

அறவுரைகள் :

"From wise men the world inherits a literature of wisdom"[40] என்று அமெரிக்கப் பேராசிரியரும் திறனாய்வாளருமான மைல்ஸ் அவர்கள் எமர்சனைப் பற்றிக் குறிப்பிட்டது நம் துணைவேந்தர் பெருந் தகைக்குப் பெரிதும் பொருந்துவதாகும். அவருடைய சிந்தனைகள் நல்ல அறவுரைகளாக அமைந்து சமுதாயத்தை அறிவுப் பாதையில் — அறப் பாதையில் செலுத்துவனவாகும்.

எடுத்துக் காட்டுகள் சில :—

"கட்டை வண்டியைக் கூச்சலின்றியும் ஒழுங்காகவும் ஓட்ட உதவும் கீல்போல்—ஈருருளிக்கு இடும் எண்ணெய் போல், இயந்திரங்களுக்கு ஊற்றும் வழவழப்பான தனி எண்ணெய் போல் இன்சொல், மக்கள் வாழ்க்கை வழவழப்பிற்குத் தேவை"[41]

"அம்மா" என்ற சொல் எவ்வளவு பழமையானது? பிறந்த ஒவ்வொரு குழந்தையும் கற்றுக்கொள்ளும் புதிய சொல் அதுவே யாகும். அதேபோல் ஒவ்வொரு இந்தியரும் முயற்சியின் விளைவுகளை நம்பி வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்"[42]

"குட்டை, குளம் சிறு நிலத்தில் முடங்கி விடும். தேக்கமே நெடுந் தூரம் பரவும். எனவே மனிதன் குட்டை போன்று இருக்காது 'அறிவு சீனத்தில் இருந்தாலும், அதைத் தேடிக்கொண்டு வா" என்று நபிகள் நாயகம் கட்டளையிட்டதுபோன்று ஒவ்வொரு மனிதனும் அறிவைப் பெருக்கி அறிவைத் தேக்கமாக மாற்றவேண்டும்."[43]

"அறிவுத் தேரின் ஒரு பக்கத்துச் சக்கரம் கல்விக்கூடமாகவும், மறுபக்கத்துச் சக்கரம் நூல் நிலையமாகவும் கொண்டு மாந்தரெல்லாம் அறிவுத் தேர் ஏறி, ஒழுக்கப் பொறியுந்த அன்பெனும் நெடுஞ்சாலை சென்று வாழ்வோமாக."[44]

"ஈ கண்டதைக் கொள்ளும் தன்மை கொண்டது. எறும்பு சுறு சுறுப்பும் முன் யோசனையும் தன்னிறைவும் பொறுமையும் ஒழுங்கும் கூட்டுணர்ச்சியும் கொண்டது. தேனீ, ஈயைப்போன்று அழுக்கை அண்டாது; எறும்பைப் போன்று கம்பை — வரகை நாடாது. உயரிய பொருளான தேனை நேர்வழிச் சென்று சேர்க்கின்றது. அது எவ்வளவு தூரம் சென்றும் தேனை எடுப்பது போல நாமும் அறிவுத் தேன் எங்கிருந்தாலும் தேடிப் பெற வேண்டும். இந்த அறிவோ தேனைப் போன்ற மருந்தாகும்."[45]

இவ்வாறு துணைவேந்தர் பெருந்தகையவர்கள் இச் சமுதாயம் பயனுற வாழ்வதற்குத் தக்க நல்ல அறவுரைகளை முடிந்த விடங்களில் எல்லாம் அழகுற எடுத்தோதும் பெருஞ் சிறப்புக்குரியவர்களாக ஒளிர்கிறார்கள்.

முடிவுரை :

ஈடு இணையில்லா நம் துணைவேந்தர் பெருந்தகையின் இலக்கியப் பணிகளின் வெற்றிக்குப் பின்புலமாக அமைந்திருப்பது அவருடைய எளிய தமிழ் நடையே யாகும். "பொங்கிப் புடைபுடைத்துக் கங்குகரை மீறிவரும் கடுவிசைக் காட்டாற்று வெள்ளமல்ல அவருடைய நடை; அவருடைய நடை இதமான தென்றல், இழுமென் மொழி; தெள்ளிய நீரோடை" என்று கூறும் உலகப் புதுமைக் கவிகளின் தலைமைக் கவியாகக் கருதப்படுகின்ற வால்ட் விட்மனின் கூற்று நம் துணைவேந்தர் பெருந்தகையின் இலக்கிய வெற்றிக்குரிய காரணத்தைத் தெளிவாக்கு வதாகவே உள்ளது. அவருடைய வெற்றிக்கு இன்னொரு பெரிய இரகசியம் நல்ல சிந்தனை வளம்.

உரத்த சிந்தனை வளமும் எளிய நடை நலமும் கொண்டு துணை வேந்தரின் படைப்புக்கள் விளங்குகின்றன. நம் துணைவேந்தர் பெருந் தகையின் சிந்தனைகள் தமிழினத்தின் ஒற்றுமையாலும் உழைப்பாலும் செயல் வடிவம் பெறுமேயானால் தமிழகம் உலக அரங்கில் அறிவுத் துறையில் ஒரு குறிஞ்சியாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனத் துணியலாம்.

அடிக்குறிப்புகள்

1. "Poetry, the Queen of Arts" — Thomas Sprat.
2. "Poets are born and not made."
3. "கற்பனை இசை," — தமிழ் உறவு — 15/11, 12/1972.
4. "யாரே மதிப்பார்" — உரைக் கவிதை — 15—4—73.
5. "யாரே மதிப்பார்?" — உரைக் கவிதை — 15—4—73

6. "Verse has more power to soothe than prose" - Rev. John Keble.
7. "........proper words in proper places" — J. Swift
8. *தமிழ் வெல்லும் எப்போது?* 15—11—71
9. *கற்புடைய நூல்கள் — தமிழ் உறவு,* 15—3—72
10. *மனிதருள் மாணிக்கம்,* 15—12—70
11. *போர் முழக்கம்,* 1—6—70
12. *புதியதோர் அறிவுலகைச் சமைப்போம்,* 1—6—70
13. *சர்வோதய மகாநாட்டுக் கருத்தரங்கில் ஆற்றிய சொற்பொழிவு,* 15—9—70
14. *புதியதோர் அறிவுலகைச் சமைப்போம்,* 1—6—70
15. *எழுத்தறிவு இயக்கம் — சத்ய கங்கை* 1—4—67
16. *எழுத்தறிவு இயக்கம் — சத்ய கங்கை* 1—4—67
17. *அண்ணு அளித்த அருங்கனி — சத்ய கங்கை* 1—3—63
18. *கல்விச் சிந்தனைகள் — கலைக்கதிர், ஆகஸ்டு* 1971
19. *கல்வி வெள்ளம் — தமிழரசு — செய்தி விளம்பரத்துறை வெள்ளி விழா மலர்* 1971
20. *துலா முழுக்கு — ஆகஸ்டு* 1959
21. *காணிக்கை — தமிழ் உறவு ஆண்டு மலர்* 1968
22. *கல்விச் சிந்தனைகள் — கலைக்கதிர், ஆகஸ்டு* 1971
23. *புதியதோர் உலகம் செய்வோம் (வானொலிப் பேச்சு) சத்ய கங்கை செப்.* 15, 17
24. *கல்விச் சிந்தனைகள் — கலைக்கதிர், ஆகஸ்டு* 1971
25. *காற்றுடியா? விமானமா? எண்ண அலைகள்*
26. *காற்றுடியா? விமானமா — எண்ண அலைகள்.*
27. *காட்டவா? புகுத்தவா? எண்ண அலைகள்.*
28. *அடக்கம் அமைவது எப்படி — எண்ண அலைகள்*
29. *அறைகூவலை ஏற்போம் — காஞ்சி* 21—6—70
30. *சிப்பி முத்து—எண்ண அலைகள்*
31. *அறைகூவலை ஏற்போம் — காஞ்சி* 21—6—70
32. *நான் கண்ட சோவியத் ஒன்றியம்.*
33. ,, ,, ,, ,,
34. ,, ,, ,, ,,
35. ,, ,, ,, ,,

36. உலகத் தமிழ்
37. ,, ,,
38. மனிதருள் மாணிக்கம் 15—12—70
39. சத்ய கங்கை
40. Josephine Miles on Ralph Waldo Emerson p. 5
41. இனியவை கூறல். சத்ய கங்கை 1—9, 71
42. புதிய நோன்பு, தமிழ் உறவு 15—1—72
43. அறிவுக் குட்டையா அறிவுத் தேக்கமா? கலைக்கதிர், மே 59
44. வாழ்வளிக்கும் கல்வி.
45. ஈ! எறும்பு! தேனீ! எது நீ? கலைக்கதிர் 59. ஆண்டுமலர் பக்கம் 115

5

டாக்டர் கமில்சுவலபிலின் 'தென்னிந்தியத் தமிழ் இலக்கியத்தின் மீது முருகனின் முறுவல்' (1973)

ஒரு நூல் மதிப்பீட்டாய்வு

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
டிப். மானிடவியல், டிப். அரசியல் — ஆட்சியியல்,
தமிழ்த்துறைத் தலைவர் — பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம், — சென்னை.

[1. இந்திய விடுதலையின் பயன்களுள் ஒன்று அயல் நாட்டார் இந்திய மொழிகளில் – இலக்கியங்களில் காட்டி வரும் கூடுதல் அக்கறையும் ஆராய்ச்சியும் ஆகும். மூன்று உலகத் தமிழ் மாநாடுகளும் அவற்றில் கலந்துகொண்ட அயலக அறிஞர்கள் பட்டியலும் கருதத்தக்கது. அவ்வகையில் அயல் நாட்டு அறிஞர் ஒருவரால் முதன் முதல் எழுதப்பட்டுள்ள தமிழிலக்கிய வரலாற்று வழித் திறனாய்வு டாக்டர் கமில் சுவலபிலின் 'தென்னிந்தியத் தமிழ் இலக்கியத்தின் மீது முருகனின் முறுவல்' (1973) ஆகும்.

2. கடந்த கால் நூற்றுண்டில் தமிழில் வளம்பெற்றுவரும் கலைகளுள் ஒன்று நூல் மதிப்பீட்டுக்கலை.[1] அதையொட்டி டாக்டர் கமில் சுவலபிலின் 'The Smile of Murugan on Tamil Literature of South India' *என்ற புத்தம் புதிய நூல் ஈண்டு மதிப்பீடு செய்யப்படுகிறது.*

3. ஆங்கிலத்தில் எழுதப்படும் நூல்களையும் தமிழில் ஆராய வேண்டுவது இன்றியமையாதது என்ற எண்ணத்தாலும் எழுந்தது இந்த நூல் மதிப்பீடு[2].

4. பெரும்பாலும் நாள் / வார / திங்களிருமுறை / திங்கள் இதழ்களிலேயே மதிப்புரைகள் வருவதால் இந்த மதிப்புரையிலும்

ஓரளவு இதழியல் அல்லது தாளிகை (Journalistic) செல்வாக்கு இருக்கும்.]

தமிழ் அல்லாத பிற மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்ட ஐரோப்பியத் தமிழன்பர்களுள் - அறிஞர்களுள் - தலையாயவர் டாக்டர் கமில் சுவலபில் என்பது எவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மையாகும். அதற்கு ஓர் உரைகல்லாக விளங்குவதே "தென்னிந்தியத் தமிழ் இலக்கியத்தின் மீது முருகனின் முறுவல்" என்னும் தலைப்பில் 1971 இல் எழுதப்பட்டு 1973 ஆம் ஆண்டு (ஈராண்டுத் தாமதம் ஏனோ?) நெதர்லண்டு (Netherland) நாட்டு லெய்டனில் (Leiden) இருந்து ஈ. ஜே. பிரில் (E. J. Brill) நிறுவன வெளியீடாகக் கண்ணையும் கருத்தையும் கவரும் 378 பக்க இப் 'பெரிய' [இது ஆசிரியர் கருத்து (!)] நூல் வெளிவந்துள்ளது. இதன் விலை ஏறத்தாழ ரூ. 300. ஆமாம் விலையே கலையின் விலையைக் காட்டும் அல்லவா?

இந் நூல் ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்று வழித் திறனாய்வு; நூலாசிரியரே நுவல்வது போல் தாய்மொழியாகத் தமிழைப் பெறாதவர்களுக்காக (பார்க்க: முன்னுரை) எழுதப்பட்டது. அவ்வளவுதான்! வேறு 'முருகனின் முறுவல்' பற்றிய ஆராய்ச்சி என்று எவரும் ஏமாறவேண்டா(ம்). ஹிப்பி வேடம்! அவ்வளவுதான்! இப்படி 'நம்பிக்கை மோசடி' செய்யும் தலைப்புகளை நம் நாட்டிலேயே— கடந்த கால் நூற்றாண்டிலேயே சில புலவர்களே தம் கட்டுரை நூல்களுக்கே தந்துள்ளார்கள்.

டாக்டர் கமிலின் புத்தகம் நல்ல தாள்; அழகான அச்சு. இது இந்தத் தலைமுறையில் ஏன் - இந்த நூற்றாண்டில் - நம் நாட்டில் எங்கே வரப்போகிறது? உழைக்காமல் கொள்ளை அடிக்கும்; - உழைப்பவனை நொள்ளை சொல்லும்; — இதுதானே பெரிதும் சன (பண) நாயகச் சமுதாயத்தின் இரு பெருஞ் சக்கரங்கள்!

அயல்நாட்டு — சிறப்பாக — மேற்கு நாட்டு ஆராய்ச்சியில் இரு அடிப்படைப் பண்புகள் பெரிதும் உண்டு. ஒன்று திட்ப நுட்பம் காணும்-காட்டும் - கடும் உழைப்பு; மற்றொன்று புதிய பார்வையில் புதிய கருத்துகளைத் துணிந்து சொல்லும் போக்கு! முன்னதில் குறை இல்லை; பின்னதிலும் குறை இராது — நிறை இருந்தால்! ஆனால் பல நேரங்களில் குறையும் மறையும் (ஒளிவும்) இருக்கும். அதனால்தான் 'புதுமை' என்பதும் 'துணிவு' என்பதும் புதுமைதானா—துணிவுதானா என்ற ஐயமும் அச்சமும் எழும்.

டாக்டர் சுவலபிலின் புத்தகத்தில் இருபது இயல்கள் உள்ளன; அவை வருமாறு: (1) பாயிரம் (Introductory); (2) தமிழ் இலக்கியத்தின் தனிக் கூறுகள் (Distinctive Features of Tamil Literature); (3) காலக் கணிப்புச் சிக்கல்கள்; சார்பு — முடிவு காலமுறை (Problems of Dating, Relative and Absolute Chronology); (4) சங்கம்

பற்றிய கதை-நூல்கள் (The Cankam Legend. The Texts); (5) சங்கப் பாடல்கலைப் பகுப்பாய்வு செய்தல் (Analysing Classical Poetry); (6) அகத்திணைக் கோட்பாடு (The Theory of Interior Landscape); (7) நுவல் பொருள்கள், உட்கோள், வாய்பாடுகள் (Themes, Motives, Formulae); (8) பின்னுள் சங்கப் பாடல் (Late Classical Poetry); (9) தொல்காப்பியம் (Tolkappiyam); (10) உயர்ஞான நூல் (The Book of Lofty Wisdom); (11) சிலப்பதிகாரம் (The lay of the Anklet .....); (12) சைவ பக்தி இரு அணுகல்கள் (Saiva Bhakti-Two Approaches); (13) கவிச்சக்கரவர்த்தி (The Imperial Poet); (14) சித்தர்கள் — ஒரு புதிர் (The Cittar—An Engmia) (15) அருணகிரி—பெரிய மந்திரவாதி (Arunakiri, the Great Magician); (16) உரையாசிரியர்கள் உரைநடை (The Prose of the Commentators); (17) புதுக்கால் உரைநடையின் தோற்றம்; வரலாற்று—கோட்பாட்டுச் சிக்கல்கள் (Origins of Modern Tamil Prose. The Historical and the Theoretical Problem); (18) தமிழ் மறுமலர்ச்சி (Tamil Renaissance); (19) இன்றைய உரைநடை (The Prose of Today); (20) புதுக் கவிதை (The 'New Poetry').

'முடிவு' தனியாக வி(மு)ழிக்கிறது. தலைப்புகள் தேர்ந்தெடுக்கப் பட்ட (!?) இதன் குறையை ஆசிரியரே ஒப்புக்கொள்கிருர். (பார்க்க: முன்னுரை) விளக்கக் குறிப்புகளுடன் நூல் - கட்டுரைப் பட்டியலும் இருக்கிறது.

படிக்க நேரமில்லாதவர்கள் இந்தப் பொருளடக்கத்தையும் முடிவையும் நூல், கட்டுரைப் பட்டியலையும் பார்த்தாலே போதும். பெரும்பாலும் எந்த நூலுக்கும் இந்தப்படிதான்.

ஆனல் தமிழிலக்கிய வரலாற்றை எப்படிப் படித்து - எப்படிப் பிடித்து - எப்படி மடித்து - எப்படிக் கடித்து - நமக்கு ஆசிரியர் தருகிருர் என்பதைக் காணும் காதலும் பொறுமையும் உடையவர்கள் நூல் முழுவதையும் பலமுறை சொல் சொல்லாக (என்னைப்போல்! படிக்க வேண்டியதுதான் - படிப்பது நல்லதுதான். வேறு எதற்கு இல்லையானலும் (செயலில்) சூராதி சூரர்(கள்) எப்படி எழுதுகிருர்(கள்) என்பதை (வாயில்) வீராதி வீரர்களாகிய நாம் தெரிந்துகொள்ளலாம் அல்லவா? ஆங்கில அழகை (செக் நாட்டு சுவலபிலும் தன் ஆங்கிலத்தைப் பலர் செப்பனிட்டதாகச் சொல்கிருர் - பார்க்க முன்னுரை). ஆராய்ச்சி முறையை - தமிழுக்கு ஏற்றலாம் - போற்றலாம். 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கி,[3]க் கண்டார் கைகொட்டி நகையாதிருக்க வாழலாம் அல்லவா?

டாக்டர் சுவலபிலின் புத்தகத்தில் இருக்கும் ஏற்கத்தக்கதும் தகாததுமான செய்திகளில் 99% ஏற்கெனவே தமிழக அறிஞர்களாகிய பேராசிரியர்கள் ச. வையாபுரிப் பிள்ளை, டாக்டர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் ஆகிய இருவராலும் பெரிதும் விண்டு விளக்கப்பட்டவையே.

ஆமாம், இவர்களுடைய கருத்துகட்கு மாறாக டாக்டர் சுவலபிலே (ஓரளவிற்குச்) சுட்டிக் காட்டும் மயிலை சீனி - வேங்கடசாமி போன்றாரின் (பாவம்! மயிலை - சீனி - தம்முடைய சிறந்த நூல் ஒன்றை உயர்ந்த உள்ளத்தோடு தமக்கு உரிமையாக்கி இருந்தும்!) மறுப்புக் கருத்துக்களை மதித்ததாகத் தெரியவில்லை! மயிலை சீனிக்கே இந்தக் கதி என்றால் டாக்டர் இலக்குவனார் - தேவ நேயப் பாவாணர் எல்லாம் எம்மாத்திரம்? அவர்கள் பெயர் சொன்னாலே பாவம் ஆயிற்றே! என்ன இருந்தாலும் நூலாசிரியர் இரத்தம் 'ஆரிய இரத்தம்' அல்லவா? அது திராவிடத்தின் பழமையை எவ்வாறு ஏற்கும்?

டாக்டர் சுவலபில் நூலில் புதிதாகச் சொல்லப்படும் பெரிய உண்மைகள் - விளக்கங்கள் - ஏதும் உண்டா? எனக்குத் தெரிந்தவரையில் எதுவும் இல்லை. (நூலாசிரியரே தம் நூலின் குறைநிலையை முன்னுரையின் இறுதிச் சொற்றொடர் நிலையில் உறுதியாக ஒப்புக்கொள்கிறார்). புதிய செய்தியாகவேனும் ஏதும் உண்டா? எனக்கு இதுவரை தெரிந்திராத ஒன்றே ஒன்று உண்டு. அது சித்தர் பாடல் ஏடுகள் பலவற்றைத் தமிழ் நாட்டுச் சைவ மடத்தைச் சார்ந்தார் அழித்தார் என்பதே. இதுவும் அறிஞர் டெயிலர் எழுதியுள்ளதாக ஆசிரியர் மேற்கோள் காட்டுகிறார்! அவ்வளவே!

இனி, டாக்டர் சுவலபில் நூலில் புதிய முறைகள் (Methodology) ஏதும் உண்டா? பெரிதாக ஒன்றும் இல்லை. சிறியன இரண்டு. 1. மொழியியல் முறைகளின் செல்வாக்கு - பார்க்க: இரண்டாம் இயலின் கட்டுரைத் தலைப்பு; விளக்கப்படங்கள். 2. ஐரோப்பிய இலக்கியப் பொதுச் சந்தையை மகிழ்விக்க ஆங்கிலமல்லாத பிற ஐரோப்பிய மொழிகளிலும் சில இணைச் சொற்கள் - நம் பெரு முதல்வரின் (பிரதமரின்) 'ரொம்ப சந்தோஷம்'; 'வணக்கம்' போல![6] தேவையற்றதாய் - வலிந்து புகுத்தப்படுவதாய் உள்ள இவற்றால் நம்மைப்போல் ஆங்கிலம் மட்டும் அறிந்தவர்க்குப் பொருள் விளங்காத் துன்பம்தான்! ஆனால் ஆசிரியர்தான் பெரிதும் நமக்காக எழுதவில்லையே!

டாக்டர் கமில் சுவலபில் தம் நூலில் இறுதியில் அமைத்துள்ள இயல் - 'முடிவு'. அதில் உள்ள 12 முடிவுகளின் சுருக்கம் வருமாறு:

(1) தொல்காப்பியம் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டதன்று; எத்தனையோ இடைச் செருகல்கள், சேர்க்கைகளோடு ஒரு குழுவால் வளர்க்கப் பட்டது; பொருளதிகாரம், எழுத்து - சொல் அதிகாரங்களினும் பிற்பட்டது.

(2) அ. சங்கப்பாடல்கள் மக்களாட்சி உணர்வுடையன என்ற கருத்து ஏற்புடையது அன்று. அவை மேற்குடி பழங்கால நிலவுடைமையாளர் உணர்வுடையதே. (இம்முடிவுக்கு

நேர்மாறான முடிவை நூலாசிரியரே பக்கம் 12 - 13 இல் முழங்கியுள்ளார்.[7]

ஆ. தமிழ் மொழியிலேயே சிறப்புடைய தன்னுணர்ச்சிப் பாடல் (Lyrics) வகையில் சங்கப்பாடல்கள் உலக இலக்கியக் கொடு முடிகட்கு நிகரானவை.

(3) அ. திருக்குறள் உட்பட எந்த நீதி நூலும் உண்மையிலேயே உயர் இலக்கியம் (Literature) இல்லை. (இது குறித்தும் டாக்டர் கமிலின் முரண்பட்ட கருத்தை அவருடைய நூலில் அடுத்தடுத்துள்ள பக்கங்களிலேயே (168 - 169) காணலாம்.

ஆ. பழந்தமிழ்க் கவிதைக்கும் 19-20 ஆம் நூற்றாண்டு இலக்கியங்கட்கும் கேடு விளைவித்தது நீதிப் போக்கே!

(4) தமிழ் இலக்கியத்திலேயே கம்பராமாயணத்தினும் சிலப்பதிகாரமே சிறந்த காப்பிய நூல்.

(5) பக்திப் பனுவல்கள் சமுதாயப் புரட்சியின் இலக்கிய வெளிப்பாடு என்னும் ஆய்வில் முழு உடன்பாடில்லை.

(6) சித்தர்களுள் சிலரை - சிறப்பாகத் திருமூலரையும் பட்டினத்தாரையும் பெரும் படைப்புக் கவிஞர்களாகக் கருதலாம்.

(7) வால்மீகி, காளிதாசன், இளங்கோ, கம்பன் — ஏன்? தாகூர், வல்லத் தோல் போல் கூட பாரதி ஓர் உலககவி இல்லை.

(8) அ. இக்காலத் தமிழ் உரை நடை பெரிதும் தேக்கமும் மலட்டுத்தன்மையும் உடையது.

ஆ. இக்கால உரைநடையாளருள் மிகச் சிறந்தவர்கள்; (1) மௌனி ('புதுமைப் பித்தன்' புகன்றது போல் தமிழ்ச் சிறுகதையின் திருமூலர்); (2) ந. பிச்சமூர்த்தி; (3) கு. அழகிரிசாமி; (4) ஆர். சண்முகசுந்தரம்; (5) தி. ஜானகிராமன்; (6) எஸ். இராமசாமி; (7) எல். எஸ். இராமாமிருதம்; (8) பத்மநாபன்.

(9) அ. இக்காலத் தமிழ்க் கவிதை உலகில் புதுக்கவிதை இயக்கமே மிகப் பெருஞ்சாதனை.

ஆ. இவ்வகையில் சிறப்பான பெயர்கள் (1) ந.பிச்சமூர்த்தி; (2) சு. மணி; (3) எஸ். இராமசாமி; (4) டி. சிவராமு; (5) தி. ஜானகிராமன்; (6) எஸ். இராமசாமி; (7) சண்முகம்; (8) எஸ். வைத்தீசுவரன்; (9) டி. எஸ்.

வேணு கோபாலன். இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இருவரும் உண்மையிலேயே மிகச் சிறந்தவர்கள்.

(டாக்டர் சுவலபிலின் இலக்கிய மதிப்பீட்டு அளவு கோல் அவருடைய முன்னுரைப்படியே இங்கே தலை கீழாகி விடுகிறது. காரணம் தமிழிலக்கியத்தில் மிகப் பெரிய புள்ளிகளையே - இயக்கங்களையே - போற்றுவ தாக அவர் சொல்கிறார். இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களை நம்முள் எத்தனை பேர் கேள்விப்பட்டுள் ளோம்? ஒருவேளை அவர்கள் 'அண்டர்கிரவுண்ட்' ஆட்களோ! இல்லை! இல்லை! இவர்கள் - செல்லாக் காசுகள் - மக்களுக்குத் தெரியாதவர்கள் - மரபியலாள ரால் வெறுக்கப் படுபவர் என்றும் ஆசிரியர் அறை கிறார்.)

(10) எழுத்து, இலக்கிய வட்டம் ஆகியவற்றில் திரு. சி.சு.செல்லப் பாவும், திரு. க. நா. சுப்பிரமணியமும் வளர்த்துவரும் திறனாய்வுப் போக்குகள் அடிப்படையில் சிறந்தவை-சரியானவை. சில நேரங்களில் அவை அதிகப்படியாக ஆர்வக் கொள்கை களையும் நம்பிக்கைகளையும் தாக்குவன (too icnoclastic). சொற்புரட்டும் வாதப் புரட்டும் உடையன (too sophisticated). ஒதுக்கித்தள்ளும் குறுகிய குழு மனப்பான்மை (too exclusive and clanish) கொண்டன. (பாவம்! டாக்டர் சுவலபில் எங்கும் - எவரோடும் நிலைத்து நிற்க மாட்டார் போலும்!)

(11) முடிவாகத் தமிழ் இலக்கியத்தின் கடந்த கால, நிகழ்காலச் சிறப்பே அதன் குறுவடிவத்தில்தான் (தன்னுணர்ச்சிப்பாடல் (Lyrical Poetry) சிறுகதை, கட்டுரை) உள்ளது. பல்வகைச் சிக்கலான காரணங்களால் நாவல், நாடகம், காப்பியங்களில் தமிழின் சிறப்பு இல்லை. (கட்டுரையும் 'குறுவடிவம்' தானோ?).

(12) எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறப்பும் சுவையும் வாய்ந்த பழைய - புதிய தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்து உல கெங்கும் பரப்ப வேண்டும். அவை உலக இலக்கிய உடைமை. அவை பற்றிய பொது அறிவால் மனித குலத்தின் பண்பாடு மேலும் வளமுறும்.

இப் பன்னிரண்டுள் 2—ஆ, 12 எண்ணுள்ள முடிவுகளே இம் மதிப் பீட்டாளனுக்கு உடன்பாடானவை.

நூலின் இருபது இயல்களிலும் ஆசிரியர் சொல்லியிருக்கும் செய்திகளில் எதுவும் புதுமை இல்லை! என்றாலும் அயல்நாட்டுத் தமிழ் அறிஞராகிய டாக்டர் கமில் சுவலபில் ஆங்காங்கே தமிழ் இலக்கியங்

கட்குச் சூட்டியுள்ள புகழ் மாலைகள் உதிரும் பூமாலைகள் இல்லை; உதிராச் சந்தன மாலைகள். அவை நன்றியுடைய தமிழ் மக்களால் என்றென்றும் போற்றத்தக்கவை.

இதனிலும் மேலாக ஈண்டுக் குறிப்பிடத்தக்கது, இத்தகைய புகழ் மாலைகளுடன் தமிழணங்கை ஓர் **ஐரோப்பிய ஆங்கிலத்** தேரில் ஏற்றி அனைத்துலக உலாவிட்டால்தான் பாருலகம் வியந்து மகிழ்ந்துபோற்றும்; மதிக்கும். இதைச் செய்துள்ள டாக்டர் கமில் சுவலபிலுக்கு ஒரு காலத்தில் சென்னைக் கடற்கரையில் சிலை எழுப்பப்பட்டாலும் தவறில்லை.

குணங்கள் இதுவாகக் குறைகள் யாவை? தலையாய குறை சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்ட கவிதை இலக்கியங்களைப் பற்றிய டாக்டர் சுவலபிலின் கருத்துகள் (அவருடைய சங்க இல்க்கிய ஆராய்ச்சியையே நோக்க) போதுமான அகலமும் ஆழமும் பெறவில்லை. ஆயினும் அவ் விலக்கியங்கள் பற்றியும் டாக்டர் கமில் ஆழ்ந்து ஆராய அவாவி முயன்றுள்ளார். அது வருங்காலத்தில் வெற்றி பெறுவதாக!

வைணவ இலக்கியங்கள் பற்றி ஆசிரியர் அதிகம் கற்கவில்லை போலும்! கற்றிருக்கலாமே! அல்லது சைவ - வைணவ பக்தி இலக்கியத்தின் அடிநிலை பொது என்பதை அறிந்தேனும் போற்றியிருக்கலாமே! ஆனால் அதுதான் - எதுவும்தான் - அவர் விருப்பமாயிற்றே. (பார்க்க : முன்னுரை).

குறைகளுள் குறிப்பிடத்தக்கது ஆசிரியர் தவறானவற்றைச் சொல்வதும் (Commissions), சரியானவற்றைச் சொல்லாததும் (Omissions) ஆகும்.

'முதலில் சரியானவற்றைச் சொல்லாததற்கு ஒரு சான்று சாற்றுவோம்: பேரறிஞர் அண்ணாவின் எழுத்துகளும் பேராசிரியர் டாக்டர் மு. வ.வின் நாவல்களும் எவ்வளவோ கருத்துத் தாக்குதல்களை (தாக்குறவுகளை)த் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்படுத்தி உள்ளன. (அதுவும் நூலாசிரியரே ஒப்புக்கொள்வதுபோலப் 'புதுக்கவிதை' இயக்கத்தை நோக்க,. சரியாகவோ - தவறாகவோ - டாக்டர் மு. வ.வின் எழுத்துகளினும் அரசியல்வாதியாகவும் விளங்கிய பேரறிஞர் அண்ணாவின் எழுத்துகள் செய்துள்ள புரட்சியைக் குறைத்து மதிப்பிடமுடியாது—கூடாது. ஆனால், டாக்டர் மு. வ., பேரறிஞர் அண்ணா இவர் பற்றிய ஒரு குறிப்பும் 'தமிழ் மறுமலர்ச்சி' அல்லது 'இன்றைய உரை நடை'யில் இல்லை.

இனி, தவறானவற்றைச் சொல்வதற்கு ஒரு சான்று: 'புதுக்கவிதை' பற்றி ஆசிரியரின் புகழுரைகள்—போற்றியுரைகள் மிகை படக் கூறல் என்னும் குற்றத்திற்குக் கட்டாயம் உரியனவாகும். எவ்வளவோ நூலறிவும் நுண்ணறிவும் நடுநிலைப் பாங்கும் கொண்டவ

ராய் விளங்க முயன்று முயன்று வெற்றி பெற்றுவரும் ஒருவர் ஓட்டப் பந்தயத்தில் கூடியவரை முதலில் வந்துகொண்டே இருந்து கயிறு பிடிக்கும் இடத்திற்குச் சிறிது முன்பு முட்டிதட்டி விழுவதைப்போல் விழுவது வேதனையாக உள்ளது. பழைய முறையில்—நடையில்—சொன்னால் 'பல்லி கழனிப் பானையில் விழுவது போல'வும் உள்ளது! எவ்வளவு தெரிந்தவர்களையும் கண்ணாடித் துண்டுகள், வைரங்கள் என்று ஏமாற்றிவிடுகின்றனவே! இது 'இக்காலத்'தின் இயற்கை போலும்! 'புதுக் கவிதையின்' சிறப்பைப் போற்ற ஒரு நிர்வாணப் பெண்ணின் படத்தையும் அவள் தலைமயிர் பற்றி 'ஆசை'க் கவிதை யையும் வெளியிட்டுள்ள (ப. 324) ஆசிரியரின் நோக்கும் போக்கும் பற்றி இந்த அளவிற்கேனும் கூறுவது தவிர்க்கமுடியாத— தவிர்க்கக் கூடாத—அறம்.

யாப்பில்லாக் 'கவிதைகள்'கள் என்பதால்கூட 'புதுக்கவிதைகள்' சிலவற்றைப் பற்றி நமக்கு எரிச்சல் இல்லை! கமில் கண்ணையும் கருத்தையும் கவரும் நிர்வாணக் கவிதைகள் மனித மனத்தைச் சூடு சொரணையற்றனவாக்கிவிடுமே என்பதுதான் நம் கவலை. ஆடும், மாடும், நாயும் நடுத்தெருவில் செய்வதை ஆணும் பெண்ணும் 'யதார்த்தத்'தின் பெயரால் செய்யலாமோ? அவ்வளவு ஏன்? எங்கும் உள்ள ஈசனை மலத்தில்—கழிவறையில் வழிபடலாமோ? 'கூளத்தை மலத்தினையும் வணங்கல்வேண்டும்' என்று மகாகவி பாரதியும் பாடி யுள்ளாரே![8] எல்லாரும் ஞானிகள் தானோ? டாக்டர் கமிலின் நோக்கில் —போக்கில் வீடுகளில் இனி, இறைவழிபாட்டிற்குப் பூவும் வேண்டிய தில்லை! கழிவறையே கடவுளறை போலும்!

நாம் காணும் குறைகள் பலவற்றையும் ஆசிரியர் தாமே துணிந்து எதிர்பார்க்கிறார்—ஏன் சர்ச்சைக்கும் சவால் விடுகிறார்! பார்க்க: முன்னுரை, முடிவுரை. இது, 'யதார்த்த யுகம்'. குறை குற்றங்கட்காக வெட்கமோ வேதனையோ படாமல் இருப்பதே இந்த யுகத்தின் உயிர் நாடிப் 'பண்பாடு'. பல இடங்களில் முன்னுக்குப்பின் முரண்பாடு நிறைந்த கருத்துகளைக் கூறும் கமில் தம் நூலின் முன்னுரையில் மொழிந்துள்ளது போலவே (ஆராய்ச்சியாளருக்கு இருக்கக்கூடாத) விருப்பு வெறுப்புகட்கு உட்பட்டே நூலை எழுதியுள்ளார். இக் குற்றத்தை அவர் தவிர்த்திருந்தால் உள்ளபடியே 'முருகனின் முறுவல்' கண்டிருக்கலாம்; உண்டிருக்கலாம்.

நூலில் மயிலோன் முறுவல் அதிகம் இல்லாவிடினும் குயிலோள் குரல் அதிகம் கேட்கிறது!

வள்ளி பங்கா நீயே துணை!

*   *   *

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். (109)

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. (503)

* * *

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504)

குறிப்புகள் :

1. இது குறித்தே தனி ஆய்வு தேவை.
2. இத்தகு முயற்சிகளாலேயே அகநாட்டு அறிஞர்கள் பெருமையும் பெருகும்; தமிழின் மதிப்பும் உயரும்.
3. பாரதியார் பாடல்கள் (அரசுப் பதிப்பு)—பக். 46.
4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழிலக்கியம் (1962)
5. பக். 220.
6. பார்க்க: பக். 9, 10, 11, 12, 13, 21, 23, 29, 60, 68, 71, 179, 192, 201 முதலியன.
7. பாயிரம் (Introductory)—ப. 11, முன்னுரை (Preface) — ப. 1, 4, 5, 10, 11, 12, 15, 108, 118, 131, 147, 163, 165, 166, 168, 169, 174, 184, 198, 254, 257, 268, 269 & 271.
8. பாரதியார் பாடல்கள் (அரசுப் பதிப்பு)—பக். 328

6

கலைஞர் - ஒரு கவிஞர்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி,
எம்.ஏ., எம்.லிட்., எச்.டி.,
டிப். மானிடவியல், டிப். அரசியல்—ஆட்சியியல்,
தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

*இச்சாதாரணன்
புவியாள வந்தாலே பொறுப்பதில்லை யென்னும்போது
கவியாளவும் வந்துவிட்டால் என்கதிதான் என்னே?
அவிசொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வோன்
அந்நாள் ஆள்வோன்
கவிதெரிந்து ஆயிரம் பாடல்கள் புனைவோன்
இந்நாள் ஆள்வோன்* (110)

* * *

*பலவரிகள் நானேதான் பாடி விட்டேன்........
—இது,
பதவியிலே உள்ள மோகமல்ல;
பாட்டினிலே உள்ள மோகமென்பேன்..........* (118)

* * *

*ஏடெடுத்தேன் எழுதிமுடித்தேன் என்றே
என் வழக்கம் இதுவரை* (84)

(கவியரங்கில் கலைஞர், 1971)

(1)

நம் **முதல்வர்—கவிஞர்** முதலாம் **கவிஞர்—முதல்வர்**. ஆ ஈராயிரம் ஆண்டுத் தமிழக வரலாற்றில் ஒன்றுபட்ட தமிழகத்தின் முதல் **முதல்வர்—கவிஞரும், கவிஞர்—முதல்வரும்** அவரே. சிறு கதை, நாவல், நாடகம், கடிதம், கவிதை, திரை, பேச்சு ஆகிய கலைகளில் வல்ல ஒருவரை முதல் முதல் முதல்வராகப் பெற்றிருக்கும் பெருமையும் நம் தமிழகத்திற்கே உண்டு எனலாம்.

(2)

'கவியரங்கில் கலைஞர்' (1971) என்னும் தலைப்பை ஏற்றுள்ள கவிதைத் தொகுப்பை வகை தொகை செய்து வளம் கண்டால் விளங்கும் வாய்மைகள் பற்பல. அவற்றுள், தலையாய சிலவற்றை மட்டும் ஈண்டுக் கருதுவோம்.

முதலாவது மொழிப்பற்று. இது இல்லா நிலையில் உணர்ச்சி மிக்க கவிதைகள் ஒரு மொழியில் உருவாதல் அரிது. எனவே, அவ்வுண்மைக்கான சான்றுகளைப் பட்டியல் செய்து பார்ப்போம்:

பட்டியல் 1

1. அருமை மிகு செந்தமிழ் (5)
2. இனிய தமிழ் (5) ஒ. நோ. 36, (131); 41 (144)
3. சந்தத் தமிழ் (7)
4. தங்கக் குன்றே! தமிழே! தாயே! (7)
5. பகைவர்க்குத் தாழாமல்
படைகண்டு வீழாமல்
பல்லூழி வாழ்கின்ற தமிழ் (8)
6. பழந்தமிழ் (10)
7. தேன் தமிழ் (13) ஒ. நோ. 13 (20, 156); 48 (171)
8. தமிழ் மணம் 15)
9. செந்தமிழ் (16, 22)
10. வீணைத் தமிழ் (17, 29)
11. முத்தமிழ் (17, 147)
12. ஏலத்தின் மணம் வீசும் தமிழ்ச்சொல் (20) ஒ. நோ. 39 (137)
13. தமிழ்த்தேன் (20, 156)
14. ஆவேசத் தமிழ் மாரி (23)
15. ஆணிப்பொன் தமிழ் (25)
16. முத்துத் தமிழ் (27) ஒ. நோ. 32 (122)
17. முருகுத் தமிழ் (27)
18. .... தமிழ்ப் பூவாரம் (28)
19. தேனே! கனியே! தினையே! அமுதே!
ஊனே! உயிரே! தமிழே! தாயே!
வணக்கம் சொன்னேன் வாழ்க நன்று! (43)
20. தமிழாறு (44)
21. தமிழ்த்திரு (70, 169)
22. பைந்தமிழ், பைந்தமிழ்ச் செல்வம் (70, 139)

23. சுடர் வழங்கத் தமிழிருக்கச் சோர்வுதான் மேவிடுமோ? (71)
24. அடலேறு மொழித் தமிழே!—இன்பக்
கடலேறு மலைத் தமிழே!—நீஎன்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்; வணங்குகின்றேன் (71)
25. பைந்தமிழ்த்தேர் (75)
26. சிந்துத் தமிழ் (77)
27. தித்திக்கும் தமிழ் (79)
28. உரித்த சுளைத் தமிழ் (83)
29. ஆட்சிமொழித் தமிழ் (88)
30. வளமலியும் தமிழ் (88)
31. தண்ணிலவாம் தமிழன்னை (91)
32. முத்தனைய தமிழ் (122)
33. வண்ண மணித்தமிழ் (122)
34. .... மக்கள்
தூவிய மலர்மலைமேல் மாத்தமிழாள் நடந்துவர (125)
35. அழகு தமிழ் (126)
36. இன் தமிழ் (131)
37. கூராய்த் தமிழ் (133)
38. அன்று பார்த்த இளமையுடன் இருக்கின்ற தமிழ் (135)
39. ஏலம் போல் மணக்கின்ற இன்தமிழ் (137)
40. ஞாலம் பெய் தமிழ்மறை (137)
41. இன்பங் கொழித்திருக்கும் செந்தமிழ் (144)
42. சங்கத் தமிழ் (17)
43. ....தமிழ்
அன்னை மடி சுகம் அளிக்க (147) ஒ. நோ. 46, 51 (165, 166, 167, 744)
44. தெள்ளு தமிழ் (154)
45. வண்ணத் தமிழ் (1
46. அன்னைத் தமிழ் (165, 166, 167)
47. பயிற்று மொழிதமிழ் (168)
48. தேன்கொண்ட தமிழ் (171)
49. கவின் தமிழ் (169)
50. தமிழ்த் தாய் (174)
51. ஊன்று கோலாகத் தமிழ் (176) ஒ. நோ. (131)
52. ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல் இளையவளாய்
இருந்திட்ட தமிழாம் அன்னை (182) ஒ. நோ. 38 (135)
(பிறை வளைவுள் இருக்கும் எண் பக்க எண்; பிற வரிசை எண்; ஒ. நோ. ஒப்பு நோக்கு.)

தம் தாய்மொழியாம் தமிழைக் கலைஞர் போற்றும் சொற்களையும் சொற்றொடர்களையும் வகை தொகை செய்து வளங் கண்டாலே (பிண்டத்துள் அண்டத்தைக் காண்பது போல்) அவர் ஓர் அரிய பெரிய கவிஞர் என்பது விளங்கும். என்றாலும் மேலே காட்டிய மேற்கோள்களை மேலும் பாகுபடுத்திப் பின்வரும் பட்டியலிட்டுப் பார்க்கலாம் :

பட்டியல் 2

1. ***வாழ்வியற் பண்புகள்*** (32)

அருமை 1
இனிமை 2, 24, 36, 41
வீரம், முதுமை 5
பழமை 6
மணம் 8
செம்மை 9
முக்கூறு 11
ஆவேசம் 14
முருகு 17
பசுமை 22, 25
திரு, செல்வம் 21
சுடர் 23, 139
இன்பம் 24, 36
வாழ்வித்தல் 51
இசைமை 26, 33
எளிமை 28
தித்திப்பு 27
ஆட்சி 29
வளம் 30
தாய்மை 43, 46, 50, 52
வண்ணம் 45
பெருமை 34
பயிற்சி 47
மக்கள் மதிப்பு 34
அழகு 33, 35
கூர்மை 37
இளமை 38, 52
பொதுமை, அருள் 40
தெளிவு 44
உறுதிபயத்தல் 51

2. ***இயற்கைப் பொருள்கள்*** (6)

குன்று 4
மாரி 14

ஆறு 10
கடல் 24
மலை 24
நிலவு 31

3. நவமணிப் பொருள்கள் (2)

முத்து 32
மணி 33

4. திண்மப் பொருள் (1)

தங்கம் 4; ஆணிப்பொன் 15

5. விலங்குப் பொருள் (1)

அடலேறு 24

6. தானியப் பொருள் (1)

தினை 19

7. கனிப் பொருள் (1)

கனி 19, உரித்த சுளை 28

8. மணப் பொருள் (1)

ஏலம் 12, 39.

9. மலர்ப் பொருள் (1)

பூ 18

10. சுவைப் பொருள் (1)

தேன் 7, 13, 19, 48.

11. இசைப் பண்புகள் (2)

சந்தம் 3
சிந்து 25

12. இசைப் பொருள் (1)

வீணை 10

13. கைவினைக் கலைப்பொருள் (1)

தேர் 25

14. உடற்பொருள் (1)

ஊன் 19

15. உயிர்ப் பொருள் (1)

உயிர் 19

16. **இலக்கியச் சிறப்பு** (1)
சங்கம் 42

17. **தெய்வப் பொருள்** (1)
அமுது 19

18. **உறவுப் பெயர்** (1)
தாய் 4, 19, 31, 43, 46, 51.

(பொருள்களை ஒட்டியுள்ள எண்கள் பட்டியல் 1-இல் உள்ள வரிசை எண்).

(3)

இவ் வகைதொகையால் கலைஞர் எத்தகைய கவிஞர் என்பது எளிதாகவும் இனிதாகவும் விளங்கும். முதலாவதாக அவருடைய சொற்களிலேயே சொன்னால் அவர் ஒரு கருத்துக் கவிஞர் (ப.97)— எண்ணக் கவிஞர் (ப. 122). இது அவர் 32 பண்புகளின் அடிப்படையில் இன்பத் தமிழைப் போற்றுவதால் விளங்கும். அதிலும் அவர் தமிழ் கூரியது (வ. 37) என்றும் ஊன்றுகோல் தன்மை (வ. 51) உடையது என்றும் குறிப்பிடல் அருமை பெருமைக்குரியதாகும். வீணையின் இசையும் (வ. 50) ஏலத்தின் மணமும் (வ. 12) புதியன; இனியன.

பண்புகட்கு அடுத்த நிலையில் **பாவலர் — முதல்வரைக்** கவர்வது இயற்கையே ஆகும். இவ்வகையில் தமிழின் அருள், நிலைகுலையா ஆண்மை, ஓட்டம், வளம், பரப்பு, தன்மை முதலியன அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளமை காணத்தக்கது. ஓரிடத்தில் மழை ஆவேசத்தின் (வ. 14) அறிகுறியாக இருத்தல் கருதிப் புது மகிழ்வு கொள்ளலாம். இனி, இயற்கையை அடுத்துக் கலைஞரைக் கவர்வது இயற்கை விளை பொருள்கள்.

அவற்றுள் உயிருள் பொருள்களுள் விலங்கு (வ. 5), தானியம் (வ. 6), கனி (வ. 7), மணம் (வ. 8), மலர் (வ. 9), சுவை (வ. 10) வகைப் பொருள்கள் இடம் பெற்றுள்ளன. ஏலம் (வ. 8), மணம் சுவை இரண்டும் தருவது. தேனின் (3, 10) இடம் தனி; இவற்றை அடுத்து இசைப் பண்புகளும் இசை கைவினைக் கலைப் பொருள்களும் (13), உடலுயிர்ப் பொருள்களும் (14, 15), இலக்கியச் சிறப்புகளும் (15), தெய்வப் பொருளும் (17), உறவுப் பெயரும் (18) இடம் பெற்றுள்ளன.

தமிழின் இலக்கியச் சிறப்பாகச் சங்கச் சால்பும் இசைச் சிறப்பாகச் சந்தமும் சிந்தும் சிறப்பிக்கப்படுகின்றன. உடலுயிர்ப் பொருள்களாக இவைகளே போற்றப்படுகின்றன. தெய்விகப் பொருளில் அமுதும் பெருமை பெறுகிறது. உறவு முறைப் பெயர்

களுள் தாய்க்கே தனியிடம் — சிறப்பிடம் இருப்பது கலைஞரின் வாழ்வோடு பொருந்தியிருக்கும் வாய்மைப் பண்பை — தூய்மைப் பண்பை நிலை நாட்டுவதாகும்.

இத்தகு வகை தொகை ஆராய்ச்சியால் **தமிழிலக்கியப் பரப்புள் வேறு** எந்த ஒரு புலவரும் இந்த அளவிற்குப் பைந்தமிழின் பல் வளத்தையும்—பல்திறனையும் ஒருசேரப் பாடியுள்ளார் என்று எண்ண இடமில்லாமல் இருக்கிறது.

(4)

கலைஞர் காட்டும் தமிழின் வாழ்வியற் பண்புகளாகிய அருமை, இனிமை, வீரம், முதுமை, பழமை, மணம், செம்மை, முக்கூறு, ஆவேசம், முருகு, பசுமை, திரு, சுடர், இன்பம், வாழ்வித்தல், இசைமை, எளிமை, தித்திப்பு, ஆட்சிவளம், தூய்மை, வண்ணம், பெருமை, பயிற்சி, மக்கள் மதிப்பு, அழகு, கூர்மை இளமை, பொதுமை, அருள், தெளிவு, உறுதிபயத்தல் ஆகிய 32 பண்புகளும் கலைஞர் கவிதையிலேயே — ஏன்? தமிழ்த்தாய் பற்றிய அவர்தம் புகழுரைகளிலேயே காணப்படலே இன்பத்துள் இன்பம் பயப்பதாகும். இது 'விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்.'

இனி ஓர் நல்ல இலக்கியத்தில் ஊறிக் கிடக்கும் — ஊடுருவிக் கிடக்கும் இயல்புகளுள் தலையாயவற்றை ஒருசில எடுத்துக்காட்டுகளுடனேயே கண்டு களிப்போம்.

1. வளர்ச்சி - உருவம்

கவிதையின் உயிர் உணர்ச்சி ; உள்ளம் பொருள் ; உடல் உருவம். இம் மூன்றும் இணைந்து அமைந்தாலே வாழ்க்கை - இன்பம். கலைஞர் கவிதைகளில் உயிருக்கும் உள்ளத்துக்கும் பற்றுக்குறை இல்லை. ஆனால் உடலுக்கு ?.........கவிதையின் உடல் உருவ வளம் அமைவது யாப்பறிவாலேயே ஆகும். ஆனால் இதைத் தாம் பெறவில்லை என்பதை எவ்வளவோ துயரத்துடன் கலைஞரே திரும்பத் திரும்பச் சொல்லும்போது (6, 36, 48, 70, 89, 90, 137—8) நம்மை அறியாத பரிவுணர்ச்சியே அவர்பால் பற்றுகிறது. இதை எண்ணும்போது அண்மையில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் நம் கலைஞர் உடல் - உள்ளம் பற்றிச் செய்த ஒரு மதிப்பீடுதான் நினைவுக்கு வருகிறது.

"கலைஞரை நேரில் கண்டால், அவர் — நோஞ்சான் உடம்பினர் தான்! அவர் இரவு பகலென்று பாராமல் உழைப்பதைப் பார்த்தால், இவர் உடம்பென்ன கல்லோ, இரும்போ என்று கருதி வியப்புற வேண்டியிருக்கிறது" (செங்கோல் 3—6—1973)

கலைஞரின் கவிதைகளில் உணர்ச்சியும் உருவமும் ஒன்றுபட்டும் இருக்கும் என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு இயற்சீர்களாலேயே இயன்ற பின்வரும் வரிகள் :

"தேனே! கனியே! தினையே! அமுதே!
ஊனே! உயிரே! தமிழே! தாயே!
வணக்கம் சொன்னேன் வாழ்க நன்று!" (43)

கலைஞரின் கவிதைகளில் உள்ள வரி பிளப்புகள் - அமைப்புகள் பற்றிய என் கருத்து. அவை நாடகத் திரைக் கலையின் - தமிழின் பழக்கத் தாக்குதலாக இருக்கக்கூடும் என்பதுதான். இப்பண்பின் காரணமாகவே கலைஞர் கவிதைகளைத் தொட்டால் போதும் அவை விட்டால் போதும் என்னும் வகையில் நம்மை 'அமுக்குப்பிடி' போட்டு விடுகின்றன.

2. உவமை - உருவகம் - கற்பனை

ஐந்திலக்கணத்துள் எழுத்து, சொல், யாப்பு, மூன்றும் இயைந்தால் உணர்ச்சியும் உருவமும் கிடைத்துவிடும். பொருள் பொது. அணிகளுள் அணியது - அடிப்படையானது உவமை. உவமையின் சுருங்கிய வடிவமே உருவகம். எனவேதான் பழந்தமிழ் இலக்கணம் தொல்காப்பியம் அணியியல் என்றது உவமயியல் எனவே ஓதுகிறது. இலங்கையில்,

பட்டியல் 3

வரிசை எண்

7. தேன் தமிழ்
10. வீணைத் தமிழ்
13. தமிழ்த்தேன்
15. ஆணிப்பொன் தமிழ்
16. முத்தமிழ்
17. முருகுத் தமிழ்
18. தமிழ்ப் பூவாரம்
19. தேனே! கனியே! தினையே! அமுதே!
ஊனே! உயிரே! தமிழே! தாயே!
20. தமிழாறு
24. அடலேறு மொழித் தமிழே!—இன்பக்
கடலேறு மலைத் தமிழே!
25. பைந்தமிழ்த் தேர்
28. உரித்த சுளைத் தமிழ்

31. தண்ணிலவாம் தமிழன்னை
32. முத்தனைய தமிழ்
33. வண்ணமணித் தமிழ்
39. ஏலம்போல் மணக்கின்ற இன்தமிழ் ஒ. நோ.: 12
40. அன்னைத் தமிழ்

(எண்கள் பட்டியல் 1-இல் உள்ள வரிசை எண்)

என நால்நூறு உவமை - உருவகங்கள் காணக்கிடக்கின்றன. 52 தமிழ்ப் புகழ் மேற்கோள்களுள் பாதிக்கு உவமைப் பகுதிகள் என்பது எண்ணத்தக்கது. மேலும் உவமைகளும் - உருவகங்களும் கற்பனைத் தாயின் குழந்தைகளே என்பதும் கருதத் தக்கது.

3. சிலேடைச் சிறப்பு

கலைஞர் முதல்வர் கவிதைகளில் பேரிடம் பெறும் அணி சிலேடை எனவே செப்பலாம். இதற்குக் காரணம் கலைஞரின் சொல்லுணர்வே (Word consciousness). உலகுணர்வு (World consciousness) போலவே சொல்லுணர்வும் நம் கவிஞர் முதல்வருக்கு நிரம்ப உண்டு என்பதற்கு அவர்தம் கவிதைகளை நிரம்ப உண்டுகளித்தார் நிரம்ப சான்று பகரலாம். தமிழ் பற்றிய அவர்தம் புகழ்மொழிகளை மட்டும் நுண் ஆய்வுக்கு (Micro analysis) எடுத்துக்கொண்டுள்ள இக்கட்டுரையில் காட்டப்பட்டுள்ள மேற்கோள்களில் இருந்தே இரு சான்றுகள் இயம்பலாம். 1. *முருகுத் தமிழ்*: நம் முதல்வர்—**கவிஞரிடம்** உள்ள சிறப்புகளுள் எல்லாம் **ஒப்புயர்வற்ற** ஒரு பெருஞ்சிறப்பு கவிஞர்களிடையே அவர் **தாய்போல்—சேய்போல்** நடந்துகொள்ளும் தன்மையே. நம் கலைஞர் கவிஞர்களை அறிமுகப்படுத்தும் கலையே கலை; கருணை! அவ்வகையில் கவிஞர் முருகுசுந்தரம் பெயரால் பிறந்த பெருமையே 'முருகுத் தமிழ்.'

2. நீர்க் குடும்பத்துள் ஒன்றாகி 'ஆறு' பற்றிக் கவிஞர் தமிழன்பன் பாட வந்தபோது கலைஞர் நிகழ்த்திய அறிமுகத்தில் ஒரு முகமாக ஓடிய ஆறே 'தமிழாறு'.

இனி, கருத்துக் கவிஞராய்—எண்ணக் கவிஞராய் விளங்கும் நம் கலைஞரின் தனிச்சிறப்புக் கவி அருமையை (Poetic Personality) காட்ட மூன்று சான்றுகள்.

1. கலைஞரின் தமிழ் காக்கும் தறுகண்மை

தமிழுக்குப் பகைவன் தமிழனே! அழுக்காறே அவன் தனிப் பண்பு— பெரும் பண்பு. இதன் விளைவாகவே பாரி போன்றோர் அழிவும், முடி உடை (!) மூவேந்தர் வீரத்தால் முத்தமிழ் நாடு சொத்தையாய்ப் போனதுவும். இன்றும் இந்த நிலை—வேறு வேறு

வேடங்களில்! இதை நம் கலைஞரே முன்னினும் அதிகமாக உணரும் நிலை. கூட இருந்து குழி பறிப்போரே மிகுதி. வள்ளுவர் சொல்லியது போல வாள்போல் பகையைக் கண்டு அஞ்சவேண்டுவதில்லை; தேள் போல் பகை கண்டே அஞ்சல்வேண்டும். 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி'; 'மாமலைமேல் இருக்கும் மருந்து.' ஈராயிரம் ஆண்டுகளாய்த் **தன்னலத்தின்** காரணமாகவே தோன்றும்—இல்லை கண் உடைக்கும் அழுக்காற்றால், தமிழர் அறிவாறெல்லாம் அழிவாருகி வருகிறது. நல்லது பொறுக்காத இந்த நஞ்சர்களால் பகைவர் படை—பலம் பெருகுவது இயற்கை; 'திண்டுக்கல்' நம் தலைமேல் விழுவது இயற்கை! கலைஞர் உள் மனத்துள் இருக்கக்கூடிய இக் கருத்துகள்,

பகைவர்க்குத்தாழாமல்
படைகண்டு வீழாமல்
பல்லூழி வாழ்கின்ற தமிழ் (8)

ஆவேசத் தமிழ் மாரி (23)

அடலேறு மொழித் தமிழே!—இன்பக்
கடலேறு மலைத் தமிழே (70)

(எண்கள் பக்க - எண்கள்)

என்னும் வரிகளில் **பீறிடுவதைக்** காணலாம். இவ் வரிகளில் அகமும் புறமும்—வீரமும் காதலும்—கடலும் மலையும்— கொஞ்சிக் குலாவுதல் 'கோவா'வாக இனிக்கிறது எனக்கு! ஆம். உட்பகையையும் புறப்பகையையும் ஒழித்து இன்பங்காண வீரமே வேண்டும். மேலும், இவ் வரிகள் நம் கலைஞர் தமிழ்ப்பகையை எதிர்க்கும் எதிர்ப்பிலே—இயக்கத்திலே-வளர்ந்த வலிமையையும் வலியுறுத்தும். ஆட்சிமொழி, பயிற்சி மொழி பற்றிய அவர் குறிப்புகள் அவர்தம் ஆக்க அரசியல் ஆண்மைக்கு அடையாளங்கள்.

2. மக்கள் மதிப்பையே மதிப்பாக மதிக்கும் மதிப்பீட்டு மாண்பு

முன் பத்தியின் முடிவிலேயே நம் **கலைஞர்—முதல்வர்** ஓர் இயக்கத் தலைவர்—அரசியலாண்மையாளர் என்பது எவ்வாறு அவர்தம் கவியாண்மையாலேயே விளங்குகிறது எனக் கண்டோம். ஈண்டு மேலும், அவர் ஒரு மக்கள் மனிதர்—தலைவர் (People's man—leader) என்பதைக் காண்போம்.

வரிசை எண் .... மக்கள்

34 தூவிய மலர்மலைமேல் மாத்தமிழாள் நடந்துவர (ப. 125)

இவ் வரிகள் வாயிலாக மேற்குறித்த உண்மை உறுதிபெறும். 'புலவர் புகழ் தமிழ்' என்றே இருந்த நிலைமையை இந்நூற்றாண்டின்—

இருபதாம் நூற்றாண்டின் — இயல்புக்கும் — இன்றியமையாமைக்கும் ஏற்ற 'பொதுமக்கள் புகழ் தமிழ்' ஆக மாற்றிய முதல் புலவர் நம் கலைஞர்—முதல்வர் எனலாம்.

3. ஊன்றுகோலாய் உதவும் உயர்வு

கலை இலக்கியம் கவிதை மாந்தர் வாழ்வுக்கு விருந்தாய் அமைந் தால் போதாது; மருந்தாயும் அமையவேண்டும்.

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல் (415)

என்னும் வள்ளுவர் வாய்மொழியின் எதிரொலியை

வ. எண். 52. ஊன்றுகோலாகத் தமிழ் (ப. 176)

என்னும் கவிதைப் பகுதியில் கேட்கலாம். ஓர் இலக்கியனுக்கு இருக்க வேண்டிய 'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் சொல்லையும் பொன்னேபோல் போற்றும்' புலமைப் பண்புநலன் நம் கவிஞர்—முதல்வரிடம் நிரம்ப உண்டு என்பதற்கு இவ்வரி ஓர் (சிறந்த) எடுத் துக்காட்டாகும். உயர் தமிழைத் தூண்டுகோலாக மட்டும் பயன் படுத்தித் தூர எறிந்துவிடாமல் ஊன்றுகோலாகவும் பயன்படுத்த உந்தும்—முந்தும்—கலைஞரின் கருத்து தமிழர் செய்த தவப்பேறு.

இவ்வாறு கலைஞர் கவிதைகளில் அவர் தம் தாய்மொழியைச் சுட்டும் பகுதிகளில் 'சொட்டும் கவிதைக் கலையுணர்வை நுண்ணாய்வு (Micro analysis), அடுத்திடும் எண் ஆய்வு (Frequency-count analysis) செய்து பார்த்தாலே அவருடைய கவிதை ஆளுமையின் (Poetic perosnality) அருமை பெருமை விளங்குமன்றோ?

* * *

அறங்கூறும் வள்ளுவர்க்கு வாய்த்தநல் தொண்டர்களாய்ப்
புறங்கூறல் புறக்கணித்துப் புவியாண்டால்—நம்
திறம் கூறப் புலவர் கூட்டம்
திரண்டு வரும் .... தேசம் வாழ்த்தும் ....

(கவியரங்கில் கலைஞர், பக். 118)

7

திரு கு. இராசவேலுவின் '1942'

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
டிப். மானிடவியல், டிப். அரசியல் — ஆட்சியியல்,
தமிழ்த்துறைத் தலைவர் — பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

'இலக்கியப் பூங்காவில் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியாக வாழ்ந்துவரும் அறிஞர் கு. இராஜவேலு ஆவர். தமிழ் பயின்ற பண்டிதப் பேரணியிலிருந்து புத்திலக்கியம் படைக்க வந்த கலைஞர்களுள் இவரும் ஒருவர்.

'1942' என்பதுதான் அவரது முதல் நாவல். தனக்கு நேர்ந்த சிறை அனுபவங்களை அதன்கண் கதை வடிவில் சொல்ல அவர் முயன்றிருக்கிறார். நாட்டுத் தொண்டுக்காகச் சிறை சென்ற அவர், சிறை வீடு பெற்றபின் அஞ்சிறைத் தும்பி யாக இலக்கிய உலகில் நுழைந்தது தமிழுக்கு வாய்த்த பேறேயாம். கு. ரா., டாக்டர் மு. வ. அவர்களின் மாணவர் என்பது நாடறிந்த செய்தியே. ஆனால் மு. வ. அவர்கள் நாவல் துறையில் புகுவதற்கு முன்பே கு. ரா. நாவல் எழுதத் தொடங்கிவிட்டார் என்பது பல பேருக்குத் தெரியாத ஒரு ஒரு வரலாற்றுண்மையாகும்".

(திரு. எழில் முதல்வன் 'புனைகதை வளம்' - பக். 162 - 3)

(1)

இந்நாள் தமிழக அரசில் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநராய் இலங்கும் திரு. கு. இராசவேலு (வாழ்க்கைக் குறிப்புக்கு இணைப்பு - 1 காண்க) பேராசிரியர் டாக்டர் மு. வ. முதலாகிய தமிழறிஞர்களிடம் ஏழாண்டுக்காலம் முறையாகத் தமிழ் கற்ற அறிஞர். ஆறு ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ்த் துணைப் பேராசிரியராகத் தொண்டாற்றியவர். (1) 1942; (2) காதல் தூங்குகிறது: (3) தங்கச் சுரங்கம்; (4) வான வீதி; (5) சாலை ஓரம்; (6) காந்தமுள்; (7) இளவேனில்; (8) அழகு ஆடுகிறது: (9) மகிழம்பூ ஆகிய ஒன்பது நாவல்களையும் அடிவானம்

என்ற ஒரு சிறுகதைத் தொகுப்பையும் 'அணை கடந்த வெள்ளம்' என்ற ஒரு நாடகத்தையும் (1) வள்ளல் பாரி; (2) கொடை வளம்; (3) வான் குயில் என்ற மூன்று இலக்கியக் கட்டுரை (ஆராய்ச்சி) நூல்களையும் வெளியிட்டவர். எல்லாவற்றிற்கும் மேலாகத் திருவையாற்றில் தமிழ் மாணவராய் இருக்கும் காலத்தில் பிரிட்டிஷ் பேரரசால் சிறைப்பிடிக்கப்பட்டு மூன்றாண்டுக் கடுங்காவலுக்கு இரையானவர். அதனினும் சிறப்பு இக் கட்டுரையில் ஆராயப்பட இருக்கும் '1942' என்னும் நாவலை அதிகாரிகள் அறியாவண்ணம் அலிப்புரம் சிறையிலிருந்தே எழுதியவர். ஆம் '1942' சிறைக்குள்ளிருந்து ஒரு நாட்டுப் பற்றுளரால் தமது இருபத்து மூன்றும் வயதில் எழுதப்பட்ட ஒரே தமிழ் நாவல் எனலாம். வேறு சொற்களில் சொன்னால் இந்திய விடுதலைப்போர் தன்னைப்பற்றி, தன்னுடைய விடுதலை வீரர்களுள் ஒருவரைக் கொண்டு தன் போர்க்காலத்திலேயே களத்திலேயே படைத்துக்கொண்ட ஒரு வீரப் புதினம் — '1942'.

இனி, இந்த நாவலை (ஆசிரியருடைய சொல்லாக்கத்தில் தொடர் நிலைக் கதையை) கதைக்கரு - கருத்து-நடை என்ற மூன்று இன்றியமையா அடிப்படையில் ஆராயலாம்.

(2)

கதை :

கண்ணப்பன் இளமை முதலே நாட்டுப்பற்று நிறைந்த நன்மகன். ஆலைத் தொழிலாளியாக இருந்த அவன் இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறைப்படுகிறான். அவன் அன்புத் தாயும் தங்கை கனகவல்லியும் காதலி விசயலட்சுமியும் அவன் பிரிவுக்கு ஏங்கி வாழ்கிறார்கள். விசயலட்சுமியின் அத்தை மகன் - முறைப்பிள்ளை - வடிவேலு - அவள் காதலை அறிந்து விலகி நிற்பதோடு நில்லாமல் கண்ணப்பன்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு உதவியாகவும் இருக்கிறான். கண்ணப்பன் தாய் பிழைக்க முடியாத நோய்வாய்ப்பட்ட போதுதான் முன்னர் தந்திருந்த வாக்குறுதிப்படி அச் செய்தியை அவனுக்குத் தெரிவிக்க அவன் இருந்த அலிப்புரம் சிறையில் தானும் கைதியாகிறான். வடிவேலுவிற்கு அவன் நண்பன் சுந்தரமூர்த்தியும் உதவுகிறான். சுந்தரமூர்த்தி வாயிலாகச் செய்தி அறிந்த கண்ணப்பன் சிறையிலிருந்து தப்பி இறக்கும் தருவாயில் இருக்கும் அன்னையைக் காண ஆலாய்ப் பறந்து வருகிறான். ஆனால், அந்தோ! அவன் வருவதற்குள் அந்த அன்புத் தெய்வம் விண்ணுலகம் விரைந்து விடுகிறது. பித்தனைப் போல் அலங்கோல நிலையில் ஓடிவந்த கண்ணப்பன் மயானத்திலேயே தன் தாயின் சடலத்தைக் கண்டான்; கொள்ளி வைத்தான். இதே நேரத்தில் கள்ள வாணிபத்தில் சிக்கிய விசயலட்சுமியின் தந்தையும் தற்கொலை செய்து கொண்டார்; அவர் உடலும் அவளால் கொள்ளிவைக்கப்பட்டது.

கதைக் கருவும், கதை வளர்ந்திருக்கிற முறையும் கூட சரி யெனவே தோன்றுகிறது. ஆனால் அவசரக் கோலத்தில் எழுதப்பட்ட தாய்த் தெரிகிறது. இது குறித்து ஆசிரியரை யான் நேரில் வினவிய போது 'சிறையில் அதிகாரிகட்குத் தெரியாமல் எழுதவேண்டும்; காகிதம் கிடைப்பதும் கடினம்' என்றார். மேலும் இதை அவர் இக் கட்டுரைக்குப் பயன்படுவதற்காகவே அனுப்பி உதவிய வாழ்க்கைக் குறிப்பிலும் தெளிவாகக் காணலாம். (பார்க்க : இணைப்பு. 1)

இடி கேட்டோ - விபத்தில் சிக்கியோ - முன் கூட்டிக் கருவுயிர்த்து விட்ட குழந்தையாக இப்புதினம் இருப்பினும் முப்பது ஆண்டுகட்கு முன்பு இருபத்து மூன்று வயது இளைஞர் ஒருவர் எழுதிய முதல் நாவல்- சித்திரவதைகள் நிறைந்த சிறையிலே எழுதப்பட்ட இலக்கியம் - என் பதை நினைவிற்கொண்டு இந்நூலை ஆராய்தலே அறமாகும். இதற்குப் பின் இவ்வாசிரியர் எழுதிய இரண்டாவது நாவலே - அதுவும் பச்சை யப்பர் கல்லூரியில் முதுகலைத் தமிழ் மாணவராய்ப் பயிலும் காலத்தி லேயே எழுதிய புதினமே — 1950-இல் 'கலைமகள்' நாராயணசாமி ஐயரின் முதற்பரிசைப்பெற்றது என்பதும் அப் புனைகதையைத் திறனாய் வாளர் திரு. எழில் முதல்வன் தம்முடைய அண்மைத் திறனாய்வு நூலில் தம்முடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த ஒன்று என்று (புனைகதை வளம் ப. 167) குறிப்பிட்டிருப்பதும் குறிக்கத்தக்கது. பேராசிரியர் டாக்டர் மு. வ.வும் தமது அணிந்துரையில் இத் தொடர் நிலைக்கதையைச் 'சிறந்த கற்பனைச் செல்வம்' என்று குறிப்பிட்டிருப் பதும் கருதத்தக்கது.

தமிழாசிரியர் தொழிலையே தம் பணி வாழ்வின் தொடக்கமாகக் கொண்ட திரு. இராசவேலு புத்திலக்கியப் படைப்பாளராய் மாறினும் தம் புலமைப் பண்பை எவ்வளவு நன்றாகப் பயன்படுத்தியுள்ளார் என்று எண்ணும்போது இன்பமாகவும் இறுமாப்பாகவும் உள்ளது. திரு. இராசவேலுவின் உண்மையான - உயர்ந்த நாட்டுப்பற்று, மொழிப் பற்றையே மூலமாகக் கொண்டது என்பதை அவர் வாழ்க்கை யாலும், வடித்துள்ள எழுத்துகளாலும் நன்கறியலாம். இல்லையேல் மிகச் சிறந்த முறையில் மெட்ரிகுலேஷன் தேர்வு பெற்றிருந்த அவர் தனித் தமிழ்ப் புலவர் படிப்பிற்காகத் திருவையாற்றுத் தமிழ்க் கல்லூரியில் சேர்வானேன்? சிறை சென்று மீண்ட நிலையிலும் - இடைக் கலை வகுப்பிலும் - முதுகலை வகுப்பிலும் தமிழையே சிறப்புப் பாடமாக எடுத்துப் படிப்பானேன்? தமிழாசிரியர் வேலையையே நாடுவானேன்? எனவே தமிழாசிரியர் - நாவலாசிரியர்களுள் ஒருவராய் விளங்கும் அவர்தம் எழுத்தில் இலக்கியவளம் 'கருவில் அமைந்த திரு'வாய் விளங்கும் காட்சியைக் காண்பதே மாட்சியாகும்.

இவ்வகையில் முதலாவதாக இப்போது நம் ஆராய்ச்சிக்கு உரிய அவருடைய '1942' நாவலில் உள்ள இலக்கிய ஊடுருவலை முறையாக எண்ணுவோம் :

(1) 'உயிரினும் சிறந்தது நாணம். நாணினும் சிறந்தது கற்பு' என்று பொற்புடை மங்கையர் கற்பைக் காக்கத் தற்கொலை செய்து கொண்ட காலம் அந்தக் காலம் (ப. 2)

ஒப்பு நோக்குக. தொல். பொருள் : 3 ; 23

(2) அலிப்புரத்தைப் பற்றி ஒவ்வொரு தேச பக்தனும் கொஞ்சம் கேள்விப்பட்டிருந்தான். வெயிலின் கொடுமை பொறுக்க முடியாது மிருந்திருக்கும். தமிழ் நாட்டுப் புலவர்கள் இந்த நிலத்தைத்தான் பாலை என்று கூறினர். (ப : 102)

(3) **கல்லாத** இப்போலீஸ்காரர்கள் (ப. 73) ஒ. நோ. முல்லைப் பாட்டு. 36

(4) ஊன்றுகோலையே கண்ணுக உடையவர் (ப. 87) ஒ. நோ. புறம். 159, நாலடி 17.

(5) பட்டதாரியின் நிலை மிகச் சங்கடமாயிருந்தது. கையில் மோதிரமிருந்தாலாவது விற்றுச் சில நாட்கள் தின்னலாம் என நினைத்தான் அதுவுமில்லை. பின் என்ன செய்வது? பிச்சையெடுப்பதா? சீச்சி ; அவன் கல்லூரியில் படித்த குறள் பளிச்சென்று நினைவுக்கு வந்தது.

"ஆவிற்குநீர் என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்."

சரி! பிச்சையெடுப்பதில்லை. அப்பால்......... (ப. 53-4)

(6) இது பற்றித்தான் வள்ளுவரும் **கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்** என்ருர்.

(7) "உலகத்தில் ஓர் அரிச்சந்திரன்கூட இல்லை. விஜயா! கதையில் வரும் அரிச்சந்திரனை வைத்துக் காசினியை அளக்காதே. வள்ளுவர் வாய்மையைப் பற்றி என்ன சொல்கிருர் தெரியுமா?

"வாய்மையெனப் படுவது யாதெனின் ...."

தெரியும்.

"யாதொன்றும் தீமையிலாத சொலல்."

"சில சந்தர்ப்பத்தில் பொய்யும் பேசலாம் என்று சொல்கிருர் நம் வள்ளுவர்,

பொய்மையும் வாய்மையிடத்த..........."
"புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்"

"பரவாயில்லையே! குறளை நன்கு படித்திருக்கிருயே. உனக்கு நூற்றுக்கு நூறு மார்க்." (ப. 98)

(8) அன்னையினும் சாலப்பரிந்து.

(ஒ. நோ.: திருவாசகம். பிடித்த. 9)

(9) பணந்தானே அறிவாகும் பணந்தானே
விந்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்; பணமில்லாதவர்
பிணமாம் பான்மை சேர்வர்;
பணந்தானே பேசுவிக்கும் தண்டலைநீள்
நெறியாரே பார்மீ திற்றன்
பணந்தரனே பந்தியிலே குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே.

என்னும் படிக்காசுப் புலவரின் பாட்டைப் பாடிக் காட்டுகிறார் பிரபல புண்ணாக்கு வியாபாரி ஆறுமுகம்.

திரு. இராசவேலுவின் 1942-இல் பாரதியாரின் செல்வாக்கு ஏராளமாக இருப்பதில் வியப்பில்லை. அக் காலச் சூழ்நிலையும் அது வென்பதை ஆராய்ச்சியாளர் அறிவர். ஆசிரியர் எடுத்தாளும் பாரதியார் எழுத்துகள்:

(1) "கட்டுண்டோம் பொறுத்திருப்போம், காலம் மாறும்"
(நூலின் தொடக்கம்: ப. 9. வரி 2)

(2) "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்"
(ப. 9. வரி. 4)

(3) "பஞ்சமும் நோயும் மக்களை வாட்டிய காலம்" (ப. 9)

(4) "என்று தணியுமிந்தச் சுதந்திர தாகம்?
என்றுமடியு மெங்கள் அடிமையின் மோகம்" (ப. 10)

(5) 'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு
போகவோ? நாங்கள் சாகவோ? அழுது கொண்டிருப்
போமோ? ஆண்பிள்ளைகள் அல்லவோ? உயிர் வெல்லமோ"
(ப. 10).

(6) "தொண்டு செய்யு மடிமை உனக்குச் சுதந்திர நினைவோடா"
(ப. 10)

(7) பக்கத்தில் நின்றவர் இந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்தும் பேசாது இருந்தனர். பெருமூச்சு விட்டனர். கொடிது என்றனர். அந்நிய ஆட்சியின் அலங்கோலம் என்றனர். எனினும் ஒன்றும் செய்யாது வீடு திரும்பினர்.
(ப. 11)

(8) "செம்மையெலாம் பாழாகி, கொடுமையே அறமாகித் தீர்ந்த"

(ப. 11)

(9) "இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால் வனவாசந்தான்"

(ப. 12)

(10) போலீஸ்காரர்கள் நாய்களைப்போல் நுழைந்தனர்.

(ப. 15)

(11) குடிமக்கள் சொன்னபடி ஆட்சி வருமா?

(ப. 27)

(12) "அன்பு வாழ்கென்று அமைதியில் ஆடுவோம்,
ஆசைக் காதலை கைகொட்டி வாழ்த்துவோம்"

(ப. 43)

(13) "உண்மை சொல்வோர்க்கெல்லாம் எழுதரிய பெருங் கொடுமைச் சிறையுண்டு, தூக்குண்டே இறப்பதுண்டு, பொய்யைத் தொழுது அடிமை செய்வோர்க்குச் செல்வங்கள் உண்டு"

(ப. 56)

(14) "நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்" (ப. 85)

(15) "மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதையும்,
நூலோர்கள் செக்கடியில் நொந்ததையும்" (ப. 91)

(16) அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே!
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே
நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பர் ஊட்டு போதினும் அச்சமில்லை, அச்சமில்லை,
அச்சமென்பதில்லையே
கச்சணிந்த கொங்கை மாதர்
கண்கள் வீசு போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே!

(ப. 115)

(17) எங்கள் மங்கையர் விம்மி, விம்மி, விம்மியழுங் குரல்
கேட்டிருப்பாய் காற்றே—இன்பக் கேணியிலே எங்கள்
பெண்கள் அழுத சொல் மீட்டும் உரையாயே? அவர்
விம்மி யழவும் திறம் கெட்டுப் போயினரோ?

(ப. 126)

இனி '1942' இன் இறுதியில் மிகச் சிறப்புடைய—உருக்கமான—ஓர் சூழலில் ஆசிரியர் இந்திய விடுதலை இயக்கத்தோடு அந்நாளில் (தொடக்கத்தில் பாரதிதாசன் பாடிய கதர்ப் பாட்டு இன்றும் சிலரிட மேனும் காணக்கூடும்) சிறிதும் தொடர்பில்லாத—மாறுக மாறு பட்டிருந்த—பாவேந்தர் பாரதிதாசன் பாடலைக் கட்சிக்காழ்பற்ற தமிழ்க்காதல் காரணமாகப் பதித்திருப்பது பாராட்டி மகிழ்ந்து போற்றத் தக்கது. அப்பகுதி வருமாறு :

"அன்று சிறையைக் காத்த காவலாளியும் ஓர் கைதிதான் (Convict Warder). சிறையைச் சுற்றிச்சுற்றி அவன் வட்ட மிட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய கையில் ஒரு அரிக் கேன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் நடுத்தர வயதுள்ளவன். பாடிக்கொண்டே சிறையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

"நல்லவாடே சொல்ல பிள்ளவாடே" என்ற ஒரு தெலுங்குப் பாட்டை மிக இனிமையாகப் பாடினுன். அவனுடைய பாட்டைக் கேட்டதும், ஒரு மூலையில் முடங்கிக் கொண்டிருந்த அந்த இளைஞர் என்ன கருதினுரோ தெரியவில்லை. அப்பொழுது தான் அவர் இன்ப வாழ்க்கையைத் தொடங்கியிருந்தார். அன்பான நங்கை. கருத்துக்கிசைய நடக்கும் காரிகை. ஆனுல் அப்பெண்ணின் சக்களத்தியாகச் சிறைச்சாலை போட்டியிட்டது. வெற்றியும் பெற்றது. மூன்று சதி வழக்கில் அவரைச் சிக்க வைத்தது. அறுபது ஆண்டுகள் தண்டனை வாங்கித் தந்து, தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டது.

வார்டனின் பாட்டைக் கேட்ட அவர் உள்ளம் ஒருவேளை சிறைக்கு வெளியே அவர் கழித்த இன்ப நாட்களை நினைவூட்டி யிருக்கலாம். உரத்த குரலில் பாட ஆரம்பித்துவிட்டார். அந்தப் பாட்டில் தான் எவ்வளவு வேதனை ! எவ்வளவு ஏக்கம்? எவ்வளவு துன்பம் ! கடந்த காலத்தில் அவர் இன்பமாய்க் கழித்த நாட்களையெல்லாம், அவர் எண்ணி எண்ணி முன் னிற்கும் யாரையோ நோக்கிப் பாடுவதுபோல், சோகங் கலந்து பாடினுர்.

"துன்பம் நேர்கையில் யாழெ டுத்துநீ
இன்பம் சேர்க்கமாட் டாயா? எமக்
கின்பம் சேர்க்கமாட் டாயா?—நல்
லன்பிலா நெஞ்சில் தமிழில் பாடிநீ
அல்லல் நீக்கமாட் டாயா?—கண்ணே
அல்லல் நீக்கமாட் டாயா?
வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க—எம்

வாழ்வில் உணர்வு சேர்க்க—நீ
அற்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்டமாட் டாயா?—கண்ணே
ஆடிக் காட்டமாட் டாயா? —பாரதிதாசன்

இப்படித் தம் நாவலில் உயிரான இடத்தில் பாரதிதாசனின் உயிரான பாட்டை வைத்திருப்பது ஆசிரியரின் உயிரான தமிழ்ப் பண்பையே உணர்த்துகிறது! (இந்தப் பாடலையே பாவேந்தர் உடலைப் புதுவையில் அடக்கம் செய்யுமுன் ஒருவர் நெஞ்சுருகிப் பாட—உலகே அழுததாம்!)

இவ்வாறு இன்பத் தமிழ் இலக்கியத்தில் ஊறிய இதயம் படைத்த ஆசிரியர் தாமே இந்நூலுள் கவிதை பாடியுள்ள இடமும் உண்டு. அது வருமாறு:

இன்பக் காலமே! இங்கே பாராய்
அன்புக் காதலி அண்டையில் உள்ளாள்
ஏ, ஏ காலமே! என்உரை கேளாய்
என்துயர் முற்றும் அன்பாய்க் களைவாய். (ப. 109)

இனி, கருத்தும் நடையும் கலந்த நிலையில் உள்ள திரு. கு. ரா.-வின் எழுத்துகளைப் பல்வேறு உட்தலைப்புகளில் வகை தொகை செய்து வளம் காண்போம்:

1. செந்தமிழ்ச் சொற்கள்:

கடுத்துக் கேட்டனர்—15
சீற்றம்—20
ஈந்துவிட வேண்டும்—21
நீர் - தண்ணீர்—26
கடிமலர்—45
கழிவிரக்கம்—47
கண்ணேறு—49
கார் ஓட்டி—49

2. தாயாரை 'ஆர்' விகுதியிட்டுக் குறிப்பிடல்:

பக். 15
பக். 60
பக். 62

3. சொற்பொழிவு ஈடுபாடு:

ஒரு சிறு பிரசங்கமே வைத்துவிட்டாள் (பக். 22)
போதுமடா உன் சொல் மழை (பக். 41)

4. உவமைகள் :

அந்த நாட்களில் ஓர் இரவு, சுமார் எட்டு மணியிருக்கும். அந்த நகரம், அறியாக் குழந்தை தூங்குவதுபோல், ஆழ்ந்த அமைதியில் அவதிப்பட்டுக் கிடந்தது. (பக். 10)

*　　*　　*

எரிமலைகளின் அடித்தளம் எப்போதும் கொந்தளிப்பதுபோல் அகத்தே குமுறிக்கொண்டிருந்தனர். (பக். 13)

*　　*　　*

இன்றுதான் தன் எண்ணத்திற்கும், தன் தந்தையின் எண்ணத்திற்கும் இடையே ஏணி வைத்தாலும், ஏறி அடையமுடியாத-காந்தி அடிகளுக்கும், வெலிங்டனுக்கும் இடையே இருக்கும் — வேற்றுமையைக் கண்டாள். (பக். 22)

*　　*　　*

கனகவல்லியோ இதற்கு முன்னால் வாழைக் கன்றைப்போல் 'கொழுகொழு'வென்று காட்சி அளித்தாள். (பக். 30)

*　　*　　*

காங்கிரஸிலும் சேராமல், கவர்மெண்டையும் ஆதரிக்காமல் இருக்கும் சில சந்தர்ப்பவாதிகளைப் போல வாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தான். (பக். 35)

*　　*　　*

காதல் உலகத்திலே உள்ளந்தான் உறவாடவேண்டும். காதலுக்கு எல்லையே காணக்கூடாது. நாளும் அதைப் போற்றி வளர்க்கவேண்டும். இவ்வாறே அவனும் அதை வளர்த்தான், சுதந்திர வீரர்கள் தங்கள் தேசிய இயக்கத்தை வளர்ப்பதுபோல். (பக். 45)

*　　*　　*

எவ்வளவு இன்பமான கற்பனைக் கனவு! கனவிலாவது அவள் கண்ணனுடன் இன்பமாகக் காதற் கதைகள் பேசி மகிழட்டுமே. அதுகூடப் பொறுக்கவில்லையா அவளுடைய கண்களுக்கு? அவளுடைய கண்கள் சிறையிலே தேசபக்தர்களைத் துன்புறுத்தும் வார்டர்கள்போல், எதற்காக அவளைத் துன்புறுத்தவேண்டும்? (பக். 48)

*　　*　　*

பாம்பாட்டி மகுடியை ஊதுகிறான். அதிலிருந்து ஓர் இன்னிசை கிளம்புகிறது. தன்னுயிருக்கே உலை வைப்பதுதான் அந்த இசை என்பதைப் பாம்பு அறிவதில்லை. களிப்பு மிகுதியால் படமெடுத்து ஆடுகிறது. தன்னிலையை அடியோடு மறக்கிறது. சிறிது நேரத்தில் அரவத்தை மயக்கிய இசை நிற்

கிறது. பாம்பும் தான் பாம்பாட்டியின் கூடைக்குள்ளே அடைபட்டுக் கிடப்பதை அறிகிறது. அந்தப் பெண்ணும் தன்னிடத்திலிருந்த அரிய பொக்கிஷத்தை யாரோ சூறையாடி விட்டதாக உணர்ந்தாள். தான் ஏமாந்து போய்விட்டதாக ஏங்கினாள். எனினும் பயன் ஏது? கருத்தரித்துவிட்டது. (பக். 51-52)

* * *

கண்ணன்பால் விஜயலட்சுமி வைத்த அன்பு இன்பத்திலும், துன்பத்திலும் மாறவில்லை. சட்ட மறுப்புக் காலத்தில் உண்மைத் தேச பக்தர்களின் உணர்ச்சி வெளிப்படுவது போல் துன்ப காலத்தில்தான் அவளுடைய தூய அன்பு சுடர் விட்டுப் பிரகாசித்தது. அடக்குமுறை வலுக்க வலுக்க உரிமைப் போர் அதன் வளர்ச்சியின் உச்சியை அடைவது போல் அவளுடைய காதலுக்கு ஏற்பட்ட தடைகளும் அவள் அன்பை அசைக்க முடியாதவாறு உறுதிப்படுத்தின. (பக். 58)

* * *

"நியூடன் அவதாரம் என்று கூறுதே. சி. ஐ. டி. இன்ஸ்பெக்டரைப்போல் என்று கூறு." (பக். 61)

* * *

நீதியும் நிர்வாகமும் பிரிக்கப்படாத இந்த ஆட்சியிலே நீதி கிட்டும் என நம்பியிருப்பது போராட்டமின்றியே சுதந்திரம் கிட்டும் என நம்பியிருப்பதை ஒக்கும். (பக். 72)

* * *

"கனகா! நீ கனகா என்று எண்ணிக் கொள்ளாதே. கனகனாகிய இரணியன் என்று எண்ணிக் கொள். சுதந்திரத்தை வீரர்கள், உயிரைக் கொடுத்துக் காப்பதுபோல், அம்மாவை நீ காக்க வேண்டும். தெரியுமா? (பக். 78)

* * *

"மூலப்பொருள் நிறைந்த நாட்டைக் கண்டவுடன் ஏகாதிபத்திய நாட்டின் ஆசை வளர்வதுபோல், சீட்டாட்டத்தின்மேல் ஆசையும் நாளும் வளர்ந்து கொண்டுதான் போகும். ஆசை வழியெல்லாம் ஆளும் சென்றால் வாழ்வுக்குச் சீக்கிரம் அமாவாசை ஆரம்பித்துவிடுமப்பா". (பக். 81)

* * *

"இவனுக்கும் காதலுக்கும் உள்ள தூரம், தனிச் சொத்துரிமைக்கும், பொதுஉடைமைக்கும் உள்ள தூரத்தைப் போன்றது." (பக். 94)

* * *

"சிலர், நெருப்பைப் போன்று பூத்திருந்த கொன்றை மரத்தின் மீதேறிப் பூக்களைப் பறித்துச் சென்றனர்." (பக். 123)

" இவ்வாறு அவர் பட்ட மனவேதனைக்கு நிகராக, துப்பாக்கிக்கு இலக்காகித் துடித்துக் கொண்டிருக்கும் மானைக்கூட உவமை கூறமுடியாது." (பக். 132)

* * *

இவ்வுவமைகள் வாயிலாக இளங்கோ அடிகளைப் போலவே திரு. இராசவேலுவின் உவமைகளுள்ளும் பெரும்பாலானவை அரசியல், பொருளியல் உவமைகளே என்பதை அறிந்து மகிழலாம்.

5. உருவகமும் உண்மையும்

" பாம்பாட்டி மகுடியை ஊதுகிறான். அதிலிருந்து ஓர் இன்னிசை கிளம்புகிறது. தன்னுயிருக்கே உலை வைப்பதுதான் அந்த இசை என்பதைப் பாம்பு அறிவதில்லை. களிப்பு மிகுதியால் படமெடுத்து ஆடுகிறது. தன்னிலையை அடியோடு மறக்கிறது. சிறிது நேரத்தில் அரவத்தை மயக்கிய இசை நிற்கிறது. பாம்பும் தான் பாம்பாட்டியின் கூடைக்குள்ளே அடைபட்டுக் கிடப்பதை அறிகிறது. அந்தப் பெண்ணும் தனனிடத்தி லிருந்த அரிய பொக்கிஷத்தை யாரோ சூறையாடி விட்டதாக உணர்ந்தாள். தான் ஏமாந்து போய்விட்டதாக ஏங்கினாள். எனினும் பயன் ஏது? கருத்தரித்து விட்டது ' (பக். 52)

'பேதை'ப் பெண்கள் எத்தனையோ பேரின் அனுபவ எதிரொலி இது அல்லவா?

6. கிண்டல் - நகைச்சுவை

பொதுவாக நம்மவர் எழுத்துகளில் நகைச்சுவை குறைவு என்பார்கள். உண்மைதான். திரு. கு. ரா.விடம் நகைச்சுவை இருந்ததும் அவரை அறிந்தவர்கட்கு வியப்பே தரும். எனினும் மூன்று எடுத்துக்காட்டுகள் :

" கிளியூர் ஜோதிடன் மாமா ; சர்ச்சிலுக்கு ஜாதகம் பார்த்தவன். எல்லாப் பத்திரிகைகளிலும், சர்ச்சில் ஜோஸ்யர் என்று விளம்பரம் செய்து கொள்வானே, அவன்தான் மாமா !" பக். (96)

* * *

" சிறைக்குள் நுழைந்ததும் சில சடங்குகள் நிறைவேறின. ஒவ்வொருவரின் ஆடையையும் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு இரண்டு கால்சட்டை, இரண்டு பனியன், இரண்டு தொப்பி, இரண்டு துண்டு இவைகளை ஈந்தனர். பின்னர் ஒவ்வொரு கைதிக்கும் நம்பர், கைதி உடையில் ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். குல்லாவை மாட்டியவுடன்தான், டார்வின் (Darwin) தத்துவம் உண்மையெனப்பட்டது. அவ்வளவு அழகான குல்லாய்! மனிதனைக் குரங்காக ஆக்கும் வன்மை அதற்கு அவ்வளவு

இருந்தது. மற்ற உடைகளைப் பற்றிதான் என்ன? ஒவ்வொன்றும் ஒவ்வொரு விநோதம். (பக். 102—3)

"அதெப்படியா? வார்டனுடைய தொப்பி இருக்கிறதல்லவா? அதுதான் கைதிகளின் பல சரக்குக் கடை. தொப்பிக்குள் வடை, முறுக்கு, ஏதாவது இனிப்பு, பீடி, சிகரெட், புகையிலை, பொடி, எல்லாம் அடங்கியிருக்கும். அதை அப்படியே தலையில் கவிழ்த்துக்கொண்டு வருவான். கக்கூசிற்குப் பக்கத்தில் பணங்கொடுத்த கைதிகளை மட்டும் பக்குவமாக அழைத்துச் சென்று பொருள்களைத் தருவான்."

(பக். 119-20).

இயற்கைப் புனைவு

"எத்தனையோ இரவுகள் தூக்கமின்றிக் கழிந்தன. பால் போன்ற வெண்ணிலவு வீசும் அப்பளிங்கு நிலவிலே பாருலகம் அனைத்தும் பாற்கடலில் மிதக்கும் காட்சியை ஒப்பப் பளபளக்கும். பச்சைப் பசேலென்று பரந்து ஓங்கிய பசு மரங்கள், பஞ்சுப் பொதி போல் வானில் மிதந்து செல்லும் வெண்மேகங்களை நிறுத்தி முத்திட்டு முகமலரும். அம்மலர்ச்சியைப் பச்சிலைகள் பளபளவென்று மின்னிக் காதலர்க்குக் காட்டும். கையில் மலரேந்திக் காற்றுத் தேவன் வருகைக்காகக் காத்திருக்கும் மலர்க்கொடிகள். காற்றுத் தேவன் மெல்ல வருவான். 'கொடிகாள்!' என விளிப்பான். கொடிகள் சிரம் தாழ்த்திக் கரங்களிலுள்ள கடிமலர்களை அவன் காலடியில் சிந்தும். பக்திப் பரவசத்தால் அவைகள் உடல் சிலிர்த்துக் களிக்கும்.

இந்த இன்பம் நிறைந்த இரவில்தான் அதோ கண்ணன் தன்னுடைய வீட்டிலுள்ள மொட்டை மாடியின் மீது நின்றிருக்கிறான். அவனுக்கு முன்னே மூன்று இலவ மரங்கள் காய்த்துக் காட்சி ஈந்தன. அவ்வெண்ணிலவில் அழகிய இளம் பெண்கள், திருவிளக்கைச் சுற்றிக் கும்மியடிப்பது போல் வௌவால்கள் இலவங்காய்களைச் சுற்றி வட்டமிட்டன. கண்ணன் இமைகொட்டாது இலவமரத்தை நோக்குவான். காய்களைக் காண்பான். வௌவால்களைப் பார்ப்பான். இலவு காத்த வௌவால்கள் போன்று தன் காதற் கனவும் ஒருகால் ......

அவனால் மேலே எண்ண முடியாது. பால் நிலவைப் பார்ப்பான். பரந்த வானைப் பார்ப்பான். விரிந்த கடலையும் எண்ணுவான். அவனுடைய கற்பனைச் சிறகு முளைத்துப் பறக்க ஆரம்பித்துவிடும்.

வானம் வனப்பு நிறைந்த ஒரு வனிதை. கடல் காளைப் பருவம் வாய்ந்த இளைஞன். கடற்காதலன் தன்னிடத்திலுள்ள அளவற்ற முத்துக்களை அள்ளி வான் காதலியின் மீது வீசுகிறான். அவனுடைய தலையிலும் உடையிலும் முத்துக்கள் நின்று ஒளிர்கின்றன. அதைக் கண்ட கடற் காதலன் களிவெறி கொள்கிறான். தன்னிடத்திலுள்ள தலை

சிறந்த ஒரு முத்தை எடுத்து அவள் மீது வீசுகிறான். முத்தின் பருமனை யும் எழிலையும் பார்த்த வான மங்கை அதை எடுத்து மறுபடியும் கடற் காதலன் மீது வீசியெறிகிறாள். அவ்வாறு அவர்களிருவரும் வீசி விளை யாடும் முத்துத்தான், நிலாவெனப் பெயர்கொண்டு கடலினின்றும் போந்து கடலிலேயே விழுகிறது." (பக். 45—46).

8. சொல்லோவியம்

அவளை அடுத்து நிற்கும் நடுத்தர மங்கையின் இடுப்பிலே ஒரு பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தை. அவருடைய கையைப் பிடித் துக்கொண்டு மற்றொரு சிறுவன். சேலையின் தலைப்பைப் பிடித்துக் கொண்டு பிறிதொரு பையன். தங்களின் அன்னை அழுவதைக் கண்ட வுடன் அந்தச் சிறுவர்களும் ஓலமிடும் பரிதாபக் காட்சி!

9. ஆங்கில ஆட்சியின் கொடுமை

"எட்டு வயதுடைய விளையாட்டுச் சிறுவன் ஒருவனை, ரயில் பாதையில் ஆணி ஒன்றைக் கழற்றி விட்டான் என்று குற்றம் சாட்டிக் கழுவேற்றினர்". (பக் 12.)

* * *

"அதோ! சதா மூலையில் உட்கார்ந்துள்ள நடுத்தர வயதுள்ளவர் ஒரு குதிரை வண்டிக்காரர். அவருக்கு ஒரு மனைவி, ஒரு வயது வந்த மகள். போலீசாருக்குப் பயந்து அவர் எங்கேயோ ஓடி ஒளிந்திருந்தார். போலீஸ்காரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? மனைவியை நிர்வாணமாக் கினர். கழுதை மேலேற்றினர். ஊர் சுற்றிவரச் செய் தனர். மகளின் கற்பும் சூறையாடப்பட்டதாம். எவ்வளவு பயங்கரமான காட்சி: ரத்தம் உறைந்து போகிறதல்லவா? காட்டுமிராண்டித்தனத்தின் கடைசிப்படியை அடைந்து விட்டார்கள் அல்லவா?" (பக். 104)

* * *

"இந்த அரசாங்கம் இன்னும் எத்தனை நாட்களுக்கு உயிர் வாழும்? இதைப் போன்ற எவ்வளவு கொடுமைகள்? உண்மையைக் கூற மறுத்தால், நகக் கண்களிலே ஊசி ஏற்றுவார்களாம். இதுதான் போகட்டும். 'உயிர்நிலையில்' ஊசி போன்ற கூர்மையான குச்சியைக் குத்துவதா? இது தான் நாகரிகத்தைக் கறுப்பர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் முறையா? இதுதான் ஜனநாயகமா? எங்கே ஜனநாயகம்?" (பக். 105)

10. சிறை வாழ்க்கை

அந்த நிலையத்துக்குள்ளேயே உள்ள ஒரு காவல் அறையில் (Lock up) அவனைத் தள்ளித் தாளிட்டனர். அதில் ஏற்கெனவே எட்டுப் பேர் இருந்தார்கள். முதன் முதலில் அந்த அறையில் நுழைந்தவுடனே மூத்திர நாற்றம் அவன் மூக்கைத் துளைத்தது. சுற்று முற்றும் பார்த்தான். ஒரு மூலையில் இரண்டு சட்டிகள் இருந்தன. இரவும் பகலும் அந்தச் சட்டிகள்தான் கக்கூஸாக இருக்கும் அந்தக் கைதிகளுக்கு.

பின்னர் அறையின்மீது அவன் கண்கள் சென்றன. இடுப்புவரைக்கும் சுவர் முழுவதும் கறுப்பு நிறமான தார் அடித்திருந்தார்கள். தரையிலும் தார் பூசி இருந்தார்கள். இது எதற்காக? ஒருவேளை கைதிகளின் உடலை வெப்பமாக்கிக் கண் பார்வையை மங்கச் செய்வதற்காக இருக்கலாமோ? இதற்குள் ஒருவன் 'அம்மாடி!' என்று திரும்பினான். அவனுடைய ஓலத்தை அடுத்து, உப்புப் பூத்திருந்த சுவர் 'பொல பொல' வென்று உதிர்ந்தது.

எட்டுப் பேரிலே மூத்து நரைத்த ஒரு கிழவன் இருந்தான். கண்ணப்பன் அந்த அறைக்குள் தள்ளப்பட்டதைக் கண்டு அவனுடைய முகத்திலே துன்பக் குறிகள் தோன்றின.

"சாமி! நீங்க காந்தி கட்சிக்காரர்தானே?" என்று கேட்டான் முதியவன்.

"ஆமாம்!" என்றான் கண்ணப்பன்.

"இதுதான் சாமி நரகம்! கீழ் லோகத்திலே ஏதோ நரகம் இருக்குதுன்னு சொல்றுங்களே! அதெல்லாம் சுத்தப் பொய்யுங்க; அட்டக்குழி அரணக்குழியெல்லாம் இதுதானுங்க!" (பக். 23-24)

* * *

கண்ணப்பன் மல்லாந்து படுத்துக்கொண்டே தன் அன்புத்தாய், தங்கை இவர்களின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். மணி இரண்டு, மூன்று, நாலு அடித்தது. தூக்கம் கண்ணை மூடியது. அப்போது அவன் தலையில் சில்லென்று ஏதோ பட்டது. எழுந்து பார்த்தான் நீர்! இங்கே எப்படி நீர் வந்தது? சரி, சரி. இருளில் (அறையில் விளக்கிருக்காது) மூத்திர சட்டி நிரம்பி இருப்பதை அறியாது யாரோ மேலும் நிரப்பி இருக்கிறார்கள். அது கோடி போய்விட்டது! அறை முழுவதும் பெருக்கெடுத்து விட்டது.

'இதைக்கண்டு அழுவதா! சிரிப்பதா! அந்தோ! காலமெல்லாம் குடிசையில் வாழும் ஏழைகூட இம் மாதிரி மூத்திரத்தில் காலங் கடத்துவானா; நச்சு அறையிலே வசிப்பானா! நாகரிகமுள்ள மக்களைத் தண்டிக்கும் விதம் இதுதானா' (பக். 26-27)

சிறைக்குள் நுழைந்ததும் சில சடங்குகள் நிறைவேறின. ஒவ்வொருவரின் ஆடையையும் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு இரண்டு கால் சட்டை, இரண்டு பனியன், இரண்டு தொப்பி, இரண்டு துண்டு இவைகளை ஈந்தனர். பின்னர் ஒவ்வொரு கைதிக்கும் நம்பர், கைதி உடையில் ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். குல்லாவை மாட்டியவுடன்தான், டார்வின் (Darwin) தத்துவம் உண்மையெனப்பட்டது. அவ்வளவு அழகான குல்லாய்! மனிதனைக் குரங்காக ஆக்கும் வன்மை அதற்கு அவ்வளவு இருந்தது. மற்ற உடைகளைப் பற்றிதான் என்ன? ஒவ்வொன்றும் ஒவ்வொரு விநோதம்.

படுப்பதற்காக ஒரு சணல் நார்ப் பாய், இரண்டு கம்பளிகள். அவைகளை உதறியதும், மூட்டைப்பூச்சிகள் 'பொலபொல' என்று உதிர்ந்தன. பின்னர்ச் சாப்பாட்டுக்குக் கூட்டிச்சென்றனர். பாடையில் சவத்தை வைத்துத் தூக்கி வருவதுபோல் அச்சடித்த கட்டியைத் தூக்கி வந்தனர். கரிய நிறம். அரிசி எப்படி அவ்வளவு கறுப்பாக இருக்கும் என்று அனைவருக்கும் புதிராக இருந்தது. அடுத்தாற்போல் சாம்பார். அது ஒரே களிம்பேறிய வாசனையாக இருந்தது. உண்பதற்காக வாய்க்குப் பக்கத்தில் கொண்டு போனால் போதும். ஒரே குமட்டல். அந்தக் கறுப்பு நிறமான சோற்றுக் கட்டியும் களிம்பேறிய குழம்பும் ஒவ்வொருவரையும் சிந்தனையில் ஆழ்த்தியது. இறந்த காலத்தைக் கனவாக்கி, நிகழ்காலத்தைத் துன்பம் நிறைந்ததாக்கி எதிர்காலத்தை ஏக்கமாக்கி ஒவ்வொருவரையும் வதைக்கும் திறமை, சிறைசாலைக்கு இருப்பதைக் கண்டு அஞ்சினர். "பழக்கப்பட்டு விட்டால் சரியாய்ப் போய்விடும்" என்று பக்கத்திலே இருந்த ஒரு தேச பக்தர் ஆறுதல் சொன்னார். (பக். 102-103).

* * *

அன்று வெள்ளிக்கிழமை. திடீரென்று வார்டர்கள் அனைவரும் விசில் (Whistle) ஊதினார்கள். ஓயாமல் ஒருவர் மாற்றி ஒருவர் ஊதினர். அவ்வோசையைக் கேட்ட தேச பக்தர்கள் அங்குமிங்குமாகச் சிதறியோடினர். தடியைச் சுற்றிக்கொணடே எதிரே சிக்கியவர்களின் எலும்பை நொறுக்கினர் வார்டர்கள். எலும்பு முறிந்து நிற்க மாட்டாது கீழே சாய்வர் "கைதிகள்." அப்பொழுதும் அயராது அடிப்பர். அக் காலத்தில் சிறை அதிகாரியாக ஓர் ஐரோப்பியர் இருந்தார். அவர்தான் தேச பக்தர்களுக்குப் பாடங் கற்பிக்க முன் வந்த "பிரகஸ்பதி".

தடியர்கள் தன்னைப் பின்தொடரப் பரந்த அறையில் நுழைந்தான். ஒருவரைத் தடியால் மண்டையில் தாக்கினான். அவருடைய மண்டை பிளந்தது. ரத்தம் பெருக்கெடுத்தது. ஆனால், அவர் அஞ்சவில்லை; காப்பாற்றுங்கள் என்று அந்த மிலேச்சனைக் கெஞ்சவில்லை.

"வந்தேமாதரம், மகாத்மா காந்திக்கு ஜே" என்று முழங்கினார் அந்த அன்பர்.

அதைக் கண்ட அந்த அதிகாரி புலிபோல மீண்டும் பாய்ந்தான். அன்பர் மயக்கமுற்று வீழ்ந்தார். (பக். 106).

11. பொருளியல் போராட்டம்:

"நாங்கள் எட்டுப் பேரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவங்க சாமி! பறப்பட்டு ஜமீன்தாரின் கீழ்ப் பண்ணையாட்கள். ஜமீன்தார் குழந்தையின் கழுத்திலுள்ள தங்கச் சங்கிலியை யாரோ களவாடிவிட்டார்கள். அது காரணமாக முதன்முதலில் என்னுடைய மூத்த மகனை ஜமீன் தாரின் ஆட்கள் தூணில் கட்டிவைத்து புளியமாற்றால் விளாசினார்கள். பையனுக்காகப் பரிந்து வந்த எங்கள் எல்லோரையுமே அதேமாதிரி விளாசினார்கள். அவர்கள் வீடு பாழாய்ப் போக. பாருங்கள் சாமி முதுகை!" என்று கிழவன் கண்ணீர் விட்டுக்கொண்டே காட்டினான்.

"அம்மாடீ! மனிதனா இவ்வாறு மனம் வந்து அடித்தான்?"

"ஆமாஞ் சாமி? ஜமீன்தாரே பக்கத்தில் இருந்தார். பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றார்".

"என்ன செய்வது? ஏழைகளாகப் பிறந்ததன் பாவம் அது. அப்புறம்?" (பக். 25).

* * *

எந்த நாட்டில் மக்கள் வறுமையற்று வாழ்கிறார்களோ அந்த நாட்டின் சர்க்காரே நல்ல சர்க்கார். மற்ற சர்க்கார்களை மாற்றி அமைக்கவேண்டும். அல்லது அம் முயற்சியிலே மாண்டுபோக வேண்டும். இந்தக் கருத்தை மகாத்மா காந்தியடிகள் இளைஞர்களின் உள்ளத்திலே ஆழப் பதியுமாறு அன்று செய்தார். அதன் விளைவு தான் கண்ணப்பன் முதலானோர் கைது செய்யப்பட்டதும், அவன் தாய் முதலியோர் அல்லற்பட்டு ஆருயிர் மைந்தனை எண்ணி எண்ணி அழுது நாட்களைக் கழித்ததும். (பக். 29).

* * *

"தனிச் சொத்துரிமையே குற்றங்களுக்கெல்லாம் பிறப்பிடம்" என்று மார்க்சும் அறிவித்துள்ளான். சமூகத்தைக் குற்றமற்ற சமுதாயமாக்க—வறுமையற்ற வள நாடாக்க ஏன் தனிச் சொத்துரிமையின் மீது கைவைக்கக் கூடாது? பண்டித ஜவஹர்லால் கூட, மார்க்ஸ் சித்தாந்தம் இந்திய மண்ணுக்கு ஏற்றபடி மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றுதானே கூறுகிறார்கள்?" (பக். 51)

போலீஸ்காரர்கள் அவன் தற்கொலை செய்ய முயன்றதாக அவனைக் கைது செய்தனர். அவன் விசாரணையின்போது நீதிபதியைக் கேட்டான்: "வாழ வகை செய்யாத அரசாங்கம் நான் சாவதை ஏன் தடை செய்யவேண்டும்? இந்தியாவிலே படித்தவர்கள் நூற்றுக்கு எட்டுப் பேர். இந்த எட்டுப் பேருக்கு வேலை கொடுத்து நிலைமையைச்

சமாளிக்க முடியாத அரசாங்கம், நாற்பது கோடி மக்களையும் ஆள முளை இருக்கிறது என்று சாற்றுவது வெட்கக் கேடல்லவா?" என்றான். உடனே நீதிபதி, கோர்ட்டை அவமதித்ததாக அவன் மீது மற்றொரு வழக்கும் பதிவு செய்தார். (பக். 54)

* * *

வட்டிக்கார மார்வாரி, அவனைச் சிறையில் தள்ளி விட்டான். வெளியே திக்கற்ற அவன் மனைவி, தன் மக்களுடன் தெருவில் திண்டாடிக் கொண்டிருந்தாள். ஆனால், அவர்களைப் பற்றிய கவலை மார்வாரிக்கும் அரசாங்கத்துக்கும் இருக்குமா? (பக். 55)

நாகரிகமுள்ள சர்க்கார் பெண்களின் கற்பைக் காக்கவேண்டாமா? வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டாமா? தொழிலாளியின் வாழ்க்கை நிலைக்கேற்ப அவன் சம்பளமும் உயர வகை காண வேண்டாமா? குழந்தைகளுக்குக் கல்வி அளித்து அவர்களை எதிர்கால மன்னர்களாக்க வேண்டாமா? இவைகளைச் செய்கிறதா ஆணவம் மிகுந்த இந்த வெள்ளை அரசாங்கம்? (பக். 55)

* * *

12. மூட நம்பிக்கை எதிர்ப்பு

வறுமைக்குக் காரணம் முன் பிறப்பில் செய்த வினை இல்லை என்பதை மட்டும் அவர்கள் அறிந்து கொண்டால் உடனே புரட்சிக்குக் கிளம்பி விடுவார்கள். அவ்வாறு அவர்கள் புரட்சி மலையின் மீது ஏற விடாமல் தடுக்கவே முன் வினைப் பயன் என்ற கோயில்களை அடிவாரத்திலேயே கட்டிவிட்டார்கள். அவர்கள் மனத்தில் ஆழப் பதியுமாறு அந்தக் காலத்திலேயே சில சுயநலக்காரர்கள் வலை வீசி விட்டார்கள். பிற்காலத்தில் புராணங்கள் அவர்களை என்றென்றும் அடிமைச் சேற்றில் ஆழப்பதியுமாறு அமிழ்த்தி விட்டன.

எனினும் பற்பல சமயங்களில் பசிக்கொடுமை அவர்களை அனைத்தையும் மறக்கச் செய்தது. இம்மாதிரியான சமயங்களில் ஏற்பட்டவைகள்தாம் பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, அயர்லாந்து, இந்தியா முதலிய நாடுகளின் உரிமைப் போர் முதலியவைகள்.

இந்தப் பிறவியில் எவ்வளவு துன்பத்தைப் பொறுக்கிறோமோ, அதற்கேற்ப மறுபிறவியில் இன்பத்தை நுகரலாம் என்னும் பித்தலாட்ட வேதாந்தம் நம் நாட்டு மக்களை அடிமைத்தனத்தின் கொடுமையையும் அமைதியாகப் பொறுக்கும்படி செய்து விட்டது. (பக். 28-29)

* * *

இவ்வளவும் பெரிதல்ல, ஆண்டவன் தயவைப் பெற வேண்டுமா? எல்லாவற்றிற்க்கும் பணமிருந்தால் போதும். (பக். 65)

* * *

13. சமூக ஊழல்

அவள் முதலில் ஒரு ஜில்லா போர்டில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தாள். நல்ல இளமை. வளமை துள்ளி விளையாடும் உடல். இவை ஜில்லா போர்டுத் தலைவரைக் கலக்கின. (பக். 51)

* * *

"உம்; இந்தப் போலீஸ் பயல்களைப் பற்றி நமக்கென்ன கவலை? அப்படி ஏதாவது 'எக்கச் சக்கமாக' அகப்பட்டுக் கொண்டால், நேரே கவர்னரிடத்திலேயே போகலாம்"

"கவர்னரிடத்திலா?"

"ஆமாம்! கவர்னரிடத்தில் சென்று, யுத்த நிதிக்காகக் கள்ள மார்க்கெட்டில் சம்பாதித்த பணத்தில், கால் பங்கு கொடுத்தால் போதும். எல்லாம் சரிப்பட்டுப் போய்விடும்." (பக். 67)

* * *

14. தமிழாசிரியர்கள்—கல்வி—பற்றி

"அடேயப்பா! எவ்வளவு தாராளம்! உங்களைப் போன்றவர்கள் தமிழ் ஆசிரியராக இருந்தால் மாணவர்களுக்கெல்லாம் நல்ல காலந்தான். என் ஆசிரியரைப்போல் லோபியாக இல்லாமல்..."

"என்ன விஜயா! உன்னுடைய ஆசிரியரை இவ்வளவு இகழ்ந்து பேசுகிறாயே!"

"என்ன மாமா, ஆசிரியராக இருப்பவர் யமன் வேஷம் போட வேண்டுமா? அவருடைய குணமும் அப்படித்தான். எப்போதும் 'சிடு சிடு' என்று விழுவார்".

"அப்படியானால் அவர் ஆசிரியப் பதவிக்குத் தகுதி இல்லைதான். எனக்கு வாய்த்த தமிழாசிரியர்களெல்லாம் மிகவும் உயர்ந்தவர்கள். மனிதப் பண்பாடு நிறைந்தவர்கள். உலகத்தோடு தொடர்புள்ளவர்கள். ஒட்டிய வயிறுள்ள ஏழைகளுக்காக உண்மையிலேயே ஏங்குபவர்கள்"

"அது மட்டுமல்ல மாமா! அவருக்குப் பேசக் கூடத் தெரியாது. மரத்திலிருந்து மாங்காய் பறிப்பது போல் அவர் வாயிலிருந்து கஷ்டப்பட்டுச் சொற்கள் விழும். இந்த லட்சணத்தில் அவருடைய தற்புகழ்ச்சி, அப்பப்பா—கேட்கவே சகிக்காது. தன்னைவிட ஆராய்ச்சி உள்ள ஆசிரியர் இந்த உலகத்திலேயே இல்லையென்பது அவர் எண்ணம். அவருடைய தலையும் கண்ணும் நிறமும் அசல் யமன் தான்".

"அப்படியானால் அவருக்காக இரங்க வேண்டியதுதான். தற்கால ஆசிரியர்களிடமிருந்து மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்கு உதவு

மாறு, எந்த விஷயத்தையும் கற்றுக் கொள்ள முடியவில்லை. பாடத்தைத் தவிர, மற்ற விஷயங்களில் இருவருடைய மூளையும் இருட்டுப் பாதையில்தான் நடந்து செல்லுகிறது''.

"ஆசிரியர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவர்களாக இருக்க வேண்டும். வாழ்க்கை வசன நடை போன்றது. அதை அணி பெற விளங்கும் காவியமாக்க வேண்டும். சொல்லுக்கு அலங்காரமும் யாப்பிலக்கணமும் சொல்லித் தருவதால் வாழ்க்கையின் இலக்கணத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. அதனால் வாழ்க்கையும் இனிக்காது. வாழ்க்கை இனிய ஓசையை எழுப்பும் யாழாக இருக்க வேண்டும். நறுநாற்றம் நாற்றிசையும் வீசும் நல்ல மலர்ச் சோலையாக அது விளங்க வேண்டும். கல்லூரிகள் இதற்கு வாயிலாக இலங்க வேண்டும். சரி விஜயா! நான் வரட்டுமா? நேரமாய் விட்டது''.
(பக். 98—99)

15. வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பதன் பயன்

"கனகவல்லி, கட்டிலின்மீது அமர்ந்து பகத்சிங்கின் சரித்திரத்தைப் படித்து கொண்டிருந்தாள். தன் தாய்க்காக, அதிலே பகத்சிங்கின் தந்தையும், ராஜகுருவின் தாயும் எவ்வாறு தம் மக்கள் நாட்டிற்காகத் தூக்குமேடையில் மரித்ததற்குப் பெருமைப் பட்டார்கள் என்பதை உணர்ச்சியோடு படித்துக் காட்டினாள். அவளுடைய கண்களிலும் தாயின் கண்களிலும் கண்ணீர் ஊற்றுப் பெருக்கென வழிந்தோடியது. கனகவல்லியின் கண்ணீர் மேலே தொடர்ந்து படிக்க முடியாதவாறு அவளுடைய கண்களை மறைத்தது. அவளுடைய தாய்க்கோ உடல் சிலிர்த்தது. ஒவ்வொரு உறுப்பும் நடுநடுங்கியது.''

"என்னடி கனகா! நீயுமா சேர்ந்து அழுகிறாய்?'' என்று வினவிக் கொண்டே விஜயா நுழைந்தாள்.''

"இல்லை விஜயா! நாங்கள் அழவில்லை. பகத்சிங்கின் சரித்திரத்தை அம்மாவுக்குப் படித்துக் காட்டினேன்.''

"நாங்கள் எதற்காக அம்மா அழுகிறோம். எனக்குக்கூட இப்பொழுது என் கண்ணனைப் பற்றிக் கவலையில்லை. எண்ணற்ற மக்களுக்காக அவன் உயிரை விட்டான் என்று உலகம் வாழ்த்தாதா? அது ஒன்றே எனக்குப் போதும்'' என்று உணர்ச்சியுடன் கூறினார் கண்ணப்பனின் அன்னை. (பக். 59—60).

* * *

"கனகா! அம்மாவுக்குக் காந்தி அடிகள், கஸ்தூரிபாய், திலகர், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலியோரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துக்காட்டு. அந்த "மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதையும், நூலோர்கள் செக்கடியில் நொந்ததையும்'' விளங்க எடுத்துக்

கூறு. ஏன்? '1842'—சுந்தரமூர்த்தியே பட்டேலின் ஓர் எட்டத்து எதிரொலி தானே! என்ன கனகா, தெரிகிறதா?" (பக். 91)

* * *

16. உளவியல்

தன்னுடைய மகளின் அரசியல் வாதத்தைக் கேட்டு மயங்கி நின்று விட்டார், அனுராதா ஆலையின் சொந்தக்காரரான சுவாமிநாதன். தன்னுடைய மகளுக்கு எதிரில், தன் கோழைத்தனமும், வெளிவேடமும் வெளியாவதை அவர் விரும்பவில்லை. ஆனால் அவளுக்கு விடை சொல்லவும் முடியவில்லை. இம்மாதிரியான சமயங்களில்தான் மனிதர்களுக்கு அளவுக்கு மீறி ஆத்திரம் வரும். தன்னிடம் பேசுவோரின் மனத்தைப் புண்படுத்திப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயலுவர்" (பக். 19—20.)

* * *

பின்னால் விலங்கு மாட்டிய கைகளுடன் இருவர் இருவராகத் தேச பக்தர்கள் "ராஜத் துரோகிகள்" என்ற பெயருடன் வெளியே வந்தார்கள். சுமார் 120 பேர்கள். கண்ணன் கடைசியில் வந்தான். வேண்டுமென்றேதான் அவன் அவ்வாறு வந்தான். மற்றவரைப் பார்த்தபின் தன்னைக் கண்டால் தன்னுடைய தாயின் உள்ளம் நிலைமையைச் சமாளிக்கும் என எண்ணினான். (பக். 32)

* * *

நம்மை அன்போடு நேசிக்கும் ஓர் உயிர் எங்கிருந்தாலும் சரியே. நம்முடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள அந்த அன்பர் என்றும் காத்திருக்கிறார் என்ற எண்ணமே நம் துயரத்தின் பெருஞ்சுமையைக் குறைத்து விடும். (பக். 58).

* * *

அவனுடைய அன்பையும் தன் காது குளிரக் கேட்டுத் தெரிந்து கொள்வதன் மூலம் எல்லையற்ற இன்பம் மலர்ந்து மணம் வீசும் எனவும் மனங் கொண்டாள். (பக். 58).

* * *

"எதிர்பாராவிதத்தில் ஒருவருக்குத் துன்பம் ஏற்பட்டுவிட்டால் அந்தத் துன்பமும் துயரத்தைக் கொடுக்கும் வேதனையாக மாறி விட்டால், அவர்களுக்குச் சோக நாடகங்கள் படிப்பதிலே ஆறுதல் கிடைக்கும். துன்பம் சூழ்ந்தவர்கள் காலத்தின் சூழ்ச்சியாலும் வஞ்சகர்களின் கொடுமையாலும் வேதனைப் படுபவர்களைக் கண்டால் தங்களுடைய உளநோயைப் பெரிதும் எண்ணுவதில்லை.

ஆனால், இதற்கு நேர்மாறான மனப்பான்மை இன்ப காலத்தில் ஏற்படுகிறது. தன்னைப் போல் பிறரும் செல்வர்களாக வாழ மற்ற

வர்கள் விரும்புவதில்லை. செல்வ நிலையில் பொறாமை கொழுந்து விட்டு எரிகிறது. இதன் காரணம் என்ன? நன்கு ஆராய்ந்தால் அதன் உற்பத்தி, சொத்துரிமையென்பது புலப்படும். தன்னைவிடப் பணக் காரனாய் மற்றவன் இருப்பதால் தன்னுடைய செல்வாக்கும் மதிப்பும் குறைந்து விடுமென ஒவ்வொரு பணக்காரனும் கருதுகிறான். உடனே அவனுடைய நெஞ்சில் பெரும்பேய் புகுந்து விடுகிறது". (பக். 59)

17. உண்மைகள் :

'ஏழைகளுக்கு வாழ்க்கையென்பது ஓயாத போர்க்களம்' (பக். 28)

* * *

'ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் கெட்டிக்காரர்' (பக். 29)

* * *

'தாயின் அன்பைவிடத் தன்னலமற்ற தூய அன்பு இந்த உலகத்தில் உண்டா?' (பக். 31)

* * *

'பணக்காரர்களுக்கு வாழ்க்கையென்பது ஒரு சூதாட்டம்' (பக். 35)

* * *

'மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சியம் இருக்க வேண்டும். அந்த லட்சியக் கோவிலை நிர்மாணிக்கத் தகுந்த திட் டங்கள் இடவேண்டும். அத் திட்டப்படியே முன்னேறிச் செல்ல வேண்டும். துன்பம் குறுக்கே நிற்கலாம். ஆனால், அதைத் தூர விலக்காது ஒதுங்கிச் செல்லவேண்டும். இன்பம் இடையிலே மயக்க லாம். மயங்காமல் அதை மாயம் என்று எண்ணி ஏகவேண்டும். இவ்வாறு திட்டமிட்டு வாழ்வுப் படிகளில் அடியெடுத்து வைத்தால், வாழ்க்கைப் பூங்காவின் மென்காற்றை நுகரலாம்.' (பக். 35)

* * *

'வீடும், நாடும் இரண்டும் ஒன்றுதான். திறமையாக வீட்டின் வரவு செலவுக் கணக்கைச் சரிக்கட்டும் ஒருவன், அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தையும் தயாரிக்க முடியும்.' (பக். 35-36)

இரக்கத்தின் காரணமாகவே துன்பப்படும் இயல்பு வாய்ந்தவன். (பக். 36)

இதனால், அவனைத் தொழிலாளர்கள் ஒரு 'ராபர்ட் ஓவன்' என் றனர். இன்னுஞ் சிலர் 'ஏங்கல்ஸ்' என்றனர். வேறு சிலர் சரி யான 'குள்ள நரி' என்றனர். (உலகம் நல்லதும் பேசும்; கெட்டதும் பேசும்!) (பக். 37)

உண்மை பேசுவது அவ்வளவு பயங்கரமான குற்றமா? (பக். 56)

* * *

"மனமா! ஏழைகளுக்கு எப்போதுமே மனம் உண்டு விஜயா. ஆனால்? பணக்காரர்கள்தான் மனம் என்று ஒன்று இருப்பதாகவே எண்ணுவதில்லை." (பக். 62)

* * *

"அப்படியானால் எங்களுடைய ஏழ்மை நிலையைக் கண்டு இரங்கிக் கொடுக்கிறாயா! இரக்கம் சிறிது நேர உணர்ச்சிதான். இன்று நூறு கொடுப்பாய். நாளை ஐம்பது பின்னர் இருபது. நாளடைவில் எங்களைக் கண்டாலே உணர்ச்சி என்பதே உனக்கு அற்றுப் போய் விடும்! பின்னர் வெறுப்பும் வெளிக்கிளம்பும்." (பக். 63)

* * *

"பிறருடைய இன்பத்தைக் காணப் பலருக்குப் பிடிப்பதில்லை. இன்பங் கமழும் பூங்காற்றில் நஞ்சைக் கலக்கப் பலர் கங்கணம் கட்டிக் கொண்டு திரிகிறார்கள். இவர்களை மனிதர்கள் என்று நாம் எப்படிச் சொல்வது? நாய்கள் என்று கூறலாம். ஆனால், அது நாயின் மதிப்புக்கு ஏற்றதல்ல. கொள்ளை நோய்க் கிருமிகள் என்று கூறத்தான் மனம் வருகிறது." (பக். 93)

* * *

"எதற்காக நீங்கள் இப்படிப் பயப்படுகிறீர்கள்? பணமிருந்தால் இந்த உலகத்தில் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. பணத்திற்கு இருக்கும் வன்மை விஷத்திற்குக்கூட இல்லை. கெட்ட குணத்தை மறைக்க வேண்டுமா? அநீதியை நீதி என்று நிரூபிக்க வேண்டுமா? அறிவாளிகளை விலைக்கு வாங்க வேண்டுமா? புகழ் வேண்டுமா? பட்டம் வேண்டுமா? பதவி வேண்டுமா? அழகான இளம் பெண்களை மனைவிகளாக்கிக் கொள்ளவேண்டுமா? அரசியல் தலைவர்களின் செல்வாக்கைப் பெறவேண்டுமா? இவ்வளவும் பெரிதல்ல, ஆண்டவன் தயவைப் பெறவேண்டுமா? எல்லாவற்றிற்கும் பணமிருந்தால் போதும்." (பக். 65)

* * *

"போர் என்றாலே பொருள் விரயம் என்று அர்த்தம். எனினும், பொருளைப்பற்றி எந்த நாடும் பெரிதாக எண்ணுவதில்லை. போர்க் காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒவ்வொரு நாடும் செலவழிக்கிறது. நஷ்டத்தைப்பற்றி எந்த நாடும் கவலைப்படுவதில்லை. இறுதியில், தங்களிடமுள்ள வளம் எல்லாம் வற்றிய பின்னர் இருதரப்பாரும் ஓய்ந்துபோவார்கள். போர் முடியும். பொருளாதார நெருக்கடி உலகத்தை நெருக்கும். அப்பொழுதுதான் போரின் விபரீதங்களை அரசாங்கங்கள் உணரும். நெருக்கடியைச் சமாளித்தபின், மறுபடியும் போர் வானில் பறக்க அவைகளுக்குச் சிறகு முளைத்து

விடும். தொன்றுதொட்டு வரும் இந்த அரசியல் பித்தலாட்டமும் பணக்காரர்களின் சீட்டாட்டமும் ஒன்றுதான்.'' (பக். 78)

(இப் பகுதியைப் படிக்கும்போது அண்மையில் எழுந்த அரபு—இஸ்ரேல் போரும் நினைவுக்கு வருகிறது அல்லவா?)

* * *

"அன்று இறந்தவர் இருவர். ஒருவர் மழை காணுது வாடி இறக்கும் பயிர்போல் சாய்ந்துவிட்டார். மற்ருெருவர் பசியடங்கா ஓநாய்போல், ஆசை அடங்காக் காரணத்தால் அழிந்துவிட்டார், மேலான அன்பு ஒருவரை அழித்துவிட்டது. மற்றவரைக் கீழான பேராசை கிழித்தெறிந்துவிட்டது. அன்பு மகனைக் காணுது. ஏங்கிச் செத்தது ஓர் உருவம். மற்ருெரு உருவமோ, குன்று போன்ற நிதி, ஓங்கிய குவடுபோல் ஆகாதது கண்டு, தனக்குத்தானே குழிபறித்துக் கொண்டது. இவ்வாறு ஒன்றுக்கு ஒன்று நேர்மாருன குணங்களின் முடிவு ஒன்ருய் இருப்பதையே நாம் இவ்வுலகில் காண்கிருேம்.''

(ப. 146)

* * *

"மனிதன் பிறக்கும்பொழுது சுதந்திரத்துடனேயே பிறக்கிருன்'' என்ருன் ரூஸோ. இந்த வாக்கியம் முற்றிலும் உண்மையா என்பது ஆராய்ச்சிக்குரியது. ஆனுல், மனிதன் சாகும்பொழுதுதான் சமத்துவமாகச் சாகிருன் என்பது மட்டும் உண்மை. சாவுக்கிருக்கும் வன்மை எந்தச் சர்வாதிகாரிக்கும் இருக்கமுடியாது. சாவுதான், ஏழையையும் பணக்காரனையும் ஒரே மாதிரி நடத்துவது. செத்த பின்னர், இருவரின் நிலையும் ஒன்றுதான். எரிந்த பின்னர் எல்லோரும் பிடி சாம்பல்தான். இதை எண்ணுது எவ்வாறு ஆரவாரிக்கின்றனர் மக்கள்! "சாவே! நீதான் சரியான கம்யூனிஸ்ட். மற்ற கம்யூனிஸ்டுகள் போலிகள்'' என்று எண்ணினுன் வடிவேலன். (பக். 148)

* * *

18. வாழ்க்கை வருணனை :

துப்பாக்கி ஏந்திய ராணுவ வீரர்களும், போலீஸ்காரர்களும், தெருவில் இங்குமங்கும் சுற்றிக்கொண்டிருந்தனர். அங்குமிங்குமாகச் சில சொறி பிடித்த தெரு நாய்கள் அந்த இரவில்கூட நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு இங்குமங்கும் அலைந்தன. தன் இனத்தைக் கண்டவுடன், 'வள்வள்' என்று குலைக்கும் இந்த நாய்களின் கூக் குரலும், ராணுவ வீரர்களின் பூட்ஸ் ஒலியும், தெருக்களின் அமைதியைக் கலைத்தன. சுடுகாட்டில், ஓநாய்கள் ஓலமிட்டுப் பயங்கர அமைதியைக் கலக்கியதுபோல் அந்தச் சிறு நகரத்தின் அமைதியும் கலக்குண்டு சோகங்கலந்து, சோர்வுற்று வாடியது. (பக். 10-11)

அனுராதா ஆலை முதலாளி சுவாமிநாதன் :

"அவர்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். அவர்களோடு சேர்ந்து நானும் பலாத்காரச் செயலில் ஈடுபட வேண்டுமா? அதுதான் தேச பக்தியா? நான் உண்மையான காந்தீய வாதி." (பக். 19)

"உன்னுடைய தந்தையின் எதிரிகளிடம் கருணை காட்டு : என்று நீ படித்த நூல்கள் கூறுகின்றன? சீச்சீ!" என்று கூறிக்கொண்டே அறையினின்றும் வெளியேறிவிட்டார் அந்தப் பணக்கார தேசபக்தர். (பக். 20)

* * *

19. இயற்கைப் புனைவு—குறிப்பு :

பரந்த வானில் சில விண்மீன்கள் மண்ணைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தன. அவ்வேளையில் கைதிகள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்தனர் போலீஸார். (பக். 90-1)

* * *

இரவு இரண்டு மணி அடித்தது. காற்று 'சிலுசிலு' என்று வீசிக் கொண்டிருந்தது. மரக்கிளைகளில் குடி இருந்த பறவைகள் ஒரு மணியிலிருந்தே கத்திக்கொண்டிருந்தன. வானத்தில் அவ் வேளையில், இரண்டு பறவைகள் தென்திசை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. அப் பறவைகளின் இரைச்சலைத் தவிர, அவ்விரவில் வேறு ஓசை எதுவும் கேட்கவில்லை.

கனகாவின் தலைமயிர் அவளுடைய தோள்மீது படிந்து கிடந்தது. அவளுடைய தாய் அச் சமயத்தில், "கண்ணு" என்று ஈனக் குரலில் அழைத்தார். படுக்கையிலிருந்து திரும்பிப் படுத்தார். 'கர்...ர்....ர்' என்ற சப்தம். "அம்மா!" என்று அப் பக்கம் ஓடினாள் கனகா. திடீரென்று ஒரு பேய்க் காற்று எரிந்துகொண்டிருந்த விளக்கையும் அணைத்துவிட்டது.

அதே சமயத்தில் எங்கிருந்தோ ஒரு சப்தம் 'டுமீல்' என்று கேட்டது. 'அப்பா' என்று அலறி எழுந்தாள் விஜயா. (பக். 138)

* * *

குடிசைக்கு வெளியே வானும் மண்ணும் உருவந் தெரியாவண்ணம் கலந்து உலகப் பொருள்கள் அனைத்தையும் ஆட்டி அசைத்துக்கொண்டிருந்தன. அப்போது அவர்களின் குடிசைக்கு அருகே இருந்த ஒரு வாகை மரத்தின்மேல் ஒரு பேரிடி விழுந்தது. உடனே தீப்பற்றி எழுந்தது. அடுத்த விநாடியே கொட்டிய பெருமழை அதை அடக்கி அவித்தது. அதனால், அப் பெருமரத்தின் ஒரு பகுதி மட்டும் கருகிக்

காணப்பட்டது. மழையின் கருணையால் மரமும் சாகாமல்—வெந்து அழியாமல் தப்பியது. (பக். 154)

(காதலன் கண்ணப்பனும், காதலி விஜயலட்சுமியும் தன் பெற்றோர்களை இழந்ததைக் குறிப்பிடுகிறதோ?)


முடிவுரை :

திரு. கு. இராசவேலுவின் நாவலில் குறிக்கத் தகுந்த நான்கு பண்புகள் வருமாறு :

1. 1942-க்கு முன்னும் பின்னுமான இந்திய அரசியல்/பொருளியல்/சமூகவியல், சிந்தனைகள்.
2. பாத்திரங்களின் உரையாடலிலும் அளவுக்கு அதிகமான செந்தமிழ் நடை.
3. இயற்கை - இலக்கிய ஈடுபாடு.
4. இலட்சிய - அன்பு நெறி ஊற்றம்.

"அன்பு செய்ய முடியாதவர், இவ்வுலகத்தில் என்றும் இடர் நீங்கி வாழமுடியாது. அன்புக்கிருக்கும் ஆற்றலை உலகத்திலிருக்கும் பலாத்கார சக்திகள் அனைத்தும் ஒன்றுகூடி எதிர்த்தால்கூட முறியடிக்க முடியாது. பெருங்குடி மக்களால் செய்யமுடியாத செயலைச் செய்யவும், பொறுக்கமுடியாத சீரிய எண்ணங்களை எண்ணவும் அன்பு ஒன்றினால்தான் முடியும். அன்புடைய நெஞ்சம் அன்பைக் காக்க உலகத்தையே தோற்க வேண்டிவரினும் அதைத் தோல்வியாக நினையாது. அன்பை விற்பதால் அவனி ஆட்சியே கிட்டினும், அதைப் பொருளென்று மதியாது. அணுகுண்டு ஆட்சிபுரியும் இக்காலத்திலும்கூடத் தரணியைக் காப்பது அன்புதான். இங்குமங்கும் உலவிக்கொண்டிருக்கும் அன்பு இல்லையேல் இந்த உலகமும் என்றைக்கோ அழிந்து போயிருக்கும். ஞாயிற்றின் கனலும் அவிந்திருக்கும்." (பக். 139)

* * *



'1942' தொடக்கமும் சுடுகாடு; முடிவும் சுடுகாடு. ஏன்?

திரு இராசவேலுவின் '1942' தொடர்நிலைக் கதையில் மிகச் சிறந்த பாத்திரம்—சிலப்பதிகார மாதவி போன்ற மிகச் சிறந்த பாத்திரம்—சுந்தரமூர்த்தி எனலாம். தடுமாறு உள்ளத்தினனாக இருந்த அவனை—வேடிக்கை மனிதனாக வாழ்ந்த அவனை—'இரசவாதம்' செய்த இலட்சிய விளக்கு—மாந்தருக்குள் ஒரு தெய்வம்—வடிவேலு! அதன் பயன், சூதும் மாதும் என்றிருந்த சுந்தரமூர்த்தி கண்ணப்பனை விடுதலை செய்ய வடிவேலுவிற்கும் வாய்ப்பளிக்காமல் அலிப்புரம் சிறையில் அடைபட்டான்!

எவ்வளவோ இலக்கிய மேற்கோள்கள் மிதக்கும் திரு இராச வேலுவின் நாவலில்

'உண்டா லம்மஇவ் வுலகம்'

என்ற புறம் புலப்படவில்லை! ஆனால் அதுவே அவர் எண்ணத்தின்—எழுத்தின் அகம்!

இயல்பாகவே இலட்சிய மனிதர்களாக இருக்கும் 'பெரியோரை வியத்தல்' எளிது, இனிது. ஆனால் சிறியோரை 'அதனினும் இகழா'து விடுவதோடு அமையாது சிறியோரைச் சிறந்தோரினும் சிறந்தோராக்குவதே—கடையனுக்கும் கடைத்தோற்றம் காண்பதே—காட்டுவதே—காந்தி அடிகளின் கட்டளை. இயக்கத்தால் விளைவது இலக்கியம்; இலக்கியத்தால் விளைவது இயக்கம். முன்னது பெரிது; பின்னது அரிது. இதற்கோர் எடுத்துக்காட்டு—'1942'.

'1942'ல் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு மட்டுமின்றி மொழிப்பற்று—இலக்கியப்பற்று—பொதுவுடைமைப் பற்று—பகுத்தறிவுப் பற்று—ஏன்? மார்வாரி வட்டிக்கடை எதிர்ப்பு-எல்லாம் இருந்திருக்கிறதே! எது இருந்தாலும் போனாலும் கவலையில்லை! '1942' புயலின் மையம்—பொதுவுடைமை—என்னாயிற்று? புதுப்புயல் தேவையோ? காற்றழுத்தம்—கருத்தழுத்தம் கண்டால் புழுக்கம்—எண்ணப் புழுக்கம் ஏற்பட்டால் புயல் எழுமே!

கலைஞர் உள்ளம் ←→ உலகம் ←→ உரை ←→ சுவைஞர் உள்ளம்

இணைப்பு 1

கு. ராஜவேலு, எம். ஏ.

(தன் வாழ்க்கைக் குறிப்பு)

தந்தையார்	இர. குருசாமி முதலியார்
தாயார்	குழந்தையம்மாள்
பிறந்த நாள்	20—6—1920
தொடக்கப்பள்ளி	ஸ்ரீ லட்சுமி நரசிம்ம தொடக்கப்பள்ளி (இப்பள்ளி எங்களுடைய குடும்பத்தாரால் 1900-ம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது).
உயர்நிலைப் பள்ளி	லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம். 7-வது வகுப்பு வரை.

பின்னர்த் தந்தையார் ஈரோட்டிற்குச் சென்றார். ஈரோட்டில் இந்து மகாஜன உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன். 1935 ல் அரசியல் நடவடிக்கைகளுக்காக அவ்வுயர்நிலைப் பள்ளியினின்றும் வெளியேற்றப் பட்டேன். அச்சமயத்தில் சேலம் லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளியின் தலைவராக (Principal) பெர்னார்ட் தாமஸ் என்னும் ஓர் ஆங்கிலேய அறிஞர் இருந்தார். அவர் தடங்கலின்றி என்னை அப்பள்ளியில் மீண்டும் சேர்த்துக் கொண்டார்.

1931-32ல் லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளிக்கு ‘லார்டு வெல் லிங்டன்’ வந்தார். அப்போது காந்திக் குல்லாயுடன் வகுப்பில் உட்கார்ந்து இருந்தேன். வகுப்பு ஆசிரியர் காந்திக் குல்லாயை நீக்கி விடுமாறு சொன்னார். நான் மறுத்துக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில் லார்டு வெல்லிங்டனும், முதல்வரும் வகுப்பிற்குள் நுழைந்தனர். பிற்பகலில் தலைவர் என்னையும் வகுப்பாசிரியரையும் அழைப்பதாக ஆள் வந்து கூப்பிட்டான். தலைவர் (பிரின்ஸ்பால்) செம்மையாக அடிக்கப் போகிறார் என்று நினைத்துக்கொண்டு சென்றேன். அனால் என் எண்ணத்திற்கு மாறாக அவர் என்னுடைய தைரியத்தை மெச்சி முதுகில் தட்டிக் கொடுத்தார்.

மெட்ரிகுலேஷன் தேறிய பின்னர் முழு நேர அரசியல் வாதியாக மாறினேன். 1937-ல் நடந்த தேர்தலில் காங்கிரசுக்காக உழைத்தேன். 1940-ல் தனிப்பட்டவர் சத்தியாகிரகத்தின் போது கைது செய்யப் பட்டேன். அப்போது ஈரோடு நகர காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருந்தேன். பின்னர், கோவை மாவட்ட காங்கிரசின் இணைச் செயலாளராகப் பணியாற்றினேன்.

1940-ல் அன்னையார் இறந்தார். உடனே திருவையாறு கல்லூரியில் சேர்ந்தேன். 1942 ஆகஸ்டு போராட்டத்தின்போது பற்பல கல்லூரிகளுக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபடுமாறு மாணவர்களைக் கேட்டுக் கொண்டேன். திருவையாற்றில் கைது செய்யப்பட்டேன். விசாரணையின் முடிவில் மூன்று ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டேன். தண்டனை முடிந்து வெளியே வந்ததும் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தேன். 1950-ல் தமிழ் ஆனர்ஸ் பிரிவில் தேறி வெளியே வந்தேன். தமிழாசிரியராக 6 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர்ச் சென்னை, தலைமைச் செயலகத்தில் செய்தி - விளம்பரத் துறை உதவி நெறியாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

14 வயது முதற்கொண்டே சிறுகதைகள், அரசியல் கட்டுரைகள் எழுதத் தொடங்கினேன். அக்காலத்திய 'ஜனசக்தி'யில் அரசியல் கட்டுரைகள் வெளியாயின. பின்னர் 1942 என்னும் நூலை அலிப்புரம் சிறையில் இருந்தவாறு எழுதி முடித்தேன். அங்கு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்ததால் அதிகாரிகளுக்குத் தெரியாமல் அந்த நாவலை எழுதினேன். அதனால் அது வடிவில் குறுகி விட்டது. இல்லையெனில் பெரிதாக விரிந்திருக்கும். அதற்குப் பின்னர் பல நாவல்களும் ஆராய்ச்சி நூல்களும் எழுதியுள்ளேன்.

1964 முதல் மொழிபெயர்ப்புத் துறையில் இயக்குநராகப் பணியாற்றி வருகிறேன்.


என்னுடைய அன்னையின் தந்தையார் ப. ஏரப்ப முதலியார் ராஜாஜி அவர்களோடு சேலத்தில் வக்கீலாகத் தொழில் செய்தார். ஒருநாள் கதுமென காவியணிந்து துறவறம் பூண்டார். இந்நிகழ்ச்சியை நான் இன்றும் பெருமையாகக் கருதுகிறேன்.

8

அகிலனின் மிக அண்மைச் சிறுகதை

—ஒரு செயல்முறைத் திறனாய்வு முயற்சி—

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப். மானிடவியல், டிப். அரசியல்—ஆட்சியியல்,
தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.



(1)

தமிழகத்தின் தலைசிறந்த இலக்கியப் படைப்பாளர்களுள் ஒருவர் திரு. அகிலன். ஐம்பத்து இரண்டு அகவையான அவர் கடந்த முப்பது ஆண்டுகளாகச் சிறப்புவாய்ந்த சிறுகதைகளும் புதினங்களும் எழுதி, வளரும் தமிழிலக்கியத்தை வளப்படுத்தி உள்ளார். அண்மைக் காலத்தில் படைப்புக்கலை தொடர்பான திறனாய்வுக் கட்டுரைகளையும் திரு அகிலன் எழுதி வருவது பயனுடையதாகும்.

இக்கட்டுரையில் திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது கடந்த வெள்ளிக்கிழமை வெளிவந்த 'கல்கி' தீபாவளி மலரில் திரு அகிலன் எழுதியுள்ள 'எங்கோ ஓர் இதயம்'. இந்த அக்டோபர்

மாதத்தில் சோவியத் ஒன்றியத்தில் கஸாக்ஸ்தான் மாநிலத்தில் ஆல்மா ஆட்டாவில் நடந்த ஆசிய—ஆப்பிரிக்க எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த அகிலனுக்கு ஏற்பட்ட ஒரு மிகச் சிறிய ஆனால் மிகச் சிறந்த அனுபவத்தைக் கருவாகக் கொண்டதே இச்சிறு கதை. சோவியத் ஒன்றியத்திலேயே பல்லாண்டுகள் தங்கியிருந்த தமிழ்ப் பேராசிரியர்கள் உண்டு; பலவாரங்கள் பயணம் செய்து திரும்பிய கல்வியாளர்கள்—அரசியல் தலைவர்கள் உண்டு. இவர்கள் எல்லோரும் அவ்வப்போது எழுதிய எழுத்துகள் உண்டு. ஆனால் சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்ட அனுபவம் எதையும் வைத்து எழுதிய கதையுண்டா என்பது தெரியவில்லை.[1] என்னைப் பொறுத்த வரையில் தமிழக எழுத்தாளர் ஒருவர் அயலக அனுபவம் ஒன்றைக் கருவாக அமைத்து எழுதிய பயணச் சிறுகதை இதுவே எனலாம்.

(2)

புகழ்பெற்ற டாஷ்கண்டு—(முன்னால் இந்தி(ய)ப் பெருமுதல்வரைப் பலிகொண்ட நகரில் இந்திய எழுத்தாளர்கட்கு நடைபெற்ற வரவேற்பில் திரு அகிலனை ஓர் இளம்பெண் காண்கிறார்; அண்ணனைக் கண்ட தங்கைபோலக் கவர்ச்சியுறுகிறாள்; அன்பு செய்கிறாள். ஒருநாள் மாலை தாஷ்கண்டு சுரங்கப்பாதையில் அவள் மறுபடியும் அகிலனைச் சந்திக்கிறாள். தன் அழகான தோல் கைப்பெட்டியை அழகும் உறுதியுமில்லாத அகிலனின் தோல் கைப்பெட்டிக்கு மாற்றிக் கொள்கிறாள். அகிலனின் முகவரி அவர் பெட்டியில் இருக்கிறது. அவள் முகவரி அவள் பெட்டியில் இல்லை. அகிலனும் அந்த முகவரியைக் கேட்டு வாங்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்து தான் தொடர்பு கொள்ள வழியில்லையே என்று ஏங்குகிறார் அகிலன். எங்கோ ஓர் இதயம் தன்பால் அன்பு செய்ததை நினைந்து நெகிழ்கிறார். மனிதகுல ஒருமைப்பாட்டை மனத்தில் நினைந்து மறுகுகிறார். இவ்வளவு தான் கதை—கதைக்கரு. இதை 79 சிறியதும் பெரியதுமான (சராசரி ஒரே மாதிரியான) பத்திகளில் வி(வ)ரித்துள்ளார்! ஆம். ஒரே பத்தி, பாரகிராப்பில் சொல்லி விடக் கூடியதை—ஆம். சொல்லிவிட வேண்டியதை இல்லை—காரணம் (1) கதை—கலை வேண்டாமா? (2) அது கலைஞன் கலை மட்டுமில்லை—உரிமையும் கூட—79 பத்திகளில் 'அளந்து'ள்ளார்! இந்த 'அளப்பிற்கே' —அளவான அளப்புத் திறமைக்கே—கதை என்றும் கலை என்றும் பெயர். இந்த அளப்பை அளவான அளப்பு என்று சொல்லக் காரணம் கதையை எத்தனை முறை படித்தாலும் எந்தப் பத்தியும் தேவையில்லை என்று தோன்றவில்லை. ஒவ்வொரு முறை படிக்கும்போதும் அகிலனின் எழுத்துப்பிடியில் அகப்பட்டு, கருத்து—கற்பனை—கலை இன்பம் துய்க்கிறோம். அந்த இன்பத்திற்குத்தான் அடிப்படை அல்லது உயிர் யாது? மனித மனத்தின் உள்ளார்ந்த அமைப்பாக (in-built-Mechanism ஆக) உள்ள உணர்வு ஒருமைப்பாடே. அகிலன் சொல் அவரையும் நம்மையும் உயிருள்ள நல்ல மின்சாரக் கம்பிபோல ஒன்றுபடுத்தி விடுகிறது; கொன்று விடுவதில்லை.

ஒன்றுபட்டால் இன்பம்; இரண்டுபட்டால் துன்பம். எல்லாக் கலைகளும் இந்த ஒருமை செய்யும் வேலையையே செய்கின்றன. அதுவே அதன் பெருமை எல்லாம். இயற்கை அல்லது வாழ்க்கையைப் போலச் செய்து வாழ்க்கைக்கு இன்பம் செய்கின்றன.

இயற்கை / வாழ்க்கை } ——→ கலை ——→ வாழ்க்கை

போலிகையின், எளிமையும்—இன்பமே அதன் வெற்றிக்கு அடிப்படைகள்.

எல்லாரும் இரஷ்யா—தாஷ்கண்டு போக முடியுமா? போனாலும் இந்த இன்ப அனுபவம் பெற முடியுமா? அகிலன் கூடப் போனவர்களுள்ளேயே (இவரை விட உயரமான!) இன்னொருவருக்கும் இந்த இன்ப அனுபவம் கிடைக்கவில்லையே! எனவே தாஷ்கண்டுக்குப் போகாமலேயே தாஷ்கண்டைக் காணவும் அகிலனின் ஆகூழைப் பெருமலேயே அகிலனால் அந்த இன்பத்தைப் பெறவும் கலை—கதை இல்லாவிட்டால் முடியுமா? கதை சொல்லும் அருளும் திறனும் அகிலனுக்கு இல்லாவிட்டால்தான் நடக்கிற செயலா? இங்கும் அன்பின் பெரிய நிலையாகிய அருளாலே விளையும் அன்பாலேயே இன்பம் கிடைப்பதும் கருதத்தக்கது. கலை—கருணை. அது இல்லாவிட்டால் சுவையும் சுவைப்பதும் ஏது? எனவே அன்பாலேயே இன்பம். அனைத்தும்—வாழ்க்கையிலும் அதன் வடிப்பாகும் கலையிலும்!


இனி அகிலனின் ஒருசில மணி நேர அனுபவத்தின் வடிப்பாக உள்ள கலையைப் பகுப்பாய்வு செய்து பார்ப்போம்.

(3)

முதலில் அமைப்பு—பொருள் ஆய்வு (Structure—Content study) :

I	II	III	IV	V	VI	VI
1 to 3	4	5 ↓ 6	7 ↓ 8	9 ↓ 11	12 ↓ 22	23 ↓ 30
3	1	2	2	3	11	8

VIII	IX	X	XI	XII		
31 ↓ 42	43 ↓ 46	47 ↓ 65	66 ↓ 75	76 ↓ 79		
12	4	19	10	4	=	79



இனி, இந்த அமைப்பு—பொருள் பகுப்பாய்வு சிறுகதை இலக்கணத்திற்கு எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது என்பதை எண்ணிப் பார்த்து இன்புறுவோம் : பேராசிரியர்—டாக்டர்—மு. வ. தம்முடைய 'இலக்கிய மரபு' (1968) நூலில் தந்துள்ள சிறுகதை இலக்கணப் பகுதிகள் வருமாறு :

> சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு ; கவர்ச்சியான ஒரு காட்சி ; நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள் ; ஒருவரின் தனிப் பண்பு ! ஒரு சிறு அனுபவம் ; வாழ்க்கையின் ஒரு பெற்றி ; அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல்—இவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது இவை போன்ற ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்.

> சுருங்கச் சொல்வதாயினும், எடுத்த கதைப் பொருள் உணர்ச்சி புலப்பட விளக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்னும் கூடுதலாக விளக்கியிருப்பினும், பயன் மிகுந்திருக்காது என்று சொல்லத் தக்கவாறு அளவான விளக்கம் வேண்டும். ஒரு நாள் நிகழ்ச்சியாக இருப்பினும் அன்றி, ஒரு சில ஆண்டுகளின் நிகழ்ச்சியாக இருப்பினும், விளக்கம் போதும் என்ற நிறைவு தோன்றுமாறு அமையவேண்டும்.

நோக்கம், குறிக்கோள், செயல், உணர்வு ஆகியவை சிதருமல் ஒன்றுபட்டு அமையவேண்டும். அதாவது, ஒரு நோக்கம். அதற்கு இடையூருக வேறு ஒன்று புகாமல் அமைத்தல்; ஒரு குறிக்கோள், அதை ஒரே போக்கில் புலப்பட உணர்த்தல், ஒரே செயல், அதைத் தெளிவுறக் காட்டல்; ஒரே உணர்வு, அதை உள்ளத்தே பதியுமாறு உணர்த்தல் என இவ்வாறு நேரிய முறையில் அமைக்கவேண்டும். இவற்றைச் சிதைக்கும் வேறு பிறவற்றைப் புகுத்துதல் ஆகாது.

சிறுகதையின் இலக்கணம் எனப் பலர் பலவாறு கூறியுள்ளனர். எதையும் முடிந்த முடிபாக இல்லை எனலாம். சிறந்த சிறுகதையின் அமைப்பே சிறுகதையின் இலக்கணம் எனலாம்.

சிறுகதை குதிரைப் பந்தயம்போல், தொடக்கமும் முடிவும் சுவை மிக்கனவாக இருத்தல்வேண்டும் என்பர் செட்ஜ்விக்.

*   *   *

சிறுகதையில் கதை சிறிதாக இருந்தாலும், கதை மாந்தர் ஒரு சிலராகவே இருந்தாலும், கதை நிகழ்ச்சி ஒன்று இரண்டாகவே இருந்தாலும், ஒரு முழுத்தன்மை மட்டும் கட்டாயம் வேண்டும். தேவையற்ற வருணனைக்கோ, வேண்டாத நிகழ்ச்சிகளுக்கோ இடம் தராத சிறுகதை என்னும் இந்தக் கலை, சிறிய வடிவிலேயே முழுத் தன்மைபெற்று விளங்குவதால், அரிய கலை என்று போற்றத் தக்கதாகும்.

*   *   *

சிறுகதை எழுத்தாளர்கள் சிறந்த கலையுணர்ச்சி உடையவர்கள். அவர்களின் வருணனைகளில் அந்தக் கலைச் சிறப்பு விளங்கும். ஏதேனும் ஒன்றைப் பற்றி விளக்கும்போது, அந்தப் பொருளை மனக்கண் உடனே காணும். கண்ணுல் காண்பது மட்டும் அல்லாமல், மற்றப் புலன்களாலும் உணர்வதுபோன்ற அனுபவம் ஏற்படும். சிறந்த சிறுகதை ஆசிரியராகிய செகோ என்பவர் கார்க்கி என்ற ஆசிரியரிடம் தெரிவித்த அனுபவம் இது.

*   *   *

சிறுகதையில் கூறப்படுவது ஒரு மணி நேர நிகழ்ச்சியாகவும் இருக்கலாம்; ஒரு நாள் செய்தியாகவும் இருக்கலாம். ஒரு வாரத்து நிகழ்ச்சிகளாவும் இருக்கலாம்; ஓர் ஆண்டு அல்லது பல ஆண்டுகளின் வாழ்க்கையாகவும் இருக்கலாம்; ஒருவரின் வாழ்க்கையில் ஒரு சிறு பகுதியும் சிறுகதையாக இருக்கலாம்; அல்லது, அவருடைய முழு வாழ்க்கையும் அதில் அமையலாம்.

ஆயின், ஒருமுக இயைபு அதில் விளங்கல்வேண்டும். கூறப் படுவன எல்லாம் ஒரு காரணம் பற்றியனவாக, ஒரு நோக்கம் உடையனவாக, ஓர் உணர்ச்சியை விளைப்பனவாக இருத்தல் வேண்டும். அந்த ஒருமுக இயைபுக்கு இடையூறுனவற்றை யும் வேண்டாதவற்றையும் நுழைத்தலும் சேர்த்தலும் ஆகா.

(4)

இனி, அகிலன் கதையின் தோற்றமும் முடிவும் எவ்வாறு ஒரு வட்டமாகத் தொட்டுக்கொள்கின்றன பார்ப்போம் :

அவள் எனக்களித்த அந்தச் சின்னஞ்சிறு கைப்பெட்டி, இதோ என் அருகில் இருந்தவாறு அவளுடைய அழகான முகத்தை நினைவுபடுத்த முயல்கிறது. பளபளக்கும் கறுப்பு நிறத் தோலால் செய்யப்பெற்ற அந்தப் பெட்டியின் வழு வழுப்பான மேல் பகுதியை உற்றுப் பார்க்கிறேன். முதலில் என் முகம் அதில் பிரதிபலிக்கிறது. சற்று ஊன்றிக் கவனிக் கிறேன். என் முகம் மறைந்து அவள் முகம் அதில் தோன்று கிறது.

என் இதயத் துடிப்பைச் சொல்ல அங்கே ஒரு நினைவுச் சின்னத்தை நான் விட்டுவைத்துள்ளேன். அதேபோல், எங்கோ பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள ஓர் இதயம், நாடு—இனம்—நிறம்—மொழி எல்லா வேற்றுமைகளையும் கடந்து வந்து, இங்கே என் அருகில் தன் அன்பைச் சொல்லித் துடிக்கிறது. இந்த அன்புக்கு, பாசத் துக்கு, நட்புக்கு, உறவுக்கு, உயிரபிமானத்துக்கு என்ன பெயர்?

பெயர் தெரியாவிட்டால் என்ன? விலாசம் புரியாவிட் டால் என்ன? அவள் அளித்த அன்பின் சின்னம் ஒன்று போதுமே, விரும்பிய போதெல்லாம் அவளை நினைத்துக் கொள்வதற்கு!

(5)

(அகிலனின் அண்மைச் சிறுகதையைப் படித்தபோதும் இது போன்ற ஜெயகாந்தன் உள்ளிட்ட பலர் கதைகளைப் படித்தபோதும்) எனக்கு ஏற்பட்ட முதல் எண்ணம்—வினு, கட்டுரைக்கும் கதைக்கும் உள்ள வேறுபாடு யாது? என்பதே.

உண்மை > ——→ உணர்ச்சி

கருத்து > ——→ கற்பனை

கட்டுரை > ——→ க(வி)தை

இந்த வாய்பாட்டை அறிவு வழி ஆய்ந்து யான் கூறுவதுண்டு. மறுபடியும் அது சரிதானு என்று எண்ணிப் பார்த்தேன். சரியென்றே தோன்றுகிறது.

இவ்வகையில் சான்று காட்டத் தக்க அகிலனின் மெல்லிய கற்பனை இழை ஒன்றைக் (கதையிலேயே இந்த இடம் ஒன்றில்தான் கற்பனை எனலாம்) காண்போம்.

> "முதலில் என்முகம் அதில் பிரதிபலிக்கிறது ; சற்று ஊன்றிக் கவனிக்கிறேன். என் முகம் மறைந்து அவள் முகம் அதில் தோன்றுகிறது."

(6)

மறுமலர்ச்சி எழுத்தாளர் அகிலன் எழுத்தில் மரபு வழியும் காணலாம். நிலத்தையும் நிலத்துவாழ் மக்கள் அழகையும் இணைத்து மகிழல் சங்க இலக்கிய மரபு. இது அகிலன் எழுத்தில் உள்ள இயல்பு :

> "சோவியத் நாட்டின் உஸ்பெக்கிஸ்தான் மாநிலத் தலைநகரான தாஷ்கண்டில் அவளை நான் சந்தித்தேன். உஸ்பெக் நாட்டுத் தோட்டங்களின் ஆப்பிள் மரங்களில் கனிந்து குலுங்கும் ரோஜா நிற ஆப்பிளை ஒத்திருந்தாள் அவள்"

(7)

கலைக்கு உயிர் உற்று நோக்கல் ; உடல் ஒப்பு நோக்கல். ஆங்கில நாட்டுப் பெருங் கவியிடமிருந்த இந்த ஆற்றல் பற்றி அவர் ஆருயிர் மனைவியே கூறும் கூற்று :

> His life was spent in the contemplation of Nature, in arduous study, or in acts of kindness and affection. He was an elegant scholar and a profound metaphysican; without possessing much scientific knowledge, he was unrivalled in the justness and extent of his observations on natural objects; he knew every plant by its name, and was familiar with the history and habits of every production of the earth; he could interpret without a fault each appearance in the sky and the varied phenomena of heaven and earth filled him with deep emotion.*

இப் பண்பு அகிலனிடமும் இருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு :

> "இருபுறமும் மார்பகத்தில் சடைகளாகப் புரளும் கருங் கூந்தல். இடதுபுறம் வடுவு எடுத்துக் கூந்தலைப் பின்னிக் கொண்டிருந்தாள். நெருக்கமான—அடர்த்தியான புருவங்கள். அவற்றின் கீழே பளீரென்று ஒளி உமிழும் இரு கருவிழிகள். ஆப்பிள் நிறக் கன்னங்கள். உஸ்பெக்கிஸ்தான் மாநிலத்துப் பெண்கள் வழக்கமாக அணியும் பல வண்ணங்கள் வழிந் தோடும் 'ஸில்க்' துணியில் அவள் காலர் வைத்த 'கௌன்' அணிந்திருந்தாள். காலில் பூட்ஸுகள்."

(8)

He made his study and reading—room of the shadowed copse, the stream, the lake, and the water. The Complete Poetical works of P. B. Shelley—Oxford University Press (1948)

இனி, 'சொல்லாட்சி' பற்றிச் சில சிந்தனைகள் :

1. இலக்கணச் செல்வாக்கு :

ஓர் ஆப்பிள்

2. தனித்தமிழ்ச் சொல்லாக்கம் :

செயல்முறைக் கல்வி

(9)

எல்லாவற்றிற்கும் முடிவு யாது! நினைவு. அது இல்லாவிட்டால் எதுவும் இல்லை. காதல்—கலை—கடவுள் மூன்றன் முடிவும் இதுதான். இந்த உண்மையை அறிந்தோ அறியாமலோ உணர்த்தும் கலையே உயர்ந்த கலை.

> "பெயர் தெரியாவிட்டால் என்ன! விலாசம் புரியாவிட் டால் என்ன! அவள் அளித்த அன்பின் சின்னம் ஒன்று போதுமே, விரும்பிய போதெல்லாம் அவளை நினைத்துக் கொள்வதற்கு."

அகிலன் தன் கதையை முடிக்கும்–நிறைவு செய்யும் முறையும் சொற்களும் இவை.

> புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
> நட்பாம் கிழமை தரும் (785)

உடலை மறந்து உள்ளத்தையே உள்ளும் உயர்வே உயர்வு. அதனினும் உயர்ந்த நிலை—நினைப்பற நிற்கும் நிலை—கற்பனை ஒன்றில்லாக் கவிபாடும் நிலை—மெய்யுணர்வு (ஞான) நிலை. அந்த நிலையில் எழுத்து—பேச்சு—ஏன் எண்ணம்தான் ஏது? அப்போது அகிலன் 'எங்கே ஓர் இதயம்' என்றும் எண்ணினார்; 'எங்கும் ஓர் இதயம்' என்றே எண்ணுமலே அந்நிலையில் எண்ணுவார். சிறுகதை மன்னர்—அகிலன் ஓர் ஞான மன்னர் மன்னன் (சக்கரவர்த்தி) ஆவார்!

*   *   *

"பழங்காலத்தில் தன்னுணர்ச்சிப் பாட்டுக்கள் பெற்றிருந்த இடத்தை இக் காலத்தில் சிறுகதை என்ற இலக்கிய வகை ஓரளவிற்குப் பெற்றுள்ளது எனலாம். இக் காலத்து நாவலாசிரியர் சிலர் முற்காலத்தில் இருந்திருப்பின், காவியப் புலவர்களாக இருந்திருப்பர்; அதுபோலவே இக் காலத்துச் சிறுகதை ஆசிரியர்கள் சிலர் பழங்காலத்தில் வாழ்ந்திருப்பின், தனிப் பாட்டுக்கள் பல பாடும் கவிஞர்களாக இருந்திருப்பர். காலத்திற்கு ஏற்ப இலக்கியத்தின் வடிவமும் வளர்ச்சியும் மாறியமைவதையே இவற்றின் வாயிலாகக் காண்கிறோம்."

—இலக்கிய மரபு: டாக்டர் மு. வ.

9

தமிழ்நாடு சட்டமன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் இந்திய விடுதலை வெள்ளி விழா உரைகள்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
டிப். மானிடவியல், டிப். அரசியல் — ஆட்சியியல்,
தமிழ்த்துறைத் தலைவர் — பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

"It is in the legislature that the life of democracy throbs and its deliberations shape policies and programmes for the welfare of the people. Tamil Nadu can legitimately feel the glow of immense satisfaction as parliamentary system of Government taking deep roots. The members of the legislature, all these twenty-five years, have vied with one another in maintaining dignity and decorum and honouring high standards of parliamentary conventions and traditoins."

—*மேதகு ஆளுநர்.*

(1)

நாடாளு மன்றம் நாட்டு மக்களின் நாவாளும் மன்றம் மட்டுமில்லை! அவர்கள் வாழ்வாளும் அரணும் அதுவாகும். பொதுவுடைமை நாட்டிற்கும் இவ்வுண்மை பொருந்தும்.

தமிழகம் உள்ளிட்ட இந்திய விடுதலை இயக்கம் பல நேரங்களில் சட்ட மன்றங்களிலும் பலமாக நடந்தது. தீரர் சத்தியமூர்த்தி போன்றோர் அவ்வகையில் காட்டிய வீரம் அனைத்திந்தியப் புகழ் வாய்ந்தது. 'சட்ட மன்றங்கள் வாயிலாகச் சுதந்திரப் போர்' என்பது தனியொரு நூலுக்கு—ஆராய்ச்சிக்கு உரியது. காரணம் ஊராளு மன்றம் முதல் நாடாளு மன்றம் வரை விடுதலைப் போருக்குப் பாசறையாய்ப் பயன்பட்ட வரலாறு இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் பேரின்பம் தருவதாகும்.

(2)

1972ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ஆம் தேதி கூடிய தமிழ்நாடு சட்டப் பேரவை, மேலவைக் கூட்டுக்கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட இந்திய விடுதலை வெள்ளி விழா உரைகள் பற்றிய இத் திறனாய்வுக் கட்டுரையில் பெரிதும் நம் கருத்துக்கு உரியது உரைகளுள் ஊடாடும் தமிழே ஆகும். ஆம். சில குறிப்பிட்ட கட்டுக்கோப்புக்குள் அமைவது—அமைய வேண்டியது—சட்டமன்றத் தமிழ். எல்லாம் ஒரே வகைத் தமிழாய் இருப்பதில் வளம் இல்லை. நாடாளு மன்றங்களின் தாயாய் விளங்கும் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட பல உரைகள் இலக்கியச் **செறிவும் செழுமையும்** வாய்ந்தனவாக இருப்பதை நாம் அறிவோம். பர்க், சர்ச்சில் போன்றவர்களை நம்மால் மறக்கமுடியுமா? அத்தகையோர் பேச்சுகளைப் போன்ற பேச்சுகள் தமிழ் மொழிக்கும் கட்டாயம் தேவை. பேச்சும் கலை; அதிலும் சட்ட மன்றப் பேச்சு அருமையான கலை. வளர விரும்பும் எல்லோர்க்கும் வாய்ப்பளிக்கும் சிந்தனைச் சொற்பண்ணை—ஏன்! பட்டறை—நாடாளு மன்றங்கள். அவரவர்கள் கற்ற கலையை அங்கு நன்கு வளர்க்கலாம்-பயன்படுத்தலாம். இதனால் பேச்சுக்கலை—சட்டமன்றப் பேச்சுக்கலை உலகிலும் தமிழ் ஓங்கும்.

(3)

எனக்குக் கிடைத்துள்ள சில விவரங்கள் வருமாறு :

(1) முதன்முதல் தமிழகம் உள்ளிட்ட சென்னை மாநிலத்திற்காக ஏற்பட்ட சென்னை மேலவையின் (Madras Legislative Council) 1921ஆம் ஆண்டு சனவரி 8ஆம் தேதி திவான் பகதூர்—சர்—இராசகோபாலாச்சாரியார் தலைமையில் கூடியது. (இந்த ஆண்டிலே காந்தி அடிகளின் முதல் இந்திய விடுதலைப் போரும் ஆரம்பமாகியது நினைவு கூரத்தக்கது).

(2) 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டப்படி தமிழகம் உள்ளிட்ட சென்னை சட்ட மன்றத்தின் முதல் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தச் சட்ட மன்றத்தின் தலைவராக 1937 சூலை 15ஆம் நாள் திரு. புலுசு சாம்பமூர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டார். (இது போதே முதல் (காங்கிரஸ்) மக்கள் தேர்ந்தெடுத்த அமைச்சரவை இராசாசி தலைமையில் அமைந்தது).

(3) 1950ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆட்சிபெற்ற இந்தியக் குடியரசு சட்டப்படி அமைந்த சென்னை (மாநில) சட்டப் பேரவைத் தலைவராக இருந்தவர் ஜே. சிவசண்முகம் பிள்ளை. (இந்தியா விடுதலை பெற்ற காலத்தில் தமிழகம் உள்ளிட்ட சென்னை மாநிலச் சட்டப் பேரவைத் தலைவராக ஓர் அரிசனப் பெரியார் திரு. சிவசண்முகம் பிள்ளை அமைந்தது பெரு மகிழ்ச்சிக்கு உரியது).

(4) 1956 நவம்பர் முதல் நாள் தனித்தமிழ் மாநிலம் ஏற்பட்டது. இந்தச் சென்னை மாநிலச் சட்டசபையின் முதல் தலைவராக இருந்தவர்—கன்னடத் தமிழர்—டாக்டர் யூ. கிருஷ்ண ராவ்! (தனித்தமிழ் மாநிலம் ஏற்பட்ட பின்னும் நாம் நாணும் வகையில் சென்னை மாநிலம் என்ற பெயரே இருந்தது. தலைவர் ம. பொ. சி. போன்றோர் எவ்வளவோ போராடியும் காங்கிரஸ் அரசு பேர் மாற்றம் செய்ய மறுத்தது! அந்த அரசே மாறிய—மாற்றப்பட்ட பின்னுல்தான் பேரறிஞர் அண்ணவை முதல்வராகக் கொண்ட தி.மு.க. அரசில்தான் ' தமிழ்நாடு' பெயர் அமைந்தது!)

(5) 1967இல் தி.மு.க. அரசு அமைந்தது. இதன் பெரும்பயனைச் சென்னை மாநிலம் என்ற சிறுமைப் பெயர் மாறி/மாற்றப்பட்டு ' தமிழ்நாடு' என்ற பெருமைப் பெயர் அமைந்தது. இது போது அமைந்த புதிய சட்டப் பேரவைத் தலைவராக சி. பா. ஆதித்தனர் அமைந்தார். இந்தப் புதிய ஆட்சியில்—தலைமையில் மிகப் பெருமளவிற்குச் சட்டப் பேரவை தமிழ்—தமிழர்-பேரவையாய் மறுமலர்ச்சி பெற்றது.

(இதற்கு முன் பத்தாண்டுகள் 1957—67 தமிழ் மாநிலச் சட்டப் பேரவையே இருந்திருந்தாலும் தமிழ் உணர்ச்சி ஏனே வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படாமலும், போற்றப் படாமலும் இருந்துவிட்டது — கள்ளக் காதல்போல்! தேசியத்தை எதிர்த்த திராவிட இயக்கத்தார் தமிழைப் பெரிதும் போற்றுவது கண்டு பொருளற்ற — தேவையற்ற அச்சம் கொண்டே (தலைவர் ம. பொ. சி. போன்றோர் எவ்வளவோ தெளிவும் துணிவும் தந்தும்) காங்கிரஸ் ஒரு தற்கொலைப் பாதையை மேற்கொண்டது எனலாம். செந்தமிழ் சிறக்க தி.மு.க. அரசிலும் செய்யப்படாத (1) கலைக்களஞ்சியப் படைப்பு; (2) தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்; (3) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், இயக்குநரகம்; (4) தமிழ்ப்பாட நூல் பதிப்புத்துறை போன்ற அடிப்படை ஆக்கங்களைச் செய்திருந்தும் வளமான வாயில்லாமலும், வகையற்ற வாயாலும் காங்கிரஸ் ' கெட்டது' எனலாம். இன்றுங்கூட அது முற்றும் தமிழுணர்ச்சி வகையில் இந்தப் போக்கிலிருந்து மாறிவிடவில்லை என்பதே எக் கட்சிச் சார்புமற்ற என் வருத்தம் — கருத்து.

பொதுவாகவே தமிழன் முதலில் அடிப்படை அறங்களிலிருந்து நழுவ — வழுவக்கூடாது. தான் வழுவியதால் எதிராளிகள் சரியானதைப் பற்றிக்கொண்டால் அதற்காக எரிச்சல் கொள்ளாது உடனடியாகச் சரியானதைத் தான் பற்றிக்கொள்ளவேண்டும். இந்த வகையில் அண்மையில்

நம் மேதை — கலைஞர் — மதுவிலக்கை மீண்டும் சட்டமாக்க முற்பட்டிருக்கும் சான்றாண்மை போற்றிப் பின்பற்றத் தக்கது.)

(6) பேரறிஞர் அண்ணாவின் பெருந்துயரப் பிரிவுக்குப்பின் நாம் செய்த நற்றவத்தால் ஏற்பட்ட கலைஞர் ஆட்சியில் 1969இல் புலவர் கோவிந்தன் சட்டப் பேரவைத் தலைவரானார். முதன் முதலாகப் ஒரு தமிழ் புலவரைச் சட்டப் பேரவைத் தலைவராக்கிய பெருமையும் தி.மு.க.-வின் — டாக்டர் — கலைஞரின் தனிப் பெருமை என மகிழ்ந்து மதிக்கலாம்.

(4)

இனி, தமிழக சட்டமன்றத்தில் முதலில் தமிழில் பேசியவர் யார் என்பதும் ஆராய்ந்து மகிழத் தக்கது.

1937ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் நாள் தமிழகம் உள்ளிட்ட சென்னை மாநிலத்தின் சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. புலுசு சாம்பமூர்த்தியைப் பாராட்டி திரு ஏ. எஸ். சகசானந்தர் (கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி.-யின் ஆருயிர் அன்பர்) தமிழிலேயே பேசிப் பாராட்டுரை வழங்கினார் என்ற வரலாற்றுக் குறிப்பு ஒன்று கிடைக்கிறது. இது மேலும் உறுதி செய்யத்தக்கது.

(5)

1972 — ஆகஸ்டு 15 ஆம் நாள் நள்ளிரவை நோக்கி நடைபெற்ற தமிழ்நாடு சட்ட மன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியோர் ;

1. தமிழக ஆளுநர் — திரு. கே. கே. ஷா.
2. மாண்புமிகு முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி.
3. திரு. எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி (முன்னாள் அமைச்சர்).
4. திரு. ஏ. ஆர். தாமோதரன்.
5. திருமதி. த. ந. அனந்தநாயகி.
6. திரு. சா. கணேசன்.
7. திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்.
8. திரு. ஏ. ஆர். பெருமாள்.
9. திரு. கே. டி. கே. தங்கமணி.
10. திரு. கே. ராஜாராம் (முன்னாள் அமைச்சர்).
11. திரு. ம. பொ. சிவஞானம்.

12. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.

13. மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு. சி. பி, சிற்றரசு.

14. மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன்.

ஆகிய பதினன்கு பேர் : இன்னும் ஒருவர் அரிசனர் — கிறித்தவர். பேசியிருந்தால் பதினைந்து ஆகியிருக்கும் ; பொருத்தமாகவும் இருந் திருக்கும் ; பேசியோருள் அறுவர் இந்திய விடுதலை இயக்கத்தில் சிறை வாழ்வும் வாழ்ந்தவர் என்பது நிறைவு தருவது.

(6)

1937 முதல் அரசியல் உணர்வோடு வளரும் — வாழும் அரசியல் வாதி அல்லாத — சிறை செல்லாத — இக்கட்டுரையாளன் போன்ரு ரும் காந்தி அடிகள் தலைமையாக சவகர்லால், இராசாசி, சரோஜினி தேவி, சத்தியமூர்த்தி போன்ற தேசியத் தலைவர்கள் முழக்கங்களையும் கேட்டிருக்கக்கூடும் ; இந்திய விடுதலை இயக்கத்தின் உச்ச கட்டங் களைக் கண்டு மெய்சிலிர்ப்பு அடைந்திருக்கக்கூடும். அப்படிப்பட்டவர் கட்கும் கூட தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்தில் நிகழ்த்தப் பட்ட இந்திய விடுதலை உரைகளைப் படிக்கும்போது தந்தை பெரியாரும் இராசாசியும் காமராசரும் கூட சட்ட மன்றப் பேச்சாளர்களாக இல்லையே என்ற ஏக்கம் (என் போன்று அவர்களிடம் கருத்து வேறுபாடு உடையவர்களுக்கும்) எழுவது இயற்கை. ஏன் — இந்திய விடுதலை வெள்ளிவிழாவின்போது அந்த விடுதலைக்குப் பாடுபட்ட காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் ஆட்சியிலும் இல்லையே! ஆட்சியில் இல்லாவிட்டாலும் கூடப் போகட்டும் — கட்சியே கூட இரண்டாகப் பிளந்து, ஒன்றை எதிர்த்து ஒன்று போரிட்டுக் கொண்டதே! இந்த அவலமும் ஆழ்ந்த சிந்தனைக்கு ஆட்படுத்தப்பட்டால் அறிவுடைய அறவோர்க்கு அகன்றுவிடும். இந்திய விடுதலையை எதிர்க்கட்சிகள் அரசமைத்துக் கொண்டாடவும் செய்கின்றனவே — இதுவே விடுதலை யின் வீறு — பேறு — என்று எண்ணி அகமிக மகிழலாம்.

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. (874)

எதிர்க்கட்சியாக இருந்தபோது தி. மு. க. பெற்ற ஏற்றங்களுள் ஒன்று பேச்சுவன்மை. அறிஞர் — கலைஞர் — நாவலர் — பேராசிரி யர் இவர்களே — இந்த 'நால்வரே' கழகத்தின் தலைமக்கள். இவர்கள் பெற்ற இந்தச் சிறப்புப் பெயர்களே — 'பெரியார்' பெற்ற பெரும் பரிசுகள் (ஓரோர்கால் அவர் உறழ்ந்தாலும் பிறந்தாலும்!) மேலும் இந்த நான்குச் சிறப்புப் பெயர்களும் திராவிட முன்னேற்றக் கழகத் தின் 'நான்முக'ப் படைப்புகளை நவிலும். இந்த வகையில் நான்கிற்கும் அடிப்படை நாவே. நாட்டை அசைப்பது நாக்கே. ஒரு காலத்தில் தேசியமும் காங்கிரசும் செய்ததையே தி. மு. க. வேறு வகையில்

வீறுடன் செய்தது. ஆட்சிக்கு வரும் எந்த மக்களாட்சிக் கட்சியும் அணு அணுவாகவேனும் செல்வாக்கு இழக்கும்; எதிர்க்கட்சியாக இருக்கும் எந்த மக்களாட்சிக் கட்சியும் அணு அணுவாகவேனும் செல்வாக்கு பெறும். இந்த அரசியல் இயற்கைச் சட்டமும் ஈண்டுக் கருதத் தக்கது.

(7)

நாவாளும் திறத்தாலும் நாடாளும் திறம் பெற்ற (இது வள்ளுவமுமே போற்றும் வான் சிறப்பு!) தி. மு. க. ஆட்சியில் சட்டப் பேரவையும் சமுதாயமும் பெற்ற நலங்களுள் தலையாயது எங்கும் முழங்கும் தமிழ் முழக்கமே. 'சென்னை மாநிலம்' 'தமிழ்நாடு' ஆனது போல் 'ஸ்ரீ' 'திரு' ஆயிற்று; 'கனம்' 'மாண்பு' ஆயிற்று: 'சபை' 'அவை' ஆயிற்று — அது பேரவையாகவும் மேலவையாகவும் மேன்மை பெற்றது; 'மந்திரி' 'அமைச்சர்' ஆனார்; 'சபாநாயகர்' 'தலைவர்' ஆனார்! 'லீடர்' 'முன்னவர்' ஆனார்; 'அங்கத்தினர்கள்' 'உறுப்பினர்கள்' ஆயினர்.

இந்தச் சட்டமன்றத் தமிழ்ச்சொற்கள் நம் தாய்மொழிக்குப் புது வருவாய் அன்றோ?

இனி, தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்தில் நடைபெற்ற இந்திய விடுதலை வெள்ளி விழா உரைகளின் தலையாய தன்மைகள் யாவை?

(1) அ. ஆளுநர் — அண்ணல் காந்தி அடிகளைப் பெற்ற மாநிலத்தார் — ஆங்கிலத்தில் பேசினாலும் தமிழ் நாட்டு விடுதலை வீரர்கட்கும் தமிழ்நாட்டுச் சட்டமன்றங்கட்கும் சிறப்பாகத் தலைவணக்கம் தெரிவித்துப் பேசிய தகைமை

ஆ. 'வணக்கம்' சொல்லி முடித்த வளமை.

(2) நம் முதல்வர் நாட்டிற்கும் — வரலாற்றிற்கும் முதல்வரே! அவர் மேதை. நற்றமிழால் — சொற்றமிழால் சொல்ல வேண்டியன — முதல்வர் — சொல்ல வேண்டியன — யாவும் அவர் சொன்னமை பொன்னமை புகழுடையன. கலைஞரின் கவிதைத் தமிழ் இவ்வுரையில் கடைமைத் தமிழாகவும் இருப்பது எல்லையில்லா இன்பம் தருகிறது.

இனி நம் நாட்டில் இல்லார் இல்லை
கல்லார் இல்லை
நல்லார் மீது பாய்கின்ற வல்லார் இல்லை

இவ்வைர மொழிகளே யான் பெரிதும் போற்றுபவை. மேற் கண்ட மூன்று வரிகளில் 'நடுவணது எய்த அடியும் முடியும் ஆட்படும்! ஆனால் ஈற்றடியே மனித குலத்தின் மணிமுடியின் ஒளி. பொதுவுடைமை அமைப்பிலும் ஓரோர்கால் 'விலங்குமனத்தால்' விளங்காது போகும் பண்புடைமையின் விளக்கமன்றோ.

(3) திரு. தங்கமணியின் பேச்சில் பொதுவுடைமைக் குரல் ஒலிப்பது எதிர்பார்க்க வேண்டியது! — எதிர்க்க வேண்டாதது!

(4) சிலம்புச் செல்வரின் பேச்சு உணர்ச்சி ஓவியம் — உயிரோவியம்.

(5) நாவலர் பேச்சு நல்ல பேச்சு — நற்றமிழ்ப் பேச்சு.

இந்திய விடுதலை வெள்ளிவிழா உரைகளிலேயே மிகச் சிறந்த மேதை மொழிகளாக விளங்கும் 'இந்த முதல் சுதந்திர நாள் நமக்கும் நம்மை ஆண்ட வேற்று நாட்டவர்களுக்கும் இடையே கணக்குத் தீர்க்கும் நாள். இனி வரும் சுதந்திர நாட்களெல்லாம்தான் கணக்குப் பார்க்கும் நாள். பெற்ற சுதந்திரத்தால், பெற்ற பயன் என்ன? முழுப் பயன் பெற ஆற்றவேண்டிய பணிகள் என்ன என்பதைக் கணக்குப் பார்க்கும் நாள்' என்ற பேரறிஞர் அண்ணாவின் பெருமொழிகளைத் தாங்கி இருப்பதாலேயும் தனிச்சிறப்பு பெறும் தமிழுரை நாவலரின் நல்லுரை.

> நமக்குமுன் இருந்த தலைமுறையின் தியாகங்கள், அவர்களுடைய உறுதி, அவர்களுடைய வீரம் செறிந்த போராட்ட குணங்கள், அவர்களுடைய அழுத்தமான தியாக குணங்கள் இவையெல்லாம், எங்கெங்கே அக்கிரமங்கள் இருக்கின்றனவோ, எங்கெங்கே அநியாயங்கள் இருக்கின்றனவோ, எங்கெங்கே சுரண்டல்கள் இருக்கின்றனவோ, அவற்றுக்கெல்லாம் எதிரான ஒரு புதிய போராட்டத்திற்கு உருவம் தருகிற இரண்டாவது சுதந்திர போராட்டத்தினுடைய அடித்தளமாகத்தான் இன்றைக்கு இந்திய பூபாகம் இந்தப் பெரிய விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

* * *

> இந்தப் பெரிய விழாவில் தமிழகத்தில் நல்ல முறையில், நான் மிகுந்த பெருமையோடு சொல்கிறேன். 4½ கோடி மக்களின் இதய ஒலியாகவும், நம்பிக்கையினுடைய நாதமாகவும், என்னுடைய உடன்பிறப்புபோன்று ஒருவரும், 25 ஆண்டுக் காலமாக என்னுடைய அரசியல் வாழ்விலே பங்கு கொண்டவருமான ஒருவருடைய தலைமையில் இன்றைக்குத் தமிழகம் பெரிய நம்பிக்கைபெற்று அவர் வழி நடத்திச் செல்கிறார் என்பதிலே நான் மிகுந்த பெருமைப்படுகிறேன். அவரது முயற்சிகள், அவரது ஆயத்தங்கள், அவர் மேற்கொண்டு இருக்கிற அந்தக் காரியங்கள், பொருளாதார சுதந்திரத்திற்கும் சமுதாய சுதந்திரத்திற்கும் பலன் அளிக்கிற வகையில், அமைந்துள்ளவையாகும்.
>
> —மாண்புமிகு பேரவைத் தலைவர்.

பிற்குறிப்பு :

1. அயல்நாட்டார் ஆங்கிலம் முதலிய பிறமொழியில் எழுதியதை நுணுகி ஆராயாமல் புகழ்ந்து அடிமையாகும் போக்கு இந்த விடுதலைக்குப் பின்பேனும் இருக்கக்கூடாது என்பதற்காகவே கமில்சுவலபில் நூல் மதிப்பாய்வு.

2. கலைஞரின் கவிதையில் நாடகம் — திரைப்படத்திற்கு இருக்கக் கூடிய செல்வாக்குபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக மிக அண்மையில் (டிசம்பர் 1973) தமிழ் இசைச் சங்க ஆண்டுவிழாத் தலைமையுரையில் இசைப் பேரறிஞர் திருமதி டி. கே. பட்டம்மாள் சொல்லியுள்ளது உடல் எண்ணத் தக்கது :

"நான் இப்படிச் சொல்லும்பொழுது ஒரு சந்தேகம் ஏற்படலாம். அதாவது தற்காலத்திலிருக்கும் நம் திரைப்பட சங்கீதம் சுத்தமா இல்லையா என்று. இந்தச் சந்தேகத்துக்கு இடமே கிடையாது. நான் சுத்தமான சங்கீதமென்னும் பொழுது போதனு முறையைக் கையாண்டு, படிப்படியாகப் பயின்று கனமான கலையை உருவாக்கிக் கொள்வதே. ஆனுல் திரைப்பட சங்கீதத்துக்கு இவ்வளவு சிரமப்பட வேண்டிய அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம். சாதாரண மாக, கொஞ்சம் குரல் வசதி இருப்பவர்கள், இந்தத் துறையில் பிரகாசிக்கமுடியும். 'நாங்கள் கர்னுடக சங்கீத சாத்திரம் பயில வில்லை' என்று சொல்லுவார்களென்பதில் சந்தேகம் வேண்டாம். ஆனுல், அவர்களை நான் குறை கூறவில்லை. ஏனென்ருல், அவர்களும் பாமர ஜனங்களைத் தங்கள் இசையினுல் சந்தோஷப்படுத்துகிருர்கள். ஆகையால், அது வேறு துறையாகின்றது. ஒருவிதத்தில் முறையே சங்கீதம் பயிலும் வித்யார்த்திகளுக்கு அந்தத் துறை (திரைப்படத் துறை) சுலபமாகத் தோன்றும். ஆனுல், அது அப்படி சுலபமும் அல்ல. அதற்குத் தனி சாதுர்யம் வேண்டும். அதில் ஒரே ஒரு குறையென்ன வெனில், அது எந்த சங்கீதச் சட்ட வரம்புக்கும் உட்பட்டதல்ல. ஆனுல், நம் கான சங்கீதம் மிகவும் கடினமான சட்டத்திற்குட்பட்டது. தமிழர்களாகிய நாம் இயற்கையாகவே சட்டங்களுக்குட்பட்டவர்க ளாகையால் நம் வித்வான்களை சட்டத்தை மீருமலிருந்து சுத்த முறை யைக் கையாளும்படி கேட்டுக்கொள்கிறேன்."

3. (1) திரு அகிலன் கதையில் 'குள்ளம்' என்னும் தன் உட லுணர்வு அவர் உள்ளத்தில் 'குறுகுறு' என்பதைக் காணலாம்.

(2) பொதுவுடைமை நாட்டிலும் — ஆண் பெண்ணைச் சொற் சீண்டல் (Teasing) செய்யும் போக்கு இருப்பதைப் பார்க்க லாம்.

10

விடுதலைக்குப்பின் தமிழ்க் கவிதை

பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் — தமிழ்த்துறைத் தலைவர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.

இந்த நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தோன்றிய இரு மாபெரும் கவிஞர்கள் பாரதியும், பாரதிதாசனும் ஆவர். இச் சொல்லேருழவர்கள் உழுது பண்படுத்திய தமிழிலக்கியக் கழனியில் கவிதை என்னும் பயிர் இன்று செழித்து வளரக் காண்கிறோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாதவர்களும் — புரிந்துகொள்ள முடியாதவர்களும் — புரிந்து கொள்ள மறுப்பவர்களுமே, 'பாரதிக்குப் பிறகு தமிழ்க் கவிதை' வளரவில்லை என்ற கூற்றைத் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். இவர்கள் கெடுவிளைவு மனப்பான்மையினர் (Pessimist). இப்படிப் பட்டவர்கள் எல்லாத் துறைகளிலுமே உள்ளனர். இலக்கியத் துறையி லும் இவர்கள் இருக்கிறார்கள். 'தொன்மைய வெல்லாம் நன்றாகா; புதியன வெல்லாம் தீதாகா' என்ற உண்மையை இவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். பழமையின் மீதுள்ள பற்றினால் புதுமையைப் புறக்கணிப்பது பொருந்தாது.

'தற்காலத் தமிழ்க் கவிதை' என்ற தலைப்பு அளிக்கப்பட்டிருப்ப தால் முதற்கண் 'தற்காலம்' என்ற தொடரை வரையறுத்துக் கொள்வது இன்றியமையாதது. பாரதியின் காலமும், பாரதிதாசன் காலமும் ஓரளவுக்குப் பலராலும் பெரிதும் பேசப்பட்டிருப்பதால் அவற்றை ஓரளவே விலக்கும் வகையில், 'தற்காலம்' என்பதை விடுதலைக்குப் பிந்திய காலம் என்று வரையறை செய்துகொள்ள நினைக்கின்றேன்.

விடுதலைக்குப் பிறகு வாழ்வின் சகல விதமான துறைகளிலும் புதுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையே. அந்த வகையில், தமிழ்க் கவிதையின் புதிய கோலங்களை நாம் கண்டு செல்வது நம் கடமையாகும்.

முதற்கண் தமிழ்க் கவிதையின் போக்கையும், நோக்கையும் ஓரளவு சுட்டிக்காட்டி — தொட்டுக்காட்டி, அதற்கு அடுத்த நிலையில் சில

முக்கியமான கவிஞர்களைத் தனிப்பட்ட நிலையில் கண்டு, இறுதியாக என்னுடைய மதிப்பீட்டினைக் குறித்துச் செல்வதே என் கட்டுரையின் நோக்கமாகும்.

விடுதலைக்குப் பிறகு எங்கு நோக்கினாலும், தமிழ்த் தேசிய உணர்வு புதுப் புனலாய்ப் பொங்கி எழுந்தது. வேறு எந்த நூற்றாண்டுகளிலுமே இல்லாத அளவுக்குத் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்னும் உணர்வு நம் நெஞ்சில் ஆழமான வேர் கொண்டு விளங்கிற்று. இத்தகு தமிழ்த் தேசிய உணர்ச்சிக்கு வித்திட்டவர் பாரதியார் ; அதை வளர்த்தவர் பாரதிதாசன். அந்த உணர்ச்சியைப் பல்வேறு நிலைகளில் அழகுபடுத்திப் பாடிக் களித்தவர்கள் இக்காலக் கவிஞர்கள்.

“ .... தமிழை
என்னுயிர் என்பேன் ”

என்று பாரதிதாசன் சிறப்பித்துப் பாடினார். பலாவின் சுளை, கன்னலின் சாறு, மலரின் தேன், பாகின் சுவை, பசுவின் பால், தென்னையின் இளநீர் ஆகியவை சுவையுடையனவே என்றாலும் இவற்றினும் சுவையுடையது என் தமிழே என்பது அவர் கருத்து.

பாரதிதாசனால் வளர்க்கப்பட்ட இவ்வுணர்ச்சி பிற்றைக் காலக் கவிஞர்களைப் பெரிதும் ஆட்கொண்டது. அதனால் ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என்ற உணர்வு பிறந்தது.

“ பாடுவ தென்றால் தமிழினில் பாடு
பாவையே உளமகிழ் வோடு
வையம் பெற்றது தமிழ்மொழியாம்—அதன்
வழிவழி வந்தன பிறமொழியாம்
ஐயம் இல்லை உண்மையிதாம்—கண்ணே
அருமைத் தமிழே நமதுயிராம் ”

என்று கவிஞர் முடியரசன் பாடுகிறார்.

விடுதலைக்குப் பின்னரே தனித்தமிழ் என்கிற உணர்வும் பெரிதும் வளர்ந்தது. ஐ. உலகநாதன் என்னும் கவிஞர் ஒருவர்,

‘ வெல்லத் தமிழ்மொழியில் வேற்றுமொழிச் சொற்களையும்
மெல்லக் கலப்பதுவே மேலென்று—கொள்ள
வழக்காடும் பண்பாளர் வாயடைக்க இன்றே
முழங்கே முரசே முழங்கு ”

என்று பாடுகின்றார். தென்மொழி பெருஞ்சித்திரன், தமிழ்க் குடிமகன், கோவை இளஞ்சேரன் போன்ற கவிஞர்களும் இற்றைநாளில் தனித் தமிழின் உணர்ச்சி குன்றாது பாடி வருகின்றனர்.

தமிழ்த் தேசீய உணர்வின் எழுச்சியால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட விளைவுகள் பல. தமிழை ஒடுக்குவதற்காக ஆட்சிமொழி என்ற பெயரால் இந்திமொழி திணிக்கப்பட்டது. இதனால், தமிழ்ப் பாவலர்கள் உள்ளம் குமுறினர். இந்திமொழிக்கு எதிராக மாபெரும் போராட்டம்—வரலாறு காணாத பெரும் போராட்டம் நடந்தது. இந்த நேரத்தில் நம் தமிழ்க் கவிவாணர்கள் இந்தியை எதிர்த்துப் பாடிய அருங்கவிகள் மிகப் பலவாகும். கவிஞர் கண்ணதாசனின் இந்தி யெதிர்ப்புப் பாடல்கள் கோழையையும் வீரனாக்க வல்லவை.

மொழி உணர்ச்சியைப் போலவே நாட்டுணர்ச்சியும் வீறுமிக்கது. இதன் விளைவாகத் தனித்தமிழ் நாடு காணவேண்டும் என்னும் உணர்வும் கூடத் தீவிரமாகப் பரவியது. தமிழ்நாடு பற்றிய பெருமித உணர்வை நம் கவிஞர்களின் பாடல்களில் நாம் பார்க்கிறோம் :

" தாய்நாடே : உன்னை வேண்டித்
தவிட்டையும் தின்பேன்—இன்பத்
தாய்நாடே ! உன்னை மீட்கத்
தணல்மீதும் நிற்பேன் ; அன்புத்
தாய்நாடே ! மாற்றார் நஞ்சைத்
தரினும்யான் ஏற்பேன் ; வீரத்
தாய்நாடே ! உன்னைக் காக்கச்
சாகவும் அஞ்ச மாட்டேன் "

என்பது சுரதாவின் பாடல்.

" சொத்தையைப் போல் சோடையைப்போல் பிச்சைக் காரன்
சோறில்லாச் சட்டியைப் போல் வறண்ட நாடா
முத்துதரும் கத்துகடல் கரும்புத் தோட்டம்
முதிர்கனிகள் தரும்சோலைக் கூட்டம் ; தங்கச்
சொத்துதரும் சுரங்கங்கள் ; கிலுகிலுப்பைச்
சத்தமிடும் கொத்துநிகர் வயல்கள் ; மேகச்
சத்துமழை தனைஇழுக்கும் மலைகள் உண்டு
சரியான வளமிருந்தும் ஏங்க லாமா ?"

என்று கேட்கிறார் பொன்னி வளவன்.

தனித் தமிழ்நாடு என்னும் உணர்வு ஒரு பக்கம் வளர்ந்தது போலவே தேசீய ஒருமைப்பாடு என்னும் உணர்வும் வளரவே செய்தது. வடக்கு, தெற்கு என்னும் பேதங்கள் இல்லாமல் எல்லாரும் ஒரு தாயின் மக்களைப்போல் கூடி வாழவேண்டும் என்ற கருத்தையும் கவிஞர்கள் வற்புறுத்தினார்கள். கவிஞர் கண்ணதாசன் இந்திய நாட்டின் ஒருமைப்பாடு பற்றி எழுதியிருப்பதைக் காண்போம் ;

" சுடுகாட் டெலும்புகளைச்
சோதித்துப் பார்த்ததிலே

வடநாட் டெலும்பென்று
வந்தளலும் பில்லையடி!
தென்னாட் டெலும்பென்று
தெரிந்தளலும் பில்லையடி!
ஒருநாட்டு மக்களுக்குள்
ஓரா யிரம்பிரிவை
எரியூட்ட வில்லையெனில்
எந்நாளும் துன்பமடி!”

இன்னும் சில கவிஞர்கள் இந்திய நாட்டு ஒருமைப்பாடு என்பதையும் தாண்டி மேலே சென்று உலக ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசினார்கள். சாலை இளந்திரையன் என்பார் உலக ஒருமையை வற்புறுத்திப் பாடுகிறார்.

‘என்மொழி உன்மொழி என்பதும்—இனி
என்நிலம் உன்நிலம் என்பதும்
சின்மொழி யாகிடும் நாளையே—இனி
சேர்ந்து தழைத்திடும் வையகம்”

என்பது அவர் கூற்று.

உழைக்கும் பாட்டாளி மக்களின் துயரத்தைக் கவிதையாகப் பாடுவது என்பதும் அண்மைக் காலத்தே எழுந்த போக்குத்தான். உழைக்கும் மக்களுக்காக இந்தக் காலத்துக் கவிஞர்களைப் போல வேறு எந்தக் காலத்துப் பாவலர்களும் பரிந்து பேசியதே இல்லை. கம்பதாசன், தமிழ்ஒளி, சிதம்பர ரகுநாதன், கே. சி. எஸ். அருணசலம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போன்ற கவிஞர்கள் உழைப்பாளி மக்களின் அவலத்தை மனம் கசிந்து பாடியிருக்கின்றனர்.

பிழைப்பதற்காக வெளிநாடு சென்று, தேயிலைத் தோட்டத்தில் மாடாக உழைக்கும் தமிழர்களின் நிலைபற்றி கே. சி. எஸ். பாடுவதைக் காண்போம்.

“ வாயில்லாத பூச்சிகளாய்
வாழ்வு தேடி ஓடிவந்து
நாயினும் கடையராக வெம்பி—காலம்
நல்லதாகும் என்று நெஞ்சில் நம்பி
தேயிலைத் தழைமலையில்
தினமுழைத்துப் பொன்வளர்த்து
காயும்வாயி னேடுவாழ்ந்த கூட்டம்—இன்று
கைஉயர்த்திச் செய்யுதே ஆர்ப்பாட்டம் ”

ஏழை எளியோருக்காகப் பரிந்து பேசிய தமிழ்க் கவிஞர்கள் பொதுவுடைமை என்னும் தத்துவத்தாலும் ஈர்க்கப்பட்டனர்.

'வசதி இருக்கிறவன் தரமாட்டான்—அவனை
வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்'

என்று பொதுவுடைமைக் கருத்தினைப் பட்டுக்கோட்டை பாடுகிறார்.

காதலும், வீரமும், தத்துவமும் தமிழ்க் கவிதைக்குப் புதிதல்ல. பண்டைத் தமிழ்க் கவிஞர்கள் பாடிப் பாடி மகிழ்ந்த இந்தப் பாடு பொருள்களை இக்காலக் கவிஞர்களும் விரும்பிப் பாடுகின்றனர்.

'கூடத்திலே மனப் பாடத்திலே—விழி
கூடிக் கிடந்திட்ட ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படும் நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்த விழி—தனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி
ஆடை திருத்தி நின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்!"

என்று பாரதிதாசன் ஓர் அழகிய காதற் காட்சியைக் காட்டுகிறான்.

பண்டைய அகப்பொருள் துறைகள் எல்லாம் புத்தம் புதிய கோலத்தில் தமிழ்க் கவிஞர்களால் பாடப் பட்டுள்ளன. 'பசியட நிற்றல்' என்பது ஒரு அகப்பொருள் துறை. கவிஞர் கண்ண தாசன் அத்துறையை எங்ஙனம் எளிமைப்படுத்திப் பாடுகிறார் தெரியுமா?

'பாலிருக்கும்
பழமிருக்கும் பசியிருக்காது—
பஞ்சணையில்
காற்று வரும்தூக்கம் வராது'

என்பது அவர் பாடல்.

தலைவியில்லாத வாழ்வு கவிஞர் வாணிதாசனுக்கு வெறுமை யாகத் தெரிகிறது. அவர் கூறுகிறார்;

'நீயில்லாச் சிலநாட்கள் வீயில்லாச் சோலை!
நீரில்லா மலர்ப்பொய்கை! நிழலில்லாப் பாட்டை!
தீயில்லாக் குளிர்காலம்! சீரில்லாப் பாடல்!
திக்குதிசை இல்லாச் செழுங்காடு போலாம்!'

காதலில்லாத வாழ்வில் சுவையேது? காதலிக்காமலே செத்துப் போவதை விட யாராவது ஒருத்தியைக் காதலித்து, அந்தக் காதலிலே தோல்வியுற்றால் கூட அது பாராட்டத்தக்கதுதான் என்று கவிஞர் பைரன் கூறினான். காதலே இல்லாமல் இளமையை வீணே போக்கு வாரைக் கண்டு கவிஞர் மு. அண்ணாமலை இரக்கப்படுகிறார்.

‘ காதலின்றி இளமையினைக்
கழித்துவிட்டார் தமைக்கண்டால்
இரக்கத்தில் கண்ணீரை
இதழ்க்கடையில் சேர்க்கின்றேன் !’

என்பது அவர் கூற்று.

அண்மைக் காலத்தில் காதல் என்னும் உணர்வைச் சுவை சொட்டப் பாடிய கவிஞர் சுரதாவேயாவர். இவரது பாடல்களைக் காதற்பாடல்கள் என்பதைவிடக் காமஞ்சான்ற காதற்பாடல்கள் (erotic poetry) என்று கூறுவதுதான் பொருந்தும்.

“ பட்டாடை கட்டிக்கொண் டிருக்கும் நல்ல
பால்நிலவே ! இளவேனிற் பூவே ! உன்னைத்
தொட்டாலும் கைமணக்கும்; உன்றன் பேரைச்
சொன்னாலும் வாய்மணக்கும்; ஆணும் பெண்ணும்
ஒட்டாமல் உறவில்லை; கலப்பே இன்றி
உலகத்தில் தனிப்பொருளாய் ஏதுமில்லை!”

என்று சுரதா ஓரிடத்தில் பாடுகிறார். இப்பாடல் ஷெல்லியின் பாடல் வரிகளோடு ஒப்பிட்டுக் காணத் தக்கது.

“ The fountain mingle with the river
And the rivers with the ocean
The winds of Heaven mix for ever
with a sweet emotion;
Nothing in the world is single
All things by a law devine
In one spirit meet and mingle
Why not I with thine?”

என்பது ஷெல்லியின் பாடல்.

கவிஞர் சுரதாவின் செல்வாக்கிற்கும் ஆளுகைக்கும் உட்பட்ட கவிஞர்கள் சிலர்—முருகு சுந்தரம், பொன்னிவளவன், எழில் முதல்வன் போன்றோர்—இவ்வண்ணமே பல காதற்பாக்களைப் பாடியுள்ளனர்.

இந்நாளைய வாழ்வில் வீரத்திற்கு அவ்வளவாக இடமில்லை; பழங் காலத்தில் இருந்ததுபோல் ஒரு தனி மனிதன் தன் உடல்வலிமையைக் காட்டிப் பிறரை வெற்றி கொள்ளும் நிலையில் இல்லை எனினும் வீரம், செயல் என்ற நிலையில் இல்லாமல், உணர்வு என்ற நிலையில் இன்றும் வாழவே செய்கிறது. சமுதாயத்தின் கொடுமைகளைக் காணும்போ தெல்லாம் அவற்றை அழித்தொழிக்கவேண்டும் என்ற உணர்வு எழுவது இயற்கையே. ஒரு வகையில் இவ்வுணர்வும் வீரத்தின் பாற்பட்டதே.

இத்தகைய வீரப் பாடல்களை நம் கவிஞர்கள் நிறையவே பாடியுள்ளனர்.

தத்துவமும் நமக்குப் புதிதல்ல; எனினும் அவற்றை நம் கவிஞர் பாடும் முறை நம் நெஞ்சத்தைத் தொடுவதாக அமைகிறது. கவிஞர் தமிழ்ஒளி 'பட்டமரம்' என்ற தலைப்பில் ஒரு கவிதை பாடியுள்ளார். மிக அருமையான பாடலது.

'மொட்டைக் கிளையொடு
  நின்று தினம்பெரு
  மூச்சு விடும்மரமே!
வெட்டப் படும்ஒரு
  நாள்வரும் என்று
  விசனம் அடைந்தனையோ?
கட்டை எனும்பெயர்
  உற்றுக் கொடுத்துயர்
  பட்டுக் கருகினையே!
பட்டை எனும்உடை
  இற்றுக் கிழிந்தெழில்
  முற்றும் இழந்தனையே!
காலம் எனும்புயல்
  சீறி எதிர்க்கக்
  கலங்கும் ஒருமனிதன்
ஓலமி டக்கரம்
  நீட்டிய போல்இடர்
  எய்தி உழன்றனையே!

'தத்துவப் பாடல்கள்' என்று நினைத்தவுடனேயே நம் மனக்கண் முன் தெரிவது கவியரசர் கண்ணதாசனே. இத்துறையில் இவர் பெற்றிருக்கும் பெற்றி மலையினும் மாணப் பெரிது. பிறப்பு, இறப்பு என்னும் உண்மைகளைச் சிலவரிகளிலேயே இவர் அழகுறக் காட்டிவிடுகின்றார்.

வாழை, இலை
தண்டு, மலர்
காய் கனிகள்
ஆனவுடன்
வாழையடி வாழையொன்று ஜனனம் - அது
வந்தவுடன் தாய்விழுந்து மரணம்!

என்பது அவர் பாடல்.

இவரைப் போலவே மீ. ப. சோமசுந்தரம், வல்லம் வேங்கடபதி, எஸ். டி. சுந்தரம் போன்றோரும் தத்துவக் கவிதைகளைப் பாடியுள்ளனர்.

அழகு, கடல், தென்றல், காடு, குன்றம் முதலிய பதினாறு தலைப்புக்களில் பாடப்பட்ட இந்நூல் படிக்கப் படிக்க இன்பம் தருவதாகும்.

‘நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்
நல்லழகு வசப்பட்டால் துன்பம் இல்லை’

என்பதே இதன் மூலம் பாரதிதாசன் வெளிப்படுத்தும் தத்துவம். “நல்லழகு வசப்பட்டால் துன்பம் இல்லை” என்ற இவ்வரி கவிஞர் கீட்ஸ் எழுதிய, (A thing of beauty is joy for ever) என்ற பாடல் வரியை நினைவூட்டுகின்றதல்லவா ?

உதய சூரியனைப் பற்றிப் பாரதிதாசன் பாடும் அழகைப் பாருங்கள் :

“பொங்கியும் பொலிந்தும் நீண்ட
புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி
திருதிரு வெனஎ ரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே!
மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத்
தகளியுட் பெருவி ளக்கே!”
“கடலிலே கோடி கோடி
கதிர்க்கைகள் ஊன்று கின்றாய்!
நெடுவானில் கோடி கோடி
நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படும் மலையோ காடோ
இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ
அமைந்தனை! பரிதி! வாழி!”

வாணிதாசன் என்ற கவிஞரின் பாடலிலும் இயற்கை அழகின் திறத்தைக் கண்டு மகிழலாம். இவருடைய ‘எழிலோவியம்’ என்ற கவிதை நூல், ‘அழகின் சிரிப்’பை அடியொற்றியது. பாரதிதாசன் செல்வாக்கு இவர் பாடல்களில் படிந்திருந்தாலும் இயற்கைப் புனைவில் இவர் பாரதிதாசனையும் மிஞ்சுகிறார் எனலாம்.

தமிழழகன், தமிழன்பன், மின்னூர் சீனிவாசன் முதலிய கவிஞர்களின் பாடல்களிலும் இயற்கைப் புனைவுகள் மிகுதியாக உள்ளன.

கவிஞர் தமிழன்பன், ‘விண்மீன்’கள் பற்றிப் பாடியிருக்கும் பாடல் ஓர் அற்புதமான சொல்லோவியம்.

“வானம் எழுதிய காதல் வரிகளின்
அச்சுக் குலைந்த எழுத்துச் சிதறல்!

அழகு வானம் எழுதிப் பார்க்கும்
துயரப் பாடலின் முற்றுப் புள்ளிகள்
சாதி சாதி என்றித் தமிழர்
நாதியற் றுள்ளம் நலிதல் கண்டே
புண்ணுற்ற வானின் கண்ணீர்த் துளிகள்!
மேக மெத்தைமேல் மின்னும் கன்னிகள்!"

பாடுதற்கு அரியது என்று கருதப்படும் சாதாரண பொருள்களையும் கூடச் சிலர் நயத்தோடு பாடியுள்ளனர். 'கரித்துண்டு' கூட ஒருவருக் குப் பாடுபொருளாக மாறியுள்ளது.

"உடல்கருத்த கரியே! நீ தீய தீயின்
ஒளிநாக்குச் சுவைத்துமிழ்ந்த எச்சில்! மிச்சில்!
வடிவினிலே ஆயுதம்போல் மூன்று கொண்டை
வைத்திருக்கும் அடுப்புத்தான் உனது வீடு!
அடுப்புண்ணும் செத்தமரம் உனது தந்தை!
அழகான கரித்துண்டே! வீட்டை விட்டு
நடுத்தெருவில் கிடப்பதுஏன்? இலங்கை மண்ணில்
நாதியற்று நம்தமிழன் கிடத்தல் போல"

என்பது எழில் முதல்வனின் பாட்டு.

இவ்வண்ணம் இக்காலக் கவிஞர்கள் தனித் தனிப் பாடல்களைப் பாடுவது மட்டுமல்லாமல் காலத்துக்கேற்ற குறுங்காவியங்களையும் பெருங்காவியங்களையும் படைத்துள்ளனர்.

முடியரசனின் 'பூங்கொடி', கண்ணதாசனின், 'மாங்கனி', தமிழ் ஒளியின் 'கண்ணப்பன் கிளிகள்', கவிமணியின் 'ஆசிய ஜோதி', நாமக்கல் கவிஞரின், 'அவனும் அவளும்', வாணிதாசனின் 'தமிழ்ச்சி', சாலை இளந்திரையனின் 'சிலம்பின் சிறுநகை' போன்ற கதைக் கவிதைகள் இலக்கிய வரலாற்றில் இடம் பெறத்தக்க நல்ல படைப்புக் களாகும்.

நாம் வாழுகின்ற இருபதாம் நூற்றாண்டு பரபரப்பு மிகுந்த காலம். வேகமும் விரைவும் மிகுந்த இந்தக் காலத்தில் பெருங்காவியங் களையோ—குறுங்காவியங்களையோ உட்கார்ந்து படித்துக்கொண் டிருக்க நேரமில்லை. மேலும் பழங்காலத்தில் கவிதை பெற்றிருந்த இடத்தை இக்காலத்தில் உரைநடை பிடித்துக் கொண்டுவிட்டது. இதன் காரணமாகப் பொதுவாகத் தமிழ்க் கவிதையைப் படிப்போர் தொகை குறைந்து விட்டது. இதை ஈடுகட்டச் சிலர் முயன்றனர். சாதாரணப் பொதுமக்களிடையே கவிதைச் சுவையை எப்படி ஊட்டுவது என்று சிலர் சிந்தித்தனர். இந்தச் சிந்தனையின் விளைவே, "கவியரங்கம்".

விழாக்களில், இக்காலத்தில் 'கவியரங்கம்' என்பது தவிர்க்க முடியாத ஒரு இடத்தைப் பெற்றுவிட்டது. இதன் காரணமாகத்

தமிழ்க் கவிஞர்களுக்குப் புதிய வரவேற்பும் கிடைத்தது. 'கவியரங்கக் கவிதைகள்' தமக்கென்று ஒரு போக்கும், நோக்கும் கொண்டதாய் வளரத் தொடங்கிற்று. இத்துறையில் பலர் தம் திறனைக் காட்டத் தொடங்கினர்.

தமிழ்நாட்டுக் கவியரங்குகளில் ஒரு பொலிவையும் வலிவையும் ஊட்டியவர் மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழவேள். டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் ஆவர்.

டாக்டரின் கவிதைகளில் எதுகையும், மோனையும், சொல் ஜாலங்களும் மிகுந்திருக்கும். உரையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறத் தக்க நிலையில் அவை அமைந்திருக்கும். யாழின் இசையும், புயலின் வேகமும், மின்னலின் தெறிப்பும், இடியின் முழக்கமும் அவர் பாடல்களில் தோன்றித் தோன்றி மறையும். 'கவியரங்கில் கலைஞர்' என்ற அவரது நூல் தமிழுக்குக் கிடைத்த ஓர் அருங்கலைச் செல்வம். புதிய தமிழ்க் கவிதையின் வளர்ச்சியைக் காட்டும் ஓர் எல்லைக் கோடு.

கவியரங்கக் கவிதைகளுக்கு வளம் மூட்டிய கலைஞர்களுள் குறிப்பிடத்தக்க மற்றொருவர் அப்துல் ரஹ்மான். இந்த ஆண்டு—தில்லி அனைத்திந்திய வானொலி நடத்திய கவியரங்கில் அப்துல் ரஹ்மான் பாடிய பாடலின் ஒரு பகுதியைக் காண்போம். 'சுதந்திரப் போராட்டம்' பற்றிப் பாடப்பட்ட கவிதையிது:

உடல் தூரிகைகள்
கண்ணீர், வியர்வை, ரத்த
வண்ணங்கள் தோய்ந்து
தியாகத் திரைச் சீலையில்
தீட்டிய சித்திரம்
இந்தச் சுதந்திரம்.
எம்தானைத் தலைவனே
புதிய பாரதப் போரின்
புதுக்கீதைக் கண்ணன்; அவன்
ஆயுதம் ஏந்திநின்ற
அர்ச்சுனரைக் கூட
நிராயுதமாய் நிற்க வைத்தே
நிகரில்லா வெற்றி பெற்றான்—
அறுவை கிசிச்சையின்
ஆபத்து இல்லாமல், அவன்—
சுதந்திரப் பிரசவத்தை
சுகமான பிரசவமாய்
ஆக்கி வைத்த மருத்துவன்—
இந்த நாள் அதிசய நாள்
சேய்களெல்லாம் கூடித்

தாயைப் பிரசவித்த
அற்புதம் நிகழ்ந்த நாள்!.........

கவிஞர் வேழவேந்தன் பல கவியரங்குகளில் பாடிப் பாடித் தமிழ்நாட்டு மக்களின் இதயத்தையெல்லாம் ஈர்த்துள்ளார். வேழவேந்தனைப் பாட்டுலக வேழம் என்று கூறுவது பொருத்தமுடையது. புதுவையில் நடந்த பாரதிதாசன் விழாவில் கவியரங்கில் பங்குபெற்ற வேழ வேந்தன் பாவேந்தரைப் பற்றிப் பாடினார். அப் பாடல் பின்வருமாறு:

விருத்தத்தால், இசைப்பாவால், இந்த நாட்டில்
விளைப்புரட்சி செய்தவர்க்கு விழாக்கள் தேவை!
விருத்தத்தில் இளைஞனைப்போல் காட்சி காட்டி
'வெறும்புரட்சி' செய்பவரால் விடிவா உண்டு?
கருத்துக்கள் சாகாமல் வாழும்; கூத்துக்
காட்சியெலாம் காவியத்தில் நிலைப்ப தேது?
பெரியநிலாத் தேய்ந்தாலும் வளரும்; வாழும்
பின்னிவரும் கொடிமின்னல் நிலைப்ப துண்டோ?"

மேலே உள்ள பாடலில் 'விருத்தத்தில் இளைஞனைப்போல் காட்சி காட்டி வெறும்புரட்சி செய்பவர்' என்ற வரிகள் வேழவேந்தனின் சமத்காரத்தையும், அலங்கார நடையையும் காட்டுகின்றன அல்லவா?

இவர்களைப் போலவே, வாணிதாசன், முடியரசன், சுரதா, கருணானந்தம், கண்ணதாசன் போன்றோரும் பல கவியரங்கப் பாடல் களைப் பாடியுள்ளனர். தமிழ்க் கவிதையின் வளர்ச்சிக்கு வாயிலாக இருப்பனவற்றுள் இக் காலக் கவியரங்குகளும் ஒன்று என்று கூறலாம்.

இக் காலத்தே 'புதுக்கவிதை' என்ற பெயரில் இலக்கணம் இல்லாமல் எழுதி வரும் போக்கும் தலையெடுத்துள்ளது. இப் பாடல்களைப் புதுக்கவிதை என்பதைவிட, "சொற்சித்திரம்," "சொற் கோலம்," "சிந்தனை மின்னல்" என அழைப்பதுதான் பொருந்தும். அமெரிக்க நாட்டுக் கவிஞர்களின் படைப்புக்களை அப்படியே தழுவி இந்தப் புதுக் கவிதைகள் படைக்கப்படுகின்றன.

'பச்சை முக்கோணம்' என்ற தலைப்பில் நாஞ்சில் ஆரிது என்னும் கவிஞர் பாடியுள்ளார். பாடல் இதுதான்:

விறகென்று நினைத்து
நெருப்பைத் தொட்டான்

நெருப்பும்—
விறகென்று நினைத்தே

அவள்மேல் படர்ந்ததோ!
உணர்வுகள் செய்யும்
பிழைகளின் சூட்டில்
மாமூல் சமையல் நடக்கிறது!

கோடைக் கால
மழைத்தூறலிலும்
கௌடிக் காளான் முளைக்கிறது ....

'குடும்பக் கட்டுப்பாடு'தான் இப் பாட்டின் பாடு பொருள். எத்தனை கட்டுப்பாடுகள் இருந்தாலும் சில சமயங்களில் அவற்றை மீறியும் விளைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன என்பதையே இக் கவிதை காட்டுகிறது.

மற்ெருரு புதுக்கவிஞர் குஷ்டரோகியைப் பற்றிப் பின்வருமாறு பாடுகின்றார்:

இந்தக் கந்தல் பையிலிருந்து
உயிர்ப் புதையல்
சில்லறையாக ஒழுகிக் கொண்டிருக்கிறது

இந்தச் சோகச் சித்திரத்தின்
அங்கங்கள்
நிறங்களாகி வழிந்து கொண்டிருக்கின்றன

இந்தச் சப்பாத்திக் கள்ளியின் உடலெங்கும்
ரோஜா இதழ்கள்
முட்களாய்த் துருத்திக் கொண்டிருக்கின்றன

வாழ்வின் வண்ண மாளிகையில் இந்தப்
பொட்டு வைத்த பூசனிக்காய்
திருஷ்டிக்காய் திரிசங்குநிலை கொண்டிருந்தது.

இப் பாடலில் அடுத்தடுத்துப் பல படிமங்கள் அமைந்து நம் நெஞ்சைக் கவருகின்றன. இக் காலப் புதுக்கவிதைகளில் இலக்கணத்தைக் காண முடியாவிட்டாலும் இளைஞர்களின் புத்தம் புதிய சிந்தனைகளை நன்கு இனம் கண்டுகொள்ள முடிகிறது.

சி. சு. செல்லப்பா, ந. பிச்சமூர்த்தி, நா. காமராசன். புவியரசு, இளமுருகு போன்ற கவிஞர்கள் இத்துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

இதுகாறும் தமிழ்க் கவிதையின் சில பொதுவான பொருள்களைத் தாலி புலால நியாயமாக — ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு

பதம் என்பது போலக் கண்டோம். இனித் தற்காலத் தமிழ்க் கவிஞர்கள் ஒரு சிலரைப் பற்றித் தனித்த நிலையில் சற்றே சுருக்கமாகச் சொல்ல நினைக்கின்றேன்.

இந்த நூற்றாண்டில்—மாபெரும் கவிஞர்களாகத் திகழ்ந்தவர்கள்—கதிரொருங்கிருந்த காட்சிபோல இருந்தவர்கள் பாரதியும் பாரதிதாசனும் என்று முன்னர்க் குறிப்பிட்டேன்.

பாரதிதாசன் :

பாரதிதாசன் தமிழிலக்கிய மரபை நன்கு அறிந்தவர். மரபை அறிந்ததோடன்றிப் புதிய மரபையும் உருவாக்கியவர். "மனிதன் படைக்கும் இலக்கியம் காலத்திற்கு ஏற்பப் புதிய வடிவங்களைப் பெற்ற போதிலும், பழைய இலக்கியங்களின் தொடர்பையும் அடிப்படையையும் விடுவதில்லை. அவற்றை இலக்கிய மரபு என்று கூறுவது வழக்கம். இலக்கியத்தின் வரலாற்றை ஆராய்ந்தால் பழைய இலக்கியத்தின் செல்வாக்கு இருந்து வருவதைக் காணலாம்" என்று இலக்கிய மரபு பற்றி டாக்டர் மு.வ. கூறுவார். பாரதிதாசனின் பாடல்களில் பழைய இலக்கிய மரபுகள் அமைந்திருக்கின்றன என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுக்களைக் காணலாம். பல்கலைச் செல்வர் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் பாரதிதாசனைப் பற்றிக் கூறியிருக்கும் கருத்தும் இங்குச் சிந்திக்கத் தக்கது.

" He is immersed in ancient Tamil literature and he brings back that rich tradition to enrich new poetry, the new rhythm of democracy. He is a master in weaving words into charming and enchanting verses. But he represents another trend in modern poetry, a revolt against the recent past from the social point of view"[2] என்பது அவர் கூற்று.

பாரதிதாசனின் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் மூடநம்பிக்கையைச் சாட எழுந்த ஓர் அங்கத இலக்கியமாகும். இது தமிழுக்கு ஒரு புதுமையே எனலாம். கடவுளை மட்டுமே பாடுவதற்குப் பயன்படுத்திய கீர்த்தனை என்னும் இலக்கிய வடிவத்தைப் பாட்டாளி மக்களைப் பாடுவதற்கு மாற்றிய பாரதிதாசனின் திறன் ஒரு மகத்தான இலக்கியப் புரட்சியேயாகும். 'குடும்ப விளக்கு' தற்காலத் தன்மை (modernity) பொதுளிய ஒரு புதுமைக் காவியம். இவ்வண்ணம் பாரதிதாசனின் புதுமைகளை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

கடவுள் மறுப்பு, பிராமணத் துவேஷம், முதலியவற்றை அதிகம் பாடியதன் மூலம் பாரதிதாசன் தன் கவித்துவத்தை வீணடித்து விட்டார் என்று கருதுவோருமுண்டு. அது எவ்வாறாயினும் அவருடைய படைப்புக்களில், 'அழகின் சிரிப்பு', 'எதிர்பாராத முத்தம்' 'தமிழச்சியின் கத்தி' முதலிய நூல்கள் நிலைபேறுடையனவாய் வாழும் என்பது ஒருதலை.

பாவேந்தரின் சந்தநயம் மிக்க செழும்பாடல்களைத் 'தமிழச்சியின் கத்தி'யில் காணலாம். அக்காவியத்தில் வரும் சோலை வருணனை இது :

கோவை படர்ந்திட்ட
கொய்யாப் பழந்தரும் தோட்டம்—இங்கு
கூவும் பறவையின் கூட்டம்—மிக
நாவிற்றுப் போகும்
இனிக்கும் பழச்சுளை ஊட்டம்!

மாங்குயில் கூவிஇவ்
வண்ணத் தமிழ்மொழி விற்கும்—இந்த
வையமெல்லாம் அதைக் கற்கும்—களி
தாங்காது தோகை
விரித்தாடி மாமயில் நிற்கும்.

பாங்கிலோர் காட்டில்
படர்கொடி ஊஞ்சலில் மந்தி—ஒரு
பாறையின் உச்சியை உந்தி—உயர்
மூங்கில் கடுவனை
முத்தமிடும் அன்பு சிந்தி.

பாரதிதாசனிடம் புத்தம் புதிய உவமைகளைக் கண்டு மகிழலாம். ஒரு கிளி கோவைப் பழத்தில் தன் சிவந்த அலகைச் சற்றே ஊன்றிப் பின் எழுந்து செல்கிறதாம். கவிஞர் அந்தக் காட்சியைப் பாடுகிறார். அந்த இடத்தில் அவர் பயன்படுத்துகிற உவமை நினைக்க நினைக்க இனிக்கிறது. கிளியைப் பார்த்துக் கவிஞர் பேசுகிறார்.

கிளிச்செல்வ மேநீ அங்கு
கிடந்திட்ட பச்சி லைமேல்
பளிச்சென எரியும் கோவைப்
பழத்தில்உன் மூக்கை ஊன்றி
விளக்கினில் விளக்கை ஏற்றல்
போலேநீ விரைந்து சென்றாய்!

என்பது அவர் பாடல்.

ஈடு இணையற்ற மேதாவிலாசமும், கவித்துவமும் கொண்ட பாவேந்தர்—தன் பாடல்களின் மூலம் தமிழ்க்கவிதை உலகில் பெரும் புரட்சியையும் மலர்ச்சியையும் ஏற்படுத்தினார். பிற்காலக் கவிஞர்கள் பலருக்கு ஊக்கம் தரும் தலையூற்றாகத் திகழ்ந்தார். தனக்குப் பின்னே ஒரு நீண்ட கவிஞர் பரம்பரை உருவாகுவதற்கும் அவர் காரணமாக இருந்தார்.

பாரதிதாசன் என்ற பெரிய ஆலமரத்தடியில், அது வேரூன்றி நின்ற மண்ணின் வளத்தால் சிறுசிறு பூச்செடிகளும் தோன்றின. இப் பூச்செடிகள் ஆலமரத்தைப் போன்ற பிரம்மாண்டமான வளர்ச்சியைப் பெறவில்லை என்றாலும், தம்மளவில் அழகும் பொலிவும் கொண்டு விளங்கவே செய்தன.

நாமக்கல் கவிஞர் :

பாரதிதாசன் காலத்தில் அவரைப் போலவே கவிதையின் மூலம் தொண்டு புரிந்து, அண்மையில் மறைந்த கவிஞர் நாமக்கல் இராம லிங்கம் பிள்ளை ஆவர். பாரதிதாசனுக்குப் பின் சுயமரியாதை இயக்க உணர்வு உந்துதலாக இருந்ததுபோல் இவருக்குக் காந்தீய இயக்க உணர்வு உந்துதலாக இருந்தது.

தமிழ்த் தேசியம், இந்தியத் தேசியம் ஆகிய இரண்டையும் கண்ணெனப் போற்றியவர் இவர். இவர்தம் பாடல்களில் சொல்ல விழையும் கருத்துக்குத் தான் முதன்மை தந்தாரேயன்றி, வெளிப்படுத்தும் முறையில் எந்தவிதமான கலையழகையும் காட்டவில்லை. பொதுவாகக், 'கவிதை' என்பது சொல்லப்படும் முறையில்தான் இருக்கிறதேயல்லாமல் சொல்லுகிற பொருளிலே இல்லை.[1]

'ரயிலில்மெயிலில் ராத்திரி வண்டியில்
இஞ்சின் முன்னால் இருட்டை விரட்டிடும்
இரண்டு விளக்குகள்...............'

என்பது நாமக்கல்லாரின் வரிகள். இந்த உவமைகள் எதைக் குறித்து வந்தன தெரியுமா? உருவும் திருவும் கொண்ட ஓர் ஆரணங்கின் அழகிய குளிர்ந்த மழைக் கண்களுக்கு உவமையாக வருகிறது. இந்த உவம—உவமேயப் பொருத்தமின்மை நமக்கு எளிதிலேயே தட்டுப்படுகிறது. நாமக்கல்லாரின் கற்பனை வளமும், கவிதை புனையும் திறனும் எத் தன்மைத்து என்பதற்கு இதனினும் வேறு சான்றுகள் தேவையில்லை.

சுரதா :

பாரதிதாசன் பரம்பரையில் தலைமையிடம் வகிப்பவர் கவிஞர் சுரதா ஆவர். சுரதா என்னும் பெயர் சுப்புரத்தினதாசன் என்பதன் சுருக்கமாகும்.

அணி இலக்கணத்தில் தலைமை அணியாகப் போற்றப்படும் உவமையை இவர் அழகுறக் கையாளுவதால் உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துப் பேசப்படுகிறார். எதை எழுதினாலும் புதுமையாக எழுத வேண்டும் என்ற ஆரா அவாவை இவர்பால் காண்கிறோம்.

'புதுமையே இன்றிப் பாடல்
புனைந்திடல் உயிரில் லாத

பதுமையின் மீது சுற்றும்
பட்டுடை போன்ற தாகும்'

என்பது அவர் கூற்று.

சுரதாவிடம் அழகிய சொல்லாட்சிகளைக் காணலாம். 'ஆசு கவி'யை 'அவசரக் கவிதை' என்றும், 'பாடை'யைக் 'கால்கழிந்த கட்டில்' என்றும், கடலை, 'மண்மகளின் ஆடை' என்றும், 'பழத்தை' 'விதைக் குடும்பம்' என்றும் புதுப்புதிய சொற்களால் அவர் பாடுவதுண்டு. சுரதாவின் தன்மைத் தன்மையை (originality) அவர்தம் சொல்லாட்சிகளில் நாம் காணமுடிகிறது. இத்தகு சொல்லாட்சிகளைப் பயன்படுத்த சிறந்த கவிஞர்களால்தான் முடியும். ஒரு சொல்லை அதன் வழக்கமான பொருளில் கையாளாமல் புதுமையாக வழங்குவது என்பது ஓர் அரிய கலை.[2]

பாரதிதாசனை நாம் ஓர் ஆவேச கவி என்று கூறினால், சுரதாவை 'Conscious artist' என்றுதான் கூறமுடியும். சுரதாவைப் பொறுத்தவரை அவரது கருத்துப்படியே கவிதை என்பது ஒரு கலையல்ல — தொழிலே.

சுரதா கவிதையைத் 'தொழில்' (craft) என்ற நிலையில் அணுகினாலும், 'கலை'க்குரிய எல்லாத் தன்மைகளும் நிரம்பி இருக்கக் காண்கிறோம்.

சுரதாவைப் பொறுத்தவரை பாரதிதாசனிடம் இருந்தது போன்ற சமுதாயத்தைப் பற்றிய தெரிநிலை விழிப்பு (Social awareness) இல்லை என்றே கூறலாம். 'கவிதை கவிதைக்காகவே' என்ற கொள்கையின் தாக்கம் இவரிடம் மிகுதி.

குயிலை நோக்கிப் பாடுவதுபோல் அமைந்த சுரதாவின் பாடல் ஒன்று அவரது கற்பனை வளத்தைக் காட்டுவதாக அமைகிறது.

'வெயிலாடியுன் மேனிக றுத்ததுவோ?
விளையாடியுன் பார்வை பழுத்ததுவோ?
மயில்தான்கும ரேசனின் வாகனமோ?
மணமேடை உனக்கெது? மாமரமோ?'

கவிதையின் மூலம் பழஞ்செய்திகளை நினைவுபடுத்துவது சுரதாவின் போக்காகும். வரலாற்றுக் குறிப்புக்களை இடையிடையே மடுத்துப் பாடும் பரணரைப் போலச் சுரதாவும் இடையிடையே வரலாற்றுச் செய்திகளைப் பேசுகிறார். சில இடங்களில் இப்போக்கு மிகுதியாக இருப்பதால் கவிதை உணர்வு தடைப்பட்டுப் போகவும் செய்கிறது.

முடியரசன் :

இக்காலக் கவிஞர்களுள் ஓர் அசைக்க முடியாத பேரிடத்தைப் பெற்றிருப்பவர் கவிஞர் முடியரசன். மொழிப் பற்று, இனப்பற்று ஆகிய இரண்டையும் கண்ணெனப் போற்றுபவர் இக்கவிஞர்.

கவிதைக்கு இலக்கணம் என்பது மிகமிக இன்றியமையாதது என்பது முடியரசன் கருத்து.

'பாவலன் தன் கவிப்பொருளைப் பாடுங் காலைப்
பாட்டகத்தே இலக்கணமும் அமைதல் வேண்டும்
ஆவல் கொண்டு கவிபுனைவோர் இலக்கணத்தை
அருகில் வைத்துப் பெருங்கவியாய் எண்ணிக்கொண்டு
தாவுகின்றார் பாடுதற்குத் தவறி வீழ்ந்து
தகுபுலவோர் இலக்கணத்தைப் புதைத்து விட்டுக்
கூவுகின்றார் ஒப்பாரிக் குரலெடுத்து,
கொடுமைஇது ! கவிஞன் தன் மரபும் அன்று."

முடியரசனின் மொழிப்பற்று அளவிறந்தது; 'மொழியுணர்ச்சி', 'துயில் கலைந்தது', 'தமிழ்க் காதலி', 'தமிழ்தான் என்பேர்' என வரூஉம் பாடல்கள் செந்தமிழ் மாட்டு அவர் கொண்டிருக்கும் தீராத காதலை எடுத்துக் காட்டுகின்றன. 'எங்குந் தமிழ் எதிலும் தமிழ்' என்ற உணர்வு கவிதையை ஆட்கொண்டுள்ளது. 'தமிழ் வழங்காக் கோயிலுக்குள் தலையைக் காட்டேன்' என்று ஓரிடத்தில் கவிஞர் பாடுகிறார்.

கவிஞர் முடியரசனைப் பற்றித் தமிழண்ணல் கூறும் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

"தமிழ் முடிசூடிப் படிப்பவர்தம் மன அரியணை ஏறி உணர்ச்சிகளை ஆளும் பாட்டுத் திறத்தாலும், அதைக் கொண்டு வையத்தைப் பாலிக்கும் திறத்தாலும் முடியரசன் முடியரசராகவே திகழ்கின்றார்" என்பது தமிழண்ணலின் பாராட்டுரை.[3]

முடியரசன் பாடல்களில் ஆங்காங்கே பல அழகிய படிமங்களைக் (images) காணலாம். எந்தக் கருத்தையும் படிப்பவர் மனத்தில் படம்போல் பதியும் வண்ணம் பாடுவது கவிஞர் மரபு[4]. 'நிலவு' பற்றிய முடியரசனின் பாடல் இத்தகைய படிமத்தைத் தோற்றுவிக்கிறது.

'நிலவணங்கே ! உனைக் கதிரோன்
கூடும் காலை
நீலமுகிற் குழல் தளரக்
கட்ட விழ்ந்து
பொலபொலவென் றுதிர்ந்த நறு
மலர்கள் தாமோ ?
பூத்திருக்கும் விண்மீன்கள்
வானம் நீங்கள்

நலம் நுகரும் பஞ்சணையோ?
கதிரோன் எங்கே
நடந்துவிட்டான்? உதிர் மலரை
மீண்டும் சேர்த்துக்
குலமாலை ஆக்குதற்கு
மின்னல் நாணைக்
கொண்டுவரச் சென்றனனோ?
கூறாய் தோழி!'

தொடக்க நிலையில் எளிமையான நடையில் பாடிவந்த முடியரசன் போகப் போகக் கடுமையான நடையில் பாடத் தொடங்கி விட்டார். அண்மையில் அவர் எழுதி வெளிவந்துள்ள, 'பூங்கொடி' 'வீரகாவியம்' போன்ற காவியங்கள் பண்டைக் காலத்துத் தமிழ் நடைபோல் இலங்கக் காண்கிறோம். இதனால் அவரது இன்றைய பாடல்கள் தமிழ் மக்களின் நெஞ்சத்தை எட்ட மறுக்கிறது எனலாம்.

வாணிதாசன் :

புதுவை மாநிலம் தமிழுக்குத் தந்த புதுமைக் கவிஞர்களுள் வாணிதாசனும் ஒருவர். வாணிதாசனைப் பாரதிதாசனின் நிழல் என்று கூறலாம். உருவம், உள்ளடக்கம் அனைத்திலும் பாரதி தாசனை அப்படி அப்படியே பின்பற்றுபவர் வாணிதாசன். எனவே இவர் நிறையவே எழுதியிருந்தும்கூட, பாரதிதாசனின் சொல்வாக்கி னின்று மீற முடியாத காரணத்தால், அதிகமாக வெளியுலகிற்குத் தெரி யாதுபோய்விட்டார். பாரதிதாசனுக்கும் அவருக்கும் எந்த அளவுக்கு ஒற்றுமை இருக்கிறது என்பதைக் காணப் பின்வரும் பாடல்களே சான்று. இருபாடல்களுமே 'கடல்' பற்றித்தான் பேசுகின்றன.

'ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓர மெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல்மெத்தை; அம்மெத் தைமேல்
நேரிடும் அலையோ கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி! (பாரதிதாசன்)

'ஊருக்குக் கிழக்கே உள்ள
மணல்மேட்டுத் தென்னை, புன்னை
வேரினை அலைக்கும்—நீல
விரிகடல்! விளையாட் டிற்குப்
போரிடும் சிறுவர் போலப்
புரண்டிடும் அலையின் கூட்டம்

வார்குழல் நெளிவாம்; நீல
மறிகடல் பரப்பே தம்பி! (வாணிதாசன்)

(தடித்த எழுத்துப் பகுதிகளின் ஒருமைப்பாட்டை உணர்க)

வாணிதாசனிடம் காணப்படும் தனிச்சிறப்பு அவரது இயற்கைப் புனைவேயாகும். பாரதிதாசனை விடவும் கூட வாணிதாசனுக்கு இயற்கை ஈடுபாடும், முருகியல் உணர்வும் மிகுதி. இவரது இயற்கைப் புனைவைக் காணப் பின்வரும் பாடல் உதவும்.

'குளத்தினிலே தாமரைகள் தமிழ்மன்னர் கூட்டம்
குளிர்அல்லி முகஞ்சுருக்கும்! கொடித்தக்கைப் பூக்கும்;
பளபளக்கும் பச்சையிலே மரகதப்பூந் தட்டு,
பாய்ந்தேறும் சொரித்தவளை பாசியிடைக் கத்தும்;
இளவாளை கொலைவாளாம்; எழுந்தடித்துப் பாயும்;
இலைமறைவில் நீர்ப்பாம்பு தலைநீட்டிப் பார்க்கும்,
உளத்தினிலே மகிழ்வூட்டும் தொடுவானச் செம்மை;
ஒளிக்கதிர்கள் பொன்வரிகள், ஒளிர்ந்துவரும் காலை!'

தமிழ் ஒளி :

நாற்பதே ஆண்டுக் காலம் வாழ்ந்து, தம் கவிதைகளால் தமிழ் இலக்கிய உலகினைப் பரபரப்புக்கு ஆளாக்கியவர் தமிழ் ஒளி. சந்தக் கவிதைகள் பாடுவதில் இவர் தனிப்பட்ட திறனுடையவர். வெறும் உரைநடைபோல் அமையும் விருத்தப்பாக்களை இவர் அதிகம் கையாளுவதில்லை. ஓசையின்பமும் தாள லயமும் உடைய பாக்களையே இவர் விரும்பிப் படைத்தார். தத்துவச் சிந்தனைகளைப் பாடுவதில் இவருக்குத் தனிவேட்கையுண்டு.

'கண்ணப்பன் கிளிகள்' என்பது இவர் படைத்தளித்த அருமையான காதல் காவியம்; உருவக நிலையில் பாடப்பட்டது இது. வாழ்க்கையென்னும் முட்பரப்பில் தடுக்கி வீழ்ந்து, குருதி சிந்தித் தீரா அவலத்துக்கு ஆளாகிய ஓர் உயிரின் அவலப் புலம்பலாக இக்காவியம் அமைந்துள்ளது.

இக்காவியத்தில் வருகிற 'கிளி' தன் அவல வாழ்வை நினைத்து ஓரிடத்துப் புலம்புகிறது.

சுடுகின்ற கனிதின்று
சுகப்படவோ?—நான்
பாடுகின்ற கூட்டிற்குள்
பயப்படவோ?—அவன்
வயப்படவோ?
தருகின்ற கனிதின்று
தனிப்படவோ?—கொடும்
பனிப்படவோ?

வருகின்ற வசந்தத்தில்
வதைப்படவோ?—உயிர்
புதைபடவோ
விழுகின்ற கனிதின்று
விளித்திடவோ?—மனம்
புளித்திடவோ?
அழுகின்ற இருளுக்குள்
அடைந்திடவோ?—உளம்
உடைந்திடவோ?

இக் காவியத்தைப் படித்து முடிக்கும்போது கவிஞர் தமிழ் ஒளியே நம்முன் நின்று — ஓரிடத்தில் கவிஞன் கீட்ஸ் — கூறியதுபோல." "I feel upon the thorns of life, I bleed"

என்று புலம்புவதுபோல நாம் உணர்கிறோம். தமிழ் ஒளியால் தமிழ்ப் பாட்டுலகம் புத்தொளி பெற்றது என்பது உறுதி.

கம்பதாசன்:

ஒரு காலத்தில் தமிழ்க் கவிதை உலகில் கம்பதாசன் என்ற பெயர் பலரது வரவேற்புக்கும், மயக்கத்திற்கும், வியப்புக்கும் உரிய பெயராக இருந்து வந்தது. தன்னுடைய வீறுகெழுமிய பாக்களில் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிய பெருமை இவர்க்கு உண்டு.

தமிழ்க் கவிதை உலகத்தில் முதன்முதலாகச் சமதர்மத்தை — 'சோஷலிஸ'த்தைப் பாடியவர் இவரே. எனவே, இவரைத் தமிழ் நாட்டின் 'முதல் சோஷலிஸக் கவிஞர்' என்று கூறலாம். (இவரது அருமையை அறிந்த தமிழக அரசு அவருக்குத் திங்கள்தோறும் நூறு வெண்பொற்காசுகளை உதவியாக அளித்து வந்தது என்பதும், கடந்த மாதம் அவர் காலமானார் என்பதும் யாவரும் அறிந்ததே.)

பாட்டு வடிவத்தில் இவர் செய்த புதுமைகளும், மாற்றங்களும் பல. உதாரணமாக ஒரு பாடலைக் காண்போம்: 'கூட்டணி' என்பது பாட்டின் தலைப்பு.

* சிறகடிக்கும் இன்ப வாழ்க்கை?
—ஆண்! பெண்
§ சிட்டு இணைப்பினிலே..............!
மாயை,
‡ உற, விழிகள் கண்டும்;
ஓலமிடும்; துறவி..............!
குறிகயத்தில்................; பத்ம பூவில்;
திறமிகுந்த நெஞ்சின் ஆசை!—வேதன்,
கொற்றம்! இகம், என்றும் நாதன்!

‡ அறிஇதனை ; இலிங்க பூசை............
ஆதி ! சுடர்க் கருவி !
ஓலமிடும் ; துறவி...............கோவில்,
* மறக்கடிக்கும் துன்ப வாழ்க்கை
—வான் ! மண் !
§ எட்டு இரண்டினிலே............

இப்பாடல் மேற்காட்டியபடி (* § ‡ குறியிட்டுக் காட்டியபடி) இணைத்துப் படித்தால் ஓரளவு பொருள் புலப்படுதல் காணலாம். ஆணும்-பெண்ணு மாகக் கூடி வாழும் காதல் வாழ்வு அன்பிருந்து வேண்டிய பொருள் இல்லாமையால் சிதறுண்டு போவதைக் கவிஞர் காட்டுகிறார். சிதறுண்டுபோன வாழ்வின்பத்தைக் காட்டவே பாடல் வரிகளையும் ஆங்கொன்றும், ஈங்கொன்றுமாய்ச் சிதறடித்திருக்கிறார் கவிஞர்.

பொதுவாக, ஒரு கவிதைக்கு இரு வடிவங்கள் உண்டு : (1) அதன் பௌதீக வடிவம்,[5] (2) அதன் உள்ளார்ந்த எண்ண வடிவம்.[6] இந்த இரண்டு வடிவங்களும் இரண்டறக் கலந்திருக்கும் நிலையைச் சில பாடல்களில் காணமுடியும். பௌதீக வடிவத்தை மட்டுமே மதித்து அதன் உள்ளார்ந்த எண்ண வடிவத்தைக் காண மறுப்பது பொருந் தாது.[7] மேற்காட்டிய பாட்டில் 'Logical sequence' இல்லையென்று கூறமுடியாது. சற்றே நின்று நிதானித்துப் பார்க்கிறபோதுதான் இப் பாட்டின் கட்டமைப்பு (structure) எந்த அளவு பாடுபொருளோடு இயைந்து தழுவி நிற்கிறது என்பது புலனாகும்.

இங்ஙனம் தமிழ்க் கவிதையில் வடிவம் பற்றிய மாற்றத்தைப் புகுத்தியவர்களில் கம்பதாசனும் ஒருவர் என்பதை நாம் மறக்கமுடி யாது.

கம்பதாசனின் பாடல்கள் அனைத்தும் உணர்ச்சி மயமானவை ; பொங்கி வெடிக்கும் உணர்ச்சிக் குவியலாகவே அவர் பாட்டுக்கள் இருப்பதனால் அவர் கையாளும் சொல்லாட்சிகள் புதுமையானதாக வும், பழக்கமின்மையுடையது போலவும், விநோதமாகவும் காட்சி தரும். 'ரவி,' 'சந்திரிக,' 'உஷை,' 'ருது,' 'வர்ஷம்' போன்ற வட சொற்களும்கூடத் தாமாகக் கலந்து புரளும்.

மொத்தத்தில் கம்பதாசனின் பாடல்கள் தமிழ்க் கவிதை வளர்ச்சி யின் ஒரு படி நிலையைக் காட்டுவது என்பது பொருந்தும்.

கண்ணதாசன் :

ஒருமா மணியாய், உலகிற்கோங்கிய திருமா மணியாய் இன்றைய தினம் திகழ்ந்துவரும் தன்னேரில்லாத கவிஞர் கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன் ஆவர்.

கவி பாடும் ஆற்றல் என்பது இவருக்குக் கருவிலே வாய்த்த திருவெனலாம். பண்டைய தமிழிலக்கியச் செழுமையும், நாட்டுப் புறப்பாடல்களின் வேகமும் கலந்திணைந்து புத்தம் புதிய இன்னிசைப் பாடல்களை இவர் எழுதிவருகிறார்.

தலைவனின் பிரிவால் வாடும் தலைவியர் துயில் மறந்து வாடுவதை எத்தனையோ சங்கப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். 'கொன்னூர் துஞ்சினும் யாம் துஞ்சலமே' (குறுந் : 18) என்பது குறுந்தொகைத் தலைவியின் கூற்று. இதே கருத்தைக் கவிஞர் கண்ணதாசன் எப்படிப் பாடுகிறார் தெரியுமா?

காட்டில் மரம் உறங்கும்
கழனியில் நெல்லுறங்கும்
பாட்டில் பொருளுறங்கும்
பாற்கடலில் மீன் உறங்கும்
காதல் இருவருக்கும் கண் உறங்காது—அதில்
காதலன் பிரிந்து விட்டால் பெண் உறங்காது.

இந்தப் பாட்டின் இனிய ஓசையே தலைவியின் ஆராத் துயரத்தினை நம்முன் கொண்டு வந்து காட்டுகிறதல்லவா? முதல் இரு வரிகள் இயல்பு நவிற்சியாகவும் (Realism), அடுத்த மூன்றாவது வரி நுண் பொருட் கூற்றாகவும் (Abstract), அதற்கடுத்த வரி புனைவு நவிற்சியாகவும் (Romanticism) அமைந்து, அடுத்தமைந்த இருவரிகள் முன்னவற்றினின்றும் சற்றே நீண்டு இடை எதுகையோடு முடியும் அழகு பலமுறை எண்ணி வியத்தற்குரியதாகும். பழைய கருத்தையே பாடினாலும், தன் திறத்தையும் காட்டி அதைப் புதுக்கிவிடுவானே யானால், அது எந்த வகையிலும் குறைவுடையதன்று என்பர் திறனாய்வாளர். பழைய கருத்தும்கூடப் புதுப் பொலிவோடு கண்ணதாசன் பாடல்களில் ஒளிவிடக் காண்கிறோம்.

கண்ணதாசனின் பாடல்களில் நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கு மிகுதி. தாலாட்டும் ஒருவகை நாட்டுப்புறப் பாடலே. நாட்டுக் கோட்டைப் பகுதியில் தெருவெல்லாம் தாலாட்டு மணக்கக் கேட்கலாம். அப்படிப்பட்ட சூழலிலே பிறந்து வளர்ந்த கவிஞர் அழகிய தாலாட்டுப் பாடல்களைப் பாடுவதில் என்ன வியப்பிருக்கமுடியும்?

மலர்ந்தும் மலராத பாதி மலர்போல
　　வளரும் விழிவண்ணமே—வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
　　விளைந்த கலையன்னமே!
நதியில் விளையாடி, கொடியில் தலைசீவி
　　நடந்த இளந்தென்றலே—வளர்

பொதிகை மலைதோன்றி மதுரை நகர்கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே!

என்பது அவரது புகழ்பெற்ற தாலாட்டு வரிகளாகும்.

கண்ணதாசனின் தத்துவப் பாடல்கள் அவரை ஓர் உலக மகா கவிஞராக உயர்த்திக் காட்டுகிறது.

"யாரை நம்பி நான் பிறந்தேன்
போங்கடா போங்க................."

என்ற பாடலில் நிலையாமை என்ற தத்துவத்தை அவர் பாடி இருக்கும் அழகு செயல் மறந்து பாராட்டற் பாலதாகும்.

"A poet should express the emotion of all the ages and the thought of his own" என்று தாமஸ் ஹார்டி என்பார் கூறுவார். எல்லாக் காலத்துக்கும் உரிய பொதுவான உணர்ச்சிகளைப் பாடுவதோடல்லாமல் ஒவ்வொரு கவிஞனும் அவனவன் காலத்துக்குரிய உணர்வுகளையும் பாடவேண்டியதும் அவசியமே.

காதல், இயற்கை, தத்துவம் முதலியவற்றை மட்டுமே கண்ணதாசன் பாடவில்லை. இந்தக் காலத்திற்கே உரிய பொருளாதாரத் தத்துவமாகிய சமதருமத்தையும் தேனூறப் பாடுகிறார்.

"கடலென நிறைந்தவன் தொழிலாளி—அதில்
படகென மிதப்பவன் முதலாளி
கடலுக்குச் சினம்வந்து அலைமோதி—வரும்
முடிவினில் கிடைப்பது சமநீதி
இருப்பவர் ஏழைக்கும் கொடுக்க வைப்போம்—அவர்
கொடுக்கவில்லை எனில் எடுக்க வைப்போம்
பசியெனும் வார்த்தையைப் பறக்க வைப்போம்—அதில்
பாரத தேசத்தைப் பிழைக்க வைப்போம்!

என்பது கண்ணதாசனின் சோசலிஸப் போர்ப் பரணி ஆகும்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசில் நடந்த குழப்பங்களும், குளறுபடிகளும், அதன் விளைவான கட்சிப் பிளவும் பிறவும் கவிஞரின் மனத்தை உறுத்தின. பிரதமர் இந்திராவைப் பாராட்டும் வகையில் கண்ணதாசன் பாடிய, 'சேவத்தம்மா' என்ற உருவகக் கதைக் கவிதை ஓர் அற்புதப் படைப்பாகும்.

தத்துவப் பட்டினம் என்றொரு ஊரில்
தர்மத்தின் ஆலயம் உண்டு—சம
தர்மத்தின் தேவை உண்டு—அங்கு
சத்திய பூசைக்கு வெள்ளைக்கலை கொண்ட

மாது ஒருத்தியும் உண்டு—அவள்
பேரு செவத்தம்மை என்று.

கோவிலிலே ஒரு பூனைக் குருக்களும்
குட்டிகளும் சில உண்டு—தங்கள்
கோட்டை எனவைத்துக் கொண்டு—அவை
காவல் இருந்தன கோவில் கணக்குக்கு
கர்த்தூர்கள் தாங்களே என்று—வர
பக்தர்கள் தானில்லை அங்கு.

என்று தொடங்குகிறது அந்தக் கதைக் கவிதை.

இதுகாறும் நம் காலத்து வாழும்—வாழ்ந்த ஒருசில பெருங் கவிஞர்களைப் பற்றி அறிந்தோம். இனி, தமிழ்க் கவிதையின் குறைகளை யும் நிறைகளையும் ஓரளவு கண்டு செல்வது மிக அவசியமாகும். இக் குறை நிறை ஆராய்ச்சியே நம்மை நாமே இனம் கண்டு கொள்ளவும், ஏனைய இந்திய மொழிக் கவிதை வளர்ச்சியோடு நம் வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவும் உதவும்.

குறைகள் :

கவிதையின் அழகு வாய்ந்த உரைநடையும், உரைநடையின் எளிமை வாய்ந்த கவிதையும் இந்த நூற்றாண்டு இலக்கியத்தின் தனிப் பெரும் பண்புகள் எனலாம்.

1. கவிதையில் உரைநடையின் எளிமை தேவை. அதற்காக எளிமை ஒன்றையே கருதிச் செறிவில்லாத வெள்ளைப் பாட்டுக்களைப் பாடுவது ஒவ்வாது. இலக்கணத்தோடு அமைந்தனவெல்லாம் சிறந்த கவிதை என்ற தவறான கோட்பாடு இன்று நம்மிடையே அரும்பி விட்டது. செய்யுள் (verse) கவிதை (poetry) என்ற பாகுபாடே பல கவிஞர்கட்குத் தெரிவதில்லை.

'குப்பனே குளிக்கப் போனான்
கூடவே நானும் போனேன்
'எப்படா வந்தாய் ?' என்றான்
'இப்பத்தான் வந்தேன்' என்றேன்"

மேற்கண்ட வரிகள் செப்பமாக அமைந்த அறுசீர் விருத்தமே. அதற் காக இதைக் கவிதை என்று சொல்ல முடியுமா? இங்ஙனம் உயிரற்ற வெறும் செய்யுட் குப்பைகள் இக்காலத்தே பெருகிவிட்டதை நாம் காண்கிறோம்.

(2) இந்நாளில் கவிதையைப் படிப்போர் தொகை மிகவும் அருகி விட்டது. இதனால் கவிதையை வெளிப்படுத்தும் வாயில்களும் குறைந்து விட்டன. வெறும் பாலுணர்வுக் கனவுகளையும் பொருட்சிறப்பில்லாக்

கட்டுரைகளையும் வண்டி வண்டியாக வெளியிடும் நாளேடுகள், கிழமை, திங்கள், பருவ ஏடுகள் அனைத்துமே கவிதைக்குச் சிறிதளவே இடம் ஒதுக்குகின்றன. ஏடுகளில் வரும் கவிதைகளும் கூட வெறும் பண்டிகைப் பாடல்களாகவும் பஞ்சாங்கப் பாடல்களாகவும், ஒப்புக் குப் பாடப்படும் தனிமனிதப் புகழ்மாலைகளாகவுமே உள்ளன. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட தடத்திலேயே திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டிருப்பது சிறப்பன்று; நம் தமிழ்க் கவிதை இத்தனையினின்று விரைவில் விடுபடுதல் வேண்டும்.

(3) கவிதையில் பிரசாரம் செய்வது குறையன்று; ஆனால் அப் பிரசாரம் இலை மறை காயாக இருக்க வேண்டும். கலைநயம் கெடாமல் இருக்க வேண்டும். தேர்தல் காலத்துக் கட்சி மேடை போன்று கவி தைத் துறையை ஆக்குவது விரும்பத் தக்கதன்று. இக்காலக் கவிதை களில் மேடைப் பேச்சு வாடையே மிகுதியாக வீசக் காண்கிறோம்.

(4) இலக்கியம் என்பது வாழ்க்கையினின்றே பிறக்கின்றது; வாழ்க்கையைப் பாடுகிறது; வாழ்க்கையைச் செம்மைப்படுத்து கிறது. இதற்குக் கவிதையும் விதிவிலக்கன்று. கவிதை, இலக்கியத்தில் ஒரு பிரிவுதானே? இக்காலத் தமிழ்க் கவிதைகள் எந்த அளவுக்கு நடைமுறை வாழ்வைப் பிரதிபலிக்கிறது என்பது ஐயமே. இன்னும் சங்க காலத்துப் பாடல்களைப் போலக் காதலையேதான் பெரும்பாலான கவிஞர்கள் பாடி வருகின்றனர். இக்காலக் கவிஞர்களின் படைப்புக் களில் நாம் சந்திக்கும் காதலர்கள் சங்ககாலக் காதலர்கள் போலவே வேங்கை மரத்தடியிலும், மலைப்பூங்காவிலும்தான் சந்தித்துக் கொள் கின்றனர். குப்பத்திலும், கூவம் நதிக்கரையிலும் காதலர்கள் சந்திக் காமலா இருக்கிறார்கள்? ஏனோ, இக்காலக் கவிஞர்கள் எதையும் ஏறிட்டுப் பார்ப்பதில்லை. பெண்ணின் பாத மென்மையைப் பாட அனிச்ச மலரும், முக அழகைப் பாடத் தாமரையும் இன்றுவரை உவமைகளாகக் கையாளப்படுகின்றன. உவமையிலும் கூடப் புதுமை இல்லை.

காதலும் இயற்கையும் மட்டுமே கவிதைக்குரிய பாடுபொருள் என்று பலர் நினைத்து வருகின்றனர். வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியுமே கவிதைக்குரியனதாம். 'இன்னின்னவற்றைத் தான் பாடவேண்டும்; இவற்றையெல்லாம் பாடவே கூடாது' என்று தமக்குத் தாமே சில விதிகளையும் சட்டதிட்டங்களையும் நம் கவிஞர்கள் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அலிகளாகப் பிறந்துவிட்டவர்களின் அவலம், வேலை நிறுத்தலால் ஏற்படும் விளைவு, மறுவாழ்வு பெற ஏங்கும் பிச்சைக்காரன், சமுதாயத்தால் அருவறுத்து ஒதுக்கப்படும் குஷ்டரோகி, இது போன்ற விஷயங்களையெல்லாம் தமிழ்க்கவிஞர்கள் ஏன் பாடக்கூடாது? எத்தனையோ 'இன்டர்வ்யூக்'களுக்குச் சென்றும் ஒன்றிலும் வேலை கிடைக்காமல் உள்ளம் குமுறும் பட்டதாரி இளைஞ னின் அடிமன அவலத்தைக் கவிதையில் காட்டக்கூடாதா? எனவே,

குறிப்பிட்ட சில பொருள்களை மட்டுமே கவிதைக்குரிய பாடு பொருளாகக் கொண்டிருப்பது ஒரு பெருங் குறையே ஆம்! நம் கவிதையின் இன்னும் நவீனத் தன்மை (Modernity) தேவை.

(5) ஒரு நல்ல கவிதை என்பது கற்பனைக்கு விருந்து தருவதாக இருக்கவேண்டும் என்பர் அறிஞர்.[8] நம் தமிழ்க் கவிதையில் எல்லா விஷயங்களுமே கருத்து விளக்க உரைநடைபோல் (Expositary Prose) அமைந்துவிடுவது அவை நம் புலன்களுக்கு விருந்தாக அமைவதில்லை. மூளைக்கு விருந்தாக அமையும் கவிதையைவிட புலனின்பம் தரும் கவிதையே மேலானது என்பதை நம் கவிஞர்கள் மறந்துவிட்டனர்.

நிறைகள் :

(1) நம் தமிழ்க் கவிதையுலகம் பழங்காலத்தில் சமயத்தை ஒட்டி வளர்ந்தது போல இக்காலத்தில் அரசியலை ஒட்டி வளர்ந்து வருகிறது. இதனால் பல்வேறு விதமான சிந்தனை வளங்களும் பேராறுகளாகப் பெருகித் தமிழ்க் கவிதைக் கடலோடு சங்கமிக்கத் தொடங்கியுள்ளன.

(2) மேனாட்டியலக்கியத்தின் செல்வாக்குப் பேரளவில் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவுக்குப் புதிய சிந்தனைகளை உண்டாக்கியுள்ளன. அங்கதப் பாடல்கள், ஆன்மீக அனுபவங்களை உணர்த்தும் உருவகப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள் முதலியன ஓரளவுக்கு வளர்ந்துள்ளன.

(3) அகவல், வெண்பா, வஞ்சி, கலி என்னும் பழைய யாப்பு வடிவங்களோடு அமைதி பெறாமல் புதிய வடிவப் பரிசோதனைகளைச் செய்யும் முனைப்பு தமிழ்க் கவிஞர்களிடையே இப்பொழுது தோன்றியுள்ளது.

(4) அமெரிக்காவில் தோன்றி வளர்ந்த 'படிமவியக்கம்' (Imagist movement) போல, இக்கால இளங்கவிஞர் உலகம் கவிதையில் படிம ஆட்சியை மிகுதியும் புகுத்தி வருகிறது.

இவ்வாறு விரல் விட்டு எண்ணத்தக்க சில நிறைகளும் தமிழ்க் கவிதையில் உண்டு என்பது மகிழ்ச்சியையே தருகிறது.

எனவே, இதுகாறும் கூறியவற்றால் தற்காலத் தமிழ்க் கவிதையின் நோக்கையும், போக்கையும், சில தமிழ்க் கவிஞர்களது தனிச்சிறப்புக்களையும், தமிழ்க் கவிதையின் சில பொதுவான குறை நிறைகளையும் அறிந்தோம். இனி வருங்காலத்தில், இன்னும் பல பன்முக வளர்ச்சியைப் பெற்றுத் தமிழ்க் கவிதை வளரும் என்று நம்புவோமாக!

" தாயெழிற் றமிழை என்றன்
தமிழரின் கவிதை தன்னை

ஆயிரம் மொழியிற் காணா
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந் தென்றன் செவியில் வந்து
பாயும்நாள் எந்த நாளோ?
ஆரிதைப் பகர்வார் இங்கே?"

—பாவேந்தர் பாரதிதாசன்

எடுத்தாண்ட நூல்கள்

1. டாக்டர் மு. வரதராசனர் ... இலக்கிய மரபு
2. தெ. பொ. மீனுட்சி சுந்தரனர் ... History of Tamil Literature
3. A. C. Bradley ... Oxford Lectures on Poetry.
4. E. A. G. Lambourn ... The Rudiments of criticism.
5. Majorie Boulton ... The Anatomy of Poetry
6. Basil Worsford ... Judgement in literature.

அடிக் குறிப்புகள்

1. The 'what' is indifferent to poetry and it is 'how' tha matters much. —A. C. Bradley.
2. The cleverness of vision and the originality of mind which make a poet see the application of common words outside their conventional use...reveal to him also the identity of attributes in diverse things so that he is able to give us a picture of one thing by using the epithets, or even the very name of another. —E. A. G. Lambourn, 'The Rudiments of criticism' P. 84
3. முடியரசன் கவிதைகள், முன்னுரை, பக்கம் 21.
4. As the poet speaks in music which goes straight to the heart. Without translation by the intellect, so he speaks in pictures rather than in symbols—he gives us the thing itself and not its intellectual signs. —E. A. G. Lambourn, 'The Rudiments of criticism, p. 64.
5. Physical form
6. Mental form
7. Marjorie Boulton, 'The Anatomy of Poetry' Page, 113.
8. W. Basil Worsford, Judgement in Literature p. 44

11

விடுதலைக்குப் பின்னர் அகப்பொருள் பாடல்கள்

பேராசிரியை திருமதி பு. பா. இராசராசேசுவரி,
எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர்
இராணிமேரிக் கல்லூரி, சென்னை.

தமிழுக்குச் சிறந்தது அகப்பொருள். இதனை இறையனார் களவியலாலும், அதன் உரையாலும் தெளியலாம். புறப்பொருள்கூடச் சிறப்புறுவது அகப்பொருளினாலேயே என்பதனை 'வெட்சிதானே குறிஞ்சியது புறனே' என்ற தொல்காப்பிய நூற்பாவால் நுண்ணிதின் உணரலாம். இத்தகைய அகப்பொருளைச் சீரிய முறையில் ஆண்டு, தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடித் தந்த பெரும்புலவோர் பல்லோராவார். அவர்கள் தாம் பாடிய அகத்திணைச் சிறப்பினாலேயே பெயர் வழங்கப் பட்டனர் என்பதனை 'பாலை பாடிய பெருங்கடுங்கோ! 'குறிஞ்சி பாடிய கபிலன்' முதலிய ஆட்சிகளால் அறியலாம். இத்தகைய தொன்றுதொட்டுத் தைல தாரைபோல் வந்துள்ள அகப்பொருள் நுணுக்கத்தை நானூறுக்கும் மேற்பட்ட பல துறைகளாகப் பகுத்துக் கோவை பாடிய பெருமையுடையோரும் உளர். திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை முதலானவை இவையிற்றுக்குச் சான்றாகும். இனி, விடுதலைக்குப்பின் அகப்பொருள் துறைகளில் அமைந்த பாடல்கள் எப்படி உள்ளன என்பதைக் காண்பதே நோக்கம்.

*'விடுதலைக்குப்பின்' என்பதால் 1947க்குப்பின் வந்துள்ள கவிதைகளைச் சொல்வதே பொருத்தமாதலின் அவையிற்றைப் பற்றியே குறிக்கொண்டு கூற விழைகின்றேன். தொடக்கத்தில் 'கண்ணதாசன்' பாடல்களைப் பார்ப்போம். எ. சி. பிராட்லி என்பார், "சிறந்த கவிதைகள் எண்ணற்ற ஊட்டங்கள் நிறைந்துள்ளன; ஏதோ ஒன்றைத் தான் கவிஞன் பாடுகிறான்; ஆனால், அந்த ஒன்றினுள் பல அமைந்து கிடத்தலைக் காணமுடிகின்றது. அவன் கருத்தில் உள்ள கற்பனை ஆழம் நம் கருத்தையும் தாண்டிச் சென்றுவிடுகிறது............ஆதலின், அது நம்மையும் நமது மனத்தையும் அகத்தும் புறத்தும் குளிர்விக்கிறது" என்கிறார். இந்தப் பண்பினை கண்ணதாசனாரின் கவிதைகள் மெய்ப்பிக்கின்றன என்றார் சிலர். இதன் உண்மையைக் காண ஓரிரண்டு அகப்பொருள்கள் பற்றிய பாடல்களை உதாரணமாகக் காட்டுவல். **"கணவன் ஒரு தொல்லை"** என்ற தலைப்பில் சில வரிகள் காண்*

போம். (இது அகப்பொருள் இலக்கணப்படி கற்புக் கைகோளில் சேரவேண்டியது.)

"ஆயிரம் பேர் முன்னிலையில் கணவன் மார்பில்
அன்போடு சேர்ந்தே ஓர் முத்தம் தந்தால்
நாயிவள் என்றுரைப்பார்கள் நலம் கனிந்த
நளினமலர் மகவுக்கோர் முத்தம் தந்தால்
தாயரெலாம் துடிப்பார்கள் தாமும் வாங்கித்
தம்மார்பில் அணைப்பார்கள் கொஞ்சுவார்கள்
சேய் பெரிதா மணவாளன் பெரிதா ஐயா
சிந்தனையேன் முதற்பெருமை யார்க்குரைப்பேன்"

"அதனால்தான் மணவாளன் காதலுக்கே
அடுத்த இடம் தருகின்றோம்; இரவில் கூட
மதுவாயர் அழுதக்கால் கணவன் மார்பை
மண்ணென்று தள்ளுகிறோம்; சேயெடுத்து
இதமாக அணைக்கின்றோம் அணைக்கும் நேரம்
எம் நெஞ்சம் உமக்கிருந்தால் அறிவீர் ஆஹா
பதமாகப் பக்குவமாய்ப் படைத்த இன்பம்
பால் மணக்கும் வாயன்றி மீசை அல்ல"

இதனை நளவெண்பாவில் வரும்—

"குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ?—கொற்றவனே
கோக்காதலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கால் மழை பொழியா நொந்து."

என்ற பாடலொடு ஒப்பு நோக்கி இதன் புரட்சியை அறிக. இது விடுதலைக்குப்பின் வந்த அகப்பொருள் பாடலாதலின் மனைவியின் மனநிலை தெரிந்து கணவனைத் தொல்லையாக்கிக் காட்டியபடி.

இனி மற்றொரு அகப்பாடல் காண்போம்:

இது '**நலம் பாராட்டல்**' துறையினது.

"சின்னமுகம் தொட்டான்; மாங்கனியை எண்ணிச்
சிட்டுமுத்தம் வைத்தான்; மாங்கனிதான் என்று
பின்னும் இதழ் உண்டான்; மாங்கனிபோல் எண்ணிப்
பெண்மடியிற் சாய்ந்தான்; 'மாங்கனியே' என்று
கன்னல் மொழி சொன்னான்; மாங்கனி நாம் என்று
கட்டழகி சிலிர்த்தாள்; மாங்கனி சேர் கன்னம்
தன்னை வடுச் செய்தான்; மாங்கனியாய்க் கட்டித்
தன் மார்பில் சேர்த்தான்; இச்செகம் மறந்தான்."

"பரவை, பரவை" என்று ஒருமுறைக்கு ஏழுமுறை வாய் வெரு வியதுபோல இப்பாட்டுத் தலைவனும் எழுமுறை 'மாங்கனியை உள்ளம், உரை, செயல்களால் வழிபட்டான். இது "புது வார்த்தை பலகூறித் தமிழ் வளர்த்தபடி"

இனி, கடைசியாக கண்ணதாசனாரின் மற்றொரு பாடல்காட்டி மேற்செல்வேன்.

"செல்லும் கிழத்தி செலவு கண்டு உளத்தோடு சொல்லல்" என்றொரு அகத்துறை பண்டைநாள் உண்டு. அதனை, "வருங்கிழத்தி வரவு கண்டு உளத்தொடு சொல்லல்" என ஆக்கினார் நம் கவிஞர் பெருமான். சோழன் நல்லடிக்கோன், அத்தி மயிலாக்கிய மருதியைக் கண்டு தனக்குள்,

"நாற்சாதிப் பெண்வகையில் இவளே அந்த
நாற்சாதிப் பதுமினியாள் மெல்லத் தூக்கும்
காற்சாதி, மலர்சாதி, கண்ணின் சாதி
கருங்குவளைப் பூச்சாதி, கன்னச் சாதி
பாற்சாதி, கைகுவளைப் படைப்பின் சாதி
பனிச் சாதி, வாயூறும் நீரின் சாதி
மேற்சாதி, கீழ்ச்சாதி எதிலும் சேரா
வேற்சாதி இவள் சாதி என்கிறான்" (சோழன்)

இவ்வொரு பாடலில் பதினைந்து சாதிகள் பயில்கின்றன. விடுதலைக்குப் பின் வந்த கவிதையிலும் சாதி நீங்கின பாடில்லை போலும்!

இனி, ஆசிரியர் குழந்தை அவர்கள் 'காமஞ்சரி' நாடகத்தில் குறித்துள்ள அகப்பாட்டு வரிகள் சில காண்போம்:

பழையன் வரக்கண்ட காமஞ்சரி—
"காண அவாவிய
கண்களும் ஏனோ மண்கொள நோக்குந"

என்றாள். அப்போது பழையன்:

"நுதலிடை முத்தணி இதுவோர் புதுமை
இடையினிற் கட்டிய உடையவிழாதுற
எடுத்து மேகலையாத் தொடுத்துத் தரட்டுமா?
யாரது? நீ யார்? பார் எனை நான் தான்.
செப்பிதழ் திறக்க ஒப்புதல் இன்றோ
முத்துதிர்ந்திடுமெனத் திறந்திலை போன்ம்
ஒருவரும் பின்னால் வரவிலை கண்ணே
அங்கேன் திரும்பினை இங்கே பாராய்
செய்ததோர் பிழையிலன் பொய்தலைப்பட்டனை

பூவிலே தேனிலே, பாவையின் கூந்தலே
ஏன் மொய்க்கின்றீர் தேன் முக் கனிகாள்!
நான் முடிக்கட்டுமா தேன் மலர்க் கூழையை!
பேசா மடந்தை போலும்! பேசா
நின்பால் பேசுதல் என்பால் தவறே
கனங்குழை கழன்றது செறிப்பாய் கனங்குழை!
தப்பாத் தொட்டனை இப்பெருந் தொடிகளை
மேகலை காஞ்சியை வாகுடன் இறுக்கிக்
கட்டிக்கொள் இனி இம்முட்டிலே அலவா?"

—இவ்வரிகளில் 'புரிமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல், சிதைவு பிறர்க்கின்மை, கூழை விரித்தல், காதொன்று களைதல், ஊழணி தைவரல், உடை பெயர்துடுத்தல்" என்ற மெய்ப்பாடுகள் அகத்துறை மக்கள் ஒழுக்கத்துக்கேற்ப நிரல்பட வைத்திருத்தல் நோக்கத்தக்கது. விடுதலைக்குப் பின் வந்த புதுக்கவிதையேனும், பழைய நூற்பா முறை வழுவாமை நினைக்கத் தக்கது.

இனி, தற்போதைய பாமரர் பாடல்களிலும் அகப்பொருள் துறைகள் பயில்வதைக் காண்போம்.

உடன் போக்குத் துறையில் அமைந்த பாடல் :—

" சந்தைக்குப் போவமடி
சட்டிபானை வாங்குவோமடி
சந்தை கலையுமுன்னே
தப்பிடுவோம் இரண்டுபேரும்

" மூக்கு ரோட்டுப் பாதையிலே
மூத்தவரை முந்தவிட்டு
இளையவர் வாரமின்னே
இருபேரும் போயிடுவோம்

" நீ கறுப்பு, நான் சிவப்பு
ஊரிலேயோ ஓமலிப்பு
ஓமலிப்பு தீருமுன்னே
ஓடிப்போவோம் இரண்டு பேரும் "

இனி இரவுக்குறியிடையீடு — நாய் துஞ்சாமை துறையில் ஓர் பாடல் :

தலைவன் : "கதவலைத் தட்டிப் பார்த்தேன்
கல்லை விட்டெறிஞ்சுப் பார்த்தேன்
உன் வீட்டு நாய்க்குட்டி
ஓயாமல் குலைக்குதடி

தலைவி : கஞ்சியும் ஊத்த மாட்டேன்
கரிப்பத்தும் போடமாட்டேன்
கெட்டுன கெட்டோட
செத்துப்போ நாய்க்குட்டி

நாய்க்குட்டி : கஞ்சியும் ஊத்தவேண்டாம்
கரிப்பத்துப் போடவேண்டாம்
அசல் வீட்டுக்காரனை நான்
அண்டவிட மாட்டேனடி

இங்கு நாய்க்குட்டி கூறியதன் நயம் என்னையெனில் :— 'நீ என்னை எது செய்தாலும் செய்து கொள்; நான் உன்னுடைய காதலன் உன்னுடையவனுகாமல் அசல் வீட்டுக்காரன் போல் இருக்கும் வரையில் என் கடமையைச் செய்தே தீர்வேன் என்பது.

இங்ஙனம் பல பாமரப் பாடல்களில் அகப்பொருள் நுணுக்கங் களும் காணலாம்.

இனி, இறுதியாக விடுதலைக்குப் பின்னர் வந்துள்ள அகப்பொருள் நூல்களுள் குறிக்கொண்டு பாராட்டத்தக்கது ச. பாலசுந்தரம் எழுதிய **'கரந்தைக் கோவை'** எனலாம். இது கரந்தையில் நிறுவப் பெற் றுள்ள தமிழ்ச் சங்கத்தைச் சிறப்பித்துப் போற்றும் முறையில் அமைந்த அகப்பொருள் கோவையாகும். இதன்கண் தஞ்சைவாணன் கோவை போல 425 அகத்துறைகள் வைக்கப்பட்டுள்ளன. ஒரு சில துறைகட்கு இரண்டு, மூன்று பாடல்கள் இருத்தலின், மொத்தம் 469 செய்யுட்கள் உள. இவை பெரிதும் சுவையுடைத்து. ஓரிரண்டு உதாரணம் காட்டுவல் —"**கற்றறி பாங்கன் கழறல்**" என்ற துறையில் அமைந்தது கீழ்வரும் பாடல்.

" செல்வன் உமாமகேசன் மனத்தூ ன்றித் திகழ்கரந்தைச்
சொல்வன் புலவர் கல்லூ ரியிற் கற்ற துணிவுடைய
செல்வன் எனத் தெளிந் தேனொரு மங்கையின் சேல் விழிசேர்
வில்வன்மை யாலழிந்தாயுரன் என்னே விளம்புவதே "

—இதனல் உமாமகேசுவன் பிள்ளையவர்களது நிறையுடைமை முதலிய நற்பண்புகளும், அவர் நிறுவிய கல்லூரியில் பயிலும் மாணவர்கள் அவர் போலவே உரனுடைய மனத்தினராய் நன்னெறி யில் வழுவாது விளங்குதல் வேண்டும் என்னும் அவாவும் புலனாதல் காண்க.

இனி, தலைவனுடன் சென்ற தலைமகளைத் தேடிக் கொண்டு சுரத் திடையே சென்ற செவிலித்தாய் வழியிடையே தலைமகனது அடிச் சுவடு கண்டு இரங்கிக் கூறிய பாடல் காண்போம். இது "**சுவடு கண்டிரங்கல்**" என்ற துறையினது.

"கமழும் கரந்தைத் தமிழ்க் காரிகை முன் கழிநெடிலடியாய்த்
திகழும் நெடிலடிகாளை, பின் நேரடி சிந்தடி மான்
புகழும்படி இருசீரடிப் பாங்கர் பொசிந்தவடி
திகழும் விலங்கடி நேராத வேடர்தம் நெட்டடியே"

இதன் பொருள் :—"மணம் கமழும் கரந்தைத் தமிழ்ச் செல்வியாகிய தலைவியின் அடிச்சுவட்டிற்கு முன்பாக மிக நீண்டு தெரியும் பெரிய அடி, காளை போல்வானாகிய தலைமகனது அடிச்சுவடாகும். அதன் பின் குறுகிய அடியாய்த் திகழ்வது, மான் போன்ற நோக்குடையாளாகிய தலைவியின் அடிச்சுவடே. புகழும் தன்மையவாகிய அவ்விருவகை அடிகளின் அருகே உருவழிந்து கலந்த நிலையில் உள்ள அடிச்சுவடு அங்கே (சினங்கொண்டு) வந்த (யானையாகிய) விலங்கின் பாதங்களாம். (நெடுந்தூரத்தே தோன்றும் அச்சுவடுகள்) பகையாகி வந்து எதிர்த்துத் தோற்றோடிய வேடர்களின் நீண்ட அடிகளாம்" என்பது.

இதன்கண் காரிகை என்னும் யாப்பு நூலின் பெயரும், அந்நூலிற் கூறப்படும் ஐவகையடிகளின் பாகுபாடும் நயம்படத் தொனியாகக் குறிக்கப்பெற்றிருத்தல் காணலாம்.

இக்கோவை நூற் பாடல்கள் பண்டைய அகப்பொருள் ஒழுகலாற்றின் உயர்வினை இக்காலத்தவரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு அமைந்திருக்கின்றன. இருபாலாரும் கூச்சமின்றிப் பயிலவும், பயிற்றவும் ஆகுவன இப்பாடல்கள். விடுதலைக்குப்பின் வந்த அகப்பொருள் பாடல் நூல்களுள் இது பயனுடைத்து என முடிக்கின்றேன்.

12

யோகி சுத்தானந்த பாரதியாரின் தமிழ்த் தொண்டு

பேராசிரியர் தி. சே. பாலசுப்பிரமணியம்,

எம்.ஏ.,

தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர்

தேசியக் கல்லூரி, திருச்சி

உலக வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப் பார்க்குங்கால் ஒரு பேருண்மை புலனாகும். எந்த ஒரு நாடு விடுதலைபெற்று விளங்குகின்றதோ அந்த நாடு கலைச் செல்வங்களில் கலித்தோங்குவதையும், மாறாக எந்த ஒரு நாடு அந்நியர் ஆதிக்கத்தில் அகப்பட்டு அல்லலுறுகின்றதோ அந்த நாடு கலைச் சிறப்பிழந்து பொலிவழிந்து வாடுவதையும் காண்கின்றோம். நமது செந்தமிழ்நாடும் முடியுடை மன்னரின் முறையான ஆட்சிக்கீழ் இருந்த காலத்தில் உலக அரங்கில் எழிலுற்று விளங்கியதையும், களப்பிரர் காலத்தில் நாடு கலங்கி அல்லலுற்றுக் கவின் கலைகள் தோன்றாது காரிருளிற் கலங்கியதையும், பாண்டியன் கடுங்கோன் காலத்துக் களப்பிரர் ஆட்சி கவிழ, நாட்டில் மீண்டும் கலைகள் செழித்தோங்கியதையும் காண்கின்றோம். ஆங்கிலேயரின் ஆட்சிக்கீழ் இந்தியநாடு தன் சிறப்பிழந்து கலைகள் குன்றியிருந்ததையும், அண்ணல் காந்தியின் தலைமையில் விடுதலை வீரர் பல்லாயிரவர் முயற்சியால் மீண்டும் விடுதலை பெற்றபின் நம்நாட்டின் பழங்கலைகள் புத்துயிர்பெற்று வருவதையும் நாம் இன்று காண்கின்றோம். இவ்வாறு நாடு விடுதலை பெற கலை வாழ்வு சிறந்து ஒளிர உழைத்த உத்தமர்களில் யோகி சுத்தானந்த பாரதியவர்களும் ஒருவர். தமிழிலக்கியத்திற்கு இவர் ஆற்றிய தொண்டினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

யோகி சுத்தானந்த பாரதியாரின் முன்னோர்கள் மதுரையில் வாழ்ந்து வந்தனர். திரு. ஜடாதரையர் என்பாருக்கும் காமாட்சி அம்மையாருக்கும் பிறந்த நான்காம் குழந்தையே நமது சுத்தானந்தர். அங்கையற்கண்ணியின் அருளால் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றார். தமிழன்பர்களோடு பழகியும். கடவுளடியாரோடு கலந்தும், துறவிகளோடு உறவாடியும் வாழ்க்கையில் பல நுட்பங்களை உணர்ந்தார். சீனம், ஜப்பான், மலாயா, ரஷ்யா, ஜெர்மனி, போலந்து, இலங்கை போன்ற மேனாடுகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள அறிஞர்

களோடு அளவளாவியும், அந்நாட்டினரின் நற்பண்புகளை நன்கறிந்தும் தாய்நாடு திரும்பினார் நம் சுத்தானந்தர். பிற்காலத்தில் தாம் அடைந்த இந்த அனுபவங்களை எல்லாம் நூல்களாக இயற்றித் தமிழ் மக்களுக்கு உதவினார்.

யோகி சுத்தானந்தருக்கும் தேசிய கவி சுப்பிரமணிய பாரதிக்கும் ஒற்றுமை பலவுள. அடிமைத்தளையில் நாடு கட்டுண்டு அல்லலுறுவதைக் கண்டு கனன்று தமது ஆவேச மிக்க கவிகளால் மக்களைத் தட்டி எழுப்புவதில் இருவரும் இணையற்றவர். வால்டேர், ரூசோ போன்ற கவிஞர் பிரென்சு நாட்டினருக்கு எத்தகைய கவித்தொண்டு செய்து நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டனரோ அதுபோலவே இவ்விரு கலைஞர்களும் தேசபக்திப் பாடல்களையும் முன்னேற்றப் பாடல்களையும் முழங்கினர். நம் நாட்டிலுள்ள பட்டிதொட்டிகளில் செய்யவேண்டிய சில சீர்திருத்தங்களைச் செய்து முன்னேற வேண்டும் என்று சுத்தானந்தர் கூறுவதைக் காண்போம்.

(1) " தண்ணீர் வசதி செய்வோம்—நல்ல
தாவர சாத்திரம் ஆவலுடன் கற்று
மண்ணைப்பொன் னாக்கிடுவோம்—கூட்டு
வாணிபச் சங்கத்தை யூக்கிடுவோம் "

என்றும்,

(2) " கள்ளுக் குடியொழிப்போம்—கஞ்சா
காப்பி புகையிலை தேயிலையும்
சள்ளைசெய் சூதுகளும்—சிறு
சாமிக்குயிர்பலி போடுவதும் "

ஆகியவற்றை ஆக்கியும் ஒழித்தும் செய்யவேண்டும் என்கிறார் சுத்தானந்தர்.

கவிஞன் கனவு என்னும் சிறு நூலில் பெரும் செய்திகளைக் காண்கின்றோம். கவிஞன் கனவுகள் நனவாகும் தன்மையின. திரு. சுப்பிரமணிய பாரதியார் கண்ட கனவுகள் இப்போது பலித்து வருவதைப் பார்த்து வருகின்றோமல்லவா?

(1) " இந்து சமயமா இஸ்லாமியமா?
பைபிளா தம்ம பாதமா வுண்மை?
சைவமா வைணவ சமயமா பெரிது?

என்ற வினாக்களை எழுப்பி அவரே பின்வருமாறு விடை கூறுகின்றார்.

(2) " சாதி சமயத் தலைவலி யொழிக?
பாரும் கிழக்கே பரிதியை யென்றேன்
அலைகளை யெல்லாம் களையொளி யாக்கிக்

கலகல வென்று கதிரவன் சிரித்தான்
மவுனச் சிரிப்பின் மவுனமறியக்
கடலை நோக்கினேன் காற்றைக் கேட்டேன்
கடற் காற்று ரைத்த கட்டுரை கேளீர்

(3) "விளக்கைக் காட்டிலும் விண்ணகம் பெரிது
மீன் கணந் தன்னிலும் வானகம் பெரிது
அலையைக் காட்டிலும் ஆழியே பெரிது
பேத புத்தி பிதற்றி யலையும்
சாதி-சமயச் சாத்திரக் கோத்திரச்
சண்டையைக் காட்டிலும் சாந்தமே பெரிது
உரைகளைக் காட்டிலு முள்ளமே பெரிது
தத்துவ நூலினும் சத்தியம் பெரிது
மதத்தைக் காட்டிலும் மானிடம் பெரிதே
ஒன்றே யுண்மை உலகெலாம் அதுவே."

—கவிஞன் கனவு

சிங்கநாதம் என்ற நூலில் சுத்தானந்தச் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்கின்றோம். அப்பாடல்களைப் படிக்குங்கால் கிழவர்களும் நரம்பு முறுக்கேறி முழக்கம் செய்வர். நமது பாரதத்தின் பண்டைப் பெருமையினையும் பின்னர் அதன் தாழ்ந்த நிலையினையும் படம்பிடித்துக் காட்டி இளைஞர்களைத் தட்டியெழுப்புகின்றார் சுத்தானந்தர்.

(1) "நானிலத்தின் மேனிலம்
நமது ஹிந்துஸ் தானம்
நமது ஹிந்துஸ் தானம்—இந்த
நாமம் அமுதபானம்

(2) "தேனும் பாலும் கன்னலும்
செழித்த தேவ லோகம்
செழித்த தேவ லோகம்—இதன்
சேவை எங்கள் மோகம்

(3) "முப்புறமும் வாழிகூறி
முத்திரைக்கும் ஆழி—செல்வக்
கப்ப லோடும் ஆழி—மனக்
கவலை போக்கும் ஆழி"

எனவும்,

(1) "ஏறுபோலத் தலைநிமிர்
இந்தியாவின் வீரனே
வீறுகொண்டு நடநட
விடுதலை முரசுடன்

(2) " அடிமைக்கட்டு முறிபட
அக்ரமங்கள் சிதறிட
மடமைத் துன்பம் பொடிபட
மங்களங்கள் பொலிவுற

(3) " காணுங் கண்ணைப் போலவே
கையுங் கையும் போலவே
ஆணும் பெண்ணும் வாழவே
அழகிலின்பம் சூழவே

—சிங்கநாதம்—பக்கம் 56

என்ற அடிகளில் எத்துணை வீரமும் ஆழ்ந்த கருத்தும் அமைந்துள்ளன பார்மின்.

முன்னேற்ற முழக்கம் என்ற முற்போக்கு நூலின் நயமான சில பகுதிகளை நுகர்வோம்.

(1) " ஊருக்கு நல்லது செய்வோம்
உழைப்பினில் உயிரைப் பெய்வோம்
தூருக்கு நீரும் உரமும்
தோட்டக் கனியாய் வருமே "

(2) அழுதுவடிந்தால்மூ தேவி
அடுத்து முயன்றால் சீதேவி
உழுது விதைத்தால் பயிராமே
உழைப்பில் வளரும் உலகாமே

(3) ஆழ ஆழச் சென்றால்
அணிமணி முத்தம் உண்டாம்
வாழத் தெரிந்தால் உலகில்
வகைவகை யின்ப முண்டாம்

—முன்னேற்ற முழக்கம்—பக்கம் 90

குழந்தையே கடவுள். கடவுளைக் குழந்தையாகக் கொண்டு எழுந்த தமிழ் நூல்கள் தமிழில் எத்துணை எத்துணை? நம் தேசிய கவி கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு கனிந்து பாடிய பாடல்களை உலகறியும். சுத்தானந்த பாரதியாரின் குழந்தை உள்ளத்தினையும் காண்போம், ஆடும் குழந்தையின் தளர்நடையினைக் கண்டு கள்வெறி கொள்கிறார் சுத்தானந்தர்.

' ஆடும் குழந்தையிலே—கண்ணன்
ஆடிவரக் கண்டேன்
ஓடும் குழந்தையிலே—முருகன்
ஓடிவரக் கண்டேன்

பாடுங் குழந்தையிலே—கலைமகள்
  பண்ணிசைக்கக் கண்டேன்
தேடும் பரம் பொருளே—மழலைச்
  சிரிப்பில் விளங்கிடுமே

—குழந்தையின்பம்—பக்கம் 44

" அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் "

என்பது தேவர் குறள். இக்கருத்தினைச் சுத்தானந்தர் குழந்தை கூறுவதாகக் கூறுகின்றார்.

" ஊருக்குப் பயப்பட மாட்டேன்
  உண்மையைக் கைவிட மாட்டேன்
போருக்குப் பயப்பட மாட்டேன்
  பொய்யினை நையப் புடைப்பேன்
பூச்சாண்டிப் பேச்சினை வெறுப்பேன்—அம்மா
  புலியைத் தடவிக் கொடுப்பேன்—வெறும்
பேச்சாண்டியில்லை நானம்மா—என்றன்
  பெரிய கனவு பலிக்கும்

—குழந்தையின்பம்

என்ற குழந்தைப் பேச்சில் தான் எவ்வளவு உறுதி !

கவியரங்கம் என்னும் கவின்பெறு நூலினுள் சுத்தானந்தர் கவியரங்கம் ஏறிப் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவரது உட்காட்சியின் சொல்லோவியமாக இந்நூல் அமைந்துள்ளது. இவரது தூய சமயோகத்தினை இதில் காண்கின்றோம். எது கவிதை? என்ற வினாவிற்குச் சுத்தானந்தர் கூறும் விடையினைக் காண்போம்.

' பருவக் காலப் பனிமழை யழகும்
வேனில் வண்டின் தேனிசை யொலியும்
மேகம் இடித்து மின்னும் கூத்தும்
வெள்ளி மழையின் உள்ளச் சுருதியும்
அருவியின் ஓலமும் குருவியின் ஜிம்மும்
கடலின் ஓலமும் கவிதை கவிதை
வான வெளியின் மோன வட்டத்தில்
அணுக் கலப்பாகும் அண்டபிண் டங்கள்
மோதிச் சுழலும் போது காலக்
கூத்தில் பூத்தது தீஞ்சுவைக் கவிதை
மண்ணில் மலரென மலர்வது கவிதை
கண்ணில் உலகெனக் காண்பது கவிதை
கண்ணை யிழந்த கவியின் உள்ளத்தே
விண்ணை யிழந்த வியன்பெரு கவியும்
எழுந்த வுள்ளமே செழுந்தமிழ்ச் சோலை

ஏழைக் குருடனின் இலிய தாக
எழுந்த புலமையே இயற்கைச் சுனையாம்

—கவியரங்கம்

இதைவிடக் கவிக்கு வேறு என்ன விளக்கம் வேண்டும்?

யோகி சுத்தானந்தர் நூற்றுக்கணக்கான நூல்களை நூற்றிருக்கின்றார். அவரது புலமை நிறைந்த தலையாய நூலும், உலகத்தின் தோற்றம் வளர்ச்சி முடிவினை மறைமுகமாக உணர்த்துவதும், அவரது வாழ்க்கையின் அம்சங்களைக் கொண்டு விளக்குவதுமான நூல் பாரத சக்தி மகா காவியம் ஆகும். தமிழ் நாட்டில் காப்பியங்கள் தோன்றி பல நூற்றாண்டுகளாயின. அக்குறையினை இது நிறைவு செய்கின்றது. இதனைக் குறித்து திரு. வ. வே. சு. ஐயர் கூறியதைக் காண்போம்.

"யோகி சுத்தானந்தரின் மிகவும் சிரேஷ்டமானதும், அமரத் தன்மை பெற்றதுமான நூல் பாரத சக்தி மகா காவியமாகும். இது மகா காவிய நடையில் எழுதப் பெற்ற அற்புதமான இக்கிய ரசனை. தமிழுக்குப் பொன்றாப் புகழைத் தருவது. தமிழில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எழுந்த முதல் நூல் இது. இவ்வுத்தம காவியம் இந்தக் காலம் அறியாமற் போனாலும் பிற்காலம் இந்த மகா காவியத்தை அறிந்து கொண்டாடும் என்பது உறுதி. இதில் எல்லா மதத்தினருக்கும் நாட்டினருக்கும் எல்லா ரசிகர்களுக்கும் ஓர் இன்பம் ஏற்படும்படி அவ்வளவு விசாலமான பொருள் அடங்கியிருக்கிறது. எனது நெருங்கிய நண்பர் திரு. சுத்தானந்த பாரதியார் தம் வாழ்க்கையையே யுருக்கி, பாரத சக்தியாக வார்த்ததாகச் சொல்வது உண்மையே. இது அவர் வாழ்வே என்பதை நான் பக்கத்திலிருந்து தினம் தினம் அறிகின்றேன்" என்று கூறுகின்றார்.

பாரத சக்தி மகா காவியம் ஐந்து காண்டங் கொண்டது. இதில் வரும் உறுப்பினர் மறைமுகமாக நின்று வேறு பொருளுணர்த்துவர். சத்தியன், சுத்தன், கலியன், மோகி என்ற பெயர்களே இதை வலியுறுத்தும். பாரத சக்தி என்ற சுத்தான்ம சக்தி எங்கும் பரவுதல் வேண்டும்; அப்போதுதான் உலகில் நிலையான அமைதி நிலவும் என்பதைக் காட்டுவது இக்காவியம். இதன் கதையினைச் சுருக்கமாகக் கூறினும் இவ்வேடு இடங்கொடாது. இக் காப்பியத்தில் கம்பன், இளங்கோ, சாத்தன், சுப்பிரமணிய பாரதி போன்ற பெருங் கவிஞர்களின் கைவண்ணம் கமழக் காண்கின்றோம்.

யோகி சுத்தானந்தர் இசைக் கலைக்குச் செய்திருக்கும் தொண்டு அளவிடற்கரியது. இளமையிலே இராக தாள அறிவோடு கூடிய இவரது இசை அறிவு, இவர் காலத்திய பெரிய இசைமேதைகளால் பெரிதும் வளர்ச்சியுற்றது. இவரது அத்தையின் கணவர் பெரிய இசை மேதை. பிடில் இராமசாமி ராஜா, நாதசுர மேதை மாயாண்டி, மதுரை

பொன்னுசாமி போன்றவர் இவரது இசை யறிவினை வளர்த்த சில புலவர்கள். இராஜா சர் அண்ணுமலைச் செட்டியாரோடு சேர்ந்து தமிழிசையினை வளர்த்தார். சொற்பொழிவுகள் பல பொழிந்தார். தமிழில் போதிய இசைப் பாடல்கள் இல்லை என்று சிலர் கூறி வருவதைக் கண்டு தாமே ஆயிரக் கணக்கான பாடல்களை இயற்றினர். "அருள் புரிவாய் கருணைக் கடலே" என்ற ஹம்ஸத்வனிப்பாட்டு, பூர்விகல்யாணியில் இசைக்கப் பெற்ற 'ஐங்கார சுருதி செய்குவாய்' என்ற பாட்டு, 'எப்படிப் பாடினரோ' என்ற தேவ காந்தாரிப் பாடல், 'இல்லை என்பான் ஆரடா' என்ற பாடல்களைத் தற்போது இசை அரங்கு களில் நாம் பாடக் கேட்டு மகிழ்கின்றோம். இவை யோகி சுத்தானந் தர் இயற்றியனவேயாகும். சுத்தானந்தரின் கீர்த்தனுஞ்சலி என்னும் நூலில் இவர்களின் பாடல்களைக் காணலாம்.

இசையின் ஒரு பகுதியாக இருக்கும் கூத்திற்கும் சுத்தானந்தர் சிறந்த தொண்டாற்றியுள்ளார். நடனுஞ்சலி என்னும் கூத்து நூலில் இவரது சிறந்த பதங்களைக் காணலாம். "குயிலே உனக்கு அனந்த கோடி நமஸ்காரம், குமரன் வரக் கூவுவாய்" என்ற பாடலைக் கேட்டு இரசிக்காதவர் யார் உளர்?

இராமநாதபுரம் மாவட்டத்தில் பலவாண்டுகள் வாழ்ந்த நம் சுத்தானந்தர் தமிழ் நாட்டு மறவர்களின் வீர வாழ்க்கையினையும் அவர் தம் நாட்டிற்கு நல்லுயிரீந்த வரலாற்றினையும் வீரமும் அழகும் ஒருங்கே செறிந்த நடையில் பல நூல்களாக வடித்துத் தமிழ் நாட்டிற்கு நல்கியுள்ளார். வீராங்கனை, வீரத்தேவன், சந்தனத்தேவன், ஊமையன் சண்டை, மருது சகோதரர் வரலாறு, வேலு நாச்சியார் போன்ற நூற்களையே நான் குறிப்பிடுகின்றேன்.

தற்காலத்தில் புதிய துறைகளிலே தமிழ்மொழி சிறப்புற்று விளங்குவதைக் காண்கின்றோம். நாவல், சிறுகதை போன்ற துறை களிலும் சுந்தானந்தர் தம் திறமையைப் புலப்படுத்தி, தமிழ் இலக்கியத் திற்குத் தொண்டு செய்துள்ளார். பிறமொழிகளில் சிறந்து விளங்கும் புதினங்களை நம் நாட்டினரும் படித்து இன்புறவேண்டும் என்ற நன்னோக்கத்தால் அவற்றை மூலத்தின் சுவைகெடாமல் தழுவியுள்ளார். மேனுட்டு நூல்களை எவ்வாறு சுவைகெடாமல் தழுவிக்கோடல் வேண் டும் என்பதற்குச் சுத்தானந்தர் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கு கின்றார். விக்டர் ஹ்யூகோ (Victor Hugo) என்பாரின் Les Miserables, The laughing Man என்ற இரு சிறந்த பிரெஞ்சு நவீனங்களை 'ஏழை படும் பாடு', 'இளிச்சவாயன்' என வெளியிட்டுள்ளார். தமிழ் மக்கள் இவருக்குப் பெரிதும் கடப்பாடுடையர். நாகரீகப் பண்ணை, காலக் கண்ணுடி, கஸ்தூரி, சாது ஜவானி போன்ற இவரது சிறுகதைகள் சிறு கதை யுலகில் உயரிய இடம் பெற்றவை.

நாடகக் கலைக்கும் சுத்தானந்தர் சிறந்த பணி செய்துள்ளார். சுமார் நாற்பத்தாறு நாடகங்களை இவர் எழுதியுள்ளார். இவற்றில்

சில அயல் மொழிகளின் தழுவலாய் உள்ளன. இவர் வெளியிட்டுள்ள நாடகங்களைத் தமிழ் மக்கள் நடித்துப் பயன்பெற வேண்டுகின்றேன்.

சுத்தானந்த பாரதியார் நம் நாட்டுச் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தமக்கே உரிய நடையில் யாத்துத் தமிழ் நாட்டினர் பெருமையினை உலகிற்கு உணர்த்தினர். நீதிபதி முத்துசாமி தீட்சிதர், சாமா சாஸ்திரிகள், வரகவி தாகூர், மகான் அரவிந்தர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சதாசிவப் பிரமேந்திரர், இராமலிங்கர் போன்ற பெரு மக்களின் வரலாறுகளை வெளியிட்டுள்ளார்.

பிரயாண நூல்களும் இவரால் பெருமை பெற்றன. தம்முடைய அயல் நாட்டு அனுபவங்கள் எல்லாம் பலரும் அறியும்படி நூல்களாக வெளியிட்டார். நான் கண்ட ரஷ்யா, ஜப்பானைப் பாருங்கள், நாமும் உலகமும் என்ற பிரயாண நூல்கள் குறிப்பிடத்தக்கன.

யோகி சுத்தானந்தரின் தத்துவ நூல்களைப் பற்றிப் பேசாவிடின் இக்கட்டுரை இனிது முற்றுப்பெறாது. சுப்பிரமணிய பாரதியாரின் இறவாப் புகழுக்கு எப்படி அவருடைய தத்துவ நூல்களும் வேதாந்தப் பாடல்களும் காரணமாக இருக்கின்றனவோ அதேபோல சுத்தானந்த பாரதியின் தத்துவ நூல்கள், அவருடைய இறவாப் புகழுக்குக் காரணமா யுள்ளன. யோகி சுத்தானந்தர் முறையே வேதாத்தியானம் செய்தவர். பாரத நாட்டின் செல்வமான வேதத்தின் விழுப் பொருளை நம் நாட்டவர் அறிந்து இன்புறவேண்டும் என்ற நோக்கத்தால் "வேத சாதனம்" என்னும் நூலினை உலகிற்கு உதவினர். சிறந்த வேத மந்திரங்களின் பகுதிகளும் அவற்றின் இனிய மொழி பெயர்ப்பும் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. கண்மூடித்தனமாகவே வேதங்களைப் பயிலுதல் பயனுடைத்தன்று அவற்றின் பொருளையும் நம்மவர் அறிந்து கொள்ளு தல் வேண்டும் என்ற கருத்துடையார் சுத்தானந்தர்.

'நெஞ்ச மாலை' என்னும் சிறிய நூல் செய்யுள் வடிவில் அமைந்தது. இவையே நம் யோகியார் தம் நெஞ்சத்திற்குக் கூறியனவாகும். இவற்றை நம் மக்கள் நெஞ்சுருகிப் பயின்றால் நம்மை நலியும் இடர்கள் நீங்கும் என்பது ஒருதலை.

'அன்பதே சமயமாகும் அருளதே சக்தியாகும்
இன்பதே கடவுளாகும் இதயமே வீடதாகும்
தன்பதம் தனக்கு முந்தி தான் தனக்குறவு
என்பதே யுண்மையாகும் எண்ணிப்பார் சுற்றம் இனிய
நெஞ்சே —நெஞ்சமாலை-4

எவ்வளவு உயரிய கருத்துக்கள் எளிய நடை பார்மின்.

"மதமெலாம் உதிக்கு முன்னே மகிழ்மனச்சாட்சி சொன்ன
இதமுள வாய்மையுண்டாம்! எண்ணிலார் அதனையாதோ

விதவிதப் பெயரைச் சொல்லி விதவித மதங்கள் செய்தே
வதவதப் பேச்சால் வாழ்வை வதைத்தனர் வாழுநெஞ்சே!

—நெஞ்சமாலை ; பக்கம்

திரு. சுத்தானந்தரின் யோக நூல்களில் சிறந்தது என்று யான் கருதுவது அவரது 'யோகசித்தி' யாகும். கடவுளியல் தொடங்கிச் சித்தி இயல் ஈருகப் பன்னிரண்டு பகுதிகளைத் கொண்டுள்ளது. முழுதும் குறட் பாக்களாலானது. அப்பாக்களுக்கு விரிவான விளக்கவுரையும் சுத்தானந்தரே தந்துள்ளார். இவரது யோக அனுபவங்களை இதில் காண்கிறோம்.

யோகி சுத்தானந்த பாரதியாரின் தமிழ் இலக்கியத் தொண்டினை மதிப்பிடுவது அவ்வளவு எளிதன்று. தமிழ் இலக்கியத்துறையில் அவர் கைமலர் படாத இடமே இல்லை. அவர் கை வைத்த துறையெல்லாம் தமிழ் மணங்கமழுகின்றன. தாம் உண்மையெனக் கண்ட ஒன்றையே துணிந்து கூறுவார். தமிழ்நாட்டிற்குப் பலவகைப்பட்ட இலக்கியச் செல்வத்தை அளிக்கின்ற வள்ளற் பெருமான் இவர். இன்றும் இவர் இலக்கியத் தெள்ளமுதை செய்த வண்ணமேயுள்ளார். இவரது அருமை பெருமையினைத் தமிழ்நாடு இன்னும் அதிகம் அறிந்து பயன் பெற வேண்டும் என்றே கருதுகின்றேன். புலவர் பெருமக்கள் தாம் வாழுங் காலத்தில் பெருமை பெறுவது தமிழ்நாட்டில் அரிது என்பது நாம் அறிந்த செய்தி தானே!

உலகோர் யாவரும் ஓரினம் எனக்கருதி ஒன்று சேர்ந்து வாழ வேண்டும். உலகில் அமைதி நிலவவேண்டும். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற நம் மூதாதையர் கண்ட உண்மையினை யாவரும் அறிந்து வாழ்ந்து இன்புறுதல் வேண்டும். இதற்காகவே யோகி திரு. சுத்தானந்த பாரதியார் ஓயாது உழைத்து வருகின்றார். வாழ்க சுத்தானந்த பாரதி, வாழ்க தமிழ், வாழ்க தமிழ் மக்கள், பொங்குக எங்கும் சுத்தானந்தம்.

13

சட்டத் தமிழ் வளர்ச்சி

திரு. மா. சண்முக சுப்பிரமணியம், எம். ஏ., பி. எல்.,
செயலர்,
தமிழ்நாடு சட்டப் பேரவை.

"சட்டத் தமிழ் வளர்ச்சி" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காகப் பல்கலைக் கழகத்தினருக்கும், குறிப்பாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். "சட்டத் தமிழுக்கும்" சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 1951-ம் ஆண்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அந்த மொழிபெயர்ப்புக்கான குழுவின் தலைவராகப் பணியாற்றியவர் இப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் அந்நாள் தலைவர், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள். இப்பொழுதுள்ள சட்டத் துறை ஆட்சி மொழிக் குழுவிலும் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணி புரிகின்றார்கள். இவ்வாறு, சட்டத்தமிழ் வளர்ச்சியில் இப் பல்கலைக் கழகம் பெரும் பங்கு கொண்டுள்ளது. எனவே, இந்தக் கருத்தரங்கில் "சட்டத் தமிழ் வளர்ச்சி"யும் இடம் பெறுவது சாலப் பொருத்தமாகும்.

இந்திய நாட்டின் விடுதலைக்கு முன்பே தமிழில் சட்டங்களும் தீர்ப்புக்களும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் சில அறிஞர்களுக்கு இருந்ததுண்டு. மாவட்ட முன்சீப்பாக இருந்த அமரர் வேதநாயகம் பிள்ளை அவர்கள் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளைத் தமிழில் மொழி பெயர்த்து "சித்தாந்த தீபிகை" என்ற புத்தகம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். அப்புத்தகம் இப்பொழுது எளிதில் கிடைப்பதில்லை. அதற்குப் பின், மறைந்த சட்டப் பேரறிஞர் கா. சுப்பிரமணியபிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள் தாம் நடத்தி வந்த "மணிமாலை" என்ற இதழில் "குற்றவியல்" சட்டத்தை மொழிபெயர்த்துப் பகுதி பகுதியாக வெளியிட்டார்கள். இன்னும் சில மொழிபெயர்ப்புப் புத்தகங்களையும் பிற அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். அன்றைய அரசினரின் கொள்கை ஆங்கிலமே நீதிமன்ற மொழியாகப் பயன்பட வேண்டும் என்று இருந்ததால், சட்டத் துறையில் தமிழ் மொழி வளருவதற்கேற்ற சூழ்நிலை அப்பொழுது தோன்றவில்லை.

இந்திய நாட்டின் விடுதலைக்குப் பின் நிலைமை மாறியது. ஆங்கில மொழி பயன்படுத்தப்பட்ட துறைகளிலெல்லாம் இந்திய மொழிகளைப் பயன்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் நாம் நல்ல முன்னேற்றம் அடைந்து விட்டதாகக் கூறுதல் இயலாது. இருப்பினும், நாம் எடுத்துள்ள முயற்சிகளின் தன்மை பற்றி அனைவரும் தெரிந்து கொள்ளுவது, எதிர்கால முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும்.

அண்மைக் காலத்தில் சட்டத் துறையில் தமிழ் மொழியின் வளர்ச்சி எத்தன்மையில் உள்ளது என்பதைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கம்.

மக்களாட்சியின் மாண்பு, சட்டத்தின் ஆட்சியாக (Rule of Law) சட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் ஆட்சியாக அமைவதுதான். எனவே, சட்டத் துறையில் மக்களின் தாய்மொழி அதற்குரிய இடத்தினைப் பெறுவது மக்களாட்சி நிலைபெறுவதற்கு இன்றியமையாததாகும். ஆதலால் சட்டங்களை இந்திய மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யும் பணியை இந்திய அரசு மேற்கொண்டது. இந்நிலையில் இந்திய அரசினர் ஒரு திட்டத்தை வகுத்தனர். சட்டத்தில் வரும் அடிப்படைச் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் ஒரே மாதிரியான மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும் என்ற கருத்து அத்திட்டத்தில் முதலிடம் பெற்றது.

எடுத்துக்காட்டாக Law, Rule, Court, Litigation, Case, Plaintiff, Defendant, Evidence,

போன்ற சொற்களுக்கெல்லாம் மொழிபெயர்ப்பாக அமைக்கப்படும் சொற்கள் இந்திய மொழிகள் அனைத்திலும் ஒரேவிதமாக இருக்க வேண்டுமென்று கருதினார்கள். இந்திய நாடு முழுவதற்குமே ஒரே ஒரு உச்ச நீதிமன்றமே இருப்பதாலும், ஒரு மாநிலத்திலுள்ள உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புகள் பிற மாநிலங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கும் வழிகாட்டியாக அமைவதாலும், சட்டத்தைப் பொறுத்தவரை முக்கியமான சட்டச் சொற்கள் ஒரேவிதமான மொழி பெயர்ப்பினைக் கொண்டதாக இருத்தல் வேண்டுமென்ற கருத்து மத்திய அரசினரால் வலியுறுத்தப்பட்டது.

இக்கருத்து, மேலெழுந்தவாரியாக நோக்கும்பொழுது, சரியானதெனத் தோன்றினாலும், முடிவில் சட்டங்களின் மொழிபெயர்ப்பு முறையாக அமைவதற்கு ஏற்றதாக இல்லை என்ற உண்மை உணரப்பட்டது. எடுத்துக்காட்டாக 'Law' என்ற சொல்லைத் தமிழில் 'சட்டம்' என்று கூறுகின்றோம். மத்திய அரசு நியமித்துள்ள சட்டக்குழு இச்சொல்லை 'விதி' என்று மொழிபெயர்க்கின்றது. நாம் தமிழில் 'Rule' என்ற சொல்லை 'விதி' என்று மொழிபெயர்க்கின்றோம். 'Right' என்ற சொல்லை அக்குழுவினர் அதிகார்' என்று மொழி பெயர்க்கிறார்கள். தமிழில் 'அதிகாரம்' என்பது 'Power' என்ற சொல்

விற்கு மொழிபெயர்ப்பு ஆகும். இவ்வாறு மத்தியக் குழுவினர் ஏற்றுள்ள Standard Legal Terms மொழிபெயர்ப்புக்களைப் பிற இந்திய மொழிகளிலும் கையாளுவது என்றால் குழப்பமும், தெளிவின் மையும் ஏற்படுமென்ற உண்மையை மத்திய அரசிடம் தமிழக அரசு எடுத்துக் கூறியது. இதன் பயனாக, அந்தந்த மாநிலங்களில் சட்டங்கள் மாநில மொழிகளிலேயே மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்ற திட்டத்தினை மத்திய அரசினர் ஏற்றுக் கொண்டனர். இப்பொழுது, ஆட்சி மொழி (சட்டத் துறை) ஆணைக்குழு (Official Language (Legislative) Commission) மத்திய அரசாங்கத்திலும், இதுபோன்ற ஆணைக் குழுக்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் இயங்கி வருகின்றன.

இதற்கு முன் சட்டச் சொல்லாக்கக் குழு (Legal Glossary Committee) ஒன்று பகுதி நேரக் குழுவாகப் பணியாற்றி, சட்டச் சொற்களை மட்டும் தமிழில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தது. இப்பொழுது தமிழ் நாட்டிலே ஆட்சி மொழி (சட்டத்துறை) ஆணைக்குழு 1966-ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறது. அரசியமைப்புச் சட்டமும் (Constitution of India) இன்னும் சில மத்திய சட்டங்களும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சட்டங்களை மொழி பெயர்ப்பதோடு, நீதி மன்றங்களிலும் தமிழையே பயன்படுத்தி, தமிழிலேயே தீர்ப்புக்களை எழுதச் செய்யவேண்டுமென்ற நோக்குடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாட்சியங்களைத் தமிழிலேயே பதியுமாறு அரசாங்கமும் உயர்நீதி மன்றமும் உத்திர விட்டுள்ளன. விரைவிலேயே தீர்ப்புகள் தமிழில் எழுதப்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

சட்டங்களைத் தமிழில் எழுதும்பொழுது 'சட்டத் தமிழ்' என்ற ஒரு வகைத் தமிழ் உருவாகின்றது. இதனை இக்கட்டுரையில் எடுத்துக் கூறுவது இன்றியமையாததாகும்.

சட்டத் துறை ஓர் அறிவியல் துறை. சட்டக் கருத்துக்களைக் கூறும் பல கலைச் சொற்கள் ஆங்கிலத்திலுள்ள சட்ட நூல்களிலே பயன்படுகின்றன. அச்சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும்பொழுது சட்டக் கருத்துக்கள் அனைத்தையும் மொழி பெயர்ப்பாளர் நினைவில் கொள்ளவேண்டும். அவர் சட்டச் சொற்களை நன்கு புரிந்தவராக இருத்தல் முதல் தேவையாகும். இரண்டாவதாக, தமிழ் மொழியிலே போதிய அளவு பயிற்சி உடையவராக அவர் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலே உள்ள சட்டச் சொற்களை நன்கு புரிந்து கொண்டு, அச்சொற்கள் உணர்த்தும் கருத்துக்களைக் குறைவற அறிந்துகொண்டு, அதன்பின் அக் கருத்துக்களைத் தமிழில் கூறும் ஆற்றல் மொழிபெயர்ப்பாளரிடம் இருத்தல் இன்றியமையாததாகும். அத்தகைய ஆற்றலுடன் ஆக்கப்பெறும் தமிழ்ச் சொற்கள் ஆங்கிலச் சொற்களை விடச் சிறந்து அமைகின்றன. மூலச் சொற்களைக் காட்டிலும் தமிழாக்கச் சொற்கள் தெளிவும் திட்பமும் கொண்டவை

யாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, இரண்டு சொற்களைக் காணலாம்.

'பொதுவாக, குறுக்கு விசாரணை செய்யும்பொழுது தவிர, மற்ற விசாரணையில் சாட்சிகளிடம் கேட்கப்படும் வினா, அதற்கான விடையை மறைமுகமாகக் குறிக்கும் வகையில் அமைதல் கூடாது.

"கொலையுண்டவரின் மரணம்பற்றி உங்களுக்குத் தெரிந்தது என்ன?" என்று சாட்சியிடம் வினா விடுக்கலாம். ஆனால், "கொலை யுண்டவரை எதிரி கத்தியால் குத்தினரல்லவா?" என்று வினா விடுக்க லாகாது. இரண்டாவது வினாவில், இன்னபடிதான் விடை இருக்க வேண்டும் என்ற குறிப்பு இருக்கிறது. விடைக்கு வழிகாட்டும் வகை யில் வினா உள்ளது. வினாவிலேயே விடையும் அமைந்துள்ளது. இத்தகைய வினாக்களை ஆங்கிலத்தில், 'Leading Question' என்பார்கள். 'Leading' என்றால், 'வழிகாட்டும்' என்று பொருள். எனவே. 'Leading Question' என்பதை 'வழிகாட்டும் வினா' என்று மொழி பெயர்க்கலாம். ஆனால், ஆங்கிலச் சொற்றொடரின் பொருளினை நன்கு புரிந்துகொள்ளும் சட்ட அறிஞர்கள் 'Leading Question' என்பதை 'விடையமை வினா' என்று தமிழாக்குகின்றனர். 'வழிகாட்டும்' என்பது வினாவின் தன்மையை மட்டுமே குறிக்கின்றது. 'விடையமை' என்பது வினாவின் தன்மையையும் அதன் அமைப்பையும் ஒருங்கே உணர்த்துகிறது. விடை கூறுவதற்கு எவ்வாறு அந்த வினா வழிகாட்டு கிறது எனில், விடையைத் தன்னுள் அமைத்து வழிகாட்டுகிறது என்ற உண்மையை உணர்த்தும் வகையில், 'விடையமை வினா' என்ற தொடர் விளக்குகிறது.'

பொதுவாக, வழக்குகளில் தீர்ப்புக் கூறுவதற்கு வழிகாட்டியாக உள்ள உச்ச நீதிமன்ற, அல்லது உயர்நீதி மன்றத் தீர்ப்புக்களை 'Leading Cases' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். 'Leading Case' என்பதை 'வழிகாட்டும் தீர்ப்பு' என்றே தமிழாக்குகிறோம். 'Leading Question' என்பதை 'விடையமை வினா' என்றும், 'Leading Case' என்பதை 'வழிகாட்டும் தீர்ப்பு' என்றும் தமிழாக்குகிறோம். இவ்வாறு 'Leading' என்ற ஆங்கிலச் சொல் சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு வகையில் தமிழாக்கப்பெறுகின்றது. 'Leading Question' என்ற ஆங்கிலச் சொற்றொடர் உணர்த்தும் கருத்தைவிட 'விடையமை வினா' என்ற தமிழாக்கம் உணர்த்தும் கருத்தில் உள்ள தெளிவும் திட்பமும் எளிதில் புலப்படுவன.

எனவே, அறிவியல் துறையில் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி யாக்கம் என்பது, ஆங்கிலச் சொற்களின் அகராதிப் பொருளை மொழி பெயர்த்தல் அன்று, அச்சொற்கள் உணர்த்தும் கருத்தினைத் தமிழில் கூறுவதே ஆகும்.

'Damages' என்ற ஆங்கிலச் சட்டச்சொல் ஒன்று உண்டு. தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்ட இருவர்களில் ஒருவர் அந்த

ஒப்பந்தப்படி நடக்கத் தவறுகிறார்; இதனால் மற்றவருக்கு இழப்பு நேருகிறது. எவருக்கு இழப்பு விளைந்ததோ அவர் ஒப்பந்தத்தை மீறியவர்மீது வழக்கிட்டு, விளைந்த இழப்பிற்கு ஈடாக ஒரு தொகையைப் பெறலாம். இவ்வாறு பெறும் தொகையை ஆங்கிலத்தில் 'Damages' என்பார்கள். நாம் தமிழில் இதை 'இழப்பீடு' என்கிறோம். தமக்கு விளைந்த இழப்பிற்கு ஈடாகப் பெறும் தொகையை "இழப்பீடு" என்று கூறுகின்றோம்.

ஒருவர் மற்றொருவரைக் குறித்து அவதூறாகப் பேசுகின்றார். அவதூறு இழைக்கப்பட்டவர் அவதூறு இழைத்தவர்மீது வழக்கிட்டு, தமக்கு விளைந்த அவமானத்திற்கு மாற்றீடாக ஒரு தொகையைப் பெறலாம். இந்தத் தொகையையும் ஆங்கிலத்தில் 'Damages' என்று தான் குறிப்பிடுகின்றனர். இந்த இடத்தில் 'Damages' என்பதை நாம் தமிழில் 'தீங்கீடு' என்கிறோம். இழைக்கப்பட்ட தீங்கிற்கு ஈடு செய்யும் வகையில் வரும் தொகையை "தீங்கீடு" என்று கூறுகிறோம்.

ஒப்பந்த முறிவால் விளைந்தது 'இழப்பு.' இதற்கு ஈடாகப் பெறுவது 'இழப்பீடு.' அவதூறால் விளைந்தது அவமானம் என்ற தீங்கு. இத்தீங்கிற்கு மாற்றீடாகப் பெறுவது 'தீங்கீடு' ஆகின்றது. ஆங்கிலத்தில் 'Damages' என்ற சொல்லே இரு கருத்துகளையும் குறிக்கப் பயன்படுகின்றது. ஆனால் அச் சொல்லின் இருதிறப் பொருள்களையும் மறுவறப் புரிந்துகொள்வதால் நாம் அதைத் தமிழில் இடத்திற்கேற்ப, 'இழப்பீடு' என்றும், 'தீங்கீடு' என்றும் மொழியாக்கம் செய்கிறோம். இதன் பயனாக ஆங்கில மூலச் சொல்லில் இல்லாத சிறப்பு தமிழில் ஆக்கப்பட்ட சொற்களில் அமைகின்றது.

இவ்வாறாக ஆங்கிலத்திலே உள்ள சட்டச் சொற்களைத் தமிழிலே மாற்றும்பொழுது அவை மொழிபெயர்க்கப்படுவதில்லை; தமிழ் மொழியில் அவை புதிதாக ஆக்கப்படுகின்றன. மொழிபெயர்ப்பு வேறு; மொழியாக்கம் வேறு.

'Damages' என்ற சொல்லின் பொருளை மட்டுமே மொழிபெயர்த்தால் அது 'இழப்பீடு' என்ற சொல்லோடு நின்றுவிடும். இச்சொல்லின் கருத்தை நன்கு புரிந்துகொண்டு அதைத் தமிழிலே கூறும்பொழுது 'இழப்பீடு,' 'தீங்கீடு' என்ற இருசொற்கள் பிறக்கின்றன. முன்னது மொழிபெயர்ப்பு; பின்னது மொழியாக்கம். 'Leading Question' என்பதை 'வழிகாட்டும் வினா' என்றால் அது மொழிபெயர்ப்பு. 'விடையமை வினா' என்றால் அது மொழியாக்கம்.

ஆங்கிலச் சொல்லின் அகராதிப் பொருளைத் தமிழில் கூறுவது மொழிபெயர்ப்பு; அச்சொல் சுட்டி நிற்கும் கருத்தினைத் தமிழிலே இசைப்பது 'மொழியாக்கம்.' சட்டச் சொற்களைத் தமிழிலே எழுதும் பொழுது பலப்பல புதுச் சொற்கள் இவ்வாறு பிறக்கின்றன.

நுண்ணிய கருத்துகளைக் குறிக்கும் இச்சொற்கள் மொழிக்கு வளம் ஊட்டுவதோடு இம்மொழியினைப் பயில்வோரின் சிந்தனைத் திறனையும் சீரியதாக்குகின்றன.

இன்னும் சிறிது இதுபற்றி நாம் காணலாம்.

சில செயல்களைச் சட்டம் தெளிவாக விளக்குகிறது. மதுவிலக்குச் சட்டம் உள்ள நாட்டில் மது அருந்துவதைச் சட்டம் தடை செய்கிறது. இச் சட்டத்திற்கு முரணாக மதுவருந்தும் செயல் 'சட்ட முரணான' செயல் ஆகும். சட்ட முரணான செயலைக் 'குற்றம்' என்றோ 'Illegal act' என்றோ சொல்வார்கள். இந்த இடத்தில் 'Illegal' என்பதைச் 'சட்ட முரணான' என்று மொழிபெயர்க்கிறோம்.

சில செயல்கள் சட்டத்தால் வெளிப்படையாக விலக்கப்படா விட்டாலுங்கூட, அவை பொது ஒழுக்கத்திற்கும் பொதுநலக் கொள்கைக்கும் மாறுபட்டனவாக இருப்பதும் உண்டு. ஒருவர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்யவிருக்கிறார். இந்தத் திருமணத்தை நடைபெறாமல் நிறுத்திவிட வேண்டுமென்று திட்டமிட்டு இருவர் அதற்கான ஓர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள் என்று வைப்போம். அந்த ஒப்பந்தத்தில் ஒருவர் மற்றொருவருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமெனக் கண்டிருக்கிறது. இவ்வகையான ஒப்பந்தத்தை ஆங்கிலத்தில் 'Unlawful Contract' என்பார்கள். இதனை நீதிமன்றத்தின் வழி நிறைவேற்றவும் முடியாது. இந்த இடத்தில் 'Unlawful' என்பதை 'சட்டம் ஒவ்வாத' என்று மொழிபெயர்க்கிறோம்.

வெளிநாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதியாகின்றன. இவ்வாறு இறக்குமதி செய்வதற்கு உரிமங்கள் (License) பெற்றிருத்தல்வேண்டும். உரிமம் இல்லாமல் கள்ளத்தனமாக இறக்குமதி செய்தால் அதை 'Illicit import' என்பார்கள். இந்த இடத்தில் 'Illicit' என்பதைச் 'சட்டப் புறம்பான' என்று மொழிபெயர்க்கிறோம்.

இவ்வாறு 'Illegal,' 'Unlawful,' 'Illicit' என்ற மூன்று சட்டச் சொற்களுக்கும் உள்ள நுட்பமான வேறுபாடுகளை உணர்த்தும் வகையில் 'சட்ட முரணான,' 'சட்டப் புறம்பான' என்று அச்சொற்களைத் தமிழாக்குகிறோம். ஒன்று சட்ட விதிக்கு மாறுபட்டு, முரணானது; மற்றொன்று சட்டத்தின் அறப் பண்புக்கு ஒவ்வாதது; அடுத்தது சட்ட முறைக்குப் புறம்பானது. இதுபோன்ற நுட்பமான வேறுபாடுகளை உணர்த்தும் வகையில் பலப்பல புதுச் சொற்களும், சொற்றொடர்களும் ஆக்கப்பெறுகின்றன.

நமது தமிழ் இலக்கண நூல்களில் இலக்கண விதிகள், சூத்திரங்களாகக் கூறப்படுவதுபோல் சட்டத்தின் கோட்பாடுகளும் சூத்திரங்களாகக் கூறப்படுவதுண்டு. அச் சூத்திரங்கள் இலத்தீன் மொழியிலேயே அமைந்துள்ளன. இலத்தீன் மொழியிலுள்ள அச் சூத்திரங்களை

நாம் தமிழ்மொழிச் சூத்திரங்களாக மாற்றுகிறோம். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் தமிழ் மொழியின் இயல்பானதால், தமிழில் ஆக்கப்பெறும் சூத்திரங்கள் தெளிவாகப் பொருளை உணர்த்துகின்றன. அச் சூத்திரங்கள் சிலவற்றைக் காணலாம்.

சட்டத்தில் பொது விதிகள், தனி விதிகள் என இருவகை விதிகள் உள்ளன. இவற்றில் தனி விதியின் திறனைப் பொது விதிகள் குறைப்ப தில்லை. ஒன்றைப்பற்றி இருவகை விதிகள் உள்ளபொழுது தனிவிதி தான் ஓங்கி நிற்கும். ஓர் எடுத்துக்காட்டு. ஒரு சட்டத்திலே கால் நடைகளுக்கு வரி ஐந்து ரூபாய் என்றும், குதிரைக்கு வரி பத்து ரூபாய் என்றும் எழுதப்பட்டுள்ளது என்று வைப்போம். கால்நடைகளுக்கு வரி ஐந்து ரூபாய் என்பது பொது விதி. குதிரைக்கு வரி பத்து ரூபாய் என்பது தனி விதி. ஒருவர், கால்நடைகளுக்கு ஐந்து ரூபாய்தான் வரி, குதிரையும் கால்நடைதான், ஆதலால், குதிரைக்கும் வரி ஐந்து ரூபா யாகத்தான் இருக்கவேண்டும் என்று வாதாடுவது முடியாது. ஏனெனில், குதிரைக்கு என்று உள்ளது தனி விதி. அதற்குப் பத்து ரூபாய் வரி என்று குறிப்பிடப்பெற்றுள்ளது அந்தத் தனி விதிதான் குதிரைக்குப் பொருந்துமே தவிர, கால்நடைகளைக் குறிக்கும் பொது விதி பொருந்துவதில்லை. இவ்வாறு தனி விதி, பொது விதி என்று இரண்டு இருக்கும்பொழுது தனிவிதிக்கு இசைந்துதான் பொது விதி இயங்கவேண்டும். இந்தக் கோட்பாட்டினைக் கூறும் இலத்தீன் சூத்திரம்,

'Generalia specialibus non derogant'

என்பது ஆகும். இதனைத் தமிழில், '**தனிவிதிக் கிசைந்தே பொதுவிதி இயங்கும்**' என்று சூத்திரமாகவே மொழிபெயர்க்கிறோம்.

தனி விதிக்கும், பொது விதிக்கும் முரண்பாடு தோன்றும்பொழுது தனி விதியே செயல்படுகிறது என்ற சட்டக் கருத்தினை,

'Generalibus specialia derogant'

என்ற இலத்தீன் மொழிச் சூத்திரம் குறிக்கின்றது, இக் கோட் பாட்டினைத் தமிழில், '**பொது விதிதன்னைத் தனிவிதி மிஞ்சும்**' என்று பெயர்க்கிறோம்.

சட்டத்தை அல்லது தீர்ப்புக்களை நிறைவேற்றுவதற்கென எடுக்கப் பட்ட நடவடிக்கைகளால் ஒருவருக்கு இழப்பு நேரலாம். அவருடைய சொத்துக்குச் சேதம் விளையலாம். ஆனால், அதைத் தீங்கு என்று சட்டம் கொள்வதில்லை. சட்ட நிறைவேற்றத்தால் ஏற்படும் விளைவு களைத் 'தீங்கு' எனக் கொண்டால் சட்ட நிறைவேற்றமோ, தீர்ப்பு நிறைவேற்றமோ இயலாது போய்விடும். எனவே, சட்ட நிறை வேற்றத்தால் விளையும் கேடுகள் 'தீங்கு' எனக் கொள்ளப்படுவ தில்லை. இக்கோட்பாட்டினை,

'Executio Juris non habat injuriam'

என்ற இலத்தீன் சூத்திரம் விளக்குகிறது. இதனை, "**பாங்குறு சட்ட நிறைவுறுத்தம் தீங்கென என்றும் ஆவதில்லை**" என்று தீந்தமிழில் மொழிபெயர்க்கிறோம்.

சான்றியல் சட்டத்தில் 'Evidence Act' பலவகையான சான்றுகள் கூறப்படுகின்றன. ஆவணம் சான்றாகப் பயன்படும்பொழுது அது 'ஆவணச் சான்று' என்றும், சாட்சிகளின் உரைகள் சான்றாகும்பொழுது 'வாய்மொழிச் சான்று' (oral evidence) என்றும் கூறுகிறோம். தீர்வுக்குரிய ஒரு நிகழ்வை நேராகக் கண்டவரோ, அறிந்தவரோ அந்நிகழ்வு பற்றிக் கூறுவதை 'நேர்நிலைச் சான்று' (Direct evidence) என்கிறோம். ஒருவர் கூறிய சான்றுரையிலிருந்து தீர்வுக்குரிய நிகழ்வு ஊகிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்தால் அத்தகைய சான்றினைச் 'சூழ்நிலைச் சான்று' (Circumstantial evidence) என்கிறோம். ஓர் ஆவணம் குறிக்கும் பொருள் அதில் உள்ள வாசகத்திலிருந்தே தெளிவாகத் தெரியும்பொழுது அதனை 'அகநிலைச் சான்று' (intrinsic evidence) என்று சொல்கிறோம். அந்த ஆவணத்தின் வாசகத்தை விளக்குவதற்கு வேறு சான்று தேவைப்பட்டால் அதனைப் 'புறநிலைச் சான்று' (Extrinsic evidence) என்கிறோம். சான்றாக ஒரு ஆவணத்தைப் பயன்படுத்தும் பொழுது அந்த ஆவணத்தை நீதி மன்றத்திலே சேர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணம் "தலைநிலைச் சான்று" (Primary evidence) எனப்படும். அந்த ஆவணத்திற்கு நகல் எடுத்து அதனை நீதிமன்றத்தில் சேர்ப்பித்தால் அது 'சார்நிலைச் சான்று' (Secondary evidence). இவ்வாறாக ஆவணச்சான்று, வாய்மொழிச் சான்று, நேர்நிலைச் சான்று, சூழ்நிலைச் சான்று, அகநிலைச் சான்று, புறநிலைச் சான்று, தலைநிலைச் சான்று, சார்நிலைச் சான்று எனப் பல சொற்கள் ஆக்கப்படுகின்றன.

பொதுவான ஒருவரால் எழுதப்பட்ட எழுத்தை 'கையெழுத்து' என்கிறோம். ஓர் ஆவணத்தில் அவருடைய பெயரை ஒப்பமாக இடுதலையும் 'கையெழுத்திடுதல்' என்று கூறுகிறோம். ஆனால் சட்டத்தில் 'handwriting' என்பது வேறு; 'signature' என்பது வேறு. ஆதலால் 'handwriting' என்பதைக் 'கையெழுத்து' என்றும் 'signature' என்பதைக் 'கையொப்பம்' என்றும் தமிழாக்குகிறோம். ஒருவர் கையொப்பமிடுவதற்குச் சான்றாக மற்றொருவர் கையொப்பமிடுதலை 'attestation' என்று ஆங்கிலத்திலே கூறுவார்கள். இதனைச் 'சான்றுக் கையொப்பம்' என்று தமிழாக்குகிறோம். இவ்வாறு கையெழுத்து, கையொப்பம், சான்றுக் கையொப்பம் என்ற மூன்று சொற்களுக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்த்தும் வகையில் 'சட்டத் தமிழ்' எழுதப் படுகிறது.

சட்டத்தின் அடிப்படைக் கூறுகளை விளக்கி, சட்டத்தின் கோட்பாடுகளைக் கூறுவது 'Jurisprudence' என்ற பிரிவில் வருவது ஆகும். 'Jurisprudence' என்பதை நாம் 'சட்ட இயல்' என்று மொழியாக்கு

கிறோம். சட்ட இயலில் விளக்கப்படும் அடிப்படைக் கோட்பாடுகளை நாம் ஆய்ந்து உணரும்பொழுது அவை ஒழுக்க நெறிக்கு உகந்த முறையில் அமைந்துள்ளன என்பது தெளிவாகின்றது. சட்டம் என்பது என்ன? சட்டத்திற்கு ஏன் மக்கள் பணிதல் வேண்டும்? நீதி வழங்குதல் அல்லது முறைசெய்தல் என்றால் என்ன?

குற்றவாளிகளைத் தண்டிப்பதன் நோக்கம் யாது? தண்டிக்கும் முறை எவ்வாறு அமைதல் வேண்டும்? இவைபற்றியெல்லாம் சட்ட இயலில் நாம் படிக்கும்பொழுது ஆங்கிலச் சட்ட நூல்களில் எடுத்து விளக்கப்படும் கோட்பாடுகள் பல, நம் பண்டைத் தமிழ் ஒழுக்க இலக்கிய நூல்களில் (ethics) கூறப்பட்டிருப்பதைக் கண்டு நாம் வியப்படைகிறோம். சிறப்பாக, திருக்குறளில் சட்ட இயல் கருத்துக்கள் பல இருப்பதைக் காண்கிறோம். 'நீதி வழங்குதல்' என்பதை 'முறை செய்தல்' என்ற செப்பமுடைய சொற்றொடர் சீரிய முறையிலே விளக்குகிறது. இன்றும் நீதி வழங்கும் பொறுப்பு அரசு ஒன்றினையே சார்ந்து நிற்கிறது. இவ்வுண்மையை,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்று அறநூல் கூறுகிறது. நடுவுநிலை தவறாது யார்மீதும் கண்ணோட்டம் காட்டாது வழக்குகளின் கூறுகளை நன்கு ஆய்ந்து நீதி வழங்க வேண்டும் என்ற இன்றைய சட்டக் கோட்பாட்டின் சாரத்தினை,

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

என்ற குறளிலே தெளிவாகக் காண்கிறோம். இக்குறள் தமிழ் நாட்டு நீதிமன்ற மண்டபங்கள் ஒவ்வொன்றிலும் நீதிபதியின் இருக்கைக்குப் பின்னால் உள்ள சுவரிலே பொறிக்கப்பட்டுள்ளன!

ஒரு குற்றவாளியைத் தண்டிக்கும்பொழுது அவன் மீண்டும் அக் குற்றத்தைச் செய்யாத நிலையில் அவனை வைக்கவேண்டுமென்ற சீரிய கருத்தைக்கொண்டே தண்டனை வழங்கப்படுகின்றது என்பது இன்றைய சட்ட இயல் கோட்பாடு. இதற்காகக் குற்றம் செய்தவனின் வயதையும், செய்யப்பட்ட சூழ்நிலையையும் செய்த குற்றத்தின் தன்மையையும் ஆய்ந்து தண்டனை விதித்தல் வேண்டும் என்பது இன்றைய சட்ட இயலின் நெறியாகும். இதனை மிகச் சுருக்கமாக அறநூல்

"தக்காங்கு நாடித் தலைச் செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து"

என்று கூறுகிறது

சட்டம் பொய் கூறுபவர்கள் அனைவரையுமே தண்டிப்பது இல்லை. அந்தப் பொய்க் கூற்றினால் பிறருக்குக் கேடு விளைந்தால்தான் அதனைச் சட்டம் தண்டிக்கிறது. உண்மை கூறியவர்களையும், அக்கூற்றினால் தீங்கு விளைந்தவிடத்து, சட்டம் தண்டிக்கிறது. இது இன்றைய சட்டம். ஒருவருடைய கூற்று உண்மையா, பொய்யா என்று காண்பதை விட்டு அக்கூற்றினால் பிறருக்குத் தீங்கு விளைந்ததா என்பதையே சட்டம் உன்னிப்பாக ஆய்கின்றது. இதே கருத்தினை வள்ளுவர் கூறுகின்றார்:

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றுந்
தீமை இலாத சொலல்"

இவ்வகையில், அறநெறியும், சட்ட நெறியும் இயைந்து நிற்பதைக் கண்டு நாம் வியப்புறுகிறோம். இவ்வாறாக, சட்டத்தைத் தமிழில் ஆக்கும்பொழுது நம்முடைய பண்டைத் தமிழ் இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் சட்ட இயல் கருத்துக்களை நாம் காணமுடிகின்றது.

இந்நிலையில் 'சட்டத் தமிழ்' வளர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும், இம்முயற்சியில் வெற்றி பெறுவதற்கு எவ்வளவோ உழைப்பும் உறுதிப்பாடும் தேவை என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. தற்கால நுண்ணிய கருத்துக்களைக் கூறும் அளவிற்குத்தமிழ்மொழியினை நாம் தக்கபடி பயன்படுத்தி அதை வளரச் செய்யவேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு உண்டு என்பதையும் மறப்பதற்கில்லை. எல்லாமே தமிழில் உண்டு என்று நாம் இறுமாந்து இருந்துவிட்டால் அது தமிழுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் உதவுவது ஆகாது. சட்டத் தொடர்ப இல்லாத சாதாரண ஆங்கிலச் சொற்கள் பலவற்றிற்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை இயற்றுவது கூட எளிதானதல்ல என்பதை இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் உணருவார்கள். இதற்கு ஒரு எடுத்துக் காட்டு ஆங்கிலத்திலே, 'Ability', 'Capacity', 'Capability' என்று கூறுகிறோம். இம்மூன்று சொற்களும் ஒரே பொருளை உணர்த்துவன அல்ல. நாம் தமிழில் வேறுபட்ட இப்பொருள்களை எவ்வாறு கூறுவது? 'திறமை' என்ற ஒரே சொல் இம்மூன்று சொற்களுக்கும் தமிழாக்கம் ஆகிவிடுமா? 'Order' என்பதை 'உத்திரவு' என்றோ 'கட்டளை' என்றோ கூறினால் 'Direction' 'Instruction' என்பனவற்றை எவ்வாறு கூறுவது? 'Independence' என்பதை "சுதந்திரம்" என்றோ "விடுதலை" என்றோ கூறினால் 'Freedom' 'Liberty' என்ற இரு சொற்களை எவ்வாறு கூறுவது? 'Expression' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அமைந்த தமிழ்ச் சொல் எது? 'Inconsistent with', 'in contravention for', 'in violation of' 'in derogation of' என்றெல்லாம் நுட்பமான வேறுபாடுகள் கொண்ட ஆங்கிலச் சொற்றொடர்களை அதற்கேற்ற தமிழ்ச் சொற்றொடர்களாக ஆக்கும் பணி எளிதானதா?

ஆகவே இந்த இடர்ப்பாடுகளை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், இந்த இடர்ப்பாடுகளை எண்ணி நம் இதயம் தளர வேண்டியதில்லை. இங்கிலாந்து நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஆங்கிலம் நீதிமன்ற மொழியாக, சட்ட மொழியாக இருப்பதற்கு அருகதையற்றது என்றே சட்ட நூலறிஞர்கள் கூறி வந்தனர். இலத்தீன், பிரஞ்சு மொழிகளே சட்டங்கள் இயற்றுவதற்கும் நீதி வழங்குவதற்கும் ஏற்ற மொழிகளாவன என்ற நிலையில் நீதி மன்றங்கள் அம்மொழிகளிலேயே நடைபெற்று வந்தன, தீர்ப்புக்களும் எழுதப் பெற்றுவந்தன. இதனால் பொதுமக்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளானார்கள். இதைப் போக்குவதற்காக இங்கிலாந்து நாடாளுமன்றம் இரண்டாவது ஜார்ஜ் மன்னர் ஆட்சியில் 1731 ஆம் ஆண்டிலே ஒரு சட்டத்தை இயற்றியது. ஆங்கிலமே நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்றும், இலத்தீனும் பிரஞ்சும் நீதிமன்ற மொழியாக இருத்தல் கூடாது என்றும், ஆங்கிலத்தை நீதிமன்ற மொழியாகப் பயன்படுத்தாதவர்களுக்கு 50 பவுன்கள் அபராதம் என்றும் நாடாளு மன்றம் அன்றைக்குச் சட்டத்தை இயற்றியது. அதற்குப் பின்தான் ஆங்கிலம் சட்டமொழியாக, நீதிமன்ற மொழியாக இடம்பெற்று வளர்ந்து இன்றுள்ள ஏற்றமிகு நிலைக்கு வந்துள்ளது. அந்நாளில் அரைகுறை வளர்ச்சி பெற்றிருந்த ஆங்கிலம் இவ்வளவு நல்ல முறையிலே வளர்ந்துள்ளபொழுது, நம் தமிழ் மொழி சட்டமொழியாக வளர முடியாதா? உறுதியாக முடியும். அதற்கான பணிகள் எல்லாம் மேலே கூறியவாறு நடந்துகொண்டு வருகின்றன.

இதுவரை வெளிவந்துள்ள முக்கியமான சட்டநூல்களின் பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

சட்டமொழியும், நீதிமன்ற மொழியும் தாய்மொழியான தமிழில் இருக்கவேண்டும் என்று நாம் கூறுவதன் நோக்கம் மொழி வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அன்று; நீதி முறையின் நெறியும், பண்பும் பயனும் நாட்டுமக்கள் நலமுற அறியும் விதத்தில் அமைதல் வேண்டும். எனவே நீதிமன்ற மொழி மக்களுக்குப் புரியும் வகையில் அவர்களது தாய் மொழியாகவே இருத்தல் வேண்டும் என்பது நீதி முறையின் இன்றியமையாத தேவையாகின்றது.

தாய்மொழியில் நீதி என்ற கோட்பாடு தாய்மொழிக்கு நீதி வேண்டும் என்பது அல்ல; நீதியின் தரம் காக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். நல்லாட்சியின் தேவை, நீதி முறையில் நெறி, தாய் மொழியில் நீதி வழங்கப்படவேண்டும் என்பதுதான்.

சட்டத்துறை தமிழ் வளர்த்து நீதித்துறை நெறி காப்போம் என்பதே நம் குறிக்கோளாக உள்ளது.

இணைப்பு

சட்டவியல்	....	திரு. மா. சண்முகசுப்பிரமணியம்
தீங்கியல் சட்டம்	....	,,
குற்ற இயல்	....	,,
குறள் கூறும் சட்டநெறி	...	,,
சட்டத் தமிழ்	...	,,
சர்வதேசச் சட்டம்	...	திரு. அ. பழனிச்சாமி
சட்டச் சொல்லகராதி	...	சட்டத்துறை ஆட்சிமொழி ஆணைக்குழு

அச்சிட இருப்பவை

" அரசியலமைப்புச் சட்டம் " முதலிய சில சட்டங்கள்

14

தமிழ் வளர்ச்சி - ஆராய்ச்சித் துறையின் தோற்றமும், வளர்ச்சியும் திட்டங்களும்

கொண்டல் திரு. சு. மகாதேவன், பி.எஸ்சி., எம். ஏ.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
குறளகம், சென்னை

நாம் தமிழர்; நம் மொழி தமிழ். நம் குடியைக் ‘கல்தோன்றி மண் தோன்ருக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடி’ என்று உலகெல்லாம் உணர்ந்து தெளிய வேண்டும் என்பதே நம் உள்ளக் கிடக்கை. நம் தமிழ் மொழியோ பழமைக்கும் பழமையாக இருந்து வாழ்வில் புதுமை சேர்த்து வீற்றிருக்கும் பண்பு மொழி. ஆம்,

“வையம் ஈன்ற தொல் மக்கள் உளத்தினைக்
கையினுல் உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணி குவாம்”

என்று அறிஞருலகம் ஏற்றிப் புகழ்கின்றது. ‘தட்டுங்கள் திறக்கப் படும்’ என்றுதான் ஏனைய உலகப் பகுதியில் வாழ்ந்தோரால் கூற முடியும். ஆனுல் ‘பாடுங்கள் திறக்கும்’ என்ருெரு பண்பமைந்த வழக்கினை உருவாக்கி உலகுக்களித்த பெருமை நம் பசுந்தமிழுக்கே உரியதாகும். ஆம், தட்டுவது ‘கையினுல் உரைப்பது’; பாடுவது உளமுருகிப் ‘பைய நாவை அசைப்பது’. உண்பதற்கே நாவை அசைத்துக் கொண்டிருந்த நிலையை மாற்றி உரைப்பதற்கு நாவை அசைத்த தமிழன் மொழி உயர்ந்த எண்ணங்களை உருவாக்கும் அளவில் சொற்பொருள் அமைதியும் சொற்ருெடர் முறைமையும் கொண்டு திகழ்வதில் வியப்பிலையன்ருே? இலக்கிய வளமும் இலக் கணத் திறமும் கொண்ட நம் உயர் தனிச் செம்மொழி இன்று ஆட்சி மொழியாக மீண்டும் அரியணை ஏறியுள்ளது.

இடைநாளில் ஏற்பட்ட வீழ்ச்சி :

இடை நாளில் அயல் மொழிகளால், சிறப்பாக வடமொழியாலும், ஆங்கிலத்தாலும், பொருளாழம் தூர்ந்து திரிந்து போன பெயர்களெல் லாம் மீண்டும் புத்தொலியும் புத்தொளியும் பெற்றுத் திகழ்கின்றன.

ஈரோடை நீருட்ட இடை நின்று எழில் வீசிய ஊர் தான் 'ஈரோடு'. ஆனால் அது புராண உலகின் புண்ணியத்தால் இரு பாதியாகப் பிளக்கப்பட்ட மண்டையோடாகி, அர்த்த கபாலீசுரமாகத் திரிந்து கிடந்தது. அந்நிலை மாறி மீண்டும் இன்று அது நீரோடை இரண்டு சூழ்ந்து ஈரோடாகத் திகழ்கின்றது. அடுத்துள்ள 'சிற்றோடும்' 'வெள்ளோடும்' இனி அர்த்த கபாலங்களாகவோ அரைக்கால் கபாலங்களாகவோ மாறி விடமாட்டா என்று நாம் உறுதியாக நம்பலாம்! ஆங்கில மொழியின் அடிப்படைக் குறைபாட்டினால் நம்மை அடைந்து நெருங்கி நீருட்டிய ஆறு இடை நாளில் ஏனோ 'அடையார்' ஆகிவிட்டது; கோவை மாவட்டத்தில் கல்லின் மீது தவழ்ந்தோடிய ஆறும் 'கல்லார்' ஆகி அங்கு உள்ளோரெல்லாம் கைவிரலை மையில் ஒற்றிக் காகிதத்தில் புரட்டுகின்றவர்கள் என்று அறிவித்துக் கொண்டிருந்தது: சோழவள நாட்டில் ஓடும் 'வெட்டாறு' 'வெட்டார்' ஆகித் தஞ்சைப் பகுதியினர் வயல் மடையையும் வணங்கி வெட்டார் என்ற நிலையை ஏற்படுத்தி விட்டது!

மாயவரம் கேட்ட இரக்கத்திற்குரிய நிலை தான் மாறி இன்று மீயூரமாக மயங்கி நிற்கின்றது; இன்னும் 'மயிலாடுதுறை'யாக அது தெளியவில்லை! இந்த நிலையில் நம் தமிழ் மொழி எல்லாத் துறைகளிலும், எந்த ஒரு மொழிக்கும் இளைத்துப் பின் நின்றுவிடாமல் முனைந்து முன்னேற வேண்டியுள்ளது. அந்த நோக்கத்தை நிறைவு செய்யவே தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறை உருவாகிச் செயல்பட்டு வருகிறது.

தமிழ் வளர்ந்துள்ளது. ஆனால் 'நம் தமிழ்தான்' இன்னும் வளர வேண்டியுள்ளது:

தமிழ்மொழி வானம் அளந்த அனைத்தும் அளந்திடும் வண்மொழி; வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து வளரும் நன்மொழி; இருந்தாலும் இன்று நம் தமிழறிவினை வளர்த்துக் கொள்வதில் நாம் பின் தங்கிவிட்டோம்: இந்நிலை வேறு வேறு மொழிகளைக் கற்று, வீட்டு வார்த்தை கற்க மறந்ததால் ஏற்பட்ட இரங்கத்தக்க நிலை; ஆம் குளித்தல், மூழ்குதல், தோய்தல், நீராடுதல் போன்ற கருத்தாழம் மிக்க சொற்களை நாம் கற்காமல் கல்விக் கோவிலில் பயிலும்போது 'பாத்' எடுத்துக் கொண்டும், கடவுட் கோவிலில் நுழைகின்ற போது 'அபிஷேகம்' செய்துகொண்டும் காலம் போக்கி வந்துவிட்டோம்; 'Problem' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு நேரடியாகத் தமிழ்ச்சொல் இல்லை என்று பேசிப் 'பிரச்சினை' என்று எழுதுவதா 'பிரச்னை' என்று எழுதுவதா என 'வட்டமேசை' மாநாடுகள் கூட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் 'சோற்றுப்பாடு, பெரும்பாடாக உள்ளது.' (Food Problem is the biggest problem) என்றும், 'உன்பாடு, நன்றாக உள்ளது' (Your problem is all right) என்றும், 'உனது பாட்டைப் பார்த்துக் கொண்டு போ' (Mind your own problem) என்றும் இனிய எளிய 'பாடு' என்ற தமிழ்ச் சொல்லைப் பயன்

படுத்திப் பேசிக் கருத்தினை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நாட்டுப் புறத் தமிழர்களை நகரத்தில் இருக்கும் நாம் நினைந்தும் பார்ப்பதில்லை. இத்தகைய நம் கல்வி நிலையைக் கண்டு இரங்கும் பெருங்கவிஞர் பாரதியாரும்,

"முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலர்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்"

என இடித்துக் கூறுகிறார். பேரறிஞர் அண்ணா அவர்களும் மறைமலைஅடிகள் வழி நின்று நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் சால்பு பற்றியும் நம் மொழியில் ஏற்படும் பிறமொழிக் கலப்பின் தீங்கு பற்றியும் குறிப்பிடும்போது "நம்முடைய மொழியை நாம் கண் போலக் காத்துவருகிறோம். கண்ணில் சிறுதுரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும். அதனால் கூட எரிச்சல் காணுவது போல இருக்கும். அந்த நேரத்தில் யாரேனும் ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம். நம் கண்களோ கோபத்தால் மேலும் சிவந்துவிடும். இது பட்டவர்களுக்குத் தெரியும். கண்ணுக்கு மையிடுவது போலப் பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும். மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ அதுபோலப் பிறமொழிகள் அதிகம் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும்" என்று கூறுகின்றார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் :

இன்றும் கல்விக் கோவிலில் தமிழிற்கு உரிய இடமில்லாததால் கலிலியோ, டார்வின், நியூட்டன்கள் தமிழ் நாட்டில் தோன்றாமலிருக்கின்றார்கள். கடவுட் கோவிலில் தமிழிற்கு உரிய இடமில்லாததால் தேவார, திருவாசக, திருவாய்மொழிகள் இன்று தொடர்ந்து தோன்றாமல் உள்ளன. இனியும் இத்தகைய பேடிக் கல்வியைத் தொடர்ந்து கற்காமல் உயிர்ப்போடு கூடிய தமிழ்க் கல்வியை, வீடும் நாடும், கற்க வேண்டுமென்பதே தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் தலையாய நோக்கம்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்துபாயுது காதினிலே"

என்றார் பெருங்கவி பாரதியார்.

"தமிழுக்கு அமிழ்தென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். தமிழாய்ந்த தலைமகனும் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராய்ப் பொறுப்பேற்ற

பின்னர் இந்தியாவின் தென்கோடியிலிருந்த 'மதராஸ் மாநிலம்' 'தமிழ்நாடாக' மலர்ந்து அனைவர் காதிலும் தேனைக் கொணர்ந்து பாய்ச்சியது; 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று பாரதியாரின் வழியிலும், தமிழே தமிழினத்தின் 'உரிமைப்பயிருக்கு வேர்' என்ற பாவேந்தரின் நெறியிலும், நின்று புகழ்கொண்ட பேரறிஞர் அண்ணாவின் ஆட்சிக்காலத்தில் 1969ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23ஆம் நாள் தமிழ்நாடு சட்டப் பேரவை "ஐந்தாண்டுக் காலத்திற்குள் தமிழ்நாட்டில் தமிழ் எல்லாக் கல்லூரிகளிலும் பயிற்சிமொழியாகவும், பாடமொழியாகவும், பல்வேறு துறைகளிலும் ஆட்சிமொழியாகவும் நடைமுறைக்கு வருவதற்கான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்வதென்று இம்மன்றம் தீர்மானிக்கிறது" என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இது, தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யத் தமிழர் மேற்கொண்டிருந்த முயற்சிகளுக்கும் புத்துயிர் அளித்தது.

ஆட்சிமொழி :

> "நகராட்சி, சிற்றூரின் நல்லாட்சி, மாவட்ட ஆட்சி என்று புகல்கின்ற பல ஆட்சிக் கழகங்கள் எவற்றிலுமே புக நினைப்பார் தகு புலமை குறிக்கின்ற சான்றுதர வேண்டுமென்று சட்டம் செய்தால் அகலுமன்றோ தமிழ்நாட்டின் அல்லலெல்லாம்; அல்லாக்கால் அமைதி உண்டோ?"

என்று வினவினார் பாவேந்தர் பாரதிதாசனார்

தமிழக அரசு ஊழியர்கள், பாரதிதாசனாரின் வினாவிற்கு விடை கூறும் வகையில் தமிழர் தம் நிலை, நெறி, தேவை, வாழ்வு இவையனைத்தையும் ஒருங்கறிந்து தமிழ்நாட்டின் அல்லலெல்லாம் அகலும் வகையில் பணிபுரிய ஆட்சிமொழிச் சட்டங்கள் இயற்றப்பெற்றன. ஆட்சிமொழியைச் செயல்படுத்துவதற்கு மூன்று நிலைகள் உருவாக்கப்பட்டன. முதல் நிலையாகச் சார்பு நிலை அலுவலகங்கள் அனைத்தும் தங்களுக்குள் கடிதப் போக்குவரத்துக்களைத் தமிழில் அனுப்பவேண்டும் என்றும், இரண்டாம் நிலையாக, துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் இம்முறையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமென்றும், மூன்றும் நிலையாகத் தலைமைச் செயலகம் ஆட்சிமொழிச் சட்டத்தின் வழி செயற்படவேண்டும் என்றும் சட்டங்கள் வகுக்கப்பட்டன. தொடக்கத்தில் பொது (தமிழ் வளர்ச்சி)த் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள எல்லாப் பிரிவுகளிலும், அலுவலகங்களிலும் தமிழ்மொழி முழுமையாகச் செயற்படுத்தப்பட்டது. இதனையடுத்து, சட்டம், நீதி ஆகிய துறைகள் நீங்க; பிற துறைகள் அனைத்தும் ஆட்சிமொழிச் சட்டத்தை நிறைவேற்றத் தொடங்கின. தற்போது சட்டம், நீதி, சட்டமன்றம், சட்டப் பேரவை முதலிய துறைகளும் அரசு அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பின்னெற்றித் தமிழ்த் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. தலைமைச்

செயலகத்தில் உள்ள பல துறைகளில் அரசாணைகளும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. நம் தமிழ் மொழியின் விரைந்த உறுதியான முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட நம் தமிழ்நாடு அரசு 1970ஆம் ஆண்டு வரை பொதுத் துறையின் ஒரு பிரிவாக இயங்கிவந்த தமிழ் வளர்ச்சித் துறையைத் தனியே பிரித்து 1971ஆம் ஆண்டு முதல் தமிழ் வளர்ச்சி இயக்ககமாக இயங்க ஆவன செய்து ஆணை பிறப்பித்தது. 'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்' என்னும் உயர் மொழியை உளங்கொண்டு தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஒல்லும் வகையால் தமிழ்ப் பணியைச் செல்லும் வாயெல்லாம் செயலாற்றி வருகின்றது.

மொழிபெயர்ப்பு :

நம்நாடு அயலாராம் ஆங்கிலேயர் தம் ஆளுகைக்குட்பட்ட காலந் தொட்டு அலுவலகங்களில் வரைவுகளை ஆங்கிலத்திலேயே எழுதிப் பழகி வந்த அரசு ஊழியர்கள் தமிழில் எழுதுவதற்குக் கலைச் சொற்கள் தேவைப்படும். அவர்கள், கோப்புகள் தொடர்பான குறிப்புகளை எழுதிக்கொண்டு வருங்கால் அவ்வப்போது ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க்கலைச் சொற்களைத் தேடி அல்லலுறின் எண்ணக் கோவை சிதறுண்டு இடர்ப்படுவர். இக்குறையைப் போக்க இவ்வியக்கத்தில் மொழிபெயர்ப்புப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருகின்றது. இப்பிரிவு, அரசுப் பணியாளர்கள் நாடோறும் நடைமுறையில் பயன்படுத்தும் சொற்களை மட்டும் மொழிபெயர்த்துத் தொகுத்து ஆட்சிச் சொல்லகராதி என்னும் பெயரில் வெளியிட்டு வருகின்றது. இம்மொழி பெயர்ப்புப் பிரிவு, துறைத்தலைவர்கள் அனுப்பும் சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள், படிவங்கள் முதலியவற்றை மொழிபெயர்த்துத் தரும் பணியையும் மேற்கொண்டுள்ளது. தற்பொழுது இப் பிரிவு சிறப்புச் சொல்லகராதிகளையும் தொகுத்து வெளியிட்டு வருகிறது.

பயிற்சி வகுப்புகள் :

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது ஆன்றோர் வாக்கு; அவ்வாக்கின்படி ஆட்சிச் சொல்லகராதிகள் எத்தனையிருப்பினும் அன்றாட நடைமுறை வரைவுகளைத் தமிழில் எழுதும்பொழுது சிக்கல்கள் தோன்றுவது இயல்பேயன்றோ? அத்தகைய சிக்கல்களைப் போக்கிச் சீராக்க மிகுந்த அளவில் ஊழியர்கள் பணிபுரியும் தலைமைச் செயலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் போன்ற இடங்களில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன.

ஆய்வுப் பணி :

எவ்வளவுதான் சிறந்த மாணவனாக இருப்பினும் அவன் கற்ற கல்வியின் சிறப்பினைக் கணக்கிடத் தேர்வு என்ற ஒன்று தேவைப்படு

படுகிறது. அதுபோன்றே ஆட்சிமொழித் திட்டம் அலுவலகங்களில் எந்த அளவு செயல்படுகின்றது என்பதைத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் நேரில் சென்று ஆய்வு நிகழ்த்தி வரும் முறை இருந்து வந்தது. திட்டத்தை விரைந்து செயற்படுத்தவேண்டி உள்ளமையாலும் அலுவலகங்கள் விரைந்து நிறைந்து விரிந்து வருவதாலும் இயக்குநர் ஒருவரே மாநிலத்திலுள்ள அலுவலகங்கள் அனைத்தையும் ஆய்வு நிகழ்த்துவது என்பது இயலாது என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, துறைத்தலைமை அலுவலகங்கள், மாவட்டத் தலைமை அலுவலகங்கள் ஆசியவற்றை மட்டும் இயக்குநர் ஆய்வு நிகழ்த்தவும் பிற அலுவலங்களில் ஆய்வு நிகழ்த்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு தனி அலுவலர்களை நியமிக்கவும், ஆணை பிறப்பித்துச் செயலாற்றி வருகின்றது. இப்பணியை மேற்கொண்டுள்ள ஆய்வுத் தனி அலுவலர்கள் தமிழ்மொழியை அரசு அலுவலகங்களில் விரைந்து செயற்படுத்த வேண்டுமென்ற அரசின் தூய நோக்கம் எந்த அளவு செயற்படுத்தப்படுகின்றது என்பதை ஆய்வதுடன் அவ்வாறு செயல்படுங்கால் ஏற்படும் இடையூறுகளைக் களைந்து அரசு ஊழியர்களைத் தமிழின்கண் ஆற்றுப்படுத்தும் பணியையும் மேற்கொள்ளுகின்றனர்.

வரைவுகளுக்குப் பரிசு :

எல்லாத் துறைகளிலும் திறமையை வளர்க்க, போட்டிகள் இன்றியமையாதனவாகின்றன. போட்டியின்றேல் திறமை வளர்ச்சியுறாமல் குன்றிவிடுமன்றோ? எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் வரைவுகளைத் தமிழில் எழுதுங்கால் திட்ப நுட்பங்களுடன் சீரிய முறையில் எழுதும் பணியாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குத் தமிழ்நாடு அரசு, இத்துறையின் சார்பில் ரூபாய் 500 பரிசு வழங்கி ஊக்குவித்து வருகின்றது. இப்பொழுது இப்பரிசுத் திட்டம் தலைமைச் செயலகத்திற்கும் விரிவுப்படுத்தப் பெற்றுள்ளது.

தமிழ் நூல் விவர அட்டவணைப் பிரிவு :

1867-ம் ஆண்டு முதல் நாட்டில் அச்சிடப்பெற்றுப் பதிவாகியுள்ள நூல்கள் அனைத்தும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் பாதுகாத்து வைக்கப் பெறுவதற்காக அனுப்பப்படுகின்றன. அங்கு, அந்நூல்கள் அனைத்தும் பொருட் பாகுபாட்டு அமைப்பில் வைக்கப்பெறாமல் பதிவு செய்யப் பெற்று கால அடிப்படையில் ஒருங்கே கட்டிவைக்கப் பெறுகின்றன. இந்நிலையில் ஆய்வு நிகழ்த்த விரும்பும் ஆய்வாளர்கள், வெளியாகியுள்ள நூல்களை அறிந்து, தமக்கு வேண்டிய நூல்களைப் பெற்று, ஆய்வு நிகழ்த்த இயலுவதில்லை. எனவே 1867-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டு வரை பதிவு செய்யப் பெற்ற தமிழ் நூல்களின் விவர அட்டவணையைத் தொகுக்கும் சீரிய நோக்குடன் தமிழ் நூல் விவர அட்டவணைப் பிரிவு தொடங்கப் பெற்றது. இப்பிரிவு, ஆவணக் காப்பகத்திலிருந்து தமிழ் நூல்களைப் பெற்று, பொருட்பாகுபாட்டு அடிப்படையில் நூல்களைப் பகுத்து, நூல்களைப் பற்றிய விளக்கக்

குறிப்புகளுடனும் நூல் அகர வரிசை, ஆசிரியர் அகர வரிசை முதலிய வற்றுடனும் 'தமிழ் நூல் விவர அட்டவணை' என்ற பெயரில் வெளி யிட்டு வருகின்றது. விவர அட்டவணை அச்சிடப்பெற்ற பிறகு நூல்கள், அட்டவணையிலுள்ள முறைப்படி வரிசை எண்ணிடப் பெற்று மீண்டும் ஆவணக்காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றன. இதனால் ஒரு கால அளவிற்குள் ஒரு பொருள் தொடர்பாக வெளியான நூல்கள் அனைத் தும் ஓரிடத்தில் ஒழுங்குற அடுக்கப்பெற்று ஆய்வாளர்கள் பயனுற வழி வகுக்கப்படுகின்றன. 1867 முதல் 1900 வரை பதிவு செய்யப் பெற்ற நூல்கள் தொடர்பான குறிப்புகள் 'முதல் தொகுதி' என்ற பெயரிலும், 1901 முதல் 1910 வரை பதிவு செய்யப் பெற்றவை 'இரண்டாம் தொகுதி' என்ற பெயரிலும் வெளியிடப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந்து தொகுதிகள் அச்சிடப்பெற்று வருகின்றன. 1867-ம் ஆண்டிற்கு முன்னர் வெளியான தமிழ் நூல்கள் தொடர்புடைய குறிப்புகள் அடங்கிய 'மர்டாக்' நூல் அட்டவணையுடன் 'டெய்லர்' நூல் அட்டவணை, பிரிட்டன் தொல்பொருட்காட்சிச் சாலையிலுள்ள தமிழ் நூல்களின் அட்டவணை ஆகியவற்றையும் இணைத்து வெளி யிட்டுள்ளது.

நூல் வெளியீட்டுத் திட்டம் :

"செந்தமிழிற் புதுப்புது நூல் விளைப்பதற்குச்
செல்வத்தைச் செலவு செய்தால்
நந்தமிழ் நாடுயராதோ? நலிவெல்லாம் தீராவோ?"

என்ற புரட்சிக் கவிஞரின் கருத்துக்களை உளங்கொண்ட தமிழக அரசு தமிழ் மொழியில் சிறந்த நூல்களை வெளியிட விரும்புகின்றவர் களுக்கு இவ்வியக்கத்தின் வாயிலாகப் பொருளுதவி செய்து வருகின்றது. அச்சிடத் தகுந்ததென வல்லுநர் குழு தேர்ந்தெடுத்த நூல் அச்சிடுவதற்காகும் பொருட் செலவில் பாதி அல்லது ரூபாய் 5,000 வழங்கித் தமிழ் மொழியில் புதுப் புது நூல் வெளிவர வழிவகுக் கின்றது. இத்திட்டத்தையும் இவ்வாராய்ச்சி மன்றமே செயற்படுத்தி வருகின்றது.

நூல்களுக்குப் பரிசு :

காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாத பெரு நூல்கள் தமிழ் மொழியில் முகிழ்த்து மணம் பரப்ப அத்தகு நூல்களைப் படைத்துத் தரும் நூலாசிரியர்களைப் போற்றிப் பாராட்டுதல் அரசின் கடமையன்றோ? ஆண்டுதோறும் தமிழ் மொழியில் வெளிவரும் நூல்களை 21 தலைப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு தலைப்பிலும் வெளி வந்த சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து, முதற் பரிசாக இரண்டாயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக ஆயிரம் ரூபாயும் வழங்கி வருகிறது. நூலாசிரியர்களால் யாக்கப்பெறும் நூல்களை அச்சிடும் வாய்ப்பும் வளமும் அனைத்து நூலாசிரியர்களும் பெற்றாரில்லை. எனவே, அவர்

தம் உள்ளச் சுரங்கங்களில் எவ்வளவு மாணிக்கக் கருத்துக்கள் கிடந்தாலும் வெளிக் கொணர்ந்து அச்சிடும் வாய்ப்புகளை நல்காவிடில் அக்கருத்துக் கருவூலங்கள் காணக் கிடைக்காமல் அழிந்து விடுமன்றோ? எனவே அச்சகத்தாரும் நூல் வெளியீட்டாளர்களும் வாணிக நோக்கத்திற்காக மட்டுமன்றி வண்டமிழ் மொழியின் வளர்ச்சியினையும் உளங்கொண்டு நூல்களை வெளியிட முன்வர வேண்டுமென்ற எண்ணத்தில் சீரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பதிப்பாளர்களுக்கும் இவ்வாராய்ச்சி மன்ற வழியாகச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்து வருகின்றது.

வரலாறு வெளியீட்டகம் :

ஆங்கிலப் பள்ளியில் பயின்று வெளிவந்த நம்மைப் பார்த்து,

"சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்,
பாரளித்ததும் தர்மம் வளர்த்ததும்
அன்னயாவும் அறிந்திலர்"

என்றார் பாரதியார். எலிசபத் கால ஆட்சி முறையை அறிய "சேக்ச்பியர்" நாடகங்கள் பயன்படுவதைப் போல அகழ்வாராய்ச்சிகளும் பயன்படுவதில்லையென மேனாட்டு வரலாற்றறிஞர்கள் வகுத்துரைக்கின்றனர். ஆனால் நம்நாட்டிலோ மனுநீதியைத் துணையாக வைத்துக் கொண்டு வரலாறு படைக்கலாம் எனத் துணிபவர்களும் கூடச் சங்க இலக்கியங்களின் துணை கொண்டு எழுதும் வரலாற்றை ஏனோ ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்! அயல் நாட்டில் உள்ளது போல் வரலாறு என்ற அளவில் கட்டுக்கோப்பாக அமைந்து எதிர்கால வீரர்களை உருவாக்கும் ஒரு சாதனத்தை இங்கு ஏனோ காண முடிவதில்லை. பேரறிஞர் அண்ணா மனம் வெதும்பிக் கூறுவது போலக் கரிகாலன், இராசராசன், குலோத்துங்கன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், ஆட்டனத்தி என்ற பெயர்ப் பட்டியலே நமக்கு எஞ்சி நிற்கிறது! இந்திய வரலாறு தொடங்க வேண்டிய இடம் பழைமை மிக்க காவிரிக் கரையே தவிர, நேற்றுத் தோன்றிய கங்கைக் கரையன்று என்பது வரலாற்றுப் பேராசிரியர்களின் கருத்தாகும். இச்சூழலிலே, தமிழையே தம் மூச்சாகக் கொண்டுள்ள தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டியபோது தென்னகத்திற்கெனத் தனி வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற உயர் கருத்தினை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களைத் தலைவராகவும், பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட வரலாற்று வெளியீட்டுக் குழு ஒன்று நிறுவப்பெற்றது. தமிழ் நாட்டு வரலாற்றுப் பிரிவின் கீழ்ச் செயற்படும் இக்குழு, முதற்படியாக, 'வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்' என்னும் தலைப்பில் நில அமைப்பின் வரலாறு,

பழைய கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலமும் உலோக காலமும், இனமரபு வரலாறு, அரப்பா நாகரிகம் முதலிய பொருள்களில் கட்டுரைகளைத் தொகுக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ளது.

எழுத்துச் சீர்திருத்தம் :

எண்ணத்திலே வளர்ந்துவிட்ட நாம் ஏனோ எழுத்திலே தளர்ந்து விட்டோம்! இன்று அலுவலங்களில் 'நாவசைத்துப்' பேசுவதிலும், 'கையசைத்து' எழுதுவதே அதிகமாக நடந்தாக வேண்டியுள்ளது. எனவே, பைய 'நாவை அசைத்து' உயர்ந்த நம் தமிழ்மொழி, இன்று 'கையினால் உரை' நிகழ்த்த வேண்டிய கலையிலும் சிறிது கருத்தைச் செலுத்தியாக வேண்டியுள்ளது! ஆம், இன்று ஒலி நுட்பம் குன்றிய ஆங்கிலம் கையினால் உரை செய்வதில் வல்லமை உடையதாக உள்ளது. ஆனால், உலகமே தலைவணங்கும் வகையில் ஒலி நுட்பங்களை உருவாக்கி ஒரு தொல்காப்பியரை உலகுக்களித்த உயர்தனிச் செம்மொழியைப் பெற்றிருக்கும் நாம் ஏனோ கையினால் உரைக்கும் முறையில் பெறவேண்டிய வளர்ச்சி பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இருக்கின்றோம். அதன் விளைவாக நம் அச்சும், தட்டச்சும் ஆங்கிலத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்தங்கி நிற்கின்றன. இந்நிலைக்குத் தமிழன் உடனே தீர்வு கண்டாகவேண்டும்? நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை என்பதை நாம் அறிவோம். அவ்வாறே நம் மொழியின் பிழையன்று நம் தட்டச்சு விரைந்து நகராமை என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். எல்லாம் விதியின் பிழையே! ஆம், தமிழ்மொழியை எழுத நாம் மேற்கொண்டு வரும் வரி வடிவ எழுத்தமைப்பின் விதி முறையில் உள்ள பிழையேயாகும். விரும்பினால் விதியையும் நம் மதியால் வெல்லலாமன்றோ? நம்எழுத்திலுள்ள குறை நமக்குப் புலப்படுவதில்லை. அயலார் கண்களுக்கே அது புலப்படும்! வெளிநாட்டில் இருந்து போந்த ஜோசப் பெஸ்கி எகர ஒகரத்தின் தலைச் சுழியை மாற்றி நெடிலுக்கு முறையே கீழ்க்கோடும் சுழியும் சேர்த்து 'எகர ஒகரத்தின் இயற்கையும் இற்றே' என்று நிலைநாட்டி வீரமா முனிவராகத் திகழ்ந்தார். காலத்திற்குக் காலம் எழுத்துக்களில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் பற்றி எதுவும் அறியாத நாமோ 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்று மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம்! பகுத்தறிவுச் செம்மல் தந்தை பெரியார் ஒருவருக்குத்தான் தொல்லை தரும் ஐகார ஔகாரங்களை ஒழிக்கவும், மெய்யுடன் ஒட்டிக்கொண்டிருந்த ணை, னை, லை, ளை உருவங்களைப் பிரித்து ணை, னை, லை, ளை என அமைக்கவும், கீழ் விலங்கு மாட்டிக்கொண்டிருந்த ணா, னா, றா உருவங்களை விடுவித்துக் கால் கொடுத்து ணா, னா, றா, என நடமாடச் செய்யும் துணிவு இருந்தது. ஆனால், நாமோ இன்னும் ஓலையும், எழுத்தாணியும் எழுது கருவிகளாக இருந்த காலத்தில் உருக்கொண்ட வளைவு நெளிவுகளையே இன்றைக்கும் நம் எழுத்து வடிவங்களாகக் கொண்டு அச்சையும் தட்டச்சையும் ஆமை வேகத்தில் நகர்த்திக் கொண்டிருக்கின்றோம்! தமிழனைப் பகுத்தறிவுப் பாதையில் நடத்திச்

செல்லும் தந்தை பெரியார் அவர்கள் தாம் மேற்கொண்டுள்ள எழுத்துச் சீர்திருத்தத்தை உகர ஊகாரங்களுடன் கூடிவரும் உயிர்மெய் வடிவங்களுக்கும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என இச்சமயத்தில் யான் வேண்டிக்கொள்கின்றேன்.

'கேட்டையும்' 'கேவலனும்' நகைச்சுவையாகா!

அச்சும், தட்டச்சும் மலிந்துவிட்ட முற்போக்கு ஊழியில் வாழ்ந்து வரும் நாம் இனியும் இரயில் சீட்டுக்களில் கோட்டை 'கேட்டை' யாவதையும் வார இதழ்களில் கோவலன் 'கேவலன்' ஆவதையும் நகைச்சுவையாகக் கொண்டு சுவைத்துக்கொண்டிருக்க முடியாது. கொம்பையும் காலையும் நம்பி நிற்கும் உயிர்மெய் எழுத்து வடிவங்களை மறந்துவிட்டு 'உயிரும் உடம்புதாம் முப்பது முதல்' எழுத்துக்களை மட்டும் கொண்டு 'க்ஓட்டஐ' என்னும் 'க்ஓவ்அலஅன்' என்றும், தமிழுலகம் எழுதும் நாள் அதிகத் தொலைவில் இல்லை! கூட்டெழுத்தை மறந்துவிட்டதுபோல் உயிர்மெய் வடிவங்களுக்கு நாம் முழுக்குப் போட்டுவிட்டால் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிட்டுப் பிரித்துணர்த்தவேண்டிய தொல்லையும் இல்லையாகிவிடும்! இளங்குழந்தைகளும் மிக எளிமையாகக் 'கஓட்டஐ' என்றும், 'கஓல்அல்அன்' என்றும் எழுதி மகிழமுடியும். தமிழ் கற்கும் அயல்நாட்டார் எண்ணிக்கையில் மிக, இமிழ்கடல் வேலி முழுவதும் தமிழ்நாடாக மலர்ந்து மணம் வீசும். இன்று எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொண்டால், நம் தட்டச்சுகளில் இருபதற்கும் மேற்பட்ட தட்டாணிகள் (KEYS) மிச்சமாகும். இருமொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டுவிட்ட நாம் அடைப்புகளில் ஆங்கிலச் சொல்லை, ஆங்காங்கு அமைக்க வகைசெய்யும் அளவில் தம் தமிழ்த் தட்டச்சுப் பொறியிலேயே 26 ஆங்கிலப் பேரெழுத்துகளையும் (Capital letters) இடம் பெறச் செய்து விடலாம்! எழுத்து வடிவத்தில் சீர்திருத்தம் எந்த அளவிற்கு மேற்கொள்வது என்பது பற்றியும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித்துறை ஆய்ந்து வருகிறது.

முடிவுரை :

அறிவிப்புப் பலகையெல்லாம் அருந்தமிழ்ச்
சொல் ஆக்குவதே அன்றி அச்சொல்
குறைவற்ற தொடராகக் குற்றமற்ற
சொல்லாக அமையுமாயின்
மறுவற்றுத் திகழாளோ செந்தமிழ்த்தாய்
தமிழ் மக்கள் மகிழ்ந்திடாரோ?

என்று பாவேந்தரின் ஏக்கப் பெருமூச்சினைப் போக்க முனைந்திருக்கும் நம் தமிழக அரசின் எண்ண வழி நின்று இவ்வாராய்ச்சி மன்றம் செயல்பட்டு வருகிறது.

தமிழ் மொழியின் வளர்ச்சியிலே பல்கலைக் கழகங்களின் பங்கு மிகவும் சிறப்பானதாகும். நாற்றங்காலில் விதைக்கப்பெற்ற நாற்று வயல் வெளிகளில் நடப்பெறுவதைப் போன்றே, கல்லூரிகளில் பயின்று பண்பு பெறும் மாணவர்களே அலுவலகங்களில் அமர்த்தப் படுகின்றனர். கல்லூரிகளில் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் பால் ஆர்வமும் ஆய்வுள்ளமும் மாணவர்கள் பெறுவார்களானல் எதிர் காலத்தில் அலுவலகங்களில் தமிழ்ப் பயிர் செழித்தோங்கி வளர்ந்து நற்பயன் விளைய வாய்ப்பாகும் என்பது வெள்ளிடை மலை.

15

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையின் தமிழகம் - ஊரும் பேரும் ' - ஓர் ஆய்வு

திரு. அ. நாகலிங்கம், எம். ஏ.,
ஆராய்ச்சி மாணவர், தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

பொருட்குறிப்பு

பெயர்த்தோற்றம் 1.1 — *ஊரும் பேரும்* 1. 1.1.—1. 1.2. — *ஊர்ப் பெயராய்வின் இன்றியமையாமை* 1. 1.3 — *ஆங்கில இடப் பெயர்க் கழகம்* 1 1.4— *காலந்தோறும் ஊர்ப் பெயர் வளர்ச்சி* 1. 2.1 — 1.2. 4 — *சேதுப்பிள்ளையின் சீரிய வாழ்க்கை* 1. 3 — *பேராசிரியரின் படைப்புகள்* 1. 4.1 — *நூல் எழுந்த வரலாறு* 1. 4.2 — 1. 4.3 — *தமிழகம் — ஊரும் பேரும் நூல் அமைப்பு.* 1.5 — *தமிழகமும் நிலமும்* 1. 5.1 — 2) *நாடும் நகரமும்* 1. 5.2 — 3) *குடியும் படையும்* 1. 5.3.4) *குலமும் கோவும்* 1. 5.4 — 5) *தேவும் தலமும்* 1. 5.5 — 6) *தமிழகம் அன்றும் இன்றும்* 1. 5.6 — 7) *இணைப்பு* 1.5. 7—8) *பெயரகராதி* 1. 5.8 — *சிறப்பியல்புகள்* 1.6—1) *மொழியியல்* 1. 6.) *வரலாறு* 1. 6.2) *சமயம்* 1. 6.3) *ஊர்ப்பெயர்மாற்றம்* 1. 6.4.) *ஊர்ப்பெயரின் இறுதியில் வரும் சொற்கள்* 1. 6,5) *வடமொழிச் சொற்கள்* 1. 6.6 — *ஊர்ப்பெயர் ஆராய்ச்சிகள்* 1.7.

பெயர்த்தோற்றம்

1. 1 உலகம் தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை உயிரினங்களும் உயிரல் பொருள்களும் காணப்பெறுகின்றன. இவற்றை உயர்திணை, அஃறிணை என இருவகைப் படுத்தினர் பண்டைத் தமிழர்.[1] உயர்திணை என்பது மக்கள் தேவர் நரகர் என்னும் உயிருள்ள பொருள்களையும் அஃறிணை அவரொழிந்த உயிருள்ளன, உயிரற்றன வான பொருள்களையும் சுட்டுவன.[2] இவ்விரு திணைப் பொருள்களுக்குத் தனித்தனியாகவும் பொதுவாகவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை விரிவாகவும் தெளிவாகவும் ஆழமாகவும் விளக்குகின்றது 'தொல்காப்பியம்'.[3] பின்னூலாகிய 'நன்னூல்' முதலியனவும் இதனை அடியொற்றியே செல்கின்றன.

ஊரும் பேரும்

1. 1.1 உயர்திணையாகக் கருதப்படும் மனிதன் தன் இனவளர்ச்சி நெறியில் மக்களுடனும் உறவினருடனும் குடும்பம் குடும்பமாக இணைந்து ஓரிடத்தே வாழத் தொடங்கினான். அவ்விடம் 'ஊர்' என்று அழைக்கப் பெற்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நில அடிப்படையில் பெயர்பெற்ற ஊர்கள் நாளடைவில் மனிதனின் செய்கைத் திறத்தால் செயற்கைப் பெயர் பெறலாயின. மேலும் அவ்விடங்களின் தனித்தன்மை, பொதுத் தன்மைகளுக் கேற்ப ஊர்ப்பெயர்கள் வழங்கப் பெற்றன. முதல் இலக்கண நூலாகக் காணப்பெறும் 'ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியத்'துள் 'ஊரும் பேரும்' என்னும் தொடர் ஈரிடங்களில்[4] பயிலப் பெறுகிறது. இத்தொடரே நாம் காணஇருக்கும் 'தமிழகம்—ஊரும் பேரும்' என்னும் நூலின் பெயருக்கு மூலமாக இருக்கலாம். தொல்காப்பியர் பெயர்களை ஒன்பது வகையாகப் பகுக்கின்றார்.

> நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே ;
> வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே ;
> பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே:
> பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே :
> பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே ;
> கூடிவரு வழக்கின் ஆடியல் பெயரே :
> இன்றிவர் என்னும் எண்ணியல் பெயரொடு
> அன்றி அனைத்தும் அவற்றியல் பினவே.[5]

மேலும், நன்னூல் உரைக்கும் பெயர்களும் உடன் வைத்து எண்ணற் பாலன :

> கிளையென் குழூஉமுதற் பல்பொருள்; திணைதேம்
> ஊர்வா னகம்புற முதல நிலன்; யாண்டு
> இருது மதிநா ளாதிக் காலம்:
> தோள்குழல் மார்புகண் காதுமுத லுறுப்பு;
> அளவறி வொப்பு வடிவு நிறங்கதி
> சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்;
> ஓத லீத லாதிப் பல்வினை;
> இவையடை சுட்டு வினாப்பிற மற்றோடு
> உற்றவை வீறு; நம்பி யாடூஉ
> விடலை கோவேள் குரிசில் தோன்றல்
> இன்னன ஆண்பெய ராகு மென்ப.[6]

தொல்காப்பியர் நிலப்பெயராகிய இடப்பெயரை முதன்மையாக வைத்து எண்ணுதலால் ஊர்ப்பெயர்களுக்கு இவர்தரும் சிறப்பிடம் பெறப்படும். நன்னூலார் இடத்தில் தோன்றும் பொருளுக்கு முதன்மை கொடுத்துப் பொருள்களுக்கு இடமான இடத்தை அடுத்துக் கூறுகிறார். இங்கும் இடத்தின் சிறப்பு விளங்கத் தடையில்லை.

இவை இரண்டுடன் 'பிரிட்டனியக் கலைக்களஞ்சியம்' கூறும் பெயர்களும் வழங்கும் முறையையும் இணைத்து ஒப்புநோக்கற்பாலது. அப்பெயர்கள் வருமாறு: (1) தனிப்பட்ட பெயர்கள்; (2) உண்மையல்லாத தனிப்பட்ட பெயர்கள்; (3) பொருட் பெயர்கள்; (4) இடப் பெயர்கள்; (5) குலமரபுப் பெயர்கள்; (6) நிலையப் பெயர்கள்; (7) பட்டப் பெயர்கள்; (8) தொழிற் சின்னப் பெயர்கள்; (9) வரலாற்று நிகழ்ச்சிப் பெயர்கள்; (10) உருவகமற்ற கருத்துப் பொருட் பெயர்கள்.[7]

1. 1.2 மக்கள் வாழ் இடங்களை 'ஊர்' என்று பொதுவாக அழைத்தாலும் அதற்குப் பல பெயர்கள் வழங்கி வருகின்றன. இவற்றைத் 'திவாகர நிகண்டு' இடப்பெயர்த் தொகுதியில் பின்வருமாறு தொகுத்துரைக்கின்றது:

> பாக்கம், பட்டினம், பதி, நகர், சும்மை,
> பூக்கம், சேரி, புரம், முட்டம், பூண்டி
> அகரம், குடியே, குறிச்சி, கோசரம்
> அகலுள், நொச்சி, இருக்கை, வேலி
> குப்பம், பாடி, குறும்பு, பாழி,
> சிறுகுடி, தண்டை, உறையுள், எயிலொடு,
> வாழ்க்கை, யுட்படுத் திருபத்தேழும்
> நாடிலூரென நவின்றிசி ஞேரே.[8]

இவை யாவும் இயற்கைப் பாகுபாட்டையொட்டி அமைந்துள்ளன. காலப்போக்கிற்கேற்ப நிலத்தை ஆளும் மன்னர், குறுநில வேந்தர், படைத்தலைவர் முதலான பல்வேறு ஆட்சியாளர் பெயரால் ஊர்ப் பெயர்கள் அழைக்கப்படுகின்றன.

ஊர்ப்பெயராய்வின் இன்றியமையாமை

1. 1.3 ஊர்ப்பெயர்கள் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து அவர்தம் நாகரிகம், பண்பாடு முதலியவற்றைப் பின்னையோருக்கு அறிவிக்கும் கண்ணாடியாக விளங்குதலினால் ஊர்ப்பெயர் ஆராய்ச்சியைப் பலதுறையினரும் போற்றிப் பேணி வருகின்றனர். சான்றாகப் பின்வரும் உரையினைக் கூறலாம்:

> " இப்பெயர்கள் மொழியில் ஏற்படும் பொதுமாற்றங்கட்கு உட்பட்டும் உட்படாமலும் நிற்கும் வல்லமை உடையன. மொழியிலுள்ள மற்றச் சொற்களைவிட நிலைபேறுடைய இச்சொற்கள் வரலாற்றோடு நேரடித் தொடர்பு கொண்டு, பழமை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கும் ஆற்றலுடையன. மனிதக் கற்பனைக்கு இடம் தந்து கொண்டே இருந்து, புராணம் நாட்டுக் கதைகள் ஆகியனவற்றைப் படைக்கும் சக்தி வாய்ந்தன. எல்லாவற்றிற்கும்

மேலாக எல்லா மொழிகளையும் எளிதில் ஊடுருவும் பொதுத் தன்மை உடையன. இவ்வாறு மொழியியல், பண்பாட்டியல், நாட்டிலக்கியம் ஆகிய பல துறைகளோடு உறவுடைய பெயர்கள், மொழியில் ஒரு கூருக இருப்பதால் மொழியியலில் உள்ளடங்கும் இயல்பினதாக இருந்தும், சிறப்பியல்புகளால் பெயராய்வு என்ற தனித்துறையாக வளர்ந்திருக்கிறது".[9]

1. 1.4 இங்கிலாந்து நாட்டில் 50 ஆண்டுகளாக 'ஆங்கில இடப் பெயர்க் கழகம்' என்ருேர் அமைப்புச் செயற்பட்டுச் சுமார் 50 தொகுதிகளை வெளியிட்டுள்ளது.[10] மேலும் எயிலர்ட் எக்வெல் எனபவர் 'ஆங்கில இடப்பெயர் அகராதி' ஒன்றினையும் இயற்றியிருக்கிருர். இது இடப்பெயர்த் துறையில் மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது.[11] இவை போன்ற நூல்களின் அடிப்படையில் 'ஆங்கில இடப்பெயர்கள்'[12] போன்ற நூல்கள் பல எழுகின்றன.

காலந்தோறும் ஊர்ப்பெயர் வளர்ச்சி

1. 2.1 பழந்தமிழ் இலக்கியங்களான 'பத்துப்பாட்டு'ள் ஆற்றுப் படைகள் ஐந்து.[13] இவற்றுள் சிறப்பாக இடம் பெறும் புலவர், பொருநன், பாணன், கூத்தன் ஆகியோர் தத்தம் சுற்றத்தோடு மலையும் வனமும், காடும் மேடும், ஆறும் குளமும், வயலும் வளாகமும் கடந்து தலைவன் தங்கியிருக்கும் நகரை அணுகி, அவனிடம் பரிசில் பெற்றுத் திரும்புகிருர்கள். இங்ஙனம் இவர்கள் சென்ற வழியெல்லாம் காணப்பெறும் இடங்களின் பெயர்களையும், மக்கள் வாழ்க்கையையும் வாழும் உயிரினங்களையும் விரிவாகச் சொல்கின்றனர் புலவர் பெருமக்கள். தமிழர்தம் அக, புற வாழ்க்கையைச் செவ்வனே படம் பிடித்துக் காட்டும் 'எட்டுத்தொகை'யும் சிறப்பாக 'அகநானூறு, புறநானூறு'களும் இடப்பெயர்களைப் பரவலாக உரைக்கின்றன.[14] இங்ஙனம் நூல்களுள் சிறுபான்மையாகச் சுட்டப்பெறும் ஊர்ப் பெயர்கள் தம் பெயரால் தனி இலக்கியமாக வளர்வதை 'மதுரைக் காஞ்சி' 'பட்டினப்பாலை' என அழைக்கப்படுவதன் வாயிலாகக் காண்கின்ருேம். முதற்காப்பியமாகத் திகழும் 'சிலப்பதிகார'த்துள் மூவேந்தர் தலைநகரங்களான புகார், மதுரை, வஞ்சி என்னும் பெயர்களால் காண்டங்கள் அமைந்துள்ளன. மேலும் முப்பெரும் நகரங்களின் அமைப்பும் அவற்றிற்குச் செல்லும் வழியும், வழியிடை காணப் பெறும் ஊர்களின் அமைப்பும், மக்கள் வாழ்க்கை முறைகளையும் காண்கிருேம்.[15]

1. 2.2 சைவ சமய குரவர்களும், ஆழ்வார்களும் இடப்பெயர்களை — இறைவன் உறையும் ஊர்ப்பெயர்களைப் பதிகத் தலைப்புகளாகக் கொண்டே[16] திருப்பாடல்களைப் பாடிப் பரவினர். திருஞானசம்பந்தர் 'திருக்ஷேத்திரக்கோவை'[17] திருநாவுக்கரசர் 'க்ஷேத்திரக்கோவை'[18] என்ற பெயர்களிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'ஊர்த்தொகை';

'நாட்டுத்தொகை' என்ற பெயர்களிலும்[19] இறைவன் வதியும் இடங்களைத் தொகுத்துரைக்கின்றனர். வைணவ உலகில் நூற்றெட்டு திருப்பதிக்கோவை[20] நூற்றெட்டு திருப்பதி அந்தாதி,[21] நூற்றெட்டு திருப்பதித் திருப்புகழ்[22] போன்ற நூல்கள் உள்ளன. தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று 'ஊர் வெண்பா'[23]. இதன் இலக்கணத்திற்கு இலக்கியமாகப் பதிஞோராந் திருமுறையுள் ஐயடிகள் காடவர் கோனுயனுர் அருளிய 'க்ஷேத்திரத் திருவெண்பா'[24] (24 பாக்கள்) விளைக் கூறலாம். மேலும் ஊர்களைத் தொகுத்துக்கூறும் 'திருப்பதிக்கோவை'[25] என்பதைப் பாடியோர் யார் என்பது அறியப்படாமல் உள்ளது. சைவப் பெரு நூலான 'திருத்தொண்டர்புராணம்' பாடிய சேக்கிழார் சைவ குரவர்கள் மூவரும் தலம் தலமாகச் சென்று இறைவனைப் பாடி வழிபட்டமையும், ஆங்காங்கே எதிர்ப்பட்ட அடியார்களுடன் நிகழ்ந்த செயல்களையும், அவர்கள் பாடிய பதிகங்களின் துணை கொண்டே விவரித்துச் செல்கின்ருர். இதனுல் தேவாரத்துள் கூறப்பெறும் ஊர்ப்பெயர்களும் செல்லும் வழிகளும் பெரிய புராண வாயிலாக மேலும் விளக்கம் பெறுகின்றன. மேலும் அடியார்கள் வாழ்ந்த நாடு, ஊர்களைப் பற்றியும் ஆங்காங்கே அழகிய முறையில் காட்சிப் படுத்துவதையும் காணலாம்.

1. 2.3 தொண்ணூற்ருறுவகைப் பிரபந்தங்களுள் 'ஊர் இன்னிசை', 'ஊர் நேரிசை' 'ஊர் வெண்பா' என்னும் மூன்றும்[26] 'ஊர்' அடியாக எழுந்துள்ளன. மேலும் குறவஞ்சி, பள்ளு, கலம்பகம், அந்தாதி இரட்டை மணிமாலை, உலா முதலானவைகளும் ஊர்ப்பெயர்களைப் பெற்று அவற்றின் சிறப்பினைப் போற்றுகின்றன.

1. 2.4 இங்ஙனம் பாட்டு வடிவில் வளர்ந்து வந்த ஊர்ப்பெயர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உரைநடையிலும் இடம் பெறலாயின. மாவட்டக் கையேடு,[27] விவரத்தொகுப்புச் சுவடி,[28] தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள்,[29] பழமைச் சின்னங்கள்,[30] முதலியன தோன்றின. இக்காலத்தே அறிஞர் பலர் 'சிவஸ்தல மஞ்சரி',[31] 'நூற்றெட்டுத் திருப்பதிப்ரபாவம்' முதலிய நூல்களை எழுதினர். இங்ஙனம் காலந்தோறும் வளர்ந்து வந்த இடப்பெயர் விளக்கங்கள் இந்நூற்ருண்டில் வாழ்ந்த டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் பேச்சு எழுத்து வாயிலாக இலக்கிய வண்ணம் பூசப்பெற்று நாடெங்கும் புத்துணர்வை விளைவித்தன.

சேதுப்பிள்ளையின் சீரிய வாழ்க்கை

1. 3. திக்கெலாம் புகழ் திருநெல்வேலி மாவட்ட இராசவல்லிபுரத்தில் பெருமாள் பிள்ளைக்கும் சொர்ணம்மாளுக்கும் 1896ல் பன்னிரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார்; சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் பயின்று சிற்ருசிரியரானுர்; அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினுர்; சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்தவர்தான் சொல்லின்

செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை. பல்கலைக்கழகத்தில் பணி புரிந்த கால் நூற்றாண்டில் தமிழ் நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் அரும்பெரும் தொண்டுகள் ஆற்றினார். மேலும் தாய்மையின் சிறப்பை உலகம் என்றும் போற்றும் வண்ணம் அன்னை சொர்ணம்மாள் நினைவாகச் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் (மதுரைப் பல்கலைக்கழகம் தோன்றாத காலத்தில்) அறக்கட்டளைகளை நிறுவினார். 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்னும் வான்மறைக்கிணங்க, பேராசிரியர் பெருவாழ்வு வாழ்ந்து 24. 4. 61ல் பருவுடல் நீத்து நுண்ணுடல் எய்தினார்.[33]

பேராசிரியரின் படைப்புகள்

1. 4.1 டாக்டர் அவர்கள் 1926ஆம் ஆண்டு முதல் 1961ஆம் ஆண்டு வரை இயற்றிய நூல்களும் கட்டுரைகளும் பல.[34] அதனை இன்றைய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் 'ஆராய்ச்சிக் கட்டுரை'களில் விரிவாகக் காணலாம். இவர் சேதுப்பிள்ளை நூல்களை (1) ஆராய்ச்சிக் கட்டுரைகள் (2) வாழ்க்கை வரலாறுகள் (3) பதிப்புகள் என மூவகையாகப் பாகுபாடு செய்கின்றார்.[35] இவற்றுள் முதல் வகையைச் சேர்ந்ததும் கால வரிசையில் எழுதப்பட்ட நூல்களுள் பத்தாவதாகக் காணப்பெறுவதும்தான் 'தமிழகம்—ஊரும் பேரும்'. 1946ல் எழுதப்பெற்ற இது பிள்ளையவர்களின் நூல்களுள் 'வாழ்நாள் பணி நூலா'கத் திகழ்கிறது.[36] 1946ஆம் ஆண்டு மதுரையில் தமிழ்ப்பெரியார் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் மாநாடொன்று நடைபெற்றது. அதில் 'ஊரும் பேரும்' என்னும் நூல் ஒரு தலைசிறந்த ஆராய்ச்சி என்பதற்காக அதற்கு முதன்முதலாகச் சென்னை அரசு தமிழ் வளர்ச்சிக்கழக வாயிலாகப் பரிசளித்துச் சிறப்பித்தார்.[37] இத்தகைய நூலுக்குத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. முகவுரை நல்கியுள்ளார். அதில்,

> ஊரும் பேரும் என்னும் இந்நூல் வரலாற்றின் பாற்பட்டது. இவ்வரலாறு தமிழ் நாட்டின் ஊரையும் பேரையும் விளக்குங் கலங்கரை. ஊரும் பேரும் என்னும் தலைப்பு விழுமியது; அஃது ஆழ்ந்த பொருண்மையுடையது[38]

என்று பாராட்டுகின்றார்.

நூல் எழுந்த வரலாறு

1. 4.2 'தமிழகம்—ஊரும் பேரும்' என்னும் இந்நூல் எழுதுவது அவ்வளவு எளிதன்று. வரலாற்றறிவும் இலக்கிய இலக்கணமொழிப் புலமையும் பல்வேறு இடங்களுக்குச் சென்று பழகி அறியும் அனுபவமும் இதற்கு மிக மிக இன்றியமையாதன. ஊர் பற்றியும் பெயர் பற்றியும் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கையாளுகின்றன. தொல்காப்பியப் பொருள் அகத்திணையியலில் நால்வகை

நிலப்பாகுபாடும் பாலை நில இயல்பும் கூறப்படுகின்றன. மேலும் முதல் கரு உரி என்ற பாகுபாடும் வகுக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். முதற்பொருளும் கருப்பொருளும் ஊரும் பேரும் ஆராய்ச்சிக்கு மூலமாகத் திகழ்கின்றன. மேலும் சங்க இலக்கியங்களிலும் சிறப்பாகவும் பொதுவாகவும் ஊர்ப்பெயர்களைப்பற்றிக் கூறப்பட்டிருந்தாலும், மிகுதியாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் அழகாகவும் காணப்படுவது மூவர் தேவாரத்திலேதான். இதற்குக் காரணம் மூவரும் ஊர் ஊராகச் சென்று இறைவனைப் பாடியமையே. இறைவனைப் பாடுதலே அவர்களுக்கு உரிய பொருளாக இருந்தாலும் முதலும் கருவுமான நிலமும் மக்களும் அமைந்துள்ள பாங்கினை எடுத்துரைத்தால்தான் அவ்வூர்களில் கடவுள் வழிபாடு சிறக்கும். அந்த முறையில் ஊர் அமைப்பையும் பெயரையும் குறிப்பிட்டு ஊருக்கும் பெயருக்கும் வடிவம் கொடுத்து என்றும் அழியாப் பேரிலக்கியமாக்கிவிட்டனர் தேவாரம் பாடிய மூவரும். இவர்கள் செய்த பணியினைத் தொடர்ந்து பலர் ஆற்றி வருவது போற்றற்குரியது.

பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய நம் பேராசிரியர், பணியின் நிமித்தம் பல்வேறு இடங்களையும் மனிதர்களையும் காணவேண்டியிருந்தார். அவ்வந் நாட்டார் தத்தம் ஊர்களுக்குக் கொடுக்கும் இன்றியமையாப் பெயர்களின் சிறப்பை உணர்ந்தோ, அன்றி ஆங்காங்கே காணப்பட்ட விரிந்த வடிவப் பெயர்கள் உள்ளத்தில் மனக்கலக்கத்தை விளைவித்து ஊர்ப்பெயர் செம்மை பெறவேண்டும் என்ற வேட்கையாலோ, ஊர்ப்பேர் ஆராய்ச்சியை மேற்கொண்டார் எனத் தோன்றுகிறது.

1. 4.3. சொல்லின் செல்வர் என்று சிறப்பாக அழைக்கப்பெறும் பிள்ளையவர்கள் சொல்லின்மீது கொண்ட தணியாத ஆர்வமே 'சொற்களும் அவற்றின் பொருட் சிறப்பும்,' 'செந்தமிழும் கொச்சைத் தமிழும்', 'அனைத்திந்தியக் கிழக்குக் கலை மாநாட்டுச் சொற்பொழிவுகளுமாக'[39] எழுந்தன எனலாம். மேலும், இவ்வார்வம் இவர் இயற்றிய நூல்களுள் ஆங்காங்கே பொங்கித் ததும்புவதைக் காணலாம்.[40] இங்ஙனம் சேதுப்பிள்ளையவர்கள் பேரவாவுடன் ஊர்ப்பெயர்களை ஆராயத் தொடங்கினர். அப்பொழுது தமிழ், இலக்கிய இலக்கணங்களும் நிகண்டுகளும், புராணங்களும் மாவட்டக் கையேடு, விவரத் தொகுப்புச் சுவடிகளும், கல்வெட்டுத் தொகுதிகளும் இவருக்குத் துணை புரிந்தன. இத்துணையளவு பரந்த நூற்பயிற்சி இல்லாமல் 'தமிழகம்—ஊரும் பேரும்' என்னும் ஓர் அரிய ஆராய்ச்சி நூலைத் தயாரிக்க இயலாது.[41] இங்ஙனம் டாக்டர் அவர்கள் பயன்படுத்திய நூல்கள் தமிழில் நாற்பத்தொன்பதும்[42] ஆங்கிலத்தில் பத்தொன்பதுமாகக்[43] காணக் கிடக்கின்றன.

'தமிழகம் — ஊரும் பேரும்' நூல் அமைப்பு

1. 5. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'தமிழகம்-ஊரும் பேரும்' என்னும் பெருநூல் எட்டுப் பிரிவுகளைக் கொண்

டுள்ளது. அவையாவன : (1) தமிழகமும் நிலமும், (2) நாடும் நகரமும் (3) குடியும் படையும் (4) குலமும் கோவும் (5) தேவும் தலமும் (6) தமிழகம்—அன்றும் இன்றும் (7) இணைப்பு (8) பெயரகராதி.

(1) **தமிழகமும் நிலமும்**

1. 5.1. இப் பிரிவில் தமிழகத்தில் காணப்பெறும் நிலத்தின் இயல்பைப் பண்டைத்தமிழர் வகுத்த ஐவகை நிலப் பாகுபாட்டைப் பின்பற்றிக் குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல், பாலை என்று வகைப் படுத்திக்கொண்டார். ஒவ்வொரு நிலப்பெயருக்கேற்ப அவ்வந் நிலங்களில் வழங்கும் பல்வேறு பெயர்களையும், பிற வழக்காறுகளைக் கொண்டு வழங்கும் ஊர்ப்பெயர்களையும் எடுத்துரைக்கிறார். குறிஞ்சி நிலம், மலை நிலம். மலைக்குக் கோடு அசலம் முதலான பல பெயர்கள் உள. இச்சொற்களைக் கொண்டு விளங்கும் ஊர்ப்பெயர்கள் வருமாறு :

கோடு :

திருச்செங்கோடு

அசலம் :

விருத்தாசலம்

இங்ஙனமே ஏனைய நால்வகை நிலங்களைப் பல்வேறு வகையில் குறிப்பிடும் சொற்களைக் கொண்டு வழங்கும் ஊர்ப்பெயர்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். எடுத்துக்காட்டாக,

முல்லை :

பாடி - வேலப்பாடி

மருதம் :

கூடல் - திருமுக்கூடல்

நெய்தல் :

பாக்கம் - சேப்பாக்கம்

பாலை :

பாலை - திருக்கழிப்பாலை

(2) **நாடும் நகரமும்**

1. 5.2. இப் பிரிவில் சுருக்கமாக ஊர்ப்பெயர்களைக் கூறிச்செல்கின்றார். தமிழ்நாட்டின் பண்டைச் சிறப்பு மிக்க நகரங்களான

உறந்தை, மதுரை, வஞ்சி, காஞ்சி, கங்கைகொண்ட சோழபுரம் முதலியவற்றையும் தற்காலத்தில் விரிவுபெற்றுவரும் சென்னை முதலான நகரங்களைப் பற்றியும் அவற்றின் பெயர் வரலாற்றையும் விளக்குகின்றார்.

(3) **குடியும் படையும்**

1. 5.3. படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு[44]

என்று வள்ளுவப் பெருந்தகை அரசனுக்கு வேண்டிய அங்கங்கள் ஆறு என்று கூறினார். அவ் அங்கங்களுள் முதலிரண்டு குடியும் படையும், மக்கள் வாழும் இடங்களையும், படைகள் தொடர்பாகக் காணப்பெறும் நிலங்களையும், சுட்டிக்காட்டிப் பெயர் வழக்காற்றை விளக்குகிறார். சான்றாக மக்கள் வாழும் இடங்கள் சேரி, பேட்டை என்று பலவாறு அழைக்கப்பெறுகின்றன. இச் சொற்களைக் கொண்டு விளங்கும் ஊர்ப் பெயர்கள் வருமாறு :

சேரி - புதுச்சேரி

பேட்டை - பறங்கிப்பேட்டை

அடுத்து, படைப் பிரிவில் அரண், களங்களைப் பற்றி வருகின்ற சொற்கள் எவ்வாறு ஊர்ப்பெயர்களாகக் கருதப்படுகின்றன என்பதை எடுத்துரைக்கிறார். அவற்றுட் சில வருமாறு :

எயில் - பேரெயில்

பாளையம் - கோபிசெட்டிப்பாளையம்

(4) **குலமும் கோவும்**

1. 5.4. இப்பகுதியுள், நாடாண்ட மன்னர்கள், குறுநில வேந்தர்கள், படைத்தலைவர்கள், வள்ளல்கள், புலவர்கள், முதலானவர்களின் பெயர்களைக் கொண்டு விளங்கும் ஊர்ப்பெயர்களைச் சுவைபடத் தொகுத்துக் கூறுகின்றார். அவற்றுட் சில வருமாறு :

வேந்தன் :

மகேந்திரவர்மன் - மகேந்திரவாடி

குறுநில மன்னன் :

அதிகமான் - அதமன்கோட்டை

படைத் தலைவன் :

கான்சாகிப் - கான்சாபுரம்

வள்ளல் :

ஆய் - ஆய்குடி

புலவர் :

பிசிராந்தையார் - பிசிர்

(5) **தேவும் தலமும் :**

1. 5. 5. இத்தலைப்பின் பத்தொன்பது உட்பிரிவுகளில் தமிழ் நாட்டு இடப்பெயர், ஊர்ப்பெயர்களின் வரலாற்றைத் தெளிவாக வும், சுருக்கமாகவும் சான்றுகளுடன் காட்டுகிறார். அவற்றுட் சில வருமாறு :

1. மலையும் குன்றும் - திருவண்ணுமலை, திருக்கழுக்குன்றம்.
2. ஆறும் குளமும் - திருவையாறு, பெருங்குளம்.
3. துறையும் நெறியும் - திருவாவடுதுறை, செந்நெறி.
4. அட்டானமும் அம்பலமும் - வீரட்டானம், பொன்னம்பலம்.
5. மாடமும் மயானமும் - தூங்கானை மாடம், கச்சி மயானம்.
6. தலமும் கோவிலும் - வெள்ளடை, காரோணம்.
7. கோயிலும் வாயிலும் - சங்கரநாயினுர் கோயில், திருவிட வாசல்.
8. தளியும் பள்ளியும் - மேற்றளி, சிவப்பள்ளி.
9. ஈச்சுரம் - நந்தீச்சுரம்.
10. அரசரும் ஈச்சுரமும் - இராஜராஜேச்சுரம்.
11. திருமேனியும் தலமும் - திருமேனிநாதபுரம், அவிநாசி.
12. இறையவரும் உறைவிடமும் - பிள்ளையார்பட்டி, திருச் செங்கோடு.
13. திருவாக்கும் ஊர்ப்பெயரும் - சிந்துபூந்துறை, காளையார் கோவில்.
14. இதிகாசமும் ஊர்ப்பெயரும் - திருவேட்களம், பாடலிபுரம்.
15. ஊர்ப்பெயரும் வழக்காறும் - மயிலாடுதுறை, மாயவரம்.
16. வைப்புத் தலங்கள் - குண்டையூர்.
17. இறையும் அறமும் - திருச்சிற்றம்பலம், அகரம்.
18. திருமாலும் திருப்பதிகளும் - திருவிடவெந்தை, சிங்கப் பெருமாள் கோயில்.
19. சமணமும் சாக்கியமும் - திருநறுங்கொண்டை, அறப்பணஞ் சேரி.

(6) **தமிழகம் - அன்றும் இன்றும்**

1. 5.6 தமிழகம் அன்று இருந்த நிலையையும் பின்னர் வடமொழிக் கலப்பினுல் ஏற்பட்ட பெயர் மாற்றங்களையும் சுட்டிக் காட்டுகிருர். மேலும் தமிழர் பிற நாடுகளுக்குச் சென்று தமிழ்க் கொடியைப் பறக்க விட்டதையும் இலக்கியச் சான்றுகளுடன் விளக்குகிருர்.

(7) **இணைப்பு**

1. 5.7 இதனுள் தேவாரப் பாடல் பெற்ற தலப் பெயர்களுடன் இக்கால வழக்கா ற்றையும் எடுத்துரைக்கின்ருர். அவ்வூர்கள் எப்பகுதியைச் சார்ந்தன என்பதையும் இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகளையும் பெயர் வேறுபாடுகளையும் பட்டியலிட்டுக் காட்டுகின்ருர். இதில் காணும் தலங்களின் தொகை 453.

(8) **பெயரகராதி**

1. 5.8 இந்நூலுள் காணப்பெறும் ஊர்ப்பெயர்களைப் 'பெயரகராதி' என்னும் தலைப்பில் தொகுத்துக் கூறுகின்ருர். இதில் காணும் ஊர், இடப்பெயர்களின் எண்ணிக்கை 1377.

சிறப்பியல்புகள்

1.6 'தமிழகம் — ஊரும் பேரும்' என்ற இடப்பெயர் நூல் வாயிலாக மொழியியல், வரலாறு, சமயம் முதலிய பலசெய்திகளை அறிந்து கொள்கிறேம்.

மொழியியல்

1. 6.1 மக்கள் பழக்க வழக்கங்களுக்கேற்ப அவ்வப்பொழுது ஏற்படும் ஆட்சிக்கேற்ப காலந்தோறும் இடப்பெயர்கள் மாறுதல் அடைகின்றன. இம்மாற்றங்கள் அவ்வக்கால மொழி நிலைகளை நமக்குக் காட்டுகின்றன. பொதுவாக ஒலி, சொல், தொடர் மாற்றங்கள் நிகழ்கின்றன என்பர்.[45] அவை வருமாறு: ஒலி மாற்றம்:

மழவர் பாடி—மழபாடி (முயற்சிச் சுருக்கம்)
பல்லவபுரம்—பல்லாவரம் (இசை நிறை)

சொல்மாற்றம்:

வானவன்மாதேவி — மானுமதி
மாறமங்கலம் — மாறனேரி

தொடர் மாற்றம்:

மாமல்லபுரம் — மகாபலிபுரம்
ஒத்தைக்கல்மந்து — ஊட்டி

வரலாறு

1. 6.2 தொடக்கத்தில் இயற்கையையொட்டி எழுந்த ஊர்ப் பெயர்கள் நாளடைவில் அந்நிலத்தை ஆண்ட மன்னர்களின் பெயரால் வழங்கலாயின; இங்ஙனம் வழங்கும் ஊர்ப்பெயர்கள் அந்நாட்டு வரலாற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன :

மாமல்லபுரம் :

> மாமல்லன் என்னும் மறுபெயருடைய நரசிங்கவர்மன் தொண்டை நாட்டின் பண்டைத் துறைமுகமாகிய கடல் மல்லையைத் திருத்தினன் ; கடற்கரையில் கற்கோயில்களை ஆக்கினன். அவன் காலத்தில் மல்லைநகரம் மாமல்லபுரம் என்று பெயர் பெற்றது போலும், அது பிற்காலத்தில் மகாபலிபுரமென மருவிற்று.[46]

சமயம்

1. 6.3 பண்டைச் சமயங்களான சைவ, வைணவக் கடவுளர் நாமங்களைக் கொண்ட ஊர்கள் எண்ணில. மேலும் பிற சமயத்தார் தொடர்பாக ஊர்ப்பெயர்கள் மாறுதலடைந்து வழங்குகின்றன. சமயப் பெயர்கள் பூண்ட சில ஊர்கள் வருமாறு :—

சைவம் - சிவபுரம்; சிதம்பரம்
வைணவம் - திருக்கண்ணமங்கை; சீராம விண்ணகரம்
சமணம் - திருநாதர்குன்றம் ; திருநறுங்கொண்டை.
பௌத்தம் - புத்த மங்கலம்
கிறித்துவம் - செயின்ட் தாமஸ்மவுண்ட், மெய்ஞ்ஞானபுரம்
மகம்மதியம் - கான்சாபுரம்.

ஊர்ப்பெயர் மாற்றம்

1. 6.4 ஊர்ப்பெயர்கள் சில மேனாட்டாரால் மாற்றமுற்றன.

அவற்றுள் சில :

பழவேற்காடு - புலிக்காடு
புதுச்சேரி - பாண்டிச்சேரி
ஒத்தக்கல்மந்து - ஊட்டி

ஊர்ப்பெயரின் இறுதியில் வரும் சொற்கள்

1. 6.5 சில சொற்களை இறுதியாகக் கொண்டு நூற்றுக்கணக்கான ஊர்ப்பெயர்கள் காணப்பெறுகின்றன. சில வருமாறு :

காடு - ஆர்க்காடு

ஆறு - அடையாறு
தாங்கல் - வேடந்தாங்கல்

வடமொழிச் சொற்கள்

1. 6.6 வடமொழிச் சொற்கள் பல தமிழோடு உறவு கொண்டு தமிழ்ப் பெயர்களைத் தமதாக்கிக் கொண்டு ஊர்ப்பெயர்களாக வழங்கு கின்றன. அவற்றுள் சில :

கிரி, அசலம், ஆரண்யம், சமுத்திரம்.

ஊர்ப்பெயர் ஆராய்ச்சிகள்

1. 7 தமிழகத்தில் ஊர்ப்பெயர் ஆய்வு செய்தவர்களுள் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்கள் சிறப்பிடம் பெறுகிறார்.

> தமிழில், ஆராய்ச்சியும், அறிமுகமும், சுவை நயமும் கலந்த பாணியில் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை எழுதிய ஊரும் பேரும் என்ற நூல் குறிப்பிடத்தக்கது.[47]

என்னும் கருத்து இதனை மேலும் வலியுறுத்தும். இவர் கூறிய அத்துணை அளவு விரிந்து பரந்து நுணுகிச் சென்று ஆய்ந்துரைத்தோர் மிகச் சிலர். சில ஆண்டுகளாக அறநிலையப் பாதுகாப்பு நிலையத்தார் சிறப்பான கோயில்களின் வரலாற்றை அந்தக் கோயில் நிர்வாகத்தைக் கொண்டே தனிநூலாக வெளிவர ஊக்கம் தந்துள்ளனர். இவை பெரும்பாலும் புராண வரலாறுகளுக்குச் சிறப்பிடம் தருகின்றன. என்றாலும் ஊர்ப்பெயர் விளக்கமும் அவற்றுள் இல்லாமல் இல்லை. ஒவ்வொரு பகுதியில் வாழ்வாரும் தத்தம் நிலப்பகுதியில் தாம் அறிந்து பழகி வரும் ஊர்கள் முதலியனவும் வரலாற்றுச் சின்னங்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் இவ்வகை நூல்கள் துணை செய்யும்.

1. 7.1 ஊர்ப்பெயர் அடிப்படையிலே நாட்டு வரலாறு, நாடாண்டவர் வரலாறு, பேரூர் முதல் சிற்றூர் வரை வாழ்ந்த மக்களின் பண்பாட்டு வரலாறு என்று இன்னோரன்ன பல செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன. பல்கலைச் செய்திகளையும் ஊர்ப் பெயர்கள் கொண்டிருப்பதால் ஊர்ப்பெயர் ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற வேண்டியதாகின்றது. இப்பொழுது மேற்பட்ட (டாக்டர் போன்ற) ஆராய்ச்சிகளுக்காகவும் ஊர்ப்பெயர் ஆராய்ச்சிகள் எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.[48] மேலும் தமிழக மாவட்ட வரலாறுகள் சில முக்கிய நகர வரலாறுகள் முதலியன தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது தமிழகத்தில் 'தமிழக இடப் பெயர்க்கழகம்' இருக்க வேண்டியது மிக மிக அவசியம். அதன் வழியாகத் திட்டமிட்டுச் சீரிய முறையில் நூல்கள் பல வெளியிடலாம்.

அடிக்குறிப்பு

1. தொல். சொல். இளவி. 1.
2. நன்னூல். சொல். பெயர். 4.
3. தொல். சொல். பெயரியல்.
4. தொல். பொருள். களவு. 11 ; தொல். பொருள். மரபு. 76.
5. தொல். சொல். பெயர். 11.
6. நன்னூல். சொல். பெயர். 19
7. Encyclopaedia Britannica, Vol. 15, p. 1157
8. சேந்தன் திவாகரம். பக் : 108
9. ஆய்வு மலர். பக். 339
10. ௸ பக். 352
11. English Place—Names, Preface.
12. English Place—Names.
13. (அ) திருமுருகாற்றுப்படை ; (ஆ) பொருநராற்றுப்படை (இ) சிறுபாணாற்றுப்படை ; (ஈ) பெரும்பாணாற்றுப்படை ; (உ) மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை).
14. அகநானூறு, முன்னுரை ; புறநானூறு பக். 85.
15. (அ) இந்திரவிழவூரெடுத்த காதை ; (ஆ) நாடுகாண் காதை ; (இ) காடுகாண் காதை :
    (ஈ) ஊர்காண்காதை ; (உ) நீர்ப்படைக்காதை.
16. (அ) திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம், பக். 1—8.
    (ஆ) திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், பக். 21—30.
    (இ) சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், பக். 9—10.
    (ஈ) பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்.
17. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம், பக். 282—283.
18. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், பக். 461—463.
19. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், பக். 304—306 ; 297—299.
20, 21, 22. நாலாயிர திவ்விய பிரபந்தம், பக். 825.
23. தொன்னூல் விளக்கம், பக். 204.
24. பதினோராந் திருமுறை, பக். 25—28.

25. பெரியபுராணம், பக். 10—12.

26. தொன்னூல் விளக்கம், பக். 204.

27. District Manual.

28. District Gazetteer.

29. South Indian Inscriptions.

30. Antiquities

31. தமிழ்நூல் விவர அட்டவணை, இரண்டாம் தொகுதி, முதல் பகுதி, பக். 383.

32. ஷை முதல் தொகுதி, முதல் பகுதி, பக். 202, 203.

33. டாக்டர் சேதுப்பிள்ளை—(நூல்).

34. ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 251—256.

35. ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 224

36. ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 246

37. ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 246

38. தமிழகம்—ஊரும் பேரும், முகவுரை.

39. ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 251—256.

40. (அ) வேலும் வில்லும், பக். 13, 24 ; (ஆ) தமிழகம்—அலையும் கலையும், பக் : 12, 77, 141.

41. English Place—Names, Preface.

42. (1) தொல்காப்பியம் ; (2) கல்லாடம் ; (3) நன்னூல் ; (4) சூடாமணி நிகண்டு ; (5) பிங்கல நிகண்டு ; (6) திருமுருகாற்றுப்படை ; (7) சிறுபாணாற்றுப்படை ; (8) மதுரைக் காஞ்சி ; (9) பட்டினப்பாலை ; (10) புறநானூறு ; (11) திருக்குறள்; (12) சிலப்பதிகாரம்; (13) ஐங்குறுநூறு ; (14) மணிமேகலை; (15) நாலடியார்; (16) தேவாரம்; (17) நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ; (18) திருவாசகம் ; (19) பெரிய புராணம்; (20) கம்பராமாயணம் ; (21) பெருந்தொகை ; (22) திருவிசைப்பா ; (23) நளவெண்பா ; (24) கந்தபுராணம் ; (25) காஞ்சிப்புராணம் ; (26) திருவாரூர்ப் புராணம் ; (27) திருவிளையாடற்புராணம் ; (28) திருப்புகழ் ; (29) மதுரை மீனாட்சியம்மை குறம், (30) வாட்போக்கிக் கலம்பகம் ; (31) குற்றாலக் குறவஞ்சி ; (32) முக்கூடற்பள்ளு ; (33) சிவஸ்தல மஞ்சரி ; (34) கொங்குமண்டல சதகம் ; (35) சேரன் செங்குட்டுவன் ; (36) தமிழ் வரலாறு ; (37) ஆராய்ச்சித் தொகுதி ; (38) இந்தியர் வரலாறு ; (39) சோழர்; (40) முதல் இராசராச சோழன் ; (41) பாண்டியர் வரலாறு (42) தேவாரத் திருமுறை ; (43) சம்பந்தர் தேவாரம் ;

(44) ஆழ்வார்கள் காலநிலை; (45) சோமீச்சுரதேவர் திருத்தல தேவர் வரலாறு; (46) புலவர் புராணம்; (47) சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்: (48) மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் (இரு பகுதிகள்) (49) சாசனத் தமிழ்க்கவி சரிதம்.

43. (1) South Indian Inscription; (2) Madras Epigraphical Reports; (3) Inscriptions of the Madras Presidency; (4) Manual of the administration of the Madras Presidency; (5) Trivancore Archaeological series; (6) South Arcot Gazetteer; (7) Trichirapoly Gezetteer; (8) Tirunelveli Gazetteer; (9) Journal of the Geographical Association; (10) Sewell's Antiquities; (11) North Arcot Manual; (12) South Indian Shrines; (13) Pallavas, (14) The Pandyan Kingdom; (15) Tirupparuthikunram and its Temples; (16) History of Madras; (17) Comparative grammar of Dravidian Languages; (18) The Chronology of the Early Tamils; (18) Bess'es "Life of Beschi."

44. திருக்குறள், 381.

45. ஆய்வுக்கோவை, பக். 671.

46. ஊரும் பேரும், பக். 109.

47. ஆய்வு மலர், 354.

48. டாக்டர் மொ. ஆ. துரை அரங்கசாமி தம் எம்.ஓ.எல்., பட்டத்திற்குச் சங்ககாலச் சிறப்புப்பெயர்கள் என்ற தலைப்பில் ஆய்ந்து பட்டம் பெற்றார் (1948). இப்பொழுது சிறப்பாக கி. நாச்சிமுத்து என்பவர் (கேரளப் பல்கலைக் கழகம்) 'கோயம்பத்தூர் மாவட்ட இடப்பெயர்கள்' என்னும் தலைப்பில் தம் டாக்டர் பட்ட ஆய்வேட்டை இவ்வாண்டு (1973) கொடுத்துள்ளார்.

மேற்கோள் நூற்கோவை

தமிழ் :

1. தொல்காப்பியம்: கழக வெளியீடு, சென்னை, 1967.
2. நன்னூல்: கழக வெளியீடு, மறுபதிப்பு, 1962.
3. சேந்தன் திவாகரம், கழக வெளியீடு, சென்னை, 1958.
4. ஆய்வு மலர், தொகுதி 1 (தொகுப்பு), சுப்பிரமணியன், ச.வே., ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1972.
5. பத்துப்பாட்டு, சாமிநாதையர், டாக்டர் உ.வே., சென்னை, ஆறும் பதிப்பு, 1961.
6. அகநானூறு, ராஜகோபாலாசார்யன் பதிப்பு, சென்னை, அட்சய ஆண்டு.

7. புறநானூறு, சாமிநாதையர், டாக்டர் உ. வே., சென்னை, 1963.

8. சிலப்பதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1968.

9. திருஞானசம்பந்தமூர்த்திகள் தேவாரம், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1931.

10. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1971.

11. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை, 1935.

12. நாலாயிர திவ்விய பிரபந்தம், திருவேங்கடத்தான் திரு மன்றம், சென்னை, 1973.

13. தொன்னூல் விளக்கம், வீரமாமுனிவர், அடிசன் அண்டு கோ., சென்னை, இரண்டாம் பதிப்பு, 1891.

14. பதினோராந்திருமுறை, ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, மூன்றும் பதிப்பு, துந்துபி ஆண்டு.

15. பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம், கலியாணசுந்தர முதலியார், திரு. வி. முருகவேள் புத்தக சாலை, சென்னை, மறுபதிப்பு, 1934.

16. தமிழ்நூல் விவர அட்டவணை, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், தமிழக அரசு வெளியீடு, 1961.

17. டாக்டர் சேதுப்பிள்ளை, நவநீத கிருட்டிணன், அ.க., கழக வெளியீடு, சென்னை, 1961.

18. ஆராய்ச்சிக் கட்டுரைகள், சஞ்சீவி, டாக்டர் ந., பாரி நிலையம், சென்னை, 1970.

19. தமிழகம் — ஊரும் பேரும், சேதுப்பிள்ளை, ரா.பி., சென்னை, 1950.

20. வேலும் வில்லும், சேதுப்பிள்ளை, ரா.பி. 1944.

21. தமிழகம் அலையும் கலையும், சேதுப்பிள்ளை ரா.பி., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1958.

22. கடற்கரையிலே, சேதுப்பிள்ளை ரா.பி., ஸ்டார் பிரசுரம், சென்னை, 1950.

23. ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, 1973.

ஆங்கிலம் :

1. Encyclopaedia Britannica, Vol. 15, 1969.
2. English Place - Names, Cameron, Kenneth, ME THUEN & CO,, LTD.,

16

திரு. வி. க.-வின் அரசியல் நூல்கள்

பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார், எம். ஏ.,
சிறப்புப் பேராசிரியர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை.

தோற்றுவாய் :

அன்பார்ந்த தலைவர் அவர்களே! டாக்டர் சஞ்சீவி அவர்களே! பெரியோர்களே! தாய்க்குலங்களே! கடந்த சில ஆண்டுகளாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் ஆற்றிவரும் அரிய பணிகளைக் கண்டு யான் மகிழ்ச்சி அடைகின்றேன். தற்போது சென்னைப் பல்கலைக்கழகம் மக்களோடு நெருங்கித் தொடர்பு கொண்டுள்ளது, பாராட்டத்தக்கது. இதுவரை மூன்று கருத்தரங்குகள் நடைபெற்றன. பல ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் அவற்றில் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் பேசப்பட்ட பொருள்களைக் கேட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்து பயன்பெற்றனர். பல்கலைக் கழகம் தற்போது பல அரிய தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளது. பலரும் அந்நூல்களை வாங்கிப் படித்துப் பயன்பெறுகின்றார்கள். எனவே இத்தகைய நல்ல தொண்டுகள் நடைபெறுதற்கு உறுதுணையாக உள்ள பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கட்கும் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கட்கும் நாம் அனைவரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

அன்பர்களே! யான் இங்குப் பேசுவதற்குக் கொடுக்கப்பட்டபொருள் "திரு.வி.க. அவர்களின் அரசியல் நூல்கள்" என்பதாகும். அன்னாரது அரிய நூல்களைப் பற்றிப் பேசும் முன்னர் அவர்களது அன்பினையும் ஆசியினையும் யான் 1934 முதல் 1953 வரையில் 20 ஆண்டுகள் வரை பெற்றிருந்தேன் என்பதை ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன். யான் 1934-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வகுப்பில் (B.A. Hons.) தேர்ச்சி பெற்றேன். எங்கள் ஆசிரியப் பெருந்தகை, திருவாளர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் என்னை உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களுக்கு, அறிமுகப்படுத்தி "இச்சைவ இளைஞரை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார். அந்த ஆண்டிலேயே (1934) திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் என்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தின் செயற்குழு உறுப்பினனாகச் சேர்த்தார்.

எனவே 1934 முதல் யான் திரு.வி.க.வுடன் நெருங்கிப் பழகி அவரது அன்பினையும் ஆசியினையும் பெற்றேன். அவர் என் போன்றோர்க்கு வழி காட்டும் வான்பொருளாக விளங்கினார்கள். திரு வி.க. அவர்கள் தமது அரிய நூல்களின் வாயிலாகவும் சொற்பொழிவுகளின் வாயிலாகவும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்", "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "என் கடன் பணிசெய்து கிடப்பதே" போன்ற அரிய கருத்துக்களையும், சமரச சன்மார்க்க நெறியினையும் மக்கள் உள்ளத்தில் பதியும்படி செய்தார். தாம் அவ்வாறு பிறர்க்குக் கூறியது மட்டுமன்றித் தாமே சமரச சன்மார்க்க நெறியில் வாழ்ந்தும் காட்டினார். நாடு, மொழி, சமயம், சமூகம் முதலிய பல்வேறு துறைகளில் அவர் தொண்டு ஆற்றினார்.

அவரது நூல்கள் :

திரு.வி.க. அவர்கள் ஏறத்தாழ 50 நூல்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதிய நூல்களை உரைநடை நூல்கள், செய்யுள் நூல்கள் என இரு கூறுகப் பிரிக்கலாம். உரைநடை நூல்களைச் சமய சமூக நூல்கள் என்றும், அரசியல் நூல்கள் என்றும் பிரிக்கலாம். முதற்கண் அவரது சமய சமூக நூல்களின் பட்டியலைக் காணலாம்.

1921—என் கடன் பணி செய்து கிடப்பதே.
1922—நாயன்மார் திறம்
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
1924—சைவத்தின் சமரசம்
1925—முருகன் அல்லது அழகு
1927—பெண்ணின் பெருமை
1928—கடவுட் காட்சியும் தாயுமானாரும்
தமிழ் நூல்களில் பௌத்தம்
1929—இராமலிங்கர் திருவுள்ளம்
சைவத்தின் திறவு
1930—இமயமலை அல்லது தியானம்
நினைப்பவர் மனம்
1933—சன்மார்க்க போதமும் திறவும்
1934—சமரச தீபம்
1935—சித்த மார்க்கம்
1949—உள்ளொளி

இப்போது இங்கு நடைபெறுவது "இந்திய விடுதலை வெள்ளி விழாக் கருத்தரங்கு" ஆதலின் முதற்கண் திரு.வி.க. அவர்கள் இயற்றிய அரசியல் நூல்களைப் பற்றிக் காண்போம். அவர்கள் இயற்றிய நூல்களுள் "இந்தியாவும் விடுதலையும்", "மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்", "முடியா காதலா சீர்திருத்தமா" என்பன போன்ற நூல்கள் அரசியல் தொடர்புடைய நூல்களாம்.

இந்தியாவும் விடுதலையும் :

இந்நூல் இந்திய நாட்டு வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூலாகும். இது 408 பக்கங்களைக் கொண்டுள்ளது. 1940-ஆம் ஆண்டில் இந்நூல் வெளிவந்தது. எனவே இந்தியா விடுதலை பெறுதற்கு முன்னரே இந்நூல் எழுதப்பட்டது. இந்நூலில் கூறப் பட்டுள்ள அரிய கருத்துக்களைப் படிக்கும்போது திரு.வி.க. அவர்கள் ஒரு தீர்க்கதரிசி எனக் கூறலாம். ஏனெனில் அவர் கண்ட கனவு எல்லாம் இப்போது நனவாக மாறியதைக் காண்கின்றோம். இந்நூல் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முற்பகுதியான இந்தியா என்ற தலைப்பில் முற்கால இந்தியா இடைக்கால இந்தியா தற்கால இந்தியா என்ற மூவகை இந்தியாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. முற்கால இந்தியாவிலும் இடைக்கால இந்தியாவிலும் ஹிந்து இராஜ் யமும் முஸ்லீம் இராஜ்யமும் எப்படி வளர்ந்து தேய்ந்தன என்பதும், தற்கால இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி எவ்வாறு நுழைந்தது என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியாகிய விடுதலை என்ற தலைப்பில் குல வேற்றுமை, மதவெறி, பெண் அடிமை, தீண்டாமை, கண்மூடிப் பழக்க வழக்கங்கள், சகோதர நேயமின்மை, காட்டிக் கொடுத்தல், ஹிந்து—முஸ்லீம் வேற்றுமை முதலிய குறைபாடுகள் அந்நிய ஆட்சியைக் கூவி அழைத்தன என்றும், இக்குறைபாடுகளை நீக்குவதுடன் அரசியல் பொருளாதார முயற்சி விரைந்து எழுதல் வேண்டும் என்றும், அதற்குக் காங்கிரஸ் சமதர்ம மயமாதல் வேண்டும் என்றும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

அறப்புரட்சி :

அறப்புரட்சியினால் இந்திய விடுதலை பெறும் என்பதனை முன் கூட்டியே திரு.வி.க. அவர்கள் எழுதியுள்ளார்கள். அறப்புரட்சிக்கு நல்லியல்புகள் தேவை. எளிய அறவாழ்க்கை விழுமிய நோக்கத்தைத் தரும். இத்தகைய பண்புகளுடன் விளங்கிய காந்தி அடிகளார் அறப் போர் புரிந்து இந்திய விடுதலைக்கு வழி கோலினார்.

"எளிய அறவாழ்க்கை விழுமிய நோக்கத்தை வளர்க்க வல்லது. எளிய வாழ்க்கையும் விழுமிய நோக்கமும் நமது நாட்டுச் செல்வம். அச்செல்வம் எங்கே? பேராசைப் பேய் வாழ்க்கையும் தன்னல நோக்கமுமல்லவோ இந்நாளில் நாட்டை அரிக்கின்றன. எளிய வாழ்க் கையால் பல நலன்கள் உண்டு. அவைகளுள் சிறந்தன சுதேசிய ஆக்கமும் அஹிம்சை நோக்கமுமாகும். இரண்டும் மெய்ம்மை விடுதலைக்கு இன்றியமையாதன. அவைகளைக் கொண்டு மகாத்மா காந்தி பெரிய சாம்ராஜ்யத்தை எதிர்த்து அறப்போர் புரிந்தமை உலகறிந்ததொன்று. இந்திய விடுதலைக்கு அறப்புரட்சியே சாலச் சிறந்தது." (இந்தியாவும் விடுதலையும்—பக்கம். 407)

இந்திய ஒருமைப்பாடு :

திரு. வி.க. அவர்கள் இந்நூலில் இந்திய ஒருமைப்பாட்டினை நன்கு விளக்கியுள்ளார். இந்தியா ஒரே நாடாகும் என்பதனையும் சான்றுகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். "பாரதநாடு — இந்திய நாடு என்னும் வழக்குகளை நோக்குக. ஒரு பெரும்நாட்டின் இயல்புகளெல்லாம் பரத கண்டத்திற் பொருந்தியுள்ளன. இமயம் முதல் கன்னி வரை நீண்டிருப்பது பரதம். "இமசேது பரியந்தம்" என்னும் வழக்கையும் நோக்குக. இமய வாடையும் பொதிகைத் தென்றலும் பரதத்தில் மண்டி இயற்கை ஒருமைப்பாட்டை வளர்த்து வருகின்றன. முற்காலப் பரதம் ஒருமைப்பாடுடையதாயிருந்தது என்பதற்குச் சான்றுகளிருக்கின்றன. முதலாவது 'பரத கண்டம்' என்ற பெயரை உன்னுக. பரதன் என்னும் ஒருவனால் கண்டம் முழுவதும் ஆளப்பெற்றமை விளங்குதல் காண்க. வேறு சில சக்கரவர்த்திகளின் பெயர்களைப் புராணங்களிற் காணலாம். பழம் பாரதம் ஐம்பத்தாறு நாடுகளாகப் பிரித்திருந்த காலமுண்டு. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு மன்னரால் ஆளப்பட்டு வந்தது. அம் மன்னர்க்கெல்லாம் மன்னர் மன்னர் (சக்கரவர்த்தி) என்று ஒருவர் வீற்றிருந்தனர். பழைய காலச் சக்கரவர்த்திகளின் பெயர்களைப் புராணங்களிற் காணலாம். சரித்திர காலத்திலும் சிலர் சக்கரவர்த்திகளாக நின்று முற்கால இந்தியாவை ஆண்டனர் என்று தெரிகிறது. அவருள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் அசோக சக்கரவர்த்தி" (272—232 கி. மு.) (இந்தியாவும் விடுதலையும் - பக்கம் 45—46).

பாரதநாடு இமயம் முதல் குமரிவரை ஒரே நாடு என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. முரஞ்சியூர் முடிநாகனுர் என்ற புலவர் சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை வாழ்த்தும் போது "அரசே நீ பொற்கோட்டு இமயமும் பொதியமும்போல் நடுக்கின்றிச் சுற்றமொடு விளங்கி நிற்பாயாக" என வாழ்த்துகின்றுர். இதனைக் கீழ்வரும் புறநானூற்று வரிகள் விளக்குதல் காண்க.

"நடுக்கின்றி நிலியரோ வத்தை அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தணர் அருங்கட னிறுக்குங்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே"

(புறநானூறு - 2)

இச் சேரமன்னன் பாண்டியரும் துரியோதனனுதியோரும் போர் செய்த காலத்தில் இருதிறத்துப் படைகளுக்கும் பெருஞ்சோறு இட்டதால் இவன் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் எனப் பெயர் பெற்றுன் என்பர். இச் செயலும் இந்திய ஒருமைப்பாட்டினை விளக்கும் சான்றுக அமைந்துள்ளது. இமயத்தினையும் பொதியமலையினையும்

ஒன்று சேர்த்துக் கூறும் மரபினை இளங்கோவடிகள் வாக்கிலும் காண்க. இதனை,

"பொதிய லாயினு மிமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
யொடுக்கங் கூறா ருயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"

(சிலப்பதிகாரம் - மங்கல வாழ்த்துப் பாடல்: 14 - 19)

என்ற வரிகள் விளக்குதல் காண்க. திரு.வி.க., அவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பே தேசிய ஒருமைப்பாட்டினைப்பற்றி ஒரு கூட்டத்தில் பேசும்போது "விஞ்ஞான வளர்ச்சியினால் உலகம் தற்போது சுருங்கி உள்ளது. முன்பெல்லாம் நான் ஒரு தமிழன் என்று கூறி வந்தேன். பின்னர் நான் இந்தியன் என்று கூறினேன். ஆனால், இப்போது நான் உலகத்தில் ஒருவன் எனக் கூற விழைகின்றேன்" என்று அவர் வீரத்தோடு பேசிய மொழிகளை யான் என்றும் மறவேன். நமது இலக்கியங்களெல்லாம் நாடு எனக் கூறாமல் உலகு என்றே கூறுகின்றன.

பொதுவுடைமை என்ற சமதர்ம ஆட்சி :

இந்தியாவிற்கு வேண்டப்படுவது சமதர்ம ஆட்சி (Socialism) என்பதனைத் திரு.வி.க. அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே வற்புறுத்திக் கூறினார். நம்நாடு அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை அடைவது மட்டும் விடுதலையாகாது என்றும் நம் நாட்டிற்கு வேண்டப்படுவது பொருளாதார விடுதலையே என்பதனையும் அவர் தம் நூலில் எழுதியுள்ளார். "காங்கிரஸின் நோக்கம் என்ன? நாட்டின் விடுதலைக்குப் பாடுபடுவது என்று சொல்லப்படுகிறது. நாட்டின் விடுதலை என்றால் என்ன? அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை அடைவது மட்டுமா? அந்நிய ஆட்சியினின்று மட்டும் விடுதலை அடைந்து, ஒரு சிறு கூட்டம் இன்புற, மற்றொரு பெருங்கூட்டத்தை வேலையின்றித் திண்டாடச் செய்து, பட்டினியாலும் பசியாலும் அதைத் துன்புறுத்துவது விடுதலையாகுமா? ஆகாது. விடுதலையாவது, அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை அடைவதுடன் வேலையில்லாத் திண்டாட்டம் எப்பகுதியிலும் தோன்றாமல் நாட்டாரனைவரும் ஏதோ ஒருவிதத் தொழில் செய்து நல்வாழ்க்கை நடாத்தி இன்புறத் துணைபுரிவது. இதற்குச் செல்வம் ஒரு பக்கம் பெருகி மற்றொரு பக்கம் அருகாதவாறு காக்கவல்ல ஆட்சிமுறை தேவை. அதுவே சமதர்ம ஆட்சி என்பது." (இந்தியாவும் விடுதலையும்: பக்கம், 392).

பண்டைக்காலத்தில் உலகம் சமதர்ம வழியே இயங்கி வந்ததென்றும், அக்காலத்தில் நிலம் மக்களுக்குப் பொதுவாகவே பயன்

பட்டது என்பதையும், தொழிலாளி முதலாளி வேற்றுமை எழவில்லை என்பதையும் ஆசிரியர் விளக்கிக் கூறியுள்ளார்.

சாம்ராஜ்யம் :

"பழம்பெருங் காலத்தில் உலகம் இயற்கையோடியைந்து வாழ்ந்தமையால் அது சமதர்ம வழியே இயங்கி வந்தது. பின்னே செயற்கை வாழ்க்கை முதிர முதிரச் சமதர்மம் சாய்ந்து சாம்ராஜ்யம் எழலாயிற்று. இக்கால உலகம் சாம்ராஜ்ய ஆட்சிமுறையால் அலுத்துக் களைத்து நலிந்து மெலிந்து பிணிபட்டுத் துன்புறுகிறது. அதனால், உலகம் பழைய சமதர்மத்தை நாடா நிற்கிறது."

நிலம் தனி மனிதர் உடைமை :

"பழங்காலத்தில் நிலம் மக்களுக்குப் பொதுவாகவே பயன்பட்டு வந்தது. நாளடைவில் அதன் பொதுமை மாறி அது தனி மனிதர் உடைமையாயிற்று. பெரும்பான்மையோர்க்கு நில உரிமை அற்றுப் போய்விட்டது. அரசர்களும், ஜமீன்தாரிகளும், மிராசுதார்களும், செல்வர்களும் நிலமுடையவர்களானார்கள். மற்றவர் அவர்களிடத்தில் வேலை செய்து கூலி பெற்றுப் பிழைப்பவர்களாயினர்."

முதலாளி தொழிலாளி வேற்றுமை :

"பண்டைநாளில் மக்கள் கைத்தொழில்கள் செய்து வாழ்ந்து வந்தார்கள். அந்நாளில் முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமை எழவில்லை. பின்னே இயந்திர காலந் தோன்றிற்று. இயந்திரத்தால் உற்பத்தி அதிகம் என்று சொல்ல வேண்டுவதில்லை. முதலாளிகள் இயந்திரங்களைக் கொண்டு உற்பத்திகளைப் பெருக்கத் தங்கட்குத் தேவையான ஆட்களை அமர்த்திக் கூலி கொடுத்து வரலானார்கள். உற்பத்தி சாதனங்களெல்லாம் முதலாளி வயப்பட்டுக் கிடத்தல் கண்கூடு. இப்பொழுது உலகிலுள்ள மக்கள் இனத்தை இருகூறாகப் பிரிக்கலாம். ஒன்று முதலாளி இனம் ; மற்றொன்று தொழிலாளி இனம். இரண்டில் முதலாளி இனம் ஆள்வதாயும், தொழிலாளி இனம் ஆளப்படுவதாயும் இருக்கின்றன." (இந்தியாவும் விடுதலையும் : பக்கம், 394 - 395).

தொழிலாளருக்குப் பொருளாதார உரிமை :

தொழிற்சாலைகளில் தொழிலாளருக்குப் பொருளாதார உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதனையும் இலாபத்தில் $12\frac{1}{2}\%$ தொழிலாளருக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பதனையும் இரயில், பாங்கு, பஸ் முதலியன தனிப்பட்ட மனிதராலோ தனிப்பட்ட கம்பெனியாலோ நடத்தப்படக் கூடாது என்பதனையும் அவைகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்பதனையும் 30 ஆண்டுகளுக்கு முன்பே திரு.வி.க. அவர்கள் கனவு கண்டார்கள். அவர்களது கனவுகள் தற்போது

நனவாகக் காட்சி அளிக்கின்றன. தற்போது இரயிலையும், பஸ்களையும் அரசாங்கமே நடத்துகின்றது. பாங்கிகளும் அரசாங்க மயமாக்கப் பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கும் பொருளாதார உணர்ச்சி ஊட்டப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டி யுள்ளார்.

"தொழிலாளர்கட்குப் பொருளாதார உணர்ச்சியூட்ட வேண்டு மென்பது எனது நீண்டகால வேட்கை. அதற்குரிய வாய்ப்புக் கிட்டா மலே இருந்தது. அதுபோழ்து எனக்குச் சிறிது வாய்ப்புக் கிடைத்தது. சம்பள உயர்வும் வேலை நேரச் சுருக்கமும் மட்டும் தொழிலாளர்க்கு விடுதலை நல்கா என்றும், பொருளாதாரச் செம்மையே ஏழ்மையை வளர்ப்பதென்றும், ஏழ்மையைப் போக்க முயல்வதே சிறந்த ஜீவகா ருண்யமென்றும், செல்வம் ஒரு பக்கம் பெருகி மற்றொரு பக்கம் அருகு வதால் விளையும் தீங்குகள் இன்னின்ன என்றும், ரெயில், டிராம், பாங்க், தொழிற்சாலைகள் முதலியன எற்றுக்குத் தனிப்பட்ட மனித ராலோ தனிப்பட்ட கம்பெனியாலோ நடத்தப்படல் வேண்டுமென்றும், அவைகளை ஏன் அரசாங்கம் ஏற்று நடத்தல் கூடாதென்றும் என்னால் விளக்கப்பட்டு வந்தன. தொழிலாளர் உழைத்துச் சம்பளமட்டும் பெறுங் கூலியாய்க் காலங்கழித்து வருதலாகாதென்றும் தொழிலாளர் உழைப்புக் கலவாமல் எவ்வித விளைவும் உண்டாவதில்லையென்றும், ஆதலின் தொழிற்சாலைகளில் தொழிலாளர்க்கும் பொருளாதாரத்தில் உரிமையிருத்தல் வேண்டுமென்றும், முதற்படியாகத் தற்போது இலா பத்தில் குறைந்தது ரூபாய்க்கு இரண்டணுவாவது தொழிலாளர்க் கென்று ஒதுக்கப்படல் வேண்டுமென்றும், எவ்வழியிலாதல் தொழி லாளர்க்குத் தாம் வேலை செய்யும் சாலைகளில் தமக்கும் உரிமையுண்டு என்னும் உணர்வு பிறக்கும் முறையில் சட்டஞ் செய்ய அரசாங்கம் முற்படல் வேண்டுமென்றும், அது குறித்து அறக்கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றும் பேசி வந்தேன். தொழிற் சங்கங்களில் யான் இவ் வாறு பேசி வந்தது சில தலைவர்கட்குப் பிடியாமலே இருந்தது. தொழிற் சங்கங்கள் ஒரு புதிய உலகைக் கண்டன; அதில் நுழையவும் முயன்றன." (இந்தியாவும் விடுதலையும்—பக்கம் 373—374) தற்போது பல்லவன் போக்குவரத்து முதலிய நிறுவனங்களில் தொழிலாளர் களுக்கும் பங்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

உழவர்களின் விடுதலையே நாட்டின் பொருளாதார விடுதலையாகும் :

ஒரு நாடு பொருளாதார விடுதலைப் பெறவேண்டுமெனில் நாட்டி லுள்ள உழவர் பொருளாதார நிலை உயர வேண்டும். அவர்களும் பொருளாதார ஞானம் பெறவேண்டும். அவர்களுக்கென உழவர் சங்கம் ஏற்படுத்துதல் வேண்டும். அச்சங்கத்தின் வாயிலாக உழவர் தம் குறைகளைப் போக்கிக் கொள்ளலாம் என்பதனை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இத்துறையில் அவர் கண்ட கனவுகள் தற்போது

நனவாகியுள்ளன. நாடு விடுதலை பெற்றவுடன் உழவர்கள் பல நன்மைகள் பெற்று வருகின்றார்கள். அவர்கள் நன்கு பயிர்த்தொழில் நடத்துவதற்கு அரசியலார் அவர்களுக்குப் பல வழிகளில் பொருள் உதவி செய்து வருகின்றனர்.

"நமது நாட்டில் பெரும்பான்மையோர் விவசாயிகள். அவர்களே நாட்டின் முதுகெலும்பாயிருப்பவர்கள். அவர்களை மிகச்சிலர் ஒடுக்கி ஆண்டு வருகின்றனர். அவர்கள் விடுதலை நாட்டின் விடுதலையாகும்; பொருளாதார விடுதலையாகும். ஆகவே பொருளாதாரப் பிரசாரம் பெரிதும் விவசாயிகளிடைப் பரவுதல் வேண்டும். விவசாயிகளிடைப் பொருளாதார ஞானம் பெருகும் நாளே நாட்டுக்குரிய நன்னாளென்க".

"இந்நாளில் வட இந்தியாவில் கிருஷிகர் சங்கங்கள் தோன்றி வருகின்றன. தென் இந்தியாவில் பேச்சளவில் சங்கம் நிற்கிறது. நாடு முழுவதும் உழவர் சங்கம் பெருகுவது சிறப்பு" (இந்தியாவும் விடுதலையும்—பக்கம் 391).

சென்னையில் தமிழ்க் கல்லூரி :

தமிழ் அரசியல் மொழியாக அமைதல் வேண்டும் என்பது பற்றியும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்றுமொழியாக அமைதல் வேண்டும் என்பது பற்றியும், அரசாங்கத்தார் தமிழ்க் கல்லூரிகளையும் பிற கல்லூரிகளையும் அமைத்துத் தரவேண்டும் என்பது பற்றியும் 50 ஆண்டுகளுக்கு முன்பே திரு.வி.க. அவர்கள் 1921-இல் தம்து கட்டுரைகளில் எடுத்துக் காட்டினார்கள்.

"தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தார் நிகழ்ச்சி முறைகளைத் தமிழிலேயே நடாத்தல் வேண்டும்; மாறாக நடப்பாராயின், நாட்டார் அவரைத் தமிழ் வழியில் நடாத்த முயல வேண்டும். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தார், காங்கிரஸ் தீர்மானப்படி ஆங்காங்கே நாட்டுக் கல்லூரி அமைக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். முதலாவது, சென்னையில் இரண்டு தமிழ்ச்சாலைகள் அமைக்குமாறு அவரை வேண்டுகிறோம். ஒன்றில் தமிழ்மொழி போதிக்கப்படல் வேண்டும்; மற்றொன்றில் மேல்நாட்டுப் பொருள் நூல், பூத பௌதிக நூல் முதலியன நமிழ்நாட்டவர்க்குப் பயன்படும் பொருட்டு, அவைகளைத் தமிழில் மொழிபெயர்க்கப் போதிக்கப்படல் வேண்டும்" (தமிழ்ச் சோலை, பக்கம் 10).

நமது தமிழக அரசு தமிழ்மொழி உயர்வுக்குப் பல்லாற்றானும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருதல் பாராட்டததக்கது. நமது அரசு கல்வித்துறைக்குப் பெரும்பகுதியான பொருளைச் செலவிடுகின்றது. தற்போது பல கோட்டங்களிலும் நகர்களிலும் கிராமங்களிலும் அரசினர் பள்ளிகளும் கல்லூரிகளும் ஏற்பட்டுள்ளன. இது மிகவும் பாராட்டத்தக்கது. ஆனால் ஒரு பெருங்குறை உள்ளது. அதாவது

தமிழகத்தின் தலைநகராகக் கருதப்படும் சென்னையில் அரசினரின் ஒரு தமிழ்க் கல்லூரியும் இடம் பெறவில்லை. இக்குறையினைப் போக்கிச் சென்னையில் ஒரு தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவிக்கும்படி யான் தமிழக அரசை வேண்டிக் கொள்கின்றேன். சென்னையில் தனிப்பட்ட முறையில் பல சங்கங்கள் தமிழ்ப் புலவர் தேர்வுக்கு மாணவர்கள் படிக்கும்படி அரிய தொண்டுகள் செய்து வருகின்றன சென்னையில் சில ஆண்டுகளுக்கு முன் சென்னைப் பல்கலைக்கழகத்தோடு தொடர்பு கொண்ட மணலி தமிழ்க்கல்லூரி என்ற ஒரு தமிழ்க்கல்லூரி வள்ளல் மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. ஆனல், எக்காரணத்தாலோ அத் தமிழ்க் கல்லூரி மூடப்பட்டுவிட்டது. எனவே பல ஊர்களில் கலைக்கல்லூரிகளை ஏற்படுத்திவரும் தமிழக அரசினைச் சென்னையில் ஒரு தமிழ்க்கல்லூரி ஏற்படுத்தும்படி யான் மீண்டும் வேண்டிக் கொள்கின்றேன். சென்னையில் தமிழ்க் கல்லூரி ஏற்படுமாயின் அதுவே இக்கருத்தரங்குத் தொண்டின் வெற்றிக்கு அறிகுறியாகும் என்பதில் ஐயமில்லை.

திரு.வி.க. - வின் அரசியல் கொள்கை :

இந்தியாவும் விடுதலையும் என்ற நூலில் திரு.வி.க. அவர்கள் தற்கால இந்தியா என்ற பகுதியில் ஆங்கிலேயர் இந்நாட்டில் வந்தது முதல் அவர்கள் செய்த கொடுமைகளைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். திரு.வி.க.வின் அரசியல் கொள்கை மகாத்மா காந்தி அடிகளாரின் கொள்கைகளைத் தழுவியதாகும். அதனல்தான் அவர் காந்தி அடிகளாரின் சாத்வீக சத்தியாக்கிரகத்தை ஏற்றுக் கொண்டார். "தீமையை மூர்க்க சக்தி கொண்டு களைய நமக்கு உரிமை இல்லை. அத்தீமைக்கும் நமக்கும் தொடர்பின்றி ஒதுங்கி நிற்கவேண்டும்" (மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்—பக்கம்—431). இதுவே காந்தி அடிகளாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் உயிர்நாடியாக விளங்கியது. அடிகள் விரும்பியது அறப்புரட்சியேயாகும். மறப்புரட்சியன்று. "மார்க்ஸிஸம் கால் பங்கும் மகாத்மாவின் அரசியல் முக்கால் பங்குமாகக் கலந்ததே திரு.வி.க.வின் அரசியலாகும். அந்த இரு பெரு மக்களும் காணுத ஓர் அரசியலை, அதாவது, சமரச சன்மார்க்க சமயத்துடன் கூடிய பொதுவுடைமை என்பதே பெரியார் கண்ட அரசியலாகும். இறைவழி நில்லாத அரசைத் திரு.வி.க. ஒப்ப மறுத்துவிடுகிறர்". (திரு.வி.க. கல்கி நினைவுச் சொற்பொழிவுகள் — அ. ச. ஞான சம்பந்தம் — பக்கம் 152). சமய வாழ்க்கையையும், அரசியல் வாழ்க்கையையும் வேருகப் பிரித்தல் கூடாது என்ருர் காந்தியடிகள். திரு. வி. க. அவர்களும் அதே கருத்தை மேற்கொண்டனர். "நாயன்மார் திறம்" என்ற நூலில் "நாயன்மார்கள் யாரும் எதையும் துறந்துவிட்டு ஓடவில்லை. இந்த உலகில் இருந்துகொண்டே அத்தகைய வாழ்க்கை வாழ முடிந்தது அவர்களால்" என்று திரு. வி. க. கூறியுள்ளார். "முற்கால இந்தியர் சமய வாழ்வை வேருகவும் உலக வாழ்வை வேருகவும் தனித்தனியே பிரித்துக் கொண்டாரில்லை. அவர்கள் அற

வழியில் நின்று, அறவழியில் பொருளீட்டி, அறவழியில் இன்பம் நுகர்ந்தால் விடுதலை தானே உண்டாகும் என்பது அவர்தங் கொள்கை". (இந்தியாவும் விடுதலையும் — 72). எனவே ஒரு நாடு அறவழியில் ஆளப்படுமேல் அந்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வும் விடுதலையும் தானே உண்டாகும் என்பது பெறப்படுகின்றது.

கவிதை நூல்கள் :

இதுவரை திரு.வி.க. அவர்களின் உரைநடை நூல்களில் நாட்டு விடுதலை பற்றிய கருத்துக்களைக் கண்டோம். இனி, அவரது கவிதை நூல்களில் காணக்கிடக்கும் சில அரிய கருத்துக்களைக் காண்போம். அவர் உரிமை வேட்கை, முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், பொதுமை வேட்டல், புதுமை வேட்டல், கிறிஸ்து மொழிக் குறள், இருளில் ஒளி முதலிய 15 கவிதை நூல்கள் இயற்றியுள்ளார். 'இருளில் ஒளி' என்ற அவரது கவிதை நூலில் பொதுவுடைமை பற்றிய கருத்துக்கள் விளங்கக் காண்கின்றோம். பிறர் நலம் கருதாது தன்னலங் கருதித் தேவைக்குமேல் பொருள்களைக் குவிக்கும் மக்களிடத்தில் களவும் கொலையும் இடம்பெறும் என்ற கருத்தினை,

"தேவைக்கு மேலே திரட்டும் இடங்களில்
தாவும் கொலைகளவு சார்ந்து"

(பொதுமை வேட்டல் - பாடல் : 3)

என்ற வரிகள் விளக்குதல் காண்க. 1953இல் எழுதிய 'வளர்ச்சியும் வாழ்வும்' என்ற கவிதை நூலில் திரு.வி.க. அவர்கள் மனிதனுடைய வீழ்ச்சியைக் கண்டு மனம் உடைந்து பாடுகின்றார் என்பதனைப் பின் வரும் வரிகள் விளக்குகின்றன :

"மனிதன் முதல்முதல் இனிது வாழ்ந்தான்
உழைத்தும் உழுதும் பிழைத்து வந்தான்
ஒருவன் பொருளை ஒருவன் கவரும்
கல்வி பயிலாச் செல்வம் பெற்றான்
கொலையுங் களவுங் கள்ளுங் காமமும்
பொய்யும் அற்ற மெய்யில் நின்றான்
சுரண்டல் வாழ்வில் புரண்டா னில்லை
பின்னே கெட்டான் ; என்னே செய்வது
ஒருவன் பொருளை ஒருவன் கவரும்
இழிவு வளரும் வழியைக் கண்டான்
கொலையுங் களவுங் கள்ளுங் காமமும்
பொய்யும் வாழ்வில் மொய்த்துக் கொண்டன
சுரண்டல் வாழ்வு திரண்டு மதர்த்தது
செயற்கை வாழ்க்கையில் பயிற்சி பெற்றான்
* * * சுரண்டல் வாழ்வில் புரளு கின்றனன்
அத்தைப் பயிலும் வித்தை எங்கும்

அரசுகள் எங்கும் முரசுகள் எங்கும்
குண்டுகள் எங்கும் தண்டுகள் எங்கும்
எத்தனை போர்கள் எத்தனை மரணம்
அச்சோ மனிதன் செத்தே போனான்"

(வளர்ச்சியும் வாழ்வும்)

திரு. வி. க. அவர்கள் 'உரிமை வேட்கை' என்ற நூலில் வடிவிலும் வயதிலும் வளத்திலும் பெரிய இந்தியத் தாய் பல ஆண்டுகளாக விடுதலை பெறாமல் இருந்ததற்குச் சாதிப்பிரிவுகள், தீண்டாமை, பெண் அடிமை முதலியன காரணமாக விளங்கின எனப் பாடியுள்ளார்.

"வடிவினிலே பெரியள்யான் வயதினிலே பெரியள்
வளத்தினிலும் வன்மையிலும் மக்களிலும் பெரியள்
கடியரணில் மலையரணில் கடலரணில் பெரியள்
காலினிலே தளைவந்த காரணந்தா னென்னே
படியினிலே இல்லாத பாழான சாதி
பகுப்புடனே, தீண்டாமை, பாவையர்தம் அடிமை
கொடியஇவை குடிகொண்டு கொடிகொடியாய்ப் படர்ந்தே
கொல்லவுடன் பிறப்பன்பைக் குலைத்ததென்றன்
வாழ்வே"

(நாட்டுப் பாடல் — 9)

என்ற பாடல் கற்போர் மனத்தை உருக்க வல்லதாகும். இது அவரது தாய்நாட்டுப் பற்றினை விளக்குவதாகும்.

இதுகாறும் கூறியவற்றால் நாட்டின் விடுதலைக்கு அறப்புரட்சியே வழி என்பதும், இந்தியா தேசிய ஒருமைப்பாட்டுடன் விளங்கிய நாடு என்பதும், பொதுவுடைமை என்ற சமதர்ம ஆட்சியே இந்தியாவுக்கு வேண்டப்படுவது என்பதும், இந்திய விடுதலையில் தொழிலாளர்க்குப் பொருளாதார உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதும், உழவர்களின் விடுதலையே நாட்டின் பொருளாதார விடுதலையாகும் என்பதும், தமிழக அரசு தமிழ்க் கல்லூரியினைச் சென்னையில் அமைக்க வேண்டுவது இன்றியமையாதது என்பதும், திரு. வி. க. அவர்களின் அரசியல் கொள்கை இன்னது என்பதும், திரு. வி. க. அவர்களின் கவிதை நூல்கள், பொதுவுடைமை, தமிழ்நாட்டுப்பற்று, மக்கள் தீயவழிகளுக்கு இரங்குதல் முதலிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன என்பதும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவைகளின் விரிவுகளை அவரது அரிய நூல்களில் கற்று, மக்கள் கற்றவண்ணம் நிற்போமாக. இறைவன் திருவருள் கூட்டுவதாக.

17

கல்கியின் விடுதலை இயக்க நாவல்களில் காந்தியம்

பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன்,
எம். ஏ., எம். லிட்., பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

நாவல் எழுதி இலக்கியத்தை வளர்த்தவர்களுள் கல்கி மிக உயர்ந்த இடத்தைப் பெறுகின்றார். பத்திரிகை ஆசிரியராக இருந்து உரிமையாக எழுதிப் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை உருவாக்கிய வர்களுள் கல்கி முதன்மை இடம் பெறுகின்றார். பாரதியின் பாடல் களும் திரு.வி.க.வின் உரைநடையும் கல்கியின் நாவல்களும் மக்கள் உள்ளத்தைப் பண்படுத்தித் தேசியம் வளர்வதற்கு உரமிட்டன.

கல்கி பத்திரிகைகளுக்கு எழுதவில்லை. அவரே பத்திரிகைகளை உருவாக்கினார். 'ஆனந்த விகடன்' 'கல்கி' என்னும் இரண்டு பெரிய பெரிய பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு அவரே உறுதுணையாளர். பிறருக்கு அஞ்சி எழுத வேண்டிய நிலை அவருக்கு இல்லை. உரிமை மிக்க எழுத்தாளர்; உரிமை மட்டுமல்ல; பெருமை மிக்க எழுத்தாளர். அவர் எழுத்துக்கள் அமரத்துவம் பெற்றுவிட்டன. காலத்தை வெல்லும் நாவல்களாகிவிட்டன. பொதுவாக நாவல்கள் என்றால் தோன்றி மிக விரைவில் மறையக் கூடியன என்பர். கல்கியைப் பொறுத்தமட்டில் அமரத்துவம் பெற்ற சாகா இலக்கியங்களாக நிற்கும் என்று கூறினால் வியப்பு அடைவதற்கில்லை. அவரைப் பின்பற்றிப் பல எழுத்தாளர்கள் உருவாகி இருக்கிறார்கள். அவர்கள் அவர் தொடங்கிய பாணியைப் பின்பற்றிப் புதிய படைப்புகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

அமரர் கல்கியவர்கள் எழுதிய விடுதலை இயக்க நாவல்கள் மூன்று. ஒன்று தியாகபூமி; அடுத்தது மகுடபதி; மூன்றாவது அலையோசை. ஆனந்த விகடன், கல்கி பத்திரிகைகளே தேசிய உணர்வை ஊட்டிய விடுதலை இயக்கப் பத்திரிகைகளாக விளங்கின.

தியாகபூமி காந்தியடிகள் தோற்றுவித்த ஒத்துழையாமை இயக் கத்தின் பின்னணியில் தோன்றிய கதை. தியாகபூமி விடுதலை இயக்க நாவல்களுள் முதலாவது எழுந்ததாகும். சுதந்திரப் போராட்டம்

நடந்து கொண்டு இருந்த காலத்தில் எழுந்த நூலாகும். அதனுல் அது விளைவித்த பயன் மிகுதியாகும் : மகத்தானதாகும்.

அலையோசை கலையின் நோக்கத்தில் பார்க்கும் போது மிக உயர்ந்து நிற்கிறது. நாட்டின் 18 ஆண்டுகளில் போராட்டத்தைச் சித்திரித்துக் காட்டுகிறது. போராட்டம் முடிந்த பிறகு எழுந்த சரித்திர நாவலாக உள்ளது. தியாகபூமி அளவிற் சிறியதாயினும் தியாக உணர்வுக்குத் தேசியம் துணை செய்து அப்பாத்திரங்களை உயர்த்தி நிற்கின்றன. எனினும் சுதந்திரப் போராட்ட காலத்தில் எழுந்த நூலாதலின் பயன் மிகுதியாக விளைந்தது. மக்களின் ஆர்வத்தை மிகுதியாகத் தூண்டியது. திரைப்படம் வெளி வந்தது. அப்படங்களையே பத்திரிகையில் அச்சிட்டு அதே சமயத்தில் வெளிப்படுத்தியமையால் வாசகர்களின் உள்ளத்தில் ஆழமான இடத்தைப் பிடித்தது. அடுத்தது என்ன என்ற ஆவலோடு வாசகர்கள் எதிர்நோக்கி இருந்தார்கள். லட்சுமிகாந்தன் கொலை வழக்குச் செய்திகளை ஆவலாகப் படித்ததைப் போல இத் தியாகபூமியைத் தமிழகம் வரவேற்று அதில் திளைத்தது. நம் பாரத நாடு 'தியாகபூமி' என்னும் புதிய உணர்வு பெற்றது.

சம்பு சாஸ்திரி கிராம வாழ்வில் தலைமை பெற்று வாழ்ந்தவர். கோயில் பஜனைப் பாடல்களால் சமுதாய ஒற்றுமையை உண்டாக்கியவர். தன் மகள் சாவித்திரியின் நல்வாழ்வுக்காக மங்களத்தை இரண்டாம் தாரமாக மணந்தவர். நிலபுலம் வயல் வாய்க்கால் உடைய மிராசுதாராக வாழ்ந்தவர். தன் மகளுக்கு மணம் முடித்து வைக்கும் தொடக்கமே—

கதையின் தொடக்கம். ஸ்ரீதர், பி.ஏ., நாவலின் நாயகன். நாட்டுப்புற வாழ்வில் சம்பிரதாயங்களிடை உருவாகி நாகரிகம் இன்னது என்பது தெரியாத சாவித்திரியைப் பணத்தாசையால் ஸ்ரீதருக்கு அவன் பெற்ருேர் மணமுடித்து வைக்கின்றனர். வாழ்வு ஒத்து வரவில்லை. ஒரு பக்கம் சிற்றன்னையின் கொடுமை, மற்ருெரு பக்கம் கணவனின் புறக்கணிப்பு.

'சாரு' அவ்வாழ்க்கை முகை; மலர்; ஏன், கனி என்றும் கூறலாம். வாழ்க்கையின் புறக்கணிப்பும் கசப்பும் துன்பங்களும் 'சாரு' பிறப்பதைத் தடுக்கவில்லை. திக்கற்றவளாகச் சாவித்திரி சென்னை வீதிகளில் அலைந்து மனம் குலைந்து பிரசவ விடுதியில் சேர்க்கப்படுகிருள். சாவித்திரி உமாராணியாகிருள். சம்பு சாஸ்திரி மனச் சந்தையில் மகளை விற்ருர். அதற்கு அவர் விலையைப் பெறவில்லை. அதற்கு அவர் கொடுத்த விலை அவர் குடும்பத்தையே அழித்து விட்டது. 'மிராசுதாரர்' ஊரை விட்டே பிழைப்பை நாடிச் சென்னை வருகிருர். கிராமங்களில் நல்வாழ்வு வாழ்ந்த எத்தனை குடும்பங்கள் இத்தகைய சமுதாயக் கொடுமைகளால் சீர்கெட்டுத் திசை கெட்டு நகரங்களுக்குச் செல்ல

வேண்டியிருந்தன என்பதற்கு அவர் வாழ்வு நல்ல எடுத்துக் காட்டாகும்.

பஜனை மடம் சங்கீதம் கற்பிக்கும் தொழிலுக்கு வழி காட்டியது. ஆனால் கருநாடக சங்கீதத்துக்கு விலை கொடுத்து வாங்க ஆளில்லை. நல்லான் அவர் பண்ணையாள். அவனும் கிராமத்தில் வாழ முடியாமல் சென்னையில் சேரிக் குப்பத்தை அடைக்கலம் அடைந்தான். சேரியிலே அக்கிரகார ஐயர் வந்து சேருகிறார். இது சமுதாயப் புரட்சி. சாஸ்திரி குட்டி காந்தியாக மாறுகிறார்: அவர்கள் வாழ்வில் புத்தொளி ஊட்டு கிறார்.

சாவித்திரியின் மகள் சாரு சம்பு சாஸ்திரியிடம் சேர்ப்பிக்கப் படுகிறாள். 'சாரு' உமாராணியைச் சந்திக்கிறாள். தாயும் மகளும் ஒன்றுபடுகின்றனர். சம்பு சாஸ்திரி ஊர் ஊராகச் சுற்றிக் காந்திய நெறியைப் பரப்புகிறார். பட்டிக்காட்டுச் சாவித்திரியைப் புறக்கணித்த ஸ்ரீதர், பி. ஏ. பாங்கி மோசடி வழக்கில் விலங்கிட்டு அழைத்து வரப்படு கிறான். உமாராணி அவனுக்கு விடுதலை அளிக்கிறாள். அவள் அவனைச் சூட்டத்தின் முன்னால் பணிய வைக்க முயல்கிறாள். சட்டம் அவளுக்குத் துணை செய்கிறது. அவளது திட்டம் அவனுக்குத் துணை செய்யவில்லை. பெண் தன் உரிமைக்குப் போராடுகிறாள்.

நாட்டில் தேசிய விடுதலை இயக்கங்கள் தனிப்பட்டவர் வாழ்வில் புத்தொளியை ஊட்டின. மேல்நாட்டு வெளிப்பகட்டில் முழுகிக் கிடந்த ஸ்ரீதரையே மாற்றி விடுகிறது. வற்புறுத்தி அவனை வாழ வைக்க நினைத்தது தவறு என உணர்கிறாள். கத்தியின்றி ரத்தமின்றி வந்த யுத்தத்தில் பங்கு கொள்கிறாள். சாருவைச் சாஸ்திரியிடம் ஒப்படைத்து விட்டு உமாராணியும் விடுதலை இயக்கத்தில் பங்கு பெறுகிறாள். போலிசு வான்கள் தனித்தனியே இருவரையும் இழுத்துச் செல் கின்றன. தூய எளிய கதர் உடையில் விளங்கிய ஸ்ரீதர் தியாக பூமியின் முதன் மகனைக் காட்சியளிக்கிறான். போக பூமியில் வாழ்ந்த அவன் தியாக பூமியில் அடியெடுத்து வைக்கிறான். இருவர் விழிகளும் சந்திக் கின்றன. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? வறுமை சாவித் திரியை ஸ்ரீதரிடமிருந்து பிரித்து வைத்தது. செல்வம் உமாராணியை அவனிடமிருந்து பிரித்தது வறுமையும் செல்வமும் சாதிக்காத செயலைத் தியாகம் சாதித்துத் தந்தது. தியாகம் இருவரையும் ஒன்றாக இணைத்தது. கதையை விடக் கதையின் தலைப்பே விடுதலை இயக்கத் திற்குப் பெரிதும் உதவியது. நம் பாரத நாட்டைத் தியாக பூமியாகச் சித்திரித்துக் காட்டியது. வாசகர்களின் உள்ளமும் பண்படுத்தப்பட்டுத் தியாகிகளாக மாறுவதற்கு உதவி செய்தன.

தியாகி என்ற சொல்லே விடுதலை இயக்கத்தால் எழுந்த சொல் லாகும். 'தியாகபூமி' என்பது கல்கி படைத்துத் தந்த புதிய சொல் லாகும்.

கதையின் பிற்பகுதியே விடுதலை இயக்கப் பின்னணியைப் பெற்றிருக்கிறது. முற்பகுதி தீண்டாமையின் கொடுமை, வரதட்சணையின் சிறுமை, பெண்ணடிமையின் தீமை இவற்றைச் சித்திரிக்கிறது. இவற்றைப் போக்கத் தியாக உணர்வின் உயர்வு பயன்படுவதை இந் நாவல் சித்திரிக்கிறது. 'தியாக பூமி' கல்கியின் ஏனைய நாவல்களைப் போல அமரத்துவம் பெறக்கூடிய நாவல்களுள் ஒன்றாகும். சாவித்திரியும், ஸ்ரீதரும் அன்னை பாரத நாட்டின் கால் விலங்குகளைத் தகர்க்கத் தாம் கை விலங்கு பூண்கின்றனர். நாடு விடுதலை அடைய அவர்கள் சிறைபுகுகின்றனர். ஸ்ரீதர், சாவித்திரி போன்ற தியாகிகளின் அரிய செயல் நாட்டு விடுதலையில் முக்கியமான இடம் பெறுகிறது.

தியாக பூமியின் வழியைப் பின்பற்றி எழுந்த மற்றொரு விடுதலை இயக்க நாவல் 'மகுடபதி' என்பதாகும். தேசிய இயக்கப் பின்னணியில் உருவாக்கப்படும் கதைத் தலைவன் மகுடபதி. கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு அவன் பெரியண்ணன் போன்ற சாமானியர்களைத் திருத்திக் காந்தியத்தைப் பரப்ப முனைகின்றான். கள்ளிப்பட்டிக் கார்க் கோடக் கவுண்டரின் பகையை ஏற்கவேண்டி வருகிறது. கள்ளிப்பட்டிக் கவுண்டர் கள்ளுக்கடையின் வருவாயில் செல்வம் ஈட்டியவர். மகுடபதியின் மறியல் அவர் பகையை வளர்க்கிறது. மகுடபதியை எப்படியாவது ஒழிப்பது என்பது அவர் இலட்சியமாக அமைகிறது.

கல்கி சரித்திர நாவல் ஆசிரியர் என்பதற்கு அவர் தீட்டிய வரலாற்று நாவல்கள் மட்டும் சான்று பகரவில்லை. இச்சமூகக் கதையையும் சரித்திர நாவலாகத் தீட்டுகிறார். காலம் இடம் உண்மை; பின்னணியும் உண்மை; 1931ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில்தான் இந்தக் கதை ஆரம்பம் என்று கூறுகின்றார். 1930 டிசம்பர் கடைசியில் மகாத்மா காந்தி லண்டனில் நடந்த இரண்டாம் வட்ட மேஜை மாநாட்டிலிருந்து வெறுங்கையுடன் திரும்பிப் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். அவரை வரவேற்பதற்கு அப்போது இந்தியாவிலிருந்த வில்லிங்டன் சர்க்கார் தக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர் பம்பாய் வந்து இறங்குவதற்கு நாலு நாளைக்கு முன்பே காந்தி—இர்வின் ஒப்பந்தம் காற்றில் விடப்பட்டது. பண்டித ஜவகர்லால் நேரு கைது செய்யப்பட்டார். மகாத்மா பம்பாய் வந்திறங்கியதும் வைஸ்ராய் வில்லிங்டனுக்குத் தந்தியடித்தார். பதில் திருப்திகரமாக இல்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டி மறுபடியும் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்குவது என்று தீர்மானித்தது. உடனே மகாத்மாவும் காரியக் கமிட்டி அங்கத்தினரும் கைது செய்யப்பட்டனர். அதன் மேல் நாடெங்கும் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமானது போலவே கோயமுத்தூர் நகரிலும் நடந்தது என்று கதைக்குப் பின்னணியைத் தருகிறார். இந் நிகழ்ச்சிகளை வரலாற்று நிகழ்ச்சிகளாக ஆசிரியர் தம் எழுத்தில் பொறித்து விடுகிறார்.

அவர் படைத்த மகுடபதி கதர் உடை தரித்துத் தலையிலும் கதர்க் குல்லாய் வைத்திருக்கிறான். அவன் தேசத் தொண்டில் ஈடுபட்டவன்

என்பதில் சந்தேகம் இல்லை என்று காட்டுகிறான். தேசத் தொண்டில் ஈடுபட்டிருப்பவர் அணிந்திருந்த போருடை இது. காந்தியண்ணல் காட்டிய வழிநின்று காந்தியடிகள் அணிந்திருந்த கதர்க் குல்லாய் நாட்டின் தேசீய உடையாக மாறிவிட்டது. தொப்பியும், சரிகைத் தலைப்பாகையும் இருந்த இடத்தில் கதர்க்குல்லாய் தனிச்சிறப்புப் பெற்றது.

'செந்திரு' கதைத் தலைவி. நீரோடையில் மகுடபதி அவளைச் சந்திக்கிறான். பாரதத் தாயின் விடுதலைக்காகத்தான் நாங்கள் எல்லோரும் பாடுபடுகிறோம். தேசம் விடுதலை அடைந்தவுடன் நானே வந்து உன்னை விடுதலை செய்கிறேன் என்பது அவன் பேச்சுரை. அதுவே கதையின் கரு.

காந்தியைப் போன்ற தியாகிகள் வாழும் நாட்டில் கள்ளிப்பட்டிக் கவுண்டர் போன்ற கொடியவர்கள் வாழ்வதை ஒருசில இடங்களில் குறிப்பிடுகிறார். விடுதலை இயக்க உணர்வைப் பின்னணியாக வைத்து இக்கதையைத் தீட்டுகிறார். மகுடபதி ஒரு இலட்சிய வீரனாகத் தீட்டப் படுகிறான். காந்தியம் அவனைக் கவ்வி ஆட்கொள்கிறது. போலீசு வழக்கம் போலப் பணம் படைத்தவர்களின் கைப்பாவையாக இயங்குகிறது.

சிறைக்குச் செல்வது உயர்ந்த இலட்சியமாகக் கருதப்பட்டது. தனிப்பட்ட வாழ்வில் உயிர்விடுவதற்கு அஞ்சும் மனிதர்கள் நாட்டு விடுதலைக்கு உயிர் கொடுக்க ஆர்வம் காட்டிய உயர் பண்பு இந் நாவலில் தீட்டப்படுகிறது. செந்திருவின் மணத்துக்குப் பிறகும் அவன் உயர்ந்த இலட்சியம் அவனை விட்டுப்பிரியவில்லை. அவன் உள்ளம் சிறைக் கதவுகளை நோக்கிச் சென்றது. சிறை சென்றவர்களே தலைவர்கள்.

மகுடபதி என்னும் இக்கதை விறுவிறுப்பான நிகழ்ச்சிகளையும் மாறிமாறி வரும் உணர்வுகளையும் கொண்டு அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற ஆர்வத்தையும் ஊட்டும் கதைச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. பங்கஜம் என்ற தோழி எழுதக்கூடிய நாவலைவிடச் செந்திருவின் வாழ்வில் அற்புதமான திருப்பங்கள் அமைகின்றன. கதை செந்திருவின் மணத்தில் முடிகிறது.

கதை படித்து முடித்த பிறகு சுவை எஞ்சுகிறதே தவிர, தேசியமோ விடுதலை இயக்க உணர்வோ மிகுதியாகத் தலைதூக்கி நிற்கவில்லை. விடுதலை இயக்கத்தில் பங்குகொள்ள ஆயிரம் பேர் இருக்கின்றனர். செந்திருவை விடுதலை செய்ய மகுடபதி தேவைப்படுகிறான். அதுவே அவன் வாழ்வின் முக்கியமான நிகழ்ச்சியாக அமைந்துவிடுகிறது.

மகுடபதியின் கதை நிகழ்ச்சிகள் விறுவிறுப்பைப் பெறுகின்றன. அலையோசை உச்சநிலையைப் பெறுகிறது. பாத்திரப் படைப்பும்

தேசிய உணர்வும் விறுவிறுப்பான நிகழ்ச்சிகளும் கொண்டு எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிறது. அலையோசை கடல் அலைகளின் ஓசையைப் போல எப்பொழுதும் கேட்கக்கூடிய நூலாக அமைந்து விட்டது. ஆசிரியரின் படைப்பிலேயே மிக உச்ச கட்டத்தைப் பிடித்து விட்டது. கல்கியை அமரர் கல்கி என்று சொல்வதற்கு அந்த நாவல் ஒன்றே போதும்.

கதையும் தேசிய உணர்வும் இழைந்து ஒன்றை ஒன்று தழுவிச் செல்கின்றன. தேசியப் போராட்டங்களையும் நாட்டில் எழுந்த சுதந்திர இயக்கங்களையும் இந்து முஸ்லிம் குத்துக் கொலைகளையும் மக்கள் பட்ட துன்பங்களையும் அவர்கள் விட்ட கண்ணீரைக் கொண்டு எழுதிய காவியம் இது. கல்கி இதில் அமரத்துவம் பெறுகின்றார்.

இந்திய நாட்டு ஒற்றுமையை இவ் அலையோசை ஊட்டுவதுபோல எந்த நாவலும் ஊட்டியிருக்க முடியாது. இளங்கோவடிகள் படைத்த காவியம் சோழ நாட்டையும், பாண்டிய நாட்டையும், சேர நாட்டையும் பிணைத்த ஒரு தேசிய காவியமாகிவிட்டது. கல்கியின் அலையோசை தஞ்சை மாவட்டம், சென்னை, பம்பாய், டில்லி, ஆக்ரா, கல்கத்தா, லாகூர் முதலிய நகரங்களின் வாழ்வைப் பிணைத்து ஒன்றாக இணைத்து ஒரு தேசிய நாவலாகிவிட்டது; தமிழர் இந்தியா முழுவதும் சென்று பரவிப் பாரத நாட்டின் பணியிலும், வாழ்விலும் பங்கு கொள்ளும் பாங்கினை இதில் தீட்டிக் காட்டுகின்றார். பல இடங்களுக்கும் நேரில் சென்று நம்மை அந்த இடங்களை அறிமுகம் செய்து வைத்து அங்கு வாழ வைக்கின்றார்.

கதை எடுத்தால் கீழே வைக்க இயலாது, நிகழ்ச்சிகள் பீறிட்டுக் கொண்டு அவர் எழுத்தில் வடிவம் பெறுகின்றன. சீதா, தாரணி, லலிதா, பாமா, இப்பெண்மணிகள் அப்பொழுது இச் சுதந்திர சமுதாயப் போராட்டங்களில் பங்கு கொண்ட அழகை எடுத்துக்காட்டுகிறது. சீதா அழுவதற்காகவே பிறந்தவள். தியாக வாழ்வு அவளைத் தானாக வந்தடைகிறது. மற்றவர்களுக்காகத் தான் வாழ்ந்து தன்னையே தியாகம் செய்யும் உயர் பெண்ணாக அமைகிறாள். அவள் முகவெட்டுத் திரைப்படத்திற்கு இழுத்துச் சென்றிருக்கும். ஆனால், அவள் அங்குச் செல்லவில்லை. வாழ்க்கையின் அலையோசையைக் கேட்டு அதிலேயே அலையுண்டு மற்றவர்கள் வாழ்க்கையை ஒளியூட்டுவதையே தன் கடமையாகவும் குறிக்கோளாகவும் கொள்கிறாள். தாரணி பூகம்பத்தைக் கண்டவள். வாழ்க்கையில் அதைவிடப் பயங்கரமான சூழ்ச்சிகளைக் கண்டு கலங்காமல் போராடும் உயர் பண்பு அவளிடம் காணப்படுகிறது.

பாத்திரப் படைப்புகள் விசித்திரம் வாய்ந்தவை. காங்கிரஸ் தொண்டனாக இருந்து தீவிரப் போராட்டத்தில் இயங்கும் சூரியா, கம்யூனிஸ்டாக மாறும் போஸ்ட்மென் பாலகிருஷ்ணன், இந்து முஸ்லீம்

கலகத்தில் பல உயிர்களைக் காக்கும் மாவீரனாக விளங்கும் இராகவன், தன் மகளைக் காக்கும் பொருட்டு முஸ்லீமாக மாறிய துரைசாமி ஐயர், சுதேச சமஸ்தான அரசரின் கொடுமைகளை எதிர்த்துப் போராடிய ரமணிபாய், தேர்தலில் நின்று வெற்றி பெறும் பட்டாபிராமன் இவர்கள் எல்லாம் இந்தச் சுதந்திரப் போராட்டத்தின் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு மாவீரர்களாக விளங்குகின்றனர். காந்தியடிகளின் புன்முறுவல் சீதாவையும் சூரியாவையும் வன்முறையினின்று தடுத்துப் பல தவறுகளிலிருந்து மீட்கின்றது. காந்தியடிகளின் நினைவும் செயலும் அவர் காட்டிய வழியும் தேசியப் போராட்டத்தில் அது பெற்ற பங்கும் நாவலில் முக்கிய இடம் பெறுகின்றன.

கல்கி ஆசிரியர் அவர்கள் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி அவர் எழுதிய நூல்களிலேயே காலத்தை வென்று நிலைபெறத்தக்க நூல் ‘அலையோசை’ என்றால் மிகையில்லை. இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பாரத மக்கள் போற்றிப் பாராட்டும் வரை இக்கதை வாழ்ந்து தீரும். மறந்து போன நிகழ்ச்சிகள் வாழ்வில் நிலைபேறு பெற்றிருப்பது இந்த அலையோசையினால் என்று கூறலாம். புகழ் மிக்க மனிதன் மறைந்தால் அவனைச் சிலை வடிவில் காண இயல்கிறது. சுதந்திர இயக்க நிகழ்ச்சிகளும் மறக்கக் கூடியவை. அவை சிலை வடிவத்தில் நிலைபெற்றிருக்கிறது என்றால் அது இந்த அலையோசையால்தான் என்று கூறலாம். பாத்திரங்களின் வடிவில் ஓவியச் சிலைகளாகக் காவியக் கலையில் அவை நிலைபெற்றுள்ளன.

பதினெட்டு வருடத்து இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றை இந்தக் கதைக்குப் பின்னணியாகக் கொடுத்திருக்கிறார். 1930ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டு வரையில் நமது தாய்த்திரு நாட்டின் சரித்திரத்தில் பல அற்புத சம்பவங்கள் நிகழ்ந்தன.

காந்தி மகாத்மாவினுடைய ஆத்ம சக்தி கோடானு கோடி மக்களின் உள்ளங்களில் ஆட்சி புரிந்தது. மக்களின் வெளி வாழ்க்கையிலும் உள்ளப் போக்கிலும் எத்தனை எத்தனையோ புரட்சிகள் நடந்தன. அவை யெல்லாம் ‘அலையோசை’க்குப் பின்னணி சங்கீதமாகத் தொடர்ந்து இயங்கி இருக்கின்றன.

தேசியப் போராட்டத்தின் பின்னணியில் அவர் படைத்த பாத்திரங்கள் உலவுகின்றனர். புரட்சிக்காரன் சூரியா, அவன் அத்தை மகள் சீதா புரட்சிப் புயல்களில் சிக்குண்டு அலை மோதுகின்றனர். பெண் அலையை ஆண் அலை பின் தொடர்வதைப் போலச் சீதாவைப் பின் தொடர்ந்து சூரியா விடாமல் செல்கிறான். அலை ஓய்கிறது. அவனும் ஓய்கிறான். சீதாவின் அகவாழ்விலும் துன்பம்; புறவாழ்விலும் துன்பம். துன்பங்கள் அவளை அலைக்கழிக்கின்றன. கஸ்தூரிபாய் காந்தியின் வாழ்க்கை அவளுக்கு வழி காட்டுகிறது. அன்னை கஸ்தூரிபாய் காந்தியின் தாயுள்ளம் பெற்றுத் தன்னைச் சூழ்ந்தவரை வாழவைக்கின்றாள்.

ராஜம்பேட்டையில் தன் அத்தை மகன் சூரியாவுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தால் அது அவள் வாழ்வாக அமைந்திருக்குமே யன்றிக் கதை யாக அமைந்திருக்காது. ராகவனை எதிர்பாராமல் மணந்து டில்லிக்கும் பம்பாய்க்கும் பயணம் செய்து இந்து முஸ்லீம் சண்டைகளில் அகப் பட்டு அகதிகளுள் ஒருத்தியாக அமைகிருள். இந்திய சுதந்திரப் போராட்டம் என்ருல் அதன் முன் நினைவுகளே மனத்தில் நிற்கின்றன. அதன் பின்விளைவுகளாகிய அகதிகளின் அவதிகளைப் பலர் மறந்து போயிருக்கலாம். திடுக்கிடும் நிகழ்ச்சிகளில் நம்மைக் கலங்க வைக்கும் பயங்கர உணர்வுகளில் ஆசிரியர் இழுத்துச் சென்று மனிதன் மிருக மாக மாறிய வரலாற்றை எழுத்தில் பொறித்திருப்பதை இந்த அலை யோசையில் காண்கிறேம். சுதந்திரம் அடைந்ததில் படும் பெருமை யினைவிட நாம் அடைந்த சிறுமை மிகுதி. அவற்றை மனத்தில் இருத்தி நாட்டைச் சுயநலக்காரர்கள் கையில் அகப்பட வைக்காமல் காக்க வைக்க வேண்டிய பொறுப்பை இதில் ஆசிரியர் காட்டியிருக்கிருர். அரசியல் தியாகத்தாலும் போராட்டத்தாலும் உருப்பெற்ற வரலாற்றை நினைவுபடுத்திக் கொள்ளும் வகையில் இந்நூல் அமைந் துள்ளது.

நாட்டு மக்கள் கிளர்ச்சி பெற்றுக் கோழைகளும் வீரர்களாக விளங்கிய அச் சுதந்திரப் போராட்டமும் அதில் எழுந்த மிருக சக்தி களும் அவற்றை அடக்கி நல்வழிப் படுத்திய காந்தியமும் இக்கதையின் இழைகளாக இயங்கிச் செல்கின்றன. சுமார் 800 பக்கங்கள் கொண்ட இத்தொடர்கதை பல்லாயிரக் கணக்கான வாசகர்களைக் கவர்ந்து அழியாத அமர வாழ்வு பெற்று விட்டது.

தமிழ் வடவேங்கடத்துக்கு அப்பால் வாழும் கதையை இது தீட்டு கிறது. ஆசிரியர் பத்திரிகை எழுத்தாளராக இருப்பதால் இந்தக் கதையைப் படிக்கும் பொழுது அவர் செய்திகளைப் பிரசுரிப்பது போல் சரளமாக நிகழ்ச்சிகளை அமைத்திருக்கின்ருர். ஊர்களின் வரலாறு களையும் முகலாய சரித்திரத்தையும் கரைத்துக் குடித்து வரலாற்று ஆசிரியராகத் திகழ்கிருர். இதை வரலாற்று நாவல் என்று சொல் வதா, சமூக நாவல் என்று சொல்வதா, துப்பறியும் கொலை குத்து நிகழும் தொடர்கதை என்று சொல்வதா, மனித இன்ப துன்பங்களைச் சித்திரித்துக் காட்டும் உணர்வு ஓவியம் என்று கூறுவதா என்று தெரிய வில்லை. அனைத்தும் அடங்கிய முழுவடிவம் பெற்ற நூல். சுதந்திர இயக்கத்தினைத் தீட்டித் தரும் மிகப் பெரிய தொடர்கதை என்று கூறலாம். இந்த நாட்டுச் சுதந்திர இயக்கத்தை அறிய ஒவ்வொரு வரும் இதைப் படித்துத்தான் ஆக வேண்டும். அப்பொழுதுதான் உண்மை வரலாற்றை அறிய முடியும். பதினெட்டு வருடத்திய வரலாறு இதில் இடம் பெற்றுள்ளது.

பட்டாபிராமன் தேர்தல், மஞ்சள் பத்திரிகை மிரட்டல் முதலியன இன்றும் நடைபெறும் நிகழ்ச்சிகளின் சித்திரங்களாகும். இந்த

வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துக் கொண்டு சமுதாய நாவல் என்று பார்க்கும் பொழுது அவர் படைத்த படைப்புகள் அழியாத ஓவியங் களாகும். ராகவனின் வாழ்க்கை, அவன் காதல் உள்ளம், வீரம், வெறுப்பு விருப்புகள், செயல்படும் திறன் உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சிகளாகும். கண்ணிழந்து அழகே அழிந்து நிற்கும் ஒருத்தியைக் கரம் பிடித்து வாழ்க்கைத் துணையாக அவன் ஏற்கும் உள்ள உயர்வு அழியாத ஓவியமாகும். சீதா அவனோடு வாழ்க்கைப்பட்டதற்குப் பெருமைப் பட் வேண்டியதுதான்.

வசந்தியைப் பெற்று எடுத்துத் தாரணியிடம் விட்டுச் செல்லும் சீதா அமைதியான வாழ்வைப் பெறுகிறாள். நல்ல காலம், ஆசிரியர் சீதாவைத் தேர்தல் உலகில் உழல வைத்ததோடு நிறுத்திக்கொண் டார். முகவெட்டு இருக்கிறது என்பதால் திரைப் படத்துக்கு அவள் போயிருக்கலாம். அந்த வாழ்க்கையில் அவளை உழலவிடாமல் அகதி முகாமுக்குள் அழைத்துச் சென்றுவிட்டார் ஆசிரியர். காந்தியின் புன்னகையும் கஸ்தூரிபாயின் வாழ்வும் பாதையும் திரையுலகத்துக்குச் செல்லவொட்டாமல் அவளைத் தியாக வாழ்வில் புகுத்தின.

இவ்விடுதலை இயக்க நாவல்களில் காந்தியம் பின்னணியாக இயங்கி இயக்குவது குறிப்பிடத்தக்க செய்தியாகும். அமரர் கல்கி படைத்த தியாக பூமியிலும் மகுடபதியிலும், அலையோசையிலும் காந்தியம் தலைதூக்கி நிற்கின்றது. அதில் வரும் பாத்திரங்களைப் பண்படுத்துவதே காந்தியம் என்றால் மிகை இல்லை.

தியாக பூமியில் பிரிந்தவரைக் கூட்டுவிக்க அவர்கள் பெற்றெடுத்த சாருவாலும் முடியவில்லை. சாரு அவர்களை ஒன்று சேர்த்து வைக் கிறாளே தவிர, ஒற்றுமைப்படுத்தி வைக்க முடியவில்லை. நீதிமன்றம் தலையிட்டுச் சொந்த வாழ்க்கையில் ஈடுபட்டு வெற்றி தோல்விகளை உண்டாக்கித் தந்ததே தவிர, உள்ளக் கலப்பை உண்டாக்கி வைக்க வில்லை. சட்டத்தின் அடிப்படையில் அவள் அவனோடு வாழ்ந்துதான் ஆகவேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. ஸ்ரீதர் வெளிப்பகட்டுக்கு இரையாகிக் கொண்ட மனைவியைப் புறக்கணித்து ஒதுக்கித் தள்ளி யவன் நீதிமன்றத்தில் வழக்கில் வெற்றி பெற்றவன், வாழ்க்கையில் வெற்றிபெறவில்லை. மகளால் இருவரும் ஒன்றாயினர் என்று கதையை முடித்திருக்கலாம். ஆனால், கல்கி அவ்வாறு செய்யவில்லை. காந்தியம் அவ்வாழ்க்கையில் புத்தொளி ஊட்டியது.

கத்தியின்றி ரத்தமின்றிக் காந்தியடிகள் ஏற்படுத்திய யுத்தம் அவர்கள் இருவரையும் கவர்ந்து விட்டது. தியாக ஒளி அவர்களுக்கு ஞான ஒளியை ஊட்டியது. மேல் நாட்டு உடை அவனை விட்டு நீங்கியது. பெண்ணை அடிமைப்படுத்த இயலும் என்ற மடமை அவனை விட்டு மாய்ந்தது. தீய பழக்கங்கள் காந்திய வேள்வியில் மறைந்து சாய்ந்தன.

தியாக பூமியில் அவன் காலெடுத்து வைக்கிறன். அவளும் தன்னுரிமைக்காகப் போராடி வழக்காடினள். வழக்கில் தோல்வியுற்றாள்; ஆனல் வாழ்க்கையில் வெற்றி பெற்றாள். பணத்தால் தன் கணவனை அடைய முடியவில்லை. இன்பத்தால் அவனோடு இணைய இயலவில்லை. தான் பெற்ற மகளால் அவன் மனத்தைத் திருப்ப இயலவில்லை. படைத்த செல்வத்தால் அவனை மாற்ற இயலவில்லை. ஆனல் தான் கொண்ட காந்தியக் கொள்கையில் நாட்டின் விடுதலை இயக்கத்தால் அவள் நெருப்பில் இட்டுத் தூய்மைப்படுத்த எண்ணினள். காந்தீய ஒளியில் முழுகி எழுந்த புத்தொளியூட்டும் புதுயுகப் பெண்ணக மாறுகிறள். சிறைக் கம்பிகளை எண்ணுகிறள். வெளியே விடுதலை காண முடியாத அந்த இரு உள்ளங்களும் சிறையில் விடுதலை காண்கின்றன. காந்தியமும் அவர் காட்டிய ஆத்மீக தியாக வாழ்வுமே இப்பாத்திரங்களைத் திருத்தி உயர்த்தி விடுகின்றன.

பழைய சாவித்திரி இயமனோடு போராடிக் கணவனை மீட்டாள். அவள் அவனிடம் பெற்ற வரத்தால் தன் வாழ்வை மீட்டாள். இந்தச் சாவித்திரி சமுதாயத்தின் பிற்போக்குச் சக்திகளோடு போராடினள். வெளிப்பகட்டு நாகரிகத்தில் அகப்பட்டுக் கிடந்த தன் கணவனைக் காந்திய மந்திரத்தால் விடுவித்து அவனைத் தூய்மைப் படுத்தினள். அவர்கள் தியாக பூமியின் தலைவர்கள் மட்டும் அல்ல; புரையோடிப் போன சமுதாயத்தில் காந்திய நெருப்பில் புடமிட்டு எடுத்த தியாகிகள் ஆகின்றனர். சீர் கெட்ட தனிக் குடும்பங்கள் காந்தியத்தில் திருந்தி நல்வாழ்வு பெறுகின்றன என்பதற்கு இவர்கள் நல்வாழ்வுகள் எடுத்துக் காட்டாக அமைகின்றன.

இவர்களைவிடச் சம்பு சாஸ்திரிகளின் படைப்பில் காந்தியத்தை முழுவதும் படைத்துத் தந்துள்ளார். தீண்டாமை ஒழிக்கப் பாடுபடுவதும் காந்தியத்தின் தலையாய கொள்கை. தெய்வத் திருக்கோயில்களில் அவர்கள் செல்லக் கூடாது என்று இந்தச் சமுதாயம் கட்டுப்பாடாக ஒத்துழைத்து வந்தது. உழைத்து உழைத்துக் காலமெல்லாம் அடிமையாக்கி வைக்கப்பட்ட ஒரு சமுதாயம் காந்தியடிகளால்தான் தலை நிமிர்ந்து வாழத் தொடங்கியது. அதற்கு முதற்படியாகத் தீண்டாமை ஒழிப்பதோடு தெய்வத் திருக்கோயில்களில் அவர்கள் சென்று வழிபட உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதுதான். கிராம வாழ்வில் சம்பிரதாயங்களிலும் சாத்திரங்களிலும் ஊறிப்போய் அறிவாலேயே பிழைக்கும் ஒரு சமுதாயம் பஜனை மடத்திற்கு அவர்கள் வருவதைத் தடுக்கின்றது. கொட்டும் மழையில் நனைந்து ஒட்டி ஒதுங்குவதற்கு இடமில்லாமல் பஜனை மடத்துள் அவர்களைப் புக வைத்தது முதல் புரட்சி. அதற்காக அந்த அக்கிரகார அகம்பாவக்காரர்களின் அவமதிப்பையும் வெறுப்பையும் பகைமையையும் அமைதியாகச் சம்பு சாஸ்திரிகள் ஏற்றுக் கொள்வதில் காந்தியத்தின் சார்பைக் காண்கிறேம்.

சென்னையில் தன் பண்ணையாளின் குப்பத்தில் அவனோடு உறைந்து சேரிக் குப்பங்களில் தொண்டு செய்யும் சம்பு சாஸ்திரிகள் அரிஜனக் குடியிருப்புகளில் தங்கி நின்று தொண்டு செய்த காந்தியடிகளை நினைவு படுத்தக் காண்கிறோம். மது விலக்கு, தீண்டாமை முதலிய பிரசாரங் களில் ஈடுபட்டு ஊர் ஊராகச் சென்று தொண்டு செய்யும் சம்பு சாஸ் திரிகள் ஒரு குட்டி காந்தியாகவே மாறிவிடுகிறார். காந்தியடிகளோடு அவர் பேர்த்திகள் உடன் சென்ற காட்சியோடு சம்பு சாஸ்திரியோடு சாரு சென்ற காட்சி நினைவுக்கு வருகிறது.

இந்த நாட்டையே தியாக பூமியாக மாற்றியவர் காந்தியடிகள். அவர் தீட்டிய ஒத்துழையாமை இயக்கமும் அன்பு நெறியாகிய தியாக வாழ்வும் பாத்திரங்களை உயர்த்துகின்றன. அதுவே கதையின் உயிர் நாடி யாகும்.

மகுடபதி காந்தியத்தின் வழிநின்று தன் வாழ்வின் குறிக்கோளை அமைத்துக் கொண்டான். காந்தியடிகள் போன்ற நல்லோர் வாழும் இந்த நாட்டில் கள்ளிப் பெட்டிக் கவுண்டர் போன்ற கொடியவர்கள் வாழ்வதனை அவனால் பொறுக்க இயலவில்லை. குடியைப் புகுத்தி மக்களின் குடியைக் கெடுக்கும் கொடியோனாக விளங்கும் கவுண்டரை எதிர்த்துப் போராடும் அவ்விளைஞனுக்குக் காந்தியமே வழிகாட்டியாக அமைகிறது.

சுதந்திரப் போரில் துள்ளிக் குதித்துப் புகழை அள்ளிப் பருகி நீந்த நினைக்கும் அவன் செந்திருவின் விடுதலைப் போரில் அகப்பட்டுத் திக்கு முக்காடித் திண்டாடி வெளியே வருகின்றான். அவளைக் கரையேற்றிய பிறகு அவன் தன் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெறுகிறான். மது விலக்குப் பிரசாரத்தில் அவன் கொள்ளும் பங்கு மகத்தானது. கருப் பண்ணக் கவுண்டரைத் திருத்தி மனிதனாக வாழச் செய்த பெருமை மகுடபதிக்கு உண்டு. துப்பாக்கிக்கும் அஞ்சாமல் கவுண்டரை எதிர்க்கும் உள்ளம் பெற்று விளங்குவது காந்தியப் பின்னணியாகும்.

அப்பொழுது நிகழ்ந்த சத்தியாகிரகப் போராட்டத்தைக் கல்கியின் எழுதுகோல் காந்தியத்தைப் பின்னணியாகக் காட்டித் தீட்டுகிறது.

"காந்தி மகாத்மாவின் ஆன்ம சக்தியை இன்றைக்குத்தான் நேரில் பார்த்தேன். கொஞ்சங்கூட ஈவு, இரக்கம், பச்சாதாபம் இல்லாமல் போலீசார் என்ன அடி அடித்தார்கள். ஆனால் காங்கிரஸ் தொண்டர்கள் கொஞ்சமாவது கலங்க வேண்டுமே! ஒரு தொண்டர் முப்பது அடி அடிக்கிற வரையில் 'வந்தே மாதரம்: மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷித்துக் கொண்டிருந்தார்; அப்புறம் கீழே விழுந்து மூர்ச்சையானார்" என்ற வரிகள் காந்தியக் கொள்கையின் ஆற்றலை யும் அது எவ்வாறு தியாகிகளை உருவாக்கியது என்பதையும் காட்டுகிறது.

அலையோசையில் காந்தியக் கொள்கை உச்ச நிலை பெறுகிறது. மனிதர்கள் மிருகங்களாக மாறிய நிலையில் தெய்வமாக நின்று அவர்களைத் திருத்திய காந்தியடிகளின் ஒளி அவர்களை உயர்த்துகிறது. நாடு விடுதலை இயக்கத்தில் பட்ட துன்பத்தைவிட இனவெறிப் போராட்டத்தால் பட்ட துன்பமே மிக்கது. இந்து, முஸ்லீம் கலகங்கள் நாட்டை விலங்குகள் வாழும் காடாக ஆக்கி விட்டன. மனிதர்கள் மிருகங்கள் ஆகிவிட்டனர். அவர்களை மனிதர்களாக மாற்றியது அண்ணல் காந்தியடிகளின் புன்னகையும் பொறுமையும் அன்பு நெறியும்தான்.

பதினெட்டு ஆண்டுகளாக நடந்த விடுதலைப் போராட்டத்தில் அற்புதமான பல நிகழ்ச்சிகள் நடத்திருக்கின்றன. அவற்றுள் ஒருசில இதில் தீட்டப்பட்டிருக்கின்றன. கோடான கோடி மக்கள் கனவு நிறைவேறிப் பாரதநாடு சுதந்திரம் அடையும் காலம் நெருங்கிய போது காந்தியடிகளின் ஆத்ம சக்திக்கு எதிராக அழிவுச் சக்திகள் கிளம்பிக் காது கொடுத்துக் கேட்க முடியாத கூச்சலுடன் கோரப் பயங்கரத் தாண்டவமாடின. ஆயினும் இந்த அழிவுப் பெருஞ்சக்திகளை எல்லாம் மகாத்மாவின் ஆத்ம சக்தி முறியடித்து வெற்றிச் சங்கம் முழக்கியது. இந்த அற்புத வரலாற்றையும் இக்கதைக்குப் பின்னணியாக அமைத்திருப்பதை அலையோசையில் காண முடிகிறது.

அலையோசையில் வரும் கதைத் தலைவி சீதா காந்தியத்தால் கதைத் திருப்பத்துக்கே காரணமாக அமைகிறாள். சீதாவைச் சுற்றித்தான் அலையோசை சுழல்கிறது. அவள் பலருடைய வாழ்க்கையை மாற்றி விடுகிறாள். சூரியா அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறான். பட்டாபிராமனும் பேதலித்து அவள் பேரழகில் மயங்கித் தன் பெயரைக் கெடுத்துக் கொள்கிறான். சீதாவோடு ஒட்டி உறவாட முடியாமல் இராகவன் தடுமாறித் தத்தளிக்கிறான். இங்கே தியாக பூமியின் பாத்திரப் படைப்புத் திரும்ப இடம் பெறுகிறது. சாவித்திரியும் ஸ்ரீதரும் வாழும் வாழ்க்கை இவர்களோடு ஒத்து இயங்குகிறது. அங்கே 'சாரு' அவர்கள் வாழ்வின் கனி. அச்சிறுமி ஏற்படுத்த முடியாத ஒற்றுமையைக் காந்தியம் ஏற்படுத்தித் தருகிறது. இராகவன் சீதையின் செல்வி வசந்தியும் அதே நிலையில் அமைக்கப் படுகிறாள். வசந்தியாலும் ஒற்றுமைப்படுத்தி வைக்க முடியாத வாழ்வு காந்தியத்தால் ஒன்று படுகிறது.

அவள் முகவெட்டும் அழகும் அவளைத் திரை உலகுக்குக் கொண்டு சென்றிருக்கும். அவள் பின்னும் நட்சத்திரமாக மாறிப் பல இளைஞர்களை — அவர்கள் வாழ்வைச் சீர்குலைத்திருக்கலாம். அதைவிட அவள் வாழ்வு நிலைகுலைந்து பாழாகி இருக்கும். சூரியாவின் தம்பி சினிமா உலகுக்கு அவளை அழைக்கிறான்; வழி காட்டுகிறான்; வழுக்கி விழுந்திருப்பாள். காந்தியின் புன்னகையும் கஸ்தூரிபாயின் இல்லற நெறியும் அவளைத் தடுத்து, ஊன்றுகோலாக நின்று அவளை உயர்த்துகிறது. தியாக வாழ்வில் கொண்டு செல்கிறது. தாரணியின் கைகளில்

அவனை ஒப்படைத்து அவள் விடுதலை பெறுகிறாள். இங்கே காந்தியமே இராகவனை வாழவைத்திருக்கிறது. அழகுக்காக அலைந்து அலைந்து மன அமைதி காணமுடியாத அவன் அழகு கெட்டு அன்பின் ஒளியாக விளங்கிய தாரணியை மணந்துகொள்வதற்குச் சீதாவின் தியாகம் தான் காரணம். அத் தியாகத்தின் பின்னால் காந்தியம் நின்று வழி காட்டுகிறது. நாட்டின் தீய சக்திகளை அணைத்து ஒளி காட்டிய காந்திய ஒளி சீதாவின் வாழ்விலும், இராகவன் வாழ்விலும் வழிகாட்டி அன்பின் அடிப்படையை விளக்கியது. தியாகத்தின் வடுவைத் தாரணி முகத்தில் தாங்கினாள்; அந்த அழகைக் காணும் பார்வையை இராகவன் பெற்றான். அலையோசை மறுபடியும் ஒரு தியாக பூமியாக மாறு கிறது. அந்தத் தியாக ஒளிக்குக் காந்தியம் பின்னணியாக நிற்கிறது.

காந்தியடிகளின் சுய சரித்திரத்தைச் சத்திய சோதனையாகத் தமிழில் பெயர்த்த அமரர் கல்கி தாம் தீட்டிய விடுதலை இயக்க நாவல் களில் காந்தியத்தைப் புகுத்தி அப்படைப்புகளை உயர்த்தியதோடு நாவல் கதை மாந்தர்களின் வாயிலாகக் காந்தியத்தைப் பரப்பி இருக் கிறார் எனில் மிகையாகாது.

18

சிலம்புச் செல்வரின் இலக்கியப் பணி

பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி, எம்.ஏ., எம். லிட்.,
தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர்,
பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோயம்பத்தூர்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்ற இனிமைக் குரலெடுத்து இசைத்த தேசிய அரங்கிலே "தமிழ்ப் பற்று" என்ற நினைப்பே கசப்பாகத் தோன்றிய காலம் ஒன்றுண்டு. இந்நூற்றுண்டின் இப்பருவத்தில் வாழ்வோர் யாவருமே இதனை உணர்வர். அப்படிப்பட்ட பருவத்திலே அதே தேசிய வட்டாரத்திலிருந்து ஊனெலாம் உருகி உள்ளெலும்பெலாம் தேய்ந்த ஒரு திருவுருவம் உள்ளொளி பெருக்கி உரத்த குரலிலே உண்மை ஆவேசத்துடன் தமிழ்க் காதலை இசைத்தது. உள்ளூர வெறுத்தவர்களையும் உதட்டளவிலேனும் ஆதரவு கொடுக்கச் செய்தது அந்தத் திருக்குரல்; ஆம், அந்தக் குரலிலே சத்தியத்தின் வலிமை—காந்தியத்தின் நெறி கனிந்த நேர்மை இருந்தது; ஆகையால் அந்த நேர்மைத் திருக்குரலை மறுக்க முடியவில்லை. குரல் எழுப்பிய கொள்கைச் செம்மல் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர் வ. உ. சி. யின் வழி வந்தவர்; வ. வே. சு. ஐயரின் வழித்தோன்றல்; பாரதியாரின் எதிரொலி; திரு. வி. க.வின் மறுபதிப்பு. தேசியக் கால்வழியிலே தமிழ்ப்பற்றின் தொடர்ச்சியிலே முகிழ்த்து மலர்ந்த நறுமலர்.

பாரத நாட்டிலேயே தமிழ்நாடு பல வகைகளிலே தனித்தன்மை உடையதாக இருந்து வருகிறது. இந்தத் தனித்தன்மை பல துறைகளில் நலஞ்செறிந்ததாகவும் சில துறைகளில் தீங்குமிடைந்ததாகவும் அமைந்துள்ளது. மொழிப்பற்று, இலக்கியப்பணி — இவற்றைப் பொறுத்தவரையில் தமிழகத்துத் தேசிய அரங்கு ஏனைய மாநிலங்களை விடப் பின்த(ய)ங்கியே நின்றிருக்கிறது, காந்திய யுகத்தில்.

ஹ்யூம் என்ற வெள்ளையரின் முயற்சியாலும், தூண்டுதலாலும் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானது; அதை உருவாக்கி வளர்த்தவர்களின் நோக்கமெல்லாம் பாரதநாடு உரிமை மணம் கமழ, உலகிற்கொரு புதுமையாகப் பொலிய வேண்டும் என்பதில்லை. பரங்கி மொழிவழியே படித்த ஒரு சிலரைக் கொண்டு பரந்து விரிந்த பாரத சமுதாயம் முழுவதையும் பரங்கியினின் வேட்டைக் களமாக்க

விளைந்த ஒரு குழுவின் சூழ்ச்சி வடிவமே முதலில் காங்கிரசாக முகிழ்த்தது. கறுப்பர் சிலருக்கு அரசாங்க அலுவல்களுக்கு இடம் பிடிப்பதே பெரிய தேசியப் பணியாக அந்த அமைப்பு நடந்து வந்தது. பின்னர்த் திலகர் பெருமானின் தெளிந்த ஞான நன்நோக்கம் படர்ந்த போது அந்தச் சிறு குழுவின் சிறுமை நினைப்புச் சிதைந்தொழிந்தது; பாரத சமுதாயம் முழுவதும் அரசியல் விடுதலை பெறுவது இயற்கை வழி வந்த பிறப்புரிமை என்ற கோட்பாடு அந்த இயக்கத்திலே இடம் பெற்றது.

திலகரின் ஆளுமைக்குட்பட்டுப் புதிய திருப்பமும், புத்துணர்ச்சியும் பெற்ற காங்கிரஸ் இயக்கத்திலே தேசியத்தோடு தாய் மொழிப் பற்றும் இரண்டறக் கலந்தது. மக்களின் மொழியிலே தேசியம் முருகி எழுந்து தோய்ந்தாலன்றிப் பாரத நாட்டிலே முழு நிறைவான தேசியம் உருவாக முடியாது. பாரதநாடு முழுவதுமாக விடுதலைப் போரிலே உரங்கொண்ட குரல் கொடுக்க முடியாது என்ற உண்மையை உணர்த்தியது திலகரின் தலைமை.

தேசியப் போராட்ட வரலாற்றின் இந்த நிலைமையினைப் பின் வருமாறு வகுத்துக் காட்டுகின்றது ஒரு நூல் :

"ஹ்யூம் நாட்டில் எழுந்த கலாசார ஒருமைப்பாட்டியக்கத்தைக் கண்டு அது தேச பக்தியுடைய மதவாதிகள் தலைமையில் இயங்கும்வரை ஏதேனும் ஒரு சமயத்தில் திசை திரும்பக்கூடும் என்று கருதி, அதனைத் தவிர்க்கச் சுதேசி உணர்வற்ற ஆங்கில மோகமுடைய படித்தவர்கள் தலைமையின்கீழ் மக்களைக் கொண்டு வர முயன்றார். அதற்கு காங்கிரசைச் சமூக சேவா சங்கமாகத் துவக்குவதுதான் சரியென்று அவர் கருதினார்."

"வைசிராய் டப்ரின்....அத்துடன் அரசியல் இயக்கமாகவும் செயல் பட்டால்தான் மதவாதிகளிடமிருந்து மக்களைப் பிரித்தெடுப்பதில் வெற்றி பெற முடியுமென்று ..கருதினார். ஹ்யூமுக்கும் அது சரியெனப் பட்டதால், அவர் வைசிராய் கருத்தை ஏற்றார். வைசிராய் கேட்டுக் கொண்டபடி, அவருக்கும் தமக்கும் அந்தரங் கத்தில் ஏற்பட்ட உடன்பாட்டைக் காங்கிரஸ் மகாசபையில் வெளியிடாமல் மறைத்து வைத்தார்."

"...இந்த நிலையில் ஆங்கில மோகம் என்னும் காரிருளிலிருந்து தாய்மொழிப் பற்று என்னும் பேரொளிக்குக் காங்கிரசைக் கொண்டுவந்த பெருமைக்குரியவர் லோகமான்ய பாலகங்காதர திலகரே யாவார்."

"படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை தேடித்தரும் அமைப் பாக விளங்கிய தேசிய காங்கிரஸ் மகாசபையைக் கோடானு கோடிப் பாமரர்கள் உள்ளிட்ட பாரத சமுதாயத்தினர் அனைவ

ருடைய விடுதலைக்காகவும் பாடுபடும் வீரர்களின் பாசறையாக மாற்றினார் திலகர் பெருமான். அவர் செய்த முதல் முயற்சி ஆங்கிலம் அறியாதவர்களும் காங்கிரசில் சேர்ந்து முன்னணித் தலைவர்களாக விளங்குமளவுக்கு அம்மகாசபையின் அமைப்பு விதிகளை மாற்றியதாகும். காங்கிரஸ் மகாசபையின் மாநிலக் குழுக்களை மொழி அடிப்படையில் திருத்தியமைத்தார் திலகர்... தமிழ்மொழி வழங்கும் பிரதேசத்தைத் தனியொரு காங்கிரஸ் மாநிலமாக விளங்கச் செய்தார் திலகர்''

"......1905-ஆம் ஆண்டுக்குப் பிறகு காங்கிரஸ் மகாசபையும் அது நடத்திய இந்திய விடுதலை இயக்கமும் சமுதாயத்தின் அடித் தளத்திலுள்ள மக்களின் சொத்துக்களாகிவிட்டன. அதன் பின்னர்த் தாய்மொழிப் புலமையுடைய வ. உ. சிதம்பரனார், சி. சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. க., வ. வே. சு. அய்யர் போன்றவர்கள் விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர் களானார்கள்; இதனால் தமிழ்மொழியின் வரலாற்றிலே முற் போக்கான ஒரு திருப்பம் ஏற்பட்டது. **பழைய இலக்கி யங்களைப் புதிய பார்வையிலே பார்த்தனர், தேச பக்தி யுடைய தமிழர்கள்.** அத்துடனன்றி, தேசபக்தியை வளர்க்கும் புதிய இலக்கியங்களையும் படைத்தனர். ஆம், தேசபக்தி தமிழை வளர்த்தது, தமிழ், தேசபக்தியை வளர்த்தது. இதனால் மொழித் துறையிலே ஒரு புதிய சகாப்தம் பிறந்தது."[1]

இவ்வாறு தெளிந்த பின்னணியில் தேசியக் கண்ணோட்டத்தோடு குரல் கொடுக்கும் நூலை எழுதியவர் இக்கட்டுரை நாயகராகிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி. தான். ''விடுதலைப் போரில் தமிழ் வளர்த்த வரலாறு'' என்ற அற்புத ஆராய்ச்சி நூலிலே நாட்டு வரலாற்றினை மேற்கண்டவாறு விளக்கியுள்ளார்.

சிலம்புச் செல்வரின் இலக்கிய ஆராய்ச்சி முகிழ்த்து மலர்ந்து மணம் பரப்பிய பாங்கினைக் கணித்தறிய வேண்டுமாயின், அவர் தோன்றிய பின்னணியை முதலிலே வகுத்துக் கொள்ள வேண்டும். ம. பொ. சிவஞானம் என்ற தனி மனிதர் — வாழ்க்கை வசதிகள் என்று சொல்லக்கூடிய எதனையும் தேவையான அளவிலே கூடப் பெற முடியாதிருந்த தனிமனிதர்—மேட்டுக்குடி மக்களிடமே சிறைப்பட்டுக் கிடந்த மேல்நிலைக் கல்வி ஆங்கிலக் கல்வி இவற்றைப் பற்றிக் கனவு கூடக் காணாத ஒரு தனிமனிதர், பாரதநாட்டின் விடுதலை எழுச்சி அரங்கிலே வீறுபெற்ற தொண்டராய் காங்கிரஸ் அமைப்பின் முன் னணியிலே வர முடிந்தது எதனால்? சிறை சென்ற காங்கிரஸ் தியாகி சிவஞானம் கன்னித் தமிழ் ஞானியாய்ச் சிலம்புச் செல்வராய் வெளி வந்தது எதனால்? இந்த இரண்டு கேள்விகளின் விடைதான் சிலம்புச் செல்வர் தமிழகம் இணைந்த பாரத தேசிய அரங்கிலே தோன்றிய பின்னணியாகும். அந்தப் பின்னணியை நாம் வகுத்துக் காண்பதற்கு அவருடைய ஆராய்ச்சி நூலே நமக்குப் பயன்படுகின்றது.

1905-ஆம் ஆண்டிலே இந்திய தேசிய இயக்கத்திலே தாய்மொழிப் பற்று இடம்பெற்றது உண்மையானால், தமிழகத்தில் மட்டும் அந்தத் தத்துவம் ஏன் முழு ஆற்றல் பெற்றதாக இல்லை? இந்தக் கேள்வி சற்றுச் சிக்கலான கேள்விதான். விடை, தெளிவான விடை உண்டு; விடை காண்பதிலே சிக்கல் இல்லை. விடையின் கடுமையினை விரித்து விளக்கிச் சொல்வதிலே பல சிக்கல்கள் உண்டு.

பாரத நாட்டின் ஏனைய மாநிலங்களில் தாய்மொழிக்குத் தேசிய இயக்கத்தினர் தந்த மதிப்பினைத் தமிழகத் தேசியத் தலைவர்கள் தரவில்லை- வ.உ.சி., வ.வே.சு. அய்யர், பாரதியார், திரு.வி.க. போன்றவர்கள் மலர இடம் கொடுத்த திலகர் வழி தேசிய இயக்கம் மொழிப் பற்றைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் முடக்குவாதத்தில் தாக்குண்டது. இந்நோய் தாக்கியதைத் திரு.வி.க.-வின் கூற்று வழி உணர்தல் நலம்.

> "........ பெற்ற தாயின் அன்புக்கும், பிறந்த நாட்டின்பற்றுக்கும் ஊற்றுயிருப்பது பேசும் மொழியேயாகும். ... .இப்பொழுது நமது தாய்மொழியாகிய தமிழ்மொழி எந்நிலையுற்றிருக்கிறது? தமிழ்த்தாய் யாண்டு உறைகிருள்?..........உரிமைக்கு உழைப்பதாகச் சொல்லப்படும் அரசியல் கழகங்களிலாதல் அவளைக் காணலாமா?................நாட்டின் செல்வாக்குப் பெற்றிருப்பவர்; பெரிதும் ஆங்கிலம் கற்றவர். அன்னார் பேச்சுக்கும், எழுத்துக்கும் நாடும் மதிப்புக் கொடுக்கிறது. அவருள் பெரும்பான்மையோர், தம்மைத் தமிழர் என்பதை மறந்திருப்பவர்........... .. தாய்மொழியினிடத்துப் பற்றின்றி நாட்டுக்கு உரிமைபெற முயல்வது கானற் சலத்தை நாடி ஓடியவன் கதையாக முடியும். உரிமைக்காக மிகப் பரிந்து உழைக்கும் காங்கிரஸாவது தமிழ்வளங் கருதி உழைக்கின்றதா?...... . ... தாய்மொழி வளராத நாடு, ஒருநாளும் உரிமை பெறாது. தாய்மொழி நாட்டம் உரிமை நாட்டமாகும். உரிமைக்கு முதற்படி தாய்மொழியோம்பும் முயற்சி. தமிழ் நாட்டார் தாய்மொழிமீது கருத்தைச் செலுத்துவாராக."[2]

1924ஆம் ஆண்டில் திரு.வி.க. எழுதிய இந்தக் குறிப்பிலிருந்து திலகர் வழியில் புதிய திருப்பம் பெற்ற தேசிய இயக்கம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிறந்துவிட்டதை உணர முடிகின்றது.

தேசிய இயக்கத்தின் ஒரு கூறுகப் பல மாநிலங்களிலே தாய்மொழிக்குத் தலைமை தருகின்ற பல — வித்தியா பீடங்கள் — கல்வி நிலையங்கள் ஏற்பட்டன. தமிழகத்தில் அப்படி ஒன்றும் ஏற்படவில்லை. திரு.வி.க., பாரதியார் ஆகியோர் எழுத்துகளை ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மையைத் தெளிவாக உணரமுடியும்! 'தேசக் கல்வி' என்ற தலைப்பிலே பாரதியார் எழுதியுள்ள கட்டுரையினைக் காண்க என்று காட்டுகின்ற அளவில் நிறுத்தி மேலே செல்லுகின்றேன்.

தாய்மொழியைப் புறக்கணித்த தேசிய இயக்கத்தின் பாவத்திற்குக் கழுவாய் தேடும் முயற்சிக்காகக் காலம் தந்த பரிசுதான் சிலம்புச்செல்வர் ம.பொ சி. அவர்கள்.

தமிழ்ப்பற்று என்ருல், ஏதோ தெருமுனையில் அரசியல் முழங்குவதும் — முடிந்தால் எவருக்கும் புரியாத நடையிலே எழுதிக் குவிப்பதுமாக வாழ்நாளைக் கழிப்பதில்லை. தேசியம் தழுவிய மொழிப்பற்று எப்படிப்பட்டவர்களை உருவாக்கும் என்பதைத் தமிழ்ச்சான்ருேர் திரு.வி.க. விளக்கியுள்ளார். பாரதியாரைப் பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரையில் பின்வருமாறு குறிக்கிருர் :

"தேசத்தின் பல கலைகளாம் பயிர்களை வளர்க்கச் செய்யும் உரிமைப் பாடல்களாம் அருவி, பாரதி என்னும் மலைவாயினின்றும் இழிந்தது. தேசக் கலைகளிடத்துக் கருத்தமையாது 'தேசம் தேசம்' என்று கூவுவது காக்கைக் கூட்டக் கூச்சலே யாகும். பாரதியார் பாடல்களில் தேசபக்தி ததும்புவதற்குக் காரணம் அவர் தேசக் கலைகள் மீது கொண்ட பக்தியாகும்."[9]

பண்பாட்டின் நிலைக்களன்களாகிய கலைகளை — கலை வழி யுதித்த தாய்மொழி இலக்கியங்களை திரு.வி.க.-வின் காலத்திலேயே தமிழகத் தேசியத் தலைவர்கள் போற்றவில்லை; புறக்கணித்திருக்கிருர்கள். ஆதலால்தான் தேசக் கலைகளிடத்தும் கருத்தமையாது, 'தேசம் தேசம்' என்று கூவுவது காக்கைக் கூட்டக் கூச்சலே என்று ஆத்திரப் படுகிருர். "வேறு பாஷைகள் கற்பாய் நீ வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ" என்று பாரதியார் விரட்ட நினைத்ததும் இந்தப் போலித் தேசியத்தைத்தான். 'ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர் கம்பனென்ருெரு மானிடன்' வாழ்ந்ததை அறியாத பேதமையினைப் பாரதியார் சாடியதும் இதனுல்தான்.

இந்தப் பின்னணியில்தான் தேசிய அரங்கிலே அப்பழுக்கற்ற தேசியப் பணியாற்றி விழுப்புண்கள் பெற்ற வீரத் திருவினராகிய சிலம்புச்செல்வர் தமிழன்னையின் சார்பில் நரசிம்மமாகக் காங்கிரசுக்குள்ளேயே ஓங்கிய உருவெடுத்து உரத்த குரல் கொடுக்கிருர். மொழிப்பற்றில்லாத தேசியம், "கானற் சலத்தை நாடினவன் கதையாக முடியும்" என்று தீர்ப்பளித்த திரு.வி.க.-வின் சாபத்திலிருந்து விடுதலை பெறத் தோன்றியவர் சிலம்புச் செல்வர்.

சிலம்புச் செல்வரின் வாழ்க்கையைக் கணித்தறிந்தால் முப்பெருந் தத்துவங்களில் அவர் வாழ்க்கை அமைந்து பொலிவதை உணரலாம். நாட்டுப்பற்று, கடவுள் பக்தி, மொழிக் காதல் — இம்மூன்று தத்துவங்களை அவர் வாழ்விலிருந்து பிரித்தல் இயலாது. செய்யும் பணி அரசியல் பணியாயினும் இலக்கியப் பணியாயினும் - தேசபக்தி, தெய்வ பக்தி, மொழிப்பற்று மூன்றும் பொலிகின்ற வகையிலேயே சிலம்புச் செல்வர் செயலாற்றக் காணலாம்.

சிலம்புச் செல்வரின் சிறப்பமைந்த வாழ்வினை உருவாக்கியவர்கள் காந்தியடிகள், பாரதியார், திரு.வி.க., ஞானியாரடிகள் போன்ற வர்கள். இவர்களையோ, பிறரையோ அவர் கணித்தறியும் முறையும் மேலே சொல்லிய மூன்று தத்துவங்களின் அடிப்படையில்தான்.

பாரதியாருடைய கவிதைகளைப் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் கணக்கில் அடங்கா. அத்துணைச் சொற்பொழிவுகளிலும் பாரதியாரின் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, நாதன் பற்று மூன்றும் வலியுறுத்தப்படும். இங்கே அவருடைய நூலிலிருந்து ஒரு பகுதியைக் காண்போமாக. பாரதி யாருடைய கவிதைகள் கால நிரல்படி வெளி வந்ததைப் பற்றிக் கணித்துத் தரும் சிலம்புச் செல்வரின் கூற்று இது :

> "முதல் தொகுப்பில் தேசபக்தி மட்டுமே மணந்ததென்றால் இரண் டாவது தொகுப்பில் தேசபக்தியும், தெய்வ பக்தியும் கலந்து மணக்கக் காண்கிறோம். ஆம், அடிமைப் பிணி தீர்க்கத் தோன்றிய மருத்துவராகிய பாரதியார், தேசப்பற்று என்னும் மருந்தை முதலில் வழங்கி, அதுபோதாதென்று கருதியவர்போல, தேச பக்தியோடு தெய்வபக்தியையும் குழைத்துத் தந்தார்....... பாரதியார், தம் கவிதைத் தொகுப்பு நூல்களிலே முதல் நூலில், தேசபக்தியை மட்டுமே போதித்தார். இரண்டாவது மூன்றாவது தொகுப்பு நூல்களிலே தேசபக்தியோடு தெய்வ பக்தியையும் குழைத்து வழங்கினார்......... பின்னர் வெளியான பாஞ்சாலி சபதத்தின் முகவுரையிலே தமிழ்ப் பற்றையும் கலந்து வழங்கக் காண்கின்றோம். ஆம், தமிழ்நாட்டு மக்கள் தேசத்தையும், தெய்வத்தையும்விடத் தமிழையே அதிகமாக நேசிப்பவர்கள் என்ற உண்மையைக் கொஞ்சம் காலந் தாழ்த்தியே உணர்ந் திருக்கிறார். இது தெய்வத்தின் திருவிளையாடல் போலும் ..... தேசபக்தியோடும், தெய்வபக்தியோடும் தமிழ்ப் பக்தியைக் கலந்து பாடும் பணியை 1915ஆம் ஆண்டுக்குப் பிறகே மேற் கொள்ளுகின்றார்."[4]

சிலம்புச் செல்வரின் இலக்கியப் பணி — மொழிப்பணி — தேசப் பணி — தெய்வப்பணி இவை சிறப்பதற்காகவே தமிழகத் தேசிய அரங்கிலே நாம் இதுகாறும் குறித்த குறைகள் தோன்றியன போலும்.

தமிழ்க் காவியங்களை மக்களிடையே விளக்கப் புகும்போதும் இலக்கண இலக்கிய சாத்திர தத்துவ நுட்பங்களை மட்டும் விளக்கினால் போதாது. இந்த நுட்பங்கள் கருத்திற்கொள்ளத் தக்கவை என்பதில் ஐயமில்லை. ஆனால், காவியங்களைப் பண்பாட்டின் களஞ்சியங்களாக— நாட்டுணர்ச்சி முதலான நல்லுணர்ச்சிகளின் உறைவிடங்களாகக் காணவேண்டும் ; காட்டவேண்டும். சிலம்புச் செல்வரின் இலக்கியப் பணி இவ்வகையில் ஒப்புயர்வற்றதாகப் பொலிகின்றது. 'வடவேங்

கடம் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்ற பகுதியைக் கற்றவர்களும் கற்பித்தவர்களும், 'வடக்கின்கண் வேங்கடம் தெற்கின் கண் குமரி — ஏழாம் வேற்றுமைத் தொகைகள்' என்று கண்டும் கற்பித்தும் வந்தனர். ஆனால், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. தொல் காப்பியத்திற்குப் பனம்பாரனர் வழங்கிய பாயிரத்தையோ,

> நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு..............

என்ற சிலப்பதிகார வரிகளையோ.

> நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
> நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
> மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
> மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

என்ற பாரதியார் கவிதை வரிகளையோ படித்தபோது சொற் பொருள் மட்டும் காணவில்லை; வடக்கே வேங்கடமும் தெற்கே குமரி யும் இருப்பது உண்மைதான்; திசை மாறவில்லை. ஆனால், தமிழ கத்தின் எல்லைகள் இவை என்று தொல்காப்பியர் காலத்திலிருந்து பாரதியார் காலம் வரை வரும் இந்த இலக்கியச் சொற்கள் நூல் வழக்கமாக மட்டுமே இருந்துவிடாமல், உலக வழக்காகவும் ஆக வேண்டும் என்றும் கண்டார் ம. பொ. சி. சொல்லுக்குப் பொருளும் தொடரிலக்கணமும் சொன்னால் போதாது—சொல்லுக்குப் பொருண் மையும், தொடருக்குத் தொடர்பான நிலவரமும் இல்லையென்றால் தமிழர் பெருமையெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாக மட்டுமே நிற்கும். இழந்தது போதாதென்று மேலும் இழந்துகொண்டே யிருக்கவேண்டும் என்று உணர்ந்தவர் ம. பொ. சி. ஆகையால், அவருடைய மொழிப் புலமையிலே அரசியல் கலந்தது; அரசியலிலே மொழி திட்பம் ஊட்டியது; தெய்வ நம்பிக்கை அவருக்குத் திறன் அருளியது. தெய்வ வலிமையை நம்பி—மொழிப் பற்றைக் கருவியாகக் கொண்டு நாட்டுப் பணி ஆற்றுகின்றவர் சிலம்புச் செல்வர்.

சிலப்பதிகாரக் காதலும் பாரதியார் கவிதைக் காதலும் வெறும் இலக்கியப் பணியாக மட்டும் நின்றுவிடாமல் தேசியம் கமழும் தெய்விக இலக்கியத் தொண்டாகச் சிலம்புச் செல்வரிடம் செழிப் புற்றுச் சிறந்தன. அவருடைய இலக்கிய ஆராய்ச்சியிலே இதுவும் ஒரு கூறு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

வள்ளுவர் குறள், இளங்கோவின் சிலம்பு, கம்பரின் காவியம், பாரதியார் பாடல்......எதை எடுத்தாலும் சோஷலிசம் எப்படி இடம் பெற்றுள்ளது, இன்றைய சூழலில் நாட்டுக்கு இந்த இலக்கியங்கள் தரக்கூடிய செய்திகள் என்ன.......என்ற கண்ணோட்டத்தில் 'புதிய பார்வை' பார்ப்பவர் சிலம்புச் செல்வர் அவர்கள்.

அவருடைய நூல்களாயினும், சொற்பொழிவுகளாயினும் நாம் ஏற்கெனவே குறித்துள்ள வண்ணம் மூன்று தத்துவங்களைக் கொண்டே அமைந்திருக்கும்.

இன்று பூம்புகார் பெருமைக்குரிய திருத்தலமாய்—பயணிகள் கட்டாயம் சென்று பார்க்கவேண்டிய கலைத்தலமாய் ஏற்றமும் தோற்றமும் பெற்றுப் புதுக்கோலம் புனைந்துள்ளது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் முயற்சி ஒருவகையில் வரலாற்றாய்வாளர்களுக்கு அக்கறை தந்து வந்தது உண்மைதான். ஆனால் இன்று எல்லோருமே சென்று காண விரும்புமளவுக்குப் புகார் சிறப்புப் பெற்றிருப்பது அங்கு எழுந்துள்ள எழுநிலை மாடமும் சிலப்பதிகாரக் கலைக்கூடமுமேயாகும். டாக்டர் கலைஞரின் அரசுக்குத் தமிழினத்தார் உளமார நன்றி செலுத்த வேண்டிய அற்புதப் பணியாகும் இது. சென்னைக் கடற்கரையிலே சிலம்பின் வென்ற சேயிழையின் வழக்குரை கோலமும், சிலப்பதிகாரச் செஞ்சொல் ஓவியம் வழங்கியருளிய இளங்கோவடிகளின் துறவுக் கோலமும் சிலையுருவிலே காணப்படுகின்றன. பெருமைக்குரிய இந்தப் பணிகளெல்லாம் நடைபெறக் காரணமான சூழ்நிலை உருவானது சிலம்புச் செல்வரின் திருப்பணி விளைவு என்று சொன்னால் நன்றியுள்ள தமிழ்நெஞ்சம் மறுக்காது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் (1892-இல்) சிலப்பதிகாரத்தின் முழு வடிவமும் டாக்டர் ஐயரவர்களால் முதற்பதிப்பாக வெளி வந்தது. இரண்டாவது பதிப்பு ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் கழித்து 1920-இல் தான் வெளி வந்தது. ஐயரவர்கள் பதிப்புக்கு முன் புகார்க்காண்டம் மட்டும் அடியார்க்கு நல்லார் உரையுடன் திரு. தி. க. சுப்பராயச் செட்டியாரால் 1880-இல் வெளியிடப்பட்டது. ஐயரவர்கள் பதிப்புக்கள் விவரம் : 1892, 1920, 1927, 1944, 1950, 1955, 1960, 1968.

நாட்டாரவர்கள் உரைப்பதிப்புக்கள் விவரம் : 1942, 1947, 1950, 1953, 1956, 1959, 1963, 1968.

சிலம்புச் செல்வர் 1945-46 முதல் சிலப்பதிகார வகுப்புகளும் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வருகிறார். முதன்முதலாக 1952 மார்ச்சுத் திங்களில் சென்னையில் சிலப்பதிகார மாநாடு சிலம்புச் செல்வரால் நடத்தப்பட்டது. சமயத் தொடர்பில்லாத இலக்கிய விழாவில் அடுக்கிய பல்லாயிரவர் கலந்து கொண்டது தமிழ் நாட்டில் அதுவே முதல் முறை என்றால் மிகையாகாது. அதன் பின்னர் அவருடைய ஆய்வுரையை ஏற்றுத் திரு. இராமலிங்கம் பிள்ளை என்ற பெரியவர் புகாரிலேயே அதே ஆண்டில் சிலப்பதிகார விழாவினை மிகச் சிறப்பாக நடத்தினர். அதன் பின்னர்த் தமிழர் வாழும் இடங்களில் நடைபெற்ற இளங்கோவடிகள் விழாக்களுக்கும் சிலப்பதிகார மாநாடுகளுக்கும் ஒரு கணக்கில்லை.

1946-இல் சிலப்பதிகார வகுப்புக்களும் சொற்பொழிவுகளும் சிலம்புச் செல்வரால் நடத்தப் பெற்றன ; எனினும், ஆயிரக்கணக்கில்

மக்கள் கூடியிருக்கும் மாநாடுகளிலும் விழாக்களிலும் சிலப்பதிகாரத்தைப் பரப்பத் தொடங்கியது 1952-ஆம் ஆண்டிலிருந்துதான். அதற்கு முன்னும் பின்னும் சிலப்பதிகாரம் பற்றி எழுதப்பெற்ற கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு :[5]

	1952-க்கு முன்	1952-க்குப் பின்
கட்டுரைகள்	36	228
நூல்கள்	20	85

ஆங்கிலம் முதலான அயல் மொழிகளில் வெளிவந்துள்ள சிலப்பதிகாரப் பதிப்புகள், நூல்கள், கட்டுரைகளை இந்தப் புள்ளி விவரத்தில் சேர்க்கவில்லை. அவற்றை இணைத்துப் பார்த்தாலும் 1952க்குப் பின்னர்த்தான் அயல்மொழி அறிமுகம் பெருகியுள்ளது. தமிழில் சிலம்புக் கட்டுரைகள் மிகுதியாக வெளியிட்ட இதழ் ''செந்தமிழ்ச் செல்வி'' யே. 1952க்கு முன் 18 கட்டுரைகளும், அதற்குப் பின் 49 கட்டுரைகளும் சிலப்பதிகாரத் தொடர்பாகச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வந்துள்ளன. 'செங்கோல்' என்ற தம் கிழமையிதழில் சிலம்புச் செல்வரவர்கள் தொடர்ந்து சிலப்பதிகாரம் முழுவதற்கும் உரை விளக்கம் எழுதி வெளியிட்டுள்ளார். திரு. காசிராசனின் ஆய்வடங்கல் வெளிவந்தபின் 'சிலப்பதிகாரத் திறனாய்வு' என்ற நூல் ம. பொ. சி. யால் வெளியிடப்பட்டுள்ளது. அண்மையில் விசயமங்கலப் புலவர் திரு. சுப்பிரமணியம் 'சிலம்புச் செல்வம்' என்ற தலைப்பிலே சிலப்பதிகார ஆய்வுத் துணைநூல் ஒன்றைச் சிறப்பாக வெளியிட்டுள்ளார். ......சிலப்பதிகார ஆர்வமும் அந்நூல் பற்றிய ஆராய்ச்சி முயற்சியும் சிலம்புச் செல்வரின் இலக்கியத் தொண்டு காரணமாகப் பெருகியுள்ளது என்பதை ஐயத்திற்கிடமின்றி உணர்த்துவன இப்புள்ளி விவரங்கள்.

சிலம்புச் செல்வரின் இலக்கியப் பணி சிலப்பதிகாரத்தோடு முடங்கிக் கிடக்கவில்லை. கம்பர் தரும் கவியின்பத்தை வடித்தெடுத்து வழங்கியுள்ளது அவர் எழுதுகோல்; வள்ளலார் அருட்பாவில் தோய்ந்து அவர் வகுத்துதவிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூல் மாநில, மத்திய அரசுகளின் நாட்டத்தில் பதிந்ததோடன்றிப் பாரத பெருநாட்டின் ஒப்பற்ற பரிசாகச் சாகித்திய அகாதெமியின் பரிசையும் சிலம்புச் செல்வருக்கு வழங்கியுள்ளது. இலக்கியச் செல்வமாகப் புறநானூறு, திருக்குறள் முதலாம் தொன்னூல்கள் தொடங்கிப் பாரதியார், நாமக்கல் கவிஞர் ஈறுகத் தண்டமிழ்க் கவிஞர்கள் வழங்கிய கவிதைகள் முடிய நெடிது பரந்து விரிந்துள்ள இலக்கிய நன்னிலம் முழுவதிலும் உழுது பயன் கண்டது அவருடைய செந்தமிழ் எழுதுகோல். ''விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்னும் ஆராய்ச்சி நூல் தமிழ் இலக்கிய வரலாற்று மாணவர்க்குத் தெளிவூட்டும் கருவூலம்; தமிழக வரலாற்றை மொழி மறந்து உருவாக்க நினைக்கும் பிழை நெறிப்பட்ட அறிஞர்களுக்கு அறமும்

நெறியும் காட்டும் ஒளிவிளக்கு. 'ஔவை-யார்' என்ற நூல் உலக அரங்கிலேயே நம் மூதாட்டிக்குத் தனியிடம் உண்டென்பதை நிறுவிக் காட்டும் திறனாய்வு நூல். சிறியனவும் பெரியனவுமாக அவர் வரைந்து வழங்கியுள்ள ஏறத்தாழ எழுபது நூல்களில் இலக்கியத்தின் ஆதிக்கமே பெருகியிருப்பதைக் காணலாம். அரசியல் எழுதினும் தமிழ் மரபு, தமிழ் இலக்கியம் இவற்றின் பின்னணியில் கணிப்பதே ம.பொ.சி.-யின் தனிச் சிறப்பு. தமிழ்ச் சான்றோர் திரு.வி.க. அவர்களுடைய 'தமிழ்ச் சோலை'யிலிருந்து நாம் இக்கட்டுரையில் காட்டிய மேற்கோள்கள் தமிழகத்தின் தேசிய அரங்கிலே இருந்த குறையைப் புலப்படுத்தின; அந்தக் குறையை நிரப்புதற்குக் காலம் தந்த பரிசாகக் கனிந்தவரே சிலம்புச் செல்வர் ம.பொ.சி. பாரத தேசியத்திலே தேசபக்தி, மொழிப்பற்று மூன்றும் மணக்கப் பணிபுரிந்தவர் சிலம்புச் செல்வர்.

அவருடைய எந்த நூலை எடுத்து ஆராய்ந்தாலும் இந்த மூன்று தத்துவங்கள் பொலியக் காணலாம். இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் எல்லாவற்றையும் ஆராய்வதற்கு இடமின்மை கருதி, ம. பொ. சி. யின் சிலப்பதிகாரப் பணியில் மட்டும் நாட்டத்தை நிறுத்தி, அதிலும் குறிப்பாகச் 'சிலப்பதிகாரத் திறனாய்வு' என்ற நூலிலே நம் எண்ணத்தைச் செலுத்துவோமாக.

சிலப்பதிகாரம் பற்றி ம. பொ. சி. எழுதியுள்ள நூல்கள் ஆறு. (1) சிலப்பதிகாரமும் தமிழரும் (2) வீரக்கண்ணகி (3) இளங்கோவின் சிலம்பு (4) மாதவியின் மாண்பு (5) கோவலன் குற்றவாளியா? (6) சிலப்பதிகாரத் திறனாய்வு (சிலப்பதிகாரம் முழுவதையும் உரை விளக்கத்தோடு செங்கோலில் வெளியிட்டது. இன்னும் நூல் வடிவில் வெளிவரவில்லை) வெளிவந்துள்ளனவற்றுள் இவ்வாண்டில் வெளிவந்த சிலப்பதிகாரத் திறனாய்வே பெரிய நூல். ஆதலால் அதனையே சிலம்புச் செல்வரின் இலக்கியத் திறனாய்வுக்கு எடுத்துக் காட்டாகக் கொண்டுள்ளேன்.

இந்த நூலில் மொத்தம் முப்பத்தைந்து கட்டுரைகள் உள்ளன. இந்த முப்பத்தைந்து கட்டுரைகளையும் பின்காணும் ஐந்து பொதுத் தலைப்புக்களில் வகுத்துக் கொள்ளலாம்.

1.	காப்பிய அமைப்பு பற்றி	8 கட்டுரைகள்
2.	பாத்திர ஆராய்ச்சி	12 கட்டுரைகள்
3.	தடைவழி ஆய்வு, புதுமை ஆய்வு	5 கட்டுரைகள்
4.	ஒப்பாய்வு	4 கட்டுரைகள்
5.	பொது	6 கட்டுரைகள்

பதிகம் இளங்கோ பாடியதா, உரைபெறு கட்டுரை ஒரு இடைச்செருகல், வஞ்சிக் காண்டத்தின் தேவை போன்ற கட்டுரைகள் முதல்

வகையில் அடங்கும். பொய்த் தொழிற் கொல்லன், சிலம்பில் அந்தணப் பாத்திரங்கள், வழக்குரைத்த கண்ணகி, சிலம்பில் சித்திராபதி இல்லாதது ஏன் போன்ற கட்டுரைகள் இரண்டாம் வகையில் அடங்கும். புகாரா, ஆரூரா, கண்ணகி திருமணத்தில் தாலி போன்ற கட்டுரைகள் மூன்றும் வகையின. படிக்கும் நாடகமும், நடிக்கும் நாடகமும், இளங்கோவும் கம்பரும் போன்ற கட்டுரைகள் நான்காம் வகையில் வரும். இளங்கோ துறந்தார், சிலம்பு ஒலிக்கட்டும் போன்ற கட்டுரைகள் ஐந்தாம் வகைக்கு உரியவை.

நூலில் உள்ள முப்பத்தைந்து கட்டுரைகளும், பல்வேறு சமயங்களில் எழுதப் பெற்றவை. நூலாக—ஒரே நூலாக எழுத வேண்டுமென்ற முனைப்பில் இருந்து எழுதப்பெற்றவை அல்ல. அவ்வாறு எழுதியிருந்தால் ஒருமையுணர்வுடன் உருவான 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு', 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' போன்ற நூலாகச் 'சிலப்பதிகாரத் திறனாய்வு'ம் அமைந்திருக்கும். ஆனால், இந் நூலில் உள்ள முப்பத்தைந்து கட்டுரைகளும் பல்லாண்டுகளில் பல்வேறு சமயங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளாலும் கட்டுரைகளாலும் உருப் பெற்றுள்ளவை. ஆதலின்—சில செய்திகள் திரும்பத் திரும்ப வருகின்றன. மேலும், கட்டுரைகளைத் தொகுத்த பாங்கில் கால நிரலோ அன்றிக் கருத்துவழி நிரலோ காண இயலவில்லை. பொருளடக்கம் என்று ஒரு பக்கம் இந்நூலில் அமையாவிட்டாலும் நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் பயன்செறிந்த பொருள் உண்டு என்பதை நூல் கற்போர் யாவரும் ஏற்பர்.

"பழுதற்ற முத்தமிழின் பாடல்" என்று சிலப்பதிகாரத்தைக் குறிப்பிடுகிறார் பண்டை உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார். அக்கருத்தினைச் சிலம்புச் செல்வர் மறுப்பவரில்லை; ஏற்பவரே. எனினும், சிலப்பதிகாரத்தின் செந்தமிழ்த் திறத்துக்குத் தம் சிந்தையைத் திறை கொடுக்கும் சிலம்புச் செல்வரின் கண்ணோட்டம் இயலிசை நாடகக் காட்சியைவிட அரசியல் பாங்குடையதாகவே அமைகின்றது; அதுவே அவருடைய ஆளுமைக்கு இயற்கையான கண்ணோட்டமாகும். 'சிலப்பதிகாரம் அப்பட்டமான ஓர் அரசியற் காப்பியம். சமயம் பற்றிய குறிப்புகளும் போதனைகளும் சிலப்பதிகாரத்தில் உண்டாயினும், அவை காப்பியத்தின் கருப்பொருளாகா. மாறாக, அரசியலிலுள்ள கேடுகளை அகற்றி, நாட்டில் நல்லாட்சி நிலவும்படி செய்ய இளங்கோ, சிலப்பதிகாரக் காப்பியத்தை இயற்றியருளினார்' எனவும்,[6] 'அதனை இயற்றிய கவிஞர் பெருமான் அரசியல் வாதி' எனவும்[7] சிலப்பதிகாரத்தையும் அதன் ஆசிரியரையும் மதிப்பிட்டுரைக்கிறார் சிலம்புச் செல்வர். அரசியல் தழுவிய ஆர்வமே சிலம்புச் செல்வராகச் சிவஞானத்தை மாற்றியது என்பதை விளக்க இந்நூலிலே இன்னும் பல இடங்கள் உண்டு. "....புலவர் பெருமக்கள் மட்டுமே சிலப்பதிகாரத்தின் சிறப்பை உணரலாயினர். அந்த நிலையை மாற்றி,

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணி ஆரம் படைத்த தமிழ்நாடு

என மதிப்புரை தந்து. சிலப்பதிகாரத்தின் சிறப்பை அரசியல் மேடையில் அரங்கேற்றி, என்னைப் போன்ற பாட்டாளிகளும் அந்தக் காப்பியத்தைப் படிக்கத் தூண்டினார் பாரதியார்"[8] என்று வரையும் ம. பொ. சி., பாரதிக்கு ஏற்பட்ட காதல், வெற்று அரசியல்வாதியாக இருந்த தம்மை எப்படி இலக்கிய—அரசியல்வாதியாக மாற்றியது என்பதைப் புலப்படுத்துகிறார். "இன்றைய தமிழகத்தில், இலக்கிய ஞானம் படைத்தபுலவர்களில் பெரும்பாலோர்க்கு அரசியல் ஞானமும் ஆர்வமும் இல்லை. அப்படியே அரசியல் தலைவர்கள் அமைச்சர்கள் என்போரில் பலருக்கு இலக்கிய ஞானமில்லை. புலமையும் புவியாளும் திறமையும் ஒருங்கே படைத்திருந்த இளங்கோவடிகள் இன்றைய புலவர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகின்றார்".[9]

சிலப்பதிகாரத்தினை 'அப்பட்டமான அரசியல் காப்பியம்' என்று கொள்ளுதற்கு ஒருகால் உள்ளம் தயங்கினாலும்,[10] பறிபோன தமிழகத்து எல்லைகளை மீட்பதற்குச் சிலம்புச் செல்வரிடம் அரசியல் ஆவேசம் கிளர்ந்தெழச் சிலப்பதிகாரம் தூண்டுகோலாக இருந்திருக்கிறது என்பதை ஏற்க எவரும் தயங்கமாட்டார்கள். "இன்றைய தமிழகத்தின் எல்லைப் போராட்டத்திற்கு உணர்ச்சியூட்டிய பெருமை கவிஞர் இளங்கோவடிகளுக்கே உரிமை"[11] என்று குமரி மீட்டுக் குமரன் மலையையும் மீட்கப் போராடிய சிலம்புச் செல்வர் சொல்வதை நன்றியுள்ள தமிழன் எவனும் மறவான். ஆம், சிலம்புச் செல்வருக்கு இலக்கியம் வெறும் பொழுதுபோக்காக இருந்ததில்லை. தமிழினமும் தமிழ்மொழியும் நலமுற்றுச் சிறந்தோங்க ஏதேனும் வழி துலங்குமா என்ற ஆர்வத்திலேயே எதனையும் கணிக்கும் ம. பொ. சி.க்குச் சிலப்பதிகாரமும் அவ்வகையிலேயே தோற்றமளிப்பதில் வியப்பொன்றுமில்லை. சிலப்பதிகாரத்தின் தனித்தன்மையைப் பல இடங்களில் விளக்கிச் செல்லும் அவர், ஓரிடத்திலே தமிழகம் தெய்வீக அரண்களை உடையது என்பதைச் சிலப்பதிகார வாயிலாகக் காட்டுகிறார் :

> " தமிழகத்தின் எல்லைகளுக்குத் தெய்வங்களைக் காவலாக்கி நமது தாயகம் வெறும் மண்திணிந்த நிலம் மட்டுமன்று; மக்கள் நிறைந்த நாடு மட்டுமன்று; இந்த இரண்டுக்கும் அப்பால் தெய்வநெறி தழைக்கும் திருத்தலமுமாகும் என்கிறார் இளங்கோ."

> "தெய்வங்களில் எல்லைகளில் காவல்புரியும் தெய்வத் தமிழ் நாட்டில் தெய்வங்களுக்கு மேலாம் பொதுத் தெய்வமாகக் கண்ணகியைப் புலனுக்குவது இளங்கோவடிகளின் எண்ணமாகும்."

> " இளங்கோவுக்கு முன்பிறந்த புலவர்களெல்லாம் தமிழகத்தின் எல்லைகளை 'வேங்கடம்—குமரி' என்றே குறிப்பிட்டனர். ஆம்; 'மலையரண், நீர் அரண் உடையது தமிழ்நாடு' என்று கூறிப் போயினர் : ஆனால் இளங்கோவடிகள் 'தெய்வீக அரண்களை உடையது' என்றார். அந்த அரண்களை யாரே அழிக்க முடியும்?"[12]

இளங்கோவின் புலமைக்குத் திருப்புகழ் பாடும் அருணகிரியாராகச் சிலம்புச் செல்வர் பல இடங்களில் காட்சியளிக்கிறார்.[13] அப்படிப் பழந்தமிழ்ப் புலவர் ஒருவரை இவர் பாராட்டும்போதும் இன்றைய தம் அரசியல் பணிக்கு ஏற்ற பின்புலம் அமைத்தே காண்கிறார். " தமிழ் மொழியின் ஆக்கத்துக்காகவே தமிழ்க் காவியங்கள் எழுந்தன, அவை நாளடைவில் கதை நூல்களாகக் கொள்ளப்பட்டன. தமிழின் ஆக்கம் அருக அருகச் சகோதரர்களின் கண்ணுக்குத் தமிழ்க் காவியங்களிலுள்ள தமிழணங்கின் இன்பக் கூத்துப் புலனாதல் அரிதாயிற்று. அவர்கட்குப் பெரிதும் கதைகளே புலனாகின்றன. ஆதலால், சகோதரர்களே! தமிழ்க் காவியத்தில் தமிழணங்கைக் காண எழுங்கள்; தலைவர்களே! அவளைக் காட்ட எழுங்கள்! அக்காட்சிக்கென எல்லாரும் ஒன்றி மாநாடு கூட்டுங்கள்........."[14] என்று திரு.வி.க. எழுப்பிய குரலுக்கு விடையளிக்கக் கால தத்துவம் உருவாக்கிய ம.பொ.சி. அவர்கள் செந்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை வெறும் கதையாக எப்படிக் காட்டுவார்? தமிழினத்தின் தேசியக் காப்பியமாகத்தான் காட்டுவார்.[15]

தமிழினத்தாரிடையே இனவுணர்ச்சி கிளர்ந்தெழுவதற்குச் சிலப்பதிகாரத்தைப் பயன்படுத்துகின்ற ம.பொ.சி. பாரதப் பெருநாட்டின் எல்லையை மறப்பவர் அல்லர். 'உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்' என்ற திருமொழியினை உருவாக்கிக் கொடுத்த சிலம்புச் செல்வர் கிணற்றுத் தவளை அல்லர், குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுபவருமல்லர். சிலப்பதிகாரத்தைக் குறுகிய தமிழ் வெறிக்கு அவர் பயன்படுத்தியதில்லை. சிலப்பதிகாரம் பயில்பவர் அரசியற் பூசல்களால் பாரதப் பண்பினை இழந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடையவர் ம.பொ.சி. " .. அரசியற் போராட்டங்கள் இருந்து வந்திருப்பதை இலக்கியங்களால் அறிகிறோம். ஆனால், அந்தக் காலத்தில்கூட வடக்குக்கும் தெற்குக்கும் கலாசாரப் போராட்டம் இருந்ததாக இலக்கியங்களில் சான்றில்லை. தென்னாட்டவர், வடநாட்டவரின் கலாசாரத்திற்கு மதிப்பளித்தனர். அப்படியே வடநாட்டவரும், தென்னாட்டவரின் கலாசாரத்துக்குச் சிறப்பளித்தனர்" எனவும்,[16] "........இந்தப் பகைமையையும் மீறி வடக்குக்கும் தெற்குக்குமிடையே கலாசார ஒற்றுமை இருந்தது என்பதனை உணர்த்துகிறார் இளங்கோ" எனவும்,[17] பாரத ஒற்றுமைப்பாட்டினைச் சிலப்பதிகார வாயிலாகப் புலப்படுத்துவதோடுமட்டும் சிலம்புச் செல்வர் நிறுத்திவிடவில்லை. வடக்குக்கும் தெற்குக்கும் சிலப்பதிகாரம் கலா

சாரப் பாலம் அமைத்தது என்றும் குறிப்பிடுகிருர். மேலும், இவ் வகையில் கம்பருக்கு வழிகாட்டியாகவும் இளங்கோ அமைந்ததை விளக்குகிருர்.[18] இந்தக் கலாசார உறவு வலிமைபெற்று ஓங்காவிடின் 'மேற்கும் கிழக்கும் இத்தீவை அடிமைகொண்டு. அதன்மீது அரசியல்-கலாசார வகையில் ஆதிக்கம் செலுத்தும் காலம் வரக்கூடும் என்று இளங்கோ அஞ்சினுர்,[19] என்று ம பொ.சி, எழுதும்போது பாரத நாடு ஒருமையுணர்வுடன் ஒற்றுமையாக நிலவவேண்டிய தேவையை உணர்த்துகிருர் என்பது தெளிவாகப் புலனுகிறது.

இலக்கியப் „புலமையால் அரசியலும், அரசியல் தொண்டால் இலக்கியமும் சிறப்புறும் என்பதற்குத் திலகர், திரு. வி. க. போன்ற பெருமக்கள் எடுத்துக்காட்டாக வாழ்ந்தனர். தமிழகத்தில் திரு.வி.க. வுக்குப் பின் அவர் காலத்திலேயே — அவருடைய கொள்கைகளின் வாரிசாகச் சிலம்புச் செல்வர் உருவானுர். சிலம்புச் செல்வரின் இலக்கிய ஆராய்ச்சியினை இந்த நோக்கில் கணித்துப் பாராவிடின் உண்மைச் சிவஞான வழியை உணர்ந்தவர்களாகவோ உணர்த்திய வர்களாகவோ ஆகமாட்டோம்.

இனி, புலமை வழியில் நின்றும் 'சிலப்பதிகாரத் திறனுய்வு' என்னும் நூலினை ஓரளவு காண்போமாக.

'உரைபெறு கட்டுரை ஒரு இடைச்செருகல்' என்னும் கட்டுரை ம.பொ.சி.-யின் இலக்கியத் திறனுய்வுக்கு நல்ல சான்ருகும். பொற்கொல்லன் ஒருவன் இழைத்த தவறு காரணமாகப் பாண்டி நாடே அவலக் களமாகிறது உயிர்கொடுத்துச் செங்கோல் நிறுவிய பாண்டியனுக்குப் பின் அரியணை ஏறிய வெற்றிவேற் செழியன் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று கள வேள்வி செய்து கழுவாய் தேடியதாக உரைபெறு கட்டுரை உரைக்கின்றது. இக்கருத்து இளங்கோவடிகளுக்கு ஏற்புடையதன்று என்பது ம.பொ.சி.-யின் முடிவு. இளங்கோ வடிகளிடம் கொண்ட கண்மூடித்தனமான பற்றுதலால் இந்த முடிவுக்கு ம.பொ.சி. வந்தார் என்று முடிவு செய்யவேண்டா! "ஒருவன் பொய் சொல்ல, இன்ஞெருவனுடைய உயிரை உண்பதற்கு மறுக்கும் பண்புடைய பூதத்தைக் காட்டும் இளங்கோவடிகள் ஒரு பொற்கொல்லன் செய்த தவறுக்காகப் பொற்கொல்லர் சாதியையே கொன்ருெழிக்கும் கொடுமையை அரச நெறியாகக் காட்டுவாரா?" என்பது இளங்கோ வடிகளின் இதயமறிந்த சிலம்புச் செல்வரின் வினு.[20] மேலும். கதைப் போக்கினை வைத்துப் பார்த்தாலும், பலிகொடுத்த செய்தி தவருனது என்பதை விளங்கிக்கொள்ளலாம். வடநாட்டுப் போர்க்களத்திலிருந்து செங்குட்டுவன் மீளும்போது வெற்றிவேற் செழியன் பொற்கொல்லரைப் பலியிட்டதாக மாடலன் வாயிலாகக் கேள்வியுறுகிருன். கண்ணகியின் மறைவின் பின்னர்ச் சில மாத எல்லையிலே முடிகிறது வடநாட்டு யாத்திரை. பன்னிரண்டு ஆண்டுகள் பாண்டிநாடு அவலப் பட்டதாகவும், அதன்பின்னர் வெற்றிவேற் செழியன் பத்தினித் தெய்வத்தின் சினம் தணிக்கப் பலிகொடுத்ததாகவும் உரைபெறு கட்டுரை

உரைக்கின்றது. குற்றம் புரிந்த பொற்கொல்லனுக்கு ஒரு பெயர் கூடத் தராத இளங்கோவடிகள்—அவன் தண்டனை பெற்றதாக வெளிப் படையாகக் கூறவில்லை. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு சிலம்புச் செல்வர் பின்வரும் கேள்வியை எழுப்புகிருர். "உண்மைக் குற்றவாளி தண்டனை பெற்றதாகக் கூறத் தவறிய இளங்கோ, அவன் சாதியையே தண்டிக்கச் செய்வாரா?"[21] இன்ெனொரு கேள்வியும் எழுப்பு கிருர். "தெய்வநிலை பெற்ற கண்ணகி, இலங்கையையும் சேர்த்து இந்திய உபகண்டத்து மன்னர்களையெல்லாம் வாழ்த்தி அவரவர் நாடு களில் பருவமழை தவருமல் பெய்ய வரம் தந்தாள் என்று கூறும் இளங்கோவடிகள், பாண்டிநாட்டில் மட்டும் தான் தெய்வநிலை பெற்ற பின்னரும் பசி, பஞ்சத்தையும், வெப்பு, குரு போன்ற நோய்களையும் தந்து மக்களைக் கொடுமைப்படுத்திஞள் என்று கூறுவாரா? கூறிஞல், அது முரண்பட்ட செய்தியாகாதா?"[22] பாண்டியன்மீது கொண்ட சினமே ஆறி அடங்கி, 'யான் அவன் மகள்' என்று கூறியருளிய பத்தினித் தெய்வத்துக்கே இந்தப் பலிச் செய்தி பொருந்தாது என்பதை நாமும் உணரலாம். வாதங்களை வகுத்துரைத்து உரைபெறு கட்டுரையும், நீர்ப் படைக் காதையுள் மாடலன் கூறும் பலிச் செய்தி பற்றிய பகுதியும் சிலப்பதிகாரத்தின் இடைச் செருகலாகத்தான் கொள்ளற்குரியன என்று முடிவு கட்டுகிருர் ம.பொ.சி.

"பொய்த் தொழிற் கொல்லன்' என்ற கட்டுரையும் சிலம்புச் செல்வரின் நுண்மாண் நுழை புலனுக்கு நல்ல சான்ருகப் பொலிகிறது. இளங்கோவடிகள் பாத்திரங்களைப் படைத்து உலவ விடுவதில் எத் துணைக் கவனம் செலுத்தும் இயல்புடையவர் என்பதை விளங்கிக் கொள்ளுதற்கு 'ஒரே காட்சியில் மின்னல்போலத் தோன்றி மறைந்து விடு'கின்ற[23] பொற்கொல்லனைப் பற்றி வரும் தொடர்களே போது மான சான்றுகளாக அமைகின்றன. அவனுக்கு ஒரு பெயர்கூடத் தாராமல் மறைக்கிருர் இளங்கோவடிகள். இச் சிறப்பினைச் சான் ருேர் குறிப்பிட்டுள்ளனர். சிலம்புச் செல்வர் அப்பாத்திரத்தின் இயல் செயல்களை ஆராய்ந்து சொல்லோவியம் தீட்டுகிருர் இங்குக் குறித்த கட்டுரையில். அக்கட்டுரை நயம் முழுவதும் விரித்துச் சொல்லத் தேவை யில்லை; பொற்கொல்லனைப் பற்றி வரும் தொடர்களைச் சிலம்புச் செல்வர் விளக்கியுள்ள பாங்கினை மட்டும் இங்கே காண்போம்:

"சிலப்பதிகாரத்தில் மொத்தமுள்ள முப்பது காதைகளில் 'கொலைக் களக் காதை,' 'வழக்குரை காதை' ஆகிய இரண்டு காதை களில் — எட்டு இடங்களில் மட்டுமே பொற்கொல்லனைப் பற்றிய குறிப்புகளைக் காண்கிருேம். அங்கெல்லாம் கவிக் கூற்ருகவே அவனது பெயர் குறிப்பிடப்படுகின்றது.

"........... ஏழிடங்களில் இரண்டிடங்களில் மட்டுமே தொழிலின் பெயரால், 'கைக்கோற் கொல்லன்,' 'பொன்வினைக் கொல்லன்' என்று குறிப்பிடுகிருர் இளங்கோ. பொற்கொல்லன் அரண்மனைச்

சிலம்பைத் திருடியவன் என்பதை நமக்குத் தெரிவித்த பின்னர்த் தம் கூற்றாகப், 'பொற்கொல்லன்' எனக் கூறவேயில்லை கவிஞர். மாறாக, கொலைத் தொழிலாளன் என்ற பொருளில், 'கருந்தொழிற் கொல்லன்' என்று மூன்று இடங்களிலும், கோவலன்மீது பொய்க்குற்றம் சாட்டினுதலால், 'பொய்த்தொழிற் கொல்லன்,' 'பொய்வினைக் கொல்லன்' என்று இரண்டிடங்களிலும் அவனைக் குறிப்பிட்டார் அடிகள் ....

"......வழக்குரை காதையில் . . தீர்ப்பளிக்குங்கால்... அரசன் கூற்றாகப் 'பொற்கொல்லன்' என்ற தொழிற்பெயரைப் பயன்படுத்தியுள்ளார் இளங்கோ. இதற்குக் காரணம் உண்டு".

"சிலப்பதிகாரத்தில் வரும் பொற்கொல்லன் கோவலனின் ஊழ்வினை பலிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பாத்திரமாவான்......[24]

"பொன்தொழில் என்ற சொற்றொடரில், ஒரு எழுத்தை மாற்றி பொய்த்தொழில் என்றாக்கி, அரண்மனைப் பொற்கொல்லனின் தொழிலையே மாற்றி விடுகின்றார். இப்படி மாற்றியது பொன்தொழில் செய்யும் குலத்தவர் களங்கப்படுவதைத் தவிர்க்கத்தான்".[25]

......இந்தக் கட்டுரையிடையே உரையாசிரியர்கள் தவறு செய்தனர் எனத் தக்க விளக்கம் தந்து நிறுவியும், கோவலனின் ஊழ்வினைக்காகவே மின்னலெனத் தோன்றி மறையும் பாத்திரமாகப் படைக்கப்படுகிறவன் எனக் காட்டியும் விளக்கும் திறம் மனத்துக்கு நிறைவும் இலக்கியச் சுவைஞனுக்குக் களிப்பும் தருகின்றன. பொற்கொல்லனைப் பொய்த்தொழிற் கொல்லனாகக் காட்டி, அக்காட்சி வழியே இளங்கோவடிகளின் பாத்திரப் படைப்புத் திறனை நிறுவியிருப்பதே இக்கட்டுரையின் மிகச் சிறப்பான கூறாகும்.

பலவகைச் சிறப்புக்களையும் உடைய 'சிலப்பதிகாரக் காப்பியத்திலே குறுநடை பயிலும் குழந்தை நடமாடக் காண்கின்றோமில்லை;[26] அதன் மழலைக் குரலைக் கேட்கின்றோமில்லை'. இதனைக் கதைப்போக்குக் காரணமாக ஏற்பட்ட குறைபாடு என்று குறிப்பிடும் சிலம்புச் செல்வரின் குறிப்பிலே ஓர் ஏக்கம் இழையோடுகிறது குழந்தை இல்லாத குறையினைச் சிலப்பதிகாரத்தில் காணும் ம. பொ. சி. அவர்கள் சிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், வில்லிபாரதம், நளவெண்பா ஆகிய நூல்களில் குழந்தைப் பாத்திரங்கள் நடமாடுவதை எடுத்துக் காட்டுகிறார்; தண்டியலங்கார இலக்கண வழியாக இக்குறையை ஏற்காவிடினும் இல்லறக் குறையாக இருப்பதை எடுத்துக் காட்டுகிறார். 'மணிமேகலை இல்லையா' என்று தடை எழுப்பக்கூடியவர்களுக்குத் தக்க விடையும் கூறுகிறார். இக்கட்டுரையில் பாத்திரம் என்றால் என்ன என்பதை மிக அற்புதமாக ஒரே வாக்கியத்தில் ம. பொ. சி. விளக்கியுள்ளார். காவியப் பாத்திரம், நாடகப் பாத்திரம்—இவற்றுக்கு இலக்கணம் வகுத்ததுபோல் அமைந்துள்ளது அந்த

வாக்கியம் : "பாத்திரம் என்றால், களத்தில் நடமாடி, கதை நிகழ்ச்சியிலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடி பிணைந்திருக்க வேண்டும்."[27]

இந்த நூலிலேயே நீண்ட கட்டுரை 'வழக்குரைத்த கண்ணகி' என்ற தலைப்பில் அமைந்துள்ளதாகும். சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதை சிறியது; ஆனால் அக்காதையினையே மிகவும் விரிவாக ஆராய்கிறார் ம. பொ. சி. அவருடைய அரசியல் ஆளுமை இலக்கியத்துள் நுழையும்போது நெஞ்சையள்ளும் பகுதியாக வழக்குரைக்கும் காட்சியைத்தான் ஈடுபாட்டோடு காணும். சிலப்பதிகாரத்தை அப்பட்டமான அரசியல் காப்பியமாகக் காணும் ம. பொ. சி. யின் நெஞ்சத்தை வழக்குரை காதை ஈர்த்ததில் வியப்பில்லை. இக்காதையினைப் பல்வேறு கோணங்களிலிருந்து விரிவாக விளக்கி ஆராய்கிறார் சிலம்புச் செல்வர். வழக்குரை காதையின் நாடகப் பாங்கு, சட்ட நுணுக்கத்துக்கு இடம் தந்து பொலிவும் சிறப்பு, பெண்மையின் இயல்பான நாணத்தையும் துறந்தே தீரவேண்டிய விதிவிலக்கான நிலைமை........ இப்படிப் பல்வேறு நோக்குகளில் காட்டும் காட்சிகள் பயில்வோருக்கு ஈடுபாடு ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

கண்ணகி வழக்குத் தொடுக்கிறாள். வழக்குரை காதை என்பதே கண்ணகி வழக்குரைத்ததைச் சொல்வதுதானே. ஆனால். அது முதல் வழக்கன்று, மேல் (அப்பீல்) வழக்கேயாகும். பல தவறுகளுடைய ஒரு வழக்கை முதலில் பொற்கொல்லன் பாண்டியனிடம் கொணர்ந்தான். அந்த வழக்கிலே தவறான தீர்ப்பு வழங்குகிறான் மன்னவன். அந்தத் தவறான தீர்ப்பின் மேல் வழக்கே கண்ணகி தொடுத்தது. ஆனால் இந்த அப்பீல் வழக்கிலே சில தனித் தன்மைகள் உண்டு. மூல வழக்கின்படி தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது — அதாவது கோவலன் கொலையுண்டான். தண்டனை நிறைவேறுமுன் மேல் வழக்குத் தொடர்வதுதான் வழக்கம். இங்கே அதற்கு இடமில்லை. 'மறு வழக்கில்' கோவலன் குற்றமற்றவன் என்று ஏற்பட்டாலும் திரும்பவும் அவன் உயிர்பிழைத்துக் கண்ணகியுடன் வாழ முடியாதபடி சந்தர்ப்பம் சதி செய்கிறது.[28] கண்ணகிக்கு ஏற்பட்ட மற்றொரு அவலம் : முதலில் மரண தண்டனை நிறைவேற்றிய மன்னனிடமே மறு வழக்குத் தொடர வேண்டியுள்ளது. அம்மட்டோ! இந்த மறு வழக்கில் குற்றம் சாட்டப்படுபவனே தீர்ப்புச் சொல்ல வேண்டிய நீதிபதியாகவும் இருக்கிறான்... . வழக்குரை காதையை இப்படி மிகுந்த சிக்கல் நிறைந்ததாக — எனவே, காப்பியச் சுவை செறிந்ததாகச் சிலம்புச் செல்வர் காட்டுகிறார். கொலைக்களக் காதைதான் உயிர்நாடிக் காதை என்று சொல்வோர் உண்டு. ஆனால் அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து வேரும் வேரடிமண்ணுமில்லாமல் ஆக்கப் போராடிய ம. பொ. சி.க்கு இந்தக் காதைதான் காப்பியத்தின் இதயப் பகுதியாகத் தோன்றும்.[29] விடுதலைப் போர்க்களக் கவிஞராகிய பாரதியாரையும் இந்த வழக்குரை காதைதான் கவர்ந்திருக்க வேண்டும் என்றும் சிலம்புச் செல்வர் குறிப்பிட்டுள்ளார்.[30]

வழக்குரை காதை பற்றி இத்துணை விரிவாக இதுகாறும் எவரும் எழுதவில்லை என்பது மட்டுமன்று; இத்துணை விளக்கமாகவும் எவரும் எழுதவில்லை என்று கூறின் மிகையாகாது. விடுதலைப் போரில் வெள்ளையாதிக்கத்தை எதிர்த்துப் போராடித் தழும்பேறியவர்; விடுதலைக்குப் பின்னும் ஆதிக்கம் என்னும் கொடுமை அரசியலிலோ சமுதாயத்திலோ, மொழித் துறையிலோ — எங்கிருந்தாலும் எதிர்க் குரல் கொடுத்து வழக்குத் தொடுத்துப் போராடி வருபவர்...... வாழ்க்கையே சத்திய சோதனையாகக் கொண்ட காந்தியடிகளின் வழியில் வளர்ந்த ம. பொ. சி. ஆதிக்க எதிர்ப்புப் போராட்டமாகவே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். அநீதி அழிய—ஆதிக்கம் அழியப் போராடும் கள நாயகருக்குக் கண்ணகியின் வழக்குரை காதையே சிலப்பதிகாரத்தின் இதயப் பகுதியாகத் தோன்றுவதில் வியப்பில்லை அவருடைய காட்சிக்குத்தான் அக்காதை இதயப் பகுதி யாகத் தோன்றுவதாக எண்ண வேண்டா; சிலப்பதிகாரக் கதையின் அமைப்புக்கே அஃது இதயப் பகுதியாக இயற்கையாகவே அமைந்து கிடக்கிறது. ஆனால், அது சிலப்பதிகாரத்தின் மையமாக அமைந் திருப்பதை எடுத்துக் காட்டுதற்குச் சிலம்புச் செல்வர் முற்றிலும் தகுதியுடையவர்; அவர் வாழ்வும் வழியும் அத் தகுதியை அவருக்கு வழங்கியுள்ளன.

சிலப்பதிகாரத்தின் செய்தியிலும் சீரிய கலைப்பாங்கிலும் ஈடுபாடு கொண்டு சிலம்புச் செல்வராக மலர்ந்த ம. பொ. சி. அவர்கள் கண் மூடித்தனமாக இளங்கோவடிகளைப் போற்றுகிறார் என்று எண்ணிவிட இடமில்லை. பொற்கொல்லர் ஆயிரவரைப் பலிகொடுத்ததாகச் சிலப்பதிகாரத்திலே காணப்படும் செய்தி இடைச் செருகலாக இருக்கவேண்டும் என அவர் கூறியதை முன்னே கண்டோம். இந்த நூலிலே 'இளங்கோவின் மறதி'[31] என்ற தலைப்பிலுள்ள கட்டுரை அவருடைய நடுவு நிலையை எடுத்துக் காட்டுதற்குத் தகுந்த எழுத்தோ வியமாகும். 'ஒருநாள் காலைப் பொழுதில் தன் கணவனைத் தழுவி, அவன் சிலம்பு விற்றுவர விடை கொடுத்தனுப்பிய கண்ணகி, அன்று மாலையில் தான் கண்டும் அவன் தன்னைக் காண முடியாது மாண்டு கிடப்பதைக் கண்டு, கடுந்துயர் கொண்டாள்' என்று எண்ணுமாறுதான் உரைகளும் மூலமும் அமைந்துள்ளன.[32] புதன்கிழமை காலையில் உணவுண்டு பிரிந்த கோவலன் அன்று மாலை கொலையுண்டான்; வியாழன் காலையில் செய்தியறிந்த கண்ணகி கொலைக்களத்தில் இரவு இருந்திருக்க வேண்டும்; வெள்ளிக்கிழமை முற்பகலில் வழக்குரைத்து, நகரைத் தீக்கிரையாக்குகிறாள் — இது சிலம்புச் செல்வர் தரும் கால நிரல். "நமது பக்திக்குரிய காப்பியமே யாயினும், திறனாய்வு நடத் துங்கால் பக்தியினின்று விலகி, அறிவுக்கண்கொண்டு மட்டுமே ஆராய வேண்டும்.......பக்தியானது இலக்கியத் திறனாய்வுக்குத் தடையாக இருந்துவிடக்கூடாது. இருந்துவிட்டால் தமிழ் இலக்கியம் வளர்ச்சி பெற முடியாது"[33] — இது சிலம்புச் செல்வரின் தெளிவுரை.

தாம் நினைத்ததே சரியெனச் சாதிப்பவர் சிறந்த திறனாய்வாளராக இருக்க முடியாது. தம் கருத்தினைப் புலவர்களிடையே அமைந்து அவர்களின் கருத்தையும் அறிந்தார். ஆம் பலருடைய கட்டுரைகள் ம. பொ. சி. யின் கட்டுரையால் எழுந்தன. அக்கட்டுரைகளின் கருத்தையும் கணித்தறிந்தே இறுதியாக இந்நூலிலுள்ள கட்டுரை இறுதி வடிவம் பெற்றிருக்கிறது.

'வழக்குரைத்த கண்ணகி,' 'இளங்கோவின் மறதி' ஆகிய இரு கட்டுரைகளிலும் சிலம்புச் செல்வரின் இலக்கிய நுட்பமும், பொலிவும், நடையும், வாதத் திறமும் மிகச் சிறப்பாக ஒளிர்கின்றன.

எல்லாக் கட்டுரைகளையும் பற்றி இங்கே கருத்துரைக்க நான் முயலவில்லை ; முடியாது.

தமிழ்நாட்டுப் பொதுவரங்கிலே, சிலம்புச் செல்வரின் தோற்றம் காலம் தந்த பரிசு என்பதும், காலத்தில் கனிந்த அப் பெருந்தகையின் ஆளுமை, தேசபக்தி, தெய்வ பக்தி, மொழிப் பற்று ஆகிய மூன்று தத்துவங்களால் உருவானது என்பதும், அவருடைய இலக்கிய ஆராய்ச்சிப் பணிகளில் அவருடைய ஆளுமை செறிந்து சிறந்துள்ளது என்பதும் இலக்கியப் புலமையில் நடுவுநிலைமை காப்பதில் கருத்துடையவர் என்பதும் ஒருவாறு சுருக்கமாகத்தான் நாம் இங்கே கண்டோம். ம.பொ.சி.-யின் இலக்கியப் பணிக்கு — திறனாய்வுத் திறத்துக்கு — இந்தக் கட்டுரை மிகச் சிறிய காணிக்கைதான்.

விடுதலைப் போர் முடிந்து — விடுதலையின் வெள்ளிவிழாவைக் கொண்டாடு முகத்தான் ஆக்கவழியில் நடைபெறும் இக்கருத்தரங்கிலே விடுதலைக் கள நாயகராகிய சிலம்புச் செல்வருக்கு இவ்வாறு ஒரு காணிக்கை செலுத்த வாய்ப்பளித்த தமிழ்த்துறைத் தலைவர்க்கும் துணை வேந்தர்க்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிக்குறிப்புகள்

1. ம.பொ.சி. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு : ப. 58, 62-63.
2. திரு.வி.க. தமிழ்ச்சோலை—முதற் பகுதி : பக்கம், 19-21.
3. திரு.வி.க. தமிழ்ச்சோலை—இரண்டாம் பகுதி : பக்கம், 323.
4. ம.பொ.சி. வி.போ.த.வ. வரலாறு : பக்கம், 71, 73-74.
5. ,, இந்தப் புள்ளி விவரங்களைத் தொகுக்க உதவிய நூல் : திரு. இரா. காசிராசனின் சிலப்பதிகார ஆய்வடங்கல் (கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு).
6. ம.பொ.சி. சிலப்பதிகாரத் திறனாய்வு : பக்கம், 9.
7. ,, ,, ,, 45.

8. ம.பொ.சி. சிலப்பதிகாரத் திறனாய்வு: பக்கம், 224
9. ,, ,, ,, 232.
10. ,, சிலம்புச் செல்வரே சிலப்பதிகாரம் பெரிதும் வற்புறுத்துவது அரசியலைவிட — ஊழைவிட — கற்பெனும் பண்பையே என வாதாடி நிறுவியுள்ளார் : பக்கம், 337-347. ஒருகால் பட்டிமன்ற அமைப்பின் சாபத் தீட்டோ!
11. ம.பொ.சி. சிலப்பதிகாரத் திறனாய்வு : பக்கம், 235.
12. ,, ,, ,, 250-251.
13. ம.பொ.சி சிலப்பதிகாரத் திறனாய்வு : பக்கம், 225-235, 333-336.
14. திரு.வி.க. தமிழ்ச்சோலை — முதற் பகுதி : பக்கம், 36.
15. ம.பொ.சி சிலப்பதிகாரத் திறனாய்வு : 225, 233.
16. ,, ,, ,, 306.
17. ,, ,, ,, 254.
18. ,, ,, ,, 253-256.
19. ,, ,, ,, 253-254.
20. ,, ,, ,, 23.
21. ,, ,, ,, 25-26.
22. ,, ,, ,, 25-26.
23. ,, ,, ,, 71.
24. ,, ,, ,, 59-60.
25. ,, ,, ,, 71.
26. ,, ,, ,, 73-74.
27. ,, ,, ,, 74.
28. ,, ,, ,, 190.
29 ,, ,, ,, 212.
30. ,, ,, ,, 173, 212.
31. ,, ,, ,, 116-138.
32. ,, ,, ,, 117.
33. ,, ,, ,, 135.

19

தமிழ் இலக்கியத் திறனாய்வு நூல்கள்

பேராசிரியர் ந. பிச்சமுத்து, *எம். ஏ.,*
தமிழ் இணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ் உயர் தனிச் செம்மொழிகளுள் ஒன்று. அதன் இலக்கிய வளத்துக்கு எல்லையில்லை. சங்க இலக்கியம் எந்த மொழி இலக்கியத் துக்கும் தாழ்ந்ததில்லை என்பது அறிஞர்கள் கண்ட உண்மை. ஆனால் திறனாய்வு இலக்கியம் தமிழர்களுக்குக் கைவந்த கலையாகத் தெரிய வில்லை.

இக் காலத்தில் இத்துறையில் எண்ணிலா நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இலக்கியத்தில் திறனாய்வு நூல்களை ஒரு புதிய வகையெனக் கூறலாம்.

திறனாய்வு என்பது வெளிவந்துள்ள நூல்களின் வலிவு மெலிவு களைக் காய்தல் உவத்தலின்றி எழுதுவதும் பேசுவதுமாகும். இவ்வாறு வெளிவந்துள்ள நூல்களின் வலிவு மெலிவு பற்றியது இக் கட்டுரை. அதாவது இதைத் திறனாய்வுக்குத் திறனாய்வு என்று சொல்லலாம்.

தமிழ் இலக்கியத் திறனாய்வு நூல்களைப் பற்றிப் பேசப் புகுமுன் தமிழர் தம் திறனாய்வுக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளுதல் பயனுடையதாகும்.

தமிழ் இலக்கியத் திறனாய்வு பற்றி இறுவேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. தமிழருக்குத் திறனாய்வு முறை தெரியாது; அது மேலை நாட்டாரால் அருளப் பெற்ற வரம் என்பது ஒரு கருத்து. தொல் காப்பியம், நன்னூல், தண்டியலங்காரம் போன்ற நூல்களில் சொல்லப் படாத திறனாய்வுக் கலையே இல்லை என்பது மற்றொரு கருத்து.

ஆங்கிலத்தில், இக்காலத்தில், வளர்ந்துள்ள அளவுக்குத் திறனாய்வு முறை பழங்காலத் தமிழருக்குத் தெரியாத ஒன்று என்பது அறிஞர்கள் கண்ட முடிவு என்றாலும் பழந்தமிழருக்குத் திறனாய்வு முறை தெரியாது என்பது அவர்தம் கொள்கையன்று.

தொல்காப்பியத்தில் 'என்ப', 'என்மனார் புலவர்', 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே' என்னும் தொடர்கள் நோக்கத்

தக்கன. தமிழருக்கு உரித்தாயிருந்த ஐந்திணை ஒழுக்கங்களுள் தலையாய களவுப் புணர்ச்சி, வடவர் தம் காந்தருவ மணம் போன்றது என்று ஒப்பிட்டுப் பேசுகிறார் தொல்காப்பியர்.

“அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ் துணைமையோர் இயல்பே”

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்னும் குறட்பாவும்,

“நவில்தொறும் நூல்நயம் போலும்”

என்னுந் தொடரும் இன்ன பிறவும் திறனாய்வு பற்றியவை அல்ல என்றாலும் உண்மைப் பொருளும் நயமும் காண்பது பற்றியவை என்பதை மறுக்க முடியாது.

நன்னூல் பாயிரத்தில் கூறப்படும் செய்திகள், இன்று வளரும் திறனாய்வு முறைக்கு ஏலாதென யார் கூற முடியும்? இலக்கியம் என்றால் என்ன என்பதற்கு ஏற்ற விடை கிடைக்காவிட்டாலும் நூல் என்பது என்ன என்னும் வினாவுக்கு

‘அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்’

என்று நன்னூல் விடை கூறுகிறது. நன்றாகச் சொல்ல வேண்டுமென்றால் இலக்கியம் நோக்கமும் பயனும் உடையதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

நூல் செய்வோரும் திறனாய்வாளரும் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளை

“எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேல் கொண்டு களைவே
தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலைத் துணிவே
பிறர்நூல் குற்றங் காட்டல் ஏனைப்
பிறிதொடு படான் தன்மதங் கொளலே”

என்று நன்னூல் நவிலும் திறன் அறிய வேண்டிய ஒன்று.

“குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்

வழூச்சொல் புணர்த்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்று பயன் இன்மை
என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே"

என்று கூறும் இலக்கணத்தை இக்காலத்துக்கு உதவாதென யார் மறுக்க முடியும்? நூல் எழுதும் ஆசிரியன் இக் குற்றங்கள் இல்லாமல் எழுத வேண்டும். கேட்போர் அதாவது ஆய்வோர் இக் குற்றங்கள் உள்ளனவா என அறிந்து இல்லையெனில் அரங்கேற்ற வேண்டும், அதாவது வெளியிட வேண்டும் என்பது இதன் பொருள்.

நூல்கள் குற்றங்கள் இல்லாமலிருப்பதோடு சில அழகுகளையும் பெற்றிருக்க வேண்டும் என்று நன்னூல் விதிப்பதைக் காண்போம்.

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலகம் மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே."

இவை நூலுக்கிருக்க வேண்டிய சிறப்பியல்புகள்.

இதுபோல் நன்னூல் பொதுப் பாயிரத்தில் கூறப்படும் ஏனைய செய்திகளும் திறனாய்வு முறைக்கு ஒவ்வாதெனல் இயலாது. இதைப் போல் தண்டியலங்காரத்திலும் சில திறனாய்வு விதிகள் கூறப் பெற்றுள்ளன.

இவையேயன்றி, மதுரையில் பழங்காலத்திலிருந்த மூன்று சங்கங்களில் தமிழ்க் கவிதைகளைப் பற்றிய ஆராய்ச்சி நடைபெற்ற செய்தியும் நம்மால் அறிய முடிகிறது.

"தவலரும் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ"

இலக்கியத்தை ஆய்ந்து மகிழ்ந்த செய்தியை நாலடியார் நவில்கிறது.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும் என்சிந்தை
உள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ"

என்னும் திருக்கோவையார் பாடலால் உயர்மதில் கூடலில் ஒண் தீந்தமிழ் ஆராயப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

"சென்றணைந்து மதுரையினில் திருந்தியநூல் சங்கத்துள்
அன்றறிந்து தமிழாராய்ந்து அருளிய அங்கண்ணர்"

என்னும் பெரியபுராணப் பாட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், தமிழ் நூல்கள் திறனாய்வு செய்யப் பெற்ற செய்தியைச் செப்புவதாகும்.

இவ்வாறு தமிழாராய்வதற்குப் பயன்பட்ட இடம் "சங்கப் பலகை" என்று குறிப்பிடப் பட்டது என்பதை

"முழுதுணர்ந்தருள் மலயநன்முனி மொழியு முத்தமிழும்
பழுதறும்படி புலவனேறிய பலகையொன்று உடையான்"

என்று வில்லிபுத்தூரார் குறிப்பிடுகிறார்.

சங்கப் பலகை விரிந்து இடங் கொடுத்ததென்பது தகுதிவாய்ந்த நூலாசிரியர் புலவராக ஏற்றுக் கொள்ளப் பெற்ற செய்தியே ஆகும்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ"

என்னும் சங்கப் பாட்டைத் திறனாய்வு செய்ததின் விளைவுதான், இறையனாருக்கும் நக்கீரருக்கும் இடையில் நடந்த வாதமாகக் கூறப்படும் 'தருமிக்குப் பொற்கிழி' அளித்த திருவிளையாடல் கதை. "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்னும் தொடரும் கண்ணின்று கண்ணறச் செய்த திறனாய்வையே குறிப்பதாகும்.

மேலும் திருவள்ளுவமாலையைக் கற்றவர் பலர் அறிவர். அதிலுள்ள வெண்பாக்கள் அனைத்தும் திருக்குறளைப் பற்றிய பாராட்டுரை என்பதனை மறுக்க முடியாது. இதைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தோன்றிய முதல் திறனாய்வு நூல் என்று சொல்லலாம்.

மேற்கூறப்பட்ட செய்திகள் தமிழர் திறனாய்வுக் கருத்துக்களே இக்காலத்துக்குப் போதுமானவை என்றோ முழு இலக்கியத் திறனாய்வு என்றோ கூறி விட முடியாது.

"காமம் செப்பாது கண்டது மொழிவதுதான் விமர்சனம். காமம் செப்புவது சுலபம். கண்டது மொழிமோ என்றால் அது கஷ்டமான காரியம்" என்று சிதம்பர ரகுநாதன் கூறுவதுபோல் பெரும்பாலான, பழைய, தமிழ் விமர்சனம் நம்பிக்கை அடிப்படையில்—அதாவது பக்தி மனப்பான்மையுடன் அமைந்தவைதான். குற்றமாக இருந்தாலும் நெற்றிக்கண்ணைக் காட்டி நிலை நாட்டுகிற கவிஞர்கள் பலர்.

"எண்ணிலா அருந்தவத்தோன்" என்று கம்பன் விசுவாமித்திரரைக் கூறுவதை வைத்துக் கொண்டு "எண்ணில் ஆவரும் தவத்தோன் நினைத்தால் காமதேனுவையும் கொண்டுவரும் தவசி

என்றும், எண்ணிலாத காமதேனுக்களையும் கொண்டுவரச் செய்யும் வல்லமை படைத்தவன் என்றெல்லாம் வலிந்து பொருள் கொண்டு கழைக் கூத்தாடும் செயல்கள்'' தாம் மிகுந்துள்ளன.

மாத்தியு அர்னல்டு என்பவர் ''இலக்கியம் வாழ்க்கையின் விமரிசனம்'' என்கிறார். ஹட்சன் ''இலக்கியம் வாழ்க்கையிலிருந்து தோன்றுவது—வாழ்க்கையோடு தொடர்புடையது'' என்கிறார்.

இலக்கியம் பொதுமக்களின் புனிதமான பணியாள் என்றும் சமுதாயச் சீர்திருத்த வழிகாட்டி என்றும் கூறுகிறார் செர்னி ஹெவ்ஸ்கி என்பவர்.

இவ்வாறு வாழ்விலிருந்து தோன்றிய, வாழ்வின் படப்பிடிப்பான இலக்கியம் படைத்த ஆசிரியர்கள் நமக்கு அவதார புருஷர்கள்! பெரும்பாலான புலவர்கள் தெய்வத்தின் திருவருள் பெற்றவர்கள்! நம் திறனாய்வாளர் பலர் இவர்கள் கவிதை பாடுவதற்குரிய காரணத்தையோ, அவர்தம் புலமை பற்றியோ பேசுவதைவிட அப் புலவர்களை மனித பிரம்மாக்களாகக் காட்டுவதில் சளைப்பதில்லை.

''எழுத்துக் கலைஞன் கடந்த கால வாழ்வை அறிந்து கொண்ட முறையில் பழமாகவும், எதிர்காலத்தின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் முறையில் வித்தாகவும் விளங்குகிறான். அவன் கடந்த காலத்தின் வாரிசு, வருங்காலத்தின் வழிகாட்டி'' என்பது ஒரு கொள்கை.

ஆனால் தமிழ் இலக்கிய ஆசிரியர் எத்தனை பேர் இந்த இலக்கணத்துக்குத் தகுதி படைத்தவர் என்பது எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம் விமர்சனத் துறையில் தலையிடத் தொடங்கியது. புதிய புதிய திறனாய்வுக் கொள்கைகள் தமிழிலும் தோன்றலாயின. திறனாய்வு நூல்கள் தோன்றிய வண்ணமிருக்கின்றன. எல்லா நூல்களையும் படித்து எழுதுவதென்பது இயலாத ஒன்று, எளிதாகக் கிடைத்த சில நூல்களே ஈண்டுப் பேசப்படுகின்றன.

வெளிவந்துள்ள ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு சிறப்பைப் பெற்றுள்ளது. கிடைத்தவை சில; கிடைக்காதவை பல.

திறனாய்வு என்பது மற்றக் கலைகளைக் காட்டிலும் கடினமானது. திறனாய்வுக்குத் திறனாய்வு என்பது மிக மிகக் கடினமானது. திறனாய்வாளன் என்பவன் திறனாய்வு இலக்கணத்தை உணர்ந்தவனாக இருக்க வேண்டும். ஆராய்ச்சித் திறனும் பரந்த அறிவும் விருப்பு வெறுப்பற்ற நோக்கமும் உள்ளவனாக இருக்க வேண்டும். அவனுக்கு அனுபவமும் தேவை. இலக்கியத்தையும் திறனாய்வு நூல்களையும் கற்ற

வனாக இருத்தல் வேண்டும்; ஊறித் திளைத்தவனாக, ஒப்பிட்டு உணர வல்லவனாக இருத்தல் வேண்டும்.

இந்த இலக்கணங்களைப் பெற்றுவிட்ட நோக்கத்தில் எழுதப்படுவதன்று இந்தக் கட்டுரை; கொடுக்கப்பெற்ற தலைப்பை மேலோட்டமாக அணுகும் ஒரு எல்லைக்குட்பட்ட சிறிய முயற்சி.

தமிழ் மொழியில் வெளிவந்துள்ள திறனாய்வு நூல்களைத் திறனாய்வு இலக்கணம், திறனாய்வு இலக்கியம் என இருவகையாகப் பிரிக்கலாம்.

திறனாய்வு இலக்கணம் என்பது இலக்கியத்தின் அமைப்பு முறைகளையும் வகைகளையும் விளக்குவது; எழுதுவோருக்கு, ஓரளவுக்கு இந்த இலக்கணம் அமையுமாறு எழுதவும் திறனாய்வாளனுக்கு விமரிசிக்கவும் துணைபுரிவது. அதாவது இலக்கியத்தில் அமைந்துள்ள கலைத்திறன், நடை, யாப்பு, ஓசை, உணர்ச்சி, கரு, கற்பனை, கருத்து, வகை முதலியன பற்றி விளக்குவது இலக்கணம்.

திறனாய்வு இலக்கியம் என்பது இலக்கியத்தின் வகையறிந்து நேரடியாக இலக்கியத்தை ஆய்வு செய்வது. மேற்கூறப்பட்ட இலக்கணங்கள் எவ்வாறு ஒரு இலக்கியத்தில் அமைந்துள்ளன என்பதையும், அவை அமையப் பெறுதலையும் விளக்குவது, டாக்டர் மு. வ. அவர்களின் இலக்கியத்திறன், இலக்கிய ஆராய்ச்சி போன்ற நூல்களும், அ. ச. ஞானசம்பந்தன் அவர்களின் இலக்கியக் கலையும், சிதம்பர ரகுநாதன் அவர்களின் இலக்கிய விமர்சனமும், மா. இராமலிங்கம் அவர்களின் நாவல் இலக்கியம் என்ற நூலும் இன்ன பிறவும் திறனாய்வு இலக்கணத்தில் அடங்கும்.

திறனாய்வு இலக்கியம் என்ற பிரிவில் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் இலக்கிய தீபம், இலக்கிய உதயம், டாக்டர் கைலாசபதியவர்களின் ஒப்பியல் இலக்கியம், இரு மகாகவிகள். மு. வ. அவர்களின் ஓவச் செய்தி போன்ற பல நூல்கள், கி. வா. ஜகந்நாதன் அவர்களின் தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், டாக்டர் மெ. சுந்தரம் அவர்களின் கலைஞரின் கவிதைச் சிற்பம், டாக்டர் சாலை இளந்திரையனின் சிறுகதை வளர்ச்சி, புதிய தமிழ்க் கவிதை, பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் திறனாய்வு நூல்கள் பலவும், இன்னும் இவை போல்வன பிறவும் இப்பிரிவுள் அடங்கும்.

முதற்கண் டாக்டர் மு. வ. அவர்களின் இலக்கியத்திறன் பற்றிச் சிறிது காண்போம். டாக்டர் மு. வ. அவர்கள் எதை எழுதினாலும் எளிதாகவும் இனிமையாகவும் செம்மையாகவும் சிறப்பாகவும் எழுதும் திறன் படைத்தவர்.

இவர் நூல் இலக்கியக் கலையின் இயல்பை ஆய்வதில் தொடங்குகிறது. "கலை அறிவியலினின்றும் மாறுபட்டது. அறிவும் ஆராய்ச்சியும்

கொண்டு வளர்வது அறிவியல். உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்வது கலை. மனித வாழ்வில் முதலிடம் பெறுவது உணர்ச்சி. அதற்குத் துணைபுரிவது அறிவு. இந்த உணர்ச்சிக்கு விருந்தளிப்பது கலை. அந்தக் கலையின் உயர்ந்த நிலையில் இருப்பது இலக்கியம். இலக்கியம் சொற்களாலான கலை. அதை நுகருவதற்குச் சொற்களில் பயிற்சி வேண்டும்'' என்று ஐ. ஏ. ரிச்சர்ட் கூறிய கருத்தை விளக்குகிறார்.

இலக்கியம் தோன்றிய காரணம், பாட்டுக்கும் உரைநடைக்குமுள்ள வேறுபாடு, பாட்டு வளர்ந்த நிலை முதலியவற்றை விளக்குகிறார்.

Poetry begins, I dare say, with a savage beating a drum in the jungle and it retains that essential of percussion and rhythm.

அதாவது காட்டு மிராண்டி ஒருவன் தன் பறையை அடித்து முழக்கிய இந்த நிலையில் பிறந்ததுதான் பாட்டு என்று டி. எஸ். எலியட் கூறிய கருத்தைக் கூறுகிறார்.

பாட்டு உணர்ச்சிப் பெருக்கின் ஊற்றெடுப்பு; அது உணர்ச்சியில் தோன்றிய அறிவு நிலையில் தொகுக்கப் பெற்றது என்று வோட்ஸ்வொர்த் கூறுவதைக் கொண்டு பாட்டை விளக்குகிறார்.

'Poetry is the spantaneous overflow of powerful feelings; it takes its origin from emotion recollected in tranquility.'

பழந்தமிழ் அகப் பாக்களில் பாலைத்திணைப் பாடல்களே அதிகம். ஏனைய திணைகளிலும் காதலரின் பிரிவுத் துன்பம் இடம் பெறுகிறது.

துன்பத்திலும் துயரத்திலும் பாட்டுக்கு உரிய உணர்ச்சி மிகுந்து நிற்கிறது. அதனால் பாலைத் திணைப் பாக்கள்—உணர்ச்சிப் பாக்கள் மிகுதியும் தோன்றின என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"Poetry is rhythmical. Rhythm secures the heightening of physiological consciousness so as to shut out sensory preception of the environment" என்று கிரிஸ்டோபர் காடுவெல் கூறும் கருத்தை,

"ஒலிநயம் கேட்பவரின் செவி வாயிலாக அவர் உடல் நரம்புகளை இயக்குவது. ஒலி நயத்துக்குப் புலன்களை உள்முகமாகத் திருப்பி விடும் ஆற்றல் உண்டு" என்று கூறி ஏற்றுக் கொள்கிறார்.

ஒலிநயம் அமையப் பெற்ற வடிவம், அதற்கு இன்றியமையா உணர்த்தும் ஆற்றல் முதலியன பற்றி ஆபர் குரோம்பியின் கருத்துக்களை விளக்குகிறார்.

இலக்கியத்தின் பல்வேறு இலக்கணங்களைக் கூறும் ஆசிரியர் இலக்கியத் திறனாய்வாளனுக்கு வேண்டிய செய்திகளையும் கூறுகிறார்.

அந்நூலுள் தாம் கூறும் கருத்துக்கள் அனைத்தையும் அரண் செய்யும் ஆங்கில மேற்கோள்களைக் காட்டி நிறுவுகிறார்.

இலக்கியக் கலை :

ஆசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், திறனாய்வு இலக்கண நூல்களுள் நல்ல, தரமுள்ள முழு நூல் என்று இதைக் கூறலாம். இந்நூல் பெரும் பாலும் அட்சனின் போக்கில் அமைந்தது. தமிழில் திறனாய்வு நூல் இல்லையென்னும் குறைபோக்கும் பெருநூல் இது.

இலக்கியம் மரபு வழி வந்தது. அதில் மரபு பின்பற்றப்பட வேண்டுமென்பது ஆசிரியர் கருத்து. வாழ்வும் இலக்கியமும் என்னும் தலைப்பில் உணர்ச்சி, கற்பனை, வடிவம் இலக்கியத்தின் தன்மை, அதன் நிலைபேறு பற்றியும் விளக்குவது முறையாக உள்ளது.

அடுத்து ஆசிரியர் அ. ச. ஞா. அவர்கள், திறனாய்வாளன், திறனாய்வின் வகை முதலியவை பற்றிக் கூறுமிடத்து, கவிஞன் சிறப்பை வெளியிடுவது மேதையின் வேலை; கவிஞனின் மட்டமான மனநிலையை வெளியிடுவது பேதையின் வேலை என்று கூறுகிறார்.

ஆசிரியரின் கருத்தை இங்குச் சரியாகப் புரிந்து கொள்ள முடிய வில்லை. யமகம், திரிபு, அந்தாதி பாடாதவர்கள் கவிஞர் அல்லர் என்றால் இதைக் கண்டிக்கக் கூடாது என்பதா? அல்லது

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்"

என்னும் குறளுக்கு மரபுரைகாரர்கள் கூறும் உரை காலத்துக்கு ஒவ்வாதது; ஒவ்வுமென்றால் அன்று முதல் இன்று வரை தோன்றி யுள்ள கல்வி அமைப்புக்களெல்லாம் அறிவற்ற செயலாகி விடும்" என்று இக்குறளுரைக்கு விளக்கம் தரக் கூடாது என்பது ஆசிரியர் கருத்தாக உள்ளதா என்பது புரியவில்லை.

நல்ல இலக்கியத்தைக் காலம் முடிவு செய்யும் என்று ஆசிரியர் கூறுகிறார். இதற்கேற்ப ஒரு 'காலத்தில் உயர்ந்ததாகக் கருதப்பட்ட தலபுராணங்களை இன்று திரும்பிப் பார்ப்பாரில்லை. இந்தத் தல புராணங்களை அன்று ஒருவன் கண்டித்ததாக வைத்துக் கொள்வோம். அது தவறு, கண்டித்தவன் பேதை என்று ஆசிரியர் நினைக்கிறாரா என்பது தெரியவில்லை.

இலக்கியம் சுவையை மட்டும் ஒன்பது வகைகளுடன் மேலும் ஒன்று தேடிக் கண்டறிந்து, கூட்டித் தந்தாலும் போதாது பயன் இருக்க

வேண்டும் என்றும், இலக்கியம் சமுதாயத்தின் அறிவாயுதமாக இருக்க வேண்டுமென்றும் அறிஞர் அண்ணு அவர்கள் கூறுகிறுர்கள்.

இந்த இலக்கணம் அமையப் பெருத இலக்கியத்தின் வலிவு மெலிவுகளைப் பேசவேண்டும் என்பது ஒரு சாரார் கொள்கை. பேராசிரியர் அ. ச. ஞா. அவர்கள் என்ன கருதுகிறுர்கள் என்பது தெரியவில்லை.

அடுத்து, கவிதைக் கலை, கற்பனை முதலிய தலைப்புக்களில் அரிய பல கருத்துக்களைக் கூறுகிறுர்.

புதினம், நாடகக் கலை, சிறுகதை முதலிய புதிய இலக்கியப் பிரிவுகள் பற்றி ஆசிரியர் கூறும் கருத்துக்கள் சிறப்பான முறையில் அமைந்துள்ளன.

டாக்டர் மு. வ. அவர்களைப் போலவே ஆசிரியர் அ. ச. ஞா. அவர்களும், தாம் கூறும் கருத்துக்களுக்கு அரணுக ஆங்கில ஆசிரியர்களின் கருத்துக்களைக் காட்டிச் செல்வது மிகவும் பயனுள்ள ஒன்று.

இவர்களின் நூல்களைப் படித்தால் அந்த மூலநூலைப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுவதோடு, அவற்றைப் புரிந்து கொள்ளவும் முடிகிறது.

இவர் நூல் தமிழ் மனத்துக் கொவ்வுமாறும் புரியுமாறும் அமைந்துள்ளது.

நாவல் இலக்கியம் :

ஆசிரியர் மா. இராமலிங்கம் அவர்கள், போற்றத்தக்க முறையில், புதினத்தின் முறை, அமைப்பு, வடிவம், உத்திக் கூறுகள் ஆகியவை பற்றி மேலைநாட்டுத் திறனுய்வாளர் கோட்பாட்டில் நின்று விரிவாக ஆராய்ந்துள்ளார்.

'பாத்திரப் படைப்பு', 'பாத்திரப் பேச்சு' இந்தத் தலைப்புக்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் புதிய எழுத்தாளருக்கு நல்ல வழிகாட்டி. நாவலில் கூறப்படும் வருணனைகளை மேற்கோள் காட்டி விளக்குகிறுர்.

கதை, பிளாட்—மேலும் விளக்கியிருக்கலாம்.

கலைச் சொற்களை வலிந்தும் மிகுதியாகவும் பயன்படுத்துவதாக ஒரு உணர்வு ஏற்படுகிறது.

திறனுய்வு இலக்கியம்

முதற்கண் சிதம்பர ரகுநாதன் அவர்கள் எழுதிய 'இலக்கிய விமர்சனம்' காண்போம். இந்நூலுள் விமர்சன இலக்கணப் பகுதியும்

உண்டு. மிகுதி பற்றித் திறனாய்வு இலக்கியமாகப் பேசப்படுகிறது. ஆசிரியர் கலையைப் பற்றிக் கூறும்போது அது யாராலும் விளக்கப்பட முடியாது என்பதை "இந்த விவகாரம் எந்தவிதச் சூத்திர வகுப்புக்குள்ளும் சிக்காது எச்சங்காட்டி ஏமாற்றித் திரியும் மோகினி மாயை" என்று கூறுகிறார். கலைஞர்களைப் பிழைப்புக்குக் கலைபடைப்பவர் என்றும், கூலிக்குத் தம்மை அடகு வைப்பவர் என்றும் இருவகையாகப் பிரிக்கிறார். இவர்களின் படைப்புக்களில் எந்த ஒரு கலையால் மனித சமுதாயத்துக்கு உதவி இருக்கிறதோ அந்தக் கலைக்கு மதிப்பு அதிகம் என்கிறார்.

"உணர்ச்சிக்குத் திருப்தி அளிப்பது கவின்கலை" என்றும் "மக்களுக்கு உதவுவது பயன்கலை" என்றும் கலையை இரண்டாகப் பிரிக்கிறார்.

"மேற்கத்திய கலை இயற்கையை அப்படியே மொழிபெயர்க்க எண்ணுகிறது. நமது கலை இயற்கையைத் தழுவி, தனது இதய பாவத்தையும் கலந்து தருகிறது" என்னும் செய்தி அறிய வேண்டிய ஒன்று.

கவிஞன் ஒரு குடிகாரன் என்னும் தலைப்பில் ஆசிரியர் கூறும் கருத்துக்கள் புரட்சிகரமானவை.

"நமது புலவர்களுக்கு ஈனக் கவலைகள் அதிகம். அந்தக் கவலையை மறப்பதற்குக் கடவுளோ, கள்ளோ, காமமோ கவிப் பொருளாய் நின்று அவர்களுக்கு உதவி இருக்கிறது" இவைகள் உணர்ச்சியைப், போதையைத் தரும் பொருள்கள்.

"கவிதைகள் வெறும் போதைப் பொருளாகப் போகாமல் சமூகத்திற்குத் தெம்பும் திறமும் தேடித் தரும் வழியில் மாற வேண்டும். அப்போதுதான் சமுதாயம் நோயற்று வாழ முடியும்" என்று கூறுகிறார்.

தமிழ் இலக்கியத் திறனாய்வில் மேலைநாட்டார் திறனாய்வு முறையான 'அளவுகோல்' சரியான கருவியாக முடியாது என்பது ஆசிரியர் கருத்து.

வசனம் என்ற தலைப்பில் தற்காலத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குக் காரணமானவர் சிலரைக் குறிப்பிடுகிறார். அதில், 'தமிழால் ஆகும்' என்று கூறி, உரைநடையில் எந்தக் கருத்தையும் கூறமுடியும் என்று நடைமுறையில் காட்டிய ஒரு பேரறிஞரின் உரைநடையை, அவர், ஏனோ முறையாக மதிப்பிடவில்லை.

சுருங்கச் சொன்னால் ஆசிரியரின் கருத்துக்கள் சில மிக நன்றாக இருப்பதைப் போலவே சில கருத்துக்கள் மாறுபாட்டுக்குரியவையாய் அமைந்துவிட்டதைப்போல் ஒரு உணர்வு ஏற்படுகிறது.

டாக்டர் கைலாசபதியவர்கள், 'இரு மகாகவிகள்', தாகூர், பாரதியார் — இவர்களின் கருத்துகளும் அவை தோன்றுவதற்குரிய காரணமான சூழ்நிலை பற்றியும் ஒப்பிட்டு விளக்குகிறார்'

தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் :

ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் கதையின் தோற்ற வளர்ச்சிகளை வரலாற்று முறையில் விளக்குகிறார். மூன்று நாவல்கள் என்னும் தலைப்பில், (1) பிரதாப முதலியார் சரித்திரம். (2) கமலாம்பாள் சரித்திரம். (3) பத்மாவதி சரித்திரம் ஆகியவற்றை ஆய்கிறார். பின்னர், சிவகாமியின் சரிதம், அலையோசை ஆகிய கல்கியின் இரு நாவல்களை ஆய்கிறார்.

முதலில் கதையைச் சுருக்கமாகச் சொல்லி, பின்னர், பாத்திரங்களின் குண இயல்புகளை விளக்குகிறார். இந்த நாவல்களில் படிந்துள்ள அக்கால அரசியல் சமூகச் சாயல்களை நல்ல முறையில் எடுத்துக் காட்டுகிறார்.

முதல் மூன்று நாவல்களை அவர் விளக்கும் விதம் நாவலைப் படிப்பது போன்ற எண்ணத்தையே உண்டாக்குகிறது. அம்மையப்பப் பிள்ளையின் இயல்பை நகைச்சுவை குன்றாமல் படைப்பாசிரியரைப் போலவே கூறுவது படித்தின்புறத் தக்கது.

ஆங்கில நாவல் இலக்கியத்தைப் பின்பற்றித் தமிழில் நாவல் வளர்ந்த வரலாற்றைத் தெளிவாக விளக்குகிறார். ஆரணி குப்புசாமி முதலியாரின் முயற்சி பற்றியும், வடுவூர் துரைசாமி ஐயரின் 'மேனகா', திகம்பர சாமியார் அல்லது கும்பகோணம் வக்கீல் முதலிய கதைகளைப்பற்றிக் குறிப்பாகச் சில செய்திகளைச் சொல்கிறார்; ஜே. ஆர் ரங்காராஜுவின், "இராஜாம்பாள், சந்திரகாந்தா" முதலிய நூல்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

கலைஞரின் கவிதைச் சிற்பம் :

டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் கவியரங்கக் கவிதைகளைப் பற்றி, டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் எழுதியுள்ள ஒரு சிறு நூல்.

பாரதியார், பாரதிதாசனுக்குப் பின் தமிழ்க் கவிஞர் வரிசையில் வெற்றி நடையிடுபவர் கலைஞர் கருணாநிதி. இவர் கவிதைகள் எண்ணிக்கையில் அதிகமில்லை என்றாலும், கவிதைச் சுவையாலும் சமுதாய உணர்வாலும் மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட்டன எனலாம்.

தற்காலத் தமிழ்க் கவிஞர்கள் பலர். அவருள், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் சுரதா, கவிஞர் கண்ணதாசன், கவிஞர் கருணாநிதி.

இவர்களுள், கவிஞர் சுரதாவின் கவிதை நல்ல அமைப்பும் ஓசையும் உடையது. அவர் படைப்பு, "கவிதை கவிதைக்காக" என்பதைப் போல் அமைந்துள்ளது. அதாவது, நல்ல தத்துவம் அதில் போதிய அளவு காணப்படுவதாகத் தெரியவில்லை.

கலைஞர் கருணாநிதியவர்களின் கவிதைகள் மனிதனின் இன்றைய தேவைகளை, விருப்பு வெறுப்புக்களை—அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றிப் பாடுகின்றன.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்களில் கவிதை அமைப்பு உண்டு; அன்றாடப் பிரச்சினைகள் உண்டு. என்றாலும், அவற்றுள் பல முன்னரே கூறப் பெற்ற கருத்துக்களைப்போல் காணப்படுகின்றன. அவர் கூறும் செய்திகளில் முரண்பாடுகள் அதிகம்.

இந்த முறையில் பார்த்தால், கவிஞர் கருணாநிதி அவர்களின் பாடல்களில் ஒரு வாழ்க்கைத் தத்துவத்தைக் காணமுடிகிறது.

புதியமுறைக் கவிதை எழுதுவதில் அவருக்கு ஒப்பானவர் யாருமிலர்.

அவர் கவிதை பற்றி டாக்டர் சுந்தரம் அவர்களின் விமர்சனத்தைக் காண்போம்.

விடுதலை வீரனைப்பற்றிய ஒரு பாட்டு :

"தலையறுத்த வீரர்களைப் பாடுவதால்
தளையகற்றிப் பாடுகின்றேன் நானும்—அவர்
தொடைதட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என்பாட்டும்—என் கவிதை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும்
நம்நாடு மொழி மானம் உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை ஒன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்க"

என்னும் கலைஞரின் பாட்டுக்கு டாக்டர் சுந்தரம் அவர்கள் கூறும் விளக்கம் நன்கமைந்துள்ளது.

"ஆற்றலுள்ள உணர்ச்சிக் கவிஞர்கள் மொழித்துறையில்—இலக்கியத் துறையில் புதிய மரபையே உண்டாக்குகிறார்கள் எனலாம். பெருங் கவிஞர்கள் மரபுக்குக் கட்டுப்படுவதில்லை. அவர்களுக்கு மரபு தான் கட்டுப்படவேண்டும். கலைஞர் மு. க. மரபை உடைக்கும் கவிஞர்" என்று கூறும் விளக்கம் பொருத்தமாக அமைந்துள்ளது.

திருப்புகழ் போன்ற சந்தக் கவிதைக்கு ஒரு எடுத்துக்காட்டு :

கத்திச் சுடர்
சுற்றிச் சுழல்
வற்றிப் பகை
வெற்றித் திரு
பற்றிக் கவி
கற்றுக் கொள
முத்துத் தமிழ்
முருகுத் தமிழ்

என்று கலைஞரின் சந்தப் பாட்டுக்குச் சான்று காட்டுகிருர். ஆசிரியரின் விளக்கங்களும் தமிழ் நடையும் படித்தின்புறத் தக்கவை

கவிஞரின் கவிதைகளில் கருத்துப் பரப்பு:

டாக்டர் சஞ்சீவி அவர்களின் ஒரு கட்டுரையில் கலைஞர் அவர்களின் கவிதையைப் பற்றிய கருத்து இது.

"கருத்துப் பரப்பு இலக்கியத்தில் இடம்பெறக் கூடாது என்பது ஒருசார் திறனாய்வாளரின் கொள்கை. ஆனால், அது வெறும் கொள்கை அளவில் இருக்கிறதேயன்றி நடைமுறையில் இல்லை என்றே சொல்லலாம். தமிழ் இலக்கியத்தில் ஆசிரியன் தன் கருத்தைப் பரப்பாமல் விட்ட இடம் ஒன்று காட்ட முடியுமா?" என்று கேட்கிருர்.

இவர் கேள்விக்கு விடை தருவது அவ்வளவு எளிதன்று. டாக்டர் கலைஞரின் பாடல்கள் பலவற்றை எடுத்துக்காட்டி விளக்கும் விதம் நயமாக அமைந்துள்ளது.

ஆராய்ச்சிக் கட்டுரை:

டாக்டர் சஞ்சீவி அவர்கள் இந்த நூலுள் ஐந்து அரிய தலைப்புக்களில் பல பயனுள்ள செய்திகளைக் கூறுகிருர். அவற்றுள், 'கட்டுரைக் கலை,' 'பதிற்றுப்பத்துள் மூன்றும் பத்து' ஆகிய தலைப்புக்கள் திறனாய்வுப் பகுதியைச் சார்ந்தவை எனலாம்.

அவற்றுள், கட்டுரைக் கலை என்னும் தலைப்பில் உரைநடை வளர்ச்சி பற்றி வரலாற்று நோக்கத்தில் குறிப்பிடுகிருர்.

"முற்றிலும் உரைநடையால் இயன்ற தமிழ்நூல்கள் — இன்று நாம் கருதுவது போன்ற உரைநடை நூல்கள் பழங்காலத்தில் இருந்தனவாகத் தெரியவில்லை" என்று உண்மையைப் புலப்படுத்துகிருர்.

நக்கீரர் முதல் மிக அண்மைக்காலம் வரை இருந்த சிறந்த தமிழ் உரைநடையாளர்களைக் குறிப்பிடுகிருர். பல்வேறு கட்டங்களில் உரைநடை அடைந்த வளர்ச்சிக்கு மேற்கோள் காட்டி விளக்கும் முறை நயம்பட அமைந்துள்ளது.

இந்த ஆராய்ச்சி ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வாழ்ந்தவர்களின் உரைநடை பற்றியிருப்பதால் சில பேரறிஞர்களின் உரைநடை இடம்பெறவில்லை போலும். சுருங்கச் சொன்னால் இது மிகவும் பயனுள்ள ஆராய்ச்சி. ஆசிரியரின் அழகு நடை நல்ல இனிய நடை.

'மூன்றும் பத்து' பற்றிய ஆசிரியரின் விளக்கம் படித்தின்புறத் தக்கது.

இலக்கிய தீபம்

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் பத்துப் பாட்டையும் தொகை நூல்களையும் கால ஆராய்ச்சியின் அடிப்படையில் ஆய்கிறார்.

திருமுருகாற்றுப் படையையும் நெடுநல் வாடையையும் இயற்றியவர் ஒருவர்தானா என்பதை ஆய்கிறார்.

அதியமான் அஞ்சியும் மௌரியர்களின் தென்னிந்தியப் படையெடுப்பும் வரலாற்றுக்குப் பயன்படும் கட்டுரைகள்.

திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் கால ஆராய்ச்சியின் முடிவு கருத்து மாறுபாட்டுக்குரியதென்றாலும் அவரின் அணுகுமுறை, வாதத் திறமை மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அவர் எழுத்தில் அவர்தம் ஆழ்ந்த அறிவும் பரந்துபட்ட புலமையும் வெளிப்படுதல் வெள்ளிடை மலை.

இலக்கியச் சிந்தனைகள்

திரு. வையாபுரிப் பிள்ளை இயல்பாகவே எதையும் ஆழ்ந்து நோக்கும் பேரறிவாளர். இந் நூலுள்ளும் அவரின் விளக்கங்கள் மிகவும் பயன் தரக் கூடியவை.

இலக்கியத்தின் பயன்பற்றிக் கூறும்போது, அது சுவையூட்டுவதாய், இன்புறுத்துவதாய் அமைய வேண்டும் என்கிறார் : "இன்ப துன்பங்கள் விரவிக் கிடக்கின்ற இந்த நனவுலகினின்றும் நழுவி ஓடிப்போய் இன்பமாயுள்ள கனவுலகிலே சில காலமேனும் மகிழ்ந்து வாழும்படிச் செய்வதுதான் உயர்தர இலக்கியத்தின் சீரிய மாண்பாகும்".

நடை பற்றிக் குறிப்பிடும்போது "ஆசிரியனின் ஆன்ம குணம் அமையும்படியாக எழுதுவதே" என்று கூறுகிறார்.

இலக்கியத்தின் பயன் என்ற தலைப்பில், "வாழ்க்கை இன்பத்தை நுகர்வதற்கும் வாழ்க்கைத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதற்கும் நமக்குக் கற்பிப்பதே இலக்கியம்" என்னும் டாக்டர் ஜான்சனின் கூற்றைக் காட்டி விளக்குகிறார்.

மேலும் இலக்கியத்தின் முதல் தோற்றம், தமிழிலக்கியத்தின் தொன்மை, இலக்கியமும் சமூகமும் போன்ற பல தலைப்புக்களில் அரிய பல செய்திகளை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இவர் ஆராய்ச்சியில் பல இடங்களில் கால ஆராய்ச்சி இடம் பெறுகிறது.

புதிய தமிழ்க் கவிதை

டாக்டர் இளந்திரையன் அவர்கள் நற்போக்கு இலக்கியம் என்ற ஆட்சியைப் புகுத்தியும் விளக்குகிறார்.

கவிஞன் என்பவன் நிகழ்காலச் சமுதாயத்தைப் புரிந்து கொண்டு வருங்காலச் சமுதாயத்துக்கு வழிகாட்டுபவன் என்று குறிப்பிடுகிறார்.

பாரதியின் பாடல்களில் சமுதாய உணர்வுள்ள பாக்களைக் காட்டி விளக்குகிறார். பாரதிதாசனின் பாக்களைப் பல்வேறு கோணங்களில் ஆய்கிறார். புதிய கவிதைகள் என்னும் தலைப்பில் நாட்டுக்கு வேண்டிய நல்ல கவிதைகள் பலவற்றைக் காட்டுகிறார்.

டாக்டர் அவர்கள் காட்டும் எண்ணற்ற புதிய பாடல்களின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிட்டிருந்தால் படிப்பவருக்கு மேலும் பயன் படலாம்.

இதுகாறும் கூறப் பெற்ற செய்திகள், எளிதாகக் கிடைத்த ஒரு சில நூல்களைப் பற்றி மேலோட்டமாகக் கண்டவையாம்.

இக்காலத்தில் பயனுள்ள புதிய இலக்கிய நூல்கள் பல தோன்றுவதைப் போல் திறனாய்வு இலக்கிய நூல்களும் தோன்றிய வண்ணமிருக்கின்றன. என்றாலும் மக்களிடம்—சிறப்பாக இளைஞர்களிடம் படிக்கும் பழக்கம் குறைந்துவிட்டதால் இந்த அரிய நூல்களின் பெருமை வெளிப்படாமல் கிடக்கிறது போலும்.

20

பாரதியாரின் விடுதலைப் பாடல்கள்

புலவர் மா. நன்னன், எம். ஏ.,
தமிழ் இணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

508 பக்கங்கள் கொண்ட சக்தி காரியாலயம் வெளியிட்ட பாரதியார் கவிதைகள் என்னும் நூலில் (சக்தி மலிவுப் பதிப்பு வரிசை 1; இரண்டாம் பதிப்பு, 11. 9. 57) தேசீயப் பாடல்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள், பிற என்னும் பகுப்புக்களில் தெய்வப் பாடல்கள் என்னும் பகுதி (94—204) 110 பக்கங்களில் அடங்கியிருக்கிறது. பல்வகைப் பாடல்களிலும் பல, சமயப் பொருள் பற்றியுள்ளன; முப்பெரும் பாடல்களிலும், பிறபாடல்களிலும் சமயக் கருத்துள்ள பாடல்கள் மிகுதியாக உள்ளன. இப்படிப் பெரும்பாலும் சமயக் கருத்துக்களையே பாடியுள்ள பாரதி 17 முதல் 93 பக்கங்கள் வரை அஃதாவது 77 பக்கங்களில் (தேசீய கீதங்கள்) நாட்டு விடுதலையுணர்வுக்காகப் பாடியுள்ள பாடல்கள் அடங்கியுள்ளன. இவற்றிலும் சமயக் கருத்துக்களில்லாமலில்லை. ஆகவே பாரதி ஒரு சமயப் புலவனாகவே விளங்குகிறான். சிலப்பதிகாரம் எனும் தமிழின் முதற் காப்பியம் சமயப் பொதுமை கொண்டதாயினும் அதுவும் சமயத்தைப் பரப்ப இலக்கியத்தை ஒரு கருவியாகவே கொண்டது. அக்கருவியை முழுக்க முழுக்கச் சமயத்தைப் பரப்பவே பயன்படுத்தியது மணிமேகலை. மணிமேகலை நடந்த அந்நெறியிலேயே தமிழிலக்கிய உலகம் கண்ணைத் திறவாது நடந்து சென்றது. அந்நெறியிற் செல்லாது சங்க இலக்கிய நெறியில் சென்றிருந்தால் தமிழிலக்கியச் சோலை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்ப்பது விழுமிய சுவையும் பயனும் பயப்பதாகும். எனவே பாரதியும் அந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு பாவலனாகவே காணப்படுவதில் வியப்பில்லையன்றோ!

தேசீய கீதங்கள் என்னும் தலைப்பிலுள்ள பகுதியில் (1) பாரத நாடு (2) தமிழ் நாடு (3) சுதந்திரம் (4) தேசீய இயக்கப் பாடல்கள் (5) தேசீயத் தலைவர்கள் (6) பிற நாடுகள் என்று ஆறு பிரிவுகளுள் 53 தலைப்புக்களில் பாடல்கள் உள்ளன. இவற்றுளொன்றுதான் விடுதலை என்பதாயினும் நாடு பற்றிய பாடல்களை எழுதிய பாரதியின் முதன்மை நோக்கம் நாட்டு விடுதலையேயாதலின் இப்பிரிவு பற்றிய இக்கட்டுரையும் இப்பெயர் பெறுவதாயிற்று.

பாரதியின் இப்பாடல்களைச் செத்த பாடல்கள் என்னும் கருத்து நிலவுகிறது. இவையும் பாடல்கள் என்பது உண்மையாதல் இவற் றிற்குச் சாவேது? "என்றுங் கிழியாதென் பாட்டு" என்றும், "மலரவன் வெற்றுடம்பு மாய்வனபோல் மாயாவே, சொற் கொண்டு, மற்றிவர் செய்யுமுடம்பு" என்றும் கூறிய சான்றோர் கருத்துக்கள் என்றும் மறையா உண்மைகளாகும். மாந்தருளத்தில் கற்பனையும், உணர்ச்சியும், நுகர்ச்சியும் உள்ள வரையில் இப்பாடல்களும் வாழும்.

பிற பல பாடல்களைவிடப் பாரதியின் பாடல்கள் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணம் நாட்டில் மிடுக்குடன் பரவியிருந்த விடுதலை யியக்கமும், அவை இசைப் பாடல்களாக அமைந்ததுமாகும். தேசீய இயக்கப் பாடல்கள் நாட்டில் செல்வாக்குடன் வாழ்ந்த இசை வண்ணங் களில் பாடப் பெற்றிருக்கின்றன. தமிழிலக்கிய நெறியில் இது ஒரு புது நெறியாதலினாற்றான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இவரைப் புதுநெறி காட்டிய புலவன் என்று புகழ்ந்தார். இங்கேயும் இவர் அக்காலத்தின் தூண்டலுக்கேற்பச் செம்மையாகத் துலங்கியிருக்கிறார் என்றுதான் கொள்ள வேண்டுமேயன்றி வேறன்று. பிற சமயங்களை யெதிர்த்துப் போராடிய தமிழிலக்கிய மரபு, நாட்டில் அக்காலத்தில் நிலவிய விடுதலை வேட்கை என்னும் வெள்ளத்தில் கலக்கப்பட்டிருக் கிறது. விடுதலைப் பாக்களின் நோக்கம் நாடு விடுதலையெய்திய பின் முற்றுப் பெற்றுவிட்டதாதலின் இவ்வகைப் பாடல்கள் பாரதிக்குப் பின்னால் மிகுதியாக வளரவில்லை. ஆயினும் அவ்விடுதலை வேட்கை சாதி, மதம், பெண்ணடிமை, ஏழ்மை முதலியவற்றில் படரத் தொடங்கி யிருப்பதையும் பாரதியின் பாடல்களில் காணலாம். ஆனால் அது செம்மையான முழு உருவம் பெற்றது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பாடல்களிலேதான்.

தமிழனுக்கு நாட்டுப் பற்றூட்ட வேண்டிய தேவை பிற்காலத்திற்றா னேற்பட்டது. நாடு அடிமைப் படாத காலத்திலோ, அடிமைப்பட்ட போதும் அதனை அடிமை நிலை என்றுணராத காலத்திலோ, உணர்ந்தும் அதிலிருந்து மீளலாம். மீள வேண்டும் என்னும் பேரவா ஏற்படாத காலத்திலோ நாட்டுப் பற்றுப் பாடற் பொருளாக இருக்க முடியாது. பாரதி வாழ்ந்த காலம் அவ்வேணவா எழுந்துவிட்ட காலமாதலின் நாட்டுப் பற்று ஒரு சிறந்த பாடற் பொருளாயிற்று. நாட்டுப்பற்றுதான் விடுதலையுணர்வுக்கு அடிப்படையாதலின் விடுதலையுணர்வைப் பரப்பத் தொடங்கிய பாரதி நாட்டுப்பற்றையும் பாடினான்.

எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்தது மிந் நாடே—அதன்
முந்தையர் ஆயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந் நாடே—அவர்
சிந்தையி லாயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந் நாடே (பக்கம் 18)

என்னும் வந்தே மாதரப் பாட்டில் நாட்டுப் பற்றுக்குக் காரணங் கூறுகிறார். நாம் ஏன் இந்நாட்டிடத்துப் பற்றுக் கொள்ள வேண்டும்; இதற்கும் நமக்குமென்ன தொடர்பு; என்று வினவி நம் முன்னோர்கள் இந்நாட்டிற்றான் செம்மையாக ஓங்கி வாழ்ந்தனராதலின் நாமும் அகப்புற வாழ்வில் இன்றைய உலகிலோங்க வேண்டுமாயின் அதற்கு மிந்நாடே உதவ வல்லதென்று காரணங் காட்டி இந்நாட்டிடத்துப் பற்று வைக்க வேண்டுமென்று பாரதியார் கூறுகிறார். காக்கைக்குந் தன் குஞ்சு பொன் குஞ்சென்னும் முறையில் இந்நாடு நமது பற்றுக் குரியதென்று கூறுகின்றாரோ என்னும் எண்ணம் யாருக்குந் தோன்றி விடக் கூடாதென்று கருதிய பாவலர்

1. பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
 பாரத நாடு.

ஞானத்திலே பரமோனத்திலே—உயர்
 மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
 கவிதையிலே உயர்நாடு (பக்கம் 19)

என்றும்,

2. மன்னுமிமயமலை எங்கள் மலையே
 மாநில மீதிது போற் பிறிதில்லையே
இன்னறு நீர்க் கங்கை யாறெங்கள் யாறே
 இங்கிதன் மாண்பிற் கெதிரது வேறே (பக். 23)

என்றும்,

3. தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
 சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
 இயல்பின ளாமெங்கள் தாய் (பக். 19—26)

என்றும்,

இந்திய நாட்டின் மக்கட்பண்பு, இயற்கைச் சிறப்பு, தொன்மை முதலியவற்றை விதந்து கூறி மேலும் அதன் பல்வேறு சிறப்புக் களையும் பாரதமாதா நவரத்தினமாலை, பாரத தேவியின் திருத் தசாங்கம் என்பவற்றால் இலக்கிய மரபுப்படியும் போற்றிக் கூறுகின்றார்.

இவ்வாறு நாட்டுப்பற்றை வலுவான அடிப்படையின் மீது எழுப்பிய ஆசிரியர் பின் இந்நாட்டின் விடுதலை வேட்கையை எழுப்ப முனைகின்றார். நாட்டின் அருமை பெருமைகளை உணர்ந்தாற்றான் நாட்டை அடிமை நிலையிலிருந்து மீட்க வேண்டுமென்று தோன்றுமாத லின் இம்முறையைக் கையாள்கிறார் பாரதியார்.

இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி இனி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த் திரு நாடெனில் இனிக்கையை விரியோம் (பக். 23)

என்னும் பகுதி மேற்கூறிய கொள்கைக்குரிய எடுத்துக் காட்டாகும். விடுதலையுணர்வென்பது உயிர்களின் இயற்கையுணர்வுகளுளொன்றாகும். மண்ணுள் மறைந்திருந்து தோண்ட வெளிப்படும் நீர் போல், மக்களுள்ளே மறைந்திருந்து கல்வியால் வெளிப்படும் அறிவுபோல், மாந்தர் தம் பண்புள் மறைந்திருந்து தூண்டலால் வெளிப்படும் ஒருணர்வே விடுதலை உணர்வு. மண்ணுக்குள் நீரின்றேல் தோண்டி அதனை வெளிப்படுத்த இயலாது. அவ்வாறே மாந்தர்தம் பண்புள் விடுதலை (அ) உரிமை வேட்கையில்லையாயினும் அதனைப் புறத்திலிருந்து எவ்வுணர்ச்சியாலும் எழுப்பவோ, ஊட்டவோ இயலாதென்பது ஒருதலையாகும். அதனாற்றான் ஒரு இயக்கம் பாரதியின் பாடல்களின் உதவியால் தமிழ் நாட்டில் விடுதலை வேட்கையை எழுப்ப முடிந்தது.

பாரத நாட்டிற்கே விடுதலை வேட்கை மங்கிவிட்டதாகப் பாரதியார் உணர்கிறார். தம்மனைய மக்களுக்கு உரிமை வேட்கை ஏற்பட்ட பின்னும் நாடு கிளர்ந்தெழாததைக் கண்ட பாரதியார் நாட்டையே தட்டியெழுப்புகிறார். "பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி" என்னும் பாட்டில்,

பொழுது புலர்ந்தது யாம் செய்தவத்தால்
புன்மையிருட் கணம் போயினயாவும் (பக். 28)

என்று தொடங்கி,

விழி துயில்கின்றவனை இன்னு மெந்தாயே
வியப்பிது காணப் பள்ளி எழுந்தருளாயே (பக். 29)

என்று வியந்து,

மதலையர் எழுப்பவும் தாய் துயில்வாயோ?
மாநிலம் பெற்றவள் இஃதுணராயோ (பக். 29)

என்று வினவி,

குதலை மொழிக் கிரங்கா தொரு தாயோ
கோமகளே பெரும் பாரதர்க்கரசே (பக். 29)

என்று இடித்து விளித்து,

இதமுற வந்தெமை அண்டருள் செய்வாய்
ஈன்றவளே பள்ளி எழுந்தருளாயே (பக். 30)

என்று உருவகத் தாயை உறக்கத் தினின்றெழுப்பு முகத்தான் இந்திய மக்களின் உள்ளத்தே மறைந்து கிடந்த விடுதலை வேட்கையை வெளிப் படுத்துகிறார் ஆசிரியர்.

அடுத்து, விடுதலை வேட்கையின் புறத்தூண்டற் குறியாகத் திகழும் கொடியைப்பாடி அதனைப் பல்வேறு வகையானும் பிரிந்து கிடக்கும் மக்கள் யாவரும் ஒன்றுகூடிக் காக்க வேண்டும் என்னும் கருத்தைத் "தாயின் மணிக்கொடி பாரீர்" (பக். 35) என்னும் பாடலால் கூறுகிறார்.

பின்னர், பாரத சனங்களின் தற்கால நிலை என்னும் பாட்டில் இந் நாட்டு மக்கள்பால் மண்டிக் கிடக்கும் அறியாமை, மூட நம்பிக்கை, அச்சம், அனைய குறைகளை எடுத்துக் காட்டி அவர்களைத் திருத்தி மக்க ளாக்கி விடுதலைப் போருக்கும், விடுதலை பெற்ற பின் உரிமை வாழ்வுக் கும் ஆயத்தப்படுத்தும் திறம் அருமை வாய்ந்ததும், பாராட்டத் தகுந் ததுமாகும். புண்ணை வைத்துப் புனுகு தடவும் பணி பாரதி விரும்பாத பணி போலும். இவை நீங்காவிட்டால் விடுதலை பெற்றாலும் மாந்தர் நிலைத்த உரிமை வாழ்வு வாழ முடியாததென்பது தெளிவென்பதை நாம் இன்றும் உணர்கின்றோம் அன்றோ?

நெஞ்சு பொறுக்கு தில்லையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்க ளென்பார்—இந்த
மரத்தி லென்பார்; அந்தக் குளத்திலென்பார் (பக். 36)

என்றும்,

தந்த பொருளைக் கொண்டே—ஜனம்
தாங்குவ ருலகத்தில் அரசரெல்லாம்;
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார் (பக். 37)

என்றும்,

கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு
கோடி யென்றாலது பெரிதாமோ,
ஐந்து தலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார் (பக். 37)

என்றும்,

தோத்திரங்கள் சொல்லி அவர்தம்—தம்மைச்
சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார் (பக். 37)

என்றும்,

கண்ணிலாக் குழந்தைகள் போல்—பிறர்
காட்டிய வழியிற் சென்று மாட்டிக் கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலா யிரங்கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போல் வாழ்வார் (பக். 38)

என்றும் கூறி மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற இந்நாட்டை உலைப் பொருளாக்கி உருக்கி மாசு போக்க அவர் மேற்கொண்ட முயற்சி நன்கு அறிந்து மேற்கொண்டும் தொடரத் தக்கதாகும்.

நாட்டு மக்களைப் புத்துருக்குப் பொற்சிலை யாக்க விரும்பிய பாரதியார் அவர்களுக்கு உரிமை வாழ்வின் அருமை பெருமைகளை எடுத்துக்கூறி அதன்பால் ஆர்வமுட்டுகிறார்.

"வீர சுதந்திரம் வேண்டிநின்றார்" (பக். 53) என்னும் பாட்டில்

விண்ணி லிரவி தன்னை விற்று விட்டெ வரும் போய்
மின்மினி கொள்வாரோ? (பக். 53)

என்றவாறு கூறி,

அக்கா அக்கா என்று நீ அழைத்தால்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா, மிளகா, சுதந்திரம் கிளியே

என்று பாரதிதாசன் வினவுமாறு போல் வீரசுதந்திரம் என்று பெயரிட்டு அதன் பெருமையைக் கூறிய ஆசிரியருக்கு நாட்டு நடப்பு, தளர்ச்சியைத் தந்து தன்னம்பிக்கையை இழக்கச் செய்தது போலவும் அதனைற்றான்.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்; கருகத் திருவுளமோ?

என்றும்,

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ
(பக். 54)

என்றும் கூறி கடவுளை இரந்து வேண்டி, (பக். 54)

என்று தணியு மிந்தச் சுதந்திர தாகம்
என்று மடியு மெங்கள் அடிமையின் மோகம் (பக். 55)

என்று வினவி,

நின்னருள் பெற்றிலாதார்
நிகரிலாச் செல்வரேனும்

பன்னருங் கல்வி கேள்வி
    படைத்துயர்ந்திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
    பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
    அணிகள் வேய் பிணத்தோடொப்பார். (பக். 55)

என்று விளக்கி உரிமை வாழ்வின் இன்றியமையாச் சிறப்பைத் தெளிவாக விளக்குகிறார். மேலும், அவ்விடுதலை யாவர்க்குமாம் என்பதனைப்,

பறையருக்கு மிங்கு தீய புலையருக்கும் விடுதலை (பக். 57)

என்னும் பாட்டிற் கூறுகிறார்.

மேற்றிசைப் பல நாட்டினர் வீரத்தால்
பேற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்
கூற்றி னுக்குரியர் கோடி கொடுத்தும் நின்
பேற்றினைப் பெறுவே மெனல் பேணினர் (பக். 50)

என்று பிறநாட்டார் விடுதலைப் பேறு பெற்றதைக் கூறி மகிழ்ந்து,

அன்ன தன்மை கொள் நின்னை அடியனேன்
என்ன கூறி இசைத்திட வல்லனே?
பின்ன முற்றுப் பெருமை யிழந்து நின்
சின்ன மற்றமி தேயத்தில் தோன்றினேன். (பக். 57)

எனக் கையற்றிரங்குமாசிரியர் பாரதியார்,

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திர மடைந்து விட்டோமென்று (ஆடு)
பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே

என்றும்,

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமம் என்பது றுதியாச்சு

என்றும்,

உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்தோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்

என்றும் கூறி,

நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்—இந்தப்
பூமியி லெவர்க்கு மினி அடிமை செய்யோம் (பக். 58)

என்று விடுதலை பெற்ற உரிமை வாழ்வினைக் கற்பனையால் வாழ்ந்து ஆடிப் பாடிக் களிக்கின்றார்.

தேசிய இயக்கப் பாடல்கள் பாடி, எழுந்த உணர்வை வளர்த்து தேசியத் தலைவர்களைப் பாடி அவ்வுணர்வுடையாரைப் போற்றித் தாம் விரும்புவதுபோல் விரும்பி முயன்று விடுதலைபெற்ற பிற நாடுகளை வாழ்த்திப் பாராட்டிய பாரதி தூண்டிற்காரனுக்கு மிதப்பில் கண்ணிருப்பது போலவும், ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பது போலவும் எவ்வளவுதான் இந்தியாவையும், உலகத்தையும் பற்றி எண்ணினாலும் பாடினாலும், தம் தாய்நாடாம் தண்டமிழ் நாட்டை எண்ணவும் பாடவும் மறந்திலரவர். தமிழ், தமிழ்நாடு என்று எண்ணுவது இந்தியா, உலகம் என்னும் எண்ணங்களுக்கு ஊறு விளைவிக்கும் என்னும் போலி எண்ணம் பாரதியாருக்கில்லை. ஆகவேதான், அவர் தமிழ், தமிழ்நாடு ஆகியவற்றை மறவாது பாடுகின்றார். செந்தமிழ்நாடு என்னும் போதினிலே, அவர் காதில் தேன்சுவை வந்து பாய்கிறது. தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும் வாழ்த்திப் பாடியுள்ள பாரதி எதிர்காலத் தமிழ் வளர்ச்சியைப் பற்றியும் பாடுகிறார்.

வலிமையற்ற தோளினாயும் (பக். 38)

ஒளி படைத்த கண்ணினாயும் (பக். 39)

விரட்டியும், வரவேற்றும் பாடி எதிர்கால இந்தியாவைப் படமாக்கிக் காட்டும் பாரதி,

பாரத தேச மென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப் பகை வெல்லுவார் (பக். 21)

என்னும் பாட்டில் தம் வருங்கால நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களையுந் தருகிறார்.

இந்நாட்டுச் சமயங்கள் சாதியை அடிப்படைபோலக் கொண்டமைக்கப்பட்டுள்ளன. ஆதலாற்றான் சாதியை வெறுக்கின்ற பெரியவர்களும் அதனை அறவே மறுக்கத் தயங்குகின்றனர்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மயங்குவாரவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க்கே காந்த ரல்லா ராகில்
அங்க மெலாம் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கை வார் கடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே

என்று பாடிய அப்பரடிகளும்.

"கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்," அவரை வணங்குவேன் என்கிருரே யன்றி யாவரையும் போற்றமுடியும் என்ருே, சாதியே இல்லை என்ருே சொல்ல முடியவில்லை.

நந்தனைப் போலொரு பார்ப்பான்—இந்த
நாட்டினில் இல்லை! (471)

என்று பாரதியாரால் போற்றப்படும் நந்தனையும், சிவபெருமான் தீயிலிறக்கிய பின்னர் வேறு ஒரு கோலத்தோடுதான் ஏற்றதாகத் தெரிகிறது. திருமால் திருப்பாணுழ்வார் ஒருவரைத்தான் ஏற்கப் பணித்தாரேயன்றித் தாழ்ந்த குலத்தாரனைவரையும் ஏற்கப் பணித்திலர். ஆகவே, பிறப்பொக்கும் என்னும் குறள் நிலவும் நாட்டில் இத்தகு பெரியோர், இறைவர், ஆகியோராலேயே சாதியை அறவே மறுக்க இயலாதபோது அதனை அறவே வெறுத்து அடியோடு ஒழிக்கப் பாரதியால் எப்படி முடியும்? அதனுற்ருன், அவர் இதில் பெரிதும் தடுமாறுகிருர். வலிமை மிக்க வேற்று ஆட்சியைத் துணிந்து எதிர்த்துப் பாடிய பாரதி, இச்சாதியை எதிர்ப்பதில் தடுமாறுகிருர்.

சாதிகள் இல்லையடி பாப்பா (208)

சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ் மகள் சொல்லிய சொல்லமிழ் தமென்போம் (பக். 22)

சாதி நூறு சொல்லுவாய் போமோ (39)

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே (58)

என்று கூறிய பாரதியே,

மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே (57)

சாதிகள் சேருது சண்டைகள் தொலையுது (221)

வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமையில்லை
நிகரென்று கொட்டு முரசே (211)

நாலு வகுப்பு மிங்கொன்றே—இந்த
நான் கினிலொன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி (பக். 209)

சாதி மதங்களைப் பாரோம்—உயர்
சன்மம் இத் தேசத்திலெய் தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே
ஈனப் பறையர் களேனும்—அவர்
எம்முடன் வாழ்த்திங் கிருப்பவரன்ருே

சீனத்த ராய் விடுவாரோ—பிற
    தேசத்தார் போற்பல தீங்கிழைப்பாரோ?
ஆயிர முண்டிங்கு சாதி—எனில்
    அன்னியர் வந்து புகலென்ன நீதி (பக். 17)

என்று கூறிச் சாதியை மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் திணறுவதைக் காண்கிறோம்.

இதுவரை கூறியவற்றால் பாரதியின் விடுதலை பற்றிய பாடல்கள் சாவாப் பாடல்களே யென்றும், விடுதலை நோக்கம் முற்றுப்பெற்றதாதலின் அத்துறையில் இலக்கிய வளர்ச்சி தொடர்ந்து ஏற்படவில்லையாயினும், அது சாதி முதலிய துறைகளின் மறுமலர்ச்சி வேட்கையாக மாறி அடியெடுத்து வைக்கத் தொடங்கியதென்பதும், நாட்டுப்பற்றைக் காரணங்காட்டி எழுப்பி, நாட்டின் பெருமையைக் கூறிப் பின் மக்களுள்ளத்தே விடுதலை வேட்கையை யெழுப்பி உரிமை வாழ்வின் பெருமையைச் சொல்லி, தமிழ்நாட்டையும் மறவாது எதிர்கால நாட்டையும் கற்பனையாகப் படைத்து மகிழ்ந்து சாதியைப் பற்றித் தயக்கத்துடன் பாடி, விடுதலை உணர்வைப் பாடிப் பாரதி சிறந்திருக்கிறார் என்பது புலனாகும்.

21

டாக்டர் மு. வ.-வின் கடித இலக்கியம்

திரு. மா. செல்வராசன், எம். ஏ.,
ஆராய்ச்சி மாணவர், தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

நூல்	எழுதுவோர்	வெளியான ஆண்டு	பக்கங்கள்	மடல்கள்
அன்னைக்கு	எழில்	1948	72	8
நண்பர்க்கு	நம்பி	1949	128	8
தம்பிக்கு	வளவன்	1949	56	9
தங்கைக்கு	வளவன்	1950	82	8
யான் கண்ட இலங்கை	மு.வ.	1950	128	5
5	4		466	38

எழுத்துகள் மூலம் எண்ணங்களை வெளிப்படுத்தி ஒருவர்க்கொருவர் தொடர்புகொள்ள உதவுவது மடல். இலக்கியத்தில் அதுவும் இடம்பெறும் அளவு இன்றைக்கு எழுந்து நிற்கின்றது. இலக்கியம் பாட்டு வடிவிலும் அமையலாம்; உரைநடையிலும் அமையலாம். தான் செல்ல முடியாத இடத்திற்குத் தன்னுடைய எண்ணங்களையோ அல்லது கருத்துகளையோ தானே நேர் நின்று உரைப்பதுபோல் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது மடல் எனப்படும் கடிதம்.

சீட்டுக்கவி என்பது பாட்டு வடிவில் அமைந்த திருமுகமே. அந்தகக் கவி வீரராகவ முதலியார் அழகிய சீட்டுக்கவிகள் எழுதி மடல் இலக்கியத்திற்கு மணம் சேர்த்திருக்கின்றார். இலக்கியத்தில் மறுமலர்ச்சி உண்டாக்கி இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்குப் புதுவழி காட்டிய சுப்பிரமணிய பாரதியார் பற்பல இலக்கிய வகைகளையும் கையாண்டு பாட்டுலகில் அழியாச் சுடராக ஒளிர்பவர். அவரும் சீட்டுக்கவிகள் இரண்டு எழுதி இருக்கின்றார்.[1] இரண்டும் எட்டயபுர மன்னர் வெங்கேடச ரெட்டப்பனுக்கு எழுதப்பட்டவை. ஒன்றிற்குச் 'சுப்பிரமணிய பாரதி எழுதும் ஓலைத்தூக்கு' எனப் பெயரிட்டிருக்கின்றார். இரண்டு பாடல்களிலிருந்தும் நாம் சீட்டுக்கவியின் இயல்பை ஓரளவு அறிந்து

கொள்ள முடிகின்றது. முதலில் யாருக்கு எழுதப்படுகிறதோ அவரை விளித்து, இன்னார் எழுதுவது எனத் தெரிவித்து, அவன் பெருமை களைச் சிறப்பித்துக் குறிப்பிட்டுப் பிறகு புலவர் தன்னுடைய சிறப்புகளை எடுத்துரைத்து இறுதியாகத் தன் எண்ணத்தை உணர்த்துவது சீட்டுக்கவி. இவ்வாறு பாரதியின் ஓலைத்தூக்கு அமைந்துள்ளது. செறிவு மிகுந்த தன்னைப்பற்றி ஒரு சிறந்த திறனாய்வைப் பாரதி அதில் வெளிப்படுத்துகின்றார். புகழ்வாய்ந்த அந்த வரிகள்,

சுவை புதிது, பொருள்புதிது, வளம்புதிது
 சொற்புதிது சோதிமிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத
 மகா கவிதை

என்பன.

சீட்டுக்கவியின் உட்பொருள் அல்லது நோக்கம் எதிர்பார்ப்பாகவே இருக்கும். ஒரு வள்ளலிடமோ அல்லது வள்ளன்மை வாய்ந்த மன்னனிடமோ வறுமையால் வாடும் புலவர் தனது பெருமைக்கு இழுக்குறுவண்ணம் சிறப்புத் தேடுவதே (பொருள் கேட்பதே) சீட்டுக்கவி. ஆயின் இங்கு ஆராயப்படும் மு.வ.வின் மடல் இலக்கியம் அப்படிப்பட்டதல்ல. பிரபந்தங்களில் ஒன்றான 'மடல்' என்னும் இலக்கிய வகைக்கும் இதற்கும் தொடர்பில்லை.

கடிதங்கள் மூலம் கருத்துகள் தெரிவிப்பது என்ற முறை பிற மொழிகளிலும் இருந்துவரும் ஒன்றே. மெக்காலேவின் கடிதங்கள் இலக்கிய மேன்மை பெற்று விளங்குவதை அறிகிறோம். விரிந்த உலக வரலாற்றையே கடிதங்கள் வாயிலாக விளக்கிய பெருமை மறைந்த பண்டித நேருவுக்கு உண்டு. உலக வரலாறாயினும் அந்நூல் ஒப்பற்ற இலக்கியமாகத் திகழ்கிறது. மறைமலை அடிகளும் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார். கோகிலாம்பாளின் கடிதங்கள் என்ற புதினத்தைக் கடித வடிவில் படைத்தவர் அவர். அறிஞர் அண்ணா அவர்கள் 'தம்பிக்கு' என்று திராவிடநாடு, காஞ்சி இதழ்களில் எழுதிய கடிதங்கள் அழியா இலக்கியம். அக் கடிதங்கள் எல்லாத் துறைகளையும் தொட்டு எல்லாவற்றிலும் அமர முத்திரையைப் பெற்றவை.

பேராசிரியர் மு.வ. அவர்கள் தலைசிறந்த சிந்தனையாளர். அவருடைய சிந்தனை சமுதாயத்தில் ஆழமாகப் பாய்ந்து செல்வது. எதையும் பகுத்துப் பார்த்து நுணுகி ஆராயும் திட்பமும் நுட்பமும் வாய்ந்தவர். வறுமையும் கொடுமையும் ஏழ்மையும் அறியாமையும் மலிந்த சமுதாயத்திலிருந்து அவைகளைக் களைவது எப்படி? சமுதாய அமைப்பையே மாற்றவேண்டும் என்பதுதான் அவருடைய சிந்தனை காட்டும் வழி. தம்முடைய ஆராய்ச்சியை எழுத்தில் திறம்படப் புலப்படுத்தி உள்ளார். அவருடைய புதினங்களும் கட்டுரைகளும் இதையே கருவாகக் கொண்டுள்ளன.

எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ள மு.வ. நுண்மாண் நுழைபுல மிக்க ஒரு திறனாய்வாளர். இளைஞர் உள்ளங்களை ஈர்த்த புதின ஆசிரியர். கருத்து விளக்கம் அளிக்கும் கட்டுரையாளர். இலக்கியப் புலமை செறிந்த ஈடற்ற ஆராய்ச்சியாளர். நய மிகுந்த நாடக ஆசிரியர். இலக்கண நுட்பம் அறிந்த மொழி வல்லுநர். கைவராத துறையாக மு.வ.வே கருதியது கவிதையைத்தான். மற்ற வற்றில் வரலாற்றில் நிற்கும் மாண்பினை அவருடைய எழுத்துகள் பெற்றிருக்கின்றன. ஆழம் மிகுந்த அவருடைய அறிவுப் பாய்ச்சலின் ஒரு வாய்க்காலே கடிதங்கள்.

எட்டு மடல்களைத் தாங்கி 'அன்னைக்கு' என்ற நூல் 1948ஆம் ஆண்டும், ஒன்பது மடல்களைத் தாங்கி 'நண்பர்க்கு' என்ற நூல் 1949ஆம் ஆண்டும், எட்டு மடல்களைக் கொண்ட 'தம்பிக்கு' என்ற நூல் 1949ஆம் ஆண்டும், 'தங்கைக்கு' என்ற நூல் எட்டு மடல்களைக் கொண்டு 1950ஆம் ஆண்டும், ஐந்து மடல்களால் ஆகிய 'யான் கண்ட இலங்கை' என்ற நூல் 1950ஆம் ஆண்டும் வெளியாயின. முப்பத்தெட்டு மடல் களைக் கொண்ட மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து நூல்களும் மூன்றாண்டுக் காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வெளி வந்திருக்கின்றன.

உலகளாவிய தலைசிறந்த சிந்தனையாளர் என மு.வ.வை உறுதிப் படுத்துகிற அதே நேரத்தில் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற மூன்று பெருமிதங்களையும் துறக்க விரும்பாதவர் அவர் என்பதையும் உரைத்தாகவேண்டும். அந்த உணர்ச்சிகள் இந்த ஐந்து நூல்களிலும் தலைசிறந்து விளங்குகின்றன.

இந்தக் கடிதங்களை எழுதுகிறவர்கள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வர்கள். மகன் அன்னைக்கு எழுதுகிறான். அண்ணன் தங்கைக்கும் தம்பிக்கும் எழுதுகிறான். அண்ணன் தம்பி இருவர்க்கும் ஒரு நண்பன் எழுதுகிறான். "இது ஒரு நல்ல குடும்பம்; வளவன் எழில் இருவரும் உடன்பிறந்தவர்கள்; அன்னையும் தந்தையும் அறிவில் சிறந்தவர்கள்; பண்பாட்டைப் போற்றுபவர்கள். இவர்களின் குடும்ப நண்பர் நம்பி. அனைவரும் இந்த நூற்றாண்டில் பிறந்து வளர்ந்தவர்கள். இக்கால வாழ்வின் இன்ப துன்பங்களை நன்கு உணர்ந்தவர்கள்" எனக் குறிப் பிடும் மு.வ. "இவர்கள் எல்லோரும் கற்பனைப் படைப்புகளே. ஆயினும் இவர்கள் உணர்வனவும் உரைப்பனவும் கற்பனை அல்ல. இவை இன்றைய இளைஞர் பலர் உணர்வன: உரைப்பன" என்றும் எழுதுகின்றார்.

குடும்பமாக வாழ்ந்து சமுதாயச் சிக்கல்களைக் கூறுபோட்டுக் காணும் ஆற்றலாளர்கள் அவர்கள். பெயர்கள்தான் கற்பனையே தவிர அவர்கள் பேசுவன கற்பனை அல்ல என உணர வைக்கின்றார். ஐந்து நூல்களிலும் மு.வ. எழுதியிருக்கின்ற முன்னுரைகளில் அந்த அந்த நூலின் திறவுகோலை வைத்திருக்கின்றார். எழில், வளவன், நம்பி ஆகியோரின் வாயிலாகத் தமது உணர்ச்சிகளைப் புலப்படுத்தும்

மு.வ.வின் திறனை அவர்களை ஆராய்வதன் மூலமே நன்கு உணர முடியும்.

எழில் : எழில் என்ற கல்லூரி மாணவன் தன் அன்னைக்கு எழுதும் கடிதங்களின் தொகுப்பு ஒரு நூலாகிறது. இலட்சிய இளைஞன் அவன். அவனுடைய குறிக்கோள் தமிழ்ச் சமுதாயத்தின் தாழ்வை நீக்க வேண்டும் என்ற உணர்ச்சிக் குமுறல்தான். "இளைஞர் உள்ளங்களில் எண்ணங்கள் சும்மா இருப்பதில்லை; செயல் வடிவம் பெறவே விரும்புகின்றன",[2] என்பதை ஏற்றுக் கொண்டவன். "பழைய தமிழகம் தாய்; புதிய தமிழகம் ஒரு சேய்; பழைய தமிழகமாகிய அன்னையின் அறிவுரைகளைப் புறக்கணிக்க முடியாது. அந்த அறிவுரைகளைப் புதிய தமிழகம் எவ்வளவிற்கு ஏற்கின்றது என்பதையும், எவ்வாறு ஏற்கின்றது என்பதையும் எழிலின் கடிதங்கள் காட்டுகின்றன" என்று மு.வ. கூறுகின்றார்.[3(அ)] பழமையும் புதுமையும் ஒன்றையொன்று சந்திக்கின்றன. முதுமையும் இளமையும் கருத்து மோதல் இடுகின்றன. பழைய தமிழகத்தைத் தாயாகவும் புதிய தமிழகத்தைச் சேயாகவும் உருவகித்திருப்பது சிக்கலைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. மு. வ. ஒரு புதின ஆசிரியர்; நல்ல படைப்பாளர்; எனவே கருத்துகளை நேரிடையாக அறநூல்களைப் போல் சொல்ல முயலாமல் கற்பனையைப் பயன்படுத்திக் கூற முன் வந்திருப்பது சுவையாக இருக்கின்றது.

எழுச்சி மிகுந்தவன்; ஆயினும் இரத்தப் புரட்சியை விரும்பாதவன். "இரத்தம் சிந்திக் கொடுமைகள் செய்யும் புரட்சியைப் பற்றி நான் கனவு காணவே இல்லை",[4] என்கிறான். "மாறுதல் வேண்டும்; அவ்வளவுதான். வழியைப் பற்றி நான் குறிப்பிடவில்லை" என்பதும்[5] அவன் கருத்து. ஆனால் அவனே என்ன என்ன செய்து இழிநிலை அடைந்துள்ள சமுதாயத்தை ஈடேற்ற வேண்டும் என்றும் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றான். தன்வழி சரிதானா என அறிவு மிகுந்த அன்னைக்கும், ஆராய்ந்து காணும் அண்ணனுக்கும் எழுதித் தெளிவு பெறுகிறான். ஆக்க வழிகள் வேண்டும் என ஆவல் கொள்ளும் செயலாளன் அவன்.

எழில் இளைஞன் ஆயினும் காந்தி அண்ணலைப் போற்றுபவன். 1948ஆம் ஆண்டினன் என்றாலும் இன்றைக்கும் அவன் வாழ்பவனே. காந்தி நெறியினன் ஆயினும் தமிழ் தழுவிய உணர்ச்சிக்கனலை வளர்த்துக் கொள்ளவே துடிப்பவன். அரசியல் தன் படிப்பைக் கெடுக்காது[6] எனத் தன் தந்தைக்கு உறுதி கூறுபவன். உணர்ச்சி மிகுந்த அவனுடைய எண்ணக் குமுறல், தமிழர் முன்னேற்றம், பொருளியல் மாற்றம் என்ற இரண்டு வழிகளில் மோதுகின்றது. "இப்போது பெற்றிருப்பது அரசியல் விடுதலையே. இனிப் பெற வேண்டிய உரிமைகள் பொருளாதார உரிமையும் சமுதாய உரிமையும் அற உரிமையும் ஆகும். அவற்றிற்காகப் பாடுபடுவதே இனி உள்ள கடமை" என்ற காந்தியாரின் கருத்தைச்[7] செயற்படுத்த வேண்டும் எனக் கனவு காண்பவன்.

'தமிழர்களுக்கும் எதிர்காலம் உண்டு' என்ற தாயின் மொழியில்[8] ஆறுதல் கண்டு, 'உலகத்தின்மேல் அன்பும் தேசத்தின் மேல் பக்தியும் இருப்பது உண்மையானால் தமிழ்நாட்டின் மீது தமிழனுக்குக் காதல் இருக்க வேண்டும்' என்று வீறு கொண்டவன்.[9] பிறர் துன்பம் கண்டதும் துடிப்பவன் தமிழனே எனப் பெருமிதம் உறுபவன்.[10] 'தமிழன் எப்படியாவது காலத்தை உணர்ந்து மாறுதல்களை உணர்ந்து வாழ்ந்தால் போதும்', என்று ஏங்குபவன்.[11] அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சட்ட மன்றத்தில், "மாணவர்கள் என் இரத்தத்தின் இரத்தம் சதையின் சதை; ஐந்தாறு இரயில் பெட்டிகள் போனால் மீண்டும் வரும். ஐந்தாறு உயிர்கள் போனால் மீண்டும் வராது" எனக் குறிப்பிட்டார். 'கொள்கையை விட, உயர்ந்த நோக்கத்தை விட, பொதுமக்களின் உயிர்வாழ்க்கை விலையுயர்ந்தது என்பதைத் தெளியச் செய்கின்றார்கள் உலகத் தலைவர்கள் என எழில் உடன்படுகின்றான்.[12]

பொருள் பற்றிய பூசல் உலக அமைப்பில் இருக்கக்கூடாது;[13] சமயத்தின் பேரால் சாதியின் பேரால் சண்டைகளையும் மூடநம்பிக்கைகளையும் வளர்ப்பதினும் வறுமையை விரட்ட ஆக்க வேலை செய்யக் கூடாதா என ஏங்குகிறான். 'எல்லார்க்கும் உழைப்பையும் பொதுவாக்கி ஊதியத்தையும் ஒழுங்காக்க வேண்டும் அல்லவா?' எனக் கேட்கிறான்.[14] சமுதாயம் உடைந்துபோகும் நிலைமையில் கவலைக்கு இடமாக இருக்கின்றது. சமுதாயம் சீர்ப்பட வேண்டுமானால் பண வேட்டையும் வயிற்றுக்கவலையும் ஒழிய வேண்டும். பொதுமக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தாமல் அறிவுரை கூறுவதால் பயனில்லை. துன்பத்தை ஒழிக்கும் ஒரு முயற்சி மட்டும் இருந்தால் போதும்.

ஆக்குவோர் நுகர்வோர் என இருதிறத்தாரே இருத்தல் வேண்டும்; இடையில் புகுந்து ஏய்க்கும் பறிப்போர் இருத்தல் கூடாது. கட்சி ஆட்சி ஒழிந்து உண்மையான குடியாட்சி ஏற்பட வேண்டும் என்பன அவன் வகுக்கும் புதிய கொள்கைகள். "தமிழர்கள் முதலில் தாம் திருந்த வேண்டும். கொஞ்சம் தன்னலம் உடையவர்களாக—அதாவது ஓரளவாவது நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் உடையவர்களாக வாழ்ந்து தற்காப்புத் தேடிக்கொள்ள வேண்டும்",[15] என விரும்பும் எழில்

> "தமிழ்நாடே! போதும் உன்னுடைய கலையும் உணர்வும்.
> அவற்றை அளவுபடுத்திக் கொண்டு அறிவியலைப்
> பெருக்கு; அறிவைப் பெருக்கு"[16]

என எச்சரிக்கிறான்.

வளவன் : எழிலின் அண்ணன் வளவன். இவனும் இலட்சியவாதி எனினும் நடைமுறை அறிந்தவன். உணர்ச்சிக் குமுறலாக விளங்குபவன் எழில்; உணர்ந்து அடங்குபவன் வளவன். இருவர் எண்ணங்

களும் தூய நோக்கம் உடையவை. ஆனால் அதைக் காணும் பார்வை வேறாக விளங்குகின்றது. புயல் போலச் சீறுகின்ற வேகம் எழில்; புரிந்துகொண்டு விளங்கும் அமைதியான தென்றல் வளவன். 'நீ வயதில் இளையவன். அஞ்சாமல் உன் கருத்தைச் சொல்கிறாய்; எழுதுகிறாய். நான் உன்னைவிட உலக அனுபவம் மிகுந்தவன்; அதனால் உலகத்தைப் பற்றிய அச்சமும் மிகுந்தவன். ஆகையால் எதையும் சொல்லவும் எழுதவும் தயங்குகிறேன்'[17] என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதிலிருந்து இதனை நன்குணரலாம். 'வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றைமட்டும் போற்றுகிறவன் உருப்படியாவது இல்லை'[18] என்று திண்ணமான கருத்துடைய வள்வன் 'தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும் குடும்பம் குடும்ப மாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும். இனிமேல் வல்லவர் களாகவும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்'[19] என்று உலகியல் உணர்ந்து உரைக்கின்றான்.

தமிழும் தமிழ்நாடும் வாழவேண்டும் என்று தணியாத வேட்கை இருக்கின்றது. வாழவேண்டும் என்று மனத்தளவில் எண்ணிக் கொண் டிருந்தால் போதுமா? ஆக்கப்பணிகளை ஆற்றுதல் வேண்டாமா? 'தமிழ்மொழிக்கு அறிவுக்கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதி மன்றங்களில் உரிமை நல்கினோமா?' என வளவன் கேட்கும்போது இன்றுவரை நாம் வாளாகவே இருக்கின்றோம்.

முற்போக்காளனாகிய வளவன் மேடையில் முழங்குவதை அறவே வெறுக்கிறான். பேசிப் பேசிப் பொழுதைக் கழிப்பது பிற்போக்கு வாழ்வு, சோம்பேறி வாழ்வு எனக் கருதுகிறான். ஆனால் கருத்து வேறுபாட்டை வரவேற்கும் கண்ணியம் இருக்கின்றது.

தமிழர்கள் உணர்ச்சி வயப்பட்டு உள்ளத்தில் இருப்பதை மறைக்க அறியாதவர்கள். ஒன்றுபட்டு நிற்கத் தெரியாதவர்கள். ஒற்றுமை இல்லாததால் தில்லி அரசு தமிழரைக் கண்டு மதிப்பதும் இல்லை என வெளிப்படையாகப் பேசும்போது 'வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது' என்ற உணர்ச்சி கலந்த வன்மை பெறுவதைக் காண முடிகின்றது.

(1) 'சிறுபான்மையோர் எந்த முயற்சி செய்தாலும் ஒற்று மையும் கட்டுப்பாடும் தேவை. இந்த இரண்டும் இருந் திருந்தால் தமிழர் வல்லமையான இனம் என்ற எண்ணம் தில்லிக்கு ஏற்பட்டு இருக்கும்.'

(2) 'நாம் நம்முடைய பொதுத் தேவைகளுக்காக ஒன்று பட்டுப் போராடுவதில்லை. ஆனால் நமக்குள் இருக்கும் கட்சி வேறுபாடுகளுக்காகப் பிரிந்தும் பிளந்தும் போராடு வதில் வீரம் மட்டும் காட்டி வருகிறோம்.'

(3) 'தமிழரிடையே பொதுவாகப் பிரிக்கும் ஆற்றல் வளர்ந்து விட்டிருக்கிறது. பிணைக்கும் ஆற்றல் வளரவில்லை.'

(4) 'தமிழன் முதலில் தன்னை நினைக்கிறான். தன்னையே நினைக்கிறான். பிறகுதான் சில வேளைகளில் மேற்போக்காக மொழியையும் நாட்டையும் நினைக்கிறான். இவ்வளவு தன்னலம் முதிர்ந்திருப்பதால்தான் மிகப் பழங்காலத்திலிருந்தே பண்பாடு மிக்க இனமாக விளங்கியிருந்தும் இன்று தாழ்வான நிலையில் கிடக்கின்றது'.

இந்த நான்கு குறைகளையும்[21] காண்பவன் வளவன். "தமிழர்க்கு நல்ல பண்புகள் பல உண்டு. ஆயினும், பொதுவாகத் தமிழரின் வாழ்வு நலிந்துள்ளது. எனக் கூறலாம். காரணம் என்ன? தமிழரிடையே சில குறைகளும் இருத்தல் கூடும் அன்றோ?"[22] என மு.வ. கூறுவதன் எதிரொலியான விளக்கங்களே மேற்கண்ட குறைகள்.

குறைகளை உணர்ந்து திருந்துவதற்கு முயலாமல் பிறரால் ஏமாற்றப்பட்டோம் எனத் திசை திருப்பும் முயற்சியை முழுமையாக வெறுக்கிறான். 'தமிழரைப் பற்றிப் பிறர் புகழவேண்டும். அதைக் கேட்டு மகிழவேண்டும்'[23] என்று பேராவல் கொள்ளும் வளவன் தமிழரிடம் குடிகொண்டுள்ள பணிவின்மையும், இன்சொல்லின்மையும் போலி மானமும் நீங்கவேண்டும் என விரும்புகிறான்.

தமிழர் உயரவேண்டும்; தமிழ்மொழி சிறந்தோங்கவேண்டும்; தமிழ்நாடு பெருமை பெறவேண்டும். தம்பி எழிலுக்கு அவற்றுக்கான ஆக்கவழிகள் பத்தைக் கூறுகிறான் வளவன். இலட்சியவாதியாயினும் நடைமுறையாளன் என வளவனைப்பற்றி முன்பே கருத்துரைக்கப் பட்டது. அவன் கூறும் வழிகளும் நடைமுறைக்கு ஏற்றனவே. அவற்றைத் தமிழர்கள் பின்பற்றினால் ஒன்றுபட்ட இனமாக உயர்ந்தோங்கிச் சிறந்திட இயலும். ஆனால் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழர்கள் அப்படியேதான் இருக்கின்றார்கள். "தமிழன் காசு சமுதாயத்துக்குப் பகையானவர்களின் பெட்டியை நிரப்புகின்றது. தமிழன் செய்யும் முயற்சி தமிழகத்தை வெறுப்பவர்களுக்கு ஆக்கம் தேடிக் கொடுக்கின்றது"[24] இனப்பற்றை அறவே இழந்து எங்கே செல்கின்றோம் என்ற உணர்வும் இல்லாமல் சுழலில் சிக்கிய துரும்பாகிச் சொந்த அறிவையும் இழந்து அலைவதை இன்றைய அரசியலும் காட்டுகின்றது அல்லவா?

வளவன் சமுதாய அரசியல் சிக்கல்களை அலசி ஆராய்ந்து ஆக்கங் காண முயல்வதைப்போலவே குடும்பம் என்ற இல்லறத்தின் இயல் புணர்ந்து வெற்றியுடன் விளங்குவதைக் காண முடிகிறது. தன் தந்தைக்குத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் சான்றோர் பலர் வாழ்ந்த உயர்ந்த வாழ்வைக் காட்டிக் கருத்து விளக்கம் அளிக்கின்றான்.

தக்க இன்ன தகாதன இன்னஎன்று
ஒக்க உணரும்[25]

ஒப்பற்ற ஆற்றல் கைவரப்பெற்று நல்ல திறனாய்வாளனாகத் தேர்ந்து விளங்குகிறான்.

ஆடம்பரத்தை வெறுத்து எளிய வாழ்வைப் போற்றுபவன் வளவன். மு.வ.வின் குறிக்கோள் மாந்தர்கள் அனைவரும் ஆடம்பரத்தை வெறுப்பவர்களே. ஆடம்பரமே பலரின் வாழ்க்கையும் சரிவதற்குக் காரணமாக அமைகின்றது. தனிவாழ்க்கையில் பெரும்பாலும் பழைய நெறியே நல்லது என்று அனுபவத்தால் அறிந்து போற்றும் வளவன் சமுதாய அரசியல் பொருளியல் வகையிலே பெரும்பாலும் சீர்திருத்தம் பெற்றாகவேண்டும் என்று உறுதியுடன் எண்ணுகிறான். முன்னோர் வாழ்விலும் குறைகள் பல உண்டு எனக் கூறும்போது முற்போக்காளனாகத் திகழ்வதை உணர முடிகிறது.[26]

கணவன் மனைவி வாழ்க்கைக்கு என வளவன் ஆய்ந்துரைக்கும் கருத்துகள் ஏற்றுக்கொள்ளத்தக்கனவே. அமைதியும் வெற்றியும் வாழ்க்கையில் பொலிய அவன் கூறுவன பெரும்பாலும் உதவும்.

> ''பழமைக்கும் புதுமைக்கும் போர்; கடமைக்கும் உரிமைக்கும் முரண்பாடு; கற்புக்குத் காதலுக்கும் மாறுபாடு; கொள்கைக்கும் நடக்கைக்கும் வேறுபாடு; குடும்பத்திற்கும் உலகிற்கும் போராட்டம்; இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் பொதுவாக வாழ்க்கை தாக்குண்டு நலிவுறுகின்றது. சிறப்பாகப் பெண்ணுள்ளம் சிதைவுறுகின்றது. எது எங்கே எவ்வாறு என ஒவ்வொரு துறையிலும் ஆராய்ந்து தெளியாமையும் தெளிந்தவரின் நெறியை நம்பாமையுமே காரணம் எனலாம். நெறியில் தெளிவும் நம்பிக்கையும் ஏற்பட்டால் வாழ்வைக் காத்துக்கொள்ள முடியும்''

என மு.வ. குறிக்கின்றார்.[27]

(1) மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள குறைகளையும் அவற்றின் காரணங்களையும் எண்ணிப் பார்ப்பது நம்மை நாம் காத்துக்கொள்வதற்கு மிகவும் பயன்படும்.

(2) வாழ்க்கை 'அன்பின் வழிவந்த கேண்மை'யாக விளங்குதல் வேண்டும்.

(3) அடங்கியும் நடக்கவேண்டும்; உரிமையோடும் வா வேண்டும்.

(4) அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கி நட, உரிமைக்காகப் போராடிக் காலம் கழிக்காதே.

(5) ஒருவர் பொறை இருவர் நட்பு என்னும் நாலடியாரின் பொன்மொழி இல்வாழ்க்கையின் மந்திரமாக விளங்க வேண்டும். ஒருவேளை கணவனும் இன்னொருவேளை மனைவியுமாக விட்டுக்கொடுத்தால்தான் வாழ்க்கை எளிதாக நடக்கும்,

(6) அன்பு மனத்தை ஆதரிக்கவேண்டும்; ஆணவ மனத்தைக் கைவிடவேண்டும்.

(7) பண்பாடு இல்லாத அறிவு நமக்கு உதவாது; நம்மைக் கெடுக்கவும் கெடுக்கும்.

(8) கொள்கைகளில், நெறிகளில் உறுதி நல்லது.

(9) ஆடம்பரப் போக்கு இல்லையானால் தங்களுக்கு உலகத்தில் மதிப்பு இல்லை என்று எண்ணும் தாழ்வு மனப்பான்மை பெண்கள் பலரிடம் இயல்பாக உள்ளது. இது தான் உண்மையான பிற்போக்கு.

(10) இல்வாழ்க்கை என்பது முன்காலத்தில் ஒரே பொருளை விற்கும் வெல்ல மண்டிபோல் இருந்தது. நாகரிகம் பல வகையில் கடமைகளைப் பெருக்கியுள்ள இந்தக்காலத்து இல்வாழ்க்கை பலசரக்குக் கடைபோல் ஆகிவிட்டது. பல பொருள்களையும் கவனித்து விற்கும் திறமை இல்லாவிட்டால் பலசரக்குக் கடையில் வாழ முடியுமா?

(11) எதற்கும் தயங்கி நிற்காமல் ஓடுகின்ற கடிகாரம்போல் கடமைகளை அஞ்சாமல் செய்கின்றவர்கள்தான் இந்தக் காலத்தில் தலைமைப்பதவிக்குத் தக்கவர்கள். குடும்பத் தலைவியும் இப்படி இருந்தால்தான் வாழ்வு நன்றாக நடக்கும்.

(12) குடும்பத்தில் ஆத்திரம், சுடுமூஞ்சித்தன்மை, முகம் திருப்பல் இவைகள் தலைகாட்டாமல், விளையாட்டு, மகிழ்ச்சி நல்ல தெம்பு இவைகள் விளங்கவேண்டும்.

(13) மனம் அறிந்து மகிழ்விக்கத் தெரியாத பெண்கள் அழகு பண்பு திறமை எல்லாம் இருந்தும் வாழ்க்கையில் ஏமாந்து துன்புறுகிறார்கள்.

(14) வாழ்க்கையில் பலர் கெடுவதற்குக் காரணம் விதிகளைப் பற்றி எண்ணாமல் விதி விலக்கானவைகளைப் பற்றி எண்ணுவதே ஆகும்.

(15) நெருக்கடிகள் வாழ்க்கையில் நேர்வது இயற்கை. அப்போதுதான் அறிவும் திறனும் பயன்படவேண்டும்.

எதை எதை விடாமல் போற்றுவது என்றும், எதை எதைக் கைவிடத் துணிவது என்றும் தெளிவாக உணர்ந்து நடக்கவேண்டும்.

(16) பிறர் உள்ளம் அறிந்து நடப்பது ஓர் அரிய கலை. பெண்ணுக்கு அது கட்டாயம் வேண்டும்.

நம்பி: கல்லூரியில் படித்தும் நாட்டுப்புற வாழ்வை விரும்பி ஏற்றுக்கொள்ளும் காந்தியவாதி. கிராமங்களைச் சுரண்டுவன நகரங்கள் எனக் கடுமையாக எதிர்ப்பவன். கிராம மக்களின் உழைப்பையும் இரத்தத்தையும் நகரத்தில் வாழ்வோர் தங்கள் நலனுக்குப் பயன்படுத்தித் தங்கள்வரை இன்பமாக வாழ முயல்கின்றனர். ஆனால் அந்த ஏழை மக்களை மழை இல்லாமல் பயிர்கள் வாடிப் பசியும் பஞ்சமும் வாட்டும்போது காப்பாற்றுவார் யாரும் இல்லாமல் தவிக்கின்றார்கள். அப்போது உறிஞ்சிக் களித்த நகரங்கள் அவர்கள்மீது தங்கள் பார்வையையும் செலுத்துவதில்லை. அரசும் அவர்களுக்கு ஒன்றும் செய்வதில்லை.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.[28]

என வாயளவில் போற்றிவிட்டு நடைமுறையில் நேர்மாறாக நடந்துகொள்ளுகின்றனர். படித்தபின் அலுவலகங்களில் பணிபுரிவோருக்குப் பற்றாக்குறை என அவர்களுக்காகப் பரிந்துவரும் அரசு, ஏழை உழவர்களுக்காக வாழ்க்கை உறுதியை எந்தவிதத்தில் அளிக்கின்றது என்பது போன்ற சிந்தனையைத் தூண்டும் கருத்துகளைப் பரப்புகிறான். ''இந்த நாட்டின் உண்மையான நிலையையும் உயர்வுக்கு உரிய வழியையும் நன்றாக உணர்ந்து தெளிந்தவர் காந்தி அடிகள் ஒருவர்தான்'[29] என உறுதியாக நம்பும் நம்பி, அவருடைய தொண்டு, வேலைத்திட்டம் எல்லாம் கிராமங்களை எண்ணியே அமைந்தவை எனக் காரணம் கூறுகிறான்.

நம்பி நன்றாகக் கற்றுத் தேர்ந்த இளைஞன். அவனுடைய சிந்தனை தெளிவாக அமைந்துள்ளது. வாழ்க்கையைப் பார்க்கும் பார்வை சிறப்பாக உள்ளது. கிராமத்தில் பயிர்த்தொழில் செய்து வாழ்வதால் அந்த மக்களின் அன்றாட இன்ப துன்பங்களை உணர்ந்து அவர்களின் காப்பாளராக வாதாடுகிறான். பண வேட்டையும் ஊழலும் மலிந்த சமுதாயத்தில் அறமும் நெறியும் வாழ முடியாது என்பதை உணர்த்தி அதை மாற்றியாக வேண்டும். வறுமைக் கொடுமையால் மக்களின் பண்பாடு மாறி வருவதைக் கண்டு மனம் நோகிறான். நல்லவராக வாழ்வதா வல்லவராக வாழ்வதா என்பதைப் பற்றியெல்லாம் எந்தக் கிராமத்து ஏழையும் எண்ணுவதில்லை. அவர்களின் கவலையெல்லாம் எப்படியாவது வாழவேண்டும் என்பதுதான்.

இந்தக் காலத்துக் கல்வி, பொருளியல் அமைப்பு, அரசுமுறை ஆகியவற்றை நன்ருகத் திறனய்வு செய்து அவற்றிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி வழிகளைக் காணும் முயற்சி தென்படுகிறது. எழில், வளவன் இருவரோடும் சில கருத்துகளில் வேறுபடுவது போல் தோன்றினலும் நோக்கம் ஒன்றே! "உடலுழைப்பின் பயனைச் சுரண்டமூளை பயன்படுவதே நாகரிக வளர்ச்சியாக உள்ளது"[30] வர்க்க வேறுபாட்டை அவன் எதிரொலித்தும் வன்முறையில் மாறுதலைக் காண விரும்பவில்லை. சொந்தக் கிராமத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ய முயன்று ஓரளவு வெற்றியும் பெறுகிற அவனுடைய உள்ளம் தூய தமிழ் உள்ளம்.

கேழ்வரகைத் தமிழகத்து ஏழை மக்கள், வெயிலிலும் வியர்வையிலும் உழைத்து உருக்குலையும் கிராமத்து மக்கள் ஒருவேளை கூட உண்பது கூடாது; மருந்தாக வேண்டுமானல் பயன்படுத்தட்டும் என்னும் நம்பி, பயிர்களை அழிக்கும் வெள்ளாட்டையும் குரங்கையும் கண்காட்சிச் சாலைகளில் மட்டுமே காண விரும்புவதாகத் தெரிவிக்கிருன். அதற்கான முயற்சிகளில் அவனுடைய ஊரைப் பொறுத்த வரையில் வெற்றியும் அடைய முடிகின்றது. கேழ்வரகைத் தொடர்ந்து உண்பதால் அழகு அடியோடு கெட்டு முகம் இறுகி உடம்பு உரம் வாய்ந்ததாக மாறுகின்றது; மூளை வளர்ச்சி அடியோடு தடைப்பட்டு விடுகின்றது என்பது கேழ்வரகைக் கடிந்தொதுக்கக் கூறும் காரணங்கள்[31] இது ஒரு புதிய ஆராய்ச்சியே! ஆயினும் சோற்றுணவு உண்டு கேழ்வரகைப் புறக்கணிப்பது நல்ல வளமான வாழ்க்கையே!

ஆரவாரம் இல்லாமல் அவனுடைய தொண்டு நடைபெறுகின்றது; ஆடம்பரத்தை விரும்பாதபோது ஆரவாரத்திற்கு இடமில்லையே. மற்ற இருவரைப்போல இவனும் தேர்தல் முறையை விரும்பவில்லை.[32] கட்சியாட்சியால் ஏற்படும் நன்மைகளைவிட கலகங்களும் குழப்பங்களுமே மிகுதியாகின்றன எனக் கருதுகிருன் இந்த காந்தியவாதி.

இதுவரை தனது உணர்ச்சிகளைச் சில மாந்தர்களைப் படைத்து அவர்களின் வாயிலாக வெளிப்படுத்தி மறைந்திருந்த ஆசிரியர், 'யான் கண்ட இலங்கை' என்னும் நூலில் தன்னுடைய சொந்த மகனுக்குக் கடிதம் எழுதுமுகமாகத் தானே நேரிடையாகத் தோன்றிப் பேசுவதைக் கேட்கலாம். மு. வ. வின் நெஞ்சம் தூய தமிழ் நெஞ்சம். தமிழர்க்காக உருகும் அன்பு நெஞ்சம். தமிழரின் தாழ்வுக்காக இரங்கி அவர்தம் உயர்வுக்காக ஆக்க வழிகாணும் உள்ளம் அவருடையது. வான வெளியில் பறக்கும்போது தமிழகத்து மண்ணை எவ்வளவு ஆவலோடு பார்த்து மகிழ்கிருர். காவிரியையும் பாலாற்றையும் தமிழகத்து மலைகளையும் அவருடைய கண்கள் தேடுகின்றன. 'காவிரி ஆறு வரப் போகிறது என்ற எண்ணத்தால் என் மனம் எத்தனையோ கற்பனைகளைக் காணத் தொடங்கியது' என்கிருர்.[33]

இலங்கையில் தமிழர்களைக் காண்கிறபோதெல்லாம் தான் ஒரு தமிழன் என்ற உணர்வோடு விளங்குகிருர். ஏழைத் தமிழர்கள்

தேயிலைத் தோட்டத்திலும் ரப்பர்க்காடுகளிலும் உழைத்து உருக்குலை வதை எண்ணிப் புழுங்குகின்றார். இலங்கையின் காடுகளை அழித்துச் செப்பனிட்ட கைகள் தமிழர் கைகள் அல்லவா எனப் பெருமிதங் கொள்ளும் மு. வ. அத்தமிழர்கள் இருக்க இடமின்றி விரட்டப்படு வார்கள் இலங்கையிலிருந்து என எண்ணி எவ்வளவோ கொதிக்கின்றார். வளமாக வாழலாம் என வந்தவர்கள் வயிற்றுக்கும் இல்லாமல் வாடி, திரும்பித் தமிழ்நாடு செல்லவும் வழியில்லாமல் திகைத்து நிற்பதைக் கண்டு உருகுகின்றார்.

மு. வ. தமிழ் நெஞ்சத்தோடு இலங்கையைக் கண்டார் என்பது முற்றிலும் பொருந்தும் என்பதற்கான சான்றுகள் சில.

> விமானத்தில் பயணம் செய்யும்போது நடக்கும் ஓர் உரை யாடல் இது. "சோழநாட்டின் கரையை விட்டுப் பாண்டிய நாட்டின் கரைக்கு வந்துவிட்டோம் என்று வாலாசாபாத் அப்பாவிடம் சொன்னேன். எங்கள் பூகோளப் பாடத்தில் இந்தப் பெயர்கள் இல்லையே என்றாள் மங்கையர்க்கரசி. சோழர் கரை, பாண்டியர் கரை என்ற பெயர்களைக் குறிக்க வேண்டும் என்று அவ்வளவு பழமைப் பற்று தமிழ் மக்களுக்கு ஏற்படவில்லை என்றேன்".

> "தமிழர் தவிர வேறு எந்த இனத்தார், வீடுகளை உள்ளும் புறமு மாகத் தூய்மையாக வைத்துக் கொள்ளக் கற்றிருக்கிறார்கள்"

> "சிங்களர்க்குப் பிறப்பால் உரிமை உண்டு என்றால் தமிழர்க்கு உழைப்பால் உரிமை உண்டு. பல தலைமுறைகளாகவே தமிழர்கள் அங்குக் குடியேறி வாழ்ந்தவர்கள். அந்தத் தமிழர் உயர்ந்த மொழி பேசுவதாலும் சிறந்த அறிவு பெற்றிருப்ப தாலும் திடீரென்று இன்று இலங்கைக்கு அந்நியர் ஆகிவிட முடியுமா?".

> "நான் கொழும்புநகர்க் கலங்கரை விளக்கத்தைக் கண்டது போல், மற்றொரு நாட்டாருடன் பழகி அவர்களின் மொழிப் பற்றையும் இலக்கியப் பண்பையும் உணர்ந்த பிறகுதான் நம் மொழிச் சிறப்பையும் இலக்கியப் பெருமையையும் உண்மை யாக உணர முடியும்".

> "தமிழன் நாக்கிற்கு ஒரு தனி ஆற்றல் உண்டு அல்லவா? அது எந்த மொழியையும் எளிதில் கற்றுக் கொள்ளும்".

> "இலங்கையை வளமாக்கிய கைகள் தமிழரின் கைகள்தான். இங்கே இந்தப் பாதைகளில் உள்ள ஒவ்வொரு கல்லும் தொழிற்சாலைக் கட்டடத்திலுள்ள ஒவ்வொரு கல்லும் தமிழரு டைய வியர்வையைப் பற்றிப் பேசும். இங்கே உள்ள

ஒவ்வொரு தேயிலைச் செடியும் ஒவ்வொரு ரப்பர் மரமும் தமிழருடைய உழைப்பைப் பற்றி எடுத்துச் சொல்லும்".

"தேயிலைத் தோட்டத்திலே' என்ற பாரதியின் பாட்டு—தோட்டத்தின் அழகைப் பற்றிப் பாடிய பாட்டு அல்ல. கவியின்பம் சொட்டும் பாட்டு அல்ல: அங்கே ஏழைத் தொழிலாளராக இருந்து வீட்டையும் நாட்டையும் நினைந்து நினைந்து விம்மி விம்மி அழுதபடியே வருந்தி உழைத்திட்ட தமிழரைப் பற்றி உருகிக் கண்ணீர் வடித்துப் பாடிய வாழ்க்கைப் பாட்டு".

"உண்ணுக உண்ணுக என்று எதிரே நின்றவாறே வேண்டுதலும், விடைபெற்றுப் பிரியும்போது ஏழடி நடந்து சென்று வழிவிடுதலும் கரிகாலன் காலம் முதல் இன்று வரையில் தமிழர் பண்பாக விளங்கி வருதலை நினைந்து வியந்தேன்".

"இலங்கையின் மூலையே யாழ்ப்பாணத் தமிழர் என்று கூறத் தக்க நிலையை எங்கும் கண்டு மகிழலாம்".

"சிங்கள அரசர்களின் புகழையும் பெருமையையும் விளக்க வந்த அந்த நூலாலும் (மகாவமிசம்) மறுக்கவும் மறைக்கவும் முடியாதபடி நேர்மையாக அந்நெறியில் நின்று ஆண்டவர்கள் தமிழர்கள். ஆகையால் அவர்களின் ஏகாதிபத்தியப் போக்கில் வெறி இல்லை; கொடுமை இல்லை; பொன்னாசை இல்லை; சுரண்டல் இல்லை; புகழாசை ஒன்றே இருந்தது என்றால் வாள் ஏந்திக் கொல்லச் சென்றவர்களையும் தமிழ்ப் பண்பாடு எவ்வளவு காத்து வந்தது என்பதை உணரலாம்".

ஆசிரியர் தானே தோன்றுகிற அழகையும், எழில், வளவன், நம்பி ஆகிய மூன்று தலையாய படைப்புகளையும் கண்டோம். இலக்கியத்தை வளர்க்கிற முயற்சிகள் எத்தனையோ? கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள உதவும் கருவியாக விளங்கும் கடிதங்களை வைத்து நூலாகப் புனைந்த கவின்மிகு முயற்சி போற்றத் தகுந்தது. கடிதங்கள் தந்த மாந்தர்கள் பண்பட்ட சிறந்த மக்களாக விளங்குகின்றனர். அவர்களின் சிந்தனை தம் அளவில் நின்று குறுகிப் போகாமல் மக்கள், நாடு, மொழி என வளர்ந்து பரவுவது நம்மைப் பின்பற்றத் தூண்டுகிறது. அறிவு வளர்ச்சி பரவலாகிவிட்ட இந்தக் காலத்தில் விழிப்பின் காரணமாகப் பலரும் கருத்து வேறுபட வாய்ப்பு இருக்கிறது. ஆயினும், மு.வ.-வின் மடல் மாந்தர்களின் உணர்ச்சி புதியதொரு சமுதாயத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் காண விழைவதால் பெரிதும் முரண்பட்டு நிற்பதற்கு இடமில்லை. ஒற்றுமை குறைந்த இனம் தமிழினம் என்ற பழியைப் போக்கியாக வேண்டும் என்பதிலாவது தமிழர்கள் ஒன்றுபட வேண்டாமா? ஆரவாரத்தையும், ஆடம்பரத்தையும் புறக்கணித்து எளிமையையும், தூய்மையையும் ஏற்றுச் செயல்

படத் துடிக்கும் இலக்கிய மாமனிதர்களை வளர்ச்சியளவில் சந்தித்தோம். இளைஞர்களாயினும் அவர்கள் எண்ணத்தளவில் இதயத்தளவில் பெரிதாக எழுந்து நிற்பவர்கள். அந்த உணர்ச்சிகளை நாமே கூறுவது போல் நம் உள்ளத்தை இழுத்துப் பிடிப்பவர்கள். எழுச்சி நமக்குத் தேவை என்பதால் மு.வ.-வின் கடித நூல்களைப் பொதுப் பார்வையில் நோக்காமல் படைக்கப்பட்ட மாந்தர் அடிப்படையில் காண நேர்ந்தது.

அடிக்குறிப்புகள்

1. பாரதியார் கவிதைகள் : பல்வகைப் பாடல்கள். 33. வெங்கடேசு ரெட்டப்ப பூபதி.
2. நண்பர்க்கு முன்னுரை பக். 3
3. அன்னைக்கு பக்கம் 43
3. ,, முன்னுரை பக். 3
4. ,, பக்கம் 43
5. ,, ,, 43
6. ,, ,, 13
7. ,, ,, 40
8. ,, ,, 14
9. ,, ,, 9
10. ,, ,, 11
11. ,, ,, 15
12. ,, ,, 18
13. ,, ,, 26
14. ,, ,,
15. ,, ,, 61
16. ,, ,, 69
17. தம்பிக்கு ,, 5
18. ,, ,, 6
19. ,, ,, 6
20. ,, ,, 7—8
21. ,, ,, 29—31
22. ,, முன்னுரை பக். 3
23. ,, பக்கம் 35
24. ,, ,, 50

25. கம்பராமாயணம் : வாலி வதைப் படலம்
26. தங்கைக்கு பக். 47
27. ,, முன்னுரை பக். 3
28. பாரதியார் : கவிதைகள், தேசிய கீதங்கள் 31. சுதந்திரப் பள்ளு
29. நண்பர்க்கு பக். 107
30. ,, ,, 31
31. ,, ,, 115—116
32. ,, ,, 127
33. யான் கண்ட இலங்கை. பக். 30

22

திருக்குறளும் நாமக்கல் கவிஞரும்

புலவர் இ. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., டிப். மானிடவியல்,
தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

விடுதலைப் பணியும் தமிழ்ப்பணியும்

இந்திய விடுதலை வேள்விப் பணியில் ஈடுபட்டுத் தமிழ்ப் பணியையும், நாட்டுப் பணியையும் ஒருங்கே ஆற்றி உழைத்த தமிழ்ப் பெருமக்கள் பலர். 'அச்சமில்லை அச்சமில்லை' என்று ஆண்மைக் குரலெழுப்பிச் சங்கநாதம் செய்த தேசியக்கவி பாரதி, 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' எனக் காந்தியின் சாந்தியை அமைதிக்குரலால் இசைத்த நாமக்கல் கவிஞர் இராமலிங்கனர் ஆகியோர் விடுதலை வானில் திகழ்ந்த தமிழ்ச் சுடர்கள். எட்டையபுரத்தார் தேசியக்கவி; நாமக்கல்லார் காந்தியக் கவி, முன்னவர் திலகர் சகாப்தத்தைச் சார்ந்தவர்; பின்னவர் காந்தி சாகப்தத்தைச் சார்ந்தவர். 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது! காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது' என்பர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்[1]. இவ்விருவருமே தமிழ்மொழிப் பற்றைத்—தமிழின உணர்வை வளர்க்கப் பணிபுரிந்தனர். நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் ஒன்றுக்கொன்று பகையாகாதென்ற உண்மையை உணர்ந்து, நாட்டுப்பற்றைக் கொண்டு மொழிப்பற்றையும், மொழிப்பற்றைக் கொண்டு நாட்டுப்பற்றையும் நன்கு வளர்த்த நற்றமிழ்ச் சான்றோர்கள்.[2]

விடுதலை வீரர்களின் இலக்கிய நோக்கு

தாய்மொழிப் புலமையுடைய தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு விடுதலை வேட்கையை—எழுச்சியை ஊட்டியவிதம் என்றும் நன்றியுடன் போற்றத்தக்கது; பொறிக்கத்தக்கது. நாடுபெற்ற நன்மையேயன்றி நம் நற்றமிழும் பெற்ற நன்மையை இங்குக் கருதுதல் நலம். இந்திய விடுதலை இயக்க வீரரும், சிலம்புச் செல்வருமான ம. பொ. சி. அவர்கள் இதுகுறித்துக் கூறுவது எண்ணி மகிழ்தற்குரியது.

> " தாய்மொழிப் புலமையுடைய வ. உ. சிதம்பரனர், சி. சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. க., வ. வே. சு. அய்யர் போன்ற

> வர்கள் விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களானார்கள். இதனால் தமிழ்மொழியின் வரலாற்றிலே முற்போக்கான ஒரு திருப்பம் ஏற்பட்டது. பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையிலே பார்த்தனர், தேசபக்தியுடைய தமிழர்கள். அத்துடனன்றித் தேசபக்தியை வளர்க்கும் புதிய இலக்கியங்களையும் படைத்தனர். ஆம், தேசபக்தி தமிழை வளர்த்தது. தமிழ் தேசபக்தியை வளர்த்தது. இதனால் மொழித் துறையிலே ஒரு சகாப்தம் பிறந்தது"[3].

என்று உணர்ச்சி முழக்கமிடும் அவர்தம் கூற்றில் தமிழிலக்கிய ஆய்வின் குறிப்பிடத்தக்க திருப்புமுனை நன்கு நன்றியுணர்வோடு எடுத்துக் காட்டப்படுகின்றது.

நற்றமிழ்க் கவிஞர் இராமலிங்கர்

'பாட்டுக்கொரு புலவன் பாரதி'க்குப் பின்னர் நம் தமிழ் நாட்டில் விடுதலை வேட்கைப் பயிரைத் தம் கவிதைகளால் உரமூட்டி வளர்த்த சொல்லேருழவர் நாமக்கல் கவிஞர். 'பாரதிக்குப் பிறகு விடுதலைப் போர்க் கவிதைகள் தமிழுக்கு இராமலிங்கத்தால்தான் கிடைத்தது' என்ற சிறப்பினைப் பெற்றவர் கவிஞர்[4].

> நாரத கீதமென்ன
> நயந்திகழ் பாடலாலே
> பாரத நாட்டை என்றும்
> பணிந்திடும் சுப்ரமண்ய
> பாரதி பாட்டைக் கண்ட
> பழையஇத் தமிழர் நாட்டில்
> யாரது என்று கேட்க
> யானுமிக் கவிகள் சொன்னேன்[5]

என்று கவிஞர் தம்கூற்றாலேயே தாம் பாரதி வழி வந்தவர் என்பதைப் பறைசாற்றுகின்றார்.

அன்பு நெறியில் உரிமை வாழ்வை வழங்கிய காந்தியடிகளாரின் அருள்நெறியைப் பரப்பிய காந்தியுகக் கவிஞர்—காந்தியக் கவிஞர்—எழுத்தாளர்—பேச்சாளர்—அரசியலாளர்—ஓவியக் கலைஞர்—காவியக் கலைஞர்—இசைக் கலைஞர்—புதினக் கலைஞர்—உரையாசிரியர்—இலக்கியத் திறனாய்வாளர்—தமிழ்நாட்டு அரசவைக் கவிஞராகவும் விளங்கியவர்—நம் நாமக்கல் கவிஞர். கவிஞரின் பாடல்கள் அடிமைத் தளையைத் தகர்க்க விழைந்த தமிழ் மக்களுக்கு உரமூட்டும் அருமருந்து. கத்தியின்றி இரத்தமின்றிச் சத்தியப் போரில் வீறுநடை போடச் செய்த வெற்றிச் சங்கு. "நாமக்கல் கவிஞர் காந்தியடிகளின் கொள்கைக்கு ஒரு கவிக்குரல்; காந்தீயத்தை இனிய கவிகளால் ஒலிக்கும் தமிழ்ச் சங்கு"[6] என்பர் அறிஞர் பெ. தூரன் அவர்கள்.

கவிஞரின் தமிழ்ப் பணி

சிலம்புச் செல்வர் அவர்கள் கூறுவதுபோல பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையில் பார்த்தவர் நாமக்கல் கவிஞர். இவர் எழுதிய நாற்பதிற்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் இவர்தம் புலமைத் திறனுக்கும், ஆராத் தமிழ் வேட்கைக்கும் அரிய சான்றுகத் திகழ்வன. கவிதை நூல்களும், கட்டுரை நூல்களும், இலக்கியத் திறனாய்வு நூல்களும், தன் வரலாற்று நூலும் இவற்றுள் அடங்கும்.

இளங்கோவின் இன்பத் தமிழிலும், கம்பனின் கவிதை நலத்திலும், சங்க நூல்களின் இலக்கியச் சுவையிலும் பயில்தொறும் இன்பங் கண்டு மகிழ்ந்தவர் கவிஞர் என்பது அவர் எழுதிய 'என் கதை' என்னும் நூலாலும், கவிதைகளாலும் நன்கு அறியலாம்[7].

நாமக்கல் கவிஞரின் நூல்களைத் திறனாய்வு மதிப்பீடு செய்தால் விடுதலைக் கால இலக்கியச் சூழல், காந்திய—அரசியல் பின்னணியில், தமிழ் வளர்த்த விதமும் — வளர்ந்த விதமும் — விடுதலை உணர்வும், தமிழ் உணர்வும் ஒருங்கே மக்களுக்கு ஊட்டிய விதம்—இலக்கிய ஆய்வில் அவர்தம் திறனாய்வுத்திறன் முதலாயின இனிது புலனாகும்.

முன்னோடியாக அவருடைய திருக்குறள் உள்ளத்தையும்— உரையையும் — ஆராய்ச்சியையும் மட்டும் இக் கட்டுரையில் காணலாம். இராமலிங்கனாரின் திருக்குறள் உள்ளத்தைப் பொதுவாகவும் — அவருடைய ஆய்வு நூல்களைச் சிறப்பாகவும் பகுத்து இருவகை நிலையில் ஆராயலாம்.

திருக்குறள் பற்றிய அவருடைய கருத்து, அந்நீதி இலக்கியத்தில், அவர் தோய்ந்து தோய்ந்து உளம் ஒன்றி அதன் பெருமையை உலகிற்கு வழங்கும் உணர்வு — இரண்டும் பொதுவானவை. அவ்வுணர்வால் அவ்விலக்கியக் கடலுள் மூழ்கி எடுத்த ஆய்வு முத்துக்கள் அவருடைய படைப்புகள் — ஆய்வு நூல்கள், அந்நூல்களில் அவர் செய்த திறனாய்வுத்திறன் இவை இரண்டும் சிறப்பானவை. இவற்றை இக்கட்டுரையில் சுருக்கமாகக் காண்போம்!

திருக்குறளும் நாமக்கல் கவிஞரும்

உலக அறிஞர் அனைவரின் உள்ளத்தையும், உணர்வையும் தொட்டு, இணையிலாத அற இலக்கியமாகத் திகழும் திருக்குறள், கவிஞரின் இலக்கியக் கவிதை உள்ளத்தையும் ஈர்த்ததில் வியப்பில்லை. அவர் படைத்த நூல்களுள் ஆறு நூல்கள் திருக்குறளைப் பற்றியதாகவே திகழ்கின்றன. கல்வி பயிலத் தொடங்கிய காலத்தும், கற்றவர்களிடத்து உரையாடும்போதும், ஏன் விடுதலை வேள்விச் சிறையில் வாடிய காலத்தும் இவருடைய உள்ளம் குறளையே சிந்தித்தது என்பதை அவருடைய, 'என் கதை' உணர்த்தும். அரசியல் வாழ்விலும் வள்ளுவத்தையே — வள்ளுவ வாழ்வையே அவர் உள்ளம் உள்ளியது என்று கூறலாம்.

சிறையில் மலர்ந்த சிந்தனையே இவருடைய, 'திருக்குறள் புது உரை'. வேலூர்ச் சிறையில் உருவான இச் சிந்தனை மலர், தமிழ் வளர்த்த மதுரைச் சிறையில் இதழ் விரித்தது. வேலூர்ச் சிறையில் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்கள் ஒரு பகுதியிலும், நாமக்கல் கவிஞர் அவர்கள் மற்றொரு பகுதியிலும் தமிழ் வகுப்பு நடத்தினார்கள். நாமக்கல் கவிஞரிடம் ஓமந்தூர் ரெட்டியார், கோபிசெட்டிப் பாளையம் சுப்பண்ணக் கவுண்டர், முத்துக் கவுண்டர், நல்லாக் கவுண்டர், தேவாரம் 'பாரதி', ஆசிரியர் திரு நாராயணசாமி முதலியோர் பாடம் கேட்டனர்.[8] நாள்தோறும் குறளின் ஒரு அதிகாரமும் கம்பராமாயணத்தில் இருபது பாட்டுகளும் படித்து வந்தார்கள்

திருக்குறளைப் பரிமேலழகர் உரையைக் கொண்டு விளக்கி வருகையில் பலருக்கும் பல ஐயங்கள் எழுந்தன. விளங்காத — விளக்கமுடியாத இடங்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்த குறட்பாக்களைப் படித்தார்கள். ஒருநாள் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் வகுப்பு நடக்குமிடத்துக்கு வந்து பாடம் கேட்டார்கள். அன்று பொருள் செயல்வகை அதிகாரத்தில்,

> 'குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
> றுண்டாகச் செய்வான் வினை'

என்ற குறளை நடத்திக் கொண்டிருந்தார் நாமக்கல் கவிஞர்.

'தன்கையிற் பொருளை வைத்துக்கொண்டு ஒரு காரிய முயற்சி செய்வதற்கும், மலையின்மேல் இருந்து கொண்டு கீழே நடக்கும் யானைச் சண்டையைப் பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம்?' என்று ஓமந்தூர் ரெட்டியார் கேட்டார். மீண்டும் பலமுறை படித்துப் பார்த்தும் ஒருவருக்கும் விளங்கவில்லை. திரு. சத்தியமூர்த்தி அவர்கள், 'தன் முயற்சியாகத் தன்னுடைய தனத்தைக்கொண்டு காரியத்தைச் செய்யவேண்டியவன், தான் சும்மா இனிதிருந்துகொண்டு வல்லாரை ஏவிக் காரியத்தை முடித்துக்கொள்வான் என்பதில் அர்த்தமில்லையே' என்றார். 'மிகவும் மதிநுட்பமுள்ள அந்த நியாயம் என் மனதுக்கும் சரியென்றே பட்டது' என்று எழுதுவர் நாமக்கல் கவிஞர். இறுதியில், ஓமந்தூர் ரெட்டியார் கவிஞரையே, திருக்குறளுக்கு எளிய நடையில் உரை எழுதுமாறு வற்புறுத்தினார். அன்றே திருக்குறளுக்கு உரை எழுதவேண்டும் என்ற வேணவா ஏற்பட்டதைக் கவிஞர் சுவைபடத் தன் வரலாற்றில் கீழ்வருமாறு எழுதுவர்:

> "தப்போ தவறோ திருக்குறளுக்கு வேறு ஒரு உரை 'எளிய நடையாகவாவது எழுதிவிடுவது' என்ற தீர்மானத்தை அன்றைக்கே செய்துகொண்டேன். அதற்குப்பின் எந்நேரமும் அதே சிந்தனைதான். ஒரே ஒரு குறளைத் திருப்பித் திருப்பி வெவ்வேறு விதமாகப் பதம் பிரித்துப் பார்த்துக் கொண்டே சிற்சில இரவுகள் தூங்காமலேயே விடிந்து போகும்"[9]

திருக்குறளுக்கு உரை காண்பதில் அவருக்கிருந்த ஆர்வமும், உழைத்த உழைப்பும் இதனால் நன்கு விளங்கும். இலக்கியத் திறனாய்வாளர்கள் ஆராய்ச்சிப் பொருளில் எத்தகைய ஆர்வமும், ஓயாத உழைப்பும், ஒன்றிய உள்ளமும் கொண்டு விளங்கவேண்டும் என்று கூறும் அறிஞர்களின் கூற்றும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாய் உள்ளது.[10]

1922இல் வேலூர்ச் சிறையில் உருவான இச்சிந்தனை மலர் மதுரையில் இதழ் விரித்து 1954இல் கோவையில் மணம் வீசித் திகழ்ந்தது. அன்று கோவையில் ஆளுநர் திரு. பிரகாசா அவர்கள் தலைமையில் இவ்வுரையை வெளியிட்டுக் கோவை நகர மக்கள் கவிஞரைப் பாராட்டினர்.[11] இவ்வுரை வெளிவருவதற்கு 22 ஆண்டுகள் ஆயின.

கவிஞர் கூறும் திருக்குறட் பெருமை

தமிழ்மொழிக்கு அளவிலாத பெருமை சேர்த்த வள்ளுவத்தை உளமகிழ்ந்து போற்றும் உள்ளத்தினர் இராமலிங்கர். 'தரணியெங்கும் இணையிலாத இல்லறத்தைப் போதித்த குறள்'[12] என்றும், 'இடர் நீக்கும் மருந்து'[13] என்றும், 'தூய வாழ்வின் தெளிவு காட்டும் பண்பினது'[14] என்றும், 'அன்பு தந்து அருள் விளக்கி அறிவு சொல்லும் அறமொழி'[15] என்றும் பலவாறு பாராட்டுவர். 'அறிவின் கடலைக் கடைந்து எடுத்த அமிழ்தம் திருக்குறள்' என்பார் கவிஞர்[16].

காலங்காலமாய் நின்று உடல் வருந்தித் துன்புற்றுத் துறவறத்தால் பெறும் மெய்யறிவு, 'குறள் கற்றால் உடனே ஓடிவரும்' என்று கூறும் கவிஞரின் கவிதை அவருடைய குறள் உள்ளத்தை — உள்ளத்தின் குரலை ஒலிப்பதாகும்.

காடுசென்று குகையடைந்து
  கண்கள்மூடி எண்ணியும்
காவிகட்டி ஓடெடுத்துக்
  கஷ்டவாழ்க்கை பண்ணியும்
தாடிவைத்து மொட்டைதட்டித்
  தவசியென்ற பேருடன்
தரணிமெச்ச ஊர்கள் சுற்றித்
  தருமபோதம் கூறியும்
கூடுவிட்டுக் கூடுபாயும்
  சித்துசெய்யக் கோரியும்
கோடிகாலம் வாழஎண்ணிக்
  காயகற்பம் தேடியும்
தேடுகின்ற உண்மையாவும்
  ஓடிவந்து நிற்குமே
தெய்வவாக்கு வள்ளுவன்
  திருக்குறள்கள் கற்கவே.[17]

என்று பாடும் அவருடைய உள்ளத்தின் குரல், 'திருக்குறளின் பெருமையை' உள்ளபடியே உலகுக்குப் பறைசாற்றுவதாகும்.

கவிஞர் நோக்கில் வள்ளுவரும் காந்தியும் (அகநிலை ஆய்வு)

தமிழ்க் கவிஞர் இராமலிங்கனுர், வள்ளுவத்துக்குக் காணும் விளக்கங்கள் புதுமை நிறைந்தனவாகத் திகழ்கின்றன. அறவழியும், அருள்நெறியும் கனிந்து திகழும் தேசத்தந்தை காந்தியின் வாழ்க்கை — சாந்தி வாழ்க்கை — அனுபவ அறிவோடு குறளை அணுகும் காந்தியக் கவிஞருக்கு — வள்ளுவரின் வாழ்வாகவே தென்படுகிறது. காந்தியின் எளிய வாழ்வு, கடையவனுக்கும் கடைத் தேற்றமளிக்க விரும்பும் தொண்டுள்ளம், பிறர் துன்பங்கண்டு கனிந்துருகும் அருள்நிலை முதலாயின வள்ளுவரின் வாழ்வு விளக்கமே — குறட் கருத்தேயாகும். எனவேதான் இராமலிங்கர் காந்தியைக் கூறவந்த இடத்தில் வள்ளுவரைக் காணுகிருர். வள்ளுவத்தை உணர்ந்த இடத்தில் காந்தியைக் காணுகிருர். வள்ளுவரையும் காந்தியையும் இணைத்துக் காட்டும் அவர்தம் பாடல்களில் சில துளிகள் !

'வள்ளுவரின் வாழ்க்கைதனை நினைப்பூட்டி
வான்புகழும் திருக்குறளை நடந்துகாட்டும்
கள்ளமிலாக் காந்திமுனி'[18]

'தமிழர்கள் உலகுக்கீந்த வள்ளுவர் தாஞே என்ன
அமிழ்தினும் உயர்ந்ததான அறமெலாம் நடந்துகாட்டும்
கமழ்மணம் உலகம் போற்றும் காந்தியார்' ஏந்தும்கொள்கை
நமதெனும் பெருமையோடு நம்நாடு நன்மைபேசும்.'[19]

'பொய்யா மொழித்திரு வள்ளுவனே
பூமியில் மீண்டும் வந்ததுபோல்
மெய்யே தெய்வம் கொல்லாமை
மேலாம் அறமென வாழ்ந்துதினம்
செய்யாப் பெருந்தவம் செய்துலகின்
சேமம் தனதெனப் பாடுபடும்
துய்யோன் காந்தி மகாத்மா'[20]

'தெள்ளியநல் அறங்களையே தெளிவாய்ச் சொல்லித்
தினையளவும் பிசகாமல் நடந்து காட்ட
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்ன
வழிகாட்டித் திருக்குறளை வாழ்ந்த வள்ளல்
பிள்ளைமனப் பேரறிஞன் பெம்மான் காந்தி'[21]

என்று பாடும் அவர்தம் பாடல்கள் — அவர் உள்ளத்தையும், இந்திய மக்கள் உள்ளத்தையும் கொள்ளைகொண்ட தேசத்தந்தையை 'வள்ளுவரே' எனக் கூறும். வள்ளுவத்தில் வையத்தை அளந்து காண விழையும் கவிஞர், இந்திய ஒருமைக்கும் இணைப்புப்பாலமாக வள்ளு

வத்தையும் காந்தியையும் உருவாக்கி மகிழ்கின்றார். காந்தி கொண்ட கொள்கைகள் வள்ளுவர் வகுத்தவையே என்பதை,

'திருக்குறள் அறிவெலாம் — ஒன்றாய்த்
திரண்டுள நெறியனவாம்
உருக்குறள் காந்திமகான் — தந்துள
ஒப்பரும் சாந்த வழி'[22]

என்னும் பாடலால் புலப்படுத்துகின்றார். மேலும்,

'உள்ளமும் உடலும் கூட
உலகெலாம் வணங்கும் ஜோதி
வள்ளலக் காந்தி செய்த
அறந்தரு வாழ்க்கை முற்றும்
தள்ளரும் அறங்க ளாகத்
தமிழ்த் திருக்குறளில் முன்பே
வள்ளுவன் வாழ்ந்து சொன்ன
கொலைதவிர் வாய்மை யாகும்'[23]

என்னும் கவிதையால் காந்தியக் கொள்கைகளுக்கும் வள்ளுவக் கருத்துகளுக்கும் உள்ள இணைப்பினை எடுத்துக் காட்டுகின்றார்.

"இந்திய நாட்டின் ஞான நூல்களில் மறைந்துகிடந்த சாந்த — சத்திய — சன்மார்க்க வாழ்வின் பெருமையை மகாத்மா காந்தியவர்கள் தோன்றி வாழ்ந்து காட்டுகிற வரையிலும் மக்கள் உணரவும் முடியவில்லை; நம்பவும் முடியவில்லை. மகாத்மா காந்தியின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் செயலும் எனக்கு ஒவ்வொரு குறளை விளக்கியது. எக்காலத்துக்கும் அழியாத சத்தியங்களையே தழுவி அவர் நடத்திய வாழ்க்கை திருக்குறளின் பெருமையைத் தெளிவாகக் காட்டியது. அதுதான் காந்தியைப் போலவே வாழ்க்கை நடத்திய வள்ளுவரின் உள்ளத்தை உணரச் செய்தது. அந்த உணர்ச்சியின் உழைப்பும் பயனுமே எளியேனுடைய புது உரை. என்னுடைய புது உரையின் கையெழுத்துப் பிரதிகளைப் படித்து மகிழ்ந்து பாராட்டிய நண்பர்களிற் சிலர் நான் காந்தீயக் கண்கொண்டு குறளுக்கு உரை கண்டிருப்பதாகப் புகழ்ந்தார்கள். ஆனால் அது சரியல்ல. நான் எனது உரையில் காந்தியடிகளின் பெயரைக்கூடச் சொல்லவில்லை. காந்தியடிகளின் அற்புத வாழ்க்கை திருக்குறளின் பெருமையை நான் உணர்தற்கு உதவியதென்றாலும் நான் அறிந்துகொண்ட உண்மை என்னவென்றால் திருக்குறளிலுள்ள ஞானந்தான் காந்தியாக வடிவெடுத்து வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டியது என்பதே. ஏனெனில் காந்திமகான் வந்ததும் வாழ்ந்ததும் நேற்று நடந்தவை. ஆனால் திருக்குறளிலுள்ள மெய்யறிவு எல்லையற்ற காலந்தொட்டு இந்நாட்டில் இருந்து வருவது ஆம்"[24] என்று நாமக்கல் கவிஞர் கூறுவது அவருடைய வள்ளுவர் — காந்தி உள்ளத்தைத் தெள்ளிதின் காட்டும்.

"வள்ளுவர் உலகம் உய்ய அறம் வகுத்தார். காந்தி அவ்வறங்களை நடத்திக் காட்டினார். காந்திக்காகவே அநேகம் குறள்களை வள்ளுவர் பாடினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது"[25] என்று தமிழறிஞர் இராய. சொக்கலிங்கம் அவர்கள் கருதுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

"அறிவும், காந்நீய அடிப்படையில் தோன்றும் சமுதாய உணர்வும் சேர்ந்து சமைந்த மிகவும் புதிய கோணத்திலிருந்து நாமக்கல் கவிஞர் வள்ளுவரைக் காண்கிறார். அவர் காணும் காட்சியை மிகவும் இனிய நடையில், பழகும் தமிழில் நமக்குத் தருகின்றார். வள்ளுவர் பெருமையில் இதுவரை நமக்குத் தோன்றாத பல புதிய அம்சங்கள் கவிஞர் உரையில் புலனாகின்றன"[26] என்பர் அறிஞர் அ. சீநிவாச ராகவன் அவர்கள்.

நாமக்கல் கவிஞரின் திருக்குறள் நூல்கள்

நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்களுள் ஆறு நூல்கள் திருக்குறளைப் பற்றியன.

1. வள்ளுவரின் உள்ளம், இன்ப நிலையம், சென்னை, ஜனவரி 1954
2. திருவள்ளுவர் திடுக்கிடுவார், இன்ப நிலையம், சென்னை, ஆகஸ்ட், 1954
3. திருவள்ளுவரும் பரிமேலழகரும், இன்ப நிலையம், சென்னை, சனவரி, 1956.
4. திருவள்ளுவர் இன்பம், மங்கள நூலகம், சென்னை, 1953.
5. திருக்குறள் புது உரை, மங்கள நூலகம், சென்னை, ஆகஸ்ட், 1954.
6. திருக்குறள் புதுஉரைச்சுருக்கம், கவிஞர் பதிப்பகம், கோவை, 1960.

இவ்வாறனுள்ளும் திருக்குறள் புதுஉரையும், திருக்குறள் புதுஉரைச் சுருக்கமும் உரைவகையைச் சார்ந்தன. ஏனைய திறனாய்வு நூல்கள் எனலாம். திருக்குறள் புதுஉரைச் சுருக்கம் என்னும் நூல் 'திருக்குறள் புதுஉரை' வெளியீட்டு விழாவின்போது வழங்கிய உரையின் சுருக்கமாகும்.

அகநிலை ஆய்வும் புறநிலை ஆய்வும்

பொதுவாகக் குறளின் ஆய்வுமுறைகளை இருபெரும் பிரிவுகளாகக் கொள்ளலாம். திருக்குறளின் உள்நின்று அதன் அகநிலைச் செய்திகளனைத்தையும் திரட்டி ஆய்தல் ஒன்று; பிற இலக்கியங்களோடு

திருக்குறளை ஒப்புநோக்கி அதன் பெருமையைத் தெளிதல் மற்றொன்று. இவற்றை அகநிலை ஆய்வு, புறநிலை ஆய்வு எனலாம்.[27]

கவிஞரின் ஆய்வுமுறையில் இவ்விரு வகை நிலைகளையும் காண முடிகிறது. திருவள்ளுவர் திடுக்கிடுவார், திருவள்ளுவரும் பரிமேலழகரும், வள்ளுவரின் உள்ளம் ஆகிய இம்மூன்று நூல்களுமே குறளின் அகச் செய்திகளைச் சிற்சில இடங்களில் ஒருசேரத் தொகுத்து ஆயும் ஆய்வாலும், பெரும்பாலும் வள்ளுவரின் குறட்பாக்களுக்குச் சில இடங்களில் கூறிய பரிமேலழகரின் முரணான உரைகளின் மறுப்புரைகளாகவே விளங்குகின்றன. 'வள்ளுவரின் உள்ளம்' என்னும் நூலில் திருக்குறளுக்குப் புதுஉரை காண நேர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கிக் கூறுகிறார்.

குறளின் கருத்துகளைக் காட்டக்கூடிய வள்ளுவர் காலத்து உரை நமக்குக் கிட்டவில்லை. எனவே அவர் காலத்துக்குப்பின் பல நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய உரையாசிரியர்கள் அனைவரும் அவருடைய உள்ளத்தை முழுதும் உணர்ந்தவர்கள் என்று கருத முடியாது என்று கவிஞர் கருதுகிறார்.

திருக்குறளின் பழைய உரையாசிரியர்களைப் பற்றிய கவிஞரின் கருத்து சிந்திக்கத்தக்கது.

> "குறள்களின் அடுக்கு முறையில் மட்டுமன்றிக் குறள்களுக்கு உரை சொல்லுவதிலும் ஒருவருக்கொருவர் பல இடங்களில் மிகவும் மாறுபடுகின்றனர். அது மட்டுமன்றி ஒவ்வொருவரும் வெவ்வேறு சமயச் சார்புகளைப் புகுத்திப் பொருள் செய்கின்றார்கள். காலம், இடம், நிறம், சமயம், ஜாதி முதலானவற்றையெல்லாம் கடந்து நிற்கின்ற சத்தியங்களைச் சொல்லுகின்ற திருவள்ளுவரின் கருத்துகளுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத முறையில் இந்த உரையாசிரியர்கள் அவரவர்கள் மனம் போனபடி அவரவர்கள் காலம், இடம், சமயம் முதலியவற்றை ஒட்டிய முறையில் பொருள் செய்திருக்கிறார்கள். மேலும் இவர்களிற் சிலர் திருக்குறளின் அர்த்தங்களை விளங்க வைக்காமல் விஸ்தாரமான இலக்கண நுணுக்கங்களில் இறங்கி இலக்கணம் கற்ற பண்டிதர்களையும் பயமுறுத்துகின்றார்கள்."[28]

என்பது நாமக்கல் கவிஞரின் பழைய உரையாசிரியர்கள் பற்றிய மதிப்பீடு. இளம்பூரணர் முதல் இன்றைய உரையாசிரியர்கள் வரையில் அனைவருமே நூலாசிரியரைப் போற்றி நோக்கியும், உரையாசிரியரை உற்று நோக்கியும்தான் ஆய்ந்தனர். கட்டடக் கலைஞன் அடிக் கட்டடத்தை ஆராய்வதைப் போல இலக்கிய ஆராய்ச்சியாளர் பழைய உரை ஆராய்ச்சியாளர்களின் அடிப்படையை ஆராய்வது இயல்பு[29].

இங்ஙனம் ஆராய்வது நல்ல திறனாய்வாளனின் இலக்கியப் பண்பே யாகும். அந்த வகையில் கவிஞர் அவர்கள் பரிமேலழகரின் உரையை உற்றுநோக்கியும் ஒப்பு நோக்கியும் ஆய்ந்த ஆராய்ச்சி உரை 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்' என்னும் நூல். பொதுவாக இலக்கியத்தைப் படைக்கும் கலைஞர் இலக்கியத்தை ஆயும் அறிஞராக இருக்க முடியாது என்றும், படைக்கும் திறனும், ஆயும் திறனும் ஆகிய இருவகைத் திறன்களும் ஒருவரிடத்து அமைதல் இயலாது என்றும் கூறுவர். ஆனால் இத்தகைய இருவகைத்திறனும் இவரிடத்தில் பொருந்தி விளங்குவதைக் காணலாம்.

குறள் இலக்கியத் திறனாய்வுத்திறன் :

அறிவிலும் கருத்திலும் சிறந்தவற்றைத் தேர்ந்தறிவதற்கும் பரப்புவதற்கும் உரிய பற்றற்ற முயற்சியே ஆராய்ச்சி[30]. இவ்விலக்கிய ஆராய்ச்சி செய்பவர் ஆர்வத்துடனும் நடுவுநிலைமைதவறாது 'குணம் நாடி குற்றமும் நாடும்' பண்புள்ளவராகவும், 'எப்பொருளிலும் மெய்ப் பொருள் காணும் அறிவு வேட்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையானால் இலக்கியத்தின் உயிர்நாடியை அறியாமற்போவதுடன் பிறழ உணர்த்தும் நிலைக்கும் ஆளாதல் வேண்டிய அவலநிலை அவர்க்கு வந்து சேரும்.

குறளுக்கு உரை செய்து அழியாப் புகழ்பெற்ற பரிமேலழகரும் குறட்பாக்களுக்குச் சில இடங்களில் பிறழ உரை செய்ய நேர்ந்ததைப் புலவர் பெருமக்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்[31]. மூல ஆசிரியரான வான்புகழ் வள்ளுவருடன் ஒப்பப் போற்றப்பெறும் பரிமேலழகரைப்பற்றிக் கூறும்போதும் நடுவுநிலை பிறழாத நல்லுள்ளத்தோடேயே நாமக்கல் கவிஞர் அவரை அணுகுகிறார். பரிமேலழகரைப் பற்றிய கவிஞரின் ஆய்வு மொழிகள் பின்வருவன :

> "பரிமேலழகரின் உரை மற்றெல்லா உரைகளிலும் மிகச் சிறந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தமிழுலகத்தின் நன்றி நிறைந்த வணக்கத்துக்கு உரியவர். தமிழ் மரபையும், தமிழ் இலக்கியங்களையும், தமிழ்ப் பண்புகளையும் தழுவித் தான் மிகுந்த நுண்ணறிவுடன் உரை செய்திருக்கிறார்"[32].

> "பரிமேலழகர் நாம் வணங்க வேண்டிய மிகவும் பெரியவர். அவர் தோன்றியிராவிட்டால் உலக இலக்கியங்களுக்குள் தலைசிறந்த இலக்கியமாகிய திருக்குறள் இந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்திராது. மூலக் குறள்களின் வைப்பு முறைகளும் தடுமாறிச் சிதைந்து கிடந்த திருக்குறளைச் செப்பனிட்டுத் தந்த அழியாப்புகழ் அவருக்கே உரியது"[33].

இவை பரிமேலழகரைப் பற்றிய கவிஞரின் புகழ்மொழிகள். ஆனால் குறைகள் கண்டவிடத்துச் சுட்டிக்காட்டிச் செல்லும் நல்லாய்

வாளனின் தனிப்பண்பும் இவர்தம் திறனாய்வுத்திறனில் துலங்குகிறது. அதுவே மொழி வளர்க்கும் நற்பணியுமாகும். இத்தகைய புகழ்மாலை யைச் சூட்டிய கவிஞர்,

> "......ஆனாலும் என்ன? பரிமேலழகரும் அவருக்கு முன்னாலிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைச் சொந்த மாக ஆராயாமல், தவறான உரைகளைத் தந்து விட்டார் என்பதை எடுத்துச் சொல்லக் கூடாதா? நெற்றிக்கண் திறந் தாலும் குற்றம் குற்றம்தான் என்ற பரம்பரையில் வந்த நாம் இதை ஒத்துக்கொண்டால் என்ன? பரிமேலழகர் மிகப்பெரிய உரையாசிரியர்தான். ஆனால் திருக்குறள் அவரைவிட மிகப் பெரிய விஷயம் அல்லவா? பரிமேலழகர் மீது நமக்குள்ள பாசத்தால் திருக்குறளுக்குத் தீங்கு வரச் செய்யலாமா?"[34].

என்று கூறும்போது கவிஞரின் திருக்குறட்பற்றையும், நடுநிலைத் திறனாய்வுப் பண்பையும் ஒருங்கே கண்டு மகிழமுடிகிறது.

> திருக்குறளுக்கு உரை சொல்லும்போது, திருவள்ளுவர் எதைக் கருதியிருக்கிறார் என்பதை ஆய்ந்தறிந்து சொல்ல வேண்டும். திருவள்ளுவர் கருத்தை அறிந்து கொள்ள முடி யாமல் சொந்த யுக்தியைக் கொண்டு உரை செய்து விட் டாலும், திருவள்ளுவர் எதைச் சொல்ல மாட்டாரோ, அதைச் சொல்லிவிடாமலாவது உரைகாண வேண்டும். பரிமேலழகர் உரையில் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்தை ஆராயாமல் அவர் எண்ணாத உரைகள் எழுதப்பட்டிருக்கின் றன என்பது மட்டுமின்றிச் சில இடங்களில் திருவள்ளுவர் எதைச் சொல்ல மாட்டாரோ அதை உரையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. திருவள்ளுவர் எதைச் சொல்லமாட்டார் என்பது உண்மையை நாடுகின்ற எல்லாருக்கும் எளிதிற் புலனாகும். திருக்குறள் முழுவதிலும் மிகவும் உச்சமான அற வொழுக்கம்தான் சொல்லப்படுகிறது. அற ஒழுக்கத்துக்கு மாறான எதையும் திருவள்ளுவர் சொல்லமாட்டார் என்ற ஒன்றே திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கமாட்டார் என்ற உணர்ச்சியை உண்டாக்கும். திருவள்ளுவர் எதைச் சொல்லி யிருக்கவே மாட்டார் என்று நாம் நிச்சயமாகக் கூறமுடியுமோ அதையே பரிமேலழகர் திருக்குறளுக்குப் பல இடங்களில் கூறியுள்ளார்' என்று தெளிவாக ஆய்ந்து அதனைத் தம் நூலில் விரிவாக விளக்குகின்றார், நாமக்கல் கவிஞர்[35]. சான்றாக ஒன்று மட்டும் காண்போம் :

> ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
> செல்லும்வாய் நோக்கிச் செயல்[36].

என்பது 'வினை செயல் வகை' அதிகாரத்தில் உள்ள குறட்பா. வினைத் தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை என்ற நிரல் வைப்பில் இவ்

வதிகாரம் மூன்ருவதாகும். குற்றமற்ற செயல்களை, மனவுறுதியுடன், செய்ய வேண்டிய முறைகளைக் கூறுவது இம் மூன்றதிகாரங்களின் பொருள்களாம். பரிமேலழகர் அங்கவியலில் இக்குறட்பா வருவதால் இப்பாட்டிற்குப் பொருள் எழுதும்போது "வினைசெய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற் செய்தல் நன்று. அஃதியலாவிடத்து சாம, பேத, தானம் என்ற மற்ற மூன்று உபாயங்களின் ஏதாவது ஒரு உபாயத்தால் செய்ய வேண்டும்" என்கிருர். இவ்வுரையை மறுத்துக் கவிஞர் கூறுகின்ற ஆய்வுரை மிகவும் நுட்பமும் திட்பமும் வாய்ந்தது! அது பின்வருமாறு :

> " இந்த உரையின்படி 'வினை' என்பதற்கும் போர் என்பது பொருளாகின்றது. 'செல்லும் வாய்' என்பதற்குச் 'சாம, பேத, தானம் என்பவற்றுள் ஒன்று' என்பது பொருளாகிறது. 'மேலும் போர்புரிய நினைக்க வேண்டியவர்களும் கூட முதலில் சாம, பேத, தானம் என்ற மூன்று உபாயங்களையும் முறையே கையாள வேண்டுமென்றும் இந்த மூன்று உபாயங்களாலும் முடியாது போனுல்தான், கடைசி பட்சமாகத் தண்டம் என்ற போர் புரிதலை மேற்கொள்ள வேண்டும் என்பது வழக்கமாகச் சொல்லப்படுகிற நெறிமுறை. அப்படியிருக்க, இந்த உரையில் எந்தக் காரியத்தையும் போர்செய்து முடித்துக் கொள்வதுதான் நல்லது! அப்படிப் போர்செய்ய முடியாத போதுதான் 'சாம, பேத, தானம்' என்ற மற்ற மூன்று உபாயங்களில் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லப் பட்டிருப்பது மிகவும் விபரீதமானது. இது எல்லா நீதி நூல் களுக்கும் விரோதமானது.

இது (இக் குறளுக்குச் சொல்லப்பட்ட விசேடவுரை) அரசனையும் அமைச்சனையும் சேர்த்துக் குழப்புகிறது. இங்கே பகைவன் யார்? போர் எதற்காக? அரசனுக்கானுலும் அமைச்சனுக்கானுலும், 'வினை செயல்வகை' என்பது போர்புரியும் வேலை ஒன்றுதானு தொழில்? 'வினை' என்ற சொல்லுக்குப் 'போர்' என்பது பொருளானுல் 'வினைத்தூய்மை' என்பதற்குப் 'போரின் தூய்மை' என்றும், 'வினைத்திட்பம்' என்பதற்குப் 'போர் செய்யும் திட்பம்' என்றும் பொருள் கொள்ளலாமா? 'வினை' என்ற பதத்திற்கு 'வேலை' 'தொழில்' 'செய்கை' 'காரியம்' என்பவைகளே பொருளாகும். போர் நடக்கும் சூழ்நிலைகளில் 'போர்வினை', 'சமர்வினை' என்று கொள்ள வேண்டிய இடங்களில் அது போரைக் குறிக்கலாம். 'வினை' என்ற தனிச் சொல்லுக்குப் 'போர்' என்ற அர்த்தம் எங்குமில்லை. இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் செய்துள்ள இந்த உரையில்தான் 'வினை' என்ற சொல்லுக்குப் 'போர்' என்ற பொருள் புகுத்தப்பட்டு விட்டது. அதிலிருந்து பிற்காலத்திய அகராதிகளிலும் 'வினை' என்ற பதத்திற்குப் 'போர்' என்

> பதும் ஒரு அர்த்தமாக அச்சடிக்கும் வழக்கம் உண்டாகி விட்டது."

என்ற நாமக்கல் கவிஞரின் மறுப்புரையிலும்—விளக்கவுரையிலும் பொதுவாகப் பொருள் கூறவேண்டிய விடத்துப் பரிமேலழகர் வலிந்து பொருள் கொள்வதை மறுக்கின்றார்.

நாமக்கல்லாரின் திருக்குறள் புது உரை அமைப்பும் சிறப்பும்

மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுகளும் அமையப் படைப்பதுதான் இலக்கியம். அத்தகைய இலக்கியக் கலைக்குப் பொருள் காண வேண்டும் எனின், பொருள் காண்பார்க்குப் பலதுறையறிவு வேண்டும் என்பதுதானே விளங்கும். ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையே காண்பதற்குப் பல அறிவுக் கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்று காலவறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்கவழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத் தொடர் ஓடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும், நாட்டின் வரலாற்றறிவும் இன்ன பிறவும் இருந்தால்தான் உரையெழுதும்போது நினைவுக்கு வந்தால்தான் பொருளை முரணின்றிக் காண முடியும்.[37]

இந்த வகையில் நாமக்கல் கவிஞர் உரை அமைந்துள்ளதை அவரே தம் முன்னுரையில் கூறுவதனின்றும் நன்கு உணரலாம்.

> "இந்த நூலுக்குத் திருக்குறள் புதுஉரை' என்ற பெயரிடப் பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இதிலுள்ள உரைகள் மிகவும் எளியநடையில் ஒரு புது முறையில் சொல்லப்படு கின்றன என்பதற்காக மட்டும் அல்ல. பழைய உரைகளில் பல குறள்களுக்கு மிகவும் தவருகச் செய்யப்பட்டுள்ள உரை களுக்கு முற்றிலும், வேறுபட்ட புது உரைகள் சொல்லப்பட் டிருப்பதே 'புது உரை' என்ற பெயருக்குக் காரணம். பத்து உரையாசிரியர்கள் எழுதிய பழைய உரைகளுக்குள் பரி மேலழகர் செய்த உரையே பாடமாகப் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. பரிமேலழகர் மிகச் சிறந்த அறிஞர் என்பதில் ஐயமில்லை. ஆனால் திருவள்ளுவருடைய காலத்துக்குச் சுமார் 1400 ஆண்டுகளுக்குப் பின்னல் பரிமேலழகர், திருவள்ளு வருடைய கருத்தையும் திருவள்ளுவர் காலத்தில் அரங் கேற்றப்பட்ட உரைகளையும் ஆராய்ந்தெழுத அவகாசமில்லாத வராகி, தம்முடைய காலத்தில் வழங்கிய உரைகளையும், அப்போதிருந்த சமூகப்பழக்க வழக்க சம்பிரதாயங்களையும் தழுவித் தம்முடைய உரையைச் செய்திருக்கிறார். பரிமேலழ கருக்கு முன்னல் திருக்குறளுக்கு உரை செய்திருந்த ஒன்பது பேர்களும் அவரவர்கள் மனம் போனபடி குறள்களின் வரிசைக் கிரமங்களை மாற்றிக்கொண்டு, வைப்பு முறையைச்

சீர்கெடுத்திருந்தார்கள். அதை ஒழுங்குபடுத்த மூலத்தின் ஏட்டுப்பிரதிகளைத் தேடி ஆராய்வதற்கே பரிமேலழகர் அரும்பாடுபட்டிருக்க வேண்டுமென்று அனுமானிக்க இடமிருக்கிறது. அதனால் உரைகளையும் ஆராய்ந்து மாற்றியமைக்க அவருக்கு அவகாசம் இல்லை போலும். எனவே அவருடைய உரைகளும் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்கு ஒவ்வாதனவாகவும் தத்துவங்களுக்கும் சத்தியங்களுக்கும் முரண்பட்டனவாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் முற்றிலும் வேறுபட்ட பொருத்தமான புது உரைகளைச் செய்திருப்பதே இந்நூலின் சிறப்பு".[30] கவிஞருடைய உரையமைப்பின் சில கூறுகளை மட்டும் ஈண்டுக் காண்போம்

பெறுமவற்றுள் யாமறி வதில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.[39]

இக்குறட்பாவிற்கு உரையெழுதிய பரிமேலழகர் 'அறிவறிந்த மக்கள்' என்ற கருத்து பெண்பாலை யொழித்து நின்றது' என்று கூறுகிறார். இவ்வதிகாரப் பெயர் 'புதல்வரைப் பெறுதல்' என்பதனை மறுத்து 'மக்கட்பேறு' என்றே கவிஞர் உரைக்கின்றார். இக்குறட்பாவிற்குக் கவிஞர் எழுதிய உரையில் வள்ளுவர் சடங்குகளைத் திணிக்க விரும்பாதவர் என்று கூறும் முடிவு ஏற்றுக் கொள்ள வேண்டிய முடிபேயாகும். அவருடைய விளக்க உரை வருமாறு :

"அறிவறிந்த மக்கள்" என்பதற்கு 'அறிய வேண்டியவற்றை அறியக் கூடிய புத்தி கூர்மையுள்ள மக்கள்' என்பது மட்டும் தான் அர்த்தம். 'அறிவறிந்த மக்கள்' என்பது பெண்மக்களை நீக்கி, ஆண்மக்களை மட்டும்தான் குறித்தது என்பது சரியல்ல. 'மக்கட்பேறு' என்ற அதிகாரம் ஆண்மக்கள் வேறு, பெண் மக்கள் வேறு என்று பிரித்து எழுதப்பட்டிருக்கிறதென்றால் திருவள்ளுவர் பெருமைகு நாம் செய்யக்கூடிய அநியாயம் அதைவிட வேறில்லை. மேலும் 'அறிவறிந்த' என்பது இம்மை, மறுமை ....என்பவைகளுக்கான 'அறிவை அறிந்த' என்று நீட்டிப் பொருள் செய்தாலும் ஆண்கள் மட்டும் தானா இம்மை, மறுமைகளை அறிய வேண்டியவர்கள்? பெண்கள் அவற்றை அறிய வேண்டாமா? அறியக்கூடாதா? அல்லது அறியக்கூடிய புத்தி கூர்மை பெண்களுக்கு இருக்க முடியாதா? 'அறிவறிந்த' என்பதற்கு ஆண்மக்கள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் (திவசம் முதலியன) என்ற 'அறிவை அறிந்த' என்று பொருள் கொள்வதற்குப் பதங்களில் இடமில்லை. ஆண்மக்கள் அறிய வேண்டிய அறிவு, நீர்க்கடன் செய்வது மட்டுமல்ல. மேலும் நீர்க்கடன் என்பது ஒரு சாராருடைய சடங்கு நம்பிக்கை. திருவள்ளுவர் அப்படிப்பட்ட நம்பிக்கைகளை அவமதிப்பதில்லை

> யாலும் சடங்குகளை அவர் திணிப்பதில்லை. அதனால் தான் எல்லா மதத்தினரும் திருக்குறளைப் பொதுமறையாகப் போற்றுகின்றார்கள். எது எப்படியிருந்தாலும் ஆண் மக்கள் தாம் 'அறிவறிந்த மக்கள்' என்று வள்ளுவர் எண்ணி யிருக்கவே முடியாது".

இங்ஙனம் இவர் கூறும் உரை விளக்கங்கள் காலத்திற்கு ஏற்றவை யாகவும் விளங்குகின்றன.

நாமக்கல் கவிஞரின் புது உரையைப் படிக்கக் கேட்ட தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்கள், "புது உரை, பழமைக்கு முரண்படாதது, புதுமைக்கு அரண்செய்வது; காலத்துக்கு ஏற்றது; அதன்கண் காந்திய மணங்கமழ்கிறது" என்று பாராட்டினர்.[40]

'பகுத்தறிவுக் கருத்தையும் ஏற்று, சமயப் பண்பையும் முழுதள வாக ஏற்றவர் கவிஞர் இராமலிங்கனர். இப்பண்பு திருவள்ளுவரை அணுக உதவும் பண்பே. அவரும் அணுகியுள்ளார். ஆனால் அவர் பகுத்தறிவு வேருக, சமயப் பண்பு வேருகத் தொடர்பற்றுச் செல்வ தால், இரண்டும் இணைந்த திருவள்ளுவர் பண்பை எட்டிப்பிடித்தும், நம் காலக் காற்று அவரைப் பிடி நழுவ விட்டுப் பின் தட்டித்தடவும்படி செய்துவிடுகிறது' என்று பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் இவர் உரையியல்பைப் பற்றி உரைப்பர்.[41]

> 'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்'[42]

என்னும் குறட்பாவிற்கு இராமலிங்கனர் தரும் விளக்கவுரை நயமாக உள்ளது. அதன் விளக்கவுரை பின்வருமாறு:

> "கல்வி கற்பது அறிவுக்காக. நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்து கொண்ட அறிவுக்கு மேல் இன்னும் அறியவேண்டிய அறிவு இருந்து கொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்றபோது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது. ஆகவே நாம் அறிந்து கொள்ள முடியாத அறிவு இருந்து கொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் 'வாலறிவன்' என்றும் 'பகவன்' என்றும் சொல்லுகிறோம். அந்தப் பகவான் என்ற பூரண அறிவிற்கு மிக மிகவும் குறைந்ததுதான் நம்முடைய அறிவு என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம் கற்ற கல்வியின் பயன் என்னவோ! ஒப்புக்கொண்டால் அதற்கு வணங்க வேண்டும்".

இவ்விளக்கவுரைப் பகுதி திருவள்ளுவர் உள்ளம் தொடுகிறது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் திருவள்ளுவரே 'அறிதோறும் அறி

யாமை கண்டற்ருல் (1110) என்று கூறிய கருத்தையே இது இக்குறட்பா உரையில் கொண்டு இணைக்கிறது. அத்துடன் 'வாலறிவன்' ஆகிய கடவுள் அறிவின் பூரணம், எல்லையற்ற அறிவின் எட்டாத எல்லை என்பது சமயங்களின் முடிவு, வள்ளுவரின் முடிவேயாகும்.

'கல்வியின் இலக்கு இறைவனே' என்று கவிஞர் முடிவாகக் கூறத் தவறியமையின் பின்வருமாறு கருதுகிருர் பன்மொழிப் புலவர்:

> "கிட்டத்தட்ட நேர்மை உரைகண்டுணர்ந்தும் 'கடவுள் கல்வியின் இலக்கு' என்று கூறத்துணியாத நம்காலப் போலிப் பகுத்தறிவு, நம்காலப் போலி ஆத்திகம் ஆகிய இவற்றின் பிடியில் பட்டு. கண்டு எடுத்த வைரத்தை எறிந்து விட்டுக் கண்ணுடித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து அடுக்குகிருர் கவிஞர்".[48]

பழைய உரையாசிரியர் காளிங்கர் ஒவ்வொரு அதிகாரத்தின் இறுதிக் குறளிலும் அடுத்த அதிகாரத்திற்குரிய பொருளை இயைபு படுத்திக் காட்டிச் செல்வர். நாமக்கல் கவிஞர் ஒவ்வொரு குறளின் இறுதியிலும் அடுத்த குறளுக்குரிய பொருளோடு தொடர்பு படுத்தி உரையமைத்துள்ளார்.

முதற் குறட்பாவான 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற குறளுக்குக் கருத்துரையாக,

> "எழுத்தைக் கொண்டு எழுதினவனை எண்ணிப் பார்க்கிருேம். அதேபோல உலகத்தைக் கொண்டு அதை உண்டாக்கினவனை எண்ண வேண்டும்"

என்று கூறியபின் அடுத்த குறளுக்கு இயைபாக,

'அப்படி எண்ணுமல் பல நூல்களைக் கற்றவர்களிலும் கூட அநேகர் அவனை வணங்க மறுக்கிருர்களே' என்று கூறி அடுத்த குறளுக்குப் பொருள் தொடர்பு ஏற்படுத்துகின்ருர். இவ்வாறே அதிகாரத்தினுள் பொருள் இயைபு ஏற்படுத்தித் தொகுத்துரைக்கும் இயல்பு இனியதாயிருக்கின்றது.

அறத்துப்பால் தவிர, பொருட்பால், காமத்துப்பால் ஆகிய இரண்டிற்கும் இவர் தந்துள்ள முன்னுரை குறிப்பிடத்தக்கது. சில இடங்களில் அதிகார வைப்பு முறைக்கான காரணங்களையும் சுட்டிச் செல்வர். எனவேதான் 'திருக்குறள் உரை வேற்றுமை' கண்ட இரா. சாரங்க பாணி அவர்கள்,

> "நாமக்கல் கவிஞர் தம் நிறைந்த வாழ்க்கைப் பயிற்சியால் சில குறள்களுக்குப் புதுவதாகவும் பொருத்தமாகவும் உரைகளை

வழங்கியுள்ளார். குறளுக்குக் குறள் வைப்பு முறைக்காரணங் கண்டு எழுதுதல் இவர்தம் உரையியல்பாகும்."

என்று போற்றுவர்.[44]

ஒரு குறளுக்குப் பொருள் நாடும்பொழுது அந்தக் குறளுக்கு முன்னும் பின்னுமுள்ள குறள்களிலுள்ள கருத்துக்களையும் அறிந்து பொருள் காணவேண்டும் என்னும் கருத்துடையவர். சான்றாகத் 'தவம்' என்னும் அதிகாரம் முழுவதற்கும் இவர் புதுமையாகவும், பொருத்தமாகவும் உரை கண்டிருப்பதைக் கூறலாம்.[45] வள்ளுவர் கூறிய கருத்தினை வைத்தே ஏனைய குறள்களுக்கும் பொருள் காணும் நினைவாற்றல் திறனும் நன்கு பொருந்தி விளங்குவதைக் குறள் 506ன் உரையில் காணலாம்.

"பொதுவாக ஒரு குறளுக்கு உரை செய்யும்போது அந்த உரை திருக்குறளின் பண்புகளுக்குப் பொருந்துமா என்பதைக் கவனிக்க வேண்டும். கூர்ந்து பார்த்தால் எந்த உரை பொருந்தும் எது பொருந்தாது என்பதைத் தீர்மானிக்கத் திருக்குறளே வழிகாட்டும்"[46] என்னும் இவர்தம் கூற்று இவருடைய திறனாய்வின் வன்மையையும் வள்ளுவரின் உள்ளத்தை உணர்ந்த நெஞ்சப் பாங்கையும் இனிது புலப்படுத்தும்.

தொகுப்புரை :

இதுகாறும் கூறியவற்றால் விடுதலைப் பணியையும், தமிழ்ப் பணியையும் ஒருங்கே ஆற்றிய காந்தியுகக் கவிஞர் இராமலிங்கனாரின் திருக்குறட்பற்றையும், திருக்குறளின் பெருமையை அவர் உலகிற்கு உணர்த்திய விதத்தையும், வள்ளுவமே காந்தீயம் என்றுகொண்ட உள்ளத்தையும் இனிது, அறியலாம். நாமக்கல்லாரின் குறள் ஆய்வு நூல்களால் அவர்தரும் புதுமை விளக்கங்களையும், பழமைக்கு மாறுபடாத ஆனால், புதுமைக்கு அரண் செய்யும் புத்துரையின் அமைப்பினையும் ஆய்வுத் திறனையும் உணரலாம்.

சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்,

" நூலாசிரியரின் உள்ளத்தை உள்ளவாறுணர்ந்து சாதிக்கண் கொண்டும், சமயக்கண்கொண்டும், கட்சிக்கண் கொண்டும் காணமல் சமன் செய்து சீர்தூக்கும் கோல் போன்ற உள்ளம் உரையாசிரியருக்கு இருக்க வேண்டிய உண்மையை நன்கு உணர்ந்த நாமக்கல் கவிஞர்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்னும் வாய்மொழியின் வழிநின்று முந்தையோர் உரைகளையெல்லாம் ஆராய்ந்து தம் புது உரையைத் திறம்பட உரைக்கின்றார்."

என்று இவருடைய உரைச் சிறப்பினைப் பாராட்டுவதே இவருடைய குறள் உரையின் தனிச்சிறப்பினை நன்கு உணர்த்துவதாகும்.

குறிப்புகள்

1. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 14. தணிகை உலகநாதன் (ப. ஆ.) லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை, 1950.
2. சிவஞானம், ம.பொ.சி.: விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக். 141, இன்ப நிலையம், சென்னை, 1970.
3. ,, பக். 63.
4. தமிழவன், இருபதில் கவிதை, பக். 38, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1971.
5. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 508.
6. நாகக்கல் கவிஞர் பாடல்கள், பக். 15.
7. நாமக்கல் கவிஞர், என் கதை, பக். 135, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1955.
8. ,, ,, பக். 291
9. ,, ,, பக். 295
10. Hudson, W. H., An Introduction to the study of Literature, p. 282., Kalyani Publishers, Ludhiana, 1971.
11. நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 90—9

12—15 ,, ,, பக். 48

16. ,, ,, பக். 22
17. ,, ,, பக். 47—48.
18. ,, ,, பக். 32
19. ,, ,, பக். 64
20. ,, ,, பக். 90
21. ,, ,, பக். 51
22. ,, ,, பக். 103
23. ,, ,, பக். 151
24. நாமக்கல் கவிஞர், வள்ளுவரின் உள்ளம், பக். 94—95, இன்ப நிலையம், சென்னை, மூன்றும் பதிப்பு, 1963.
25. இராய. சொக்கலிங்கம், காந்தியும் வள்ளுவரும், (முன்னுரை), பாரதி பிக்சர் பாலெஸ், காரைக்குடி.
26. சீநிவாசராகவன், அ., நாமக்கல் கவிஞரின் திருக்குறள் உரை, பக். 8.
27. சுப்பிரமணியம், டாக்டர், வி. ஐ ..திருக்குறள் மேற்கோள் விளக்கம்— நூலின் அணிந்துரை, பக். 11, ஆசிரியர் : டாக்டர்

அ. தாமோதரன், தெற்காசியக் கழகம், மேற்கு ஜெர்மனி, 1970.

28. நாமக்கல் கவிஞர், வள்ளுவரின் உள்ளம், பக் 20.
29. மீனாட்சிசுந்தரம், டாக்டர் கா. பன்மையில் ஒருமை, பக். 63, வேலன் பதிப்பகம், கோவை, 1967.
30. Shairp—J. C. : Aspects of Poetry, p. 41.
31. ஞானசம்பந்தன், அ. ச., இலக்கியக்கலை, பக். 34.
32. வள்ளுவரின் உள்ளம், பக். 24.
33. திருவள்ளுவரும் பரிமேலழகரும், பக். 7.
34. ,, ,, பக். 7—8.
35. திருவள்ளுவர் திடுக்கிடுவார், பக். 27—51.
36. திருக்குறள், 673
37. மாணிக்கம், டாக்டர் வ. சுப., (உரைநெறிகள்—பக். 24) தமிழியல் ஓர் அக நோக்கு, டாக்டர் தா. ஏ. ஞா. மணிவிழா மலர், கலைக்கதிர், கோவை, 1972.
38. திருக்குறள் புதுஉரை. பக். 4.
39. திருக்குறள், 61.
40. திருக்குறள் புது உரை, பக். 5
41. அப்பாத்துரையார், கா., பன்மொழிப்புலவர் : மணிவிளக்கவுரை, பக். 238
42. திருக்குறள், 2.
43. மணிவிளக்கவுரை, பக். 239.
44. சாரங்கபாணி, இரா. திருக்குறள் உரைவேற்றுமை, பக். 10., செல்வி பதிப்பகம், 1963.
45. பார்க்க : திருவள்ளுவரும் பரிமேலழகரும், பக். 32—78.
46. ,, ,, ,, பக். 86.
47. திருக்குறள், புது உரை, பக். 7.

23

விடுதலைக்குப் பின் நாவல் வரலாற்றில் மகளிர் பங்கு

பேராசிரியர் மு. சு. அருள்சாமி, எம். ஏ,
தமிழ்த்துறைத் தலைவர், இலயோலாக் கல்லூரி, சென்னை.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலேயே மேனாடுகளில் நாவல் இலக்கிய நிலையைப் பெற்றுவிட்டது. ஆங்கில இலக்கியங் களைக் கற்ற தமிழ் அறிஞர் தமிழிலும் நாவல் படைக்க முயன்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் முதல் தமிழ் நாவல் தோன்றியது. முனிசீபு வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே தமிழில் முதல் நாவலாகும். கற்பார்க்குச் சுவையும் போதனையும் அளிப்பதே அந் நாவலின் நோக்கம் என்று அவரே அந்நூலின் முன்னுரையில் கூறியிருக்கிறார். இன்னும் இக் கொள்கை, தமிழ் நாவல்கள், சிறப்பாக மகளிர் படைத்த நாவல்களைப் பொறுத்த வரையில் ஏற்புடையதாகவே தோன்றுகிறது.

இன்று நாவல் பாமர மக்கள்—பொது மக்கள் இலக்கியமாகத் திகழ்கிறது—பொழுது போக்கு இலக்கியமாகவும் பயன்படுகிறது. பெண்கள் பலருக்கு நாவல் படிப்பது நல்ல பொழுது போக்காக அமைந்துள்ளது. திங்கள், வார இதழ்களே அல்லாமல் நாளிதழ்களும் இந்த நாவல் பசியைப் போக்குவதில் போட்டி போடுகின்றன. விடு தலைக்குப் பின் விரைந்து வளர்ந்தேறிய இந்நிலை பல பெண் எழுத் தாளர்களை—நூலாசிரியர்களைத் தோற்றுவித்தது. மகளிர் குடும்ப வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை வைத்துப் பின்னிப் பல சுவையான நாவல்களைப் படைத்து வருகின்றனர். பல்வேறு சூழ்நிலையில் பழகும் பெண்களின் மனப்போக்கையும் உணர்வுகளையும் இயல்புற வருணித்து எழுதி நாவல் வாசகர்களைப் பெருக்கியுள்ளனர்.

இன்று, நாவல் வாசகர்களுக்கு, இலெட்சுமி, ராஜம் கிருஷ்ணன், அநுத்தமா, கிருஷ்ணு, சரோஜா ராமமூர்த்தி, அமுதா கணேசன், ஆர். சூடாமணி முதலிய பெண் நாவலாசிரியர்கள் நன்கு அறிமுக மானவர்களே. நாவலாசிரியர்களில் மகளிர் என்றொரு தனிப்பகுப் பைக் காணும் அளவுக்கு மகளிரது நாவல் படைப்பு சிறந்து விளங்கு கிறது. இந்தப் பகுப்பு, நாவல் எழுதும் மகளிர் எண்ணிக்கையையோ

அவர்கள் தீட்டிய நாவல் எண்ணிக்கையையோ கருத்திற்கொண்டு பகுக்கப்பட்டதன்று. மகளிர் படைத்துள்ள நாவல்கள் நல்ல பல பொதுத் தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றன. நாவல் வளர்ச்சியில் வரலாற்றில் மகளிர் தனியிடம்—சிறப்பிடம்—பெறத் தக்கவர்களே. நாவலுக்குரிய கருப்பொருட் தேர்வில்—கதை அமைப்பில் நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னுவதில்—பாத்திரப் படைப்பில்—வருணனையில்—மன உணர்வுகளை வெளிப்படுத்தலில் மற்றும் பற்பல தன்மைகளில் மகளிர் நாவல்களிடையே ஒரு பொதுத் தன்மை காணப் படுகிறது.

கதைக் கருவையும் நிகழ்ச்சிகளையும் தேர்ந்து கையாளும் முறையில் மகளிர்களிடையே ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. ராஜம் கிருஷ்ணன் அவர்கள் தம் 'மலையருவி'யின் முதற்பதிப்பு முன்னுரையில் வரைந்திருப்பதை உங்கள் முன் வைக்கின்றேன். "குறிப்பிட்டதொரு வட்டத்துக்குள்ளேயே சுழன்று வரும் வாழ்வையுடைய பெண்ணொருத்தி நாவல் எழுதப் புகுவதென்பது அவ்வளவு இலகுவான செயல் அன்று. சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் பல்வேறு படிகளில் காணும் மக்களைக் கண்டு நெருங்கிப் பழகும் வாய்ப்புகளோ, உலக அரங்கில் அகலக்கால் வைத்துப் பல வண்ணங்களில் நிகழும் வாழ்க்கை நாடகங்களைப் பற்றி அறியும் வாய்ப்புகளோ, தான் புழங்கும் வீடும் குடும்பமுமே உலக அனுபவமாகக் கொண்ட பெண்ணுக்கு இல்லை". இது அடக்கமான உரைதான் என்றாலும் அரிய பல உண்மைகளை உள்ளடக்கியுள்ளது. நாவல் படைப்பாளருக்கு நல்லதொரு அறிவுரையாகவுமுள்ளது.

இவ்வுரையைப் படித்ததுமே எனக்குத் தொல்காப்பியர் உவமை கூறும் திறத்தை வரையறை செய்திருப்பதே நினைவுக்கு வருகிறது. "தோழி உவமை கூற நேர்ந்தால் தான் சுற்றுப்புறத்தில் கண்டதையே கூற வேண்டும். தலைவியானால் கண்ணால் கண்டதோடு அறிந்தவற்றையும் உவமை கூறலாம். தலைவனோ கற்ற கல்வி வலிமைக்கேற்ப உவமை கூறலாம். பிறர்க்கும் இவ்விதி பொருந்தும்" உவமை கூறுவதற்குரிய தகுதிகளான காணல், அறிதல், கற்றுணர்தல் ஆகிய மூன்று நிலைகள், நாவல் எழுதுவோர்க்கும் பொருந்தும். அம்மையார் அடக்கமாக உரைத்தாலும், இன்றைய மாறிய சமுதாய அமைப்பில் இம்மூன்று நிலைகளும் ஆடவர்க்கேயன்றி மகளிர்க்கும் உரியனவாகும். நாவல் எழுதுவோர் கண்டதையே, கற்றுணர்ந்ததையே எழுத வேண்டும் என்பதைத் தான் அம்மையார் கூற்று உணர்த்துகிறது. மகளிர் படைத்த நாவல்களைப் படிக்கும்போது இம்மூன்று அடிப்படை நிலைகள் கடைப்பிடிக்கப்பட்டதாகக் காண்கிறோம். இவ்வடிப்படை உண்மைகளை மனத்தில் இருத்திக் கொண்டு தமிழில் வெளியாகும் வரலாற்று நாவல்களையோ, மற்ற நாவல்களையோ பார்க்கும்போது, ஆழ்ந்த அனுதாபத்துக்குரிய நாவல்களாகவே தோன்றுகின்றன. காணாததைக் கண்டது போலவும் அறியாததைத் தெரிந்தது போலவும் கற்றுணராததை முற்று

முணர்ந்தது போலவும் எழுதி மாமேதைகள் எனத் தருக்கித் திரிவார் வெறுப்புக்காளாவர் என்பதைக் காலம் உணர்த்தும்.

மகளிர் படைக்கும் நாவல்களிலே கதை அமைப்பிலும் பின்னும் நிகழ்ச்சிகளிலும், தீட்டும் வருணனைகளிலும் கண்டு, அறிந்து, உணர்ந்த தன்மை காணப்படுவதோடு, அவை இயல்பானவையாகவும், இயற்கை வாழ்வை உணர்த்துபவையாகவும் உள்ளன. கண்ட குடும்பக் கதைகள் அறிந்த உறவு நிகழ்ச்சிகள் ; உணர்ந்த உணர்வைப் புலப்படுத்தும் வருணனைகள் ; கதைப் போக்கைத் தடுத்து நிறுத்தி வருணனைக்குள் மயங்க வைக்கும் மாயாஜாலத்தை—மிகையான வருணனைகளை— மகளிர் படைப்பிலே காண முடியாது. கதையோடு கைகோத்து நிகழ்ச்சியோடு உறவாடிச் சூழ்நிலைக்கு இசைந்து நிற்கும் இயல்பான, எளிதான, செட்டான—அளவான வருணனைகள் கதைக்குத் தனி அழகைப் பயக்கின்றன. சரோஜா ராமமூர்த்தி வரைந்த ‘சுந்தரி’யில் உள்ள ஒரு சிறு பகுதி வருணனைக்கோர் எடுத்துக்காட்டாக இங்குத் தரப்படுகிறது. “அன்று மயிலாப்பூரில் தெப்ப உற்சவம். என்றும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும் மயிலையில் அன்று சாரிசாரியாக மாலை 4 மணியிலிருந்து கூட்டம் குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கச்சேரித் தெருவில் இருந்த பெரிய மாடி வீட்டின் சன்னல் அருகில் சுந்தரி தன் நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டு தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அருகில் வட்டமேசை மீது வைத்திருந்த ஓவல்டின் பானம் ஆறி அவலாகப் போய்க் கொண் டிருந்தது. அந்த அறை மிகவும் தூய்மையாகக் காணப்பட்டது. படுக்கை மீது வெள்ளை விரிப்புகள் ; சன்னலில் பச்சை நிறத் திரைச் சீலைகள், வெள்ளைச் சுவரில் இயற்கைக் காட்சிப் படங்கள். அழகிய கருங்காலி மேசை மீது பல மருந்துப் புட்டிகள்” கதைப் போக்கை ஒட்டிச் சென்று கவினிய வருணனையாக அமைந்துள்ளது. அகராதியோ, நிகண்டோ, அயலார் துணையோ இன்றி அறியும் வகையில் எளிதாய், இனிதாய், இயல்பாய் அமைந்துள்ளது.

பாத்திரப் படைப்பு நாவலை இலக்கிய நிலைக்கு உயர்த்தும். பொது வாகவே தமிழ் நாவல்களில் பாத்திரப் படைப்பு சிறந்து நிற்கிறது என்று கூற முடியவில்லை ; மகளிர் நாவல்கள் அன்றாட வாழ்க்கையில் காணத் தக்க மாந்தரையே கொண்டுள்ளன. மகளிர் படைப்பில் வரும் கதை மாந்தர் இயல்பான வாழ்க்கையில் காணப்படுவது போலவே நினைக்கின்றனர் ; பேசுகின்றனர் ; நடக்கின்றனர். ஆனால், உயிர் தவழ் பாத்திரமாகவோ, நெஞ்சைவிட்டு நீங்காக் கதை மாந்தராகவோ படைக்கப் பெறவில்லை. பாத்திரப் படைப்பில் தலைசிறந்து நிற்கும் கம்பன் ‘ஆசை பற்றி அறையலுற்றேன்’ என்றார். நெஞ்சத்து ஆசை யாய்க் கிடந்த இராமன் காதையைப் பாடி நிலைபேறு உடைய பாத்திரங் களைப் படைத்தார். ஆனால், இன்றைய நாவலாசிரியரிடம் குடிகொண் டிருப்பது மாறான ஆசை. நாவல் பத்திரிகையில் வருமா? வாசகர் பாராட்டுப் பெறுமா! இதனைச் சமுதாயம் ஏற்குமா? இதனால், வரு

வாய் எவ்வளவு கிடைக்கும்? இப்படியே சிதறுண்ட ஆசையில் எழுவன அரைகுறைப் பாத்திரப் படைப்பாய் அமைவதில் வியப் பில்லை. பெண்கள் படைத்த நாவல்கள் மட்டும் இக்குறைக்கு விதி விலக்கு என்று கூறமுடியாது. மகளிர் சிலர் பாத்திரப் படைப்பில் முயன்று ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர். மேலும். முயன்றால் நல்ல பலன் காணமுடியும். கிருஷ்ணாவின் கனக விலாசத்தில் வரும் கனகலிங்கம் சோமசேகர், போன்ற பாத்திரங்கள் நன்கு அமைந் துள்ளன. இரண்டொரு வரிகளிலேகூடப் பாத்திரத்தின் தனித்தன் மையை விளங்க வைக்கும் திறன் ஆசிரியரின் பாத்திரப் படைப் பாற்றலைக் காட்டுகிறது.

பல்வகை உணர்ச்சிகளையும் சுவைகளையும் புலப்படுத்தும் முறையில் மகளிர் நாவல்களில் ஒரு பொதுத் தன்மை தெரிகிறது. உள்ளத்தைக் கவ்வும் வகையில் உணர்ச்சிகளையும் சுவைகளையும் தூண்டிவிட்டு வாசகர்களை அச்சுவையுணர்ச்சியில் மூழ்கச் செய்து கதையின் குறைகளை அல்லது பஞ்சத்தை மறைக்க முயலும் யுக்தி அல்லது விரகு மகளிர் நாவல்களில் இல்லை. மகளிர் நாவல்களில் எல்லாம் சுவையுணர்ச்சிகள் கதைப்போக்கைத் தடுத்து நிறுத்தாத வாறு அளவாக அமைந்து கதை ஓட்டத்திற்கும் சுவைக்கும் உறுதுணை யாக நிற்கின்றன.

நடை என்பது எழுத்தாளரின் தனித்தன்மையின் வெளியீடு ஆகும். ஒருவர் நடையைப்போல் மற்றொருவர் நடை அமைவதில்லை. பிறர் நடையை ஒருவர் பின்பற்ற முயல்வது கேலிக்கூத்தாகவே முடியும். அவரவர் உணர்ச்சியழுத்தம், சிந்தனையாற்றல், தெளிவு, உறுதி, சொல்வளம், சொல்லாட்சித் திறன் முதலியவற்றைக் கொண்டு அமைவதே நடையாகும். மகளிர்தம் சொல்லாட்சி முறையிலும் கைவந்த நடையிலும் ஒரு பொதுப் பாங்கினைக் காணலாம். மகளிர் நடையில் வெற்றாரவாரச் சொல்லமைப்பைக் காணமுடியாது. பழக்கத் தில் உள்ள பழகு தமிழின் எளிய சொற்களும் கருத்தைத் தெளி வாகப் புலப்படுத்தும் அளவான வாக்கிய அமைப்பும் கதை ஓட்டத் திற்குக் கருவியாக நிற்கும் இயல்பும் மகளிர் நடையின் தனித்தன்மை ஆகும். சொல் தேடுவதிலோ நடை நாடுவதிலோ அவர்தம் ஆற்றல் வீணாவதில்லை. மகளிரது நடையில் செயற்கைத் தன்மை இல்லை. சொற் செட்டுமையும் இயல்பான போக்கும் கொண்டு எடுத்த நிகழ்ச்சியை நடத்தவல்ல இசைந்த, இயற்கையான, நடையாக விளங்கு கிறது.

மகளிர் படைப்புக்களில் கதையோட்டம் உயிரோட்டமாகவே உள்ளது. அனைத்தையும் உள்ளடக்கி ஆற்றலோடு பாயும் ஆற்று நீரோட்டம் போலக் கதையோட்டம் மற்ற நாவல் கூறுகளை உள்ளடக்கி விறுவிறுப்பாகச் செல்கிறது. நாவல் படிப்பில் நான் கண்ட அனுப வத்தை இங்குக் கூற விரும்புகிறேன். இரண்டு நாவல்கள். ஒன்று

வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. மற்றொன்று நாவல் தோன்றிய காலச் சூழலைக் கதைக் களனாகக்கொண்டது. அவ்விரு நாவல்களையும் படிக்கத் தொடங்கி மும்முறை முயன்றும் முடிக்காதே கைவிட்டேன். "அவ்விரு நாவலாசிரியர்களும் மக்களின் மதிப்பைப் பெற்றவர்கள். மகளிர் நாவல் பற்றி எழுதும் இவ்விடத்தில் அவர்கள் பெயரைக் குறிப்பிடல் பொருந்தாதாதலின் விட்டுவிடுகிறேன். கதை யோட்டத்தில் கருத்தைச் செலுத்தாததன் விளைவு தான் அது; இலட்சுமி யின், 'மைதிலி'யை எடுத்துப் படித்தேன். குடும்ப நிகழ்ச்சிகளை வைத்து வரையப் பெற்றுக் குடும்பப் பாங்கு கனிந்த கதை அது. அநுத்தமாவின் 'கேட்ட வரத்தைப்' பார்த்தேன். ஓர் ஊரில் நடக்கும் பஜனையைச் சுற்றிச் சுழலும் கதை அது. சிவசங்கரியின் "எதற்காக?" என்னும் நாவல் பிள்ளையில்லாக் குறையின் குமுறலாகவே உள்ளது. இந்நாவல்கள் எல்லாம் மகளிர் கதையோட்டத்தை இயக்குவதில் கைதேர்ந்தவர்கள் என்பதை மெய்ப்பிக்கின்றன.

நான் கொண்ட தலைப்பின் முன்பகுதி 'விடுதலைக்குப் பின்' என்பதாகும். விடுதலைக்குப் பின் இருபத்தைந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இக்கால வரம்பில் மகளிர் படைத்த நாவல்களில் விடுதலை யின் சாயலும் சுதந்திர மனப்பாங்கும் தொனிக்கின்றனவா? விடுதலை, சுதந்திரம் என்றதுமே நான் மொழிபெயர்த்த 'நான்கு நாடகங்களில்' ஒன்று நினைவுக்கு வருகிறது, காட்டு விலங்குகளும், நாட்டு விலங்கு களும் நடக்கும் நாடகம் அது. காட்டுச் சிங்கம் முதலான விலங்கு களுக்கு முன் வீட்டு நாய் செருககோடு உலாவுகிறது. நாய் கொண்ட செருக்குக்குக் காரணம் என்ன தெரியுமா? அதன் கழுத்தைச் சுற்றிக் கட்டப்பட்ட வார்ப்பட்டையில் வெள்ளொளி வீசும் வில்லை—டாலர்—பட்டம் தொங்குகிறது; மின்னொளி வீசும் பட்டத்தைக் காட்டியே அந் நாய் நிமிர்ந்து நடக்கிறது. மற்ற விலங்குகள் சிரிக்கின்றன. "அடடே, இது அழகான பட்டம் அன்று; உன் அடிமைத்தனத்தைக் காட்டும் அடையாளச் சின்னமாகும்" என்று கேலி செய்கின்றன. தனி வாழ் விலும் சரி; பெரிது வாழ்விலும் சரி; நாம் சுதந்திர மனப்பான்மையை வளர்க்கவில்லை; வளர விடவுமில்லை. அடிமைத்தன்மையையே ஓர் அழகெனக் காட்டித் திரிவோரைக் காணும்போது நாயின் கழுத்துப் பட்டையும் நினைவுக்கு வரத் தவறுவதில்லை.

நமது சமுதாயம் சாதி சமய பழக்க வழக்கச் சிறையினின்று விடுதலை பெறவில்லை. அடிமைப் பாங்கை மதித்து மரபென்று பாராட்டுகின்றனர். சுதந்திரப் பாங்கை அடங்காமை என்று திட்டு கின்றனர். இந்தச் சமுதாயத்தைக் காணும் எழுத்தாளர் அப்படியே இலக்கியத்தில் காட்டுவதில் என்ன தவறு காண முடியும் என்று வினவலாம். "முனைவன் கண்டது முதல் நூல்" என்பர். 'முக்காலம் உணர்ந்தவன் படைப்பதுதான், மூலத்தன்மை (originality) வாய்ந் தது நூல்' என்று பொருள் கொள்ளலாம். இந்த இலக்கண வரம் போடு இன்னொன்றையும் சேர்க்கலாம். கடந்த காலத்தைக் கண்டு

நிகழ்காலத்தில் நின்று வருங்காலத்தை நோக்கிக் கூறுவதோடு சுதந்திரப் பாங்கோடு எழுதுவோனே சாவா இலக்கியத்தை — உயி ராற்றல் தவழும் நாவலைப் படைக்க முடியும். இந்த இலக்கிய வரம் பிற்கிசைய நாவல் எழுதுவோர் எத்தனை பேர் இருக்கின்றனர்? விடுதலைக்குப் பின் வந்த இருபத்தைந்து நூற்றாண்டுகளில் — கால் நூற்றாண்டில் காண வேண்டிய விடுதலை வேட்கையை — உரிமை உணர்ச்சியை — சுதந்திர மனப்பான்மையை நமது நாட்டு நாவல் களில் காண முடியவில்லை.

ஆயினும் மகளிர் படைப்புக்களில் சுதந்திரச் சாயல் இல்லாமல் இல்லை. வயதில் பெரியவரான ராஜம் கிருஷ்ணனின் சுதந்திரப் பாங்கை உணர்த்த 'மலையருவி'யில்—இரண்டொரு வாக்கியங்களுக்கு மேல் இடம் இல்லை. கோயில் கட்டும் பணத்தைக் கல்விக்குச் செலவிட லாமே என்று கூறுவதற்குக்கூடத் தயங்குவதுபோல் தெரிகிறது. ஆனால், இளம் எழுத்தாளரான சிவசங்கரி தன் சுதந்திரப் பாங்கைத் துணிச்சலாக வெளிப்படுத்துகிறார். 'எதற்காக?' என்னும் நாவலில் கதைத் தலைவன் சீர்திருத்தக் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துத் தெளிக் கின்றான். கதைத் தலைவி, அதனைக் கேட்டு மகிழ்கிறாள். திருமணம் என்ற பந்தம் சேர்ந்துவிட்ட பிறகு முதலிரவு என்ற சடங்கு தேவை யில்லை என்கிறான். அது அவளுக்கு ஆனந்தமாக இருந்தது. தலைவி யான 'இந்து' திருப்பதி கோயிலை ஈர உடையில் அங்கப் பிரதட் சணம் செய்யும்போது ஆறு வயது பையன் தன் அம்மாவை நோக்கி, "ஏம்மா, இப்படி உருண்டால் பிள்ளை பிறக்குமா?" என்று கேட்கிறான். இளம் பெண் எழுத்தாளரின் இத்தகைய சுதந்திரப் பாங்கு நமக்கு நம்பிக்கையூட்டுகிறது. நாவல் என்பது வாழ்க்கைச் சம்பவங்களைக் கோக்கும் தொகுக்கும் சமுதாய வாய்பாடு என்னும் நிலையைத் தாண்டிப் புதுமையும் தனித்தன்மையும் கொழிக்கும் புதினம் என்னும் நிலையை எய்தும் என்னும் எண்ணம் வலுக்கிறது. சுதந்திரப் பாங்கு என்னும் பெயரில் மனம்போன போக்கையோ தான்தோன்றித் தனத்தையோ நான் ஆதரிக்கவில்லை. நெறிப்பட்ட சுதந்திரப் பாங்கில் நின்று கம்பன் பெருங்காவியத்தைப் பாடியதை நான் அறிவேன். நெறிப்படா சுதந்திரப் பாங்கில் சென்ற காளமேகம் உதிரிப் பாடல் களைப் பாட முடிந்தது என்பதும் நமக்குத் தெரிந்தது. நெறிப்பட்ட சுதந்திர மனப்பான்மை உடைய நாவல் எழுத்தாளரே புதுமையும் தனித்தன்மையும் நிலைபேறும் உடைய நாவல்களைப் படைக்க முடியும்.

தமிழ் நாவல் வளர்ச்சியில் ஏன் இந்தத் தேக்க நிலை? சுதந்திரப் பாங்கோடு எழுதும் துணிச்சல் ஏற்படாமைக்குக் காரணம் என்ன? சாதி, சமய, குலகோத்திர மரபுகளின் பிடியினின்று நாம் இன்னும் விடுதலை பெறவில்லையா? சிந்தனையின்றிச் செக்கு மாடுபோல் பழமை யைச் சுற்றி வட்டமடிக்கும் வாசகர்களை நினைவில் கொண்டு எழுதுவது தான் காரணமா? வார, மாத இதழ்களில் வெளிவந்த பிறகே நூலாக வடிவெடுக்க முடியும் என்ற நிலை இருப்பது காரணமா? பத்திரிகை

யாளரின் விருப்பிற்கேற்ப எழுதினால் தான் கதை வெளிவரும் என்னும் நிலை மாறவில்லை என்பது காரணமா? எழுத்தாளர் நாவல் எழுதும் கூலியை மட்டுமே நம்பி வாழ்வதுதான் காரணமா? இல்லையேல், எழுத்தாளரிடம் சுதந்திர மனப்பான்மையோ, துணிச்சலோ இல்லாததுதான் உண்மையான காரணமா? இதனை அறிஞர்களின் முடிவுக்கே விட்டு விடுகிறேன். ஆயினும், 'அச்சமும் பேதைமையும் அடிமைச் சிறுமதியும், உச்சத்திற் கொண்டாரடீ — கிளியே, ஊமைச் சனங்களடி' என்னும் கிளிக்கண்ணி இதயத்தின் ஒரு மூலையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

24

பாவேந்தர் முத்திரைப் பாடல்கள்

பேராசிரியர் இரா. தில்லைக் கோவிந்தன், எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், நந்தனம் அரசினர் கலைக்கல்லூரி,
நந்தனம், சென்னை.

"இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்கே இன்னும் பாரதிதாசன் தலைவனாக விளங்குகிறான். அவனுக்குப் பின் அந்தத் தலைமைப் பீடத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதி இன்னும் யாருக்குமே ஏற்படவில்லை" என்ற கூற்று,[1] கவிதை ஆராய்ச்சி உலகிலே விருப்பு வெறுப்புக் காரணமாக எழுப்பப்பட்டதாகத் தோன்றுகிறது. உண்மை என்னவெனில், "பாரதி இப்புதிய நூற்றாண்டின் விடிவெள்ளி போல்வாரெனில், பாரதிதாசன் அதன் இளவள ஞாயிறு என்னலாம். பாரதிதாசன் பழமை தவிர்த்த மட்டிலுமோ, பாரதியைப் பின்பற்றியதில் மட்டிலுமோ, அவர் பெருமை அமைந்து விடவில்லை. அவருடைய இன்றைய நூல்கள் பாரதியாரின் எல்லையைக் கடந்து பல்வகையினும் விரிவு பெற்றவையாய் விளங்குகின்றன"[2]. ஆம். இதில் ஏதும் ஐயமில்லை.

தம்மைவிட ஆற்றலும் தெளிவும் படைத்த கவிதைப் பரம்பரையைப் பாவேந்தர் தலைமையில் ஆக்கும் திறன், பாரதிதாசனார்க்குத் தலைவராகவும், கவிதை ஆசானாகவும் விளங்கிய பாரதிக்கு அமைந்திருந்தது.

> 'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க் கெல்லாம் இனிது'

என்றன்றோ வள்ளுவப் பெருந்தகை வாய்மொழிந்துள்ளார். பாரதி தொட்டவற்றைத் துலக்கியும், தொடாதனவற்றை அட்டியின்றி எடுத்தெடுத்து விளக்கியும் பாவேந்தர் பாடல்கள் பாடியுள்ளார். பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் அவர் பாடல்களில் காணப்படும். இருப்பினும், விருப்பு வெறுப்புக் கருதாது, ஏ. சி. பிராட்லியின் கூற்றினைக் கருத்திற் கொண்டு, பாவேந்தரின் பாடல் திறன் காணும் பாங்கு ஆராய்ச்சியாளர்க்கு நனி வேண்டப்படுவதாம். ஏ. சி. பிராட்லி கூறுவார்: 'கவிதையில் எது பாடப்பட்டிருக்கிறது என்பது கேள்வியன்று; எவ்வாறு ஒன்று கூறப்படுகிறது என்பதே கவனிக்கத் தக்கதாகும்' (The 'what' is indifferent to poetry; it is the how that matters much)

மேற்கண்ட அடிப்படையில் ஆராய்வார், பாவேந்தர் பாடல்களில் சொல்லப்பட்ட கருத்தில் புரட்சியும், அதனை வெளிப்படுத்தும் கவிதை அமைப்பில் புரட்சியும், வருணிக்கப்படும் அழகில் புரட்சியும், அடுக் கடுக்காகக் காண்பார், கதை, கனி, கருத்து இன்பம், எழில், கொள்கை, குறிப்பு இவ்வொவ்வொன்றிலும் சுவை கண்டு, பாவேந்தர் பாடலைப் பன்முறை படித்தும் பாடியும் மகிழலாம்.

பாவலர்கள், தமது கவிதைகளில், தம் இலச்சினை தோன்ற, தம் ஆளுமை (personality) விளங்க வைப்பர். பாவேந்தர் பாடல்களில், அவர்தம் முத்திரை பற்பல இடங்களில் விழுந்திருக்கக் காணலாகும். யார் இந்தப் பாவேந்தர்? அவர் கொள்கை என்ன? அவர் பார்வை எத்தகையது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை, அம்முத்திரைப் பாடல்களில் விளங்கலாம்.

'யார் இந்தப் பாவேந்தர்?'

> ' நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
> நான் நான் நான்.'

என வீறுர்ந்து முழங்கும் பாவேந்தர், பைந்தமிழார்வம் மீக்கூரப் பெற்ற பாவலர் ஆவர். தமிழ் என்றால் பாவேந்தர்! பாவேந்தர் யார் என்றால் தமிழின் நிமிர்ந்த உருவம் எனலாம். தமிழைச் சற்று விலக்கி விட்டு, கனகசுப்பு இரத்தினம் என்ற பாரதிதாசனை நம்மால் அறிதல் இயலாதே! தமிழ் உணர்வுக்கு, கவிதை உலகிலே பாவேந்தர் பாக்கள் முன்னிற்பன. தமிழ் பற்றி யார் கூறிய சிறப்புரைகளா யினுஞ் சரி, அவற்றினைப் பாவேந்தரே மொழிந்திருத்தல் கூடும் என்ற குறிப்பு, இளைஞர் உலகிலே இருத்தல் கண்கூடு. 'இருந்தமிழே! உன்னால் இருந்தேன்; இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'[3] எனப் பாரதிதாசன் கூறுகிறார் என்றன்றோ, மாணாக்க இளைஞன் எழுதத் தலைப்படுகிறான். அந்த அளவிற்கு, தமிழ் உணர்ச்சி தலைக்கேறப்பட்ட தமிழ்க் கவிதைகளில் எல்லாம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசரைக் கண்டுபிடிக்கும் வேட்கை, இளைஞரிடம் கனல்விட்டு மிளிர்கின்றது.

தமிழர் வாழ்வும் வளமும், மங்காத தமிழ் என்று சங்கம் முழக்கினார் பாவேந்தர். தமிழ் உணர்வு, உள்ளத்தோடும், வாழ்வோடும் ஒன்றிக் கலந்த ஒன்றாகவே பாவேந்தர் கருதினார். 'அந்தோ, அந்தோ, பழைய நைந்த தமிழரொடு நானிருந்தேனே!' என அவர் இரங்குகையில் தமிழ் உணர்வு முதிரப் பெறாத தமிழருக்காக அவர் வருந்தும் வருத்தம் அளவிடற்கரிது. அவர்தம் பாடல்களில் கதைமாந்தர் கூற்றாக, தமிழ் உணர்வு மீக்கூரப்பெற்ற இடங்கள் பல உண்டு.

> 'காதல் ததும்பும் கண்ணாளன் தனைக் ·
> கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்

புகழ்ந்தாள் என்று பொறுமல் சோர்ந்து
வீழ்ந்தான்'

என்ற பகுதியும் (முதல் தொகுப்பு)

'அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ் என்னுவி
அழிவதற்குக் காரணமா யிருந்ததென்று
சமுதாயம் நினைத்திடுமோ?'

(முதல் தொகுப்பு; 'புரட்சிக்கவி') என்ற இடமும்,

'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும், மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னுல்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றுல்
செத்தொழியும் நாளெனக்குத் திருநா ளாகும்'

(பாண்டியன் பரிசு) எனவரும் பகுதியும்,

'அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி
அல்லல் நீக்க மாட்டாயா?'

(இசையமுது) என்ற இடமும் ஒருசில எடுத்துக்காட்டுப் பகுதிகள் ஆகும். விரிவஞ்சி மேற்கண்ட ஒருசிலவே காட்டப்பட்டன. நம் புரட்சிக்கவிஞர் தம் நேர்க்கூற்றுகவே தமிழ்க்கனல் கொப்புளிக்கும் பாடல்கள் இயற்றி, அவற்றில் தம் முத்திரை நனிவிளங்க வைத்துள் ளார். 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' என வாழ்ந்த பாவேந்தர்,

'சாவெனில் தமிழுக்குச் சாகவேண்டும் — என்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்'

என விரும்பினுர். அந்த அளவிற்குப் பாவேந்தர் உயிரோடு உயிராகத் தமிழ் உணர்வு ஒன்றிக் கலந்தது. அதனைப் பின்வரும் முத்திரைப் பாடல் தெரிவிக்கின்றது.

'கனியிடை ஏறிய சுளையும் — முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் — காய்ச்சிப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் — தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் — தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!'[4]

பாவேந்தர் பார்வை எத்தகையது?

ஒரு பொருளை அல்லது ஓர் இயற்கைக் காட்சியைச் சாதாரண மனிதன், ஒருவன் பார்க்கும் பார்வைக்கும், கவிஞன் ஒருவன் பார்க்கும்

பார்வைக்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. முன்னது ஊனக்கண் பார்வையாயிருக்க, பின்னது இதயக்கண் பார்வையாக அமைந்து இலங்குகிறது. அப்பார்வையில் சாதாரண கண்களுக்குப் புலனாகாத அதிசய உண்மை படுகிறது. கண்டதைக் கண்டபடியே கூறாமல், அதிலே தான் காண நினைத்ததைக் கட்டியுரைப்போன் கவிஞன் ஆவான். உவமை, தற்குறிப்பேற்றம் முதலான அணிகளின் துணைகொண்டு மொய்த்த மனக்கருத்தை முழுமையாகக் கவிதையில் ஏற்றி அழகு செய்து, நிகழ்ச்சியை விதந்து கூறும் இடத்தில், கவிஞனின் திறம் பெறப்படுகிறது. இயற்கைக் கவிதைகள் இத்திறத்தன.

இயற்கை எழிலினை, அதனால் உண்டாம் இன்பத்தினை, பாட்டிலே வடித்து, அவற்றிலே ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய பெருமைக்கு உரியராகப் பாவேந்தர் விளங்குகிறார். நிலா எழிலைப் பாடவந்த கவிஞர்,

'நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து
நிலவென்று காட்டுகிறாய் ஒளிமுகத்தை!
கோமுழுதும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?'

என்றெல்லாம் வியக்கின்றார். இவ்விடத்தில் 'அழுக்குத் துணிக்குள்ளே அறத்தொடு பிணைந்திருக்கும் ஆருயிர்' கொண்ட பாட்டாளிக் கண்களோடும், தன் கவிதை நெஞ்சமோடும் நிலவினைக் கண்ட பாவேந்தர் அதன் இன்பம் இன்னதென எடுத்துரைக்கின்றார்:

'நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிக் களைத்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந் தானோ'

என அவர் எடுத்துரைக்கையில், உழைப்பாளர் உழைப்பின் அருமையும், அதனால் விளையும் பயனின் எளிமையும், அவ்வுழைப்பாளர்க்குத் திடீர் என உண்டாம் மகிழ்வின் தேக்கமும் எல்லாம் தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றன.

கொடுமை கண்டு சீறும் குணம்படைத்த பாவேந்தர், சமுதாயத்தின் அடித்தளத்தில் வஞ்சிக்கப்பட்டுக் கிடக்கும் சாமானிய மக்களுக்காக வாதாடும் கவிஞர்; அச் சமுதாயத்தின்மாட்டுத் தமக்கு இருக்கும் பரிவுணர்வை, வெளிப்படுத்தச் சமயம் கிடைக்கும்போதெல்லாம், அவர் முந்தி நின்றார். இயற்கை அவர்க்கு அவ்விடத்தில் பெரிதும் வாய்ப்பும் இடமும் தந்துதவியது. சோலைகளைப் பாடவந்த இடத்தே அவர் துடிப்பொடு கேட்கின்றார்:

சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இப் பாரினிலே — முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ, உங்கள் வேரினிலே?'

'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' என்பார் பாரதியார். அந்தத் தெய்வங்களின் செயலிலே திருந்திய அழகைக் கண்டு பாவேந்தர் வியந்துள்ள இடங்கள் பற்பல :

'அடடே, செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புது நடையில் பூரித்தாள்'

'நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்'[5]

எனவரும் வரிகள் சில எடுத்துக்காட்டுகள்.

இந்த அளவு பீடிகையோடு, இந்தப் பகுதியைத் தொடங்கியதற் கான காரணம் பாவேந்தர் இதயப்பார்வை எங்கெங்கே விழுகிறது! அந்தப் பார்வையில் பட்ட விசித்திரம் யாது? என்பதை ஆராய்வ தற்கே. ஆம். 'இரக்க முண்டாக்கித் தம் ஆவியில் வந்து கலந்த காட்சி'களின் மறுபதிப்புக்களை இயற்கை நிகழ்ச்சிகளிற் கண்டு நெஞ்சம் குமுறி, அவ்வியற்கை நிகழ்ச்சியினைப் படம்பிடித்துக் காட்டி யுள்ள பாவேந்தர் பாடல் ஒன்றில், அவர் முத்திரை விருந்து தோன்று கிறது. அப்பாடல் வானில் விண்மீன்கள் தோன்றியுள்ள காட்சியை வியக்கும் பாடலாகும்.

விண்மீன் என்றால், இதயம் விம்மி எழிலோடு கொஞ்சிக் கொஞ்சிப் பாடுவது கவிஞர்க்கியல்பு. பாவேந்தர் இதயம் விம்முகிறது; எழி லோடு குமுறிக் குமுறி அவர் பாடுகிறார்; அந்தப் பாடலிலே, அவர் இதயப்பார்வை விழுந்திருக்கிறது. உழைக்கும் மக்கள் வறியர்களாம்: அவர் உரிமை கேட்டால் உதைத்து நொறுக்கும் புலையர்கள் செல்வர் களாம். இதனை மண்மக்கள் கண்டும் காணாதவராய்த் தம் வயிற்றுப் பாட்டைக் கவனிக்கின்றனர். ஆனால் வானமோ, இதனைப் பகலில் எல்லாம் காணுகிறது; கொதிப்படைகிறது. அந்திக்குப்பின் கொதித்த உடம்பில் குளிர்காற்று வந்து மோதக் கொப்புளங்கள் வெடிக்கின்றன. வானின் கொப்புளங்களே நட்சத்திரங்கள்! அழகுமிகு விண்மீன்களை அருவருப்புக்கிடமான கொப்புளங்களோடு தொடர்புபடுத்தி, அக் கொப்புளங்களின் ஆராக் கவியழகை வெளிப்படுத்தும் பாவேந்தர் பாடற்றிறன் இருந்தவாறென்னே! அவர் இதயப்பார்வை விழுந்தவா றென்ன!!

" மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம்; இதைத்தன்
கண்மீதில் பகலில் எல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனைக் கொப்பு ளித்த
விரிவானம் பாராய் தம்பி!"[6]

பாவேந்தர் கொள்கை என்ன?

கொள்கை உறைப்பு மீதூரப் பெற்ற உள்ளத்தினன் உண்மைக் கவிஞன் ஆவான். பாவேந்தர் தாம் வாழ்ந்த காலத்து, சமுதாயங் கண்டார்; நாட்டைக் கண்டார்; துணைக்கண்டம் கண்டார்; உலகத்தைக் கண்டார். சமுதாய இழிவு அவர் நெஞ்சை உறுத்திற்று; நாட்டைப் பிடித்தலைக்கும் கேடுகள் அவரைக் குமுறச் செய்தன; இருட்டறை உலகம் அவரைக் குருதிக்கண்ணீர் வடிக்கச் செய்தது.

சாதிப் பிளவு, சமயப் பிரிவு, பொருளாதார ஏற்ற இறக்கம் இவற்றின் காரணமாய், எத்தனையோ பூசல்கள் நாட்டில் நடந்து கொண்டிருந்தன. மேலும் மேலும் சுரண்டல், ஏமாற்றல், கெடுத்தல் ஆகிய வினைகளில் மதத்தின் பேராலும், கடவுட் பேராலும், பகுத்தறிவின் பேராலும் வல்லாளர்கள் இறங்கி நின்றனர். சமுதாயக் களத்தில் உழைப்போர் அடிமைகளாய் உழன்று வந்தனர். சாதி ஏற்றத் தாழ்வு, மக்களிடைச் சமத்துவ எண்ணத்தை இல்லாதொழித்தது. எனவே சகோதரத்துவம் மாண்டது.

புதிய உலகத்திற்குத் தடைபோடும் பொருந்தா ஊறுகளைக் களைய, பாவேந்தர் விழைந்தார். இருட்டறை உலகம், ஒளி மிகுந்த வெளிக்கு இட்டு வரப்பெறல் வேண்டும். அவ்வுலகம் மனித நாகரிகம் மிக்க உலகாக அமைதல் வேண்டும். அங்கு உடைமை மக்கட்குப் பொதுவாக இருத்தல் வேண்டும். பகுத்தறிவில் மக்களெல்லாம் விடுதலை உணர்வினராய் வீறுடன் இருந்து, உண்மையொடு உழைத்து வரல் வேண்டும்.

எனவே, புதிய உலகம், ஒற்றுமையுடன் திகழ, சாதி ஒழிக்கப் படல் வேண்டும். சாதி ஒழிப்பில், பாவேந்தர் முழுக் கருத்தும் பதித்திருந்தார். 'சாதி ஒழிப்பும் — நல்ல தமிழ் வளர்ப்பும் நாடு மேற்கொள்ளவேண்டும். இவற்றில் ஒன்றால் மற்றொன்று துலக்கமுறும்' என அவர் உறுதியுடன் உரைத்தார். 'சாதி உண்டு' என ஒருவனும் சாற்றக் கூடாது. அவ்வாறு சாற்றுவோன், நாகரிக உலகிற்கு மாசு விளைக்கும் மூடன் ஆவான். அவன் இல்லாத உலகே புதிய உலகு. மக்கள் உளத்தில் மருட்சியை ஏற்படுத்தும் மதத்தலைவர், புதிய உலகில் இரார்.

‘பாதிக்கு தேபசி என்றுரைத் தால்செய்த
பாபத்தைக் காரணம் காட்டுவார் — மத
வாதத்தை உம்மிடம் நீட்டுவார் — பதில்
ஓதிநின் ருல்படை கூட்டுவார்’’

என்ற மருட்கை ஊட்டுகின்ற மதத்தலைவர்களின் செயல், புதிய உலகில் காணப்படாது. ‘பட்டினி கிடப்போன் பாவியாகக் கருதப் பட்டும், அப்பாவிக்கு உணவளிப்பவனும் பாவத்தில் பங்கு பெறுப வனுக நினைக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் வந்த இழிநிலை’[7] நிலவாது.

இருட்டறை உலகில், வாயடியும், கையடியும், இருட்டுக் களையப் பெருதவரை, மறையா? இவ் வாயடியும் கையடியும், ‘ஏமாந்த காலத் தில் ஏற்றங்கொண்டு புலி வேஷம் போட்டிருக்கும் பேர்களுக்கும், உதையப்பர் ஆன ஓடப்பர் என்னும் ஏழையர்க்கும் இடையில் நடப் பவை. புதிய உலகில் இவை மறையும்! ஏமாந்தார் காசுக்கு எச மானர் ஆனேர், ஆன வரை பிறர் பொருளைச் சுருட்டுவது, இருட்டறை உலக நிகழ்ச்சி. புதிய உலகில் சுரண்டல் ஒழிக்கப்படும். உலகம் உண்ணத் தானும் உண்பதும், உலகம் உடுத்தத் தானும் உடுத்தி மகிழ் வதும், பகுத்தறிவுள்ள மாந்தர் செயல். புவியைப் பொதுவில் நடத்திச் செல்வதும் அவர்க்குக் கடமை. அவரே விடுதலை பெற்ற மாந்த ராவர். அவர்க்குக் கெடுதல் இல்லை.

“இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றனே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றரே!
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?
சுருட்டுகின்றர் தம்கையில் கிடைத்த வற்றை!
சொத்தெல்லாம் தமதென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே ஆகும்’’[8]

‘அறிவுரை’யாலும், ‘அன்பழைப்பா’லும் புதிய உலகைச் சமைக்கத் துடித்த பாவேந்தர் துடிப்பு, மேற்கண்ட முறைகள் பயனற்றுப் போக, ‘அனல்வீச்’சாக வெளிப்பட்ட இடங்களும் உண்டு.

செஞ்சொற் கவி இன்பம்:

செஞ்சொற் கவி இன்பம் பாவேந்தர் பாடல்களில் பஞ்சமின்றி எய்தலாம். நெஞ்சிற் கனல் மணக்கும் பூ ஒத்த காதலினைப் பாடும் போதெல்லாம் இன்பம் ஊறிவரும். “இன்பம், கொள்ளை, கொள்ளை, கொள்ளை மாந்தோப்பில்’’ என்றபோதும், “எது எனக்கின்பம் நல்கும்? இருக்கின்றுள் என்ப தொன்றே’’ என்னும்போதும் இளமைக் காத லின்பமும், முதுமைக் காதல் இனிமையும் தெற்றென எடுத்துக்காட்டப் படும். காதல் அகராதிக்கு, பாவேந்தர் வாரி அள்ளி வழங்கிய

அற்புதச் சொல்லாக்கங்கள் மிகுதி! மிகுதி!! 'தமிழ்ச் சுவடிக் கன்னம்', 'நறுங்கவிச் சுவைகள்! 'கன்னலின் சாற்றுக் கடல்', இன்பம் மொண்டு மொண்டருந்தும் சோலை', 'தென்னம் பாளைச் சிரிப்பு'—இவை ஒருசில.

இவ்வாறு, ஒரே பாடலில் தம் கவிதை முத்திரை விளங்க, அழகிய, செறிவு மிக்க, இன்பம் தரக்கூடிய செஞ்சொல்லாக்கங்களை அளித்துள்ளார் பாவேந்தர். 'ஆணழகு', 'ஓடைக் குளிர் மலர்ப் பார்வை' 'பட்டுத் தெறித்தது' எனவரும் சொல்லாக்கப் பகுதிகளில் சிந்தை சிக்குண்டு, எண்ணம் சிலிர்க்க இன்பக் கிறக்கத்தால் தலை தடுமாறுகின்றோம். 'ஒரே வரியிலோ, அல்லது ஓர் உரிச்சொல்லிலோ, நமது கற்பனையிலே கவிஞன் ஒளிரச் செய்யும் ஒரு படம், புலனின்ப உணர்ச்சி நிறைவாக இருக்கும்' என்ற கூற்றிற்கிணங்க, (In a single line, sometimes in a single epithet, the poet can flash upon our imagination, a picture that shall seem filled with passionate emotion'—C. T. Winchester)

'பட்டுத் தெறித்தது மானின் விழி'

என்ற வரியும்,

ஆடை திருத்தி நின்றாள் அவள் தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்'

என்ற அடியும் அமைந்திலங்குகின்றன. இதோ அந்தப் பாடல்:

'கூடத்திலேமனப் பாடத்திலே—விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்தவிழி—தனிற்
பட்டுத் தெறித்தது மானின்விழி!
ஆடை திருத்திநின்றாள் அவள் தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்'

உணர்ச்சிப் பெருக்கும், எளிமை இனிமை அழகுக் கவர்ச்சிகளும் செறிந்து, தாமே இயல்பாய் விழுந்த சொற்களைப் பெற்று, பொருள் சிறந்து, ஒளி மிகுந்து காணப்படும் பாவேந்தர் முத்திரைப் பாடல் சில கண்டோம். பாவேந்தரை அறிந்து தெரிந்து கொண்டோம். செஞ்சொற் கவி இன்பம் மகிழ்ந்து உண்டோம்.

வாழ்க கவிதை! வெல்க பாவேந்தர் புகழ்!

அடிக்குறிப்புகள்

1. சமுதாய இலக்கியம்—இரகுநாதன்.
2. கா. அப்பாத்துரை (மேற்கோள் : புதிய தமிழ்க் கவிதை—சாலை இளந்திரையன்.)
3. தமிழ் விடுதூது.
4. முதல் தொகுதி.
5. அழகின் சிரிப்பு : முகப்புக் கவிதை.
6. அழகின் சிரிப்பு.
7. சத்திய தருமச்சாலை : ம. பொ. சி.
8. பாண்டியன் பரிசு.

25

விடுதலைக்குப்பின் பக்தி இலக்கியங்கள்

பேராசிரியர் திரு. க. வடிவேலாயுதம், எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்துவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.

தமிழ்மொழி இலக்கிய வளம் நிறைந்த மூத்த மொழியாக உலகில் உள்ள பெருமக்களால் கருதப்படுகின்றது. ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கியங்கள் இயற்கையை வியப்பனவாகச் செந்தமிழ்ப் பெருநடையில் சிறந்து விளங்குகின்றன. அப் பேரிலக்கியங்கள் இறைவனைப் பற்றியோ அல்லது கடவுளைப் பற்றியோ விரிவாகப் பேசவில்லை. இறைமையின் இயல்புகளைக் குறிக்கும் வரிகளே சிலவிடங்களில் இடைப்பிறவரலாகப் பொருட்செறிவோடு மிளிர்கின்றன.

> ‘ பிறவா யாக்கைப் பெரியோன் ’
> ‘ ஆலமர் செல்வன் ’
> ‘ ஈர்ஞ்சடை அந்தணன் ’
> ‘ நீலமேனி நெடியோன் ’

போன்ற வரிகள் அவற்றிற்குச் சில எடுத்துக் காட்டுகளாம்.

‘ திருமுருகாற்றுப்படை ’ மட்டும் சங்க காலத்தில் பக்தியுணர்ச்சி நிரம்பிய முழு நூலாகத் திகழ்கின்றது. இதனை டாக்டர் மு. வரதராசனார், ‘ திருமுருகாற்றுப்படையே நீண்ட பக்திப் பாடலாகச் சங்க இலக்கியத்துள் உள்ளது ’, என்று தம் இலக்கிய வரலாற்றுள் கூறுகின்றார். பரிபாடலுள் முருகனைப் பற்றியும் திருமாலைப் பற்றியும் வருகின்ற பாடல்களும் சங்க இலக்கியத்துள் விதிவிலக்காகவேயுள்ளன.

கி. பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பக்தி வெள்ளம் புரண்டோடியது என்று கூறின் அது மிகையாகாது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி இசையோடு கூடிய தமிழில் ஆயிரக்கணக்கான பாடல்களை அருளிச் செய்தார்கள். அப் பாக்கள் சமய உலகில் அனைத்துலகிற்கும் புதுப்பாதைகளை வகுத்துத் தந்தன எனின் அக்கூற்று உண்மைக்குப் புறம்பாகாது. இதனையே,

"The wonder that was India" என்ற வரலாற்று ஆராய்ச்சி நூலில் திரு. A. L. Basham என்ற துரைமகனூர் போற்றிப்புகழும் திறம் அறிந்து உள்ளத்திற் பதிக்கப் பாலதாகவுள்ளது.

"Here surely we find a new conception of godhead struggling to express itself, the idea of a God who feels an intense love for men and to whom the worshipper can return the same love. This found its full expression in the hymns of the early Tamil devotees (Nayanmars and Alwars) which are among India's greatest contribution to the world's religious literature".

இதனாற்றான் போலும் தமிழ், 'பக்திப் பாடல்கள்' நிறைந்த மொழியாக உலக மொழிகளுள்ளே முதன்மையாக வைத்து எண்ணப்படுகின்றது. தனிநாயக அடிகள் கூறும், "அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல் பிற இலக்கியங்களில் இல்லை. எனவே மொழிநூல் முறையில் எத்தனை வழுவுடையதாய் இருப்பினும், ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியன் காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்குமெனின் தமிழ் இரக்கத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும். பக்தியின் மொழி எனலுமாம்" என்ற சீரிய கருத்தும் ஒப்பு நோக்கி மகிழத் தக்கது.

பக்தி என்பதற்கு இறைவனிடத்துக் காட்டும் அன்பு என்று பொதுவாகப் பொருள் கொள்ளலாம். துன்பங்கள் நிறைந்த உலகில் அமைதியின்றி வாழும் உயிர்களுக்கு அமைதியைத் தேடித் தருவது இறைமை உணர்வேயாகும். இறைவன் என்று கூறப்படும் உயர் பரம்பொருள் சிற்றுயிர்க்கு உற்ற துணையாய் உள்ளான் என்ற உணர்ச்சி மேலோங்கும்போது தன்னை மறக்கும் நிலையினை மனிதன் எய்துகிறான். தன்னை மறந்த நிலையில் பிறக்கும் உணர்ச்சி மேலீட்டால் பக்தி இலக்கியங்கள் தோன்றலாயின. அதனாற்றான் போலும் 'வறுமை நாடு' என்று மேனாட்டாரால் குறைத்துப் பேசப்படுகின்ற நம் பாரத நாட்டில் உண்மையினை உணர்ந்த ஞானிகளின் தொகை மிக அதிகமாகவுள்ளது என்பது குறிப்பிடத் தக்க உண்மையாகும்.

நாடு உரிமை பெறுவதற்கு முன்னுள்ள காலத்திலும் தாயுமானவர், இராமலிங்க அடிகள் போன்ற பெருமக்கள் தோன்றி மக்களுக்கு வழி காட்டும் வான்பொருளாகத் திகழ்ந்தார்கள். தங்களுடைய பக்திப் பாடல்களால் மக்களிடத்தில் பொதுமை நெறியை (சமரச நெறி)ப் பரப்பினார்கள்.

உரிமை வேட்கைப் பெருங்கவியாகத் திகழ்ந்த சுப்பிரமணிய பாரதியார் பக்திப் பாடல்களாகப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

சக்தியின் மீதும் முருகன் மீதும் அவர் பாடியவை தனிச் சிறப்பு வாய்ந்தவை. கண்ணன் மீது பலவிதமான உறவு முறைகளை விளக்கும் பாடல்கள் படித்து மகிழ்ந்து இன்புறத்தக்கவை. கண்ணன்—என் தோழன், கண்ணன்—என் தாய், கண்ணன்—என் தந்தை, கண்ணன்—என் சேவகன் போன்ற பல தலைப்புக்களில் அவர் பாடியிருக்கும் திறமை மிகச் சுவையூட்டுவதாகவுள்ளது. அப்பாக்களில் பலவிடங்களில் நகைச்சுவையும் மிகுந்து காணப்படுகின்றது. அவை பெரியாழ்வாரின் பாசுரங்களை நமக்கு நினைவுபடுத்துகின்றன. உபநிடதங்கள், கீதை முதலிய நூல்களின் கருத்துக்களை இப்பாக்களில் நமக்கு மிக எளிதாகப் புகட்டி விடுகிறார் பாரதியார் எனின் அது மிகையாகாது.

பாரதியாருக்கு முன்னரே தோன்றி நாடு உரிமை பெற்ற பின்னரும் பல ஆண்டுகள் நம்மிடையே வாழ்ந்து வந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய பக்திப் பாடல்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். நாஞ்சில் நாட்டுத் தேரூரில் தோன்றிய கவிமணியவர்கள் இனிய கவிதைகள் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். அவர் பழைய மரபின் படியும் புதிய முறைகளின் படியும் பாடல்கள் இயற்றியுள்ளார்.

"தேனொழுகக் கவிபாடும் தேசிக விநாயகமே"

என்று அவரது பாட்டினைப் புகழ்ந்துள்ளார் தற்காலக் குழந்தைக் கவிஞராகிய அழ. வள்ளியப்பா அவர்கள். அவருடைய 'மலரும் மாலையும்' என்ற நூல் ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் தொகுக்கப் பெற்றது. அத்தொகுப்பில் முதல் நாற்பத்து நான்கு பாடல்கள், 'பக்தி மஞ்சரி' என்ற தலைப்பில் உள்ளன.

கவிமணியின் புலமையைக் காட்டுவனவாக அமைந்தவை, 'சுசிந்தை மாலையும்', 'அழகம்மை ஆசிரியவிருத்தமு'மாகும். இவைகள் அவருடைய கவியியற்றும் ஆற்றலை விளக்குவனவாக வுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் என்ற தலத்திலுள்ள தாணுமாலயன் என்ற இறைவனைப் பாடியதே சுசிந்தை மாலையாகும்.

திங்களுன் கருணை காட்டும் ;
    தீக்கணுன் வெகுளி காட்டும் ;
கங்கையுன் பெருமை காட்டும் ;
    கடுவுமுன் ஆண்மை காட்டும் ;
சிங்கம்நுண் இடையைக் காட்டச்
    சிறையனம் நடையைக் காட்டும்
மங்கையோர் பாகா ! தாணு
    மாலயா ! சுசிந்தை வாழ்வே !

என்ற பாடல் எளிய நடையில் உள்ளதாயினும் நாயன்மார் பாடல் போன்ற மிடுக்குடையதாகத் திகழ்கிறது. இப்பாடலில் கவிமணி

அம்மையப்பர் உருவினை நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார். விடமுண்டு, கண்டத்தில் அதனை நிறுத்திய 'நீலமணி மிடற்று ஒருவனது' வீரத்தினை ஆண்மையெனப் போற்றுகின்ற திறம் சங்க கால ஔவையாரை நினைவூட்டுகின்றது.

அழகம்மை விருத்தம் செம்மையாக நிறைவேற உதயமார்த் தாண்ட விநாயகரைப் பிள்ளையவர்கள்,

'சீருதவும் நல்லூராந் தேரூர் அழகிதிருப்
பேருதவும் பாவினையான் பேசவே—ஓருதய
மார்த்தாண்ட வேழம் வழுவேதும் பாராமல்
காத்தாண்டு கொள்ளக் கடன்'

என்று வேண்டும் திறம் அவரது வெண்பாப் பாடும் சிறப்பினை எடுத் தியம்புகின்றது. புகழேந்தியின் வெண்பாவினைக் கேட்பது போன்ற ஐயம் எழுகின்றது. இப்படித் தம் நூலில் பல வெண்பாக்களைக் கவி மணி பாடியுள்ளார்.

அழகம்மையாசிரிய விருத்தம் தாயுமானவரின் 'மலைவளர் காதலி' என்ற அரிய விருத்தம் போல் அமைந்துள்ளது. பத்துப்பாடல்களும் சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியனவாய் இயற்கை வளத்தை விளக்கும் மேன்மையதாய் மிளிர்கின்றன.

பத்திக்கும் என்மடப் புத்திக்கும் ஓயாத
  பகையலால் பட்ச மில்லை
 பஞ்சமா பாதகமும் எஞ்சா தெனக்குற்ற
  பள்ளியிற்பாடம்; அம்மா!
துத்திக்கும் உன்பதம் சுற்றிப் பணிந்துசிறு
  தொண்டுகள் செய்தும் அறியேன்,
 தோத்திரப் பாமாலை சாத்திய றியேன்; இவை
  சொல்லுதற் கொன்றிரண்டோ?
மத்திக்கும் வெண்தயிரை யொத்துக் கலங்குமென்
  மறுக்கம்நீ காணவிலையோ?
 மைந்தனேன் செய்கின்ற குற்றங்கள் ஏதுமொரு
  வகையா யெடுக்கலாமோ?
தித்திக்கும் முக்கனிகள் எத்திக்கும் உதிர்கின்ற
  செறிமரச் சோலைசூழும்
 தென்னிரத புரிவாழும் என்னரிய செல்வமே!
  தேவியழ கம்மை உமையே!

என்ற பாடல் பத்திக் கருவூலம் போல விளங்குகின்றது. 'உலகில் செல்வச் செழிப்பினைத் தாம் விரும்பவில்லையென்றும் ஆண்டி வாழ்க்கையும் தமக்கு வெறுப்புடையதன்று' என்று மற்றுமோரிடத்தில்

அவர் கூறும் திறம் அவருடைய சமநிலை உள்ளத்தினை எடுத்துக் காட்டுகின்றது. இக்கருத்தினை விளக்க,

ஆற்றுப் பெருக்கையொத் தழிகின்ற செல்வத்தை
அடைவதில் விருப்பு மில்லேன்
ஆண்டியாய் வேண்டிப்புசித் துண்டு நாடோறும்
அலைவதில் வெறுப்பு மில்லேன்;

என்று கவிமணி எடுத்தாளும் உவமை நயம் பழைய இலக்கிய மரபை நமக்கு நினைவூட்டுகின்றது. மற்றுமோரிடத்தில்,

“ சண்டாள நெறியிலெல்லாம்
சாடிக்குதித்தோடி அலைகின்ற மனதை”,

என்ற வரிகளில் நாஞ்சில் நாட்டு வழக்குச் சொல்லான ‘சாடுதலை’ப் பயன்படுத்தியுள்ளார். அப்பகுதி மக்களின் தமிழ் ஆர்வத்தையும் கொடைச் சிறப்பையும்,

“ செந்தமிழ் மணத்தினொடு செல்வர்மணமுங்கொடைச்
செங்கை தரு மணமும் மாறுத்
தென்னிரதபுரி”

என்ற வரிகள் தெள்ளிதின் விளக்குகின்றன.

கலைமகளைக் கவிமணி துதிக்கும் அழகு படித்து இன்புறத் தக்கது.

“ நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம்
அடைக்கலமே!”

என்ற பாடல் குமரகுருபர அடிகளின் சகல கலாவல்லி மாலையின் அடிகளை நினைவூட்டுகின்றன.

‘ சித்தம் தெளிந்திடும், செய்வினை யாவும்
திருத்தமுறும்,
நித்தம் மறிந்தெழு செல்வமும் தங்கி
நிலைபெறும், நல்
முத்தர்க் குரிய பெரும்பதம் வாய்க்கும், இம்
மூதுலகில்

பத்தர்க் கருளுந் திருமகள் பாதம்
பணிபவர்க்கே'

என்ற பாடல் அபிராமிபட்டரின் 'தனந்தரும்' என்ற பாடலை நினைவூட்டுகின்றது.

'அஞ்சலி' என்ற பகுதியில் மாறிமாறி வரும் பிறவிகளை,

'ஈடற்ற கலமிது கவிழ்த்திக் கவிழ்த்தியுயிர்
ஏனோ திருத்தி வைப்பாய்?'

என்று கலத்திற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

பரம்பொருளை,

'நண்பனென் றேயழைக் கின்றனன், என்னையாள்
நாதனே! ஞானபரனே!'

என்றழைக்கும் தன்மை இராமலிங்க அடிகளின்,

'நண்பனே! நலஞ்சேர் பண்பனே! உனையே
நம்பினேன்!'

என்ற வரிகளைச் சிந்திக்க வைக்கின்றது.

உள்ளத்தில் செய்யும் பூசையே சிறந்தது என்பதனை

'ஏழையுளந் திருக்கோயில் எனக்கொண்டு நீயும்
எழுந்தருளி யிருக்குமுறை அறிந்து, அடிமை அங்கே,
குழவரு வஞ்சனை யைத் துரத்தி, நிறைஅன்பாம்
சுந்தர நாண் மலர்மாலை சூட்டிநிதம், தொழுவேன்!'

என்ற பாடலால் கவிமணி அறிவுறுத்தியுள்ளார்.

'மணமும் நிறமும் இல்லாவோர்
மலரே எனினும், ஐயா! நின்
பணியிற் சேரத் தாழாது
பறித்துக் கொள்ள வேண்டினனே!'

என்ற பாட்டில் தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் உயர்ந்த தத்துவம் பேசப்படுகின்றது. இக்கருத்து மகாகவி இரவீந்திரநாத தாகூர் இயற்றிய 'கீதாஞ்சலி'யையொட்டி எழுந்தது.

செந்தில்குமரனை வேண்டும் பாடல்கள் நெஞ்சை அள்ளும் திறந்தனவாகவுள்ளன.

'தண்டனை போதுமையா! தாங்கமுடி யாதையா!
கொண்டபிணி நீங்கவருள் கூரையா—கண்டுனது

வாசலில் வந்து வணங்கவலி இல்லைஐயா!
ஈசனே! செந்திலிறை வா!

முத்தையா! வேலா! முருகா! எனவோதும்
சொத்தையே தேடிச் சுகமடைவீர்!—நித்தமிவ்
வீடும் களமும் விளைநிலமும் தோப்புகளும்
மாடும் சதமாகு மா?'

நகைச்சுவை தோன்ற முருகன் மீது பாடிய பாடலொன்று சுவைத்து மகிழக் கூடியதாகவுள்ளது.

'செந்தில் குமரா! திருமால்! மருகாஎன்
சிந்தை குடிகொண்ட தேசிகா—நொந்தஇம்
மெய்யிற் சிரங்கை விடியுமட் டுஞ்சொறியக்
கையிரண்டு போதாது காண்.'

'கோவில் வழிபாடு' என்ற கவிதையில் கவிமணியினுடைய சீர்திருத்தக் கருத்து நன்கு புலனாகின்றது. இதனை, டாக்டர் மு. வரதராசனார், 'அவற்றையும் எளிய இனிய வடிவிலே தருவதால், கற்பவர் நெஞ்சில் அமைதியாகவே பதிகின்றன' என்று புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

'கோவில் முழுதுங் கண்டேன்—உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனையான்—தோழி!
தேடியுங் கண்டிலனே.

தெப்பக் குளங் கண்டேன்—சுற்றித்
தேரோடும் வீதி கண்டேன்,
எய்ப்பில்வைப் பாம் அவனைத்—தோழி!
ஏழையான் கண்டிலனே.

தூப மிடுதல் கண்டேன்—தீபம்
சுற்றி எடுத்தல் கண்டேன்.
ஆபத்தில் காப்பவனைத்—தோழி!
அங்கேயான் கண்டிலனே.

கண்ணுக் கினியகண்டு—மனத்தைக்
காட்டில் அலையவிட்டு,
பண்ணிடும் பூசையாலே—தோழி!
பயனென் றில்லை, அடி!

உள்ளத்தில் உள்ளான், அடி!—அதுநீ
உணர வேண்டும், அடி!
உள்ளத்தில் காண் பாய்எனில்—கோயில்
உள்ளேயுங் காண்பாய், அடி!'

இவற்றோடு விபுலானந்த அடிகளின்,

‘வெள்ளை நிற மல்லிகையோ
  வேறெந்த மாமலரே
வள்ளல் அடி இணைக்கு
  வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
  வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலம் அடி
  உத்தமனுர் வேண்டுவது!’

எனற பாடல் ஒப்பு நோக்கி இன்புறத் தக்கதாம்.

பிள்ளையவர்கள் இயற்றிய ‘அன்பின் வெற்றி’ என்ற பாடல் மீராபாயின் வரலாற்றைச் சித்திரிப்பதாகும். ஆண்டாளைப்போல அவளும் வடநாட்டில் திகழ்ந்த பக்தையாவாள். அதில் வரும் சில பாக்கள் புரட்சிகரமாகவுள்ளன.

‘உண்மை யன்பை உடையவரே
  உலகை யளந்த பெருமானை,
அண்மை யாகக் கண்டிடுவர்
  அல்லார் காணுர் காணுரே.’

‘காசியிலே இறப்பதனுல் பயனென்று இல்லை;
  காஷாயம் தரிப்பதொரு வேஷமேயாம்:
ஆசையினை வேருடனே அறுக்க வேண்டும்;
  அழியுமுடல் அபிமானம் அகற்ற வேண்டும்;

பேசுலகில் அழியாத பொருளொன்று இல்லை;
  பெரியவர்க்கும் சிறியவர்க்கும் மரணம் ஒன்றே;
பாசமுறு சம்சாரம் அந்தியோடு
  பறந்தகலும் பறவைவிளை யாட்டே யாமால்.

முத்திநெறி நாடாது, யோகியாகி
  மூச்சடக்கி இருப்போர்கள், பின்னும் பின்னும்
இத்தரையில் வந்துபிறந்து இறத்தல் திண்ணம்:
  இவ்வுண்மை எந்நாளும் பொய்ப்ப தில்லை;

பத்தியொடு கைகூப்பிப் பணிகின்றேன்; உன்
  பாதமலால் வேறுதுணை யொன்றும் இல்லை;
நித்தியனே! யமபாசம் அண்டாது, என்னை
  நீஆண்டு காத்தருள வேண்டும், ஐயா?’

கவிமணியியற்றிய ‘இரக்ஷகர்’ என்ற கவிதை ஏசுநாதரின் போதனைகளையும் அவர் பட்ட இன்னல்களையும் விளக்கி, நெஞ்சைத் தொடும் வகையில் உருக்கமாக அமைந்துள்ளது.

"உன்னுயிரைப் போல—இந்த
உலகில் உயிரையெல்லாம்,
மன்னும் அன்போடுநீ—என்றும்
மதித்து வாழ வேண்டும்."

"முழக்கம் செய்து வந்தான்—வழக்கை
முடித்து நிற்கின்றான்,
ஒழுக்கம் காட்ட வந்தான்—இங்கே
உயர்வு பெற்று விட்டான்"

என்று பற்பலரும்—அவனை
ஏளனம் செய்து நின்றார்
ஒன்றும் உரையாமல்—உரவோன்
உள்ளம் அடங்கி நின்றான்.

"யாதும் அறியாதார்—அவர் பிழை
யாவும் பொறுத்திடுவாய்;
நாதனே; என்றீசன்—அருளை
நயந்து வேண்டி நின்றான்."

என்ற பாடல்கள் பொன்போல் போற்றத் தக்கன.

கவிமணி பற்றி அவருடைய நெருங்கிய நண்பரும் சிறந்த ஆராய்ச்சியாளருமாகிய திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறிய கூற்றோடு இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

"இவருடைய கவிகள் பெரும்பாலனவற்றில் தேசபத்தியின் இனிய நன்மணம் கமழ்ந்து வீசவில்லை. இதற்கு மாறாக, எப்பொழுதும் நிலைபேறுயுள்ளதும், நமது மக்களால் பெரிதும் போற்றப்படுவதுமாகிய இந்தியப் பண்பாட்டின் பெருநலமே (Cultural interest) இவைகளில் நிரம்பித் ததும்புகிறது. பண்பாட்டின் உணர்ச்சியொன்றே கவிமணியின் பாடலுக்கு உயிர்நாடியாக உள்ளது. இவ்வாறு கூறிய அளவில் தேசபக்திக்குரிய விஷயங்களைப் பற்றி இவர் பாடவே இல்லை என்பது எனது கருத்தல்ல."

இவ்வாறு கவிமணியின் பக்திப் பாடல்களைப் படித்துப் பயன் எய்துவோமாக!

26

விடுதலைக்குப் பின் தமிழ் நாடக வளர்ச்சி

பேராசிரியர் வீ. இராசமாணிக்கம், எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ்ப் பேராசிரியர், பூ. சா. கோ. கலைக்கல்லூரி,
கோயம்பத்தூர்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் நாடகங்கள் எழுதப்பெற்றும், நடிக்கப்பெற்றும் வந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் வேத்தியல் பொதுவியலென்ற இருநிலை நாடகங்கள் இருந்ததையும். அரங்கேற்று காதையில் நாடக அரங்கின் செம்மையான அமைப்புக்கள் விளம்பப் பெற்றிருப்பதையும் அறிகிறோம். இங்ஙனம் எல்லாக் காலங்களிலும் நாடகம் நிலவி வந்ததையும், இன்னும் மக்களிடையே சிறந்தவோரிடம் பெற்றிருப்பதையும் உணர்கிறோம்.

வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் நலிவுற்றருந்த இந்நாடகக்கலை சென்ற நூற்றாண்டில்தான் சிறப்பாக வளர்ந்து செழிக்கத் தொடங்கியதெனலாம். தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்னுந் தகவுடன் போற்றப்பெறுந் திரு. து தா. சங்கரதாசு சுவாமிகள், தமிழ்நாடகத் தந்தையெனப் புகழப்பெறும் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள், திரு. தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள், திரு. எம். கந்தசாமி முதலியார், திரு. சி. கன்னையா அவர்கள், நவாபு எஸ். இராசமாணிக்கம் அவர்கள், திரு. தி. க. சண்முகம் அவர்கள் ஆகிய பல அறிஞர்களின் முயற்சியாலும் உழைப்பாலும் நாடகக்கலையெனும் ஒளிவிளக்கு மங்காமல் தூண்டப்பட்டு ஒளிர்ந்து வந்துளது. 1947இல் நாடு தன்னுரிமை பெற்ற பின்னர், இக் கலை, எவ்வெவ் வகையில் வளர்ந்துள்ளதெனக் காண்போம். முதற்கண் இலக்கிய நாடகங்கள் குறித்துப் பார்ப்போம்.

இலக்கிய நாடகங்கள் :

நாடகங்கள் அல்லாமல் சங்ககாலத் தனிப் பாக்களில் நாடகத் தனிப் பேச்சுக்கள் என்று எண்ணத்தகுந் தகுதியுடையன பலவுண்டு. இந்நிலையில் சங்கவிலக்கியப் பாக்கள் பல வளஞ்செறிந்த வாழ்க்கையில் எழுந்த போராட்டங்களை எடுத்துரைப்பவையாம். அவை நாடகமாக அமைவதற்கேற்ற பொருளும் உணர்ச்சியும் பொதிந்தவை.

ஆயினும், ஒரு பாட்டில் ஓரிடத்தில் அமையாதும், வரலாற்று முறையில் கோவைப்பட்டுக் கிடவாமலும், அங்குமிங்குஞ் சிதறி மண்ணில் புதைந்த மணிகளாகவுள்ளன. அவை ஏட்டளவில் நின்று, ஆய்ந்து கற்போர்க்கே பயனுறுதல் போதாது; பொழுதுபோக்காகக் கற்போர்க்குங் கலை விருந்தாய், அவர்தம் உள்ளங்களைப் பிணித்து இலக்கிய ஆர்வம் ஊட்டுவனவாக விளங்கல் வேண்டுமென அவற்றைக் கண்டெடுத்துத் திறமையாக ஓரங்க நாடக வடிவில் பல அறிஞர்கள் தந்துள்ளனர்.

பண்டாரகர் வ. சுப. மாணிக்கம் அவர்கள், 'மனைவியின் உரிமை' என்னும் நாடகம், பேகன் கண்ணகிக்கு இழைத்த பெருந்தீங்கினை விளக்குகிறது. அஃதோடு, 'தமிழகத்தில் ஒழுக்க நெறியில் குலமகளிர் விலைமகளிர் என்ற இரு பிரிவு நீங்கித் தமிழ் மகளிர் என்ற பிரிவில் ஒருமை வேண்டும்' என்றும் கண்ணகியின் வாயிலாக வற்புறுத்துகிறது. அந்நூலில் அமைந்துள்ள, 'இனிய சாவு,' 'உழவப் புலவன்,' 'பிள்ளைத் தூது' என்ற ஏனைய நான்கினுள் முதல் மூன்றும் புறப்பொருளையும், நான்காவது அகப்பொருளையும் சார்ந்து எழுதப்பெற்றுள்ளன. இவரது தமிழ்நடை தனி நடையுடையது. தூய்மையான, எளிமையான மொழியால் எழுதுவதில் வல்லவர் என்பதை இவர் நாடகங்கள் காட்டுகின்றன.

திரு. ஆறு அழகப்பன் அவர்கள், 'நாடகச் செல்வம்' என்ற நூலில் நான்கு ஓரங்க நாடகங்களை ஈந்துள்ளார். 'பதினறுகால் மண்டபம்' என்பது இதுகாறும் காணாத புத்தொளியுடன், கரிகாற் பெருவளத்தான், கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குப் 'பத்தொடாறு நூறாயிரம் பொன் பரிசளித்ததோடன்றி' அரங்கேற்றத்திற்கெனக் கட்டப்பெற்ற பதினறு கால் மண்டபத்தையும் ஈந்தான் என்ற செய்தியையும், கல்வெட்டுக் குறிப்புடன் தந்துள்ளார். 'அன்னி மிஞிலி' என்பது தமிழ் நங்கை ஒருத்தியின் வீர வாழ்வினை இயம்புகிறது. 'தமிழ்த் தொண்டு'ம், 'கபிலரும்' புலமைக்கு அணி செய்வன. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அகப்பொருள் அறிவுறுத்தியதைச் சற்றே கற்பனையுடன் நாடக அமைப்பில் நல்குவது 'கபிலர்.'

திரு. பெரியசாமித் தூரன் அவர்களால் எழுதப்பெற்ற 'ஆதி அத்தி' என்பது, ஆதிமந்தியாரின் காதல் வாழ்க்கையை விளக்குவது. ஆனல் ஆசிரியர் ஆதியின் வாழ்வை வேறுவிதமாக முடித்துக் காட்டுகிறார். நடனமாடிய அத்தியைக் காவிரி இழுத்துச் சென்று பலகல் தொலைவுக் கப்பால் கரையோரம் ஒதுக்குகிறது; மருதியென்ற பாண்மகள் அவனைக் காத்துத் தன்னில்லத்தில் வைத்திருக்கிறாள்; ஒருநாள் பித்தேறியவள்போல் தேடி வந்த ஆதியையும் தன்னில்லம் அழைத்து வருகிறாள்; பின்னர் ஆதியின் காதலனே, அத்தியென்றும் அறிந்து தன்னுள்ளத்தே யாருமுணராவாறு புதைத்து வைத்திருந்த காதலைத் துறந்து ஆதி அத்தியறியாவண்ணம் அவ்விடம் விட்டு மறைந்து விடுகிறாள். கடல் தெய்வம் அத்தியைக் கொணர்ந்து காட்டியதுபோன்ற செய்திகளை

யெல்லாம் விடுத்துப் புதிய கருத்தைப் புனைந்திருப்பது இந்நாடகத்தின் புதுமையாகும்.

மற்றும், திரு. கண்ணன் அவர்தம், 'தமிழ்வாழத் தலைகொடுத் தான்', திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களின் 'தமிழ்ச்செல்வம்', திரு. சிவ. குப்புசாமி அவர்களின் 'சங்ககால வள்ளல்கள்', திரு. இராசு அவர்களின் 'புறநானூற்றின் ஐந்து நாடகங்கள்,' எச். வைத்தியநாதன் அவர்களின் 'இலக்கிய நாடகங்கள்' என்ற தலைப் பிலடங்கிய எட்டுப் பதினைந்து மணித்துளி நாடகங்கள் அனைத்தும் இலக்கிய நாடகங்களில் அடங்கும்.

இவை போலவே தமிழிலக்கியப் பாக்கள் நல்கும் நிகழ்ச்சிகளை நிரல்படுத்திக் கதையுணர்ச்சி கெடாமல் கற்பனைச் சிறப்போடு, விளங்கும், புரட்சிக் கவிஞரின் 'சேரதாண்டவம்' திரு. கு. இராசவேலு அவர்களின் 'அணைகடந்த வெள்ளம்', கொண்டல் சு. மகாதேவன் அவர்களின் 'தெள்ளாறெறிந்த நந்திவர்மன்' ஆகியவற்றையும் இலக்கிய நாடகங்களில் அடக்கலாம்.

வரலாற்று நாடகங்கள் :

நாடு உரிமை பெற்ற பின்னர், முதல் வரலாற்று நாடகமாகத் திரு. இரா. வேங்கடாசலம் அவர்களால் எழுதப்பெற்ற 'இமயத்தில் நாம்' தோன்றியது. பின்னர் 'முதல் முழக்கம்' தொடர்ந்தது. 'இம யத்தில் நாம்' என்பது, சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்தை மையமாகக் கொண்டெழுதப்பெற்ற, வீரவுணர்வூட்டும் ஆற்றல் வல்ல நாடகமாகும். 'தமிழின் பெருமை' அவரால் பின்னர் எழுதப்பட்ட தாகும். 1950இல் இவரால் எழுதப்பெற்ற 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' என்ற நாடகம் தி.க. சண்முகம் குழுவினரால் நடிக்கப் பெற்றுப் புகழ் பரப்பியது.

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் 'இராசேந்திரன்', திரு. கண்ணன் அவர்களின் 'நந்திவர்மன்', 'வீரவாலி', திரு. நா. பாண்டுரங்கன் அவர்களின் 'சித்தர்மகள்', 'சுமைதாங்கி', அரு. இராம நாதன் அவர்களின் 'இராசராசசோழன்', 'சக்கரவர்த்தி அசோகன்', ஆறு. அழகப்பன் அவர்களின், 'திருமலை நாயக்கர்', 'திருவள்ளுவர்' ஆகியவை வரலாற்று நாடகங்களாக வெளிவந்துள்ளன. மறை மலையடிகளாரின் 'அம்பிகாபதி அமராவதி', திரு. அ. கி. கண்ணன் அவர்களின் 'ஆளப்பிறந்தவர்கள்' திரு. வழித்துணைவன் அவர் களின் 'திருவள்ளுவர்' என்பனவும் வரலாறடங்கிய நாடகங்கள். மறைமலையடிகளார் இயற்றிய 'அம்பிகாபதி அமராவதி'யில் பில் கணீயம் என்ற வங்மொழிக் கதையில் காணப்படுங் கருத்தை ஆண்டி ருப்பது பொருத்தமில்லை. இக்காட்சிதனைப் பாவேந்தர் 1938லேயே 'புரட்சிக்கவி'யென்ற தமது கவிதை நாடகத்தில் பொருத்தியுள்ளார். 1954இல் அதே காட்சியைத் தம் நாடகத்தில் புகுத்தியுள்ளமை அவர்

தம் புலமைக்குச் சிறக்காது. மற்றும், அம்பிகாபதி அமராவதி இருவரது உரையாடல்களில் தன் சைவநெறிக் கருத்துக்களை யெல்லாம் புகுத்தியுள்ளார்.

திரு. வழித்துணைவன் அவர்கள் எழுதிய 'திருவள்ளுவர்' என்ற நாடகம் 1973இல் தமிழக அரசால் பரிசு நல்கப்பெற்றுள்ளது. திருவள்ளுவர் குறட்கருத்துக்களையே பாத்திரங்களின் வாயிலாகக் கூறும் வகையில் உரையாடலாக அமைந்திருப்பது இந்நாடகத்தின் புதுமையாகும். வள்ளுவரின் தாய் தந்தையார், வள்ளுவர் மனைவியாம் வாசுகியம்மையாரின் தந்தையார், வள்ளுவரின் மகள் முல்லை போன்ற பலர் ஆசிரியரின் கற்பனைப் பாத்திரங்களாவர்.

சில ஆண்டுகட்குமுன் வெளிவந்த, வரலாற்று நாடகம்போல் விளங்குவது 'பெருமழைப் புலவர்' (சோமசுந்தரம்) அவர்களால் இயற்றப்பெற்ற 'செங்கோல்' ஆகும். இராணி மங்கம்மாள் என்ற பெயரையன்றி வேறு வரலாற்றுக்குறிப்பும் இல்லை. இஃது ஒரு மேனாட்டுத் துப்பறியும் கதை போன்றமைந்துளது. திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் அவர்தம் 'இராசேந்திரன்' நல்ல இனிய, தமிழ்நடையுடையது. அவரின் ஆழ்ந்த தமிழ்ப்பற்று வெளிப்படுகிறது. படிப்போர்க்கும் உண்டாகுமென்பதில் ஐயமின்று. ஆனால், பல இடங்களில் அமைந்த நீண்ட உரையாடல்கள் அரங்கில் நடிக்கவுரியதாயில்லை.

இனி நூல் வடிவம் பெறாமல் நாடக அரங்குகளில் வெற்றி நடையிட்டு, நாடகக் கலையுலகிற்குப் புகழீட்டித் தந்துள்ளவை, பல. திரு. மதுரை திருமாறன் அவர்களின் 'சாணக்கிய சபதம்', 'வேங்கை மார்பன்', 'காடக முத்தரையன்', 'மாலிக்காபூர்' போன்றவை அப்பலவற்றுள் சிலவாகும்.

சமூக நாடகங்கள் :

நாடு உரிமை பெற்றதும் பல துறையில் சீர்திருத்தங்கள் தேவைப்பட்டன. அவற்றுள் சமூகச் சீர்திருத்தங்கள் மிக இன்றியமையாதனவாயின. இதனைத் தமிழகத்தில் நாடக வாயிலாகக் கொணர முயன்றவர் பேரறிஞர் அண்ணா அவர்களே. தமிழ்மக்களிடையே, மூடநம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் நாடகங்களின் வாயிலாகவே பரப்பப்பட்டன. அவற்றைப் போக்கவும் நாடகத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென எண்ணிய அண்ணா முள்ளை முள்ளால் எடுக்க எண்ணினார். வேலைக்காரி, ஓர் இரவு, சந்திரமோகன், நீதி தேவன் மயக்கம் போன்ற சமூகச் சீர்திருத்த நாடகங்களை இயற்றினார். இவைகள் சமூகத்திலே நல்லதொரு மாற்றத்தை யுண்டாக்கின எனலாம். சிறப்பாக இளைஞர்கள், மாணவர்கள் உள்ளங்களையீர்த்து மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் ஊட்டின.

இவரையொட்டிக் கலைஞர் கருணாநிதி அவர்களின் கூரிய அறிவாற்றலாலும், உயர்ந்த தேவையான, கற்பனையாலும் கனல் தெறிக்கும் உரையாடல்களாலும் மக்கள் உள்ளங்களை ஈர்க்கும், வெள்ளிக்கிழமை, போர்வாள், தூக்குமேடை, காகிதப்பூ ஆகியவை தோற்றம் பெற்றன.

'நெல்லிக்கனி', 'உப்பங்கழி' என்ற இரண்டும் பண்டாரகர் வ. சுப. மாணிக்கம் அவர்களால் இயற்றப்பட்டவை. இவ்விரண்டும் இன்றைய சமூகத்தை எதிரொளிக்கும் கண்ணாடிகள். சிறப்பாக, மகளிர் எவ்வகையில் ஒழுகவேண்டும், அன்னையரங்கம், மகளிர் அரங்கம் எங்ஙனம் எதற்காக இயங்கவேண்டும் என்பதையெல்லாம் தெளிவாக விளக்கியுள்ளார். 'உப்பங்கழி' பெண்ணைப் பெற்றோர், அப்பெண்ணுக்கு மணஞ்செய்விக்க எத்தகு தொல்லையுறுகின்றனர் என்பதைக் காட்டுகிறது.

திரு. விசயராசன் அவர்களால் எழுதப்பெற்ற 'நெருஞ்சிப்பூ' மனைவியின் பெருமை, உழைப்பின் உயர்வு, மூவகை நிலையாமை, குறள்களைக் கற்றல்மட்டும் போதாது, அவற்றை வாழ்க்கையில் பயனுறுத்த வேண்டுமெனத் தூண்டுகிறது.

இச்சமூக நாடகங்கள் எல்லாம், என்றும் நின்று நிலவுவனவென்று கூறவியலாது. இன்றைய சமுதாயப் பிரச்சினைகள் மறைந்தவுடன் இந்நாடகங்கட்கும் சிறப்பு நீங்கும்.

ஓரங்க நாடகங்கள் :

அன்றுபோல் இன்று மக்கள் நெடுநாடகங்களை அமர்ந்து, கண்டுங் கேட்டும் மகிழும் நிலையிலில்லை. அஃதோடு பல இறவாக் கருத்துக்களையும், முரண் கருத்துக்களையும் மையமாகக் கொண்டு நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் புனைந்து, நெடுநேரங்காட்டுவதைப் பெரும்பாலோர் விரும்புகின்றிலர். ஒரு மணியில் முடிவதையே நனி விரும்புகின்றனர்.

கல்லூரி ஆண்டுவிழாக் காலங்களில் இத்தகைய ஓரங்க, ஒருமணி நாடகங்கள் இடம்பெறுகின்றன. பண்டாரகர் மு. வரதராசன் அவர்களால் எழுதப்பெற்ற மனச்சான்று, கிம்பளம், ஏமாற்றம், பொதுநலம் என்பனவும், காதலெங்கே, கடமையெங்கே என்பனவும் இத்தகையன. இவையனைத்தும் இளைஞர்க்கு வரலாற்றடிப்படையில், மொழி, நாட்டுப்பற்றுக்களை யூட்டுகின்றன. இவருடைய 'இளங்கோ' என்ற நாடகம், சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மூவேந்தர்க்கும், மக்கட்கும் எவற்றை அறிவுறுத்துகின்றார் என்பதைக் கூர்ந்து சிந்தித்ததன் விளைவாக உருவாகியுள்ளது.

பண்டாரகர் தா. ஏ. ஞானமூர்த்தியவர்கள், முற்கூறிய காரணங்களைக் கொண்டே பல நாடகங்களை உருவாக்கினார். கடற்கரை,

பெண்ணின் கண்ணீர், வாழ்க்கைச் சுடர், வைரமாலை, புது வாழ்வு, சிவகாமி, தெய்வவொளி, பொன்மலர், தெள்ளமுது, காமக்கண்ணி, அமராபரணம், இராசேந்திரன், படித்தவன், செல்வ மகள் ஆகியவை இவருடையவை. இவற்றுள், சில போட்டி நாடகங்களில் பங்கு கொண்டு பரிசும் பெற்றுள்ளன. இவை பெரும்பாலும், மாணவரிடையே கடமையுணர்வு, சாதி வேறுபாடற்ற நிலை, உழைப்பின் உயர்வு, காதலின் ஆற்றல், நாட்டுப்பற்று ஆகியவற்றைக் கருவாகக் கொண்டுள்ளன. இவற்றுள், பல இரண்டு மணி நேர நாடகங்களாகப் பின்னர் நீட்டியெழுதப் பெற்றுள்ளன.

'வானொலி'யால் வளரும் நாடகங்கள் பல. அவற்றுள், ஒரு மணி நேர நாடகங்களும், பதினைந்து மணித்துளி நாடகங்களும் பல. இன்றைய நாடக வளர்ச்சிக்கு வானொலி நல்லதொரு வாயிலாகவுள்ளதெனலாம்.

மேடை நாடகங்கள் :

இன்று நூல் வடிவெய்தி விளங்கும் பல நாடகங்கள் முதற்கண் நாடக அரங்கில் நடிக்கப்பெற்று வெற்றிநடையிட்ட பின்னரே நூல்களாக வெளிவந்துள்ளன. ஆனால், மேடையேறியும் நூல் வடிவம் பெறுதவை எத்துணையோ வுள. ரெட்ராகஸ் ரெக்ரியேஷன்சின் 'அலைகள் ஓய்வதில்லை' என்பது ஒன்றாகும். வெள்ளப் பெருக்கால் ஒரு கிராம இரயில் நிலையத்தில் இரயில் நின்றுவிட, அந்நிலையத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் காட்டுவது இது. 'யூனிடி கிளப்'பின் 'திக்குத் தெரியாத வீட்டில்' என்பது ஒரு நகைச்சுவை நாடகம். 'ஸ்டேஜ் கிரியேஷன்சின் 'நலந்தானு', 'விசிட் தி கல்கத்தா பிளேயர்சின்' 'தி பெர்பெக்ட் அலிபி' என்ற நாடகங்கள் ஒரு மிக இயல்பான கதையையும், அமைப்புத் திறத்தாலும், நடிப்புத் திறத்தாலும் உயர்த்த இயலுமென்பதற்கு எடுத்துக்காட்டாகவுள்ளன.

சேவா ஸ்டேஜின் 'கைவிளக்கு' நல்லதொரு நாடகம். 'பகைமையை அகிம்சையால் வெல்லு' என்ற காந்தியடிகளின் கொள்கையை மையமாகக் கொண்டுள்ளது. 'கலியாண சூப்பர் மார்கெட்' என்ற நாடகம் மாப்பிள்ளையிடம் வரதட்சணை வாங்க முயல்வதாக அமைந்துள்ள, சீர்திருத்தம் பேசுகிறது. இதில் அரசியல் பொடியும் மிகவுண்டு.

மற்றும் 'நான்கு திசைகள்', 'அண்டர் செக்ரடரி', 'காஷுவல் லீவ்', 'அம்மன் தாலி', 'பசும்பொன்', 'நெஞ்சிற்கு நீதி', 'நிம்மதி', 'குங்குமச் சிமிழ்', 'தேவையொரு தங்கை' முதலியனவும் சென்னையில் பல கழகங்களால் நடிக்கப்பெற்று ஓரளவு புகழ் ஈட்டியுள்ளன.

மற்றும் திரு. கே. பாலச்சந்தரின் 'சதுரங்கம்', 'மேஜர் சந்திரகாந்த்', 'நீர்க்குமிழி', 'சர்வர் சுந்தரம்,' 'எதிர்நீச்சல்' ஆகியவவை

யும், திரு. தி. ஜானகிராமனின், 'நாலுவேலி நிலம்,' 'வடிவேலு வாத்தியார்', 'டாக்டருக்கு மருந்து' ஆகியவையும், திரு. இராமசாமியின் (சோ) 'யாரிடமும் சொல்லாதே,' 'சம்பவாமி யுகே யுகே,' 'மனம் ஒரு குரங்கு,' 'துக்ளக்,' 'யாருக்கும் வெட்கமில்லை' போன்றவையும் அரங்கில் ஆடி நூல்களாகவும் உருப்பெற்றுள்ளன. இவற்றுள் திரையரங்கேறியவையும் பல.

இம் மேடை நாடகங்கள் நாடகத்தமிழுக்கும் மொழிக்கும், எவ்வகையில் வளர்ச்சிக்குத் துணை செய்துள்ளன என எண்ணிப் பார்த்தால், பெரிதும் 'இல்லை'யென்றே கூறலாம். நாடகக் கழகங்கட்கு இடப்பெற்றுள்ள பெயர்களை, நோக்கும்போது, ஏதோ, இங்கிலாந்தில் உள்ள நாடகக் கழகங்களோவென எண்ணவேண்டியுளது. நடிக்கப் பெறும் நாடகங்களும் ஆங்கிலத் தலைப்பைக் கொண்டுள்ளன. பேசப்படுகின்ற உரையாடல்களோ, பெரிதும் ஆங்கிலச் சொற்கலப்புற்றவையே. இவற்றையெல்லாம் கூர்ந்து நோக்குங்கால், மொழியைப் பற்றியும் அதன் வளர்ச்சியைப் பற்றியும் அவர்கள் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. எனவே இந் நாடகங்களால் மொழி வளர்ச்சிக்கோ, தமிழ் நாடக வளர்ச்சிக்கோ ஆக்கத்தினும் அழிவே மிகுதி எனலாம்.

நகைச்சுவை நாடகங்கள் :

இருபத்தைந்தாண்டுகளாக வெளிவந்த நாடகங்களை வகைப்படுத்திக் காணுங்கால், நகைச்சுவை நாடகங்கள் மிகக் குறைவெனவே தோன்றுகிறது. திரு. சாவி அவர்கள் எழுதிய 'வாஷிங்டனில் திருமணம்' என்பது ஓர் நகைச்சுவை நாடகமாகும். இதில் சிரிப்புக்கு மட்டுமே இடமுண்டு. தமிழ் வளர்ச்சிக்கோ, சிந்தனைக்கோ இடமில்லை. பாவேந்தரின் 'கற்கண்டு' என்ற நாடகம் நகைச்சுவையுடன் சமூகச் சீர்திருத்தங் கொண்டது. அறுபத்தைந்து வயதுடைய ஒருவர், தான் கொடுத்த கடன் தொகைக்கு ஈடாகக் கடன்பட்டவர் இளம் மகளை மணக்க விரும்புகிறார். பெற்றவனும் ஒப்புக்கொள்ள, வெளியூர் சென்று மணத்தை முடிக்க முனையும்போது, தெருவில் கதைவிளக்க நடிகன் (கதாகாலட்சேபம் செய்பவன்) ஒருவன் சூழ்ச்சி செய்து அப்பெண்ணை மணந்து கொள்கின்றான். இது சமுதாயத்தில் அறுபத்தைந்துக்கும் இருபத்தைந்துக்குமிடையே நிகழும் கொடுமையினை நகைச்சுவையோடு விளக்குகிறது. யூனிடி கிளப்பின் 'திக்குத்தெரியாத வீட்டில்' என்பதும் நகைச்சுவை ஊட்டும் மேடை நாடகமாக விளங்குகிறது.

செய்யுள் நாடகம் :

சேக்சுபியர் நாடகங்களைப் போன்று தமிழில் செய்யுள் நடையில் நாடகம் படைத்து வெற்றி கண்டவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள். விடுதலைக்குப்பின் அதுபோலும் நாடகம் தோன்றவில்லை

யெனினும், திரு. பாலசுந்தரம் அவர்களின் 'புலவர் உள்ளமும்', புலவர் குழந்தையவர்களின் 'காமஞ்சரி'யும் அண்மையில் வெளிவந்துள்ளன. 'புலவருள்ளம்' குமணன், இளங்குமணன் கதையே. இதைச் செய்யுள் நடையில் இலக்கிய நாடகமாக அமைத்துள்ளார். 'காமஞ்சரி,' 'சோரபும் ருஸ்தமும்' என்ற ஆங்கிலக் கதையை மையமாகக் கொண்டு விளங்குகிறது. புலவர் குழந்தையவர்களின் ஆழ்புலமையையும் தனித் தமிழ்ப் பற்றையும், செய்யுளியற்றும் வன்மையையும் இந் நாடகம் இயம்புகிறது. எனினும், அளவுக்கு மீறிய வருணனைகளும், நிகழ்ச்சிகள் குறைந்த கதையமைப்பும் நாடகத்தைப் படிப்போரின் சுவையைக் குறைத்துவிடுகின்றன. நாடகத்தின் இறுதியில் பழையனுக்கும் அவன் மகன் கொங்குவேளுக்கும் நடைபெறும் பல பக்கங்களில் அமைந்துள்ள உரையாடல்கள் நாடகத்தின் சுவையை மேலும், குறைப்பதோடு நடிப்பதற்குத் தகுதியற்றதாக்கி விடுகின்றன. பொதுவாக இவ்விரு நாடகங்களும், அவற்றின் ஆசிரியர்கள், 'மனோன்மணீய' நாடகத்தில் எத்துணைத் தோய்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. இவைபோலும் செய்யுள் நாடகங்கள் பல வெளிவரல் வேண்டும்.

சிறுவர் நாடகங்கள் :

தமிழ்மொழியில் சிறுவர்க்கென இயலிசைத் தமிழ் வளர்ந்துள்ளது போல் நாடகங்கள் வளர்ச்சியடையவில்லை. "சிறுவர் நூல்களை வெளியிடும் பதிப்பகத்தார் சிறுவர் நாடகங்களை வெளியிடத் தயங்குகின்றனர்" எனக் குழந்தை எழுத்தாளர் திரு. பூவண்ணன் எழுதுகிறார். இது சிறுவர் நாடகங்கள் மக்களிடையே செல்வாக்கடையும் அளவிற்கு, எழுதப்பெறவில்லையென்பதையுஞ் சுட்டுகிறது. 1955இல் சிறு நாடக விழாவைச் சென்னையில், 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' நடத்தியது. அதில் பல ஒரு மணி நேர நாடகங்கள் நடத்தப்பெற்றன. இவ்வகையில், திருவாளர்கள் தணிகை உலகநாதன், கூத்தபிரான், கி. மா. பக்தவத்சலன், பூவண்ணன் ஆகியோர் சிறுவர் நாடகங்களை இயற்றித் தமிழ்மொழிப் பணிக்கும் ஆக்கந் தேடி வருகின்றனர்.

இன்றைய நாடகங்களின் தன்மைகள் :

நாடகங்கள் தமிழ்மொழியை அணிசெய்தல் வேண்டுமென்ற ஆர்வம் கற்றாரிடையே கனிந்துள்ளது. ஆனால், வெளிவந்துள்ள நாடகங்கள் இலக்கியச் சிறப்புடையனவாக, நின்று நிலவும் பெற்றியுடையன மிகச் சிலவே. அன்றாடப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு பல நாடகங்கள் உருப்பெறுகின்றன. இவையெலாம், அப் பிரச்சினைகள் நீங்கியதும் மறைந்துவிடுகின்றன. காரணம் இக் காலச் சூழலென்றே கூறலாம். அன்றன்றைக்குரிய பிரச்சினைகளைக் கொண்ட நாடகங்கள் மக்கள் உள்ளங்களை ஈர்க்கின்றன. அவை போன்றவற்றை மிகவும் விரும்புகின்றனர். இவ்வகையில் அரசியல் அடிப்படையில் எழுதப்பெறும் பல, கட்சி விளம்பரத்துடன் வெளி வருகின்றன. 'சோவின் பெரும்பாலான நாடகங்களையும், கலைஞர் கருணாநிதி அவர்

களின், 'காகிதப் பூ', 'திருவாளர் தேசியம் பிள்ளை', 'நானே அறிவாளி' போன்ற நாடகங்களையும் குறிப்பிடலாம். நிற்க,

இன்றைய நாடகங்கள் பெரும்பாலும் நடிப்பு வளர்ச்சியையே மையமாகக் கொண்டுள்ளன. மொழி வளர்ச்சியை, ஆக்குவோர் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. பேசுதல் போன்றே எழுதுதல் வேண்டுமென்ற கருத்துடன் எழுதப்பெறுகின்றன. 15, 20 ஆண்டு கட்கு முன்னர், நாடக நடிகரும், திரைப்பட நடிகரும் நற்றமிழையே மேற்கொண்டனர். அவர்தம் நாவு நற்றமிழையே பேசிற்று. ஆனால், இன்றைய நடிகர் பேச்சு மொழியிலேயே உரையாடுவதோடு கொச்சை மொழியையும் பயன்படுத்துகின்றனர். காரணம் நாடகம் படைப் போர்க்கு அவ்வெண்ணம் இல்லையெனவே தோன்றுகிறது

நாடகப் பாத்திரங்கட்கு ஏற்றாற்போல் நடை அமையவேண்டு மென்ற கருத்து பொருத்தமே. அன்றைய நாடக, திரைப்படங்களில் வேலைக்காரனும் செந்தமிழில் பேசினான். இன்றோ, கதைத்தலைவனும், தலைவியும் பேச்சு மொழியிலேயே உரையாடுகின்றனர்.

பேச்சு மொழியிலேயே உரையாடல் அமைதல் வேண்டும் என்ப தால் ஆங்கிலக் கலப்புற்ற நடையே கொள்ளப்படுகிறது. மறைமுக மாகத் தமிழைக் கெடுக்கவேண்டும் என்ற தமிழ்ப் பகைவர் திட்ட மிட்டுச் செய்து வருகின்றனர். இஃதை யுணராச் செந்தமிழ் வல்ல நல்லாரும் அதைப் பின்பற்றத் தோன்றிவிட்டனர். அஃதோடு நில்லாது, ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களாலேயே அச் சிட்டும் வருகின்றனர். இனி, இடையிடையே வழங்கப்பெறும் இந்தி, வடமொழிச் சொற்களையும் அவ்வம் மொழிக்குரிய எழுத்துக் களாலேயே எழுதப்பெறும் நிலை வரின் வியத்தற்கில்லை. இவை யனைத்துந் தமிழ்மொழி வளர்ச்சிக்கு எட்டுணையும் நன்மை பயவா விடினும் தீங்கு விளைக்குமென்பதில் ஐயமின்று.

இலக்கிய நாடகங்கள் நன்கு உருவாக்கப் பெறுகின்றன என்பதில் பெருமகிழ்வு பெறுகிறோம். ஆனால் அந்நாடகங்களில், ஒருசிறு குறை காணப்படுகிறது. இரண்டாஞ் சங்க காலத்தில் நிகழ்ந்ததாக எழுதப் பெற்றிருப்பது திரு. சி. கண்ணன் அவர்களால் எழுதப்பெற்ற 'ஆளப் பிறந்தவர்கள்' என்ற நாடகம். அவரது தமிழ் நெஞ்சங்கண்டு பூரிக் கின்றோம். ஆனால், குறும்பனை நாடு, குணகரை நாடு. ஒளிநாடுகள் நிலவப் பெற்ற அந்நாளில், ஹா. ஹா., சகாக்கள், பாக்கியம், விஷமத் தனம், அக்ரமம், உக்ரநிலை என்பன போன்ற பல சொற்கள் பேசப் பட்டனபோல உரையாடலை யமைத்திருப்பது, அக்கால நிலைக்கு ஒவ் வாததாகக் காணப்படுகிறது. மற்றும், வாட்போர் என்பதற்கேற்ப 'மட்போர்' (மற்போர்) என்றும், 'அறிவிழி', (அறிவிலி), 'முழித்தார்' என்ற சொற்களும் ஆசிரியரின் தமிழுணர்வைக் குறைத்துவிடுகின்றன. அஃதோடு, இந் நூலுக்கு மதிப்பீடு வழங்கிய பண்டாரகர் ஒருவர்,

'இந்நூல் நல்ல தனித்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது' எனக் குறிப்பிட்டிருப்பதும் பொருந்துவதாயில்லை.

'ஆதி அத்தி' என்ற நாடகத்தில், இது விஷயமாக என் உள்ளக் கருத்தினைக் கூறுகிறேன். தங்களுடைய அற்புதமான வீரசாகசமே. வெற்றிக்குக் காரணம்' என்பன போன்ற வரிகளைக் கரிகாற்பெரு வளத்தான் கூறியதாகப் புனைந்திருப்பது, சேரன் செங்குட்டுவன் இமயஞ் சென்று லாரியில் கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்தான் எனக் கூறுவது போல் உள்ளது. மற்றும்,

" ஆனந்த நடன மாடினார்—அம்பலந்தனில்—ஒரு
காலைத்தூக்கி—அழகாகவே—(ஆனந்த)

எனப் 'பல்லவி', 'அனுபல்லவி', 'சரணங்கள்' அமைத்து ஆதிமந்தி பாடினள் என்பதாகவும்,

' ஆதியிலே அமைந்த சக்தி எங்கள் முத்து மாரி
ஆளுகிறாள் பூமியெல்லாம் சிங்கத்தின்மே லேறி"

என்பதாகவும் அமைத்திருப்பதும் காலத்திற்கொவ்வாதனவேயாம். சங்ககாலப் பின்னணியில் நாடகமோ, கதையோ எழுத முனைவோர், இக்கால வழக்குச் சொற்களையும் சொற்றொடர்களையும், பழக்க வழக்கங்களையும் புகுத்தாமல் காப்பது நன்று.

இதுகாறும் கூறியவாற்றான், நாடு உரிமை பெற்ற பின்னர் இயலிசைத் துறைகளில் போன்றே, நாடகத்துறைக் கண்ணும் தாய்மொழி போற்றத் தக்க வளர்ச்சியடைந்துள்ளது எனலாம். இத்தகைய வளர்ச்சிப் போக்கில் சில வேண்டாதனவும் 'புதியன புகுதல்' என்ற பெயரில் புகுந்து விடுவதும் இயல்பே. அவற்றைத் தமிழ்க் காவலர்களும் சான்றோர்களும் நுண்ணிதின் கண்டு களைய முற்பட வேண்டும். அங்ஙனமாயின் நல்ல நாடகங்கள், தரமான நாடகங்கள், நின்று நிலவும் நாடகங்கள் தோன்றுமென நம்பலாம்.

27

இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கிய வளர்ச்சி—கட்டுரை

பேராசிரியர் வை. சதாசிவன், எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி, திருச்சி

ஆங்கில ஆட்சி இந்நாட்டில் நிலைத்தபின் ஆங்கில மொழியின் செல்வாக்கு மெல்லப் பரவியது. ஆங்கிலக் கல்வி முறை புகுந்தது. இடையே கிறித்துவ சமயமும் ஊடுருவியது. நாட்டுமக்களிடை அச்சமயத்தைப் பரப்பப் பாதிரிமார்கள் முனைந்தனர். அவர்கள் இந்நாட்டு மொழிகளைக் கற்று, அவற்றின் வாயிலாகவே சமயக் கருத்துக்களைப் பரப்பினர். அதே நேரத்தில் அவர்கள் மொழியிலிருந்து இலக்கியச் செல்வங்களையும் கொணர்ந்தனர். நம் நாட்டில் ஆங்கிலக் கல்வியைப் பெற்ற உயர்வகுப்பினர் ஆங்கில மொழியின் இலக்கியவின்பத்தை நுகர்ந்து, அதனை மற்றவர்களுக்கும் அளிக்க விரும்பினர். இவ்விருவகையாலும் நம்நாட்டு மொழிகள் இலக்கியவளம் பெற்றன. அன்னைத்தமிழ் ஆங்கிலத்தால் புத்தொளி பெற்றாள். அவள் எழில்நலம் மிகுந்தது. கட்டுரை எனும் சிறுமோதிரம் அவள் விரலில் அழகாகத் திகழ்ந்தது.

கட்டுரை இலக்கியமா ? :—

கட்டுரையைப் பாடல், காவியம், சிறுகதை, நாவல் போன்று இலக்கியமாகக் கொள்ளத் தகுமா என்ற கேள்வி எழுகிறது. மாமேதை டாக்டர் ஜான்சன் கட்டுரையைப் பற்றிக் குறிப்பிடும்போது, "கருத்தில்லாத வேடிக்கையான பேச்சின் சுருக்கம்" என்றும், "ஒழுங்கும் முறையுமில்லாமல் சுருங்கிய அளவில் கட்டுக்கோப்பில்லாமல் வரையப்பெற்ற ஒரு திரட்டு" ("A loose sally of the mind, an irregular, undigested piece, not a regular and orderly composition") என்றும் குறிப்பிடுகின்றார். இது ஏற்புடைய கருத்தாகுமா? அவரே அரிய கட்டுரை இலக்கியச் செல்வத்தைப் படைத்துள்ளார். ஆங்கில இலக்கியச் சோலையில் அவை புத்தம் புது மலர்களாகத் திகழ்கின்றன. அலெக்சாண்டர் ஸ்மித் என்பார் 'கட்டுரை வரைதல்' (On the writing of Essays) என்ற தமது கட்டுரையில் (கட்டுரையைப் பற்றி இதுவரை வெளிவந்துள்ள எல்லாக் கட்டுரைகளிலும் இதுவே உயர்ந்த கட்டுரையாக ஆங்கில மொழியில் திகழ்கிறது) "கட்டுரை என்பது ஓர் இலக்கிய

வகை. விழுமிய கருத்து இயைத்தோ, வஞ்சப்புகழ்ச்சியாகவோ அல்லது அந்த நேரத்தில் தன் உள்ளத்தில் எழுந்த உணர்வை வெளிப் படுத்தியோ இயற்றிய கவிதையை ஒத்துள்ளது". (The Essay as a literary form, resembles the lyric, in so far as it is moulded by some central mood-whimsical, serious or satirical) கட்டுரை ஆசிரியர் இலக்கிய வரலாற்றில் மிகப் பிற்பட்ட ஒரு காலத்தில் இடம் பெற்ரு லும்—கவிஞருக்குப் பின் தோன்றியவராயினும்—இலக்கியப் படைப் பில் அவருக்கும் ஓர் இடம் உண்டு. உள்ளொளி உந்தப்பட்டு, உணர்ச்சி மீதூரப் பாடல் பாடும் கவிஞரைப்போல் கட்டுரை ஆசிரியர் தமது கட்டுரையை எழுதுவதில்லை. அவர், தானறிந்தவற்றை உலகோர் அறியவேண்டும் என்று நினைத்து எழுதுகிருர், ஒரு சிலரேனும் தனது படைப்பைப் படிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு. எனவே கட்டுரை இலக்கிய வகைகளுள் ஒன்றே என்று கொள்ளுவதே ஏற்புடைத்து.

கட்டுரைத் தோற்றம் :

வாழ்வில் ஒவ்வொருவருக்கும் நல்ல அனுபவங்கள் ஏற்படு கின்றன. மின்னலைப்போல் அழகிய கருத்தும் உதிக்கிறது. அவற்றை வெளியிட எல்லோரும் விரும்புகின்றனர். கவிதை மூலமாகவோ அல்லது வேறு எந்த இலக்கிய வடிவிலோ வெளியிடும் ஆற்றலில்லாமல் இருக்கின்றனர். கட்டுரை அத்தகையோருக்கு நல்ல துணையாக வந்து உதவுகிறது. தமது எண்ணங்களையும், உணர்வுகளையும், அனுபவங் களையும் செய்யுள் வடிவில் வெளியிடும் கவிஞரைப்போல் இவ்வகையில் விளங்குகிருர் கட்டுரை ஆசிரியர். சில நேரங்களில் கவிதை இயற்றும் ஆற்றல் நிறைந்தவர்களும் கட்டுரையைப் பயன்படுத்துகின்றனர். இளங்கோவடிகள் இவ்விதம் கட்டுரையைப் பயன்படுத்தியுள்ளார். ஆங்கிலக் கவிஞர் கோல்டுஸ்மித் A city night peace என்ற கட்டுரை எழுதியுள்ளார். இது ஒரு பாட்டு நல்கும் பயன் அனைத்தையும் கொண்டுள்ளது.

கட்டுரை இலக்கணம் :

பிற இலக்கிய வகைகளுக்கு வெளிவந்துள்ள விளக்கங்களைப்போல் கட்டுரைக் குரிய விளக்கம் வெளிவரவில்லை. பாட்டு என்பது என்ன என்பதைப்பற்றிப் பல அறிஞர்கள் தமது கருத்தை மொழிந்துள்ளனர். சிறுகதை, நாவல், நாடகம், காவியம் என்பவற்றிற்கும் அவ்வாறே விளக்கங்கள் உள. கட்டுரைக்குரிய இலக்கணத்தை வரையறுப்பதற் குப்பதிலாக, இன்ன இன்ஞர் கட்டுரை இப்படி உள்ளது என்று கூறிச் செல்லும் முறையே இன்று உள்ளது. இலக்கண வரம்பு கோலாமையாலே கட்டுரை இலக்கியம் வளராமல் போயிற்று எனலாம்.

1957ல் பேகனல் எழுதப்பெற்ற கட்டுரையே ஆங்கில மொழியில் தோன்றிய முதல் கட்டுரை என்பர். தமிழில் பரிமேலழகரது திருக் குறள் உரைப்பாயிரத்தை முதல் கட்டுரை எனக் கொள்ளலாம்.

தமிழ்க்கட்டுரை இலக்கியம் ஓர் ஐம்பது ஆண்டுக்கால வரலாறே உடையது எனக் கூற வேண்டியுள்ளது. இராமலிங்க அடிகள், ஆறுமுக நாவலர் போன்றோர் தமிழ்க் கட்டுரைப் பயிருக்கு வித்திட்டனர். தமிழ் உரைநடைத் தந்தை என்று சிறப்பிக்கப் பெற்ற நாவலரின் கட்டுரைகள் அரிய இலக்கியச் செல்வங்களாகும். வ. வே. சு. அய்யர் மேலைநாட்டுக் கட்டுரைச் செல்வத்தைத் தமிழகத்திற்குக் கொணர்ந்தனர்.

கட்டுரை வகைகள் :

இலக்கியம், அறிவியல், அரசியல், சமயம், மொழியியல், நகைச்சுவை, செலவு, பத்திரிகை, கடிதம் போன்ற பல்வேறு நிலைகளில் இன்று கட்டுரை வளர்ந்து வருகிறது. ஆங்கிலத்தில் உள்ளதுபோல் தமிழில் அவ்வளவாக இத்துறை வளரவில்லை என்ற கருத்தும் உள்ளது.

பத்திரிகைகள் முதலில் கட்டுரையை வளர்த்தன. சுதந்திர வேட்கை எழுந்த காலத்தில் கவிதைகள் மூலம் அவ்வேட்கையினைத் தட்டி எழுப்பினார் பாரதியார். பத்திரிகைகள் கட்டுரைகள் மூலம் அதனை மேலும் வளர்த்தன. சுதேசமித்திரன், மணிக்கொடி, கலைமகள், தேசபக்தன், நவசக்தி, ஞானசாகாரம் போன்ற பத்திரிகைகளில் அறிஞர்கள் பலர் வரைந்த கட்டுரைகள் இன்று இலக்கியச் செல்வமாகத் திகழ்கின்றன.

இலக்கியத்தைப் பற்றி அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளை இலக்கியக் கட்டுரை எனலாம். டாக்டர் உ. வே. சா., பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், இராகவய்யங்கார், விபுலானந்தர், பண்டிதமணி, ந. மு. வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், தெ. பொ. மீ., வையாபுரிப் பிள்ளை, சேதுப் பிள்ளை போன்ற பெரியோர்கள் எண்ணற்ற இலக்கியக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். கம்பராமாயணப் பாடல்களை விளக்கி டி. கே. சி.யும் சங்கவிலக்கியப் பாடல்களை விளக்கி டாக்டர் மு. வ., கி. வா. ஜ. ஆகியோரும் சொல்லோவியங்கள் தீட்டியுள்ளனர். இவ்வகைக் கட்டுரைகளைப் பிற தமிழர்களும் இயற்றி இலக்கியத் தொண்டாற்றி வருகின்றனர். பல அறிஞர்கள் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குப் பாடநூலாக அமையும்வண்ணம் நூற்றுக் கணக்கான கட்டுரைகள் எழுதியுள்ளனர். ஆங்கில மொழியில்உள்ளது போல் பல தலைப்புக்களில் அறிஞர்கள் பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். வ. ரா., தி. ஜ. ர., ப. கோதண்டராமன், டாக்டர் சிதம்பரநாதன், நெ. து. சுந்தரவடிவேலு போன்ற பெரியோர்கள் இவ்வகைக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். இவற்றைக் கட்டுரை இலக்கியம் என வழங்கலாம்.

அறிவியல் :

அறிவியலில் ஆட்சி இன்று மேலோங்கியுள்ளது. அறிவியலைத் தமிழில் உணர்த்த நல்ல முயற்சி துவங்கியுள்ளது. கோவையிலிருந்து

வெளிவரும் கலைக்கதிரின் தொண்டை தமிழுலகம் என்றும் மறவாது போற்றும். அவ்விதழ் அறிவியல் கட்டுரைகளுக்கே முதலிடம் அளித்து அவ்வகைக் கட்டுரைகளை வளர்த்தது.

அரசியல் :

எளிய தமிழில் அரசியலை மக்களுக்குக் கூறியவர் தமிழ்த்தென்றல் திரு. வி. க. தேசபக்தனிலும், நவசக்தியிலும் அவர் எழுதியவை இன்று நல்ல இலக்கியச் செல்வமாகத் திகழ்கின்றன. கல்கியில் வெளிவந்த தலையங்கக் கட்டுரைகள் தமிழின் ஆற்றலை அறிவிப்பன. குடியரசு விடுதலை இதழ்களில் பெரியார் ராமசாமியும், குருசாமியும் எழுதிய கட்டுரைகள் அறியாமை இருளைப் போக்கும் இயல்பின. அறிஞர் அண்ணு திராவிடநாடு இதழில் வரைந்த கட்டுரைகள் சிறந்த சொல்லோவியங்கள். ம. பொ. சி.யின் செங்கோல் தமிழர் நெஞ்சில் என்றும் வாழ்பவை. இன்று அழகுத் தமிழிலே அரசியலை எழுதிக் கட்டுரை இலக்கியத்தை வளர்ப்பவர் ஜெயகாந்தன்.

சமயம் :

ராஜாஜி, வாரியார், கி. வா. ஜ., பி. ஸ்ரீ., புருடோத்தம நாயுடு, கணபதி போன்ற பெருமக்கள் சமயத்தொடர்பான கட்டுரைகள் எழுதியுள்ளனர். சைவ மடாலயங்களின் மூலமாகப் பல அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

மொழியியல் :

மொழியியல்கலை இன்று வேகமாக வளர்ந்து வருகின்றது, இங்கிலாந்து, அமெரிக்க அறிஞர்கள் எழுதிய நூல்களைக் கற்ற நம்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் அந்நூற் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகள் எழுதி வருகின்றனர். பேராசிரியர் தெ. பொ. மீ., டாக்டர் மு. வ., வி. ஐ. சுப்பிரமணியம், அகஸ்தியலிங்கம், தேவநேயப் பாவாணர் ஆகியோர் மொழியாராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியுள்ளனர். இத்துறை மேன்மேலும் வளர்ச்சி பெற்று வருகிறது.

பத்திரிகைகள் :

கட்டுரை வளர்ச்சியில் பத்திரிகைகளுக்குச் சீரிய இடம் உண்டு. அவற்றிற்குக் கதை, கட்டுரை (Articles) எழுதும் அன்பர்களின் தொகை இன்று பெருகிவருகிறது. இது தமிழின் நல்ல வளர்ச்சியைக் காட்டுவதாகும். சில ஆண்டுகட்கு முன்பு வரை வெளிவந்த தமிழ்நாடு நாளிதழ் தொண்டு போற்றற்குரியதாகும். செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், குமரகுருபரன் போன்ற இதழ்களில் உயர்ந்த கட்டுரைகள் பல அறிஞர்களால் எழுதப்பெற்றன. சென்னை, அண்ணுமலைப் பல்கலைக் கழக இதழ்களிலும் (Journals), Tamil culture அறிவுச்சுடர் ஒளிரும் கட்டுரைகள் வெளிவருகின்றன.

கடிதம் :

கடிதங்களைப்போல் அமைந்த கட்டுரைகள் இதுபோது வெளிவருகின்றன. டாக்டர் மு. வ. அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பருக்கு ஆகிய கட்டுரைத் தொகுப்பு நூல்களை எழுதியுள்ளார். அறிஞர் அண்ணா காஞ்சி இதழிலும், இன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி முரசொலி இதழிலும் இத்தகைய கடிதக் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

செலவு :

அறிஞர்கள் சிலர் தாம் சென்றுவந்த நாடுகளைப்பற்றி அரிய கட்டுரைகள் எழுதியுள்ளனர். திரு. வி. க.வின் 'எனது இலங்கைச் செலவு' இவ்வகையில் தோன்றிய முதல் நூல். டாக்டர் மு. வ, பேராசிரியர் அ. மு. ப., நெ. து. சுந்தரவடிவேலு, மணியன், ஏ. எம். மீரான் ஆகிய பெருமக்கள் மேலைநாடுகளிலும் கீழை நாடுகளிலும் தாம் கண்டவற்றைச் சுவைபட எழுதியுள்ளனர்.

வரலாறு, பொருளாதாரம், சினிமா போன்றவற்றைப்பற்றிப் பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். நகைச்சுவைக் கட்டுரைகளையும் சிலர் தீட்டியுள்ளனர்.

தமிழ்கூறு நல்லுலகில் வாழும் தமிழறிஞர்கள் எண்ணற்ற கட்டுரைகளை எழுதி, தமிழணங்கு என்றும் புதுப் பொலிவோடு விளங்கும் வகையில் அரிய தொண்டாற்றி வருகின்றனர். தமிழ்க் கட்டுரை தளர்நடைப் பருவங்கடந்து ஓடி விளையாடும் சிறுவனாக இன்று திகழ்கிறது.

28

தமிழ்நூல் விவர அட்டவணை

புலவர் மு. சண்முகம் பிள்ளை,

தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

பொருட் குறிப்பு

நூற்றொகைகளின் இன்றியமையாமை — பாரத நாட்டு நூல் வழங்கு சட்டம் — தேசிய நூலகம் நூலடைவு செய்கிறது — இந்திய தேசிய நூல் விவரப் பட்டியல் — நூல் விவரப் பட்டியலின் தமிழ்ப் ப்குதி — நூலுரிமைப் பதிவுச் சட்டம் — அரசிதழில் வெளிவரும் தமிழ் நூல் விவரம் — தமிழ்நூல் விவர அட்டவணை — மொழிவழி இராச் சியமும் வட்டாரமொழி வளர்ச்சியும் — ஆட்சிமொழி பயிற்று மொழி களில் தமிழுக்குத் தனியிடம் — ஆட்சித் தமிழ் வளர்ச்சி — பயிற்று மொழியும் தமிழ் வளர்ச்சியும் — தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் — பண்டுவந்த பலதுறை நூல்கள் — தமிழ்நூல் விவர அட்டவணை அலுவ லகம் — தமிழ் நூல் விவர அட்டவணைக்கு அடிப்படை — அட்டவணைத் தொகுதிகள்: முதல் தொகுதி — இரண்டாம் தொகுதி — மூன்றும் தொகுதி — ஐந்தாண்டுத் தொகுதிகள் — தமிழ்நூல் விவர அட்டவணை யில் பொருட்பாகுபாடு — நூல் விவரம் தரப்பட்டுள்ள முறை — நூல் விவரங்கள் — தொடர்எண் தரும் புதுமுறை — கூட்டு நூல்கள் — இலக்கிய நோக்கில் தமிழ் நூல்கள் — நூற்றொகை அகராதிகள் — பொருளகராதி — ஆசிரியர் அகரவரிசை — நூல் அகரவரிசை — தமிழ் நூல் விவர அட்டவணையில் வாராத நூல்கள் — 1867-க்கு முற்பட்ட அச்சுநூல் விவரங்கள் — மர்டாக் நூலட்டவணையின் மறுபதிப்பு — மர்டாக் நூலட்டவணைச் சேர்க்கைகள் — பழஞ்சுவடிகளின் விவரம் தரும் பிற அட்டவணைகள் — ஆவணக் காப்பக நூலட்டவணைகள் — கல்வித்துறை வெளியிட்ட நூற்றொகை — கன்னிமாராப் பொது நூலக நூற்றொகை — குழந்தைகள் நூற்றொகை — நூலக நூற்றொகை — சுவடி நூற்றொகை — இலக்கிய அகராதி — சிறப்பு நூலடைவு — நூலக நூல் விவர அட்டவணைகள் — வெளியீட்டாளர் நூற்றொகை — விளம் பர நூல் அட்டவணை — இக்கால நூல்கள் — நூல் விவர அட்ட வணைகளும் இலக்கிய வளர்ச்சியும்.

நூற்றொகைகளின் இன்றியமையாமை

ஒரு நாட்டில் காலந்தோறும் வெளிவரும் இலக்கியம் முதலிய கலை நூல்களையும் அறிவியல் நூல்களையும் பிறவகை வெளியீடுகளையும் தெரிவிக்கும் கருவி நூல்கள் நூற்றொகை (Bibliography) எனப்படும் நூல் விவரத் தொகுப்புகளாம். நாட்டின் வரலாறு, மக்களின் பண்பாடு, நாகரிகம் முதலிய அனைத்தையும் வெளிப்படுத்தும் நூற்செல்வங்களின் இயல்புகளையும் சிறப்புகளையும் அறிவிக்கும் வழிகாட்டிகளாக இத் தொகுப்புகள் திகழ்கின்றன. ஆகவே, நூல் விவரத் தொகுப்புகள் மொழியின் வளர்ச்சிக்கும் அறிவு மேம்பாட்டுக்கும் மிகமிக இன்றியமையாதனவாம்.

வழக்கில் இல்லா முந்திய நூல்களைத் தேடிக் காண்பதற்கும் இந் நூற்றொகுப்புகள் ஊக்கம் தரும். நூல்களைத் தொகுதி தொகுதியாக வழங்கும் வழக்கு தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உள்ளது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம், பன்னிரு திருமுறை, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு, பண்டார சாத்திரங்கள் பதினான்கு, பிரபந்தம் தொண்ணூற்றாறு என்றாற்போல வழங்கிவரும் நூற்றொகை வழக்குகள் பண்டை இலக்கியச் செல்வங்களைக் காப்பாற்றிவைக்கும் நோக்குடன் அமைந்தனவே. சங்க நூல்களைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் போன்றோர்க்கு நூற்சுவடிகளைத் தேடித் தொகுப்பதற்கும் இத்தொகை வழக்குகள் துணைபுரிந்தன என்பது தெரியவருகிறது. இவ்வாறாகக் காலந்தோறும் வெளிவரும் நூல்களைப் பற்றிய நூல் விவரத்தொகுப்புகள், நூல்களைப் பின்னையோர் போற்றிப் பேணுதற்கும் உறுதுணையாவனவாம்.

பாரத நாட்டு நூல் வழங்கு சட்டம்

நமது பாரத நாட்டில் நூல் விவரங்களை ஒருங்கே தொகுத்து நூலகவியல் முறைப்படி வெளியிடும் முயற்சி, நாடு விடுதலை பெற்றுப் பத்து ஆண்டுகளுக்குப் பின்பே மலரத் தொடங்கியது. அரசியலாரின் ஆதரவும் கண்காணிப்பும் இவ்வகைப் புத்தாக்கங்கள் நாளும் பொலிவுடன் வளர்வதற்குத் துணைநிற்கின்றன. பாரத நாட்டு அரசு பதினான்கு தேசிய மொழிகளிலும்[1] அச்சில் வெளிவரும் நூல்களையெல்லாம் ஒருங்கு தொகுக்கும் நோக்கத்தோடு நூலக வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. அதுதான் 1954ஆம் ஆண்டு இயற்றப் பட்ட 'அச்சு நூல்கள் — இதழ்களை வழங்கு சட்டம்' இச் சட்டம் 1956ஆம் ஆண்டு ஒருசில திருத்தங்களுடன் நடைமுறைக்கு வந்தது.[2]

தேசிய நூலகம் நூலடைவு செய்கிறது

அச்சு நூல்கள் இதழ்கள் வழங்கு சட்டத்தின்படி கல்கத்தாவிலுள்ள இந்திய தேசிய நூலகத்திற்கும் மற்றும் சென்னை, பம்பாய், டெல்லி

நகரங்களிலுள்ள தலைமை நூலகங்களுக்கும் நூல் வெளியீட்டாளர் தத்தம் வெளியீடுகளை அனுப்பிவைத்தல் வேண்டும். நூல்களை அவைகள் வெளியான 30 நாள்களுக்குள் நூல் வெளியிட்டோர் தம் செலவிலேயே அனுப்ப வேண்டும் என்று இச் சட்டம் வரையறுத்துள்ளது. உரிய காலத்தில் தேசிய நூலகங்களுக்கு நூல்களை அனுப்பாவிட்டால் அபராதம் விதிக்கவும் இச் சட்டம் வகை செய்துள்ளது. இதனால் அச்சு நூல்களும் இதழ்களும் மேற்குறித்த நூலகங்களில் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் மொழிவழியாகப் பொருள் அடைவுப்படி தொகுத்தும் வகுத்தும் நூல் விவரங்களை வெளியிட்டு வருவது இந்திய தேசிய நூலகமே.

இந்திய தேசிய நூல் விவரப் பட்டியல்

இந்திய தேசியப் பல்வேறு மொழியாளரும் பிறநாட்டவரும் பயன்படுத்தும் வகையில் தேசிய நூலகத்தார் தாம் வெளியிட்டுவரும் நூல் விவரப் பட்டியலை (The Indian National Bibliography) ரோமன் எழுத்தில் வெளியிட்டுவருகின்றனர். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 1957ஆம் ஆண்டு இறுதியிலிருந்து இத் தொகுப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஓராண்டு முடிந்ததும் ஆண்டுத் தொகுப்புகளும் வெளியிடப்படுகின்றன. 1958ஆம் ஆண்டு தொடங்கி இந்த ஆண்டுத் தொகுப்புகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.[3] இவற்றின் வாயிலாக ஒவ்வோர் ஆண்டும் நம் தமிழ் மொழியில் வெளிவரும் நூல்களைப் பற்றிய விவரங்களையும் நாம் தெரிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளோம்.

நூல் விவரப் பட்டியலின் தமிழ்ப் பகுதி

ரோமன் எழுத்தில் ஆண்டுத் தொகுப்புகள் வெளியிடுவதோடு ஒவ்வொரு மொழிவழி மாநில அரசுகளோடும் தேசிய நூலகம் தொடர்புகொண்டு, அந்தந்த மொழிகளிலும் ஆண்டுத் தொகுப்புகளை அந்தந்த அரசுகளின் சார்பில் வெளியிட்டு வருகின்றனர். இந்திய தேசிய நூல் விவரப் பட்டியலின் தமிழ்ப் பகுதியும் 1958ஆம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கின்றன.[4] ஆகவே, 1958ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அச்சில் வெளிவரும் தமிழ்நூல் விவரங்களை நாம் தமிழிலும் தெரிந்துகொள்ள இயலுகிறது.

நூலுரிமைப் பதிவுச் சட்டம்

1958ஆம் ஆண்டுக்கு முற்பட்டு வெளியான தமிழ் நூல்களை அறிவதற்குரிய கருவி நூல்கள் வேண்டுமல்லவா? பொதுவாக ஆராய்ந்து பார்த்தால், நம் நாட்டில் அச்சு நூல்களின் விவரங்களைப் பதிவு செய்யத் தொடங்கியதே 1867-ல் தான். ஏனெனில், அந்த ஆண்டிலேயே நூல் உரிமையாளர் தத்தம் உரிமையைப் பதிவுசெய்யும் சட்டத்தை (Books Registration Act, 1867-XXV) இந்திய அரசாங்கம் இயற்றியது. இதன்படி நூல் வெளியீட்டாளர் தம் உரிமையைப் பதிவு செய்யத்

தொடங்கினர். பதிவு செய்யப்படும் நூல்களின் பிரதிகளும் நூற்பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. நூற்பதிவாளர் பதிவு செய்யப் பெற்ற பலமொழி நூல்களையும் அவற்றைப் பற்றிய முக்கியமான குறிப்புகளையும் அரசிதழின் (Gazette) வாயிலாக முத்திங்களுக்கு ஒரு முறை வெளியிட்டு வரலாயினர்.

அரசிதழில் வெளிவரும் தமிழ் நூல் விவரம்

சென்னை மாநில அரசும் 1867ஆம் ஆண்டு மூன்றுவது காலாண்டுத் தொடக்கமாக அரசிதழின்வழிப் பதிவு நூல்களின் விவரக் குறிப்புகளை வெளியிட்டு வருகின்றது. அரசிதழின் வாயிலாக வெளிவரும் பதிவு செய்யப்பெற்ற தமிழ்நூல்களின் விவரங்கள் 1867ஆம் ஆண்டு முதற் கொண்டு தெரியவருகின்றன.

பதிவு செய்யப்பெற்ற நூல்களின் விவரங்களைக் கொண்ட முத்திங்கள் அரசிதழ் வெளியீடும் ரோமன் எழுத்திலேயே அமைந்தது. முதலில் ஒரே தொகுப்பாக — கலவையாய்ப் பலமொழி நூற் குறிப்புகளையும் வெளியிடத் தொடங்கி, நாளடைவில் பல்வேறு வளர்ச்சி நிலையை அது கண்டுள்ளது. மொழிவழிப் பாகுபாடும் பொருள்வழிப் பாகுபாடும் பெற்றுப் பின்னர் இன்றைய நூல் விவரத் தொகுப்புகளுக்கு ஒரு முன்னேடி நிலையில் இத் தொகுப்புகள் அமைவனவாயின.

1900-ஆண்டு தொடங்கி நூற்பெயர்களை ரோமன் எழுத்தில் தந்ததோடு அந்தந்த மொழிகளுக்குரிய எழுத்துகளிலும் அமைக்கலாயினர். இதனுல் ரோமன் எழுத்தில் நூற்பெயர்கள் தவருகப் படிக்கப்படும் நிலை தவிர்ந்தது. மேலும், இந்த வளர்ச்சி நிலையில் பின்வரும் விவரங்கள் அதில் தரப்பட்டிருத்தல் காணலாம். நூலின் தலைப்பு, நூல் அச்சிடப்பெற்ற மொழி, நூலாசிரியர், மொழிபெயர்ப்பாசிரியர், பதிப்பாசிரியர் விவரங்கள், நூற்பொருள், பதிப்பித்த அச்சகம், பதிப்பித்தோர், வெளியீட்டாளர், அச்சிட்டு வெளிவந்த தேதி, புத்தகத்தின் பக்கங்கள், அதன் வடிவம், அட்சிட்ட படிகளின் எண்ணிக்கை, உரிமையாளர் பெயர், முகவரி, நூலைப் பற்றிய சிறு விளக்கம். இத்தனை செய்திகளும் நூல்களை ஆராய்வார்க்கு மிகவும் வேண்டுவனவே.

தமிழ் நூல் விவர அட்டவணை

பலமொழி நூல்களோடு தமிழ் நூல் விவரங்களும் அரசிதழில் கலந்திருக்கின்ற காரணத்தால் தமிழ்பற்றிய செய்திகளைத் தனிப்பட அறிய வாய்ப்பில்லை; தவிரவும், அவை ஆங்கிலத்திலேயே அமைந்து யாவரும் எளிதில் அறியும் நிலையிலும் இல்லை. இக்குறைகளை நீக்கி நூலின் அரசிதழ்ப் பதிவு விவரங்களையும் அவற்றிற்குரிய நூற்படிகளையும் ஒப்பு நோக்கி, நூல் விவரங்களை முறைப்பட வெளியிட்டுவர, நமது தமிழக அரசு வாய்ப்பு வசதிகளை நல்கியுள்ளது. அரசினரின் ஆதரவில் தொகுக்கப்பெற்று அச்சில் வெளிவந்துகொண்டிருப்பனவே

தமிழ் நூல் விவர அட்டவணைகள். இவற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் இனி நோக்குவோம்.

மொழிவழி இராச்சியமும் வட்டார மொழி வளர்ச்சியும்

நம் நாடு விடுதலை பெற்றபின், தேசிய மொழிகளை எல்லா வகையிலும் வளமுறச் செய்யவேண்டும் என்னும் நோக்கம் எங்கும் எழுச்சி பெற்றது. அதிலும் சிறப்பாக மொழிவழி இராச்சியங்கள் பிரிக்கப் பட்ட பின்னர், இவ்வுணர்வு மிகவும் கிளர்ந்து விளங்கியது. அரசியலாரும் தத்தம் இராச்சியத்தின் வட்டாரமொழிகளை வளர்ப்பதற்குப் பல்வேறு வகையான ஆக்கப்பணிகளைத் திட்டமிட்டுச் செய்துவரலாயினர். தனிப்பட்ட கழகங்களும், கல்வி நிலையங்களும், அறநிலையங்களும் தத்தமக்கு இயன்ற வகையில் மொழியாக்கப்பணிகளைச் செய்ய முன்வந்துள்ளன.

ஆட்சிமொழி பயிற்றுமொழிகளில் தமிழுக்குத் தனியிடம்

மொழிவழி இராச்சியம் பகுக்கப்பட்ட 1956-ஆம் ஆண்டு நமது தமிழகமும் அன்று சென்னை இராச்சியம் என்னும் பெயரைப் பெற்றது.[5] நம் தமிழக மக்களின் வழக்குமொழியான தமிழ்மொழியை ஆட்சிமொழியாகவும் கல்வித்துறையில் பயிற்றுமொழியாகவும் பயன் படுத்த அரசு முன்வந்தது. ஆட்சிமொழிச் சட்டம் தமிழக அரசால் 1956-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது (Madras Official Language Act—1956). இச்சட்டத்தின் குறிக்கோள் அரசின் பல்துறை அலுவலக்ங்களும் படிப்படியாகத் தமிழிலேயே தங்கள் கடிதப் போக்குவரத்து களையும் ஆணைகளையும் எழுதவேண்டும் என்பதாகும்.

ஆட்சித் தமிழ் வளர்ச்சி

1959-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் தைத்திங்கள் தொடக்கம் முதல் ஆட்சிமொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இன்றோ இம் முயற்சி படிப்படியாக வளர்ந்து தலைமைச் செயலகம் வரைக்கும் எட்டி விட்டது. முற்றும் தமிழையே ஆட்சி இயக்கங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்னும் நிலை இன்னும் வாராவிடினும் அத்திசை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

ஆட்சிமொழியாக்கத்தின் பொருட்டுத் தமிழக அரசு முன்பு செய்து வந்தனவும் இப்பொழுது செய்துவருவனவுமான பணிகள் பல இதன் பல்வேறு விளைவுகளுள் 'ஆட்சிச்சொல் அகராதி' ஒன்று வெளிவந் திருப்பது இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தகும். வேறுசிலரும் இத் துறைக்கான நூல்கள் சிலவற்றை ஆக்கித் தந்துள்ளனர். சிறப்பாக, திரு. கீ. இராமலிங்கனாரின் 'ஆட்சித்துறைத் தமிழ்'. (1968), திரு. கோ. முத்துப்பிள்ளையவர்களின் 'அரியணையில் அழகு தமிழ்' (1973) என்பவை குறிப்பிடத்தக்கனவாகும்.

பயிற்றுமொழியும் தமிழ் வளர்ச்சியும்

கல்லூரிகளில் பயிற்றுமொழியாகவும் தமிழை நடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சியும் அரசினர் ஆதரவில் புத்தாக்கம் பெற்றுள்ளது. இதன் விளைவாகக் கல்லூரிகளுக்கான நூல்களை ஆக்கும் சிறப்புப்பணியும் தோன்றத் தொடங்கியது. 1960-ஆம் ஆண்டில்தான் கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழியாக இடம்பெறத் தொடங்கியது. முதன் முதலாகக் கோயமுத்தூர் அரசினர் கலைக்கல்லூரியில் தொடங்கிய இம்முயற்சி படிப்படியாக வளர்ந்து, இப்பொழுது எல்லாக் கல்லூரிகளுக்கும் பரவியுள்ளது. தொடக்கத்தில் முதுகலை வகுப்பில் தான் — பி. ஏ. பட்டப்படிப்பு வகுப்பில்தான் — கலைப்பாடங்களைத் தமிழில் பயிற்றுவித்தனர். 1969-ஆம் ஆண்டு புகுமுக வகுப்பிற்கும் (Pre - University Classes) தமிழ் பயிற்றுமொழியாய், உயர்தரப் பள்ளிக்கும் கல்லூரிக்கும் இடையிலிருந்து சிறு இடையறவும் நீங்கியது. 1969-ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கத் தொடங்கியுள்ளனர். கல்லூரிப் பேராசிரியர்களும் பிறரும் கலை, அறிவியல் பாடநூல் பலவற்றை ஆக்கியுள்ளனர். பாடங்களைத் தமிழில் பயிற்றுவிப்பதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் பயிற்சி வகுப்புகளை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

தொடக்க காலத்தில் கல்லூரிப் பாடநூற் குழுவினரால் பட்டப் படிப்பிற்கேற்ற நூல்கள் வெளியிடப் பெற்றன. இவர்களின் முயற்சியால் வெளிவந்தவை 35 நூல்கள். பின்னர் 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற'த்தின் வழி கல்லூரிகளுக்கான நூல்கள் பல வெளிவந்தன. இப்பொழுதோ, தமிழ்நாட்டு அரசு நிறுவியுள்ள 'தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம்' பற்பல நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. 1973-ஆம் ஆண்டு ஜனவரியில் இந் நிறுவனம் வெளியிட்டுள்ள பாடநூற் பட்டியலைப் பார்ப்போமாயின், 450 நூல்கள் வெளிவந்திருப்பது தெரியவரும். மேலும், 50 நூல்கள் அச்சிலிருப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஐந்நூறு நூல்களுக்குமேல் கலை, அறிவியல் நூல்களை இந் நிறுவனம் தந்துவிடுதல் கூடும்[6]. இத்தகைய நூற் பெருக்கம் கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழியானதன் விளைவு என்பது கருதற்பாலது.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

ஆட்சி மொழி வளர்ச்சியையும் கல்லூரிகளில் பயிற்றுமொழி ஆக்கத்தையும் செயல் முறைப்படுத்துவதற்காகத் 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்' (Tamil Development and Research Council) என்னும் ஓர் அமைப்பைத் தலைமைச் செயலகத்தின் கல்வித்துறையில் ஓர் உறுப்பாக 1958-ஆம் ஆண்டு அரசினர் அமைத்தனர். இம்மன்றமே ஆட்சிமொழியாக்கம், கலைச்சொல் தொகுப்பு, கல்லூரிகளுக்கான பாடநூல் வெளியீடு ஆகியவற்றிற்கான வழிவகைகளை வகுத்து

முதற்கண் செயற்படுத்தத் தொடங்கியது. 1965-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில், இம் மன்றத்தையும் ஆட்சி மொழி அலுவலகத்தையும் தன்னுட்கொண்டு, 'தமிழ் வளர்ச்சித் துறை' (Tamil Development Department) தனியாகத் தோற்றுவிக்கப் பெற்றுள்ளது. தனி இயக்குநரின்கீழ்த் தமிழ் வளர்ச்சிப் பணிகள் இத்துறை வாயிலாக மேலும் மேலும் வளர்ந்தோங்கி வருகிறது.

பண்டுவந்த பல துறை நூல்கள்

தமிழிலே புது நூல்களை ஆக்குவார்க்குத் துணைசெய்யும் வகையில் ஏற்கெனவே தமிழில் அச்சான கலைநூல், அறிவு நூல் முதலியவற்றின் விவரங்களைத் திரட்டும் பணியைத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் சிறப்புப் பணியாகக் கொண்டது. சென்னை மாநிலத்தில் முன்பு அச்சில் வெளியிடப்பெற்ற நூல்களுக்கு விவர அட்டவணைகளைத் தொகுப்பதற்கான முயற்சிகளில் அது ஈடுபட்டது.

தமிழ் நூல் விவர அட்டவணை அலுவலகம் :

தமிழ் நூல் விவரங்களைத் தொகுத்து வெளியிடத் தனியாக ஓர் அலுவலகப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டது. இது 1960ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல்நாள் தொடக்கமாகப் பணிபுரியத் தொடங்கியது. 1867ஆம் ஆண்டுப் புத்தகப் பதிவுச் சட்டப்படி (Books Registration Act, 1867-XXV) பதிவு செய்யப்பெற்ற தமிழ் நூலின் விவரங்களை நூலகவியல் முறையைத் தழுவித் தொகுக்கும் பணியை இவ்வலுவலகப் பிரிவு மேற்கொண்டது. 1867ஆம் ஆண்டு முதல் 1958-ல் இந்திய தேசிய நூலகம் வெளியிடத் தொடங்கிய 'இந்திய தேசிய நூல் விவரப் பட்டியல்' வரையில் — 1957ஆம் ஆண்டு முடிய — பதிவு செய்யப்பெற்ற தமிழ் நூல்களுக்கு விவர அட்டவணை தயாரிப்பதே இதன் குறிக்கோளாகும்.

தமிழ் நூல் விவர அட்டவணைக்கு அடிப்படை

பதிவு செய்யும்பொருட்டு நூற்பதிவாளருக்கு அனுப்பிவைத்த நூலின் பிரதிகள் தமிழக அரசின் ஆவணக் காப்பகத்தில்[7] சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பல நூற்படிகள் பல்வேறு சூழ்நிலைகளால் எப்படியோ மறைந்தும் விட்டன. அங்கே கிடைத்த வரையில் அச்சுப்படிகளை ஆதாரமாகவைத்துத் தமிழ் நூல் விவர அட்டவணையைத் தொகுத்துள்ளனர். மறைந்த நூல்களுக்குரிய விவரங்கள், அரசிதழ்க் குறிப்புகளை ஆதாரமாகக்கொண்டு தொகுக்கப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட நூல்களுக்கு ஒரு கால எல்லை அமைத்துக் கொண்டு, அந்தந்தக் காலப் பகுதியில் வெளிவந்த நூல் விவரங்களைத் தொகுதி தொகுதியாக வெளியிட்டு வருகின்றனர்.

அட்டவணைத் தொகுதிகள்

முதல் தொகுதி

ஒவ்வொரு தொகுதியும் ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்கங்களை அச்சில் கொண்டுள்ளன. எனவே, ஒவ்வொரு தொகுதியையும் பல பகுதிகளாகப் பகுத்து வெளியிட்டு வருகின்றனர். முதல் தொகுதியுள் 1867 முதல் 1900 வரை அச்சில் வெளிவந்த பதிவு நூல்களின் விவரங்கள் அடங்கியுள்ளன. இது ஐந்து பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று தொகுதிகள் இப்பொழுது ஆவணக் காப்பகத்திலிருந்து கிடைத்த நூல்களுக்கு உரியவை. இதில், தரப்பட்டுள்ள விவரங்கள் எல்லாம் நூலை முற்றும் பார்வையிட்டு எழுதப்பெற்றவை. இதனோடு அரசிதழ்க் குறிப்புகளும் ஒப்புநோக்கிக் கொள்ளப்பெற்றன. நான்காவது ஐந்தாவது பகுதிகள் இக்கால எல்லையில் பதிவு செய்யப் பெற்றும் நூற்படிகள் இல்லாமற் போனவற்றிற்கு உரியவை. இவற்றில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அரசிதழின் துணைகொண்டே தொகுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தொகுதி

இரண்டாம் தொகுதி 1901 முதல் 1910 வரையில் பதிவு செய்யப் பெற்ற தமிழ் நூல்களுக்கு உரியவை. இதில் மூன்று பகுதிகள் உள. முதலிரு பகுதிகள் கிடைத்த நூற்படிகளுக்கும், மூன்றும் பகுதி இப்பொழுது ஆவணக் காப்பகத்தில் கிட்டாத நூல்களுக்கும் உரியவை. இப்பொழுது 1910ஆம் ஆண்டுவரையில் நூல் விவரங்கள் முற்றும் அச்சில் வெளிவந்துவிட்டன.

மூன்றும் தொகுதி

1910ஆம் ஆண்டிற்குமேல் ஒவ்வோர் ஆண்டும் அச்சு நூல்கள் வரவரப் பெருகியே வருகின்றன. ஆதலால், 1911ஆம் ஆண்டு முதற் கொண்டு ஐந்தாண்டுக் கால எல்லைக்கு ஒரு தொகுதியாக வெளியிட முன்வந்துள்ளனர்.

1911 முதல் 1915 வரைக்கும் உரிய நூல்கள் மூன்றும் தொகுதியாக அச்சாகிவருகின்றன. இத் தொகுதியும் இரண்டாம் தொகுதி போலவே கிடைக்கப்பெறும் நூல்களுக்கு இருபகுதியும், கிடைக்கப் பெறாத நூல்களுக்கு ஒரு பகுதியுமாக மூன்று பகுதிகள் கொண்டுள்ளது. இத் தொகுதிக்குரிய அச்சுப் பணி நடைபெற்று இப்பொழுது நிறைவுறும் நிலையை எட்டியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஐந்தாண்டுத் தொகுதிகள்

இங்ஙனமே மேல்வரும் ஐந்தாண்டுக்காலப் பகுதிகளை எல்லையாகக் கொண்டு நூல் விவரங்கள் தொகுத்து அடைவு செய்து வரு

கின்றனர். 1916 முதல் 1925 வரை நான்கு ஐந்தாம் தொகுதிகள் அச்சகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஆறும் தொகுதிக்கான (1926-1930) விவரங்கள் தொகுக்கப்பட்டுத் தட்டச்சுப்படி செய்துள்ளனர். இப்பொழுது ஏழு, எட்டாம் தொகுதிகளுக்கான விவரங்களைத் (1931-1935 ; 1936-1940) தொகுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் நூல் விவர அட்டவணையில் பொருட்பாகுபாடு

தமிழ் நூல் விவர அட்டவணையில் இடம்பெறுபவை தமிழ் இலக்கிய—இலக்கண நூல்கள் மட்டுமல்ல. சமயவியல், கலையியல் முதலிய அனைத்துத் துறைகளிலும் வெளிவந்த நூல்கள் எல்லாம் இதில் இடம் பெறுகின்றன. இவையெல்லாம் நூலகவியல் முறைப்படி — டியூவி தசாம்ச முறைப் பாகுபாட்டு அடிப்படையில் அடைவு செய்யப்படுகின்றன. எனினும் கோலன் பகுப்பு முறையிலும் உரிய பொருட் குறிப்பு எண்களை ஒவ்வொரு நூலுக்கும் உரிய விவரம் முற்றுப் பெற்றதும் ஈற்றில் தந்துள்ளனர்.

நூல் விவரம் தரப்பட்டுள்ள முறை

ஒவ்வொரு பொருட் பாகுபாட்டிலும் நூல் விவரங்கள் தரப்பட்டுள்ள முறையைச் சிறிது நோக்குவோம். டியூவி எண்ணுடன் பொருளும் ஒவ்வொரு பொருட் கூறுகளின் முதலிலும் இடம் பெறுகின்றன. அடுத்து, அந்தந்தப் பொருள் பற்றி வந்துள்ள நூல்களின் ஆசிரியர் பெயர் அடைவில் அவரவர் செய்த நூல் விவரங்கள் காணப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு நூலின் முன்னரும் அதனதன் ஆசிரியர் பெயர் அமையும். ஏதாகிலும் ஒரு நூலின் ஆசிரியர் பெயர் தெரியாவிட்டால் அந்த நூலின் பெயரையே ஆசிரியர் பெயர்போலக் கொண்டு அடைவு செய்யும் நூலகவியல் மரபினை இவ்வட்டவணையும் தழுவியுள்ளது.

நூல் விவரங்கள்

ஒவ்வொரு நூலின் பெயரையும் அடுத்து, தனிப்பத்தியாகப் பின்வரும் விவரங்கள் தரப்பட்டுள்ளன. பதிப்பாசிரியர் பதிப்பக விவரம், நூல் வெளியிட்ட ஊர்ப்பெயர், நூல் வெளியிடப்பெற்ற ஆண்டு, நூலின் உள்ளடக்கத்தைக் குறிக்கும் பக்கங்கள், நூலின் வடிவ அளவு, நூலின் கட்டுமானத் தன்மை, விலை ஆகிய விவரங்கள் தரப்பட்டிருக்கும். மற்றும் நூலுள் படங்கள் இடம்பெறின் அவை பற்றிய குறிப்பும், நூல் வெளியீட்டு வரிசை எண் தெரியவந்தால் அதுவும் தரப்படும். இறுதியாக நூலின் பொருளைச் சுருங்க உரைக்கும் அறிமுகக் குறிப்பும் காணப்படும். இவையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அடைவே தொடர்பாகத் தரும் நிலையினையே நூல் விவர அட்டவணைகளில் காண்கிறோம். இவற்றிடையே உள்ள பாகுபாட்டை அரைப்புள்ளி முற்றுப்புள்ளி என்னும் குறியீடுகளே காட்டி நிற்கும். இவ்வகைப் பொது இயல்புகளைத் தமிழ்நூல் விவர அட்டவணையும் கொண்

டுள்ளது. ஆனால், எல்லா விவரங்களையும் பிரித்தறியும் வகையில் பதிப்பாசிரியர், ஆண்டு முதலிய எல்லாவற்றிற்கும் தனிக் குறிப்பு எண்கள் தந்திருப்பது இதன் சிறப்புப் பண்பாகும். இந்நூல் விவர அட்டவணை, i முதல் viii எண் குறிப்புகளில் இக்குறிப்புகளை நிரல்பட, விளக்கமாகத் தருகிறது.

தொடர் எண் தரும் புது முறை

இந் நூலட்டவணையில் இடம்பெற்றுள்ள நூல்களுக்குத் தொடர் எண் தரப்பட்டிருப்பதும் இந்த அட்டவணையில் ஒரு புதுமையாகும். இதனால் ஒவ்வொரு தொகுதியிலும் அடங்கிய நூல்களின் எண்ணிக் கையை எளிதில் புரிந்துகொள்ளலாம். தவிரவும் அகராதிகளுக்குப் பயன்படுத்தவும் இத் தொடர் எண்கள் துணைசெய்கின்றன. பிற நூல் விவரப் பட்டியல்களில் அகரவரிசைப் பட்டியலில் குறிப்பு எண் ணைப் பொருட்பகுதி எண்களையே சுட்டி வருகின்றனர். இவ்வகை எண் குறிப்பை நூலக விஞ்ஞானம் அறிந்தோரே எளிதில் புரிந்து கொள்ளுதல் கூடும். ஏனையோர் இவ்வகைக் குறிப்பைக் கொண்டு தாம் விரும்பிய நூல்களைக் காணுதல் அரிதாம். மேலும், ஒரு பொருட் கூறுபாட்டில் பல நூல்கள் இருந்தால், அந்தந்தப் பொருட்பகுதியில் அகரவரிசையின் துணைகொண்டே உரிய நூலைக் காணுதல் வேண்டும். தொடர் எண் முறையிலோ ஒவ்வொரு நூலுக்கும் தனி எண் கிடைத்து விடுகிறது. இவ்வாறாக நூல் விவர அட்டவணையில் சில சிறு மாறு பாடுகளைப் — புதுமைகளைப் — புகுத்தி இத் தமிழ் நூல் விவர அட்ட வணை நூல் விவரங்களை எளிதில் கண்டு பயன்படுத்த வழிவகை செய்துள்ளது.

கூட்டு நூல்கள்

ஒரு நூலோடு வேறு சில நூல்களைச் சேர்த்தும் சிற்சில நூற் றொகுதிகள் வெளியிடப்படுகின்றன. இவை ஒரு பொருள் பற்றி யனவேயன்றி வெவ்வேறு பொருள் நிலையிலும் அமைவதுண்டு. ஆதலால், இவ்வகைக் கூட்டுநூல் தொகுப்புகளுள் உடன் இணைக்கப் பெற்ற நூல்கள் வேறுவேறு பொருட் பகுதிகளுக்கு உரியன வாகவும் இருக்கலாம். இவற்றை இத் தமிழ் நூல் விவர அட்டவணை ஏற்ற வகையில் அமைத்துள்ள திறமும் ஈண்டுச் சுட்டற்பாலது. ஒரு நூலோடு வேறு நூல்களும் உடனிருந்தால், முதல் நூலுக்குரிய பொருளிலேயே அந்நூல் அடைவு செய்யப்படுகிறது. இதற்குத்தான் தொடர் எண்ணும் உண்டு. இதனை அடுத்து இணைந்துள்ள நூல் களின் பெயர்கள் பகர வளைவுக்குள் தரப்படுகின்றன. பின், இணைந்த நூல்கள் அவ்வவற்றிற்குரிய பொருட்பகுதில் தனிப்பட தரப்பட் டுள்ளன. ஆனால், இத்தகு நூல்களுக்குத் தனித்தொடர் எண் தாராது எந்த ஒரு நூலுடன் சேர்ந்துள்ளதோ அதற்குரிய எண்ணைப் பார்க்க எனக் குறிப்புத் தரப்படுகிறது. இங்ஙனம் வரும் கூட்டுநூல்களின் எண்ணிக்கையும் பலவாம். இவற்றிற்கும் உரிய நூல் விவரங்கள்

தரப்படுவதோடு அகராதியிலும் இவை சேர்த்துத் தரப்படுகின்றன. இதனுல் தொடர் எண்ணுல் குறிக்கப்படும் நூற்ருெகை கூட்டுநூல் களினுல் மிகுவதும் பெறப்படும். இவ்வாருக எந்த ஒரு தனிநூலும் இந்த நூல் விவர அட்டவணையில் விவரம் இன்றி அமையவில்லை.

இலக்கிய நோக்கில் தமிழ் நூல்கள்

செய்யுள் இலக்கிய நூல்கள் டியூவி பொருட்பாகுபாட்டு முறையில் தமிழ்க் கவிதை என்னும் ஒரே பகுதியில்தான் இடம்பெறும். ஆனுல், இத் தமிழ்நூல் விவர அட்டவணைகள் அவற்றை இலக்கிய நோக்கில் அமைத்துத் தருகின்றன. தமிழிலக்கிய வரலாற்று அடிப்படையில் இந் நூல் விவர அட்டவணையில் நூல்கள் இடம்பெறுகின்றன. பாட்டு-தொகை பற்றிய இலக்கியம், பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம், திருமுறை இலக்கியம், திவ் வியப் பிரபந்தம், பிற்காலக் காவியங்கள், சிற்றிலக்கியங்களாகிய பிரபந்த வரிசை, திரட்டுநூல்கள் என்று இவ்வாறு தனித்தனிப் பாகு பாட்டில் பாட்டிலக்கியம் பகுத்துத் தரப்பட்டுள்ளன. பிரபந்த வரிசை யில் அகவல், அட்டகம், அந்தாதி என்று இவ்வாறு பிரபந்தங்களும் அகரவரிசையில் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனுல் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள பிரபந்த வகைகளை உணரலாகும். இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்களும் தனியிடம் பெறுகின்றன. ‘கதைப்பாட்டு’ என்னும் பகுதி நாட்டுப்புறச் செய்யுள் மரபில் வரும் அம்மானை பாட்டுப் போன்ற மக்கள் இலக்கிய வகையைக் கொண்டுள்ளது. கதை களுக்கும் நவீனங்களுக்கும் ஒரு தனிப்பகுதி உண்டு. தமிழ் உரைநடை நூல்கள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் என்னும் பகுதிகள் உரைநடை இலக்கிய வளர்ச்சியை ஆராயப்புகுவார்க்குப் பெருந்துணை புரிவன. நிகண்டு, இலக்கணம், அகராதி ஆகியவை அடங்கிய பகுதியும் மொழி இயல்பினை அறிவதற்கான கருவிநூல் களைத் தரும். இங்ஙனமாகக் காலந்தொறும் தமிழிக்கிய வரலாற்றினை ஆராயப்புகுவார்க்கு இத்தமிழ் நூல் விவர அட்டவணைகள் ஓர் அரும் பொருட் களஞ்சியம்.

நூற்ருெகை அகராதிகள்

ஒருவர் தாம் விரும்பும் பொருளையோ, நூலையோ, நூலாசிரியரை யோ நூற்ருெகைகளில் கண்டுகொள்வதற்கு அகரவரிசையில் (Indices) மிகமிக அவசியமாகும். பெரும்பாலும் நூற்ருெகைகளில் ஆசிரியர், தமிழாக்கியவர், பதிப்பித்தவர், உரையாசிரியர், நூல் சார் தொகுதி, நூலின் பொருள், தலைப்பு என்னும் குறிப்புகளை அகரவரிசைப்படுத்தித் தருவது மரபு. இவற்றிற்குரிய பொருட் குறிப்பு எண்களையும் உடன் தருவர். இந்த எண் குறிப்பினுல் உரிய பொருட்பகுதியை நோக்கி நூல் இருக்குமிடம் தெரிதல் வெண்டும்.

இத்தகைய அகர வரிசைகளிலும் இத் தமிழ்நூல் விவர அட்டவணை, யாவரும் எளிதில் பயன்படுத்தத் தக்கதொரு புதிய அமைப்பினை

அறிமுகப்படுத்துகிறது. இந்த அட்டவணையில் ஒவ்வொரு தொகுதிக்கும் பொருளகராதி, ஆசிரியர் அகரவரிசை, நூல் அகர வரிசை முதலியன எல்லாம் தனித்தனியாக அமைத்துத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொருளகராதி

நூல் விவர அட்டவணையின் ஒவ்வொரு தொகுதியுள்ளும் அமைந்த பொருள்கள் இப் பகுதியில் இடம் பெறுகின்றன. இவற்றிற்கு உரிய டியூவி தசாம்ச எண், தொடர் எண், பக்க எண் என்னும் மூவகை எண் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, இத்தொகுதிகளைப் பயன்படுத்துவோர் விருப்பம்போல் மூன்றனுள் எதனையேனும் துணை கொண்டு உரிய பொருட்பகுதியை நூலுள் கண்டு கொள்ளலாம்.

ஆசிரியர் அகரவரிசை

ஆசிரியர் அகர வரிசையில் ஆசிரியர் பெயர்களுக்குரிய பிற குறிப்புகள் இணைக்கப்பெறவில்லை. ஆனால், ஒரே பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர் வருமிடங்களில் மட்டும் வேறுபாடு உணர்த்த, தலைக்குறிப்பு எழுத்து முதலியவை உடன் தரப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஆசிரியர் பெயரையும் அடுத்து, அவ்வாசிரியர் செய்த நூல்களின் பெயர்கள் உரிய தொடர் எண் குறிப்புடன் தரப்பட்டுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் ஓர் ஆசிரியர் பெயரின்கீழ் வரும்பொழுது நூற் பெயர்கள் அகராதி அடைவில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகராதியில் ஆசிரியர் பெயர் தடித்த எழுத்திலும் நூற்பெயர் சிறிது உள்ளடக்கிச் சாதாரண எழுத்திலும் தரப்பட்டிருக்கின்றன.

நூல் அகர வரிசை

இதில் ஒவ்வொரு தொகுதியிலும் இடம்பெற்ற நூல்கள் அனைத்தும் தொடர் எண் குறிப்புடன் தரப்பட்டுள்ளன. அதோடு அந்தந்த நூலின் ஆசிரியர் பெயரும் நூற்பெயரை அடுத்துச் சிறிது உள்ளடக்கித் தரப் பட்டுள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவாராத நூல்கள் (பொருட் பகுதியில் ஆசிரியர் பெயர்போலக் கருதப்பெற்றவை) மட்டும் ஆசிரி யர் பெயரின்றி உரிய இடங்களில் காணப்படும். ஆகவே, நூல் அகர வரிசையில் நூலாசிரியரை உடன் அறியவும், ஆசிரியர் அகர வரிசை யில் ஓர் ஆசிரியரின் நூல்கள் அனைத்தையும் ஒருசேர அறியவும் இயலும். இத்தகைய வாய்ப்புகள் தமிழ்நூல் விவர அட்டவணையின் தனிச் சிறப்புகளாகும்[3].

தமிழ் நூல் விவர அட்டவணையில் வாராத நூல்கள்

இங்ஙனமாக இத் தமிழ் நூல் விவர அட்டவணைகள் 1867ஆம் ஆண்டு தொடங்கிச் சென்னை மாநிலத்தில் அச்சிடப்பெற்றுப் பதிவு செய்யப்பெற்ற அனைத்து நூல்களையும் அறிவிக்கும் அருந்துணைவர் களாக விளங்குகின்றன. என்றாலும், இவ்வாண்டுகளில் அச்சிடப்பெற்

றுப் பதிவு செய்யப்பெருமலும் சில பல நூல்கள் விடுபட்டிருக்கலாம். பிரஞ்சு ஆட்சிப் பகுதியாயிருந்த புதுச்சேரி முதலிய இடங்களிலும் பாரத நாட்டின் பிற பகுதிகளிலும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்களும் இதில் இடம்பெற வழியில்லை. இலங்கை, யாழ்ப்பாணத்திலும் பர்மா, மலேயா முதலிய கீழை நாடுகளிலும் இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய மேலை நாடுகளிலும் அச்சான நூல்களும் இவ்வட்டவணைகளில் சேரா. எனவே, இன்னோரன்ன வெளியிடங்களில் உள்ள தமிழ் நூல்களை அந்தந்த நாட்டுத் தலைமை நூலகங்களோடும் மற்றும் பிறநாட்டு அறிஞர் பெருமக்களோடும் தொடர்பு கொண்டு அறிதல் வேண்டும். ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாப்பதுபோல் இத்தகைய பழைய அச்சு நூல்களையும் தேடித் தொகுத்துப் போற்ற வேண்டுவது மிகமிக விரைந்து செய்ய வேண்டிய பணிகளுள் ஒன்ருகக் கருதத்தகும்.

1867-க்கு முற்பட்ட அச்சு நூல் விவரங்கள்

பதிவு செய்யப்பெருத அச்சுப் புத்தகங்களையும், பதிவு செய்யப் பெற்ற நூல்களுள் ஆவணக் காப்பகத்தில் இல்லாதவற்றையும் பொது நூலகங்களிலும் புலவர் பெருமக்களின் தனி நூலகங்களிலும் தேடிப் பெற்றுப் போற்ற வேண்டும். கிடைத்தற்குரிய சிறப்புடைய அச்சு நூல்களை மறு பதிப்பிடுதல் வேண்டும். இங்ஙனமே கி. பி. 1867-க்கு முற்பட்ட அச்சு நூற்படிகளையும் தேடிப்பெற்றுப் போற்ற வேண்டும்.

நூல்களைத் தேடித் தொகுக்கும் ஆர்வமுடைய அறிஞர் பெரு மக்கள் சிலர் சென்ற நூற்றுண்டில் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவர் ஜான்மர்டாக் என்னும் பெரியார் (1819—1904). இவர் தாம் தொகுத்த தமிழ் நூல் அச்சுபடிகளுக்கு ஓர் அட்டவணையைச் செவ்விய முறையில் செய்து 1865-ஆம் ஆண்டு அச்சிட்டு வழங்கினுர்[9]. இவரால் தோற்றுவிக்கப்பெற்ற சென்னைக் கிறித்தவ இலக்கிய சங்கத்தின்வழி இந் நூல் வெளியிடப்பட்டது.

ஜான்மர்டாக் தமது தமிழ் அச்சுநூல் விவர அட்டவணையைப் பொருட் பாகுபாடு செய்து நூல்களுக்குரிய விளக்கங்களுடன் நன்கு அமைத்துள்ளார். இந் நூலுக்கு அவர் எழுதியுள்ள 101 பக்கங்கள் கொண்ட முன்னுரை பெரிதும் பாராட்டத்தக்கதொன்று. தமிழ்மொழி இலக்கிய வரலாறுகளுடன் அச்சு நூல்களின் வரலாற்றையும் கொண்ட சிறந்ததொரு வரலாற்று முன்னுரையாகும். இவர் தொகுத் தளித்த தமிழ் நூல் விவர அட்டவணை நூல், 1865-க்கு முற்பட்ட தமிழ் நூல்களை அறிவிக்கும் அட்டவணைகளுக்குள் எல்லாம் தனியிடம் பெற்று விளங்குகிறது.

மர்டாக் நூலட்டவணையின் மறுபதிப்பு

இத்தகைய தமிழ் நூல் வரலாற்றுத் தொகுதி நூறுண்டுகளுக்கு மேலாக அச்சிடப்பெருமல் பழைய படிகள் மிகமிக அருகிச் சில

இடங்களில் மட்டும் கிடைக்கும் ஒரு புதைபொருள்போல் இருந்தது. இந்த நூலின் மறுபதிப்பு வந்தாலன்றி 1867-ஆம் ஆண்டு தொடக்கமாகச் செய்துவரும் தமிழ் நூல் விவர அட்டவணை நிறைவுபெறுதன்றோ? எனவே, இதனை மறுபதிப்பிடும் பணியைத் தமிழக அரசின் அனுமதி பெற்று, யான் தமிழ் நூல் விவர அட்டவணைப் பதிப்பாசிரியனயிருந்தபோது முற்றுவித்தேன். 103 ஆண்டுகளுக்குப்பின் 1868-ஆம் ஆண்டு மர்டாக் நூலட்டவணையின் மறுபதிப்பினைத் தமிழக அரசு அறிஞர் உலகுக்கு அளித்துள்ளது. இந்த மறுபதிப்பு முற்பதிப்பிலிருந்து சிறிதும் மாறுதலின்றி அப்படியே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மர்டாக் நூலட்டவணைச் சேர்க்கைகள்

கிரௌவுன் வடிவில் 387 பக்கங்கள் (ci+287) கொண்ட இம் முதற் பதிப்பு இம் மறுபதிப்பில் டெமி வடிவில் 662 பக்கங்களாக வளர்ந்துள்ளது. இந்தப் பழஞ்சுவடியுடன் மேலும் சென்ற நூற்றாண்டு அச்சு நூல் முதலியவற்றின் விவரம் தரும் வேறு நூல் செய்திகளையும் பிற்சேர்க்கைகளாக இணைத்ததன் விளைவே இந்தப் பெருக்கம்.

முதல் பிற்சேர்க்கை மர்டாக் நூலுள் தரப்பட்டுள்ள சில நூல்களைப்பற்றிப் பிரிட்டிஷ் மியூஷியம் காட்லாக்கில் காணும் அதிகப்படியான விவரங்களைக் கொண்டுள்ளது. எங்கெந்த நூல்களுக்கு இவ்வகைப் புது விவரங்கள் தரப்பட்டுள்ளன என்பது நூலகத்தே நூற்பெயர்களின் இறுதியில் இரண்டு உடுக்குறியிட்டுக் (Double Star marks) காட்டப்பட்டன.

அடுத்துவரும் இரண்டாம் பிற்சேர்க்கை பல்வேறு தமிழ் நூலட்டவணைக்குரிய முகவுரைகளின் தொகுப்புகளாகும். இவை தமிழ் நூற்றொகைபற்றி (Bibliography) நடைபெற்ற பற்பல முயற்சிகளையும் அவற்றின் தன்மைகளையும் அறிய வகை செய்கின்றன. மூன்றாவது பிற்சேர்க்கை தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையில் நடைபெற்று வரும் தமிழ் நூல் விவர அட்டவணை (Madras State Bibliography) பற்றிய மதிப்புரையாகும்.

'தமிழ் இலக்கிய அகராதி' என அடுத்துவரும் நான்காவது பிற்சேர்க்கை, 1896-ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியாரால் தொகுத்தளிக்கப் பெற்றதாகும். இதனால் தமிழ் நூல்களுள் இன்றியமையாது அறியவேண்டுவனவாகிய நூல்கள் எவையெவை என்பது தெரியவரும்.

நூற்பெயர் அகராதியில் புதிய சேர்க்கைப் பகுதி நூல்களும் இணைத்துத் தரப்பட்டுள்ளன. 'ஆசிரியர் அகரவரிசை' இப் பதிப்பில் புதிதாகத் தொகுத்து இணைக்கப்பெற்றது. நூலிறுதியில் பொருளகராதியும் இடம் பெற்றுள்ளது.

இந் நூலின் இறுதியில் உள்ள நூற்றொகை பிரிட்டிஷ் மியூஷியம் நூலட்டவணையின் துணைகொண்டு அமைக்கப்பெற்றது. இதன் வாயிலாகச் சென்னை மாநிலத்திற்கு வெளியிடங்களில் முக்கியமாக இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் புதுச்சேரி, பங்களூர், பம்பாய் முதலிய இந்தியாவின் பிற இடங்களிலும் பதிப்பிக்கப்பெற்ற நூல் விவரங்களும் தெரியவருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிய, 1900 வரை வெளியான அச்சுநூல் விவரங்கள் இத் தொகுப்பில் தரப்பட்டுள்ளன. இங்ஙனமாக, மர்டாக் நூலட்டவணையின் புதிய பதிப்பின் சேர்க்கைகளால் தெரியவரும் தமிழ் நூல்பற்றிய செய்திகளும் பலவாகும்.

பழஞ்சுவடிகளின் விவரம் தரும் பிற அட்டவணைகள்

பதினெட்டாம் நூற்றாண்டில் மெக்கன்ஸி என்பார் இந்தியாவில் பல இடங்களிலிருந்தும் சுவடிகள், கல்வெட்டுப் படிகள், வரலாற்றேடுகள் முதலியவற்றைத் தக்கவர்களைக்கொண்டு தொகுப்பித்தார். இவருடைய தொகுப்புகள் மொழி வரலாற்றுக்கும் நாட்டு வரலாற்றுக்கும் பயன்படத்தக்க பல செய்திகளைக் கொண்டிருந்தன. இவற்றின் விவரங்களை எச். எச். வில்ஸன் என்பார் 1828-ல் நூல்வடிவில் தொகுத்துத் தந்துள்ளார்[10]. மேலும், தமிழ் வரலாற்றுச் சுவடிகளின் தொகுப்பை 1835-ல் இரு தொகுதிகளாக அச்சிட்டு வழங்கியுள்ளார்[11]. இப் பெருந்தொகுதிகள் தெள்ளிய வரலாற்றுச் செய்திகள் பலவற்றை அறிவிக்கும் அரிய கருவூலங்களாகவுள்ளன. மற்றும், கிழக்கிந்தியா ஹவுஸிலும் அக்கால அச்சு நூற்படிகள் முதலியன தொகுத்துவைக்கப்பட்டிருந்தன. மேனாட்டவராகிய பிரவுன் என்பாரும் தமக்குக் கிட்டிய நூற்படிகளைத் தொகுத்து வைத்திருந்தார். இவற்றையெல்லாம் ஒருங்கு தொகுத்துச் சுவடி விவரங்களை வில்லியம் டெய்லர் பாதிரியார் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். இவை முறையே 1857, 1860, 1862-ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளன[12]. இவற்றுள் முதல் தொகுதியிலும் மூன்றும் தொகுதியிலுமே தமிழ்நூல் விவரங்கள் உள்ளன.

ஆவணக்காப்பக அட்டவணைகள்

சென்னை மாநிலத்தில் பதிவுசெய்யப் பெற்ற அனைத்து மொழி நூல்களின் விவரங்களையும் 1867-ஆம் ஆண்டு முதல் 1889-ஆம் ஆண்டு வரை ஒரு தொகுப்பாக நூற்பதிவாளர் வெளியிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து சென்னை ஆவணக்களரி நிலையம் (Madras Record office) மேலும் பல தொகுதிகளை வெளியிட்டு வருகின்றது. இதுவரை நான்கு தொகுதிகள் (1890—1920) வெளிவந்துள்ளன[13]. இவற்றின் வாயிலாகவும் பதிவு செய்யப்பெற்ற தமிழ் நூல்கள் எவை என்பது தெரியவரும். ஆனால், இத் தொகுதிகளில், நூல், நூலாசிரியர், பதிப்பகம், பதிப்பித்த ஆண்டு தவிர வேறு செய்திகள் ஒன்றும் தெரிவதற்கில்லை. இங்ஙனமாக இந் நிலையம் மேலும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தொகுதி

யாகப் பதிவுசெய்யப்பட்ட நூல் விவரங்களைத் தொகுத்து அச்சிடும் பணியை மேற்கொண்டுள்ளது.

கல்வித்துறை வெளியிட்ட நூற்றொகை

1948இல் நிறைவேறிய சென்னைப் பொதுநூலகச் சட்ட விதி முறைகளின் சார்பில் தமிழகக் கல்வித்துறையினர் ஒருசில நூற்றொகைகள் கொண்டுவந்துள்ளனர். 'தமிழ்நாட்டு நூற்றொகை'[14] என்னும் பெயரில் 1951ஆம் ஆண்டில் வெளியான தமிழ் நூல்களின் விவரம் வெளிவந்துள்ளது. பின், 1954ஆம் ஆண்டுத் தமிழ் நூல்களுக்குச் சில பகுதிகள் வெளிவந்தன. இவை ஆவணக் காப்பக வெளியீடுகளைப் போலவே விவரங்களைத் தமிழில் தருகின்றன. ஆனால், கோலன் பகுப்பு நூலகவியல் முறைப்படி இது பாகுபாடு செய்யப் பட்டுள்ளது குறிப்பிடத்தகும். தொடர்ச்சியின்றி இம் முயற்சி இடையறவுபட்டுள்ளது.

கன்னிமாராப் பொதுநூலக நூற்றொகை

ஆனால், கன்னிமாராப் பொது நூலகம் 1964ஆம் ஆண்டு முதல் மாதத் தொகுப்பும் ஆண்டுத் தொகுப்புமாகத் தமிழ் நூற்றொகையை மையொற்றுப்படி செய்து தமிழக நூலகங்களுக்கு வழங்கி வருகின்றனர். ஆனால், இவை அச்சுப்படிகளாக யாவரும் பெற்றுக்கொள்ளும் வகையில் வெளியிடப்படவில்லை என்றாலும், நூலகங்களில் இத் தொகுப்பு ஆய்வாளர்க்குக் கிடைக்கும்.

குழந்தைகள் நூற்றொகை

பொது நூற்றொகைகள் ஒருபாலாகச் சிறப்பு வகையில் அமைந்த சில தனி நூற்றொகைகளும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. அவற்றுள், ஒன்று தமிழக நூலகத்துறை முன்னின்று இயக்கிய 'குழந்தைகள் நூற்றொகை.' கன்னிமாராப் பொதுநூலகத்திற்கு நூல் வழங்கு சட்டப்படிவரும் தமிழ் நூல்களுள் குழந்தைகளுக்கான நூல்களைத் தனியாகப் பிரித்து, 1963ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டிற்கும் தனித் தொகுதிகளும் வெளியிட்டு வருகின்றனர். இது கல்வித் துறைக்குப் பெரிதும் துணை செய்வதாகும்[15]. ஆனால், இதுவும் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் வெளிவருவதில்லை.

நூலக நூற்றொகை

நூலக நூற்றொகைகளுள் முதன்மையாகச் சுட்டத்தக்கவை இலண்டன்மா நகரிலுள்ள ஆங்கில நாட்டுப் பொருட்காட்சிக் கூடத்தில் உள்ள தமிழ் நூல்களுக்கு அச்சில் வெளிவந்துள்ள நூற்றொகை. இது ஜி. யூ. போப் பாதிரியாரால் தொடங்கப்பெற்று, பின்னர் அப் பொருட் காட்சிக் கூடத்திலே கீழ்த்திசைப் பதிப்பு நூல்களுக்கும், எழுத்துச் சுவடிகளுக்கும் காப்பாளராகப் பணிபுரிந்த எல்.டி. பார்னட் என்பவ

ரால் முற்றுவிக்கப்பெற்றது. 1909ஆம் ஆண்டு வெளிவந்த இந் நூலட்டவணையில்[16] இரு நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட அச்சு நூல் விவரம் முதல் அதுவரை அந் நூலகத்தில் தொகுக்கப்பெற்ற நூல் களுக்குரிய விவரங்களைத் தெரிவிக்கிறது. பின்னர், 1931ஆம் ஆண்டு பார்னட் இதற்கு ஓர் இணைப்புத் தொகுதியும்[17] வெளியிட்டுள்ளார்.

சுவடி நூற்றொகை

சென்ற நூற்றுண்டிலேயே பழஞ்சுவடிகளைத் திரட்டிப் பாதுகாப்ப தற்கு நமது மாநில அரசு கிழக்கியல் சுவடி நிலையம் (Oriental Manuscript Library) ஒன்றையும் நிறுவியுள்ளது. மக்கன்ஸியின் சுவடித் தொகுப்புகளைக்கொண்டு தொடங்கப்பெற்ற இந்நூலகத்தில் அச்சில் வெளி வந்தனவும் வாராதனவுமான பல சுவடிகள் சேமித்துவைக்கப் பட்டுள்ளன. இந் நிலையம் இங்குள்ள தமிழ்ச் சுவடிகளுக்கு அவ்வப் போது பல விவரத் தொகுப்புகளை வெளியிட்டு வந்துள்ளது[18].

அடுத்தபடியாக, தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையம் வெளி யிட்டுள்ள தமிழ்ச்சுவடி நூற்றொகைகள் கருதத்தக்கவை. இவற்றைத் தொகுத்து அளித்தவர் முன்பு திருவையாற்று அரசர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக விளங்கிய எல். உலகநாத பிள்ளையவர்களாவர். இவர் களால் தொகுத்து வெளியிடப்பட்ட சுவடி நூற்றொகைகள் மூன்று தொகுதிகளாக 1925—1926ஆம் ஆண்டுகளில் அச்சில் வெளிவந் துள்ளன. இவற்றில் சுவடி நூல்களுக்கு விரிவான விளக்கங்கள் தரப் பட்டிருத்தல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வகையில் மூன்றாவது குறிக்கத்தக்கது மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையச் சுவடிகளின் விளக்கம். தனி நிறுவனமாகத் திருவான்மியூரில் இப்பொழுது திகழும் இந்நூலகம் தங்கள் நிலையத்திலுள்ள சுவடி விளக்கங்களை இரு தொகுதிகளாக முறையே 1956, 1961ஆம் ஆண்டுகளில் வெளியிட்டுள்ளது. இவை முன்னர் வெளிவந்துள்ள சுவடி விளக்க நூல்களின் அமைப்பிலேயே தரப்பட்டுள்ளன. இவற்றால், அச்சில் வெளிவந்த, வாராத நூல்கள் பலவற்றில் விவரங்கள் தெரியவரும்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் போன்ற அமைப்புகளிலும், திருவாவடுதுறை, தருமபுரம், துறையூர், மேல சித்தாமூர் முதலிய இடங்களிலுள்ள மடங்களிலும் பழஞ்சுவடிகள் பல உள. எனினும், இங்கெல்லாம் அவற்றை வகைதொகை செய்து, ஆய்வாளர்க்குப் பயன்படும் வகையில் நூற்றொகுதிகளாக வெளியிடும் முயற்சி நடைபெறவில்லை.

இலக்கிய அகராதி

தமிழ் நூற்றொகைகள், சுவடி நூற்றொகைகள், மற்றும் இலக்கிய வரலாற்று நூல்கள் முதலியவற்றைத் துணைகொண்டு ஆசிரியர்

ந. சி. கந்தையாப்பிள்ளை 'தமிழ்ப்புலவர் அகராதி', 'தமிழ் இலக்கிய அகராதி' என இரு தொகுப்புகளை முறையே 1952, 1953ஆம் ஆண்டுகளில் வெளியிட்டுள்ளார்.[19] இவர் தமது முன்னுரையில் தமக்கு எந்தெந்த நூற்றொகைகள் உதவியாயிருந்தன என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். இவர் அமைத்த பாங்கிலேயே 'தமிழ் இலக்கிய அகராதி' ஒன்று 1895இல் திருமணம் செல்வக் கேசவராய முதலியாரால், 'தமிழும் தமிழரும்' எனத் தாம் வெளியிட்ட நூலின் பிற் சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளது. இது, 'நூலும் நூலாசிரியரும்', 'நூலாசிரியரும் நூலும்' என இரு கூறாக அமைந்துள்ளது. இதனைப் பின்னாளில்; 'தமிழ் இலக்கிய அகராதி' வெளியிட்ட ந. சி. கந்தையாப் பிள்ளை தமது நூலுள் குறிப்பிடவில்லை. எனவே, அவர்தம் பார்வைக்கு இந் நூல் எட்டவில்லை என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. தமிழ் நூற்றொகைகளைத் துருவி முறைப்படப் பார்வையிட வேண்டியதன் இன்றியமையாமையையும் இது விளக்குகிறது.

தமிழ்ப்புலவர் வரலாறுகளை விரிவான முறையில் கருப்பக்கிளர் சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களைக்கொண்டு எழுதுவித்துப் பல தொகுதிகளாக திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றனர். விரிவான வரலாறு தெரியவரும் புலவர் வரலாறுகள் கொண்ட தொகுதிகளைத் 'தமிழ்ப் புலவர் வரிசை'[20] என்றும், சுருக்கமான வரலாறுகள் மட்டுமே கிடைக்கும் புலவர் வரலாறுகளை அகராதியடைவில் தொகுத்துத் 'தமிழ்ப்புலவர் அகரவரிசை' என்றும் அமைத்துள்ளனர். சமயாசாரியர்கள், ஆழ்வார்கள், சங்க நூற்புலவர்கள் முதலியோரின் வரலாறுகள் தனிநூல்களாக வந்திருப்பதனால் அவர்களுடைய வரலாறுகளை விடுத்து ஏனைய புலவர் வரலாறுகளே இத் தொகுதிகளில் தரப்பட்டுள்ளன. 1959இல் தொடங்கிய இவ்வரிசையின் முப்பதாம் புத்தகம் சென்ற ஆண்டில் (1972) வெளிவந்திருக்கிறது. 2634 புலவர் வரலாறுகளை இவை கொண்டுள்ளன.

இவர்களுடைய வெளியீட்டில் தமிழ்ப்புலவர் அகரவரிசையின் இரண்டாம் தொகுதியில் மூன்றாம் பகுதி 'தமிழ் நூல்களின் அகர வரிசை'யாகும். இதுபுலவர் வரிசைப் புத்தகங்களில் அவ்வப் புலவர்களின் படைப்புகளாகக் குறிக்கப்பட்ட நூல்களின் அகரவரிசைப் பட்டியலாகும். இங்ஙனமாகத் தமிழ் நூல்களையும் புலவர் பெருமக்களையும் அறிமுகபடுத்தும் வகையில் இப் புலவர் வரிசைத் தொகுதிகள் மேன்மேலும் வளர்ந்து வந்திருப்பது நாடு விடுதலை பெற்றபின் நிகழ்ந்துவரும் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணிகளுள் தனியாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சிறப்பு நூலடைவு

குறித்ததொரு நூலின் வரலாற்றை ஆராயப் புகுவார்க்கு அந்தந்த நூல் பற்றித் தொகுப்பட்ட சிறப்பு நூலமைவுகளும் வேண்டும்.

பதிப்பாசிரியர்களுள் ஒருசிலர் முந்திய பதிப்புகளைக் குறித்து இவ்வாருன சிறப்பு நூலடைவைத் தம் பதிப்புகளுள் இணைத்தும் உள்ளனர். எடுத்துக்காட்டாகச் சைவசித்தாந்த சமாஜத்தினர் வெளியிட்ட ' சங்க இலக்கியம் ' தொகுதியில் சங்கநூல் பதிப்பு விவரங்கள் அடைவே திரட்டித் தரப்பெற்றுள்ளமையைக் கூறலாம்[21].

திருவள்ளுவர் திருக்குறளுக்குச் சில தனி நூலடைவுகள் வந்துள்ளன. சில ஆண்டுகளுக்கு முன் (1968) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தாம் வெளியிட்ட 'திருவள்ளுவர் திருநாள்விழா மல'ரில் திருக்குறள் நூலடைவை ஒரு பகுதியாக அமைத்துத் தந்துள்ளனர். இதன் பின்னர், ஆங்கிலத்தில் திருக்குறள் நூலடைவு ஒன்றைத் திருமலை முத்துசாமி அவர்கள் வெளியிட்டுள்ளார்[22]. சென்ற ஆண்டு (1972) சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த முதலாவது அனைத்திந்தியத் திருக்குறள் கருத்தரங்கில், அப்பொழுது திருக்குறள் துறையில் பணிபுரிந்துவந்த திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள், ' திருக்குறள் நூலடைவு' ஒன்றை மையொற்றுப்படியாக அமைத்துத் தந்துள்ளார்கள். மேலும், திரு. க. த. திருநாவுக்கரசு அவர்களால் தொகுக்கப்பெற்ற 'தொல்காப்பிய நூலடைவு ' சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியிட்டு வரும் ' தமிழாய்வு ' முதலிதழில் இடம் பெற்றுள்ளது[23].

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இவ்வாண்டில் (1973) தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரத்திற்கு ' சிலப்பதிகார ஆய்வடங்கல் ' என்னும் பெயரில் ஒரு நூற்றொகையை வெளியிட்டுள்ளது[24]. தனி நூலடைவுகளுள் இதுவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதில் சிலப்பதிகார நூற்பதிப்புகள், சிலம்பு பற்றிய ஆய்வுநூல், கட்டுரை எழுதிய ஆசிரியர் அகரவரிசை, தலைப்புகளின் அகரவரிசை ஆகியவை தரப்பட்டுள்ளன. தலைப்புகளின் அகரவரிசையின் முதற்பகுதியில் தமிழ் நூல்களும், அடுத்த பகுதியில் தமிழில் வெளிவந்த கட்டுரைகளும், இறுதிப் பகுதியில் ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வகையான சிறப்பு நூலடைவுகளும் ஆய்வாளர்க்கு மிகமிக இன்றியமையாதன.

மகான் வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகளால் பாடப்பெற்ற ஊர், நூல் விவரங்களைத் திருவாமாத்தூர்க் கௌமார சபையார் வெளியிட்டுள்ளனர்[25]. ' ஊர்ப்பெயரும் நூற்றொகையும் ' என்னும் இந் நூலடைவில் சுவாமிகள் அருளிய அனைத்துநூல் விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனுல் இதுவரை அச்சில் வெளிவந்த, வாராத நூல்கள் எவையெவை, பதிப்பிக்க எடுத்துக் கொண்டிருப்பவை எவையெவை, என்னும் விவரங்கள் தெரியவருகின்றன. இஃது ஓர் ஆசிரியரின் நூல்களுக்கான தனி நூற்றொகை. இங்ஙனமே, ஆறுமுக நாவலரின் நூல்களைக் குறித்தும் ஒரு தனி வெளியீடு வந்துள்ளது.[26]

திரு. திருமலை முத்துசாமி அவர்கள் பத்திரிகை வாயிலாக வெளியிட்ட டாக்டர் மு. வரதராசனார், வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் ஆகியோரின் நூல்களுக்கான நூற்றொகைகள் இவ்வகையின. இது போன்றே பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, கப்பலோட்டிய வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலியோரின் நூல்களுக்கும் தனி நூற்றொகைகள் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இப்பொழுது நம் பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பட்டுள்ள பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகளி'ல் சங்க இலக்கிய நூற்றொகை உள்ளது[27]. இதில் சங்க இலக்கியப் பதிப்பு விவரங்களோடு சங்க இலக்கியங்களின் அடிப்படையில் எழுந்த ஆராய்ச்சி நூல்கள் முதலியவற்றின் அடைவும் இடம் பெற்றுள்ளன.

சமய நூல்களுக்கும் இவ்வகை நூற்றொகைகள் சில வெளிவந்துள. திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணாசலம் அவர்கள் 1966-ல் வெளியிட்டுள்ள 'சைவசித்தாந்தச் சிறு நூல்கள்' என்னும் தொகுப்பு சைவ சித்தாந்த சாத்திர நூல்களை அறிமுகப்படுத்துகிறது[28].

இந்தியக் கிறிஸ்தவரின் சமய நூலட்டவணை ஒன்று 1969-ல் வெளிவந்துள்ளது[29]. இந்திய மொழிகளில் பற்பல காலங்களிலும் வெளியான கிறிஸ்தவ சமய நூல்களின் விவரங்களை இந்நூல் தருகிறது. கி. பி. 1600-க்கு முன்வந்த நூல்கள் தொடங்கி 1965ஆம் ஆண்டு வெளிவந்த நூல்கள் வரையில் காலப்பாகுபாடு செய்து இதில் அடைவு படுத்தித் தந்துள்ளனர். இதுபோன்று சமயச் சார்பான நூல்களுக்கும் தனி நூல் விவர அட்டவணைகள் வெளிவருவது, அந்தந்தச் சமய உண்மைகளை ஆராய முற்படுவோருக்கு மிகுதியும் பயன்படும்.

மறைத்திரு சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளார் மேலைநாட்டு மொழிகளில் வெளியிடப்பெற்ற தமிழ் நூல்களுக்கு ஒரு நூலடைவை யாத்தளித்துள்ளார்[30]. இதன்வழி மேலைநாட்டு மொழிகளில் மொழி பெயர்ப்பாகவும், ஆய்வாகவும், இன்னபிறவாகவும் வந்துள்ள நூல் விவரங்கள் தெரியவருகின்றன. இதுபோன்றே இந்திய மொழிகளில் வந்துள்ள தமிழ் நூல்களும் தனிப்படக் கவனிக்கத்தக்கன.

ஒரு பொருள் பற்றிய தனி நூலடைவுகள் சிலவும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. இவ்வகையில் மலேயாப் பல்கலைக் கழகம் 1966ஆம் ஆண்டு வெளியிட்ட இரு வெளியீடுகள் எடுத்துக்காட்டத்தக்கன. ஒன்று, எம். ஆண்ட்ரநோவ் என்பவரால் திராவிட மொழியியல் பற்றித் தொகுத்து வெளியிடப்பட்ட நூலட்டவணை[31]. மற்றொன்று, வில்லியம் ஒய். வில்லட்ஸ் என்பார் தொகுத்துள்ள மகாபலிபுரம் பற்றிய நூல்களின் தொகுப்பு[32]. இவ்வகைத் தனித் தொகுப்புகளும் குறித்ததொரு பொருள்பற்றி அறிய விரும்புவார்க்கு ஏற்ற வழிகாட்டிகளாகும்.

நூலக நூல்விவர அட்டவணைகள்

ஒவ்வொரு நூலகமும் அந்தந்த நூலகங்களில் உள்ள நூல்களுக்குத் தனி விவர அட்டவணைகளைக் காலந்தோறும் தொகுத்து வைத்துக் கொள்வதுண்டு. அன்றியும் பெரிய நூலகங்களில் திங்கள்தோறும் வந்துசேரும் புது நூல்களுக்குத் தனிவெளியீடுகளை வெளியிட்டு வாசகர்களுக்கு அறிமுகம் செய்விப்பதும் வழக்கமாயிருந்து வருகிறது.

திரு. தாஸன் என்பவர் சென்னை 'மூர் அங்காடி'யில் பழைய புத்தகக்கடை வைத்திருந்தவர். இவர் வழியாகத் தமிழ்ப் புலவர்களுக்குச் சென்ற நூற்றாண்டின் அரிய வெளியீடுகள் கிடைத்து வந்தன. தமிழ்ப் புலவர்களுக்கு அறிமுகமான இவர் 'தாஸன் தமிழ் நூல் நிலையம்' என்பதனை 1911-ல் வேப்பேரியிலுள்ள தன் இல்லத்தில் அமைத்திருந்தார். இதில் உள்ள நூல்களுக்கான ஒரு தமிழ் நூற்பட்டியும் இவரால் 1937-ல் வெளியிடப்பட்டுள்ளது[33]. அதில் இவர் தம் நூல் நிலையத்தைப் 'புராதன நவீன புத்தகக் களஞ்சியம்' என்று குறிப்பிடுவது கொண்டே இங்கிருந்த நூல்களின் தன்மையை ஒருவாறு ஊகித்துணரலாம். இவருடைய தமிழ் நூற்பட்டியில் 4000 தமிழ் நூல்களின் விவரங்கள் உள. முற்றும் நூற்பெயர்களே. ஒவ்வொரு நூலும் என்ன பொருள்பற்றியது என்பதைச் சுருக்கக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். 'பன்னூற்பகுதி விளக்கக் குறிப்பு' என்னும் பகுதியில் 'அகராதி' முதலாக 'ஜீவ சரித்திரம்' ஈறாக 72 பொருள்களின் பாகுபாட்டைக் குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் 1927-ஆம் ஆண்டு திருநெல்வேலி நகரில் நிறுவப்பெற்ற 'சிவஞான முனிவர் நூல் நிலையம்' 1957-ல் ஒரு நூற்பட்டியை வெளியிட்டுள்ளது. இப் பட்டியலில் நூற்பெயர், ஆசிரியர் பெயர் அல்லது வெளியிட்டவர் பெயர், பதிப்பித்த ஆண்டு ஆகிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதுபோன்றே கும்பகோணத்திலுள்ள 'சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையமும்' தனி நூற்பட்டி வெளியிட்டுள்ளது[34]. இதில் 4396 நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய தனி நூலக நூற்பட்டியல்களும் தமிழ் நூல் விவரங்களை அறியப்புகுவார்க்குப் பெருந்துணை செய்யும்.

அமெரிக்க நூலகங்களுக்குப் புத்தகம் வாங்கும் நிறுவனம் இந்தியாவில் தாம் வாங்கும் நூல்களுக்கு ஒரு தனிப்பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந் நிறுவனம் தம் நாட்டு நூலகங்களுக்காக அவ்வப்போது பல மொழிகளிலும் வெளியாகும் நூல்களில் 20 படிகளை வாங்குகிறது. இவ்வாறு வாங்கப்படும் நூல்களுக்கான விவரப்பட்டியலைத் திங்கள்தோறும் வெளியிட்டும் வருகிறது[35]. இதில் தமிழ் நூல்களும் இடம்பெறுகின்றன. இதுபோன்றே இவர்கள், இலங்கை,

மலேயா நாடுகளில் வாங்கும் நூல்களுக்கும் தனித்தனிச் சேர்க்கைப் பட்டியல் வெளியிட்டு வருகின்றனர். எனவே, அவ்வப்போது வெளிவரும் தமிழ் நூல் விவரங்களை அறிவதற்கு இவர்கள் வெளியிட்டுவரும் சேர்க்கைப் பட்டியல்களும் துணைபுரிகின்றன. இந்தத் திங்கள் வெளியீடுகள் டியூவி முறையில் பொருளடைவு செய்யப்பட்டுச் செவ்விய முறையில் வெளியிடப்படுவதலால், இவை ஒவ்வொன்றும் தனி நூல் விவரப்பட்டியல்களே. இங்ஙனமே இவர்கள் இந்தியாவில் நடத்தி வரும் ஐந்து நூலகங்களிலும் திங்கள்தோறும் வரும் நூல்களுக்குத் தனித்தனி நூல் விவர அட்டவணைகளை அச்சிட்டு வாசகர்களுக்கு அனுப்பி உதவி வருகின்றனர்[36].

இதுபோன்ற முயற்சியைச் சென்னைப் பல்கலைக் கழக நூலகமும் சில ஆண்டுகளாக (1971—மே மாதம் முதல்) செய்து வருகின்றது. பல்கலைக் கழக நூலகர் திங்கள்தோறும் வந்து சேரும் புதிய நூல்களுக்காக தொகுப்பை மையொற்றுப்படி செய்து, பல்கலைக் கழக அனைத்துத் துறைகளுக்கும் வழங்கி வருகின்றார். இதில் தமிழ் நூல்களுக்கெனத் தனிச் சேர்க்கை அமைத்து, அதனைத் தமிழ் எழுத்திலேயே தந்துவருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

வெளியீட்டாளர் நூற்றொகை

நூல் வெளியீட்டாளர் தத்தம் வெளியீடுகள் குறித்துத் தனி நூல் விலைப்பட்டி வெளியிட்டு வருகின்றனர். இவை வெவ்வேறு வெளியீட்டாளர் வெளியிட்டுள்ள நூல்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் தமது 1008ஆம் நூல் வெளியீட்டை ஒட்டிக் கழக வெளியீடுகளுக்குப் பாராட்டு விழா நூற்பட்டி ஒன்றைத் தொகுத்துத் தந்துள்ளனர். இதனை, ஆக்கியோர் காலஞ்சென்ற நூலக மேதை எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களும், மறைமலையடிகள் நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசுவாமி அவர்களும் ஆவர். மற்றும் நாள், கிழமை, திங்கள் இதழ் வெளியீடுகள் குறித்தும் கழகம் ஒரு தொகுப்பு வெளியிட்டுள்ளமையும் நினைவுகூரத் தக்கது.[37]

சென்ற நூற்றாண்டில் தனிப்பட்டவர்கள் மட்டும் அன்றிச் சில அச்சகத்தாரும் தமிழ் நூல்கள் பல வெளிவருதற்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளனர். இப்பொழுது பழந்தமிழ் நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டுவரும் கழகத்தைப்போல, சென்ற நூற்றாண்டில் பல நூல்களை அச்சிட்ட இரு அச்சுக்கூடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. ஒன்று ஊ. புஷ்பரதச் செட்டியாரின் கலாரத்னகர அச்சுக்கூடம்; மற்றொன்று சை. இரத்தினச் செட்டியாரின் மதராஸ் ரிப்பன் பிரஸ். இவ்விரு அச்சுக்கூடங்களும் இலக்கணம், இலக்கியம், நிகண்டு முதலிய பல்வகை நூல்களை அச்சிட்டுப் பரப்பியுள்ளன.

விளம்பர நூலட்டவணை

நூல் வெளியீட்டாளர் தாங்கள் வெளியிடும் நூல்களில் முன்பு வெளியிட்டிருப்பனவும் பின் வெளியிட இருப்பவுமான நூல்களின் பட்டியலைத் தருவது வழக்கமாயிருந்து வருகிறது. சென்ற நூற்றாண்டு வெளியீடுகளிலும் பிறவற்றிலும் வந்துள்ள இத்தகைய விளம்பரங்களாலும் பல நூல்களின் விவரங்கள் தெரியவரும். கலாரத்னாகர அச்சுக்கூடம், மதராஸ் ரிப்பன் பிரஸ் வெளியீடுகளின் விளம்பரங்களால் சென்ற நூற்றாண்டு நூல்கள் பல தெரிவதற்கு வாய்ப்பு உண்டு. 1941இல் டாக்டர் உ. வே. சாமிநாதையர் தாம் வெளியிட்ட தமிழ் விடுதூதில் தமது வெளியீடுகளாகிய 40 நூல்களின் விவரம் தந்துள்ளார். இங்ஙனமாக, நூல்களில் வெளியீட்டாளர் தரும் பிற நூல் விவரங்களும், அன்றி, ஓர் ஆசிரியர் தமது பிறநூல்பற்றி வெளியிடும் குறிப்புகளும் நூல் விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கு உதவுவனவாம். பழைய நூல்களின் விளம்பரங்களிலிருந்து தெரியவரும் நூல் விவரப் பட்டியல் ஒன்றை மறைமலையடிகள் நூலகம் தொகுத்து வைக்க முற்பட்டிருப்பது பாராட்டத் தக்கது.

இக்கால நூல்கள்

இப்பொழுது நாள்தோறும் வெளிவரும் தமிழ்நூல் விவரங்களை இந்திய தேசிய நூலகத்தின் முத்திங்கள் அட்டவணையும் ஆண்டுத் தொகுதிகளும் தந்து வருகின்றன. 'செந்தமிழ்ச் செல்வி', 'நூலகம்' போன்ற திங்கள் இதழ்கள் புதிதுபுதிதாக வரும் தமிழ்நூல் விவரங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதும் சிறப்பாகப் போற்றத் தக்கதாம். மேலும், நாள், வார, பக்க, திங்கள் இதழ்களில் அவ்வப்போது வெளிவரும் நூல் மதிப்புரைகளும் இக்கால நூல்களுக்கு ஏற்ற அறிமுகங்களாம், 'தமிழ் உறவு' என்னும் இதழ் குறிப்பாகத் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடுகளை அறிவிக்கும் நோக்கத்துடனேயே வெளியிடப்படுகிறது.

இந்நாள் வாழ்ந்துவரும் எழுத்தாளர் குறித்தும் சில வெளியீடுகள் வந்துள்ளன. 'தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?' என்னும் தலைப்பில் 1962இல் தென்மொழிப் புத்தக டிரஸ்ட் ஒரு நூல் வெளியிட்டுள்ளது. இதே தலைப்பில், 1966இல் 'தமிழ் எழுத்தாளர் சங்கம்' ஒரு தொகுப்பு வெளியிட்டுள்ளது. பின்னர்க் குழந்தை எழுத்தாளர் சங்கம், 'குழந்தை எழுத்தாளர் யார்? எவர்?' என்னும் ஒரு நூற்றொகையை வெளியிட்டுள்ளது. இன்னோரன்ன வெளியீடுகள் இக்கால ஆசிரியர்களையும் அவர்தம் நூல்களையும் அறிவதற்குத் துணைசெய்து வருகின்றன.

இலங்கை, மலேயா, சிங்கப்பூர் முதலிய இடங்களில் வெளிவரும் தமிழ்நூல்களை அறிவதற்கு அவ்வந்நாட்டுப் பத்திரிகைகளில் வரும் மதிப்புரைகள், விளம்பரங்கள் ஆகியவை துணைபுரியும். அன்றியும், அந்தந்த நாட்டு எழுத்தாளர்களையும் அவருடைய படைப்புகளையும்

அறிமுகப்படுத்தும் நூல்கள் சிலவும் வெளிவந்துள்ளன. திரு. எப். எக்ஸ். ஸி. நடராஜா என்பவர் தொகுத்துள்ள 'ஈழமும் தமிழும்' என்னும் நூல் இலங்கையில் பலகாலத்தும் வெளிவந்த தமிழ்நூல்களுக்கு ஒரு நல்ல அறிமுகமாகும்[38]. இதில் செய்யுள் நூல் தொடங்கிப் பத்திரிகாசிரியர்வரை நூல்களும், நூலாசிரியரும் நூல் வெளியீட்டாளரும், ஆண்டுகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

'மலேசியாவில் தமிழ் எழுத்தாளர்கள்' என்னும் நூல் 1967-ல் திரு. சி. வேலுசாமி என்பவரால் தொகுக்கப்பெற்று, மலேயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூல் மலேசியாவில் உள்ள 225 தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை அவர்களுடைய சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகளுடன் அறிமுகப்படுத்துகிறது. இதில் பெரும்பான்மையோர் உருவப்படங்களும் இடம் பெற்றிருப்பது ஒரு தனிச் சிறப்பாகும். நூல்களின் அகரவரிசைப் பட்டியலும் தரப்பட்டிருக்கிறது. பின், 1969-ல் மலேயாப் பல்கலைக் கழகத்தின் வழி ராமசுப்பையா என்பவரால் மலேயாவிலுள்ள தமிழ் நூல்கள், இதழ்களுக்கான ஒரு தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது[39]. இவையும் இவைபோல்வனவும் நம் தமிழகத்திலும் தமிழ் வழங்கும் பிற நாடுகளிலும் இந்நாளிலும் முன்னாளிலும் வெளிவந்த நூல்களின் வரலாறுகளைத் தெரிந்துகொள்வதற்கு ஏற்ற கருவி நூல்களாக உள்ளன.

நூல் விவர அட்டவணைகளும் இலக்கிய வளர்ச்சியும்

தமிழ் நூல்களுக்குப் பல்வேறு காலங்களிலும் வெளியிடப்பெற்று வந்துள்ள நூல் விவர அட்டவணைகளால், தமிழில் அவ்வப்போது வெளிவந்த பலதுறை நூல்களின் வரலாறுகளையும் தெரிந்துகொள்கிறோம். சிறப்பாகத் தமிழ்மொழி வரலாறு, இலக்கிய வரலாறுகளுக்கு இவை பெருந்துணை புரிவனவாம். நாட்டு வரலாறு, மக்களின் சமூக—பண்பாட்டு நிலைகள் முதலியவற்றைச் சரிவரத் தெரிந்துகொள்வதற்கும் இவை வழிகாட்டும்.

விடுதலை நாளில் தொடங்கப்பெற்றுச் சிறப்பாகப் பத்துத் தொகுதிகளில் வெளிவந்துள்ள 'தமிழ்க் கலைக்களஞ்சியம்' தமிழ் இலக்கியக் களஞ்சியமாகவும் திகழ்கிறது[40]. இக் கலைக்களஞ்சியத்தின் அனுபந்தத் தொகுதியில் முன் தொகுதிகளில் உரிய இடங்களில் சேர்க்கப்படாது விடுபட்டிருந்த புலவர்கள், நூல்கள் முதலியவற்றை இணைப்பதற்கு 'தமிழ்நூல் விவர அட்டவணை' பெரிதும் உதவியிருக்கிறது. இக் கலைக்களஞ்சியம் தொடங்கப்பட்ட காலத்தில் தமிழ்நூல் விவர அட்டவணைகள் முற்றும் வெளிவந்திருந்தால், இன்னும் எத்தனை இலக்கிய நூல்கள், ஆசிரியர்கள், இலக்கிய மரபுகள் முதலியன பற்றிய சிறப்புச் செய்திகள் இடம்பெற்றிருத்தல்கூடும். எனினும், இனி வருங்காலத்தில் இக் கலைக்களஞ்சியத்தில் தமிழ்நூற் செய்திகள்

மிகுந்த அளவில் இடம்பெற தமிழ் நூல் விவர அட்டவணைகள் பெரிதும் துணைசெய்யும் என்பதற்கு ஐயமில்லை.

நமது நாட்டுப் பதிப்பாளர், நூலாசிரியர் முதலியோருள் சிலர், அறிந்தோ அறியாமலோ, முன்னையோர் ஆக்கப் பணிகளைச் சுட்டாமல் விட்டுவிடுகின்றனர். எனினும், உண்மையைத் தமிழ் நூல் விவர அட்டவணைகள் உணர்த்திவிடும்.

காலப் பழமையால் பழம் பதிப்புகள் முதலியன வழங்காமல் போய்விடுகின்றன. பிந்திய பதிப்புகளைக் காண்போர் முன்னிலை அறியாமையால் பின்னையோரையே முதற் பதிப்பாசிரியர் என்று மயங்கிவிடுதலும் இயல்பே. இவ்வாறான மாறுபாடுகளைத் தீர்த்து வைக்கின்றன இந்நூல் விவர அட்டவணைகள்.

மேலும், ஒரு பொருள்பற்றி ஆராய்ந்து எழுதப்புகுவோர்க்கு அவ்வத்துறையில் ஏற்கெனவே வெளிவந்த நூல்களைப்பற்றி அறிவிக்கும் கருவி நூல்களாக இவை பயன்படுகின்றன. இங்ஙனமாகத் தமிழ் நூல்களின் வரலாற்றை முற்றும் முழுமையாக உணர்வதற்குத் தமிழ் நூல் விவர அட்டவணைகளே துணைபுரிவன என்பது தெளிவு. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள 'ஆங்கில இலக்கிய அகராதி' போன்று தமிழிலும் நூல்கள் ஆக்கப்படுவதற்கு தமிழ் நூல் விவர அட்டவணைகள் ஆக்கப்படுவது என்றும் வேண்டற்பாலதே.

விளக்கக் குறிப்புகள்

1. பதினைன்கு தேசிய மொழிகளாவன: அஸ்ஸாமி, வங்காளி, இங்கிலீஷ், குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது.
2. Delivery of Books and Newspapers Act of 1954. (Act No. 27 of 1954 as amended by Act No. 99 of 1956).
3. 'இந்திய தேசிய நூல் விவரப்பட்டியல்' (The Indian National Bibliography) 1958-ஆம் ஆண்டு முதல் சென்ற ஆண்டு வரை (1972) 12 தொகுதிகள் வெளிவந்துள்ளன.
4. தேசிய நூலகம் தொகுத்தளித்துவரும் 'தமிழ்ப்பகுதி' 1958 முதல் சில ஆண்டுகளுக்கு வெளிவந்துள்ளது. ஆனால், தொடர்ச்சியாக இது இல்லை.
5. 'தமிழ்நாடு' என்னும் பெயர்சூட்டித் தமிழகத்தின் பழம் பெருமையை மீண்டும் நிலைநாட்டியது மாண்புமிகு சி. என். அண்ணாதுரை அவர்களின் அமைச்சரவையாகும்.

6. கல்லூரிப் பட்டப்படிப்பிற்கு 280-ம், புகுமுக வகுப்பிற்கு 170 நூல்களும் வெளிவந்துள்ளன. இவை பொருளியல், வரலாறு முதலிய 22 துறைகளுக்கு உரியனவாம்.
7. முன்பு இதற்கு 'Madras Record Office' என்பது பெயர்.
8. தமிழ்ப் பேரகராதியில் (Tamil Lexicon) பயன்படுத்திய நூல்கள், ஆசிரியர் விவரங்கள் தரப்பட்டுள்ள முறையே இவ்வகையமைப்புக்கு வழிகாட்டியது.
9. Classified Catalogue of Tamil Printed Books with Introductory Notices—Compiled by John Murdoch. Madras: The Christian Vernacular Education Society, Printed by Caleb Foster, At the Poster Press, 23, Rundall's Road, Vepery, 1865.
10. A Descriptive Catalogue of Oriental Manuscripts and other Articles illustrative of the Literature, History, Statistics and Antiquities of South India, Collected by Lient. Colin. Mackenzie, Surveyor General of India By H. H. Wilson 1928.
11. Oriental Historical Manuscripts in the Language Translated with annotations: By William Taylor, in two Volumes—1835.
12. A Catalogue of Raisonne of Oriental Manuscripts in 3 Volumes by Rev. Willim Taylor, 1857, 1860, 1862. (Title Page and Content. See. Murdoch's Catalogue, PP. 305—308.
13. Madras Record Office: Classified Catalogue of Books Registered from: at the Office of the Registration of Books.

1890—1900	Published	1961.
1901—1910	,,	1964.
1911—1915	,,	1965.
1916—1920	,,	1966.

14. Madras State Bibliography—1951.
15. குழந்தை நூற்றொகையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் மர்டாக் நூலட்டவணையில் காணலாம்.

    Bibliography of Childrens Literature, Murdoch's Catalogue, PP. 325—328.
16. A Catalogue of the Tamil Books in the Library of the British Museum. Compiled by Dr. L. D. Barnett, M.A., Litt. D. and the Late Dr. G. U. pope—1909.

17. A Supplementary Catalogue of the Tamil Books in the Library of the British Museum—Compiled by Dr. L. D. Barnett—1931.

18. Descriptive Catalogue of Tamil Manuscripts.

19. இவ்விரண்டும் சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக் கழக வெளியீடுகளாகும்.

20. தமிழ்ப்புலவர் வரிசை, தமிழ்ப்புலவர் அகரவரிசை—மூன்று தொகுதிகள், முப்பது புத்தகங்கள்—கழக வெளியீடு. (1959—1972).

21. சங்க இலக்கியம் : பதிப்பாசிரியர்—எஸ். வையாபுரிப்பிள்ளை முதற்பதிப்பு—1940 : சைவசித்தாந்த மகா சமாஜ வெளியீடு. இரண்டாம் பதிப்பு—1965 : பாரி நிலைய வெளியீடு.

22. அ. திருமலை முத்துசாமி : A. Thirumalai muthuswamy: A Bibliography on Thirukkural. Meenakshi Puthaka Nilayam. 1962.

23. 'தமிழாய்வு'—சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு 1972. இது ஆண்டுக்கு இருமுறை பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியிடும் ஆய்வுத் தொகுதி.

24. இரா. காசிராசன் : 'சிலப்பதிகார ஆய்வடங்கல்'—கேரளப் பல்கலைக் கழக வெளியீடு—1973.

25. சுவாமிகளின் பெயரர் தி. மு. சங்கரலிங்கம் இதனைத் தொகுத்து அமைத்துள்ளார்.

26. சிதம்பரம் நாவலர் அறநிலையத்தாரின் வெளியீடு.

27. டாக்டர் ந. சஞ்சீவி : சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு—1973.

28. மு. அருணாசலம் : சைவ சித்தாந்தச் சிறுநூல்கள்—சைவ சித்தாந்த மகா சமாஜச் செயலாளர் கிழக்குமருதூர் நாராயணசாமி நாயுடு மணிவிழா மலர்—1966.

29. Library of Indian Christian Thelogy — A Bibliography — Compiled by: Kaj Baago — published by the Christian Literature Society, Madras-1969.

30. A reference guide to Tamil Studies: books by Xavier S. Thani Nayagam, University of Malaya, Kula Lumpur, 1966.

31. M. Andronov, M.A., Ph. D., Materials for a Bibliography of Dravidian Linguistics. Department of Indian Studies, University of Malaya, Kula Lumper, 1966.

32. William Y. Willetts — An Illustrated Annotated Annual Bibliography of Mahabalipuram on the Coramandal Coast of India 1852—1962 —Department of Indian Studies, University of Malaya, Kula Lampor, 1966.

33. தாஸன் தமிழ்நூல் நிலையம் என்னும் புராதன நவீன புத்தகக் களஞ்சியம்—ஸ்தாபகம் 1911. தமிழ்நூற் பட்டி 1937.

34. இந்நூல் நிலையம் 1947-ல் நிறுவப்பட்டது.

35. Library Congress Public Law 480 Project. Accessions List India From 1961 onwards.

36. New Books added to in India.

37. இதனைத் தொகுத்தவர் சு. அ. இராமசாமிப் புலவர்; இது 1961-ல் வெளிவந்தது.

38. கலைமகள் வெளியீடு, மட்டக்களப்பு.

39. Tamil Malaysiana — by Ram Subbaiah. Department of Indian Studies, University of Malaya, 1969.

40. தமிழ்க் கலைக்களஞ்சியம்—தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு. I முதல் X தொகுதிகள் 14 ஆண்டுகளில் (1954—1968) வெளியிடப்பட்டுள்ளன. குழந்தைகள் கலைக் களஞ்சியம் இப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கிறது. இதுவரை ஆறு தொகுதிகள் (1968—1973) வெளிவந்துள்ளன. இவற்றை ஆக்கியளிக்க முதற்காரணமாய் விளங்கும் பெரியார் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களும், திரு. ம. ப. பெரியசாமி தூரன் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்ட குழுவினரும் தமிழ்மக்களின் பாராட்டுதலுக்கு என்றும் உரியவர்களாவார்கள்.

29

கடந்த கால் நூற்றுண்டில் வெளிவந்துள்ள தமிழ் அகராதிகளும் கலைக்களஞ்சியங்களும்

வ. ஜெயதேவன், பி.எஸ்சி., எம்.ஏ.,
சான்றிதழ் — மொழியியல், தமிழ் விரிவுரையாளர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை—5.

1.0. *அடிமைப்பட்ட இந்தியா அளப்பரிய கொடுமைகளை எதிர் கொள்ள நேர்ந்து அவலத்திற்குள்ளாகியது. எனினும், முகில் மூட்டத் திடை முழுமதிபோல — கற்பாறையிடைத் தெள்ளிய நீர்க்கசிவு போல — பாலையிடை ஒரு சோலை* (Oasis) *போல வெள்ளைப் பரங்கி யர்தம் வெங்கொடுமையிடைச் சில நன்மைகளும் சிறந்தன என்பதை நன்றியுள்ள எந்த இந்தியனும் மறக்க இயலாது. ஆம். கொடுமை யால் சில நன்மைகளும் நன்மையால் சில கொடுமைகளும் விளைவது இயற்கையே. அன்னியரால் அலர்ந்த நன்மைகளுள் அகராதிக் கலை யும் ஒன்றாகும். பண்டிதர்களுக்கேற்ற நிகண்டுகளின் சிறைக்கூடத்தில் அகப்பட்டுக்கிடந்த அகராதிக்கலை (சொற்பொருண்மைக்கலை) விடுதலை பெற்று மக்களின் மாளிகைக்கு வந்தது அன்னியர்களாலேதான் என்பதில் ஐயமில்லை. இதனுல் அடிப்படைக் கல்வியறிவு உடைய எல்லாரும் பயன்பெறுதல் எளிதாயிற்று.*

1.1. *இங்ஙன் வெள்ளையர்களால் கால்கோளிடப்பட்ட அகராதிக் கலை, இந்தியத் துணைக்கண்டத்தினின்றும் அவர்கள் வெளியேறுவதற்கு முன்பே தமிழ்ப்புலத்தில் நன்கு சூல்கொண்டிருந்தது. விடுதலைக்குப் பின்னே பற்பல அகராதிகள் எழுந்தன; கலைக்களஞ்சியங்கள் கனிந்தன; பல்வகைப் படைப்புகள் பிறந்தன. அவற்றின் ஆய்வு அறிமுகமே இக்கட்டுரை.*

2.0. *தமிழ் — தமிழ் அகராதிகள்*

கடந்த கால் நூற்றுண்டில் அகராதிக்கலை பெரிதும் முதிர்வெய்தி யுள்ளதை உணர்த்துகிற வகையில் தமிழ்ச் சொற்களுக்குத் தமிழால் பொருள்கூறும் அகராதிகள் பல வகைகளில் உருவாகியுள்ளன. அவற்றை இனி நோக்குவோம்.

2.1. இலக்கியங்களுக்கு அகராதிகள்

இலக்கியங்களில் பயின்றுவரும் சொற்களுக்குப் பொருள் விளக்கும் நோக்கில் பல அகராதிகள் உதித்துள்ளன. திருக்குறளுக்கு சாமி. வேலாயுதம் பிள்ளை[1], ந. சி. கந்தையா பிள்ளை[2], வா. மார்க்க சகாயஞ் செட்டியார்[3] ஆகியோர் அகராதி தயாரித்து வெளியிட்டுள்ளனர். புலவர் சுந்தர சண்முகனார்[4] 'திருக்குறள் அகரவரிசை' தயாரித்துள்ளார். எனினும் இஃது அச்சாகவில்லை. புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை[5]யவர்கள் 'திருக்குறள் சொல்விளக்க அடைவு' ஒன்றை உருவாக்கி வருகிறார்கள். இது நூலாக விரைவில் மலரவிருக்கிறது. பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் 'திருக்குறள் சொற் பயில் முறை அகராதி'[6] (Word Frequency dictionary) ஒன்றைத் தொகுத்துள்ளார்கள். அன்றியும், திருக்குறள் கருத்துகள் வேறு இலக்கியங்களில் எங்ஙன் எதிரொலிக்கிறது என்பதை அறிவிக்கும் வகையில் 'திருக்குறள் ஒப்புமைக் களஞ்சியம்'[7] ஒன்றைத் தயாரித்துள்ளார்கள். இவ்விரு பெரும் படைப்புகளும் விரைவில் நூல்வடிவம் பெறவிருக்கின்றன. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களுக்கு மூன்று[8] அகராதிகள் வெளிவந்துள்ளன. கம்ப இராமாயணத்திற்கு இரண்டு[9] அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று உயிரெழுத்துகளை உடைய முதற்பகுதியுடன் நின்றுவிட்டது; மற்ற பகுதிகள் இனித் தொடரக்கூடும்.

2.2. புறநானூற்றகராதியொன்று வி. ஐ. சுப்பிரமணியம்[10] அவர்களின் உழைப்பால் கேரளப் பல்கலைக் கழகத்தினின்றும் வெளிவந்துள்ளது. இவ்வகராதி, புறநானூற்றுச் சொற்களுக்குத் தமிழோடு ஆங்கிலத்திலும் பொருளும் இலக்கணக் குறிப்பும் சுட்டுகிறது. வெளிநாட்டாருக்கும் பயன்படும் வகையில் இவ்வகராதி விளங்குகிறது. இவ்வகையில் இதுவே முதல் அகராதி யெனலாம்.

2.3. டாக்டர் எஸ் வி. சுப்பிரமணியம்[11] அவர்களின் சிலம்பு பற்றிய ஆய்வுநூல் சிலப்பதிகார அகராதியைக் கொண்டிலங்குகிறது. இது சிலம்பின் சொற்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் விளக்கமும் இலக்கணக் குறிப்பும் தருகிறது. புலவர் மு. சுப்பிரமணியனாரின்[12] நூல் சிலம்பின் செய்திச் செறிவையும் பொருள் விளக்கத்தையும் கொண்டு விளங்குகிறது.

2.4. "சங்க இலக்கியம் என்ற அரண்மனை எத்தனையாயிரம் சொற்களைக்கொண்டு கட்டப்பெற்றுள்ளது. அவற்றில் காணப்பெறும் சொல்லுருவங்களும் பொருளமைதிகளும் எவ்வெவ்வாறு மாற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்திருக்கின்றன,"[13] என்பதை அறிவிக்கும் வகையில் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'சங்க இலக்கியச் சொற்களஞ்சியம்'[14] ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். இவ்வுயரிய படைப்பு உயிரெழுத்துகளை உள்ளடக்கிய முதற்பகுதிக்குப் பின் வெளிவாராமல் ஊனப்பட்டுக்கிடப்பது ஒரு பேரிழப்பே யாகும்.

2.5. புதுவை பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம் 39 பழந்தமிழ் நூல்களைத் தேர்ந்து அவற்றின் சொல்லடைவு தயாரித்து முப்பெரும் பகுதிகளாக வெளியிட்டுள்ளது.[15] இது போற்றத்தக்க பெருஞ் சாதனை யெனினும், சொற்கட்கு இன்றியமையா பொருளும் இலக்கணக் குறிப்பும் இல்லாமை பெருங்குறையாகும். இச் சொல்லடைவில் சொற்றொடர்களும் முதன்முதலாகப் பெருமளவில் இடம் பெற்றுள்ளன. சொற்றொடர்களுள் சில தேவையற்றன.

2.6. மேற்குறித்தவை போக, இன்னும் சில படைப்புகள் இத் துறையில் தோன்றியுள்ளன. ஆர். பிச்சைக்கண்ணன் என்பார் குமரகுருபரர் நூல்களுக்கு அகராதி ஆக்கியுள்ளார்.[16] 'பாட்டும் தொகையும்'[17] என்னும் பெயரில் சங்க இலக்கியச் சொற்பொருளடைவு ஒன்று வெளிவந்துள்ளது. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் 'தேவார ஒளிநெறி,'[18] 'திருவாசக ஒளிநெறி,'[19] 'திருக்கோவையார் ஒளிநெறி.'[20] 'திருவிசைப்பா ஒளிநெறி'[21] போன்ற பொருளடைவு நூல்களைப் படைத்துள்ளார்கள். பாரதியாரின் பாடல்களில் உள்ள பழந்தமிழ்ச் சொற்களைப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி[22] அவர்கள் பட்டியல் செய்துள்ளார்கள்.

2.7. பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் மேற்பார்வையின்கீழ் எஸ். கனகசௌந்தரி,[23] பி. எஸ். இந்திரா[24] ஆகியோர் சிலம்புச் சொற்கள், சங்கச் சொற்பொருளாய்வு ஆகிய ஆய்வேடுகளைப் படைத்துள்ளனர். பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ. போன்றவர்களின் மேற்பார்வையின்கீழ் இலக்கிய வழக்குகள் ஆராயப்பட்டு ஆய்வேடுகள் படைக்கப்பட்டுள்ளன. வி. ஜெயகுமாரி,[25] எஸ். பாகீரதி[26] முதலியோரால் தமிழ்க் கல்வெட்டுக்களும், எஸ். தனஞ்சய ராஜசிங்கம்,[27] ஆர். சீதாபாய்,[28] சதாசிவம்,[29] சோ. ந. கந்தசாமி,[30] பரமேஸ்வரி,[31] காமாட்சி ஸ்ரீனிவாசன்[32] ஆகியோரால் முறையே இலங்கை டச்சு ஆவணங்கள், தொல்காப்பியம், ஐங்குறுநூறு, பரிபாடல், திருக்குறள், இறையனார் அகப்பொருள் உரை முதலியனவும் ஆராயப்பட்டுள்ளன. மேலும், பதினெண்கீழ்க்கணக்கு, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலியனவும் அண்ணமலைப் பல்கலைக் கழக முதுகலை முதுநிலை மாணவர்களால் ஆராயப் பட்டுள்ளன.[33] ஆர். ஸ்ரீனிவாசன்,[34] டி. முருகரத்தனம்,[35] எம். இஸ்ரேல்,[36] ஆகியோரின் ஆய்வேடுகளும் இத்துறையில் குறிக்கத் தக்கவை. மேற்குறித்த ஆய்வேடுகள் அனைத்திலும் ஆங்கிலத்தில் பொருள் குறிக்கப்படடுள்ளது.

2.8. இலக்கியங்களுக்கு அகராதிகள் எழுவதற்கு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் போன்றோரின் இலக்கியப் பதிப்புகளின் ஈற்றில் இடம்பெறும் அருஞ்சொற் பொருள் விளக்கப் பட்டியல் தூண்டுகோல் எனலாம்.

2.9. புலவர் — இலக்கியம் — காலம் பற்றிய அகராதிகள்

தமிழ்ப் புலவர் பெருமக்களைப் பற்றிய செய்திகள், தமிழிலக்கியம் பற்றிய செய்திகள், காலங்களின் விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றை எளிதில் அறிந்துகொள்ளத் துணைபுரியும் அகராதிகள் பல கனிந்துள்ளன. ந. சி. கந்தையாபிள்ளை அவர்கள் 'தமிழ்ப் புலவர் அகராதி,'[37] 'தமிழ் இலக்கிய அகராதி,'[38] 'காலக்குறிப்பு அகராதி'[39] ஆகிய முப்பெரும் படைப்புகளைத் தமிழ்மொழியுலகிற்கு அளித்துள்ளார்கள். சு. அ. இராமசாமிப் புலவர் 'தமிழ்ப்புலவர் அகரவரிசை'[40] என்னும் பெயரில் 1595 புலவர்களைப் பற்றிய செய்திகளை உடைத்தாய அகராதியை வெளியிட்டுள்ளார். பாலூர் கண்ணப்ப முதலியார்[41] தமிழிலக்கியச் சார்பாகவுள்ள பல்வகைப் பெயர்களைப் பற்றிய தகவல்களை விளக்கும் அகராதியொன்றினைப் படைத்துள்ளார். புலவர் மணி மு. சண்முகம் பிள்ளையவர்கள் தொகுத்துப் பதிப்பித்துள்ள 'தமிழ்நூல் விவர அட்டவணை'[42] வெளியீடுகள் தமிழிலக்கிய ஆராய்ச்சிக்குத் துணைபுரிவன.

2.10. இன எழுத்து அகராதிகள்

ரகர றகரங்களின் வேறுபாட்டை உணர்த்திப் பொருள் கூறும் அகராதியொன்று புலவர் சுந்தரசண்முகனரால்[43] 1943இல் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், இன்னும் அச்சாகவில்லை. ண—ன; ர—ற; ல—ழ—ள ஆகிய இன எழுத்துகளை வேறுபடுத்திப் பொருள்கூறும் புதுமுறை அகராதி எஸ். நடராசன்[44] அவர்களால் உருவாக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

2.11. சிலேடை—அடுக்குமொழி—ஒலிக்குறிப்பு—எதிர்ச்சொல் அகராதிகள்

சிலேடைச் சொற்களின் பொருள் விளக்கும் அகராதி ஒன்றை சு. அ. இராமசாமிப் புலவர்[45] படைத்துள்ளார். அடுக்கு மொழிகளின்[46] பொருள் விளக்கவும், ஒலிக்குறிப்புகளை[47] விளக்கவும், சொல்லுக்கு எதிர்ச்சொல்[48] விளக்கவும் மூன்று அகராதிகளை மு. சதாசிவம் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

2.12. மேற்கோள் விளக்கக் கதை அகராதி

பலராலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ள கதைகளைத் தொகுத்து விளக்கும் அகராதி[49] ஒன்று மலர்ந்துள்ளது. 1255 மேற்கோள் விளக்கக் கதைகளையுடைய இவ்வகராதி சு. அ. இராமசாமிப் புலவரின் படைப்பாகும்.

2.13. சொற்பொருள் நுண்மை விளக்க அகராதி

உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மையை விளக்கும் அகராதி ஒன்று பூத்துள்ளது. புலவர் இளங்குமரன்[50] உழைப்பில் உருவான இவ்வகராதி இன்னும் வளம்பெற்றால் பெரும்பயனுடைய படைப்பாக ஒளிரும்.

2.14. தொகை — சிறப்புப் பெயர் — வேர்ச்சொல் முதலிய அகராதிகள்

தொகைச் சொற்களை விரித்து விளக்கும் 'தொகையராதி',[51] சிறப்புப் பெயர்களைத் தனித்து விளக்கும் சிறப்புப் பெயரகராதி'[52] ஆகியவை சு. அ. இராமசாமிப் புலவரால் படைக்கப்பட்டுள்ளன. 'மக்கட்பெயர் அகரவரிசை'[53] என்னும் பெயரில் சிற்றகராதி ஒன்றும் தோன்றியுள்ளது. மற்றும், 'மரபுத் தொடர் அகரவரிசை',[54] இல்லப் பெயர் அகரவரிசை'[55] போன்ற அகராதிகளும் எழுந்துள்ளன.

2.15. இலக்கணக் கலைச்சொற்களுக்குப் பொருள் விளக்கும் அகராதி[56] ஒன்று புலவர் சுந்தரசண்முகனரின் உழைப்பால் உருவாகியுள்ளது. எனினும், இன்னும் அச்சாகவில்லை.

2.16. "ஒரு மொழியின் சொற்றொகையின் சீர்வளங் காணவும் அச்சொற்றொகையுள் இருக்கும் சொற்களின் வேர் வளங்காணவும் அச்சொற்றொகையை வகைதொகை செய்துபார்த்தல் தலையாய வழியாகும்," என்னும் சீரிய கருத்தினரான பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி[57] அவர்கள் 'எண்ணடிச் சொற்களுள் ஒன்றனடிச் சொற்களைத் தனியே திரட்டி அவற்றின் பொருளோடு அகரவரிசைப் பட்டியலிட்டு ஆய்ந்துள்ளார்கள்.

2.17. 'வித்தும் விளைவும்' என்னும் பொதுத் தலைப்பில் 'தமிழ் உறவில்' பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் படைத்து வந்த கட்டுரைகள் எந்தெந்த வேரிலிருந்து எந்தெந்த சொற்கள் பிறந்தன என்பதைச் செவ்விதிற் கிளப்பன. வேர்ச்சொல் அகராதிக்குப் பெரிதும் பயன்படுவன. அன்றியும், ஓரெழுத்தொருமொழிச் சொற்களைத் தொகுத்து அகராதி[59] ஆக்கியுள்ளார்கள். இவை தவிர, 4815 ஈரெழுத்துச் சொற்களையும் 14,000 மூவெழுத்துச் சொற்களையும், 21,712 நாலெழுத்துச் சொற்களையும், 23,800 ஐந்தெழுத்துச் சொற்களையும் தொகுத்துள்ளார்கள். வண்டமிழ் வளஞ்சாற்றும் இவ்வகராதி 'சுருக்கத் தமிழ்ப் பேரகராதி'[60] என்னும் பெயரில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடாக விரைவில் வெளிவரவிருக்கிறது.

2.18. மொழியியல் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்'[61] ஒருசார் அகராதிக்குத் துணைபுரியும் அரிய படைப்பாகும். 'செந்தமிழ்ச் செல்வி'யில் பாவாணர் படைத்து வரும் வேர்ச்சொல் விளக்கங்கள் செம்மை சான்றவை; செந்தமிழின் நீர்மை சாற்றுபவை; இவை தனித்து அகராதி வடிவம் பெறுதல் இன்றியமையா நற்றமிழ்த் தொண்டாகும். பாவாணரின் 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு'[62] என்னும் நூல் கருதத்தக்கது. தமிழ்ப் பேரகராதி போன்ற பெரும் படைப்புகளுள் ஆங்காங்கே சில வழுக்கள் நேர்ந்துவிடுவது இயல்

பானது. சக்கையின்றிச் சாறில்லையன்றோ? எனினும், களையத்தக்க வழுக்களைச் சுட்டிக்காட்டிய பாவாணரின் ஆண்மை போற்றத்தக்கது. தற்போது சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பணியில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 'தமிழ் வேர்ச்சொல் அகராதி'த் தயாரிப்புப் பணியில் சிலகாலம் ஈடுபட்டுப் பின் அம்முயற்சியைக் கைவிட்டமை வருத்தத்துக்குரியது.

2.19. பழமொழி அகராதிகள்

10,683 பழமொழிகளைக் கொண்டிலங்கும் 'கழகப் பழமொழி அகரவரிசை'[63] ஒன்று வெளிவந்துள்ளது. 'தமிழ் நாட்டுப் பழமொழி அகரவரிசைச் சுருக்கம்'[64] ஒன்றும் வெளியாகியுள்ளது.

2.20. கனவகராதி

கனவில் தோன்றும் காட்சிக்குரிய பலன்களைக் கூறும் கனவு அகராதி (Dictionary of Dreams) ஒன்றைத் தமிழ்வாணன்[65] தயாரித்து வெளியிட்டுள்ளார்.

2.21. பொதுச் சொல்லகராதிகள்

லிப்கோ நிறுவனத்தார்,[66] ந. சி. கந்தையா பிள்ளை,[67] ஐயன் பெருமாள் கோனர்,[68] கழகப் புலவர்குழு,[69] மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை[70] ஆகியோரின் படைப்புகளாய்ப் பலப் பொதுச் சொல்லகராதிகள் தோன்றியுள்ளன.

2.22. கலைக்களஞ்சியங்கள்

பல்வகைக் கலைத் தலைப்புகள் பற்றிய தகவல்களைத் தமிழில் திரட்டித்தரும் 'கலைக்களஞ்சியம்'[71] ஒன்று இருபதாம் நூற்றுண்டுத் தமிழின் இமயவெற்றியாய்ப் படைக்கப்பட்டுள்ளது. இத் தமிழ்க் கலைக்களஞ்சியம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தளராப் பணியின் — பெரியசாமித் தூரன் அவர்களின் பெரும்பணியின் விளைவாய்த் தோன்றியது. பத்துப் பெரும்பகுதிகளாய் வெளிவந்துள்ள இக்களஞ்சியமே முழுமை பெற்ற முதல் தமிழ்க் கலைக்களஞ்சியம் என்னும் புகழ் முடிக்குரியதாகிறது. இக் கலைக்களஞ்சியத்தின் சிறப்பைப் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ. அவர்கள் "மேனுட்டுக் கருத்துகளையும் புதுமை முற்போக்குகளையும் தமிழ் பெற்று விளங்குவதற்கு இந்தக் கலைக் களஞ்சியமே சான்றும்,"[72] எனப் பறைசாற்றுகிறார்கள்.

2.23. தற்போது 'குழந்தைகள் கலைக்களஞ்சிய'த் தயாரிப்புப் பணியில் தமிழ் வளர்ச்சிக் கழகம்[73] ஈடுபட்டுள்ளமை பெரிதும் போற்றத் தக்கது. இதுவரை குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் முதல்

ஆறு தொகுதிகள் வெளிவந்துள்ளன. எஞ்சிய நான்கு தொகுதிகளும் விரைவில் வெளிவரவிருக்கின்றன.

2.24. இங்ஙனம், விடுதலைக்குப் பின் வியப்பூட்டும் வகையில் விரிந்துவரும் அகராதிக்கலை, தமிழுக்குத் தமிழால் பொருள் கூறுவதோடு நின்றுவிடாமல், பிறமொழிகள் தமிழாலும், தமிழ் பிறமொழிகளாலும் பொருண்மை விளக்கம் பெறுமாறு முதிர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

3.0. தமிழ்— பிறமொழிகள் அகராதிகள்

தமிழ் மொழிச் சொற்களுக்குப் பிறமொழிச் சொற்களால் பொருண்மை சுட்டும் பல அகராதிகள் பிறந்துள்ளன. தமிழ் இந்திய மொழிகளோடு மட்டுமன்றி உலக மொழிகளோடும் களிநடம் புரிவது கருதத்தக்கது.

3.1. தமிழ் — ஆங்கில அகராதிகள்

இந்திய மொழியுலகில் ஒப்பதும் மிக்கதும் இல்லாததாய்க் கோலோச்சும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியின் சுருக்கமாய், 'தமிழ் — ஆங்கில அகராதி'[74] வெளிவந்துள்ளது. லிப்கோ நிறுவனம், 'தமிழ் — தமிழ் — ஆங்கில அகராதி'[75] ஒன்றினை வெளியிட்டுள்ளது.

3.2. தமிழ் — உருசிய அகராதி

தமிழ்ச்சொல்லுக்கு உருசிய மொழியால் பொருள் விளக்கும் ஓர் உயரிய அகராதி[76] பியாதிகோர்ஸ்கி, ரூதின் என்பாரின் கூட்டு முயற்சியால் உருவெடுத்துள்ளது. மாஸ்கோவில் அச்சிடப்பட்ட இவ்வகராதியில் 38,000 சொற்கள் பொருள் விளக்கம் பெற்றன.

3.3. தமிழ் — இலத்தீன் பாலம்

1947-க்கும் முன்னரே இலத்தீன் - தமிழ் அகராதிகள் பல தோன்றியிருப்பினும், தமிழுக்கும் இலத்தீனுக்கும் உள்ள நெருக்கத்தை மொழியியல் - அகராதி அடிப்படைகளில் ஆயும் அரிய நூலொன்றைப் புலவர் சுந்தர சண்முகனார்[77] ஆக்கியுள்ளார். இந்திய விடுதலைக்கும் முன்பே அறிஞர்களால் கட்டப்பெற்ற தமிழ் - இலத்தீன் பாலத்தைத் திறந்துவைக்கும் இவ்வாசிரியர் 3830 தமிழ்ச்சொற்களுக்கு இணையான இலத்தீன் சொற்களை அகராதி முறையில் அமைத்துத் தந்துள்ளார்.

3.4. தமிழ் — இந்தி அகராதி

தமிழ்ச் சொற்களோடு ஒத்த பொருண்மையுடைய இந்திச் சொற்களைக்கொண்ட 'தமிழ் - இந்தி அகராதி'[78] ஒன்றும் எழுந்துள்ளது.

3.5. தமிழ்ப் பெயர் — வினைச்சொற்கள்

தமிழின் பெயர் வினைகளை ஆயும் நூல்கள் பல ஆங்கிலத்தில் எழுந்துள்ளன. இந்நூல்களுள் எழுத்துப் பெயர்ப்பு முறையில் தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்தில் தரப்பட்டு, அவற்றின் பொருண்மை திராவிட மொழிகளுடன் ஒப்பிடப்பட்டு ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது. இத்தகு படைப்புகளை நல்கியோருள் குறிப்பிடத்தக்கவர்கள் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்,[79] எஸ். வி. சண்முகம்,[80] பி. எஸ். சுப்பிரமணியம்,[81] எ. சதாசிவம்,[82] வி. இராஜம்[83] ஆகியோராவர். இப்படைப்புகள் அகராதிக் கலைக்கு மிகவும் உறுதுணையாவன.

3.6. திராவிடச் சொற்றொகை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் அனைத்துத் திராவிட மொழித் துறைகளின் முயற்சியால் 1959-ல் திராவிடச் சொற்றொகை[84] மலர்ந்தது. திராவிட மொழித் துறை யகராதிகளுக்கெல்லாம் இவ்வகராதியே முன்னோடியாகும். இதனை அடியொட்டியே திராவிட வேர்ச்சொல் அகராதி எழுந்தது எனலாம்.

3.7. திராவிட வேர்ச்சொல் அகராதி

கடந்த கால்நூற்றாண்டில் பூத்த புகழ்மிகு அகராதிகளின் பட்டியலில் இடம்பெறத்தக்க 'திராவிட வேர்ச்சொல் அகராதி'[85] ஒன்று எழுந்துள்ளது. ஆக்சுபோர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் பரோ, கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எமினோ ஆகிய இருவரின் அரிய — உயரிய இணைமுயற்சியின் பிற்புலத்தில் பிறந்துள்ள இவ்வகராதியில் 40 மொழிகளில் சொல் விளக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும் தமிழே முதன்மை பெற்று ஒளிர்கிறது. முதலில் ஒரு தமிழ்ச்சொல் நிறுத்தப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஒத்த திராவிடச் சொற்கள் நிறுத்தப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டுள்ளன. திராவிட மொழிகளிலிருந்து இந்தோ — ஆரியன் மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் சென்று கலந்துள்ள சில சொற்களும் உடன் கொடுக்கப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 4572 சொற்கள் பொருள் விளக்கப்பட்டுள்ளன. 1961-ல் வெளிவந்த இவ்வகராதியில் விட்டுப்போன சொற்களையும் சில திராவிட மொழிகளையும் சேர்த்துப் பிற்சேர்க்கை வெளியீடு[86] 1968-ல் வெளிவந்துள்ளது. தொகுமொத்தம், உழைப்பும் செறிவும் செறிந்த இவ்வுன்னதப் படைப்பில் 5461 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன; 42 மொழிகள் இடம் பெற்றுள்ளன; தமிழே தலைமையிடம் வகிக்கின்றது.

3.8. தமிழ் — இந்தோ ஆரியன் மொழிகள்

இத்துறையில் தனித்து அகராதி யெதுவும் தோன்றிலது. எனினும், டாக்டர் எஸ். வைத்தியநாதன்[87] என்பார் பழந்தமிழில் இந்தோ

ஆரியன் மொழிகளின் சொற்கள் குறித்து ஒரு நூல் படைத்துள்ளார். இந்நூலை இத்துறை யகராதியின் தோற்றுவாயாகக் கொள்ளலாம்.

3.9. தமிழ் — மராத்தி அகராதி

மகாராட்டிர அரசு இலக்கியப் பண்பாட்டுக் கழகம்[88] தமிழ் — மராத்தி அகராதி ஒன்றை உருவாக்கி வருவது குறிக்கத்தக்கது.

3.10. தமிழ் — ஆங்கிலப் பழமொழிகள்

ஆராய்ந்தெடுத்த அறுநூறு தமிழ்ப் பழமொழிகளையும் அவற்றிற் கேற்ற ஆங்கிலப் பழமொழிகளையும் தன்னகத்தே கொண்ட நல்ல படைப்பொன்றும்[89] தோன்றியுள்ளது.

3.11. இவ்வாறு தமிழ்ச்சொற்கள் ஒத்த பிறமொழிச் சொற் களால் பொருள் விளக்கப்பட்டும், ஒத்த இரு மொழிகளின் பழ மொழிகள் சுட்டப்பட்டும் அகராதிகள் தோன்றியுள்ளன.

3.12. சென்னைப் பல்கலைக் கழகம் தன் உலகப் புகழ்பெற்ற தமிழ்ப் பேரகராதியின்[90] திருத்தப் பணியை மீண்டும் தொடங்கி யுள்ளது மகிழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் உரியது. ஏழு பெருந்தொகுதி களாக உலாவரவிருக்கின்ற இப்பேரகராதித் திருத்தப் பணியில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பெருந்தகை அவர்களும், பதிவாளர் அவர்களும், தமிழகப் புலவர் குழுவின் தலைவர் பெரும் புலவர் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் தலைமையில் அமைந்துள்ள வல்லுநர் குழுவும், தமிழ்த்துறைத் தலைவர் அவர்களும் காட்டிவரும் ஆர்வமும் அக்கறையும் உழைப்பும் பெரிதும் போற்றுதற் குரியவை.

3.13. "தமிழை ஒரு நவீன மொழியாக்கும் வண்ணம் தமிழ் — ஆங்கில அகராதியைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடவேண்டும்"[91] என மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் பாரிசில் நடந்த மூன்ருவது உலகத் தமிழ் மகாநாட்டில் கருத்துத் தெரிவித்தார்கள். அறிஞர் பெருமக்கள் இவ்வகை முயற்சியில் ஈடுபடல் இன்றியமையாதது ஆகும்.

4.0. பிறமொழிகள் — தமிழ் அகராதிகள்

பிறமொழிச் சொற்கள் தமிழால் பொருள் விளக்கம் பெற்ற நிலையில் பல்வேறு அகராதிகள் முகிழ்த்துள்ளன.

4.1. ஆங்கிலம் — தமிழ் அகராதிகள்

ஆங்கிலம் இந்தியர் வாழ்க்கையில் வெகுவாக ஊடுருவி நிற்கிறது என்பதில் ஐயமில்லை; தமிழர் வாழ்க்கையில் சற்று ஆழமாகவே

வேரூன்றிவிட்டது. இதனால், ஆங்கிலத் தமிழகராதிகளின் தேவை மிகுதி இயல்பான ஒன்றாயிற்று. இது காரணமாய் எண்ணிறந்த அகராதிகள் எழுந்தன. பல கையகராதிகளுள், பையகராதிகளும் கூடத் தோன்றின. பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் சிற்றக ராதிகள் பல தோன்றின.

4.2. 'லிப்கோ ஆங்கிலம் — ஆங்கிலம் — தமிழ் அகராதி,'[92] 'சங்கர் அகராதி,'[93] பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரைப் பிள்ளை அவர்களின், 'கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி',[94] 'நவீன ஸ்ரீமகள் பையகராதி',[95] 'எலெட் ஆங்கிலத் தமிழகராதி',[96] 'மாணவர் ஆங்கிலத் தமிழகராதி',[97] 'சிவமுத்து ஆங்கிலத் தமிழகராதி',[98] 'ஸ்ரீமகள் முதுநிலை அகராதி',[99] போன்ற பல அகராதிகள் காலத்தின் தேவைக்கேற்பக் கனிந்தன. கலை, அறிவியல், அரசியல், மெய்ப் பொருள் போன்ற பல்துறைப் பொருள் பற்றிய ஆங்கிலச் சொற் களுக்கு இணைத் தமிழ்ச்சொற்களைத் தரும் அகராதி[100] ஒன்று எழுந் தமை பாராட்டுதற்குரியது.

4.3. அகராதித் துறையில் தன்னிகரற்றுத் திகழ்ந்து வரும் சென்னைப் பல்கலைக் கழகம், திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்[101] ஒன்றை அரும்பாடுபட்டு உருவாக்கி மொழியுலகிற்கு அளித்துள்ளது. இக் களஞ்சியம் மூன்று பகுதிகளை உடைத்தாய் முறையே, 1963, 64, 65இல் வெளிவந்தது. இச்சீரிய அகராதியில் தூய தமிழ்ச்சொற்களால் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

4.4. ஞா. தேவநேயப் பாவாணர்[102] அவர்கள் ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் ஒன்றை வெளியிடப் போவதாய் 1961இல் அறிவித் திருந்தார்கள்; அது இன்னும் வெளிவராமலிருத்தல் வருத்தத்துக் குரியது.

4.5. **வடமொழி — தமிழ் அகராதி**

வடமொழிக்கிணையான தமிழ்ச்சொற்களைக் கொண்டு இலங்கும் அகராதி ஒன்று பாபநாசம் சிவன்[103] அவர்களால் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

4.6. **இந்தி — தமிழ் அகராதி**

இந்தி மொழிச் சொற்கள், தமிழ்ச்சொற்களால் பொருள் விளக்கம் பெறுமாறு அமைக்கப்பட்ட இரண்டு அகராதிகள் வந்துள்ளன. ஒன்று 1950இலும்,[104] பிறிதொன்று[105] 1959இலும் வெளிவந்தவையாகும்.

4.7. **உருசிய — தமிழ் அகராதி**

உருசியச் சொற்கள், தமிழ்ச் சொற்களால் பொருண்மை குறிக்கப் பட்ட ஓரகராதி[106] மாஸ்கோவில் மலர்ந்துள்ளது. இதன்கண் 24,000

சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன. இவ்வகராதி மூன்று அறிஞர் பெருமக்களின் அயரா முயற்சியின் விளைவாகும்.

4.8. மலாய் — தமிழ் அகராதி

மலாய் மொழியில் உள்ள தமிழ் வழக்குச் சொற்களைத் துல்லியமாய் ஆய்ந்துதெளிந்து ஏறத்தாழ 461 சொற்களைத் தொகுத்து பேராசிரியர். டாக்டர் ந. சஞ்சீவி[107] அவர்கள் விளக்கியுள்ளார்கள். விடுதலை நாட்டில் மலாய் — தமிழ் அகராதித் துறையில் முன்னோடிப் பணியாக பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் இப் பணி அமைந்திருப்பது பெருமைக்குரியது. பின்னர், எம். ஆரோக்கியசாமி என்பார் 'மலாய் — தமிழ்க் கையகராதி'[108] ஒன்றை உருவாக்கியுள்ளார்.

4.9. நேப்பாளி — தமிழ் அகராதி

நேப்பாளி மொழியில் — வழங்கப்படும் தமிழ் வேர்ச்சொற்களைத் தென்திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டுப் பொருள் விளக்கும் ஆய்வுக் கட்டுரையொன்றினைப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி[109] அவர்கள் 1964இல் படைத்துள்ளார்கள்.

4.10. மலையாளம் — தமிழ் அகராதி

மொழியியலின் தாய் மானிடவியல் எனலாம். மானிடவியல் ஆய்வால் பழங்குடி மக்கள்தம் மொழி — பண்பாடுகள் விளக்கம் பெறுகின்றன. அவ்வகையில், தமிழ் மலையாளிகளின் மொழியை ஆய்ந்து அதில் கருக்கொண்டுள்ள தமிழ்ச்சொற்களை இனங்தெளிந்து ஒப்புநோக்கி பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் மூன்று[110] அரிய சிந்தனையாரங்களை உருவாக்கியுள்ளார்கள்.

4.11. மராத்தி—தமிழ் அகராதி

மகாராட்டிர அரசு இலக்கியப் பண்பாட்டுக் கழகத்தின்[111] முயற்சியால் மராத்தி—தமிழ் அகராதி ஒன்று விரைவில் மலரவிருக்கிறது.

4.11. கலைச்சொல்லகராதிகள்

விடுதலைக்குப் பின்னே நாட்டில் இருதிறப்பட்ட மொழியலைகள் தோன்றின. ஓரலை தாய்மொழிகளைப் பின்னே தள்ளி ஆங்கிலத்தை அரவணைத்தது; ஓரலை ஆங்கிலத்திற் கிணையாகத் தாய்மொழிகளை முன்னே தள்ளி அரியணை தந்தது; இவ்வலைகளின் வேகம் தமிழகத்தில் நன்கு மையம் கொண்டதால் ஏற்பட்ட எண்ணப் புயல்கள் காரணமாய் ஏராளமான கலைச் சொல்லகராதிகள் குவிந்தன. ஆட்சியியல்,[112] மானிடவியல்,[113] பொறியியல்—தொழில் நுட்பவியல், அறிவியல்,[113] அரசியல்,[115] தாவரவியல்[116], கணிதம்,[117] புள்ளி இயல்[118], பொருளாதாரம்[119], வேதியியல்[120] விலங்கியல்[121], உளவியல்[122], வரலாறு[123], வாணிகவியல்[121], பௌதிகவியல்[125], புவியியல்[126]

போன்ற அனைத்துத்துறை ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு ஒத்த தமிழ்ச் சொற்கள் படைக்கப்பட்டுப் பல அகராதிகள் பிறந்தன. பாடநூல் களின் ஈற்றில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்கள் விளக்கப்பகுதி இத் துறை அகராதிகள் வளர்ச்சிக்கு அடிமணையெனலாம். கா. அப்பாத் துரை, மா. சண்முக சுப்பிரமணியம் போன்றவர்கள் சலியா முயற்சி யால் 'சட்டவியல்'[127] அகராதி ஒன்று வெளிவந்துள்ளது போற்றுதற் குரியது. இங்ஙன் செம்மை சான்ற கலைச் சொல்லகராதிகள் பல கனிந்துள்ளன.

4.12. மொழியியல் துறையினர், பல்வேறு இன மக்களின் — வட்டாரங்களின் மொழிகளை—வழக்குகளை ஆய்ந்து வருகின்றனர். அவ் வாய்வுகளின் பெரும்பகுதி அகராதித் துறைக்குப் பெரிதும் பயன்படு வனவாகும். அண்ணாமலை, கேரளப் பல்கலைக் கழகங்களில் சிறப்பாக நடைபெறும் இத்தகு ஆய்வுகளில் பெரும்பான்மை அச்சுவாகனமேறா மல் இருப்பது வருத்தத்துக்குரியது.

5.0. **அகராதிக் கலை பற்றிய படைப்புகள்**

விடுதலை பெற்ற பாரத மண்ணில்—சிறப்பாகத் தமிழ்மொழிப் பரப்பில் மேற்காட்டியவாறு வியப்பூட்டும் வகையில் அகராதிகள் முகிழ்த்திருப்பினும் அகராதிக்கலை பற்றிய படைப்புகள் மிகவும் அருகியே அலர்ந்துள்ளன. இவ்விடுதலைப் பெருநாட்டுச் சமுதாயத் தைப் பீடித்திருந்த 'தீண்டாமை' என்னும் அருவருக்கத்தக்க நோய் ஏறத்தாழ வேரறுக்கப்பட்டுவிட்ட சூழலில் அகராதிக்கலை படித்த பெரும்பாலரின் 'தீண்டாமை'க் குள்ளாகி நிற்கும் அவலம் நோக்கத் தக்கது; நீக்கத்தக்கது. எனினும், தமிழ்கூறும் நல்லுலகம் நன்றி பாராட்டத்தக்க வகையில் ஒருசில அறிஞர்பெருமக்கள் இத்துறைக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

5.1. பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி[128] அவர்கள், மைசூரில் நடைபெற்ற முதல் அனைத்திந்தியத் தேசிய அகராதிக்கலை மாநாட்டில் வழங்கிய ஆங்கிலக் கட்டுரையொன்றின் வாயிலாக புதிய அகராதிகள் ஏற்றுப் பின்பற்றத்தக்க பல்வேறு கருத்துகளையும் அள்ளித் தெளித் துள்ளார்கள். இக்கட்டுரை பற்றி அண்மையில் பவளவிழாக் கண்ட திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் செந்தமிழ்ச் செல்வியில் "அதன் (அக்கட்டுரையின்) கண்ணுள்ள சீரிய கருத்துகள் யாவும், அப்படியே ஏற்றுக் கொள்ளற்பாலன"[129], என்று குறித்துள்ளமை அதன் சிறப் பைப் பறைசாற்றும்.

5.2. டாக்டர் எஸ். எம். காத்ரே[130] அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய முப்பெருஞ் சொற்பொழிவுகளின் தொகுப்பாய் வந்துள்ள 'Lexicography' என்னும் நூல் ஆய்வுச் செறி வுடைய படைப்பாகும்.

5.3. 'அகராதிக்கலை ஒரு தனித்துறையாக மேலைமொழிகளில் இதுபோழ்து மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. தமிழில் தொன்று

தொட்டுப் பல்வகை அகராதி நூல்கள் தோன்றினும், எல்லாவற்றையும் பற்றிய விவரங்களைத் தன்னுள் அடக்கிய ஒரு தொகுப்பு நூல் இதுகாறும் தோன்றிலது'[131], என்பதை நன்கு தெரிந்த புலவர் சுந்தர சண்முகனார் இக்குறையை நீக்கும் வகையில் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக இரண்டு நூல்களை நல்கியுள்ளார். அவற்றுள் ஒன்று 'தமிழில் அகராதிக்கலை'[132] என்னும் மகுடத்தாங்கி 1955-இல் வெளிவந்தது. தொல்காப்பியர் காலந்தொடங்கி அகராதிக்கலையை ஆயும் இந்நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது. இந்நூலின் சாரமாய் மற்றொரு நூல் 'History of Tamil Lexicography'[133] என்னும் பெயரில் ஆங்கிலத்தில் மலர்ந்துள்ளது. இதன் சிறப்பு ஓர்ந்து மூதறிஞர் இராஜாஜி[134] அவர்கள் 'செய்திச் செறிவும் பயன் நிறைவும் உடைய படைப்பு' எனப் புகழாரம் சூட்டியுள்ளார்கள்.

5.4. ஞா. தேவநேயப் பாவாணரின் 'A Critical Survey of the Madras University Tamil Lexicon'[135] என்னும் நூல், சிறப்பாய் ஓரகராதி பற்றி எழுந்த முதல் தனித் திறனாய்வு நூல் என்பது குறிக்கத்தக்கது.

5.6. இவை தவிர, வேறு படைப்புகள் அகராதிக்கலை பற்றி எழுந்ததாகத் தெரியவில்லை. விடுதலைப் பொன்விழா காணப்புகுமுன் இத்துறை அறிஞர்தம் சிந்தனைக் கரம் பட்டு மேலும் துலங்க வேண்டுவது இன்றியமையாதது ஆகும்.

6.0. முடிவுரை

இதுகாறும் கூறியவற்றான், விடுதலைக்கும் முன்பே நன்கு வேரூன்றி விட்ட தமிழ் அகராதிக்கலை விடுதலைக்குப் பின்பு விரைந்து வளர்ந்து வருகிறது என்பது வெள்ளிடை மலையாய் விளங்கும். கூர்தலறத்தின் (evolution) கொடுமுடியை நோக்கிச் சென்றுகொண்டுள்ள அகாரதிக் கலை இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாட்டுக்கு[136] மட்டுமன்றி உலகு தழுவிய ஒருமைப்பாட்டுக்கும் உரமிடுகிற வகையில் மேன்மேலும் அறிஞர் குலத்தின் முயற்சியால் வளர்வது நலமும் பயப்பதாகும்.

மேற்கோள்கள்

1. சாமி. வேலாயுதம் பிள்ளை, 'திருக்குறள் சொல்லடைவு' (மொழியரசிப் பதிப்பகம், சென்னை, 1952).
2. ந. சி. கந்தையா பிள்ளை, 'திருக்குறள் அகராதி' (ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1961).
3. வா. மார்க்கசகாயஞ் செட்டியார், 'திருக்குறள் சொற்பொருள் அகரவரிசை' (கழகம், 1169).
4. புலவர் சுந்தர சண்முகனார், 'திருக்குறள் அகரவரிசை' (1950)—அச்சாகவில்லை.

5. மு. சண்முகம் பிள்ளை, 'திருக்குறள் சொல்விளக்க அடைவு'—தயாராகிக்கொண்டுள்ளது.
6. டாக்டர் ந. சஞ்சீவி, 'திருக்குறள் சொற் பயில் முறை அகராதி'—வெளிவரவிருக்கிறது.
7. டாக்டர் ந. சஞ்சீவி, 'திருக்குறள் ஒப்புமைக் களஞ்சியம்'—வெளிவரவிருக்கிறது.
8. (அ) டி. கிருஷ்ணசாமி ஐயங்கார், 'திவ்விய பிரபந்த அகராதி, (1961).
(ஆ) நாலாயிர திவ்விய பிரபந்த அகராதி' (சீரங்கம், தேவத்தானப் பத்திரிகை வெளியீடு, 1963).
(இ) Divya Prabandha Akaradi (Govt. Oriental Series), 1961.
9. (அ) வி. இராமச்சந்திரா சர்மா, 'கம்பர் தமிழ் அகராதி' (1951).
(ஆ) அ. சே. சுந்தரராஜன், 'ஸ்ரீமத் கம்பராமாயண அகராதி' (1971) — முதற்பகுதி (அ—ஔ) மட்டும்.
10. V. I. Subramaniam, 'Index of Purananuru (Kerala University, 1962).
11. Dr. S. V. Subramanian, 'Cilappatikaram — Descriptive Grammar with Index' (1965).
12. புலவர் மு. சுப்பிரமணியன் 'சிலம்புச் செல்வம் — செய்திச் செறிவும் பொருள் வளமும்' (1973).
13. ச. தண்டபாணி தேசிகர் 'சங்க இலக்கியச் சொற்களஞ்சியம்' (1965) முன்னுரை.
14. ச. தண்டபாணி தேசிகர் 'சங்க இலக்கியச் சொற்களஞ்சியம்' (திருவாடுதுறை ஆதீனம், 1965) — உயிரெழுத்துகள் மட்டும்.
15. 'பழந்தமிழ் நூற்சொல்லடைவு' (புதுவை பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகம், 1967, 68, 70).
16. புலவர் சுந்தர சண்முகனார், 'தமிழ் அகராதிக்கலை' (புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், 1965) பக். 442.
17. 'பாட்டுத் தொகையும்' (மர்ரே கம்பெனி, சென்னை).
18. வ. சு. செங்கல்வராய பிள்ளை, 'தேவார ஒளிநெறி' (கழகம், 1950-63........).
19. வ. சு. செங்கல்வராய பிள்ளை, 'திருவாசக ஒளிநெறி' (கழகம், 1967).
20. வ. சு. செங்கல்வராய பிள்ளை, 'திருக்கோவையார் ஒளிநெறி' (கழகம், 1970).

21. வ. சு. செங்கல்வராய பிள்ளை, 'திருவிசைப்பா ஒளிநெறி' (கழகம், 1972).

22. டாக்டர் ந. சஞ்சீவி, 'பாரதியாரின் பழந்தமிழ்' (Annals of Oriental Research, Vol. 20, Parts 1 & 2, University of Madras, 1965).

23. S. Kanakasoundary, 'A Study of Vocabulary of Cilappatikaram' (M. Litt. Thesis, 1957-58).

24. P. S. Indira, 'A Semantic Study of Sangam Vocabulary' (M. Litt. thesis, 1958-59).

25. V. Jayakumari, 'A Study of the language of the Tamil Inscriptions from 17th C. upto the middle of 11th C. A.D.'

26. S. Baghirathi, 'The Language of the Tamil Inscriptions (1050-1250 A.D.)'

27. S. Thananjayarajasingham, Language of Some Ceylon Dutch Documents.

28. R. Seethabai, 'A Study of the Index of Words in Tolkappiam' (M. Litt. thesis, 1958-59).

29. Sadhasivam, 'A Study of Ainkurunuru'.

30. S. N. Kandaswami, 'Linguistic Study of Paripadal' (M. Litt. thesis).

31. Paremeswari, 'Language of Tirukkural'

32. Kamatchi Srinivasan, 'Language of Iraiyanar Akapporul Urai'

33. T. P. Meenakshisundaram, 'A History of Tamil Language' (1965) p. 15.

34. R. Srinivasan, 'The Structure of the nouns in Kalirriyanainirai of Akananuru' (M. Litt. thesis 1961-62).

35. T. Murugarathnam, 'A Linguistic Study of Antal's Language' (M. Litt. thesis 1962-63).

36. M. Israel, 'The treatment of Morphology in Tolkappiyam' (Ph. D., thesis, 1965-66).

37. ந. சி. கந்தையா பிள்ளை, 'தமிழ்ப் புலவர் அகராதி' (1952).

38. ந. சி. கந்தையா பிள்ளை, 'தமிழ் இலக்கிய அகராதி' (1952).

39. ந. சி. கந்தையா பிள்ளை, 'காலக் குறிப்பகராதி' (1960).

40. சு. அ. இராமசாமிப் புலவர், 'தமிழ்ப் புலவர் அகரவரிசை' (கழகம், 1959, 60).

41. பாலூர் கண்ணப்ப முதலியார், 'தமிழ் இலக்கிய அகராதி' (சென்னை சென்ட்ரல் புக் டிப்போ, 1957).
42. மு. சண்முகம் பிள்ளை, 'தமிழ்நூல் விவர அட்டவணை' (1973).
43. புலவர் சுந்தர சண்முகனார், 'ரகர—றகர அகராதி' (1948)—அச்சாகவில்லை.
44. எஸ். நடராஜன், 'கார்த்திகேயினி புதுமுறை அகராதி' (ண—ன ; ற—ர ; ல—ழ—ள), கார்த்திகேயினி பிரசுரம், புதுக்கோட்டை, 1949.
45. சு. அ. இராமசாமிப் புலவர், 'சிலேடை அகரவரிசை' (கழகம், 1960).
46. மு. சதாசிவம், 'அடுக்குமொழி அகராதி' (பாரிநிலையம், 1964).
47. மு. சதாசிவம், 'ஒலிக்குறிப்பு அகராதி' (பாரிநிலையம், 1964).
48. மு. சதாசிவம், 'எதிர்ப்பத அகராதி' (பாரிநிலையம், 1965).
49. சு. அ. இராமசாமிப் புலவர், 'மேற்கோள் விளக்கக் கதை அகரவரிசை' (கழகம், 1963), இரு பகுதிகள்.
50. புலவர் இரா. இளங்குமரன், 'உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம் (அகரவரிசை), கழகம், 1971.
51. சு. அ. இராமசாமிப் புலவர், 'தொகையகராதி' (கழகம், 1969).
52. சு. அ. இராமசாமி புலவர், 'சிறப்புப் பெயர் அகராதி' (கழகம், 1970).
53. 'மக்கட் பெயர் அகரவரிசை' (தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், 1966).
54. 'மரபுத் தொடர் அகர வரிசை' (தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், 1972).
55. 'இல்லப் பெயர் அகரவரிசை' (தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், 1968).
56. புலவர் சுந்தர சண்முகனார், 'இலக்கண அகராதி' (1948) — அச்சாகவில்லை.
57. டாக்டர் ந. சஞ்சீவி, 'எண்ணடிச் சொற்களுள் ஒன்றனடிச் சொற்கள்' A. O. R. Vol. 21, Part II, University of Madras, 1967.
58. டாக்டர் ந. சஞ்சீவி, 'தமிழ் உறவு' 15-11-70, 15-12-70, 15-1-71, 15-2-71, 15-3-71, 15-4-71 இதழ்கள்.
59. A.O.R. Vol. 17, Part II, University of Madras, 1961.

60. டாக்டர் ந. சஞ்சீவி, 'சுருக்கத் தமிழ்ப் பேரகராதி'—வெளிவர விருக்கிறது.

61. ஞா. தேவநேயன், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்' (கழகம், 1949).

62. ஞா. தேவநேயன், 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு (1961).

63. 'கழகப் பழமொழி அகரவரிசை' (கழகம், 1952).

64. 'தமிழ்நாட்டுப் பழமொழி அகவரிசைச் சுருக்கம்' (தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்' 1973).

65. தமிழ்வாணன் 'கனவுகளுக்குப் பலன்,' மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17, 1968).

66. 'லிப்கோ தமிழ்—தமிழ்—அகராதி' (லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை, 1950).

67. ந. சி. கந்தையா பிள்ளை 'செந்தமிழ் அகராதி' (1950).

68. ஐயன்பெருமாள் 'கோனார் தமிழ்க் கையகராதி' (பழனியப்பா பிரதர்சு, 1955).

69. 'கழகத் தமிழகராதி' (கழகம், 1964).

70. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, 'இளைஞர் தமிழ்க் கையகராதி' (நேஷனல் பப்ளிசிங் கம்பெனி, சென்னை, 1966)

71. 'கலைக் களஞ்சியம்' (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1954—68) 10 தொகுதிகள்.

72. தெ. பொ. மீ., 'கலைக் களஞ்சியம்' (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை), தொகுதி - 5, பக். 496.

73. 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' (தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை).

74. 'சுருக்கத் தமிழ் அகராதி' (Concise Tamil Lexicon), மதராஸ் லா ஜர்னல் அச்சக வெளியீடு, மயிலை, 1955.

75. 'தமிழ் — தமிழ் — ஆங்கில அகராதி' (லிப்கோ, சென்னை).

76. A. M. Piathikorski & L. K. Routhin 'Tamil-Russian Dictionary' (Moscow, 1960).

77. புலவர் சுந்தர சண்முகனர், 'தமிழ் — இலத்தீன் பாலம்' (புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், 1970).

78. 'தமிழ் — இந்தி அகராதி' (தட்சிண பாரத இந்தி பிரச்சார சபை, 1962).

79. Dr. V. Sp. Manickam, 'A Study of Tamil Verbs' (Annamalai University, 1972).

80. S. V. Shanmugam, 'Dravidic Nouns' (Annamalai University, 1971).

81. P. S. Subrahmanyam, 'Dravidian Verb Morphology' (Annamalai University).

82. A. Sathasivam, 'The Structure of the Tamil Verb' (University of Oxford, D. Phil. thesis, 1956).

83, V. Rajam, 'Verbal Roots in Tamil' (M. Litt. thesis, 1959-60).

84. 'Dravidian Common Vocabulary' (University of Madras, 1959).

85. T. Burrow & M. B. Emeneau, 'A Dravidian Etymological Dictionary' (Oxford, 1961).

86. T. Burrow & M. B. Emeneau, 'A Dravidian Etymological Dictionary' 'Supplement' (Oxford, 1968).

87. Dr. S. Vaidyanathan. 'Indo-Aryan Loan Words in Old Tamil' (Rajan Publishers, Madras-21, 1971).

88. மகாராட்டிர அரசு இலக்கியப் பண்பாட்டுக் கழகம் 'தமிழ்—மராத்தி அகராதி' — தயாரிக்கப்படுகிறது.

89. 'ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் அவற்றிற் கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும்' (கழகம், 1952).

90. '.............. the Tamil Lexicon which astonishes by the enormous range of Vocabulary contained in the literary record of approximately two milliennia duration .... the user of this dictionary (DED) will have to go to the Tamil Lexicon and Supplement it by use of the appropriate word-indexes of the oldest Tamil texts, in so far as they have been provided by Tamil Scholars. Kittel on Kannada and Gundert on Malayalam are much less satisfactory than the Tamil Lexicon Philologically...... '

—T. Burrow & M. B. Emeneau 'Introduction (DED)' P. XVIII (1961).

91. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி, பாரிசு உலகத் தமிழ் மாநாட்டுப் பேச்சு.

92: Lifco English-English-Tamil Dictionary' Madras, 1950).

93. A. M. S. Raghavan, B.A., L.T., 'The Shankar Dictionary (1952).

94. கா. அப்பாத்துரை பிள்ளை எம்.ஏ., எல்.டி., 'கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி' (கழகம், 1952),

95. 'Modern Srimagal Pocket Dictionary' (1955) 20,000 words.

96. The Elite English-English-Tamil Dictionary (1965).

97. ரெவ். அருள் தங்கையா & கே. எஸ். சாமிநாதன், மாணவர்க்குதவும் ஆங்கிலம்—தமிழ் அகராதி' (1964) 5,000 சொற்கள்.

98. N. Rajagopal, 'Little Pearl English-Tamil Dictionary (1956).

99. R. Arulrajan, 'Srimagal Senior Dictionary English-Tamil' (1964).

100. மு. சதாசிவம், எம். ஏ., கி. சிவராமலிங்கம், எம். ஏ., 'பல்பொருள் ஆங்கிலத் தமிழ் வரிசை' (கழகம், 1962).

101. 'English-Tamil Dictionary' — 3 Volumes (University of Madras, 1963-65).

102. ஞா. தேவநேயன், 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு' (1961) பின் அட்டை காண்க.

103. பாபநாசம் சிவன், 'சம்சுகிருதம் — தமிழ் அகராதி' (1962).

104. J. V. Rajagopal, 'Hindi-Tamil Basic Dictionary (1950).

105. Kosh, 'Hindi-Tamil Dictionary' (1959).

106. M- S. Anthironav, A. Sha. Ibrahimav & K. N. Ukanava, 'Russian-Tamil Dictionary' (Soviet Encyclopaedia publication, Moscow, 1965).

107. (அ) டாக்டர் ந. சஞ்சீவி, 'மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள்' A.O.R. Vol, XVI. Part II, 1960).

(ஆ) டாக்டர் ந. சஞ்சீவி, 'ஆராய்ச்சிக் கட்டுரைகள்' (1970) பக். 62-120.

108. டாக்டர் எம். ஆரோக்கியசாமி, 'மலாய் தமிழ்க் கையகராதி' (1962).

109. டாக்டர் ந. சஞ்சீவி, 'நேப்பாளியில் தமிழ்' (A. O. R. Vol. XIX, Part II, 1964).

110. (அ) டாக்டர் ந. சஞ்சீவி, 'மலையாளிகள் தமிழ்' A. O. R. Vol. XVIII, Part I, 1962).

(ஆ) டாக்டர் ந. சஞ்சீவி, 'தமிழ் மலையாளிகள் தமிழ்' (A.O.R. Vol. XVIII Part II, 1963).

(இ) டாக்டர் ந. சஞ்சீவி, 'மலையாளிகள் தமிழ் — பொருட்சிறப்பு' (A.O.R. XIX Part I, 1964).

111. மகாராட்டிர அரசு இலக்கியப் பண்பாட்டுக் கழகம், சென்னை, 'மராத்தி — தமிழ் அகராதி' — தயாரிக்கப்படுகிறது.

112. (அ) கீ. இராமலிங்கனர் 'தமிழில் ஆட்சிச் சொற்கள்' (மதுரை விசாலாட்சிப் பதிப்பகம், 1960).

(ஆ) கீ. இராமலிங்கனார் 'ஆட்சித் துறைத் தமிழ்' (கழகம் 1968).

(இ) 'ஆட்சிச் சொல்லகராதி' (சென்னை அரசாங்கம், 1957).

113. எஸ். சக்திவேல், எம்.ஏ., எம்.ஏ., 'மானிடவியல் கலைச் சொல்லகராதி' (1972).

114. (அ) 'கலைச் சொற்கள்' பொறியியல்—தொழில் நுட்பவியல் — அறிவியல்), சென்னை அரசாங்கம், 1947.

(ஆ) 'கலைச் சொற்கள்' தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, (1973) பொறியியல்—தொழில் நுட்பவியல்.

115. 'கலைச் சொற்கள்' — அரசியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

116. 'கலைச் சொற்கள்; — தாவரவியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. 1971).

117. 'கலைச் சொற்கள்' — கணிதம் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

118. 'கலைச் சொற்கள்' — புள்ளியியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

119. 'கலைச் சொற்கள்' — பொருளாதாரம் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

120. 'கலைச் சொற்கள்' — வேதியியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

121. 'கலைச் சொற்கள்' — விலங்கியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

122. 'கலைச் சொற்கள்' — உளவியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

123. 'கலைச் சொற்கள்' — வரலாறு (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

124. 'கலைச் சொற்கள்' — வாணிகவியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

125. 'கலைச் சொற்கள்' — பௌதிகவியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971).

126. 'கலைச் சொற்கள்' — புவியியல் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973).

127. 'சட்டச் சொல் அகராதி', தமிழ்நாடு அரசாங்கம், 1968.

128. Dr. N. Sanjeevi, 'Some suggestions for the making of New Dictionaries' (A.O.R. Vol. XXIII, Part I, 1970).

129. வ. சுப்பையா பிள்ளை, 'செந்தமிழ்ச் செல்வி' (அக்டோபர், 1972) பக். 71.

130. புலவர் சுந்தர சண்முகனுர், 'தமிழ் அகராதிக்கலை' (புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பக வெளியீடு, 1955) பக். 3.

131. புலவர் சுந்தர சண்முகனுர், 'தமிழ் அகராதிக்கலை' (புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், 1955).

132. Dr. S. M. Katre, 'Lexicography' (Annamalai University, 1965).

133. Pulavar Sundara Shanmuganar, 'History of Tamil Lexicography' (Puthuvai Painthamizh Pathippakam, 1967).

134. '......a most informative and useful publication' — Rajaji, Foreword to 'History of Tamil Lexicography' (1967).

135. G. Devaneyappavanar, 'A Critical Survey of the Madras University Tamil Lexicon (1955).

136. டாக்டர் ந. சஞ்சீவி, 'சொல்லாய்வும் ஒருமைப்பாடும்' (A.O.R. Vol. XXI, Part I, 1966.)—காண்க.

விடுபட்டவை

(1) S. காமாட்சிநாதன் — நற்றிணை அடைவு.

(2) N. குமாரசாமி இராஜா — குறுந்தொகை அடைவு.

(3) S. அகத்தியலிங்கம் — பதிற்றுப்பத்து அடைவு.

(4) P. சுப்பிரமணியம் — கலித்தொகை அடைவு.

(5) S. V. சுப்பிரமணியம் அகநானூற்றகராதி.

(6) R. M. சுந்தரம் — பத்துப் பாட்டு அடைவு.

(7) மு. கோவிந்தசாமி — திருக்குறள் பொருளகராதி.

(8) D. ஆண்டியப்பப் பிள்ளை — கலித்தொகையகராதி.

(9) A. தாமோதரன் — திருக்குறளடைவு.

(10) மு. பிளாரன்சு கேதரின் — கலிங்கத்துப்பரணி அடைவு.

(11) A. கோவிந்தன்குட்டி — கம்ப இராமாயண அடைவு.

(12) Lexicon of Travancore Inscriptions, Dept. of Archaeology, Trivandrun, 1947.

(13) C. சிங்காரவேலு — அப்பர் தேவாரம் அகராதி.

(14) S. P. திண்ணப்பன் — பழமொழி அடைவு.

(15) S. Agasthialingom & S. V. Shanmugam, the Language of Tamil Inscriptions, 1250—1350 A.D.

(16) S. Agasthialingom and S. Sakthivel, Bibliography an Dravidian languages.

(17) திருமலை முத்துசாமி — திருக்குறள் நூலடைவு.
(18) க. த. திருநாவுக்கரசு — தொல்காப்பிய நூலடைவு.
(19) Gnanagiri, Tamil words in English language.
(20) R. காசிராசன் — சிலப்பதிகார ஆய்வடங்கல்.
(21) A. கோவிந்தன்குட்டி — மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் அடைவு.
(22) M. மாசிலாமணி — முக்கூடற் பள்ளு அடைவு.
(23) பிரமிளா எஸ். நதேனியல் — நன்னூல் அடைவு.
(24) கே. வசந்தகுமாரி — வீரசோழியம் அடைவு.
(25) L. குளோறியா சுந்தரமதி—இறையனார் களவியல் அடைவு.
(26) N. இராஜகோபாலன் — தண்டியலங்காரம் அடைவு.
(27) N. இராமலிங்கம் — அற்புதத் திருவந்தாதி அடைவு.
(28) சுஜயா கே. தாஸ் — யாப்பருங்கலக்காரிகை அடைவு.
(29) S. காமாட்சி — கண்ணன் பாட்டு அடைவு.
(30) A. இலாமுவேல் — இரட்சணிய யாத்திரிகம் அடைவு.
(31) P. சிதம்பரதாணு — தமிழ்விடுதூது அடைவு.
(32) V. வீராசாமி — பெரியபுராணம் அடைவு.
(33) R. பிச்சை — பெருங்கதை அடைவு (தயாரிப்பில்).
(34) R. தாணுமலையபெருமாள் பிள்ளை — மணிமேகலை அடைவு
(35) N. குற்றாலம் பிள்ளை—வில்லிபாரதம் அடைவு (தயாரிப்பில்).
(36) க. ப. அறவாணன்—தொல்காப்பிய அடைவு (தயாரிப்பில்).
(37) கலைச்சொற்கள் — வேதியியல், பூ. சா. கோ. அறநிலைய வெளியீடு, கோவை, 1968.
(38) கலைச்சொற்கள் — பௌதிகவியல், பூ. சா. கோ. அறநிலைய வெளியீடு, கோவை, 1968.
(39) D. C. Carkkar, Epigraphical Glossary.
(40) Srinivasa Ramanuja achariyar, Sanskrit—Tamil Dictionary, 1957.

30

விடுதலைக்குப்பின் கட்டுரை வளர்ச்சியில் மகளிர் பங்கு

திருமதி. கை. சி. இராசமாணிக்கம், எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், நிர்மலா மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர்.

இருபதாம் நூற்றாண்டில் உரிமை உணர்வு பெருகியது. ஆண்களும் பெண்களும் கல்வி பெறத் தொடங்கினர். ஐரோப்பியர் தொடர்பால் உரைநடை வளர்ச்சி பெற்று, மறுமலர்ச்சி நடையும் கால்கொள்ளத் தொடங்கியது. தமிழில் சிறுகதை, புதினம், பயண இலக்கியங்கள், விஞ்ஞான நூல்கள், கட்டுரைகள் எனப் பலதுறை வளர்ச்சியும் ஏற்பட்டு மொழிவளம் பெற்றது.

கல்வியறிவு பெற்ற மகளிரும் மொழி வளர்ச்சியில் உரைநடையால் வளர்ந்த புதிய இலக்கியத் துறைகளில் ஆர்வங்காட்டி எழுதத் தொடங்கினார்கள். கட்டுரைகள் என்பன இலக்கியம், இலக்கணம், சமயம், வரலாறு, விஞ்ஞானம், மருத்துவம், கலைகள் எனப் பல கருத்துகளை மையமாகக்கொண்டு தீட்டப்பெறுகின்றன. திறனாய்வுக் கட்டுரைகளும், மொழிபெயர்ப்பு நூல்களும் சில வெளிவந்துள்ளன. விரிவெய்தியுள்ள இத்துறையில் விடுதலைக்குப் பின் மகளிர் பங்கு எத்தன்மையது என இக்கட்டுரையின்கண் காண்போம்.

இலக்கியக் கட்டுரைகள்

திருக்குறள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்த நூல்; என்றும் புதுமையான நூல். வள்ளுவர் பெருந்திணை, கைக்கிளை பற்றிக் கூறாமல் அன்பின் ஐந்திணை பற்றி மட்டுமே காமத்துப்பாலில் கூறியுள்ளார். குறிஞ்சி களவியலிலும், பாலை கற்பியலிலும், முல்லையும் நெய்தலும், பாலையிலேயே அடக்கப்பட்டும் மருதம் இறுதிப் பகுதியிலும் கூறப்படுகிறதென 'வள்ளுவர் வகுத்த வழி'[1]யில் வாசுகி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

திருவள்ளுவர் மனிதப் பண்புக்கு ஒவ்வாதவற்றைச் செய்பவர்களைப் பாவைகள் எனக் குறிப்பிடுவார். நாணமற்றோன், கொடைப்

பண்பற்றோன் கல்லாதவன் ஆகியோர் இயக்கத்தைப் பாவையி னியக்கம் எனக் குறிப்பிட்டு நாகரிகமான மக்கள் அல்லர், உயிரற்றோர் என நவில்வர். திருமதி தரணி பாஸ்கரன் அவர்களது 'பாவையி னியக்கம்'[2] இக்கருத்தை வலியுறுத்துகிறது.

ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்தும் இல்லற வாழ்க்கையில் வள்ளுவர் பெண்ணுக்கே உயர்வும் சிறப்பும் அளிக்கிறார். 'வாழ்க்கைத் துணைநலம்' — ஒன்பது குறட்பாக்களால் அவருடைய பெருமையைப் பேசுகிறது. இக்கருத்து வலியுற இலக்கியங்களும் துணை செய்கின்றன. திரு. வி. க.வின் கருத்துகளும் உடன் வர, ந. சரோஜினி தேவியாரின் வாழ்வரசி[3] உண்மையான வாழ்வுக்கு அரசி ஆகிறாள்.

திருமதி. காமாட்சி குமாரசாமி அவர்களின் வள்ளுவர் காட்டிய பெண்மை,[4] குறளில் மகளிர்[5] என்பன பெண்ணின் பெருமையை வள்ளுவர் வழிநின்று சாற்றுவன. கண்ணோட்டமெனும் காரிகை, நாண் எனும் நல்லாள், நிலமெனும் நல்லாள், திருமகளைச் செய்யாள் என்று கூறுவனவற்றை நோக்கும்போது சிறந்தனவற்றையெல்லாம் பெண்மையாக்கி மகிழ்ந்தார் வள்ளுவர் எனலாம்.

வேண்டியார்க்கு வேண்டுவனவற்றை வேண்டியாங்கு வழங்குவது குறள் என்பது 'குறள் ஒரு கற்பகத்தரு'[6] எனும் பகுதியிலும், ஒரு சிறந்த நாட்டுக்கு வேண்டுவன யாவை, வேண்டாதன யாவை என்ப தைக் குறள்வழி நின்று விளக்கம் செய்து யாவற்றிற்கும் மேலாக நிலையான நல்லாட்சியே இன்றியமையாதது எனும் கருத்தினைத் திருமதி. காமாட்சி குமாரசாமி வள்ளுவர் கண்ட நாட்டிலும் விளக்கு கிறார்.[7] இவருடைய கட்டுரைகளிற் பல பெண்களைக் குறித்தும், வள்ளு வரை ஒட்டியுமே அமைகின்றன.

பிறன்மனை நோக்காத பேராண்மை ஆகிய நல் அறம் திருக் கோவையார் பாடல் ஒன்றன் துணைகொண்டு அழகுற விளக்கப்படு கிறது, 'தாமரைக்கண்ணி அவர்களின் வள்ளுவர் வகுத்த நெறியில்.'[8]

இளங்கோ வேந்தன் சிலம்பும், சாத்தனாரின் மணிமேகலையும் மகளிரைப் பெரிதும் கவர்ந்துள்ளன. கண்ணகியும் மாதவியும் பல காட்சிகளைத் தருகின்றனர். 'துன்பமெனும் தீயில் வெந்து சாம்ப லாகாது மாசற்ற பொன்னானதால் தேசுற்ற தங்கமாய் வெளிப் போந்த கண்ணகி — கலை என்னும் வலைவீசி கண்ணகியின் வாழ்வைக் குலைத்துவிட்ட விலைமாதாம் மாதவி'[9] என்று காமாட்சி குமாரசாமி அவர்களும், 'பொதுநலத்துக்காகத் தன்னலத்தைத் தியாகம் செய்த கண்ணகி, தன் உரிமை வாழ்வுக்காகப் பிறர் உரிமை கவர எண்ணாத மாதவி'[10] என்று ந. சரோஜினிதேவியும், மண்ணக மாந்தர்க்கு அணி யாகி விண்ணக மாதர்க்கு விருந்தானாள் கண்ணகி'[11] எனக் குழந்தை அம்மாள் அவர்களும் கூறுவர்.

தாய் கொடியள் என உலகம் கூறுகிறது. இது உண்மையா? காதல் கொண்டு ஊடல்கொள்ள உரிமையற்று — காதலனே பொய் கூட்டும் மாயத்தாள் என ஏசுதற்குக் காரணமான கணிகை குலப் பிறப்பைக் கடிந்து தன் மகள் மணிமேகலை 'வான்துயருறுக்கும் கணிகையர் கோலம் காணுதொழிக'வெனத் துறவுக்கோலம் பூணச் செய்தாள் மாதவி. கற்பு பெரிதெனத் தானும் வாழ்ந்து தன் மகளையும் உருவாக்கிய மாதவியின் தாய் உள்ளம் சிறந்ததுதான் என்று திருமதி. கிருஷ்ண சஞ்சீவி அவர்களது 'பெற்றவள் இதயம்'[12] பேசுகிறது.

அறச்செல்வி மணிமேகலையின் அழகு, அறிவு, அருள், அடக்கம், தியாகம், தொண்டுள்ளம்—இவை அனைத்தையும் பற்றிக் காமாட்சி குமாரசாமி[13] அவர்களும், குழந்தை அம்மாள் அவர்களும்[14] விரிவாக மொழிகின்றனர். ஆதிரையின் கற்பும்[15] ஆதிமந்தியாரின் நலமும்[16] பாராட்டுப் பெறுகின்றன.

முன்கூறியபடி, ஒருவரைப்பற்றி ஆயாமல் ஒத்த இயல்புடைய பாடல்கள், ஆசிரியர்கள் ஆகியோரை ஒப்பிட்டுக் காணும் புதிய போக்கு இப்போது தோன்றி வளர்ந்து வருகிறது. இது மொழி வளர்ச்சியில் நல்ல அறிகுறி. அகப் பாடல்களில் நிலம், பொழுது குறித்து வரையறையிருப்பினும் கவிஞர் பாடல்களில் தனித்தன்மை உண்டு என்பதை விளக்க அள்ளூர் நன்முல்லையார், ஆலங்குடிவங்கனார், ஓரம்போகியார், ஔவையார், நக்கீரனார், பரணர் ஆகியோரின் மருதத் திணையில் பாடப்பட்ட பாடல்களை ஆய்கிறார் கட்டுரை ஆசிரியர். அப்பாடல்களை நெறிப்படுத்தித் தலைவன், தலைவி, தோழி, பரத்தை ஆகிய பாத்திரங்களைக் கொண்டு ஒரு சிறு நாடகமே உருவாகி விடுகிறது, சாலினி இளந்திரையன் அவர்களின் 'சங்ககாலப் பாத்திரப் பண்போவியத்தில்.'[17]

முல்லை பாடிய மூன்று புலவர்களை ஒப்பிட்டு இடைக்காடர் களக் காட்சிகளுக்கு முதலிடம் தருவதனையும், மள்ளனார் பாத்திரப் படைப்புக்கு முதலிடம் தந்து உணர்வினை அவர்கள் மேலேற்றிக் கூறுவதனையும், மாசாத்தியார் முல்லைமலர் ஒன்றையே கொண்டு காலம், நிலம், தலைவியின் உணர்வு ஆகிய அனைத்தையும் காட்டும் திறத்தையும் தெளிவான, சுருக்கமான முறையில் இயம்பியுள்ளார்[18] குளோரியா சந்திரமதி அவர்கள்.

அவையடக்கம், மழை பொழிதல், ஏரி குளங்கள் நிறைதல், வேதாந்தக் கருத்துகளை இயற்கையோடு பின்னிப் பிணைத்தல், ஐந்து நில வருணனை, இயற்கை நாடக மேடை அமைப்பு என்று பல நிலைகளில் கம்பர் உமறுப் புலவர், வீரமாமுனிவர் ஆகியோரிடையே காணப்படும் ஒற்றுமைகள் ஆயப்படுகின்றன. உமறுப்புலவரும், வீரமாமுனிவரும் கம்பரிடம் அள்ளிக்கொண்ட அளவு தெள்ளிதின் புலப்படுத்தப்படுகிறது சரசு[19] அவர்களால் 'முந்நூல் ஒப்புமை'யில்.

மேரி மாசிலாமணி அம்மையார் அவர்கள் தம் மேனாட்டுப் பயணத்தின்போது நிகழ்ந்த நிகழ்ச்சி, பெற்ற அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் உண்மைக் கருத்தினை ஆய்கிறார்; விளக்குகிறார்.[20] வெறும் பொருளும் விளக்கமும் எனும் பொதுமுறையை மாற்றி அனுபவ விளக்கம் சொல்வது அழகாகவும் புதுமையாகவுமுள்ளது.

தெய்வம், சகுனம், கனவு தொடர்பான பல மூடநம்பிக்கைகள் சங்ககாலத்து மக்களிடையே நிலவி வந்தன. இவை பறவை, விலங்கு, மாந்தர் வழிப்பயனூட்டின எனும் கருத்தை இலக்கியச் சான்றுகளுடன் விவரிக்கிறார்[21] தாயம்மாள் அறவாணன் அவர்கள். திலகம் என்பது ஓர் ஒப்பனைக் கலையாக முதலில் இருந்து பின்னரே மங்கலக்குறியீடாக மாறியிருக்கக்கூடும் என்றும், அச்சொல் பயின்றுவரும் இலக்கியம் கல்வெட்டுகளைச் சுட்டி ஆய்ந்தும், இறுதியில் திலகம் பொட்டன்று, திலகம் எனும் மரத்தினது பூவின் வடிவில் செய்யப்பட்ட ஒரு அணிகலமே என்றும், நெற்றியில் அணியப்பட்டது என்றும் கூறுகிறார்[22] தாயம்மாள் அறவாணன். இவைகள் அக்காலச் செய்திகள் சிலவற்றை அறியத் துணையாகின்றன.

கம்பராமாயணமும் மகளிர் கண்களுக்குத் தப்பவில்லை. 'அறம் வளர்த்த கண்ணனான்[23] 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்'[24] என்பன கம்பனது இராமனின் அறக்கண்ணோட்டத்தை விளக்குகின்றன. புறங்கொடாப் போர்வீரன்[25] எனும் பகுதியில் இராவணனின் வீரமும், மானமும் தெளிவாக விளக்கப்படுகின்றன.

கம்பன் காட்டும் நட்பு பல்வகைப்பட்டது. பல காரணங்களையுடையது. ஒத்த மனநிலையுடைய சுக்கிரீவன்-இராமன் நட்பு; அரசியலும் தன்னல நோக்கும் கொண்ட வீடணன்-இராமர் நட்பு; பயன் ஏதும் கருதாத குகன்-இராமன் நட்பு; அறம் வழுவாதுதவிய சடாயு தசரதன் நட்பு. அச்சம் காரணமாக அமைந்த வாலி இராவணன் நட்பு; துன்பத்துட் துப்பாய திரிசடை-சீதை நட்பு எனப் பலவகை நட்புகள் குறித்துக் கம்பர் வழிநின்று விளக்குகிறார்[26] ஜாசுமின் ஆசிர். நட்புப்பற்றி வரலாற்று வழி ஆய்வு சிறந்ததாக உள்ளது. தெளிந்த நடையும் கருத்துச் செறிவும் உடையது இந்நூல்.

திறனாய்வுக்கலை இன்று வளர்ந்துவரும் கலை. இத்துறையை மேற்கொண்டு பல கட்டுரைகள் வழங்கியுள்ளார் திருமதி. தியாகராசன். அவர் இக்கட்டுரைகளைத் தமிழில் வரைந்திருந்தால் இன்னும் சிறப்பு. எட்டுத்தொகை நூல்களில் அக இலக்கியங்களில் பாத்திரங்களை எண் வகை உளப்போக்குடையோராகப் பிரித்து, அவ்வுளப்போக்கினை விளக்கும் வகையில் மேற்கோள்களும்[27] காட்டி விளக்குகிறார்.

உள்ளுறை இறைச்சி ஆகியவைகள் மற்றொரு கட்டுரையில் விளக்கப்படுகின்றன. உள்ளுறை என்றாலென்ன? அது தோன்றுமிடம்

யாது, வகைகள் யாவை, யார் யார் கூற்றில் எவ்வெப் பொருள்களின் அடிப்படையில் அமையலாம் என விளக்கப்படுகின்றன.[28] இவை சங்க காலத்து மட்டுமல்லாது இன்றும் இலக்கியங்களில் உள்ளன. சமுதாயத்தில் வாழவேண்டிய மனிதன் அதனோடு ஒட்ட ஒழுகும்படி, உண்மையை மறைத்துப் பொய்நிலையை (Mask of Persona) க்கொள்ள வேண்டியுளது. சங்கச் சான்றுகளுடன் ஆசிரியர் நிற்கவில்லை. உள்ளுறை, முகமூடி நிலை ஆகிய இரண்டுக்கும் பாரதி, புதுமைப் பித்தன், செய்காந்தன், அகிலன், லட்சுமி, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் கதைகளினின்றும்[29] விளக்கம் தருவது சிறப்பாக உள்ளது. சங்க இலக்கிய எல்லையில் உரையாசிரியர்கள் விளக்கியனவற்றை மேனாட்டுத் திறனாய்வு விதிகளையும் நம் இலக்கியங்களுடன் அதுவும் தற்கால இலக்கியங்களுடன் கூட்டி உணர்த்துவது எளிதாக அனைவர்க்கும் விளங்குவதாக உள்ளது.

காமாட்சி குமாரசாமி, ந. சரோஜினிதேவி, தரணி பாஸ்கரன் ஆகியோரின் நடை தெளிவான தமிழ்நடை. குழந்தை அம்மாளின் நடை மிகமிக எளியது. சிவபார்வதி அம்மையார் எழுதுவது தெளிந்த இலக்கிய நடை. திருமதி. கிருஷ்ணா சஞ்சீவி அவர்கள் நடையில் சிலப்பதிகார வரிகள் அழகாக ஆளப்பட்டுள்ளன. காமாட்சி குமாரசாமி ஓரிடத்தில் 'விலைமாதாம் மாதவி'[30] என்பது ஆயத்தக்கது.

இலக்கணம்

இலக்கணக் கட்டுரைகள் மிகச் சிலவே உள்ளன. அக்கட்டுரைகளும் வேற்றுமொழி இலக்கணத்துடன் தமிழிலக்கணத்தை ஒப்பிடுவது; தமிழிலேயே வேறு காலங்களில் தோன்றிய நூல்களை ஒப்பிடுவது என இருவகையா யமைகின்றன. தொல்காப்பியம், அஷ்டாத்யாயி ஆகிய இரு இலக்கண நூல்களையும் ஒப்பிட்டுத் தொகைகளின் அமைப்பு எவ்வாறுளது என ஆயலாம். வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய நான்கும் வடமொழி தமிழ் ஆகிய இருமொழிகளிலும் உள்ளன. தமிழில் தொகைகள் தன் விளக்கம் தருவனவாகவுள்ளன. விளக்கம் தரவல்ல உறுப்பு தொக்கி நிற்பதால் பெயர் பெறுகின்றன. வடமொழியில் இவ்வாறன்று.[30] வேறுபாடு மிகுதி.

இவ்வண்ணமே இருமொழிகளிலும் உள்ள வேற்றுமைகளும் ஒப்பு நோக்கப்பட்டு ஒற்றுமை, வேற்றுமைகளும் விளக்கப்படுகின்றன. தொல்காப்பியம் விளக்கும் வேற்றுமை அமைப்பு முறைக்குப் பாணினியின் முறைக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. தொல்காப்பியத்தில் எளிமை உண்டு. பாணினியில் பல சிக்கல்கள் உண்டு.[31] இவையனைத்தையும் டாக்டர் மீனாட்சி அவர்களின் ஒப்பியல் ஆய்வில் தெளியக் காணலாம்.

நிகழ்கால வினையெச்சமென்றொன்று சங்ககாலத்து இல்லை செய என்பது முக்காலத்துக்கும் பொதுவாயிருந்தது. சங்க இலக்கியங்

களில் செய்பு என்பது நிகழ்காலமுணர்த்தியது. செய்யா என்னும் வாய்பாட்டு எச்சம் பல்லவர் காலத்துத் தேவாரத்தில் நிகழ்கால முணர்த்துவதை வரலாறு கூறுகிறது. தேவாரப் பாடல்களிலேயே செய்யா என்பதோடு 'நில்' கூட்டும் வழக்கு வந்துவிட்டது. பல்லவர் காலம் 'இன்ற' எனும் நிகழ்கால இடைநிலையையும் தோற்றுவித்தது. செய்யும் என்பதனுடன் கால், உழி, இடத்து என்பன சேர்ந்து நின்று நிகழ்கால வினையெச்சமாதலுமுண்டு. செய்யாநின்று எனும் எச்சம் சோழர் காலத்து உரையாசிரியர்களால் ஆளப்பட்டு நிலைபேறெய்தியது. செயவெனெச்சம் செய்யாநின்றவென வளர்ந்த வளர்ச்சி வரலாற்று முறையில்[33] காமாட்சி சீனிவாசன் அவர்களால் விளக்கப்படுகிறது.

ஆகுபெயர், வினையெச்சங்கள், ஆறனுருபு, போல என்பதற்கீடான சொற்கள் இப்படிப் பல கூறுகளில் தொல்காப்பியத்தில் காணப் படாத பல நன்னூலில் காணப்படக் காரணம் யாது? மொழி வளர்ச்சி தவிர வேறெதுவாகவுமிருக்கவியலாது. நன்னூல் வழங்கும் புதிய விதிகட்கெல்லாம் தமிழ் ஞானசம்பந்தன் பாடலிலிருந்து சான்று காட்டி நிறுவுகிறுர் பா. சவுந்தரா தமது 'நற்றமிழ்க் கின்றுணை'யில்.[34]

ஏவல் வினை பற்றியொரு விளக்கம். அது காலம் காட்டுவதில்லை. அதன் பாகுபாடுகள் ஒருமை, பன்மையென உடன்பாடு எதிர்மறை யென — ஒவ்வொன்றிலும் மரியாதை, மதிப்பு, வெறுப்பு என மூவகை விளக்கம் சான்றுகளுடன் தருகிறுர்[35] கே. புஷ்பவல்லி அவர்கள்.

புறப்பொருளிலும் இந்த ஒப்புநோக்குக் காணப்படுகிறது. தொல்காப்பியப் புறத்திணையியலும், புறப்பொருள் வெண்பாமாலையும் ஒப்பு நோக்கப்படும்போது பு.வெ.மா. உள்ள பொதுவியல் தொல்காப்பியத்திலில்லை. அத்துறைகள் அனைத்தும் காஞ்சி, கரந்தை ஆகிய திணைகளிற் கலந்துமைந்துள்ளன. பொதுவியல் நிலையாமையையும், அறத்தையும் ஒருங்கியைத்து உணர்த்தியது. இக்கருத்துகள் 'பொதுவியல்' எனும் கட்டுரையில் விளக்கப் பெறுகின்றன.[36]

ஒப்புநோக்கு சற்றுத் தொல்லை தருவதெனினும் இம்முறை வளர வேண்டும். வளருமாயின் மொழிவளர்சிக்கு அது நல்ல அறிகுறி.

சமயம்

சமயம் வள்ர்த்த மகளிரைப் பற்றிய கட்டுரைகள் பலவாயுள்ளன. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி பற்றிச் சிவபார்வதி அம்மையார், காமாட்சி குமாரசாமி, சரோஜினிதேவி ஆகியோர் அவர் செய்த வைணவ நூல் குறித்தும், தலைவன், தலைவி நெறி பற்றியும் விளம்புவர். சைவம் வளர்த்த மங்கையர்க்கரசியார், திலகவதியார், திருநீலகண்டர் மனைவியார் குறித்து சரோஜினிதேவியும்[37] பௌத்தம் வளர்த்த மணிமேகலை, சமணம் புரந்த கவுந்தி ஆகியோர்பற்றிக் காமாட்சி

குமாரசாமியும்[38] விளக்குகின்றனர். உயிர், உடல், உள்ளம் ஆகியவற்றைப் பக்குவப்படுத்துவது சமயம் எனக்கூறி, சமயம் சமையல் என்பன புதிய விளக்கம் பெறுகின்றன, 'சமயம் காத்த மகளி'ரில்.[39]

வள்ளலாரின் அன்புநெறி குறித்து இருவர் ஆய்கின்றனர். அன்புடைமை, அருளுடைமை, இரக்கமுடைமை, உண்மையுடைமை, அனைவரும் சமம் எனக் கருதும் ஆன்ம நேய ஒருமைப்பாடு எனும் சமரச சன்மார்க்க நெறியின் குறிக்கோள்கள் சிவகாமிசுந்தரி.[40] சரோஜினி தேவி[41] ஆகியோரால் விளக்கப்படுகின்றன. வள்ளலார் — நூல் நடை எதுகை, மோனையுடன் கூடிய சொற்பொழிவு நடை போன்றிருத்தலில் — நடையில் பெருமிதம். செறிவு அமையவில்லையென்றே கூறவேண்டும். 'வள்ளலார் எளிய இனிய தமிழில் மனுமுறை கண்ட வாசகம் எழுதினார்' (வள்ளலார் - பக்கம் 4) என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா?

சைவம் பேணிய மகளிர் பற்றிக் கூறும் பெரியபுராணப் பெண்மை ஓர் அரிய நூல். சேக்கிழார் மகளிர்க்கு என்ன சிறப்படை தருகிறாரோ அதுவே கட்டுரைத் தலைப்பாக அமைவது சிறப்பு. பூம்பாவை-கண்ணுதற் கருணை வெள்ளம்; திருவெண்காட்டு நங்கை — மனையறத்தின் வேர். மங்கையர்க்கரசியார் — எங்கள் தெய்வம் என்பன சான்றும். சேக்கிழாரின் அடிகளே பல இடங்களில் பயின்று ஆசிரியரின் வினைமுடிவு பெறுவதால் இலக்கிய நடை அமைந்துளது. பிரியா உலகெய்தும் கற்புநெறி, மனைத்தவம், ஒழியாதுணர் வழி, மேல் நெறி ஆகியவற்றைத் தெளிவாக விளக்குகின்ற முறைமை ஆசிரியரின் சைவப்பற்றையும், சேக்கிழாரிடம் கொண்ட ஈடுபாட்டையும் விளக்குவனவாயுள்ளன. "கவிச்சக்கரவர்த்தி கம்பரது கவித்திறத்தில் ஈடுபட்டு அவ்வழகை உணர்வோருக்கு அதில் அழகினும் காமச் சுவையே மேலோங்கி உயர்வது தெரியும்" எனும் கூற்று ஆயற்பாலதாகும்.[42]

சிவபார்வதி அம்மை — காரைக்காலம்மையாரின் வரலாற்றில் கூறும் அடியவர் பெருமை, அவரைப் பேணுதலாற் பெறும்பயன், பேறு பெறுவது உயிரே, உடலன்று, உமையம்மையின் திருநோக்கு. அம்மையாரைச் சார்ந்தமைக்கு உலகியலோடுகூடிய விளக்கம், சத்தி நிபாதம்—சத்தி வீழ்ச்சியின் தெளிவு ஆகிய சித்தாந்த நெறி பற்றிய[43] அம்மையாரின் தெளிவான அறிவைப் புலப்படுத்தும்.

சைவத்தின் குறிக்கோள் — மக்கள் தொண்டு. அதுவே, மகேசன் தொண்டு. இதனையே தேவர்க்காக நஞ்சினையுண்டு. உணர்த்தினான் பரம்பொருளாகிய சிவபெருமான் முதற்றொண்டர். சைவ சமயத்தவர்க்கு முதற்றொண்டன் வழிகாட்டி. அவன் நெறி செல்லுக எனக் காமாட்சி குமாரசாமி கூறுகிறார்.[44]

சைவ சமயம் குறித்த விளக்கங்களே மிகுதியாக உள்ளன. பிற சமயங்கள் பற்றிய சமய தத்துவங்களையும் அறிய முற்படவேண்டும்.

வரலாறு

இத்துறையில் மகளிர் முயற்சி மிகமிகக் குறைவு. பாண்டியர் வரலாறு பற்றியறிய புறம், அகத்தில் சில கருத்துகளே துணையாகின்றன. இந்த இலக்கியங்களையும் மாங்குளம் என்ற இடத்தில் உள்ள நெடுஞ்செழியனைப்பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டையும் துணையாக்கி எட்டுப் பாண்டிய மன்னர்களை, சில விதிமுறைகளை அமைத்துக் கொண்டு வரிசைப்படுத்திக் காட்டுகிறார்.[45] பதிற்றுப்பத்து சேரர் வரலாற்றுணர்த்தும் நூல். இதனை, ஒப்புவாரும் மறுப்பாரும் உளர். கரூருக்கு அருகே புகளூர் எனும் இடத்தில் இப்போது கிடைத்துள்ள கல்வெட்டு 7, 8, 9ஆம் பத்தில் பாடப்பட்டுள்ள செல்வக் கடுங்கோ ஆழியாதன் பெருங்கடுங்கோன் (பெருஞ்சேரலிரும் பொறை) இளங்கடுங்கோ — இளஞ்சேரலிரும்பொறை ஆகியோரைப்பற்றிக் கூறுகிறது. முதற்பத்தின் தலைவன் உதியஞ்சேரலாதனைக் குறித்துக் கூழூர்ச் செய்தி கூறுகிறது. புகளூரில் கிடைத்துள்ள மற்றொரு கல்வெட்டு பிட்டன், பிட்டங்கொற்றன் ஆகியோரைப்பற்றிக் கூறுகிறது. கல்வெட்டு ஆய்வும், அவ்வவ்வூர்ச் செய்திகளும், பதிற்றுப் பத்துச் செய்திகளும், இலக்கியச் செய்திகளும் வரலாற்று உண்மையுடையன என இந்திரா சுபலட்சுமி விளக்குவது ஆர்வத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகிறது.[46] நம் பழமை வலியுறுகிற நல்லவரி.

கவிஞர்கள் பற்றியன

கவிமணி, பாரதியார், பாரதிதாசன் ஆகிய கவிஞர்களைப் பற்றிப் பெண்டிர் பலர் கருத்துகள் வழங்கியுள்ளனர். மூன்று கவிஞர்களுமே எளிய நடையைப் போற்றியவர்கள். சிறுவர்க்கான பாடல்கள், இயற்கைக் காட்சிகள், நாட்டுப் பாடல்கள், சீர்திருத்தப் பாடல்கள், பெண்ணின் பெருமை, உயிர்களிடத்தில் அன்பு ஆகிய பலவேறு வகையான கருத்துகள் பாடல்களில் இடம் பெறுகின்றன. கவிமணி அவர்களைக் குறித்துக் காமாட்சி அம்மையாரும்[47] பாரதிதாசனைக் குறித்து இராசாத்தி துரைசாமியவர்களும்[48] எண்ணங்களை வழங்கியுள்ளனர். கவிமணியவர்களின் மொழிபெயர்ப்பு நூல்கள் கருணைக்கடலும், பாரசீகக் கவியமுதமும் முதல் நூல் எனும்படி செம்மையாய் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

பாரதியின் வசன கவிதைக்குக் கருத்துரை வழங்கும் வகையில் கற்பனையோட்டம் கலந்த விளக்கங்களுடன் விசயபாரதி அவர்கள் ஓர் நூலைப் படைக்கின்றார்.[49]

சாதம் படைக்கவும் தெய்வச் சாதி படைக்கவும் வல்ல புதுமைப் பெண்களைப்பற்றி சரோஜினிதேவியும்[50] இராசாமணி அம்மையார்[51] அவர்களும் குறிப்பிடுகின்றனர். அச்சமற்ற அறிவுடைய ஆட்சித் திறனுடைய பெண்மையையே பாரதி விரும்பினர். நாட்டைக் கவ்வியிருக்கும் சூதினை எதிர்த்து அறப்போர் தொடுக்க எண்ணினன். அவ்வெண்ணமே பாஞ்சாலி சபதமாக முகிழ்த்தது. இறுதியில் தருமமே வெல்லும். தாய் விடுதலை பெற்றாள்[52] அன்றோ?

'நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' எனும் பாரதி கூற்றைப்பற்றிய கருத்துரையைத் தாயம்மாள் அறவாணன் வழங்குகிறார்.[53] பண்பாட்டு அழிவால் மனம் குமுறி உணர்ச்சிப் பிழம்பாகச் சொற்பொழிவு நடையில் இது பொருந்தாது என்று கவிஞன் கூறிய நோக்கமென்ன என்று ஆயவேண்டும். அவன் கால நிலையையொட்டி, பண்பாட்டழிவிற்குக் கவிஞன் கூற்று காரணமா? இல்லை. பண்பாடு காக்கும் எண்ணம் வேண்டும். நம் பண்பாடு உயர்ந்தது எனும் எண்ணம் வளரவேண்டும். தாழ்வு மனப்பான்மை நம்மைவிட்டு நீங்க வேண்டும். பண்பாடு குலையாதிருக்க அதுவே நல் மருந்து.

மொழிபெயர்ப்பு

இப்பணியிலும் மகளிர் பணி மிகக் குறைவே. அமெரிக்கரான லூயி ஃபிஷர் இயற்றிய 'மகாத்மா காந்தி' எனும் நூலைச் சரசுவதி தங்கையன் அவர்கள் எளிய இனிய நடையில் மொழிபெயர்த்துள்ளனர். எனினும் சில இடங்களில் மொழிபெயர்ப்பு எனும்படியாக நடை அமைந்துள்ளது. ஆசிரியர் காந்தி எனக் கூறினும் மொழிபெயர்ப்பாளர் காந்தியடிகள் எனக் கூறியிருக்கலாமே எனத் தோன்றுகிறது. 'உலகத்தின் கண்ணீர்' என் மறைவில் ஆரம்பிப்பது புதுமை. மறைவொடு முடிக்க வேண்டா என்பதற்காக உலகத்திற்குணர்த்திய செய்தியை இறுதியில் இயம்புகிறார்; வடசொல் ஆட்சி மிகுதியாயுளது.

கலைகள்

கலை வாழ்வின் வழிகாட்டியாகி, உவகையூட்டி, மனத்தைப் பண்படுத்தும் கருவியாகும். நம்நாடு பல்கலைகட்கும் இருப்பிடம். இசை, நாடகம், நடனம், ஓவியம், சிற்பம், இலக்கியம் போன்ற நுண்கலைகள் சங்ககால முதல் இன்றுவரை வளர்ந்து வந்துள்ள முறைமை பற்றி வரலாற்று வழியில் விளக்குகிறார், 'சிவ அரசி.'[53] விளக்கம் மிகுதியாக இல்லை. குறிப்பே தரப்பட்டுளதெனினும் செய்தியறிந்து மகிழலாம்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ச் கேளாரும் வேட்பச் சொற்பொழிவாற்ற விழைவோர் தாம் பேசும் பொருள்பற்றிய தெளிவான அறிவும், திண்ணிய சொல்லும் பெற்றிருக்கவேண்டும். கேட்போர் சலிக்காமல் காலத்தை வரையறுத்துக் கொள்ளவேண்டும் எனச் சொல்வன்மையில்'[56] இராசாமணி அம்மையார் நவில்வர். கால வரையறை உண்மையிற் றேவைதான்!

நாடகக்கலை உயரிய கலை. இன்று நாடகக்கலையின் நிலை பற்றி ராஜேசுவரி நடராசன் இயம்புவது உண்மையே. அன்றாட நிகழ்ச்சி கூறும் நகைச்சுவை நாடகம் மிகுதி. இலக்கியச் சுவையும் கலையழகும் கொண்ட நாடகங்கள் அருகிவிட்டன. அவை மக்கள் ஆதரவும் அரசின் ஆதரவும் வேண்டும் எனக் கூறும் இக் கருத்துகள் யாவும்

உண்மையே.[57] நாடகங்களில் இட ஒருமை, கால ஒருமை, உணர்ச்சி ஒருமை திகழ வேண்டும். சிலம்பில் இட ஒருமை, உணர்ச்சி ஒருமை தெளிவாக உள்ளன. மனோன்மணீயம் படிக்கவும், பம்மலின் நாடகங்கள் நடிக்கவுமாய் அமைந்தன. நாடகம் உவகையூட்டும் கலேயேயன்றி அதைக் கொண்டு மனிதன் திருந்துகிருன் எனக் கூறுவது பொருந்தாது என மேரி மாசிலாமணி அம்மையார் நவில்வர்.[58] அதுதான் உண்மையும் கூட. நாடகம் தக்க முறையில் வளர்ச்சி பெறவில்லேயென்பதே உண்மை.

மருத்துவம்

இத்துறையிலும் நம் முயற்சி மிகக் குறைவே. தட்ப வெப்ப நிலே எந்த அளவிற்கு உடலேப் பாதிக்கிறது? வறண்ட வெப்பமான இடங்களில் சுவாசநோய் மிகுதியாக ஏற்படுவதில்லே. மிதமான வெப்பமுடைய நாடுகளில் பெண்கள் விரைவில் பருவமுற குழந்தை பிறப்பு அதிகமாயுளது. அதிக வெப்பமாயின் சீதபேதி, காலரா போன்றவை எளிதில் பற்றும். கிராமப்புறங்களில் இருந்தால் பல நோய்கள் வருவதில்லே. இடமும், தட்ப வெப்ப நிலேயும் நம் உடலேப் பேணிச் செவ்விதாக இருக்கவேண்டும்[59] என்று ஆர். எம். லட்சுமி கூறுவர்.

வில்வ மரத்தின் வேர், பட்டை, இலே, காய், பழம் ஆகியவை தப்பா மருந்தாப் பயன்படும் முறைமையை ஜனககுமாரியின் 'வில்வம்' என்ற கட்டுரை விளக்குகிறது.[60]

புற்றுநோய் தோன்றக் காரணம் என்ன? உடலில் புற்றுநோய் தாக்கிய இடத்தைக் கண்டுபிடிப்பது எப்படி? நீக்க வழியாது? புற்றுநோயுள்ள இடத்தில் கதிரியக்கத் தங்கம் செலுத்துவதா? ஐசோடோப் கம்பிகளேச் செருகுவதா? நியூட்ரான் பிடி சிகிச்சை அளிக்கலாமா என ஆய்கிருர். இவைகள் நோயைக் கட்டுப்படுத்துமேயன்றி அழிக்க மாட்டா என்கிருர் சுகுணு சுந்தரராஜ்.[61] குட்டம் வரக்காரணம், அதன் வகைகள், அந்நோய் நீக்கும் மருந்துடைய மிலேடை பிணேல் சல்போன் (டி. டி. எஸ்) கண்டுபிடிக்கப்பட்ட முறைகள் விளக்கப் படுகின்றன. அது தொற்றுநோய் அன்று என்பது ஒரு நற்செய்தி. இன்று இக் கொடிய நோய் மருத்துவரின் எல்லேயில் அடங்கிவிட்டது மகிழ்ச்சியான செய்தி என்று திருமதி. சபாபதி கூறுகிருர்.[62]

இருதய நோயால் இறப்போர் இன்று மிகுதி. காலத்தாற் செய்த உதவிபோல் லட்சுமி சுப்பிரமணியம் — இதயம் பற்றிக் கருத்துரை, அளவு, பணி முறை, பழுதுறக் காரணம், அதைக் கண்டுபிடிக்கும் முறை, அதனே அறிகருவி, உணர்த்தும் ஆறு, இதய ஆற்றலே அறிய வழி முறைகள் முதலிய யாவும் தெளிவாக விளக்கப்படுகின்றன. 45 வயதுக்குமேல் அடிக்கடி இதய சோதனே செய்துகொண்டால் அதனுல், வரும் அழிவை ஓரளவு தடுக்கலாம் என்பது ஆசிரியர் கருத்து.[63]

விஞ்ஞானம்

இக்காலத்துக்கு இன்றியமையாது வளரவேண்டிய துறை. ஆனல், நம் ஆர்வம் திரும்பாதது வருத்தத்திற்குரியது. முயன்று இத்துறையில் நம் ஆற்றலைப் பெருக்கவேண்டும். விஞ்ஞானம் இத்துணை அளவு வளராத, கலைச்சொல் பெருகாத அன்றே சிறந்த தரமான விஞ்ஞானக் கட்டுரைகளை எழுதிவந்தவர் ஈ. த. இராசேசுவரி அம்மையார். தெளிந்த நடை — பொருத்தமான பழமொழிகள் — இலக்கிய மேற்கோள்கள் - கலைச்சொற்கள் ஆகியவற்றைக் கொண்டு விஞ்ஞானக் கட்டுக்கோப்பு குறையாமல் எழுதியவர். கட்டுரைத் தலைப்புகளே — உப்போ உப்பு, அற்புதக் காட்சியடி, பொன் பூக்கும் கடல், கோலியும் சதுரங்கமும் எனக் கருத்தைக் கவருகின்றன. கவண்கல், கல், கோலி போன்றவற்றைக் கொண்டு இரசவாதிபோல் விஞ்ஞானக் கருத்து விளக்கம் செய்வது தனியழகு.

புதிர்க்கதிர்கள் பற்றிக் காணுத ஒளிகளால் காணும் காட்சிகள், தொடர்ச் செயற்பாடு, அணுச்சிதைவுபற்றி, கோலியும் சதுரங்கமும், எதிர்மின்னியினுற்றல் — மே. எஸ்வி. கண்ட அற்புதக் காட்சி; கடல் நீரில் உள்ள உப்புச்சத்துகளின் பயன்கள்-பொன் பூக்கும்கடல்; உப்பின் தேவை — உப்போ உப்பு,[64] கரிப் பெருமானின் அவதாரங்கள் — அற்புதக் காட்சியடி; நுண்கிருமி ஆய்வில் தானேதோன்றித் தடுத்தாட் கொண்ட ஸ்ட்ரெப்டோ மைசின் — குரங்கு பிடிக்கப் பிள்ளையார் — இன்னும் எத்தனையோ. அன்னுர் இளமையில் மறைந்ததும் அவருக்குப் பின் விஞ்ஞானத் துறையில் கட்டுரை எழுத மகளிர் ஆர்வம் சிறிதும் காட்டாததும் நம் கலைக்குறைவே. எனவேதான், திருமதி கிருஷ்ணு சஞ்சீவி அவர்கள் பேராசிரியையின் 'சூரியனை'ப் பற்றிய தம் கட்டுரையில் 'அறிவியல் கருத்துகளை எளிய தமிழில் முதலில் பேசியும் எழுதியும் வந்த முதல் அறிவியற் பேராசிரியை செல்வி ஈ. த. இராசேசுவரி அம்மையார். இம்முயற்சி தமிழ் மாணவர்க்குக் காலத்தாற் செய்த தொண்டு. அறிவியல் தமிழ்த்தொண்டு' எனப் பாராட்டியுள்ளார்.[65]

பகலவனது குடும்பம் பற்றி — கோள்களினளவு நிறம் இயக்கம் ஆகிய அனைத்தையும் மூன்றே நிமிடப் பயணத்தில் சுலோசன ஐஸ்டீன் தம் வானியலில் காட்டுகிருர்.[66] விண்கற்கள் என்பன யாவை, அவற்றின் ஆற்றலையும் அளவையும் கணக்கிடுவது எப்படி? என்பதுபற்றித் தெளிந்த விளக்கம் தருகிருர் வசுந்தராதேவி.[67] அவரே இயற்கையும் இரசாயனமும் எனும் பொருளில் வேறு ஓர் ஆய்வு நிகழ்த்துகிருர். கலப்புப் பொருளாகிய காற்று, கூட்டுப் பொருளாகிய நீர் இவற்றில் உள்ளன யாவை? அவற்றைப் பிரித்தெடுக்கும் முறை என்ன, பிரிக்கப் பட்ட பொருள் ஒவ்வொன்றும் மக்கட்கு எவ்வாறு பயன்படுகின்றன என விளக்கம் தருவது சிறப்பாயுளது. பிராண வாயு, கரியமில வாயு, வெடியுப்பு வாயு, ஆர்கான், ஹீலியம், நீயான் ஆகியவை காற்றில் உள்ளன. இவை பயன்படுமாற்று நல்ல விளக்கம் செய்கிருர்.[68] தெளிந்த அறிவு பெறுகிரேம்.

என். நாகம்மாள் அவர்களின் விலங்கியல் கட்டுரை மீன்களின் வகைகள், அவற்றுள் முட்டைகளைப் பாதுகாக்கும் பொறுப்பேற்கும் ஆண் மீன், அதனை எப்படியெல்லாம் துன்புற்றுக் காக்கிறது என்பதை விளக்கம் செய்கிறது. பெண் மீனின் பொறுப்பற்ற நிலை வியப்பையும் வெறுப்பையும் மூட்டுகிறது.[69] பூச்சிகளின் வகைகள், அவை எவ்வெவ்வாறு மக்கட்குப் பயன்படுகின்றன. மருத்துவத்திற்கும் சில பூச்சிகள் துணைசெய்கின்றன. சிறுதுரும்பும் பல் குத்த உதவும்; வல்லவனுக்குப் (மருத்துவன்) புல்லும் ஆயுதம் அல்லவா?[70] பயன் துரம் பூச்சிகள் நல்குவன இவை.

மனையியல்

புதியதாக வளர்ந்துவரும் துறையிது. இத்துறையில் உணவு, உடை, குழந்தைப் பராமரிப்பு, மனைவியின் கடமைகள், சிக்கனமான வாழ்வு முதலியன விளக்கப்படுகின்றன. மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த செயற்கை முறைகளைவிட உணவு முறையால் கட்டுப் படுத்தலாம் எனப் பல கட்டுரைகளில் வலியுறுத்துகிறார். மனிதனும் பசியும்,[71] உணவும் சமூகமும்,[72] மனையியல்,[73] மனையியல் மாண்பு — மனைமாட்சி,[74] மனையறம்,[75] உணவும் சனப் பெருக்கமும்,[76] குழந்தைகள் பள்ளி, குழந்தையின் உள்ளமும் உணவும் எனப் பல டாக்டர் ராசம்மா தேவதாஸ் அவர்களே எழுதியிருக்கிறார். 'சப்பானில் குடும்பப் பெண்கள் சங்கம்'[77] இயங்குவதுபோல் நம் நாட்டிலும் இயங்கவேண்டும் எனும் தம் ஆசையை அறிவிக்கிறார். உடற்பயிற்சியின் இன்றியமையாமை பற்றியும் விளக்குகிறார். இத்துறையில் வேறெவரும் இத்துணையளவு முயலவில்லை; எழுதவில்லை.

பாப்பம்மா அவர்களின் 'நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்,' எஸ். சுப்புலட்சுமி அவர்களின் 'புயல்,' விசாலாட்சி அவர்களின் 'செயற்கை மனிதன்,' லிண்டா கிறிஸ்தியின் 'பேச்சு மொழி' ஆகியவை நல்ல கருத்தமைந்தனவேயாகும்.

பொதுவாக நோக்குமிடத்து அனைவரும் எளிய நடையில் எழுத முற்பட்டுள்ளனர். ஆனால், இலக்கியங்களில் சிலம்பு, பெரியபுராணம், கம்பராமாயணம், குறள் தவிர பிறவற்றை அதிகம் தொடுவதில்லை — ஏன்? வரலாறு, மருத்துவம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பணி புரிவோரும் தம்தம் துறைக்குரிய கருத்துகளைத் தமிழில் விளக்க முன்வரவேண்டும். இன்று மகளிரிடையே மொழி ஆர்வம் குறைந்து வருகிறது என்பதன் அறிகுறியா இது என்றெண்ண தோன்றுகிறது — இத்துறையில் சில ஆண்டுகளாகவே மகளிர் பணி மிகக் குறைந் துள்ளது. வளர்ந்து வரும் புதிய கருத்துகளை அவ்வப்போது கூட்டினால் தானே மொழி வளரும். இம் முயற்சியில் அயராது ஈடுபடுவோமாக.

கருவிநூற் பட்டி

1. 17, 18, 27, 65 இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1968.

2. கல்விக் கனிவு.

3, 10, 23, 37, 39, 41, 47, 50. இலக்கியப் பண்பாடு.

4, 7, 9, 13, 25, 30, 38. இலக்கிய இன்பம்.

5. கட்டுரைப் பொழில்.

6, 48. வள்ளுவர் 2000 ஆண்டுவிழா மலர் (சேலம்).

8. வி. வே. இராமசாமி பாராட்டு மலர்.

11, 14, 15. அறம் வளர்த்த மங்கையர்.

12. 1954 ஜூன் கலைக்கதிர்

16, 43. புலத்துறை முற்றிய பூவையர்.

19. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1969.

20, 51. கல்விக் கழகக் கட்டுரைத் திரட்டு.

21, 29, 31, 34, 45. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1971.

22, 30, 35, 36, 46. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1972.

24. அறம் வெல்லும்.

26. கம்பனில் நட்பு.

28. தமிழியல்.

33. இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1970.

40. வள்ளலார்.

42. பெரிய புராணத்தில் பெண்மை.

44. சைவ சித்தாந்த சமாஜ சொற்பொழிவு.

49. சக்தி வாழ்க.

53. இளந்தமிழன்.

55. உலகத் தமிழ் மாநாட்டு மலர், 1968.

56, 58. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக 1008வது வெளியீட்டு விழா மலர்.

57. சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா மலர்.

59. கலைக்கதிர், செப்டம்பர், 1965.

60. „ 1963.

61. கலைக்கதிர், ஆகஸ்ட், 1964.

62. ,, நவம்பர், 1959.

64, 67, 68, 71. கலைக்கதிர் 1951 (தொடர்ந்து வந்தன).

63. கலைக்கதிர்—பொங்கல் மலர், 1973.

66. கலைக்கதிர், ஏப்ரல், 1967.

68, 69. கலைக்கதிர், செப்டம்பர், 1964.

70. கலைக்கதிர், அக்டோபர், 1962.

72. ,, பொங்கல் மலர், 1957.

73. ,, ,, 1956.

74. தமிழ் வட்டம் 24வது ஆண்டு விழா.

75. கலைக்கதிர்—பொங்கல் மலர், 1973.

76. ,, ,, 1954.

77. ,, ,, 1960.

31

பண்டப்பிலக்கியப் பணியில் கிறித்தவ எழுத்தாளர்களின் பங்கு

பேராசிரியை திருமதி. ஆர். லயோனல், எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், மகளிர் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

கிறித்தவ எழுத்தாளர் என்றதும் நம் தமிழ்மொழிக்குப் பெருந் தொண்டாற்றிய மேனாட்டறிஞர்களே நம் நினைவில் தோன்றுவர். தத்துவ போதகர், வீரமாமுனிவர் போன்ற பிறநாட்டுத் தமிழ்ப் புலவர்களையும் அவர்தம் இலக்கியங்களையும் பற்றிய செய்திகள் ஏட்டிலடங்காதன. நம் நாடு விடுதலை பெற்றுக் கால் நூற்றாண்டு கழிந்ததை எண்ணி இவ்வெள்ளி விழாவினைக் கொண்டாடுகின்றோம். இவ்விருபத்தைந்து ஆண்டுகளில் கிறித்தவ எழுத்தாளர்தம் இலக்கியப் பணி இந்திய சுதந்திரத்திற்கு முன் இருந்தது போலப் பரந்த அளவில் சிறப்புற்றிலங்குகிறதா என்ற கேள்விக்குத்தான் நாம் விடையளிக்க வேண்டும்.

படைப்பிலக்கியங்கள் என்பன தற்காலத்தில் புலமை பெற்றவர், பெறுதவர் என்ற வேறுபாடின்றி யாவராலும் விரும்பிப் படிக்கும் இலக்கியங்களே. தமிழ்நாட்டில் அச்சிட்டு நூல் வடிவத்தில் வெளிவந்துள்ள படைப்பிலக்கியங்களுக்குப் பாயிரங்கண்டவர் கிறித்தவரே என்று துணிந்து கூறக்கூடும். மாயூரம் வேதநாயகம் பிள்ளையை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். இலங்கையில் படைப்பிலக்கியங்களுக்குக் கால்கோளிட்ட பெருமை 'இன்னாசித்தம்பி' என்ற கிறித்தவரையே சாரும். கடந்த 25 ஆண்டுகளிலும் தமிழ்மொழியில் படைப்பிலக்கியங்கள் தோன்றி, பல நூற்றுக்கணக்கான திறனாய்வு உரைகளுக்கும் வேறுபல நூல்களுக்கும் வித்திட்டுள்ளன. இப்படைப்புகளில் கிறித்தவர் தம் பங்கினை ஒரோவழி ஆராய்வோம்.

'புதினம்' என்று வழங்கப்பெறும் நாவல் இலக்கியங்களில் அளவாலும் தரத்தாலும் சிறந்ததொரு இடத்தைப் பிடித்துக்கொண்ட கிறித்தவ எழுத்தாளர் திரு. ஜெகசிற்பியன் ஆவர். 'ஆலவாய் அழகன்' என்ற பரிசுத் தொடர்கதை வாயிலாக இவர் தமிழுலகத்திற்கு அறிமுகமானார். இவ்விடத்தில் பத்திரிகைகளைப் பற்றி ஒன்றைக் கூற வேண்டியுள்ளது. படைப்பிலக்கியங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில்

பத்திரிகைகளே பெரும்பங்கு ஏற்கின்றன. கல்கி, அகிலன், நா. பார்த்த சாரதி போன்ற பல தமிழ் எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்பு களையும் தரணிக்கு அறிமுகம் செய்வித்த பெருமை அவற்றுக்கே உண்டு. கிறித்துவ எழுத்தாளரான ஜெகசிற்பியனையும் நாம் பத்தி ரிகைகளின் துணையினாலேயே அறியும் பேறு பெற்றோம். சரித்திர நாவல்களும், சமூக நாவல்களும் எழுதுவதில் ஒருசேர இவர் வெற்றி யடைந்து வருபவர். முன் கூறப்பெற்ற இவரது புதினமாகிய ' ஆல வாய் அழகன் ' என்பது வரலாற்றுப் பின்னணியில் கல்வெட்டுச் சான் றின் அடிப்படையில் பின்னப்பட்டதோர் அழகிய மலர்மாலையாகும். இவ்வுலகில் என்றும் நிலைத்து வாழும் தன்மையில் இவரது பாத்திரப் படைப்புகள் அமைந்து சிறப்புறுகின்றன.

சுந்தர பாண்டியனும், சோனக வணிகனும், கதைத் தலைவியாக வரும் அரசிளங்குமரியும், பிறரும் மக்கள் நெஞ்சில் அழியாத முத்திரை களாகப் பதிந்துள்ளனர். நல்ல தமிழ் நடையில் எழுதப்பெற்ற இந் நாவல் கற்பார்க்குப் பேரின்பம் பயக்கவல்லது.

ஜெகசிற்பியன் எழுதிய நூல்கள் நாற்பதுக்கும் மேற்பட்டவை. அவற்றுள் ' ஜீவ கீதம் ' ஒரு தனியிடத்தைப் பெறுகிறது. அறுநூறு பக்கங்களுக்கு மேற்பட்டதும் பல கிளைக்கதைகளைத் தன்னுள் அடக்கி யதுமான இந்நூல் பாத்திரப் படைப்பால் சிறந்த ஒரு சமூக நாவலாக மிளிர்கிறது. சபேசன் என்ற பாத்திரம் தன்னலத்தைக் கருதியே வாழ்பவன். பின் தானே தன் சுயநலப் போக்கை வெறுத்துக்கொள் கிறான். அவனது கூற்றைப் பார்ப்போம். " காரண காரியத்திற்காக ஒருவரை நேசிப்பதும் மதிப்பதும், இழைவதும் குழைவதும், அது இல்லை என்று ஆனால்—வெறுப்பதும் விரோதிப்பதும், துச்சப்படுத்து வதும் தூர விலகிப் போவதும் எத்தனை இழிவான தன்மைகள் !" இதைத் தனக்குள் கூறிக் கொள்கிறான். தன்னையே சோதித்துப் பார்த்துத் தன்னிலையை எண்ணி வெட்கமுறுவதால் தன்னலம் அழிந்து விடுமன்றோ ?

இவர் படைத்தளித்துள்ள வரலாற்று நாவல்கள் பத்துக்கும் மேற் பட்டவை. ' நந்திவர்மன் காதலி'யைப் படித்தவர்கள் இவரது சரித் திரப் புலமையையும் எழுத்தாற்றலையும் பாராட்டாமல் இரார். 'நந்திக் கலம்பகம்' எழுவதற்கு காரணமாக இருந்த அரசியல் நிகழ்ச்சிகளைச் சுவைபட விளக்குவதோடு இறுதியில் நந்திவர்மன் தமிழுக்காகத் தன்னுயிரை நீத்தபோது பாண்டி நாட்டு இளவரசி வாருணிதேவி சிதை யில் வந்து விழுவதைக் கூறி அவளே நந்தியின் காதலி என்பதை உணர்த்தி, படிப்பவரைச் சோகத்தில் ஆழ்த்தி விடுகின்றார்.

கலைப்பெருக்கத்தால் பொற்காலம் என்று போற்றப்பெறும் பல்ல வர் ஆட்சியைப் படம்பிடித்துக் காட்டும் இவரது மற்றொரு சரித்திர நாவல் ' மகர யாழ் மங்கை ' என்பது. காஞ்சியில் கைலாசநாதர் கோவிலை விண்ணளாவ நிறுவிய இராசசிம்மனது வரலாற்றைப்

புலப்படுத்துமுகமாகத் தெய்வப்பற்று, தெய்விகக் காதல், பெண்மையின் தியாகம், தாய்மைப் பாசம் ஆகியவற்றைத் திறம்படத் தம் பல்வேறு பாத்திரங்களால் சித்திரிக்கின்றார். இவரது எந்தப் படைப்பும் வாசகர்தம் கவனத்தைக் கவராமல் இருந்ததில்லை. இவரது 'கன்னித் தெய்வம்' எனும் சமூகக்கதையும் இதற்கு விதிவிலக்கன்று.

ஆசிரியர் திருஞானத்தின் மகள் சுமதி, தன் காதலை இரத்தினசாமி ஏற்றுக் கொள்ளாததால் வேறெவரையும் மணக்க மறுக்கின்றாள். தந்தை இறக்கும் தறுவாயில் அவளை இரத்தினசாமியின் கண்காணிப்பில் ஒப்படைக்கின்றார். விநாயகம் என்பவர் சுமதியை மறுமணம் செய்ய விரும்புகிறார். மறுத்துக் கொண்டேயிருந்த சுமதி இறுதியில் சம்மதித்து அவரை மணந்து கொள்கிறாள். ஆனால் திருமணத்தன்று விநாயகத்திற்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதன்மூலம் இரத்தினசாமி தன்னால் கைவிடப்பட்ட மங்கம்மாவின் மகன் என்றும், தன்னைப் பழி வாங்கவே அவன் சுமதியை அவருக்கு மணம் செய்து கொடுத்தான் என்றும் தெரியவருகிறது. மனநிம்மதியிழந்து அவர், காரை மரத்தில் மோதி இறக்கின்றார். இரத்தினசாமியின் காதலியான கோகிலாவை விநாயகத்தின் மகன் கடத்திச் சென்றுவிடுகின்றான். இரத்தினசாமி இப்பொழுது சுமதியை விரும்புகிறான். சுமதியோ தன்னை 'விதவை' என்றே கூறுகிறாள். நல்லவனாக இருந்த இரத்தினசாமி இப்பொழுது காமுகனாக மாறி எப்படியும் சுமதியை அடையவேண்டும் எனத் துணிகின்றான். சுமதியின் அறையில் வெளிச்சம் தெரிகிறது. கதவு தாளிடப் பெற்றிருந்தமையின் சன்னல் வழியே அவளைப் பார்க்கும் முறை கேடான செயலைச் செய்கின்றான். ஆனால் அவன் கண்ட காட்சி அவனை உடல் நடுங்கச் செய்கிறது. சுமதி வெள்ளாடை உடுத்தி நெற்றியில் திருநீறு துலங்கவும் கையில் கீதை விரித்திருக்கவும் தந்தை, கணவன் ஆகியோரின் படங்களுக்கு முன் பூஜை செய்து கொண்டிருந்தாள். திரும்பி ஓடிய இரத்தினசாமி அன்றுமுதல் அவளைத் தெய்வமாகத் தன் மனத்தில் வழிபடத் தொடங்குகின்றான். சுமதியின் வேண்டுகோட்படி காப்பிக்கடை நாயர் மகளை மணம் செய்து கொள்கிறான். சுமதி ஏழைக் குழந்தைகளுக்கென ஓர் ஆசிரமம் நிறுவி, அக் குழந்தைகளால் இன்பம் அடைகின்றாள்.

இதுவே கதை. பெண்மனத்தின் போராட்டங்களையும் அவை தீர்ந்தபின் காணும் அமைதியையும் நாம் கண்டு திகைப்புறுகின்றோம். பெண்மையின் இறுதி வெற்றி நம்மை நிம்மதிப் பெருமூச்சுவிடச் செய்கிறது. ஜெகசிற்பியனது படைப்பு ஒவ்வொன்றையும் பற்றி நிறையப் பாராட்டிச் சொல்லலாம். தமிழ்நாட்டில் அவரைத் தெரியாதவரும் அவர் படைப்புகளைப் படித்தறியாதவரும் இருக்கமாட்டார் என்பது உறுதி.

நாவல் இலக்கியக் கலையில் அடுத்து நம் கவனத்தைக் கவரும் கிறித்தவ எழுத்தாளர் திரு. டேவிட் சித்தையா என்பவர்.

பொறியியல் பயின்று பணி புரியும் இவர், தெலுங்கு, மலையாளம், இந்தி மொழிகளையும் அறிந்தவர். இவர் எழுதிய முதல் நாவல் 'சிறைச் சாலை என்ன செய்யும்?' என்பது. 1952ஆம் ஆண்டு தெலிங்கானப் பகுதியில் ஆயுதப் போராட்டம், அதை அடக்கிய முறை ஆகிய அரசியற் செய்திகளால் அதிர்ச்சியுற்றவர்.

பின்னல் ஆந்திராவிலுள்ள அந்நிகழ்ச்சிக்குரிய இடங்களைப் பார்வையிட்டதன் விளைவாக எழுந்ததுதான் இக்கதை. கதையின் கருப்பொருளாவது, சிறைச்சாலையில் அவதிப்படும் கைதிகளுடைய வாழ்க்கையை, அதிலும் குறிப்பாகத் தண்டனையடைந்த ஒரு பெண்ணின் கதையை வெளிப்படுத்துவது. கொலைக் குற்றவாளியான உமா நம் இரக்கத்திற்கு உரியவளாகின்ருள். பிற கைதிகளுக்கு அவள் செய்யும் அன்புப் பணிகளாலும், தன்னலமற்ற தியாகத்தாலும் நம் உள்ளத்தில் உயர்விடத்தைப் பெறுகின்ருள். திரு. அகிலன் முன்னுரையில் சொல்வதுபோல, 'நடையில் இனிமை, எளிமை, உயிர்த் துடிப்பு' ஆகியவற்றை நாம் காணுகின்ரேம். டாக்டர் எழுதியிருந்த சத்துள்ள உணவை ஏற்க மறுத்த உமாவிடம் டாக்டர் கூறும் சொற்கள் நம் கருத்தைக் கவர்கின்றன. அவை "வாழ்க்கை வரவு செலவுப் பட்டியல் அல்ல" என்பன. எவ்வளவு கருத்துச்செறிவு! சிறையிலிருந்து விடுதலை பெற்ற உமா, டாக்டரை மணந்துகொள்ள இசைந்து வரும் வழியில், முன் தன்னை ஏமாற்றியவன் எலும்புருக்கி நோயால் வருந்தி மரணத்தை எதிர்நோக்கியிருப்பதைக் காணுகின்ருள். உடனேயே தன் முடிவை மாற்றி அவனுக்கு உதவி செய்ய உறுதியுடன் அவனைப் பின்தொடர்வதாகக் கதை முடிவடைகிறது. இதைப் படிக்கும்போது சிறைச்சாலையைப்பற்றிக் கூறும் 'தூக்கு மரத்தின் நிழலில்' என்பது போன்ற சிறையனுபவக் கதைகள் நம் நினைவுக்கு வருகின்றன. தெலுங்கானவின் ஆயுதப் போராட்டம், வங்காளத்தில் ஒரு நக்சல்பாரி, கேரளாவில் ஒரு வயநாடு முதலான அரசியல் நிகழ்ச்சிகளே இந்த நாவலுக்குள்ள முக்கியத்துவத்தைப் பெருக்கியதாக ஆசிரியர் கூறியிருக்கிருர்.

இவரது மற்ருெரு நாவல் 'அமர்சோனு பங்களா'. இது பங்களா தேஷ் சுதந்திரம் பெறுவதற்கு மக்கள் சிந்திய கண்ணீரின் கதையாகும். கால் நூற்ருண்டுக்கு முன் நம் நாட்டைப் பிடித்தாட்டிய வெறி, நாட்டை மூன்று கூருகப் பிரித்தது. அவை சுதந்திர இந்தியா, கிழக்கு, மேற்கு பாகிஸ்தான் என்பன. கிழக்குப் பாகிஸ்தான் விடுதலை பெறத் துடித்தபோது ஆங்குள்ள முகமதியர், இந்துக்கள், கிறித்தவர், சீக்கியர் முதலான பற்பல மதத்தினரும் ஒன்று சேர்ந்து பாகிஸ்தானியப் படைகளை எதிர்த்ததையும், அங்கு அச்சமயம் நிலவிய தேசிய ஒருமைப்பாட்டின் செய்திகளையும் நாம் நேரில் காண்பதுபோல அறிகின்ரேம். 'தாரா பாலா தசி' என்ற வங்காள இந்துப் பெண் 'முக்தி வாஹினி'யில் பணியாற்றி, பாகிஸ்தானியரால் சிறைப்படுகின்ருள். நிறைசூலுடையவளான அவள் அடைந்த கொடிய இன்னல்கள்

நம்மை மயிர்க்கூச்செறியச் செய்கின்றன. அவளுக்கு உணவு கொடுக்கச் சென்ற சிக்கந்தர் என்ற முகமதியச் சிறுவனை சிப்பாய் கொன்றுவிடுவதும் அதனால் அவளுக்குப் பிறந்த குழந்தை கொல்லப்படுவதும், பின் வாழ்க்கை உருக்குலைவதும் பாகிஸ்தானியரின் கொடுமைக்கு அளவுகோலாகின்றன. தன்மகள் 'கமாண்டர் கோமள்' படையிலிருந்து திரும்பி வருவாள் என்று எதிர்பார்த்திருக்கும் ஏழைத்தாய் சர்வமங்களதேவியும் அவள் மகள் நீலிமாவும் தம் புது விருந்தினன் சௌத்திரிக்கு கோமளின் படத்தைக் காட்டுகின்றனர். கோமள் வீரமரணம் அடைந்ததைச் சௌத்திரி பார்த்தவனுதலின் படத்தைக் கண்டு திடுக்கிட்டு அசையாமல் இருக்கின்றான். தாயும் மகளும் அதைப் புரிந்துகொண்டவர்களாய் அவனுக்கு இருபுறமும் வந்து நின்றுகொள்கின்றனர். அத்துடன் கதை முற்றுகிறது. ஆனால் பங்களாதேஷ் மக்களில் பலர் அடைந்த தொல்லைகள் முடிவடையவில்லை என்பதை ஆசிரியர் தம் கதையில் கோடிகாட்டி முடிக்கின்றார்.

கிறித்தவ வேதத்திலுள்ள கதையைத் தழுவியது இவரது அடுத்த நாவலான 'வெறும் சிலைகள்'. யூதகுலம் இறைவனை மறந்து, ஒழுக்கக் கேட்டில் மயங்கிக்கிடந்த காலத்தில் பாபிலோனியர் எருசலேமை முற்றுகையிட, அதனால் நிகழ்ந்த சோகச் சித்திரங்களை அழகுற இதில் தீட்டுகின்றார். எரேமியா, எசேக்கியா போன்ற தீர்க்கதரிசிகள் பல முறை எச்சரித்தும் யூதர் அழிவை நோக்கித் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நடுவில் இரண்டு உள்ளங்களின் அன்புணர்ச்சி சுவையாகப் படம்பிடித்துக் காட்டப்பெறுகிறது.

வரலாற்று நாவல்கள் சரித்திரத்திற்கு மாறுபடாமலும் கால வழுவுக்கு உட்படாமலும் இருக்க வேண்டுமன்றோ? அக்காலப் பழக்க வழக்கங்களை எளிதில் படிப்பவர் அறிந்துகொள்ள வாய்ப்பும், மக்களிடையே சரித்திர அறிவு வளர வழியும் தோன்றவேண்டுமாதலால் ஆசிரியர் வரலாற்று நுட்பங்களை உணர்ந்து நாவல்களைப் படைக்கவேண்டும். இவ்வாறான விதிகளுக்குக் கட்டுப்பட்டே இந்நாவல் விளங்குகிறது என்பதற்குக் கிறித்தவ வேதமே சான்றாகிறது எனில், டேவிட் சித்தையாவின் படைப்பான 'வெறும் சிலைகள்' பெறும் உயர்வினை எடுத்துரைக்கவேண்டா.

இலக்கிய விமர்சகர்கள், நாவல் என்னும் இலக்கிய வடிவத்தைக் காவிய வடிவம் என்பர் இதற்குக் காரணம், சமுதாயத்தின் மாறுதலுக்கேற்ப இலக்கிய வடிவங்களும், அவற்றின் உருவங்களும் மாறுவதே. சிறந்த இலக்கிய விமர்சகரான ரால் ஃபாக்ஸ் என்பவர், "ஒருநாவல் முழுமையானதாக இருக்கவேண்டுமெனில், அதன் இலக்கிய கர்த்தாவுக்கு முக்காலத்தையும் உய்த்துணரக்கூடிய உயர்ந்ததோர் சித்தாந்தப் பிடிப்பும் உணர்வும் இருக்கவேண்டும்" என்கிறார். இக்கருத்தை உணர்ந்து, தம் நாவலைப் படைத்தவர் திரு. டி. செல்வராஜ் என்பவர். இவரது நாவல் 'மலரும் சருகும்' என்ற பெயரைக்

கொண்டது. 'இந்தியா சுதந்திரம் பெற்றபின் தமிழ் மக்களது அக வாழ்விலும் புறவாழ்விலும் சலனங்களும் மாற்றங்களும் ஏற்பட்டுச் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. இவற்றுக்கு இடையே இழிநிலைகளை அழித்தொழிக்கும் புதியதோர் சக்தி துளிர்க்கிறது. இதை இன்று மறைத்துவிட்டாலும் முடிவில் அச்சக்தியே வாகைசூடும்'' என்ற யதார்த்தத்தைச் சித்திரிக்கும் ஒரு முயற்சியே இந்நாடகம் என்பர் ஆசிரியர்.

இக்கதையைப் படிக்கத் தொடங்கும்போதே ஆசிரியர் உள்ளத்தை நிறைத்து நின்ற தடை 'சாதி வேற்றுமை' என்பதை நாம் உணருகிறோம். ''என்னவே, சுதந்தரம் வந்திட்டா மேல்குலம் கீழ்குலமிங்கிறது எல்லாம் இல்லாமல் போயிருமா?'' என்றுதான் கதையே தொடங்குகிறது.

மாடசாமிக் குடும்பன் மகன் ஈசாக்கின் குடும்பம் கிறித்தவக் குடும்பம். மகள் மாடத்தி குடும்பம் இந்துக் குடும்பம். இவ்விரு குடும்பங்களுக்கிடையேயுள்ள சச்சரவில் மாடசாமி சிக்கித் தவிக்கின்றான். நிலத்தை அடகுவைத்த மாடசாமியிடம் பணம் கொடுத்த காந்திமதிநாத பிள்ளை மூன்று ஆண்டுக்குரிய நெல்லையும் சேர்த்து அளக்கும்படி சொல்ல, விவசாய சங்கம் கூடித் தீர்ப்பு செய்யுமுன் அனைவரையும் போலீஸ்வண்டியில் சிறைப்படுத்துகிறார் காந்திமதிநாத பிள்ளை. மாடசாமி தன் பேத்திக்குப் பிறந்த பச்சிளங்குழவியை எடுத்துக்கொண்டு போலீஸ்வண்டியின் பின்னால் ஓடி விழுந்து உயிர் துறக்கின்றான். குழந்தை மார்பில் படுத்திருக்கிறது. மாடசாமியின் மகன்வயிற்றுப் பேத்தி காரில் வந்து அவனை அடையாளம் கண்டு குழந்தையைத் தூக்கிக்கொள்கிறாள். உயிர் வற்றிச் சருகாகிவிட்ட மாடசாமியையும் புதுமலராக உலகில் தோன்றியுள்ள குழந்தையையும் காட்டி கதைத் தலைப்பின் பொருத்தத்தை விளங்கச் செய்கிறார் இதன் ஆசிரியர். பாண்டி நாட்டுக் கிராமத்தவர்தம் மொழி இடையிடையே 'செலவடைகளோடு' செறிந்து படிப்பவர்க்கு இனிமை தருகிறது.

கல்லூரிப் பேராசிரியர்களாகச் சிறப்புற்று வாழும் தமிழறிஞர்களும் படைப்பிலக்கியங்களைத் தோற்றுவிப்பதில் சளைத்தவர்கள் அல்லர் என்னும் கூற்றுக்கு இலக்காக அமைபவர் திருமதி. ஹெப்சிபா ஜேசுதாஸ் அம்மையாராவர். 'புத்தம் வீடு', 'டாக்டர் செல்லப்பா' என்ற இவரது இரு நாவல்களும் ஒன்றோடொன்று கதைப்போக்கில் தொடர்புடையன. தங்கராசு என்பவனைச் சுற்றிச் சுழலும் எளிய கதை அமைப்புக்கொண்டது புத்தம் வீடு. பனையேறும் மக்களது வாழ்வியல் நிகழ்ச்சிகள் நன்கு படம்பிடித்துக் காட்டப்பெறுகின்றன. இச் சமுதாய இயல்பினை நோக்குமிடத்து, 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பதுபோல, எளிய கதை நிகழ்ச்சியும்கூட ஆற்றல்வாய்ந்த ஆசிரியர் கையில் வலிவும் பொலிவும் பெறும் என்பதை அறிகின்றோம்.

கூட்டுக் குடும்ப வாழ்வில் ஏற்படும் பூசல்கள் இறுதியில் சகோதரருக்குள் தீராத பகையாகவும் வெறியாகவும் மாறிவிடுவது இயல்பு. கிறித்தவ வேதாகமக் கதையான காயீன், ஆபேல் என்ற இரு சகோதரரது கதை, அதாவது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த மக்களது கதை 'புத்தம் வீட்டில்' பிரதிபலிப்பதைக் காணலாம். பொறுமையினுல் காயீன் ஆபேலைக் கொன்றது போலவே, இக்கதையிலும் மூத்தவன் இளையவனைக் கொன்றுவிடுகிறுன்.

'டாக்டர் செல்லப்பா' என்னும் கதை, 'புத்தம் வீட்டை'த் தொடர்ந்து வருவதெனினும் வேலூர் மருத்துவக் கல்லூரி வாழ்க்கையை மிகச் சுவைபடக் கூறும் முற்பகுதி சிறப்படைகிறது. மருத்துவரையும், நோய்வாய்ப்பட்டவரையும் மருந்து வகைகளையும் நேரில் கண்டறிந்தாற்போல படிப்பவர்க்குப் புகட்டுகின்ருர் ஆசிரியர். மருத்துவர்களின் தன்னலமற்ற சேவையைப் பலவகைகளிலும் உணர்த்திணுலும் டாக்டராக வெளிவருவதற்குள் செல்லப்பா அடைந்த இன்னல்கள், பின்ஞல் சகோதர பாசம் அற்றுப்போவதற்கு வழி செய்தன என்பதைக் காணும்போது நாம் வருந்தாதிருக்கமுடியவில்லை.

இவ்வாசிரியர் திருவனந்தபுரத்தில் ஆங்கிலப் பேராசிரியராக இருப்பவர். நாகர்கோவில் பகுதியிலுள்ள கிறித்தவ மக்கள் கல்வியால் முன்னேற்றங் கண்டவரெனினும், குலப்பெருமை, பணப் பேராசை ஆகிய உலக மாயைகளில் சிக்கித் தவிப்பதைக் கண்டு இவர் பொருமியிருக்கவேண்டும். அதனுற்ருன், கிறித்தவச் சமுதாயத்தின் குறைபாடுகளை உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

தமிழ்ப் பேராசிரியராக விளங்கியதோடு மட்டும் அமையாது தமிழ்நாட்டுப் புலவர் குழுவில் ஒருவராக உலக நாடுகளுக்கெல்லாம் சென்று தமிழைப் பரப்பி, பயண நூல்கள் பலவும் எழுதி வெளியிட்டுத் தனிப்பெருமை பெற்றுள்ள செல்வி மேரி மாசிலாமணி அம்மையாரை நாம் அடுத்துப் பார்ப்போம். இவரது நாவல் 'தழைத்த மல்லிகை' என்பது ஒரு கிறித்தவப் பெண்ணின் கதையைக் கூறுவதாகும்.

நாவல் இலக்கியப் படைப்புகளில் ஒன்ருன 'யார் மனிதன்?' என்ற சமூக நாவலை திரு. டேவிட் பிச்சை என்பவர் எழுதியுள்ளார். மனிதரெனினும் மனிதத் தன்மையற்று நடந்துகொள்வோரைச் சிந்திக்க வைக்கும் கதை இது. இவ்வாறு கிறித்தவர் நாவல் இலக்கியங்கள் பங்கேற்றிருப்பதை ஒருவாறு கண்டோம். வாழ்வினடியாக அல்லது ஒரு பிரச்சினையின் அடியாகத் தோன்றும் உணர்வு நிலையை வெளியிடுவதே சிறுகதை என்பர் அறிஞர். பத்திரிகைகளின் நிழலில் படியாது சிறுகதை எழுத்தாளர் ஒளிபெறுவதில்லை. இத்துறையில் கிறித்தவ இதழ்கள் நிறைவு செய்கின்றன. 'மணமலர்' என்னும் இதழ் மூலம் கிறித்தவ மக்களிடையே அறிமுகமான எழுத்தாளர் பலர் உண்டு. திருமதி பிளாரன்ஸ் வில்லியம்ஸ் அம்மையார் அவர்களில் ஒருவர்.

இவர் இப் பத்திரிகையில் நிறைய சிறுகதைகளை எழுதி, அவற்ருல் கிறித்தவக் கொள்கைகளைப் பலருக்கும் பரப்பி வருகின்ருர்.

சிறுகதைகளை இவ்வாறு பத்திரிகைகளில் எழுதிப் பின் அவற்றை நூல் வடிவமாக்கி நம் கையில் உலவவிட்ட மற்ருெரு கிறித்தவ எழுத்தாளர் வித்துவான் ஆர். எஸ். ஜேக்கப் என்பவராவர். திருநெல்வேலியைச் சேர்ந்த இவர் நற்போதகம், மணமலர், பாலியர் நேசன், புத்துயிர், நல்ல மேய்ப்பன், ஞானதூதன், வித்தியாதனம், சத்திய ஒளி, வாலிபர் தோழன், நெல்லை மணி ஆகிய கிறித்துவ ஏடுகளுக்கு அவ்வப்போது எழுதி வந்த கதைகளின் தொகுப்பே இவரது 'நூறு ஜீவனுள்ள கதைகள்' என்னும் நூலாகும். ஒவ்வொரு கதைக்கும் உயிரூட்டும் முறையில் வேதாகம வசனங்களை ஆதாரங்காட்டியிருப்பதால் கதைகள் அழகும் பயனும் பெறுகின்றன.

அண்மையில் பரிசுபெற்ற சிறுகதையான 'தொட்டபெட்டா'வை எழுதியவர் 'சவிதா' எனும் புனைபெயரில் ஒளிந்துகொண்டுள்ள பாஸ்கரனுவர். தினமணிக் கதிரில் வெளியான இச்சிறுகதை—இதைக் குறுநாவல் என்றே கூறலாம் — இளம் விதவையாக இசைபட வாழ்ந்த ஓர் இனிய பெண்ணின் உயர்ந்த குறிக்கோள், அது நிறைவேற மாட்டாத நிலையில், பிற வகைளில் அதை நிறைவேற்றத் துடிக்கும் அவளது ஆர்வம், ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டது. பெண்மையின் திண்மையை அழுத்தம் திருத்தமாக உலகிற்கு அறிவிக்கும் கதை எனல் சாலும். பெண்ணுக வாழ்பவள், தாயாக உயர்ந்து, தன்பால் விருப்பங்கொண்ட எழுத்தாளனை நாடிய தன் மகளது விருப்பத்தை ஏற்குமாறு வேண்டிக்கொள்வது தாய்மைக்குச் சிகரமாக அமைகிறது. நயமும் பயக்கிறது. வளர்ந்து வரும் எழுத்தாளராகவுள்ள இவர் இந்த நூற்ருண்டின் புதுமைகளில் ஒன்ருன 'கம்யூட்டர்' என்னும் சாதனம் பற்றிய குறிப்புகளைக் கதையினூடே தோன்றச் செய்து கருத்துகளுக்கு வலிமையூட்டுகின்ருர்.

அடுத்து நாம் காண விழைவது நாடக நூல்கள். இலயோலாக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. சு. அருள்சாமி அவர்களது அரிய படைப்புகளாக இரு நாடகங்கள் உள. அவை 'சேரிப் பெண்' 'வாழ்வரசி' என்பன. ஆசிரியர் தம் முன்னுரையில் நாடகத்தில் தாம் கொண்ட பித்தே எழுதும் ஆவலைத் தூண்டியதாகச் சொல்லியிருக்கிருர். சாதி வேறுபாடற்ற தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதே இவரது நோக்கம் என்பதை இவரது நாடகங்கள் தெளிவாக்குகின்றன. நகைச்சுவையுடன் கூடிய இலக்கிய உணர்வும், தமிழ்ப் புலமையும், முன்னேற்றக் கொள்கையும் இவ்வாசிரியர்க்குப் புகழைத் தருகின்றன.

மனேன்மணீயத்தைப் பின்பற்றி, கவிதை நாடகம் ஒன்றை 'முல்லை மாடம்' என்ற பெயரால் நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. ஐசக் அருமைராசன் என்பவர் இயற்றியுள்ளார். மனேன்மணீயத்தைப் போலவே குறட்பாக்கள், பழமொழிகள் ஆகியன இந்நூலில் நிரம்ப எடுத்தாளப் பெற்றிருப்பதால், இந்நூல் ஏற்றம் பெறுகிறது.

பாண்டிய நாட்டு மன்னன் மாறன் வழுதியும், கொங்குச் செல்வி காமக்கண்ணியும் முறையே நாடகத் தலைவனும் தலைவியுமாக வருகின்றனர். ஆனால், பண்டை இலக்கிய மரப்புப்படி தன்னேரில்லாத் தலைவர்களாக அன்னோரை ஆசிரியர் காட்டவில்லை. மாறாக அவர்களிடையே பல குறைகளை ஏற்றிக்காட்டி வாழ்வியல் வாய்மையைப் (realism) புலப்படுத்த முனைந்துள்ளார்.

திருநெல்வேலியிலுள்ள நாசரேத்தைச் சேர்ந்த திரு. ஜே. ஜி. சுந்தரம் என்னும் தமிழாசிரியர், 'சிலுவை வழி அம்மானை' என்ற நூலை யாத்துள்ளார். கிறித்து பெருமான் அடைந்த சிலுவைப் பாடுகளை விளக்க வந்த அம்மானை நூல் இது. இலக்கியச் சொற்களை வேண்டுமென்றே ஒதுக்கிவிட்டு வேத நூலின்கண் பயின்று வரும் சொற்களைப் பெரும்பாலும் அமைத்து கிறித்துவர் பயனடையும்படி யாத்த தன்மை பாராட்டுக்குரியது. பிழையின்றித் தமிழில் உரையாற்ற வல்ல ஆங்கிலப் புலமையாளரான சென்னைப் பேராயர் மறைதிரு வெஸ்லி நியூபிகின் அவர்கள் இந்நூலுக்கு முகவுரை எழுதியுள்ளார்.

இயேசு பெருமானைச் சிலுவையில் ஏற்றி வதைத்த யூத மக்களுக்காக அவர்தம் பரம பிதாவை நோக்கி வேண்டிக்கொள்வதை, இந்நூலாசிரியர்,

> 'பூதலத்தோர் பாவங்கள் போக்கவந்த வள்ளலவர்
> ஓதரிய மன்னிப்பைத் தாமே உறுதி செய்வார்'

என்றும்,

> 'பேதமை கொண்டோர் பிழைபொறுக்கத் தந்தையரை
> வேதனை மத்தியிலும் வேண்டினரே அம்மானை'
>
> (சிலுவைக் காட்சி—42, 43)

என்றும் உருக்கமாகப் பாடியிருப்பதைக் காணலாம்.

கிறித்தவ பெருமானை ஈன்ற தாயைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு, கோட்டாறு வித்துவான் எஸ். தம்புரான் தோழ பிள்ளை என்பவர் 'கன்னிமரி பிள்ளைத்தமிழ்' என்னும் பிரபந்தத்தை யாத்துள்ளார். ஊசற் பருவத்தில் ஒரு பாட்டு வருமாறு :

> "உண்மைதானே உயர்கவசம்
> உள்ளத் தன்பே ஒண்கருவி ;
> வண்மை மேலாம் வாய்மையுமாய்
> வளரும் படைக்கு, வழிகூறி
> திண்மை யுடனே தாளேட்டும்
> தேவ சபைக்குத் தாயாகி
> அண்மை நின்றே அருளேற்கும்
> அம்மா ! ஊசல் ஆடிடுவாய்"

இவர் புலமைக்கு இவ்வெடுத்துக்காட் டொன்றே போதுமன்றோ !

ஈழநாட்டைச் சேர்ந்தவரான டாக்டர் காமாட்சி ஸ்ரீநிவாசன் அம்மையாரது கவிப் படைப்புகள் 'அரசன் விரும்பிய சேவை,' 'குழந்தைப் பாடல்கள்' என்பன. 'உள்ளத்தில் உள்ளது கவிதை' என்றார் கவிமணி. அதன்படி கவிதைக்கு எந்தப் பொருளும் ஏற்றம் என்ற உண்மையை இவரது 'குழந்தைப் பாடல்கள்' என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து தெளிந்தறியலாம்.

'Good King Wenceslas' என்ற ஆங்கிலப் பாடலைத் தமிழில் இவர் கவிதையாக எழுதியுள்ளார். கிறித்தவ பக்தனும் 'வென்சஸ்லஸ்' என்ற 'பிரேக்' நகரத்து* மன்னன் கிறித்து பிறந்த நாளுக்கு அடுத்த நாளில் வறியவன் ஒருவனுடைய வீட்டில் தன் வேலையாளுடன் உணவும் விறகும் எடுத்துச் சென்றதைக் குறிக்கும் கவிதை இது. அதன் ஈற்றுப் பாடல் வருவாறு :

ஏதமின்றி இவ்வா றிருவரும்
இருளில் ஏகினர்
ஓதும் செல்வம் உடையீர், பெரியீர்
உகந்து காணீரோ ?
தாதர் வறியர் இவருக் குதவித்
தாங்கும் அருளாளர்
வானத் துன்பம் அடையார் என்றும்
மகிழ்ந்து வாழ்வாரே.

நல்ல கருத்தும் இனிய எளிய நடையும் அமைந்த இதைப் போன்ற பாடல்கள் சிறுவர்க்கு இயைவன, வேண்டுவன.

சுதந்திர காலமான இவ் விருபத்தைந்து ஆண்டுகளில் படைப் பிலக்கியப் பணியில் ஈடுபட்டுள்ள கிறித்தவ எழுத்தாளர் சிலரைப் பற்றி அறிந்தோம். கருத்தூன்றிப் பார்த்தால் அன்னாரை விரல்விட்டு எண்ணிவிடலாம். கிறித்தவ எழுத்தாளர் இச்சிறு தொகையினர் தாமோ என்று நாம் எண்ணுகின்றோம். கிறித்தவ தேவாலய வழி பாட்டு முறைக்கு ஏற்றதாகவும் தமிழ் யாப்பிலக்கண முறையைத் தழுவியும் சங்கராபரண ராகத்தில் அமைந்ததுமான,

'ஏசையா பிறந்த ஆதிமலையே
மோசநாளில் உன்னில் மறைவேனே !

என்று தொடங்கும் கீர்த்தனைப் பாடல் ஒன்றை மேனாட்டுக் கிறித்தவ ரான டாக்டர் கால்டுவெல் இயற்றிப் பாடச்செய்தார் எனில், தமிழ் நாட்டுக் கிறித்தவர் படைப்பிலக்கியப் பணியில் குறைபாடுடையவர்

---

* 'பிரேக்' நகரம் செக்கொஸ்லோவியா நாட்டில் உள்ளது.

எனக் கூறுதல் பொருந்துமோ? இல்லை. நிறையப் பேர் ஆக்கவேலையில் ஈடுபட்டதாகத் தெரியவில்லையே என்ற கேள்வியும் எழலாம். அதற்கும் காரணங்கள் பலவுள. கிறித்தவர் தமிழரிடையே ஒருசிறுபிரிவினர்தாம். கற்றறிந்த எழுத்தாளரான தேவநேயப் பாவாணர், பேராசிரியர் மாசிலாமணி அம்மையார், திரு. அ. அருளப்பன், டாக்டர் ஞானப்பிரகாசம், டாக்டர் தனிநாயக அடிகள், டாக்டர் இராஜ மாணிக்கம் முதலானோர் ஆக்கவிலக்கியத் துறையில் அதிக கவனம் செலுத்தாது ஆய்வு அல்லது விமரிசனத் துறையில் பேரார்வம் காட்டுகின்றனர். அத்துடன் தம் புலமையைக் கிறித்தவ வேதக் கருத்துகளை ஆராய்வதற்கும் பிறமொழி இலக்கியங்களை மொழி பெயர்த்தெழுதுவதற்கும் செலவிடுகின்றனர். ஆக்கவிலக்கியப் பணியில் கிறித்தவரை ஈடுபடுத்துவதற்குப் பெருந்தடையாக இருப்பது பொருட்தட்டுப்பாடு என்றும் கூறலாம். புத்தக வடிவில் படைப்புகளை வெளியிடுதற்குப் போதிய பணவசதி கிறித்தவ எழுத்தாளர்களுக்கு இல்லை. மற்றொரு காரணம், முற்பட்ட வகுப்பினராக அவர்கள் கருதப்படுவதால் அரசாங்க உதவியும் அவர்கள் பெறுதற்கு வழியில்லை. இதனாலேயே கிறித்தவ எழுத்தாளர் தம் ஆக்கவிலக்கியங்களைப் பத்திரிகைகளில் வெளியிடுகின்றனர். உதாரணமாக, தரங்கம்பாடியிலிருந்து வெளிவரும் 'வேந்தம்' என்னும் திங்கள் ஈரிதழில் 'இயேசு திருவெழுகூற்றிருக்கை' என்னும் தலைப்பில், பேராசிரியர் பவுலடியான் என்பவர் வெளியிட்டுள்ள 'குறும்பாவியம்' இரண்டைக் கூறலாம். திருமறைச் செய்தியைச் சுருங்கக்கூறி இறுதியில் இறைவனடியில் அடைக்கலம் வேண்டும் அடைக்கல விண்ணப்பமாக இது அமைகிறது. எனினும், நேரிசைப் பாவால் மலர்ந்து கற்பார்க்கு விருந்தாகிறது. நூல் வடிவில் இது வெளிவருமானால் தமிழரனைவரும் பயனடைவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இதுவரை படைப்பிலக்கியம் தோற்றுவித்த கிறித்துவ எழுத்தாளரைப்பற்றி யானறிந்தவளவு எடுத்துரைத்தேன். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும், கிறித்துவ இலக்கிய சங்கம் தமிழ் நூல்களை வெளியிடுகிறது. அவை அனைத்தும் நம் காட்சிக்கெட்டுவன வல்ல. ஆதலின், அறியாமை காரணமாக ஒருசிலரை நான் குறிப்பிடாமல் விட்டு இருக்கலாம். அறிஞர் அருள்கூர்ந்து பொறுத்தருள்வதோடு இக்கருத்தரங்கில் தாம் அறிந்த தமிழறிஞர்களைப் பற்றிய கருத்துகளை வெளியிட்டு யாவரும் பயன்பெறச் செய்வாராக.

விடுதலை வெள்ளிவிழாவில் பங்கெடுக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்ட பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் திரு. சஞ்சீவி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக்கட்டுரைக்குத் துணைசெய்த நூல்கள்

1. கிறித்துவமும் தமிழும் — மயிலை சீனி வேங்கடசாமி.
2. இன்றையத் தமிழ் இலக்கியத்தில் மனிதன் — பதிப்பாசிரியர் தி. பாக்கியமுத்து.
3. சிறுகதை — தோற்றமும் வளர்ச்சியும்.
4. தமிழ் நாவல் இலக்கியம் — கைலாசபதி.
5. மாணவர்க்கு நாடகங்கள் — என். தேவானந்தன்.
6. ஜெகசிற்பியன் நாவல்கள்.
7. டேவிட் சித்தையா நாவல்கள்.
8. மு. சு. அருள்சாமி நாடகங்கள்.
9. ஐசக் அருமைராசனது கவிதை நாடகம் 'முல்லை மாடம்.'
10. குழந்தைப் பாடல்கள் — காமாட்சி ஸ்ரீநிவாசன்.
11. சிலுவை வழி அம்மானை — ஜே. ஜி. சுந்தரம்.
12. யார் மனிதன் ? — டேவிட் பிச்சை.
13. வித்வான் ஆர். எஸ். ஜேக்கப் எழுதிய 'நூறு ஜீவனுள்ள கதைகள்.'
14. ஹெப்சிபா ஜேசுதாசன் நாவல்கள்.
15. செல்வி மாசிலாமணி எழுதிய 'தழைத்த மல்லிகை.'
16. டி. செல்வராஜ் எழுதிய 'மலரும் சருகும்.'
17. பாஸ்கரன் (சவிதா) எழுதிய 'தொட்டபெட்டா.'
18. ஒப்புநோக்கிய கிறித்தவப் பத்திரிகைகள் — மணிமலர், புத்துயிர், தேசோபகாரி பாலியர் நேசன், நற்போதகம்.

32

இராமகிருஷ்ண இயக்கத்துத் தமிழ் நூல்கள்

பேராசிரியை சு. சிவகாமசுந்தரி, எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
திரு. அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி,
கோயம்புத்தூர்-11.

நூற்று ஐம்பது ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்த நமது நாடு எத்தனையோ இன்னல்கள், சோதனைகள், தியாகங்களுக்குப் பிறகு 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் விடுதலை அடைந்தது. இன்று வெள்ளிவிழாக் கண்டுவிட்ட பெருமையில் பாரதம் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது. விடுதலை — மக்களின் ஆற்றலையும் உணர்ச்சிப் பெருக்கையும் வெளிப்படுத்தும் என்பது வரலாறு காட்டும் உண்மை.

18ஆம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் வெடித்த தொழிற்புரட்சி காரணமாக ஆங்கில அரசு வாணிபக் கொடியை ஏந்திக் கொண்டு இந்தியாவில் நுழைந்தது. இந்நிகழ்ச்சிதான் இந்திய வரலாற்றைத் தலைகீழாக மாற்றிவிட்டது. மக்கட் பெருக்கமும், உற்பத்திக் குறைவும், மக்கள் தேவைகளும், குடிசைத் தொழிலின் அழிவும், இந்திய மன்னர்களிடமிருந்த ஒற்றுமையின்மையும், ஆங்கிலேய அரசை வெகு வேகமாக வரவேற்றன. இவை தவிர, நாட்டின் பல்வேறு திக்குகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, கடும்பஞ்சம், கொள்ளைநோய் போன்றவை இந்தியாவையும், இந்தியர்களையும் பெருமளவில் உலுக்கி விட்டன. பொருளாதார நெருக்கடி, அரசாங்கச் சலுகை பெறுதல், கடுமையான சாதி வேற்றுமை ஆகியவற்றுல் இந்தியர்களுக்கு — இந்தியப் பண்பாட்டின் மீதே வெறுப்புத் தோன்றியது. எனவே, இந்து தர்மத்தைக் காக்கும் பரம்பரைப் பணியைச் செய்யத் தவறி விட்டனர்.

இந்நிலையில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடையில் தோன்றிய இராஜாராம் மோகன்ராய் (1772—1833) இந்த வெறுப்பிற்கு முடிவு கட்ட எண்ணினுர்.

இந்திய விடுதலையின் முதல் மைல் கல்லாக, விடிவெள்ளியாகத் தோன்றிய மோகன்ராயால் தகர்த்தெறியப்பட்ட பழக்க வழக்கங்களே பின்னர் 1857-ல் விடுதலைப் போருக்கு முதல் வெடிகுண்டாக அமைந்தது.

இந்துமத மறுமலர்ச்சிக்காகப் பிளாவட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் அவர்களும் 'பிரம்ம ஞான சங்க'த்தை ஏற்படுத்திய போது, (Theosophical Society) இராமலிங்க அடிகள் சமரச சன்மார்க்கக் கருத்துகளால் தென்னகத்தை விழிப்பூட்டிக் கொண்டிருந்தபோது, "முப்பது கோடி இந்திய மக்களின் இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த ஆன்மிக வாழ்க்கையின் நிறைவாய் விளங்கியவர்" என ரோமெயின் ரோலந்தால் புகழப்படும் இராமகிருஷ்ண பரமஹம்சர் (1836 — 1886) தோன்றினர்.

விடுதலைப் போராட்டம் துவங்கிய நாள் முதல் 'மெய்க்கும் கிருத யுகத்தினை'க் கொணருகின்ற ஒரு புத்தெழுச்சி மனித இனத்தின் நாடி நரம்புகளிலெல்லாம் மின்னொளி பாய்வது போலப் பாய்ந்தோடுவதற்குப் பரமஹம்சருடைய பிறப்பு உதவியது.

> " எல்லோரும் அமரநிலை எய்து நன்முறையை
> இந்தியா உலகிற்கு அளிக்கும் "

என்ற பாரதியின் அழுத்தமான தேமதுரக்குரல் அச்சமின்றி இச் சகத்தில் ஒலிக்கச் செய்யப் பெரும்படை திரளுவதற்குக் குருதேவருடைய பிறப்புத் துணைசெய்தது.

"பாருக்குள்ளே நல்ல நாடு" — பாரதம். அதன் பெருமை பொருட் செல்வத்திலோ, வான் நிமிர்ந்த கூடகோபுரங்களாலோ மிளிராமல், "இரும்பிறவித் தளை நீங்கி இன்புறுவார் தாம் வாழ விரும்பி வரும் ஞானமலி பரத கண்டம்" விடுதலை வேள்வியில் குளித்தெழத் தன்னைத் தயார் செய்து கொள்ளக் குருதேவரை ஈன்றெடுத்தது என்று கூடக் கூறலாம்.

நம் பாரத நாட்டின் ஆன்மிக, நாட்டு விடுதலையின் அவசியத்தை உணர்ந்த 'பெரியார்கள்' வரிசையில் — மனிதப் பிறவியின் உயர்வற உயர்ந்த குறிக்கோளை முதன் முதலிலே கண்டதும், விண்டதும், அதனை அடைதற்கென முழு மனத்துடன் உழைத்து வெற்றி பெறத் தக்க குறிக்கோளையுடைய ஓர் இயக்கம் தேவையாக இருந்தது.

இராமகிருஷ்ண தேவரை ஆன்மிக வானிலே மாண்புற ஒளிரும் 'விடுதலை வெள்ளி' என்று கூறலாம். 19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஞான பாரதத்திற்கேற்பட்ட கடுங்கோடை வறட்சியின் வேட்கையால், பாரதத்தின் சமயச்சோலை பசுமை இழந்து வாடிற்று. மேனாட்டு நாகரிகம் எனும் அனல் காற்று பாரத உயிரினை — விடுதலையைக் கருகச் செய்து விடுமோ என்ற அச்ச நிலை ஏற்பட்டது. தம் தாய்நாட்டின் பழம்பெரும் பண்பாடு புதிய உலகத்திற்கு ஒத்து வராது எனப் பாரத மக்கள் எண்ணினர். இந்தியப் பண்பாட்டிற்கு ஒரு சோதனையே ஏற்பட்டது. பிளாசி யுத்த முடிவு வரலாற்றில்

மட்டுமன்றி இந்தியப் பண்பாட்டிலும் பிரதிபலித்தது. மேலை நாட்டுக் கல்விமுறை மது மயக்கத்தைப் போல இந்தியர்களைப் பற்றியது. தாய்த் திருநாட்டைப் பழித்துத் தூற்றி "மெத்த வளருது" மேலைநாடு எனப் புகழும் அளவுக்குச் சிந்தை திரிந்தது. இது வெளிமாற்றமே தவிர, ஆன்மா தாக்கப்படவில்லை. உள்ளம் விழித்தெழுந்தது. திரு முகில் வானத்தே திரள — அருள்மழை பொழிய — மருள் வேட்கை அகல — வேதாந்த வேளாண்மை அமோகமாக நடைபெற — இந்த ஆகப் பெரிய புரட்சிகளை அமைதியாக நடத்திய மும்மூர்த்திகள் — இராமகிருஷ்ண பரமஹம்சர் — விவேகானந்தர் — கரம்சந்த் மோகன தாஸ் காந்தி.

இம் மூவரில் முதல்வராக — மூலவராக விளங்கிய இராமகிருஷ்ணரை, கிறிஸ்தபர் இஷர் வுட் (Christopher Isher Wood) என்ற அறிஞர் "ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஓர் அற்புதத் தோற்றம்" என்று கூறினார்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை ஒரு அகில உலக சம்பவம். ஒரு மாபெரும் சாதனை! ஒரு புதிய சகாப்தத்தின் துவக்கம். அவரிடமிருந்து பெருக்கெடுத்தோடிய ஆத்மிக வெள்ளம் பாரதத்தையும் புனிதமாக்கி, வண்டல் பரப்பி — நிரப்பி — வளமுறப் பண்ணும் கங்கைப் பிரவாகம்!

குருதேவரின் உற்சவ மூர்த்தியாகத் திகழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர். குருதேவரின் அள்ள அள்ளக் குறையாத தவத்திருவை அவர் பாரதமெங்கும், பார் முழுவதும் வாரி வழங்கினார். பரமஹம்சரின் அருட் பேரரசை அவர் அண்டமெல்லாம் விவரித்தார். அந்த அருட் பேரரசு நிலைத்து நிறகச் செய்து உழைப்பதற்காக இராமகிருஷ்ண இயக்கத்தை அவர் நிறுவினார்.

நல்லார் இட்ட நற்பயிரென இராமகிருஷ்ணக் குழாம் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அரும்பணியாற்றி வருகின்றது. இக்கால உலகத்தின் முக்கியமான சமரச சக்திகளுள், மனித இன ஐக்கியப் பாட்டிற்கு உதவும் பெரும் ஊக்குதல்களுள் உயர் சாதனையாக மிளிரப் பண்ணும் இலட்சியப் போக்குகளுள் இராமகிருஷ்ண—விவேகானந்த இயக்கமே தலைசிறந்ததாக உள்ளதென்பதை அறிஞர் கூட்டம் கண்டுணர்ந்து பாராட்டி வருகின்றது. இராமகிருஷ்ண — விவேகானந்தரது சமயப் பணிமயமான வாழ்க்கையின் பயனே இன்றைய பாரதம என்பது உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை!!

இன்று நாம் இராமகிருஷ்ண — விவேகானந்த சகாப்தத்தில் வாழுகின்றோமென்பது பெருமைக்குரியது.

விடுதலைக்குப் பின் விழித்தெழுந்துள்ள இன்றைய பாரதம் இவ்விரு பெரும் மெய்ஞ்ஞானச் சக்திகளால் — சிற்பிகளால் வடித்

தெடுக்கப்பட்டுள்ளது. நமது அன்னை நாட்டிற்கு இப்பெரியார்கள் அளவற்ற சக்தியினை ஊட்டியுள்ளார்கள்.

> " எம் தாய் நாட்டினை எவரினி எதிர்ப்பார்?
> எள்ளள வும்இனி எம்தாய் உறங்காள்!
> அம்மா! இனியுனை அயலார் தீண்டார்
> அந்நிலை நீயுறல் அறவே இலையாம் "

என்பது வேதாந்த சிங்கம் விவேகானந்தரின் வாக்கு.

தனி மனிதனோ, அல்லது சமுதாயமோ வெறும் ஊன் ஓம்புதற்கு மட்டும் வாழவில்லை. சமய உணர்ச்சியின் சிறப்பினைப் பாரதம் மிகவும் ஊன்றி, உணர்ந்துள்ள நாடாகையால் ' துறவும், தொண்டுமே ' நமது குறிக்கோள் என்பதை அமைதியாக ஆனால் விண்ணதிரக் கூறினர். இந்தக் கூற்றின் விளைவே இராமகிருஷ்ண இயக்கமாக மலர்ந்தது. இயக்கத்தின் ஒவ்வொரு செயலும் உயிர் ஓம்பலான ஆன்மிக வளர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இயக்கத்துப் பணிகள் அனைத்தும் இறைபணியாகவே இயற்றப்படுகின்றன. ஒவ்வொரு செயலும் ஆத்ம சாதனையாகவே செய்யப்படுகின்றன. வெறும் கர்மம் புரியாது, கர்ம யோகம் புரியவே வாழ்க்கைக்கு வழிகாட்டப் பட்டது.

நுண்மாண் நுழைபுலம் மிகுந்த கல்விச் சிந்தனையாளரான சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண இயக்கத்தை அதற்குப் பயன்படுத்தினார். மனித உள்ளத்தில் இயல்பாக அடங்கிக் கிடக்கும் தெய்விகத் தன்மையைத் தெளிவாக வெளியிடச் செய்யும் சமயத்தை நூல்கள் வாயிலாகக் கூறும் பணியினை இராமகிருஷ்ண இயக்கம் மேற் கொண்டது.

மனித உள்ளத்தில் இயல்பாக அடங்கிக் கிடக்கும் இறைத் தன்மையைத் தெளிவாக வெளியிடச் செய்யும் சமயக் கருத்துகளை நூல்கள் தெளிவுபடுத்தின. மனிதனின் உள்ளத்தில் இயல்பாகவே கூம்பி நிற்கும் முழு நிறைவுத் தன்மை மலர்ந்து, வெளியாகி மணம்பெறச் செய்யும் நூல்கள் வெளி வந்தன. மனிதனை உண்மை மனிதனுக்கும் கல்வியை, தியாக சிந்தனையுடையோர் பொறுப்பேற்று நடத்தும் கல்வியைப் போதிக்கும் வலி மிகுந்த சாதனமாக நூல்கள் விளங்குகின்றன.

பாரத நாட்டைப் புதுமலர்ச்சி பெற்றுத் துலங்க வைப்பதான இராமகிருஷ்ண இயக்கம் எதிர்பாராத ஒரு நிகழ்வு அல்ல. இராம கிருஷ்ண இயக்கம்—ஒரு தெய்விக உலக அமைப்பு மட்டுமன்று. இந்திய வரலாற்றுக்கும் இதுபோல இயக்கம் ஒன்று தேவையாக இருந்தது. "It is a challenge and response" " என்றார் Toynbee. 1886-ல் சுவாமி விவேகானந்தரால் தோற்றுவிக்கப்பட்ட இராமகிருஷ்ண இயக்கம் இன்று சென்னை நகரில் ஐந்து நிலையங்களுடன் தமிழகத்தில் கால்

பரவி வளர்ந்து வருகிறது. இன்று வரை ஏறத்தாழ 270 சிறந்த தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளதுடன் 1952ஆம் ஆண்டு முதல் ''ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்'' என்ற தமிழ்த் திங்களும் வெளிவருகிறது. வேதம், உபநிடதம், இதிகாசம், புராணம், இறைவழிபாடு, தத்துவம் போன்ற தலைப்புக்களில் தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன.

எழுத்தின் ஆன்மாவை இனம் கண்டுகொள்ளும் மொழிபெயர்ப்புக் கலைக்கு முன்னோடியாக நூல்கள் விளங்குகின்றன; மூல நூற்கருத்துக் களை அறைகூவி அழைக்கும் வியப்புப்படையல் என்றால் மிகை இல்லை.

"நீயே போதிப்பாயேல் நான் அறிவேன்" என்று அறிந்து கூறிய இராமகிருஷ்ணர் நூல்களும், "காய் வெங்கோடையில் கார் தோன்றி யது" போலத் தோன்றிய விவேகானந்தர் நூல்களும், "அன்பின் அன்னையான" சாரதாமணி தேவியின் நூல்களும் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. தியாகம், சேவையை மையமாக வைத்து ஆன்மாவில் சிந்தையுள்ளவர்களாய், அதன்வழி நாட்டு விடுதலைக்கு அடிகோலக்கூடிய சிந்தனையைத் தூண்டுகின்ற நூல்களை எழுதத் துவங்கிய முதல் இயக்கம் இராமகிருஷ்ண இயக்கம் என்றால் மிகை யில்லை.

கற்பனைக்குக் கூட எட்டாதது என்று கருதப்பட்ட இந்துமதத் தத்துவங்களையும், இவ்வுலகிற்குப் பயன்படாதது என்று புறக்கணிக் கப்பட்ட சித்தாந்தங்களையும், நேற்றைய, இன்றைய, நிகழ்ச்சிகளுடன் ஐக்கியமாக்கி, செழுமையாக்கி, அறிவியலாக்கி, அனைவரும் நாளைய நிகழ்ச்சிகளுக்காக அதைப் பின்பற்றவும், தொழவும் செய்யக்கூடிய "இந்து சமயத் தத்துவங்களை—சுவையில்—சொல்லில்—பொருளில் புதிதாகத் தருகின்ற பெரும் பணியினை இராமகிருஷ்ண இயக்கத்துத் தமிழ் நூல்கள் மேற்கொண்டன.

"இந்து மதத் தத்துவமென்பது மனிதர்களுக்கு அப்பாற்பட்டது என்றும், அது இவ்வுலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் புது உலகத் தைப் பற்றி மட்டுமே கவலைப் படுகிறது" என்ற கருத்தை மறந்து, "கடவுள் நாம்—நாமே கடவுள்", "தெய்வம் நீ என்றுணர்", "உண்மை யில் இருக்கும் ஒரே கடவுள்", "மனித வடிவில் விளங்கும் கடவுள்" "ஒரு கவளச்சோறாக இருக்கும் கடவுள்" என்றெல்லாம் "புதிய ஆத்தி சூடி" போல, "புதிய கடவுள் சூடி" படைத்துக் கொடுத்தன இராம கிருஷ்ண இயக்கத்துத் தமிழ் நூல்கள்.

உருவ வழிபாடு, உயிர்ப்பலிகள், தேவையற்ற சடங்குகள் ஆகிய வற்றைக்காட்டிலும் மனிதரிடமும், உயிர்களிடமும், அன்பு செலுத்து வதே நமது தலையான குறிக்கோள். ஒவ்வொரு பொருளிலும் ஆன்மா உள்ளது. அந்த ஆன்மாவுக்குச் செய்யும் தொண்டு தான் ஆண்ட வனுக்குச் செய்யும் தொண்டு என்ற ஆன்மிக உணர்ச்சியை எளிய தமிழில் இனிமையாக எடுத்தோதின.

"தியாகமும், சேவையுமே இந்தியாவின் பாரம்பரியமாக வந்த பண்பு"—இப்பண்பை உணர்ந்து வளர்க்குங்கால் பாரதத்து எல்லாச் சிக்கல்களும் நீங்கி—வளமும் வாழ்வும் ஓங்கிச் சீர்மை நிறையும் என்ற அடிப்படையை நூல்கள் வெளிப்படுத்தின.

"சுதந்திரமே மனித வளர்ச்சிக்குத் தலையாயது. நமது தேசத்திற்கு இப்பொழுது வேண்டுவதெல்லாம் இரும்பு போன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளுமே. எல்லையற்ற சக்தி வாய்ந்த, எதனாலும் தடுக்க முடியாத இந்த அண்டத்தின் இரகசியங்களை ஊடுருவி அறிய வல்லதும், அதற்காக அவசியமானால், சமுத்திரத்திற்கு அடியிலும் சென்று சாவையும் எதிர்க்கக் கூடியதுமான மனோதிடம்தான் நமக்கு இப்பொழுது தேவை என்ற நாட்டுப் பற்று மிகுந்த சக்தி ஓங்கிய வாசகங்களடங்கிய விவேகானந்தரது நூல்களை இயக்கம் வெளியிட்டு வானோங்கிய சிறப்புக்கு வாகை சூடிக் கொண்டது.

ஒரு சுடரில் ஐந்நூறு பக்கங்களுக்குக் குறைவில்லாது பத்துச் சுடர்கள் கொண்ட தொகுப்பாகிய "விவேகானந்தரின் ஞானதீபம்" ஓர் அற்புதப் படைப்பாகும்.

இந்துமதமும், பலவகைச் சமயங்களும், சமயக் குரவர்களும், பல் சமயப் பேரவையில் அவர் ஆற்றிய சொற்பொழிவும், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், இராஜயோகம், உரையாடல்கள், கடிதங்கள், வினா—விடைகள், அருள்வாக்கு, பாடல்கள், ஐரோப்பியப் பயணம், இந்தியர்களுக்கும் உலகத்தார்க்கும் அளித்த செய்திகள், இந்தியா, அதன் பண்பாடு, சிக்கல்களுக்கு ஞானதீபம் விளக்கம் தருகின்றது. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபத்தைத் தமிழாக்கம் செய்து தந்ததன் மூலம். நாடும், மொழியும், வரலாறும், மக்களும், பண்பாடும் உய்யும் ஞானக் களஞ்சியத்தைத் தந்து தமிழ்நூல்கள் வரிசையில் நல்லதோர் இடத்தை இராமகிருஷ்ண இயக்கம் கைப்பற்றிக் கொண்டு விட்டதை 'அறிவார்' அறிவர்.

"உள்ளி உள்ளதெல்லாம் உவந்து ஈயும்" எளிமையை, இனிமையை, இறைமையை இராமகிருஷ்ணரின் 'மொழியமுதம்', 'உபதேச மொழிகள்' போன்ற நூல்கள் வெளிப்படுத்தின.

மனித சமுதாயத்தின் உயர்ந்த உண்மைகளை, மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய பேரறத்தை—பேரருளை சுவாமி விவேகானந்தரின் அனைத்து நூல்களும் வற்புறுத்தின.

அன்னையாரின் நூல்கள் தூய்மைக்கும், இனிமைக்கும், அன்பிற்கும் எடுத்துக்காட்டு.

நெடுநாட்களாகத் தட்டுத்தடுமாறிய பின் சில அரிய நேரங்களில் மனித சமுதாயம் தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டு வாழ்வின்

இலட்சியங்களைச் சிந்தித்து, அசைபோட்டு, செயற்படுத்தும் வகைகளைத் 'திரு அருள்மொழி,' 'வேதாந்த சாரம்,' 'ஞானோபதேசம்' போன்ற நூல்கள் வலியுறுத்துகின்றன.

'நாமாவளிகள்,' 'சங்கீர்த்தனங்கள்,' 'கீர்த்தனைகள்,' 'பஜனாவளி' நூல்கள் பலவும் இசைக்குத் தருகின்ற முக்கியத்துவத்தைவிட, இறை சிந்தனைக்குத் தந்துள்ள இடமே முக்கியமானதாகும்.

வெற்றி எட்டுத் திக்கும் ஜெயபேரிகை கொட்டும் 'ஞானம், அன்பு, வீரம், யோகம், அறம், அருள், வேதாந்த' முரசு நூல்களை வெளியிட்டுத் தனி மனிதனுக்கு விமோசனமும், சமூக உயர்வும், சமத்துவமும் அளிக்கும் 'சுவிசேஷங்களாக' உயர்ந்துள்ள உண்மையை அவசியம் குறிப்பிட வேண்டும்.

இந்து மதத்தின் முக்கிய கருத்தாகிய உலகியல்—உலகியல் முழுவதிற்கும் அடிப்படையான ஆன்மா, அதன் இயக்கம்—அதன் வெற்றியைப் பாரதத்திற்கும் உலகத்திற்கும் காத்துத் தருவதற்காகவே இராமகிருஷ்ண இயக்கத்துத் தமிழ் நூல்கள் பணியாற்றி வருகின்றன.

திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம், மருவு பல்கலை வளர்க்கும்—இராமகிருஷ்ண இயக்கத்துத் தமிழ் நூல்கள்,

" எல்லோரும் நன்முறையை எய்தும்
மார்க்கத்தை அளிக்கும்! ஆம்!! அளிக்கும்!!!

33

விடுதலை இந்தியாவில் தமிழ்க் காப்பிய வளர்ச்சி

பேராசிரியை திருமதி சாரதா கலாவதி, எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
பாரதிதாசன் மகளிர் கல்லூரி, பாண்டிச்சேரி.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என்று இலக்கிய வழக்கிற்கு இலக்கணம் உரைத்தது தொல்காப்பியம். இலக்கிய வகைகளில் ஆற்றலும் அளவும் சிறந்தமைந்தது காப்பியம். அதனை யாத்தளிக்கும் புலவரால் மொழியின் பெருமை நிலை பெறுகின்றது. அத்துணைச் சிறப்புக்குரிய காப்பியம் படைத்தல் வித்தகர்க்கல்லால் அரிது.

காப்பியப் படைப்புக்குக் கற்பனைத் திறமையும் வித்தகப் புலமையும் தனி மனிதர் பெற்றிருந்தால் மட்டும் போதாது; புலவரின் புலமையைப் பார்த்தறிந்து பாராட்டும் நிலையில், உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும் சேராமல் நாடு நனி சிறந்து அமைதல்வேண்டும் என்பர். பூம்போது அவிழ்வதற்கும், நறுங்கனிகள் பழுப்பதற்கும் ஏற்ற செவ்வி வேண்டும் என்பதைப்போலக் காப்பியத் தோற்றத்துக்கும் தக்க சூழல்வேண்டும்.

கற்பனை வானில் சிறகடிக்கும் கவிதையுள்ளம், அயலார் ஆட்சியில் மக்கள் அடையும் அல்லல் நினைந்து அவலங்கொண்டது. எழுத்தாணி பிடித்தற்குரிய அறிஞர் கைகள் சிறையில் செக்கிழுத்து வருந்தின. இன்னும் பல தமிழன்பர் நெஞ்சமெல்லாம் தாயகத்தின் நலிவைப் பார்த்து நைந்துருகிப் பாரத அன்னையின் அடிமைத்தளை அகற்றும் முயற்சியில் அறிவையும் ஆற்றலையும் ஈடுபடுத்தின — இவையே விடுதலைக்கு முற்பட்ட நாட்டு நிலைமை.

இருபத்தைந்து ஆண்டுகட்குமுன், அயலார் ஆட்சி அகன்றது; உரிமையாட்சி பிறந்தது. அப்போது, பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் என்பவை எல்லாம் நாட்டில் ஓங்குதல் வேண்டும் என்பதே நல்லார் நோக்கமாயிற்று. எல்லாக் காலத்திலும் எல்லா

நாட்டிலும் உள்ள உயர்ந்தோர் விருப்பம் இதுவே. இலக்கியப் புலவரும் இந்த நல்ல விருப்பத்தைத்தான் தம் பனுவல்களிடையே இலைமறைகாயெனப் புதைத்து வைக்கின்றனர் என்பது அறிஞருலகம் அறிந்த ஒருண்மை. இவ்வகையில், விடுதலைக்குப் பின் மலர்ந்த தமிழ்க் காப்பியங்களும் நாட்டு மக்கள் நிலைமை இதுவெனக் காட்டியும், தாழ் வினை மாற்றி வாழ்வினை ஏற்றிச் சூழ்நிலை சிறக்கச் செய்யும் நெறி முறை சாற்றியும் அமைகின்றன.

மனமிருந்தால் வழியுண்டு என்பதனை மனத்தமைத்த மாண்புலவர் கூட்டத்தைச் சொல்லேருழவர் என்றார் திருவள்ளுவர். செவி செறு வாகச் செஞ்சொல் விதைக்கும் கருத்துடைய உழவர் பெருமக்கள், ஆறறிவுடைய மக்கள் மனத்தை உழுது பண்படுத்திப் பண்புப்பயிர் வளர்க்கும் பொருட்டு நுண்மாண் நுழைபுல நோக்கினால் யாப்பெனும் பாத்திகட்டிப் பேரன்பு நீர் பாய்ச்சி விழுமிய கருத்தினை எருவாக்கி உழைக்கும் முயற்சியில் தழைப்பதே காப்பியச்சோலை.

கடந்த 25 ஆண்டுக்கால எல்லையில் தமிழகத்தில் தோன்றிய காப்பியம் எனக் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை சில. அவற்றுள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் படைத்த குறிஞ்சித்திட்டு என்ப தொன்று. தமிழர் பண்பாட்டில் இருள்படர்ந்த வரலாற்றை உருவகப் படுத்திக் காட்டும் ஒரு சிறு காப்பியம் குறிஞ்சித்திட்டு எனலாம். இது பல்வகை யாப்பும் பாங்குடன் மிடைந்தது. 66 உட்பிரிவுடைய இதன் முதற்பதிப்பு 1959ஆம் ஆண்டில் வெளிவந்தது.

தமிழகத்தில் இடம்பெற்ற தீமையும் சிறுமையும் ஒழிக்கும் கருத் துடன், அத்தகு பொருளைத் தெளிவுபட எடுத்து வைப்பது இக் காப் பியம். காப்பியப் புலவருள் ஒருசாரார் நன்மையின் நலத்தை மிகை படப் புனைந்து அதனையே மனித மனம் நாடும் வண்ணம் செய்ய விரும்பும் தன்மையர். மற்றொரு சாரார் தீமையின் இழிவை எடுத்துக் காட்டி அதனை வெறுத்து ஒதுக்கவும் அழித்து ஒழிக்கவும் வழிதேடும் பான்மையர். இவருள், பின்னவர் வகையினைச் சார்ந்தவர் பாரதி தாசனார்.

தமிழர் நெஞ்சத்துத் தன்மான உணர்ச்சி வீறுபெற்று எழுவதற் காகச் சென்னையின் புன்மையை உள்ளவாறு காட்டுவது இவ்விலக் கியம். பண்டைய காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்தை மட்டும் விடுப்பது சிலப்பதிகாரம். அதன் வறுமையும் வாட்டமும் காட்டுவது மணிமேகலை. தமிழ்த் திருநாட்டின் தலைநகராய சென்னைப்பட்டினத்தில் பெருமைக்குரிய பல்கலைக் கழகமும் வேறுபல நல்ல நிலையங்களும் தொழிலகங்களும் சான்றோர் சூழலும் இடம் பெற்றிருந்தபோதிலும் சாத்தனார் சென்ற நெறியைச் சார்ந்து களைவதற்குரிய குறைகளையே மிகவுரைத்துள்ளது குறிஞ்சித்திட்டு. "கள்ள வாணிகர்கள் மக்கள் உழைப்பினைக் கவர்ந்து நாளும் கொள்ளை கொள் செல்வர் எல்லாம்

கொடியதோர் படத்தொழிற்கே வெள்ளையாய்த் தொண்டு செய்வார்"
(பக். 75 ; பிரிவு 12) என்றும்,

" நாணமில்லாத பல்லோர் நாளுமிக் களைகள் ஓங்க
ஊணுறக்கங்க ளின்றி உழைப்பது வியப்பே யாகும்."

(பக். 75 ; பிரிவு 12)

என்றும், நாட்டில் நிறைந்த தீமைகள் காட்டப்பட்டன.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல் தமிழ்ப் பண்பாடு தேய்ந்து, பெண்மைக்கு இழிவு நிகழ்த்தலைப் பின்வருமாறு பாரதி தாசனார் பாடியுள்ளார் :

" நூலெலாம் பெண்ணைத் தாழ்த்தும் நுண்ணறிவாளர் என்போர்
காலெலாம் கையெலாம் பெண் கண்ணிலே மண்ணைத் தூவும்"

(பக். 71 ; பிரிவு 12)

" தமிழ்நாட்டில் தமிழ்ப் பண்பாடு தலைகாட்ட வழியே யில்லை
தமிழரின் இலக்கியங்கள் தலைகீழாய்க் காணுமங்கே"

(பக். 76 ; பிரிவு 12)

என்று புரட்சிக்கவிஞரின் தமிழ் நெஞ்சம் ஏங்குகின்றது. அரசியல் நெறியில் உரிமை பெற்ற பின்னரும் பண்பாட்டுத் துறையில் உரிமையும், வளமையும் செழிக்கவில்லை என்பதையே இன்னோரன்ன பாடல்கள் தெரிவிக்கின்றன.

குறிஞ்சித்திட்டு என்பது அளவினால் சிறியதே ஆயினும் ஆசிரியரின் கவிதையாற்றல் இதில் தெளிந்தமையக் காணலாகும்.

" முழுநிலவு, விண்ணெல்லாம் முத்துக் குப்பை"

(பக். 209 ; பிரிவு 36)

என்ற சொல்லோவியம் இரவு வானத்தின் இயல்பினை இசைப்பதோடு கவிஞரின் சொல்லாற்றலையும் விளக்குகின்றது.

அடுத்ததாகச் சொல்லத் தகுவது, கவிஞர் முடியரசனார் வளர்த் தளித்த 'பூங்கொடி.' இதன் முதற்பதிப்பு 1964ஆம் ஆண்டில் வெளியாயிற்று. இக்காப்பியம் 31 காதைகளும் 5243 வரிகளும் உடையது. நிலைமண்டில ஆசிரியப் பாக்களைக் கொண்டது.

சமயப்பற்றினால் பிறந்த காப்பியம் பற்பல தமிழகத்தில் உண்டு. 'பூங்கொடி' என்பது மொழிப்பற்றின் வழியமைந்த ஒரு காப்பியம். மணிமேகலையைக் காப்பியத் தலைவியாக்கிச் சீர்திருத்தக் கருத்துகளைத்

தெளிந்தமைத்த சாத்தனாரைப் போலவே முடியரசனாரும் இக்காலத் தமிழ்மக்கள் வாழ்வு திருந்தி அமையும் பொருட்டுச் செய்யத் தகுவன வற்றைச் செய்வதையே குறிக்கோளாய்க் கொண்ட பூங்கொடியைக் காப்பியத் தலைவியாக்கினார். இத்தலைவி கற்பனைப்படைப்பே; ஆயினும், காப்பியத்துள் கவிஞர் காட்டும் சமுதாயச் சூழ்நிலைகள் கற்பனையல்ல உண்மையே என்பதை இற்றைத் தமிழர் அறிவர். கருத்தமைப்பில் மட்டுமன்றிக் காப்பிய யாப்பிலும் பாத்திரப் படைப்பிலும் காதைகளின் பெயரமைப்பிலும் 'மணிமேகலையைப் பெரிதும் பின்பற்றியே 'பூங்கொடி' அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பழமையைப் பெரிதும் தழுவிய இக்காப்பியத்துள் படித்து இன்புறத்தக்கதாகச் சில புதிய உவமைகளும் உள்ளன.

> ' இந்நாள் விடுமுறை எனும்சொற் செவியுறத்
> துள்ளிக் குதிக்கும் பள்ளிச் சிறாரென
> வெள்ளைக்கயல்கள் விடுபுனற் பொய்கையில்
> தாவிக் குதிக்கும் ' (4:30—33)

என்பதுவும்,

> ' விடிந்தால் திருநாள் விரைவினில் அணைத்தும்
> முடிந்தே எழுவேன் எனமனம் முடுகும்
> தையற் றொழில்வலான் தாளென ' (13:57:59)

என்பதுவும்,

> ' மின்பொறித் தாக்குதல் மெய்யுற்றான்போல் ' (13:128)

என்பதுவும் குறிப்பிடத்தக்கவை.

சாத்தனார் படைத்த மணிமேகலை, வயிற்றுக்கு உணவு வழங்கும் தொண்டினைச் செய்து அறச்செல்வியெனச் சிறப்புற்றாள். முடியரசனார் வளர்த்த பூங்கொடி, மனத்துக்குத் தமிழமுதம் ஊட்டும் தவச் செல்வியாய்த் திகழ்கின்றாள்.

முத்தமிழை நலிவுறுத்திய பகைகளும் அவற்றை எதிர்த்துப் போராடும் நெறிமுறைகளும் இக்காப்பியத்துள் காட்டப்பட்டன. நல்ல தமிழ்க் கல்வியை நாட்டினர்க்கு அறிவுறுத்தல் வேண்டிப் பூங்கொடி நங்கைக்கு மலையுறையடிகள் பின்வருமாறு சொல்லிச் சென்றார்:

> (தமிழக மக்கள்) ' ஆட்டினர் ஆயினர் ஆதலின் அவர்பால்
> கல்வித்தொண்டைக் கடவுள் தொண்டெனச்
> சொல்லுதல் வேண்டும் மெல்லியற் பூங்கொடி
> ஓதிய கல்வி உயர்வினை நல்கும்
> சாதியில் உயர்வு தாழ்வினைச் சாய்க்கும்
> குடிக்குயர் வாக்கும் கொடுமைகள் போக்கும்

பிடித்துள பேதைமைப் பிணியினைத் தொலைக்கும்
அடிமைத் தளைகளை அறுக்கும்.' (12:22—29)

இவ்வடிகளால், இற்றைத் தமிழகத்தில் அறிவின் வறுமையும் பண்பின் சிறுமையும் பெருகியுள்ளமை புலப்படும். வேற்று நாட்டவர் ஆட்சியினின்று நாடு விடுதலை பெற்றதாயினும் உயிர்களெல்லாம் கட்டறுத்து விடுபடும் நிலையைக் காட்டுவாரும் காண்பாரும் இல்லாத ஏழ்மைச் சூழலை முடியரசனார் படைத்த காப்பியம் நன்கு காட்டுகின்றது.

வறுமையும் வன்மையுமற்ற நாட்டை நடைமுறையில் காணாத போதிலும் கற்பனையில் கம்பர் கண்டு நமக்கும் காட்டினார். தமிழ்ப் பண்பும் கலையும் செழிக்கவென வளர்ந்து வாழ்ந்து பணியாற்றி மாய்ந்த சிலரை முடியரசனார் கற்பனை படைத்தளித்துள்ளது. அத்தகைய தமிழ்த்தொண்டருள் 'எழிலி' என்னும் இசைச்செல்வியும் ஒருத்தி.

"இசையால் உறுபே ரிசையாள் பிறமொழி
இசையே பாட இசையாள்" (16:6, 7)

என்று சொற்பின் வருநிலையணி திகழ, அவளை அறிமுகப்படுத்தும் தொடர்களில் காப்பியக் கவிஞரின் நோக்கமும் சொல்லாற்றலும் சுடர்விடக் காணலாகும்.

'கணிகணன் முன்செல மணிவணன் அடியினை
பணிதிரு மழிசையர் பதறினர் பின்செலப்
படப்பாய் அணைமேல் பாற்கடல் மிசையே
கிடப்போன் தன்மனைக் கிழத்தியும் உடன்வர
அரவணைச் சுருட்டோ டாங்கவர்த் தொடர்ந்து
பரிவுடன் ஓடப் பண்ணிய தெம்மொழி' (28:176—181)

என்று இசைத்தமிழின் ஆற்றலை வசையற உணர்த்துவது இக்காப்பியம்.

தமிழகத்துக் கோயிலில் தமிழொலி குடிபுக வேண்டும் என்பதையும் தமிழ் மக்கள் நாவினில் தமிழிசை வழங்குதல் வேண்டும் என்பதையும் பாவிகமாகக் கொண்டு பொலிகின்றது 'பூங்கொடி' என்னும் காப்பியம். ஆகவே பண்டை இசைத்தமிழ்ச் செல்வங்களை ஆசிரியர் ஆங்காங்கே முறைப்படுத்தி மொழிந்துள்ளார்.

'வேனிற்காதையும் வேட்டுவ வரியும்
ஆனினங் காக்கும் ஆய்ச்சியர் குரவையும்
பத்துப் பாட்டும் பரிபாட் டேடும்
நாவின் அரசர் நலந்திகழ் பிள்ளை

நாவலூர் நம்பியெனும் நற்றமிழ் வல்ல
மூவர் அருளிய தேவா ரத்தொடு
மாறன் திருவாய் மலர்ந்தருள் மொழியும்
அருண கிரியார் அருள்திருப் புகழும்" (27:147—156)

என்பவை அவர் குறித்தவை.

"முழங்கிசை வல்ல முத்துத் தாண்டவர்
வழங்கி யருளிய வளர்தமிழ்ப் பாட்டும்
அரும்பெறல் இசைவல அருணா சலக்கவி
திறம்பட நல்கிய தீந்தமிழ்ப் பாட்டும்
விரும்பிய சமநிலை வேத நாயகர்
தரும்பழச் சுவைநிகர் தண்டமிழ்ப் பாட்டும்" (20:217—222)

என்று பிற்காலக் கீர்த்தனை இசைச்செல்வங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

காப்பிய நடை சிறப்பதற்கு வருணனை இன்றியமையாதது. பூங்கொடியில் சோலைக்காட்சி, மலையருவி, மாளிகைப்பூங்கா என்பன வற்றை முறையே நான்காம், பதினெட்டாம், இருபதாம் காதைகளில் ஆசிரியர் நயம்பட வருணித்துள்ளார். இக் காப்பியத்தில் இரவு வானத்தழகினைச் சொல்லிய ஒரு பகுதி அவர் வருணனையாற்றலுக்குத் தக்க சான்றாகும்.

"இரவெனும், ஓவியன் மாதர் ஒளிமுகந் தீட்ட
நீல வான நெடுந்திரை தன்னில்
கோல வட்டங் குறித்தனன் அதனை
ஞாலம் நிலவென நவின்று மகிழ்ந்தது
நுதலிற் புரளும் சுருள்குழல் வரைய
நுதலி ஒருபுறம் நுண்ணிதின் வரைந்தனன்
களங்கப் பட்டது கண்டனன் நெஞ்சம்
துளங்கிக் கனன்று தூரிகை வீசி
உதறினன் கிண்ணம் ஒன்றனிற் பட்டுச்
சிதறிய வெண்ணிற வண்ணம் சிரித்திட
அதன் உடுவென அறைந்தனர் உலகோர்."
(6:4—15)

காப்பியத் தலைவி சிறைபட்டபோது இரவின் இருளில்,

"நெஞ்சினை வருத்தும் நெடுந்துயர் ஒன்றும்
துஞ்சுத லொழிந்த துணைவிழி யிரண்டும்
வஞ்சியின் மனத்து வளர்தமிழ் மூன்றும்
சூழ் மதிற் சிறையினுட் சோரா திருந்தன" (24:74—79)

என்று எண்களை நிரலே அடுக்கி மொழிந்து அழகு புலப்படக் கருத்துணர்த்தியுள்ளார் கவிஞர் முடியரசனார். நாயன்மார் ஆழ்வார்களும்

ஏனைய புலவர்களும் இம்முறையைக் கையாண்டுள்ளனர் என்பது புலவர் உலகம் அறிந்த உண்மை.

அதன்பின் நோக்கற்குரியது, விழுமிய பொருளும் இழுமெனும் இசையும் ஒருங்கமைய யோகி சுத்தானந்த பாரதியார் தீட்டிய பாரத சக்தி மகாகாவியம். இதன் முதற்பதிப்பு 1948ஆம் ஆண்டில் வெளிப் பட்டது. விரித்துப் புதுக்கிய இரண்டாம் பதிப்பு 1969இல் வெளிவந்தது. நாட்டுரிமைப் போரில் பங்கு கொண்ட நல்லோர்தம் வாழ்த்தலும் பெற்ற காப்பியம். நாடு விடுதலை பெறுமுன்பே யோகியார் இதனைப் பாடினர் எனினும், பல்லோரும் பார்க்கப் புத்தகமாய் வெளிப்பட்ட காலம் விடுதலைக்குப் பின்னரே. மேலும், பொருளமைதியாலும் இது காலங்கடந்து திகழும் மாட்சியுடையது. மற்றும், நாட்டு விடுதலைப் போராட்ட வரலாறும் காந்தியடிகள் மாய்ந்த அவலமும் இதன் பிற் பகுதியில் 'மகாத்மா விஜயப்படலம்' என்னும் பிரிவில் இடம் பெற்றுள் ளன. ஆகவே இதனை விடுதலைக்குப்பின் வெளிவந்து உலாவும் காப்பி யங்களில் ஒன்றெனக் கொள்ளுதல் அமைவுடைத்து.

சித்தி காண்டம், கௌரி காண்டம், சாதன காண்டம், தானவ காண்டம், சுத்த சக்தி காண்டம் என்னும் ஐந்து பெரும்பிரிவுடையது இக்காப்பியம். உலகப் படைப்பிலிருந்து உரைத்துள்ளார் யோகி சுத்தானந்தர். பாரதநாட்டில் சித்தி என்னும் நகரத்தில் சத்தியன் என்னும் வேந்தன் மகனாய்ப் பிறந்த சுத்தனைத் தலைவனாய்க் கொண்டது இக்காப்பியம். பாண்டிநாட்டிற் பிறந்து பண்பிலுயர்ந்து வளர்ந்த கௌரி என்பவள் அவன் இல்வாழ்க்கைத் துணைவியானாள். அறத்தை அழிக்கும் தீயரை ஒழிக்கும் போதில் கௌரியின் வாழ்க்கை முடிவடைந் தது. சுத்தன் அமைதியை நாடி உண்மையைத் தேடிப் பல்வேறிடம் புகுந்து வெவ்வேறு சமயக் கொள்கை கேட்டறிந்து சென்றவிடமெல் லாம் தீமை களைந்து நன்மை வளர்த்துப் பகை தகர்த்து வளம் மிகுத் துத் தந்தை சத்தியனுடன் சேர்ந்து ஆக்கப்பணி மீக்கூரச் செய்த பான்மையைச் செப்புவது இக்காப்பியம். பரிவுடைய மொழியாலும் பாகு தமிழிசையாலும் பகைவரும் நண்பராய்க் கீழோரும் பண்பாள ராய் மாறுவதைக் காட்டுவது பாரத சக்தி மகாகாவியம். அணுப்போர் அழிவினைக் காட்டி அதனினும் உயர்ந்தது ஆன்மசக்தி என்றுரைப்பது பாரத சக்தி மகாகாவியம்.

"மனிதான் மாவை மாய்க்குங் கொடுமை
எங்கும் காண்கிறோம் எத்தனை காலமாய்
உயர்ந்த நீதி ஒளிர்ந்த பாரதம்
இருளில் வருந்தும் இன்னலைக் கண்டோம்
பட்டினி கிடக்கும் பஞ்சைகள் இருப்பதேன்
ஏங்கித் தவிக்கும் ஏழைகள் மிகுவதேன்
மானம் விற்கும் மாதர் மலிவதேன்
பிச்சைப் படைகள் பெருகுவ தேனோ
வறுமையாற் புலவர் வருந்தலு மேனோ"

(2:12; கௌரிகாண்டம், சிந்தனைப் படலம். பக். 231, 232)

என்பவையெல்லாம் சுத்தனின் சிந்தனைச் சுடரினின்று தெறித்த பொறிகள்.

"பெருங்காப் பியநிலை பேசுங் காலை" என்று தொடங்கித் தண்டியாசிரியர் உரைத்த காப்பியப் பண்பெலாம் இதனிடத்துப் பொலியக் காணலாம். சுத்தனைப் பெற்று வளர்த்த பெற்றோர் மகிழ்ச்சியைக் காட்டும் வகையால் பிள்ளைத்தமிழியல்பைப் புலப்படுத்தியுள்ளார் யோகி சுத்தானந்தர். சுத்தன் கௌரியை முதன்முதல் கண்டபோது உற்ற நிலையை,

'கண்ணொடு கண்ணளாவிக் கருத்துறக் கலந்த தம்மா' (2:2. பக். 160) என்று தமிழ் மரபு பிழையாமல் காட்டியுள்ளார். கௌரி காண்டத்து இல்லற வொழுக்கப்படலத்தில் இல்வாழ்வார்க்குரிய நல் விதிகளை ஒருங்கே காணலாம். இறுதிக் காண்டத்திலுள்ள யோக சித்திப்படலம் என்பது 405 குறள் வெண்பாக்களைக் கொண்டது. ஒரு தலைப்புக்கு ஐந்து குறளாக அருங்கருத்துப் பலவற்றை ஆசிரியர் அழகு பட விளக்கியுள்ளார். அவற்றுள் ஒருசில ஈங்கே அறிதற்குரியன :

"அறமென் றறிந்ததனை அஞ்சாது செய்ம்மின்
இறைவனருள் காக்கு மினிது." (பக். 872)

"பழமை பழமையெனும் பல்லவியே பாடேல்
புதுமை புதுமை யெனப் போ." (பக். 872)

"கற்ற வழியாற்றக் கற்றோனே கற்றோனும்
மற்றவன் கற்ற மடம்." (பக். 874)

"புலனை வென்றோனே புலவனும் பகட்டாற்
கலகலப்போன் பேச்சுக் கடை." (பக். 874)

"கடன்செய் யிடம்பம் கவலைக்குத் தூது
விடஞ்செய் வறுமைக்கு வித்து." (பக். 882)

"சொற்போரும் விற்போரும் பொற்போரும் சோருமே
நெற்போரொன் றில்லா நிலை." (பக். 884)

"பணஞ்செய் படர்நீங்கிப் பண்டமாற் றோங்கின்
மணஞ்செய்யும் நாட்டின் வளம்." (பக். 885)

பொன்னிடத்தே பதித்த மின்னொளிக் கற்களெனப் பாரதசக்தி மகா காவியத்திற்கு இவை அழகு தருகின்றன.

போர்க்கள நிகழ்ச்சிகளும் இக்கதையுள் உள்ளன. காப்பியத் தலைவி கௌரி கணவனைக் காக்கும் பொருட்டு முயலுங்கால் குண்டு பட்டு மாய்வதைக் கௌரிகாண்டம் தெரிவிக்கின்றது. ஆசிரிய நடையும் விருத்தயாப்பும் அழகுறக் கலந்த மணிமிடை பவளமாக இக்காப்பியம் திகழ்கின்றது. மற்றும், பாரதநாட்டுச் சீர்மிகு வரலாறெல்லாம் இடை

யிடை மிடையத் தொடுத்த நறுமணக்கோவையெனவும், பல்வகைச் சமயத் தலைவர் வரலாறும் கொள்கையும் முறையுற விளக்கி நடுநிலை யுணர்வு கூட்டும் அருங்கலச் செப்பாகவும் பாரதசக்தி மகாகாவியம் விளங்குகின்றது.

" வரையெலாம் முனிவர்கூட்டம் வனமெலாம் குருகுலங்கள்
திரையெலாம் கப்பலோட்டம் திசையெலாம் திருவின்காட்சி
கரையெலாம் செல்வக்குப்பை கவின்மலர் கனிகுலுங்கும்
தரையெலாம் அமுதவாரி தழைத்துயிர் வளர்க்கு நாடே."

(1 : 4 : 2 சித்தி காண்டம், பாரதபுண்ணியபூமிப் படலம்—2. பக். 43)

என்னும் பாட்டில் சேக்கிழார் செய்த இலக்கியத்தின் எழில் இலங்கக் காணலாம்.

" உரிமையைப் பறிப்போ ரில்லை உரிமையை இழப்போ ரில்லை
சிறுமைக ளிழைப்போ ரில்லை சீர்மையைத் துறப்போ ரில்லை
வறுமையை அழைப்போ ரில்லை தொழிலினை மறப்போ ரில்லை
திறமைசால் அறிவும் வீறும் திருவுட னோங்கும் நாடே "

(1 : 4 : 16; பக். 45)

என்பதும்,

" இரப்பவர் இல்லை இல்லை என்பவ ரில்லை உள்ளம்
கரப்பவ ரில்லை பேதம் காண்பவ ரில்லை அன்பைத்
துறப்பவ ரில்லை வஞ்சர் தொல்லையு மில்லை தன்னை
மறப்பவ ரில்லை உண்மை மறுப்பவ ரில்லை மாதோ "

(1 : 4 : 17 ; பக். 45)

என்பதுவும் கம்பரின் பாடற்கருத்தை நினைவுபடுத்துவன.

சித்தி காண்டத்தின் இராமாயணப் படலத்தில் இராமாயண நிகழ்ச்சிகள் முறையுறச் சொல்லப்பட்டன. அவற்றுள் சில பாட்டுகள் ஈங்கே காண்பதற்குரியன.

" வந்தது சீதை நெஞ்சைக் கவர்ந்தது மாய மானும்
பிந்துறு சூழ்ச்சி நோக்காள் பிடித்ததைத் தருக என்றாள்
தந்திர மானும் தாவித் தாவிமுன் னோட ராமன்
பந்தெனத் தாவிச் சென்று பாணம்விட் டதனைக் கொன்றான்"

(1 : 18 : 71 ; பக். 97)

என்னும் பாடலில் தாவும் மானின் வேகம் சொற்பொருளாலும் சந்த அமைப்பாலும் உணர்த்தப்படும் அழகு அறிந்து இன்புறத் தக்கது.

"நெடுநெறி யிழுத்துச் சென்றே யிளவலை நீளக் கூவிச்
சடுதியி லிறந்த மானின் சத்தம்கேட் டுலைந்த சீதை
கெடுதலே வந்த தாங்கே கேள்வனே கூவு கின்றான்
கடுகிடு கொழுந்த என்றே கட்டளை யிட்டா ளம்மா"

(1 : 18 : 72 ; பக். 98)

என்னும் பாட்டில் திகைப்பும் பரபரப்பும் சொல்லிலும் யாப்பிலும் விளங்கக் காண்கிறோம். அசோகவனத்தில்,

"முட்டைக் கண் மூளி யோர்பால் மூர்க்கப் பிடாரி யோர்பால்
தட்டைமூக் கீரக்கி யோர்பால் தாடகைக் கும்பல் ஓர்பால்
மொட்டைமண் மண்டை யோர்பால் முழுக்கருங் குரங்கி யோர்பால்
கட்டைத்தொண் டையினர் சீதை கலங்கிட மிரட்டி னரே"

(1 : 18 : 88 ; பக். 99)

என்னும் பாடல் சுருக்கமே யெனினும் அரக்கியர் தன்மையைச் சிறக்கச் செப்பும் ஆற்றல் உடையது என்பது அறிந்து பாராட்டற் குரியது.

"வெள்ளிமாமலை யெடுத்தேன் வேழங்க ளெட்டும் வென்றேன்
தெள்ளிய மறைகள் கற்றேன் தேவரை யேவல் கொண்டேன்"

(1 : 18 : 92 ; பக். 100)

என்னும் இராவணன் தற்புகழ்ச்சியில் பெருமிதம் ஓங்கக் காண்கிறோம். அவனும் காம மயக்கத்தால் நெஞ்சு நெகிழ்ந்து இரங்கிய நிலையை எழுத்தாலும் இசையாலும் சொற்பொருளாலும் உணர்த்துவதோர் இனிய பாட்டுப் பின்வருவது :

"அழகெலாந் திரண்டு வந்தாய் அமுதெலாம் அளைந்த சொல்லாய்
குழலுடன் யாழும் கொண்ட கிளிமொழிக் குயிலே நெஞ்சு
குழையநின் முறுவல் பூத்த குமுதமா மதியை என்பால்
பழகுறத் திருப்பின் இந்தப் பாரினுக் கரசி நீயே !"

(1 : 18 : 95 ; பக். 100)

"மண்ணெட்டுந் துரும்பெடுத்து வீசித்தன் மனத்தில் வேகும்
புண்ணெட்டும் சொல்லைச் சொல்லிப் போவென்றாள் புனிதசக்தி"

(1 : 18 : 97 ; பக். 100)

என்பதில் சினக்கனல் தெறிக்கக் காண்கிறோம்.

"ஆழியைக் கண்ட தேவி அங்கணில் அகத்தில் ஒற்றி
வாழியெம் பெருமான் வீர மாருதி வாழ்க வென்றாள்
மூழ்கிய கவலை யற்று நகைமலர் முகத்தைக் காட்டி
ஆழியான் செய்தி கேட்டுத் தன்னிலை யறியச் சொன்னாள்"

(1 : 18 : 103 ; பக். 101)

என்பதில் உவகைச்சுவை ஒளிரக் காண்கிறோம்.

மனைவி கௌரி மாய்ந்தபோது சுத்தன் புலம்பிய பாட்டுப் பின் வருமாறு :

“என்னுயிர்க் குயிரே யானாய் என்விழி மணியே யானாய்
இன்னுயிர்த் துணைவி யானாய் இறுதிமூச் செனக்கே யீந்தாய்
மன்னுயி ருள்ள மட்டும் வானில முள்ள மட்டும்
அன்னையின் அன்பு மிக்காய் ஆருனை மறப்பா ரீங்கே”

(2 : 35 : 27 ; பக். 356)

இதில் அவலச்சுவை ஆழ்ந்திருப்பது அறியத்தக்கது.

“நெருங்கினர் நெட்டினர் நெடும்ப டைக்கலன்
நொருங்கிடப் பிதுங்கிட நொய்ய ஊனுடல்
சரங்களும் வெடிகளும் சடச டத்திடச்
சிரங்களும் கரங்களும் சிதையப் போர்செய்தார்”

(2 : 36 : 10 ; பக். 358)

என்பதும்,

மின்திரள் வெட்டினவோ ஒளிர் வாட்கணம்
வீசி மிளிர்ந்தனவோ
வன்மழை மூடியதோ மத யானைகள்
மண்ணை விழுங்கினவோ
வெண்சுடர் மங்கியதோ வெடியின் புகை
விண்ணை மறைத்ததுவோ
கண்ணறு போர்விளைவோ கனல் வாட்டிய
காலன் விருந்துகளோ ! (2 : 36 : 12 ; பக். 358, 359)

என்பதும் பரணிப் பாடலின் பீடுநடையுடையன.

“எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே”

என்னும் அவ்வையார் பாடலில் உள்ள ‘நல்லவர்’ என்று சொல்லுக்கு விளக்கத்தைச் சாதன காண்டத்துச் சாதனப் படலம் தருகின்றது. வையகம் வானகமாகும் வழியினை அதில் காணலாகும்.

“நானெனும் செருக்கி னுள்ளே
நாத்திகம் கலந்து வீசும்
தேனெனும் பேச்சி னுள்ளே
திருட்டுணர் வொளிந்து வீசும்
கோனெனும் கொள்கை யுள்ளே
கொடுஞ்சமர் கொளுவி வீசும்
ஏனெனக் கேட்டால் வாளின்
எரிநகை வீசு மன்றே”

(4 : 7 : 13 ; பக். 659)

என்பதில் செவி நிறைக்கும் சொல்லின் அழகும் மனந்திருத்தும் கருத்தின் தெளிவும் விளங்கக் காணலாகும்.

இவ்வகையில் வையக வாழ்வு மேம்படும் வழிமுறைகளை வகுத்துத் தொகுத்து முத்தமிழ் மணக்க எண்சுவை இனிக்க நாற்பயன் பயக்கும் காப்பியமாக்கிய யோகி சுத்தானந்தரின் தமிழன்பு சொல்லின் எல்லையைக் கடந்தது.

இனித் திருவாளர் அ. கிருட்டிணசாமி நாயுடு அவர்கள் இயற்றிய 'திருவள்ளுவர் காவியம்' என்பதைப்பற்றிய கருத்துகளைக் காண்போம். இது 1958ஆம் ஆண்டில் அச்சேறி வெளிவந்தது. கல்விக் காண்டம், யாத்திரைக் காண்டம், முப்பால் காண்டம், உரிமைக் காண்டம், அமைதிக் காண்டம் என்னும் ஐந்து காண்டங்கள் உடையது. பாயிரத்துடன் சேர்த்து 3955 நேரிசை வெண்பாக்கள் உடையது. திருக்குறள் பாடியருளிய திருவள்ளுவரின் பிறப்பு வளர்ப்பு முதல் உரைக்கின்ற ஒரு கற்பனைக் காப்பியம். எல்லா அறிஞரையும் போலவே உலகம் உயர்தல் வேண்டும் என்பதே இவ்விலக்கிய ஆசிரியர்க்கும் குறிக்கோள் எனினும் அதைச் செயலாற்றும் முறையில் திட்பமும் தெளிவும் குறைவு.

பலவகைகளில் பாரத மகாசக்தி காவியத்தை ஒத்த கதைப் போக்கு உள்ளது. ஆயினும், இராமன் முதல் காந்தியடிகள் ஈருக வுள்ள ஆன்றோரையும் அறவோரையும் காப்பியத் தலைவர் நேரில் பார்த்து உரையாடுவதாகக்காட்டும் காலவழுவினால் இவ்விலக்கியத்தின் செவ்வி பெரிதும் சிதைகின்றது. முன்காலச் சான்றோர் வரலாற்றையெல்லாம் காப்பிய மாந்தர் கூற்றாக அமைத்தமையால் யோகி சுத்தானந்தரின் காப்பியம் இக்குறையின்றி இலங்குகிறன்றது.

மேற்காட்டியவை அன்றியும் அசலாம்பிகை அம்மையார் அளித்த காந்திபுராணம் என்பதுவும் காப்பியப் போக்குடையதே. ஆயினும், இக்காலத்தில் வாழ்ந்த ஒருவர் வரலாற்றில் கற்பனை பெரிதும் கலந்ததில்லை. ஆகவே, இது பண்டைக் காப்பிய நடையினின்று வேறுபட்டுச் செய்யுள் யாப்பில் அமைந்த வரலாருகவே உள்ளது என்பர்.

இதுவரையில் வையகம் உய்யும்வழிக் காப்பியம் செய்தவர் ஆற்றிய அருந்தமிழ்ப் பணியினைக் கண்டோம். காலத்துக்கேற்றபடி மாறிவரும் ஞாலத்தியல்பினை மரபு வழுவாமல் புதுமை தழுவிக் கற்பனை கூட்டிப் பொற்புற அமைத்துப் புன்மை நீக்கி நன்மையாக்கவும் பன்மை தவிர்த்து ஒருமை ஓங்கவும் தகும்நெறி காட்டிய உயர்மதியாளர் உதவிக்குச் சொல்லால் எல்லைகட்டுதல் இயலாது. அப்புலவோர் கடப்பாடு உணர்ந்தவர்; கைம்மாறு வேண்டாதவர் என்பது சாலும்.

34

கவி. கா. மு ஷெரீபின் கவிதைகள்

திரு. வீ. ஞானசிகாமணி, எம்.ஏ., டிப். தெலுங்கு,
ஆராய்ச்சி மாணவர், தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.

முன்னுரை 0 — கல்வி 1.0 — விடுதலை வேட்கை 2.0—1—கவிஞரின் கவிதை நூல்கள் 3.0—1 — அமுத கலசம் 4.0—14 — நபியே எங்கள் நாயகமே 5.0—9 — மச்சகந்தி 6.0—12 — தொகுப்புரை — 7.0—2.

* * *

0. கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் அடிமை இந்திய மண்ணில் வாழ்ந்தவரும் விடுதலை பெற்ற இந்திய மண்ணில் வாழ்கின்ற பேறு பெற்றவருமான ஓர் ஒப்பற்ற இசுலாமியக் கவிஞராவர். எனவே, இவருடைய கவிதைகளை இந்த விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கில் ஆராய்வது பொருத்தமே.

1. கல்வி

1.0 கவி. கா. மு. ஷெரீப் 5 முதல் 15 அகவை வரையில் அரபி மொழிக் கல்வியை முறையாகப் பள்ளியில் பயின்றுள்ளனர். ஆனால் தமிழ் மொழியை அவ்வாறு முறையாகப் பயின்றார் இல்லை. தமிழ்ப் புலமைமிக்க இவருடைய 'அன்னையும் பிதாவுமே' இவருக்கு முன் தமிழறிவித்த தெய்வங்களாவர். பின்னர், தாமாகவே இன் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தமிழில் இயல்பாகக் கவிபாடும் ஆற்றல் பெற்றார். இந்த ஆற்றல் கடவுள் அருளிய ஆற்றல் என்று இவர் நம்புகிறார். இவருடைய கவிதையே இதற்குச் சான்றாக அமைகிறது :

'கல்வியிலா யென்னையுமே கற்றவரின் மத்தியிலே
கவிபாட வைத்தவனே கருணைமிக வுள்ளவனே.'

2. கவிஞரின் விடுதலை வேட்கை

2.0 கவி. கா. மு. ஷெரீப் விடுதலைக்கு முன்னர் 1935 முதல் கவிதை இயற்றி வருகிறார். 1946இல் வெளியிடப்பட்ட 'ஒளி' என்ற கவிதைத் தொகுப்பில் வரும் கீழ்க்காணும் கவிதையின் தலைப்பு 'ஆத்திரங் கொள்' என்பது. இவருடைய சுதந்திர ஆத்திரத்தை இக் கவிதை காட்டுகிறது :

தோள்கள்விம்முது தசையுந் துடிக்குது
சுதந்திரம் என்றவுடன்—கொலை
வாள்கொண்டு தாக்கிறுற் போன்றே இருக்குது
அடிமையென நினைத்தால்—இதை
ஆள்பவன் சிந்திக்க வீணுய் மறுக்கிறுன்
அதிகாரத் தன்மையினுல்—புவி
ஆள்வதற்காக நாம் ஆத்திரங் கொண்டிடல்
அறமும் முறையுமாம்.[2]

இத்தகு சுதந்திர ஆத்திரங்கொண்ட கவிஞர் 1942-ல் 'வெள்ளேயனே வெளியேறு' போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறுர்.

2.1 உரிமை பெற்ற நாட்டில் 1948-ல் மன்னர் ஒழிப்புப் போராட்டத்திலும் பாண்டிச்சேரி பிரஞ்சுக்காரர் ஒழிப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டுள்ளார். தாமரைத்திரு மா.பொ.சி. அவர்களுடன் பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். தமிழகத்தின் தென்—வட எல்லைகள் இணைப்பிலும், தமிழ்நாடு பெயர் அமைப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

3. கவிஞரின் கவிதை நூல்கள்

3.0 இதுகாறும் வெளியிடப்பட்ட கவிதை நூல்கள்: (1) ஒளி-1946; (2) இன்றைய சமுதாயம்—1951: (3) அமுத கலசம்--1964; (4) நபியே எங்கள் நாயகமே—1972; (5) மச்சகந்தி—1972. 'ஒளி', 'இன்றைய சமுதாயம்' என்னும் இரு சிறு நூல்களிலும் உள்ள கவிதைகள் பல 'அமுத கலசம்' கவிதைத் தொகுப்பில் இடம் பெறுகின்றன. எனவே ஏனைய மூன்று நூல்களின் கவிதைகளையே இங்கு ஆராய்வோம்.

3.1 1960 முதல் இவர் நாள் ஒன்றுக்கு ஒரு கவிதை இயற்றி வருகிறுர். இன்னும் இவரிடத்தில் வெளியிடப்பெருத கவிதைகள் ஏறத்தாழ 2000 இருக்கின்றன. இவர் கவிஞர் மட்டும் அல்லர்.

" எழுதுகின்ற தொழில் எனக்குப் புதிதல்ல மொத்தம்
எழுதியுள்ள நூற்கள்இரு பத்தினைமி குக்கும்
எழுத்தினையே தொழிலாகக் கொண்டுள்ளேன் வாழ்வில்"[4]

என்று கூறுகின்றுர். எழுத்தினைத் தொழிலாகக் கொண்டுள்ள இவர் நாவல், நாடகம், சிறுகதை முதலான துறைகளில் 20க்கு மேற்பட்ட நூல்கள் செய்துள்ளார். **ஒளி, தமிழ் முழக்கம், சாட்டை** ஆகிய இதழ்களையும் இவர் நடத்தியுள்ளார்.

4. அமுதகலசம்

4.0 கவிஞருடைய 50-வது பிறந்தநாள் பொன்விழாவின் நினைவாக வெளியிடப் பெற்றது **அமுதகலசம்** கவிதைத் தொகுப்பு. இத்தொகுப்பில் வாழ்த்து வணக்கம் இரண்டினைத் தவிர்த்து 97 கவிதைகள்

இடம் பெறுகின்றன. இவைகள் ஆறு பெருந்தலைப்புகளின் கீழ் அமைகின்றன. அவை முறையே வருமாறு: (1) இயற்கை—15; (2) காதல்—21; (8) மொழியும் நாடும்—13; (4) சமுதாயம்—24; (5) பிரார்த்தனை—4; (6) பன்மணித்திரள் —20.

4.1 திறனாய்வாளனின் பெரும்பணி 'மேற்கோள்காட்டி விளக்கித் தெளிவுபடுத்துவது'[5] என்று டி. எஸ். எலியட் கூறுகின்றார். மேலும் இலக்கியப் படைப்பாளரே தேர்ந்த திறனாய்வாளராகவும் காணப்படுகிறார். நல்ல இலக்கியப் படைப்பாளரிடம் எவ்வளவு படைப்பாற்றல் இருக்கிறதோ அவ்வளவு திறனாய்வாற்றலையும் காணலாம்[6] என்றும் எலியட் கூறுகின்றார். கவிஞராகவும் திறனாய்வாளராகவும் விளங்கும் இவர் அனுபவ வாயிலாகவே இதனைக் கூறுகிறார் என்று அறிகிறோம்.

4.2 **அமுத கலசத்** தொகுப்பில் கவிஞர் **கவிதையைப்** பற்றிப் பாடும் கவிதை இவருடைய கவிதைகளின் கொள்கையைப் புலப்படுத்துவதாக அமைகிறது எனலாம்.

நல்லதைச் சொல்லுவது கவிதை
நன்மையைச் செய்வது கவிதை
வெல்லுஞ் சொல்லுள்ளது கவிதை
வித்தை வளர்ப்பது கவிதை
அல்லல் அகற்றியே மனிதர்
அறிவை நிமிர்ப்பது கவிதை
கல்லார் மனத்தினு மீகை
கனிந்திட வைப்பது கவிதை!

பூவினும் மணப்பது கவிதை
பொன்னினு மொளிர்வது கவிதை
சாவினைத் தடுப்பது கவிதை
சாகா திருப்பது கவிதை
பாவலர் நாவைய ரங்காய்ப்
படைத்ததில் ஆடுதல் கண்டு
யாவர்க்கு மின்ப மளிக்கும்
எங்கள் தமிழ்மொழிக் கவிதை! (பக். 61)

4.3 **இயற்கையும் கவிஞரும்:** இயற்கையைப் பாடாத தமிழ்க் கவிஞன் இல்லை. கவி. கா. மு. ஷெரீப் இயற்கைக் காட்சியினைப் புலமைக்கண்கொண்டு காணும்போதும் அது மனிதவாழ்வுக்கு என்ன 'நல்லதைச் சொல்லுகிறது' என்பதனை உணர்கிறார், உணர்த்துவிக்கிறார். 'காட்சி' என்ற கவிதையில் நிலவின் தோற்றம்:

'முயற்சியினால் ஆகிடாது
ஒன்றுமில்லை உலகில்
முயன்றிடுக மானிடனே!' (பக். 5)

என்று சொல்லுவதாக அமைகிறது. நிலவில் பலமுறை இறங்கி இன்றைய மனிதன் அதனை ஆராய்ந்து வருகிறான். ஆனால் புலவர் இலக்கிய மரபுவழிக் கற்பனையில் நிலவைக் கண்டு,

உயர்ந்த உன்றன் வாழ்க்கையிலும்
மாசுஉண்டு நிலவே
உன்னையும்தான் விதிப்பாம்பு
விடுவதில்லை அறிந்தேன்! (பக். 5)

என்று பாடுகின்றார். பிறர்க்கு ஒளிகாட்டும் மானிட வாழ்க்கையிலும் சிறிது மாசு உண்டு என்பதனை இக்கவிதை அடிகள் உணர்த்துவதை அறிகிறோம்.

4.4 இயற்கையைப் பாடும்போதும் பாட்டாளி மக்களின் நினைவும் நலனும் இவர் உள்ளத்தைவிட்டுப் போகவில்லை. கீழ்வரும் கவிதைகள் அதற்குச் சான்றாக அமைகின்றன. 'மழை'யைப் பாடும் கற்பனை நய மிக்க இக் கவிதையைப் பாருங்கள்:

மேகத் தொழிலாளி மீதினிலே
மின்ன லெனுந்துளிர்ச் சாட்டைகொண்டு
நோக அடித்திட்டான் இயற்கையெனும்
நெஞ்சீர மற்றதோர் முதலாளிதான்
ஏக வசனத்தில் இடிக்குரலில்
எழுந்து சப்தித்து உடல் துடிக்க
சோகமுற் றேமேகப் பாட்டாளிதான்
சொரிந்த கண்ணீராம் நன்மழையே! (பக். 9)

4.5 'மலர்' என்ற தலைப்பில் வண்டுகள் மலர்த் தேனை உண்டு களிக்கும் காட்சி இவர் நினைவிற்கு முதலாளியையும் தொழிலாளியை யும்தான் கொண்டுவருகிறது. இயற்கையை மனித வாழ்க்கைத் தொடர்புடன் கூர்ந்து நோக்கும் தன்மை புலவர்க்கு இயல்பாகும்.

நகத்தி லழுக்குப் படாவாழ்க்கை
நடத்தும் தனவான் தனக்காக
முகத்து வியர்வை நிலம்சேர
முனைந்தே உழைக்கும் தொழிலாளர்
அகத்திற் சிறிதும் உணர்வின்றி
அடையும் துன்ப நிலைபோல
நகைத்துப் பேசும் வண்டினத்தை
நம்பி ஆனேன் வைதவ்யம், (பக். 18)

பாட்டாளியின் தோழனாக விளங்கும் கவிஞருடைய இக் கவிதையின் முழுச் சுவையை — பயனை உணர, கவிஞர் அனுபவத்தை நாமும் பெற அவருடைய சொற்பொழிவு ஒன்றில்வரும் இக் கருத்தைக் காணல் நலம்.

"சுமார் இருபத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு தனிப்பட்ட முதலாளியின்கீழ் நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் ஊழியம் செய்தவன்; சம்பளம் ஆறு ரூபாய். இச்சம்பளத்திலும் அவ்வப்போது ஏற்படக் கூடிய சிறு தவறுகளுக்கு அபராதமாக ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிடித்துக் கொண்டு மிச்சத்தைக் கொடுப்பார் முதலாளி! உயிர் உடலில் ஒட்டிக் கொண்டிருந்ததென்பதைத் தவிர என் வாழ்வில் வேறு எந்தச் சுவையும் காண முடியாத காலம். அப்போது ஒரு கணக்கர் என்னுடன் வேலை செய்து வந்தார். திடீரென்று ஒருநாள் அவர் குழந்தை இறந்துவிட்டது. குழந்தையைச் சவ அடக்கம் செய்ய அவரிடம் காசில்லை. முதலாளியிடம் கெஞ்சினார். அந்தப் பெரிய மனம்கொண்ட முதலாளியோ, அவருக்குச் சேர வேண்டிய மாதக் கூலியை அதாவது சில அணக்களைக் கொடுத்தனுப்பிவிட்டார்! அடுத்தநாளே மனைவியும் இறந்துபோனாள். அக்கம் பக்கத்திலிருந்தோர் அனுதாபம் தெரிவித்தார்களே தவிர, பொருளுதவி செய்ய முன்வரவில்லை! மீண்டும் நம்பிக்கையுடன் மனிதன் ஈர நெஞ்சுக்குச் சவால் விடுவதுபோல், முதலாளியிடம் கையேந்தினார்...முதலாளியோ மறுத்துவிட்டார்! பலனின்றிக் கைபிசைந்தார் கணக்கர். இதைக் கண்ட என் நெஞ்சு துடித்தது. கண்கள் கலங்கின! என்னிடம் இருந்த சிறு தொகையைக் கொடுத்து உதவினேன். என்னால் வேறு என்ன செய்ய முடியும்? நானும் ஓர் ஏழைத் தொழிலாளிதானே!"[7]

கவிஞரும் காதலும்

4.6 கவிஞர் போற்றும் கற்பு வாழ்க்கை குறிப்பிடத்தக்கது. 'காதல்' கவிதைத் தொகுப்பில் 'அவளும் நானும்' என்ற தலைப்பில் ஒருமையில் கலந்த இரு வாழ்வை,

நறுமணமும் மலருமானோம்
  நாங்கள் வாழ்விலே
நஞ்செனினும் ஒருவருண்ண
  நாடினோ மில்லை (பக். 23)

என்ற உவமை நயத்துடன் அமைக்கிறார். 'பேதமற்ற காதலிலே பிணங்குவதே பாவம்' என்பது கவிஞர் கருத்து. காதல் வாழ்வில் வேறொருத்தி நேசத்தை நயமாகக் கண்டிக்கிறார்.

பேசிஇன்பம் தந்த உன்றன்
  பரிவை எண்ணி வாடும்மனம்
நேசிக்குமோ வேறொருத்தி
  உடலை?.............. (பக். 30)

மொழியும் நாடும்

4.7 'மொழியும் நாடும்' என்ற பகுதியில் செந்தமிழின் ஏற்றத்தையும் வளத்தையும் பலவாறு பாடுகையில், 'தோன்றிய காலம் தெரியாமல் **தூய்மையில் இளமையாய்** வாழுகின்ற' (பக். 51) மொழி என்கிறார்; 'சுகந்த மலர் **தூய தமிழ்'** இரண்டினும் '**தூயதமிழ்தான்'** தமக்குச் 'சுகத்தைத் தந்தது' (பக். 54) என்றும் கவிதை செய்கிறார். ஆனால் 'தமிழைக் காப்போம்' என்ற தலைப்பிட்ட கவிதையில்,

பாருக்குள் லத்தீனும் செத்தது — பிற
 பாஷையைத் தீண்ட மறுத்ததால்—இன்று
யாருக்கும் உகந்ததாய் ஆங்கிலம்—புவி
 போற்றும் சிறப்பினைப் பெற்றது—மொழிச்
சேர்க்கை தனை ஏற்ற தன்மையால்! — இதைச்
 சிந்திக்கில் உண்மை புரிந்திடும்—சுத்தம்
பார்க்கில் தமிழ்மொழி தன்னிலே—எஞ்சும்
 வார்த்தைகள் எத்தனை சொல்லுவீர்

திக்குத் திசைச் சொற்கள் சேர்ப்பதும்—அதைச்
 செந்தமிழ் என்றே உரைப்பதும்—பொது
மக்கள் தனக்குப் புரிவதே—என்றும்
 வளமார் மொழியெனக் கொள்வதும்—நல்ல
செக்க ரொளிபோல் தமிழினை—இந்த
 செகத்தில் பரப்பிடும் மார்க்கமாம்—இதைத்
தக்க முறையெனக் கொண்டுமே—தமிழ்
 தன்னை வளர்த்திட முந்துவோம்!

4.8 ஆங்கிலத்தைப் போலத் தமிழும் வளம்பெற வேண்டும் என்னும் விருப்பத்தினால் கவிஞர் பிறமொழிச் சொற்கள் தமிழில் கலத்தலை வரவேற்கிறார். முன்னாள் தமிழரசுக் கழகத் தொண்டராகிய இவர் இவ்வாறு பாடுவது வியப்பாகவே இருக்கிறது! வந்தவெள்ளம் இருந்த வெள்ளத்தைக் கொண்டுபோன கதையைப்போல் ஏற்கெனவே இருக்கிற நல்ல தமிழ் மரபுகளை இந்த மரபுகள் மூடி மறைக்காமல் இருக்கும் என்று எவ்வாறு சொல்ல முடியும்?

4.9 வடமொழியை வரம்பின்றிக் கலந்த காரணத்தால் மணிப்பிரவாள நடை பிறந்த வரலாறு யாவரும் அறிந்ததே. அதே நிலையில் சில ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மணிப்பிரவாளமும் அண்டாமல் இல்லை. இன்றைய தமிழ் மூதறிஞர்கள் எல்லாம் முன்னெச்சரிக்கையுடன் இருந்துவரும் காரணத்தால் அந்நிலை மாறிவருவதை நாம் பார்க்கிறோம். ஆகவே இன்றியமையாத பொதுக் குறியீடுகள் தவிர ஏனையவெல்லாம் தமிழ் மரபுக்கு ஒத்தபடி உருவுதிரிந்து வழங்குதலே வரவேற்கத் தக்கது. தமிழ்மொழியைக் காத்திடவும் வளர்த்திடவும் கவிஞர் கூறிய முறையிலேயே இன்னும் உறுதியாக இருப்பாரா என்பது ஐயத்தின்பாலதே!

4.10 விடுதலை வேட்கை மிக்க இக் கவிஞர் நாடு விடுதலை அடைவதற்கு முன்னல் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டதின் காரணத்தைக் கூறுகின்ருர் :

"அப்போது நான் வாழ்ந்தது அடிமை இந்தியாவில்! வறுமை தொலைய என்ன வழியென்று சிந்தித்தேன்! வறுமை தொலைய வேண்டுமானல் சுதந்திரம் ஒன்றே வழி என்ற காந்தியடிகளின் வாசகங்களை நம்பினேன்! அறியாமை இருள் அகல வேண்டுமானல் சுதந்திரப் பேரொளி தேவை என்று நினைத்தது என் நெஞ்சம்! ஆம், சுதந்திரம் கிடைத்தால் ஏழைகளின் வாழ்வு செழிக்கும்! பாட்டாளிகளின் எதிர்காலம் ஒளி நிரம்பியதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் காங்கிரஸ் கொடியைக் கையில் பிடித்துக் களத்தில் இறங்கினேன்."[8]

4.11 விடுதலைப் பெற்ற நாட்டில் மக்கள் வாழ்வு குறித்து, 'சுதந்திரம் வந்தது! ஆனல்......' என்ற கவிதையில் பாடுகிருர்.

வீதிவீதி யாகவே தேடியோடு ருர்சிலர்,
வேலைஏதும் இன்றிக்காரில் எங்கும் சுற்றுருர்பலர்!
போதுபோக வில்லையென்று ஏக்கங் கொள்ளு ருர்பலர்,
போதுபோக்க சீட்டு ஆட்டம் போடுகின்ரு ரேசிலர்!

மாடிமீது மாடிகட்டி வாழுருர்க ளேசிலர்,
வீடுஇன்றி வீதியோரம் ஏங்குருர்க ளேபலர்!
பாடுஇன்றி வாழ்விலின்பம் தேடுருர்க ளேசிலர்,
பாடுபட்டும் சோறுஇன்றி வாடுருர்க ளேபலர்!

குப்பைமீது சோற்றைவீணில் கொட்டுருர்க ளேசிலர்,
குப்பை சேர்ந்த சோறுமின்றிச் சோருருர்க ளேபலர்!
தப்பிலாது மெய்மொழிந்து சாவைநாடு ருர்சிலர்,
ஒப்பிநாளும் பொய்மொழிந்து மேன்மைதேடு ருர்பலர்!

கற்பைநம்பி நாளும்வாழ்வில் கஷ்டமேற்கி ருர்சிலர்,
கற்பைவிற்று இன்பவாழ்வைக் காணுருர்க ளேபலர்!
சொற்பகாலப் பதவியேறி சுகிக்கயெண்ணு ருர்சிலர்,
அற்பலஞ்சக் காசுக்காக அழிவைச் செய்யு ருர்பலர்!

இந்தத்தன்மை தன்னிலிந்த நாடுசெல்வ தெண்ணியா
அன்று பெற்ரோம் சுதந்திரமே ஆசையோடு உன்னையே?
அண்ணல்காந்தி ஏழைவாழக் கேட்டநற் சுதந்திரம்
தன்னலத்தார் கையில்சிக்கித் தாறுமாறு ஆகுதே!

இந்தக் கவிதையைக் கண்ட பின்னர் கவிஞருடைய சொற்பொழிவு ஒன்றில் வரும் இந்தக் குறிப்புகளையும் இணைத்து எண்ணிப் பார்ப்பது

கவிஞரின் உள்ளத்தையும் அனுபவத்தையும் நாமும் உணர்வதற்கு உதவும் :

> நான் காங்கிரசில் சேர்வதற்கு முன்பு எந்த நிலையில் இருந்தேனே, சுதந்திரத்திற்காகப் போராடும்போது எந்த நிலையில் இருந்தேனே அதே ஷெரீபாக அதே நிலையில்தான் இன்றைக்கும் வாழ்கிறேன்! எத்தகைய மாற்றத்தைக் கருதி சுதந்திர வேள்வியில் குதித்தேனே அத்தகைய சுகவாழ்வு எனக்குக் கிடைக்கவில்லை ? இதற்குக் காரணம் என்ன ?
>
> * * *
>
> ஐந்தாண்டுத் திட்டங்கள் வரவர மனிதரின் அன்றைய வாழ்விற்குத் தேவையான பொருள்களின் விலை இமயம்போல் அதிகரிக்கின்றதே தவிர குறையவில்லை. சுதந்திர வாழ்வின் பதிமூன்றாண்டு கால சுகங்களை அனுபவித்தது யார் ?
>
> * * *
>
> சுதந்திர இந்தியா, சுரண்டல்காரர்களின் சுய வேட்டைக்காக, பதுக்கல் பேர்வழிகளின் கூடாரமாக. வர்த்தகச் சூதாடிகளின் பாசறையாக மாறிவிட்டது என்றுதானே பொருள்! அப்படியானால், சுதந்திரம் கிடைத்தால் சுகவாழ்வு கிடைக்கும் என்று ஏழைகள் நம்பியது வெறும் பொய்தானே "[9]

இப்படி சமுதாயத்தை ஊடுருவிப் பார்த்து உளம்நொந்து கவிஞர் உரைக்கின்ற ஏக்க உரைகளும் எண்ணில :

நல்ல கவிஞன்

4.12 கவிஞர் கா. மு. ஷெரீப் நல்ல கவிஞன் யார் என்பதை,

" சிந்தனை யென்ற கலப்பை கொண்டு
செய்ய தமிழாம் நிலமதனை
வந்தனை செய்தே உழுதுழுது
வார்த்தை களென்ற எருவுமிட்டு
நிந்தனை யற்ற எதுகைமோனை
நீண்ட வரப்பும் எடுத்துக்கட்டி
அந்தம்மி குந்த கவிதைப் பயிர்
ஆக்கும் கவிஞன் நற்கவிஞன் " (பக். 94)

என்னும் இலக்கணப்படி விளக்குகிறார்.

4.13 கவி கா. மு. ஷெரீப் தம் பாடல்களில் 'கனவைத் தூண்டும் கவிஞராக', 'கருத்தைச் சமைக்கும் சிற்பியாக,' 'காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாக'க் காட்சியளிக்கிறார். தாமரைத்திரு ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டதுபோல், 'காந்தியவாதியாக — உயர்

தருமத்தைப் போற்றுபவராகக் காட்சியளிக்கிறார். இவருடைய நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும், ஏழைகளின் நலத்தில் உள்ள ஆர்வமும் இன்னபல அரிய பொதுநல இயல்புகள் கவிதைகளில் இழுமென் மொழியில் ஒளிவிடுகின்றன.

4.14 அடுத்து நபியே எங்கள் நாயகமே என்னும் பத்திப் பனுவலின் பான்மையினைச் சற்றுப் பார்ப்போம்.

5. நபியே எங்கள் நாயகமே!

5.0 இந்த 'நந்நபி வாழ்த்துப் பாமாலை' நாளொன்றுக்கு ஒரு பாடலாகப் பாடப்பெற்ற இருநூறு பாடல்களுள் 114 பாடல்களைக் கொண்டு அமைந்திருக்கிறது. கவிஞரின் சமயப்பற்றுக்கும் இனிமையான பத்தித் தமிழுக்கும் சமய உண்மை விளக்கும் திறனுக்கும் சான்றாக விளங்குகிறது.

5.1 இவர் தம்முடைய 39ஆம் வயது வரையில் நாத்திகராக இருந்தவர். அது அவர் தந்தை, பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சீடராக இருந்த காலம். 1950-க்குப் பின்னர்தான் இவர்க்கு ஆத்திகப்பற்று உண்டாயிற்று. இப்பற்றின் பரிமாணம் இந்நூலில் காணக்கிடக்கிறது.

5.2 கவிஞர் தம் உரையில்,

> "வெறிபிடித்துப் பொய்யுரைத்து முஹம்மதரைப் பழிக்கும்
> விளக்கம்பெறா மனிதரிடம் தருகஇதைப் படிக்க"[10]

என்று பாடியிருப்பது தேவையற்றதாகும். நூலின் பொருளுக்கும் அதன் போக்கிற்கும் கருத்து வெளிப்படுத்தும் இயல்புக்கும் முரணாக தொடக்கத்திலேயே இவ்வாறு இருப்பது ஏற்றதாக அமையவில்லை. எல்லாரும் படித்து இன்புறத்தக்கதே இந்நூல்.

5.3 இதில் கவிஞர், 'நபிகள் நாயகமவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக எடுத்துப் பாடாமல் அப்பெருமானாரவர்களின் போதனைகளில் இன்றை வாழ்க்கைக்கு உடனடியாகப் பொருந்தக் கூடியவைகளை தீஞ்சுவைக் கவிதை வடிவில் தீட்டியிருக்கிறார்.'[11] நபிகளைப் போற்றும்போது அவர்களுடைய சுற்றமும் நட்பும் போற்ற வாழ்த்துவது இசுலாமிய இலக்கிய மரபு. இம் மரபிற்கு ஏற்ப இறை வாழ்த்து, மறை வாழ்த்து, மக்கா நகர் வாழ்த்து, கஃபா வாழ்த்து, முத்தலிப் வாழ்த்து, அப்துல்லா வாழ்த்து, ஆமினா வாழ்த்து, கதீஜா வாழ்த்து, ஆயிஷா வாழ்த்து, பாத்திமா வாழ்த்து கலிபாக்கள் சகபாக்கள் வாழ்த்து முதலாயின இடம்பெறுகின்றன.

5.4 மக்கள் தனி வாழ்விலும், பொது வாழ்விலும், இறை வாழ்விலும் சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பு கொண்டு வாழ்தல் அரிது.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (குறள் 664)

என வான்மறை தந்த வள்ளுவர் வாக்கை நோக்கும்போது இது எக்காலத்தும் மாரு நிலைபெற்றது போலும். சொல்லும் செயலும் பொருந்த வாழ்வதுதான் உண்மை வாழ்க்கை. இஃது உலகியல் வாழ்வுக்கு மட்டுமல்ல இறையியல் வாழ்வில் மெய்யின்பம் பெறுதற்கும் இன்றியமையாதது; இறைப்பண்பு; அதனுல் துன்பமும் விளையும். இதற்குச் சான்ருக நபிகளின் வாழ்வு அமைந்துள்ளது என்பதை இப்பாடலில் அறிகிருேம்.

சொல்லுக்கும் செயலுக்கும்
தொடர்புவைத்தே மக்கள்
சுகப்படவே அடிபட்டீர்
துயர்பட்டீர் நாளும்
கல்லுக்கும் செம்புக்கும்
கட்டைக்கும் அப்பால்
கருணைமிகும் இறைவனுளான்
என்றிட்டீர் அதனுல்
வில்லுக்கும் வாளுக்கும்
இரையாக்க உம்மை
விரும்பினரே அறியாத
மறமாக்க ……………… (— 3)

5.5 இசுலாத்தின் கடமைகளை எளிய முறையில் நயமாக எடுத்தியம்புகிருர்.

உருவமிலா ஓரிறைவன்
உண்டென்று நம்பல்
உத்தமராம் முஹம்மதரைக்
தூதரெனக் கொள்ளல்
ஒருநாளைக் கைவேளை
தொழுதிடுதல் ஐக்காத்
துகந்தளித்தல் நோன்பிருத்தல்
வாழ்நாளில் ஹாக்கை
பொருளிருந்தால் நிறைவேற்றல்
ஆகியயிவ் வைந்தும்
பொருந்துகின்ற இஸ்லாத்தின்
கடமை……………………… (— 18)

5.6 எது இசுலாம் என்று கேட்டு, சொல்லும் விடையும் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் அழகைக் காட்டுகிறது.

யாதிஸ்லாம் என்றோர்க்குப்
பசித்தோருக் குணவும்
இன்சொல்லும் ஆகுமென........ (— 18)

என்று கூறுகின்றார். இங்கே,

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.[12]

என்னும் திருமந்திரக் கருத்தினையும் இதனுடன் இணைத்து எண்ணிப் பார்க்கத்தக்கது.

5.7 தருமம் என்ன என்று கூறுதலிலும் தருமம் செய்தலிலும் புலனடக்கம் தேவை என்றலும் குறிப்பிடத்தக்கன. பிறர்க்கு ஓர் உதவிசெய்தால் அது குறித்துப் பலபட பேசுதல் மனித இயல்பாகக் காண்கிறோம். எனவே தருமம் செய்தலிலும் புலனடக்கம் தேவை போலும். இக்கருத்துகளை பின்வரும் பாடல் தெளிவுபடுத்துகிறது.

பலன்கருதா திறைவழியில்
பண்ணுவதே தருமம்
பலரறியப் பிறர்மதிக்கப்
பண்ணுகிற தெல்லாம்
நலன்தரா திறப்புலகில்
நல்லோனின் சமூகம்
நாடுகின்ற நாளினிலே
பலனேதும் தாரா
புலனடக்கித் தருமத்தைத்
தருமவழி நின்று
புரிந்திடுவீர்............ (— 21)

5.8 இசுலாத்தின் உயர்நெறிகள் இவை இவை என்று தம் பாடல்களில் எடுத்துக்காட்டிய கவிஞர் இசுலாம் நெறியாகாதவை எவை என்றும் எடுத்துக்காட்டுகிறார். உழைக்காமல் வாழ்ந்திடுதல், உண்ணுவதைத் தனித்துண்ணல், பிழைக்கவெண்ணிப் பொய்யுரைத்தல், பித்தலாட்டம் கொலை களவு, மறைவாகப் புறம்பேசல், வீணில் இடர் செய்திடுதல், தானடங்கா மனப்போக்கு, தனைப் பிறருக்கு அடிமையிடல்; படாடோப வாழ்க்கை, குடிப்பதுவும் நடிப்பதுவும்', (36, 37, 38) இன்னொரன்னவை எல்லாம் வேறு எந்தச் சமயநெறியுமாகாதவையே. எல்லாச் சமயங்களும் இவற்றைக் கடிந்தே பேசுகின்றன.

திருப்பித்தரும் நோக்கின்றிக்
கடன்வாங்கு கின்ற

செயலர்களுந் திருடரென
ஆகின்றார்............ (31)

இது யார் திருடர் என்பதை எடுத்துக்காட்டுவது. ஆண்டவரை மறந்தவரின் செய்கையினைப் பின்வரும் பாடல் பகுதி உணர்த்துகிறது.

அணங்குகளை மதுக்கடையைச்
சூதாடும் இடத்தை
அணுகுவதே ஆண்டவனை
மறந்தவரின் செய்கை (53)

மானொத்த விழிபடைத்த
மங்கையரின் கற்பை
மாண்புறவே காத்திடுதல்
ஆண்குலத்தார் கடமை (66)

மெய்ந்நோகப் பெற்றெடுத்த
தாய்தந்தைக் கிழைக்கும்
பெரும்பிழைக்கு மட்டும்என்றும்
மன்னிப்பே இல்லை (69)

இவை இரண்டும் மகளிர் கற்பைக் காப்பது, ஆடவர் பங்கில் உள்ளது என்பதையும் மன்னிப்பில்லாப் பாவம் பெற்றோர்பால் செய்யும் பிழை என்பதையும் காட்டுகின்றன. இன்ன பல அருமையான கருத்துகள் கற்போர் உளங்கொள்ளுமாறு சொல்லப்பட்டுள்ளன.

5.9 இந்நூலின் இரண்டாம் பதிப்பிற்குப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் அளித்துள்ள மதிப்புரையின் சிலவரிகள் நல்ல ஒரு திறனாய்வு உரையாக அமைகிறது.

“மொத்தத்தில் இந்த நூற்றுப் பதினான்கு (114) பாடல்களும் திருவாசக உடலில் திருக்குறள் உயிர் எடுத்த புதியதொரு பிறப்போ என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகின்றன. அந்த அளவிற்கு நீதிகள் சேதிகள்போல் உருக்கச் சுவையுடன் உருண்டு புரண்டு வருகின்றன.

இந்நூல் முழுவதிலும் உள்ள பாடல்களில் எந்த ஒன்றிலும் ஒருசிறு இடறலும் இல்லை. அந்த அளவிற்கு ‘மன்னுபுகழ்த் தமிழ்க் கவிதை’ இழுமெனும் ஒலியோடு இழுத்துச் செல்கிறது — ஆம்; பாடியவரையும் படிப்பவரையும். இதன் காரணமாக ஒரு குட்டித் திருக்குறள்போல் — ஒரு குட்டித் திருவாசகம்போல் — பயன்தரும் பண்புடைத்த நந்நபி வாழ்த்துப் பாமாலை ஒவ்வொரு இந்துவும்கூட பாராயணமாய் ஓதத்தக்க நூலாகின்றது எனலாம்.”

இந்நூலின் பத்திச் சுவையை இவ்வுரை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளத்தெளிய விளக்குதல் காணலாம். இறுதியாகக் கவிஞர் படைத்த காப்பியமாகிய மச்சகந்தியின் மாண்புகளைக் காண்போம்.

6. மச்சகந்தி

6.0 இது இவர் படைத்த ஒரே காப்பியம். பரதன், இளங்கோ வடிகள், யயாதி பீஷ்மன், இவர்கள் வரலாற்றைக் காப்பியமாகப் படைக்கக் கருதிய கவிஞர் எண்ணத்தின் முதல் நிறைவு இக்காப்பியம்.

6.1 இதன்மூலம், **பாரதத்தில்** ஆதிபருவத்தில் வரும் குருகுலச் சருக்கத்தில் (பாடல்கள் 33—102) காணக்கிடக்கிறது. மச்சகந்தி காப்பியம் பெரும்பாலும் மூலத்தைத் தழுவியே செல்லுகிறது என்றாலும் கவிஞர் தாம் வெளியிட விரும்பிய புதிய கருத்துகளை அழியாத் தமிழ் மரபில் அமைத்து வெளியிட்டுள்ளார்.[13]

காப்பியக் கதை

6.2 சந்திரகுல மன்னருள் ஒருவன் சந்தனு. கங்கையைக் காதல் மணம்புரிகின்றான். 'தன் செய்கை எதனைத்தடுக்கினும் உன்னைப் பிரிவேன்' என்று கங்கை உரைத்ததை ஒப்பியே மன்னவன் அவளை மணந்தான். பிறந்த ஏழு குழந்தைகளை அவள் ஆற்றில் எறிந்து கொன்றாள். மகப்பாசத்தால் எட்டாம் குழந்தையை மன்னன் தடுத்துக் காப்பாற்றினான். திருமணம் முறிந்தது. 'கணவன் எனினும் தனது சுதந்திரப் போக்கினைத் தடுப்பதை விரும்பாத கங்கை' அரண்மனையை விட்டுத் தனயனுடன் நீங்கினாள். பெண்சுகம் துறந்த மன்னன் தனிமையாய்ப் பல்லாண்டு கழித்து வந்தான். கங்கை தான் கொண்டு சென்ற மைந்தனுக்கு தேவவிரதன் என்று பேரிட்டாள். அவன் கல்வி கேள்விகளில் சிறந்து அறிவும் ஆற்றலும் அழகும் உடைய காளையானான். ஆளப்பிறந்த மைந்தனைக் கங்கை ஒருநாள் தன் வாக்குப்படி சந்தனுவிடம் சேர்த்தாள். மன்னன் அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி மகிழ்ந்தான்.

6.3 இவ்வாறு இருக்கும்போது அரசன் ஒருநாள் உல்லாசமாய்த் தேரில் ஏறி உலாவிடச் சென்றவிடத்து, 'செகத்திலுள்ள எழிலை எல்லாம் தேக்கி நின்று, சிந்தைதனைக் கொள்ளைகொள்ளும் சுந்தரி ஒருத்தியை'க் கண்டான். கன்னியின் காந்தத்தில் மன்னன் இழுக்கப் பட்டான். அவன் சிந்தைதனைக் கொந்திவிட்டுச் சிறகடித்துச்' சென்ற சுந்தரியை மன்னனுக்கு மணம் முடிக்கத் தேர்ப்பாகன் தூது செல்கிறான் அந்தச் சுந்தரியைப் பெற்றவனிடம். மச்சகந்தியின் மீனவன் நிபந்தனை ஒன்று விதித்து இணங்கவில்லை. அடுத்து அமைச்சர் செல்கிறார்; பயனில்லை. இறுதியில் இளவரசன் தூதுசென்று மீனவனை இணங்க வைக்கிறான். பெண் இன்பம் துறந்து, தன் தம்பிக்கு அரியணையைத் தியாகம் செய்கிறான். பரதவன் விருப்பம் நிறைவடைகிறது. மகன் தந்தைக்கு மணம் முடிக்கிறான். தேவவிரதன் பீஷ்மனாகிறான்.

பாத்திரப்படைப்பு

6.4 கவிஞர் 'ஆசை அழியும்', 'தியாகம் நிலைக்கும்' என்னும் பேருண்மையைத் தாம் படைக்கும் பாத்திரங்களின் வாயிலாகக் காப்பியச் சுவையுடன் உணர்த்துகிறார்.

6.5 மோக ஆசைக்கு உட்பட்ட சந்தனு மன்னன்,

மதுக்குடமே ஏகாதே
மலர்ச்செண்டே போகாதே
நிதிக்குவையே நீசென்றால்
நீங்கிடுமே என்னுயிர்தான்
உனைக்கூவி அழைக்கின்றேன்
ஓடியேவா என்னருகே
எனைச்சாக அடிக்காதே
இன்னமுதே நன்முத்தே

என ஏங்கி மனம் நொந்து வாடுகிறான். கன்னியின் பார்வையில் கருத்திழந்த மன்னன் தன் முதுமையையும் எண்ணவில்லை. இனி ஒரு பெண்ணுடன் வாழ்வதில்லை என்று எடுத்த முடிவையும் நினைக்கவில்லை. அவன் 'இதயம் அவமாகி, பாகாகி, அனலிட்ட மெழுகாகித் துவளுகின்றது! மன்னன் உள்ளம் அறிந்த தேர்ப்பாகன் பரதவன்பால் தூதுசென்று பெண் கேட்கிறான். மச்சகந்தியின் தந்தை பரதவன் மன்னன் மணம் கேட்டு,

'மன்னவன் என்மகள் தன்னைமணந்திட
என்னதவஞ் செய்தேனோ யிதைச்
சொன்ன உனக்குநான் என்ன பரிசுகள்
தந்து சிறப்பிப்பேனோ பதில்
என்னநான் சொல்வது இன்றே திருமணம்
தன்னை நடத்திடலாம் எனின்
* *
ஆளும் உரிமையென் பேரனுக் காக்கிடில்
ஈகுவேன் என்மகளை யிதை
வாளுடை மன்னனுக் கோதுவாய் சென்றுநீ
மாண்புறத் தேர்ப்பாகனே!'

என்று 'நீள்விழி மாதினைப் பெற்றவன் கூறினான். இதனைச் செவிமடுத்த மன்னன், 'நாடாளும் என்னை மதியா மடையனைத் தாவிச் சிரமறுப்பேன்' என உருவிய வாளுடன் கொதித்தெழுந்தான். ஆனால் கவிஞரின் கற்பனை—உள்ளுணர்வு மூலம் மன்னனுடன் பேசுகின்றது.

'வாடாக் காதல் நினைப்பால் அறிவு
மழுங்கிய சந்தனுவே, பொறு
பாடாய் அழித்து முடிப்பதோ பண்பினை!

மக்கள் உரிமையைக் காப்பதற் காகவே
மன்னவன் என்பதல்லால், அவர்
விக்கி அழுதிடச் செய்வதற் கேயொரு
வேந்தனும் தேவை யுண்டோ !

தன்மக ளின்மணம் தன்னைவ குப்பதில்
தந்தைசெய் யும்முடிவை, யிறை
என்னும் ஈசனும் மாற்ற வியலா
தென்பத றியாயோ நன்கு ;

பெற்ற குழந்தையைக் கொன்றிடத் தாயே
புறப்படும் விந்தையைப்போல் நிலை
அற்றதோர் காம வெறியில் குடிமகன்
தன்னைநீ சீறுவதா, உடன்
நன்றிதைப் சிந்திப்பாய் !'

என்று உள்ளுணர்வு ஓதியது. மன்னன் தான் இழைக்க எழுந்த தவற்றை உணர்கிறன். என்ருலும், மோக மயக்கத்தினின்று அவன் தெளியவில்லை.

'இலக்கியமே இன்கவியே
எனைக் கவர்ந்தே
எழிலாரும் தேவதையே !'

என்று மையலில் மாய்ந்தான்.

6.6 அடுத்து, அமைச்சர் மீனவன்பால் சென்று மன்னன் நிலை மொழிந்து பெண் வேண்டுகிருர். அமைச்சர் பெண்கேட்கச் செல்லுதல் மூலத்தில் இல்லாதது. அமைச்சர்க்கு மச்சகந்தியின் நற்றந்தை கூறும் மறுமொழி குறிப்பிடத்தக்கது. தந்தையின் கடமையைச் செல்வத் துக்கும் அதிகாரத்துக்கும் இரையாக்காதப் பண்பினைப் புலப்படுத்து கிறது. பரதவன்,

' முதுமைக்கே இளமைதனை
முற்றும்நான் பலியாக
எதுகருதி யீகுவது
இயம்பிடுக அமைச்சரையா !
கதியற்ற ஏழையென்ற
காரணத்தால் என் மகளை
மதியற்று மன்னனுக்கு
மணமுடிக்க ஒப்புவதா ?

' மன்னவன் என்பதினல்
வாலிபந்தான் வந்திடுமா ?
கன்னிப்பெண் கிழவன்தனைக்
கண்கொடுத்துப் பார்ப்பாளா ?

இன்னபிற நீதிதனை
ஏன்நீங்கள் வேந்தரிடம்
அன்புடனே தானெடுத்து
அறிவிக்க லாகாதா?'

என்றான். கல்வி ஏதும் கற்றறியாக் கடலுழக்கும் செம்படவன் கேள்விக் கணையாலே நாண மடைந்த அமைச்சர்க்கு உதிக்கும் ஞானம் ஆசிரியர் குரலாக வலுத்து ஒலிக்கிறது :

'அழகும் அறிவும் மேற்குலத்தை
அன்றித் தோன்றா தென்பதெல்லாம்,
இழிந்த குணத்தார் சுயநலத்தால்
இசைத்த சொற்கள் என்பதனை
பழகிநேரில் அனுபவத்தால்
பார்த்தே யின்று தெரிந்துகொண்டேன்.'

அமைச்சர் பாத்திரப்படைப்பின் பெருநோக்கம் இந்தப் பொது உண்மையை உணர்தலே—உணர்த்துதலே எனலாம். பரதவன் பேரனுக்கு அரசுரிமையைக் கொடுத்து மச்சகந்தியை மணக்குமாறு அமைச்சர் சொன்ன ஆலோசனையை மன்னன் ஏற்கவில்லை. இளவரசனை முடி சூட்டப்பட்ட தேவ விரதனே அரசுக்குரியவன் என்று உறுதியாகக் கூறி விடுகிறான்.

6.7 சுய நலத்தால் மன்னன் தன் அறிவை இழக்கவில்லை. 'சீரார் என்றன் அரசு நெறிச் சிதைவில் எதையும் கொள்ளேன் நான்' என்று துணிதலுடன் தன் மனத்தை மாற்றிக்கொண்டு புதுநெறியில் தன்னைப் புகுத்திக்கொண்டு, 'குடிகளின் உரிமைகளைத் தன்னலத்தால் அழிக்க மாட்டேன்; கொள்கைக்காக உயிர்நீத்தான் கோமான் என்ற சரித்திரத்தை எல்லை விரிந்த உலகினுக்கே ஈந்து சாகத் துணிந்துவிட்டேன்' என்று முடிவெடுக்கிறான். கவிஞர் காட்டும் மன்னன் கடமை உணர்வு நாடாள்பவர்கள் என்றும் எண்ணத்தில் இருத்த வேண்டியவைகளாகும்.

மன்னனையே தன் தகாத மோக நிலையை உணரும்படி செய்கிறார் கவிஞர்.

'மகனின் மணத்தை நடத்துகின்ற
வயதிற் காதல் வசமானேன்
மகனும் இதனை அறிந்திடிலோ
மனத்துள் என்னை இகழ்ந்திடுவான்
அகமே நானும் இந்தநிலை
அரசன் எனக்கு வரலாமோ?
புகலும் நீதி பிறற்கென்பான்
புவியை ஆளல் முறையாமோ?

'புவியை ஆளும் என்றனுக்குப்
புலனை ஆளத் தெரியவில்லை
அவமானந்தான் யீதெனக்கு,
ஆனால் என்ன செய்வதையா?
உவமையில்லாப் பேரழகி
உயிரைக் கவர்ந்தாள் அழிகின்றேன்
தவறே இல்லை நானழிதல்
தருமம் அழிதல் சரியாமோ?'

6.8 அரசன் உரையைக் கேட்ட அமைச்சர் அழுதார். ஆனால் மறைவில் அதனைக் கேட்டுக்கொண்டிருந்த தேவ விரதனே 'கால்கள் நடக்க, உள்ளம் நடக்க' பரதவன் இல்லம் அடைந்தான். தன் கோரிக்கையை எடுத்துரைத்தான். பரதவன், 'தந்தை மகனுக்குப் பெண் கேட்பது இயல்பு. ஆனால் மகன் தந்தைக்குப் பெண் கேட்பதைக் கதையாகவும் நான் இதுவரைக் கேட்டதில்லை. மகன் என்றால் உன்னைப்போல் மகன் பிறக்கவேண்டும். மகன் தந்தைக்கு ஆற்றும் நெறியை வையகம் உன்னால் கற்றது,' என்றெல்லாம் போற்றினாலும் பரதவன் தன் நிபந்தனையினின்று சிறிதும் தளரவில்லை. இளவரசன் நிபந்தனையை ஏற்கிறான். என்றாலும், பரதவனுக்கு இளவரசன்பால் ஐயம் எழுகிறது. இளவரசன் இனிப் பெண்ணின்பம் நுகரமாட்டேன் என்று சூளுரைத்து அந்த ஐயத்தை அகற்றுகிறான்.

6.9. எட்டு குழந்தைகளுக்குத் தந்தை ஐம்புலனை அடக்கியாள இயலாமல் ஆசைவயப்பட்டு அல்லல்படுகிற நிலையினையும் மணமாகா அத்தந்தையின் மகன் தியாகத்தின் வலிமையால் புலனைவென்று தந்தை இன்னும் சிற்றின்பம் நுகர்தற்பொருட்டுத் தான் அதனைத் துறக்கிறான் என்பதனையும் கவிஞர் புலப்படுத்தும் திறன் நயமானது.

6.10. பரதவன் தன் சுயநலத்தால் நிபந்தனையை விதித்ததாகச் சொல்லி தன் சுயநலத்தை எடுத்துரைக்கிறான். இது கவிஞரின் அற்புதக் கற்பனை ஆற்றலுக்குச் சான்றாக அமைந்து ஏழ்மை நிலையில் வாழும் மக்களின் ஓர் உண்மையியல்பினைக் காட்டுகிறது. இது கவிஞரின் சொந்தப் படைப்பு. பரதவன்,

'வேந்தருக்குப் பெண்தரநான்
விவகாரம் பேசியது,
ஈந்தவளை அரண்மனைக்கே
ஏகென்று அனுப்பிவிட்டால்,
நாந்தனியாய் முதுவயதில்
நாதியற்றுப் போய்விடுவேன்;
ஏந்தியெனைக் காப்பாற்ற
யாருள்ளார் துணையாக?

‘ மகளையோர் மீன்குலத்து
வாலிபனுக்கே கொடுத்து,
தகவுடனே என்னோடு
சார்ந்திருக்கச் செய்துவிட்டால்,
சுகமுறலாம் என்குடியும்
துலக்கமுறும் பேரர்களை,
அகமகிழ்ந்தே தூக்கிநித்தம்
ஆனந்தம் உற்றிடலாம்!

‘ மேல்வலித்தால் கால்வலித்தால்
மேவுமெந்தன் நற்பேரர்,
சூழ்ந்தமுக்கிக் கொண்டிருப்பார் ;
சுகக்கேடு நானடைந்தால்
வாழுகின்ற மகளுடனே
மருமகனும் அருகமர்ந்து,

‘ வாயினிலே மெள்ளமெள்ள
வார்த்திடுவார் ; செத்துவிட்டால்,
மாயமிந்த வுடல்தழுவி
வாய்விட்டே அழுதிடுவார்
போயவளும் அரண்மனைக்குள்
புகுந்தரசி யாகிவிட்டால்
தூயவனே இவையெல்லாம்
தொலைந்திடுமே என்றெண்ணி ’

ஆகாத நிபந்தனையை நான் அறிவித்தேன்’ என்றான். தன்னை வென்ற இளைஞனை நோக்கி,

‘ முதியவரும் விட்டொழிக்க
முடியாத ஆசைதனை,
இதுவென்ன பெரிதென்றே
எடுத்தெறியத் துணிந்துவிட்ட
புதியவனே உன்கீழே
புவிதங்க லேசிறப்பு.

எனவே, உன் அருஞ்சூளுரையையும் சத்தியத்தையும் மாற்றிக்கொள் என்று வேண்டினான். வேண்டப்பட்டவன் வேண்டுகிறான்.

6.11 ஆனால், இளவரசன் சொல்லுகிறான்,

சூளுரை சத்தியம் எதிலும் துளியும்
மாற்றம் செய்திட வழியே இல்லை ;
....
செத்தும் சாகா வாழ்க்கை வாழ்வதை
இலட்சிய மாகக் கொள்ளல் வேண்டும் ;

இதற்கு நல்லடிப்படை சொல்லில் உறுதி
உனது நிபந்தனை, எனது சத்தியம்
எல்லாம் விதிப்பயன் ஆதலினாலே
நடந்த தனைத்தும் முற்றிலும் சரியே!

என்றனன். மச்சகந்தி பரிமளகந்தியாகிறாள். தேவவிரதன் பீஷ்மனாகின்றான்.

தந்தைக் காக தேவ விரதன்
தியாகம் செய்து பீஷ்ம னானன்
அவனைப் போன்ற தியாகி யிந்த
அவனியில் எங்கும் பிறந்ததே யில்லை
....
ஆசை அழியும் தியாகம் நிலைக்கும்
என்பதை உணர்த்தும் பீஷ்மன் பாத்திரம்
இலக்கியம் தன்னில் இணையிலாப் படைப்பு.[14]

6.12 'மச்சகந்தி' காப்பியப் படைப்பும் ஓர் இணையிலாப் படைப்பே. அற்புதமான கற்பனைச் சிறகுகளோடு தமிழுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய காப்பியம் இது' என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார். ஆசை அழிந்தது; தியாகம் வென்றது. தியாக வாழ்க்கையை மேற்கொண்ட கவிஞருக்கு 'பீஷ்மன் தியாகம்' உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது இயல்பேயாகும்.

7 தொகுப்புரை

7.0 இயற்கை, காதல், மொழி, நாடு, சமுதாயம் முதலானவற்றில் உள்ளம் தோய்ந்து உணர்ச்சிப் பிழம்பாய்க் கவிஞர் தந்த கவிதைக் கோவை **அமுத கலசம்**. பெயருக் கேற்ப கவி அமுத கலசமே!

7.1 இயற்கையிலும் மனித வாழ்விலும் ஈடுபாடு மிக்க கவிஞர் இறை உணர்விலும் ஈடுபாடு மிக்கவராகவே காணப்படுகிறார். **நபியே எங்கள் நாயகமே!** பத்திக் கவிதை, தமக்கும் பிறர்க்கும் பயனுள்ள வகையில் வாழும் வாழ்க்கை நெறிக்கு ஆற்றுப்படுத்துகிறது.

7.2 தன் ஆசையை அழித்துத் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தியாக வாழ்க்கை விளக்கத்தின் சிகரமாக ஒளிவிடுகிறது **மச்சகந்தி** காப்பியம். பற்றற்ற கடமை வாழ்வு அழிவற்ற பேர் உயர்வினை அளிக்கும் என்பதற்குச் சான்றாக வீமன் திகழ்கிறான்; உலகிற்குத் தியாக ஒளி ஊட்டுகிறான். இவ்வாறு வாழ்க்கை ஒளி காட்டும் உயர்ந்த கவிதைப் படைப்புகளைத் தந்து விடுதலை இயக்கத்தின் விளக்காகத் திகழ்கிறார் கலைமாமணி கவி. கா. மு. ஷெரீப்.

பாரத தேசிய கீதம்

அன்பிற் சிறந்த பாரத நாடே
　ஆண்டவன் உறைந்திடும் வீடே
உன்திறம் வாழ்க உன்புகழ் உயர்க
　உலகெலாம் உனைவாழ்த் திடுக.

—அமுத கலசம் (பக். 67)

அடிக்குறிப்புகள்

1. அமுத கலசம், பக். 112.
2. ஒளி, தொண்டன் பிரசுராலயம், வேளுக்குடி, 1946, பக். 32.
3. கவிதை, சுவடி-3, ஏடு 8, 9, பக். 1964.
4. நபியே எங்கள் நாயகமே, என் உரை.
5. "He must simply elucidate: the reader will form the correct judgement for himself" — 'Perfect criticism' p. 8. Quoted by B. Prasad; an Introduction to English criticism, Macmillan, 1971, p. 233.
6. 'Probably, the larger part of the labour of an author in composing his work is critical labour; the labour of sifting, combining, constructing, expunging, correcting, testing; this frightful toil is as much critical as creative......' Selected essays, 'The function of criticism', p. 30, Quoted Ibid. p. 234.
7. கவிஞரின் உரிமைக்குரல், சென்னை, பக். 3, 4.
8. ஷை பக். 4.
9. ஷை பக். 5.
10. நபியே எங்கள் நாயகமே — என்னுரை.
11. நபியே எங்கள் நாயகமே — முன்னுரை.
12. திருமந்திரம் — 252.
13. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும் — நன்னூல் 7.
14. 'Bishma, the most noble and upright of all heroes of the Mahabharatha,......It was because of this dire oath that the lad was named Bhishma 'the terrible' — THE HINDU WORLD, Vol. I, p. 149, B. Waler, ef.

துணை நூல்கள்

ஈஸ்வரன், கோவை : கவிஞரின் உரிமைக்குரல், சென்னை.

திருமந்திரம் : பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், 1960.

நன்னூல் : ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1966.

ஷெரீப், கவி. கா. மு. : அமுத கலசம், சென்னை, 1964
இன்றைய சமுதாயம், சென்னை, 1951
ஒளி, வேளுக்குடி, 1946
நபியே எங்கள் நாயகமே, சென்னை, 1972
மச்சகந்தி, சென்னை, 1972

இதழ்கள் :

கவிதை, சுவடி-3, ஏடு 8 & 9, 15—9—64
ஞானக்குரல், குரல்-1, ஒலி-1, 18—9—64

ஆங்கில நூல்கள் :

Prasad, B. : An Introduction to English Criticism, Macmillan, 1971.

Walker, B. : The Hindu World, Vol. I.

35

கலைக்களஞ்சியத்தில் டாக்டர் தெ.பொ.மீ. அவர்களின் இலக்கிய, இலக்கண, சமயக் கட்டுரைகள் - ஒரு பார்வை

கு. **மோகனராசு**, பி. எசி., எம். ஏ.,
ஆராய்ச்சித் துணையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

கட்டுரையும் கால நோக்கும் 1.0 - 1.2—கட்டுரையும் கலைக்களஞ்சியமும் 2.0 - 2.1—பேராசிரியர் தெ. பொ. மீ-யும் கட்டுரைப் பணியும் 3.0 - 3.1—எளிமையும் தெளிவும் 4.0 - 4.3—நடையும் நயமும் 5.0 - 5.1—ஆய்வும் துணிவும் 6.0 - 6.3—பாராட்டலின் நோக்கும் போக்கும் 7.0 - 7.12—காலமும் கருத்தும் 8.0 - 8.3—முடிப்பு 9.0 - 9.1.

கட்டுரையும் காலநோக்கும்

1.0 *இலக்கியம் என்பது வாழ்வின் பண்புகளை விளக்குகையில் சிலபோழ்து '**உருப்பெருக்கு ஆடி**'யாகவும் சிலபோழ்து '**நுண் நோக்கு ஆடி**'யாகவும், சிலபோழ்து வரலாற்றின் '**தொலை நோக்கு ஆடி**'யாகவும் திகழ்வது. இவ் விலக்கியம் இன்று காப்பியம், கவிதை, நாடகம், சிறுகதை, புதினம் எனப் பல்வேறு உருக்கொண்டு வளர்ந்து வருகிறது. இவற்றுடன் கட்டுரையும் இலக்கியத்தின் ஒரு கூறாகிப் பீடு நடையிடுகின்றது.*

1.1 *இன்று பீடு நடையிடும் கட்டுரையின் வளர்ச்சிக்குத் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே 'கால்கோள்' செய்யப்பட்டது எனக் கருத இடமுளது; பின்பு இளங்கோவடிகளாலும் நக்கீரராலும் புதுப்பிக்கப்பட்டது; உரையாசிரியர்களால் உரமூட்டப்பட்டது; மேலை நாட்டினரால் மெருகூட்டப்பட்டது; இன்றோ பல்கலை என்னும் வண்ணப் பொலிவோடு வளர்ந்து வருகின்றது.*

1.2 *தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறும் 'கட்டுரை'[1] என்னும் சொல்லிற்கு உரையாசிரியர்கள் 'கூற்று நிகழ்த்துதல்,'[2] 'உரை'[3] என்று பொருள் கொள்கின்றனர். தண்டமிழின் தனிப்பெருங் காப்பியமாம் சிலம்பில் 'கட்டுரை'[4] என்பதற்குப் 'பொருள் பொதிந்த*

சொல்,' 'பொருள் பொதிந்த உரை'[5] என்றே உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பொருள் கொண்டுள்ளார். இதன் விரிவான விளக்கங்களை பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள்[6] என்னும் ஆய்வு நுட்பம் நிறைந்த நூலில் கண்டு தெளிவுறலாம். பொதுவாக நோக்கின், (பண்டைக் காலத்தே,) டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் கூறுவது போல்,

> " கட்டுரை என்னும் சொல் எழுதப்படும் எழுத்தினும் சொல்லப்படும் சொல்லையே மிகுதியாகச் சுட்டியது " [7]

என்பது தெளிவுறும். இன்று அச்சொல்,

> " உறுதிச் சொல், பொருள் பொதிந்த சொல், பழமொழி, புனைந்துரை, பொய், வியாசம்" [8]

என்னும் பல்வேறு பொருளில் வழங்கப்பட்டு வரினும், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் கூறுவது போல்,

> " உரையின் அமைப்பழகு நிரம்பிய உரை " [9]

என்றே பெரிதும் கொள்ளப் படுகிறது எனலாம்.

கட்டுரையும் கலைக்களஞ்சியமும்

2.0 உரையின் அமைப்பழகும் அறிவியல் நுட்பமும் செறிந்த இக்கட்டுரையின் இயல்பை நன்கு ஆராய்ந்த தமிழறிஞர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்,

> " நீல வானத்தை அணிசெய்யும் ஞாயிறும் திங்களும் போல இலக்கிய வானத்தை எழில் செய்யும் இருபெருஞ் சுடர்கள் கட்டுரையும் கவிதையும் என்று கருதிக் களிக்கலாம்"[10]

என இலக்கியத்தில் கட்டுரைக்குரிய இடத்தை வரையறுத்துள்ளது ஆராயத்தக்கதே. மேலும், கட்டுரையின் நுட்ப வெளிப்பாடான கட்டுரைக் கலையை அவர் 'இலக்கியத்தின் உள்ளம்'[11] என்றே கருதிப் போற்றுகின்றார்.

2.1 இத்தகைய கட்டுரைக் கலையில் வல்லாரின் இலக்கிய, ஆய்வு, அறிவியல் கட்டுரைகளின் உறைவிடமாக விளங்குவது கலைக்களஞ்சியம். கட்டுரைகள் அளவால் சிறியனவாகச் சிலபோது காணப்படினும் அமைப்பால், நிறைவால் பெரிதாக மதிக்கத் தக்கவை. மேலும், கலைக்களஞ்சியமோ ஒவ்வொரு துறையிலும் சுருங்கியே காணப்படினும், அவ்வத்துறைகளில் அறிவினைத் தூண்டும் **'வினைத்தூண்டி'** (கிரியா ஊக்கி)யாக விளங்குகின்றது எனலாம்.

"எல்லாக் கேள்விகளுக்கும் முழு விவரங்களுடன் விடைகூற முயல்வது கலைக்களஞ்சியத்தின் வேலையன்று. மேன்மேலும் படிக்கவும் ஆராயவும் தூண்டுவதே அதன் வேலை."[12]

எனக் கலைக்களஞ்சியமே தன்நோக்கை வரையறுத்துக் கொள்கிறது. இதன் சிறப்பை,

"மேனாட்டுக் கருத்துகளையும் புதுமை முற்போக்குகளையும் தமிழ் பெற்று விளங்குவதற்கு இந்தக் கலைக்களஞ்சியமே சான்றாகும்."[13]

எனப் பேராசிரியர் டாக்டர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் எடுத்துரைத்திருப்பது முற்றும் உண்மையே எனலாம்.

பேராசிரியர் தெ. பொ. மீ-யும் கட்டுரைப் பணியும்

3.0 தமிழில் கலைக்களஞ்சியத்தின் இன்றியமையாமையை உணரத் தொடங்கும் இந் நூற்றாண்டில், இலக்கிய உலகில் படைப்புச் செல்வங்கள், திறனாய்வுச் செல்வங்கள் எண்ணற்றன—மதிப்புடையன தோன்றுகின்றன; அவற்றின் சிறப்புகளைச் சீர்தூக்கும் சான்றோர்கள் இவ்விருபதாம் நூற்றாண்டே 'தமிழ் இலக்கிய உலகின் பொற்காலம்' எனப் பெருமைப் படுகின்றனர். அப் **பொற்காலத்தை உருவாக்கியோருள்—உருவாக்குவோருள் ஒருவராக விளங்குபவரே பேராசிரியர் டாக்டர். தெ. பொ. மீ. அவர்கள்.**

3.1 பல்கலைச் செல்வர் தெ. பொ. மீ. அவர்கள் பல்கலையின் நுழைவாயிலாக இலங்கும் கலைக்களஞ்சியத்தில் அளவால் சிறியனவும் பெரியனவுமாகிய 78 கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் 62 கட்டுரைகள் தமிழ் நெடுங்கணக்கைப் பற்றியவை (சிறிய குறிப்புகளாய் உள்ளனவும் இவற்றுள் அடங்கும்). மற்ற 16 கட்டுரைகளும் இலக்கிய, இலக்கண, சமயச் சார்புடையன (பார்க்க: பின்னிணைப்பு 1). அப் பதினாறு கட்டுரைகளுள்ளும், அவற்றின் தன்மைகளைத் தனித்தனியாக ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று; அவற்றுள் காணும் ஒருசில போக்குகளைச் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். முதற்படியாக, அவர்தம் கட்டுரைகளுள் காணத்தகும் எளிமை, தெளிவு, நடைநயம், உரையின் துணிவு ஆகியவற்றை நோக்குவோம்.

எளிமையும் தெளிவும்

4.0 உணர்ச்சி முனைப்பான அறிவு உயர்கவிதைக் கழகு; அறிவு முனைப்பான உணர்ச்சி உயர் கட்டுரைக்கு அழகு. உணர்ச்சி முனைப்பொன்றே கவிதையாயின், 'உலர்ந்த சருகின் ஒப்பாரி' போலாகும்; அவ்வாறே, அறிவு முனைப்பொன்றே கட்டுரையாயின் அஃது, 'கோடைக் காலத்து வாடைக் காற்றே.' இவ்வுண்மையை நன்குணர்ந்தே டாக்டர் தெ. பொ. மீ. அவர்கள் அறிவு முனைப்பான உணர்ச்சிக்கு ஏற்ற

தோர் இடங்கொடுத்துத் தம் கட்டுரைகளை வடித்துள்ளார் எனலாம். அவ்வாறு வடிக்கப்பட்ட அவர்தம் கட்டுரைகளில் பெரும்பான்மையும் எளிமையும் தெளிவும் தக்க இடம் பெற்றுள்ளன.

4.1 அரிய கருத்துகளை எளிமையும் தெளிவும் தோன்ற உரைப்பதற்கு உவமை, உருவகம் இவற்றைக் கையாளுதல் அன்றும் இன்றும் உரிய நெறியாக இருந்து வருகிறது. அதிலும், மிகவும் எளிமையினைக் கையாளுவதென்பது பல்கலைத் தெளிவும், உலகியல் நெளிவு சுழிவுகளை நுண்ணிதின் நோக்கி உணரவல்ல திறமையும் உடையார்க்கே எளிதாம்.

4.2 இவ்விருவகைச் சிறப்புகளையும் தமிழறிஞர் தெ. பொ. மீ. அவர்கள் பெற்றுள்ளமையை அவர்தம் கட்டுரைகளின் பல்வேறு இடங்களில் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக,

> "சீட்டாடுவோர் அறிவோடே ஆடவேண்டும்; ஆனால், கைக்கு வந்த சீட்டுக்கேற்பவன்றோ ஆடுதல்வேண்டும்? வந்த சீட்டுப் போன்றது ஊழ்வினை"[14]

என 'ஊழ்வினை'யை விளக்குமிடத்தையும்,

> "ஒரு கிளையைப் பற்றியவன் மறு கிளையைப் பற்றினால், முன் பற்றிய கிளையைத் தானாக விடுவது இயல்பு; எல்லாமாகி நிற்கும் பற்றற்றவனது பற்றினைப் பற்றினால் பற்றுகள் தாமே விடும்"[15]

எனப் 'பற்று' நிலையை விளக்குமிடத்தையும் கூறலாம்.

4.3 இவ் வெளிமையும் தெளிவும் ஒருவர்க்கு மிக எளிதில் வாய்த்து விடுவதன்று. இலக்கியங்கள் பலவற்றையும் துய்த்து, அவற்றின் சிறப்பை வெளிப்படுத்தவேண்டும் என்ற ஆர்வம் உள்ளத்தைக் கிளற, அதனோடு பல்கலைத் தெளிவும், உலகியல் அனுபவமும் ஒருங்கிணையும்போதே வாய்க்கின்றது. இஃதே, நடையின் சிறப்பிற்கு ஒரு வழியில் வழி வகுக்கிறது எனலாம் (பார்க்க: பின்னிணைப்பு 2).

நடையும் நயமும்

5.0 நடை என்பது படைப்பாளனின் தனித்தன்மையை — உள்ளத் தெளிவை வெளிப்படுத்தி, அவரை இனங்கண்டுகொள்ள வைக்கும் தனித்திறன் வாய்ந்தது. பிளாபர் என்னும் மேலை நாட்டறிஞர்,

> "நடை என்பது கவிதையைப்போல் ஒலிநயமும், அறிவியல் போல் திட்ப நுட்பமும், யாழொலிபோல் எழுச்சி வீழ்ச்சியும் மிக்கதாய் இருக்கவேண்டும்; கருத்துகளை ஊடுருவிக்

கொண்டு செல்லவேண்டும்; கற்போரின் எண்ணத்தைத் தூண்டவேண்டும்."[16]

என நடைக்கோர் இலக்கணம் வகுப்பதையே முழுமையான இலக்கணமாகக் கொள்ளாமல், ஒரு தொடக்க அளவுகோலாகக்கொண்டு, மூதறிஞர் தெ.பொ.மீ. அவர்களின் கட்டுரைகளை நோக்கின், பெரும்பான்மையான இடங்களில், இப் பண்புகள் முழுமையும் ஒருங்கே இல்லாவிடினும் ஆங்காங்கே காணமுடிகிறது எனலாம்.

"இருபதாம் நூற்றாண்டு எல்லாத் துறைகளிலும் கடைகாலிலிருந்து அனைத்திலும் புதியதாக வருவாரது முயற்சியைக் காண்கிறது; சிலபோது நடுங்குகிறது; சிலபோது அடிப்படை மாறவில்லை என்று உணர்கிறது; புதுமையை வரவேற்றுப் 'புரட்சி, புரட்சி' என்று ஓலமிடுகிறது" [17]

என்றும்,

"குறிக்கோளுலகில் உயரப் பறந்தாலும், மண்மேல் கால் வைத்து நடந்தேபின் உயர இவர் வழி காட்டுகிறார்"[18]

எனச் சீர்சால் புலவர் திருவள்ளுவரைப் பற்றியும்,

"அரண்மனையிலிருந்து குடிசைக்கும், குடிசையிலிருந்து அரண்மனைக்குமாகப் புரண்டு புரண்டு வளர்ந்தோங்கியது காப்பியம்"[19]

எனக் காப்பியத்தின் நிலைமையையும் விளக்குமிடங்களைச் சான்றாகக் கூறலாம். கட்டுரைகளின் பெரும்பான்மையான இடங்களில் அமைப்பழகு மிளிர்கிறது என்றாலும், ஒருசில இடங்களில் மிக நீண்ட தொடர் அமைப்புகள் படிப்பார்க்கு முதலில் தயக்கத்தையும் சோர்வையும் ஏற்படுத்துவதையும் மறுக்கமுடியாது. பாரதியாரின் பாடலின் மாண்பைக் கூறுமிடத்து[20] ஒரே தொடரில் சற்றேறக்குறைய 240 சொற்களைப் பொதிய வைக்குமிடத்தைச் சான்றாக் கூறலாம்.

5.1 மேலும், தொடக்க காலத்தே வடமொழியின் கலப்பு — அக்காலப் போக்கின் காரணமாகக்—கட்டுரைகளில் மிகுந்து காணப்படுகிறது. 'இலக்கணம்'[21] என்னும் கட்டுரையில் மட்டும் கிட்டதட்ட 1.5 விழுக்காடு அளவிற்கு வடமொழியின் கலப்பைக் காணமுடிகின்றது. ஆனால், காலஞ் செல்லச்செல்ல கலப்பின் தன்மை குறைந்து வருவதையும் காணமுடிகின்றது எனலாம்.

ஆய்வும் துணிவும்

6.0 பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பல்கலைத் தெளிவோடு பெற்றிருக்கும் இலக்கியத்தின் நடுநிலை ஆய்வுணர்வு, எளிமை தெளிவு

நடைநயம் என்பனவற்றிற்கும் மேலாகக் கருத்தின் துணிவிற்கும் வழிவகுத்துள்ளது எனலாம்.

6.1 திருவள்ளுவரைப் பற்றி வழங்கும் கதைகளை இவர் நம்பாததோடு, அவற்றை நம்பித் திரியும் இலக்கிய நலங்கெட்டாரை வன்மையாகவும் சாடுகின்றார்.

> "திருக்குறளைப் படிக்கின்ற சாதிச் செருக்குடையவர்களுக்கு அதன் பொது அறம் இத்தகைய கதைகளைக் கற்பித்துக் காணத் தூண்டியது எனலாம்"[22]

என்னும் கருத்து, சாதிச் செருக்குடையவர்களுக்கு இவர் வீசும் 'சொற்சாட்டை' எனலாம்.

6.2 தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய பல்வேறு கருத்துகள் இருப்பினும்,

> "தமிழ்ச் சங்கம் என ஒன்று பாண்டியர் தலைநகரிலிருந்து பிரெஞ்சு அகாடெமிபோலத் தமிழை வளர்த்து வந்தது என்பது தமிழர் குறைந்தது 1,200 ஆண்டுகளாக நம்பிவரும் **ஒரு குறிக்கோள் நிரம்பிய கதை**"[23]

எனப் பேராசிரியர் அவர்கள் துணிந்துரைப்பதும் ஆராயத்தக்கதே. அஃதேயன்றி, வடமொழி இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட தண்டியலங்காரத்தின் காப்பிய இலக்கணத்தை அளவுகோலாகக் கொண்டு சிலப்பதிகாரத்தையும் பிற தமிழ்க் காப்பியங்களையும் அளக்க முற்படும் பேதைமையை மறைமுகமாக எள்ளி நகையாடுகின்றார். அத்துடன் நில்லாமல், காப்பிய இலக்கணம் யாது? என வரையறுக்குமிடத்து,

> "காப்பியத்திற்கு இலக்கணம் கூறுவது எளிதன்று; வால்மீகி, கம்பன், இளங்கோவடிகள், ஹோமர், மில்டன், வர்ஜில், காமியன் என்ற இவர்கள் எழுதியிருப்பன போன்றதே காப்பியம் என்று கூறுவதற்கு மேல் என்ன கூற இயலும்?"[24]

என ஆய்ந்துரைப்பது ஆழ்ந்து கருதத்தக்கதெனலாம். அன்றியும், சூளாமணியை ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகக் கொள்வதினும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகக் கொள்வதே ஏற்புடைத்து என்பதற்கும் அவர் கூறும் காரணங்கள் தெளிவுடையனவாகவும், சிறப்புடையனவாகவும் திகழ்கின்றன.[25]

6.3 இவையேயன்றி வேறுபல பண்புகளையும் விரிக்கின் பெருகுமாகலின், அவற்றை அறிஞர்கள் ஆய்ந்துணர்வார்களாக. அடுத்து, அவர்தம் கட்டுரைகளில் மிளிரும் அவர்தம் உள்ள உணர்வை ஓரளவு காண்போம்.

பாராட்டலின் நோக்கும் போக்கும்

7.0 புலமையுடையாரைப் புகழும் பெருந்தன்மை இயற்கை நெறிக்காலத்தின் — சங்ககாலத்தின் தனிப்பெரும் பண்பாக விளங்கியுள்ளதை அக்கால இலக்கியத்தால் அறிகின்றோம். அத்தனிப் பெரும் பண்பு இறைமை நெறிக்காலத்தில் — சமய நெறிக்காலத்தில் தொய்வு நிலையை அடைந்து, 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்துள்ளதையும் வரலாறு காட்டும். புலமையுடையாரைப் புகழும் அப்பண்பு 20-ஆம் நூற்றாண்டில் மீண்டும் புத்துயிர் பெற்றதெனலாம். அப்பண்பிற்கு உயிரூட்டிய பண்பாளர்களுள் ஒருவராகத் திகழ்பவர்தான் தமிழ்த்தென்றல் திரு வி. க. அவர்கள்.

7.1 வாய்ப்பு வாய்க்கும் இடமெல்லாம் வல்லாரை வாழ்த்தும் உயர்நெறியைத் திரு.வி.க. அவர்களிடம் காண்கின்றோம். அவர் நா வாழ்த்தா நல்லாரே இல்லையெனலாம். அப் பெருந்தகையால் பத்தினுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில்[26] பாராட்டப்படும் சிறப்பினைப் பெற்றவர், அவரோடு அரசியல் சமய இலக்கியத் துறைகளில் நேரடியான தொடர்பு கொண்ட — அவற்றுள் சீர்மைகொண்ட, பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களாவர். தமிழறிஞர் திரு.வி.க. அவர்களின் இந் நல்லுணர்வே, பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் உள்ளமாம் வீணையில் 'நன்றியுணர்வு' என்னும் பண்ணை மீட்டிவிட்டதெனலாம். அந் நன்றியுணர்வே சமய விற்பன்னர் தெ.பொ.மீ. அவர்கள் ஒரே கட்டுரையில் 16 இடங்களில் தமிழ்முனி திரு.வி.க. அவர்களைச் சுட்டவும் புகழவும் வைத்துள்ளதோ என எண்ணவும் இடமேற்படுகின்றது.[27]

7.2 செந்தமிழ்ச் செல்வர் திரு.வி.க.-வை அடுத்து, இவரால், கலைக்களஞ்சியத்தில் அதே எண்ணிக்கையில், ஆனால் வாய்ப்பு வாய்க்குமிடமெல்லாம் வலிந்து பாராட்டப்படுபவர் மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதியார் அவர்களே. சமயக் கட்டுரையாயினும் சரி, 'திருக்குறள்' போலும் இலக்கியக் கட்டுரையாயினும் சரி, அங்கெல்லாம் பாரதியாரைத் துணைக்கொண்டே செல்வது இவரது கட்டுரைகளில் காணும் ஒரு **விருப்பப் போக்காக** அமைந்துள்ளது எனலாம்.

7.3 பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பாரதியாருக்குப் புகழணி சூட்டும் இடங்களில்,

> "சிலர் தாங்கள் தமிழ் நூற்பரப்பில் கண்ட இன்பத்தையெல்லாம் பேசுகிறார்கள். பண்பாட்டு வடிவமாய்த் தமிழினையும் காணும் காட்சி அது. ஆனால், இப்பாடல்களையெல்லாம் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாரதி பாட்டைப் பொதுமக்கள் கவிமணி கூறுவதற்கிணங்கத் துள்ளிக் குதித்துப் பாடுவதுபோல் பாட முடியுமா என்பது ஐயமே"[32]

என வரும் கருத்து, பாரதியார்பால் இவர் கொண்ட பெரும் விருப்பத்தையே காட்டுகின்றது எனலாம். அன்றியும், ‘திருக்குறள்’ என்னும் இலக்கியக் கட்டுரையில்,

> “‘காக்கை, குருவி எங்கள் சாதி’ என்று பாரதியார் பாடுவது தமிழன் கண்ட உண்மை”[29]

என்றும், ‘இரந்தும் உயிர்வாழ்தல்’ எனத் தொடங்கும் குறளைக் குறிப்பிட்டு,

> “‘தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் சகத்தினை அழித்திடுவோம்’ என்று பாடியதற்கு வித்து இதுதான்.”[30]

இவை போன்ற கருத்துகளை இடையீடாகக் காட்டுவதும் இக்கருத்திற்கு ‘**உள்ளுறை அரண்**’ ஆகிறது எனலாம்.

7.4 பேராசிரியர் அவர்கள் கவியரசர்பால் இப்பெரு விருப்புக் கொள்வதற்குக் காரணம் யாது என்பது நோக்கற்பாலதே.

7.5 முதலாவதாக, ‘தமிழுக்கு இலக்கிய, இலக்கண வகையில் ஏதேனும் புதுமையைச் செய்யவேண்டும்’ என்பது இவரது உள்ளக் கிடக்கை. அந்நிலையில் பாரதியார், தமிழ்க் கவிதையில் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது இவரைப் பெரிதும் கவர்ந்திருக்கலாம்.

7.6 இரண்டாவது, பேராசிரியர் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் ஒரு ‘தேசியவாதி’யாகவே விளங்கி வந்துள்ளார்; வருகின்றார். பாரதியாரும் இவரைப்போலவே ஒரு பெரும் தேசியவாதியாக விளங்கி, ‘தேசிய கவிதைகள்’ பாடியது இவரைப் பெரிதும் கவர்ந்திருக்கலாம்.

7.7 மூன்றாவதாக, சமய ஈடுபாடு பெரிதும் உடையவரே ஆயினும், பேராசிரியர், சாதி சமய வெறியுணர்வைப் பெரிதும் வெறுத்ததைப்போலவே பாரதியாரும், சாதி சமய வெறியுணர்வைச் சாடியது இவரது ‘பக்தி’க்குக் காரணமாகலாம்.

7.8 அனைத்திற்கும் மேலாக, இவர் பாரதியார்பால் கொண்ட தொடர்புங் காரணமாக இருந்தது எனலாம்.

7.9 1908-ல் நடைபெற்ற சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குப் பின்னர் நாட்டில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. அதில் பல தலைவர்கள் தலைமறைவாயினர். அவ்வேளை, தலைமறைவாக வாழ எண்ணிய பாரதியார் பேராசிரியர் வீட்டையே தஞ்சம் கொண்டார்.[31]

7.10 இதற்கிடையில், தம் வீட்டிற்கு அருகிலிருந்த நெல்லையப்பரின் தொடர்பால், பாரதியாரின் பாடல்களின் கையெழுத்துப்

படிகளையே படித்துச் சுவைக்கும் வாய்ப்பும் பேராசிரியர் அவர்களுக்குக் கிட்டியது.[32]

7.11 சில நாள்கள் பாண்டிச்சேரியிலேயே தலைமறைவாக இருந்த பாரதியார், திரும்பி வந்ததும் பேராசிரியர் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.[33]

7.12 இவ்வகைத் தொடர்பே, பாரதிபால் பெருவிருப்புக்கொள்ள முதற் காரணம் என்றுகூடக் கொள்ளலாம். சுருங்கக் கூறின், பொதுவாக அரசியல், சமுதாய, இலக்கிய உணர்வுகளே இவர் பாரதிபால் பெருமதிப்பு வைக்கக் காரணமாயிற்று எனல் சாலும். பாரதியாரின் வழிவந்தவர்களுள் ஒருவரான பாரதிதாசனை இவர் வெளிப்படையாக எங்கும் சுட்டவில்லை ; என்றாலும் உள்ள உணர்வு இவரது கொள்கையுணர்வை வென்று, மறைமுகமாகவேனும் சுட்டச் செய்தது எனலாம்.

காலமும் கருத்தும்

8.0 "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே "[34]

எனத் தொல்காப்பியரும்,

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல ; கால வகையி னானே "[35]

என நன்னூலாரும் இலக்கணத்திற்குக் கூறும் இவ்வகைப் பண்பு, இலக்கணத்திற்கு மட்டுமே உரியதன்று ; தனி மனிதனுக்கும் உரியது ; சமுதாயம் முழுமைக்குமே உரியதும் எனலாம். அவ்வாறாயின், தனி மனிதனிடத்தோ, சமுதாய வாழ்விலோ கருத்துகள் காலத்திற்குக் காலம் வேறுபடல் இயல்பே ; இது கடியத்தக்கதும் குற்றம் உடையதுமான செயலன்று ; உண்மை வளர்ச்சியே என்பதும் போதரும். இத்தகைய வளர்ச்சியின் போக்கைப் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களிடமும் காணமுடிகின்றது என்பதற்குக் கீழ்வரும் சான்றைக் கூறலாம்.

8.1 மொழியியல் அறிஞர் தெ. பொ. மீ. அவர்கள் தம் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாறு' என்னும் கட்டுரையில்,

> "மற்றைய பாவாணர்களோ மேடைப் பேச்சில் உணர்ச்சி ததும்பப் பேசுவது போல மன எரிவையே பாட்டாகப் பாடிக் கொட்டுவர்.................குறிப்பிட்டதோர் இயக்கத்தின் வெளியீடுகளாகவே இப்பாடல்கள் அமைந்து விடுவதால் பாரதியின் பாட்டுப்போல் சிறக்கக் காணோம் "[36]

எனக் கூறுவது நோக்கற்பாலது. 'இயக்கம்' என்பது 'ஒத்துழையாமை இயக்கம்,' 'தொழிலாளர் இயக்கம்' எனப் பொதுவாகக் குறிப்

பினும், இருபதாம் நூற்றுண்டின் ஐம்பதுகளில் (இக்கட்டுரை எழுதப் பட்ட காலம்) சிறப்பாகத் திராவிட இயக்கத்தையே குறித்துள்ளது என்பது யாவரும் அறியத்தக்க உண்மை. மேலும், பாரதியாரைப் புகழ்கின்ற இடங்களும், சீர்திருத்தக்காரர்களைப் பற்றிய கருத்து களும்,[37] பின்னர்த் தாம் எழுதிய நூலில் (1965-ல்) பாரதிதாசனைக் குறிப்பிடும்போது 'Social Reformer'[38] எனக் குறிப்பிடுவதும், இவர் 'இயக்கம்' என்னும் பெயரால் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தையே—திரா விட இயக்கத்தையே குறித்துள்ளார் எனக்கொள்ள இடமுண்டு.

8.2 பேராசிரியர் அவர்களின் 'குறிப்பிட்ட இயக்க'த்தைச் சேர்ந்த கவிஞர்களுள் சிகரமாக விளங்குபவர் பாவேந்தர்—சீர்திருத்தக் கவிச் செம்மல் பாரதிதாசன் அவர்களாவர். அப் பாவேந்தரைத் தம் கட் டுரையில், பல்கலைச்செல்வர் மறைமுகமாகச் சுட்டுகின்றுரே அன்றிப் பாரதியாரைப் போல—கவிமணியைப் போல—வெளிப்படையாகச் சுட்டவில்லை.

> "அவர்கள் வழி வந்தவர்களே இவர்கள் என்ற உணர்ச்சி தோன்ற இவர்கள் பாடுகிருர்கள்"[39]

எனச் சுட்டுவதும்,

> "இருந்தாலும் இத்தகையோரிடத்தில் இயற்கையைக் காணும் காட்சியின் ஆழம், உள்ளத்துணர்ச்சியை நாடக முறையில் வெளிப்படுத்தும் நயம்......இவையெல்லாம் பொங்கிவரவே காண்கின்ரேம்"[40]

எனச் சுட்டுவதும் மேற்படிக் கருத்திற்குச் சான்றுகின்றது எனலாம்.

8.3 ஆனல், இருபதாம் நூற்றுண்டின் அறுபதுகளில் பெருந்தகை தெ. பொ. மீ. அவர்கள் இப்போக்கை மாற்றிக் கொள்வதையும் காணலாம். தாம் எழுதிய 'A History of Tamil Literature' என்னும் நூலில் பாவேந்தரை வெளிப்படையாகக் குறிப்பிட்டு,

> "He immersed in ancient Tamil literature and brings back that rich tradition to enrich the new poetry, the new rhythm of democracy. He is a master in weaving words into charming and enchanting verses.........."

> "Paratitasan's poems on Nature are brilliant flashes of a poetic mind"[41]

எனப் பாராட்டுகின்றுர். இதன்மூலம் பேராசிரியர் தெ. பொ. மீ அவர் கள் ஓர் உண்மையான திறனாய்வாளர் எனத் தம்மை நிலைநாட்டிக் கொள்கின்றுர் எனலாம்.

முடிப்பு

9.0 எத்துணை யளவிற்கு நடுநிலை பிறழாது திறனாய்வு செய்ய நினைப்பினும் எந்த ஒரு கலையிலும் படைப்பாளனின் உள்ள உணர்வும் இணைந்தே காணப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றே. அவ்வகையில் சமய விற்பன்னர் தெ. பொ. மீ. அவர்களின் கட்டுரைகளை நோக்கின் அதில் அவரது உள்ள உணர்வுகள் இடையிடுகின்றது என்பது போதரும். அஃதாவது சமய, அரசியல் உணர்வுகள் இடையிடையே கட்டுரைகளில் பின்னிக் கிடப்பதைக் கட்டுரைகளின் பல இடங்களில் காணலாம்.

9.1 இதுகாறும் கண்டவற்றால், பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் இலக்கியத்துள் ஆழ்ந்த புலமையும், பல்கலைத் தெளிவும், உலகியலில் ஆழ்ந்த நோக்கும்கொண்டவர் என்பது ஓரளவு தெளிவு. அதன் விளைவே அவர்தம் படைப்புகளில் எளிமையும் தெளிவும் பல இடங்களில் மிளிர்கின்ற நடையின் சிறப்பைக் காண முடிகின்றது. என்றாலும், சிற்சில இடங்களில் கையாளப்பட்டுள்ள நீண்ட தொடர் அமைப்புகள், வடமொழிக் கலப்பு இவை நடையின் தொய்விற்கு வழி வகுக்கின்றன என்பதும் போதரும். அரசியல், சமயச் சூழல்களுக் கிடையேயும் அவர்தம் திறனும் தன்மையில் ஒரு வளர்ச்சியின் போக்கையும் காண முடிகின்றது. சுருங்கக் கூறின், **தமிழிலக்கிய உலகில் தனக்கென நிலையான உயர்ந்த ஓர் இடத்தைப் பெற்று விட்டவர் பேராசிரியர், டாக்டர் தெ. பொ. மீ.** என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனலாம்.


பின்னிணைப்பு 1

கலைக்களஞ்சியத்தில் தெ. பொ. மீ. யின் இலக்கிய இலக்கண, சமயக் கட்டுரைகள்

கட்டுரையின் சார்பு	கட்டுரையின் பெயர்	தொகுதி எண்	பக்கஎண்
இலக்கியச் சார்புடையவை	இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு	5	489 - 497
	காப்பியம்	3	505 - 507
	சூளாமணி	5	141 - 143
	தமிழ்ச் சங்கம்	5	506
	தமிழ்ப் புராணங்கள்	7	436 - 441
	திருக்குறள்	5	728 - 733
	திருவள்ளுவர்	6	34 - 36
	பத்துப்பாட்டு	6	703 - 712
இலக்கணச் சார்புடையவை	இலக்கணம்	2	104 - 107
	இலக்கண வரலாறு (தமிழ்)	5	500 - 504
	தமிழ்—மொழி வரலாறு	5	466 - 478
சமயச் சார்புடையவை	குணம்	4	16 - 17
	சாக்கியம்	4	544 - 546
	சித்தர்கள்	4	643 - 645
	தமிழ் நாட்டில் அத்வைதம்	1	79 - 81
	தமிழ்நாட்டில் பௌத்தம்	7	748 - 750

பின்னிணைப்பு 2

நடை சிறக்கும் நலம்



குறிப்புகள்

1. தொல். பொருள். நூற்பா 267.
2. தொல். பொருள். இளம்பூரணருரை, கழக வெளியீடு, பக். 388.
3. தொல். பொருள். பேராசிரியருரை, கழக வெளியீடு, பக். 46.
4. சிலப்பதிகாரம், மணையறம் படுத்தகாதை, அடி 81 ; பதி. 54.
5. சிலப்பதிகாரம், பதிகம் 54, உரை; மணையறம் படுத்த காதை, அடி 81 உரை.
6. டாக்டர் ந. சஞ்சீவி, ஆராய்ச்சிக் கட்டுரைகள், முதல் தொகுதி, பாரி நிலையம், 1970.
7. டாக்டர் ந. சஞ்சீவி, ஆராய்ச்சிக் கட்டுரைகள், முதல் தொகுதி, பாரி நிலையம் பக். 152.
8. தமிழ்ப் பேரகராதி, பல்கலைக் கழகம், தொகுதி 2. பக். 654.
9. திரு. கா. அப்பாதுரை, ‘எழுதுவது எப்படி’ பக், 10.
10. டாக்டர் ந. சஞ்சீவி, ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 150.
11. டாக்டர் ந. சஞ்சீவி, ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 150.
12. கலைக்களஞ்சியம் தொகுதி 5, பக். 348.
13. ,, ,, 5, ,, 496.
14. ,, ,, 5, ,, 730.
15. ,, ,, 5, ,, 730.
16. மேற்கோள் — நாவல் இலக்கியம், மா. இராமலிங்கம், பக். 157.
17. கலைக்களஞ்சியம் தொகுதி 5, பக். 489.
18. ,, ,, 5, ,, 730.
19. ,, ,, 3, ,, 505.
20. ,, ,, 5, ,, 492—493.
21. ,, ,, 2, ,, 104.
22. ,, ,, 6, ,, 35.
23. ,, ,, 5, ,, 506.
24. ,, ,, 3, ,, 506.
25. ,, ,, 4, ,, 142.
26. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் — பக். 150, 160, 198, 595, 596, 669, 676, 747, 952 — 957, 968, 969, 976.

27. கலைக்களஞ்சியம் தொகுதி 5, பக். 489 - 497.
28. ,, ,, 5, ,, 492.
29. ,, ,, 5, ,, 729, 730.
30. ,, ,, 5, ,, 730.
31. தெ. பொ. மீ. மணிவிழா மலர் 1961, கலைக்கதிர் வெளியீடு, பக்கம் 6.
32. தெ, பொ. மீ. மணிவிழா மலர் 1961, கலைக்கதிர் வெளியீடு, பக்கம் 14.
33. தெ. பொ. மீ. மணிவிழா மலர் 1961, கலைக்கதிர் வெளியீடு, பக்கம் 14.
34. தொல். சொல். எச்சவியல் 56.
35. நன்னூல் 462.
36. கலைக்களஞ்சியம், தொகுதி 5, பக்கம் 493.
37. கலைக்களஞ்சியம், தொகுதி 5, பக்கம் 490, 493.
38. Dr. T. P. M. A history of Tamil Literature, Modern period, p. 188.
39. கலைக்களஞ்சியம், தொகுதி 5, பக்கம் 493.
40. கலைக்களஞ்சியம், தொகுதி 5, பக்கம் 493, 494.
41. Dr. T. P. M., A history of Tamil Literature, Modern Period, p. 188 — 189.

மேற்கோள் நூல்கள்

1. ஆராய்ச்சிக் கட்டுரைகள், டாக்டர் ந. சஞ்சீவி, பாரி நிலையம், சென்னை—1; 1970. ரூ. 7.00.
2. எழுதுவது எப்படி, தொகுப்பாசிரியர் 'மகரம்', பழனியப்பா பிரதர்ஸ், சென்னை—14; 1969. ரூ. 6.00.
3. கலைக்களஞ்சியம், சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை—5; 10 தொகுதிகள்.
4. தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை—5; 7 தொகுதிகள்.
5. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் (2 தொகுதிகள்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1; மறுபதிப்பு 1969, ரூ. 18.00.
6. தெ. பொ. மீ. மணிவிழா மலர், கலைக்கதிர் வெளியீடு, 1961.

7. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1 ; 1967, ரூ. 10.00.

8. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1 ; 1969, ரூ. 5.50.

9. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1 ; 1951, ரூ. 9.00.

10. நாவல் இலக்கியம், மா. இராமலிங்கம் (எழில் முதல்வன்), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை ; 1972, ரூ. 4.00.

11. A History of Tamil Literature: Dr. T. P. Meenakshisundaran, Annamalai university ; 1965, Rs. 10.00.

36

கவிமணியின் குழந்தை இலக்கியப் பணி

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி.,
தமிழ்த் துணைப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5.

மனிதன் வாழ்க்கையில் பெறும் பேறுகள் பல. நல்ல மனைவி வாய்ப்பதும், பண்பு சான்ற குழந்தைகள் வாய்ப்பதும் ஒருவனுக்கு வாய்க்கும் பேறுகளுள் சிறப்பானவைகளாகும். பெறும் பேறுகளுள் சிறந்த பேறு நல்ல மக்கள் வாய்ப்பதேயாகும் என்பதனைத் திருவள்ளுவர்,

> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பேறு அல்ல பிற" (குறள். 70)

என்று குறிப்பிட்டுள்ளார். பொருட்செல்வம், செவிச்செல்வம், கல்விச் செல்வம் முதலான செல்வங்களினும் குழந்தைச் செல்வமே சிறப்பு வாய்ந்ததாகும். இதனையே திருவள்ளுவர்,

> "தம்பொருள் என்ப தம்மக்கள்" (குறள். 63)

என்று குறிப்பிட்டுள்ளார். 'செல்வமற்ற ஏழைகளின் செல்வம் குழந்தைகளே' (Children are poor men's riches) என்றும், 'துறக்க உலகத்தின் திறவுகோல் குழந்தைகளே' (Children are the keys of paradise) என்றும் குழந்தைச் செல்வத்தின் மேன்மை குறிக்கப் பெறுகின்றன. நல்ல குழந்தைகளைப் பெற்றவர்கள் இவ்வுலகில் அன்றியும் மறு உலகிலும் புகழினைப் பெறுவர் என்று அகநானூறும்,[1] தவழ்ந்து விளையாடும் குழந்தைச் செல்வத்தினைக் குறைவறப் பெறாதவர்கள் படைப்புப் பல படைத்திருப்பினும், பலரோடு உண்ணும் செல்வ வளம் சிறக்கப் பெற்றிருப்பினும் பயன் இல்லை என்று புறநானூறும்[2] குறிப்பிடுகின்றன.

குழந்தை இலக்கியத்தின் தொன்மை

தொல்காப்பியம் 'பிசி' என்ற இலக்கிய வகையினைக் குறிப்பிடுகின்றது:

> "ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானும்
> தோன்றுவது கிளந்த துணிவி னானும்
> என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே" (தொல். பொருள். 488)

தன்கண் உள்ள ஒப்புமைக் குணத்தோடு பொருந்தி வருவதும், உவமப் பொருள் ஒன்று சொல்ல ஒன்று தோன்றும் துணிவினதாகவும் பிசி இருவகைப்படும் என்று சொல்கிறது தொல்காப்பியம். இக் குறிப்புக் கொண்டு பிசி என்பது விடுகதையினைக் குறித்து நிற்கின்றது என அறியலாம். பிசி, செவிலியர்க்கு உரியது என்று பேராசிரியர் தம் உரையில் குறித்துள்ளார். குழந்தைகளை வளர்க்கும் தாய் சங்க காலத்தில் செவிலி என வழங்கப் பெற்றாள். செவிலியர் குழந்தைகளை நன்கு வளர்த்து, அவர்களை மகிழ்விக்க விடுகதைகளையும் வேடிக்கைக் கதைகளையும் கூறினர். பேராசிரியர் 'பிசி' என்பதற்குத் தந்துள்ள உதாரணங்களில் ஒன்று கீழ்வரும் பாட்டாகும்.

> "நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்
> ஊராடு நீரில்காக் கை"

குளிக்காத பார்ப்பனன் ; அவன் நிறமோ சிவப்பு ; அவன் நீரில் குளித்தெழுந்தால் காக்கையின் கரிய நிறம் கொண்டு விடுவானும் என்ற குறிப்பு இப்பாட்டில் அமைந்துள்ளது. இப்பாட்டு பிசி ; நெருப்பைக் குறிக்கின்றது. மேலும் அகநானூற்றில் மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் பாடிய பாடல் ஒன்றில் வானத்தில் பவனிவரும் கோல நிலவைக் காட்டித் தன் கைக்குழந்தைக்கு உணவு ஊட்டும் தாய் ஒருத்தியைக் காட்டுகின்றார். "நிலவு எறிக்கும் முதிராத இளந் திங்களே! பொன்னாலான ஐம்படைத்தாலியை அணிந்திருக்கும் என் மகனோடு நீ இங்கு விளையாட வந்தால் உனக்கும் பால் தருவேன்" என்று குழந்தைக்கு நிலவை வேடிக்கை காட்டிச் சோறு ஊட்டுகின்றாள்.

> "முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
> பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
> வருகுவை யாயின் தருகுவென் பால் என
> விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றி"[8]

என்பது அப்பாடற்பகுதி. இது பிற்காலத்திலே பல நிலாப்பாடல்களுக்கு வழிவகுத்துக் கொடுத்தது என்று நம்பலாம்.

குழந்தைக் கவிஞர் கவிமணி

'தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம்; அரிய செல்வம்; தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுவதுமே தமிழ்மகன் தன்னுடன் வைத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டிய வாடாத கற்பகப் பூஞ்செண்டு' என்று கவிமணியின் பாடலைப் புகழ்ந்து பேசுகிறார் ரசிகமணி டி. கே. சி.

இக்காலக் கவிஞர் ஒருவர்,

> "பகைவரென ஒருவருமே இல்லாப் பண்பு
> பாலித்த கவிமணியார், நமது பிள்ளை

முகைகளெல்லாம் நலம்பெருகி மலரப் பாட்டு
மொழிந்திருந்தது இக்காலம், நமது காலம்!"

என்று குறிப்பிட்டுள்ளார்.

"தமிழகத்தில் அரும்பெரும் நூல்கள் பல உண்டு; கன்னித்தமிழ் ஆட்சிமொழியாய் மாட்சியுற்றிருந்த காலத்தே எழுந்த இலக்கியங்களில் பல இற்றைச் சிறுவர்க்கு எளிதில் விளங்குவதேயில்லை. ஆத்திசூடியும், கொன்றைவேந்தனும் அன்றையக் குழந்தைகட்கு எளிய இனிய நூல்கள். வேற்று மொழியின் ஆதிக்கத்தால் அத்தகைய தமிழறிவைப் பலர் இழந்து விட்டனர். இந்நிலையில் குழந்தை இலக்கியம் இன்றியமையாததாயிற்று. அக்குறையை நீக்கிக் குழந்தைகள் உளங்குளிர்ந்து பாடுவதற்கு ஏற்ற எளிய கவிதைகள் பலவற்றைத் தந்தவர் கவிமணி'[4] என்று சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னாள் ஆராய்ச்சித் துறைத்தலைவரும் கவிமணியின் நெருங்கிய நண்பருமான பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள், 'கவிமணியின் பாடல்களிற் சில சிறு குழந்தைகளின் சிவப்பூறிய மலர் வாயினின்றும் தேனினும் இனியவாய் மரித்துச் சுரக்கின்றன' என்று கூறியுள்ளார்.[5]

குழந்தை உள்ளம்

கவிமணி அவர்கள் குழந்தைகளிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். தம் வீட்டுச் சுவர்களில் குழந்தைகள் பலவற்றின் படங்களைத் தொங்கவிட்டிருப்பார். அவர் வாழ்வில் அவருக்குக் குழந்தைச் செல்வம் வாய்க்கவில்லை. ஊரில் உள்ள குழந்தைகளையெல்லாம் தம் குழந்தையாக எண்ணினார். குழந்தைகள் நெஞ்சம் உருகி நைந்தால் இவரும் உள்ளம் உருகிக் கரைவார். குழந்தைகள் அழுவதைக் காண மனம் பொறுக்கமாட்டார். எனவே குழந்தைகளின் இன்ப துன்பங்களில் பெரும்பங்கு கொண்டார். 'மலரும் மாலையும்' என்னும் தம் கவிதைத் தொகுதியை,

"செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்
கிந்தநூ லுரியதாய் என்றும் வாழ்கவே"

என்று தம்முடைய கவிதை நூலையே தமிழ்நாட்டுச்சிறுவர் சிறுமியர்களுக்கு உரிமையாக்கினார். தம்முடைய இருபத்தைந்தாம் வயது தொடங்கியே—அதாவது 1901ஆம் ஆண்டு முதல்—தம்முடைய திருமண ஆண்டு முதல் குழந்தைப் பாடல்கள் எழுதத் தொடங்கி விட்டார். 1917-18ஆம் ஆண்டில் "மருமக்கள் வழிமான்மியம்" என்னும் கவிதை 'தமிழன்' என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்தது. இவர் தம் குழந்தைப் பாடல்கள் 1941ஆம் ஆண்டில் 'இளந்தென்றல்' என்ற பெயரில் வெளிவந்தது. 'மலரும் மாலையும்' என்னும் கவிதைத் தொகுதி, மழலை மொழி, இயற்கை இன்பம், காட்சி இன்பம்,

கதைப்பாட்டு, உள்ளமும் உணர்வும் என்னும் ஐந்து தலைப்புகளில் 46 குழந்தைப் பாடல்களைக் கொண்டுள்ளது. இது அன்பர் திரு. மு. அருணாசலம் அவர்கள் முயற்சியால் 1938ஆம் ஆண்டு வெளிவந்தது. இக்குழந்தைப் பாடல்கள் 1954ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 'குழந்தைச் செல்வம்' என்னும் பெயரோடு 58 பாடல்களைக் கொண்டு தனியே வெளியிடப்பட்டது. இக்குழந்தைச் செல்வம் என்னும் நூலுக்கு 1957ஆம் ஆண்டு குழந்தை நூல் வரிசையில் சென்னை அரசாங்க கல்வித் துறையினர் பரிசு அளித்துப் பாராட்டினர். 'குழந்தை இலக்கிய வரலாறு' என்னும் நூலினை எழுதிய நண்பர் குழந்தை எழுத்தாளர் பூவண்ணன் அவர்கள் குழந்தைச் செல்வம் நூலில் உள்ள பாடல்களில் பாதி, பத்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் படிப்பதற்கே ஏற்றவையாகும் என்று திறனாய்ந்து தெளிந்துள்ளார்.[6] 'குழந்தைகள் பயன் பெறுமாறு பாடிய கவி தேவி' (தேசிக விநாயகம் பிள்ளை) என்றும், 'தேவிக்குக் குழந்தை இல்லை, இருந்தால் குழந்தைப் பாசம் அவர்கள் அளவில் நின்றிருத்தலும் கூடும். உள்ளத்தே ஊறிச் சுரக்கும் அன்பை அழுதும் அரற்றியும் முரண்டு பிடித்தும் அக் குழந்தைகள் தடைப்படுத்தி இருக்கவும் செய்யலாம். இப்பொழுதோ தமிழகக் குழந்தைகள் அனைத்தும் அவர்கள் குழந்தைகளாகிவிட்டன. அவைகளின் மீது அன்பையும் அருளையும் அள்ளிச் சொரிகின்றார்கள்',[7] என்றும் திரு. செ. சதாசிவம் அவர்கள் கவிமணியின் குழந்தை உள்ளத்தை எடுத்து மொழிகின்றார்.

இனி, கவிமணியின் குழந்தைப் பாடல்களை வகைப்படுத்திக் காண்போமாக.

தாலாட்டு

தாலாட்டு என்ற இலக்கியவகை மிகப் பழமையானது. 'நாக்குத்தான் குழந்தைக்கு மிகவும் பிடித்த விளையாட்டுக் கருவி' என்று மொழி நூல் வல்லுநர் ஆட்டோயெஸ்பர்சன்[8] கூறுகிறார். இந்த நாக்கு நல்ல சொற்களைச் சொல்ல முயலும் நாள்களைச் 'செங்கீரைப் பருவம்' என்று செப்பினர். கிலுகிலுப்பை ஒலியினைக் கேட்டு மகிழ்ந்த குழந்தையைப் பற்றிய குறிப்பு சிறுபாணாற்றுப்படையில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.[9] தொட்டிலில் படுத்துக் கிடக்கும் குழந்தை தன்னைப் பார்த்துத் தொட்டிலை ஆட்டிக்கொண்டு தாலாட்டுப் பாடும் தாயின் வாய் அசைவினை நோக்கித் தானும் வாய் அசைத்துப் பொருளற்ற மழலைச் சொற்களை உதிர்க்கத் தொடங்குகின்றது. பெரியவர்களைக் காட்டிலும் குழந்தைகள் அகண்ட செவிகளும் நீண்ட நாக்குகளும் கொண்டனவாய்த் துலங்குகின்றன. எனவே தாலப் பருவம் என்பது பிள்ளைப் பருவங்களில் வரும் பத்துப் பருவங்களுள் ஒன்றாகும். 'தாலே தாலேலோ,' 'ஆராரோ ஆராரோ, ஆரிவரோ ஆராரோ' என்னும் சொற்கள் குழந்தையின் நெஞ்சில் கிளர்ச்சியை ஊட்டுவனவாகும். கவிமணி பாடிய குழந்தைத் தாலாட்டுப் பாடல்களில் சில பொறுக்கு-மணிகளை இங்கே காண்போம்.

முல்லை நறுமலரோ?
முருகவிழ்க்குந் தாமரையோ?
மல்லிகைப் பூவோ?
மருக்கொழுந்தோ சண்பகமோ?

* * *

நெஞ்சிற் கவலையெலாம்
நீங்கத் திருமுகத்தில்
புஞ்சிரிப்பைக் காட்டி, எம்மைப்
போற்றும் இளமதியோ?

* * *

கண்ணுறங்கு, கண்ணுறங்கு,
கண்மணியே! கண்ணுறங்கு;
ஆராரோ? ஆராரோ?
ஆரிவரோ? ஆராரோ?

இந்தப் பாடல்களில் அமைந்துள்ள கற்பனையும் பாட்டோட்டமும் பாராட்டத் தகுவனவாகும்.

குழந்தையாக இருக்கும்பொழுதே நல்ல பழக்கவழக்கங்களைப் புகட்டி விடுதல் நல்லது என்ற நிலையைத்தான் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற ஒரு முதுமொழி குறிப்பிடுகின்றது. இந்த முறையில் ஒருவருக்கு அறவுரை கூறவேண்டுமானால் அவர் மனம் மகிழ முன்னிலைப்படுத்தி அதன்பின்னரே கூறவந்த அறவுரையை அவர் மனம் கொளும்படி குறிப்பின் வெளிப்படக் குறிப்பிட வேண்டும். இவ்வாறான போக்கினைப் புறநானூற்றுப் பாடல்களில் காணலாம். அரசர்களுக்கு அமரின் இடையே அஞ்சாது அறவுரை கூறத் துணிந்த புலவர் பெருமக்கள் முதற்கண் அரசனையும் அவன் பிறந்த மரபினையும் வாழ்த்தி, பின்னரே தாம் கூறவந்த கருத்தை எடுத்து மொழிவது வழக்கம். அம் முறையில் குழந்தையினை வைகறையில் துயில்விட்டு எழுப்ப நினைக்கும் கவிமணி அவர்கள், குழந்தையின் மனப்பாங்கினை உணர்ந்து தம் பாடலைப் புனைந்துள்ளார்.

அப்பா! எழுந்திரையா!
அரசே! எழுந்திரையா!
கொக் கொக்கோ என்று
கோழி அதோ கூவுது பார்!

கா கா கா என்று
காகம் பறக்குது பார்!
கிழக்கு வெளுக்குது பார்!
கிரணம் பரவுது பார்!

இந்தப் பாடல்களில் குழந்தைக்கு வேடிக்கை காட்டிக் காலையில் கண் மலரச் செய்யும் பக்குவத்தைக் காண்கின்றோம். மேலும் அவர்

குழந்தை மகிழ்வோடும் வியப்போடும் காணும் கறவைப் பசுவினையும் கன்றுக் குட்டியினையும் காட்டி, பின்னர், பால் குடிக்க, பழம் தின்ன வேண்டும் என்று மகிழ்ச்சியூட்டி ஊடேயே பாடங்கள் படிக்க வேண்டிய அவசியத்தினையும் உரிய நேரத்தில் பள்ளிக்குச் செல்ல வேண்டிய பக்குவத்தினையும் நயம்பட உரைக்கின்றார்.

கறவைப் பசுவை அதன்
கன்றுசுற்றித் துள்ளுது பார்!
பால் குடிக்க வேண்டாமோ?
பழம் தின்ன வேண்டாமோ?

பாடங்கள் எல்லாம்
படித்திட வேண்டாமோ?
சீக்கிரம் பள்ளிக்குச்
சென்றிட வேண்டாமோ?

காலையும் ஆச்சுதையா!
கண்விழித்துப் பாரையா!
அப்பா! எழுந்திரையா!
அரசே எழுந்திரையா!

அடுத்து, காலைப்பாட்டு என்ற தலைப்பில் அமைந்த பாடலிலும் இதே விரகினைக் கையாளுவதைக் காணலாம்.

பொழுது விடிந்தது; பொற்கோழி கூவிற்று;
பூஞ்செடி பொலிவதைப் பாராய்!
பொன்னே! நீஎழுந் தோடி வாராய்!

காகம் கரைந்தது; காலையும் ஆயிற்று;
கனியுதிர் காவினைப் பாராய்!
கண்ணே! நீ எழுந் தோடி வாராய்!

குழந்தைத் தோழர்கள்

குழந்தைகளுக்குக் காக்கையும் கோழியும், நாயும் கிளியும், பசுவும் கன்றும் இனிய தோழர்கள் ஆவர். எனவே கவிமணியின் பாட்டு இத்துறைகளில் அமைந்திருப்பதில் வியப்பில்லை. எளிய பாடல்களில் கற்பனை நயத்தினைக் குழைத்துக் குழந்தையின் உள்ளத்தில் அறிவு வேட்கையினைக் கவிமணி அவர்கள் உண்டாக்குகின்றார். சேவற் கோழியைப்பற்றிப் பாடும்போது,

குத்திச் சண்டை செய்யவோ?
குப்பை கிண்டி மேயவோ?
கத்தி போல்உன் கால்விரல்
கடவுள் தந்து விட்டனர்!

காலை கூவி எங்களைக்
  கட்டில் விட்டெ ழுப்புவாய் ;
வேலை செய்ய ஏவுவாய் ;
  வெற்றி கொண்ட கோழியே !

என்று பாடியுள்ள திறம் மகிழ்தற்குரியது. பெட்டைக்கோழியைப் பற்றிப் பாடும் பாடலில் கவிஞரின் கழிவிரக்கப் பண்பு புலனாகக் காணலாம். 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பது தமிழ்ப் பழமொழி. இம்முறையில் பெட்டைக்கோழியை அடைக்கும்பொழுது கூரையை விட்டு இறங்கிவரச் சொல்லி, பிள்ளைகளையும் கூட்டிவரச் சொல்லிக் கொத்திக் கொத்தித் தின்னக் குட்டை நெல்லைக் காட்டும் இரக்கம் மனம்கொளத் தக்கதாகும். சின்ன குழந்தைகள் நெஞ்சத்தில் எளிய உயிர்களுக்கும் இரங்கும் அரிய கருணை உள்ளத்தினை இப்பாடல் களில் புகட்டி நிற்கக் காண்கின்றோம்.

கோழீ! கோழீ! வா வா ;
  கூரை விட்டு இறங்கி வா ;
....
பெட்டைக்கோழீ ! வா வா !
  பிள்ளைகளைக் கூட்டி வா ;
குட்டை நெல்லைக் கொட்டினேன் ;
  கொத்திக் கொத்தித் தின்ன வா !

மேலும், இப்பாடலின் இறுதி அடிகள் வானத்தில் வட்டமிடும் பருந்துக்குப் பெட்டைக்கோழியின் இளைய குஞ்சுகள் எங்கே வஞ்சனை யால் இரையாகிப் போய்விடுமோ என்று தவிக்கும் இரக்க உள்ளத்தைக் காணலாம் :

வஞ்சமாய்ப் பருந்ததோ
  வானில் வட்டம் போடுது ;
குஞ்சணைத்துக் காப்பாயோ ?
  கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ ?

கவிமணிக்குக் 'கிளியிடம் மிகுந்த பற்று. அது பற்றி எவ்வளவோ பாடியிருக்கின்றார். அவ்வளவும் உணர்ந்து பாடியவை ; உண்மை நிறைந்தவை'. இவ்வாறு கூறுகிறார் புலவர் செ. சதாசிவம் அவர்கள்.[10] 'கிளியை அழைத்தல்' என்ற தலைப்புடைய பாடல்,

பச்சைக்கிளியே ! வா ! வா !
  பாலும் சோறும் உண்ண வா ;
கொச்சி மஞ்சள் பூச வா ;
  கொஞ்சிவிளையாட வா !

என்று தொடங்குகிறது. இந்தப் பாடலில் அமைந்துள்ள சில பகுதிகள் தடைபடாப் பாட்டோட்டம் கொண்டு உயரிய பொருளை உள்ளடக்கி நிற்கின்றன.

வட்டமாய் உன் கழுத்திலே
வான வில்லை ஆரமாய்,
இட்ட மன்னர் யாரம்மா?
யான் அறியக் கூறம்மா!

பவழக் காரத் தெருவிலே
பவழங் காண வில்லையாம்
எவர் எடுத்துச் சென்றனர்?
எனக் கறிந்து சொல்வையோ!

இந்த இரண்டு பாடல்களிலும் கவிமணியின் சந்தநய இன்பத்தினை அறிந்து மகிழலாம். கூண்டுக் கிளியைப் பார்த்து சிறுவன் ஒருவன் தான் பாலைக் கொண்டு தந்தும், பழம் தின்னத் தந்தும் சோலைக்கு ஓடிப்போக ஏன் வழி பார்க்கிறாய் என்றும், கூட்டில் வாழும் வாழ்வினில் குறைகள் உண்டோ என்றும் கேட்கிறான். அதற்குக் கிளி மறுமொழி யாகக் கூறும் பகுதி குழந்தையின் சிந்தனைச் செல்வத்தினையும் உயரிய கொள்கைப் பிடிப்பினையும் வளர்ப்பதாகும். அப்பகுதி வருமாறு:

சிறையில் வாழும் வாழ்வுக்குச்
சிறகும் படைத்து விடுவாளோ?
இறைவன் அறியாப் பாலகனோ?
எண்ணி வினைகள் செய்யானோ?

பாலும் எனக்குத் தேவையில்லை;
பழமும் எனக்குத் தேவையில்லை;
சோலை எங்கும் கூவி நிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா!

இது போன்றே பசுவைப் பார்த்துப் பாடும் பாலகன்,

பச்சைப்புல்லைத் தின்று, வெள்ளைப்
பால்தர, நீஎன்ன
பக்குவஞ் செய்வாய்? அதனைப்
பகருவையோ? பசுவே!

என்று கேள்வி தொடுக்கின்றான். அடுத்துப் 'பசுவும் கன்றும்' என்ற பாடல் குழந்தை இலக்கியத்தில் சாகா வரம் பெற்ற பாடலாகும். சொற்களின் எளிமையும் இனிமையும் இப்பாட்டில் ஒன்றையொன்று போட்டியிட்டு நிற்கின்றன. பாடல் வருமாறு:

தோட்டத்தில் மேயுது,
வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது,
கன்றுக் குட்டி

அம்மா என்குது,
வெள்ளைப்பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி.

நாவால் நக்குது,
வெள்ளைப்பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது,
கன்றுக் குட்டி.

முத்தம் கொடுக்குது,
வெள்ளைப்பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி.

விளையாட்டிலும் ஓர் எல்லை வேண்டும் என்பதனை,

கட்டும் பாண்டி யாடலாம்,
களைத்து விட்டால் நிறுத்தலாம்;
எய்யாப் பாண்டி யாடலாம்;
எய்த்து விட்டால் நிறுத்தலாம்;

என்ற பாடலில் புலப்படுத்தியுள்ளார்.

வில்லியம் பிளேக் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பாடலைக் குழந்தைகளுக்காகத் தமிழில் மொழி பெயர்த்த பொழுது,

கூட்டில் அடைத்திடினும்—இரையினைக்
கொண்டு கொடுத்திடினும்,
காட்டில் வளர்ந்த குணம்—புலிகளும்
காட்டா திருக்கு மோடி?

மானைப் படைத்த தெய்வம்—புலியையும்
வளர்த்து விடலா மோடி?
தேனைப் பழித்த சொல்லாய்!—எனக்குநீ
தெரிந்துரை செய்வா யோடி?

என்ற பாடல்களில் எண்ணத்தை வளர்க்கும் இனிய வினாக்களை எழுப்பியுள்ளார்.

வெண்ணிலாப் பாட்டு

'நிலா நிலா வா வா' என்று குழந்தைகள் பாடி மகிழ்வது இயற்கை. இம்முறையில் சந்திரன் என்ற தலைப்பில் கவிமணி பாடி

யுள்ள பாடலில் பல சிறப்புகளைக் காணலாம். இந்தப் பாடலில் காட்சி இன்பமும் கருத்து இன்பமும் காந்தியக் கருத்தும் அழகுறப் பொருந்தி உள்ளதனைக் காணலாம்.

காட்சி வருணனை

மீனினம் ஓடிப் பரக்குதம்மா !—ஊடே
 வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா !
வானும் கடலாக மாறுதம்மா! —இந்த
 மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா !

முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ—தேவர்
 முத்து விதானம் அமைத்தனரோ ?
வெல்லு மதியின் திருமணமோ ?—அவன்
 விண்ணில் விழாவரும் வேளையிதோ ?

என்ற பாடல்களில் காட்சியின்பமும்,

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா !—அயல்
 ஆம்பலும் கண்டு களிக்குதம்மா !
இம்பருலகின் இயல்பிதம்மா !—மதிக்கு
 இன்னார் இனியாரும் உண்டோ அம்மா ?

மாற்றம் உலகின் இயற்கையென—இங்கு
 மாந்தரும் கண்டு தெளிந்திடவோ,
போற்றும் இறைவன் இம் மாமதியம்—விண்ணில்
 பூத்து நிலவ விதித்தனனே !

என்ற பாடல்களில் சிறந்த கருத்தும்,

கூனக் கிழவி நிலவினிலே—ராட்டில்
 கொட்டை நூற்கும்பணி செய்வதைஇம்
மாநிலம் கண்டு மகிழ்ந்திடவே—காந்தி
 மாமதி யோங்கி வளருதம்மா !

என்ற பாடலில் காந்தியமும் அமைந்து துலங்குவதைக் காணலாம்.

காட்சி இன்பம்

ஓர் ஏழைப்பெண் தன் தாயிடம் கடிகாரம் வாங்கித்தரும்படி கேட்கிறாள். அதற்கு அந்த ஏழைத் தாய், "மகளே ! நேரத்தை அறிவதற்கு இயற்கையிலேயே பல வழிகள் இருக்க நமக்குக் கடிகாரமும் வேறு வேண்டுமா ?" என விடையிறுக்கிறாள். சேவற் கோழியும் காகமும், செங்கதிரும் செந்தாமரையும், தன் நிழலும் நேரத்தைச் சரியாக உணர்த்துமே என்று அந்தத் தாய் இயற்கையின் இனிய பெற்றியை எடுத்து இயம்புகின்றாள்.

சுற்றுப் பொருளெல்லாம் உற்றுநோக்கி—அவை
சுட்டும் மணிநேரம் கண்டறிவாய்!
பெற்ற முத்தே! இந்த உண்மை அறிவோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி?

என்று இறுதியாகக் கூறி மனித வாழ்விற்கு இயற்கை பின்னணியாகப் பொலிவதனை எடுத்து மொழிகின்றார்.

அடுத்து அவருடைய 'ஸைக்கிள்' பாட்டு குழந்தைகளுக்கு நன்கு அறிமுகமான பாட்டு.

தங்கையே பார்! தங்கையே பார்!
ஸைக்கிள் வண்டி இதுவே பார்!

என்று தொடங்கி,

ஒன்றன் பின்ஒன்ருக
உருளும்பை தாக்களைப் பார்!
அக்காளும் தங்கையும் போல்
அவைபோகும் அழகைப் பார்!

என்று குழந்தைகளுக்குப் பாட்டிலேயே ஒற்றுமை உணர்ச்சியினை ஊட்டுகின்றார்.

கதைப்பாட்டில் கருத்து

'ஊக்கம் உள்ள காகம்,' 'நெற்பானையும் எலியும்,' 'அப்பம் திருடின எலி' முதலிய கதைப் பாடல்கள் குழந்தைகளுக்குக் கதையின் வாயிலாக அரிய கருத்துக்களை உணர்த்தி நிற்கின்றன. தண்ணீர்த் தாகத்தால் அலைந்து திரிந்த காக்கை மண்ணுற் செய்த ஒரு சாடியின் அடியில் சிறிது தண்ணீரைக் கண்டு, அந்தச் சாடியினுள் சிறுசிறு கற்களைப் பொறுக்கி வந்து இட்டு, தண்ணீர் மேலே வர, நீரைக் குடித்துத் தன் தாகத்தைத் தீர்த்துக் கொண்டது என்று கதை சொல்லி, கதையின் இறுதியில்,

ஊக்க முடையவர்க்குத்—துன்பம்
உலகில் இல்லை, அம்மா!
ஆக்கம் பெருகும், அம்மா!—இதை நீ
அறிய வேண்டும், அம்மா!

என்று கூறி ஊக்கம், உண்மை வாழ்வுக்கு ஆக்கம் என்பதனை உணர்த்தியுள்ளார்.

'நெற்பானையும் எலியும்' என்ற கதைப் பாட்டு ஓசை நயத்தோடு மலைவீழ் அருவி போன்று சொற்கள் குதித்து வருவதையும் காணலாம்.

பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா!

பாட்டி வீட்டில் ஒரு பழைய பானையில் நெல் இருந்தது. பானையின் ஒருபுறம் ஓட்டை; அந்த ஓட்டையின் வழியே உள்ளே சென்று சுண்டெலி ஒன்று நெல் தின்றது. அளவுக்கு மீறித் தின்றதால் வயிறு புடைத்தது. எனவே உள்ளே சென்ற எலி ஓட்டை வழியே வெளியே திரும்பி வர முடியாமற் போயிற்று. மறுநாள் பாட்டி பானையின் மூடியைத் திறந்தாள். எலி வெளியே வந்தது. ஆனால் பாவம், அந்த வேளை பார்த்துப் பூனை ஒன்று அங்கே வந்து விட்டது. பூனை எலியைத் தின்று விட்டது. இந்தக் கதையைக் கூறி இறுதியில்,

கள்ள வழியினிற் செல்பவரை—எமன்
காலடி பற்றித் தொடர்வானடா!
உள்ள படியே நடப்பவர்க்குத்—தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா!

என்று கள்ள வழியில் சென்றால் காலன் விடமாட்டான்; கள்ள வழியில் சென்றால், பூனைக்கு இரையான சுண்டெலியின் கதியே நம் கதியும் என்று குழந்தைகள் கூறிக்கொள்ளும். இவ்வாறு கதையும் கருத்தும் இணைந்துள்ள இத்தகைய கதைப் பாடல்கள் குழந்தைகளின் மன வளர்ச்சிக்குத் துணை நின்று, பண்பு நிலைக்குப் படிப்படியாகக்கொண்டு செல்லும்.

அப்பம் திருடின எலி, திருட்டில் பெற்ற அப்பத்தைத் தான் மட்டுமே தின்று இறப்பது உறுதியாயிற்று என்று கூறி, அளவு கடந்தால் ஆரமுதும் நஞ்சு என்ற கருத்தையும், கிட்டிய பொருளை எட்டிய மட்டும் எல்லார்க்கும் கொடுத்து உண்ணவேண்டும் என்ற கருத்தினையும் கவிமணி புலப்படுத்தியுள்ளார்.

'ஔவையும் இடைச்சிறுவனும்' என்ற பாடல் ஆழக் கற்றாலும் அடக்கம் மிகத் தேவை என்பதனையும், 'புத்தரும் ஏழைச் சிறுவனும்' என்ற பாடல் பிறருக்கு நன்மை செய்பவர் மேற்குலத்தார் என்றும், தீமை செய்பவர் தீண்ட ஒண்ணாதார் என்றும் குறிப்பிடுகின்றன.

பெரியோரைப் போற்றுதல்

குழந்தைகளுக்குப் பெரியோர்பால் பேரன்பும் மதிப்பும் பெருக வேண்டும் என்பதனைச் சில பாடல்களில் கவிமணி வற்புறுத்துகின்றார். ஔவைக் கிழவியின் அருமையினை,

கூழுக் காகக் கவிபாடும்
கூனக் கிழவி; அவளுரையை

வாழும் வாழ்வில் ஒருநாளும்
மறவோம் மறவோம் மறவோமே!

என்றும், திருவள்ளுவரை,

சாதி ஒன்றேயாம்—தமிழர்
சமயம் ஒன்றேயாம்
நீதி ஒன்றேயாம்—என்று
நிலைநிறுத்தி நின்றோன்

என்றும், கம்பனை,

ஆரியம் நன்குணர்ந்தோன்—தமிழின்
ஆழம் அளந்துகண்டோன்;
மாரி மழைபோலக்—கவியின்
மழைபொ ழிந்திடுவோன்

என்றும், அமரகவி பாரதியினை,

ஊரறிய நாடறிய உண்மை யெல்லாம்
ஒருவரையும் அஞ்சாமல் எடுத்து ரைத்தோன்,
ஆரமுதம் அனையகவி பாடித் தந்தோன்,
அமரகவி யென்றெவரும் புகழப் பெற்றோன்

என்றும் பாராட்டியுள்ளார்.

வாழ்க்கை நீதிகள்

வளரும் இளம்செடிக்கு உரம் ஊட்டிக் களை களைந்து நீர் பாய்ச்சி காவல் செய்தால் கதிரவன் ஒளியின் துணையுடன் அப்பயிர் நன்கு செழித்து வளரும். இம்முறையில் இளம் நெஞ்சில் உயரிய கருத்துகளை எளிய சொற்களால் புகுத்தி, அரிய வாழ்க்கைத் தத்துவங்களை வெளிப்படுத்தியுள்ளார். 'வாழ்க்கைத் தத்துவங்கள்' என்ற தலைப்பமைந்த கவிதையில், 'நாமே நமக்குத் துணையானால், நாடும் பொருளும் நற்புகழும், தாமே நம்மைத் தேடிவரும்' என்றும், நெஞ்சிற் கருணையும் நேயமும் விஞ்சும் பொறுமையும் கொண்டவர்க்கு வெல்லும் படைகள் வேறு வேண்டா என்றும், உள்ளம் பொருந்தி ஊக்கம் பெருக உழைத்தால் தடைகள் பொடியாகிப் பள்ளம் உயர்மேடாகும் என்றும் கூறி இறுதியில்,

கால நதியின் கதியதினில்
கடவுள் ஆணை காண்பீரேல்
ஞால மீது சுகமெல்லாம்
நாளும் அடைந்து வாழ்வீரே!

என்றும் தெய்வ நம்பிக்கையை, கடவுள் ஆணையை வற்புறுத்துகின்றார்.

'தைப்பொங்கல்' என்ற கவிதையில் பொங்கல் பொங்கி முடிந்த பிறகு கடவுளுக்கு முதலிலும் காகத்துக்கு அடுத்தும், பின்னர் உடன் இருந்தோர்க்கும் வழங்கி ஒக்க உண்டு மகிழும் பாங்கினையும் எடுத்து மொழிகின்றார்.

கவிமணி காட்டும் உவமை நலமும் நகைச்சுவைத் திறனும்

கவிமணி கையாளும் உவமைகள் எளியன; இனியன. 'பூமகளின் புன்னகைபோல் பூத்திடுவோம்' என்றும், 'கம்பன் பாமணக்கும் தமிழினைப்போல் பரிமளிப்போம்' என்றும் பாடும் பாடல்களில் உவமையின் எளிமையைக் காணலாம்.

'தீபாவளிப் பண்டிகை' என்ற பாட்டில்,

> இட்டிலி வீரர்தென் னிந்தியராம்—என்பது
> இன்றுநாம் காட்டி விடுவோம், அடா!
> சட்டினி நண்பன் துணையிருக்க—அதில்
> சந்தேகம் உண்டோ? நீசொல்வாய், அடா!

என்ற பாடலில் நகைச்சுவைக் கொப்பளித்து வருவதனைக் காணலாம்.

உழைப்பும் உடல்நலமும்

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்பர் பெரியர். கவிமணியும், 'ஆக்கம் வேண்டுமெனில், நன்மை அடைய வேண்டுமெனில், ஊக்கம் வேண்டுமப்பா, ஓயாது உழைக்க வேண்டுமப்பா' என்று கூறுகிறார்.

கூழைக் குடித்தாலும் குளித்த பிறகு குடிக்க வேண்டுமென்றும், ஏழையே ஆனாலும் இரவில் நன்றாய் உறங்கவேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றார். நூறு ஆண்டுகள் வாழ்வதன் ரகசியத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்:

> தூய காற்றும் நன்னீரும்
> சுண்டப் பசித்த பின் உணவும்
> நோயை ஓட்டி விடும், அப்பா!
> நூறு வயதும் தரும், அப்பா!

அடுத்து,

> காலை மாலை உலாவிநிதம்
> காற்று வாங்கி வருவோரின்
> காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
> காலன் ஓடிப் போவானே!

என்று கூறுகிறார். இங்கு கவிமணியின் சொல்லுமுறை (the technique of expression) நயம்பட அமைந்துள்ளது.

கவிமணி உணர்த்தும் தேசியம்

பாரதியாரின் இக்கவிதை வெறியையோ தேசிய ஆவேசத்தையோ கவிமணியிடம் காண்பதற்கு இல்லை. எனினும், கவிமணியின் கவிதைத் திறன்போல் தேசிய உணர்ச்சியும் நம் பாராட்டுக்கு உரியதே.

கைத்திறன் பாட்டிலே 'நாடிய சீர் நாடடைய' என்று தொடங்கும் பாடலை அனுபவித்த 'குமரன்' வாசகர்களில் சிலர், தேசிக விநாயகம் பிள்ளையைத் தேசிய விநாயகம் பிள்ளை என்றும் வாய் குளிரக் குறிப்பிடலாயினர்.

பாரதியையும் கவிமணியையும் ஒப்பு நோக்கிய ராஜாஜி பின்வருமாறு கூறியுள்ளார். "பாரதி காட்டுப் புளியமரம் போன்றவர்; கரடு முரடு. உயிர் இருக்கும்; புளிப்பு உரம் இருக்கும். கவிமணியின் கவிதையில் நகாசு வேலை மிகுந்திருக்கும். பிறகு அன்பு மிளிரும். அத்தகைய கவி தேசிக விநாயகம் பிள்ளை."[11] இது ஓரளவு உண்மை தான்.

மேற்காட்டிய பகுதிகள் கவிமணியின் தேசியப் பற்றை உணர்த்தும். 'தாயிற் சிறந்ததப்பா பிறந்த தாய்நாடு' என்று தாய்நாட்டுப் பற்றை ஊட்டி, "பேணி நம் சந்தத் தமிழ் வளர்ப்போம்; தாய் நாட்டுக்கே உழைப்போம்" என்று தமிழ்ப் பற்றையும் நாட்டுப் பற்றையும் விளக்கி, காந்தி அடிகளை அன்போடு சிந்தனை செய்வோம் என்று சொல்லி, பாரில் உயர்ந்த இமயமலையையும், அதன் சிகரத்தில் பறக்கும் தேசக் கொடியையும் காட்டி,

> மானம் உருவாக வந்தகொடி—இதை
>   மாசுறச் செய்வது பாவம், பாவம்!
> ஊனில் உயிருள்ள காலமெல்லாம்—மிக
>   ஊக்கமாய் நின்றுநாம் காத்திடுவோம்

என்று நாட்டுப் பற்றுணர்வோடு நவில்கின்றார். 'உத்தமனும், அந்தணனைக், காந்தி அடிகளை அன்போடு சிந்தனை செய் நெஞ்சே தினம்' என்று காந்தியடிகளைப் போற்றுகின்றார். இறுதியில், உலகமெல்லாம் ஒரு குடும்பமாக வாழ வேண்டும் என்பதனை,

> உலக மக்களெலாம்—அன்போடு
>   ஒருதாய் மக்களைப்போல்
> கலக மின்றிவாழும்—காலம்
>   காண வேண்டுமப்பா!

என்ற பாடலில் கவிமணி சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். கவிமணியின் கதர்ப்பற்றும் காந்தியப்பற்றும் நாடு அறிந்தவை.

முடிவுரை

கவிமணி குழந்தைகளின் மனத்தை நன்கு அறிந்தவர். குழந்தைகளின் பேச்சில் மகிழ்பவர். அவர்களோடு உரையாட விரும்புவர்.

"அவர் (கவிமணி) குழந்தைகளின் மனத்தை நன்கு அறிந்தவர்; குழந்தைகளோடு இனிமையாகப் பேசுவதில் ஆசை உடையவர்; குழந்தைகளுடைய பேச்சையும் அவற்றின் இடையிடையே பளிச் சென்று தோன்றும் உவமைகளையும் எண்ணி மகிழ்பவர்." இவ்வாறு திரு. பெ. நா. அப்புசாமி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கவிமணி என்னும் பட்டம் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க அன்பர்களால் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழவேள் உமாமகேசுவரன் பிள்ளை அவர்களால் 1940ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் தரப்பட்டது. கவிமணி என்ற தம் பெயருக்கு ஏற்ப நல்ல கவித்துவத்தோடு மணியான கவிதைகளைத் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்காக வழங்கிய பெருமை தேசிக விநாயகம் பிள்ளையைச் சாரும். பாரதியார் முப்பெரும் பாடல்வழி எப்போதும் தமிழ் மக்களால் நினைவு கூரப்படுவதுபோல, கவிமணி அவர்களும் தாம் இயற்றிய குழந்தைப் பாடல்களால் தமிழ்கூறு நல்லுலகத்தால் என்றென்றும் நினைவுகூரப்பெறுவர் என்பது உறுதி.

அடிக்குறிப்புகள்

1. அகநானூறு, 66 : 1—4.
2. புறநானூறு, 188.
3. அகநானூறு, 54 : 17—20.
4. சுடர், கவிமணி மலர், பக்கம். 35.
5. தமிழ்ச்சுடர் மணிகள் — ப. 423.
6. குழந்தை இலக்கிய வரலாறு, ப. 27
7. செ. சதாசிவம், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ப. 118.
8. It has been well said that for a long time, a child's dearest toy is its tounge—Otto Jesperson : Language its Origin and development.
9. சிறுபாணாற்றுப்படை : 55—61.
10. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ப. 120.
11. பி. ஸ்ரீ. நான் அறிந்த தமிழ் மணிகள், ப. 52.
12. சுடர் ; கவிமணி மலர். 1965, தில்லித் தமிழ்ச் சங்கம்—ப. 49.

37

பேரறிஞர் அண்ணாவின் நாவல்கள்

பேராசிரியர் மா. கி. தசரதன், எம்.எ.,
முதல்வர், சி. கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி,
அண்ணாநகர், சென்னை.

விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கம் இலக்கியத் திருவிழாவாக நடைபெறுவது பொருத்தம் மட்டும் அன்று — பயனும் உடைய ஏற்பாடு ஆகும். விடுதலை விழா என்ற பெயரில் ஆகாத நாலுபேரைத் திட்டித் தீர்த்துவிட்டு மன அமைதி பெற்றதாக நினைத்து ஏமாந்து போகும் விழாக்கள் ஒருபுறம். பயனுள்ள வகையில் பலபேரை வேலை வாங்கும் இத்தகைய நன்முயற்சிகள் ஒருபுறம். இந்த நன்முயற்சியில் ஈடுபட்டுள்ள — இதுபோல் பல நன்முயற்சிகளில் ஈடுபாடு கொண்டுள்ள — இலக்கிய மருத்துவரை, — தமிழ்ச் சஞ்சீவியை — பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் புதிய, ஆனால் புரட்சிகரமான தலைவரை— இந்தத் தலைவரின் விடுதலையான வளர்ச்சியைப் போற்றி வளர்க்கும் பல்கலைக் கழகத்தை — அதனை நடத்திச் செல்லும் தாமரைச் செல்வரை மனமாரப் பாராட்டி நன்றி செலுத்துகிறேன்.

பேரறிஞர் அண்ணாவைத் தமிழகம் நெடுநாள் கழித்துத்தான் எழுத்தாளர் என்று ஏற்றுக்கொண்டது. வெட்கமின்றி — இந்த உண்மையை ஒப்புக்கொள்வதிலே தவறு ஒன்றுமில்லை. ஆனால் பிறர் ஏற்பரோ இகழ்வரோ என்றெல்லாம் எண்ணிடாது ஒளிதந்து உலகு ஊட்டும் பகலவன்போல அவர் எழுதிக்கொண்டே இருந்தார். நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று எண்ணியவரைப்போல் தாம் கற்ற கல்வியை, பெற்ற அறிவை, இந்த மக்களுக்கு அளிக்கும் முயற்சியில் கையிலே வலுவிருந்த வரையில் ஈடுபாடு கொண்டிருந்தார். இணர் ஊழ்த்தது மட்டும் அல்ல; நாறும் மலராகவும் விளங்கினார்.

எனக்குத் தெரியும் இது அண்ணா கருத்தரங்கம் அன்று. ஆனால் முன்னுரை இல்லாமல் நூல் இல்லை ஆனதினால் இந்த முன்னுரை என்னை முந்துகின்றது!

அவர் எழுத்தாளர் மட்டும் அல்லர்; நல்ல பேச்சாளர்; திறமான நடிகர்; அருமையான தலைவர்; ஆற்றல் மிக்க ஆட்சியாளர். இத்தனைக்கும் மேலாக நல்ல மனிதர்.

காலவெள்ளம் கரைபுரண்டு ஓடும். அன்றைக்குப் பேச்சு, நடிப்பு, ஆட்சி, தலைமை எல்லாம் மணல் மேடாகிப் போய்விடலாம். ஆனால் எழுத்து மட்டும் நின்று நிலைக்கும்; பேர் சொல்லும்; உயிரான எழுத்துக்கு மட்டுமே அந்த வலிமையுண்டு. அத்தகைய வலிமை பெற்ற எழுத்து அண்ணாவின் எழுத்து!

அவர் எழுதிக் குவித்தவை, அளவில் பழைய சீவரம் மலையின் மிகுதியாக இருக்கும். என்னென்ன விதமான எழுத்துகள்! பட்டியல் போடக்கூட எனக்குத் திறன் இல்லை.

அத்தனையில் அவர் நாவலாக எழுதியவை — அவர் எழுத்து நாவல் (புதுமை!) தான் — கொஞ்சம்தான். அவருடைய மற்றவகை எழுத்துகளை ஒருபக்கமும் நாவலை மறுபக்கமும் வைத்துப் பார்த்தால் நாவல் பக்கம் கடுகுதான்.

என்ன காரணம் அதற்கு? நாவல் எழுதத் தெரியாததாலா? படித்தோர்க்குக் கூறிட மனம் வராது. பின் என்னதான் காரணம்?

தேவையான ஓய்வு கிடைப்பது அரிது. ஆம் நாவல் எழுதுவதற்கான ஓய்வு அவர்க்கு அடிநாளில் கொஞ்சம் கிடைத்தது. பின்நாளில் அரிதாகிப்போயிற்று.

இரண்டாவது அவருடைய 'வாசகர்கள்' அப்படி. கிழமை இதழ் வாசகர்கள் அவர்க்கு இல்லை. மன்னிக்கவேண்டும். அவர் நினைத்திருந்தால் கிழமை இதழ் எழுத்தாளராக — வெற்றிமிக்க எழுத்தாளராக — ஆகியிருக்கலாம். அவர் வாசகர்களுக்காக எழுதவில்லை. வாசகர்களை உருவாக்குவதற்காக எழுதினார். தனக்குத் தெரியும் என்பதற்காக அவர் எழுதவில்லை; நமக்குத் தெரியவேண்டும் என்பதற்காக எழுதினார். அதனால் தொடர்கதை வாசகர்களுக்கான நாவல்களை அவர் மிகுதியாக எழுதவில்லை.

மூன்றாவதாக அவர் ஒரு எழுத்தாளர் மட்டும் அல்லர்—சமுதாயத் தலைவர் — அரசியல் தலைவர். அதனால், அவருடைய எழுத்தின் நோக்கம் மற்ற எழுத்தாளர்களுடையதைவிட வேறானது. பாமர மக்களுக்குத் தம் நெஞ்சின் அலைகளை — சிந்தனையின் முடிவுகளை எடுத்துக்காட்டும் கடமையும் அவருக்கு இருந்தது. அதனால், அந்தப் பாமர மக்களுக்கு எந்த வடிவம் எளிதிலும், மிகுதியாகவும் பயன் தருமோ அதனையே அவர் கையாளவேண்டி வந்தது.

நாவல், படித்தவர்களுக்கு — ஓய்வுள்ள படித்தவர்களுக்கு மிகுதியாகப் பயன்படும். ஆனால், நாடகம், கட்டுரை, சிறுகதை முதலியன எளிய மக்களுக்கு — அதிகம் படிக்காதவர்களுக்கு ஓடும் வாழ்க்கையில் ஓய்வு மிகுதியாகக் கிடைக்காதவர்களுக்கு ஏற்ற எழுத்துகள் ஆகும்.

அதனுல், அவர் நாவலினும் நாடகம் போன்ற வகையில் மிகுதியாக எழுத நேர்ந்தது.

குமரிக்கோட்டம்

கபோதிபுரக் காதல்

பிடி சாம்பல்

வண்டிக்காரன் மகன்

கலிங்கத்து ராணி

ரங்கோன் ராதா

இவை அவர் எழுதிய நாவல்கள். இவற்றிலும் சில நாடகங்களாக நழுவி விடுகின்றன.

எண்ணிக்கையில் குறைவேயன்றி — அவை வெளியிடும் எண்ணங்களிலோ — அவற்றின் இலக்கியத்தரத்திலோ குறை என்று எண்ணிடலாகாது. ஒவ்வொரு நாவலும் ஒரு கருத்துக் களஞ்சியம்தான்.

அண்ணுவிடம் கொண்ட பக்தியால் அல்ல — வளர்த்துக்கொண்ட பாசத்திஞல் அல்ல — இலக்கிய ஆர்வத்திஞல் — வெறிகொண்ட தமிழ் மாணவன் என்ற தன்னம்பிக்கையிஞல் கூறுகிறேன். அண்ணுவின் நாவல்கள் இலக்கியத் தரம் மிக்க கருத்துக் களஞ்சியங்கள். புதிய உலகுக்கு உருவம் கொடுக்கும் சொற்சித்திரங்கள்.

அவருடைய நாவல்கள் என்ற தலைப்பு, கடல் — நானே நீந்தத் தெரிந்தாலும் முயற்சி குறைந்த மீனவன். அந்தப் பெருங்கடலில் துணிவே துணை என்று இயங்கிடத் துணியேன்; ஆசைபற்றி ஆழம் தெரியாது காலையும் விடேன். ஓரத்தில் நின்று, வீசி எழுந்து வீழ்ந்து படும் அலைகளையும் அவற்றிடையே பட்டுத் தெறிக்கும் கதிர் ஒளியையும் கண்டு மகிழும் சிறு குழந்தையாகவே இருக்க முனைவேன்.

அந்த முயற்சியில் அவருடைய '**ரங்கோன் ராதா**'வை மட்டும் இங்கு அழைத்து வருவேன்

'ரங்கோன் ராதா' பெயர் அழகுக்காக அன்று நான் தேர்ந்தெடுத்தது.

அண்ணுவை ஓரளவுக்கு முழுமையாகக் காண்பதற்கு மற்ற நாவல்களைவிட ரங்கோன் ராதா ஏற்றது என்பது என் எண்ணம். அரசியல் நீங்கிய அண்ணுவை ரங்கோன் ராதா காட்டுகிறது.

பெண் உரிமையில், பெண் விடுதலையில் சமுதாயச் சீர்திருத்தத்தில் அண்ணுவுக்கு இருந்த ஆர்வத்தினை — துடிப்பினை ரங்கோன் ராதா வெளிப்படுத்துகிறது.

"இந்தக் கொடுமை இருக்கிறதே, ஆண், பெண்ணைப் படுத்தும் பாடு, இதனை நீக்குவதற்கு யார் வேலை செய்கிறார்கள்?"

"பெண்களுக்குத் தங்கள் வாழ்வைத் தாங்களே அமைத்துக் கொள்ளக்கூடிய திறமை, வசதி, உரிமை ஏற்படவேண்டும்"

என்ற சொற்களில் அவருடைய இந்த நோக்கம் புலப்படும். இந்த நூல் உருவானதற்கான காரணம் தெளிவாகும்.

சுருக்கமான கதை இது

தர்மலிங்க முதலியார் — தர்மவான் என்று ஊரிலே பேர் — ஆனால் உள்ளத்திலோ பணத்தாசை பிடித்த பேயர். எதையும் செய்திடத் துணிந்திடும் பாதகர். அவர்க்கு ரங்கம் என்றோர் மனைவி — பண்புடையாள் — குடும்பப் பாங்குடையாள் — அவளுக்குத் தங்கம் என்றோர் தங்கை — அக்காபோல் அல்ல அவள் — தளுக்குக்காரி — பேச்சிலே பாதிச் சிரிப்புக்காரி. அவளைத் தர்மலிங்க முதலியார் இரண்டாம் தாரமாக்கிக்கொள்கிறார்.

கொள்ளும் முயற்சியில் ரங்கத்தைப் பேய் வசம் ஒப்படைக்கிறார்.

ரங்கம் வீதியிலே வீழ்ந்துவிடும் ரத்தினமாகிறாள். ரங்கம் நாயுடுவுக்கு வைப்பு ஆகி ராதாவைப் பெற்றெடுக்கிறாள்.

இரண்டாம் உலகப்போர் ரங்கத்தை ராதாவுடன் தாயகம் கொண்டுவருகிறது.

தர்மலிங்க முதலியாரின் மகன் — அப்பாவைப்போல் அல்ல — புது யுகத்துக்காரன். குடும்பத்தைச் சந்திக்கிறான் — ராதா தன் தங்கை என்று அறிகிறான். அறிந்து ஒதுங்கிக்கொள்ளவில்லை. அவளை வாழவைக்கத் துடிக்கிறான்; துணிகிறான்; செயல்படுகிறான். அவன் நண்பன் பரந்தாமன் — துணை நிற்கிறான். ராதா பரந்தாமன் துணைவி ஆகிறாள். அவள்மீது பூசப்படும் கறைகளைக் கண்டு கவலைகொள்ளாத வீரனாகப் பரந்தாமன் இருந்ததால்!

இது கதை: ஆனால் இதை அண்ணா இவ்வளவு சுலபமாக நமக்குச் சொல்லிடவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக — 'அப்புறம்?' எனும் ஆவல் நிறைந்ததாக — வியப்பு நிறைந்ததாகக் கடைசிவரை நடத்திச் செல்கிறார்.

ஆயிற்று — இதோ ராதாவுக்கும் பரந்தாமனுக்கும் திருமணம் தான் என்று நாம் நினைக்கிறோம், கதை முடிவில். அப்போது பார்த்து,

"இவ்வளவையும் 'பாழ்' செய்யக் கிளம்பினான் பர்மா நாயுடு! கலியாணத்துக்கு இரண்டே நாள்கள் உள்ள. நேரத்தில்

நேரே பரந்தாமனைப் பார்த்து, "......... இல்லையானால் இந்தக் கலியாணம் நடைபெறுது; கண்டிப்பாக நடைபெறுது"

என்று கூறுகிறான். நாம் திகைக்கிறோம். உண்மையாகவே திருமணம் நின்றுவிடுமோ என்று அஞ்சுகிறோம். ஆனால் நல்லவேளை திருமணம் நடக்கிறது!

கதையின் தொடக்கமே வியப்பில் பூக்கிறது. 'ராதா என் தங்கை' என்ற வெடிகுண்டு ஒன்றைத் தூக்கிப்போடுகிறான் நாகசுந்தரம் தன் நண்பன் பரந்தாமனிடம். படிப்படியாகத் தான் ரங்கத்திடம் கேட்ட கதையைக் கூறி நண்பனை அழைத்துச் செல்கிறான் தங்கையைக் காட்ட!

ஒவ்வொரு பகுதியும் (அத்தியாயமும்) வியப்பு, நிறைந்ததாகவே அமைகின்றது. சிந்தாமணி என்ற பெயர் கதையில் ஒரு பகுதியில் வருகிறது. ரங்கம், தங்கம் என்று தாரம் இரண்டான பிறகு சிந்தாமணி என்று மூன்றாவதற்கு முன்னேற்பாடு நடைபெறுவதாகவே ரங்கம், தங்கம் இருவர் மட்டும் அல்லர் — நாம்கூட நினைக்கிறோம். ஆனால் சிந்தாமணி பெண்ணல்லள் — (சிந்தாமணிக்) கல் என்பது பின்னால்தான் தெரிகிறது. ரங்கத்தைப்போலவே தர்மலிங்க முதலியாரின் பணத்தாசையை நாமும் கண்டிக்கிறோம்.

'மகன் கடனுக்கு நான் பொறுப்பல்லன்' என்று ஓர் அறிக்கையை எழுதித் தந்தை மகனுக்கு அனுப்ப — மறுமொழியாக மகன், "கோட்டையூர் கொலைகாரன்" என்று நாடக அறிவிப்புக் கொடுக்கிறான் — பாவம் கோட்டையூர் தர்மலிங்கம் நடுங்கிப்போகிறார்!

இப்படிக் கதையில் வியப்பு எனப்படும் ஈர்ப்பு ஆற்றல் முதலிலிருந்து முடிவுவரை தொய்யாமல் துவளாமல் நிறைந்திருக்கக் காண்கிறோம். அதேபோல ஒரு நாவலுக்குத் தேவையான பாத்திரப் படைப்பு நடைநயம், கருத்துச்செறிவு முதலிய இயல்புகளும் இதில் நன்கு அமைந்துள்ளன.

பாத்திரப்படைப்பு

முதலில் பாத்திரப்படைப்பினைக் காண்போம்.

கதையிலே வரும் பாத்திரங்கள், ரங்கம், தங்கம், ராதா, துளசி, பிச்சைக்காரி, தர்மலிங்க முதலியார், நாகசுந்தரம், பரந்தாமன், பர்மாநாயுடு, பேயோட்டி—இப்படிப் பலர் ஆவர்.

ஒவ்வொரு பாத்திரப் படைப்பும் முறையாக--முரண்பாடு அற்று, கொண்ட குணங்களைப் படிப்படியாக வெளிப்படுத்தக் காண்கிறோம்.

இது ஒரு நாவல் ஆசிரியருக்கு வேண்டப்படும் மிக முக்கியமான திறமை ஆகும். ஒரு பாத்திரம் முதலில் வெளிப்படுத்தும் பண்புகளின் முறையான வளர்ச்சியை இறுதிவரை காட்டவேண்டும். மாறுதல் இருக்குமாயின் அதற்கான காரணத்தையும் எழுதியவர் மட்டு அல்லர்—படிப்பவரும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் காட்டியாக வேண்டும். இல்லையேல் அந்தக் கதை கட்டாயம் தோல்வியைத் தழுவிக்கொள்ளும். அப்படியின்றி, வெற்றியைப் பெற்றிருக்கிறார் ஆசிரியர். எல்லாப் பாத்திரங்களின் படைப்பினையும், எல்லாப் பாத்திரங்களையும் எடுத்து விளக்கிட—ஆசைதான்—ஆனால் நேரம் இல்லை. எனவே ஒரு சான்று மட்டும் காண்போம்.

ரங்கம்—கதை ராதாவின் பெயரில்தான் உள்ளது — ஆனால் ரங்கமே படிப்போர் மனத்தில் நிலைக்கிறாள்.

ரங்கம் அடக்கமான — போதுமான அழகுடைய ஒரு குடும்பப் பெண். தன் கணவனிடம் பாசம் கொண்டிருக்கிறாள். அவரும் அப்படியே — ஒரு மணி நேரமாகுமாம் அவர் சாப்பிட்டு முடிக்க — இடையிடையே அவ்வளவு நேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே சாப்பிடுவாராம். ரங்கமே சொல்லி மகிழ்கிறாள்.

அப்படிப்பட்டவளை விட்டுவிட்டு அவர் தங்கத்தைத் தேடத் தலைப் பட்டார். ரங்கத்திற்குப் பேய் பிடித்துவிட்டது என்று நம்பவைக்கிறார் ஊராரை. ரங்கம் கருக் கொள்கிறாள். புதுவாழ்வு கிடைக்கும் என்று நம்புகிறாள். தலைமுழுகவில்லை என்று நளினமாகக் கணவனுக்குக் கடிதமெழுதுகிறாள். 'தலைமுழுகிவிட்டேன்' என்று அவர் தன் முடிவை நாகரிகமின்றி வெளிப்படுத்துகிறார். பெற்ற பிள்ளையையும் அவர் புறக்கணிக்கிறார்.

பூனை புலியாகிறது. ரங்கம் புரட்சிக்காரி ஆகிறாள். கணவர் நய வஞ்சகர் என்றெல்லாம் அர் விகுதி போட்டுக் குறிப்பிடுகிற ரங்கம் கணவனைத் தவிக்க வைப்பதில், துன்புறுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறாள். இப்போது, "ஒரு பெண்ணை அவ்வளவு எளிதாகத் தோற்கடிக்க முடியாது என்பதைக் காட்டவேண்டும்" என்று தீர்மானித்துக் கொள்கிறாள்.

அவள் பண்பிலே ஒரு மாற்றம். அது ஏமாற்றத்தினால் விளைந்தது என்பதனைக் கதைப் போக்கிலே நாம் உணருகிறோம். நியாயம்தான் என்கிறோம். கணவனை அவள், சிறுசிறு வேதனைகளுக்கு உள்ளாக்கும் போது நாம் அவள் மீது வெறுப்புக்கொள்ளவில்லை; 'வேண்டும் இந்த தர்மலிங்க முதலியாருக்கு' என்றுதான் நினைக்கிறோம்.

ஆனால் செயற்கையாக இடையிலே ஏற்பட்ட இந்தக் கொடுஞ் சுபாவம் ரங்கத்திடம் நிலைக்கவில்லை. கணவன் கொலைகாரன் என்ற பழிவிழும் ஆபத்தால் தான் விலகி அவனை வாழவைக்க முயலுகின்றாள்.

அதிலே வெற்றியும் பெறுகிறாள். தன் குழந்தைக்கு ஒரு பாதுகாப்புத் தேடிக்கொண்டு கணவனின் பார்வையிலிருந்து மட்டும் அல்ல—வாழ்விலிருந்தே விலகி நெடுந்தூரம் போய்விடுகிறாள்.

பரிதாபம்! நெடுந்தூரம் மட்டும் அல்ல. வெகு கீழேயும் விழுந்து விடுகிறாள். விபசாரி என்று கணவன் குற்றம் சாட்டியபோது துடி துடித்த, பதைபதைத்த, அழுது கரைந்த ரங்கம் கடைசியில் விபசாரியாகவே ஆகிவிட நேர்கிறது. அவள் மீது நாம் வெறுப்புக்கொள்ள இயலவில்லை.

"பொன்னிற மேனியில் படரும் புண் கருநிறத்தை உண்டாக்கி விடுகிறது அல்லவா? அது போல என் நற்குணத்தை உன் அப்பாவின் கொடுமை கெடுத்து என்னை இக்கதிக்குக் கொண்டுவந்தது" என்று தங்கம் கூறுவதனை நாமும் ஆம் என்று வழிமொழிகிறோம். வீட்டு மகள் விலைமகள் ஆனபோதும் அந்தப் பாத்திரம் பழுதுபடாத வகையில் மாற்றங்களைக் காரணங்களுக்கு உட்படுத்தி வெளிப்படுத்தியுள்ள திறம் போற்றுதற்கு உரியதாகும். இப்படியே எல்லாப் பாத்திரங்களும் துலங்கக் காண்கிறோம்.

இனி, ஒரு நாவலுக்கு வேண்டும் நடை, உவமை, கருத்துச்செறிவு ஆகியவற்றில் 'ரங்கோன் ராதா'—வின் நிலையையும் கொஞ்சம் காணலாம்.

அண்ணாவின் நடையைப் பற்றி இன்றைக்குப் பேசவேண்டிய தேவையில்லை. அதனை உலகம் ஒப்புக்கொண்டுவிட்டது. பின்பற்றத் தலைப்பட்டுவிட்டது. இந்த நூலில் அவருடைய நீண்ட அடுக்குமொழித் தொடர்கள் குறைவுதாம். ஆனால் படிப்போரை மகிழவைக்கும் நடையழகு நிறைந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

> செத்தவள் பிழைத்து வந்து இருக்கிறேன்; சீர்கெட்டுப் பேர்கெட்டு, சிரமப்பட்டு, ஊர்விட்டு ஊர் ஓடி, உன் முகத்தில் விழிக்கவும் லாயக்கற்று
>
> * * *
>
> வேலைக்கு ஆள் உண்டு; ஆள் அடிக்கடி மாறுவதுண்டு.
>
> * * *
>
> என்னை மூன்று பேய்களிடம் ஒப்படைத்துவிட்டு உன் அப்பா தங்கத்திடம் தன்னை ஒப்படைத்துவிடத் தீர்மானித்துவிட்டார்.
>
> * * *
>
> ரங்கம் — பிறகு தங்கம் — பிறகு சிந்தாமணி — மல்லிகை — ரோஜா—மருக்கொழுந்து! வண்டுக்கு வித்தியாசமோ திருப்யோதி ஏது?

உத்தம தசரதனுக்கு அறுபதினாயிரம் தேவிமார்களாமே! இந்த உதவாக்கரையார் மூன்றாவது இல்லாமல் எப்படிக் கௌரவம் பெறமுடியும்?

அவன் உள்ளத்தை ஏதோ இரகசியம் மென்று தின்று கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது.

இப்படி நடை நயம் நூல் முழுவதும் காணலாம்.

உவமை

உவமை புலவனின் கையாள் என்பர்; பொருத்தமான வகையில் மட்டும் அல்ல புதுமையான தன்மையிலும் உவமைகளை அமைத்துக் கையாள வல்லவர்களே புலவர் ஆவர். இந்த நாவலில் அண்ணா கையாண்டுள்ள உவமைகள் புதுமை, பொருள், பொருத்தம் உடையனவாகக் காண்கின்றன.

கண்ணாடியிலே தெரியும் பொருளைக் கையால் தொடமுடியுமா?

மலர்க் கூடையை ஆசையாக எடுக்கும்போது அதனுள்ளிருந்து கருநாகம் சீறிக் கிளம்புவதுபோல்.

காசி அல்வா தின்னும்போதும் இனிப்புதான்; கரும்பைக் கடித்துத் தின்னும் போதும் இனிப்புத்தான் என்றாலும் வித்தியாசம் இருக்கிறது பார் மகனே, அதுபோல.

குச்சிநாய்க்குட்டியிடம் கோடீஸ்வரன் எப்போதாவது ஒருநாள் கொஞ்ச மாட்டானா, அதுபோல.

வெந்த புண்ணில் வேல்போல் (இந்த உவமை வேலைக்காரி நாடகத்தில் புகழ் பெற்றுவிட்டது!)

நாவலாகட்டும், வேறு எந்தவகை நூலாகட்டும் அதிலே கருத்துகள் இல்லை எனில் அது வெறும் குப்பைதான். படிப்போர் மனத்தில் அத்தகைய நூல்கள் இடம் பெறா; ரங்கோன் ராதா—அரசியல் அல்லாத அண்ணாவைக் காட்டுகிறது என்று முதலில் குறிப்பிட்டேன். அண்ணா பல்வேறு வகைகளில் சமுதாயம் சீர்திருந்தியாக வேண்டும் என்று எண்ணிய எண்ணம் இதிலே வெளிப்படுகிறது. தன் கருத்துக்களைக் கொட்டிவிட வேண்டும் என்ற அவருடைய துடிப்பும் இதில் புலனாகிறது.

சிலவற்றைக் காண்போம் :

குடியின் கேடு

பர்மா நாயுடுவை வைத்துக் கொண்டு குடியின்கேடு களை அவர் மிகச் செம்மையாக விளக்கி, 'குடிவெறியில் வீண் சண்டைக்கு நிற்கிறான். பாவம்! இருக்கிற நகைகளை ஒவ்வொன்றாக விற்றுச் செலவு செய்கிறான் அந்தக் குடியன்.' 'தீன் கைத்தடியால், அந்தக் குடிகாரன் அந்த அம்மையை அடித்துக் கொண்டிருந்தான்.'

இந்த மூன்று சொற்றொடர்களில் குடிகாரர்களின் இயல்பினைத் தெளி வாக்கிடக் காண்கிறோம் அல்லவா?

குடும்பம்

நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்கிறார் கவிஞர். நம் பண்பு, படிப்பினால் சேர்க்கையினால் வளருகிறது, மாறு கிறது என்பது உண்மைதான். ஆனால் அடிப்படைப் பண்பு இளமையில்தான் உருவாகிறது. தாயைப்போல் பிள்ளை என்பது பொருள் உள்ள பழமொழியாகும். தாயும் தந்தை யும் வளர்ந்த பின் வேண்டுமானால் மக்களுக்குப் பகைவர்கள் ஆகிவிடலாம்! ஆனால் இளமையில் அவர்களே வழிகாட்டிகள். எதனையும் அவர்களைப் போலச் செய்யவே முனைகிறோம். அதனால் குடும்பம் நல்ல எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்று சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். ரங்கமும்,

> தெருக்கோடியில் கூவும் சிறு பிள்ளைகள், சுவரேறிக் குதிக்கும் பையன்கள், சிறு பொருளைத் திருடிவிட்டு அடி படும் பாலர்கள், எல்லாம், குடும்பத்திலே உள்ளே கோணலின் விளைவுதானே?''.................................
>
> ....
>
> அனைத்து ஆதரிக்க அன்னையும் தகாதவழி போகாமல் தடுத்து நல்வழி காட்டத் தந்தையும்.........................

என்று குடும்பச் சிறப்புக்களைக் கூறக் கேட்கிறோம். அதுமட்டும் அல்ல, குடும்பத்தில் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்வதிலும் நாகரிகம் காணப்பட வேண்டும். இந்தக் கருத்தினைத் திருமண வாழ்த்துகளில் அண்ணா கட்டாயம் வலியுறுத்துவார். சண்டையில்லாமல் ஒரு அரை மணி நேரம் பேசுவதற்கு நம்முடைய மக்களுக்குத் தெரியாது. சினிமா பற்றித் தொடங்கிய பேச்சுச் சண்டையிலேதான் போய் முடியும் என்று கூறுவார். இதனை இந் நூலில்,

பெரும்பாலான வீடுகளிலே இந்தச் சம்பாஷணை, கிடையவே கிடையாதல்லவா? உப்புச் சப்பற்ற பேச்சு, இல்லையானால் ஓங்காரக் கூச்சல்! ஒரு மணிநேரம் ஓய்வாக உட்கார்ந்து பல விஷயங்களைப் பற்றி இனிமையாகப் பேசும் குடும்பம்

> இங்கே இருக்கிறது; அதிலும் ஒரு ஆணும் பெண்ணும், மகனும் தாயும், அல்லது புருஷனும் மனைவியும் ஏதோ ஓர் வகைத் தொடர்பு கொண்டவர்கள், பேசுவது என்று ஆரம்பித்தால் ஏதாவது சச்சரவில் போய் முடியுமே தவிர நிம்மதியாக முடிவதில்லை. பேசமுடிவதில்லை — தெரியாததால். ஒருவருக்கொருவர் ஒவ்வொரு விஷயத்திலும் முரண்பட்ட எண்ணம் ஆசை கொண்டவர்கள் எப்படிக் கூடிப்பேச முடியும்? பெண்களுக்கும் ஆண்களுக்கும் வேலை நேரம் போக, பேசிக் கொண்டிருக்கத் தெரியாதுதான்? என்ன பேசுவது; எப்படிப் பேசுவது என்பது தெரியவில்லை, என்று சலித்துக் கொள்ளக் காணுகிறோம்.

இதேபோல், அண்ணாவின் மனத்தில் வேரூன்றி வளர்ந்த வேறு ஒரு கருத்தினையும்—அதன் வித்து நிலையினையும்—கருத்தின் கருவினையும்—நாம் இந்நூலில் காணலாம்.

புராண விளக்கம்

அர்ச்சுனன் வென்று பெற்ற திரௌபதியை தருமரும் சேர்ந்து திருமணம் செய்து கொண்டது, இராமர் சீதையைக் காட்டுக்குத் துரத்தியது, முருகன் திருமணம் கொண்டது, தசரதன் பலதாரம் கொண்டது, ஆகிய பல்வேறு புராணச் செய்திகளை இந்நூலில் ஆங்காங்கே அண்ணா விமரிசனம் செய்திருக்கக் காண்கிறோம். இதுவே பின்நாள்களில் அவருடைய பேச்சிலும் எழுத்திலும் பெரும் இடம் பெற்றதையும் அறிவோம்.

அது மட்டும் அன்று, ''தீபரவட்டும்,' 'கம்பரசம்' முதலான கம்பராமாயண விமரிசன நூல்களை அண்ணா எழுதினார் என்பதனை அறிவோம். கம்பராமாயணத்தை எரித்து அழித்துவிடவேண்டும் என்று அவர் கருதியதாக என்னால் நம்ப இயலவில்லை. தமிழ் இலக்கியத்தில் அளவுகடந்த பற்றும், அதை வளர்ப்பதில் தணியாத வேட்கையும், அதற்கு வரும் பகையை எதிர்ப்பதில் அஞ்சாத வீரமும் கொண்டிருந்த அண்ணா ஒரு பத்தாயிரம் பாடல்களை ஒழித்துவிட எண்ணவில்லை. 'தீபர வட்டும்' என்று சொல்லித் தூங்கிக்கிடந்த புலவர்களை எழுப்பிக் கம்பராமாயணம் படிக்கச் செய்தார் என்றே — தவறாயின் பொறுத்தருள வேண்டுகிறேன் — கருதுகிறேன்.

ரங்கோன் ராதாவின் தாய் ரங்கம் கூறுகிறாள் கேளுங்கள்: "ராதா அடிக்கடி சொல்வாள், ராமாயணத்தைத் தான் புதிய முறையில் எழுதப் போவதாக." ஆம், அழிக்க அல்ல; புதிய முறையில் எழுதப் போவதாக ராதா அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாள்!

பரத்தைமை

பரத்தைமையைக் கண்டிக்காத பேர் இல்லை. ஆனால், அனைவரும் பரத்தையைக் கண்டிக்கின்றனரே யன்றி அவளுக்குத் துணைபோன

பரத்தனை (இந்தச் சொல்லை ஏற்றுக்கொள்வீரோ?!) கண்டிப்பதே இல்லை. பாரதிதாசன் கற்பென்பதனை இரு சாரார்க்கும் பொதுவில் வைப்போம் என்று கூறுகிறார். அவன் பாட்டன் வள்ளுவன் பிறன் துணை நோக்காத தன்மையினைப் பேராண்மை எனப் பாராட்டினான். 'ரங்கோன் ராதா'வின் தாய் விபசாரி ஆக்கப்பட்டவள். அவள் கேட்கிறாள், அவளுடைய விபசாரம் சாத்தியமானது ஒரு ஆணினால் தானே? பொருள் உள்ள கேள்வி. ஆனால், நேர்மையான விடைதான் இன்னும் கிடைக்கவில்லை. இப்படிப் பல வகையான கருத்துகள், புரட்சியான கருத்துகள், நூல் முழுவதும் காணக் கிடக்கின்றன.

நம்மையும் — புலவர்களையும் — கொஞ்சம் வலிக்காமல் குத்துகிறார், அண்ணா. "புலவர்கள் மிக உயரமாக அல்லவா போகிறார்கள். தங்கள் காலடியில் காணப்படும் எந்த விஷயம்தான் அவர்களின் கண்ணுக்குத் தெரிகிறது" என்று.

> கல்லூரிப் படிப்பு, கல் கூந்தலும், காலில் அலங்கார பூட்சும், காமினியா ஸ்நோவும் இல்லாமல்கூட வரும் என்பதை ராதா கல்லூரிப் பெண்களுக்குக் காட்டுவதற்குப் போயிருக்கிறாள்.
>
> *　　*　　*
>
> கல்லூரிக் கன்னியர்கூட சேர்ந்தாற்போல் ஒரு அரைமணி இனிமை குறையாமல், அதேபோது ஆபாசம் விளையாமல் பேசக் கற்றவர்கள் அதிகம் பேர் இல்லை என்பது என் அபிப்பிராயம் .. .. இவற்றுடன் கொஞ்சம் மனதுக்குத் தெளிவும் நேரம் வீணாக்கப்படவில்லை என்று எண்ணுகின்ற அளவுக்கு அறிவு மணமும் அதிலே கமழவேண்டும்.

இவை இன்றும் நம் கல்லூரி மாணவியர்க்கு (மாணவர்க்கும்தான்!) கூறத்தக்க அறிவுரைகள் அல்லவோ?

இப்படிக் கருத்துக் களஞ்சியமாக ரங்கோன் ராதா விளங்கிடுகிறது. எங்கோ ஒரு குரல் கேட்கிறது; "வெறும் புகழ்ச்சி! பக்தி அருச்சனை செய்கிறது. அதனால் குறை தெரியவில்லை" என்று. இல்லை. குறையைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமையையும் காட்டும் துணிவையும் நூலாசிரியர் எல்லோர்க்கும் கற்றுத்தந்தார். அணுக்கத் தொண்டனாக இருந்தவனுக்கும் அந்தப் பாடம் கொஞ்சமேனும் படிந்திருக்கும். பூவிற்கும் புல்லிதழ் உண்டு; நீருக்கும் நுரை உண்டு. ரங்கோன் ராதாவும் இதற்கு விதிவிலக்கன்று.

ராதா — கல்லூரி மாணவி — அவள் கல்லூரியில் ஒரு நாடகம் போடுகிறாள். தாரா — சந்திரன் காதல் தொடர்பை விளக்கி. ஆசிரியரின் புராண விமரிசனத் துடிப்பே இதற்குக் காரணம். கதைக்கு இது அவ்வளவாகத் தேவைப்படவில்லை.

ஜூலியஸ் சீசர் போன்றவர்களைப்பற்றி ரங்கம் விளக்கம் சொல்கிறாள். அவள் படிக்காதவள். அதனால் அடிக்கடி ராதா சொல்வாள் என்று இத்தகைய விளக்கங்களைச் சொல்கிறாள். வரலாற்றுப் பாடங்களில் ஆசிரியர்க்கு இருந்த ஈடுபாட்டை இதனால் தெரிந்துகொள்கிறோம்.

இன்னொன்று, நாகசுந்தரம் ஒருநாள் பக்கத்துவீட்டில் அழுகுரல் கேட்டு அங்கே போகிறான். பர்மா நாயுடு குடிவெறியில் ரங்கத்தைப் போட்டு அடிப்பதைப் பார்க்கிறான். சண்டையை விலக்கி அவனை உள்ளே அனுப்பிவிட்டு ரங்கத்திடம் பேசத் தொடங்குகிறான். ரங்கம் அவனிடம் தன் கதையைக் கூறுகிறாள். ஏறக்குறைய இருநூறு பக்க அளவுள்ள கதையை ஒரே மூச்சில் ரங்கம் கூறுவதாக உள்ளது. இது இயலுமா என்ற ஐயம் சிலர்க்கு ஏற்படலாம். யாரோ சிலர்க்கு என்ன, நூலாசிரியர்க்கே ஏற்பட்டுள்ளது. அதனால் அதற்கான விளக்கத்தையும் அவர் ரங்கம் வாயாலேயே கூறுகிறார் :

> மகனே, என் கஷ்டங்களை விவரமாகக் கூறிக்கொண்டேயிருக்கக் காலம் போதாது. ஆனால் என்றைக்கேனும் ஓர் நாள் யாரிடமேனும் முழுக்கதையையும் கூறாவிட்டால், மனதிலுள்ள பாரம் தொலையாது. ஆகவேதான் நான் நடந்த ஒவ்வொரு விஷயத்தையும் உன்னிடம் இவ்வளவு விவரமாகக் கூறி வருகிறேன். மற்றத் தாய்மார்களைப்போல, நானும், உன்னைப் பிறந்தது முதல் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவரும் சேவை செய்திருந்தால், உன்னிடம் எவ்வளவு பேசியிருப்பேன். அவ்வளவும் இப்போது பேசிவிடுகிறேன் என்று வைத்துக்கொள். என் வேதனையைக் குறைத்துக்கொள்ள வேறு வழியில்லை.

மேலும்,

'ஒருவள்' என்ற சொல் அடிக்கடி வருவதும், எண்ணற்ற வடமொழிச் சொற்கள் நூலில் இடம்பெறுவதும் கொஞ்சம் உறுத்துகிறது நெஞ்சினை. ஆனால் இந்நூல், ஆசிரியரின் தொடக்ககால நூல்களில் ஒன்று என்ற உண்மை நெஞ்சின் நோவினைக் கொஞ்சம் தணிக்கும்.

ரங்கோன் ராதா—சிந்தனையாளர் அண்ணாவின் தோற்றத்தை அறிவிக்கும் சிறுபறை !

38

முடியரசன் கவிதைகள்

இர. ஆ. கணேசநம்பி, எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
அறிஞர் அண்ணு கலைக்கல்லூரி, காரைக்கால்.

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்து இது நமக்கே உரிமையாம் என்பதுணர்ந்து ஆங்கிலேய அடிமைத்தளை அகற்றி இந் நீணிலத்தில் எவர்க்கும் இனி அடிமை செய்திடாது அனைத்துரிமையும் பெற்று ஏற்றமும் தோற்றமும், எழிலும் இன்பமும்உற்று வாழும் போற்றற்குரிய பொற்காலம் இக்காலம்.

"செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனையொன்றுடையாள்" — என்று தேசியகவி பாரதி கூறியாங்கு இந்தியாவின் பல்வேறு மொழிகளும் பாங்குடன் வாழ்வும் வளமும் வளர்ச்சியும் மேன்மையும் உற்று வருவதும் இக்காலமே.

"பாவேந்தர் மூவேந்தர் போற்றிச் செயப் பண்டெல்லாம்
மூவேந்தர் வேந்தாகி" விளங்கிய தமிழ்மொழி

உரிமை பெற்ற இக் காலத்தே தான் ஏறுபோல் பீடுநடை இட்டு எழில் மேனிச் செழித்துச் சிறந்து விளங்கி வருகிறது.

"மன்னுமிமயமலை எங்கள் மலையே' — என்று இந்திய நாட்டின் உயர்மலையைப் போற்றிப் புகழ்ந்து பாடிய பாட்டுக்கொரு புலவன் பாரதி, "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேம்" — என்று தண்டமிழ் மொழியை மிடுக்கோடும் பெருமிதத்தோடும் கூறியிருப்பதும் கூர்ந்து நோக்கற்குரியது. எளிய தமிழில் இனிமையாகவும், தெளிவாகவும் பொருள் புலப்படப் பாடி மக்கட் சமுதாயத்திற்குச் சிறந்த தொண்டாற்றிய மாக்கவிஞர் பாரதியார் எனின் மிகையாகாது. அம்மட்டோடன்றித் தனக்குப் பின்னும் நற்கவிஞர்களை உண்டாக்கித் தந்த உயர்வும் அக்கவிஞர் பெருந்தகைக்கே உரியது.' அவருக்குப் பின்னல் வழிவழியாகத் தமிழ்த்தாயை அணி செய்தவர்கள் — செய்பவர்கள் பலர். அவருள்,

"வையத்து நாட்டிலெல்லாம், தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
விடுதலை தவறிக்கெட்டுப், பாழ்பட்டு நின்ற தாமோர்"

தேசமாகப் பாரதம் இருந்த காலத்தில் தோன்றி, வீர சுதந்திரம் வேண்டி உயிர்த் தியாகம் செய்து உரிமை பெற்றுள்ள இக் காலத்தில் — நம் நாட்டு மக்கள் அனைவரும் சரிநிகர் சமம் என்று உணர்ந்து நடந்துவாழும் இக் காலத்தில் — வாழ்ந்து கொண்டிருப்பவர், வளமான கவிதைகளை வண்டமிழ் மொழியில் வழங்கி வருபவர், நற்றமிழ்க் கவிஞர் முடியரசர் ஆவார்.

"கவிஞன் பிறக்கிறான் உருவாக்கப்படுவதில்லை" — என்பதற் கிணங்க, கருவில் திருவுடையவர்களாக விளங்கும் கவிஞர்களுள் ஒருவர் இக்கவிஞர். இவர்தம் கவிதைகள் திட்பநுட்பம் செறிந்தன. இனிய நடையும் தெளிந்த கருத்தும் பெற்றுக் கற்பனைச் செறிவும் வளமார் வடிவமும் கொண்டு விளங்குவன. இப்புலவர் எப்பொருளை யும் எளிதில் இயல்பாகத் தங்குதடை இன்றிப் பாடவல்லவர் என்பது இவர்தம் கவிதைகள் வழி காணமுடிகிறது.

சான்றோர், நண்பன், குழந்தை, தொழிலாளி, காதல், மொழி யுணர்வு, இயற்கைப் பொருள்கள் பலவும் பற்றி, இவர் பாடல்கள் புனைந்துள்ளார். இவர் பாடல்கள் இசை இனிமையும் இலக்கண நெறி யும் ஏற்றுச் சிறக்கின்றன.

சொல்லும் செயலும் ஒன்றாய்ச் சிறந்த மனப் பேற்றினராய அண்ணல் மகாத்மாவை இக்கவிஞர் மனத் தூய்மையின் வடிவமாகக் காண்கின்றார்.

'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம்' என்ற குறட் பகுதியை விளக்கி,

"அழுக்காறு வெகுளியவா தீய சொற்கள்
அழித்தொழித்துக் கனிவுடைய அன்பினின்றும்
வழுக்காது செல்கின்ற நெஞ்சம் கொண்டோர்
வாழ்கின்ற நாட்டினையே அறிவு மிக்கோர்
இழுக்கில்லா நாகரிக நாடாமென்பர்"

என்று நாகரிக நாட்டிற்கு இலக்கணம் வகுத்து,

"இந்நாட்டைப் பிறநாட்டார் புகழ்தல் எல்லாம்
ஒழுக்கத்தால் உயர்காந்தி தூய வாழ்க்கை
உண்மையினால் அன்றோநீர் உணர்தல் வேண்டும்"

என்று உணர்த்திக் காட்டுகிறார்.

'எழில்' எனும் தலைப்பில்,

"கொடிதாங்கி உரிமைப்போர்க் களத்துச் சென்ற
குமரனவன் உயிர்நீங்க ஆள்வோர் தந்த
அடிதாங்கித் தலையிழந்து கொட்டும் செந்நீர்"

என்று உருக்கமாகக் கூறி, "யார்க்கும் விளங்காத எழில் காட்டக் கண்டேன்" என்று திருப்பூர்க் குமரனின் தியாக ஒழுக்கத்தைப் போற்றும் புலவர்,

"நாட்டுக்குச் செய்தபெருந் தொண்டுக்காக
நரிக்குணத்தர் அவற்களித்த தூக்குமேடை
காட்டுகின்ற சுருள்கயிற்றில் இறந்துபட்ட
காளையவன் சவக்குழியில் எலும்புக்கூட்டில்"

என்று வீரபாண்டியக் கட்டபொம்மன் நாட்டு விடுதலைக்காற்றிய வீர உள்ளத்தைப் போற்றி, "நாட்டிற்காகச் செக்கிழுத்து மெலிந்ததோன்" — என்று செக்கிழுத்த செம்மல் சிதம்பரம் பிள்ளையின் தேசத்தொண்டினையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' — என்று வாழ்ந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. பற்றிய கவிதைப் படைப்பு மிகமிகச் சிறப்பான படைப்பு. திரு. வி. க. என்ற தலைப்பில் அமைந்துள்ள ஏழு கவிதைகளும் எடுத்தியம்ப வேண்டியன என்றாலும் சுருக்கம் கருதி ஓரிரு பாடல்களையே ஈண்டுக் கூறல் தகும்.

திரு. வி. க. அவர்களைக் காந்திய நெறிநின்று கடவுட்கொள்கை கனிந்து எந்த நாளும் தீமை கருதாது இனிய சொல்லையே ஈந்து இறை ஒன்றே என்று கூறி, உலகம் நமதென்று உணர்த்தி நா காக்கும் நாகரிகம் பேணி, எவரையும் பகையாது நண்பே கண்டு, தாயினத்தை உயர்த்தி. தொழிலாளர் இயக்கத்தை நன்னெறியில் ஊக்கி வளர்த்து, தாய்மொழியை நன்கு கற்ற பிறகு அயல் மொழியைக் கற்றல் வேண்டும் என்று கூறி, தொண்டு நெறிவாழ்ந்தவர் என்று கூறும் கவிஞர்,

"அன்புமிக்கார் ஆயினுமே அடிமை ஆகார்
அறிவுமிக்கார் ஆயினுமே செருக்குக் கொள்ளார்
பின்புமவர் பணிவுமிக்கார் இருந்தும் அன்னார்
பெருமிதத்திற் கடுகளவும் குன்றார் எங்கும்
இன்புமொழி பேசினுமே கருத்துவேறு
காணுங்கால் இடித்துரைக்கத் தவறார் நெஞ்சில்
வன்பில்லார் எனினும் நல்ல உறுதி கொண்டார்
வரும் ஆசை அற்றார்தாம் துறவி அல்லர்"

என்றும்,

"தொண்டுள்ளம் பழமைஒளிர் புதுமை உண்மை
தூய்மை அன்பு தமிழ்நெஞ்சம் பொதுமை பெண்மை
கண்டன்ன இனியமொழி எளிமைநண்பு
கருத்தீர்க்கும் சொல்வன்மை அறிவு கல்வி

விண்டுரைக்க இயலாத அமைதி வீரம்
வினையின்று செய்யாமை ஆன்ற விந்து
கண்டடங்கு கொள்கைஎன அறமாம் என்று
காணுகின்ற அத்தனையும் அமைந்த சான்றோர்"

என்றும் கூறி உணர்த்தும் திறம் திரு. வி. க. அவர்களையே படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

நாட்டு விடுதலைக்காகவும், நற்றமிழ் முன்னேற்றத்திற்காகவும் உழைத்த நன் மக்களைப் போற்றும் கவிஞர் அறிவுலகச் சிற்பியான கிரேக்க மேதை சாக்ரடீசையும் பாராட்டிப் புகழ்கிறார். இவ்வாறு தொடுத்துக் கூறும் கவிதைகள், "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழியநிலனே" என்னும் கருத்துக்கு அணி செய்வனவாக உள்ளன.

கவிஞர் முடியரசன் மொழிப்பற்றுக் குறித்துப் பல்வேறு கோணங்களில் பாங்குறத் தீட்டியுள்ளார். பாரதியையும், பாவேந்தர் பாரதிதாசனையும் தம் பாட்டுத்திறத்தால் நிலைநாட்டி நினைவுறுத்துகிறார். மரபுவழிக் கவிஞர் என்ற முத்திரையையும் இவர் பெறத் தவறவில்லை. பாரதி கூறிய கருத்துகளைத் தமிழர் புரிந்துகொள்ளவில்லையே என்று ஏங்கும் ஏக்கம், பாரதிதாசனின் "மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கீடில்லை" என்பதற்குக் கொடுக்கும் அரிய அழகிய விளக்கம், செந்தமிழைப் போற்றி வளர்த்த சான்றோர்களைப் போற்றும் முறை, தமிழ்காக்க உயிர்த்தியாகம் செய்த செம்மலர் பெயர், செயல்கள், மொழிகாக்க நம்மை உயர்த்தி ஊக்கும் உற்சாகம், மொழியுணர்வு ஊட்டும்திறன் அனைத்தையும் இவர்தம் பாடல்களில் நன்கு நிறைந்திருக்கக் காணலாம்.

இக்கவிஞர், "மனிதரினம் முதன்முதலில் பேசக் கற்ற மாண்புயர் செந் தமிழணங்கு"—என்று தமிழ்மொழியை உலகில் முதன்மையாகத் தோன்றிய மொழி என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். இக்கூற்று தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களாற் பாராட்டப் பெற்ற முருக இலக்குவனார் கூறியுள்ள "உலகமெலாம் இருள்மூடி ஊமர்களாய் மக்களுற்ற தலைநாளே நாகரிகத் தனி அரசு செலுத்தியவள்"—என்ற பகுதியோடு ஒத்து வருவதைக் கண்டு மகிழலாம்.

தேனினும் இனிய தெளிதமிழை மீன், புலி, வில் இலச்சினை கொண்ட மூவேந்தர் வளர்த்தனர் என்ற பெருமித நினைப்போடு இரவு துயிலச்சென்ற கவிஞர் தன் கனவில் தமிழன்னை தோன்றி,

"வேங்கடம் குமரி நாப்பண் வெற்றியின் கொடிபறக்க
யாங்கணும் பகையே யின்றி யான்அர சோச்சிவந்தேன்
தீங்கென எவருஞ் செய்யின் தீயென வெகுண்டெழுந்து
பாங்குடன் வேந்தர் காக்கப் புலவர்கள் பாட வாழ்ந்தேன்"

அன்று என்று உரைத்துப் பின்னர்,

> " அரசியல் மன்றில் ஏற
> ஆண்டவன் திருமுன் நிற்க
> உரிமையோ சற்றுமில்லேன்"

என்று இன்றைய நிலையையும் கூறியதாகக் கவிஞர் கூறும்போது, 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்'னைய தமிழ் மறவர் கூட்டம் உணர்ச்சி பெற்று விழித்தெழாமல் இருக்கவும் ஒல்லுமோ ?

மேலும், "தமிழே இந்த நாடாள வேண்டுமென உறுதிகொள்வீர்" என்று உணர்த்தும் கவிஞர்,

> " திருமண நிகழ்ச்சி யாவும் தெளிதமிழ் கேட்கச் செய்வீர்
> இறைமுனும் தமிழே கேட்க இணைந்துநீர் தொண்டு செய்வீர்
> துறைதொறும் தமிழே காணின் தூய்தமிழ் ஆட்சி என்போம்"

என்று அடுக்கிக் கூறும் தன்மையைக் காணின், எல்லாம் தமிழ், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையை மிக நன்றாய் வலியுறுத்து கின்றார் என்பது புலனாகும்.

இந்நெறியில் பாரதிதாசனாரைப் பின்பற்றிச் செல்கின்றார் இக் கவிஞர் என்பது தேற்றம்.

இலக்கணம் மொழியைக் காப்பாற்றும் ஆற்றலுடையது மொழி யைக் காக்கும் வரம்பு இலக்கணம். இதனைக் காதலன் கற்றுணர்ந் தடங்கிய மனைவியிடம் கூறுவதாக அமைத்துள்ள பகுதியில் கவிஞர்,

> " வயலுக்கு வரப்பொன்றும் வேண்டா மென்றால்
> வளக்கரைகள் ஆற்றுக்கு வேண்டா மென்றால்
> இயல்மொழிக்கு இலக்கணமும் வேண்டாம் பெண்ணே,
> இயலறிவு மொழியறிவு இல்லார் சொல்லும்
> மயல்உரையை நம்பாதே மொழியைக் காக்கும்
> வரம்பிலையேல் எம்மொழியும் அழிந்து போகும்"

என்று கூறுகின்றார்.

மொழியை இலக்கணம் காப்பாற்றுகிறது என்றும் இலக்கணம் பொருந்த இயற்கையாக அமையும் இலக்கியம் சிறப்படைகிறது என்றும் சித்திரிக்கும் கவிஞர், அகப்பொருளாம் கற்கண்டுநிகர் காதற் கவிதைகளை மிகுதியும் படைத்துத் தந்துள்ளார். இப்படைப்பிலும் தன் முன்னோராகிய பாரதி, பாரதிதாசனார்தம் போக்கை, அவர்கள் அமைத்துக் காட்டிய நெறிமுறையைப் பின்பற்றி முன்னேறுகிறார்.

அவல ஓவியமாக அமைந்த 'காதற்சிலை' என்னும் நெடும்பாட்டு மிக அழகாகவும் அருமையாகவும் செழுமையாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளது.

சிறந்த கவிஞர்களை அவர்களுடைய முழுநூலையும் கண்டுதான் அளவிட வேண்டும் என்பதில்லை. அவர்கள் கவிதை முத்திரையைப் பாட்டின் ஒரே சொல்லிலும் பதிப்பித்துக் காட்டும் ஆற்றலுடைய வர்கள். இத்தகைய தனிசிறந்த ஆற்றல் படைத்த கவிஞர்களுள் முடியரசனும் ஒருவராகக் திகழ்கிறார் என்பது கண்கூடு.

கருமலைக் குறிச்சியின் குன்றின் அடிப்பகுதியில் சிற்பக்கோட்டம் நிறுவிக் கடவுளே இவன் எனக் கண்டவர் புகழவும், வடித்த அவன் சிற்பங்களைத் தொடாது நோக்குபவர் வியப்புற்று அவற்றை உயிர்ப் பொருளே என உரைக்கவும், சிறந்த சிற்பங்களைப் படைக்கவல்லவன் ஒரு சிற்பக் கலைஞன். அவனைக் கவிஞர் "கலையே அவனும் அவனே கலையாம்" என்று பொருத்தமாகப் பாராட்டுகின்றார்.

கண்வழி புகுந்து கருத்திற் கலந்தவளின் சிலையை ஏழேநாளில் இனிது முடித்தான் அக்கலைஞன். இதனை,

"முடிந்தது சிலையும் முடித்தது நெஞ்சிற்
படித்த உருவின் படிமம் கண்டனன்"

என்று கூறும் கவிஞர் இஃது எவ்வாறு முடிந்தது என்பதனை,

"காதல் மடவார் கடைக்கண் பணித்தால்
ஈதொரு பணியோ ஏழ்சிலை முடிப்பர்
காதல் வேகம் கடிதே கடிதே"

என்று காரணம் காட்டி விளக்குவது சாலப் பொருத்தமே. இக்கருத்து பாவேந்தர் பாரதிதாசன் கூறும்,

"கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்"

என்ற பகுதியோடு ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்தற்குரித்து.

காதற் காப்பியத்தில் சிக்கலும் எழவேண்டுமே. இந்நெடும் பாட்டில் மாமன்னன் ஒருவன் தோன்றுகிறான்; சிற்பத்தைக் கண்டு மயிலியை அடைய விரும்புகிறான். அவளை மணக்கத் தூது அனுப்பு கிறான். மயிலி சிற்பக் கலைஞனைத்தான் மணப்பேன் என்று உறுதி யாகக் கூறிவிடுகிறாள். எனவே சூழ்ச்சி செய்கிறான். கலைஞனை அழைத்து மலையைக் குடைந்து இருபாலும் சிற்பம் செதுக்க ஆணையிடு கிறான். காதல் உணர்வு கருத்தினில் உந்தி மோதக் கலைஞனும்

முனைந்து பேரரசன் தனக்கு ஆணைபிறப்பித்தவாறே மலையைக் குடைந்து அதனிரு கரையிலும் உலகம் உவப்ப உயர்பெரும் சிலையெலாம் படைத்து முடிக்கிறான். இதற்குள் ஆண்டுகள் பல கடக்கின்றன. அரசனின் முதல் சூழ்ச்சியிலிருந்து விடுபட்டு வெற்றி காண்கிறான். ஆனால் வேந்தனின் இரண்டாவது சூழ்ச்சியால் கிழவி ஒருத்தி அழுது வந்து சிற்பியின் காதில் விழுமாறு, "வடிவேல் மன்னன் மகளென வந்த கொடியிடை மயிலி மடிந்தனள்" —என்று கூறுகின்றாள். இதனைக் கேட்ட கலைஞன்,

> "மோனத் திருக்கும் காதற்சிலையே
> கண்ணீர்த் துளியால் குளித்திடு
> என்னுயிர் குடித்திடு விரைவாய்
> யாண்டுச் சென்றனை? யாதுநீ எண்ணினை
> ஆண்டு வருவேன்! ஆருயிர்க் காதலி!"

என்று புலம்பிக்கூறி மலையினின்று பாய்ந்து மாய்ந்தான் என்று காதற் சிற்பியின் கதையை முடிக்கிறார். சிற்பி மாய்ந்தான் என்பதைக் கேட்ட காதலி மயிலி தானும் அதுபோல் இறந்து மடிகிறாள். இருவர் வாழ்வையும் இவ்வாறு முடித்து இறுதிவரிகளாக, "அழும் ஒலி போல அவலம் பாடி இழுமென ஒலியால் இயங்கியது ஆறே" — என்று கவிஞர் முடித்திருப்பது அவல எல்லையின் ஆழத்தை அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. நெடும்பாட்டின் எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் அழகுச் சுவையைக் கூட்டுகிறது.

நம் தமிழ்க் கவிஞர்கள் தழுவல் கதையைக் கூறினாலும் தமிழில் முதல்நூல் என்று சொல்லும் அளவிற்கு மிகச்சிறப்பாக முடிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதற்குக் கவிஞர் முடியரசனும் ஒப்பற்ற ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

நெடும் பாட்டேயன்றிப் பிறகாதற் பாட்டுகளிலும் காதற் சுவையை அருமையாக உணர்த்திக் கவிதைக்கே உரிய உவமைகளையும் பழமொழிகளையும் நீதிகளையும் தெளிவாக எடுத்தோதுகிறார்.

'புதுமைப்பெண்' என்ற தலைப்பில் இடம்பெறுந் தலைவி தன் தலைவன் மிக அழகாகப் பேசும் ஆற்றல் உடையவன் எனக்கூறும் போது,

> "அண்ணாதுரையைப் போல் அழகாகப் பேசுகின்றார்"

என்றும்,

> "பெண்ணைப் பிறந்தார் பெறுமிழிவு நீக்குகிறார்
> அன்னார்பால் என் நெஞ்சம் ஆழ்ந்ததடி"

> "காய்ச்சும் இரும்பு கவர்ந்திட்ட நீர்போல
> ஆச்சுதடி என்மனம் அன்பர் அவரிடத்தே"

என்றும் கூறித் தலைவனின் பெருமையையும் தன் உள்ளம் அவன்பால் பற்றி நின்ற பாங்கையும் பகர்கின்றார்கள்.

காதல் உலகத்தைப் பாடும் கவிஞர் அதே உலகத்தில் உவமை அணியைப் போற்றும் வகையில் இன்பத்தை நிறைக்கும் நிலவை,

“ விண்ணிடைத் தெரிந்த வெள்ளைப்
பூசணிக் கீற்றேஎன்ன
எண்ணிடப் பிறங்கும் நல்ல
இளம்பிறை நிலவே ” — என்றும்

“ கண்கவர் சிறுவர் சேர்ந்து
கடுமழைப்புனலில் ஓடப்
பண்ணிய கப்பல் போலப்
படர்பிறை நிலவே ”

— என்றும் கூறி, முகிலைப்பாடும் இடத்தில்,

“ வானவெளி யரசே! வள்ளல் பெருமனம்போல்
தானம் பொழிகின்ற தண்முகிலே ”

என்றும் கூறிச் சிறப்பிக்கின்றார்.

காதலால் விளைந்தசுகம் கனி மழலைச் சுகம் என்பதனையும் விளக்கி மிகச் சிறந்த வீரமும் அறிவும் உடைய தலைவன் தன் மகவிடம் தோற்று விட்டதாகக் கவிஞன் கூறும் பாங்கு படித்து மகிழ்தற் குரியது. காட்டாக,

“ உன்தாயின் விழிக்கடைக்கோர் ஒப்பே யில்லை
உலகிலென நினைத்திருந்தேன் களிப்புக் கொண்டேன்
என்வாயை அடைத்துவிட்டாய் கவலை தோயா
எழில் மலருன் கருவிழியால் தோற்று விட்டேன்”

—என்று பாடியுள்ள பாடல், இலக்கண இலக்கிய நிகண்டு கற்றுணர்ந்த தலைவனும் தோற்றதாகப் பாடிச் செல்லும் திறம், எண்ணி மகிழ்தற் குரியது. முன்போரிடத்திலும் இயல்பாக இன்பந்தரும் பிறவற்றி லெல்லாம் சொல்லரிய இன்பத்தைக் காணுகின்றேன் ஆனாலும் இவை யெல்லாம்,

“ என் குழந்தை மெய்யில் தாவி
இளங்கையால் தொடுகின்ற இன்பம் ஆமோ?”

என்று கேட்டு, மகவு தரும் இன்பத்தை வள்ளுவர் கூறுவதுபோல் கூறு கின்றார்.

பிறிதோரிடத்தில் தென்றலை நல்லை என்றும் அல்லை என்றும் குழறிக் கூறும் தலைவியைக் காட்டி அவள் வாயிலாகவே, " தீதும் நன்றும் பிறர்தர வாரா " என்ற புறப்பாடலை நினைவுறுத்தச்செய்து, " நன்மையும் தீமையும் எம்மவர் தந்தார் நீ ஒரு குணமில்லாய் " என்று அவளையே முடிவுகூற வைத்த முறை சிறப்பாக உள்ளது.

முகில் விடுதூது கவிஞரின் அருமைப் படைப்புகளில் ஒன்று. பிரிந்து வருந்தும் தலைவி தலைவனுக்காக மட்டும் ஏங்காமல் பிள்ளை படிக்கக் காசு இன்னும் அவரிடமிருந்து வரவில்லையே என்று ஏங்குவதனை, முகிலிடம்,

" மெய்யில் உயிர்நிற்க வேண்டுமெனில், பள்ளி செலும்
பையன் பயில்கின்ற பாடம் வளரவெனில்

காசுபணம் வேண்டுமெனக் காதலர்பால் நெஞ்சுணர்ந்து
பேசு ! பிழையாகப் பேசி வருத்தாதே "

என்று சொல்லும் பாங்கு தமிழ்ச் சமுதாயப் பெண்ணுக்கே உரிய உயர்நெறி என்பதனைக் கவிஞர் இவ்வாறு படைத்துக் காட்டுகிறார் எனின் தவறாகாது.

'இழந்த காதல்' என்னும் தலைப்பில் புகழணங்கு, கவிதைப் பெண், செல்லமகள், வீரச் செல்வி ஆகிய நான்கு பெண்கள் கவிஞனிடம் தன் உள்ளக் குறையை வெளியிடுவது மிக அருமையாக உள்ளது.

பல இடங்களில் உட்பொருளைப் பதித்து வைக்கும் கவிஞர் இவ்விடத்தும் அப்பாங்கினைக் கையாண்டுள்ளனர். கவிஞர் தம் பாடல்களில் எதிர்பார்ப்பதுபோல் அமைந்தால் புகழும் செல்வமும் கவிதையும் வீரமும் நானிலத்தே மேலும் சிறப்புற்று விளங்கும்.

இயற்கை உலகம் பற்றிய தொகுப்பும் கவிஞரின் இணையற்ற படைப்பு. சங்க இலக்கியத்தில் மக்கட்கு உணர்த்துவான் வேண்டி அமைந்த இயற்கை வருணனைகளும், காவியத்தில் இடம்பெற்ற வருணனைகளும் இருந்த நிலைமாறித் தமிழகத்தில் இயற்கையைப் பற்றிய பாடல்களைத் தனியாகவே படைத்துச் சுவைக்கத் தொடங்கியுள்ள காலத்தில் வாழும் கவிஞர் முடியரசன் அவர்கள், அப்பகுதிக்கு மிகுதியான பாடல்களை அளித்துள்ளார்கள். அழகை அள்ளி வழங்கும் கவிஞர் நீதிகளையும் நிலைநாட்டிச் செல்கின்றார்.

" கால்முளைத்த தாமரையின் மொக்குள் போலக்
காட்சிதரும் குஞ்சுகள்தம் வாயில் கோழி
வேல்முக்கால் அன்புகலந் திரையை ஊட்டும் "

நிலையினும்,

"வானத்து வீதிசெல்லும்
பால்நிலவுப் பெண் தனது விண்மீன் என்னும்
பல்விரித்துச் சிரிக்கின்ற".—

போதும் பிறவற்றிலும் அழகின் சிரிப்பை உணர்ந்து உணர்த்தும் கவிஞர்,

"சோற்றுலே துயருறுவோர் தமிழர் என்னும்
சொற்கேட்டுத் துடித்திலதோ உங்கள் உள்ளம்'

என்று கேட்கும் கேள்வியின் வாயிலாகத் துடிதுடிப்போடு உழைத்து உயரவேண்டும் தமிழ்க்குடிமகன் என்ற அறைகூவலும் செய்கிறார்.

ஆற்றைப் பற்றிய கற்பனையும் அமைத்துள்ள அருமைப்பாடும் அளப்பரிய அழகு பெற்றுத் துலங்குகின்றன. ஆற்றைப் பற்றிய கவிதைகள் அனைத்தும் அழகு கொஞ்சிக் குலவுபவை. ஆற்றைப் பற்றிப் பலவாருகப் புனைந்துபாடி அழகு சேர்க்கிறார் கவிஞர். ஊர் மக்கள் வெறுத்தொதுக்கும் கழிநீர் கலந்தாலும் மாசுநீங்கி, தூய்மையாகி ஊர்ந்துசெலும் ஆற்றினைக் கவிஞர்,

"சார்பற்றுத் தனித்தியங்க வல்லஎன்றன்
தமிழ்மொழியில் பிறமொழிகள் கலந்த போதும்
நேர்வுற்று மாசின்றி இயங்கும் பண்பை
நினைவூட்டும்" —

என்று கூறியிருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

கடலைப் பற்றிப் பலவாகப் பாடும் கவிஞர்,

"விளங்காத மொழிபேசும் என் மகவு
விளையாடும் பொழுது மண்ணில்
மழுங்காத சிறு விரலால் கீறிவிடும்
வளைவுகள் போல் கரையில் நண்டு
ஒழுங்காக அமையாமல் ஓடியோடிக்
கோலமிடும் ஆளைக் காணின்
இளங்காளை முன்வந்தால் நாணமுறும்
இளையவள்போல் மறையும் ஓடி"

என்று கூறுகின்றார்.

இயற்கை, இன்பத்தை மட்டுமா தருகிறது? துன்பத்தையும் தரத் தவறவில்லையல்லவா? 'இயற்கையின் எழுச்சி' என்ற தலைப்பில் இயற்கைதரும் இன்னலையும் அடுக்கிக் கூறுகின்றார் கவிஞர்.

கவிஞர் காட்டும் உலகத்தில் தொழில் உலகமும் அருமையான இடத்தை வகிக்கின்றது.

"குதிரை நினைத்தால்" என்ற தலைப்பில் குதிரையை அதன் மேலிருப்பவன் விரைந்து செல்லட்டும் என்று கைச்சவுக்கால் அடித்துத் துன்புறுத்துகிறான். குதிரை சொல்வதாகக் கவிஞர்,

"போக்கற்ற உலகத்தில் குனிந்து தந்தால்
பொல்லாத மனிதரவர் எல்லாம் செய்வர்
காக்கின்ற உழைப்பாளி ஓடஓடக்
கனவான்கள் விரட்டுகிறார்"

என்று கூறிச் சவுக்கடியைப் பொறுக்க இயலாத குதிரை தன் மேலிருந் தோனை,

"வெல்வெட்டு மெத்தையுடன் உருண்டுருண்டு
வீழ்ந்திடவே உதறிற்று"

என்று ஆறுதல் கூறுகிறார். அத்துடனல்லாமல் பாட்டாளிக் கூட்டத்தை வதைக்கும் பணக்காரர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கின்றார். இந் நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து, கவிஞர் விறகு வெட்டியின் வறுமைத் துன்பத்தை,

"இரண்டுநாள் உண்டே னில்லை ; இருமலால் துடித்தாள் பெண்டு
சுருண்டன பிள்ளை யெல்லாம் ; சோற்றுநீர் இன்மை யாலே"

என்று அவனே கூறுவதாக அமைத்துக் காட்டுகிறார்.

கூண்டுக்கிளியின் வாயிலாக 'அடிமைவாழ்வு கொடிது! கொடிது' என்று நிலை நாட்டுகிறார்.

'தொழிலாளி' எனும் தலைப்பில்,

"பூமிக்குள் அஞ்சாது நுழைந்து மின்னைப்
பாய்ச்சுகின்ற தங்கத்தைக் கொடுக்கின் றானே
பாவம்அவன் அங்கத்தில் ஒன்றும் இல்லை"

என்று ஏக்கத்தோடு கூறுகிறார் கவிஞர்.

இவ்வாறு தொழிலாளர் உயரவேண்டும் என்று புரட்சிக்கொடி உயர்த்தும் கவிஞர் பாரதிதாசனைத் தமிழ்த் தந்தையாகக் கவிதை புனைந்து காட்டுகிறார். பகைவர் தம்மைச் சேராதீர் என்று திருத்தியதும், உங்கள் தமிழ் பயில்வீர் என்று திருப்பியதும், புதுமைமிகு இலக்கியமாம் செல்வத்தை அளித்ததும், புரட்சிசெய் வீரரென ஆக்கியதும், பாவேந்தர் பாரதிதாசனாரே. எனவே, அவர் தமிழர் தந்தை என்று மொழிகின்றார் கவிஞர்.

பாரதிதாசனைப் பாடிப் பரவும் புலவர் உள்ளம் மாணவர் மன்றத் தமிழ் நெறிக் காவலர் மயிலை. சிவமுத்து அவர்களை, பொதுப்பணியே தம்பணி என்றாற்றியவர், இமையளவும் ஓய்வின்றி உடல்பேணாமல்

இரவுபகல் உழைக்கின்றவர் என்று புகழ்கிறது. மேலும் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையவர்தம் வீடும் பெருமையும் கவிஞரால் நன்கு நவிலப் பெறுகிறது. கம்பன் குரல் என்னும் பகுதியில் கம்பனே 'தென் பொதியக் குற்றால டி.கே.சி.' அவர்களைப் பாராட்டிக் கூறுவதாக அமைத்துள்ளார். சா. கணேசன் அவர்களையும் முருகப்பர் அவர்களையும் கம்பர் மொழிந்ததாகக் கூறும் கவிஞர், "இன்னுமோர் உயிர் நண்பர் இங்குண்டு" என்று கூறுவதாகக் கூறி,

"கண்மூடி வழக்கத்தைக் கடும்புயலே போலெதிர்த்து
மண்மூடச் செய்யமனங் கொண்டார் திடங்கொண்டார்
கற்றறிந்த சொல்வல்லார் காஞ்சிபுரத் துறைவார்
நற்செயல்கள் பலசெய்வார் நாடறியும் அவர்என்றன்
உயிர்த்தோழர்"

என்று கூறியதாகவும், கவிஞர் அண்ணாதுரையா என்று வியப்புடன் கேட்டதாகவும், "ஆமாம்" என்று உரைத்துக் கவிஞரைத் தெளிவித்த தாகவும் காட்டுகிறார்.

இவ்வாறு தமிழ் அறிஞர்களையும், புலவர்களையும் போற்றிய இக் கவிஞர், நகைச்சுவை மன்னர் என்.எஸ்.கே. மறைவினைக் குறித்து 'ஆறுத்துயரம்' எனும் தலைப்பில் கையறுநிலைக் கவிதைகள் பாடியுள்ளார். கவிஞரவர்கள்,

"திரையுலகில் மன்னனவன்; தமிழகத்துச்
சீர்திருத்த நல்லுலகில் மன்னன்; தீய
குறையொழியப் பகுத்தறிவைச் சுவையாய் ஆக்கிக்
குழைத்தெடுத்துக் கொடுக்கின்ற மன்னன்; வெய்ய
சிறைஎனினும் அஞ்சலிலான் அங்கிருந்தும்
சிந்திக்கும் மன்னனவன் கொடுமைச் சாக்கா(டு)
இரையெனவே கொண்டதுவோ அந்தோ! அந்தோ!
இவனைஅலால் கிடைத்திலரோ உலகில் எங்கும்!"

என்று ஏங்கும் ஏக்கத்தை எடுத்துக் காட்டியுள்ளார்,

இவ்வாறு ஏங்கித் தவிக்கும் உள்ளம் கொண்ட கவிஞர், 'இறப்பே வா' எனும் தலைப்பில், "உன்னைக் கண்டஞ்சுகிறார் கோழை மாந்தர் தனிப்புரட்சி உருவில் வரில் அணைத்துக் கொள்வேன்" என்று கூறி,

"புரட்சியெனும்
மக்களை நீ பெற்றெடுக்க மருவுகின்றாய்
ஆதலின் மதிக்கின்றேன் உன்னை நன்றே"

என்று பாராட்டவும் செய்கின்றார்.

கவிஞர் முடியரசர், பாரதி கண்ணனைப் பலநிலைகளில் வைத்துப் பாடியதுபோல் தாமும் தமிழைப் பல நிலைகளில் வைத்துப் பாடியுள்ளார். இடத்திற்கேற்ப அருமையான சந்தமும் அமைத்துக் கவிதை பாடியுள்ள திறம் மகிழ்ந்து போற்றுதற்குரியது. திறமுள்ள கவிஞர்க்கு இயல்பாக வாய்த்த அருமைப் பேறு இது.

"உழுவார்கரம் உயர்வாய்வர உலகோர்முயல் திருநாள்
உளதாகிய திருநாடொரு தமிழ்நாடென வருநாள்
குழுவார்கரை பிழியாருடன் முறியாமுனை அரிசி
குழைவாயமு துணைவாயதைக் குலமாதர்கள் தருநாள்"

என்ற பாடல் சந்தம் அமையப் பாடியிருப்பதற்குச் சான்றாகி நிற்கிறது. இப்பாட்டு பாரதிதாசனாரின் "வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா"—என்ற பாட்டினை நினைவூட்டிச் செல்கின்றது எனின் தவறாகாது.

அறுசீர் எண்சீர் விருத்தங்களே மிகவாகிய தலைப்புகளை ஆட்சி செய்கின்றன. என்றாலும் இடை இடையே நேரிசை, நிலைமண்டில ஆசிரியப்பாக்களும், நேரிசை, ப∴றொடை வெண்பாக்களும், கலிவெண்பா, வெண்கலிப்பா, பதினறுசீர் சந்த விருத்தம் ஆகிய பாக்களும் அவற்றின் இனமும் விரவப்பெற்று சுவை கூட்டி நிற்கின்றன.

"உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"

என்று கூறும் கவிமணியின் அருமைக் கூற்றிற்கேற்ப உள்ளம் நிறைந்த பொதெல்லாம் உவந்துவந்து பாடுகிறார் கவிஞர் முடியரசர். 'நமக்குத் தொழில் கவிதை' என்று பாடிய பைந்தமிழ்ச் சாரதி பாரதியின் வாக்கிற் கிணங்க கவிஞர் முடியரசனும், "பாடுவதென் தொழிலாம்" என்று பாடியிருப்பது கவிஞரின் உள்ளுணர்வைப் புலப்படுத்திக் காட்டுகின்றது.

குடியரசு பெற்றுச் சிறந்து வாழும் உரிமைத் திருநாட்டில் கவிஞர் முடியரசரின் கவிதைக் கருவூலம் ஒளி விளக்காய் விளங்குவதாகுக.

39

புதுமைக்கவி வாணிதாசன் கவிநயம்

பேராசிரியர்—ம. ரா. பூபதி, எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், தாகூர் அரசினர் கலைக்கல்லூரி, பாண்டிச்சேரி.

மரபுக் கவிஞர்

" பாரதி தாசனின் பெயரை உரைத்திடப்
பாட்டு பிறக்குமடா "

கேலிய மேட்டுச் செம்மலான வாணிதாசனாரின் கவிதைப் போக்கை உணர்த்த இந்த ஓர் அடியே போதும்.

புதுச்சேரி ஒரு வகையில் திருக்கோவையார்; அவரவர் மனநிலைக் கேற்ப, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையாய்த் தோன்றும் உன்னத நகரம். இலக்கியத் தேனீக்களுக்குப் புதுவை என்றவுடன் நெஞ்சில் பளிச்சிடும் பெயர்கள் நான்கு. ஒன்று தேசியக் கவி சுப்பிர மணிய பாரதி; இரண்டு புரட்சிக் கவி பாரதிதாசன்; மூன்று கவியோகி சுத்தானந்த பாரதி; நான்கு புதுமைக் கவி—கவிஞர் ஏறு—வாணி தாசன்.

வாணிதாசன் பேறு பெற்றவர்; தளம் அமைக்கப் பாரதியும், மாளிகை எழுப்பக் கனக சுப்புரத்தினமும் இவருக்கு வாய்த்தனர்; மாளிகை மேல் அழகான கவிதைக் கோபுரங்களை, வியக்கும் வகையில் கட்டி வருகின்றார் வாணிதாசன்.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்; சில இடங்களில் தம் ஆசான் பாரதிதாசனையும் விஞ்சும் திறன் கொண்ட வாணிதாசன், வாய்க்கும் இடங்கள் எல்லாம் தம் ஆசான் பாரதிதாசனையும், ஆசா னுக்கு ஆசான் பாரதியையும் வாய் மணக்கப் போற்றுகின்றார்.

" பாரதி கனலைக் கக்கும்
பாடல்கள் எழுதித் தந்தார்;
ஊரதில் வாழும் மக்கள்
உளந்தனில் உணர்வு வீரம்

சேர்ந்திடும் எளிமை மிக்க
செந்தமிழ்க் கவிதை யாத்துக்
கார்என முழக்கம் செய்தார்
காளைகள் எழுச்சி பெற்றார் !"

கவிஞர் பரணரை, ஔவையார் வாய் இனிக்கப் புகழ்ந்ததைப் போன்று, பாரதிக்குக் களங்கமின்றிக் கவிமாலை சூட்டிப் பாராட்டுகின்றார் கவிஞர்.

" பிறப்பினில் அன்னோர் பார்ப்பார்
•பேடியை முறைத்துப் பார்ப்பார்
முறைஇலாச் சாதி பேதம்
முளைத்திட்ட மூடக் கொள்கை
குறைத்திடப் பார்ப்பார் ; நல்ல
கொள்கையின் வழியைப் பார்ப்பார்
அறத்தினைப் பார்ப்பார், என்றும்
அதன்வழி நடந்தே பார்ப்பார்."

புலவர் நெஞ்சில் மட்டும் சிறைப்பட்டுக் கிடந்த செந்தமிழ்ச் சுவையைப் பொதுமக்கள் நாவுக்கு இழுத்து வந்த அமரகவி பாரதியை—தம் முன்னோடியை—வாணிதாசன் புகழ்ந்து பாடும் முறையே தனியானது.

" பிள்ளைத் தமிழ் என்றால் பிள்ளைத் தமிழ் எழுதி
வள்ளலுக்கும் மன்னவர்க்கும் தூதெழுதிப் பள்ளத்துச்
செக்காட்டு வார்போலச் செந்தமிழிற் பாட்டிசைத்தார்
அக்காலம் வந்தார் அமரகவி—பொக்கை வாய்த்
தாய்க் கிழவி, கன்னி, சிறுவர் சிறுமியர்கள்
வாய்கிழியப் பாடும் மறுமலர்ச்சிச்—சேய்க் கவிதை
புத்தம் புதுமைக் கவிதை புதுப் போக்கில்
நித்தம் புனைந்திங்கே நீட்டினார்."

கவிதை இலக்கியத்தில் பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இணையற்ற இடம் எப்போதும் உண்டு என்பதை உறுதிப்படுத்தும் வாணிதாசன் மக்களைக் கேட்கும் ஒரு கேள்வி இதோ :

" தனிஒரு வனுக்குண விலைஎனில் சகத்தினை
அழித்திடு வோமென் றார்த்தபா ரதியும்
புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம்
என்றஎன் ஆசான் பாரதி தாசன்
இடித்து முழக்கிய இன்தமிழ்ப் பாட்டும்
இலக்கியம் வளர்த்தகை எடுத்தியம் பாதோ ?"

சாவளவும் பாடி மறைந்த பாரதி தாசனது கவிதை வெறி வாணிதாசன் உள்ளத்தை நெகிழ வைக்கிறது. பாவேந்தர் பாட்டே உயர்ந்த

பாட்டு ; பாவேந்தர் பரம்பரையே கவிதைப் பரம்பரை என்று கூறுகிறார்.

“ சாவேந்து நாள்வரையில் ஈன்ற அன்னைத்
தமிழ்மொழியை எம்வாழ்வை என்றன் ஆசான்
பாவேந்தர் தமிழ்க்கவிதை முறைபின் பற்றிப்
பாடுகின்ற இளங்கவிஞர் பலர்உள் ளாரே”

“ அருளுக்கோ அன்றிப் புகழுக்கோ எந்நாளும்
பொருளுக்கோ பாடாமல் பொய்எதிர்த்தே பாடிவந்தார்
உள்ள தமிழுக்கு ஒருதீங்கு என்றுரைத்தால்
பெற்ற பிள்ளை என்றாலும் பின்வாங்க மாட்டாரே”

“ செந்தமிழ்ப் பாஎங்கே செவியில் விழுகிறதோ
அங்கெல்லாம் பாவேந்தர் அடிச்சுவட்டைக் கண்டிடலாம்
எங்கெங்குத் தனித்தமிழின் எழுச்சி மிகுகிறதோ
அங்கெல்லாம் பாவேந்தர் விளைவின் அறுவடையே.”

புதுமைக் கவிஞர் வாணிதாசன் இதுவரை பதினைந்து கவிதை நூல்களை வழங்கியுள்ளார். அவை தமிழச்சி, கொடி முல்லை, தொடு வானம், எழிலோவியம், வாணிதாசன் கவிதைகள், தீர்த்த யாத்திரை, இன்ப இலக்கியம், பொங்கற் பரிசு, குழந்தை இலக்கியம், சிரித்த நுணா, இரவு வரவில்லை, பாட்டுப் பிறக்குமடா, இனிக்கும் பாட்டு, எழில் விருத்தம், பாட்டரங்கப் பாடல்கள் என்பன. இவற்றுள் ‘தொடு வானம்,’ ‘பாட்டுப் பிறக்குமடா’ ஆகிய இரண்டும் இசைத் தமிழ்ப் பாக்களின் தொகுதிகள். ‘எழில் விருத்தம்’ என்பது பன்னிரு பொருள்களைப் பற்றிப் பன்னிரு வகை விருத்தங்களில் ஆகிய நூல். வீரபத்திர முதலியார் யாத்த ‘விருத்தப் பாவியல்’ என்னும் இலக்கண நூலுக்கு இலக்கியமாக விளங்கவும், எதிர்காலக் கவிஞர்க்கு விருத்தத்தின் எழிலைக் காட்டவும் எழுந்த நூல் இது.

வாணிதாசனின் தமிழ் வேட்கை

கவிஞனுக்குத் தன் மொழிதான் முதற் காதலி. தன் மொழியின் ஒலி நயத்திலும் இசையிலும் ஆழ்ந்துவிடும் கவிஞன், அதனை மீண்டும் மீண்டும் செவிகுளிரக் கேட்க விரும்புகின்றான். வாணிதாசன் தன் மனைவிக்கு இடும் கட்டளை என்ன ?

“ கொண்டுவா யாழைக் குழந்தைகளைப் பாடவிடு
பண்டைத் தமிழ்வீரம் பாடட்டும் கேட்போம்
அரசர் மடிமேல் அரும்புலவர் செந்நாவில்
ஓங்கி வளர்ந்த உயர்தமிழைப் பாடட்டும்
ஊன்உயிரை மக்கள் உணர்வை வளர்த்துவரும்
தேனும் செழுந்தமிழைப் பாடட்டும் கேட்போம்”

சிற்பம் ஓவியம் முதலிய இந்தியக் கவின் கலைகளை மேனாட்டுக் கலைஞர் வியந்து திகைக்கின்றனர்; இந்தியக் கலைகட்குரிய மூலம் — அடிப்படை — தமிழ்க் கலைகளே என்பதை வாணிதாசன் சுட்டிக் காட்டுகின்றார்.

“ சிற்பம் ஓவியம் செழுங்கலைக் கோபுரம்
மேலை நாடு வியப்பது தம்மொடு
கைகோத்து ஒருமையில் கலந்து திகழும்
இராசபுத் திரரின் இரவிவர் மாவின்
தாசு மகாலின் தகுதியே ஆகும்.
ஆனால் இவற்றின் அடிப்படை யாவும்
சிற்றன்ன வாயில் சென்றால் புரியும்.
கடல்மல்லை, காஞ்சி, தஞ்சை, மதுரை
சென்றால் கீழ்மேல் திசைநாட் டொருமை
இன்றும் இருப்பதை யாரே மறுப்பார்?”

அன்னைத் தமிழுக்குத் தீங்கு என்றால் கவிஞன் இதயம் கொதிக்காதா? எப்பக்கம் இருந்து தமிழுக்கு எள்ளத்தனை தீங்கு வரினும் எதிர்த்து முறியடிக்கத் தமிழரைத் திரட்டுகிறார் வாணிதாசன்.

“ வடக்கிருந்து வந்தவரை வாள் முனையில்
வெற்றி கொண்டான் மலையன் அந்த
வடக்கிருந்து வரும் எதுவும் தமிழுக்குப்
பகை என்றால் பகை நமக்காம் ”

“ ஊரினிலே வாழ்கின்றோம் உயர்தமிழர்
என்கின்றோம் ; உதவாப் பேச்சு ;
யார் இனிமேல் தமிழ்காக்க எனும்கேள்வி
எழும்பாமுன் எழுந்து வாரீர் ”

“எது பெரிது? தமிழா? உறவா?” என்ற கேள்விக்கு விடை தருகிறது கவிதை மடை. தமிழைப் பார்த்து உறுதி தருகிறார் :

“ செத்த மொழிக் காரர்உனைச் சீர்குலைய வைத்தால்
செங்குருதி நான் தருவேன் ; உனைஅழிக்க எண்ணில்
பெற்ற என்றன் முதற்குழந்தை ஆசை மனையாட்டி
பிணமாவர் ; உன்தாழ்வே தமிழி னத்தின் தாழ்வாம்.”

தமிழ் தாழ்ந்தால் தமிழன் தாழ்வான் ; தமிழ் உயர்ந்தால் மட்டுமே தமிழன் உயர்வான் என்பது வாணிதாசனது சூத்திரம்.

“ தமிழ் தாழ நீ தாழ்ந்தாய் தம்பி—கன்னித்
தமிழ் வாழ நீ வாழ்வாய் தம்பி ! தம்பி !

காந்தளூர்ச் சாலையில் கலகங்கள் அறுத்ததுண்டு
கடலினைத் தாண்டிப்போய் வெற்றி அடைந்த துண்டு

சோர்ந்தவர் அல்லர் நாம் சூரப்புலிக் கூட்டம்
தூக்கம் தெளிந்தால் இங்கே நிற்குமோ நரிக்கூட்டம்!"

என்று தமிழ் இளைஞர் வீரத்தைக் கிளறுகிறார் கவிஞர்.

பொதுமை நோக்கு

இயற்கையின் படைப்பில், மக்களிடையே எவ்வித வேற்றுமையும் இல்லை. மக்கள் தம்மைச் சுற்றிச் செயற்கையாகப் படைத்துக் கொண்ட வேற்றுமை வேலிகள் அனைத்தும் அறுத்தெறியப்பட வேண்டும்; அப்பொழுதுதான் மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும், அவர்கள் தொல்லைகட்கும் துயரங்கட்கும் விடிவு காலம் ஏற்படும். உணவும் விளைவும் பொதுவாக்கப்பட உடையும் உறையுளும் எல்லோர்க்கும் கிடைக்க வேண்டும்.

"வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்" எனக் கம்பன் கண்ட பொதுநிலை நாட்டில் வேர்கொள்ள வேண்டும் என விரும்புகிறார் வாணிதாசன்; பொது உடைமையைத் தம் வீட்டிலிருந்தே தொடங்கு கின்றார்; தம் வாழ்வரசியை நோக்கி அவர்,

"கூப்பிடு, வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி
காப்பெதற்குக் கார்தந்த செல்வம் விளைபொருள்கள்
சாப்பாட்டைத் தேக்காதே, சண்டை அதன்விளைவாம்
பாங்காக்கி உண்போம் பசியிராது பின்நாட்டில்"

என்று கூறுகிறார்; நாடு முன்னேறப் பொது உடைமையே சிறந்த வழி என்கிறார்.

"நாட்டின் விளைவைப் பொதுவாக்கி நாம் வாழ்ந்தால்
நாட்டோடு நாடாய் நடைபோட மாட்டோமா?"

பொருட் செல்வம் மட்டும் அனைவர்க்கும் பொதுவானால் போதாது. அறிவுச் செல்வமும் பொதுவாக வேண்டும் என்பது வாணிதாசனின் உள்ளக் கிடக்கை.

"இருவேறு உலகத்து இயற்கையைக் குறளும்
திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு எனும்
திருவும் தெளிவும் மருவுதல் பெற்றால்
இருவேறு உலகம் இருக்கா தென்றுமே."

இயற்கை

இயற்கையைத் துய்த்து மகிழாத கவிஞனோ, இயற்கை நுட்பங் களைக் கூர்ந்து நோக்காத கவிஞனோ உலகில் இதுவரை தோன்றிய தில்லை. ஒரு தலைவி தன் காதலனுக்கும் தனக்கும் இடையே உள்ள காதல் தொடர்பைத் தன் தோழிக்கு விளக்குவதாக,

" ஞாயிறு அனையன் தோழி
நெருஞ்சி அனையஎன் தடமென் தோளே "

எனப் பாடிய குறுந்தொகைக் கவிஞரைகட்டும்,

" பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்! "

எனப் பாடிய சத்திய முற்றுகைட்டும், இயற்கையை ஆரத் துய்த்த அறிஞனே கவிஞனுகலாம் என்பதை மெய்ப்பிப்ப, அக்கவிஞர் கால் வழியில் தோன்றிய வாணிதாசனும், இயற்கையை நுணுகி ஆய்கின்ற வர்; இயற்கை அழகை அணு அணுவாகத் துய்ப்பவர். அவர் தீட்டும் குளிர்கால ஓவியம் ஒன்றைக் காண்போம்.

" ஊதை உடல் நடுக்கும்; ஊரெல்லாம் தீக்காயும்;
கொம்புத் துவிர்கருகும்; கொத்தெல்லாம் சீர்அரும்பும்
செம்பாற் சிறுகிண்ணம் போல்பூக்கும் பூசணிப்பூ;
ஆமைத் தலைபோல் அழகுச் சிறுகாயை
நாமடைய விட்டு வைக்கும் நற்பறங்கி; வீட்டோரத்
தோட்டத்து வேலியிலே தொங்கும் சுரைக்காய்கள்;
மீட்டாது மாட்டிவைத்த மெல்யாழாம்; தென்னைமரக்
குட்டை நிறைந்த குளிர்அல்லித் தாமரைநீர்
மட்டத்தில் வந்துமலர் பூக்க எத்தனிக்கும்!
செந்நெல் பழுத்ததுவே! தீம்பலா முற்றியது!
கன்னலோ நாணற் கடல்போலப் பூத்ததுவாம்;
காட்டுப்பூ வனைப்பல்லாம் கார்முல்லை நீரரும்பு
வீட்டுக் கருகிருந்து மெல்லச் சிரித்தழைக்கும்
யாழ்மீட்டும் தேன்வண்டு! யாரதைப்போல் பாடவல்லார். "

மின்னலும் இடியும் மழையும் அச்சத்தை ஊட்டுவன. ஆனல், வாணி தாசன் கவிதையில் அவை இனிமையைப் பொழிகின்றன.

" சிங்கத் தமிழர் செருக்களத்து ஓசைஎன
வானம் இடிக்கும்; மழைபொழியும்; நீள் ஓசைத்
தங்க உருக்குபாய்த் தாரைகளைப் போல் மின்னல்
கண்ணைப் பறிக்கும்; கருத்தழிக்கும் காற்றிரைச்சல். "

அன்பும் காதலும்

வாழ்வில் நுனிப்புல் மேய்பவரே எண்ணற்றவர். கவிஞர்களோ எதையும் ஆழ்ந்து சிந்தித்து அதன் அடிப்படையைக் கிளறுபவர். உல கில் நடக்கும் அத்தனைச் செயல்களையும் ஆராய்ந்து சிந்திக்கும் வாணி தாசன் கண்களுக்கு, அன்புள்ளத்தைத் தவிர வேறு எதுவுமே தோன்ற வில்லை; நன்மை, தீமை, வஞ்சனை, பொருமை, போர், கொலை, ஏமாற்று, அறம், மறம் அத்தனைக்கும் அடிப்படையாக இருப்பது அன் புணர்வே என்பதை அழகாகப் பாடுகின்ருர்.

" தென்னையிலே காக்கைக் கருங்குஞ்சு செவ்வாயை
முன்திறக்கத்தாய்ப்பறவை மூக்கைவிட்டு வாயுள்ளே
குஞ்சுக்குக் கக்கிக் கொடுப்பதைநாம் கண்டிருந்தோம்
வஞ்சியே! அன்பால் மலையும் அசையுமடி"

' நாட்டுக்கு நாடு தனக்குள்ளே ஒவ்வாது
போட்டியிற் புத்தம்புதுப் போர்க்கருவி எல்லாம்
உண்டாக்கி உண்டாக்கி ஊரை மிரட்டுவதும்
கெண்டை விழியாளே! அன்பின் மறுதோற்றம்"

" அன்பு முதற்பொருளாம் அத்தனையும் பின்துணையாம்
இன்பத்தி னூடிடையே ஊடுவதும் நிற்பதுவும்
துன்பத்தி னூடுநாம் தோளிணைந்து நிற்பதுவும்
அன்பின் அசைவே."

அன்பின் மிக உயர்ந்த வெளிப்பாடு காதல் உணர்வாகும். ஒரு காதலன் தன் காதலியை முதலில் எதிர்ப்பட்டு இன்புற்றதைப் பின் நாளில் அவளுக்கு நினைவுபடுத்துவதைக் காணலாம்.

" பார்க்காது பார்த்துப் படர்ந்த கொடிமுல்லைப்
பூக்கொய்து கொண்டிருந்தாய்; பூத்தேடி வந்தவன்போல்
பேச முனைந்தேன் நான்; இல்லை; பிதற்றினேன்
ஆசை இருந்தும் அசையாமல் நின்றிருந்தாய்
பெண்ணை ஏன்இந்தப் பெரும்புலவர் எல்லோரும்
வண்ண மயில்என்றும் மான்என்றும் சொன்னார்கள்

ஊமை இனம் இவர்கள் உண்மை இதோ கண்டேன்.
ஆம்ஆம்எனச் சொன்னேன். அவ்வேளை என்னைநீ
கொல்லும் விழியால் கொலைசெய்யப் பார்த்ததுண்டு;
மெல்லச் சிரித்தாய் விளக்கமென்ன சொல்லேடி."

பெண்ணின் நடையும், அவள் கண்ணின் கடையும் காதலனுக்கு இன்ப வேதனை அளிப்பதைக் காண்போம்.

" அல்லி சிரிக்கும் குளத்தோரம்
அடர்ந்த ஆல மரத்தோரம்
மெல்லச் சிரித்து நடந்தாளின்
விழியோ குளிர்ந்த கருநீலம்
மெல்லச் சிரித்து நடந்தாளின்
விழியோ குளிர்ந்த கருநீலம்
அல்லஅல்ல உயிர் வாங்கும்
ஆறடிநீளக் கொடுஞ் சூலம்

காதல் கொண்ட தலைவி தன் துயரைத் தோழிக்கு உணர்த்துகிறாள்.

" கருத்தைக் கவர்ந்தவன் கண்ணில் இருக்கையில்
கண்ணை மூடுவ தெப்படி? — அடி
கட்டிக் கரும்பேநீ செப்படி

இரவும் பகலும் உறக்கம் வரவில்லை
எத்தனை நாளைக்கு இப்படி—அடி
ஏந்திழையே நீ செப்படி"

களவுக் காதல் நிகழ்ச்சியில் கவிஞர் உள்ளத்தை மிகவும் கவர்வன இரண்டு துறைகள். ஒன்று நாணிக் கண் புதைத்தல், மற்றது புறங் காட்டல். இவற்றையே மையப் பொருளாகக் கொண்டு ஒரு துறைக் கோவை பாடியோரும் உண்டு.

" காலை அரவிந்தம் கழுநீருடன் புணர்ந்தால்
மாலை அரவிந்தம் மயக்காதோ"

எனத் தனிப் பாடல் பாடி அமைதி பெற்றோரும் உண்டு. வாணிதாசன் உள்ளத்தையும் இத்துறைகள் கவர்ந்துள்ளன. தலைவி 'நாணிக் கண் புதைக்கும்' நிகழ்ச்சி இதோ :

" தேக்கு நிறை மலைச்சாறல் சென்றலுத்து நின்றேன்
சிற்றோடை நீர்அருந்தும் பிடிகண்டேன், வந்தேன்.
பூக்காட்சி வண்டிரண்டு முழுமதியில் மொய்க்கும்
புதுமையினை நான்கண்டேன் ; உனைக்கண்டேன் ; என்ன
நோக்கத்தால் முகம்மறைத்தாய்? ஆனாலும் உன்றன்
நூல்இடைக்கோ யார்காவல்? உயிர்பறிக்கும் கூந்தல்,
பூக்காத தாமரையின் இருமொட்டும் உன்றன்
போக்கெண்ணிச் சிரிப்பதற்கு நீஎன்ன செய்வாய்?"

'புறங்காட்டல்' என்னும் துறையைக் கவிஞர் வருணிக்கும் போக்கு இதோ :

" முகத்தை மறைத்து முதுகைக் காட்டி
மூடி இருப்பதும் ஏனோ? — வாயை
மூடி இருப்பதும் ஏனோ?
முல்லைக் கொடிநீ தானோ?

அகம் படித்துப் பின் புறம் படிக்கலாம்
அச்சம் தவிரடி மானே—எனக்கு
ஆசைக் கொருமுத்தம் தானே
அகங்கைத் தேனடி நானே."

வீரம்

தாய் நாட்டன்பு—நாட்டுப் பற்றாக—தாய் நாட்டுக்கு ஊறு விளையின் போர் வீரமாகப் பொங்கி வழியும். இந்திய நாட்டுக்குப் பாகித்தானும்

சினமும் ஊறிமைக்க நினைத்தபோது, நாடே கொதித்தெழுந்தது. வாணி தாசன் கவிதையில் அக்கொதிப்பை உணர்கிறோம். பாகித்தானைச் சாடு வதைப் பாருங்கள் :

" போர்என்று கேட்டவுடன் தோள்கள் வீங்கும்
புலிக்கூட்டம் நம்கூட்டம் ; உடலில் தைத்த
கூர்இல்லா வேல்எடுத்தும் பகையை வீழ்த்தும்
குறிதவறாச் செயல்வீரர் ; வானில் மோதும்
கூர்போன்ற களிறெறிவோர் அன்னோர் முன்னர்
கள்ளநெறி பாகித்தான் பிழைப்ப துண்டோ ?
சீர்மிகுந்த பாரதமே வெற்றி கொள்ளும்
செந்தமிழில் போர்ப்பரணி பாடு வோமே."

உழவுக் காதல்

நாட்டுக்குக் காப்பு நல்குவோன் வில்ஏர் உழவனாகிய போர் வீரன். ஆனால் உலகுக்கே ஊட்டம் கொடுப்பவன் நல்ஏர் உழவன் தான். 'வீரன் வெல்க' (ஜெய் ஜவான்) என முழக்கம் இட்டால் மட்டும் போதாது. 'உழவன் உயர்க' (ஜெய் கிசான்) என்பதையும் மறக்கக் கூடாது. அடிப்படைகளை ஆராயும் வாணிதாசன் உலகின் அச்சாணியாம் உழவனை மறப்பாரோ ?

" உழவாக்கம் இல்லைஎனில் உயிராக்கம் உண்டோ
உயிராக்க இல்லைஎனில் ஊராக்கம் உண்டோ
விழவாக்கம் பொருளாக்கம் வெற்றிமுர சாக்கம்
வீரர்களின் தோளாக்கம் வெளிஉலக நட்பு
பழகுமொழிச் சொல்லாக்கம், பகுத்தறிவின் ஆக்கம்
பறந்துசென்று நிலவுலகைப் படம்பிடிக்கும் ஆக்கம்
அழகுவயல் செந்நெல்லின் அறுவடையால் அன்றி
ஆகாதே ஆகாதே ஆகா தாமே."

கவிதை

கலைஞர்கள் தாம் கையாளும் கவிதையின் சிறப்பை உணர்ந்து பயன்படுத்துவர். கவிஞர் வாணிதாசனும் தம் கருவியான கவிதை யின் பழமை, அதன் ஆற்றல், அதன் இணைஇலா உயர்ச்சி முதலிய வற்றை நன்கு உணர்ந்தவர்.

" மொழியினுக்கு உருவங் காண
முற்பட்ட காலந் தொட்டே
மொழியினில் உணர்வு தோன்ற
முகிழ்த்ததே கவிதை வாழ்க "

எனக் கவிதையின் பழமைத் தோற்றத்தைக் கூறும் அவர், அக் கவிதை தமிழகத்தில் வரிப் பாடலாகவும், குரவைப் பாட்டாகவும் வளர்ந்து அகப் பாட்டாய்ப் புறப்பாட்டாய்க் கனிந்த வகையை விளக்குகின்றார்.

"வாட்டமாய்ப் பெண்கள் கூடி
வளைந்துபின் நிமிர்ந்து, காய்ந்து
தட்டுவர் தத்தம் கையைத்
தமிழ்இசை மலைத்தேன் போலச்
சொட்டிடும் உளத்தில் தோய்ந்த
உணர்ச்சியின் தூய இன்பம்
மட்டின்றித் தோன்றும் அ:தே
மாத்தமிழ்க் குரவைப் பாடல்."

புதுச்சேரியின் சிறப்பு

புதுவை மாநிலக் கவிஞரான வாணிதாசனுக்குப் புதுவையின் அழகும் சூழலும், கடற்கரையும் பூங்காவும், பழம் பெருமையும் புதுப் பொலிவும் பெருமிதம் அளிக்கின்றன.

"அலைகடல் முழக்கம்; புன்னை
அடர்கிளை பொன்னைச் சிந்தும்;
இலைவிழி நெய்தல் நீண்ட
கழியிடைச் சிரிக்கும்; பெண்கள்
கலைபயில் கூடம் எங்கும்
சிலம்பொலி காதில் கேட்கும்
புலவர்கள் உலகுக் கீயும்
புதுமையால் புதுவை யாமே."

சான்றோர் போற்றல்

பாட்டுலகில் பாரதியும், பாரதிதாசனும், வாணிதாசனின் பெரு மதிப்புக்கு உரியவர் ஆனதுபோல இந்தியத் தலைவரிலே காந்தி அடிகளும், தமிழக அரசியலில் அறிஞர் அண்ணாவும், கலைஞர் தமிழவேள் கருணாநிதியும், கலை உலகில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும், தமிழ் உலகில் மயிலை சிவமுத்தும், இவர் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டனர். காந்தி சுடப்பட்டதைக் கேட்டுக் குமுறுகிறார் கவிஞர்:

"கட்குடியைப் போக்குவதற்கும் பிறரால் போட்ட
கால்விலங்கை நீக்குதற்கும் சிறையும் சென்று
முப்பாட்டை வழிஒழித்து மக்கட் காக
முழுநாளைச் செலவழித்த சுடரை, அந்தோ
எக்காலம் இனிக்காண்போம்? இதுகைம் மாறோ
இருவுலகிற்கு இனியாரே
கூட்டாகத் தமிழ் நாட்டீர் முனைந்தெழுந்தே
காந்திவழிக் குறைமுடிப்பீர்! மடமை மாயும்."

அறிஞர் அண்ணாவின் பெயரை அடிக்கொரு முறை கூறி வியந்து வியந்து மயங்குகிறார் வாணிதாசன்.

“தாவிவரும் குழந்தைபோல் இனியன் அண்ணா
தமிழ்ப்பகைவர் நடுநடுங்கும் கொடியோன் அண்ணா
பூவில்உறை நறுந்தாதை மணத்தை நல்கும்
புதுத்தென்றல் தமிழ்த்தென்றல் எங்கள் அண்ணா.”

கலைஞர் கருணாநிதியின் வீரமும் எழுத்தும் செயல் திறனும் பேச்சாற்றலும் வாணிதாசன் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளுகின்றன.

“தம்பிகளில் தலைசிறந்த கலைஞர் ஏறே!
தமிழ்நாட்டு மலைச்சாரல் குளிர்பூங் காற்றே!
கொம்புத்தேன் பேச்சாள! கடலா ழத்தே
குளித்தெடுத்த நல்முத்தே! பகையை வீழ்த்தும்
அம்பொத்த செயல்மறவ! சங்க கால
ஆன்றோரின் புறப்பாட்டே! இளைஞர் நெஞ்சில்
தெம்பேற்றும் எழுத்தாள! தமிழர் வாழ்வின்
திருக்குவளை மாநிதியே வாழ்க நீடே!”

என வாழ்த்துகிறார்.

புலவர் குழந்தையின் படைப்பான இராவண காவியத்துக்கு விதித்திருந்த தடையைத் தமிழவேள் கருணாநிதி நீக்கிய செயல், அறிவுக்கு வழங்கப்பட்ட விடுதலை எனத் துள்ளி வரவேற்கிறார் வாணிதாசன்.

“தடைபோட்டவர் தமிழ் நாட்டினை
முன்நாள்அர சாண்டார்
நடைபோட்டனர்; இன்றோ தமிழ்
நாட்டின் பகை ஏற்றார்;
கடைப்பட்டவர் செயல் மாற்றிய
கருணாநிதி முதல்வர்
மடைவற்றிடா வயல்போல் வளம்
மலிந்தோங்குக நீடே.”

அறிவுரை

கவிதைத் தேனில் கைக்கும் அறிவுரையையும் கலந்து தருவது கவிஞரின் உரிமை. நாட்டு மக்களுக்கு இன்றைக்குத் தேவையான அறிவுரைகளை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் விளக்குகிறார் கவிஞர்.

கல்லூரிப் பயில்வோர் கைத்தொழிலும் பயிலவேண்டும். படித்தவரிடையே வேலையின்மையைப் போக்குவதற்கு அதுவே ஏற்ற வழி என்பதைப் பல இடங்களில் வாணிதாசன் வற்புறுத்துகிறார்.

“கல்லூரி சென்று கலைபயின்று வேலையின்றி
அல்லும் பகலும் அலைகின்ற தமிழ் நாட்டீர்!
கைத்தொழிலைக் கற்றிடுவீர்! கவலை பறந்தோடும்
எத்தொழிலும் இழிவில்லை எனஎண்ணிச் செயல்படுவீர்!”

"எத்தொழிலைச் செய்தாலும் எவரெவரே யானாலும்
அத்தொழிலின் மேன்மையே அவரவரின் பொற்காலம்
குடிசைத் தொழில் எனவே கூறிடுவீர் ஆனலென் நற்றெழிலாம்
குடிசைத் தொழிலே குடி செழிக்கும்."

நல்லதுஎது செய்தாலும் அஞ்சக்கூடாது; அச்சமே தாழ்வனைத் துக்கும் மூல காரணம் என்று கூறுகிறார்.

"நாமார்க்கும் அடிமை அல்லோம்; நமனையும் நாம் அஞ்சோம்"

என அப்பர் பெருமானை, அடி ஒற்றி முழங்குகின்றார்.

மக்கட் பெருக்கத்தால் நாடும், குழந்தைப் பெருக்கத்தால் வீடும் படும் தொல்லைகளைப் போக்கக் கருத்தடை ஒன்றே வழி என்று முழங்கு கின்றார்.

"ஒன்றிரண்டு நன்மக்கள் போதுமடா அண்ணே
ஓயாத தொல்லையடா பலபிள்ளை அண்ணே"

"கருத்தோன்றும் வழிஅடைப்போம்
இதில் என்ன குற்றம்"

என்றும் கேட்கின்றார்.

குடும்பத்தின் விரிவே நாடு; குடும்ப நலனே நாட்டின் நலன். கலியாணமாகாத தம்பிகள் எவ்வாறு தம் எதிர்கால வாழ்க்கைத் துணைவியரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும் காதோடு காதாகக் கூறுகிறார் கவிஞர்.

"படிக்காத பெண்களோ கம்பளிப் பூச்சி
பண்பிலா திருப்பவள் செந்தேள் சீச்சீ
அடிக்கடி அழுபவள் அயலவர் சூழ்ச்சி
அடங்காப் பிடாரியால் மனையறம் வீழ்ச்சி
பணக்காரப் பெண்களோ பகட்டான பொம்மை
பட்டியோ ஊர்ச்சண்டைக் கிழுப்பாளே நம்மை
வணக்கமாய் இருப்பவள் வாழ்க்கைக்கு நன்மை
மனத்தில்வை மாப்பிள்ளாய் நான்கண்ட உண்மை."

அணி நலன்

அணிகள் இல்லாத கவிதை பணிகள் இல்லாத பாவை. வாணி தாசன் கவிதைகளில் அணிகளுக்குப் பஞ்சமும் இல்லை; அணிகளின் குவியலும் இல்லை; கருத்துக்கேற்பக் கச்சிதமாக ஆங்காங்கே ஏற்ற அணிகள் எழிலாக ஒளிக்கின்றன.

"விண்மீன் எழுந்ததே! என் உளம்போல்—வான்
ஏங்கி வெதும்பிய கொப்பளமோ?"

இப்படி ஓர் உவமை.

"இருட்பெருக்கம் போக்கு தற்கோ
ஒளிப்பெருக்கம் வேண்டும்
இடைப்பெருக்கம் போக்குதற்கோ
நடைப்பெருக்கம் வேண்டும்
மருட்பெருக்கம் போக்குதற்கோ
மனப் பெருக்கம் வேண்டும்
வாய்ப்பெருக்கம் போக்குதற்கோ
நூற்பெருக்கம் வேண்டும்"

இப்படி ஒரு சொற்பொருள் பின்வரு நிலை அணி.

"கண் திருந்த வேண்டும் அதில்
வேற்றுமை காண்பதுவோ
கண் திருந்திப் போனால் எக்
கண்ணும் திருந்தி விடும்".

(கண் : விழி, அறிவு, இடம்)

இப்படி ஒரு சொல் பின்வரு நிலையணி. இப்படி எத்
கவிதையின் இடை இடையே மின்னுகின்றன.

நகைச்சுவை

மென்மையான நகைச்சுவை வாணிதாசன் கவிதைகளில் இழை யோடுவதை நாம் காணலாம்.

"என்றும் கடலின் ஓரத்தே
இருந்து வாழும் சூழல் விளக்கே
ஒன்று கேட்பவன் கோட்டான்போல்
உனக்கும் பகலில் கண் குருடோ?"

கலங்கரை விளக்கம் பகலில் ஒளி வீசாததை இவ்வாறு கிண்டல் செய்கிறார் கவிஞர்.

கவிஞர் வாணிதாசன் தம் மனைவியிடம் காசு கேட்டார். அம்மையாரோ 'உங்கட்கு வேறு வேலை இல்லை' என்றாராம். உடனே வாணிதாசன்,

"காசறு பொன்னே களி வண்டே"
(காசு அறு : (1) காசு இல்லாத ; (2) காசினை
உன்னிடமிருந்து விலக்கி என்னிடம் கொடு)

என்று கொஞ்சுகின்றார்!

40

கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த் துணைப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-5.

முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நின்றொளிர்வது நம் மொழியாம் தமிழ்மொழி. தமிழ்மொழி தொன்மைச் சிறப்புடன் இலக்கியச் செல்வங்களையும் பெற்று வளமாக வாழ்ந்துவரும் வண்டமிழ் மொழியுமாகும். காலந்தோறும் இம்மண்ணில் தோன்றுகின்ற கவிஞர்கள் புதிய புதிய இலக்கிய வடிவங்களை இயற்றிச் சாவா மூவாத் தமிழிற்கு ஒப்பனை செய்து வருகின்றனர். 'காலத்தின் தேவைக்கேற்பக் கவிஞர் தோன்றுவர்' என்பர். இம்முறையில் இந் நூற்றாண்டின் கால்நூற்றாண்டின் முடிவில் தோன்றியவர் கவிஞர் தமிழ் ஒளி ஆவர்.

ரக்தாட்சி ஆண்டு, புரட்டாசித் திங்கள், ஆறும் நாள் (21-9-1924), தென்னாற்காடு மாவட்டத்தில் நெசவாளர்கள் மிகுதியாக வாழும் குறிஞ்சிப்பாடியை அடுத்த ஆடூர் என்னும் சிற்றூரில் திரு. பொ. சின்னையா — செங்கேணி அம்மாள் தம்பதிகட்குத் தலைமகனாகப் பிறந்தார், கவிஞர் தமிழ் ஒளி. பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் விஜயரங்கம் என்பதாகும். கவிஞர் பிறந்த ஊர்தான் ஆடூரேயொழிய, மற்றபடி கவிஞர் வளர்ந்த ஊர், நலமிக்க நாட்டுப் பற்றுளர்க்குப் புகலிடம் தந்து, புதிய இலக்கியப் படைப்புகளுக்கும் காரணமாக அமைந்த செந்தமிழ்த் தென்புதுவையாகும். பாரதியார், பாரதிதாசன், வாணிதாசன், தமிழ் ஒளி முதலிய கவிஞர்கள் தம் கவிதைகளைப் புனையப் புதுச்சேரி வாழ்விடமாக அமைந்தது.

இளமையும் கல்வியும்

திரு. விஜயரங்கம் தம் தொடக்கக் கல்வியினைப் பிரெஞ்சுமொழிப் பள்ளியிலும், உயர் கல்வியினைக் கல்வே கல்லூரியிலும், தமிழ்ப் புலவர் கல்வியினைக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியிலும் கற்றார். ஆயினும் புலவர் இடைநிலை வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போதே அதாவது—1945ஆம் ஆண்டில் கல்லூரி விடுமுறையின்போது சென்னைக்கு வந்த திரு. விஜயரங்கம், சென்னையிலேயே நிரந்தரமாகத்

தங்கிவிட்டார். எனவே அவரின் படிப்பு முற்றுப் பெறவில்லை. இதற்கு அவர் கூறிய காரணங்கள் இரண்டாகும். ஒன்று: தமிழ்ப் புலவர் பாடத் திட்டத்தில் வேண்டாத விரும்பத்தகாத அலுப்பூட்டும் பாடப் பகுதிகள் இருந்து அவருக்குச் சோர்வூட்டியமை. இரண்டு: சென்னையின் அன்றுட அரசியல், மற்ற ஆரவார நிகழ்ச்சிகளில் அவர்தம் இளம் மனத்தில் ஏற்பட்ட வேட்கை.

கவிதை உள்ளமும் பற்றும்

பள்ளிக்குத் துள்ளிச் செல்லும் பிள்ளைப் பருவத்திலேயே இவர் பாடல்கள் புனைவதில் அளவுகடந்த ஆர்வம் காட்டினர். வைகறையில் துயிலெழுந்து, தம் தோட்டத்திலுள்ள நாவல் மரத்தின்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு, கதிரவனைப் பார்த்துக் கவி புனைவதில் ஈடுபட்டு விடுவார். இரவிலும் பிறர் தூக்கத்திற்கு இடையூருக இருந்தாலும் இவர் எழுத்துப்பணி தொடர்ந்தது. திரு. விஜயரங்கம் புதுவையில் கல்வே கல்லூரியில் பயின்றுவந்த பொழுது பாரதியார் அங்கு வாழ்ந்த வரலாற்றை விருப்புடன் கேட்டறிந்தார். அவர் கவிதைகளில் பெரிதும் ஈடுபாடு காட்டினர். அதுபோது கல்வே கல்லூரியில் ஆசிரியத் தொழில் நடாத்தி வந்த பாரதிதாசன் அவர்களுடன் ஆசிரியர் —மாணவர் தொடர்பு கொண்டார். பாவேந்தரின் அன்பிற்குப் பாத்திரமாக அவருடைய இல்லத்தினையே சின்னுட்கள் தம் வாழ்விடமாகக் கொண்டார். நீறுபூத்த நெருப்பாக இருந்த திரு. விஜயரங்கத்தின் கவியுள்ளத்தைத் தம் ஆர்வக் காற்ருல் ஊதிக் கனியச் செய்ததில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுர்க்குப் பெரும் பங்கு உண்டு.

கரந்தைப் புலவர் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் கவிஞர் பயின்று வந்தபொழுது 'சிற்பியின் கனவு' என்ருெரு நாடகத்தை இயற்றினர். இந்நாடகத்தினைச் 'சக்தி நாடக சபை'யினர் அரங்கேற்றித் தமிழ் நாடக உலகிற்கு நம் கவிஞரை அறிமுகப்படுத்தினர். இந் நாடகக் கதையே பின்னுளில் 'வணங்காமுடி' என்ற பெயரில் திரைப்படமாக வந்து வெற்றி கண்டது.

தொழிலும் தொண்டும்

இலக்கியப் பத்திரிகைகளுக்குக் கவிதைகள் தீட்டி அனுப்பி வந்தார். தமிழிற்கு ஒளியூட்டவல்ல நல்ல இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்பதே அவருடைய இலட்சிய நோக்காக இருந்தது. 'தமிழ் ஒளி' என்ற புனைபெயரில் கவிதையுலகிற்கு அறிமுகமானுர். சென்னையிலிருந்து வெளிவந்த முற்போக்குப் பத்திரிகைகள் பலவற்றில் அவர் கவிதைகள் இடம்பெற்றன.

கவிஞர் பிற்பட்ட சமூகத்தில் பிறந்தவர்; எனவே, இயல்பாகவே தாழ்த்தப்பட்ட மக்களிடம் பாசம் கொண்டிருந்தார். அவர்தம் உரிமைகளுக்குப் போராடும் திறமும் கொண்டிருந்தார். தொழிலாளர்

களின் வேலை நீக்கம், கதவடைப்பு, கூலி உயர்வு முதலான தொழிற் சங்கப் போராட்டங்கள் இவர் இரக்க உள்ளத்தை ஈர்த்தன. அதன் விளைவு, அவர் தம் உள்ளத்தை, வாழ்வை, பணியைப் பாட்டாளி வர்க்கத்தின் நலத்திற்கென்றே காணிக்கையாக்கிக் கொண்டதாகும். தம் புரட்சிகரமான கருத்தை உள்ளடக்கிப் பல நூற்களை இவர் அந்நாளில் எழுதினார். கவிதைகளோடு மட்டுமின்றிக் கணக்கற்ற சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதித் தொழிலாளர் நலம் நாடினார். 1949ஆம் ஆண்டில் 'முன்னணி' என்ற வார ஏட்டின் துணையாசிரியராகப் பணியாற்றிவிட்டுப் பின்னர் 'ஜனயுகம்' என்ற திங்கள் இதழ் ஒன்றைத் தொடங்கி, இரண்டு திங்கள் நடத்தினார். பணம் பற்றுக்குறை அவர் பத்திரிகை முயற்சியினை வாழ விடவில்லை. குடும்பச் சொத்தான தென்னந் தோப்பையும் விற்றுப் பத்திரிகையை நடத்த வேண்டும் என்று அவர் மேற்கொண்ட முயற்சி பெற்றோர் இணங்காமை காரணமாகத் தோல்வியைத் தழுவியது.

சென்னை வாழ்க்கை

கவிஞர் 1949ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டுவரை பதின்மூன்று ஆண்டுகள் சென்னையில் தங்கி வாழ்ந்தார். தொடக்க காலத்தில் அரசியல் ஈடுபாடு கொண்டிருந்த அவர் 1953 ஆம் ஆண்டிலிருந்து இலக்கிய ஆராய்ச்சியில் மட்டுமே ஈடுபாடு கொண்டார். சங்க இலக்கியந் தொடங்கிப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் இயற்றிய கவிதைப் படைப்புகள் வரை ஆராய்ந்த அவர் நெஞ்சில் கம்பநாடனின் கவிதை தனித்ததோர் இடத்தினைப் பெற்றது. 'தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சி என்பது கம்பனை மீண்டும் காண்பதில் தான் இருக்க வேண்டும்' என்பது அவர்தம் ஆணித்தரமான நம்பிக்கையாகும். எனவே தம்முடைய கவிதையொன்றில்,

> பண்ணுக்குப் பண்தந்தும் பயன்தந்தும் செந்தமிழ்க்
> கண்ணுக்குக் கண்தந்தும் கதிதந்தும் நீ சென்ற
> விண்ணுக்கு மதிதந்தும் விறலிக்கே இகழ் தந்தும்
> எண்ணுக்குக் கடல்தந்தும் எமக்கிதயந் தந்தாய்நீ![1]

என்று பாடக் காணலாம்.

1955ஆம் ஆண்டில் 'விதியோ, வீணையோ?' என்னும் இசை நாடகத்தினைப் புதுப்போக்கில் தமிழுலகத்திற்கு வடித்துத் தந்தார். 1957-58ஆம் ஆண்டுகளில் 'கண்ணப்பன் கிளிகள்', 'புத்தர் காவியம்' என்ற இரண்டு கவிதை நூல்களை இயற்றினார். ஆனால் 'புத்தர் காவியம்' மட்டும் முடிவு பெறவில்லை. 1959-60ஆம் ஆண்டுகளில் ஆராய்ச்சி நூல்கள் சில வெளிவந்தன. 'சிலப்பதிகாரம் நாடகமா காவியமா?' 'திருக்குறளும் கடவுளும்,' 'தமிழர் சமுதாயம்' என்பனவே அவை. பின்னர், கவிஞர் வாழ்க்கையில் ஒரு கொடிய திருப்பம் வந்துள்ளது. என்புருக்கி நோய் அவர் பிஞ்சுடலை வாட்டியது. பெற்றோர் சென்னை

வந்து கவிஞரை வலுக்கட்டாயப்படுத்திப் புதுவைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர் உடல்நிலை மேலும் மோசமானது. 1964ஆம் ஆண்டு சென்னை வந்தார். வறுமை வாட்டியது. நோய் முற்றியது. 29-3-1965 அன்று கவிஞர் வாழ்வு முடிந்தது.

நாற்பதே ஆண்டுகள் மண்ணில் வாழ்ந்த அக் கவிஞர் வாழ்வு இரங்கத்தக்கது. ஏன், கவிஞர் பலரின் வாழ்வும் இத்தகைய தன்மை யுடையதுதானே!

மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே[2]

என்ற இலக்கியத் தொடருக்கு விளக்கமாக ஒளிர்கின்றார் கவிஞர் தமிழ் ஒளி.

இனி, அவர்தம் கவிதையின் உள் நுழைந்து காண்போமாக!

ஓசை நயம்

'ஓசை நயமும் கற்பனை வளமும் இயல்பாக அமைந்த கவிஞர் தமிழ் ஒளி' என்று டாக்டர் மு. வ. அவர்கள் குறிப்பிடுகின்றார்[3]. இதற் கேற்பக் கவிஞரின் பாடல்கள் பலவற்றின் ஓசை நயம் நம் செவிகளை நிறைவிக்கின்றன; கற்பனை வளமும் நெஞ்சை அள்ளுகின்றன.

செந்தாமரைப் பெண்டிற்
தேன் சுரும்பர் என்கின்ற
பந்தாடற் காண்டி
இளவேனில்!
பந்தாடல் கண்ட
பரவசத்திற் காதலன்போல்
வந்தாடற் செய்தியால்
வாழி இளவேனில்!

என்று 'வாழி இளவேனில்' எனும் கவிதையில் கானல்வரிப் பாடல், பரஞ்சோதியர் திருவிளையாடல் முதலானவற்றில் காணப்படும் ஓசை நயத்தினைக் காணலாம்.

இதுபோன்றே 'தென்னம் பந்தல்' எனும் கவிதையில்,

வானக் கருமுகில் மீது செழுங்கதிர்
வந்து படுகின்ற வேளை
வெடித்தது தென்னம் பாளை!
ஞானக் குமரி நகைத்தனள் பார், அந்தோ
நாற்புறமும் தென்னஞ் சோலை!
நன்கு விடிந்திடுங் காலை!

மேலும், 'தாமரைப் பெண்' எனும் கவிதையில் கதிரவன் கூற்றில் வரும் பாடலில் ஓசை நயம் பொங்கித் ததும்புவதனைக் காணலாம் :

மொட்டென் றிருந்தவுன் மேனியிற் காலையில்
முத்தம் கொடுத்தவன் நான்—மனப்
பித்தங் கொடுத்தவன் நான்! — ஒரு

பொட்டென் றிருந்தவுன் மேனி மணம்பெறப்
பூத்திடச் செய்தவன் நான்—கலைக்
கூத்திடச் செய்தவன் நான்!

கற்பனை நயம்

கவிஞர் கற்பனைச் சிறகு விரித்து வானிற் பறக்கிறார் : காணும் காட்சியினைக் கவினுற விரிக்குந் திறம் பெற்று மிளிர்கிறார். அவர் காட்டும் கற்பனை நம் உள்ளத்தில் உவகை பூக்கச் செய்கிறது.

'பட்ட மரம்' எனுங் கவிதை, கவிஞர் தமிழ் ஒளியின் கற்பனை உள்ளத்தின் உரைகல்லென நிற்கிறது.

மொட்டைக் கிளையொடு
நின்று தினம்பெரு
மூச்சு விடும்மரமே!
வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந்தனையோ?

குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்த இலை!
வெந்து கருகிட
இந்த நிரம்வர
வெம்பிக் குமைந்தனையோ?

கட்டை யெனும்பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையே!
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!

காலம் எனும்புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் ஒருமனிதன்

ஓல மிடக்கரம்
நீட்டிய போல்இடர்
எய்தி உழன்றனையே!

பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்துதவும்,
மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்துதவும்,

ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்துதவும்,
ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே!

கார்த்திகை விளக்கினைச் சொல்ல வரும் கவிஞர்,

ஐப்பசித் தூதை அனுப்பிவைத்துக் கார்த்திகையைக்
கைப்பிடித்த வானின் ககனத் திருவிளக்கு!

என்கிறார். 'மீன்கள்' பற்றிப் பாடவந்த கவிஞர், 'இராவெனும் வறுமையின் கந்தல் உடைதனில் எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?' என வினா விடுக்கின்றார். இவருக்குப் பிச்சைக்காரர் இதயத்தின் விம்மல்கள் காலம் எழுதும் எழுத்துக்களாகத் தோன்றுகின்றன.

பாரதியாரின் 'கண்ணம்மா' பாட்டினை அனைவரும் அறிவர். இதே போக்கில் கவிஞரின் 'கண்ணம்மா' கவிதைச் சிறப்புகள் பலவும் பெற்று வீறுர்ந்து விளங்கக் காணலாம்.

கண்ணம்மா

மஞ்சள் கரைத்து விட்டாள்—கண்ணம்மா
மாணிக்க ஓடையிலே!
நெஞ்சங் கரைந்து விட்டேன்...மஞ்சளாய்
நீந்திநீ ராடுகிறேன்!

மூழ்கிக் குளித்து விட்டாள்—கண்ணம்மா
முத்துநீர் ஓடையிலே!
தாழ்குழ லில்மல ராய்—அடியேன்
தாவிட நீந்துகிறேன்!

நீரைக் கலக்கி விட்டாள்—கண்ணம்மா
நித்தில ஓடையிலே "

பேரைக் கலக்கி விட்டாள்—அலைகளில்
பேசிநீ ராடுகிறேன் !

சேலை பிழிந்து விட்டாள்—கண்ணம்மா
சித்திர ஓடையிலே !
ஆலை பிழிகரும் பாய்—என்னுளம்
ஆடநீ ராடுகிறேன் !

உள்ளம் எழுதி விட்டாள்—கண்ணம்மா
ஊற்றுநீ ரோடையிலே!
கள்ளம் அழிந்து விட்டேன்—அடியேன்
காதல்நீ ராடுகிறேன் !

திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் 'வஞ்சி வந்தனளே, மலைக் குறவஞ்சி வந்தனளே' என்ற மெட்டு,

மாமரக் கொம்புகள்
தோரணங் கொண்டு
மலர்கள் அசைந்தாடக்
காமனைச் சென்று
கருங்குயிற் கன்னி
கலந்து இசைபாடப்,
பூமகள் புன்னகை
கொண்டு மலர்கள்
புனைந்து புனைந்தாடக்
கோமள வல்லி
வசந்த மனோகரி
கொஞ்சிட வந்தாளே

என்ற பாடலில் எதிரொலிக்கக் காணலாம்.

உள்ளீடு

கவிஞர் தம் கவிதையில் அரிய கருத்துகள் பலவற்றை ஆங்காங்கே பதித்திருக்கக் காணலாம். " Poets are judged by the frame of mind they induce. " இம்முறையில் பார்த்தால் கவிஞர் தமிழ் ஒளி, தம் கவிதையினைப் படிப்போருக்கு நற் கருத்துக்களைப் புகட்டி நிற்கக் காணலாம்.

' வேண்டும் வரம் ' எனுங் கவிதையில்,

மனமென்ற பேயை விரட்டிப் பிடித்து
வசத்தில் மடக்கிவிட்டால்,
தினம்வென்று வென்று சிரித்துச் சிரித்துத்
திடங்கொண்டு வாழ்ந்திடலாம் !

ஐந்து குதிரைகள் ஓடுமுன் பற்றி
அதட்டி நிறுத்திவிட்டால்,
இந்த உலகம் நமைச் சுற்றி வந்திடும்
இட்ட பணிபுரியும் !

ஓட்டை உடலம் உருப்பட நித்தம்
ஒருசிந்தை கொண்டிருந்தால்,
கோட்டை யிதற்குக் கொடிகட்டிச் சேனைகள்
கும்பிட வாழ்ந்திடலாம் !

கேவல ஆசையின் வாய்கள் நொறுங்கக்
கிழித்தெறிந் தால் உலகில்,
சாவு பயப்படும் ; மானுடம் வென்று
'ஜயம்ஜயம்' என்றிடும் !

'கவிஞன்' எனும் கவிதையில்,

சாயும் கதிர்களிலே—இருட்
சாலம் புரிகையிலே
காயும் நிலவெனவே—வழி
காட்ட எழுந்திடுவேன்!

என்றும்,

ஊரை எழுப்பிடவே—துயர்
ஒன்றை நொறுக்கிடவே
தாரை முழக்கிடுவேன்—தமிழ்ச்
சாதி விழித்திடவே !

என்றும் கவிஞர் தம் இலட்சிய வேட்கையை வெளியிடுகின்றார். மேலும்,

மண்ணில் முளைத்தவன் நான்—அதன்
மார்பில் திளைத்தவன் நான்
எண்ணித் துணிந்துவிட்டேன்—இனி
எங்கும் பறந்து செல்வேன் !

என்ற கவிதை, உலக அறிஞர்க்கும் கலைஞர்க்கும் கூறப்படும் ஒப்பற்ற அனுபவ அறிவுரையாகத் திகழ்கிறது. 'நாளை எனும் நாளை' வரவேற்கும் கவிஞர் கவிதையில் அவருடைய ஆழ்ந்த சித்தாந்தம் விளங்கக் காணலாம்.

நேற்று வாழ்ந்த வாழ்வெல்லாம்
நினைவைக் கொல்லும் சோதனையாம்
காற்றில் கதறும் துன்பஒலி
கனலுங் கனலாம் இன்றைக்கு !

நேற்றும் இன்றும் வெறுப்புற்றேன்
　　நீயேன் இன்னும் ஒளிகின்றாய் ?
ஊற்று மருந்து தரவல்லாய் !
　　மலரும் நாளே வாராய்நீ !
சுற்றம் என்போர் கைதிகளாம் !
　　சொத்தும் சுகமும் கற்பனையாம் !
வற்றும் குளத்து மீனைக
　　வாழ்நாள் எய்துந் துயர்போகக்
கற்றோர் நெஞ்சக் களிப்பேபோல்
　　கம்பன் செய்த கவியேபோல்
நற்றேன் ஒழுக மலர்விரியும்
　　நாளே வாராய், வாராய்நீ !

பெரியார் போற்றல்

கவிஞர் நாட்டுத் தலைவர்களையும், கவிஞர் பெருமக்களையும் தக்காங்கு போற்றக் காணலாம். புலமையைப் புலமை மதித்தல் சிறப்பன்றோ ! நேரு இல்லாத இந்தியா, 'நீரிலா நிலத்தைப் போலாம்!' என்றும், பாரதியின் புகழ் பாடுகையில்,

கண்வழி சொட்டுங் குருதி யொடுங்
　　காணில் வழிதடவி—தமிழ்ப்
பண்வழி சென்று பழம்புகழ் சேர்த்தவன்
　　பாரதி என்பவனும் !
கொத்தும் வறுமைக் கழுகு பறந்திடக்
　　கூகை அலறிவிழப்—பணப்
பித்தர் திரியக் கிடந்த இருளைப்
　　பிளந்து பிளந்தெறிந்தான் !

என்றும் குறிப்பிட்டுள்ளார். பாரதிதாசன் புகழினை,

உயிரில் உணர்வில் கலந்த கவிஞன் என்
உயிரில் உயிர்கொண் டுலவுகின்றான் !—வெறும்
துயரில் நான்மூழ்கிக் கிடக்கவில்லை, அவன்
தொண்டு சிறந்திடத் தொண்டு செய்வேன் !

என்றும்,

'அடிமைகொள், எனை !' என்று
　　புலவன் ஒவ்வொருவனும்
　　அயல்வன் கால்பிடிக்க,

மிடிமைகொள் வாழ்விலும்
　　'செந்தமிழ்க் கெதிரி என்
　　எதிரிதான் !' என்று கூறிக்

67

குடிமையும் கொற்றமும்
ஏதடா தமிழன்னை
கொடியின்றி நிற்கும் நாளில்

ஒடிகின்ற செடியல்ல
ஆலடா தமிழ் என்
றுணர்த்தினன் கவிஞர் கோமான்

என்றும், பாடிச் சிறப்பித்துள்ளார்.

காமராசரைக் குறிப்பிடும் பொழுது,

கற்றவர் பலர் இருந்த போதும்—உண்மை
கற்றவர் அருகிவிட்ட நேரம்!
பற்றேதும் இன்றி அரசில் நுழைந்தார்—மக்கட்
பரம்பரையை உயர்த்த விழைந்தார்!

என்று புகழ்ந்துள்ளார்.

கவிதையும் வாழ்வும்

கவிஞர்தம் பருவுடல் மறையினும் புகழுடல் மறைவதில்லை யன்றோ? இதனைக் கவிஞர்,

வஞ்சகக் காலன் வருவதும் போவதும்
வாழ்க்கை நியதியடா? எனில்
செஞ்சொற் கவிதைகள் காலனை வென்று
சிரிப்ப தியற்கையடா!

என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றினைக் கவிஞர் வாழ்க்கையின் உரைகல்லாகவும் கொள்ளலாம்.

'யாத்திரை' எனுங் கவிதை அவர் வாழ்வின் வார்ப்படமாக விளங்கக் காணலாம்.

கள்ள மிகுந்தக்கால்
காணும்வழி அச்சுறுத்தும்!
உள்ள மிசைந்தாலோ
உறுதி தளராதாம்!

போகும்வழி தூரமென்று
பூமிதனில் அஞ்சிடிலோ
சாரும்வரை நீந்துமிந்த
சமுத்திரமும் தூரமன்றோ?

....

உழைக்காமல் யாதுபயன்?
ஓய்ந்தார்க்கு வெற்றியுண்டோ?
அழைக்கின்றாள் கொல்லிமலை
ஆரணங்கு; செல்லுகின்றேன்!

இன்னும் கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகளில் உவமை நயம், சொல்லாட்சித் திறன், வடிவச் சிறப்பு முதலான பல அழகுகளையும் ஒருங்கே காணலாம்.

இனி, கவிஞரின் இரண்டு தனிக் கவிதைகளான 'புத்தர் பிறந்தார்' எனுஞ் சிறு காப்பியத்தினையும், 'கண்ணப்பன் கிளிகள்' எனும் உருவகக் கவிதையினையும் சுருங்கக் காண்போம். 'புத்தர் பிறந்தார்' எனுஞ் சிறு காப்பியம் முடிவு பெறாத ஒன்றாயினும், கவிதை நயம் சொட்டும் எழிலார்ந்த கவிதைகள் பல அதில் அடங்கியுள்ளன. "'புத்தர் பிறந்தார்' என்ற அருமையான காவியம் முடிக்கப்படாமலே குறையாக நின்றுவிட்டது.. தமிழிலக்கியத்தின் குறையாகவே ஆகி விட்டது'" என்னும் முன்னுரைக் கூற்று[6] முற்றிலும் உண்மையே!

கண்ணப்பன் கிளிகள்

இந்தப் பாடல் புனைந்ததற்குரிய காரணத்தைக் கவிஞரே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"என் கதையில் வரும் கிளிகள் தாமே சிந்தித்துப் பேசக்கூடியவையாக இருக்கின்றன..............................

குற்றம் குணமிரண்டும் கூட்டிற் கிளிகளென்று
சுற்றம் படருகின்ற தொல்லுலகில்—பெற்றம்
பெரிதுண்டு மன்னிக்கும் பேர்க்கென் றறிந்தால்
அரிதுண்டோ ஆற்றும் அறம்?

மேலே கொண்டுள்ள வெண்பாவை நான் எழுதி முடித்த பிறகு அவ்வுருவகக் கிளிகளை உயிர்க் கிளிகளாகப் படைத்துப் பார்க்கலாமே என்ற எண்ணம் எழுந்தது. பிறகென்ன, அந்தக் கிளிகளைப் பேசவைத்து விட்டேன்!"

குணத்தையே ஆண் கிளியாகவும், குற்றத்தைப் பெண் கிளியாகவும் உருவகம் செய்கிறார். இரண்டு கிளிகளும் ஒரு கூட்டில் வாழ்கின்றன.

கண்ணப்பன் கூட்டின் சொந்தக்காரன். அவனைக் கொத்துகிறது பெண்கிளி. கண்ணப்பன் வெகுண்டு அதனைப் பிரித்து வைக்கிறான். ஆண்கிளி பிரிவாற்றாமையால் துயருறுகிறது. துயில் கொள்ளும்போது, பெண் கிளி இனி இறந்துபோனதாகக் கனவு கண்டு, அந்தக் கனவால் வருந்திப் புலம்பி உயிர் விடுகின்றது. காலையில் கண்விழித்த எசமா

னன் கண்ணப்பன் இதனைக் கண்டு கலங்கி, இறந்துபோன ஆண் கிளியை ஒரு புதரில் வீசியெறிந்துவிட்டுப் பெண்கிளியைக் கூட்டினின்றும் விடுதலை செய்துவிடுகின்றான். ஆண் கிளியின் பெரும் பிரிவு பெண் கிளியைப் பேதுறச் செய்கிறது. மாலைநேரத்தில் வானத்தில் வந்து முளைத்த பிறைமதி வடிவில் ஆண்கிளியே வந்திருக்கிறதென்று மயங்கி, அதனை எட்டிப் பிடிக்க விண்ணுக்குப் பறந்து, அலைந்து, அலுத்துச் சோர்ந்து மண்ணில் உயிரற்று ஆண் கிளியின் உடல் கிடக்கும் புதரிலேயே வந்து விழுகிறது. உயிரற்ற இரு கிளிகளையும் கண்டு வருந்துகிறான் கண்ணப்பன். தன்னால் விளைந்த தவறு என்று எண்ணி உருகுகிறான்.

இதுதான் கதை.

கிளியை வருணிக்கும் கவிஞர்,

> கொவ்வைப் பழமென்ற மூக்கும்—கற்றுக்
> கொடுக்கின்ற செஞ்சொற் பயில்கின்ற நாக்கும்
> செவ்வைப் படுங்குன்றிக் காற்றும்—கண்ணன்
> சிந்தையி லின்பம் சிறந்திடப் பண்ணும்!

என்கிறார்.

நெஞ்சைப் பிழியும் அவலம்

இவ்வுருவகக் கவிதையில் நம் நெஞ்சை நெக்குருகச் செய்யும் அவலத்தினைக் காணலாம்.

> பிரிந்தன இரு கிளிகள்—அவை
> பிரிந்தன சொரிந்தன நீர்விழிகள்
> எரிந்தன இருகிளிகள்—அவை
> இடறின இடறின இடறினவே

என்றும்,

> தத்தையம்மா தத்தை யம்மா
> ஓடிச் சென்றாயோ?—கடல்
> முத்தையம்மா முத்தையம்மா
> தேடிச் சென்றாயோ?

என்றும்,

> பூவாரம் ஒன்று நான் கோத்துப் போட்டேன்—அதைப்
> போங்காலக் காலன் அறுத்துப் பேரட்டான்!
> தேவாரம் போனபின் தத்தையம்மா—தமிழ்த்
> தேஞரம் ஏதடி தத்தையம்மா?

என்றும் வரும் பகுதிகள் அவலச் சுவையுணர்வை வெளிப்படுத்துகின்றன.

மனிதன் இழைத்ததுயர்
    மரணத்திற் போய்முடியப்
புனிதர் மறைவுக்குப்
    பொங்காதா என்னெஞ்சம்?

என்ற வரிகளில் கண்ணகியின் அவலம் எதிரொலிக்கின்றதன்றோ?

கண்ணப்பன் தன் தவறை யுணர்ந்து, தன் உள்ளப் புன்மைக்கு வருந்தி நைகிறான்:

கண்மணியே நான் பிரித்த
கயமைக்கு நீ வருந்தி
விண்சென்றாய்! இச் செய்கை
உன் வன்மை; என் புன்மை.

ஆண் கிளியின் புதரில் பெண் கிளி விழுந்து இறந்து கிடப்பதனைக் கவிஞர்,

இறப்பிலும் பிரியாத் தத்தை
எழுதெழிற் கிள்ளை பக்கல்
சிறப்பதும் சிறப்பாய்ச் செத்துத்
தென்மகள் கிடந்த தேபோல்

கிடந்ததாக எழுதுகிறார். இச்சோகக் கதையை,

எதிர்நின்ற மரங்கள்தொறும் இலைகள் தோறும்
நின்ற மழைச் சிறுதுளிகள் உதிர்ந்து கண்ணீர்
நித்திலங்கள் எனச் சிதறி நிறைந்ததம்மா!

என்று கூறி முடிக்கிறார் கவிஞர்.

மனிதனாகிய கண்ணப்பன் பெண் கிளியைப் பின்வருமாறு பாராட்டுகிறான்.

என்னினும் உள்ளன்பே
    சிறந்த தம்மா!
இருளிலும் என்னுள்ளம்
    இருண்ட தம்மா!
பொன்னினும் மணியினும்
    போலா னாய்! உன்
புகழினும் மேலான
    தொன்று மில்லை!

இதுவே கவிதை உணர்த்தும் பாடம்.

"காதலில் தோல்வியுற்று வாழ்விலும் தோல்வியுற்றுக் கால நோய்க்கு இரையாகி இளம் பருவத்தில் வாழ்வை நீத்த அவருடைய உள்ளத்தின் சோகமே இந்தக் கதையாக அடியெடுத்ததோ, என்னவோ? யார் அறிவர்?" என்று கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் குறிப்பிடுகின்றார்[8]. இந்நூலின் முதற்பதிப்பு 1966இல் வெளிவந்தது; தில்லிப் பல்கலைக் கழக மாணவர்க்குப் பாடமாக இருந்த நூல்.

நூலினை வெளிக் கொணர்ந்த நண்பர் திரு. செ. து. சஞ்சீவிக்கு நன்றி. தமிழ் ஒளியின் கவிதைகளை எனக்குப் பாடி அறிமுகப் படுத்திய டாக்டர் மு. வ. அவர்களுக்கு வணக்கம்.

அடிக்குறிப்புகள்

1. தமிழ் ஒளியின் கவிதைகள் : கம்பனுக்குக் காணிக்கை.
2. புறநானூறு : 165 : 1—2.
3. முன்னுரை : பக்கம், 3.
4. Mathew Arnold : Essays in Criticism, P. 144.
5. டாக்டர் மு. வ; முன்னுரை, ப : .
6. டாக்டர் மு. வ; முன்னுரை, ப : 3.
7. மன்பதை அவர்தூற்ற மன்னன் தவறிழைப்ப அன்பனை யிழந்
   தன்நான் அவலங் கொண்டு அழிவலோ.
   —சிலம்பு : துன்ப மாலை, 36—37.
8. முன்னுரை : பக்கம் 8.

இணைப்புகள்

இணைப்பு : அ.

கருத்தரங்க விழா அழைப்பிதழ்

" உண்மைத்திறம் ஊக்கும் உயர்கல்வி "

" அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு "
—பேராசிரியர் 'மனோன்மணீயம்' சுந்தரம் பிள்ளை
(1855—1897)

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்தும்

இந்திய விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கு

(27-10-1973 முதல் 29-10-1973 வரை)

கருத்தரங்கப் பொதுப் பொருள்

இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்

உற்று நோக்குவோம் !　　ஒப்பு நோக்குவோம் !

தொடக்கவிழா

தலைவர்

தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு

துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

தொடக்கவுரையும் நூல்வெளியீடும் புத்தகக்காட்சித் திறப்பும்

தாமரைத்திரு ம. பொ. சிவஞானம், எம்.எல்.சி.,

மாண்புமிகு துணைத்தலைவர், தமிழ்நாடு சட்ட மேலவை

வெளியிடப்பெறும் புது நூல்கள்

1. *திரு. க. த. திருநாவுக்கரசு* — திருக்குறள் கற்பனைத் திறனும் நாடக நலனும்

2. First All-India Tirukkural Research Seminar Papers—1972

27—10—1973 ஆம் நாள் தொடக்க விழாவும் தொடர்ந்து கருத்தரங்குகளும் நடைபெறும்

இடம் : **பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கட்டடம், எப். 50**

நாள் : **27—10—1973**

நேரம் : **மாலை 4 மணி**

அயலகத் தூதர்—கலையகங்கட்கும் பேராளர்கட்கும் புதுநூல் பரிசளிக்கப் பெறும்

'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே......'

அனைவரும் வருக ! ஆய்வுப் பயன் பெறுக !

விடுதலை! விடுதலை! விடுதலை!
— பாரதியார்

முதலாவது கருத்தரங்கு

நாள்: 27—10—1973
நேரம்: மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை
தலைவர்: **பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,**
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை.

கட்டுரையாளர்	பொருள்
1. **டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி,** யு. ஜி. சி. பேராசிரியர் பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்.	கலைக்கதிர்-பொங்கல் மலர்கள்
2. **டாக்டர் மெ. சுந்தரம்,** தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், மாநிலக் கல்லூரி, சென்னை.	விடுதலைக்குப்பின் தமிழ்க் கவிதை
3. **பேராசிரியை திருமதி பு.பா. இராச இராசேசுவரி,** தமிழ்த்துறைத் தலைவர், மேரி அரசி கல்லூரி, சென்னை.	விடுதலைக்குப் பின்னர் அகப் பொருள் பாடல்கள்
4. **பேராசிரியர் தி. சே. பாலசுப்பிரமணியம்,** தமிழ்த்துறைத் தலைவர், தேசியக் கல்லூரி, திருச்சி.	யோகி சுத்தானந்த பாரதியாரின் தமிழ்த் தொண்டு
5. **திரு. மா. சண்முக சுப்பிரமணியம்,** செயலர், தமிழ்நாடு சட்டப் பேரவை.	சட்டத் தமிழ் வளர்ச்சி
6. **பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன்,** தமிழ் வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை.	தமிழ் வளர்ச்சி-ஆராய்ச்சித் துறையின் தோற்றமும் வளர்ச்சியும் திட்டங்களும்
7. **திரு. அ. நாகலிங்கம்,** தமிழ் ஆராய்ச்சி மாணவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையின் 'தமிழகம் ஊரும் பேரும்'-ஓர் ஆய்வு
8. **டாக்டர் ந. சஞ்சீவி,** தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	டாக்டர் கமில்சுவலபிலின் 'தென்னிந்தியத் தமிழ் இலக்கியத்தின் மீது முருகனின் முறுவல்' (1973)—ஒரு நூல் மதிப்பீட்டாய்வு

ஏழை என்றும் அடிமை என்றும்
எவனும் இல்லை ஜாதியில்!
—பாரதியார்

இரண்டாவது கருத்தரங்கு

நாள்: 28—10—1973
நேரம்: காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை
தலைவர்: **பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி,**
முதல்வர், அறிஞர் அண்ணு கலைக்கல்லூரி, நாமக்கல்.

கட்டுரையாளர்	பொருள்
1. **பேராசிரியர் பூ. ஆலால சுந்தரனார்,** சிறப்புப் பேராசிரியர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.	திரு.வி.க.வின் அரசியல் நூல்கள்
2. **டாக்டர் ரா. சீனிவாசன்,** தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை.	கல்கியின் விடுதலை இயக்க நாவல்களில் காந்தியம்
3. **பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி,** தமிழ்த்துறைத்தலைவர், பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோயம்புத்தூர்.	சிலம்புச் செல்வரின் இலக்கியப் பணி
4. **பேராசிரியர் ந. பிச்சமுத்து,** தமிழ் இணைப்பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.	தமிழ் இலக்கியத் திறனாய்வு நூல்கள்
5. **புலவர் மா. நன்னன்,** தமிழ் இணைப்பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.	பாரதியாரின் விடுதலைப் பாடல்கள்
6. **திரு. மா. செல்வராசன்,** தமிழ் ஆராய்ச்சி மாணவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	டாக்டர் மு.வ.வின் கடித இலக்கியம்
7. **புலவர் இ. சுந்தரமூர்த்தி,** தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	திருக்குறளும் நாமக்கல் கவிஞரும்
8. **டாக்டர் ந. சஞ்சீவி,** தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	கலைஞர்—ஒரு கவிஞர்

இழிவு கொண்ட மனிதர் என்பது
இந்தி யாவில் இல்லையே! — பாரதியார்

மூன்றாவது கருத்தரங்கு

நாள்: 28—10—1973
நேரம்: பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை
தலைவர்: **டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி,**
யு. ஜி. சி. பேராசிரியர்,
பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்.

கட்டுரையாளர்	பொருள்
1. **பேராசிரியர் மு. சு. அருள்சாமி,** தமிழ்த்துறைத் தலைவர், இலயோலாக் கல்லூரி, சென்னை.	விடுதலைக்குப் பின் நாவல் வரலாற்றில் மகளிர் பங்கு
2. **பேராசிரியர் இரா. தில்லைக் கோவிந்தன்,** தமிழ்த்துறைத் தலைவர், நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை.	பாவேந்தர் முத்திரைப் பாடல்கள்
3. **பேராசிரியர் க. வடிவேலாயுதம்,** தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.	விடுதலைக்குப் பின் பக்தி இலக்கியங்கள்
4. **பேராசிரியர் வீ இராசமாணிக்கம்,** தமிழ்ப் பேராசிரியர், பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்.	விடுதலைக்குப் பின் தமிழ் நாடக வளர்ச்சி
5. **பேராசிரியர் வை. சதாசிவம்,** தமிழ்த்துறைத் தலைவர், பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, திருச்சி.	இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கிய வளர்ச்சி-கட்டுரை
6. **புலவர் மு. சண்முகம் பிள்ளை,** தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	தமிழ் நூல் விவர அட்டவணை
7. **திரு. வ ஜெயதேவன்,** தமிழ் விரிவுரையாளர், தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	கடந்த கால்நூற்றாண்டில் வெளிவந்துள்ள தமிழ் அகராதிகளும் கலைக் களஞ்சியங்களும்
8. **டாக்டர் ந. சஞ்சீவி,** தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	திரு. கு. இராஜவேலுவின் '1942'

மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்! — பாரதியார்

நான்காவது கருத்தரங்கு

நாள்: **29—10—1973**
நேரம்: காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை
தலைவர்: **பேராசிரியை இந்திரா சோமசுந்தரம்**
முதல்வர், பச்சையப்பர் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை.

கட்டுரையாளர்	பொருள்
1. **பேராசிரியை திருமதி கை. சி இராசமாணிக்கம்,** தமிழ்த்துறைத் தலைவர், நிர்மலா கல்லூரி, கோயம்புத்தூர்.	விடுதலைக்குப் பின் கட்டுரை வளர்ச்சியில் மகளிர் பங்கு
2. **பேராசிரியை திருமதி இரா. லயோனல்,** தமிழ்த்துறைத் தலைவர், மகளிர் கிறித்தவக் கல்லூரி, சென்னை.	படைப்பிலக்கியப் பணியில் கிறித்தவ எழுத்தாளர்களின் பங்கு
3. **பேராசிரியை திருமதி சு. சிவகாமசுந்தரி,** தமிழ்த்துறைத் தலைவர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி, கோயம்புத்தூர்.	இராமகிருஷ்ண இயக்கத்துத் தமிழ் நூல்கள்
4. **பேராசிரியை திருமதி சாரதா கலாவதி,** தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் மகளிர் கல்லூரி, பாண்டிச்சேரி.	விடுதலை இந்தியாவில் தமிழ்க் காப்பிய வளர்ச்சி
5. **திரு. வீ. ஞானசிகாமணி,** தமிழ் ஆராய்ச்சி மாணவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	கவி. கா மு ஷெரீபின் கவிதைகள்
6. **திரு. கு. மோகனராசு,** தமிழ் ஆராய்ச்சித் துணைவர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	கலைக்களஞ்சியத்தில் டாக்டர் தெ. பொ. மீ. அவர்களின் இலக்கிய, இலக்கண, சமயக் கட்டுரைகள்—ஒரு பார்வை.
7. **டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,** தமிழ்த் துணைப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	கவிமணியின் குழந்தை இலக்கியப்பணி
8. **டாக்டர் ந. சஞ்சீவி,** தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	அகிலனின் மிக அண்மைச் சிறுகதை

விடுதலை ! விடுதலை ! விடுதலை !
—பாரதியார்

ஐந்தாவது கருத்தரங்கு

நாள் : **26—10—1973**
நேரம் : பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை
தலைவர் : **டாக்டர் ந. சஞ்சீவி,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம் சென்னை.

கட்டுரையாளர்	பொருள்
1. **பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்,** தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை.	25 ஆண்டுகளில் மாணவர் வளர்த்த தமிழ்
2. **பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி,** முதல்வர், அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி, நாமக்கல்.	விடுதலை இந்தியாவில் தமிழகம் பெற்ற புதுமை நூல்கள்
3. **பேராசிரியை, திருமதி இந்திரா சோமசுந்தரம்,** முதல்வர், பச்சையப்பர் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை.	திரு. நெ. து. சு. - வின் இலக்கியப் பணிகள்
4. **பேராசிரியர் மா. கி. தசரதன்,** முதல்வர், சி. கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை.	பேரறிஞர் அண்ணாவின் நாவல்கள்
5. **பேராரிசியர் இர. ஆ. கணேச நம்பி,** தமிழ்ப்பேராசிரியர், அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி, காரைக்கால்.	முடியரசன் கவிதைகள்
6. **பேராசிரியர் ம. ரா. பூபதி,** தமிழ்த்துறைத் தலைவர், தாகூர் அரசினர் கலைக்கல்லூரி, பாண்டிச்சேரி.	புதுமைக்கவி வாணிதாசன் கவிநயம்
7. **டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,** தமிழ்த் துணைப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள்
8. **டாக்டர் ந. சஞ்சீவி,** தமிழ்த்துறைத் தலைவர்-பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.	தமிழ்நாடு சட்ட மன்றங்களின் கூட்டுக் கூட்டத்தில் இந்திய விடுதலை வெள்ளி விழா உரைகள்

'இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!'

—தேசியகவி சி. சுப்பிரமணிய பாரதியார்
(1882 — 1921)

விழாப் படங்கள்




கருத்தரங்கு நிகழ்ந்த நூற்றாண்டுவிழாக் கட்டடத்தின் முகப்புத் தோற்றம்.



விழாத்தலைவர் :

தாமரைத்திரு. நெ. து. சுந்தரவடிவேலு,
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்



தொடக்க உரையாளர் :

தாமரைத்திரு. ம. பொ. சிவஞானம்
மாண்புமிகு துணைத்தலைவர், தமிழ்நாடு சட்ட மேலவை



தாமரைத்திரு மா. பொ. சிவஞானம் அவர்கள் நூல்களை
வெளியிட்டுச் சென்னைப் பல்கலைக் கழகத்
துணைவேந்தர் அவர்களிடம் தருகிறார்.

வெள்ளிவிழாக் கருத்தரங்கு



கருத்தரங்கில் ஒரு பகுதி




சப்பான் நாட்டுத் தூதரிடம் சென்னைப் பல்கலைக் கழகத்
துணைவேந்தர் அவர்கள் 'முதல் அனைத்திந்தியத்
திருக்குறள் கருத்தரங்கு—*1972*' என்னும்
நூலை வழங்குதல்.

இந்திய விடுதலை




சோவியத் நாட்டுத் தூதரிடம் சென்னைப் பல்கலைக்
கழகத் துணைவேந்தர் அவர்கள் 'முதல் அனைத்திந்தியத்
திருக்குறள் கருத்தரங்கு—*1972*' என்னும்
நூலை வழங்குதல்.

அமர்வுத் தலைவர்கள்



பேராசிரியர்
அ. மு. பரமசிவானந்தம்



பேராசிரியர்
அ. கிருட்டிணமூர்த்தி


வெள்ளிவிழாக் கருத்தரங்கு



பேராசிரியர்
டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி




பேராசிரியை
திருமதி. இந்திரா சோமசுந்தரம்



பேராசிரியர்
டாக்டர் ந. சஞ்சீவி

பேராளர்கள்



பேராசிரியர்
டாக்டர் மெ. சுந்தரம்




பேராசிரியை
பு. பா. இராசஇராசேசுவரி


வெள்ளிவிழாக் கருத்தரங்கு




பேராசிரியர்
தி. சே. பாலசுப்பிரமணியம்



திரு. மா. சண்முகசுப்பிரமணியம்




பேராசிரியர்
கொண்டல் சு. மகாதேவன்




திரு. அ. நாகலிங்கம்


இந்திய விடுதலை




பேராசிரியர்
பூ. ஆலால சுந்தரனுர்



பேராசிரியர்
டாக்டர் ரா. சீனிவாசன்



பேராசிரியர்
ம. ரா. போ. குருசாமி




திரு. ந. பிச்சமுத்து

வெள்ளிவிழாக் கருத்தரங்கு



புலவர் மா. நன்னன்



திரு. மா. செல்வராசன்



புலவர் இ. சுந்தரமூர்த்தி



பேராசிரியர்
மு. சு. அருள்சாமி


இந்திய விடுதலை




பேராசிரியர்
இரா. தில்லைக் கோவிந்தன்



பேராசிரியர்
க. வடிவேலாயுதம்




பேராசிரியர்
வீ. இராசமாணிக்கம்




பேராசிரியர்
வை. சதாசிவம்

வெள்ளிவிழாக் கருத்தரங்கு



புலவர்
மு. சண்முகம் பிள்ளை



திரு வ. ஜெயதேவன்



பேராசிரியை

கை. சி. இராசமாணிக்கம்



பேராசிரியை

இரா. லயோனல்

இந்திய விடுதலை




பேராசிரியை

சு. சிவகாம சுந்தரி




பேராசிரியை

சாரதா கலாவதி




திரு. வீ. ஞானசிகாமணி




திரு. கு. மோகனராசு


வெள்ளிவிழாக் கருத்தரங்கு



டாக்டர்
சி. பாலசுப்பிரமணியன்



பேராசிரியர்
மா. கி. தசரதன்



பேராசிரியர்
இர. ஆ. கணேசநம்பி



பேராசிரியர்
ம. ரா. பூபதி

இணைப்பு : இ.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
இந்திய விடுதலை வெள்ளிவிழாக் கருத்தரங்கு
(27—29. 10. 1973)

ஆய்வாளர்களின் தன்வரலாற்றுக் குறிப்புகள்

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

—திருக்குறள் : 1026.

சுதந்திர தேவியின் துதி

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்,
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

தேவி! நின் னொளிபெ றாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள்வே தங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்தன்
பாலனம் படைத்தி லாதார்?

—பாரதியார்.

அமர்வுத் தலைவர்கள்

திரு. அ. மு. பரமசிவானந்தம்

பெற்றோர் : முத்தியப்ப முதலியார், வள்ளியம்மாள். **பிறந்த ஊர் :** அங்கம்பாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்). **பிறந்த நாள் :** 5-7-1914. **கல்வித் தகுதிகள் :** எம். ஏ., எம். லிட். **ஆசிரியப் பணிகள் :** ஆண்டர்சன் பள்ளி, காஞ்சிபுரம் - 6 ஆண்டுகள்; பச்சையப்பர் கல்லூரி - 28 ஆண்டுகள்; மதுரை தியாகராஜர் கல்லூரி - 1 ஆண்டு; உஸ்மானியப் பல்கலைக் கழகம் - 1 ஆண்டு. **எழுதியுள்ள நூல்கள் :** எழுபதிற்கும் மேற்பட்ட நூல்கள். **ஆராய்ச்சிப் பணிகள் :** எம். லிட். பட்டம். பல ஆசிரியர்கள் எம். லிட். பட்டம் பெறத் துணையாளராக உள்ளமை (மேற்பார்வையாளர்). உஸ்மானியப் பல்கலைக் கழக டாக்டர் பட்டம் பெறுவாருக்கு மேற்பார்வையாளர். பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் - பல இதழ்களில்; பல நூல்கள். மலேயா, இலங்கை, வட இந்தியத் தலைவர்கள் சொற்பொழிவுகள்: சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆய்வுச் சொற்பொழிவுகள். உறுப்பினராக இருந்து மாநாடுகளில் கலந்து கொண்டது. **பிற சிறப்புகள் :** தமிழ்க்கலை மன்றச் செயலாளராய்ப் பணியாற்றியமை; மாநில, மைய அரசுகள் சிறந்த இரு நூல்களுக்குப் பரிசளித்தமை; சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 'தமிழ்ப் பெரும் புலவர்' பட்டம் தந்தமை; 'தமிழ்க் கலை' இலக்கிய இதழ் நடத்தியமை; சென்னை, மதுரை, அண்ணாமலை, வேங்கடவன், உஸ்மானியா; தில்லை, காசி, உத்கல், கேரளா, பல்கலைக் கழகங்களில் பல்வேறு வகைகளில் தொடர்பு உள்ளமை.

திரு. அ. கிருட்டிணமூர்த்தி

பெயர் : அ. கிருட்டிணமூர்த்தி. **பிறப்பு :** 25-7-1919. **கல்வி :** எம். ஏ., பி. எல்., பி. ஓ. எல். (ஆனர்சு) **ஆராய்ச்சி :** சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழாராய்ச்சி மாணவர். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள், தமிழ்ச்சங்கங்கள், மாநாடுகளில் பல்வேறு ஆராய்ச்சியுரைகள் வழங்கியுள்ளார். தொடர்ந்து தமிழாராயும் சிந்தனையும் செயலுமுடையவர். முன்னாள் கொச்சி திவான் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கட்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்களைக் கற்பித்தவர். அன்னார்க்குத் தமிழிசை இயக்கங் காணுதற்கான எழுச்சியும் அன்னார் வெளியிட்ட புகார்க்காண்ட உரையும் தோன்றக் காரணமானவர். பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலுள்ள நூலகங்களில் தாம் தேடிக் கண்ட 2000 தமிழ்க் கையெழுத்துச் சுவடிகட்கு விரிவான பாயிரக் குறிப்புகள்

வரைந்து அட்டவணைப்படுத்தித் தமிழக அரசுக்குத் தந்துள்ளார். மற்றும் இந்திய வரலாற்று ஆவணங்கள் தேடும் ஆணைக் குழுவின் தமிழகக் கிளையுறுப்பினராக அரசால் நியமிக்கப்பெற்று 3 ஆண்டுகள் பணிபுரிந்தவர். **கல்விப்பணி:** அரசாங்கக் கலைக் கல்லூரிகளில் 8 ஆண்டுகள் தமிழ்த்துணைப் பேராசிரியராகவும், 18ஆண்டுகள் அரசிதழ்ப் பதிவுபெற்ற (Gazetted Officer) பேராசிரியராகவும் இருந்துவருபவர். இக்காலத்துள் கடந்த ஏழாண்டுகளாகக் கல்லூரி முதல்வராய்ப் பொன்னேரி, திருச்சி, கடலூர், கிருஷ்ணகிரி அரசினர் கல்லூரிகளில் பணியாற்றி, இப்போழ்து நாமக்கல் 'அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி' முதல்வராகப் பணிபுரிபவர். **அயல்நாட்டிற் பணி** (Foreign Service): இரஷ்யா உள்ளிட்ட 26 ஆசிய, ஐரோப்பிய, ஆப்பிரிக்க நாடுகளில் மூன்றாண்டுகள் அரசினர் சார்பில் தங்கித் தமிழ்ப் பணியாற்றியவர். சோவியத் குடியரசின் விஞ்ஞானப் பெருங்கழக அறிஞர் ஒருவருக்குத் தமிழிலக்கியம் கற்பித்து அவரும் தாமுமாகத் திருக்குறளையும், பிறிதோர் இரஷ்யர் வாயிலாகப் பாரதியார் பாடற் பகுதிகளையும் இரஷ்யனில் மொழி பெயர்த்து, அவை இரஷ்ய அரசாங்க வெளியீடாக வரச் செய்தவர். இரஷ்ய நூல்கள் சிலவற்றை ஆங்கிலத்தின்வழித் தமிழாக்கம் செய்துள்ளார். மாஸ்கோப் பல்கலைக் கழகத்தில் ஓராண்டு காலம் தமிழ்ச் சுட்டிய பல விரிவுரைகள் செய்து தமிழ்க் கல்விக்கு இடமில்லாதிருந்த அங்குத் தமிழ்க் கல்வி நிகழ்வதற்கு அடிகோலியவர். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் அயல்நாடுகளிற் சென்று தங்கி இன்னல் பல ஏற்றுப் பல்லாண்டு தமிழ்ப்பணி புரிந்த முதற் றமிழ்ப் பேராசிரியர். **தேசியப்பணி:** தேசிய மாணவர் படையில் (National Cadet Corps) படையதிகாரியாகச் சேர்ந்த (1949) முதற்றமிழ்ப் பேராசிரியர். என். சி. சி. யில் 11 ஆண்டுகள் பகுதி நேரப் பணியும், 5 ஆண்டுகள் முழுநேரப் பணியில் - பட்டாலியன் கமாண்டிங் ஆபீசராகவும், ஸ்டேஷன் கமாண்டராகவும் படைத்துறை நிர்வாகம் செய்து, 'மேஜர்' எனும் இராணுவப் பட்டம் பெற்றவர். தேசியப் பொதுப் பணிப் படையில் (National Service Corps) அதிகாரியாக இன்றும் பகுதிநேரப் பொறுப்பில் உள்ளார். மற்றும் தேசிய மாணவர் படைக்குத் தமிழ்நாட்டரசு அமைத்த அரசு ஆலோசகர் குழுவின் இன்றைய உறுப்பினர். **பல்கலைக் கழகப் பணி:** அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பாடநூற் குழுவின் முன்னாள் உறுப்பினர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்வியவையத்திலும், ஆட்சிப் பேரவையிலும், பட்ட வகுப்புத் தமிழ்ப் பாடநூற் குழுவிலும் இன்றைய உறுப்பினர்; மற்றும் பாடநூற் குழுவிற்கு அண்மையில் தலைவராகியுள்ளார்.

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி

பெற்றோர்: ஏகாம்பரம், இராசம்மாள். **பிறப்பு:** 18-8-1911. **பிறந்த இடம்:** சென்னை, ஆழ்வார்ப்பேட்டை. **கல்வித் தகுதி:** வித்துவான், எம். ஏ., பிஎச். டி., **ஆசிரியர் பணி:** 1948 சனவரி முதல் 25

ஆண்டுகள் கோவை பூ. சா. கோ. கலைக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளேன். இப்போது பல்கலைக்கழக மானியக் குழுத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறேன். **ஆராய்ச்சிப் பணி :** என் மேற்பார்வையில் ஆராய்ச்சிச்செய்து மூவர் எம். லிட்., பட்டம் பெற்றுள்ளனர்; ஒருவருடைய பிஎச். டி., ஆராய்ச்சிக் கட்டுரையின் முடிவு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. எழுவர் பிஎச். டி., ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். **வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் :** இலக்கணம், இலக்கியம், திறனாய்வு பண்பாடு - இவை பற்றிய பதினாறு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளேன். **நூல்கள் :** வெளியிட்டுள்ள நூல்கள் ஒன்பது. **பிற :** புதினங்கள் மூன்றும், சிறு கதைகள் ஒன்பதும், நாடகங்கள் பதினைந்தும், இலக்கியம், நாடகம் பற்றி நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளும் பல இதழ்களில் வெளியிட்டுள்ளேன்.

திருமதி இந்திரா சோமசுந்தரம்

பிறப்பு : 5-5-1932 - சீர்காழி, தஞ்சை மாவட்டம். **பெற்றோர் :** தந்தையார் - காலஞ்சென்ற தருமபுர ஆதீன மகாவித்துவான், முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்களின் திருமகனார் டாக்டர் வித்துவான் ப. மு. சொக்கலிங்கம் பிள்ளை. தாயார் - கண்ணம்மாள். **துணைவர் :** திரு அ. வ. சோமசுந்தரம், எம். ஏ., பொருளாதாரம் கலால் துறை அதிகாரி. **படிப்பு :** பி. எஸ்சி., பி. டி., எம். ஏ., எம். லிட். **பொறுப்பு :** 1. சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ் அகராதி ஆக்கத்தின் துணையாசிரியர் 6 ஆண்டுகள் (1959 - 1965). 2. ஸ்டான்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரியில் முதல்வர், தமிழ்த்துறைத் தலைவர் பொறுப்பு 3 ஆண்டுகள் (1968-1971). 3. பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் முதல்வர் பொறுப்பு 1971 முதல். 4. சென்னை மாநகரக் கல்லூரி மாணவ சமூகப் பணிக் குழுத் துணைத் தலைவர்-1973. 5. பல்கலைக் கழகப் பேராசிரியர் மன்றத்தின் துணைத் தலைவர் - 1972, 73. 6. சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினர் - 1971. **பிற :** 1. பல இதழ்களில் இருபதுக்கு மேற்பட்ட கட்டுரைகள். 2. திருச்சி, சென்னை வானொலி நிலையங்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட வானொலிப் பேச்சுக்கள். 3. 'திருவாசகம்', - டாக்டர் பட்டத்திற்காக ஆய்வு செய்யப்படுகிறது.

டாக்டர் ந. சஞ்சீவி

பிறந்த ஊர் : திருச்சிராப்பள்ளி. **பிறந்த நாள் :** 2-5-1927. **கல்வித் தகுதிகள் :** எம். ஏ., எம். லிட்., பிஎச். டி., மானிடவியல் பெருஞ்சான்றிதழ், அரசியல்—ஆட்சியியல் பெருஞ்சான்றிதழ். 1950-பி. ஓ. எல். (ஆனர்ஸ்) தேர்வில் முதல்நிலை; அதற்குரிய தங்கப் பதக்கமும் பிற பரிசுகளும் பெறப்பட்டன. **ஆசிரியப் பணிகள் :** (அ) காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவர் (1950-'60). (ஆ) சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்த் துறையில் (1960). (இ) பட்ட

தாரி ஆசிரியர்/தலைமையாசிரியர் பட்ட மேற்படிப்புச் சான்றிதழ் வகுப்புகளுக்கும், முதுகலைத் தமிழ் வகுப்புகளுக்கும், டாக்டர் பட்டம் பெற்ற அயலக அறிஞர்கள் மேற்படிப்புக்கும் உரிய வகுப்புகள் கடந்த பல ஆண்டுகளாக எடுக்கப்பட்டுள்ளன. **ஆராய்ச்சிப் பணிகள் :** (அ) இலக்கியம், வரலாறு, பொது ஆகிய தலைப்புகளில் 16 நூல்கள். (ஆ) 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகக் கழகத்தின் வாயிலாக அண்மை வெளியீடு. (இ) நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் (இவற்றுள் சில ஆங்கிலத்திலும்). **அயலகப் பயணம் :** 1960-ஆம் ஆண்டு அழைப்பின் பேரில் சிங்கப்பூர் மலேசிய நாடுகளில் சொற்பொழிவுச் சுற்றுப் பயணம். **பதவிகள் :** (அ) தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்-1969. (ஆ) தலைவர்-தமிழ்க்கலை மன்றம் 1971-72. (இ) பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் தமிழ்ப் பாடநூற்குழு உறுப்பினர். **பிற விவரங்கள் :** வாழ்நாள் உறுப்பினர்—சைவ சித்தாந்த மகா சமாசம்.

பேராளர்கள்

டாக்டர் மெ. சுந்தரம்

பிறந்த ஊர் : வேந்தன் பட்டி, திருச்சி மாவட்டம். *பிறந்த நாள்:* 14-7-1926. *கல்வித் தகுதிகள் :* எம். ஏ. எம். லிட்., பிஎச். டி., பி. ஓ. எல்., • மொழியியல் சான்றிதழ். *ஆசிரியப் பணிகள் :* நிறை கலை (எம். ஏ.) வகுப்புகளுக்குச் சங்க காலம், சங்க இலக்கியம் ஆகிய பாடங்கள் நடத்தி வருகின்றமை. மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிறை கலை வகுப்புகளுக்கு மொழியியல் (Linguistics) பாடம் நடத்தியமை. முன்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரை தியாகராசர் கல்லூரியிலும், இளங்கலை வகுப்புகளுக்கு மொழியியல் (Philology), தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் நாடும் பண்பாடும் ஆகிய பாடங்கள் நடத்தியமை. *ஆராய்ச்சிப் பணிகள் :* அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்லாடம் பற்றி ஆராய்ந்து எம்.லிட்., பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'சங்க இலக்கியத்தில் வரலாற்றுச் சான்றுகள்' பற்றி ஆராய்ச்சி இடுநூல் அளித்து டாக்டர் (Ph.D.) பட்டமும் பெற்றமை. தமிழக அரசால் மாநிலக் கல்லூரியில் தொடங்கப் பெற்றுள்ள 'உயர் தமிழியல் ஆராய்ச்சி நிலைய'த்தில் நெறியாளராகப் பணியாற்றி வருகின்றமை. எட்டுத் துணைப் பேராசிரியர்கள், ஒரு மாணவர் ஆகியோரின் டாக்டர் (Ph.D.) பட்ட ஆராய்ச்சியினை மேற்பார்வையிட்டு வருகின்றமை. சங்க காலம், தொல்காப்பியம், நாட்டுப் பாடல்கள், மறுமலர்ச்சி இலக்கியம், மொழியியல் பற்றிய பல ஆராய்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளமை. *வகித்த பதவிகள் :* அண்ணாமலை, சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களிலும், மதுரை தியாகராசர் கல்லூரியிலும் தமிழ் விரிவுரையாளராகவும், திருச்சி மாவட்டம் கோனாபட்டுச் சரசுவதி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகவும் பணி புரிந்தமை. தற்பொழுது சென்னை மாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றமை. *குறிக்கத்தக்க பிற சிறப்புகள் :* 1958 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அன்பர்கள் அழைப்பினை ஏற்றுத் திருக்குறள் விழாவில் கலந்து கொண்டு, மாநாட்டிலும், இலங்கைக் கல்லூரிகளிலும் சிறப்புரை ஆற்றியமை. 1960ஆம் ஆண்டு, சனவரி மாதம் சிங்கப்பூர் தமிழர் பிரதி நிதித்துவ சபையாரின் அழைப்பினை ஏற்றுச் சிங்கப்பூர், மலேசியா, தமிழர் திருநாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, ஒரு மாத காலம் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றியமை. 1958ஆம் ஆண்டு கிழக்கு ஜெர்மனிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்ற இந்திய அரசால் தேர்ந்து எடுக்கப்பெற்றுச் செல்லும் நிலையில், நியமனம் ஒத்தி வைக்கப் பெற்றதாக இந்திய அரசால் அறிவிக்கப் பெற்றமை.

நைடா எழுதியுள்ள கிளவியாக்கத்தைத் (Morphology) தமிழில் மொழி பெயர்த்துள்ளமை. தமிழகம், மலேசியா, இலங்கை, பிஜித்தீவுகள் ஆகிய நாடுகளிலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட நாட்டுப் பாடல்களை தொகுத்து வைத்து அவை பற்றிய ஆராய்ச்சித் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதி வருகின்றமை.

திருமதி பு. பா. இராச இராசேசுவரி

பிறந்த நாள்: 28-7-29. **தந்தையார் பெயர்:** சண்டே அப்சர்வர் பி. பாலசுப்ரமணியம். **கல்வி :** எம். ஏ., (முதல் வகுப்பு). எம். லிட்., **பணி :** (1) துணைப் பேராசிரியர் — 1955-'62. (2) இணைப் பேராசிரியர் — 1962-'64. (3) பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர், இராணி மேரி கல்லூரி — 1964. **பிற செய்திகள் :** முதியோர் இலக்கியப் பண்ணையில் பயிற்சி பெற்றவர். தெலுங்கு மொழி ஓரளவு படிக்கவும் எழுதவும் தெரிந்தவர்.

திரு தி. சே. பாலசுப்பிரமணியன்

புதுக்கோட்டையைச் சார்ந்த திருக்கோகர்ணத்தில், பிரமாதீச வருஷம் பங்குனி மாதம் 12-ம் தேதி பிறந்தவர். தந்தையார் திரு தி.க. சேஷையர், தாயார் திருமதி மங்களாம்பாள். 1935-1938 முடிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி. ஏ. (ஆனர்ஸ்) வகுப்பிற் சேர்ந்து தமிழ் பயின்றார். திரு. ச. சோமசுந்தர பாரதியார், திரு. பண்டிதமணி கதிரேசன் செட்டியார், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற தமிழ்ப் பெரியார்களிடம் முறையே தமிழ் பயின்றார். பி. ஏ. (ஆனர்ஸ் வகுப்பில்) பல்கலைக்கழக முதல் மாணவராகத் தேர்ச்சிபெற்று அதற்குரிய பரிசுகளையும் பெற்றார். 1940-ல் எம். ஏ. பட்டம் பெற்றார். 1942-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றார். 1939 முதல் 1945 பிப்ரவரி வரை புதுக்கோட்டை மன்னர் பிரான் அவர்கட்குத் தமிழாசிரியராகவிருந்தார். 1945 பிப்ரவரித் திங்களிலிருந்து திருச்சி தேசியக் கல்லூரியில் தமிழ்ப் பணி புரிந்து வருகின்றார். பலஆண்டுகள் இக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும், பின்னர் 12 ஆண்டுகள் பேராசிரியராகவும், மூன்று ஆண்டுகளாக முதுகலைப் பேராசிரியராகவும் இருந்து பணியாற்றி வருகின்றார். பல ஆண்டுகட்கு முன்னர்ப் புதுக்கோட்டையில் வெளிவந்த 'திருமகள், செல்வன்' என்ற மாத இதழ்களில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழகப் புலவர் குழுவில் பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்து தமிழ்த் தொண்டாற்றி வருகின்றார். தமிழகப் புலவர் குழுவின் வெளியீடான Tamilology என்ற நூலில் 'கம்பனது சமயக் கொள்கை' என்ற இவரது கட்டுரையொன்று இடம் பெற்றுள்ளது.

திரு மா. சண்முகசுப்பிரமணியம்

பிறந்த தேதி : ஜூன், 1921. **பிறந்த இடம் :** அம்பா சமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம். **கல்வி :** மதுரைக் கல்லூரி—அமெரிக்கன்

கல்லூரி. 1949-ம் ஆண்டிலிருந்து 1955-ம் ஆண்டுவரை மதுரையில் வழக்கறிஞராகப் பணியாற்றி, அதற்குப் பிறகு மாவட்ட முன்சீப்பாக ஏழு ஆண்டுகள் பணியாற்றியபின், சட்டப் பேரவைத் துறையில் உதவிச் செயலாளராய் நியமனம் பெற்று, இப்போது சட்டப் பேரவைத் துறைச் செயலாளராய்ப் பணியாற்றுகிறார். ஆட்சி மொழி (சட்டத் துறை) ஆணைக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றுகிறார். **எழுதிய நூல்கள் :** 1. சட்டவியல் 2. குற்றவியல் 3. தீங்கியல் சட்டம் முதலியன. முதல் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டார். சென்னைப் பல்கலைக் கழகத்துச் 'சொர்ணம்பாள் அறக் கட்டளை'யில் சொற்பொழிவாற்றினார்.

திரு. கொண்டல் சு. மகாதேவன்

திரு. கொண்டல் சு. மகாதேவன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த கொண்டல் வட்டம், திடல் என்னும் ஊரில் 1-7-1925-ல் சுப்பிரமணியம், சுவர்ணம் ஆகிய அன்புடைப் பெற்றோருக்குத் தோன்றியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கணக்கியலும், இயல்பியலும் பயின்று பி. எசி., பட்டம் பெற்றபின் தமிழ்த் துறையில் சேர்ந்து டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களிடம் பயின்று எம்.ஏ. பட்டம் பெற்றார். தமிழ்நாடு அரசின் கல்வித் துறையில் சேர்ந்து சென்னை மாநிலக் கல்லூரி உள்ளிட்ட பல அரசினர் கலைக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றியுள்ளார். கடந்த ஓராண்டாகத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராய்ப் பணியாற்றி வருகிறார். இவர் குழந்தை இலக்கிய ஆராய்ச்சித் துறையின் ஆராய்ச்சி அலுவலராகவும், முதியோருக்காக நூல்கள் இயற்றும் இலக்கியப் பண்ணைகளின் இணைநெறியாளராகவும் இருந்து பணி புரிந்துள்ளார். வானவியல், வான்வெளிச் செலவு, சார்பு நிலையியல் போன்ற அறிவியல் துறைகள் பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் கலைக்கதிர், குத்தூசி, விடுதலை, நவஇந்தியா, அமுதசுரபி, தமிழ்ப்பொழில் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. 'தெள்ளாறெறிந்த நந்திவர்மன்' இவர் எழுதிய நாடக நூல். இவர் அறிவியல் பாதையில் மனிதன், எல்லாம் பிளாஸ்டிக், மின்னலும் இடியும் போன்ற பல நூல்களையும் இயற்றியுள்ளார். நிக்கோலா டெஸ்லா, அறிவு வளர்க்கும் அறிவியல் ஆகியவை இவர்தம் மொழி பெயர்ப்பு நூல்கள்; 'எல்லாம் பிளாஸ்டிக்' என்ற இவரது நூல் தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழர் தம் எழுத்தும் கருத்தும் அறிவியல் வழி அமைய வேண்டும் என்பது இவர்தம் கோட்பாடாகும்.

திரு. அ. நாகலிங்கம்

பிறப்பு : 6-6-1945. தொரப்பாடி, செங்கம் வட்டம், வ. ஆ. மாவட்டம். **பெற்றோர் :** நா. அண்ணாமலைப் பிள்ளை - பர்வதவர்த்தனி. **வயது :** 28. **பள்ளி :** மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, சைதாப்

பேட்டை, சென்னை. **கல்லூரி :** அரசினர் கலைக் கல்லூரி, சென்னை. பச்சையப்பன் கல்லூரி, சென்னை. **கல்வித் தகுதி :** எம். ஏ. (தமிழ்) சான்றிதழ்—தொல்லியல். **பொறுப்பு :** ஆராய்ச்சி மாணவர் (பிஎச். டி.), தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம். **ஆய்வுப் பொருள் :** 'திரு. வி. க. வின் நூல்கள்.' **படைப்பு :** (1) செங்கம் நடுகற்களை முதன்முதலில் கண்டு பிடித்து, தமிழக அரசு தொல்பொருள் துறைவழி அறிமுகப்படுத்தியமை. (2) சில ஆய்வுக் கட்டுரைகள் வரைந்தமை.

திரு. பூ. ஆலாலசுந்தரனார்

பிறந்த ஊர் : சென்னை முத்தியாலுப்பேட்டை. **பிறந்த நாள் :** 5-11-1907. **கல்வித் தகுதிகள் :** எஸ். எஸ். எல். சி. வரை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளி. கல்லூரி இடைநிலை வகுப்பு— சென்னைப் பச்சையப்பன் கல்லூரி - கல்லூரி முதுகலைத் தேர்வு பி.ஏ. (ஆனர்ஸ்) தமிழ் இலக்கியம் 1934; எம். ஏ., 1935 அண்ணாமலைப் பல்கலைக் கழகம். **ஆசிரியப் பணிகள்:** சென்னைக் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் தமிழாசிரியர் 1934 - 37 - கல்லூரி தாம்பரத்திற்கு மாற்றப்பட்டபோது 1937 - லிருந்து தமிழ் விரிவுரையாளர் - 1951 முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவி, தமிழ்த் துறைத் தலைவர் பதவி. 1964-லிருந்து 1968 வரை இந்திய மொழித்துறைத் தலைவர் பதவி. 1968 முதல் 1973 வரை இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழுப் பேராசிரியர் பதவி. ஐந்து தமிழ்த்துறை ஆசிரியர்கள் எனது மேற்பார்வையில் சென்னைப் பல்கலைக் கழக எம். லிட்., தேர்விற்குப் பல பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டு வருகின்றனர். அவருள் இருவர் தமது ஆராய்ச்சியை முடித்துவிட்டனர். மற்ற மூன்று ஆசிரியர்களின் பொருட்டு யான் 1973 ஜூன் முதல் கௌரவப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டு வருகின்றேன். **ஆராய்ச்சிப் பணிகள் :** 1. சற்று ஏறக்குறைய 80 ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளேன். அவற்றுள் சிலவே வெளிவந்துள்ளன. 2. யான் எழுதிய 'கட்டுரை விருந்து' என்ற புத்தகமும், 'இயற்றமிழ்' என்ற புத்தகமும் தென்னிந்தியாவிலுள்ள பல பல்கலைக் கழகங்களில் பாடநூலாக அமைந்தன. 3. சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் வெள்ளி விழா நினைவு அறக்கட்டளை சார்பில் 'திருவருட்பாடல்களில் இலக்கியச் சுவை' என்ற பொருள் பற்றிப் பேசினேன். அச் சொற்பொழிவுகளை நூல் வடிவில் சென்னைப் பல்கலைக் கழகம் 1970-ல் வெளியிட்டுள்ளது. 4. இன்னும் அச்சில் வெளிவாராத நூல்கள்: அ. தெய்வமணிமாலை உரை, ஆ. கம்பர் காவியத்தில் சில ஓவியங்கள். இ. சுந்தரர் வரலாறும் தேவார ஆராய்ச்சியும். **வகித்த பதவிகள் :** (1) 1941-45 எஸ். எஸ். எல். சி. தமிழ்ப்பாடத் திட்டக் குழுவின் உறுப்பினன். (2) கடந்த பல ஆண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பாடத் திட்டக் குழுவின் உறுப்பினன். 1969 - 72 வரை அக் குழுவின் தலைவன். (3) சில ஆண்டுகள் அண்ணா

மலைப் பல்கலைக் கழகம், ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் தமிழ்ப் பாடத் திட்டக் குழு உறுப்பினன். (4) 1950 - 56 வரை சென்னைப் பல்கலைக் கழக அகாடெமிக் கவுன்சில் உறுப்பினன். (5) 1952-54 சென்னைப் பல்கலைக் கழக செனட் சபை உறுப்பினன். (6) காசி பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் தேர்வுக் குழு உறுப்பினன். (7) 1961 - 63 சென்னைப் பல்கலைக் கழக செனட் சபைக்கும், அகாடெமிக் கவுன்சிலுக்கும் உறுப்பினராகப் பல்கலைக் கழக வேந்தர், தமிழ் நாட்டின் ஆளுநர் அவர்களால் தமிழ் மொழிக்காக நியமிக்கப்பட்டேன். (8) தமிழ் நாடு அரசாங்கப் பாடப் புத்தகக் குழுவின் உறுப்பினன் — தலைவன். (9) சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளைப் பத்தாண்டிற்கொரு முறை மேற்பார்வையிடும் குழுவின் உறுப்பினன். (10) சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலம்-தமிழ் அகராதி அறிவுரைக் குழுவின் உறுப்பினன். (11) சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதித் திருத்தக் குழுவின் உறுப்பினன். (12) சென்னைப் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கேரளப் பல்கலைக் கழகம், ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் முதலிய பல்கலைக் கழகங்களில் தேர்வாளர் குழு உறுப்பினன் — தலைவன். (13) யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் வித்துவான் தேர்வுக் குழு உறுப்பினன். (14) அரசாங்க அலுவலகப் பணியாளர் தேர்வுக் குழு உறுப்பினன். (15) பல ஆண்டுகள் சைவ சித்தாந்த சமாஜத்தின் செயற் குழு உறுப்பினன். (16) சென்னைக் கிறித்தவக் கல்லூரி ஆட்சிக் குழுவின் உறுப்பினன் — செயலர். (17) சென்னைக் கிறித்தவக் கல்லூரிப் பணியாளர் சங்கத் தலைவர். (18) திருவல்லிக்கேணிக் கூட்டுறவுச் சங்கத்தின் தாம்பரம் கிளை ஆட்சிக் குழு உறுப்பினன்: (19) தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஸ்ரீ கந்தப் பெருமானார் ஆலயத்தில் பல ஆண்டுகள் அறங்காவலர் குழு உறுப்பினன்—தலைவன். (20) சென்னை ஸ்ரீ தர்ம சிவாச்சாரியார் மடத்தின் ஆயுள் ஆட்சிக் குழு உறுப்பினன்.

டாக்டர் ரா. சீனிவாசன்

பட்டம் : எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., **பிறந்த தேதி :** 5-6-1923. **நூல்கள் :** அணியும் மணியும், இருளும் ஒளியும், வழக்கு நிலம், இளமை, சொல்லின் செல்வன், மொழியியல், மொழி ஒப்பியல், தொல்காப்பியமும் நன்னூலும், சங்க இலக்கியத்தில் உவமைகள். **தொழில் :** பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை. எம்.லிட்., —அகநானூற்றில் பெயர்ச்சொற்கள்; பிஎச்.டி.,—சங்க இலக்கியத்தில் உவமைகள்.

திரு. ம. ரா. போத்திலிங்க குருசாமி

பிறந்த தேதி : 15—6—1922. **கல்வித் தகுதி :** எம்.ஏ.,எம்.லிட். **தொழில், பதவி :** ஆசிரியன்—நிறைகலைப் பேராசிரியர், தமிழ்த் துறைத்

தலைவர். **கற்பிப்பதில் பயிற்சி :** நிறைகலை வகுப்பு : 7 ஆண்டுகள். புகுமுக வகுப்பு, பட்ட வகுப்புகள் : 27 ஆண்டுகள். **பிற பயிற்சிகள்:** துணையாசிரியர், 'சக்தி' (ஓராண்டு). நூற்பதிப்பாசிரியர், சக்தி காரியாலயம் (ஓராண்டு). துணையாசிரியர், 'தமிழ் முரசு' (ஓராண்டு). கலைக்கதிர் இதழிலும், கலைக்கதிர் வெளியீடுகளிலும் ஓரளவு பணி உண்டு. மொழிவல்லுநராகக் கல்லூரித் தமிழ் நூல் வெளியீட்டகம் ஏற்றது. **எழுதிய நூல்கள் :** வாழ்வும் வழியும் — இலக்கியம்; சிலப்பதிகாரச் செய்தி—இலக்கியம்; வித்தகர் வாழ்க்கை—இலக்கியம்; சிலம்பு வழிச் சிந்தனை — இலக்கியம் ; சங்க காலம் — வரலாறு பண்பாடு; சங்க காலத்திற்கு முன் — வரலாறு பண்பாடு; அரசியலில் புது நெறி — காந்தியம்; இட மதிப்பு — சிறு கதைகள். **மொழி பெயர்ப்பு:** பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ஜவஹர்லால் எழுத்தும் உரையும், மண்ணிலும் விண்ணிலும். **பதிப்பு :** மனோன்மணீயம். **எம். லிட். ஆய்வுப் பொருள் :** ஐங்குறுநூற்றுத் திறன். **ஆய்வுக் கட்டுரைகள் சில :** தணிகைப் புராணத்தில் அகப்பொருள், பாகவதத்தில் அகப்பொருள், மொழிக் கல்வி (ஆங்கிலம்), அகப்பொருள் நோக்கில் சங்க நூல்கள், முல்லை பற்றிய மறு சிந்தனை, பரத்தையரும் பரத்தமையும் (ஆங்கிலம், தமிழ்), தமிழில் நாடகக் கலை. **மற்றும் :** சென்னைப் பல்கலைக் கழக அகாடெமிக் கவுன்சிலில் 6 ஆண்டுகள் ; சென்னைப் பல்கலைக் கழக செனேட்டில் 3 ஆண்டுகள்.

திரு. ந. பிச்சமுத்து

சொந்த ஊர்: அண்ணாமலை நகர். **பிறந்த நாள்:** ஆகஸ்ட் 17, 1927. **கல்வி :** 1952—53 இண்டர் 'டி'; 1954—56 தமிழ் ஆனர்ஸ் 5 ஆண்டுகள்—படித்த இடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்; 1962 முதல் 1972 வரை என்.சி.சி.யில் அதிகாரி—நிலை—கேப்டன். தேனமுதம் என்னும் மாத ஏட்டில் 'காவிரிக் காவலன்' தொடர்கதை வெளிவந்து கொண்டிருக்கிறது. பல மலர்களில் இலக்கியக் கட்டுரைகள் சில எழுதியுள்ளேன். 1956 முதல் பேராசிரியராகப் பணிபுரிகிறேன். 11—6—1973 சென்னை மாநிலக் கல்லூரிக்கு மாற்றப் பெற்றுள்ளேன். ஆராய்ச்சிக்கு விண்ணப்பித்துள்ளேன்.

திரு. மா. நன்னன்

தென்னார்க்காடு மாவட்டத்தின் விருத்தாசலத்திற்கும் சிதம்பரத்திற்கும் இடையில் உள்ள காவனூர் என்னுஞ் சிற்றூரில் சைவக் குடியியில் மாணிக்கம், மீனாட்சி என்னும் மாண்புடைப் பெற்றோர்க்கு 15-5-1925-ல் மகனாய்ப் பிறந்து, பிறந்த ஊரிற் படிக்கும் வாய்ப்பின்மையான் மூவ்வேறூர்களில் பள்ளிக் கல்வியை முடித்துப் பின், 1941-45 ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் வகுப்பிற் கற்றுத் தேர்ந்து, அப்போது அங்குப் பயின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வமைச்சர், பேராசிரியராகி

யோரின் கூட்டுறவால் சைவத்தினின்றும் விடுபட்டுப் பகுத்தறிவியக்கத்திற் சேர்ந்து தொண்டாற்றத் தொடங்கி, 1945 முதல் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இலப்பைக் குடிக்காடு, தென்னூர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமுட்டம் ஆகிய ஊர்களின் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றியபின் கோவை, வேலூர், சென்னை ஆகிய இடங்களிலுள்ள அரசின் உயர்நிலைப் பள்ளிகளிலும், பயிற்சிப் பள்ளி, பயிற்சிக் கல்லூரி, கலைக் கல்லூரி ஆகியவற்றிலும் பணியாற்றித் தாமே முயன்று தமிழாசிரியப் பயிற்சியும், தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்று இப்போது தொல்காப்பியத்திலாராய்ச்சியும் செய்யத் தொடங்கியுள்ள இவர், தொடக்க வகுப்புகள், உயர்நிலை வகுப்புகள், ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, கல்லூரி வகுப்புகள், கல்லூரிப் பட்ட வகுப்புகள், பட்ட மேல் வகுப்புகள் ஆகிய கல்வித் துறையின் எல்லா வகுப்புகளிலும் பணியாற்றியிருப்பதோடு சொற்பொழிவு சிறிதளவு எழுத்து ஆகியவற்றால் தமிழ்த் தொண்டும் பகுத்தறிவுத் தொண்டும் செய்து வருகிறார்.

திரு. மா. செல்வராசன்

பெற்றோர் : மு. மாணிக்கம் — பட்டம்மாள். **பிறந்த நாள் :** 21-6-1946. **பிறந்த ஊர் :** மாணம்பதி, காஞ்சிபுரம் வட்டம். **கல்லூரி:** பச்சையப்பன் கல்லூரி, சென்னை (1964-1969). **பெற்ற பட்டம் :** எம்.ஏ., (தமிழ்), சென்னைப் பல்கலைக் கழக முதன்மை. **இப்போதைய பணி :** சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் 'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்' என்ற தலைப்பில் 'டாக்டர்' பட்டத்திற்கு ஆராய்ச்சி. **ஈடுபாடு:** கவிதை, கட்டுரை, கதை எழுதுதல். **எழுதிய நூல்கள்:** செம்புலப்பெயல் நீர் (கருத்துத் தொகுப்பு) 1971. வைகறை மலர்கள் (கவிதைத் தொகுப்பு) 1973. **குறிப்புகள் சில:** 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு அஞ்சல் நிலைய மறியல் செய்தமைக்காகச் சிறை சென்றது. கல்லூரியில் மாணவர் தலைவராகப் பொறுப்பு ஏற்றது. அதன் விளைவுகளால் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டது. உயர் நீதி மன்றத்தின் உதவியால் எம். ஏ., பட்டம் பெற்றது.

புலவர். இ. சுந்தரமூர்த்தி

பிறப்பு : 5—2—1942. **ஊர் :** வெள்ளலூர், கோவை மாவட்டம். **பெற்றோர் :** த. இளைய பெருமாள் — பழனியம்மாள். **கல்வித் தகுதி :** வித்துவான், எம். ஏ., டிப். மானிடவியல், சென்னைப் பல்கலைக் கழகம் சான்றிதழ் — தொல்லியல். **பணி :** ஆசிரியப் பணி — பத்தாண்டுகள் (1959—69); ஆய்வுப் பணி—நான்காண்டுகள் 1969 முதல்.—பிஎச். டி. பட்ட ஆய்வுப் பொருள் "பரிமேலழகர் உரைத்திறன் —ஒரு திறனாய்வு" **வெளியீடு :** (அ) 'திருக்குறள் அணி நலம்' என்னும் நூல்—சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு. (ஆ) இருபதிற்கும் மேற்பட்ட இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள். **இப்போதைய பணி :** தமிழ் விரிவுரையாளர்,

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

திரு. மு. சு. அருள்சாமி

பிறப்பு : 28—10—1923. ஊர் : திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக் கோட்டத்தைச் சார்ந்த நவநீதகிருட்டிணபுரம். படிப்பு: எம். ஏ., பதவி : பேராசிரியர், தலைவர், தமிழ்த்துறை, இலயோலாக் கல்லூரி. படைப்பு : நாடகங்கள் : 'சேரிப் பெண்', 'வாழ்வரசி,' "நான்கு நாடகங்கள்' (மொழி பெயர்ப்பு). கடித இலக்கியங்கள் : 'காதலிக்கு'. 'தோழர்க்கு.' கதைகள் : ஈசாப் நீதிக் கதைகள் (மூன்று பகுதிகள்) புறநானூற்றுச் சிறுகதைகள் (இரண்டு தொகுதிகள்) உரை: நீதி நூல்கள் ; நீதி வெண்பா.

திரு. இரா. தில்லைக் கோவிந்தன்

பிறந்த ஊர் : சிதம்பரம் (தில்லை). பிறந்த நாள் : 21-7-1928 (45 ஆண்டு நிறைந்தது). தகுதி : பி.ஏ., (ஆனர்சு). பயின்ற இடம் : அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (1947—52). (டாக்டர் அ. சிதம்பரநாதனின் மாணவன்). பதவிக்காலம் : 6—8—1952 முதல் 21 ஆண்டுகள். (மாநிலக் கல்லூரி, பாலக்காடு, கோவை, கடலூர், சேலம், உதகை அரசு கலைக்கல்லூரிகள்). (டாக்டர் தெ.பொ.மீயின் தலைமையில் மாநிலக் கல்லூரியில் பணியாற்றியவன்). 1956-ல் திருச்சி வானொலி நிலையத்தில், திருத்தக்கதேவரின் சீவக சிந்தாமணி என்னும் பொருள் பற்றிப் பேசியுள்ளேன். தமிழ்நாட்டுத் தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட கல்லூரிப் பாடநூல் சிலவற்றிற்கு மொழி வல்லுநனாகப் பணியாற்றியுள்ளேன். ஈரோடு வாசவி கல்லூரிக்கு, 1969இல் சென்னைப் பல்கலைக் கழகக் குழுவின் ஓர் உறுப்பினனாகச் சென்றிருந்தேன். சென்னைப் பல்கலைக் கழகத்திலும், தமிழ்நாடு அரசு பொதுப் பணியாளர் தேர்வுக் கழகத்திலும் பல ஆண்டுக்காலமாகத் தேர்வாளனாகப் பணியாற்றி வருகிறேன். பல மாநாடுகளிலும் பட்டிமன்றங்களிலும் பங்கேற்றுப் பேசியுள்ளேன்.

திரு. க. வடிவேலாயுதம்

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருமந்திர நகராம் தூத்துக்குடியில் 30—10—1924இல் மு. கா. சு. கணேச முத்துக்குமாரசுவாமிக்கும், சண்முகத்தம்மாளுக்கும் புதல்வராகத் தோன்றினார். தூத்துக்குடியில் உள்ள எஸ். ஏ. வி. உயர்நிலைப் பள்ளியில் 1940இல் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுத் திருநெல்வேலி ம.தி. தா. இந்து கல்லூரியில் 1942இல் இடைநிலை வகுப்பில் தேர்வு பெற்றார். 1942—45இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சிறப்பு வகுப்பில் (பி.ஏ. ஆனர்சு) பயின்று சிறப்புறத் தேர்வு

பெற்றார். கா. சு. பிள்ளை, கந்தசாமியாரர், டாக்டர் சிதம்பரநாதர், டாக்டர் தெ.பொ. மீ. முதலியோரின் அன்புக்குரியவர்.

1945—50 வரை ஐந்தாண்டுகள் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் 'விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1951 முதல் 1968 வரை சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி 1968 முதல் அதே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்து வருகிறார்.

மாணவப் பருவத்திலேயே 1939—40இல் 'பாரத மாதா' என்ற கையெழுத்துத் தேசிய முற்போக்குத் திங்கள் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழ் இலக்கியங்களுள் சமய இலக்கியங்களில் ஈடுபாடு மிக்கவர். சமய மாநாடுகள் பலவற்றில் உரையாற்றியிருக்கிறார். சென்னை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் செயற்குழு உறுப்பினராகப் பல்லாண்டுகள் பணியாற்றி வருகிறார். புரசைத் திருநெறிக் கழகத்தின் தலைவராயிருந்து திங்கள்தோறும் பலருடன் தென்னாட்டுப் பாடல் பெற்ற பதிகள் பலவற்றை வழிபட்டுள்ளார். தாம்பரம் திருநெறி மன்றத்தின் தலைவராகப் பலரோடு பல தலங்களைத் திங்கள் தோறும் வழிபட்டு வருகிறார். பல கட்டுரைகளை எழுதியுள்ளார். 1966 சனவரி முதல், சூரியனார் கோயில் ஆதீன கர்த்தராயிருந்த மீனாட்சி சுந்தர தேசிகரிடம் முறையாக விசேட தீக்கை பெற்றுத் தினந்தோறும் சிவபூசை செய்து வருபவர்.

1963 திசம்பரில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற உலகப் பெருஞ்சமயங்கள் 3வது கருத்தரங்கில் கட்டுரை படிக்கப் பெற்றது. 1971இல் வேலூரிலும் 1972இல் திருநெல்வேலியிலும் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் 65வது மகாநாட்டில் சைவ இளைஞர் தலைமைப் பேருரை நிகழ்த்தப்பெற்றது.

திரு. வி. இராசமாணிக்கம்

பணிக்குறிப்புகள்: *1950* ஏப்ரலில் எம். ஏ. பட்டம் (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்) *1973* எம். லிட். பட்டம் (சென்னைப் பல்கலைக் கழகத்தில்) 1950-51 பள்ளியாசிரியர் — சேலம் நகராட்சிப் பள்ளி. 1951-55 திருத்தர், பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோவை. 1955-72 துணைத் தமிழ்ப் பேராசிரியர், திருத்தர், பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோவை. 1972 சூலை முதல் தமிழ்ப் பேராசிரியர், திருத்தர், பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோவை. **எழுதிய நூல்:** அறிஞர் ஜான்சன். **கட்டுரைகள்:** 'தமிழ் வளர', 'கோலும் கோளும்', 'உவமையின் உச்சி', 'காப்பியன் அறிவுரை', 'கவிஞன் உள்ளம்', 'தற்காலக் கவிதைகள்', 'இளங்கோவின் உள்ளம்', 'நாணும் அச்சமும்', 'சான்றோர் சென்ற நெறி', 'தொல்காப்பியர் காலத்தில் சாதி முறை', 'குறளின் காலம்', 'ஆற்றுப் படைக்குரியவர்', 'தமிழுக்கும் அமு

தென்று பேர்'. **கவிதை :** 'அவள் வென்றாள்', 'நிலவு விடு தூது 'கடுவன் வாய்மொழி', 'பொய்க்கவில்லை'. **கதைக் கவிதை** மல்லிகை அல்லது மணவாளன் (அச்சில்).

திரு. வை. சதாசிவன்

சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் பி. ஏ. (ஆனர்சு) வகுப்பில் பயின்றவர். முதல் வகுப்பில் தேறினார். அதுபோது மாநிலக் கல்லூரியில் தமிழ்த் தலைமைப் பேராசிரியராக இருந்த பல்கலைச் செல்வர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் அன்பு மாணவருள் ஒருவர். அவரது தலைமையில் 'சிலம்பின் காலம்" என்ற பொருளில் ஆராய்ச்சிக் கட்டுரை படித்து அவரது பாராட்டுரையைப் பெற்றார். மாணவராக இருந்தபோது 'தமிழ்ச் சோலை' என்ற கையெழுத்து மலரின் ஆசிரியராக இருந்தார். மூதறிஞர்கள் தெ. பொ. மீ., டாக்டர் மு. வ. போன்றோரின் பாராட்டுரைகளைப் பெற்று அது மிளிர்ந்தது. சென்ற பதினைந்து ஆண்டுகளாக அரசினர் கலைக் கல்லூரிகளில் ஆசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.

புலவர் மு. சண்முகம் பிள்ளை

பிறப்பு : 16-12-1919, வீமநகரி (நாகர்கோவில்). **பெற்றோர் :** அ. முத்தும் பெருமாள் பிள்ளை—பிரமு அம்மாள். **கல்வி :** திருவிதாங்கூர் அரசினர் உயர் தமிழ்ப் பள்ளி, நாகர்கோவில். அரசர் கல்லூரி, திருவையாறு. தமிழ் வித்துவான் தேர்வில் (1941) முதல் வகுப்பில் தேறியமை ; திருப்பனந்தாள் காசி மடம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிறுவியுள்ள ஐந்தாம் ஜார்ஜ் நினைவு அறக்கட்டளைப் பரிசு ரூபாய் ஆயிரம் பெற்றமை. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களிடம் ஆராய்ச்சி மாணவனாய்ப் (1941-42) பயிற்சி பெற்றுத் 'தொல்காப்பியரும் தமிழ்மொழி வரலாறும்' எனும் பொருள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. **பணி :** ஆசிரியப் பணி : உயர்நிலைப் பள்ளிகளில்—1944-52. " அரசினர் கல்லூரிகளில்—1952-60. தமிழக அரசின் தலைமைச் செயலகம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம். தமிழ் நூல் விவர அட்டவணை தொகுக்கும் பணி 1960-69. சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியில் தமிழ் விரிவுரையாளராக—1969 முதல். **வெளியீடு :** மாணவர்க்கான பாட நூல்கள் பல எழுதியமை. மர்ரே கம்பெனியின் வெளியீடுகள், பாரதியார் கவிதைகள், கவிமணியின் நூல்கள், தமிழ் நூல் விவர அட்டவணை 1867-1900 வரை 7 தொகுதிகள் பதிப்பித்தமை. நவநீதப் பாட்டியல்—புத்துரை வெளியீடு. மர்டாக் நூலட்டவணை மறுபதிப்பிட்டமை. **ஆய்வு நூல்கள் :** (1) திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும். (2) திருக்குறள் அமைப்பும் முறையும்—பல்கலைக் கழக வெளியீடுகள். (3) கட்டுரைகள் பல.

திரு. வ. ஜெயதேவன்

பிறப்பு : 10-5-1947. உப்பிலியபுரம், திருச்சி மாவட்டம். **பெற்றோர்:** து. வரதராஜன்—சரோஜா. **பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகம் :** இ. ஆர். உயர்நிலைப் பள்ளி, திருச்சி; தேசியக் கல்லூரி (சென்னைப் பல்கலைக் கழகம்), திருச்சி; அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம். **படிப்பு :** பி.எசி. (தாவரவியல்), எம். ஏ., (தமிழ் மொழி & இலக்கியம்) — முதல் வகுப்பு; சான்றிதழ்—மொழியியல். **ஆய்வுப் பணி :** "பொய்கையாழ்வார் அருளிய முதல் திருவந்தாதி—ஒரு திறனாய்வு". (எம். ஏ., ஆய்வேடு). "தமிழ் அகராதிக் கலை வரலாறு — ஒரு திறனாய்வு" (பிஎச்.டி.க்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.) **பிற :** தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் கவிதைகள் பல அச்சாகியுள்ளன. சிறுகதைகள் பல அச்சாகியுள்ளன. ஆய்வுக் கட்டுரைகள் பல கருத்தரங்கங்களில் படிக்கப்பட்டுள்ளன. **நூல் :** 'அழைக்கும் அலைகள்' (குறுநாவல்), 1968. **பணி :** 1971-73 தமிழ்ப் பயிற்றுநர், விவேகானந்தா கல்லூரி, சென்னை-4. 1973—தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.

திருமதி. கை. சி. இராசமாணிக்கம்

பணிக்குறிப்புகள் : 1951 எம். ஏ. பட்டம் பெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1951-52 தமிழ் விரிவுரையாளர் — தூய மரியன்னை கல்லூரி, தூத்துக்குடி. 1952-57 தமிழ்த் துறைத் தலைவர், ஸ்ரீ. ஜி. வி. ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி, உடுமலைப்பேட்டை. 1957 முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் — தமிழ்த் துறைத் தலைவராகவும், நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை-14. **எழுதிய கட்டுரைகள் :** மனோன்மணீயத்தில் இயற்கை, மணிமேகலை உள்ளம், இரட்டைக் காப்பியங்கள், மணிமேகலையின் மாண்பு. பிணி களை மருத்துவன்.

திருமதி. (ரூபி) லயோனல்,

இவர் 1923 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 17 ஆம் நாள் திருநெல்வேலியிலுள்ள கோவில்பட்டியில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் திரு. உவில்லியம் லாமேக் என்பது. அன்னார் டாக்டர் மில்லர் காலத்தில் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பயின்று பி. ஏ., பட்டம் பெற்றவர். தமிழகத்தின் பல பகுதிகளிலும் டிபுடி கலெக்டராகப் பணியாற்றி, 'நேர்மையாளர்' என்ற புகழுக்குரியராய்த் திகழ்ந்தவர். ஓய்வு பெற்ற பின்னர் இவர் தம் குடும்பத்தினருடன் நாசரேத் ஊரில் தங்கியிருந்தமையின் இவ்வம்மையாரும் அவ்வூர்க் கிறித்தவப் பெண்கள் பள்ளியில் பயின்று, பின்னர் பாளையங்கோட்டையில் உள்ள சாரான் டக்கர் கல்லூரியில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு படித்தார். 1946ஆம் ஆண்டு பி.ஏ. பட்டம் பெற்று அதே கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1949-ல் சென்னைப் பல்கலைக்

கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றுப் பின்னர் 1953ல் சென்னை மகளிர் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்த் துறையில் விரிவுரையாளராக நியமனம் பெற்ருர். தற்போது தமிழ்த் துறைத் தலைவராக இருக்கிருர். இவரது கணவரான திரு. ஜி. சி. லயோனல் எம்.ஏ., எம்.லிட்., சென்னை மெஸ்டன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் துணைத் தலைவர்.

இவ்வம்மையார் சிறந்த தமிழார்வம் கொண்டவர். பத்திரிகைகளில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதுவதுண்டு. கிறித்தவ வேத பாடங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

திருமதி. சு. சிவகாம சுந்தரி

முகவரி : தமிழ்ப் பேராசிரியர்—துறைத் தலைவர், திரு அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி, கோயம்புத்தூர்—641011. ***பிறந்த தேதி:*** 13-1-1936. ***ஊர் :*** தஞ்சாவூர். ***கல்வித் தகுதி :*** எம். ஏ., அண்ணுமலைப் பல்கலைக் கழகம்—1959. ***தந்தையார் :*** காலஞ்சென்ற தஞ்சை திரு. கி. பழனிவேல் (தஞ்சை மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைவர்). ***துணைவர் :*** திரு. வ. சுப்பிரமணியன், பி. எஸ்சி., எம். இ. (கெம்) ஏ. எம். ஐ—ஐ. சி. எச். இ., இரசாயனப் பொறியியல் துறை, கோவை தொழில் நுட்பக் கல்லூரி, கோவை-14. ***இயற்றியுள்ள நூல்கள் :*** 1. வள்ளலார். 2. தமிழகப் பெண்கள் வாழ்வும் வளர்ச்சியும். 3. அறம் வெல்லும். 4. புகழ்க் கம்பன் (அச்சில்). 5, புதியன புகுதல் (அச்சில்). ***ஈடுபாடு :*** வள்ளலார், பாரதி.

திருமதி. சாரதா கலாவதி

16—10—1940இல் நெல்லை மாவட்டத்து மெய்ஞ்ஞானபுரத்தில் பிறந்து சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஐந்தாண்டுக் காலம் பயின்று 1962இல் எம்.ஏ., பட்டம் பெற்றபின், 1963ஆம் ஆண்டில் புதுவையிலுள்ள தாகூர் கலைக் கல்லூரி அடைந்து தமிழ்த்துறையில் பணியாற்றி, 1970ஆம் ஆண்டிலிருந்து புதுவை பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக—அத்துறைத் தலைவராகப் பணியாற்ற நேர்ந்தது.

திரு. வீ. ஞானசிகாமணி

பிறப்பு : 1—7—1943. சின்ன ஓபுலாபுரம், கும்மிடிப்பூண்டித் துணை வட்டம், பொன்னேரி வட்டம், செங்கை மாவட்டம். ***வயது :*** 30. ***பள்ளி :*** முன்னுள் மாவட்ட உயர்நிலைப் பள்ளி, பொன்னேரி. ***கல்லூரி :*** சர் தியாகராயர் கல்லூரி, சென்னை-21, சென்னை கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை - 59. மாநிலக் கல்லூரி, சென்னை - 5. ***கல்வித் தகுதிகள் :*** பி.ஏ., (வரலாறு), எம்.ஏ., (தமிழ்), டிப். தெலுங்கு. ***பணி :*** தமிழ் ஆராய்ச்சி மாணவர் — பிஎச்.டி., தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம். ***ஆய்வுப் பொருள் :*** "எ. ஆ.

கிருஷ்ண பிள்ளையின் நூல்கள்." ஆய்வுப் பணி : ஆய்வுக் கட்டுரைகள் சில வெளியிடப்பெற்றுள்ளன. பல கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பெற்றுள்ளன. பிற : 'Christian Doctrine' என்ற நூல் தமிழாக்கம்.

திரு. கு. மோகனராசு

புனைப் பெயர் : கவிஞர் கு. எழிலரசு. *பிறந்த நாள் :* 12-8-'47. **பெற்றோர் :** கு. குப்புசாமி, கு. தேசம்மாள். **படித்த கல்லூரிகள் :** 1. சர் தியாகராயர் கல்லூரி, சென்னை-21. 2. மாநிலக் கல்லூரி, சென்னை-5. **கல்வித் தகுதி :** பி. எசி., எம். ஏ., (தற்போது பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களிடம் "திருக்குறளும் பழந்தமிழ் நூல்களும்" என்னும் பொருளில் டாக்டர் பட்டத்திற்கான ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது.) **எழுத்துப் பணி:** 1. இதுவரை 23 கவியரங்குகளில் பங்கேற்கப்பட்டது. அவற்றுள் 8 கவியரங்குகளில் தலைமைப் பொறுப்பு. 2. வானொலிக் கவியரங்குகளில் பங்கேற்பு. 3. தமிழகத்தின் பெரும்பாலான ஏடுகளில் கவிதைகள், இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், தொடர் காவியம் ஆகியவை வெளிவந்துள்ளன. ஆராய்ச்சித் துணைவர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி, தமிழ்த் துறை. சென்னைப் பல்கலைக் கழகம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்

பெற்றோர் : சின்னசாமி, மங்கையர்க்கரசி. பிறந்த நாள் : 10—5—1935. பிறந்த ஊர் : செஞ்சி, தென் ஆர்க்காடு மாவட்டம். கல்வித் தகுதிகள் : எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., ஆசிரியப் பணிகள் : 1957 ஆகஸ்டு 5ஆம் நாள் முதல், 1958 ஜனவரி 23ஆம் நாள் வரையில் சென்னை, விவேகானந்தர் கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுசிரியர், 24—1—1958 முதல் 30—6—1960 வரை சென்னை, பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுசிரியர், 1—7—1960 முதல் 12—10—1966 வரை அக்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் ; 13—10—1966 முதல் 31—8—1973 வரை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்; 1—9—1972 முதல் தமிழ்த் துணைப் பேராசிரியர். ஆராய்ச்சிப் பணிகள் : பச்சையப்பர் கல்லூரியில் பணியாற்றிக்கொண்டே டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் மேற்பார்வையின்கீழ்க் 'குறுந்தொகை' குறித்து ஆராய்ந்து 1963ஆம் ஆண்டில் எம் லிட்., பட்டம் பெற்றமை. பின்னர், சேர நாட்டு இலக்கியங்கள் குறித்து ஆராய்ந்து, 1970ஆம் ஆண்டு பிஎச்.டி., பட்டமும் பெற்றுள்ளமை. தற்போதைய பணி : சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாலை நேரத் தமிழ் முதுகலை வகுப்பு மாணவர்க்கு, "தமிழ் இலக்கியக் கொள்கைகள்" என்னும் சிறப்புப் பாடத்தினைப் பயிற்றுவித்தல் ; தமிழ்ச் சான்றிதழ், பெருஞ் சான்றிதழ் வகுப்பு எடுத்தல், 'பெருங்கதை' குறித்து ஆராய்ச்சி செய்து வருதல். எழுதியுள்ள நூல்கள் : 1. தமிழ் இலக்கிய வரலாறு (1965), 2. உருவும் திருவும் (1965), 3. கட்டுரை வளம் (1965),

4. மனோன்மணீயம் — பதிப்பு (1966), 5. காரும் தேரும் (1966), 6. வாழையடி வாழை (1966), 7. முருகன் காட்சி (1966), 8. இலக்கிய அணிகள் (1972), பல்வேறு இதழ்கள், மலர்களுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வருகின்றமை.

திரு. மா. கி. தசரதன்

பிறந்த ஊர் : மாத்தூர் (செங்கற்பட்டு மாவட்டம்) பிறந்த நாள் : 13—8—1930. கல்வித் தகுதி : எம்.ஏ. (தமிழ்) ஆசிரியர் பணி : பயிற்றுசிரியர், விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம். 1954-66. துணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை. 1966-1970 முதல்வர் சி. கந்தசாமி நாயுடு ஆர்டவ கல்லூரி (1970 முதல்.) சென்னை-40. பதவிகள் : தலைவர் : 1. மாநகரத் தமிழாசிரியர் கழகம், சென்னை (1969 முதல்). 2. தமிழகத் தமிழாசிரியர் கழகம் (1973 முதல்). 3. பல்கலைக் கழக மொழியாசிரியர் கழகம் (1972 முதல்). 4. பல்கலைக்கழக ஆசிரியர் கழகம் (1970). 5. தமிழ் முதுகலைப் பழைய மாணவர் மன்றம், பச்சையப்பன் கல்லூரி, சென்னை (1971 முதல்). வரவேற்புக் குழுத் தலைவர் : 1. செங்கற்பட்டு மாவட்டத் தமிழ் எழுத்தாளர் மாநாடு 1964. 2. தமிழகத் தமிழாசிரியர் கழகப் பதினோராம் மாநில மாநாடு 1968. தலைமை : முத்தமிழ் மாநாடு, காரைக்கால் 1962. துணைத்தலைவர் : பல்கலைக்கழக ஆசிரியர் கழகம் 1971, 1973. உறுப்பினர் : புலவர்குழு, தமிழ்நாடு.

திரு. இரா. ஆ. கணேச நம்பி

பிறந்த இடம் : சென்னை. பிறந்த நாள் : 11-3-1934. கல்வி : பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும், பச்சையப்பர் கல்லூரியிலும் தகுதி : பி. ஏ., (ஆனர்சு). தேர்ந்த ஆண்டு : 1957. கல்வி பெற்ற பிறகு : 1957-இலிருந்து 1965 வரை பூ. சா. கோ. கலைக் கல்லூரியில் பயிற்சி ஆசிரியனாகவும் சிற்றாசிரியனாகவும் பணி புரிந்தமை; 1965 சூலை முதல் 1969 சூன் வரை பூம்புகார் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் இருக்கின்றமை. சில செய்திகள் : மேடைப் பேச்சு, கருத்தரங்கங்களிலும் பட்டிமன்றங்களிலும் நடுவராகவும், கவியரங்கங்களிலும் பங்கேற்றல். வெளியீடு : கல்லூரி மாணவர்கட்காக கல்லூரித் தமிழிலக்கணம் வெளியிட்டமை —1966.

திரு. ம. ரா. பூபதி

13-6-1932இல் பிறப்பு; பச்சையப்பன் கல்லூரியில் 1948 முதல் 1953 வரை பயின்று பட்டம் பெறல்; 1954 முதல் 1963 முடிய கோவை பூ. சா. கோ. கலைக் கல்லூரியில் பணியாற்றல். 1964 முதல் புதுவைத் தாகூர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றல்.

பேராசிரியரின் பெருநம்பிக்கை

"தமிழ் அறிஞர்களே! தமிழ் நாடெங்கும் தமிழ்ச் சங்கம் நிறுவுங்கள்; தமிழ்ப் பாடம் சொல்லுங்கள்; கலைச் செல்வத்தை வாரி வழங்குங்கள்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணி செய்வோமானல் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாடு புத்துயிர் பெற்றுவிடும். அக்காலத்தில் நாடு முற்றும் தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கும். கல்லூரிகளில் நல்லாசிரியர்கள் எல்லோரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக்கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப் புலவர் தலைவராக வீற்றிருப்பர். 'எந்தமொழியும் எமது சொந்த மொழிக்கு இணையாகாது' என்று தமிழ் நாட்டு இளைஞர் செம்மாந்து பேசுவர்; 'தே மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்' என்று முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ் நாடு ஏற்றமுற்று விளங்கும். அந்த நிலையினை இன்று எண்ணிப் பாரீர். அதனை எய்தியே தீர்வோம்; பணிசெய்ய வாரீர்!"

—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை—'தமிழின்பம்'
பக்கம் 5-6.

தமிழ் காத்த தமிழாசிரியர்கள்

"மூவேந்தர் காலத்திற்குப் பின்பு நம் தாய்மொழிக்கு நேர்ந்த சிறுமையை நினைத்தால் நெஞ்சம் உருகும். வேற்றரசர் ஆட்சி இந் நாட்டில் வேரூன்றிற்று. அவர் மொழியாகிய ஆங்கிலம் ஆதிக்கம் பெற்றது. எல்லாப் பாடங்களும் ஆங்கில மொழியிலே பயிற்றப்பட்டன. ஆங்கில மாது களிநடம் புரிந்த கல்விச்சாலைகளில் தமிழ்த்தாய் நிலையிழந்து தலை கவிழ்ந்து, ஒடுங்கி, ஒதுங்கி, நிற்பாளாயினுள். தமிழ் ஆசிரியர்களின் உள்ளம் இடிந்தது; ஊக்கம் மறைந்தது. புகைபடிந்த ஓவியம் போல் புலவர் மணிகள் பொலிவிழந்தார்கள். தமிழ் மாணவர்களும் தமிழை எள்ளி நகையாடத் தொடங்கினர். அல்லும் பகலும் ஆங்கிலத்தைக் கற்று, ஆங்கிலேயருடைய நடையுடைகளில் மோகமுற்று, தாய்மொழியைப் பழித்தும் இழித்தும் பேசுவாராயினர். இவ்வாறு, கட்டழிந்து பதங்குலைந்து கிடந்த தமிழ் நாட்டில் தமிழ்க்கலை விளக்கம் அவிந்து போகாமல் பாதுகாத்தவர் தமிழாசிரியர்களே யாவர். மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, அருமையும் கருதாது, அவமதிப்பும் கொள்ளாது, அன்று தமிழ்த்தாயின் பொன்னடி போற்றி நின்ற தமிழாசிரியரை இன்று மறக்கலாகுமோ?"

—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை—'தமிழின்பம்'
பக்கம்-3.

ஆய்வுரை அகரவரிசை

ஆய்வாளர் அகரவரிசை